Annelé, *adj.* சுருண்ட, மோதிரம் —, வளையமுள்ள, வேறேநிற, சுற்றுவரியுள்ள. || *m.* கருஞ்சுற்றுவரிப்பாம்பு.

Anneler, *v. a.* மயிரைச்சுருட்டுதல்.

Annelet, *m.* சிறு மோதிரம், — வளையம், — வட்டம், போதிகைச் சுற்றிலுமுள்ள சிறுகம்பி.

Annélides, *m. pl.* முள்ளெலும்பற்ற பிராணிகள், சிகப்பு ரத்தமுள்ள பூச்சிகள்.

Annelure, *f.* மயிர்ச்சுருள்.

Annexe, *f.* சேர்மானம், வேறே நிலத்தைச் சேர்ந்த நிலம், பிரதான கோவிலைச் சேர்ந்த கோவில், ஓர் சாதனத்தின் அநுபந்தம்.

Annexer, *v. a.* சேர்த்தல், கூட்டுதல், சேர்மானமாக்குதல், ஈற்றிற்சேர்த்தல் ; s'—, être annexé சேர்தல், சேர்மானமாதல், கூட்ட —, சேர்க்கப்படுதல்.

Annexion, *f* சேர்மானம், ஒன்றிப்பு, சேர்ப்பு.

Annihilation, *f.* நிர்மூலம், நாசம், அழிப்பு, சங்கரிப்பு.

Annihiler, *v. a.* நிர்மூலம் —, நாசமாக்குதல், அழித்தல், சங்கரித்தல்: s'— நிர்மூலம் —, நாசமாதல், அழிதல்.

Anniversaire, *adj.* வருஷாந்தர, வருஷா வருஷமாகிற, வருஷந்தோ

றும் வருகிற, — கொண்டாடுகிற. || *m.* வருஷாந்தர கொண்டாட்டம்,— நாள், திவசம், மரித்தோருக்கான வருஷாந்தர பாட்டுப் பூசை, — ஒப்பூசை ; — de la naissance, — de la mort பிறந்த —, மரித்த வருஷாந்தர நாள்.

Annonaire, *adj.* இரஸ்துசேகரித்திடவேண்டிய.

Annonce, *f.* அறிக்கை, அறிவிப்பு, விளம்பரம், பிரசித்தப் பத்திரிகை, கலியாணத்தைக் கூறல்.

Annoncer, *v. a.* அறிவித்தல், தெரிவித்தல், பிரசித்த —, தெரியப்படுத்துதல், அறிக்கையிடுதல், வெளியாக்குதல், எச்சரித்தல், முன்னமே உரைத்தல், — சொல்லுதல் , — குறித்தல், போதித்தல், நம்புவித்தல், வரவைக் கூறுதல் ; s' — தமக்கு அறிவித்தல், தன்னைத் தெரியப்படுத்துதல்,— காட்டுதல், தெரிய —, குறிக்க —, வெளிப்படுதல், தோன்றுதல், துவக்குதல்; cette maladie s'annonce par des maux de tête அந்த வியாதிக்குத் தலைநோய் முன்குறிப்பாம்.

Annonceur, *m.* நாடகத்தின் பெயர் [அறிவிக்கிறவன்.

Annonciade, *f.* ஓர் சபைக் கன்னியாஸ்திரி, போர்ச்சேவக முனிவர் சபை.

Annonciation, *f.* (மனுஷாவதாரமறிவிப்பதற்கு) கபிரியேல் சம்மனசானவர் தூது, — தேவமாதாவுக்குச் சொன்ன மங்களம். — மங்களஞ் சொன்ன திருநாள்.

Annotateur, *m.* விவரம் —, குறிப்பெழுதுகிறவன், குறிப்பு —, உரைக்காரன், குறிக்கிறவன், வியாக்கியானி.

Annotation, *f.* புஸ்தகத்தி லெழுதிய விவரம், — குறிப்பு, — விசேஷம், விவரம், உரை, புறனடை, சாமானிடாப்பு.

Annoter, *v. a.* குறித்தல், விவரம் —, குறிப்பு —, உரை —, புறனடை —, வியார்த்தியெழுதுதல் : — un livre புஸ்தகத்திலே குறிப்பெழுதுதல் ; s'— புறனடையாய் —, குறிப்பாய் எழுதப்படுதல்.

Annuaire, *m.* வருஷாந்தர பஞ்சாங்கம், — குறிப்புப் புத்தகம், ஓர் ஸ்தலத்தின் விசேஷங்களையு மதிகாரிகளின் பேரையுங் குறிக்கிற —, ஓர் வருஷத்தில் நடந்த வர்த்தமானங்களையும் செய்யப்பட்ட மாற்றங்களையுங் குறிக்கிற புஸ்தகம்.

Annuel *adj.* வருஷத்து, வருஷாந்தர, அந்தந்த வருஷ, ஓர் வருஷம், நிலைக்கிற, வருஷந்தோறுமாகிற, ஓர் வருஷத்திலாகிற, வருஷத்துக்கடுத்த : droit — வருஷா வருஷ தீர்வை ; plantes— ஓராட்டைப்பயிர், — பூண்டுகள். || *m.* ஓர் வருஷத் தீர்வை, ஓர் வருஷ நித்தமும் மரித்தவனுக்குச் செய்யும் பூசை.

Annuellement, *adv.* வருஷாந்தரமாய், வருஷந்தோறும், வருஷா வருஷம், வருஷமொன்றுக்கு.

Annuité, *f.* (முதலையும் வட்டியையுந் தீர்க்க) கடனில் வருஷாந்தர இறுப்பு.

Annulable, *adj.* அழிக்க —, ஒழிக்கத்தக்க.

Annulaire, *adj.* மோதிர, மோதிரம்போன்ற, வட்ட வடிவுள்ள : doigt —மோதிர—, ஆழி—, பவித்திர விரல் ; éclipse — மோதிரகிராணம். || *f.* ஓர் கம்பளிப் பூச்சி.

Annulation, *f.* ஒழிப்பு, மாற்றுதல், சிதைவு, தள்ளுபடி, கழிவு, நீக்கம்.

Annulé , *adj.* மோதிரமுள்ள. || *part. de*

Annuler, *v. a.* ஒழித்தல், அழித்தல், மாற்றுதல், சிதைத்தல், தவிர்த்தல், தள்ளுதல்.

Anobli, *part, de*

Anoblir *v. a.* மேற்குலத்தான் —, வங்கிஷபதியாக்குதல், — பட்டங் கொடுத்தல்.

Anoblissement, *m.* வங்கிஷபதியாக்குதல்.

Anode, *f.* (தென் அமெரிக்காவில்) ஓர் பூண்டு.

Anodin, *adj.* நோவைத்தணிக்கிற, — அமர்த்துகிற. || *m.* நோவாற்று மருந்து, சாந்தி யவிழ்தம்.

Anodonte, *m.* ஓர் கிளிஞ்சில்.

Anolis *m.* (அமேரிக்காவில்) ஓர்வித பல்லி.

Anomal *adj.* விகற்பம் —, விபரீதமான, ஒழுங்குதவறின, நெறிவழுவான, வழக்கந் தப்பின.

Anomalie, *f.* விகர்பம், விபரீதம், விகாரம் :— d'une planète, — vraie ஓர் கிரகத்தின் நிலைக்குந் துங்க நிலை

க்கும் அல்லது நீச நிலைக்குந்தூரம், மந்தம், கேந்திரம் ; — du soleil இரவி கேந்திரம் ; — de la lune மதி கேந்திரம் ; — moyenne மத்தியமந்தம் ; argument d'— மந்த கேந்திரம்.

Anomalistique, *adj.* année— சூரியன் ஒரு நிலைக்கு அல்லது துங்கத்துக்குத் திரும்புவதற்குள்ளாகச் செல்லுங் காலம், மந்த ஆண்டு : révolution — ஓர் கிரகந் தன் துங்கத்துக்குத் திரும்புவதற்குள்ளாகச் செல்லுங் காலம், சாமண்டலம்.

Anomie, *f.* ஓர்மட்டி.

Anon, (ânon), *m.* கழுதைக்குட்டி, குட்டிக்கழுதை, சின்னகழுதை.

Anone, Anona, *f.* ஓர் ஆத்தாமரம்: anone écailleuse, anona squamosa ஆத்தா, சீத்தா ; anone réticulée, anona reticulata அணி நுணா, மனிலா ஆத்தா, ராம சீத்தா ; leurs fruits ஆத்தா—, சீத்தாப்பழம்.

Anonacées, *f. pl.* ஷை மர இனம்.

Anonnement, *m.* (ânonnement), திக்கு, திக்கிவாசித்தல்.

Anonner, *v. n.* (ânonner), கழுதை ஈனுதல், திக்குதல். || *v. a.* திக்கிவாசித்தல்.

Anonyme, *adj.* பெயரில்லாத, —காட்டாத, — தெரியாத, கையொப்பமற்ற : société — விசேஷபேரற்ற கூட்டம். || *m.* தன்பேர்காட்டாத ஆசிரியன் : garder l'— தன்பேர் சொல்லாமலிருக்கிறது.

Anonymement, *adv.* தன்பேர்காட்டாமல்.

Anordie, *f.* வடகாற்றுப் புசல்.

Anordir, *v. n.* s'— *v. pr.* வடக்கே திரும்புதல், — சாய்தல்.

Anorexie, *f.* பசியின்மை.

Anormal, *adj.* விகற்பம்—, விபரீதமான, பிசகுள்ள, ஒழுங்குக்கு விரோதமான.

Anosmie, *f.* மோப்பத்தின் குறைவு,— ஒழிவு,— சிதைவு.

Anostome, *m.* ஓர்வித மீன்.

Anse, *f.* கைப்பிடி, காம்பு, சிறுகுடா : faire danser l'— du panier கூடையின் கைப்பிடியை ஆடுவித்தல், செலவிலே காசெடுத்தல்.

Anséatique, *V.* Hanséatique.

Ansères. *m. pl.* Ansérinées, *f. pl.* வாத்தினம்.

Anser, *v. a.* கைப்பிடிவைத்தல்.

Ansérine, *f.* ஓர் பூண்டு.

Ansette, *f.* சிறு கைப்பிடி, சிறு குடா. || *pl.* பாயோரத்துக் கயிறுகள்.

Anspect, *m.* (கப்பலில் பீரங்கி தூக்கும்) பாரை மிண்டி.

Anta, *m.* ஓர் பன்றி.

Antagonisme, *m.* எதிரித்தனம், விரோதம், போட்டி,— த்தனம், இருநரம்புகளின் எதிர் நிலை.

Antagoniste, *m. f.* எதிரி, போரி, எதிராளி, விரோதி, பகையாளி: muscles — எதிரிடையா யிழுக்கு மிருநரம்புகள்.

Antale, *m.* குழாய் வடிவான கிளிஞ்சில்.

Antalgique, *adj.* நோய் தணிக்கிற, நோயாற்றுகிற.

Antan, *m.* முந்தின —, போனவருஷம்.

Antanaclase, *f.* ஓர் சொல்லை வேறர்த்தமாக விரட்டிக்குமணி, சொல்லர்த்தமாறல்.

Antanagoge, *f.* எதிராளி நியாயத்தால் அவனை மறுக்குமணி.

Antannaire, Antannier, *adj.* ஒரு வருஷத்து, ஒருவயதுள்ள.

Antarctique, *adj.* தென்முனையின், தட்சண, தென், தென்புறத்து.

Antarès, *m.* கேட்டை நக்ஷத்திரம்.

Antécédemment, *adv.* முன்னே, முன்னமே, முந்தி.

Antécédence, *f.* முன்னிடுதல், முன்போதல், முந்துதல், முன்பு. || கிரகத்தின் வக்கிரம், வக்கிரிப்பு, வக்கிரசாரம்.

Antécédent, *adj.* முந்தின, முன்னிருக்கிற, முன்போன,— சென்ற, முன்வந்த. || *m.* முந்தினது, முன் நடந்தது, முன்னிருக்கிறது, முந்தின—, முன் நடக்கை. || முன் மொழி, ஓரநுபாதத்தில் முதல்கணக்கும் மூன்றுங்கணக்கும், முன்கணக்கு, (இருவாக்கிய நியாயத்தின்) முன்வாக்கியம் : avoir de bons — முந்தின நடக்கை —, முன் நடந்தவை சரியாயிருத்தல்.

Antécesseur, *m.* நீதி நூல் வாத்தியார்.

Antechrist, *m.* அந்திக்கிறீஸ்து, கிறீஸ்துவின் எதிரி,— எதிராளி.

Antéciens, *m. pl.* ஒரே மத்தியான வரியிலெதிர்புறத்தார்.

Antédiluvien, *adj.* சலப்பிரளயத்

துக்கு முந்தின. || மிகவும் பூர்வீகமான, பழமையான.

Antémétique, *adj*. வாந்தி நிறுத்துகிற, வாந்திக் கவிழ்தமான.

Antenne, *f*. பருமல், தெத்து, பாய் தொங்குங் குறுக்குவிட்டம். || பூச்சிகளின் கொம்புகள்,— தும்பிக்கைகள்.

Antéoccupation, *f*. முந்தியபகரிப்பு, முந்திமறுக்குமணி, எதிராளியின் நியாயங்களை முந்தியோசித்து மறுக்குமணி.

Antépénultième, *adj*. ஈற்றயலுக்கயலான, ஈற்றுக்கு முன்னிரண்டாம். || *f*. ஈற்றுக்கு முன்னிரண்டாமசை.

Antérieur, *adj* முந்தின, முன்னிருந்த, — நடந்த, — கடந்த, — போன, பழைய, பூர்வ, எதிரான, முன்புறமாகிய, முன்னிற்கிற, முன்னிலையுள்ள, முன்னிருக்கிற : évènement— முன் நடந்த சங்கதி ; face — d'une maison வீட்டின்முன்புறம்,— முகப்பு; futur— இறப்பிடை எதிர்காலம், prétérit —, passé— முன்னிறந்தகாலம்.

Antérieurement, *adv*. முன்னே, முந்தி, முன்னமே.

Antériorité, *f*. முந்துகை, முதன்மை, முதுமை, முன்பு.

Antes, *m. pl*. பிதுக்கமான—, மூலைத்தூண்கள்.

Antesciens, *m. pl. V*. Antisciens.

Antestature, *f*. வாடி கொத்தளம்.

Anthélix, *m*. காதினுட் சுருள்.

Anthelmintique, *adj*. வயிற்றுப் புழுக்களைக் கொல்லுகிற.

Anthemis, *f*. ஓர் பூண்டு : la racine de l'— pyrethrum அக்கிரா, அக்கிராகாரம் ; l'— nobilis சாமந்தி.

Anthéra, *f*. உரோசாபூவின் நடு மஞ்சள். [பை, அல்லி, இணர், தாது.

Anthère, *f*. பூந்தாதடங்கிய சிறு

Anthérifère, *adj*. ஷை பை—, பூந்தாது—, அல்லி தரிக்கிற.

Anthériforme, *adj*. ஷை பை—, பூந்தாது—, அல்லி வடிவான.

Anthèse, *f*. பூவின் முழு வளர்ச்சி,— விருத்தி. [ண்டு.

Anthie, *f*. (அப்பிரிக்காவின்) ஓர் வ

Anthocère, *m*. ஓர்வித பூண்டு.

Anthographie, *f*. தன் கருத்துகளைப் புஷ்பங்களா லறிவிக்கும் வித்தை, புஷ்ப இலக்கணம், புஷ்ப இயல்விளக்கம்.

Anthologie, *f*. தெரியலான கவி முதலியவற்றின் சேர்க்கை,— மாலை, சிறந்தவசன —, பூமாலை, பலகலைத்திரட்சி, இலக்கிய சங்கிரகம்.

Anthora, *f*. Anthore, *m*. வேறே விஷத்துக்கு அவிழ்தமா யெண்ணப்படும் வற்சநாபி, மஞ்சள்பூவற்சநாபி.

Anthracite, *m*. நன்றாயெரியாத நிலக்கரி,— விளைகரி, கற்கரி. [ஓர் பூச்சி.

Anthrax, *m*. இராசப்பிளவை. ||

Anthrène, *m*. ஓர் வண்டு.

Anthropologie, *f*. மனித குணாகுணங்களின்—, மனுச்சரீர விளக்கம், மனுஷீக குணாகுணங்களையுஞ் செய்கைகளையுந் தெய்வத்தின்மேற் சாட்டுங் கோட்பாடு.

Anthropomancie, *f*. நரபலியான மனுஷக் குடற் சகுனம்.

Anthropomorphisme, *m*. தெய்வத்துக்கு மனு உருவ முண்டென்கிற கோட்பாடு,— மதம்.

Anthropomorphite, *m*. சர்வேசுரனுக்கு, மனுரூப முண்டெ.ன்ற பதிதன்.

Anthropophage, *adj. et s*. மனுமாமிசம் பக்ஷிக்கிற, நர மாமிச பட்சணி, சாடிலி. [ப்பு,— பட்சணம்.

Anthropophagie, *f*. நரமாமிசப் புசி

Anthyllide, *m*. காயமருந்தாகிய—, ஓர் பூண்டு.

Anti, என்பது எதிர், அவுஷதம் அல்லது முன்னென்னு மர்த்தமுள்ள அசைச்சொல்லாம்.

Antiaphroditique, — disiaque, *adj*. காமஆசை யமர்த்துகிற.

Antiapoplectique, *adj*. கடிய சன்னிக் கவுஷதமாகிய.

Antiare, Antiaris, *m*. ஓர் விஷமரம்.

Antiarthritique, *adj*. சூலைக் கவிஷதமாகிய.

Antibiblique, *adj*. வேத புத்தகத்துக்கு ஒவ்வாத,— விரோதமான.

Antichambre, *f*. முன்னறை, காத்திருப்பதற்கான அறை : faire— முன்னறையிற் காத்திருத்தல்.

Anticholérique, *adj*. வாந்தி பேதியை நீக்குகிற, பேதிக் கவுஷதமாகிய.

Antichrèse *f*. கடன்வட்டியாக ஓர் நிலவருமானம் விடும் ஒப்பந்தம்.

Antichrésiste, *m.* ஷ வருமானம் பெற்றவன்.

Antichrétien, *adj.* கிறீஸ்துவேதத்துக்கு விரோதமான,— எதிரான, கிறீஸ்துவர்களுக் கெதிரியான.

Antichristianisme, *m.* கிறீஸ்துவேதத்துக்கு விரோதம்,— விரோதமான மதம்.

Antichthone, *adj.* *V.* Antipode.

Anticipation, *f.* முந்துகை, முன்செய்கை, முன்னிடுதல், முன்னம், முந்திச் செய்கை,— கொள்ளுகை, முன்னநுபவம், முந்திப் பணம் வாங்கு முபாயம், அபகரிப்பு, எதிராளியின் நியாயங்களை முந்தி மறுத்தல் : par— முன்னமே, முந்தி, காலத்துக்கு முன்னே, ஏற்கனவே.

Anticipé, *part. de*

Anticiper, *v. a. et n.* காலத்துக்கு முன்னே—, முந்திச் செய்தல், — பிடித்தல், — கொள்ளுதல், — அநுபவித்தல், முந்துதல், முன்னிடுதல், முன்னேறுதல், முன்வருதல், தீவிரித்தல், அபகரித்தல் : — un paiement கெடுவுக்குமுன்னே கடனை யிறுத்தல் ; — un appel அபயமிடுகிறவனை நீதிஸ்தலத்துக்கு அழைப்பித்தல் ; — sur ses revenus தன் வருமானங்களை முந்திச் செலவழித்தல் ; — sur les biens, les droits d'autrui பிறராஸ்தியை—, சுதந்தரத்தை யபகரித்தல். [வியாதி.

Anticœur, *m.* குதிரைக்குவருகிற ஓர்

Anticonstitutionnaire, *adj.* *unigenitus* என்கிற கட்டளைக்கு விரோதமான.

Anticonstitutionnel. *adj.* அரசின் சட்ட திட்ட முறைமைக்கு விரோதமான.

Anticonstitutionnellement, *adv.* ஷ முறைமைக்கு விரோதமாய்.

Antidartreux, *adj. et m.* கரப்பானுக் கவுஷதமான,— அவுஷதம்.

Antidactyle, *m.* புளிமாஎன்கிற சீர்.

Antidate, *f.* முன்னிட்ட தேதி.

Antidater, *v. a.* தேதியை முன்னிட்டு வைத்தல் : s'— தேதி முன்னிட்டு வைக்கப்படுதல்.

Antidesme, *m.* ஓர் மரம்: antidesma acida காட்டுப் புளிச்சமரம் ; — alexiteria நெரளை தாளி.

Antidinique, *adj.* மயக்கந் தீர்க்கும்,— நீக்கும். || *m.* மயக்கந் தீர்க்கு மருந்து. [ளின் சேர்க்கை.

Antidotaire, *m.* முக்கிய மருந்துக

Antidote, *m.* மாற்று—, விஷமருந்து, பரமாவுஷதம்.

Antienne, *f.* சங்கீதஞ்சேர் வசனம், தேவ சங்கீதங்களின் முடிவிற் பாடப்படும் வாக்கியம், ஞானசங்கீதம்: chanter, annoncer une triste — கஸ்தியுள்ள செய்தி யறிவித்தல் ; chanter toujours la même— எப்போது மொரேகாரியஞ் சொல்லுதல். [தமான.

Antiétique, *adj.* காசத்துக் கவுஷ

Antiévangélique, *adj.* சுவிசேஷத்துக்கு விரோதமான.

Antifébrile, *adj.* காய்ச்சலுக் கவுஷதமான. || *m* சுர மருந்து. [தமான.

Antiglaireux, *adj.* சீதத்துக் கவுஷ

Antigoa, (சிறு ஆந்தீய்த் தீவுமாலையில்) ஓர் தீவு.

Antigorium, *m.* பீங்கான்களுக்குப் பலநிறங் கொடுக்கும் வஸ்து.

Antigalactique, Antilaiteux, *adj.* பால்போக்குகிற. [தமான.

Antigoutteux, *adj.* சூலைக்கு அவுஷ

Antilles, *f. pl.* (மெக்சிக்குக் குடாவில்) ஆந்த்தீய்த் தீவுகள்.

Antilogie, *f.* சொல்லொவ்வாமை, (பிரசங்கத்தில்) ஒவ்வாமை.

Antilope, *f.* மான், ஐணம்.

Antiméphitique, *adj.* துர்க்கந்தம் போக்குகிற.

Antimoine, *m.* அஞ்சனக்கல், நீலாஞ்சனக்கல், கருநிமிளை, கருநிமிளை மை: sulfate d'— அஞ்சனக்கல் ; sulfure d'— குவட்டினீயம்.

Antimonarchique, *adj.* இராசரீகத்துக்கு விரோதமான, அரசாட்சிக் கெதிரான. [க்கடுத்த.

Antimonial, *adj.* அஞ்சனக்கல்லு

Antimonié, *adj.* அஞ்சனக்கல் கலந்த.

Antinational, *adj.* சனத்துக்கு விரோதமான, சனத்தின் நலத்துக்கும் ஆசைக்குங் குணத்துக்கும் விரோதமான. [விக் கவுஷதமாகிய.

Antinéphrétique, *adj.* இடுப்புவ

Antinomie, *f.* கட்டளை யொவ்வாமை, கட்டளைகளின்—, அதுகளிலுள்ள விஷயங்களின் ஒவ்வாமை.

Antinomiens, *m. pl.* வேதப் பிரமாண —, கட்டளை விரோதிகள், தேவ கற்பனைகளை—, எந்தக்கட்டளையையும் அநுசரிக்கத்தேவையில்லை யென்னும் பதிதர். [னுந் தாராகணம்.

Antinoüs, *m.* அந்தினொயுஸ் என்

Antioche, (சீரியதேசத்தில்) அந்தியோஷ்நகர்.

Antipape, *m.* கள்ளப்பாப்பு.

Antiparos, (அர்ஷிப்பெல் கடலில்) ஓர் தீவு.

Antipathe, *m.* கரும்பவளம்.

Antipathie, *f.* குணத்தின்—, ஒவ்வாமை, பொருந்தாமை, இசையாமை, ஒத்திராமை, மனவெறுப்பு, பகை, சேராமை, விரோதம்.

Antipathique, *adj.* ஒவ்வாத, ஒத்திராத, இசையாத, சேராத, பொருந்தாத, மனவெறுப்புள்ள, விரோதமான, எதிரான.

Antipéristaltique, *adj.* குடல் சுருங்கி அசைவதற்கு விரோதமான.

Antipéristase, *f.* எதிர் வருவதால் பலத்தி னதிகரிப்பு, எதிரணுகையில் வேகத்தின் பெருக்கம், எதிரான இருஞான பலன்களினிசைவு.

Antipestilentiel, *adj.* கொள்ளை நோய்க் கவுஷதமான.

Antiphilosophique, *adj.* ஞான சாஸ்திரத்துக்கு விரோதமான, — ஒவ்வாத.

Antiphlogistique, *adv. et s. m.* இரத்தத்தைக் குளிர்ப்பிக்கிற,— குளிர்ப்பிக்கு மருந்து.

Antiphonaire, Antiphonier, *m.* சங்கீத வாக்கியப்பாட்டு—, வேதப்பாட்டுப்புஸ்தகம்.

Antiphrase, *f.* மெய்யெதிர் நிலை,— வசனம், சொற்களை யெதிரர்த்தமாகக் கொண்ட வாக்கியம், ஓர்வித கேலி.

Antiphysique, *adj.* சுபாவத்துக்கடாத. [ய்க்கவுஷதமான.

Anripleurétique, *adj.* பாரிசநோ

Antipode, *m* எதிரடியான், எதிர் பாதத்தான்,— புறத்தான், பூச்சக்கரத்தின் மறுபுறத்தான், — புறம், — பக்கம். || எதிரானது. எதிர் நிலை, முழு விரோதமானது : envoyer aux — வெகுதூரமாயனுப்புதல். [தமான.

Antipsorique, *adj.* சிரங்குக் கவுஷ

Antiptose, *f.* வேற்றுமை மாற்றம், வதில் வேற்றுமைப் பிரயோகம்.

Antiputride, *adj.* அழிவு நீக்குகிற.

Antipyique, *adj.* சீழ் நிறுத்துகிற, —குறைக்கிற. [கிய.

Antipyrétique, *adj.* சுரமருந்தா

Antiquaille, *f.* பழைய பொருள்.

Antiquaire, *m.* பழைய பொருளின் பிரியன், பழைய பொருட்களில் தேர்ந்தவன், பூர்வ விசேஷாப்பியாசி, புராதனகலைஞன்.

Antique, *adj.* பூர்வ, பூர்வீகமான, முற்காலத்து, பழைய, பழமையான, தொல், முது, புராதன : qui a l'air— பூர்வமாதிரியாய்த் தோன்றுகிற ; vertu — பூர்வீகருக்குரிய புண்ணியம். || *m.* பூர்வீகத்து—, பூர்வமாதிரி,— வித்தை வஸ்து. || *f.* பூர்வ கட்டுகோப்பு, — சுரூபம், — சித்திரம், — மாதிரியாயுடுத்தகிழவி; à l'— பூர்வ மாதிரியாய்.

Antiquer, *v. a.* பூர்வ மேரையாய்ப் புஸ்தகத்தின் வாயை யலங்கரித்தல்.

Antiquité, *j.* பூர்வம், பூர்வீகம், முற்காலம், பழமை, புராதனம், தொன்மை. || முன்னோர், பூர்வீகத்தார். || பூர்வசுரூபம்,— சிலை. || *pl.* பூர்வகட்டுகோப்புகளின்—, ஆலயங்களி னிடிசல்.

Antirachitique, *adj.* முதுகெலும்பு வளைதற்கவுஷதமான.

Antirévolutionnaire, *adj.* அரசின் மாற்றத்துக்கு —, கலகத்துக்கு எதிரான.

Antirrhétique, *adj.* மற்றோர் புஸ்தகத்தை—, மறுக்கிற, எதிர் நியாயங் காட்டுகிற.

Antisalle, *f.* முன்னறை, முன் சாலை.

Antisatire, *f.* வசைக்கவி;மறுத்தல்.

Antisciens, *m. pl.* எதிர் நிழலார், நிரட்சத்துக் கெதிர் திசையிலிருப்பதால் மத்தியானத்தில் எதிர் நிழலுள்ள சனங்கள்.

Antiscorbutique, *adj. et s. m.* வாய்க்கரப்பானுக் கவுஷதமான,— அவுஷதம்.

Antiscrofuleux, *adj. et s. m.* கண்ட மாலைக் கவுஷதமான, — மாலை மருந்து. [நீக்குகிற,— நீக்கு மருந்து.

Antiseptique, *adj. et s. m.* அழிவு

Antisocial. *adj.* சர்வ சபைக்கு மெதிரான,— விரோதமான.

Antisophiste, *m.* நியாயப்புரட்டரெதிரி, எதிர் நியாயங்களை நிச்சயிக்குந் தர்க்கவாதி.

Antispase, *f.* சரீர நீர்திரும்புதல், பித்த நீக்கம்.

Antispasmodique, *adj. et s. m.* இசிவுக் கவுஷதமான, இசிவு மருந்து.

Antispaste, *m.* குறில்நேர் நேர்குறிலுள்ள சீர்.

Antispastique, *adj.* சரீர நீரைத் திருப்புகிற, பித்தம் நீக்குகிற.

Antistrophe, *f.* ஓர் பாட்டின் உ-ம் பங்கு. || மொழியிடப் பெயர்வு.

Antisyphilitique, *adj.* கிரந்திக் கவுஷதமான.

Antitétanique, *adj.* இசிவு சன்னிக் கவுஷதமான.

Antithéâtral, *adj.* நாடகத்துக் கொவ்வாத.

Antithénar, *m.* பெருவிரலை மடக்குநரம்பு.

Antithèse. *f.* எதிர்சொல், முரண் —, விரோதமொழி.

Antithétique, *adj.* எதிர்மொழியுள்ளி,— நிறைந்த, எதிர்சொல்லான.

Antitrinitaire, *m.* அர்ச். திரித்துவ விரோதி, ஏகத்துவவாதி, ஒருத்துவமார்க்கத்தான், அர்ச். திரித்துவத்தை மறுதலிக்கிற பதிதன்.

Antivénérien, *adj.* கிரந்திக் கவுஷதமான.

Antivermineux, *adj.* புழுக்களைக் கொல்லுகிற.

Antivérolique, *aaj.* குருவியாதிக் கவுஷதமான.

Antœciens, *m. pl. V.* Antéciens.

Antoiser, *v. a.* எருகுவித்தல்.

Antoit, *m.* ஓர்வித இருப்புக் கருவி.

Antonins, *m. pl.* அர்ச். அந்தோனியார்சபைச் சந்நியாசிகள்.

Antonomase, *f.* பெயர் மாற்று மணி, சிறப்புப் பெயருக்கு வதிலாகப் பொதுப்பெயரை அல்லது பொதுப் வெயருக்குப் பதிலாகச் சிறப்புப்பெயரைப் பிரயோகிக்குமணி.

Antre, *m.* கெபி, குகை, பாழி, கீழறை, நிலவறை.

Antrustion, *m.* (ஜர்மனியபிரபுக்களின்) சம்பளமற்ற சேவகன்.

Anubis. *m.* நாய்த்தலையுள்ள பழைய எஜிப்த்தியர்தேவன்.

s'Anuiter, *v. pr.* வழியிலே இரவிலகப்படுதல், — சிக்குதல்.

Anus, *m.* குதம், மலவாயில், கீழ்வாய், சீவனி, பாயு, பாயுரு, அபானத்துவாரம்.

Anvers, (பெல்ஜிக்கு தேசத்தில்) ஆன்வேர் நார்.

Anxiété, *f.* கவலை, கிலேசம், சஞ்சலம், விசாரம், கலக்கம், ஏக்கம். || ஆருட்டம்.

Aoriste, *m.* (oriste, கிரேக்குப்பாஷையில்) தீராதிறந்த காலம். || பிராஞ்சுப்பாஷையில்) தீர்ந்திறந்தகாலம்.

Aorte, *f.* இருதயத்துப் பெரிய தோர்தாது, இரத்த மூலாதாரம்.

Aortique, *adj.* ஷை தாதுக்கடுத்த.

Aoud, அயோத்தி, அயோத்தியபுரி.

Août, *m.* (oû), அகுஸ்துமாசம், அதிலே ஆடியும் ஆவணியுங் கலந்துவரும். || அறுப்புக்காலம் : avant l'— அறுப்புக்குமுன்னே : la mi— அகுஸ்துமாதத்தின் பாதி,— ௰௫-ம் தேதி.

Aoûté, *part.* அகுஸ்துமாத வெயிலாற்பழுத்த.

Aoûter, *v. a.* ஷை மாதவெயிலினாற் பழுப்பித்தல்.

Aoûteron, *m.*(outéron)ஷை மாதத்து அறுப்புக் கூலியாள்,—அறுக்கிறவன்.

Apache, *m.* பெரிய போக்கிரி.

Apagogie, *f.* எதிர்வசன வபத்தமிடும்உருசு.

Apaisé, *part.* அமர்ந்த, தணிந்த.

Apaiser, *v. a.* அமர்த்துதல், சாந்த—, சமாதானப்படுத்துதல், தணித்தல், அடக்குதல், ஒடுக்குதல், ஆற்றுதல் : — !a colère கோபத்தையமர்த்துதல் ; — la faim பசியையாற்றுதல் ; s' — *v. pr.* தணிதல், அமருதல், அற்றுப்போதல், கோபமாறுதல்.

Apalaches, *m. pl.* வட அமேரிக்காவில் அப்பலாஷ்என்னும் தொடர்மலை.

Apale, *m.* ஓர்வித எரிவண்டு.

Apanage, *m.* பிரபுக்களின் இளையகுமாரருக்குக் கொடுக்கப்படுங் காணியாட்சி. || சேர்மானம், உரிமை, தொடர்ச்சி.

Apanager, *v. a.* ஷை காணியாட்சி தருதல்.

Apanagiste, *m. et adj.* பிரபுவின் காணியாட்சி பெற்றவன்,— பெற்ற.

Apanthropie, *f.* வியாதியால் வருகிற மனுப்பகை.

A part, (à), *adr.* தனியே, புறத்திலே, பக்கத்திலே, வேறாக. || *prép.* à part moi என்னிடத்தில், நான் தனியே, பேசாமல்.

Aparté, (latin.) *m.* அபிநயன் தனிப்பேச்சு. || *adv.* தனிப்பேச்சாய்.

Apathie, *f.* அசட்டை, சோம்பு, பற்றுதலில்லாமை, மந்தம், தாமதம், ஆசை—, உணர்ச்சி—, சுவரணை யின்மை, அசையாக்குணம்.

Apathique, *adj.* அசட்டை—, சோம்பு—, மந்தமுள்ள. [வன், — இல்லாத.

Apédeute, *m. et adj.* படிப்பில்லாத

Apédeutisme, *m.* அறியாமை, படிப்பின்மை.

Apennins, *m. pl.* (இத்தலிதேசத்தில்) அப்பென்னினென்னுந் தொடர் மலை.

Apepsie, *f.* அசீரணம்.

Apercevable, *adj.* காணத்தக்க.

Apercevance, *f.* காணுந் தத்துவம்.

Apercevoir, *v. a* காண்டல், பார்த்தல், தரிசித்தல், உணருதல், தெரிதல், பிரித்தறிதல், காணத் துவக்குதல் : s'— *v. pr.* தங்களைக்காண்டல். || காணப்படுதல், தோன்றுதல். || கண்டுபிடித்தல், அவதானித்தல், கிரகித்தல், அறிதல் ; s'— de ses fautes தன் குற்றங்களைக் கண்டுபிடித்தல்.

Apercher, *v. a.* பக்ஷி குந்து மிடம் பார்த்துக் குறித்தல்.

Aperçu, *m.* நோக்கம், முதல்—, பார்வை. || சங்க்ஷேபம், சுருக்கம், தொகை. || மடிப்பு, உத்தேசம், சரவையான கணிப்பு : en — சங்க்ஷேபமாய். || *part.* d'apercevoir.

Apéritif, *adj.* பசியை மூட்டுகிற, விரோசன, சுகபேதிக்குரிய. || *m.* பசியை மூட்டுகிற—, விரோசன மருந்து.

Apertement, *adv.* பிரசித்தம் —, தெளிவாய்.

Apétale, *adj.* பூவிதழற்ற.

Apetissement, *m.* (தூரத்திற் காணப்பட்ட பொருளின்) குறைவு, குறைப்பு.

Apetisser, *v. a.* குறைத்தல், சின்னதாக்குதல், சின்னதாய்த் தோன்றுவித்தல். || *v. n. et v. pr.* s'— குறைதல், சுருங்குகிறது.

A-peu-près, (à), *adv.* சற்று —, ஏறக்குறைய, ஏற்றக்குறைச்சலாய், கிட்டமுட்ட, — த்தட்ட. || *m.* ஏற்றக்குறைச்சல், — த்தாழ்ச்சி, சராசரி, குறைநிறை : se contenter d'un — சராசரி போதுமென்றிருத்தல்.

Aphélie, *f.* சூரியனுக்குத் தூரமான கிரக நிலை, துங்கம், உச்சம், துங்கோச்சம், உத்தரம். || *adj.* planète — துங்க நிலையிலுள்ள கிரகம்.

Aphérèse, *f.* தலை—, முதற்குறை, மொழிமுதலின் குறுக்கம், முதலெழுத்து நீக்கம் ; உதாரணம் : தாமரை என்பது, மரை என்பதாம்.

Aphonie, *f.* குரலடைப்பு.

Aphorisme, *m.* ஏற்ற பழமொழி, சுருக்கத்தில் மிக்க வர்த்தமுள்ள நீதி —, பழமொழி. [துவான.

Aphrodisiaque, *adj.* காமத்துக்கே

Aprodite, *f.* வெனுஸ்என்பவள். || ஓர்வித கடற் பூச்சி.

Aphthe, *m.* வாயின் புண்.

Aphye, *m.* Aphya, குள்ள—, சாணி—, சாளைக்கெண்டை.

Aphylle, *adj.* இலையற்ற [ண்டு.

Aphytée, *f.* தாளுமிலையுமற்ற பூ

Api, *m. ou* pomme d'— ஓர் சிவப்புக்கனி.

Apiaires, *m.pl.* தேனீ யினம். [வன்.

Apiculteur, *m.* தேனீ வளர்க்கிற

Apiculture, *f.* தேனீ வளர்ப்பு.

Apiquer, *v. n. et a.* நங்கூரத்துக்கு நேர் நிலையாதல்,— யாக்குதல், கீழ்ப்பருமலில் ஓர் நுனியைத் தூக்குதல்.

Apis, *m.* (எஜிப்த்தியர் ஆராதித்த) ஆபிஸ் என்னும் எருது. || தென் திசைத்தாராகணம். || — violacea கரும்புள்.

Apitoyer, *v. a.* இரக்க—, உருக்கப்படுத்துதல், இரக்கமூட்டுதல், இரங்குவித்தல் ; s,— *v. pr.* மனம்—, இரங்குதல், இரக்கப்படுதல்.

Apivore, *adj.* தேனீப் பட்சிக்கிற.

Aplaigner, Aplaner, *v. a.* புடவை மயிர்ச் சிலும்புவித்தல்.

Aplaigneur, Aplaneur, *m.* புடவைமயிரைச் சிலும்புவிக்கிறவன்.

Aplanir, *v. a.* நிரவுதல், சமம் —, ஒப்பரவு —, மட்டமாக்குதல், மேவுதல். || எளிதாக்குதல், குறைத்தல், நீக்குதல், தீர்த்தல், எடுத்துப்போடுதல், விளக்குதல் : — les obstacles விக்கினங்களை நீக்குதல்: s'— *v. pr.* சமம்—, மட்டம் —, ஒப்பரவாதல், நீங்குதல், எளிசாதல், விளங்குதல்.

Aplanissement, *m.* சமம்—, ஒப்பரவு —, மட்டமாக்குதல், — ஆதல், சமம். ‖ விளக்கம், நீக்கல்.

Aplatir, *v. a*, சப்பட்டை—, தட்டையாக்குதல் : s'— சப்பட்டை —, தட்டையாதல், சப்பளித்தல்.

Aplatissement, *m.* சப்பட்டை—, தட்டையாதல், சப்பளிப்பு. [வன்.

Aplatisseur, *m.* தட்டையாக்குகிற

Aplatissoir, *m.* தட்டையாக்குங் கருவி. [யாக்குந் திரண்டகட்டை.

Aplatissoire, *f.* இரும்பைத் தட்டை

Aplet, *m.* ஓர்வித வலை.

Aplomb, *m.* நிறுதிட்டம், செங்குத்து, இலம்பத்துவம், தூக்குநூல், நேர் —, சமநிலை, நிதானம், உறுதி, திடம் : ce mur a perdu son — இந்தச் சுவர் சாய்ந்துபோயிற்று ; avoir de l'— நேர் நிலையாய் —, திடமாயிருத்தல் ; d'—*adv.* நிறுதிட்டம்—, திட்டமாய்.

Aplome, *m.* ஓர்வித தாது,— கல்லு.

Aplude, *f.* ஓர் புல் : apluda aristata கழிமுட்டான் புல். [பு.

Apnée, *f.* மூச்சின்மை, மூச்சடைப்

Apocalypse, *f.* காட்சியாகமம், அறிவிப்பு என்னுஞ் சத்தியவேதாகமம் : style d'— கருகலான வசன நடை ; cheval de l'— மெலிந்த குதிரை.

Apocalyptique, *adj.* கருகலான, புதை பொருளான. [யன்.

Apoco, *m.* வாயாடியாகிய மடை

Apocope, *f.* மொழியீற்றின் குறுக்கம், கடைக்குறை. ‖ எலும்பில் ஓர் துண்டாகுகிற உடைவு, — அறுப்பு.

Apocrisiaire, *m.* இராச்சியத்தி னிராயசக்காரன், ஸ்தானாபதி, தூதன், முத்திரை விசாரணைக்காரன்.

Apocroustique, *adj.* இறுக்குகிற, பித்தம் நீக்குகிற.

Apocryphe *adj.* நிச்சயமற்ற, சந்தேகமான, கள்ள, ஆக்கியோன் பெயர் தெரியாத, ஏற்றுக்கொள்ளப்படாத, தள்ளுபடியான.

Apocyn, *m.* ஓர்வித பூண்டு.

Apocynées, *f. pl.* ஷை பூண்டினம்.

Apode, *adj.* கீழ்சிறகற்ற (மீன்), காலற்ற (பூச்சி), சிறிய காலுள்ள (பக்ஷி). ‖ *m.* காலற்ற பிராணி.

Apodictique, *adj.* திஷ்டாந்தம்—, தெளிவான, மெய்ப்பிக்கிற.

Apogée, *f.* துங்கம், உச்சம், துங்கோச்சம், உத்தரம், ஓர்கிரகம் பூமிக்கு அதிக தூரமான நிலை. ‖ உச்சி, மேலான அந்தஸ்து, உன்னத மேன்மை. ‖ *adj.* துங்கோச்சத்தி லிருக்கிற.

Apogon, *m.* வீசையற்ற ஓர் மீன்.

Apographe, *m.* பிரதி, மூலபிரதி பார்த்தெழுதினது. அசலுக்குச் சரியான நகல்.

Apollinaire, *adj.* அப்பொல்லோன் என்னும் பொய்த்தேவனைக் குறித்துச் செய்த. ‖ *m.* அப்பொல்லினேர் என்பவன், ஓர் பதிதமதத் தலைவன்.

Apollinaristes, *m. pl.* அப்பொல்லினேர் மதத்தார்.

Apollon, *m.* அப்பொல்லோன் என்பவர், சத்தியவேத பிரசங்கிகளில் ஒருவர். ‖ அப்பொல்லோன் என்பவன், கவித்துவப் பொய்த்தேவன். ‖ ஓர் வித யாழ், ஓர்வித வண்ணாரப்பூச்சி : faire des vers en dépit d'— இசையாத கவிகளைச் செய்தல்.

Apollonies, *f. pl.* அப்பொல்லோன் என்பவனுடைய அஞ்ஞான திருநாட்கள்.

Apologétique, *adj.* ‖ நியாயங் காட்டுகிற, தூஷணமறுப்பான. ‖ *m.* தூஷணமறுத்தல்.

Apologie, *f.* குற்றச்சாட்டு—, தூஷணமறுப்பு,— மறுத்தல், நிந்தைப் பரிகார நியாயம், நியாய விளக்கம். ‖ புகழ்ச்சி, ஸ்துதி, உத்தரவாதம்.

Apologiste, *m.* தூஷணமறுப்பவன், நியாயங் காட்டுபவன், பரிந்து பேசுகிறவன்.

Apologue, *f.* கட்டு—, கதை, உவமையிற் சத்திய மடங்குங் —, மிருகங்கள் பேசுங் கதை.

Apoltronir, *v. a.* இராசாளியின் பெரிய நகமறுத்தல்.

Apoltronner, *v. a.* கோழை யாக்குதல். [ளவைகளை யளக்கும் வித்தை.

Apomécométrie, *f.* தூரத்திலுள்

Aponévrographie, *f.* Aponévrologie, *f.* நீளுகிற நரம்பின் நுனி வருணிப்பு,— விளக்கம். [வு,— நீட்சி.

Aponévrose, *f.* நரம்பி னுனி விரி

Aponévrotique, *adj.* நரம்பி னுனி நீட்சிக்கடுத்த.

Aponoget, *m.* (plante), Aponogeton

monostachyum, கொட்டி, அல்லியம், கொட்டைக் கிழங்கு.

Apophthegme, *m.* மாகருத்து மொழி, மாகருத்துள்ள பெரியோர் வாக்கியம், பெரியோர் பழமொழி, மூதுரை.

Apophyge, *f.* பாதத்தின் மேலடித் தூண்.

Apophyse, *f.* எலும்பின் பிதுக்கம், கூர்ந்த எலும்பின் பிதுக்கம், கழலை, புடைப்பு, சிலபாசி புறையடியிற் புடைப்பு.

Apoplectique, *adj. et s.* கடியசன்னிக்கடுத்த,— ஏதுவான, — ஏதுவானவன், கடியசன்னியுள்ள,— யுள்ளவன், — யேறின.

Apoplexie, *f.* கடியசன்னி, — சன்னிவாதம்.

Apore, *m.* அரியதாட்டாந்தரம்.

Aposiopèse, *f.* சொல்லாவணி, சொல்லாமை.

Apositie, *f*, உணவின் வெறுப்பு.

Apostase, *f.* ஆபத்துக்குரிய சீழ்க்கட்டி, மிகவுங் கழிதலால் வியாதிமுடிதல், உடைந்த எலும்பின் துண்டு.

Apostasie, *f.* சத்தியவேத மறுதலிப்பு, — வேத துரோகம்,— வேதத்தை விட்டபாவம். || தன்சபையை—, தன் கட்சியை விட்டுவிடுதல்.

Apostasier, *v. n.* சத்தியவேதத்தை விட்டுவிடுதல்,—மறுதலித்தல். || தன் சபையை —,தன்கட்சியை விட்டுவிடுதல்.

Apostat, *m.* சத்தியவேதத்துரோகி, சத்தியவேதத்தை விட்டவன், — மறுதலித்தவன், தன் சபைக்குத் —, தன் கட்சிக்குத் —, துரோகி. || *adj.* சத்திய வேதத்துக்குத் துரோகியான, துரோகியான.

Apostème, *m.* சீழ்க்கட்டு, கட்டி, சிலந்தி, பரு.

Aposter, *v. a.* வைத்தல், ஏற்படுத்துதல், நியமித்தல், கைக்கூலியால் ஏற்படுத்துதல், பதிவிடையாய் —, சதியாக —, தின்மைக்கு —, வேவுக்காக வைத்தல்.

Apostillateur, *m.* ஓர் நீதி நூலிற் குறிப்பு—, விவர மெழுதுகிறவன்.

Apostille, *f.* (ஏட்டின் ஓரத்தில்—, காகிதத்தடியில் எழுதிய) குறிப்பு, விவரம், விண்ணப்பத்தின் அடியிலெழுதிய சிபாரிசு.

Apostiller, *v. a.* ஷை குறிப்பு— விவரம்—சிபாரிசு எழுதுதல்.

Apostolat, *m.* அப்போஸ்தலர் பட்டம், — உத்தியோகம், — அலுவல்.

Apostolicité, *f.* அப்போஸ்தலருக்கடுத்த தன்மை.

Apostolique, *adj.* அப்போஸ்தல, அப்போஸ்தலருக்குரிய, — அடுத்த, — ஒத்த, அப்போஸ்தலரால் வந்த.|| அர்ச். பாப்புவின்.|| à l'apostolique *ou.*

Apostoliquement, *adv*, அப்போஸ்தலர் மேனையாக.

Apostrophe, *f.* உயிர்க் குறைக்குறி. || முன்னிலையணி, முன்னிலையாய்ப் பேசுமணி. || கண்டனை, இகழ்ச்சியான கண்டனை, கண்டனைவடு. || அடி, அடியின்வடு.

Apostropher, *v. a.* முன்னிலையாகப் பேசுதல், — கேட்டல், — கண்டித்தல். || கண்டித்தல், பழித்தல், கண்டனை சொல்லுதல் : — d'un soufflet கன்னத்தி லறைதல்.

Apostume, *f.* கட்டி, சீழ்க்கட்டி, உடைந்து வெள்ளைச்சீழ் புறப்படுகிற கட்டி, வீக்கம்.

Apostumer, *v. n.* சீழ்க்கட்டியாதல்.

Apothème, *m.* மையத்தினின்று பக்கத்தில்வரும் நேர்நிலைவரி, சுவறலால் அடியில்விழும் மண்டி.

Apothéose, *f.* (பொய்த்) தேவனாக ஏற்படுத்துதல், (அஞ்ஞானிகள்) வீரனையு மிராயனையுந் தேவராக ஏற்படுத்துஞ் சடங்கு. || மிதமிஞ்சின வெகுமானம், — புகழ்ச்சி.

Apothicaire, *m.* மருந்துக்கடைக்காரன், மருந்துசெய்பவன், — விற்பவன், — கூட்டு முத்தியோகஸ்தன் : mémoire d'— மருந்துக்கடைக்காரன்—, மிதமிஞ்சின கணக்குச் சீட்டு.

Apothicairerie, *f.* மருந்து சாலை,—க்கடை,— கூட்டும் வித்தை.

Appothicairesse, *f.* மடத்தில் மருந்து விசாரணைக்காரி,—காரியாகிய கன்னியாஸ்திரீ.

Apothrause, *f.* துண்டுபிரிந்த எலும்பின் உடைவு.

Apotome, *f. m.* மட்டிறந்த பிரமாணமுள்ள இரண்டு அளவின் வித்தியாசம், சிற்றனைச்சுரம்.

Apôtre, *m.* அப்போஸ்தலர். || ஓர் தேசத்தில் முதல்வராக வேதத்தைப் போதித்தவர். || (ஓர் உபதேசத்தின் —, ஓர் கோட்பாட்டின் —, ஓர் மதத்

தின்) போதகன். || பெரிய வியாழக்கிழமையிற் கால் கழுவப் படுகிறவர்கள் ; l'Apôtre des nations அஞ்ஞான சனங்களின் —, அர்ச். சின்னப்பர் அப்போஸ்தலர் ; faire le bon — நல்ல அப்போஸ்தலரின்—, நாணயவான் வேஷம் போடுதல்.

Apozème, *m.* பூண்டுக் கஷாயம்.

Apparaître, *v. n.* தோன்றுதல், தோற்றுதல், காண—, வெளிப்படுதல், தரிசனம்—, தரிசனையாதல், தன்னைக் காண்பித்தல், தெரிதல், தெளிதல், நேரிடுதல், திடீரென வெளிப்படுதல்,— வருதல், சம்பவித்தல்: faire— de காண்பித்தல், ஒப்பித்தல் ; il m'apparaît எனக்குக் காணுது, எண்ணுகிறேன்.

Apparat, *m.* ஆடம்பரம், ஆரவாரம், சிறப்பு, சோடிப்பு, முஸ்திப்பு, சலாக்கியம். || சிற்றகராதி.

Apparaux, *m. pl.* கப்பலின் முஸ்திப்பு.

Appareil, *m.* ஆடம்பரம், ஆரவாரம், சிறப்பு, சோடிப்பு, கோலம். || முஸ்திப்பு, பிரயத்தனம், எத்தனம், கருவிகள், ஆயுதங்கள், தட்டுமுட்டு, தளவாளம். || சத்திரவித்தைக் கருவிகள், காயத்தின் சோடிப்பு,— பரிகரிப்பு,— பற்று,— முஸ்திப்பு. || ஓர் தொழிலுக்கு உபகரணமானதெல்லாம். || வில்வளைவிற் கல்லுகளைவைக்கும் வித்தை, கல்வரிசை யுயரம் : mettre le premier— முதற் சோடிப்பு போடுதல்.

Appareillage, *m.* பாய் விரிப்பு.

Appareillement, *m.* வேலைக்கு இணை கட்டுதல்.

Appareiller, *v. a.* இசைத்தல், திட்ட—, சரிப்படுத்துதல், ஏற்படுத்துதல், சோடித்தல், சரியானவைகளையொன்றாய்வைத்தல், வேலைக்கு இணை கட்டுதல், சோடுகட்டுதல், சோடாக்குதல், பணிக்குப்படி வெட்டவேண்டிய கல்லுகளின்மேல் அளவு வணாதல்: — une voile காற்றுக்குப் பாய்விரித்தல். || *v. n.* பாய்விரித்தல், — விரித்தோடுதல். s'— *v. pr.* சரியொத்தவை சேர்தல், இணை—, சோடாதல்.

Appareilleur, *m.* கல்வெட்டுதற்கு நூல்போடுகிறவன், — வரிகுறிக்கிறவன், பட்டு முஸ்திப்பு செய்பவன்.

Appareilleuse, *f.* தூதி, சங்கம் வாங்கி, வேசி.

Apparemment, *adv.* போல, சாயலாய், தோற்றத்தின்படியே, ஆக்கும், காணுது : il viendra — வருவானுக்கும் ; — qu'il viendra வருவானென்று காணுது.

Apparence, *f.* தோற்றும், சாயல், புறக்கோலம், உருவம், போலி, பாவனை, வேஷம், கோலம், அடையாளம், குறி, குறிப்பு, வெற்றுருவம், வடிவு, நல்ல சாயல், மெய்க்கொப்பு, உண்மைச் சாயல் ; sauver les — குற்றந் தோன்ருதபடிக்கு எச்சரிக்கையாயிருத்தல் ; en— சாயலாய், புறத்தியில், தோன்றினபடிக்கு.

Apparent, *adj.* தோன்றுகிற, திஷ்டாந்தம்—, வெளி—, பிரசித்தம்—, விளக்கம்—, தெளிவான, விசேஷம்—, முக்கியமான, வீண்கோலம்—, வேஷமுள்ள, வெற்றுச்சாயலான, தோர்றமான.

Apparenter, *v. a.* சம்பந்தம்—, உறவாக்குதல் : s'— *v. pr.* 'சம்பந்தமாதல்,— கலத்தல், — பண்ணுதல், உறவாதல் ; être bien apparenté உயர்ந்த வமிசமாயிருத்தல்.

Apparesser, *v. a.* சோம்பல்—, மந்தமாக்குதல் : s'— சோம்பேறி—, மந்தமாதல், சோம்பலுக்குப் பழகுதல்.

Appariement, *m.* சோடுகட்டுதல்.

Apparier, *v. a.* சோடுகட்டுதல்,— ஆக்குதல், சோடுசோடாய் வைத்தல், இணைத்தல், புணர்த்துதல் : s'— சோடாதல், சோடு சோடாய்க் கூடுதல், இணைதல், புணர்தல்.

Appariteur, *m.* சேவகன், சலவாதி, தலையாரி, ஊர்க்காவற் சேவகன், கட்டியக்காரன், கையாள், வாயிற் காப்போன்.

Apparition, *f.* தரிசனம், தரிசனை, காட்சி, பிரசன்னம், தோற்றம், தோன்றுதல். || வெளிப்படுதல், வருதல், பிரசித்தமாதல், புதுப்புஸ்தகத்தின் பிரசுரம். || சற்றுநேரமிருத்தல். || *pl.* தரிசனைகள், வீண்காட்சிகள்.

Apparoir, *v. n.* திஷ்டாந்தமாய்—, தெளிவாயிருத்தல் ; il appert விளங்குகின்றது, தெளிவாயிருக்குது : faire — காண்பித்தல், உருசுப்படுத்துதல்.

Apparoner, *v. a.* அளத்தல், குறித்தல்.

Appartement, *m.* அறை, அறைவீடு, — நிரை.

Appartenance, *f.* சேர்மானம்.

Appartenant, சேர்ந்த, அடுத்த, சொந்தமான. *part. de*

Appartenir, *v. n.* சொந்தம் —, உரிமை —, காரியம் —, சம்பந்தம் —, சுதந்தரம் —, கடமை —, சேர்மானம் —, உரித்தாயிருத்தல், தக்குதல், சேர்தல், சார்தல், அடுத்தல், சேர்ந்திருத்தல், கீழ்ப்படிதல். || *V. uni*— தகுதல், தகுதியாயிருத்தல். || s' — தனக்குச் சொந்தமாயிருத்தல். [கு, இழுக்கு.

Appas, *m. pl.* இன்பம், மயக்கு, அழ

Appât, *m.* இரை. || இன்பம், மயக்கு, அழகு, இழுக்கு, வார்த்தைப்பாடு.

Appâter, *v. a.* இரையிடுதல், — போடுதல், — காட்டுதல். || சிறு பக்ஷிக்கு இரை யூட்டுதல், அதின் வாயிலுணவுபோடுதல். || (கோழி, வாத்து) கொழுப்பித்தல்.

Appauvrir, *v. a.* எளிமைப்படுத்துதல், வறுமை —, தரித்திரம் —, தரித்திரனாக்குதல், எளியவனாகச் செய்தல். || செழுமை —, தாராளம் —, பலன் குறைத்தல் — le sol பூமியின் வளங் குறைத்தல் ; s'— எளிமை —, வறுமை —, தரித்திரமாதல், குறைபடுதல், செழுமை —, தாராளம் —, பலன் குறைதல்.

Appauvrissement, *m.* வறுமை, எளிமை, தரித்திரம், — ஆதல், சிறுமை, செழிப்பின்மை, வளமின்மை, பலன்—,சாரக்குறைவு. [பம்,உறட்டி.

Appe (galette indienne), *f.* அப்

Appeau, *m.* பக்ஷியை யழைக்குங் குழல். || தீபக பக்ஷி.

Appel, *m.* அழைப்பு, வரவழைப்பு, கூப்பிடு. || போருக்கழைப்பு, போர்க்கறைகூவல். || சேவகரைக் கூட்டுகிறதற்குத் தம்பூர் *ou* முரசு அடித்தல், வேட்டைநாய் தூண்டுகிறதற்குக் கொம்பூதுதல். || பேரழைத்தல், பேரழைத்து வந்தவர்களைப் பார்த்தல், சேவகத்துக்கு வரவேண்டியவர்களின் பேரழைத்தல். || மேலான நீதிஸ்தலத்துக்கு அபயமிடுதல், — ப்போகக் கேட்டல், அபயம், அப்பீல். || வலதுக்கா லசைவினாலாகிற தாக்கு: —de la langue குதிரை தூண்டுங் குரலோசை ; faire appel à கேட்டல், மன்றாடுதல், — de fonds சபையாரிடத்திற் புதுப்பணங்கேட்டல் ; juger sans— அபயமிட இடம் விடாமல் தீர்த்தல் ; cour d'— மேலான நீதிஸ்தலம்.

Appelant, *part.* மேலான நீதிஸ்தலவிசாரணைக்கேட்கிற, அபய மிடுகிற. || *m.* தீபக பக்ஷி.

Appeler, *v. a.* அழைத்தல், வரவழைத்தல், அழைப்பித்தல், வருவித்தல், கூப்பிடுதல், கோருதல், உரக்கப் பெயர் சொல்லுதல். || நீதி ஸ்தலத்துக்கு அழைத்தல், அபயமிடுதல், மேலான நீதிஸ்தலத்துக்கு அபயமிடுதல்,—ப்போகக் கேட்டல். || பெயர் —, நாமமிடுதல், ஏவுதல், தூண்டுதல், ஏற்படுத்துதல். || குறித்தல், நியமித்தல்.|| வாசித்தல், உச்சரித்தல்:— la haine sur quelqu'un ஒருவன்மேல் பகை வருவிக்கப் பிரயாசப்படுதல். || en — அபயமிடுதல் ; j'en appelle de votre décision உமது தீர்ப்பு மாற்ற அபயமிடுகிறேன் ; j'en appelle à votre sagesse உமது ஞானம் நடுத்தீர்க்கும்படி கேட்கிறேன் : appeler à bord கப்பலுக்கு வரவழைத்தல், — த்தோணியனுப்ப அடையாளத்தைக் காட்டுதல், s'— அழைக்க —, என்னப்படுதல்.

Appellatif, *adj.* பொதுவான, பொதுப்பெயரான.

Appellation, *f.* அழைப்பு, பெயரிடுதல், — குறிப்பு, உச்சரிப்பு, பெயர், நாமம். || அபயம், அபயமிடுதல்.

Appendice, *m.* சேர்மானம், சேர்ப்பு, சேர்வைமொழி, சேர்ந்தபொருள்.|| ஒழிபியல், அநுபந்தம். [மான.

Appendiculaire, *adj.* சேர்மான

Appendiculé, *adj.* சேர்மானமுள்ள.

Appendre, *v. a.* தூக்குதல், தூங்கவைத்தல்.

Appentis, *m.* தாழ்வாரம், இறவாணம். [றது.

Appert (il) *V. uni.* விளங்குகின்

Appesantir, *v. a.* பாரமாக்குதல், அதிகபாரம் —, பளுவு —, கனம் —, மந்தமாக்குதல், மழுக்குதல்,அமுக்குதல்; s'— கனத்தல், கனம் —, பளுவு —, மந்தமாதல், மழுங்குதல், சோர்தல், சோம்புதல்.

Appesantissement, *m.* பளுவாதல், பளுவு, கனப்பு, மந்தம், மழுக்கம், அசமந்தம், சோர்வு.

Appétence, *f.* ஆசை, விருப்பம், நாடல்.

Appéter, *v. a.* ஆசித்தல், விரும்புதல், நாடுதல்.

Appétibilité, *f.* ஆசிப்பதற்குரிய—, ஆசிக்குந்தன்மை.

Appétible, *adj.* ஆசிக்க —, விரும்பத்தக்க.

Appétissant, *adj.* பசியை—,விருப்பத்தைத் தூண்டுகிறது, விருப்பத்துக்குரிய.

Appétit, *m.* பசி, தீன்கருத்து, தின்ன ஆசை. || ஆசை, விருப்பம், ஆவல், பேராசை, நாடல். || ஆசாபாசம். || *pl.* பசிதூண்டுகிற புகைந்த சிறு மீன் — ஒல்லி வெங்காய முதலியது : il n'est chère que d'— பசி பதார்த்தங்களுக்குச் சம்பாரமாம்.

Appétitif, *adj.* ஆசைக்குரிய, ஆசை வருவிக்கிற.

Appétition, *f.* விருப்பம், நாடல்.

s'Appiétrir, *v. pr.* கெடுதல், விலை குறைதல்.

Applaudir, *v. a. et n.* கைகொட்டி மெச்சுதல், — ஏத்துதல், கொக்கரித்தல், ஆர்ப்பரித்தல், ஆரவாரமாய் வாழ்த்துதல், புகழ்தல், மெய்ச்சுதல், ஏற்றுக்கொள்ளுதல்:— quelqu'un,— à quelqu'un ஒருவனை மெய்ச்சுதல்; — à une chose ஓர் காரியம் நல்லதென்று புகழ்தல் ; s'— தன்னை மெய்ச்சுதல், — பாராட்டுதல், அகமகிழ்தல், சந்தோஷப்படுதல்.

Applaudissement, *m.* கைதட்டல், ஆர்ப்பரிப்பு, மெச்சல், புகழ்ச்சி, பாராட்டு, பாராட்டான கொக்கரிப்பு, அங்கீகரிப்பு.

Applaudisseur, *m.* கைதட்டிமெச்சுகிறவன், ஆர்ப்பரிக்கிறவன், பாராட்டுகிறவன்.

Applicable, *adj.* ஒட்ட —, இட—, சேர்த்திடத்தக்க.

Application, *f.* கவனம், கவனிப்பு, அவதானம், சாவதானம், முயற்சி. || பிரயோகிப்பு, பிரயோகம், பிரயத்தனம். || பொருத்துதல், நியமிப்பு, ஒட்டுதல், சேர்த்திடுதல், போடுதல், சார்தல், செலுத்துதல்.

Applique, *f.* கூட்டணி, இசைக்குமணி, சேர்த்திடுவது.

Appliqué, *adj.* கவனம் —, அவதானம் —, சாவதானம் —, கருத்துள்ள.|| *f.* Appliquée, *V.* Ordonnée. || *part. de*

Appliquer, *v. a.* ஒட்டுதல், சேர்த்தல், கூட்டிவைத்தல். || தொடுவித்தல்.|| வைத்தல், போடுதல், இடுதல், அமுக்குதல். || இசைத்தல், பொருத்துதல், இணைத்தல், இணக்குதல், சார்த்தல், சாட்டுதல், செலுத்துதல். || நியமித்தல், குறித்தல் : — un soufflet அறையறைதல் ; — à la torture சக்கர வேதனைப்படுத்துதல்;—une phrase à quelqu'un ஓர் வாக்கியத்தை ஒருத்தனுக்குச் சாட்டுதல்;—une amende aux pauvres ஓரபராதந் தரித்திரருக்கு நியமித்திடுதல்; — son esprit à l'étude தன் மனம் படிப்பிலே செலுத்துதல் ; — un remède à une maladie ஓர் வியாதிக்கு ஓர் மருந்தை உபயோகித்தல் ; s' — *v. pr.* கவனம் —, கருத்து, — விருப்பம் வைத்தல், முயற்சிசெய்தல், கவனித்தல், பிரயாசைப்படுதல், வருந்துதல், உழைத்தல், தனக்கு எடுத்தல், — நியமித்தல், அபகரித்தல், கொள்ளுதல்.

Appoint, *m.* ஓர் தொகை நிரவக் கூட்டின பணம், — சில்லறைப் பணம்.

Appointé, *part.* சங்கதி கேட்டுத் தீர்க்க —, திட்டமாகவேண்டிய, சம்பளம் வாங்குகிற, சம்பளக்காரன்.

Appointement, *m.* நீதியின் திட்டம். || சம்பளம்.

Appointer, *v. a.* நீதியில் திட்டம் பண்ணுதல், நியமித்தல், குறித்தல், இசைத்தல். || சம்பளம் ஏற்படுத்துதல், — நியமித்திடுதல், இடுதல். || தோலைக் கடைசியாய் மிதித்தல். || ஆக்கினையாக இடுதல் : — d'une corvée அமஞ்சி வேலை ஆக்கினையாயிடுதல்.

Appointeur, *m.* நீதியில் திட்டம் பண்ணுகிறவன், — செய்கிறவன், மத்தியஸ்தன்.

Appondure, *f.* தெப்பத்தின் மேற்புறத்தினுதாரக்கோல்.

Apport, *m.* சந்தை, வருகை. || சீதனம், ஒவ்வொரு கூட்டாளி பொதுவில் வைக்கும் பணம் : — de pièces சாதன சாலையில் தஸ்தாவேசு விடுதல், — ஒப்பித்தல்.

Apportage, *m* சுமை கொண்டுவருவது, — வந்ததின்கூலி.

Apporter, *v. a.* கொண்டுவருதல், எடுத்து —, சுமந்துகொண்டுவருதல்,

சுமந்துவருதல். || வருவித்தல், இடுதல், தருதல், விளைவித்தல். || சீதனமாகக் கொண்டுவருதல். || பிரயோகித்தல். || ஒப்பித்தல், காண்பித்தல், சொல்லுதல்.

Apposer, *v. a.* போடுதல், வைத்தல், || கூட்டுதல், சேர்த்தல்.

Apposition, *f.* போடுதல், வைத்தல். || இசைவு, பொருத்தம். || இருபெயரொட்டு, ஒரே வேற்றுமையி லிருபெயர்ச் சொல்லினிசைப்பு.

Apprébender, *v. a.* கோவிலும் பிளிக்கைதரநியமித்தல், — நம்பிக்கையிடுதல்,— நியமித்திடுதல்.

Appréciable, *adj.* மதிக்கத்தக்க.

Appréciateur, *m.* — trice, *f.* மதிக்கிறவன், கனமா யெண்ணுகிறவன், விலை யிடுகிறவன், — தீர்க்கிறவன், மதிப்புக்காரன்.

Appréciatif, *adj.* மதிப்பு குறிக்கிற, —தெரியப்படுத்துகிற.

Appréciation, *f.* மதிப்பு, எண்ணம், விலையின் குறிப்பு, கணிப்பு.

Apprécier, *v. a.* மதித்தல், கணித்தல், எண்ணுதல், விலை குறித்தல்,— யிடுதல், சட்டைபண்ணுதல் : s'— தன்னை மதித்தல், தன் குணாகுணங்களை நன்றாயறிதல், மதிக்கப்படுதல்.

Appréhender, *v. a.* பிடித்தல். || பய—, அச்சப்படுதல், அஞ்சுதல், ஏங்குதல்.

Appréhensif, *adj.* பயமுள்ள, அஞ்சுகிற.

Appréhension, *f.* பயம், அச்சம். || உணர்ச்சி, உணர்வு.

Apprendre, *v. a.* படித்தல், கற்றல், கற்றுக்கொள்ளுதல், உணர்தல், பயிலுதல், ஓதுதல், பழகுதல். அப்பியாசம் பண்ணுதல், பாடம் பண்ணுதல், — ஆக்குதல். || அறிதல், அறியலாதல், கேட்டல், கேள்விப்படுதல். || படிப்பித்தல், கற்றுக்கொடுத்தல், போதித்தல், ஓதுவித்தல், பழக்குதல், பயிற்றுதல், உணர்த்துதல், தெரிவித்தல், அறிவித்தல் : s'— *v. pr.* ஒருவன் ஒருவனுக்குக் கற்றுக்கொடுத்தல், பழகுதல், போதிக்க —, படிப்பிக்க —, கற்பிக்கப்படுதல்.

Apprenti, *adj. et m.* பழகுகிற, அப்பியாசம்பண்ணுகிற, (தொழில், வித்தை) கற்றுக்கொள்ளுகிற, — கொள்கிறவன், பழக்கம்—, அப்பியாசமில்லாதவன், தேறாதவன்.

Apprentissage, *m.* தொழிலைக் கற்றுக்கொள்ளுகிற—, பழகும்—, பரிட்சை யந்தஸ்து, — காலம், அதற்கான வேலை, கற்றல், பழகுதல், பயிற்சி, பரிட்சை, அப்பியாசம், தொழி லப்பியாசம், வித்தியாரம்பம்.

Apprêt, *m.* முஸ்திப்பு, முஸ்தீது, ஆயத்தம், எத்தனம், பிரயத்தனம், தளவாடம். || பதன், பாகம். || எடுப்பு, ஒய்யாரம்.

Apprêtage, *m.* பதனிடுதல், முஸ்திப்பு —, சிறப்பாக்குதல், செப்பம் —, செப்பனிடுதல்.

Apprêté, *part.* முஸ்திப்பு—, ஆயத்தமான. || எடுப்பு—, ஒய்யாரமான.

Apprêter, *v. a.* முஸ்திப்பு—, ஆயத்தம் பண்ணுதல், சோடித்தல், பிரயத்தனஞ் செய்தல், தகுதியாக்குதல். || சமைத்தல், பாகம்—, சமையல் செய்தல். || பதமாக்குதல், காந்தி கொடுத்தல் : — à rire சிரிப்புக்குக் காரணங் கொடுத்தல் : s'— *v. pr.* தனக்கு முஸ்திப்பு பண்ணுதல், முஸ்திப்பாதல், முஸ்திப்பு—, பிரயத்தனஞ் செய்தல்.

Apprêteur, *m.* முஸ்திப்பு செய்கிறவன், புடவைகளைப் பதம்—, செப்பமிடுகிறவன்.

Appris, *adj.* படித்த, கற்றுக்கொண்ட, வளர்த்த, படிப்பிக்கப்பட்ட, படிப்புள்ள, ஒழுக்கமான.

Apprivoisé, *part.* பழகிய, சாந்தகுணம்—, பழக்கமான, சாதுவான, துஷ்டமாறின, துஷ்டமற்ற.

Apprivoisement, *m.* பழக்குதல், பழக்கமாக்குதல், சாந்தமாதல்.

Apprivoiser, *v. a.* பழக்குதல், சாந்தகுணப் படுத்துதல், துஷ்டமடக்குதல், சாந்தம்—, சாதுவாக்குதல் : s'— பழகுதல், சாந்தகுணம்—, சாதுவாதல், சாந்தகுணப்படுதல்.

Approbateur, *m.* — trice, *f.* ஏற்கிறவன், அங்கீகரிக்கிறவன், ஒப்பு —, ஏற்றுக்கொள்ளுகிறவன், சம்மதிக்கிறவன்,— வள்.

Approbatif, *adj.* சம்மத, சம்மதிக்கிற, ஏற்றுக்கொள்ளுகிற.

Approbation, *f.* சம்மதம், சம்மதி, ஒப்பு, அநுமதி, அங்கீகரிப்பு, உடன்

பாடு, ஏற்றுக்கொள்ளல், சம்மதியொப்பம்.

☞ Approbativement, *adv.* சம்மதியாய், ஏற்றுக்கொள்ளுகிற தன்மையாய்.

Approchant, *part.* அடுத்த, ஒத்த. || *adv.* ஏறக்குறைய.

Approche, *f.* கிட்டல், அண்டல், சேர்தல், அணுகுதல், கிட்டிவருதல், வருகை, வருத்து, சமீபம், அண்டை,—யிடம், தப்பான சேர்மானம், (நகரத்துக்குக்கிட்டுவதற்கு முற்றிக்கைக்காரர் செய்யும்) அண்டை வேலைகள் : greffe en— *ou* par— சமீபமான இரு கிளைகளை ஒட்டவைத்தல்.

Approcher, *v. a.* கிட்டவைத்தல், — செலுத்துதல், — கொண்டுவருதல், கிட்டுவித்தல், சமீபமாக்குதல், சேர்த்தல், கூட்டுதல், அணுக —, சாரச் செய்தல். || சேர்தல், அண்டுதல், அணுகுதல் ; — un prince பிரபுவை அண்டுதல், பிரபுவின் சனுவாயிருத்தல். || *v. n.* கிட்டுதல், சமீபித்தல், கிட்டப் போதல் , — வருதல், அணுகுதல், அண்டுதல், அடுத்தல், நண்ணுதல், சேர்தல். || நிகராதல், ஒப்பாதல், சாயலாயிருத்தல். || s'— *v. pr.* கிட்டுதல், அணுகுதல், கிட்டவருதல், அண்டுதல், சேர்தல், சாருதல். || பொருந்துதல், இசைதல், இணங்குதல், ஒத்துவருதல், உடன்படுதல்.

Approfondir, *v. a.* ஆழமாக்குதல், அதிகமாய்த் தோண்டுதல்,— குழித்தல். || ஆராய்தல், பரிசோதித்தல், பரிக்ஷித்தல்.

Approfondissement, *m.* ஆழமாக்கல், அதிகமாய் நோண்டல். || ஆராய்ச்சி, பரிசோதனை.

Appropriance, *f.* வசமடைதல்.

Appropriation, *f.* தனதாக்குதல், தனக்குரித்தாக்குதல், தன்வசப்படுத்துதல், அபகரிப்பு. || வசதி—, தகுதி—, உரித்தாக்குதல், பொருத்தல், இசைத்தல், நியமிப்பு, பிரயோகிப்பு. || இரு பொருளை மற்றொன்றைக் கொண்டு இசைத்தல்.

Approprié. *part.* தக்க, தகுந்த, இசைவான, இசைந்த, சுத்தமான.

Approprier, *v. a.* உரித்து—, தகுதி—, வசதி—, சுத்தமாக்குதல், இசைத்தல், பொருத்துதல் ; s'— உரித்து—, இசைவு —, தகுதி—, வசதி —, சுத்தமாதல், இசைதல், பொருந்துதல், தனக்குச் சொந்தம் — சுயம் — உரிமை — உரித்தாக்குதல், அபகரித்தல், அங்கீகரித்தல், ஏற்றுக்கொள்ளுதல்.

Approuver, *v. a.* அங்கீகரித்தல், ஏற்றல், ஏற்று—, ஒப்பு—, ஒத்துக்கொள்ளுதல், சம்மதித்தல், தகுதியாய் —, பெரிதா யெண்ணுதல், மெச்சுதல், சம்மதியொட்பங் கொடுத்தல் ; s'— *v. pr.* தனக்கு ஏற்குதல், — ப்பிரியப்படுதல், ஏற்க—, அங்கீகரிக்கப்படுதல்.

Approvisionnement, *m.* போசனவர்க்கச் சேகரம், தானிய—, இரஸ்து சேகரிப்பு, — முஸ்தீது,— சம்பாதிப்பு, — தேடுதல்.

Approvisionner, *v. a.* போசனவர்க்கங்களை—, இரஸ்து சேகரித் திடுதல், — சேர்த்தல்,— நிறைத்தல், பிரயத்தனஞ் செய்தல் : s'— *v. pr.* தனக்கு இரஸ்து சேகரித்தல், — சேர்த்தல்,— சம்பாதித்தல் : — d'eau தண்ணீரைச் சேகரித்தல், நீர்ச்சேகரஞ் செய்தல்.

Approvisionneur, *m.* (இரஸ்து) சேகரித்திடுகிறவன்.

Approximatif, *adj.* ஏற்றக்குறைச்சலான.

Approximation, *f.* அணுகுதல், கிட்டுமானம், சமீபம், ஏற்றக்குறைச்சல், மதிப்பு : par—, *ou*

Approximativement, *adv.* ஏறக்குறைய.

Approximer. *v. a.* அண்டுதல், சமீபித்தல், கிட்டுதல், ஒத்தல், நிகர்தல்.

Appui, *m.* ஆதரவு, ஆதாரம், தஞ்சம், தாபரம், முட்டுக்கால், பொறுப்பு, தாங்கி, மிண்டு, உடைமானம். || உதவி, ஒத்தாசை, அடைக்கலம், சிபாரிசு, சரணம், உதவியாள், உதவிக்காரன். || (சன்னல் முதலியவற்றின்) கிராதி, — ஆதரவு, கைப்பிடி. || இராவுத்தன் கைக்குங் குதிரை வாய்க்குமுள்ள சம்பந்த பொறுப்பு, நடக்கிற குதிரையின் கால் தரையில் தங்குங் காலம் : à hauteur d'— மேலே தங்கு முயரத்தில், மார்பி னுயரத்தில் ; point d'— மிண்டி தாங்கு மிடம், பொறுப்பு ; à l'— de, *prép.* ஆதரவாக, உறுதியாக, அத்தாட்சியாக.

Appui-main, *m.* கைத்தாங்கி.

Appuyé, *part.* சாய்ந்த, சார்ந்த, ஊன்றின, மேலூன்றிய, நம்புகிற, ஊன்ற —, தாங்க —, தாபரிக்க —, ஆதரிக்கப்பட்ட.

Appuyer, *v. a.* முட்டிடுதல், முட்டுக்கால் —, உதைகால் —, தாபரங்கொடுத்தல். || மேலே —, சாய்த்தல், ஊன்றவைத்தல், சார்த்துதல், சார்த்தி —, தாங்கவைத்தல். || ஆதரித்தல், தாபரித்தல், ஒத்தாசை செய்தல், தாங்குதல், சுமத்துதல், உறுதி —, ஸ்திரப்படுத்துதல். || அழுத்துதல், அமுக்குதல். || *v. n.* — sur மேலூன்றுதல், அழுத்தமாய் —, ஊன்றியுச்சரித்தல், — ப்பேசுதல், சாதித்தல், அழுத்துதல். || சாய்தல், சார்தல்; s'— *v. pr.* — sur மேலே ஊன்றுதல், — தங்குதல், — சாய்தல், —சார்தல், — நிற்றல், நம்புதல்; — une demande ஓர் மன்றாட்டுக்குச் சிபாரிசு செய்தல் : — un cachet முத்திரை அழுத்துதல் ; — des deux இரு குதிமுள்ளினாற் குதிரை குத்துதல் ; — à droite வலது பக்கத்திலே சாய்தல் ; s'— contre un mur சுவரிலே சாய்தல்.

Apre (âpre), *adj.* உறைப்பு —, காரமான, — உள்ள, துவர்ப்பான, உறைத்த. || முரட்டு, கரடு முரடுள்ள.|| கடினம் —, உக்கிரம் —, கண்டனமான, கடும், கடிய. || அதிக ஆவலுள்ள, பேராசையுள்ள.

Aprement (âprement), *adv.* காரம் —, உறைப்பாய். || கடுமை .—, கண்டிப்பாய், பழிப்பாய்.

Après, *prép.* பின், பின்பு, பிறகு, பிறகே, பிற்பாடு. || *adv.* பின்னும், அதின்பின், பின்னேயும், பின்னே, பின்னை. || விரோதமாய், பேரில், படியே, மாதிரியாய், க்கு : crier — quelqu'un ஒருவனை யழைத்தல் , — யிகழ்ந்து கூவுதல் ; courir — பிறகே ஓடுதல், பின்தொடர்தல், நாடுதல்; —tout எல்லாத்துக்குப்பின், எல்லாம் இப்படி யிருந்தாலும், ஆயினும் ; — coup காரியமான பின்பு; être — une chose ஓர் காரியத்தைக் கவனித்தல் ; être — quelqu'un ஒருவனைக் கெஞ்சுதல், — அலட்டுதல் ; **attendre** — பொறுமையாய் —, ஆவலாய்க்காத்திருத்தல். || après *suivi* ***d'un infinitif*** *ou* après que, *conj.* பின்பு, பிற்பாடு: après avoir gouverné, — qu'il eut gouverné ஆண்டபின்பு ; d'— படியே, மாதிரியாய்.

Après-demain, *adv.* நாளை நின்று, நாளையினன்றைக்கு :—passé நாளையினன்றைக்குபின்பு.

Après-dînée, *f.* après-dîné, — dîner, *m.* பகலசனத்துக்குப்பின்னேரம்.

Après-midi, *f.* மத்தியானத்துக்குப்பின் —, அந்திநேரம், பின்னேரம், அபராண்ண —, சாயங்காலம்.

Après-soupée, *f.*— soupé,— souper, *m.* இராப்போசனத்துக்குப் பின்னேரம்.

Apreté (âpreté), *f.* உறைப்பு, காரம், துவர்ப்பு, உக்கிரம், கடுமை, கடினம், கண்டிப்பு, கரடுமுரடு, உரப்பு. || ஆவல், பேராசை.

Apron, *m.* ஓர் மீன்.

A-propos, *m.* தக்க சமயம், — காலம், தகுதி, வசதி. *V. au mot* Propos.

Apsichet, *m.* பண்டிக்கண்ணுடியள்ளு.

Apsides, *m. pl.* (ஓர் கிரகத்தின்) அதிகதூர —, கிட்டின நிலை, மந்தோச்சம் : ligne des — தீர்க்கவட்டத்தின் பெரிய மத்தியவரி.

Apte, *adj.* தகுந்த, தக்க, ஏற்ற, உரிய, திறமை —, உரிமை —, சுதந்தரமுள்ள.

Aptère, *adj.* இறகற்ற.|| *m. pl.* இறகற்றபூச்சிகள்.

Aptéronotes, *m. pl.* முதுகிற் சிறகற்ற மீன்கள், — மீனினம்.

Aptitude, *f.* தகுதி, திறமை, சாமர்த்தியம், திராணி, சுதந்தரம்.

Apurement, *m.* (கணக்கின்) பரிசோதனை, அறுதி, தீர்மானம்.

Apurer, *v. a.* (கணக்கை) பரிசோதித்துத் தீர்த்தல், அறுதிபண்ணுதல்.

Apyre, *adj.* நெருப்பிற்கெடாத, — உருகாத.

Apyrétique, *adj.* காய்ச்சலில்லாத.

Apyrexie, *f.* காய்ச்சலொழிவு, — இடைவிடுதல்.

Aqua-fortis, *V.* Eau-forte.

Aqua-regia, *V.* Eau-régale.

Aquarelle, *f.* நீர்வன்னச் சித்திரம்.

Aquarelliste, *m.* நீர்வன்னச் சித்திரக்காரன்.

Aquarium, *m.* மீன்வளரும் குட்டை.

Aquatile, *adj.* நீரில் வாழும், நீரிலமிழ்ந்தின, நீர்மேல் மிதக்கிற, — அலைகிற. [பாவனைப்படம்.

Aqua-tinta, *f.* நீர்வன்னச்சித்திரப்

Aquatique, *adj.* நீரில் வாழும், — சீவிக்கிற, — வளருகிற, — உண்டாகுகிற, சதுப்பான : animaux — நீர்வாழ்வன, நீர்வாழ்சாதி, சலசரம், — சாதி, — செந்து.

Aqueduc, *m.* வாய்க்கால், கால்வாய், சலதாரை, — பாதை.

Aqueux, *adj.* நீருள்ள, — நிறைந்த, நீரைப்போன்ற. [சம்.

Aquila-alba, *f.* இளப்பமானவிர

Aquilaire, *m.* அகில்மரம்.

Aquilée, *f.* (இத்தலிதேசத்து) அக்கிலைநகர்.

Aquilin, *adj.* வளைந்த, கவிந்த, கழுகின்மூக்குபோன்ற, கழுகொத்த.

Aquilon, *m.* வாடை, வட—, குளிர்காற்று. [ன், வடக்கின்.

Aquilonnaire, *adj.* வட, வாடையி

Aquitaine, *f.* (பூர்வ பிராஞ்சுதேசத்து) அக்கித்தேன் நாடு.

Aquitains, *m. pl.* ஷை நாட்டார்.

Aquosité, *f.* நீர்த்தன்மை, நீர்க்குணம். [நெடும் வாலுள்ள பெருங்கிளி.

Ara, *m.* நேத்தியான கிளி யினம்,

Arabe, *m.* அரபிதேசத்தான், அரபியன். || அரபி பாஷை. || இரக்க மற்றவன், உலோபி, அநீத வட்டி வாங்குகிறவன். || *adj.* அரபிதேசத்து, அரபி : cheval— அரபிக் குதிரை ; chiffres— அரபியரால்வந்த—, வழக்கமான கணக்கக்ஷரம்,

Arabesque, *f.* அரபிதேசமாதிரியானசித்திரம் (அதிலே தழைகளு முருவங்களுங் கலந்திருக்கும்). || *m.* ஷை சித்திரமாதிரி. || *adj.* ஷை சித்திரத்துக்கடுத்த, — சித்திரமாதிரியாகிய, அரபிதேசமாதிரியாகிய.

Arabette, *f.* ஓர் பூண்டு.

Arabie, *f.* அரபிதேசம்.

Arabique, *adj.* அரபிதேசத்து : golfe— அரபிகுடா, செங்கடல் : gomme — வேலம்பிசின்.

Arabisme, *m.* அரபி பாஷை மாதிரி, — வசனநடை.

Arable, *adj.* உழத்தக்க.

Aracari, *m.* (தென்னமெரிக்காவில்) ஓர் குருவி.

Arachide, *f.* arachis hypogæa வேர்க்கடலை, மனிலாப்பயறு.

Arachnéolithe, *m.* கல்லான கடற்சிலந்தி. [தியினம்.

Arachnides,—fileuses, *f. pl.* சிலந்

Arachnoïde, *f.* சிலந்திநூல் போன்ற நுண்ணிய சவ்வு.

Arack. *m.* சாராயம், அராக்குச்சாராயம்; — de riz, de jus de palmier *ou* de cocotier, d'écorce d'acacia அரிசி —, கள்ளு —, பட்டைச்சாராயம்.

Aragon, *m.* (எஸ்பஞ் தேசத்தில்) அரகோன்நாடு, — ஆறு.

Aragonite, *m.* ஓர்வித கல்.

Araigne, *f.* மெல்லிய கபிலவலை.

Araignée, *f.* சிலந்தி, — ப்பூச்சி, சிலம்பி, ஈப்புலி, எட்டுக்காற்பூச்சி. || பல திசைக்குப் போகிற சுரங்கம். || கப்பிச்சேர்க்கை. || கிரகத்தி னுயரம்பார்க்கும் பல துளையுள்ள சக்கரம் : patte d'— சிலந்திக் கால், மெலிந்த நெடும் விரலுள்ள கை ; toile d'— சிலந்திநூல், — வலை, ஒட்டடை, உறுதியற்ற மெல்லிய புடவை : — de mer கடற்சிலந்தி, ஒற்றைக்கிளிஞ்சிலுள்ள கடற்பிராணி. [கலப்பை.

Araire, *m.* முன்சக்கர மில்லாத —,

Aral, (ஆசியாகண்டத்தில்) அரால் என்னும் பெரிய ஏரி.

Aralie, Aralia, *f.* ஓர்வித பூண்டு.

Araliacées, *f. pl.* ஷை பூண்டினம்.

Arambage, *m.* Aramber, *v. a.* கப்பலைக் கொளுவித்தாக்குதல், — எறிப்பிடிக்கத்தாக்குதல்.

Aramer, *v. a.* திரண்ட கட்டையின்மேல்வைத்து நீட்டுதல். [யினம்.

Aranéides, *f. pl.* ஓர்வித சிலந்தி

Arang, *m.* அற்பவேலைசெய்யுந் துணைவன். [அராராத்துமலை.

Ararat, *m.* (அர்மெனிதேசத்தில்)

Ararout, *m.* *V.* Arrow-root.

Arasement, *m.* Araser, *v. a.* *V.* Arrasement, Arraser.

Aratoire, *adj.* உழவுக்குரிய.

Arbalestrille, *f.* கிரகவுயரநிதானிக்குங் கருவி.

Arbalète, *f.* துப்பாக்கிபோல் கட்டையுள்ளவில்; தனுசு, ஓர் எறிவேல்;

cheval en— தனியாய் முன் கட்டப்பட்ட குதிரை.

Arbalétrier, *m.* ஷை வில்லான், — வில்லியன், எறிவேல் எய்வோன். || மேன்கூரை யுத்திரம், — தாங்குங் குதிரை. [டுமிடம்.

Arbalétrière, *f.* கப்பலிற் போரா

Arbitrage, *m.* மத்தியஸ்தம், பஞ்சாயம், பஞ்சாயத்து, பஞ்சாயத்தார் விசாரணை,—தீர்ப்பு. || பலநகரத்துக் காசுக்கடை யொப்பந்தம், சகட்டிலேபல விலை நிதானிப்பு.

Arbitraire, *adj.* மனதின்படியான, தன் னிச்சை—, சுவேச்சை—, தன் னிஷ்டமான, கட்டளையிடப்படாத : pouvoir — சுயாதிபத்தியம், மட்டற்ற அதிகாரம்.

Arbitrairement, *adv.* சுயமனதின்படியே, தன்னிஷ்டம் —, சுவேச்சை —, சுயாதிபத்தியமாய்

Arbitral, *adj.* மத்தியஸ்தரின், பஞ்சாயத்தாரின்.

Arbitralement, *adv.* மத்தியஸ்தமாய், மத்தியஸ்தரால், பஞ்சாயத்தார் முறையாய், — தீர்ப்பாய்.

Arbitrateur, *m.* மத்தியஸ்தன், பஞ்சாயத்தான்.

Arbitration, *f.* மத்தியஸ்தர் மதிப்பு, மத்தியஸ்தம், பஞ்சாய விசாரணை, உத்தேசம்.

Arbitre, *m.* மத்தியஸ்தன், பஞ்சாயத்தான், நடுவன், தருமகர்த்தன். || கர்த்தன், அதிபதி, எசமான். || *f.* மத்தியஸ்தி, பஞ்சாயத்தாள், எசமாட்டி ; libre—, franc — தன்னிஷ்டம், மனச்சுதந்தரம்.

Arbitrer, *v. a.* மத்தியஸ்தனாகத் தீர்தல். உத்தேசித்தல், மொத்தமாய் மதித்தல்.

Arbolade, *f.* ஓர்கறி,— பதார்த்தம்.

Bergamote, *f.* ஓர் கனி, ஓர் சுகந்த எலுமிச்சம்பழம், ஷை பழத் தோல் நிறைந்த சிமிழ், [ந்த எலுமிச்சை.

Bergamotier, *m.* ஷை கனி மரம், சுக

Berge, *f.* செங்குத்தான கரை, —கற்பாறை. || வழியின், வாய்க்காலின் சாய்ப்புள்ள ஓரம்.

Berger, *m.* இடையன், ஆயன், மேய்ப்பன், கோனான். காதலன், நேசன் : étoile du — வெள்ளி.

Bergera hænigu, கரு—, கறிவேம்பு : — verticillata நண்டுக்காற் கீரை.

Bergère, *f.* இடைச்சி, மேய்ப்பவள். || காதலி, நேசி. || தழுவணையுள்ள நாற்காலி.

Bergerette, *f.* சின்ன இடைச்சி, சிற்றிடைச்சி. || தேன்கலந்த விரசம். || ஓர் பக்ஷி.

Bergerie, *f.* ஆட்டுக் கிடை,— ப்பட்டி, — தொழுவம், மந்தை : — *pl.* ஆயர் பாட்டுகள். [தாட்டி யுள்ளான்.

Bergeronnette, *f.* சிற்றிடைச்சி, சூத்

Bérichot, Bérichon, *m.* ஓர் அடைக்கலங் குருவி.

Béring, *mieux* Behring, (வட அமேரிக்காவுக்குஞ் சிபேரிதேசத்துக்கும் நடுவில்) பெரிங்கு கடல் வாய்க்கால், — கடல்,— தீவு.

Béris, *m.* இறகுள்ள ஓர் பூச்சி.

Berle, *f.* ஓர் பூண்டு. [பட்டணம்.

Berlin, (புறுஸ்தேசத்தில்) பெர்லின்

Berline, *f.* ஓர் வில்வண்டி.

Berlingot, *m.* ஓர் வில்வண்டி.

Berlinois, *adj. et s.* பெர்லின் நகரத்து,— நகரத்தான்.

Berloque, *f.* வீடு சுத்தம்பண்ண—, சாப்பாட்டுக்கு வரத் தம்பூரடிப்பு: battre la — பிதற்றுதல்.

Berlue, *f.* கண் மந்தம்,— மயக்கம், சத்துவாரி : avoir la — கண் மயங்கியிருத்தல், தப்பிதமாய் எண்ணுதல்.

Berme, *f.* அகழுக்குங் கோட்டைக்கும் நடுவில் நெருக்கமான வழி, வாய்க்காலுக்கு மணைக் கட்டுக்கு முள்ளந்தரம். || கல்பா வாத பாதைப் பங்கு.

Bermudes, *f. pl.* (அத்திலந்திக்கு கடலில்) பெர்முது தீவுகள். [ள ஓர் பூண்டு.

Bermudienne, *f.* ஷை தீவுகளிலுள்

Bernable, *adj.* கம்பளியி லாட்டத் தக்க, பரிகாசத்துக்குரிய.

Bernache, *m.* ஓர் சங்கு.

Bernacle, *f.* வடதேசத்து வாத்து, ஐந்து பிரிவுள்ள மீனோடு.

Bernard l'ermite, *m.* வெறுமையான ஓட்டில் நுழைந்து வசிக்கும் ஓர் நண்டு.

St. Bernard, (அல்ப்பென்னுந் தொடர்மலையில்), அர்ச். பெற்நர்து மலை, (பெரிசுஞ் சின்னதுமாகிய இரண்டுண்டு.)

Bernardin, *m.* — ine, *f.* அர்ச். பெற்நர்தென்பவர் சபைச் சந்நியாசி, — கன்னியாஸ்திரீ.

Berne, (சுயிஸ்தேசத்தில்) பேர்ன் நாடு, — நகர். || *f.* கம்பளியிலாட்டும் விளையாட்டு, பரியாசம், கேலி : mettre le pavillon en — இழவு இக்கட்டின் குறியாகக் கொடியை மடித்துக் கட்டி எற்றுதல்.

Bernement, *m. et*

Berner, *v. a.* கம்பளிமேலாட்டுதல், — துள்ளுவித்தல், கேலி—, பரியாசம் பண்ணுதல்.

Berneur, *m.* — euse, *f.* கம்பளிமேலாட்டுகிறவன், கேலி பண்ணுகிறவன், —வள். [டிக்குரிய (வசன நடை).

Berniesque, Bernesque, *adj.* பகி

Bernique, *int.* ஒன்றுமில்லை, அது மோசமாம்.

Berniquet, *m.* தவிடு போடும் பெட்டி, பிட்சைக்காரன்பை, சோளி : être au — பிட்சைக்காரனா யிருத்தல்.

Bernois, *m.* பேர்ன் நாட்டான்.

Berry, *m.* (பூர்வீக பிராஞ்சிராச்சியத்தில் பேரி நாடு : Berrichons, Berruyers, *m. pl.* பேரி நாட்டார்.

Berria ammonilla, சவண்டலை, சவண்டிலை மரம். [ரித்தல்.

Bertauder, *v. a.* சமமற மயிர் கத்த

Bertavelle, *f.* கோரையாலான ஊற்றால். [ஓர் புடைவை.

Béruse, *f.* (வியேன் நகரத்தின்)

Béryl, Béril, *m.* சமுத்திரவன்னக் கல், — வருணச் சிலை.

Besace, *f.* இரட்டைப்பை, சோளிகை, சோளி, கக்கப்பாளம், —ப்பை,—ப்பொட்டணி. || தரித்திரம், நிர்ப்பாக்கியம்.

Besacier, *m.* சோளிகைக்காரன்.

Besaigre, *adj.* (கொஞ்சமாகி) புளிப்பாகிற. || *m.* புளிப்பு : tourner au — புளிப்பாதல் ; (குணம் புத்தி) எரிச்சலாதல்.

Besaiguë, *f.* இரட்டை வாச்சி, இருபுறமுங் கூர்மையான தச்சன் கருவி. || ஓர் சக்கிலியன் கருவி. || கண்ணாடிவேலைக் காரர் சுத்தியல்.

Besançon, *m.* (பிராஞ்சிராச்சியத்தில்) பெசான்சொன் நகர்.

Besant, *m.* கொன்ஸ்தாண்டினொப்பொலி நகரின் பூர்வ பொன்னாணயம், அது எறக்குறைய -௰-ரூபாய் பெறும்.

Beset, *m.* கூடவந்த இருபகடை.

Besi, *m.* ஓர்வித கனி.

Besicles, *f. pl.* மூக்குக்கண்ணாடி, உபநயனம், சுலோசனம் : mettez vos — உமது மூக்குக்கண்ணாடியைப் போடும், அதிக நுணுக்கமாய்ப் பாரும்.

Bésigue, *m.* ஓர்விதக் கடுதாசி விளையாட்டு.

Beslère, *f.* ஓர் பூண்டு.

Besoche, *f.* ஓர் புறமகலமான மண்வெட்டி.

Besogne, *f.* வேலை, அலுவல், கருமம், சிக்குள்ள—, வருத்தமான வேலை : aller vite en — வேலையைச் சீக்கிரமாய் —, படபடப்பாய்ச் செய்தல் ; se mettre en — ஓர் காரியத்தைத் துவக்குதல் ; être en — அலுவலாயிருத்தல்; donner, tailler de la — வருத்தமான வேலை யிடுதல், — உண்டுபண்ணுதல்.

Besogner, *v. n.* வேலை செய்தல், கொஞ்சுதல்.

Besoigneux, Besogneux, *m.* — euse, *f.* எழை, எளியவன்,—வள்.

Besoin, *m.* அவசரம், அவசியம், அகத்தியம், ஆத்திரம், தேவை, அக்கறை, வேண்டியது, வேண்டிய பொருள். || குறை, குறைபாடு, தரித்திரம், வறுமை, இக்கட்டு. || பசி, உணவின் குறை. || ஆபத்துள்ள சமயம். || கடமை. || விருப்பம், ஆவல். || *pl.* அவசரம், சீவியத்துக்கு அவசரங்கள், வேண்டியவைகள் ; j'ai besoin d'argent பண மெனக்கு அவசரமாம், —

வேண்டியது, — தேவை ; — d'aller à la ville நான் பட்டணத்துக்குப் போகவேணும் ; cette chose me fait — இந்தக்காரிய மெனக்குத் தேவை ; qu'est-il — de parler பேச அவசரமென்ன ? être dans le — வறுமைப்படுதல் ; dans les — extrêmes பெரிய ஆபத்துகளில், — இக்கட்டுகளில் ; — de manger சாப்பட அவசரம்,— விருப்பம்; au — அவசரகாலத்தில், — naturels அவசரம், ஆசனம் ; les grands — பெரிய அவசரம், மலசுத்தி, ஸ்தூலாசனம், விசாரமம் ; petits — சின்ன அவசரம், சலபாதை, அற்பாசனம் ; aller aux petits — சின்ன அவசரத்துக்கு —, சலபாதைக்கு —, ஒன்றுக்குப் போகிறது ; aller aux grands — பெரிய அவசரத்துக்கு—, இரண்டுக்கு —, குளத்துக்கு—, வாய்க்காலுக்கு—, மலசுத்திக்கு—, வெளிக்கு—, ஆற்றுக்குப் போகிறது.

Bessarabie, *f.* (உருசியதேசத்தில்) பெஸ்சரபி நாடு. [பெரிய மரம்.

Bessi, *m.* (மொலுக்கு தீவுகளில்) ஓர்

Besson, *adj.* இரட்டைப் பிள்ளையாகிய.

Bestiaire, *m.* துஷ்டமிருக யுத்தன்.

Bestial, *adj.* துஷ்ட—, மிருகத்து. துஷ்ட, மிருகத்தனமான.

Bestialement, *adv.* மிருகமாய், மிருகத்தனமாய். [வம்,— புணர்ச்சி.

Bestialité, *f.* மிருகத்தனம்,— பா

Bestiasse, *f.* மூடத்தனமுள்ள ஆள், மடைச்சி, புத்தியில்லாதவள். [தை.

Bestiaux, *m. pl.* ஆடு மாடுகள், மந்

Bestiole, *f.* சின்ன—, சிறு மிருகம். புத்தியில்லாத பிள்ளை, — சிறு பெண்.

Bestion, *m.* முன்னணிய முனை, வண்டு, சிறு மிருகம், மிருகங்களைக் காட்டுஞ் சீட்டி, — சித்திரச் சீலை.

Bêta, *m.* கிரேக்கரிரண்டாமெழுத்து. ‖ பெரு மூடன், மந்தையன்.

Bétail, *m.* ஆடு மாடுகள், வளர்க்கிற மிருகங்கள்.

Bétaule, *f.* ஓர்வித எண்ணெய்.

Bête, *f.* மிருகம், மிருகசீவன், புத்தியில்லாத பிராணி. ‖ மூடன், மந்தையன், புத்தியில்லாதவன், — வள். ‖ கடுதாசிச் சூதாடுகிற ஓர் வகை, அதிற் போட்ட பணம், — பந்தயம் : — de somme பொதி மிருகம் ; — de trait வண்டிலுக்குப் பூட்டு மிருகம் ; — fauves மானின—, மான்நிற மிருகங்கள் ; — noires கறுப்பு மிருகங்கள், காட்டுப்பன்றிகள் ; — carnassières *ou* rousses மாமிசம்பட்சிக்கிற —, கபில மிருகங்கள், ஓநாய் நரி முதலியதுகள் ; — puantes நாறுகிற மிருகங்கள், நரி, தகசு முதலியதுகள் ; remonter sur sa — தன் வாகனத்தின் மேல் திரும்பவேறுதல், இழந்த விலாபத்தை —, சவுக்கியத்தை மறுபடி யடைதல். ‖ *adj.* மிருகத்தனம் —, மூடத்தனமுள்ள, மூட.

Bétel, *m.* வெற்றிலை, தாம்பூலம் ; sac à — அடைப்பை, வெற்றிலைப்பை ; —mâché qu'on crache தம்பலம்; plantation de — கொடிக்கால் ; cultiver le — கொடிக்கால் பயிரிடுதல். [டனாய்.

Bêtement, *adv.* மூடத்தனம்—, மூ

Bethléhem, (யூதேயாதேசத்தில்) பெத்திலேம் நகர், சேசுநாதர்பிறந்த சிற்றூர்.

Bétille, *f.* ஓர் சல்லா.

Bêtise, *f.* மூடத்தனம், அவிவேகம், புத்திக் குறைச்சல், பைத்தியன், பைத்திய சொல், — செய்கை, அனர்த்தம். ‖ அற்ப—, வீண்காரியம், நகைப்புக்குரிய பகிடிச் சொல்.

Betlion, *m.* கப்பல் முன்னணிய முனை,— மூக்கு.

Bétoine, *f.* ஓர் வைத்தியப் பூண்டு.

Bétoires, *m. pl.* கொல்லைகளில் தண்ணீர்சேருங்—, கல்நிறைந்த குழிகள், சில ஆற்றுச்சலங் காணாமற்போகுங் குழிகள்.

Béton, *m.* தண்ணீரிற் கெட்டியாகுகிற) மணலும் பாலுங்கலந்த சுண்ணாம்பு.

Bette, *f.* ஓர் கீரை. [ங்கு.

Betterave, *f.* தித்திப்பான ஓர் கிழ

Bétuse, *f.* மீன்கொண்டுபோவதற்குரிய அரைவாசி திறந்த பீப்பா.

Bétyle, *m.* விக்கிரகத்துக் கல்.

Beuglement, *m.* கதறல், உக்காரம்.

Beugler, *v. n.* கதறுதல், உறுமுதல், உக்காரம்போடுதல், கத்துதல், அலறுதல்.

Beurre, *m.* வெண்ணெய், நெய், விழுது, அவி. ‖ பல பூண்டுகளின் நெய்,

சாரம், சாறு : — fondu, liquide நெய், அவி ; — noir இருப்புச்சட்டியில் உருகிக்கருகின வெண்ணெய் ;— fort பாண்டலான —, கெட்டவெண்ணெய் ; — de montagne, de pierre களிமண் சீனக்காரம் அன்னபேதிகலந்த சிலா நெய், — கன் மதம். [கனி.

Beurré, *m.* வெண்ணெய்த்தன்மைக்

Beurrée, *f.* வெண்ணெய்பூசின உரொட்டித் துண்டு.

Beurrer, *v. a.* வெண்ணெய் பூசுதல்.

Beurrerie, *f.* வெண்ணெய்க் கிடங்கு,— செய்யு மிடம்.

Beurrier, *m.* வெண்ணெய்ப்பாத்திரம். — || *m.* ère, *f.* வெண்ணெய்க்காரன், — காரி, — விற்பவன், — விற்பவள். [எந்நேரமுங் குடித்தல்.

Beuvailler, Beuvasser, *v. a. et n.*

Beuvante, *f.* வாடகைக்கப்ப லெசமானுக்குரிய இனம். [சம்.

Bévue, *f.* பிசகு, தப்பு, தவறு, மோ

Bey, *m.* (துலுக்கரில்) நாட்டதிகாரி, நகரதிகாரி, பேயென்பவன், (மகிமைப்பெபராம்.) [சைஎன்னுமாறு.

Beyah, *m.* (பஞ்சாபுநாட்டில்) விபா

Beylik, *m.* (துலுக்கரில்) ஆள்பவனதிகாரம்,— விசாரணை நாடு. [ட்டை.

Bezeau, *m.* ஓர் பக்கஞ் சாய்வான க

Bezestan, Bezestin, *m.* (துற்கிதேசத்தில்) மேல் மூடப்பட்ட கடை.

Bézoard, *m.* கோரோசனை. [னபுரம்.

Bhagalpour, (இந்துதேசத்தில்) கன்

Bhils, *m. pl.* (இந்துதேசத்தில்) பில்லரென்னுந் துஷ்ட சாதியார்.

Biais, *m.* சாய்வு, சாய்ப்பு, குறுக்கு, கோணல், சரிவு. || சூக்ஷ—, உபாயம், திரியாவிரம். || பக்கம், வகை. || சாய்வாய் வெட்டின சட்டையின் சோடிப்பு : prendre un — ஒருபாயம் எடுத்தல் ; de—, en — சாய்வாய், சாய்ப்பாய் ; du bon — நல்ல பக்கமாய்.

Biaisement, *m.* சாய்வு, கோணலாய்ப்போதல், உபாயம், திரியாவிரம்.

Biaiser, *v. n.* சாய்வாய்—, கோணலாய்ப்போதல், கோணுதல். || உபாயம் —, போக்கு தேடுதல், திரியாவிரம்—, மாறுபாடுசெய்தல், விங்களித்தல். || *v. a.* புரட்டுதல், திருப்புதல்.

Biaiseur, *m.*—euse, *f.* உபாயம்—, போக்கு தேடுகிறவன், — சொல்லுகிறவன், — வள், திரியாவிரக்காரன், —க்காரி. [ள்ள.

Biangulaire, *adj.* இரு கோணமு

Biasse, *f.* கழுவாத பட்டு.

Bibe, *m.* ஓர்வகை மீன்.

Biblote, *m.* வினோதமான பொருள்; விளையாட்டுப்பண்டம்.

Biberon, *m.* (பிள்ளைகள் வியாதிக்காரர் குடிப்பதற்குரிய) குழாய் அல்லது மூக்குள்ள பாத்திரம், — கலசம், குப்பி. || — *m.* — nne, *f.* குடியன், வெறியன், குடிக்காரன்,— காரி.

Bible, *f.* சத்தியவேதம், வேத புஸ்தகம், வேதாகமங்கள்.

Bibliographe, *m.* புஸ்தக சாஸ்திரி.

Bibliographie, *f.* புஸ்தகசாஸ்திரம், — பதிப்பும் விலையுமறிதல்.

Bibliographique, *adj.* புஸ்தக சாஸ்திரத்துக்கடுத்த. [கல்லுகள்.

Bibliolithes, *f. pl.* இலைகள் பதிந்த

Bibliomane, *m.* மிஞ்சின புஸ்தகப்பிரியமுள்ளவன். [பிரியம்,— இச்சை.

Bibliomanie, *f.* மிஞ்சின புஸ்தகப்

Bibliomappe, *m.* விபரஞ்சேர்ந்த பூகோள சாஸ்திரப் படச்சேர்க்கை.

Bibliophile, *m.* புஸ்தகப் பிரியன்.

Bibliotaphe, *m.* தன் புஸ்தகங்களைக் காட்டாதவன்.

Bibliothécaire, *m.* புஸ்தகசாலையின் விசாரணைக்காரன்.

Bibliothèque, *f.* புஸ்தகசாலை, —ப்பலகைச் சேர்வை, அதிலுள்ள புஸ்தகங்கள், புஸ்தகம்வைக்கும் அலமாரி, ஓர் சாஸ்திரத்தைச்சேர்ந்த புஸ்தகச் சேர்க்கை.

Biblique, *adj.* சத்தியவேதாகமத்து, வேதாகமங்களின், அதுகளின் வசன நடையுள்ள, வேதாகமங்களைப் பரம்பச்செய்வதற்கான. [இழிவு.

Bibus, *m.* அற்பம், வீண், விழல்,

Bicapsulaire, *adj.* இருவிதைக் கூடுள்ள, இரட்டை நெற்றுள்ள.

Bicarbonate, *m.* இருமடங்கு கரிச்சாரமுள்ள உப்பு. [ங்குள்ள.

Bicarboné, *adj.* கரிச்சாரமிரு மட

Biceps, *m.* இருதலை நரம்பு.

Bicêtre, *m.* நிர்ப்பாக்கியம். || (பரீஸ் நகரத்துக்கடுத்த) பிசேத்திறென்னுமூர், அங்கே பைத்தியர் கிழவர் முதலியவர்களுக்கான மடம், — தர்மசாலை.

Biche, *f.* மான் பெட்டை, பெட்டை மான் : à pieds de — வெளியில் வளைந்த காலுள்ள. || ஓர் மீன். || சிறு பெண்ணுக் குரிய நேசச் சொல்.

Bichet, *m.* ஓர்வித மரக்கால், ஓர் தானிய அளவை, அது கொண்ட தானியம். [தானிய வரி.

Bichetage, *m.* கடையில் விற்கிற

Bichette, *f.* சிறு பெட்டைமான். || சிறு பெண்ணுக்குரிய நேசச் சொல்.

Bichon, *m.* — nne, *f.* நெடு மயிருள்ள அழகிய—, பிரியமான சிறு நாய். || ஓர் சிறுவனுக்குரிய நேசச் சொல்.

Bichonner, *v. a.* மயிரைச்சுருட்டுதல், அலங்கரித்தல், சிறப்பித்தல். || se — தன்னை யலங்கரித்தல்.

Bicolore, *adj.* இரு நிறமுள்ள.

Biconcave, *adj.* இரு புறமுங் கவிவான (கண்ணாடி.)

Biconjuguée, *adj. f.* இரு கிளையாகப் பிரிகிற காம்புள்ள (இலை.)

Biconvexe, *adj.* இரு புறமுங் குமிழ்ந்த (கண்ணாடி.)

Bicoque, *f.* சிற்றூர், சிறு கோட்டை. || குடிசை. || கொஞ்ச செலவு செய்யும் வீடு.

Bicorne, *adj.* இரு கொம்புள்ள, இரு கூர் — நுனியுள்ள. || *f. pl.* இரு நுனிப் பூந்தாதுள்ள பூண்டினம்.

Bicornis, *m.* கை நீட்டு நரம்பு.

Bicornu, *adj.* இரு கொம்பு—, இரு கூருள்ள. [பிரிகிற.

Bicuspidé, *adj.* நுனி யிரண்டாய்ப்

Bicyclette, *f.* தீவிரத் துவிச்சக்கர வண்டி, காலாலியக்கப்பட்ட தீவிர இரதம்.

Bidassoa, *f.* பிராஞ்சுதேசத்துக்கும் எஸ்பஞ்தேசத்துக்கும் எல்லையாகிய —, பிதஸ் சோவா ஆறு. [டை.

Bidauct, *m.* சாயத்துக்குரிய ஒட்ட

Bident, *m.* ஓர் பூண்டு. || இரு பல்லுள்ள—, கவர்த்தடி. [புறமும் பல்லுள்ள.

Bidenté, *adj.* இரு பல்லுள்ள. || இரு

Bidet, *m.* சின்ன—, சிறு—, மட்டக் குதிரை, மட்டம், தட்டு, தட்டுவாணி. || கோலஞ் செய்வதற்குரிய ஓர் சிறு மேசை,— சாமான். [சிற்றெலி.

Bidi-bidi, *m.* (அமேரிக்காவில்) ஓர்

Bidon, *m.* கப்பல்களில் வழங்கிய—, சேவகர்கலயம், — பாத்திரம், — தொ

Bief, *m.* *V.* Biez. [ட்டி.

Bielle, *f.* ஓர் சக்கரத்தின் நடைவேறே சக்கரத்துக்கொடுக்கும் எத்தனம்.

Bien, *m.* நன்மை, நலம், நன்று, பிரயோசனம், சுபம், சுகம், நயம், உபகாரம். || புண்ணியம், தகுதி, யோக்கியம், உத்தமம். || ஆஸ்தி, உடைமை, பொருள், சொத்து, தனம், சாமான், பண்டம் : homme de — நாணயவான், புண்ணியவான், dire du — de புகழ்தல் ; les gens de — நல்லவர்கள், நல்லோர்கள் ; le — et le mal சுபாசுபம், நன்மை தீமை, இதாகிதம். || *adv.* நன்றாய், நேற்றி —, உத்தமம் —, திருத்தம் —, சாமர்த்தியமாய், சொஸ்தம்—, சுகம் —, சரியாய். || நல்லது, சரி, ஆகட்டும். || போதுமான—, வேண்டியமட்டும். || திட்டமாய். || மிகவும், வெகு, மெத்த. || ஏறக்குறைய, குறையாமல். || கெட்டி கெட்டி : faire — நனறாய்ச் செய்தல், — தோற்றுதல் ; être — சுகம்—, சொஸ்தம்—, சரி—, நன்றா யிருத்தல் ; être, vivre—avec quelqu'un ஒருவனோடு சமாதானமாயிருத்தல் ; il est — நலமாம், தகும் ; fort — மிகவு நன்றாய், வெகு நேத்தியாய் ; il y a— deux ans குறையாமலிரண்டு வருஷமாம். || bien de *ou* des மிகுந்த, அநேகம், வெகு : il a fait— des fautes அனேகந் தப்பிதங்களைச் செய்தான். || à — நன்மை —, அநுகூலமாய் ; mener à — அநுகூலமாக நடத்துதல்,— முடித்தல். || en — நன்மையாக, நல்ல விதமாக. || tant— que mal, que — que mal நடுத்தரமாய், ஏறக்குறைய நன்றாய். || bien ! bien ! très-bien கெட்டி கெட்டி, மிகவு நன்று. || hé—, eh— (எச்சரிப்பு, ஏவல், சம்மதிக் குறிப்பாம்): hé— ! que faites-vous ஓஓ என்ன செய்கிறீர்கள் ? hé—! travaillez donc ஏஏ வேலை செய்யுங்கள் ; eh—! quel mal y a-t-il ? நல்லது அதிலே குற்ற மென்ன ?

Bien-aimé, *adj. et s.* மிகவும் பிரியமான,— ஆனவன், — ஆனவள். || *s.* காதலன், காதலி.

Bien-aise, *adj.* சந்தோஷமுள்ள. || *m.* சந்தோஷம், மனோரம்மியம்.

Bien-dire, *m.* அதிக சிறப்பான—, சிறந்த பேச்சு, வாசாலகம், நல்ல —, நயச்சொல்.

Bien-disant, *adj.* நன்றாய்—, சிறப்பாய்ப் பேசுகிற.

Bien-être, *m.* செல்வம், சுகம், சுபம், வசதி, பாக்கியம்.

Bien-faire, *m.* நல்ல செய்கை, நற்கிரிகை, *ou*

Bienfaire, *v. n.* நற்கிரியை—, தன் கடமை—, புண்ணியம்—, நன்றாய்—, நன்மை செய்தல்.

Bienfaisance, *f.* உதாரம், தருமம், தயவு, உபகாரக் குணம்.

Bienfaisant, *adj.* உபகார—, உதார—, தர்ம குணமுள்ள, சற்குணன்.

Bienfait, *m.* உபகாரம், நன்மை, நலம், சகாயம், உதவி, தயவு.

Bien-fait, *adj.* இலக்ஷணம்—, அங்கலக்ஷணம் —, அந்தமுள்ள, அழகிய, சிறந்த.

Bienfaiteur, *m.* — trice, *f.* உபகாரி, ஈகையாளி, நன்மை—, உபகாரம் —, உதவிசெய்கிறவன்,— வள்.

Bien-fonds, *m.* காணியாட்சி, நிலம் வீடு முதலியது.

Bienheureux,— se, *adj.* மிகவுஞ் சுபம்—, பாக்கியம்—, பேரின்பமுள்ள, முத்திப்பேறுபெற்ற. ‖ *m.* முத்தன், மோக்ஷவாசி.

Biennal, *adj.* இரு வருஷத்து, — வருஷம் நிலைக்கிற.

Bien que, *conj.* ஆலும், ஆனாலும் : — il dise அவன் சொன்னாலும் ; — il soit votre ami அவன் உன் சினேகிதனானாலும்.

Biens, *pl. de* Bien, ஆஸ்தி, பொருள், உடைமை, காணியாட்சி, சொத்து, தனம்.

Bienséance, *f.* மேரை, மரியாதை, யோக்கியம், தகுதி, தகைமை : cette place est à votre—இந்தஸ்தலம் உமக்குத் தகும்.

Bienséant, *adj.* யோக்கிய, தக்க, தகுந்த, மரியாதையுள்ள.

Bien-tenant, *adj.* உடையவன் ...

Bientôt, *adv.* கொஞ்சத்துக்குள்ளே, சீக்கிரம், சீக்கிரத்தில், தாமதமற, உடனே : à — கொஞ்சத்துக்குள்ளே வருவேன்.

Bienveillance, *f.* தயவு, தாக்ஷணை, தாக்ஷணியம், கிருபை, நல்லத்தனம், உபகார—, சற்குணம்.

Bienveillant, *adj.* தயை—, தயவு —, பக்ஷம்—, தாக்ஷணியம்—, கிருபை —, சற்குணமுள்ள.

Bienvenu, *adj.* அதிஷ்டமாக வந்த, பிரியமுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கீகரிப்பான.

Bienvenue, *f.* அதிஷ்ட—, சுப வருகை, புதுசாய் வந்தவனுக்குச் செய்யும் மரியாதை,— உபசாரம், கொண்டாட்டம், அங்கீகரிப்பு, சேர்த்துக்கொள்ளல், புதுசாய் வந்ததின் விருந்து: souhaiter la — புதுசாய் வந்தவனுக்கு மங்களஞ் —, வாழ்த்துசொல்லுதல் ; payer sa — புதுசாய்வந்தவன் (கூட்டாளிகளை) விருந்தோம்புதல்.

Bienvoulu, *adj.* இஷ்டம்—, பிரியமான, நேச.

Bière, *f.* பாடை, சவப்பெட்டி, தூம்பை, தூம்பா, ஆசந்தி. ‖ தானியப் பானம், பீர் : enseigne à — பரும்படிச் சித்திரம் ; ce n'est pas de la petite — இது அற்பகாரியமல்ல.

Bièvre, *m.* நீர் நாய், மீனாய்.

Biez, *m.* எந்திரச் சக்கரத்தின்மேல் தண்ணீர் செலுத்துஞ் சாய்வான வாய்க்கால்.

Bifère, *adj.* இரு போகமுள்ள, வருஷத்தி லிரு முறை மலருகிற.

Biffer, *v. a.* (எழுதினதை) கிறுக்குதல், அழித்தல், கீறுதல்.

Bifide, *adj.* அரைவாசி யிரண்டாய்ப் பிளந்த.

Biflore, *adj.* இரட்டை—, இணை மலருள்ள.

Biforme, *adj.* இரு வடிவுள்ள.

Bifteck, *m.* சுட்ட மாட்டிறைச்சி.

Bifurcation, *f.* கவர், கவர்ப்பு, *ou*

se Bifurquer, *v. pr.* கவராதல், இரண்டாய்ப் பிரிதல்.

Bigame, *adj.* உ-பெண்சாதிக்காரன், — வைத்திருக்கிறவன். ‖ (ஒன்றுக்குப் பின் னொன்று) உ-விவாகஞ் செய்தவன், உ- பெண்சாதிகளைக் கொண்டவன்.

Bigamie, *f.* உ- பெண்சாதிகளை வைத்திருத்தல், உ-பெண்சாதிக்காரனந்தஸ்து. ‖ (ஒன்றுக்குப்பின் னொன்று) உ-விவாகஞ் செய்திருத்தல், — செய்தவனந்தஸ்து.

Bigarade, *f.* புளிப்பான எலுமிச்சம்பழம்.

Bigaradier, *m.* புளித்த எலுமிச்சை, —எலுமிச்ச மரம்.

Bigarré, *part.* பல நிறமுள்ள. ‖ *m.* செங்கடலிலுள்ள ஓர் மீன்.

Bigarreau, *m.* ஓர் கனி.

Bigarreautier, *m.* அதின் மரம்.

Bigarrer, *v. a.* பலவன்னம் பூசுதல், இசையாத பல நிறமாக்குதல், — பல வண்ணமாக்குதல்.

Bigarrure, *f.* இசையாத பலநிறப் பூச்சு, — பல வண்ணக் கலப்பு,— கலம்பகம். [யாய்வருகிற.

Bigéminé, *adj.* ஒரே காம்பிலிரிணை

Bigle, *adj.* ஓரக்—, மாறு கண்ணுள்ள. || முசல் வேட்டைக்குரிய நாய்.

Bigler, *v. n.* மாறுகண்ணுள்ளவனாயிருத்தல்.

Bigne, *f.* நெற்றியிலுள்ள வீக்கம்.

Bignone, *f.* Bignonia ஓர் பூண்டு : — chelenoides பாதிரி, அப்பு, அம்புவாகினி ; — indica பூத புஷ்பம்.

Bignonées, *f. pl.* ஷை பூண்டினம்.

Bigorne, *f.* இருமுனை யடைகல், அடைகல்லின் கூர்ந்த முனை.

Bigorneau, *m.* இருமுனை யுள்ள சின்ன அடைகல்.

Bigorner, *v. a.* இருமுனை யடைகல்லில் வட்டமாக்குதல், — வேலை செய்தல்.

Bigot, *adj et s.* மிதந்தப்பின—, மிகுந்த பத்தியுள்ள, கள்ள ஞானி, குருட்டு —, வீண் பத்திக்காரன், — காரி, அவபத்தி வைராக்கியன்.

Bigoterie, *f.* மிதந்தப்பின—, மிஞ்சின—, கள்ள—, குருட்டு—, வைராக்கிய பத்தி.

Bigotisme, *m.* மிஞ்சின—, குருட்டுப் பத்தியுள்ள குணம், அவபத்தி வைராக்கியம். [மரக் கட்டை.

Bigots, *m. pl.* பாய்மரத்துக்குரிய

Bigue, *f.* பாரந் தூக்குதற்குரிய சின்ன பாய் மரம், மரத்தாங்கி.

Biguer, *v. a.* மாற்றுதல், மாற்றிக் கொள்ளுதல்.

Bijon, *m.* ஓர் பிசின்.

Bijou, *m.* நகை, ஆபரணம், பணிதி, பணி, மணி, அணி, அணிகலம், இழை, பூணாரம், பூஷணம். || நேற்றியான வேலை, சிறு வீடு. || அழகிய பிள்ளை : — pour un côté du nez மூக்குத்தி ; — en forme d'anneau pour le nez நத்து : — pour la cloison du nez புலாக்கு ; — de femme pour le haut de l'oreille கொப்பு, கொப்புவாளி ; le même pour les hommes முருகு ; pendeloque de — நிதி, தொங்கணி ; collier de — ஆரம், மணிவடம், சரமணிக்கோவை ; boîte à — அணிகலச் செப்பு, பரணி, பீடிகை, கோடிகம்.

Bijouterie, *f.* நகை வியாபாரம்,— செய்யுந் தொழில், வியாபார நகைகள்.

Bijoutier, *m.* — ère, *f.* நகை வர்த்தகன்,— வர்த்தகி.— வியாபாரி. || நகை செய்பவன், பணித்—, தட்டான்.

Bijugué, *m.* *V.* Bigéminé.

Bilan, *m.* வியாபாரியின் கணக்குப் புஸ்தகம், வரவுக்குஞ் செலவுக்குமுள்ள வித்தியாசம், தன் கடன்களையுந் தனக்கு வரவேண்டியதையுந்—, இருப்பையுங் கடனையுங் காட்டுங் கணக்கு, — காட்டும் புஸ்தகம் : déposer, donner son — கடனிறுக்கக் கூடாமைக்கத்தாட்சியாகத் தன் கணக்குப் புஸ்தகத்தை ஒப்பித்தல், கடனிறுக்காமல் போதல். [பக்கத்திலுள்ள.

Bilatéral, *adj.* இருபக்கமுள்ள, இரு

Bilboquet, *m.* ஓர் விளையாட்டுக்கருவி. || எப்போதும் நேரே நிற்குஞ் சிற்றுருவம். || நிலையற்ற —, கனமற்ற மனுஷன், அச்சுக்கூடத்தின் அற்ப வேலை, சிறு புஸ்தகம். [சினம்.

Bile, *f.* பித்தம், பித்து. || கோபம்,

Bilédulgérid, *m.* (பர்பரிதேசத்தின் தெற்கே) பிலெதுல்ஜெரீது —, பேரீச்சம்பழ நாடு.

Biliaire, *adj.* பித்தத்துக்கடுத்த.

Bilieux, *adj.* பித்தமுள்ள,— நிறைந்த, பித்தத்தால் வருகிற. || முன் கோபி, கோபகுணமுள்ள.

Bilingue, *adj.* இருபாஷையிலுள்ள.

Bill, *m.* (இங்கிலீஷ்தேசத்தில்) கட்டளையின் பணிக்கு. || கட்டளை, கற்பனை : — d'indemnité உத்தரவில்லாதவை செய்த மந்திரிகளுக்கு ஓர்வித மன்னிப்பு.

Billard, *m.* தந்தக்குண்டு விளையாட்டு, அதற்கான மேசை, — சாலை, — வீடு, — கோல்.

Billarder, *v. n.* ஷை விளையாட்டில் குண்டு ஈரடிபடுதல், இருகுண்டு தள்ளுதல். || குதிரை நடையில் முன்னங்கால் வெளியே தள்ளுதல்.

Bille, *f.* குண்டு, உண்டை, கோலி. ||

மரக்கட்டை. || கட்டின கயிற்றை யிறுக்குதற்குரிய பெருந்தடி. || தோணி யிழுக்குங் குதிரை வார் கட்டியிருக்கும் வளை தடி. || நாட்டுதற்கு மரத்தடியிற் பிடுங்குந் தளிர், — நாட்டுங் கிளை, — தளிர் ; — d'acier சதுரமான எஃகுக் கட்டை. [ன்னம் பூசுதல்.

Billebarrer, *v. a.* இசையாத பலவ

Billebaude, *f.* அலங்கோலை, கலக்கம் : à la — அலங்கோலையாய்.

Biller, *v. a.* தடியைக்கொண்டு இறுக்குதல்,— முறுக்குதல், இணையாய்க் கட்டுதல், குதிரையைத் தோணியின் தடிக்குக் கட்டுதல், தாங்கியின்மேல் மரக்கட்டையைத் திருப்புதல்.

Billet, *m.* சீட்டு, சிறு காயிதம், — கடுதாசி. || அறிக்கைப் பத்திரம். || முறி, கடன் சீட்டு, உறுதிப் பத்திரம், துண்டு, நறுக்கு, கிள்ளாக்கு, கைச்சார்த்து. || திருவிள—, தாய—, பந்தய—, ஒட்டச் சீட்டு. || அநுமதிச் சீட்டு : — doux நேசச் சீட்டு; — de mariage கலியாண அறிக்கைச் சீட்டு ; — de spectacle வேடிக்கைக்குப் பிரவேசச் சீட்டு ; — à ordre, de banque உண்டியல், உண்டியற் சீட்டு, கிள்ளாக்கு ; — blanc ஒன்று மெழுதாத சீட்டு, வெள்ளைக்கடுதாசித் துண்டு ;— de loterie திருவிளச் சீட்டு ; — de logement விடுதிச் சீட்டு ; — de garde காவலாயிருக்கிறதற்கு அறிக்கைச் சீட்டு;— de confession பாவசங்கீர்த்தனச் சீட்டு ; — de santé சவுக்கியச்சீட்டு.

Billeter, *v. a.* குறிப்பு எழுதுதல்.

Billette, *f.* ஆயத்துறை யறிக்கை—, அறிக்கைப் பத்திரம், நீண்ட சதுரம்,— கட்டை. [பேச்சு,—கதை,—எண்ணம்.

Billevesée, *f.* காற்றுக் கூடு. || வீண்

Billion, *m.* நூறு—, சதகோடி.

Billon, *m.* செப்பு —, செல்லாக்காசு, அதை செலுத்தும்—, மாற்று மிடம். || கலப்பைசெய்யும் வளைந்த வரம்பு, வளைந்த சால். || கிட்ட நறுக்கின முந்திரிகைக் கிளை. || இளப்பமான சாயங் கொடுக்குஞ் சிவப்புச் சாயப் பூண்டின் சல்லிவேர்.

Billonnage, *m.* செல்லாக்காசு வியாபாரம். || வளைந்த சாலாக்குதல்.

Billonner, *v. n. et a.* செல்லாக்காசு வியாபாரஞ் செய்தல், வளைந்த சாலாக்குதல். [பாரி,—சேர்க்கிறவன்.

Billonneur, *m.* செல்லாக்காசு வியா

Billot, *m.* மரக்கட்டை, — குற்றி, மிருகக் கழுத்திற்கட்டுங் கட்டை,— தடி, — தடை, குதிரைவாயிற் போடும் மருந்துச் சீலை சுருட்டிய சிறு தடி, பட்டடையைத் தாங்கு மரக்கட்டை. || குட்டையான பெரும் புஸ்தகம்.

Bilobé, *adj.* ஈரிதழ் — பருப்புள்ள.

Biloculaire, *adj.* இரு சிற்றறையுள்ள.

Bimane, *adj.* இரு கையுள்ள.

Bimbelot, *m.* பிள்ளைகளின் விளையாட்டுடைமை.

Bimbeloterie, *f.* ௸ உடைமை செய்தல்,— வியாபாரம்,— யாகிய சரக்கு. [செய்கிறவன்,—வியாபாரி.

Bimbelotier, *m.* ௸ உடைமை

Bimensuel, *adj.* மாத மிருமுறை நடைபெறும்.

Binage, *m.* உ-ம் கொத்து, உ-ம்உழவு, ஒருநாளி லிரண்டுபூசை செய்தல்.

Binaire, *adj.* இரண்டுள்ள, இரட்டை, உ-கணக்குள்ள, — பிரயோகிக்கிற, உ-பூதியமுள்ள.

Binard, *m.* நாற் சக்கர வண்டி.

Biner, *v. a.* உ-ம் விசை கொத்துதல்,— உழுதல். || *v. n.* (ஓர் நாளில்) உ-பூசை செய்தல்.

Binet, *m.* கைப்பிடியுள்ள சின்ன கத்திரிசால், மெழுகுதிரி முழுதும் எரிதற்குரிய கத்திரிசால். || சின்ன கலப்பை.

Binette, *f.* உ-ம் கொத்து, உ-ம் முறை மண் வெட்டி.

Biniou, *m.* ஓர்வித வாக்கிய கருவி.

Binochon, *m.* ஓர்வித களைகொட்டு.

Binocle, *m.* (கையாற் பிடிக்கப்படும்) இரு கண் கண்ணாடி. || பந்தம். || ஓர் பூச்சி. [ரிய.

Binoculaire, *adj.* இரு கண்ணுக்கு

Binôme, *m.* இணைக் கணக்கு, தனமிருனம் (†—)என்கிற குறியாற் சேர்க்கப்பட்ட இரு கணக்குள்ள பிரமாணம், துவிபதம்.

Biographe, *m.* தனிச் சரித்திரங்களை எழுதுகிறவன், ஒருவன்—, தனிச் சரித்திராசிரியன்.

Biographie, *f.* ஒருவன் சரித்திரம், சீவிய சரிதை,— சரித்திரம், தனிச் சரித்திர சாஸ்திரம்,— புஸ்தகம்.

Biographique, *adj.* தனிச்—, ஒருவன் சரித்திரத்துக் கடுத்த.

Biologie, *f.* சீவிய—, சீவ சாஸ்திரம்.

Biologique, *adj.* சீவியசாஸ்திர சம்பந்தமான.

Biologiste *ou* biologue, *m.* சீவிய சாஸ்திரங் கற்றவன், சீவிய சாஸ்திரி.

Biparti, *adj.* அரைவாசிக்குக் கீழேயிரண்டாய்—, இரண்டாய்ப் பிரிந்த.

Bipartible, *adj.* தானுயிரண்டாகப் பிரியத்தக்க. [நீளமுள்ள.

Bipédal, *adj.* இரு சீர் —, ஈரடி

Bipède, *adj.* இரு காலுள்ள. ‖ இரு காலி, இரு காற் பிராணி, துவீ பதம், துவி பதச் செந்து. ‖ ஒன்ருய்க்கவனிக்கப்படும் இரு கால். ‖ ஓர்வித பல்லி: — latéral ஒருபக்கத்திலிருக்கிற விருகால்; — antérieur இரு முன்னங்கால் ; — postérieur இரு பின்னங்கால்.

Bipenne, *f.* இரு புறமுங் கூர்மையான கோடாலி. [கடற் பூச்சி.

Biphore, *m.* இருளிற் பிரகாசிக்கிற

Bipinnatifide, *adj.* பொதுக்காம்பின் பக்கங்களிலிறகுபோற்பிரிந்தஇலையுள்ள.

Bipinné, Bipenné, *adj.* பொதுக்காம்பின் பக்கங்களில் சிற்றிலையுள்ள.

Biquadratique, *adj.* வருக்கோவருக்கமான : équation — வருக்கோவருக்கச் சமீகரணம், ஈரடிவருக்கச் சமீ

Bique, *f.* வெள்ளாடு [கரணம்.

Biquet, *m.* வெள்ளாட்டுக் குட்டி. ‖ பொன் நிறுக்குந் தராசு.

Biqueter, *v. n. et a.* (வெள்ளாடு) குட்டி போடுதல்,— ஈனுதல், ஷை தராசிற் பொன் நிறுத்தல்.

Birambrot, *m.* ஓர் வகையாணம்.

Birch, *m.* (arbre), வெகுத்துவக்கு, வெகுத்துவக்கம்.

Bire, *f.* மீன்பிடிக்கு மலரிக் கூடு.

Birème, *f.* இரு வரிசை தண்டுள்ள

Biribi, *m.* ஓர் சூது. [கப்பல்.

Birloir, *m.* திறக்கப்பட்ட சன்னற் சட்டதாங்கி.

Birotine, *f.* ஓர்வித பட்டு.

Bis, 1° *adj.* சாம்பல் நிறம்—, கபிலமான, செங்கல் மங்கலான, உ-ம் தரமான : pain — உ-ம் தர உரொட்டி. ‖ *m.* கபிலநிறம். ‖ 2° *adj.* மறுபடியான,— வந்த, இரண்டாம், இரண்டாவது. ‖ *m.* மறுபடி, இரண்டாம் விசை. ‖ *int.* இன்ன மொருவிசை, திரும்ப.

Bisage, *m.* வேறு சாயந் தோய்த்தல்,— தோய்க்கு முறை.

Bisaïeul, *m.* பெரிய —, இரண்டாம் பாட்டன். [டாம் பாட்டி.

Bisaïeule, *f.* பெரிய —, இரண்

Bisaiguë, *f. V.* Besaiguë.

Bisaille, *f.* கடைசித்தரமாவு, கோழி முதலியவற்றின் தீனியாகிற தானியக் கலப்பு.

Bisannuel, *adj.* இரு வருஷத்து, — வருஷ நிலைக்கிற, இரு வருஷத்துக் குப்பின் திரும்பிவருகிற. [ஞ்சசண்டை.

Bisbille, *f.* சச்சரவு, தர்க்கம், கொ

Bis-blanc, *adj.* பாதி வெள்ளையாகிய, நடுத்தர. ‖ *m.* நடுத்தர உரொட்டி.

Biscaïen, *m.* நெடுந் துப்பாக்கி, (பீரங்கியின்) சிற்றிருப்புக் குண்டு.

Biscaye, *f.* (எஸ்பஞ்தேசத்தில்) பிஸ்கை நாடு. ‖ Biscayens, Basques, ஷை நாட்டார் : nouvelle — புதுப் பிஸ்கை நாடு,(மெக்சிக்குதேச நாடகம்.) [கிற.

Bisché, *adj.* அடைகாத் துடையலா

Biscornu, *adj.* ஒழுங்கற்ற, தாறுமாருன,விபரீத,—உருவமுள்ள. [கோத்து.

Biscotin, *m.* கடினமான சிறு பிஸ்

Biscotte, *f.* பிஸ்கோத்து, கடினமாகச்சுட்ட சிறு உரொட்டி, ஓர்வித முறுக்கு, அடுப்பிற் சுட்ட உரொட்டித்துண்டு.

Biscuit, *m.* பிஸ்கோத்து, கடல் யாத்திரைக்கு இரண்டுவிசை சுட்ட தட்டையான உரொட்டி. ‖ முட்டை சர்க்கரை மாவுகூடிய இலேசான பண்ணிகாரம். ‖ இருவிசை சுட்ட பீங்கான் வேலை. ‖ மினுக்கெண்ணெய்பூசாத பீங்கான். ‖ அதிகமாய் வெந்த ஓடு. ‖ ஓர்வித சிறு விளக்கு.

Bise, *f.* வட காற்று, வாடை. ‖ குளிர் காலம் : être frappé du vent de — வட காற்றிஞ லடிபடுதல், துன்பமனுபவித்தல்.

Biseautage, *m.* biseauter, *v. a.* ஓரத்தில் சாய்ப்பானபட்டைவெட்டுதல்.

Biseau, *m.* சாய்ப்புள்ள நுனி,— கட்டை,— கூர் கருவி.

Biser, *v. n.* கருகுதல், கறுத்தல், சீர்கெடுதல். ‖ *v. a.* திரும்பச் சாயங் கொடுத்தல்.

Biset, *m.* கரும்பரல், சாம்பல் நிறப் புடைவை. ‖ குடிக ளுடுப்புள்ள நாட்டு

க்காவற் சேவகன். || *ou* pigeon — க
பில நிறமுள்ள காட்டுப் புரு. [ல்லர்.

Bisette, *f.* இளப்பமான—, சிறு ச

Bisexe, Bisexuel, *adj.* ஆண்பெண்
தாதுள்ள.

Bishop, Bischof, Bichoff, *m.*
காய்ச்சின விரசமுஞ் சர்க்கரையுஞ் சில
சம்பாரமுங்கலந்த பானம். [பனை.

Bismuth, *m.* நிமிளை, அம்பனை, சிற்

Bisnagar, (இந்து தேசத்தில்) விசய
நகரம் ; le — விசய நகர நாடு, அதி
னிராசா. [ட்டா, காட்டு எருது.

Bison, *m.* வட அமேரிக்காவின் கா

Bisontin, *adj. et s.* Besançon நக
ரத்து, நகரத்தான். [ஆட்டுத் தோல்.

Bisquain, *m.* மயிரோடு பதமிட்ட

Bisque, *f.* சிவந்த நிறக்குழம்பு || பந்
து விளையாட்டில் கொடுக்கப்படும் -டுநு-
புள்ளி நயம், நல்ல சமயம். [படுதல்.

Bisquer, *v. n.* விசன—, சஞ்சலப்

Bissac, *m.* இரட்டைப் பை, சோ
ளி, சோளிகை : être au — பிக்ஷைக்
காரனுயிருத்தல்.

Bissecteur, *adj.* இருசம பாகங்களா
ய்ப் பிரிக்கின்ற. [தல்.

Bissection, *f.* இரண்டாய்ப் பிரித்

Bisser, *v. a.* ஓர் பாட்டு திரும்பப்
பாடவேணுமென்று கேட்டல், மறுபடி
யென்று கோருதல்.

Bissexte, *m.* ஆக்க நாள், அந்தந்த
நாலாம் வருஷத்துப் பெபிறெரி மாதக்
கடைசியிற் கூட்டு நாள்.

Bissextile, *adj.* ஆக்கமுள்ள: année
— ஆக்கவருஷம், ௩௬௬ நாள் கொண்
டவருஷம். [ண்டு.

Bistorte, *f.* கோணல் வேருள்ள பூ

Bistouri, *m.* சத்திரக் கத்தி.

Bistourner, *v. a.* அந்தங்கெட—,
முறுக்குதல். || திருகுதல், அவலக்ஷண
மாக்குதல். || se — திருகுதல், முறுகு
தல், அவலக்ஷணமாதல்.

Bistre, *m.* கரைந்த ஒட்டடை. (சு
வர் சந்துகளின் வழியாய் ஒழுகும்) ஒட்
டடைச்சாரம். [யுள்ள,— மிருகம்.

Bisulce, *adj. et s. m.* கவையடி

Biterné, *adj.* மூன்று சிற்றிலையாய்
முடிகிற, மூன்றுகிளைக் காம்புள்ள.

Bitord, *m.* பல நூற்கயிறுகள் ஒன்
றான கயிறு.

Bitte, *f.* நங்கூரக் கயிற்றிரட்டை
க்கட்டை. || பெரிய தோணியின் முன்
கட்டை. [றைச் சுருட்டுதல்.

Bitter, *v. a.* ஷை கட்டையிற் கயிற்

Bitton, *m.* கப்பலைக் கரையிற் கட்டு
தற்குரிய கட்டை. [கயிற்றுப்பங்கு.

Bitture, *f.* நங்கூரத்தோடு விடுங்

Bitume, *m.* சிலாசத்து, நிலக்கீல்.

Bitumer, *v. a.* சிலாசத்துப் பூசுதல்.

Bitumineux, *adj.* சிலாசத்துக்கடு
த்த, சிலாசத்துள்ள.

Bitumifère, *adj.* சிலாசத்து நிறை
ந்த,— தருகிற.

Bitumisation, *f.* Bitumiser, *v. a.*
சிலாசத்தாக்குதல், சிலாசத்தாக மாற்று
தல்.

Bivac, *m.* வெளியிராக்காவல், பாச
றைக்காவல், வெளியே படை தங்கல்,
—தங்குமிடம், வெளியே தங்கும் படை.

Bivalve, *adj. et m.* ஈரோடுள்ள,
ஈரோட்டு மீன், சிப்பி மட்டி முதலியது.

Bivaquer, *v. n.* வெளியிராக் காவல்
காத்தல், படை வெளியே தங்குதல். ||
இரவில் வெளியே தங்குதல். [ராசம்.

Biveau, *m.* காலசையத்தக்க கவ

Biviaire, *adj.* இரு சந்தியுள்ள, இ
ருவழி கூடுகிற. [கவரான (வழி.)

Bivial, *adj.* இரண்டாய்ப் பிரிகிற,

Bivoie, *f.* இருவழிச் சந்தி, இருசந்
தி, கவரான வழி. [Bivaquer.

Bivouac, Bivouaquer, *V.* Bivac,

Bizarre, *adj.* விபரீதமான, நிலை—,
சீரற்ற, அமையாத, வீணெண்ணமுள்
ள. || *m.* விபரீதமானது, விபரீதகுணமு
ள்ளவன்,— உள்ளவள்.

Bizarrement, *adv.* விபரீதமாய், வீ
ணிச்சையாய், நிலையற.

Bizarrerie, *f.* வீணிச்சை, வீணெண்
ணம், விபரீதம், விபரீதசெய்கை,— கு
ணம், கசடு.

Bizé, *m.* ஓர் சக்கிலியன் கருவி.

Bixa orellana (arbre), மஞ்சிட்டி,
அமுததாரம் : sa graine வெண்ணெய்
விரை. [மங்கல் வெண்மையான,

Blafard, *adj.* மங்கின, பழுப்பான,

Blague, *f.* புகையிலைப் பை.|| புளுகு,
கட்டுக் கதை, பதர் —, வீம்புப் பேச்சு.

Blaguer, *v. n.* புளுகுதல், கட்டுக்
கதை சொல்லுதல், வீம்பு பேசுதல்.

Blagueur, *m.* — ueuse, *f.* புளு
கன், பொய்—, வீம்புக்காரன்,— காரி.

Blaireau, *m.* தகசு. || அதின் மயிராலான தூரிக்கோல் [— பாத்திரமான.

Blâmable, *adj.* கண்டனைக்குரிய,

Blâme, *m.* கண்டனை, கண்டிதம், கண்டிப்பு, குற்றச் சாட்டு, இகழ்ச்சி, அதட்டு, பழிப்பு.

Blâmer, *v. a.* கண்டித்தல், குறை —, குற்றம் பிடித்தல், குறை சொல்லுதல், கடிதல், கடிந்துகொள்ளுதல், பழித்தல், கண்டனம்பண்ணுதல் : se— தன்னைக் கடிதல், தன் செய்கை தகாதென்னல்.

Blanc, Blanche, *adj.* வெள்ளை, வெண், வெண்மையான, பால் நிறமான, வெளிறின, சுவேதமான, நிறமற்ற. || சுத்த, அழுக்கற்ற, வெளுத்த. || குற்றமில்லாத, — அற்ற, மாசற்ற : cheveux — நரைமயிர் ; carte— ஒன்றுமெழுதாத கடுதாசி, சர்வ அதிகாரம், சர்வ உத்திரவு ; monnaie— வெள்ளி நாணயம் ; nuit — நித்திரை யற்ற ராத்திரி.

Blanc, *m.* வெள்ளை, வெண்மை, வெள்ளை நிறம், தவளம், சுவேதம், சாந்து. || வெள்ளை மனுஷன், — க்காரன். || வெண்மையானது, வெள்ளை வஸ்திரம், — ப்பொருள். || இலக்கு, குறி, குறிப்பு. ஓர் பூர்வ நாணயம், (புஸ்தக முதலியவற்றில்) வெள்ளை யிடம், — அந்தரம், குறிப்பில்லாத கவற்றின் பக்கம், பூண்டுகளி விருவகை வியாதி. || தூண்டிலிற் போடுஞ் சிறு மீன், சிறு வெள்ளை மீன் : tirer au — இலக்கு பார்த்துச் சுடுதல் , mets au — வெள்ளைக் குழம்புள்ள கறி ; — d'œuf வெள்ளைக் கரு ; — de l'œil சுக்கில மண்டலம் ; mettre le — சாந்து பூசுதல் ; promesse en — நியமிக்கப்பட்டவன் பேர் எழுதாத வார்த்தைப்பாட்டுச் சீட்டு ; mettre au — வெள்ளைக்குழம்பாக்குதல் · mettre du — வெள்ளை பூசுதல்,— போடுதல்; mettre du noir sur du — வெள்ளையின்மேல் கறுப்பு போடுதல், எழுதுதல் ; six — பத்து காசு ; — de Hollande ஓர் மரம்.

Blanc-bec, *m.* வெண்முகன், பரிட்சையில்லாதவாலன். [மூளை.

Blanc de baleine, *m.* பனை மீன்

Blanc de céruse, Blanc de plomb, *m.* ஈய வெள்ளை.

Blanc-de-champignon, *m.* காளான் முளையாகிய வெள்ளை. [ணாம்பு.

Blanc d'Espagne, *m.* சீமைச் சுண்

Blanc de zinc, *m.* வன்னத்துக்குரிய துத்தநாக பஸ்மம்.

Blanc-étoc, Blanc-être, *m.* faire une coupe à — மரம் விடாமல் காடு வெட்டுதல்.

Blanchaille, *f.* சிறு வெள்ளை மீன்.

Blanchard, *m.* (அப்பிரிக்காவில்) ஓர் கழுகு. || மெல்லிய சணற் புடைவை.

Blanchâtre, *adj.* கொஞ்சம்—, சற்று வெள்ளையான, இள வெண்மையான, வெளிறின, வெளுப்பான.

Blanche, *f.* வெள்ளை மனுஷி,— க்காரி || வெள்ளை தந்தக் குண்டு. || வெள்ளைச் சுரம், (உ-கறுப்புச் சுரத்தை யொக்கும்), ஓர் கடல் தகைவிலான். || *fém.* de blanc; mer — வெண் கடல்.

Blanchement, *adv.* சுத்தம்—, வெள்ளையாய், வெளுத்த —, சுத்த உடுப்போடே.

Blancherie, *V.* Blanchisserie.

Blanchet, *m.* (வடிகட்ட...) வெள்ளைச் சீலை.— துண்டு,— சகலாத்து, குப்பக்காட்டானுட்சட்டை. || ஓர் மீன்.

Blancheur, *f.* வெள்ளை, வெண்மை.

Blanchiment, *m.* வெள்ளையாக்குதல், வெளுத்தல், வெளுப்பு, வெள்ளையாக்கும் வகை.

Blanchir, *v. a.* வெள்ளை—, வெண்மையாக்குதல். || வெள்ளைப்பூசுதல்,— அடித்தல். || வெளுத்தல், கழுவுதல், சலவைபண்ணுதல், சுத்த மாக்குதல், துலக்குதல், காந்தி கொடுத்தல். || மாசற்றவனாக்குதல், — ஆகக் காட்டுதல், குற்றமில்லையென் றொப்பித்தல். || செதுக்குதல். || வெண்மையாகும்படி வெண்ணீரிற் றோய்த்தல் ; — quelqu'un ஒருவன் மாசற்றவனென் றொப்பித்தல். || அவன் உடுப்பு வெளுத்தல். || *v. n.* வெள்ளை—, வெண்மையாதல், வெளிறுதல், வெளுத்துப்போதல், வெள்ளெனல், வெள்ளை பிடித்தல், காந்தியாதல், நரைத்தல், கிழவனாய்ப்போதல், வெகு காலமிருத்தல். || இலேசாய்த் தொடுதல், மங்கி —, தோற்றுப்போதல், கீழ்மை —, வீணாதல் ; faire —

வெள்ளையாக்குதல், வெளுக்கச் செய்தல் ; se — வெண்மையாதல், —ப்படுதல், தனக்கு வெள்ளை பூசுதல், தன்னுடுப்பை வெளுத்தல், தன் பேரில் குற்றமில்லையென் றுரூப்பித்தல்.

Blanchissage, *m.* வெளுத்தல், வெளுப்பு, சலவை, கழுவுதல்.

Blanchissant, *adj.* வெளிறுகிற, வெள்ளையாகிற,— யாய்த்தோன்றுகிற.

Blanchisserie, *f.* வெளுப்பதற்குரிய விடம், வெள்ளாவி வைக்கு மிடம், புடைவை மெழுகு வெள்ளை யாக்கு மிடம்.

Blanchisseur, *m.* வண்ணான், ஏகாலி, ஈரங்கொல்லி.

Blanchisseuse, *f.* வண்ணாத்தி.

Blanc-manger, *m.* உறைந்த இனிய விறைச்சிச் சாரம்.

Blanc-signé, Blanc-seing, *m.* வெறுங் கையொப்பச் சீட்டு, வெள்ளைக் கடுதாசிக்கு வைத்த ஒப்பம்.

Blandices, *f. pl.* மோசமுள்ள இச்சகம், — பரிவு.

Blanque, *f.* ஓர் சூது.

Blanquette, *f.* பலமற்ற வெள்ளை யிரசம். ‖ ஓர்வித திராக்ஷப்பழம், மற்றோர் கனி, வெண் கனி, வெண் குழம்புக்கறி.

Blaque, *f.* புகையிலைப் பை.

Blaser, *v. a.* (உணர்ச்சி முதலியவற்றை) மந்தமாக்குதல், மழுக்குதல், கெடுத்தல். ‖ se —, être blasé மந்தமாதல். மழுங்குதல், கெடுதல், பிரியமற்றுப்போதல்.

Blason, *m.* வமிச—, விருது, விருது சாஸ்திரம்.

Blasonner, *v. a.* வமிச விருது சித்திரித்தல், — விளக்குதல், — விவரித்தல், ‖ பழித்தல், குறை—, தூறு சொல்லுதல்.

Blasphémateur, *m.* — trice, *f.* தேவ தூஷணன்,— தூஷகன்,— தூஷணஞ்சொல்பவன்,— வள்,— தூஷணக்காரன்,— காரி. ‖ *adj.* தேவ தூஷணமான.

Blasphématoire, *adj.* தேவ தூஷணமான,— உள்ள.

Blasphème, *m.* தேவ தூஷணம், — தூஷிப்பு, — நிந்தை, — பழிப்பு, தூஷணம், அநியாய பேச்சு, கொடிய புறணி.

Blasphémer, *v. n. et a.* தேவ தூஷணஞ் சொல்லுதல்,— கக்குதல், தூஷணித்தல், தூஷித்தல், நிந்தித்துப் பேசுதல், பழித்தல், ஆகாத—, அநியாயப் பேச்சு பேசுதல்.

Blatier, *m.* கோதும்பை—, தானிய வியாபாரி.

Blatte, *f. ou* blatta orientalis கக்கலாத்து, கரப்பான், கரப்பான் பூச்சி.

Blaude, *f.* வண்டிக்காரன் போர்வை,— கம்பளி.

Blé, *m.* கோதும்பை, தானியம், தவசம். ‖ பயிர், வெள்ளாண்மை, விளைவு, பயிருள்ள நிலம் : grands blés பெரிய தானியங்கள், கோதும்பையும் seigle என்னு மிளப்பமான கோதும்பையுமாவன ; petits — சிறு தானியங்கள், வாற்கோதும்பையுங் குதிரைத் தானியமு மாவன ; — de Turquie முத்துச்சோளம் ; — de vache, *V.* Mélampyre.

Blêche, *adj.* நொய்ய, நுகைவான.

Bléchir, *v. n.* நுகைதல்.

Bleime, *f.* குதிரைக் குளம்பி னெரிவு.

Blême, *adj.* வெளு வெளுப்பான, வெளுப்பான, வெளிறின.

Blêmir, *v. n.* வெளு வெளுத்தல், வெளிறுதல்.

Blende, *f.* வெள்ளைத் துத்தம்.

Blenne, Blennie, *f.* ஓர் மீன்.

Bléser, *v. n.* வல்லினத்தை மெல்லினமாக்குதல், மெல்லினமா யுச்சரித்தல்.

Blésité, *f.* மெல்லுச்சரிப்பு.

Blessant, *adj.* மன நோகப் பண்ணுகிற, அபகாரம்—, கொடுமையான, விசனப்படுத்துகிற.

Blessé, *part.* காயம்பட்ட: cerveau — கலக்கமான—, மயங்கின புத்தி.

Blesser, *v. a.* காயம்படுத்துதல், காய—, இரண—, நோவு— ஊறு—, வருத்தப்படுத்துதல். ‖ சேதப் படுத்துதல், கெடுத்தல், அழித்தல், பழுதாக்குதல், தீங்கு செய்தல், விரோதமா யிருத்தல். ‖ விசன —, கஸ்திப்படுத்துதல், மனநோகப் பண்ணுதல், கோபமூட்டுதல். ‖ மீறுதல், பங்கப்படுத்துதல், விரோதஞ் செய்தல் ; — la religion, la conscience வேதத்துக்கு —, மனச் சாட்சிக்கு விரோதமா யிருத்தல் ; — la loi de Dieu, தேவ கற்பனை மீறுதல் ; — la vérité உண்மைக்

கு விரோதமாய்ப் பேசுதல்,— விரோதமாயிருத்தல். || se — தன்னைக் காயப்படுத்துதல், மனஸ்தாபம்—, மனத்தாங்கலடைதல், ஒருவனொருவனைக் காய—, மனஸ்தாபப்படுத்துதல்.

Blessure, *f.* காயம், இரணம், ஊறு, நசிவு, முறிவு, நோவு. || சேதம், கேடு, பங்கம். || மனத்தாங்கல், மனஸ்தாபம், மனநோய்.

Blet, *adj.* நுகைவான, குழைவான, அதிகமாய்ப் பழுத்த, கன்றின.

Blette, *f.* தண்டுக் கீரை.

Blettir, *v. n.* (பழம்) நுகைதல், குழைதல், அதிகமாய்ப் பழுத்தல், கன்றுதல். [கன்றல்.

Blettissure, *f.* நுகைவு, குழைவு,

Bleu, *adj.* நீலமான, நீல, வானநிறமான. || கரு நீலமான (நசிவு), கன்றின : conte — கட்டுக்கதை. || *m.* நீலம், நீலவன்னம், நீல குழம்பு : passer au — நீல தண்ணீரில் தோய்த்தல். || *pl.* நீல உடுப்புச் சேவகர்.

Bleuâtre, *adj.* இள—, கொஞ்ச நீலமான. || *m.* இள நீல நிறம்.

Bleuet, *m.* *V.* Bluet.

Bleuir, *v. a. et n.* Bleuissage *ou* Bleuissement, *m.* நீலமாக்குதல், — ஆதல்.

Bleuissoir, *m.* கடியாரக்காரன் கருவி.

Blin, *m.* பாய்மரப் பிரிவுகளைக் கூட்டுதற்குரிய—, தாங்கிமேற் கப்பலைச் சரிவிப்பதற்குரிய மரக் கட்டை.

Blindage, *m.* ஆதரவான பின்னல் மரங்களைப் போடுதல்,—மரச்சேர்க்கை.

Blinder, *v. a.* அகழிக் காதரவான பின்னல் மரங்களைப் போடுதல், கப்பற் பக்கங்களுக்கு ஆதரவாகப் பழங் கயிற்றுத் துண்டுகளைப் போடுதல்.

Blindes, *f. pl.* ஆதரவான பின்னல் மரங்கள்.

Bloc, *m.* சீவாதகல், கட்டை. || குவியல், மொத்தம்:—de plomb காரீயக் கட்டை ; en — மொத்தமாய், சகட்டிலே, குமுக்காய், ஏக சகட்டுக்கு.

Blocage, *m.* (தலை கீழாக) திருப்பின எழுத்து, (அஸ்திவாரத்தில்...... போடும்) பொடிக்கல், பரல், சிறுகற்கள், விளையாட்டில் தந்தக்குண்டு பையிற் றள்ளுதல்.

Blocaille, *f.* திரும்பின எழுத்து, பொடிக் கல்.

Blochet, *m.* கப்பல் முனை சாய்ப்புக்குரிய மரத்துண்டு.

Blockhaus, *m.* (தூண் அல்லது பெரிய பாய்மரத்தின் மேலேற்றிய) சிறு மரக்கோட்டை.

Blocus, *m.* முற்றிக்கை, முற்றுகை, வழி யடைப்பு, பிரவேசியாதபடிக்குப் போர்ச்சேவகர் சூழ்ந்திருத்தல், சேர—, பிரவேசிக்க விலக்கம்.

Blois, (பிராஞ்சிராச்சியத்தில்) புளோயி நகர்.

Blond, *adj. et s.* இளமஞ்சள் நிறமான,— நிறமயிருள்ள,— மயிருள்ள, — மயிருள்ளவன், — வள். || *m.* இள மஞ்சள் நிறம் : — d'Egypte, எஜிப்த்துதேசத்தின் இள மஞ்சள் நிறம், கறுப்புநிறம்.

Blonde, *f.* ஓர் பட்டுக் கவணி.

Blondin, *adj.* இள மஞ்சள் நிற மயிருள்ள. || *m.* பெண்மையான வாலன்.

Blondir, *v. n.* (வெள்ளாண்மை) இள மஞ்சள்—, பொன்னிறமாதல்.

Blongios, *m.* ஓர் நாரை.

Bloqué, *m.* எதிராளியின் குண்டைப் பையிற்றள்ளுமடி. || *part. de*

Bloquer, *v. a.* முற்றிக்கை போடுதல், சூழ்தல், வளைத்தல், வழி யடைத்தல். || பொடிக்கல்லால் நிறைத்தல். || தலை கீழாகத் திருப்பிவைத்தல், அடிப்பையிற் குண்டு தள்ளுதல்.

Blot, *m.* கப்பல் வழி யளக்குங் கருவி. || பக்ஷிகுந்தும்— படியுங்கோல்.

se Blottir, *v. pr.* ஒதுங்குதல், பதுங்குதல், ஒடுங்குதல்.

Blouse, *f.* ஓர்வித சிற்றங்கி, பை, குழி, பிசகு.

Blouser, *v. a.* பையில்—, குழியில் தள்ளுதல். || எத்துதல், ஏய்த்தல், மயக்குதல். || se — பிசகுதல், மோசம் போதல், தன் குண்டைப் பையில் தள்ளுதல்.

Blousse, *f.* குறும் ஆட்டு மயிர்.

Bluet, *m.* பயிர்நில நீலப்பூ.

Bluette, *f.* தீப்பொறி, சூக்ஷமொழி, யுத்திச்சொல், சிறு வாக்கியம், — பழமொழி, ஒய்யாரமற்ற சிறு புஸ்தகம்.

Blutage, *m.* மாவரிப்பு, மாவினரிப்பு.

Bluteau, Blutoir, *m.* மாச்சல்லடை. [ரித்தல், தெள்ளுதல்.

Bluter, *v. a.* மாவையரித்தல், மாவ

Bluterie, *f.* மாவரிக்கு மிடம்;

Boa, *m.* மலைப்—, தாசரிப்பாம்பு, ஷை பாம்பின் வடிவான மெல்லிய ரோம சட்டை. [து) ஓர் மிருகம்.

Bobak, Bobaque, *m.* (வடதேசத்

Bobèche, *f.* மெழுகுதிரிக் கூடு,— உறை.|| கத்திரிசாலின் மேல் வைக்குஞ் சிறு தட்டு. || *m.* பகடிக்காரன், கோமாளி, மடையன். [டுங் கதிர்.

Bobine, *f.* தாறு, தார், நூற்சுருட்

Bobiner, *v. a.* நூலைத் தாறிற் சுருட்டுதல்,— கதிரிலிழைத்தல்.

Bobinette, *f.* கதவு திறப்பதற்குரிய கட்டை.

Bobineuse, *f.* நூலைத் தாறிலே சுருட்டுகிறவள், கதிரிலிழைக்கிறவள்.

Bobo, *m.* அற்ப நோவு, — காயம், (மழலைச்சொல்லாம்).

Bocage, *m.* சோலை, சிறு காடு, தோப்பு, ஆரணியம், அநேகந் தோப்பிருக்கிற—, ஆரணிய நாடு.

Bocager, *adj.* சோலைகளில் வசிக்கிற,— உள்ள, சோலைக் கடுத்த.

Bocal, *m.* அகன்ற வாயுள்ள பெருங் —, குப்பி, குண்டிகை. || தண்ணீர் நிறைந்த பளிங்கு உண்டை. || எக்காள —, கொப்பின் நாக்கு. [பிள்ளை.

Bocamelle, *f.* சரதேஞ்தீவின் கீரிப்

Bocard, *m.* உருக்குந்தா திடிக்கும் எந்திரம்.

Bocardage, *m.* } ஷை எந்திரத்திற்
Bocarder, *v. a.* } போடுதல்,— எந்திரத்தால் இடிப்பித்தல்.

Bock, *m.* பீர்சாராயங் குடிக்கும் பாத்திரம்.

Boccone, *m.* ஓர் செடி.

Bodine, *f.* கப்ப லேரா.

Bodinerie, *f.* *V.* Bomerie.

Bodinure, *f.* இருப்பு வளையத்துக்குச் சுருட்டிய சின்ன கயிறு.

Boédromies, *f. pl.* (அத்தேன் நகரத்து) கூவ லோட்டப் பண்டிகை.

Boërhaavie, Boerhaavia, ஓர்பூண்டினம் : — repanda சத்திக்கொடி, சத்திச்சாரணை ; — diffusa நடுவறுத்தான், மூக்கிரட்டை.

Boesse, *f.* ஓர் கருவி.

Boesser, *v. a.* ஷை கருவியால் துப்புரவாக்குதல்.

Bœuf, *m.* எருது, மாடு, இடபம், கோ, ஆ, குண்டை, சே, மூரி. || மாட்டிறைச்சி. || திண்ணியன், மூடன், மடையன் ;·— sauvage காட்டா, ஆமா; — de labour உழு மாடு , — à la mode தன் சாரத்தில் வெந்த மாட்டிறைச்சி ; paire de — அணை,—மாடு, ஏர்; — à bosse, *V.* Zébu ; — d'Amérique, *V.* Bizon ; — musqué, *V.* Ovibos ;— marin, de mer, *V.* Hippopotame.

Bœuf-gras, *m.* கொழுத்த எருது.

Boghei, Bokei, *m.* மேல் மூடியில்லாத வண்டி, இலகுவான இரதம்.

Bogomiles, *m. pl.* ஓர்வித பதிதர்.

Bogue, *f.* கூருள்ள சில கனியின் உறை, — தோல். || *m.* ஓர் மீன்.

Bohême, *f.* (ஒத்திரிஷ் தேசத்தில்) பொயேம் இராச்சியம். || *ou*

Bohémien, *adj.* பொயேமிராச்சியத்து. || *s.* பொயேம் தேசத்தான் — தேசத்தாள். || குறிக்காரன், நாடோடியான, — போக்கிரியான, — திருடனான குறிக்காரன், — காரி : maison de — தாறுமாறுள்ள வீடு.

Bohémillon, *m.* சின்ன சகுனி.

Bohon-hupas, *m.* (யாவதீவில்) விஷப்பிசின் மரம்.

Boire, *v. a.* குடித்தல், பானஞ்செய்தல், பானித்தல், பருகுதல், மாந்துதல், உட்கொள்ளுதல், உறிஞ்சுதல், விழுங்குதல், ஊறுதல், சுவற்றுதல். || குடிக்காரன்—, குடியனாயிருத்தல், குடிக்கிற வழக்கங் கொண்டிருத்தல் ; — à petits coups உறிஞ்சுதல் ; — un affront பேசாமல் அவமான மநுபவித்தல் ; le papier boit கடுதாசி ஊறுது ; — à la santé de quelqu'un, à quelqu'un, ஒருவனுக்குச் சவுக்கிய முண்டாகவென்று—, ஒருவனை வாழ்த்திக் குடித்தல்; donner à— பானங்கொடுத்தல், இரசக்கடை வைத்திருத்தல்; chanson à — குடிப்பாட்டு; donner pour — கூலிக்கதிகமாய் —, குடிக்கப்பணங் கொடுத்தல்;— comme un trou ஓர் பொத்தல்போலே—, மிகுதியாய்க் குடித்தல் ; — sec வெறிகொள்ளாமல் மிகவுங் குடித்தல் ; faire—, mener — les animaux மிருகங்களுக்குத் தண்ணீர் காட்டுதல். || se— குடிக்கப்படுதல். [யம், பருகுவன, துவை.

Boire, *m.* பானம், குடிப்பு, பானி

Boirin, *m.* மிதக்குங் குறிப்பின் கயிறு.

Bois, *m.* காடு, வனம், சோலை, தோப்பு, அடவி, கானகம், கானம், ஆரணியம். || மரம். || தழை, தழைப்பு, துளிர், தளிர். || விறகு, எரிகரும்பு, கறல், சுப்பல். || கப்பலின் கட்டுக்கோப்பு. || மான் கொம்பு. || மரத்தாலான பொருள்;— taillis சிறு காடு;— de haute futaie உயர்ந்த மரக்காடு ; — mort பட்ட —, காய்ந்த மரம். — கிளைகள் ; menu — மிலாறு, செத்தை, சுப்பல் ; — dur கெட்டி —, வயிர மரம் ; — blanc வயிரமற்ற மரம் ; — de lit கட்டிற் சட்டம் ; — de fusil சோங்கு, — de lance, ஈட்டியின் கோல் ;— flotté மிதந்துவந்த மரம், — விறகு ;— de construction கட்டுதற்குரிய மரம் ; — d'aigle,—d'aloës அகில் மரம்;— marbré, satiné, de férule வம்மரம்.

Bois agatisés *ou* agatifiés, *m.* அகாத்திக்கல்லான மரக் கொம்புகள், — கட்டைகள். [யமான மரம்.

Bois bitumineux, *m.* சிலாசத்தும

Bois de Brésil, de Fernambouc, d'Inde, *m.* கறுப்புச் சாயத்துக்குரிய பிரேசில் தேச மரம்.

Bois de Campêche, *m.* சிவப்பு அல்லது ஊதாச்சாயத்துக்குரிய சாம்பேஷ்தேச மரம்.

Bois de fer, *m.* மிகவுங் கெட்டியான—, இருப்பு மரம்.

Bois de lumière, *m.* வெளிச்சச் சமீபத்தில் தீப்பற்று மாவிகொடுக்கிற மரம்,— செடி.

Bois de rose, de Rhodes, de Chypre, *m.* உரோசாப்பூ வாசனையுள்ள மரம். [ஓர் நகர்.

Bois-le-Duc, (ஒல்லந்து தேசத்தில்)

Bois minéralisé, *m.* (பூமியில்) தாதான மரம்.

Boisage, *m.* பாவு பலகை, (கப்பலுக்கு) பாவு பலகை போடுதல்.

Boisé, *part.* மரங்கள் —, காடுள்ள, பலகை பாவிய.

Boisement, *m.* காடாக்குதல், காடு ஏற்படுத்துதல், மரங்களை நடுதல், காடுள்ள—, மரமுள்ள தேசத்தன்மை.

Boiser, *v. a.* பலகை பாவுதல், பாவு பலகை போடுதல்.

Boiserie, *f.* சுவரிற் பாவின பலகை.

Boiseux, *adj.* மரத்துக்கடுத்த, மரத்தன்மையான.

Boisiller, *m.* மரம் வெட்டுகிறவன்.

Boisseau, *m.* ஓர் சிறு கலம், பெரிய மரக்கால், அதுகொண்ட அளவு.

Boisselée, *f.* ஷை மரக்கால் கொண்டது,— கொள்ளுந் தானியம்.

Boisselier, *m.* ஷை மரக்கால் செய்பவன்,— விற்பவன்.

Boissellerie, *f.* ஷை மரக்கால் வியாபாரம், — செய்யும் — விற்குந் தொழில்.

Boisson, *f.* பானம், பானீயம், குடிப்பு, குடி. || இரச சேகரிப்பு. || திராக்ஷல் சக்கை ரசம்,— சக்கையோடே பொங்கின தண்ணீர். || பல கனி தானிய பூண்டுகளோடு பொங்கின தண்ணீர்: être pris de — குடி வெறிகொண்டிருத்தல் ; être adonné à la — குடியனாயிருத்தல்.

Boîte, *f.* பெட்டி, பேழை, சிமிள், செப்பு. || நிறை பெட்டி,—சிமிழ். || மூக்குத்தூள் சிமிள். || மூட்டுக் குழி. || பீரங்கி, பொட்டில், பொட்டிலி;— à bijoux அணிகலச்செப்பு, பரணி ;— à chaux pour le bétel கரண்டகம் ; — aux lettres காகிதப் பெட்டி. [பானம்.

Boite, *f.* குடிப்பதற்குரிய தன்மை,

Boitement, *m.* நொண்டல், நொண்டி நடை.

Boiter, *v. n.* நொண்டுதல், முடவுதல், தாங்குதல், தாங்கித் தாங்கி—, இழுத்து நடத்தல் : — tout bas, இலேசாய் நொண்டுதல்.

Boiteux, *adj. et s.* நொண்டி, நொண்டுகிற, தாங்கித் தாங்கி—, இழுத்து நடக்கிற, முடமான. || சரிக்காலற்ற, அசைகிற, ஒருகால்—, ஓர் அடி குறைந்த. || ஓர் பக்கம் வித்தியாசமுள்ள ; période — ஓர் உறுப்பிற் குறைவுள்ள வசனம்.

Boîtier, *m.* வைத்தியர் தைலக்கருவிகளின் பெட்டி. || பெட்டி செய்பவன்.

Boitte, *f.* ஓர்வித மீனிரை, தூண்டிலிற் போடு மிரை.

Bokey, *m.* *V.* Boghei.

Bokking, *m.* புகையிட்ட —, உப்பிட்டமீன், ஓர்வித கருவாடு.

Bol, *m.* கோப்பை, கொப்பரை, அது கொண்ட அளவு. || *ou* Bolus மாத்திரை, குளிகை, மருத்துண்டை, மருந்துக்குரிய களிமண்.

Bolaire, *adj.* மருந்துக்குரிய களிமண்ணுக்கடுத்த.

Boléro, *m.* எஸ்பஞ்தேசத்து கூத்து, — நடனம், அதின்பாட்டு, — இராகம்.

Bolet, Boletus, *m.* ஓர்வித காளான் : boletus ignarius காரிக்கூன்.

Bolétite, *f.* காளான் வடிவுள்ள கல்.

Bolide, *m.* வானினின்று விழுந்த கல்.

Bolivie, *f.* (தென்னமேரிக்காவில்) [பொலிவி தேசம்.

Bologne, (இத்தலிதேசத்தில்) பொலொஞ் பட்டணம்.

Bolus, *m.* *V.* Bol.

Bombance, *f.* பெரிய விருந்து, — தீனி : faire — விருந்தாடுதல்.

Bombarde, *f.* கல்லெறியு மெந்திரம். || சட்டிப் பீரங்கி. || சட்டிப் பீரங்கித்தோணி, மிகவுஞ் சத்திக்கிற பலகுழல் வாத்தியம்.

Bombardement, *m.* Bombarder, *v. a.* சட்டிப் பீரங்கியாற் சுடுதல், — தாக்குதல்.

Bombardier, *m.* சட்டிப் பீரங்கிக் [காரன்.

Bombasin, *m.* பட்டுப்புடவை, இருபுறமும் ஒத்த பஞ்சுப்புடவை.

Bombax, *m.* ஓர் செடி :—gossypinum கோங்கு, கோங்கிலவு ; — heptaphyllum, malabaricum, ceiba முள்ளிலவு, சான்மலி; — pentandrum இலவு, இலவ மரம்.

Bombay, (இந்துதேசத்தில்) வெம்பாய், பொம்பாய்.

Bombe, *f.* சட்டிப் பீரங்கிக் குண்டு, வெடிக் குண்டு, தீக்குண்டு. || சடுதியான தடை.

Bombé, *part.* வளைந்த, குமிழ்ந்த.

Bombement, *m.* வளைவு, குமிழ்ப்பு, அரை மொக்குள்ள வடிவு. || காதின் குசுகுசுப்பு.

Bomber, *v. a.* வளைத்தல், குழிப்பாக்குதல். || *v. n.* *ou* se — குமிழ்தல், வளைதல்.

Bomberie, *f.* சட்டிப் பீரங்கி செய்யுமிடம்.

Bombeur, *m.* குமிழ்ந்த கண்ணாடி செய்பவன், — விற்பவன்.

Bombyate, *m.* பட்டுப் பூச்சிப் புளிப்பும் மற்றோர் வஸ்துவுங் கலந்த உப்பு.

Bombycides, *m.* *pl.* ஓர்வித வண்ணாரப் பூச்சி.

Bombylius, *m.* கனைவரி வண்டு.

Bombylles, *m. pl.* பறக்கிறபோதே புஷ்ப ரசங் குடிக்கும் வண்டு.

Bombyque, *adj.* பட்டுப் பூச்சிக்கடுத்த, — பூச்சியின்.

Bombyx, *m.* பட்டுப் பூச்சி.

Bome, *f.* தோணியின் பெரிய பாய்.

Bomerie, *f.* கப்பலின்மேற் சாட்டின கடன் பணம்.

Bon, — nne, *adj.* நல்ல, நல், சு, நலமான, நன்மையான, — யுள்ள, தயவு —, சாந்தம் —, இளக்காரம்—, இரக்கம் —, தாக்ஷண்ணியம்—, நல்லொழுக்கம் —, சற்குணம் —, பிரமாணிக்கம் —, புண்ணியம் —, நாணயம் —, நியாயமுள்ள, சரி —, நேரான, திட்டமான. || தக்க, தகுந்த, ஏற்ற. || கெட்டித்தனம் —, சாமர்த்தியம் —, திறமையுள்ள, யோக்கிய, பிரயோசனம் —, சனுவு —, பிரியம் —, நேற்றி —, சுபம் —, வசதி —, பாக்கியமான. || பலமுள்ள, பலத்த, பெரிய, உறுதியுள்ள, அவகாசமுள்ள, கடனிறுக்கக் கூடிய. || சூக்ஷ, கூர்ந்த யுத்தி —, களிப்பு —, பகிடியுள்ள. || இயல்பான, கபடற்ற, பேதையான, எளிதாய் நம்புகிற, விவேகமற்ற. || (இகழ்ச்சியாய்) சூக்ஷம் —, தந்திரம் —, மோசமுள்ள, ஏய்க்கிற : bonnes gens நல்லவர்கள், கபடற்ற நாணயவான்கள், அதிக எளிதாய் நம்புகிறவர்கள் ; une — fois ஒருவிசை சரியாய் ; de — main நம்பிக்கையுள்ள —, நல்லவிடத்தில்; c'est— நல்லது;— pour 10 roupies பத்து ரூபாய் பெறுவது. || *pl.* les bons நல்லோர், நல்லவர்கள், புண்ணியவான்கள், நாணயவான்கள். || *adv.* நல்லது, நன்றாய், நன்மை —, உறுதி —, பிரியமாய், உயர்ந்த விலையாய் ; faire— நன்மையாதல், நன்றாய் —, பிரயோசனமாய் —, பிரியமாயிருத்தல். || *int.* நல்லது ; tout de — சரியாய், பரியாசமின்றி.

Bon, *m.* நல்லது, நன்மை, நாணயம், நல்லகுணம்,— தத்துவம், பிரதானம், பிரதானவிஷயம், உத்தமம். || பெறுமான சீட்டு, செல், முறி, நறுக்கு, பணம் வாங்குதற்கான —, சரக்கு கொடுப்பதற்கான சீட்டு. || கடன்முறி, உறுதிப் பத்திரம், எழுதப்பட்ட வார்த்தைப்பாடு. || வருமானம்; un — de 1000 roupies, de pain க000-ரூபாய் —, உரொட்டி வாங்குதற்கான சீட்டு.

Bonace, *f.* காற்றொடுக்கம், காற்றின்மை, அமரிக்கை.

Bonapartiste, *m.* பொனப்பார்த்தென்பவன் பாரிசத்தான்.

Bonard, *m.* கண்ணாடியுலையின் திறப்பு. [யான.

Bonasse, *adj.* கபடில்லாத, பேதை

Bonbanc, *m.* ஓர் வெள்ளைக்கல்.

Bonbon, *m.* தீம் —, சுவைப்பண்டம், முட்டாய், முண்டாயி, பிள்ளைக்குரிய பண்ணிகாரம்.

Bonbonne, *f.* பெரிய கண்ணாடி அல்லது கற் புட்டி.

Bonbonnière, *f.* தீம்பண்டச் சிமிள். || அழகிய சிறுவீடு.

Bon-chrétien, *m.* ஓர் கனி.

Bond, *m.* துள்ளு, குதிப்பு, பாய்ச்சல், தத்து: faire faux— தன் வார்த்தைப்பாட்டுக்கு —, கடனுக்குத் தப்பிப் போதல், தப்புதல்.

Bonde, *f.* தும்பு, கடைப்போக்கு. || பீப்பாவாய், பீப்பா வாயடை குச்சு, — அடைக்குங் குச்சு: lâcher la — à அடைக்காமற் சொரிய விடுதல்.

Bondé, *adj.* வாய்வரைக்கும் நிறைந்த. [நிறைத்தல்.

Bonder, *v. a.* கூடின மாத்திரம்

Bondir, *v. n.* துள்ளுதல், குதித்தல், பாய்தல், தத்துதல், உகளுதல். || ஒக்காளித்தல்: faire — le cœur ஒக்காளம் வருவித்தல். [ளுகிற, பாய்கிற.

Bondissant, *part.* குதிக்கிற, துள்

Bondissement, *m.* துள்ளு, குதிப்பு, பாய்ச்சல்: — de cœur ஒக்காளம், ஒக்காளிப்பு.

Bondon, *m.* பீப்பாவாயடைப்பு, — வாயடை குச்சு. || ஓர்வித பாற்கட்டி.

Bondonner, *v. a.* ஷை குச்சினாலடைத்தல், வாயடை குச்சு போடுதல், அடைத்தல்.

Bondonnière, *f.* பீப்பா வாய்துளைக்குங் கருவி.

Bondrée, *f.* ஓர் பறி பக்ஷி. [culla.

Bonduc, *m.V.* Guilandina bondu-

Bongare, *m.* ஓர் விஷப்பாம்பு.

Bon-henri, *m.* ஓர் காட்டுப்பசளை. || ஓர் கனி.

Bonheur, *m.* பாக்கியம், செல்வம், இன்பம், சுபம், சுகம், ஆனந்தம், அநுகூலம், வாய்ப்பு, பலிப்பு, சித்தி, நல்லதிஷ்டம், அதிஷ்டம்: il a du — அவனுக்கு அதிஷ்டமுண்டு; au petit — அதிஷ்டத்தின்படி யாகட்டும்; par — அதிஷ்டம், — பாக்கியமாய்.

Bonhomie, *f.* கபடின்மை, நல்லதனம், பேதைமை.

Bonhomme, *m.* நல்ல கிழவன், கபடில்லாதவன், பேதை.|| மனுஷனுடைய சிற்றுருவம். || *adj.* கபடற்ற: un petit — ஓர் சிறு பையன்; air — கபடற்ற சாயல்.

Boni, *m.* ஆதாயம், இலாபம், செலவு நீக்கி நின்றலாபம், மீதி யிருப்பு, கடனுக்காகவிற்கப்பட்ட நகையில் மீதிப்பணம்.

Bonier, *m.* ஓர் நிலத்தளவை.

Boniface, *adj. et s.* கபடற்ற, மோசம் நினையாத. || கபடற்றவன், பேதை, பொனிபாஸ் என்பவன்.

Bonifacio, (கோர்ஸ் தீவில்) பொனிப்பாசியோ நகர். [சீராதல், திருத்தம்.

Bonification, *f.* நலம் —, வாசி —,

Bonifier, *v. a.* நலம் —, வாசி —, சீராக்குதல், சீர்ப்படுத்துதல், திருத்துதல், குறைவு தீர்த்தல்: se — நலம் —, வாசி—,சீராதல். [கெளிற்றுமீன்.

Bonite, *f.* காணாங்கெளிறு, காணாங்

Bongeau, Bonjeau, *m.* ஊறுதற்குக்கூடக்கட்டிய இரு சணற்கட்டு.

Bonjour, *m.* காலை —, வந்தனம், சலாம், வாழ்க, சுபதினமுண்டாக: souhaiter le — சுபதின முண்டாகவென்னல், சலாஞ் சொல்லுதல், காலைவந்தனஞ் செய்தல். [பகிடிச்சொல்.

Bon mot, *m.* சூக்ஷ —, யுத்தி —,

Bonn, (அல்மஞ் தேசத்தில்) பொன் நகர். [*de* Bon.

Bonne, *f.* ஆயாள், கைத்தாய். || *f.*

Bonne aventure, *f.* (அஞ்ஞான) சாஸ்திரம், நிமித்திகம், சகுனம், நல்லதிஷ்டம்: dire la— நிமித்தஞ் சொல்

லுதல் ; diseur de — நிமித்தக் காரன், நிமித்தன், சகுனி.

Bonne-dame, *f.V.* Arroche.

Bonneau, *m.* நங்கூரத்தினிடக் குறிப்பு.

Bonne-Espérance, (Cap de), நன்னம்பிக்கை முனை, தென் அப்பிரிக்காவின் முனை.

Bonne fortune, *f.* நல்லதிஷ்டம், நினையாமல் நேரிட்ட அதிஷ்டம், அநுகூலம்.

Bonne grâce, *f.* கட்டிலின் திரையைச்சேர்ந்த சித்திரத்தொங்கல்.

Bonne-maman, *f.* பாட்டி.

Bonnement, *adv.* கபடில்லாமல், இயல்பாய், பேதைமையாய்.

Bonnet, *m.* குல்லா, குல்லாய், பெண்பிள்ளைத் தொப்பி, — தலைக்கோலம். ‖ இயந்திரத்தின் மேல்மூடி. ‖ அசைபோடுகிற மிருகத் திரண்டாமிரைப்பை : — carré சதுரக்குல்லா, குருக்கள் சாஸ்திரிகள் நடுவர்களின் தலைமுடி ; prendre le — குல்லாவெடுத்தல், சாஸ்திரி பட்டம் பெறுதல் ; gros — பெரியவன், பெரிய மனுஷன், பிரதானி ;— rouge (மூர்க்ககலகக்கார ரடையாளமான) சிகப்புக்குல்லா, ஷை குல்லா தரிக்கிறவன், மூர்க்க கலகக்காரன்.

Bonnetade, *f.* குல்லாவெடுத்து வந்தித்தல், ஆசாரம், சலாம்.

Bonnetage, *m.* (பீரங்கிமுதலிய வற்றில்) பற்றுவாய் மூடுங் கடுதாசி.

Bonneter, *v. a.* (ஷை) பற்றுவாயைக் கடுதாசியால் மூடுதல். ‖ நீசமாய்த் தயவு — நேச நாடுதல், குல்லாவை யெடுத்து வந்தித்தல்.

Bonneterie, *f.* குல்லாய் முதலியவற்றின் வேலை, — வர்த்தகம்.

Bonneteur, *m.* நயச்சொல்லெத்தன்.

Bonnetier, *m.* — ère, *f.* குல்லா முதலியவற்றைச் செய்பவன், — விற்பவன், — வள்.

Bonnette, *f.* ஓர் பெண் தலைக்கோலம். ‖ ஓர்வித அலங்கம். ‖ கப்பலுச்சியின் சிறு பாய்.

Bonne-voglie, *f.* இஷ்டம், தண்டு வலிக்குங் கூலியாள்.

Bon sens, *m.* மெய்ஞ்ஞானம், நற்புத்தி, நல்லுணர்ச்சி.

Bonsoir, *m.* அந்தி வந்தனம், சலாம், வாழ்க : souhaiter le — அந்தி வந்தனஞ் சொல்லுதல், — செய்தல். ‖ *int* சமயம் போயிற்று, — இல்லை.

Bonté, *f.* தயவு, தயை, பக்ஷம், கருணை, நலம், நல்லதனம், நன்மை, சற்குணம், உபகாரம், தாக்ஷண்ணியம், மிஞ்சின இளக்காரம்.

Bonze, *m.* (சீனு ஜப்போன் தேசத்து) குரு, பூசாரி, புத்தமதகுரு.

Bonzerie, *f.* பௌத்த குருக்கள் மடம்.

Bootès, *m.* ஓர் தாராகணம், அதில் சுவாதியடங்கி யிருக்கின்றது.

Bopyre, *m.* இருலுக்கொட்டிய சிறு ஒட்டுமீன்.

Boquet, *m.* உப்பளவன் பெருமகப்பை, உப்பளத்தின் சேறுவாரு மகப்பை.

Boquillon, *m.* விறகுக்காரன்.

Boracique, *adj.* வெண்காரத்து.

Borago, (plante), அகும்பை : — indica கவிழ்தும்பை ;—zeilanica கழுதைத்தும்பை.

Borasseau, *m.* வெண்காரப் பெட்டி, வெண்காரத் தூட்சிமிள்.

Borassus, *m.* (palmier), பனை, ஐந்தார் : — flabelliformis பனை, தாளி.

Borate, *m.* வெண்கார உப்பு.

Borax, *m.* வெண்காரம், வெலிகாரம், சிற்பறி, பொரிகாரம், குடோரி.

Borborygme, Borborisme, *m.* குடல் வாய்வு.

Bord, *m.* ஓரம், அருகு, எல்லை, வரம்பு, விளிம்பு, வடிம்பு. ‖ கரை, வரை, தீரம், விளிம்பின் —, நாடா. ‖ கப்பல், கப்பற்பக்கம். ‖ பக்கம், கட்சி, பாரிசம், நதியோர—, கடலோரநாடு : à pleins — வாய்க்கால் நிறைய, கரையோரமட்டும் ; faire feu des deux — கப்பலிருபக்கங்களில் பீரங்கி சுடுதல் ; vaisseau de haut—பெரிய கப்பல் ; vaisseau de bas—தட்டையான தோணி ; aller à — கப்பலுக்குப் போதல்.

Bord-à-bord, *adv.* ஓரமட்டும்.

Bordage, *m.* கப்பற்சுற்று —, கப்பலின் பாவு பலகை, — கைப்பிடி, வங்கப்பலகை. ‖ (சப்பாத்து முதலியவற்றுக்கு) ஓரங்கட்டுதல்.

Bordaille, *f.* தோணி யோரத்தினருகு.

Bordat, *m.* எஜிப்த்துப் புடவை.

Bordé, *m.* ஓரத்தில் தைக்கும் பொன் அல்லது பட்டு —, நாடா, சரிகை, ஓர் மீன். ‖ *part.* ஓரத்திலுள்ள, ஓரந் தைக்க —, சூழப்பட்ட.

Bordeaux, (பிராஞ்சு தேசத்தில்) போர்தோ நகரம். || *m.* ஷை நகர ரசம்.

Bordée, *f.* ஓர் பக்கப் பீரங்கி யெல்லாஞ் சுடல், — பீரங்கிகளின் வெடி. || மிகுதி. || நேர்வழிப் பக்கத்துப்போதல், கப்பலின் சாய்வோட்டம். || ஒன்றாய்க் காவலாயிருக்கிற —, ஓர் பக்கத்துக் கப்பலாள்கள், கப்பற் சாமம் : une — d'injures, *ou* une — தூஷண மிகுதி.

Bordelais, *adj. et s.* போர்தோ நகரத்து, — நகரத்தான் : le — போர்தோ நகரநாடு.

Bordelière, *f.* ஏரிகரை மீன்.

Bordement, *m.* ஓரச்சுற்றுவரி, ஓரங்கட்டுதல்.

Bordeneau, *m.* உப்பளமதகின் குடைவு,— துவாளிப்பு.

Border, *v. a.* விளிம்பு —, ஓரத்தில் —, ஓரங்கட்டுதல், — தைத்தல், ஓரத்தில் இருத்தல், — பரப்புதல், அருகாயிருத்தல், கப்பற்பக்கங்களிற் பலகை தைத்தல் : — un champ de haies ஓர் நிலத்துக்கு வேலிபோடுதல் ; — un vaisseau கப்பற்பக்கத்திற் செல்லுதல் ; — la haie வழியோரத்திற் சேவகரை நிரைத்தல் ; — une allée, un lit சாலையின்—, கட்டிலின் ஓரங்கட்டுதல்: se — தன் கட்டிலின் ஓரங்கட்டுதல், ஓரம் — விளிம்புகொண்டிருத்தல், அருகிலிருத்தல், சூழப்படுதல்.

Bordereau, *m.* குறிப்பிடாப்பு,(குறிப்பின்) விபரம், விபரமுள்ள குறிப்பு.

Borderie, *f.* சிறு குத்தகை நிலம்.

Bordier, *m. ou* vaisseau— ஓர் பக்கத்திலதிக பலமுள்ள கப்பல். || *m.* —ère, *f.* வழிக்கடுத்த நிலமுடையவன்,—வள், சிறு நிலக் குத்தகைக்காரன், —காரி.

Bordigue, *f.* சுற்றிலும் படல்போட்டகரையிடம்.

Bordoyer, *v. a.* சுற்றுவிட்டு இலேசான பலநிறமாய்ச் சித்திரித்தல் : se — ஓரத்தில் கறுப்பாதல், — கறுப்பு கட்டியிருத்தல்.

Bordure, *f.* ஓரம், விளிம்பு, ஓரத்திலுள்ளது, பட்டை, கண்ணாடியின் —, படத்தின் சட்டம். || காட்டின் ஓரம். || வழிக் குறட்டின்ஓரம்,—ஓரக் கல்.|| புஸ்தக முதுகின் ஓரத்தலங்காரம், ஓரத்துப் புற்பற்றை,—சிறு பூண்டுகளின் வரிசை.

Bore, *m.* வெண்காரத்திலுள்ள ஓர் தாது.

Boréal, *adj.* வட, உத்தர, வடக்கிலுள்ள.

Borée, *m.* வடகாற்று, வாடை.

Borgne, *adj. et s.* ஒரு கண் குருடான,— குருடன்,— குருடி, ஒற்றைக் கண்ணுள்ள, — க்கண்ணன். || இருண்ட, தெளிவற்ற, வரத்தில்லாத, பழக்கமற்ற. [தைச்சொல்.)

Borgnesse, *f.* ஒரு கண் குருடி, (நிந்

Borique, *adj. V.* Boracique.

Bornage, *m.* எல்லைக்கட்டுதல், —க்கல் நாட்டுதல், வரையறை.

Borne, *f.* எல்லை, எல்லைமானம், வரையறை, எல்லைக்கல், முனைக்கல், பெருங்கல், மட்டு, அளவு, முடிவு, இறுதி, கடைசி, முனை : sans — மட்டில்லாத, அளவிறந்த

Borné, *adj.* மட்டுள்ள, நெருக்கமுள்ள, அற்ப, நடுத்தரமான.

Borne-fontaine, *f.* முனைக்கல் போன்ற நீரூற்று. [தீவு.

Bornéo, (ஒசெயெனியில்) விறுனை

Borner, *v. a.* மட்டு —, எல்லை கட்டுதல், எல்லைக்கல் —, எல்லைபோடுதல்,— யாயிருத்தல், வரையறுத்தல். || அடக்குதல், நெருக்குதல், நிறுத்துதல், தடுத்தல், ஒடுக்குதல், குறைத்தல், முடித்தல். || se — தனக்கு மட்டுக்கட்டுதல், அடங்குதல், ஒடுங்குதல், போதுமென்றிருத்தல்:—ses désirs à ses facultés தன் திறமைக் களவாகத் தன்னாசையடக்குதல் ; être borné par une forêt ஓர் காட்டினால் நெருக்கப்படுதல், தனக்கு ஓர் காடு எல்லையாயிருத்தல்; il se borne à les voir அதுகளைப்பார்க்கிறது போதுமென்றிருக்கிறான்.

Bornou, (அப்பிரிக்காவில்) பொர்னு ராச்சியம்.

Bornous, *m. V.* Bournous.

Bornoyer, *v. a.* நேர்வரிசையாய்க் கழிகளை —, நிரைகோல்களை நாட்டுதல், எல்லைக்கல் போடுதல். || ஒரே கண்ணால் பார்த்தல்,— கண்ணால் வரிசை பார்த்து நிதானித்தல்.

Bornoyeur, *m.* ஷை கழிகளை —, நிரைகோல்களை —, எல்லைக்கல் போடுகிறவன், ஒரே கண்ணால் பார்க்கிறவன், ஷை நிதானிக்கிறவன்.

Borraginées, *f. pl.* புராஷ் என்னும் பூண்டினம்.

Borromées, (îles) (இத்தலி தேசத்தில்) மஜோர்எரித் —, பொறொமை தீவுகள். [மோரம்.

Bortingle, *f.* தோணிக்குக் கூட்டு

Borysthène, *m.* *V.* Dniéper.

Bosan, *m.* தண்ணீரிற் பொங்கின சாமைப்பானம். [பி.

Bosel, *m.* தூண்டியின் விருத்த கம்

Bosnie, *f.* (துற்கிதேசத்தில்) பொஸ்னிநாடு.

Bosphore, *m.* (ஒரு மாடு நீந்திக்கடக்கும்) கடல் வாய்க்கால் : le — de Thrace, *ou* le — கொன்ஸ்தாண்டினொப்பொலி வாய்க்கால். [சிறு காடு.

Bosquet, *m.* சோலை,தோப்பு,வனம்,

Bossage, *m.* பிதுக்கம்.

Bos grunniens, கவரி, சவரி. *V.* Yack.

Bosse, *f.* பிதுக்கம், மேடு, குமிழ். || கூன், கூனல், கழலை. || (மிருக முதுகின்) திமில், இமில், அக்கு, நிமம், முசுப்பு. || மண்டைப் பிதுக்கம், — முரடுகரடு, (அதை இயல்பான திறமைகளின் குறிப்பாகச் சிலர் எண்ணுகிறார்கள்). || இயல்பான திறமை, தகுதி, சார்பு. || வீக்கம், அதைப்பு, புடைப்பு. || (உலோக பாத்திரத்தில்) மேடு, பள்ளம், பிதுக்கமான நசிவு. || சித்திர மெழுதுதற்குச் சாந்துருவமான மாதிரி. || கொத்து வேலை. || பந்தைத் திருப்புஞ்சுவரின் பங்கு. || அமாரிழுப்பதற்குரிய குட்டைக்கயிறு: en — பிதுக்கமாய், கொத்துவேலையாய்: —du vol திருட்டுப்பிதுக்கம்,—க்குணக்குறிப்பான மண்டைக் கரடு ; ronde — முழுச்சிலை: demi — கொத்துவேலை ; donner dans la — எய்க்கப்படுதல்.

Bosselage, *m.* (வெள்ளிச்சாமானிலுள்ள) கொத்துவேலை.

Bosselé, *part.* கொத்து வேலையான, குமிழ்ந்த, குமிழ்வான, ஒடுக்குவிழுந்த, நசிந்த மசிந்த, மேடு பள்ளமுள்ள.

Bosseler, *v. a.* கொத்து வேலையாக்குதல், நசித்தல், மசித்தல், மேடு பள்ளமாக்குதல் : se — ஒடுக்கு விழுதல், நசிதல், மசிதல், மேடு பள்ளமாதல்.

Bosselure, *f.* இலையினியல்பான சித்திரவேலை, கொத்துவேலை.

Bosseman, *m.* கப்பலில் ஓர் தலைவன், — உத்தியோகஸ்தன்.

Bosser, *v. a.* மரக்கட்டைகளின் மேல் நங்கூரம் போடுதல், குட்டைக் கயிற்றா லுறுதிப்படுத்துதல்.

Bossette, *f.* கடிவாளப் பக்கத்துக் குமிழணி.

Bossetier, **Bossier**, *m.* பளிங்குகுமிழாக ஊதுகிறவன், குமிழ்வேலைசெய்யுங் கன்னான்.

Bosseur, **Bossoir**, *m.* கப்பல் முன்னணியத்தில் பிதுக்கமான உத்திரம்.

Bossu, *adj.* கூனுள்ள, கூனலான, மேடுள்ள. || *s.* கூனன், கூனி : rire comme un — ஓர் கூனனைப்போலே —, மிகவுஞ் சிரித்தல்.

Bossuer, *v. a.* ஒடுக்குவிழப் பண்ணுதல், மசித்தல், நசித்தல் : se — ஒடுக்கு விழுதல், நசிதல். [மரம்.

Bossy, *m.* (அப்பிரிக்காவில்) ஓர் கனி

Bostangi, *m.* துலுக்கர் தோட்டக்காரன் : — Bachi துலுக்கரிராயன் தோட்ட விசாரணைக்காரன்.

Boston, *m.* கடுதாசி சூதாடுமோர் வகை, (இங்கிலந்திலும் ஐக்கிய தேசங்களிலும்) பொஸ்தோன் நகரம்.

Bostrychite, *f.* நெடுஞ் சடை —, கூந்தல் வடிவுள்ள கல்.

Bot, *adj.* குறண்டலான : pied — வளைந்த கால். || *m.* தோணி, படகு.

Bota, *m.* (எஸ்பஞ் தேசத்தில்) ஓர் நீராளத்தளவு.

Botanique, *f.* பூண்டியல்பின் —, தாவரசாஸ்திரம். || *adj.* தாவர சாஸ்திரத்துக்கடுத்த : jardin — நூதன மரங்களைவைக்குந் தோட்டம், தாபரசங்கசங்கிரகம், திரண விருக்ஷ நந்தனம்.

Botaniser, *v. n.* பூண்டுகளைத் தேடிச் சேர்த்தல்.

Botaniseur, *m.* பூண்டுகளைத் தேடுகிறவன்,—சேர்க்கிறவன்.

Botaniste, *m.* தாவரசாஸ்திரி.

Botanographie, *f.* பூண்டுகளின் வருணிப்பு.

Botanologie, *f.* பூண்டு விளக்கம்.

Botanomancie, *f.* பூண்டுச்சகுனம்.

Botanophile, *m.* தாவரசாஸ்திரிப் பிரியன்.

Botany-bay, (ஒஸ்திரலியில்) பொத்தனிபைநகரம்.

Botnie, *f.* (சுவேதுதேசத்தில்) பொத்னிநாடு, — குடாக்கடல்.

Botryte, *m.* முந்திரிக்குலை வடிவுள்ள உருக்குக்கல், திராட்ச வடிவுகல்.

Botte, *f.* கட்டு, கற்றை, சுருள், சுருணை, திரட்சி. || (திராட்ச விரசம் அல்லது எண்ணெய்வைக்கும்) பீப்பா. || நெடுஞ் சப்பாத்து, தோற்பரம், கணுக்காலுறையான தோற் பாதரட்சை. || காலுக்கு ஒட்டும் மண்கட்டி, — உறைபனி. || குத்து, அடி : — de soie பட்டுநூற் சுருள் சேர்க்கை; -- de lettres காகிதக்கட்டு ; une — d'huile எண்ணெய்ப்பீப்பா ; à propos de — முகாந்திரமின்றி; porter une — ஓர்குத்து குத்துதல் ; pousser une — நெருக்கித்தர்க்கஞ் —, அபகாரஞ் செய்தல் ; en — கட்டாக.

Botté, *part.* தோற்பரமுள்ள, நெடுஞ் சப்பாத்து தொடுத்த.

Bottelage, *m.* Botteler, *v. a.* கட்டாக —, சுருணையாகக் கட்டுதல்.

Bottelette, *f.* சிறுகட்டு, சுருணை.

Botteleur, *m.* கட்டாகக்கட்டுகிறவன்.

Botteloir, *m.* கட்டாகக்கட்டுங் [கருவி.

Botter, *v. a.* (ஒருவனுக்குத்) தோற்பரஞ்செய்தல், — விற்றல், — போடுதல். || se — நெடுஞ் சப்பாத்துத் தொடுத்தல், காவில் மண் கட்டி ஒட்டிக்கொள்ளுதல்.

Botterie, *f.* நெடுஞ் சப்பாத்து செய்யுந் தொழில்,— இடம்,— வியாபாரம்.

Bottier, *m.* நெடுஞ் சப்பாத்து —, தோற்பரஞ் செய்பவன்.

Bottillon, *m.* சிறு கட்டு.

Bottine, *f.* இலகுவான நெடுஞ் சப்பாத்து, — தோற்பரம்.

Bottleur, *m.* இரச —, வீட்டு விசாரணைக்காரன், உக்கிராணக்காரன்.

Bouard, *m.* கம்பட்டக்காரன் சுத்தியல்.

Boubak, *m.* *V.* Bobak.

Bouc, *m.* வெள்ளாட்டுக்கிடா, — கடா, — கடாய், சாகம், மோத்தை, கெச்சை. || (இரசம் —, எண்ணெய்வைப்பதற்குரிய) வெள்ளாட்டுக்கிடாத்தோற் —, வெள்ளாட்டுத்தோற் —, சித்தி, முடிவில்லாச்சங்கிலி உருளுங் கப்பி. || உலையின் நீரியந்திரம். || les boucs கடாக்கள், தீயோர்:—émissaire யூதர் சாபம்போட்டு வனாந்தரத்திற் றள்ளும் பிராயச்சித்தக்கிடா, பொல்லாப்பெல்லாத்துக்குங் காரண மென்னப்பட்ட மனுஷன்; barbe de—, *V.* Barbiche.

Boucan, *m.* இறைச்சியைப் புகையில் வறட்டுமிடம், — வறட்டுதற்குரிய மரத்தாங்கி. || தாறுமாறுள்ள விடம், சந்தடி, கூக்குரல்.

Boucaner, *v. a.* (இறைச்சி முதலியவற்றை) புகையில் வறட்டுதல், காட்டுமாட்டை வேட்டையாடுதல். || கண்டித்தல், கோபித்தல்.

Boucanier, *m.* காட்டுமாட்டு வேட்டைக்காரன்,—வேட்டைக்குரியநெடுந் துப்பாக்கி,— வேடன், (இறைச்சி முதலியவற்றை) புகையில் வறட்டுகிறவன்.|| காட்டுமாட்டு வேட்டையாலும் கப்பற்கொள்ளையாலும் பிழைக்கு நாடோடி.

Boucarde, *f.* ஓர் கிளிஞ்சில்.

Boucaro, *m.* குளிர்த்திப்பாத்திரமாவதற்குரிய சிவப்பு மண்.

Boucassin, *m.* பஞ்சுப் புடவை.

Boucaut, *m.* சரக்குப் பீப்பா, அதுகொண்டது.

Boucharde, *f.* கொத்துக்காரன் உளி.

Bouche, *f.* வாய், வாக்கு, முகம், ஆசியம், வாயி னுட்புறம். || வளர்க்கிற ஆள். || இராசா சமையல் வீடு, — சுயம்பாகர். || திறப்பு, துவாரம். *pl.* நதியின் கழிமுகம் ; — close வாயடைக்க, பேசவேண்டாம் ; faire la petite — கொஞ்சஞ் சாப்படுதல், அரோசிகங் காட்டுதல்; dire de — வாய்மொழியாய்ச் சொல்லுதல் ; prendre sur sa — தன்னுணவிலெடுத்தல், — உணவுகுறைத்தல் ; les — inutiles பிரயோசனமற்ற ஆட்கள் ; officiers de la — இராசா சமையல் வீட்டி னுத்தியோகஸ்தர் ; avoir la — mauvaise வாய்கசப்பாயிருத்தல், — நாறுதல் ; faire venir l'eau à la — வாயில் நீரை —, ஆசை வருவித்தல் ; bonne — சுவையுள்ள பதார்த்தம், பிரியமுள்ளது ; pour la bonne — பிரியமுள்ள முடிவுக்காக. 100 — d'airain நூறு பீரங்கி ; — à feu, பீரங்கி ; — de chaleur புகைக்குழாய், அடுப்பின்...உஷ்ணம் வரவிடுந்

திறப்பு ; ce cheval n'a pas de —, a la—dure இந்தக் குதிரைக்கு வாய் கடினமாயிருக்குது; les bouches du Rhóne ரோன் நதியின் கழிமுகங்கள் ; les bouches-du-Rhône ஷை கழிமுகங்களுக்கடுத்த ஜில்லா.

Bouché, *part.* அடைக்கப்பட்ட, புத்தி —, சூக்ஷமற்ற, மூட. [ண்டது.

Bouchée, *f.* துண்டு, வாய், — கொ

Boucher, *v. a.* அடைத்தல், மூடுதல், சாத்துதல், பொத்துதல், மறைத்தல், அடைகுச்சு போடுதல் : — un trou துவாரம் அடைத்தல், ஓர் கடனைத் தீர்த்தல், ஓர் சேதம் பரிகரித்தல். || se — அடைபடுதல், அடைக்க —, மூடப்படுதல், தனக்கு அடைத்தல், — மூடுதல்: se — les oreilles, தனக்குக் காதடைத்தல், கேட்க மனசில்லா திருத்தல் ; se — les yeux தனக்குக் கண்மூடுதல்.

Boucher, *m.* கசாப்புக்காரன், இறைச்சிக் கடைக்காரன், — விற்கிறவன். || கொடியன், கொலைக்காரன். || சாமர்த்தியமில்லாத —, தன் தொழிலறியாத இரணவைத்தியன்.

Bouchère, *f.* இறைச்சிக் கடை —, கசாப்புக்காரி.

Boucherie, *f.* கசாப்பு —, இறைச்சிக்கடை, மிருகங்களை வெட்டுமிடம். || சங்காரம், சங்கரிப்பு, மிகுந்த கொலை.

Bouchet, *m.* தண்ணீர் சர்க்கரை கருவாப்பட்டை கலந்த பானம்.

Bouche-trou, *m.* துவார மடைகுச்சு, உதவாத பதிலாளி. [அடைப்பு.

Boucheture, *f.* நிலத்து வேலி, —

Bouchoir, *m.* (உரொட்டிச் சுடும்) அடுப்பின் வாயடை தகடு.

Bouchon, *m.* தப்புத்தோர், குச்சு, அடைகுச்சு, அடைப்பு, வாய் மூடி. || தப்புத்தோர் விளையாட்டு, — சூதாடல். || சுருண்ட வைக்கோலின் சிறு கட்டு, வைக்கோற் சுருணை, (அது குதிரைதேய்ப்பதற்கு உதவும், அதை யிதின் வாலின்மேற் கட்டினால் இது விற்பனைக்கு விட்டிருக்கிறதென் றடையாளமாம்). || சாராயக்கடைக்குக் குறிப்பாகிய பச்சைச் செடிக் கிளை. || சாராயக்கடை. || ஓர்வித இங்கிலீஷ் ஆட்டுமயிர். || நமுடு, பட்டுநூலில் பருத்திருக்கிற இடம், ஓர் நேசச் சொல்லுமாம் ; — de linge ஒழுங்கற்ற துணிக்கட்டு.

Bouchonner, *v. a.* கசக்குதல், மசக்குதல், கட்டாகச் சுருட்டுதல், வைக்கோற் சுருணைகொண்டு —, தேய்த்தல் : se — மசங்குதல், கசங்குதல்.

Bouchonnier, *m.* அடைகுச்சு —, தப்புத்தோர் செய்பவன்,— விற்பவன்.

Bouchot, *m.* கடற்கரையில் மீன் பிடிக்கும் படலடைப்பு.

Boucle, *f.* கச்சுப் பூட்டு, வார்ப் பூட்டு, கொக்கை, கொக்கி, சுருள், மோதிரம். || மயிர்ச்சுருள், அளகம். || மோதிர வடிவான சிற்பவணி. || கப்பலைக் கட்டுவதற்கு மோதிரம். || சில மீன் கருக்கு, — முள் :— d'oreilles கடுக்கன்.

Bouclé, *adj.* கருக்குள்ள, முள்ளுள்ள (மீன்), சுருண்ட, பூட்டப்பட்ட.

Bouclement, *m.* கொளுவுதல்.

Boucler, *v. a.* பூட்டினாற் கொளுவுதல், — அடைத்தல், கச்சுப்பூட்டு மாட்டுதல். || சுருட்டுதல், சுழித்தல், சுருளாக்குதல். || *v. n.* சுருளுதல். || se — சுழிதல், சுருளுதல், பூட்டினால் அடைக்கப்படுதல். [மோதிரம்.

Bouclette, *f.* சிறு கச்சுப்பூட்டு, சிறு

Bouclier, *m.* கேடயம், சேடகம், பரிசை, வேதிகை. || காவல், தஞ்சம், ஆதரவு, காப்பு, பாலனம். || ஓர் வண்டு: faire une levée de — மூர்க்கமாய்—, ஏகமாய் எதிர்த்தல்.

Boucon, *m.* விஷமிட்ட இரை, — துண்டு, — பானம்.

Bouddha, *m.* புத்தன், சாக்கியமுனி, சினன். [தம், பௌத்தம், சாக்கியம்.

Bouddhisme, *m.* புத்தம், புத்தம

Bouddhistes, *m. pl.* புத்தர், பௌத்தர், சாக்கியர். [— மதத்துக்கடுத்த.

Bouddhique, *adj.* புத்தமதத்து,

Bouder, *v. n. et a.* பிணங்குதல், வற்மத்தாற்பேசாது —, பேசாமல் —, மோடியாயிருத்தல், சுளித்த —, விசனமுகங்காட்டுதல். || சீக்கிரந் துளிராதிருத்தல் : — (entre époux) ஊடலாயிருத்தல், — ஆய்க்கிடத்தல் ; — contre son ventre வற்மத்தாற் சாப்படாமலிருத்தல், — நலமானதைத் தள்ளுதல்; se — தங்களுக்குள்ளே பிணங்குதல்,— பேசாதிருத்தல்.

Bouderie, *f.* பிணக்கு, பிணக்கம், வற்மம், மவுனம், மோடி : — entre époux ஊடல்.

Boudeur, — euse, *adj.* பிணங்குகிற, வற்மத்தாற் பேசாத, விசனங் காட்டுகிற. || *s.* பிணக்கு—, மோடிக்காரன், — காரி.

Boudin, *m.* இரத்தப் பதார்த்தக் குடல். || தூண்டியின் பெருஞ் சிற்பக் கம்பி. || விசையாக இருப்புத்திருகாணி. || மயிர்ச்சுருள். || சணப்புநார் நிரைந்த வாணம். || (குதிரை முதுகிற் போடத்தக்க) சிறு சோளி. || கப்பற் சுற்றிலுமுள்ள பிதுக்கம்,—கம்பி ; — blanc பாலுங் கோழியிறைச்சியு நிறைந்த குடல் ; — de tabac புகையிலைச்சுருளை.

Boudine, *f.* பளிங்குத் தட்டு நடு மொக்குள்.

Boudinier, *m.* இரத்தப் பதார்த்தக் குடல் வியாபாரி, — சமைப்பவன்.

Boudinière, *f.* ஷை குடல்களை நிரப்புதற்குரிய கருவி. || *f. de* Boudinier.

Boudinure, *f.* கயிற்று மூடி.

Boudjou, *m.* அல்ஜேர் நகர நாணயம், ௰௨-அணு பெறும்.

Boudoir, *m.* பிணக்கறை, துரைசாணியின் தனிமை யறை, — தனிச் சிற்றறை.

Boue, *f.* சேறு, சகதி, பங்கம், உளை, கும்பி, சதக்கல், அள்ளல், செதும்பு. || நீச அந்தஸ்து, ஈனம், தாழ்மை. || மையடிமண்டி. || தாதூற்றுகளி னருகிலுள்ள சேறு : traîner dans la — சேற்றிவிழுத்தல், அவமான —, பங்கப்படுத்துதல் ; âmes de — நீச ஆத்துமாக்கள்.

Boué, *m.* (porteur de palanquin) சிவியான், போயி, போயண்டன், போயிண்டன்.

Bouée, *f.* மிதக்குங்குறிப்பு, மிதப்பு, காவி, காவியா : — de sauvetage கடலில்விழுந்தவனுக்கு எறியும் மிதப்பான தாங்கி.

Bouer, *v. a.* சுத்தியாற் கம்பட்ட வேலையைப் பதப்படுத்துதல்.

Boueur, *m.* — euse, *f.* சேறு —, சகதி —, குப்பை வாருகிறவன், — எற்றிக்கொண்டு போகிறவன், — வள், குப்பைக்காரன், — காரி.

Boueux, euse, *adj.* சேறு —, சகதியுள்ள,— நிறைந்த, உளையான. || வேலை தீராத, அசுத்த,

Bouffant, *adj.* உப்பின, பொங்குகிற. || *m.* உப்பின சட்டைப்பங்கு.

Bouffante, *f.* உப்பின கழுத்துக் குட்டை, பெண் சட்டையை உப்புவிக்கும் பெட்டி.

Bouffe, *m.* கோமாளி, இத்தலிநாடககோமாளி. || *adj.* ஷை நாடக கோமாளமான : les —இத்தலி கோமாளியின் நாடகசாலை. || சுருண்ட நெடுமயிர் நாய்.

Bouffée, *f.* காற்று —, உஷ்ண —, புகை வீச்சு, ஆவி, ஊதல், சுவாசம். || தாக்கு, நிலையற்ற எழுச்சி: — de vent காற்று வீச்சு ; — de tabac புகை வீச்சு, — விடுதல் ; — de vin இரச வாசனையுள்ள சுவாச வீச்சு ; — d'humeur நிலையற்ற சோபம்.

Bouffer, *v. n.* கன்ன முப்புதல், பொங்குதல், உப்புதல், வீங்குதல், பொருமுதல், விம்முதல். || சாப்படுதல். || சுவருப்புதல்: --de colère கோபத்தாற் பொங்குதல்.|| *v. a.* உப்புவித்தல், உப்ப ஊதுதல்.

Bouffette, *f.* சிறுகுச்சம்,—குஞ்சம்.

Bouffi, *part.* உப்பின, பொங்கின, நிறைந்த, எடுப்பான.

Bouffir, *v. a. et n.* உப்புவித்தல், வீங்குதல், நிறைத்தல், உப்புதல், நிறைதல்.

Bouffissure, *f.* உப்பல், வீக்கம், எடுப்பு.

Bouffoir, *m.* (அடித்துப்போட்ட மிருகங்களை) உப்புவிக்குந் துருத்தி.

Bouffon, *m.* கோமாளி. || குணும்பி, பகிடி —, கேலி —, பரியாசக்காரன். || பகிடியான வசனநடை. || *adj.* பகிடி—, கேலி —, பரியாசமான,— உள்ள.

Bouffonner, *v. n.* கோமாளித்தல், குணும்புதல், பகிடி —, கேலி —, பரியாசஞ் சொல்லுதல், — செய்தல்.

Bouffonnerie, *f.* கேலி, பகிடி, பரியாசம், குணும்பு, கோமாளம், கேலியுள்ள களிப்பு.

Bougainvillée, *f.* (பிரேசில் தேசத்தில்) ஓர் மரம்.

Bouge, *m.* சிற்றறை, அசுத்த சிற்றறை. || நீச சாராயக்கடை. || சக்கரமையத்தின் —, பீப்பாவின் பிதுக்கமான விடம்.

Bougeoir, *m.* கைப்பிடியுள்ள கத்திரிசால்.

Bouger, *v. n.* அசைதல், ஆடுதல், நீங்குதல், எழும்புதல்: ne — எப்போதும், — சும்மாவிருத்தல்.

Bougette, *f.* பயணத்துச் சிறு தோற்பை.

Bougie, *f.* மெழுகுவத்தி, சிறு மெழுகுதிரி. || மெழுகும் பிசினும் பூசின சிறு கோல். || (அல்ஜெரிதேசத்தில்) பூஜி நகரம். [ழுகு பூசுதல்,— தடவுதல்.

Bougier, *v. a.* சீலையோரத்தில் மெ

Bougière, *f.* மெல்லிய வலை.

Bougon, *adj.* முணுமுணுக்கிற, முணமுணப்புக்காரன்,— காரி.

Bougonner, *v. n.* முணமுணத்தல், முறுமுறுத்தல். || *v. a.* கண்டித்தல்.

Bougran, *m.* கஞ்சியுள்ள அழுத்தப் புடைவை. [பசை பூசின (புடைவை).

Bougrannée, *adj. f.* கஞ்சியுள்ள,

Bouillabaisse, *f.* வெள்ளைப்பூண்டு, மீன், மஞ்சள் முதலானவைகளால் பாகஞ்செய்யப்பட்ட ஓர்வித சூப்பு.

Bouillant, *part.* பொங்குகிற, கொதிக்கிற, கொதிப்புள்ள, மிகவுஞ் சூடுள்ள. || வேகம்—, உக்கிரம்—, சுறுக்கு—, துடுக்குள்ள. || *m.* வேகம், துடுக்கு, உக்கிரம். [மேகம்.

Bouillard, *m.* காற்று மழைக்குரிய

Bouille, *f.* (வலையிடத்தில் மீன்களையோட்ட) சலத்தைக் கலக்கு நெடுங்கோல். || புடைவை முத்திரை. || கரியளவை. || நிலக்கரித்துண்டு.

Bouilleau, *m.* விலங்குக்காரர் மரச்சட்டி,— மல்லை. [த்தைக் கலக்குதல்.

Bouiller, *v. a.* நெடுங்கோலாற் சல

Bouilleur, *m.* இரசஞ் சாராயமாக வடிக்கிறவன். || புகை யியந்திரத்தின் பெருங் கொப்பரை.

Bouilli, *part.* பொங்கின, கொதித்த, வேகுவித்த, கொதிப்பினாற் கடினமான. || *m.* வேவித்த இறைச்சி, அவியற்கறி.

Bouillie, *f.* பால்மாவின் கூழ், கூழ், களி, புற்கை, குழம்பு. || கடுதாசியாவதற்குரிய பழந் துணிக் கூழ்.

Bouillir, *v. n.* பொங்குதல், கொதித்தல், வேதல், புழுங்குதல்:— de colère கோபத்தாற் பொங்குதல் ; la tête — தலை கொதிப்பாயிருத்தல்: faire—பொங்குவித்தல், கொதிப்பித்தல், வேவித்தல், அவித்தல் ; faire — de l'eau தண்ணீரைக் கொதிப்பித்தல் ;— de la viande இறைச்சியை வேவித்தல் ; — du riz சோறு பொங்குவித்தல்.

Bouillitoire, *f.* donner la — நாணயப்பில்லையைப் பொங்குவித்தல்.

Bouilloire, *f.* தண்ணீரைக் கொதிப்பிப்பதற்குரிய—, மூக்குக்கொப்பரை.

Bouillon, *m.* ஆணம், குழம்பு, சாறு, கூழ். || குமிழி, நீர்க் குமிழ், புற்புதம். || கொதிப்பு, கொதி, திரை, அலை, அலைவு. || வேகம், உக்கிரம். || ஓராணப்பானம், ஒருவிசையாய்க் குடிக்கத்தக்க ஆணம். || சாயம் தோய்க்குமுன் ஆட்டு மயிர் நிணவழுக்கு போக்குதல். || இரத்தாம்பரந் தோய்ப்பதற்கு முன் புடைவை முஸ்திப்பு. கண்ணாடியில் நிற்கும் ஆகாசக் குமிழ். || (புடைவையில்......) உப்பின பெருமடிப்பு. || குதிரைக்குளம்பின் கழலை. || புண்ணிடத்துக் கழலை : bouillir à gros — பெருங் குமிழியாகக் —, சிள்ளுபுள்ளென்று—, மிகவுங் கொதித்தல் ; sortir, couler à gros — பெருமலையாய் —, மிகவும் பொங்கி—, மிகுதியாய்ப் புறப்படுதல்,— ஓடுதல்,— பீரிடுதல் ;— aux herbes கீரையாணம் ; — coupé தண்ணீர் கலந்த ஆணம் ; boire un — ஆணங்குடித்தல், உத்தேசத்திலே தப்பிப்போதல் ; — pointu பீர்ச்சாங்குழலால் விடு மருந்து, அசுதி.

Bouillon-blanc, *m. V.* Molène.

Bouillonnement, *m.* கொதித்தல், கொதிப்பு, கொதி, பொங்கல், கொதியல், அலைவு, கொதுகொதுப்பு.

Bouillonner, *v. n.* கொதித்தல், பொங்குதல், கொதுகொதுத்தல், குமிழித்தல்:—de colère கோபத்தால் பொங்குதல். || *v. a.* புடைவைக்கு உப்பின பெருமடிப்புசெய்தல். [*V.* Bouilloire.

Bouillotte, *f.* ஓர்விதகடுதாசிச்சூது.||

Bouin, *m.* பட்டுநூற் சுருள்கட்டு.

Boulaie, *f.* புலோ என்ற மரத்தோப்பு.

Boulanger, *m.* — ère, *f.* உரொட்டிக்காரன்,— காரி,— சுடுபவன் : garçon — உரொட்டிக்கார னூழியன்.

Boulanger, *v. a. et n.* உரொட்டி சுடுதல்,— செய்தல், மாபிசைதல்.

Boulangerie, *f.* உரொட்டி சுடும் வீடு, — தொழில், உரொட்டி வியாபாரம்,— க்கடை. [தில்) ஓர் பக்ஷி.

Boulboul, *m.* (அப்பிரிக்காதேசத்

Boule, *f.* உண்டை, உருளை, உரு

ண்டை, குமிழ், கோளம்; திரட்சி, திரளை. || விளையாடு மரவுண்டை, அநுமதிக் குறிப்பாகிய சிற்றுண்டை.

Bouleau, *m.* ஓர் மரம்.

Boule-de-neige, *f.* ஓர் படர் செடி.

Bouledogue, *m.* வளைந்த பல்லுள்ள பெரும் நாய்.

Boulée, *f.* உருகின நிண மண்டி.

Bouler, *v. n.* புரு தன் தொண்டை புடைத்தல், வேரிற் சிறு திரட்சி—, கிழங்குவிடுதல். || *v. a.* கோலால் தண்ணீரடித்தல்.

Boulet, *m.* பீரங்கிக்குண்டு. || ஓர் பீரங்கிக்குண்டு இழுக்கு மாக்கினை. || குதிரைக்காலின் மூட்டு ; — ramé இருப்புப் பாளத்தா லிணைத்த ஈர் அரைக் குண்டு ; — rouge நெருப்பு மயமான குண்டு.

Bouleté, *adj.* காலின் மூட்டு சுளுக்கினை.

Boulette, *f.* சிற்றுண்டை, அவையல், துண்டித்த விறைச்சி யுண்டை, திரிகிற நாய்களைக் கொல்லுதற்குத் தெருவிற் போடும் விஷமிட்ட இறைச்சி யுண்டை. || பிசகு, தப்பு, மோசம்.

Bouleux, *m.* மட்டம், மட்ட—, ஸ்தூலித்த குதிரை, கனவேலைக்குரிய குதிரை : un bon — தன் கடைமை செலுத்தும் மத்திம புத்தி மனுஷன்.

Boulevard, Boulevart, *m.* கொத்தளம், அலங்கம், அரண், ஆதரவு, பட்டணத்தின் சுற்று மரச்சாலை.

Bouleversé, *part.* அலங்கோலை—, குழப்பம்—, நிர்மூலம்—, பாழான, கவிழ்ந்த, கலங்கிய, கீழ் மேலான.

Bouleversement, *m.* புரட்டு, கவிழ்வு, கலக்கம், குழப்பம், அலங்கோலை.

Bouleverser, *v. a.* புரட்டுதல், கவிழ்தல், குலைத்தல், கலைத்தல், குழப்புதல், கலத்தல், கலக்குதல், தாறுமாறு—, அலங்கோலையாக்குதல்,— படுத்துதல், அழித்தல், நிர்மூலம்—, பாழாக்குதல், வீழ்த்துதல். || se— அலங்கோலைப்படுதல், குலைதல், கலைதல், நிர்மூலமாதல்.

Boulevue, (à, à la) *adv.* யோசனை —, கவனமின்றி.

Bouliche, *f.* பெரிய மட்பாத்திரம்.

Boulier, *m.* உப்புக்குளத்திற்குரியவலை.

Boulimie, *f.* அடிக்கடி வருங்கடும் பசி, மெலிவோடு மூர்ச்சை யோடு மடிக்கடி வருங் கடும்பசி.

Boulin, *m.* புருவின் சாலகம்,—கூடு, புருக் கூடாவதற்குச் சுவரில் விடுந் துளை. || சாரந்தாங்குங் கோல், சாரத்துளை.

Bouline, *f.* ஒருக்களித்த பாய், சதுரப்பாயின் நடுப்பக்கங்களில் கட்டிய கயிறு : courir la bouline கப்பலிற் கயிற்றினா லடிபடுதல்; aller à la—*ou*

Bouliner, *v. n.* (கப்பல்) ஒருக்களித்து ஓடுதல். || *v. a.* ஷை கயிற்றை யிழுத்தல். || பாளையத்தில் திருடுதல்

Boulineur, *m.* பாளையத் திருடன்.

Boulingrin, *m.* விசாலமான புல் நிலம், புல் நிலப் பாத்தி.

Boulingue, *f.* பாய்மர வுச்சியின் சிறுபாய்.

Boulinier, *m.* ஒருக்களித்து ஓடுங் கப்பல்.

Boulogne, (பிராஞ்சிராச்சியத்தில்) புலொஞ் நகர்.

Bouloir, *m.* தாளிக்கிற சுண்ணாம்பைக் கிண்டுங் கருவி. || உலோகங்களைச் சுத்தம் பண்ணுவதற்குரிய செப்புப் —, தட்டான் பாத்திரம்.

Boulon, *m.* இருப்பு முளை,— குச்சு.

Boulonner, *v. a.* ஷை முளையாற் பிணைத்தல்.

Boulot, *s. et adj.* தடித்த குட்டையன்,— குட்டைச்சி.

Bouque, *f.* நெருக்கமான வழி, — வாய்க்கால்.

Bouquer, *v. a. et n.* கட்டாயத்தால் முத்தமிடுதல்: faire — கீழ்ப்படுத்துதல், கட்டாயத்தாற் பிரியமற்றதைச் செய்வித்தல்,— முத்தமிடுவித்தல்.

Bouquet, *m.* பூஞ் செண்டு, பூங்கொத்து, துணர்,— ப்பூ, நெட்டு. || கொத்து, செண்டு, குலை,, கட்டு, கொண்டை, திரள், குஞ்சம், குச்சம். || ஒருவன் பேர்கொண்ட திருநாளில் அவனுக்கு ஒப்புக்கொடுக்குஞ் சிறு பாட்டு,— கொடை,— சந்திப்பு. || முடிவில் விடும் வாணச் சேர்க்கை, — காட்டும் வினோதம்,— சொல்லும் யுத்தி. || இரசம்விடுஞ் சுகந்தம், — நல்ல சுவை. || ஆட்டின் மூக்கில் வருஞ் சிரங்கு : — de diamants வைரமணிக் கொத்து ; — d'herbes புல் கட்டு ; — de paille விற்பனையாகிற குதிரைக் கழுத்தில் அல்லது வாலிற் கட்டும் வைக்கோற் கற்றை ; — de bois சிறு தோப்பு.

Bouquetier, *m.* பூப்பாத்திரம். || துணிப்பூ —, பூக்காரன், பூங்கொத்து செய்கிறவன்,— விற்கிறவன்.

Bouquetière, *f.* பூக்காரி, பூமாலை —, பூங்கொத்து செய்பவள், — விற்பவள்.

Bouquetin, *m.* காட்டாட்டுக்கிடா.

Bouquin, *m.* கிழ வெள்ளாட்டுக் கிடா, கிழ வெள்ளாட்டுக் கிடா நாற்றம், ஆண் முயல். || கிழ தூர்த்தன். || பழைய புஸ்தகம், அற்ப விலைப் புஸ்தகம் : cornet à — ஊதுங் கொம்பு ; odeur de — மொச்சு,— நாற்றம், மொச்சை ; sentir le — மொச்சடிக்கிறது.

Bouquiner, *v. n.* பழைய—, பழம் புஸ்தகங்களைத் தேடுதல், — சேர்த்துக் கொள்ளுதல். || முயல் பொலிதல்.

Bouquinerie, *f.* ஷை புஸ்தகக் குவியல்,—- வியாபாரம்,

Bouquineur, *m.* ஷை புஸ்தகந் தேடுபவன்,— சேர்க்கிறவன்.

Bouquiniste, *m.* ஷை புஸ்தக வியாபாரி,— ப்பிரியன்.

Boura, *f.* ஆட்டுமயிர்கலந்த பட்டுப் புடைவை.

Bouracan, *m.* வெள்ளாட்டு மயிர்க் கம்பளி.

Bouracanier, *m.* ஷை கம்பளி நெய்கிறவன்.

Bourache, **Bouraque**, *f.* ஓர்வித ஊற்றால்.

Bourbe, *f.* சேறு, சகதி, பங்கம்.

Bourbeux, *adj.* சேறு—, சகதி—, பங்கமுள்ள, சகதி நிறைந்த.

Bourbier, *m.* சேற்று—, செதுப்பு நிலம், சகதி, உளை, செதும்பு, சேறுள்ள விடம். || சேதத்துக்குரிய சிக்குள்ள காரியம். || துர்மார்க்கம், பாவ துர்நடக்கை, பாவச் சேறு.

Bourbillon, *m.* கட்டி முளை, அதின் நடுவிற் றோன்றும் வெள்ளை.

Bourbon, (இந்துக் கடலில்) புற்பந் தீவு, ரெயுனியோன் தீவு.

Bourbonnais, *m.* (பூர்வீக பிராஞ்சி ராச்சியத்தின்) புற்பொனை நாடு.

Bourbonniste, *m.* புற்போன் என்கிற ராச வமிசப் பாரிசத்தான்.

Bourbotte, *f.* ஓர்வித விலங்கு மீன்.

Bourbouil, *m.* **Bourbouille**, *f.* வேர்க்குரு, சினைப்பு, சினப்பு, குரு, நமிட்டுச் சிரங்கு, வெகுர், குருப்பு

Bourcer, *v. a.* *V.* Carguer.

Bourcette, *f.* ஓர் கீரை.

Bourdaine, *f.* ஓர் செடி.

Bourdalou, *m.* தொப்பிக்கச்சை, —நாடா. || நெடுஞ் சிறு நீர்ப்பாத்திரம். || பர்ப்பாச்சி.

Bourdaloue, *f.* ஓர் புடைவை. || *m.* புர்தலு என்பவர், பேர்பெற்ற ஓர் பிரசங்கி : **Bourdaliser**, *v. n.* அவர் வசன நடை கண்டுபாவித்தல்.

Bourde, *f.* பொய், போக்கு, பொய்ச்சேதி.

Bourdelai, *m.* ஓர் பெரிய திராட்சப் பழம்.

Bourder, *v. n.* பொய்சொல்லுதல், பழித்தல். || பிரசங்கத்தில் மவுனமாதல், — வார்த்தை யற்றுப்போதல்.

Bourdeur, *m.* பொய்யன், பொய் சொல்பவன்,— க்காரன்.

Bourdigue, *f.* *V.* Bordigue.

Bourdillon, *m.* பீப்பாவுக்குரிய பிளந்த மரம்.

Bourdin, *m.* ஓர் சிவந்த பழம்.

Bourdon, *m.* திரு யாத்திரை—, பரதேசி தடி, தண்டுக்கோல். || பெரிய மணி. || பறந்திரைக்குந்தேனீ,—வண்டு. || ஆணீ, ஆண் தேனீ, வண்டு, வண்டிசை யோசை. || சத்தக் குழற் சேர்க்கை, மந்த வோசை,— விசை கொடுக்கும் நரம்பு,— குழல். || (அடுக்குகிறதிலே) சில வார்த்தைவிடுதல்.

Bourdonnement, *m.* தேனிக் கீதம், வண்டி னிரைச்சல், வண்டோசை, முலமுலவென்கிற வோசை, குசுகுசுப்பு, முரலல், கலக்கமான வோசை, முறுமுறுப்பு, காதி லிரைச்சல், — கிணுகிணுப்பு.

Bourdonner, *v.n. et a.* (தேனீ, வண்டு) இரைதல், முலமுலவென்னல், குசுகுசுத்தல், முறுமுறுத்தல், மந்த வோசையிடுதல்,— யாய்ப்பாடுதல்.

Bourdonnet, *m.* காயத்திற் போடும் பழந் துணி நூற் சுருள்.

Bourg, *m.* ஊர், கிராமம், சிற்றூர், பட்டிக்காடு, பட்டி, பள்ளி, குறிச்சி, (பிராஞ்சிராச்சியத்தில்) பூர் நகர்.

Bourgade, *f.* சிற்றூர், ஊர், குறிச்சி, பாக்கம், சேரி.

Bourgène, *f.* *V.* Bourdaine.

Bourgeois, *m.* — se, *f.* நகரத்தான், பட்டணத்தான், பட்டணத்தாள். || குடி, வீட் டெசமான்,— எசமாட்டி. || செல்வன், மகராசன், அவகாசமுள்ளவன், ஆஸ்திக்காரன். || வங்கிஷபதி யல்லாதவன். போர்ச் சேவகத்தி

வில்லாதவன். || கப்ப லுடையவன், — எசமான். || *adj.* நகரத்தானுக்குரிய, குடியின், குடிகளுக்கடுத்த, நடுத்தரமான, சாதாரண, வழக்கமான, அற்ப, தாழ்ந்த, உயரமற்ற : maison, voiture — நகரத்தான் வீடு, — வண்டில் ; ordinaire — வழக்கம் —, நடுத்தரமான சாப்பாடு ; vin — தண்ணீரில்லாத விரசம் : à la bourgeoise நகரத்தானுக்குரிய விதமாய் ; caution— அவகாசமுள்ள சாமீன் ; à la bourgeoise *ou*

Bourgeoisement, *adv.* நகரத்தானுக்குரிய விதமாய், நடுத்தரமாய்.

Bourgeoisie, *f.* நகரத்தார், பட்டணத்தின் குடிகள். || நகரக்குடித் தன்மை, — யுரிமை,— சுதந்தரம்.

Bourgeon, *m.* தளிர், துளிர், நுரு, தழை, உல்லரி. || முகப்—, பரு.

Bourgeonné, *adj.* பருவுள்ள.

Bourgeonnement, *m.* தளிர்ப்பு, துளிர்ப்பு, தழைப்பு, தளிர்க்கும் பருவம்.

Bourgeonner, *v. n.* தளிர்த்தல், துளிர்த்தல், தழைத்தல், தளிர்விடுதல். || முகத்திற் பருப்புறப்படுதல்.

Bourgeron, *m.* வேலைக்காரருக்குரிய சிற்றங்கி.

Bourges, (பிராஞ்சிராச்சியத்தில்) [புர்ஜநகர்.

Bourgie, *f.* ஓர் செடி.

Bourgmestre, *m.* (அல்மஞ்தேசத்தில்) நகரதிகாரி.

Bourgogne, *f.* (பூர்வபிராஞ்சிராச்சியத்தில்) புர்கொஞ் நாடு. || *m.* ஷை நாட்டிரசம்.

Bourg-pourri, *m.* (இங்கிலீஷ்தேசத்தில்) மேலான ஆலோசனைச் சங்கத்து ஸ்தானுபதியை அனுப்புஞ் சுதந்தரமுள்ள சிற்றூர்.

Bourgueil, (பிராஞ்சிராச்சியத்தில்) புர்கெய்நகர். || *m.* ஷை நகரநாட்டிரசம்.

Bourguignon, *adj. et s.* புர்கொஞ் தேசத்து,— தேசத்தான். || *m.* ஓர்வித திராட்சப்பழம்.

Bourguignotte, *f.* ஓர்வித தலைச்சீரா,— பலத்த குல்லா.

Bourjassotte, *f.* இருண்ட ஊதாநிற அத்திப்பழம்.

Bourlet, *m. V.* Bourrelet.

Bournous, *m.* வெள்ளையாட்டு மயிர் —, அரபியர் போர்வை.

Bourrache, *f.* ஓர் வைத்தியப்பூண்டு.

Bourrade, *f.* சடுதியான அடி, — தாக்கு, — கைக்குத்து, — எதிர் மொழி, துப்பாக்கிப் பிடங்காலடி, வேட்டையில் நாய்முயலைக் கடித்தல்.

Bourras, *m. V.* Bure.

Bourrasque, *f.* சற்று நேரத்துப் —, புசல், சுழற் காற்று. || நிலையற்ற சூறைக் காற்று. || நிலையற்ற குழப்பம், — கலாபம். || சடுதியான துன்பம், — எரிச்சல், வேகமான தாக்கு, கெட்ட குணம்.

Bourre, *f.* துத்து, மிருக மயிர், நிரப்புக்குரிய —, உதவாத பொருள். || (துபாக்கியின்) சிம்பா || பூண்டினரும்பை மூடுஞ் சுணை : — de soie, de laine துத்தாவதற்குரிய —, மட்டிப் பட்டு,— ஆட்டுமயிர்.

Bourré, *part.* துத்துள்ள, நிறைந்த, சிம்பாபோட்ட.

Bourreau, *m.* நீதிக் கொலை —, கொலைக்காரன், மழுவரசன், வாதிக்கிறவன். || துஷ்டன், கொடியன். || சத்துரு, உபத்திரியப்படுத்துகிறவன். || உள்ளந்தர வாதை, — வேதனை.

Bourrée, *f.* மிலாறு—, விறகுகட்டு. || வேகமான கூத்து, — நடனம், அதிணிராகம்.

Bourreler, *v. a.* வாதித்தல் : être bourrelé மனவேதனைப் படுதல்.

Bourrelet, *m.* (பிள்ளையின் (தலைக்குரிய) துத்து நிறைந்த வளையம். || சுமடு, சும்மாடு, சுமையடை, சிம்புரி. || (காற்று வராதபடிக்கு) துத்து நிறைந்த கதவின் பட்டை. || இடுப்பின் சுற்று வீக்கம். || பீரங்கிவாயில்...) பிதுக்கமான விளிம்பு,— ஓரம். || பாய் மரத்துச் சுற்றிலுங் கயிற்றுப் பின்னல், ஒட்டவைத்த கிளைக்கீழுண்டாகுகிற கணு. || (காயத்தின்......) சுற்றுப் புடைப்பு.

Bourrelier, *m.* குதிரைச் சாமான் —, சீனி—, சேணஞ் செய்பவன்.

Bourrelle, *f.* கொலைக்காரன் பெண்சாதி, துஷ்டதாய்.

Bourrellerie, *f.* குதிரைச் சாமான் வியாபாரம்,— செய்யுந் தொழில்.

Bourrer, *v. a.* துத்தால் நிரப்புதல், துத்துப்போடுதல். || பூர்த்தியாய் —, முழுதும் நிறைத்தல், அதிக சாப்பா

டிடுதல், தீனியால் நிரப்புதல், தெவுட்டுதல். ‖ (துப்பாக்கி) கெட்டித்தல், திணித்தல், சிம்பாபோடுதல். ‖ முயலைக் கடித்தல்,— கவ்வுதல். ‖ துப்பாக்கிப் பிடங்காலிடித்தல், அடித்தல், கடினமாய் நடத்துதல், தர்க்கத்தி விடுக்குதல், கடிதல், தூஷித்தல். ‖ se — ஒருவ னொருவனை யடித்தல், பூர்த்தியாய்—, நிறையச் சாப்படுதல்.

Bourriche, *f.* (கோழி மீன் முதலியவற்றை) அனுப்புங் கூடை, அது கொண்டது.

Bourriers, *m. pl.* (தானியத்தோடு கலந்த) உமி, பதர், தோலின் நறுக்கு.

Bourrique, *f.* கழுதைப் பெட்டை, கழுதை, சட்டுவாணி, உதவாத சிறு குதிரை. ‖ மூடன், அறியாதவன். ‖ கொல்லற்றுக்காரருக்குரிய சுமைச் சப்பரம். ‖ கற்பலகை போடுவதற்குரிய எத்தனம்.

Bourriquet, *m.* கழுதைக் குட்டி, சின்ன கழுதை. ‖ சுரங்கத்தினின்று சுமையேற்றும் எத்தனம். ‖ கொல்லற்றுக்காரருக்குரிய சுமைச் சப்பரம்.

Bourrir, *v. n.* கவுதாரி வீறென்று எழும்பிப் பறத்தல்.

Bourru, *adj.* சுணை நிறைந்த, சமமற்ற. ‖ கோப, கடும், கசடுள்ள, கரடு முரட்டுக்குணமுள்ள. ‖ *s.* கசடன், கோபி, துடுக்கன், குறும்பன், உக்கிரன்.

Boursal, *m.* பம்பர வடிவான வலை.

Boursault, *m.* ஓர் அலரிச் செடி.

Bourse, *f.* பை, பணப்பை,— ச்சாக்கு, அடைப்பம், பணம். ‖ (துற்கிதேசத்தில்) ஓர் பெருந் தொகைப் பணம். ‖ கோவிலின் யாசகப்பை. ‖ முயலைப் பிடிப்பதற்குரிய சாக்கு,— சாக்கு வடிவான வலை. ‖ கொண்டைப்பை. ‖ கலணையிற் கட்டுந் தோற்பை. ‖ பூசைப் பாத்திர மேலடைப்பம். ‖ காளான் மூடி. ‖ மாணாக்கர் படிப்புக்கான உபகாரச் சம்பளம், — செலவு தானம். ‖ காசுச் சாலை, — க்கடை, வர்த்தகர் கூடுமிடம், அதில் நடப்பிக்கும் வியாபாரக் காரியம், அதிற் கூடும் வர்த்தகர், அந்தக் கூட்டங் கூடியிருக்குங் காலம். ‖ கனி கொடுக்கும் அரும்பு,— கொம்பு. ‖ ஓர் வகை மீன். ‖ *pl.* அண்டச் சவ்வு, — ப்பை, முஷ்கம் ; la — a été effrayée de cette nouvelle இந்தச் செய்தியால் காசுக்கடை வர்த்தகர் கலங்கினார்கள் ; le cours de la — உண்டியல் வியாபார நிலை ; avoir un quart de — dans un collège கல்லூரியிற் படிக்கிறதுக்குக் காற்சம்பளம் உபகாரமாகப் பெற்றிருத்தல்.

Bourse-à-pasteur, *f.* இரத்தரோகத்துக் கவுஷதமான —, இறுக்குகிற பூண்டு.

Bourseau, *m.* முகட்டைய மூடி, ஈயத்தை வட்டமாக்குங் கருவி.

Boursette, *f.* சிறுபை, பெரிய வாத்தியக் கருவியில் இருப்புக்கம்பியினிடம்.

Boursicaut, *m.* சிறு பணப்பை, வைப்பாகிய சிறு பணத் தொகை.

Boursier, *m.* கல்லூரியிற் படிப்புக்கு உபகாரச் சம்பளம் பெற்றவன். ‖ காசுச் சாலை வர்த்தகன், — ச்சாலைக்கு அடிக்கடி போகிறவன் : *m.* — ère *f.* பை செய்பவன்,— விற்கிறவன். ‖ (சில மடத்தில்) பணப்பையுள்ளவன், செலவு செய்கிறவன்,— வள்.

Boursiller, *v. n.* பொதுச் செலவுக்காகப் பணஞ் சேர்த்தல், இலேசான வீதந் தருதல்.

Bourson, *m.* காற்சட்டைச் சாக்கு.

Boursouflage, *m.* வசனநடை—, எடுப்பு, வீம்புச்சொல்.

Boursouflé, *part.* எடுப்பான, வீண் பாராட்டுள்ள. ‖ அதிக புஷ்டியுள்ள, உப்பின.

Boursouflement, *m.* புடைப்பு, அதிகரிப்பு, உப்புதல்.

Boursoufler, *v. a.* தோலை—, உப்புவித்தல், புடைப்பித்தல், (வசனநடையை) எடுப்பாக்குதல். ‖ se — உப்புதல், அதிகரித்தல், வீங்குதல்.

Boursouflure, *f.* தோலின்—, உப்பல், வீக்கம், வசனநடை—, எடுப்பு.

Bousards, *m. pl.* சாணியைப் போன்ற மான் பிழுக்கை.

Bousculement, *m.* புரட்டல், தள்ளல்.

Bousculer, *v. a.* புரட்டுதல், எப்பக்கத்திலுந்—, நெருக்கித் தள்ளுதல், கடினமாய்க் கண்டித்தல். ‖ se — எப்பக்கத்திலு மொருவ னொருவனைத் தள்ளுதல்,— புரட்டுதல்.

Bouse, *f.* சாணி, சாணகம், சாணகம், சாணங்கி :—sèche pour faire du feu எருமுட்டை, வராட்டி, வறட்டி, வறளி.

Bouser, *v. a.* மெழுகுதல்

Bousier, *m.* கஷ்டப் பிரிய வண்டு.

Bousillage, *m.* வைக்கோற் கலந்த சேறு, சீரற்ற—, கெட்ட வேலை.

Bousiller, *v. a.* ஷை சேற்றினாற் கட்டுதல், ஷை வேலைசெய்தல்.

Bousilleur, *m.* ஷை சேற்றினாற் கட்டுகிறவன். || *m.* — euse, *f.* ஷை வேலைக்காரன்,— செய்பவன்,— வள்.

Bousin, *m.* சந்தடி,— யிடம், தூர்த்தத்தனவிடம். || சீவுங் கல்லின் கடினமற்ற பரப்பு. [குரிய மரக்கட்டை.

Boussoir, *m.* நங்கூரந் தூக்குதற்

Boussole, *f.* ஊசிக்காந்தம்,— காந்தப்பெட்டி, சமுக்கா, சூசிக்கல். || வழிகாட்டி, ஒழுங்கு.

Boustrophédon, *m.* மாறிமாறி வரிகள் வலத்தே யிடத்தே நோக்கிப்போகும் எழுதுமாதிரி.

Bousure, *f.* நாணயம் வெள்ளையாக்குங் கலப்பு.

Bout, *m.* நுனி, முனை, நுதி, அக்கிரம், உச்சி. || முடிவு, கடை, கடைசி, அந்தம், ஈறு, இறுதி, அறுதி, முனை யலங்கரிப்பு, முன்னணிய முனை. || பங்கு, துண்டு, கண்டம் : — de l'oreille காதின் நுனி, சோணை ; le gros— d'un outil பிடங்கு ; un — de toile சீலைத் துண்டு ; le— de la toile முன்றானை, தலைப்பு; mettre—à—இரு நுனி சேர்த்தல்; mettre, pousser à — கடைசிக் கொடுக்குதல், கோபமூட்டுதல்; savoir sur le — du doigt உத்தமமாயறிதல் ; le haut—மேலான விடம்; le bas — தாழ்ந்த விடம்; tenir le haut—முதன்மையாயிருத்தல்; rire du—des dents பல்லின் நுனியால்—, கட்டாயத்தினாற் சிரித்தல்; un—d'homme குட்டை மனுஷன்; jusqu'au— முடிவு பரியந்தம்; aller—au vent காற்றுக் கெதிராய்ப் போதல்; être à—முடிவாய்—, களைத்திருத்தல், அற்றுப்போதல் ; venir à—முடித்தல், நிறைவேற்றுதல், வாய்த்தல்; à—portant ஆயுதந்தொடவே, கிட்டக்கிட்ட, நேரே; à tout — de champ அடிக்கடி, எந்நேரமும் ; au — du compte ஆயினும், கடைசியில் ; de — en—, d'un — à l'autre துவக்கந் துவக்கி முடிவுவரைக்கும்.

Boutade, *f.* எழுந்தபடி, இச்சைவேகம்,— வேகத்தாற் செய்த கவிகள்.

Boutant, *adj.* சுவரைத்—, தாங்குகிற, தாங்கியான. [சினை.

Boutargue, *f.* காடி யுப்பிட்ட மீன்

Bout-avant, *m.* உப்பளவை நிறைவிக்குங் கண்காணி.

Bout-d'aile, *m.* தின்பதற்குரிய சிறகின் நுனி. || சிறகின் நுனி யிறகு.

Bout-dehors, *m.* *V.* Boute-hors.

Bout-de-l'an, *m.* வருஷ முடிவின் ஒப்பூசை. [டைக் கை.

Bout-de-manche, *m.* கள்ளச்சட்

Bout-de-quièvre, *m.* *V.* Bouteux.

Boute, *f.* நல்ல தண்ணீர்ப் பீப்பா.

Bouté, *adj.* செவ்வைக்காலுள்ள.

Boute-à-port, *m.* தோணிகளை ஒழுங்குபடுத்துங் கண்காணி.

Boutée, *f.* வளைவினுதரவு.

Boute-en-train, *m.* பாடுவிக்கும் பக்ஷி, மகிழ்விப்பவன்.

Boutefeu, *m.* நெருப்புக்கொள்ளி, பீரங்கி சுடுபவன், — சுடுங் கோல், நெருப்பன், குழப்பக்காரன், சச்சரவு கிளப்புகிறவன்.

Boute-hors, *m.* பேச்சுத்தாராளம், சின்ன பாய்களின் கூட்டுப்பருமல், ஓர் விளையாட்டு.

Bouteille, *f.* பொத்தல், புத்தி, குப்பி, சித்தை, குமிளி, குப்பிமட்டு,—கொள்வது. || குடி, குடிப்பு, இரசம்: boire —இரசங் குடித்தல்;— de Leyde மீன் தாதுகிளப்பும் வஸ்துநிறைந்த குப்பி.

Boute-lof, *m.* அணியபாய்மரத்துப் பாய்க் கயறுகளை நிறுத்து மரக்கட்டை.

Bouter, *v. a. et n.* போடுதல், தள்ளுதல், ஒட்டுதல் : le vin — இரசந் தடித்தல்; — un cuir தோலுக்கு ஒட்டிய சதை சீவுதல். [குத்தூசி.

Boutereau, *m.* குண்டூசிக்காரன்

Bouterolle, *f.* வாளுறை நுனியினுதரவு. || பல தொழிற் கருவி,— குத்தூசி. || சாவியின் அறுப்பு.

Boute-selle, *m.* சீனிபோடுதற்கான எக்காளச் சத்தம்,— அடையாளம்.

Bout-tout-cuire, *m.* அழிப்பாளி, ஊதாரி.

Bouteux, *m.* கவர்த்தடியி னுனியிற் கட்டிய சிறு வலை.

Bouticlar, *m.* மீன்வளர்த்துச் சுமக்குந் தோணி.

Bouteillier, *m.* இரச விசாரணைக்காரன்.

Boutique, *f.* கடை, அங்காடி, விபணி. || பட்டடை, கம்மாலை. || கடையின் சரக்கெல்லாம். || தொழிலாளியின் கருவிகள், பட்டடைக்காரர். || சரியாய்ச் சம்பளங்கொடாத வீடு, அலங்கோலையான வீடு. || மீன்வளர்க்குந் தோணி, — துளைப் பெட்டி : fermer — கடைசாத்துதல்,— பூட்டுதல், தன் தொழிலை விட்டுவிடுதல்.

Boutiquier, *m.* — ère, *f.* கடையாள், கடைக்காரன்,— காரி.

Boutis, *m.* காட்டுப்பன்றி மூக்கினால் நோண்டின வடையாளம்.

Boutisse, *f.* அகலங்காணும்படி போட்ட கல்.

Boutoir, *m.* தோல் சீவுங் கருவி. || குதிரைக்குளம்பு நறுக்குங் கருவி. || காட்டுப்பன்றி மூக்கு.

Bouton, *m.* (d'arbre), துளிர், தளிர், மொட்டு. || (de fleurs) அரும்பு, மொக்குள், முகை, கண்ணி. || (à la peau) பரு, குருப்பு, சினப்பு. || (d'habit) புத்தொன், தெறி, தெறிப்பு, குமிழ், குதை, தும்பு, தறிப்பாகிய மணி, தெறி வடிவுள்ளது. || (de tiroirs) கைப்பிடி, குமிழ். || துப்பாக்கி நுனியிலுள்ள இலக்குக்குமிழ். || கல்லெடுப்பதற்குச் சத்திர வைத்தியக் கருவி. || மாற்றுபார்ப்பதற்கான சிறு பொன் — வெள்ளித்துண்டு. || ஓர் கிளிஞ்சில் : — de rose உரோசாப்பூ வரும்பு ; — de fleuret சிலம்பக்கத்தி நுனிக்குமிழ்; serrer le— à quelqu'un ஒருவனை நெருக்குதல்; — de feu சுடுவதற்குக் காய்ந்த இருப்புக் குமிழ் ; — de fin புடமிட்ட பிறகு நிற்கும் பொன் — வெள்ளித் துண்டு ; —de bride கடிவாள மிறுக்குவதற்கான சிறு தோல் வளையம் ; — de chaleur வேர்க்குரு ;— de socques பாதகுறட்டின் குமிழ், கல்லை.

Bouton-d'argent, *m.* வெள்ளைப் பூவுள்ள பூண்டு (பலவுண்டு.)

Bouton-d'or, *m.* மஞ்சள்நிறப் பூவுள்ள பூண்டு. (சிலதுகளுண்டு.)

Bouton-de-rose, *m.* ஓர்வித கிளிஞ்சில்.

Boutonné, *part.* தெறிப்புமாட்டின, இரகசியம்—, உட்கருத்து காண்பியாத, பருவுள்ள, துளிர்த்த.

Boutonner, *v. n.* துளிர்த்தல், தளிர்த்தல், அரும்புதல். || *v. a.* புத்தொன்—, தெறிப்புமாட்டுதல். || se— தன் சட்டையின் தெறிப்புமாட்டுதல்.

Boutonnerie, *f.* புத்தொன்செய்யுந்—, தெறிப்புத்தொழில்,— வியாபாரம்,— சரக்கு.

Boutonnier, *m.* புத்தொன்—, தெறிப்பு செய்பவன்,— விற்பவன்.

Boutonnière, *f.* குதைச்சு, தெறிப்புக்கான பொத்தல். || அகலமான—, கத்தி—, காயம்.

Bout-saigneux, *m.* இரத்தம் வடிகிறமிருகக் கழுத்து.

Bouts-rimés, *m. pl.* இயைபுத்தொடை மொழிகள். Bout-rimé, *m.* ஷை மொழிச் செய்யுள்.

Bouture, *f.* நாட்டுங் கிளை, வேரூன்ற நட்ட கிளை.

Bouturer, *v. a.* கிளைகளை யறுத்து நடுதல்.

Bouvard, *m.* கம்பட்டச்சம்மட்டி.

Bouveau, *m.* இளங் காளை.

Bouvement, *m.* ஓர்தச்சன் கருவி.

Bouveret, *m.* (அப்பிரிக்காதேசத்தில்) ஓர் பக்ஷி.

Bouverie, *f.* மாட்டுக்கொட்டாய்.

Bouvet, *m.* துவாளிப்பாயறுக்கு மிழைப்புளி.

Bouvier, *m.* மாட்டுக்காரன், கோபாலன், ஆயன், மாடு மேய்ப்பவன், — ஓட்டுகிறவன். || முரடன். || ஓர் குருவி: le Bouvier வடதிசையிலோர் நக்ஷத்திரம்.

Bouvière, *f.* மாட்டுக்காரி. || மட்டி. || ஓர் சிறு ஆற்றுமீன்.

Bouvillon, *m.* இளங்காளை.

Bouvreuil, *m.* ஓர் சிறு பக்ஷி.

Bovine, *adj. f.* மாட்டு : bêtes — மாடுகள் ; race — மாட்டினம், பசு எருது காளைகள்.

Bowl, *m.* கோப்பை.

Boxée, *f.* முஷ்டி—, முட்டிச்சண்டை,— பாதம்,— யுத்தம்.

Boxer, *v. a.* குத்துதல், குட்டுதல். || *v. n. et* se — கைக்குத்துக்கு நிற்றல், முட்டிச்சண்டை செய்தல்,— யுத்தம் பண்ணுதல்.

Boxeur, *m.* கைக்குத்துக்காரன், முட்டியுத்தக்காரன்,— ப்பிரியன்.

Boyard, *m.* (ருசியமுதலிய தேசத்தில்) உம்பிளிக்கைக்காரன், பெரியவன், உயர்குலத்தோன்.

Boyau, *m.* குடல், குடர். ‖ அகலமின்றி நீண்ட விடம், — அறை. ‖ கோணலு மறைவுமான அலங்கவழி, நீர்தாவுந் துருத்தி, நீர் செலுத்துந் தோற்குழாய். ‖ (குதிரை) வயிறு : corde à — நரம்புக் கயறு, வீணை நரம்பு.

Boyauderie, *f.* குடல் பதமிட்டு நூற்கும் —, குடல்களைக் கயிருக்கு மிடம், — தொழில், குடற் கயிற்று வியாபாரம்.

Boyaudier, *m.* நரப்புக்கயிறு செய்கிறவன்,— விற்கிறவன், குடல் பதமிட்டு நூற்கிறவன்.

Boyer, *m.* ஓரவித தோணி, ஓர்வித பூசாரி.

Brabant, *m.* (பெல்ஜீக்கு தேசத்தில்) பிரபான் நாடு ; Brabançon, *m.* — e, *f.* ஷை நாட்டான், — ள்.

Brabeutes, *m. pl.* (கிரேஸ்தேசத்தில்) திருவிளையாட்டுத் தலைவர்.

Bracelet, *m.* காப்பு, கை வளை, அஸ்த—, கடகம், கைவளையம், தொடி, பொன் பூசுகிறவ னிடதுகையிற் கட்டுந் தோற்காப்பு. ‖ பொன்பாளம்.

Brachélytres, *m. pl.* சிறு சிறகை மூடியுள்ள வண்டினம்.

Bracher, Brachéier, Brachier, *v. a.* தூக்கு மஞ்சக்கயிற்று முயற்சி செய்தல்.

Brachet, *m.* வேட்டை நாய்.

Brachial, *adj.* கைக்கடுத்த, கையின், புயத்து.

Brachiopodes, *m. pl.* கையாக வுதவுகிற இருபாதமுள்ள எலும்பில்லாப் பிராணிகள்.

Brachycataleptique, *adj.* vers — முடிவில் ஒரு சீர் குறைகிற கவி.

Brachycère, *m.* குறுந் தும்பிக்கையுள்ள வண்டு.

Brachygraphe, *m.* குறிப்பெழுத்தாளி,— எழுத்து வித்தைக்காரன்.

Brachygraphie, *f.* குறிப்பெழுத்து வித்தை, சுருக்கமாய் எழுதும் வித்தை.

Brachylogie, *f.* சுருக்கமான வசனம்,— வசனப் பேச்சு.

Brachypnée, *f.* குற்றுயிர்ப்பு.

Brachyptères, *m. pl.* குற்றிறகுள்ள பட்சிகள்.

Brachystochrone, *f.* அதிக சீக்கிர வீழ்வின் வளைந்த வரி, சக்கரோவம்.

Bracon, *m.* மதகின் கதவுதாங்கி. ‖ ஓர் பூச்சி.

Braconnage, *m.* திருட்டாட்டமானவேட்டை.

Braconner, *v. n.* உத்தரவின்றி—, திருட்டாட்டமாய் வேட்டையாடுதல்.

Braconnier, *m.* ஷை வேட்டையாடுகிறவன். ‖ பிரயோசனமின்றித் தன் நிலத்தி லநேக மிருகங்களைக் கொல்பவன்.

Bractée, *f.* பூவின்கீழ்ச் சிற்றிலை.

Bractéifère, *adj.* ஷை சிற்றிலையுள்ள.

Bractéole, *f.* ஷை சிற்றிலை. ‖ பொன் தகடு, பொன்தகட்டின் நறுக்கு.

Bradype, *m.* தாமத நடை மிருகம், தேய்வாங்கு.

Bradypepsie, *f.* குறையுந் தாமதமுள்ள சீரணம்.

Braga, Bragance, (பொர்த்துகால் தேசத்தில்) பிரகா—, பிரகான்ஸ் நகர்.

Brague, *f.* பீரங்கி நிறுத்தும் பெருங் கயிறு, (வீணைப் பக்கங்களின்) மறைப்புக் கட்டை. ‖ *pl.* அகலமான காற்சட்டை.

Braguer, *v. n.* சந்தோஷமாய் வாழ்தல், வீம்பு பேசுதல்.

Braguet, *m.* பாய்மரத்தைத் தூக்குங் கயிறு.

Braguette, *f. V.* Brayette.

Brahm, *m.* (l'Etre suprême) பிரமம்.

Brahma, *m.* பிரமன், பிரமா, அயன்.

Brahmane, Brahme, Brahmin, *V.* Brame.

Brahmine, *V.* Bramine.

Brahmanique, *adj.* பிராமணருக்கடுத்த.

Brahmanisme, *m. V.* Bramanisme.

Brai, *m.* மெழுகுகலந்த பிசின், கிசில். ‖ பானஞ்செய்வதற்கு இடித்த வாற்கோதும்பை.

Braie, *f.* காற்சட்டை, சல்லடம். ‖ பிள்ளைத்துணி. ‖ மெழுகு வேலைக்காரன் கருவி. ‖ கிசில் பூசின சீலை. ‖ எழுத்து பதியத்தக்க விடத்தில் கத்திரிக்கப்பட்ட தாள். ‖ *pl.* எந்திரக்கல்லின் கீழாதரவு கட்டை.

Braillard, *adj. et s.* கூச்சற்காரன், — காரி, கூச்சலிடுகிற, கூவுகிற.

Braille, *f.* உப்பிடு மீன் திருப்புதற்குரிய மரத் துடுப்பு.

Braillement, *m.* Braillerie, *f.* கூச்சல், இரைச்சல், கூவல், கத்தல்.

Brailler, *v. n.* கூவுதல், கூச்சலிடுதல், தன் சர்வ பலத்தோடு கூவிப்பாடுதல். || (நாய் அடிச்சுவடு பின் செல்லாமல்) கூவுதல். *v. a.* மரத்துடுப்பா லுப்பிட்டமீன் பெயர்த்தல்.

Brailleur, *adj.* கூச்சற்காரன், — காரி, கூவ வழக்கமுள்ள. [து, கத்தல்.

Braiment, Braire, *m.* கழுதை கத்

Braire, *v. n.* (கழுதை) கத்துதல், கூவுதல், கனைத்தல். || கம்மற்குரலாய்ப் பாடுதல்,—கூவுதல்.||புலம்புதல்,அழுதல்

Braise, *f.* அழ்ல், அனல், தணல்.

Braiser, *v. a.* அழல் மேல் சுடுதல், — வேவித்தல். [ட்டி.

Braisier, *m.* அவித்தகரிபோடும் பெ

Braisière, *f.* கரி யவிக்குஞ் சட்டி.|| அனல்மேலிடும் பாத்திரம்.

Brama, *m.* *V.* Brahma.

Brame, Bramin, *m.* பிராமணன், பார்ப்பான், பாப்பான், அந்தணன் ; (leur titre honorifique) ஐயர் ; rue, bourg de brames அக்கிரகாரம், அக்கிராரம். [பாத்தி. || *P.* Brame.

Bramine, *f.* பிராமணத்தி, பாப்

Bramanique, *adj.* பிராமண, பிராமணருக்கடுத்த.

Bramanisme, *m.* பிராமணர் மதம், — போதகம், இந்து மதம்.

Bramement, *m.* Bramer, *v. n.* (மதமான்) கத்துதல், கூவுதல்.

Bran, *m.* மலம், அசுத்தம் : — de Judas சிவந்தமாசு ; — de son பெருந்தவிடு;—de scie அரிதுகள், அரிபொடி. || — de lui அவனுக்குச்சீ.

Brancard, *m.* சிவிகை, சப்பரம், தேர், தோளி. || வண்டியின் இரு ஏர்க்கால். || (சு-சில்வண்டியில்) பக்கத்துக்கால், — உத்திரம், — சட்டம்.

Brancardier, *m.* சிவிகை யெடுத்துச்செல்வோன்.

Branchage, *m.* தழை, மரக் —, கொம்புகள், வெட்டின தழை.

Branche, *f.* மரக் —, கொம்பு, கிளை, கொப்பு, கோடு, பணர். || பிரிவு, வகுப்பு, கிளை. || (இரத்தத்தாரையின் —, நாடியின் —, நதியின் —, படலத்தின் —, வமிசத்தின் —, சாஸ்திரத்தின்...) பிரிவு ; தூக்கு விளக்குச் சேர்வையின் கிளை, தொடர்மலையினின்று பிரிகிற மலைகள். || கணக்கக்ஷரமெழுதியிருக்கிற துலாக்கோலின் பங்கு, வார்கட்டுங் கடிவாளத்தி னிருபங்கு, மூக்குக்கண்ணாடியினிலகாம், கத்திரிக்கோலின் —, கவராசத்தினிருபிரிவுகள். || *pl.* மான் கொம்புகளி னிருகிளைகள்; petite —, branchette, *f.* சிறு கிளை, மிலாறு.

Branchement, *m.* காஸ், ஜலம் முதலானவைகளுடைய குழைகளிலிருந்து பிரியுங்கிளை.

Brancher, *v. a.* ஓர் கிளையில் தொங்கவைத்தல்,— தூக்குதல். || *v. n.* *et* se — குந்துதல், உட்காருதல்.

Branchial, *adj.* மீன் செவுளுக் கடுத்த. [ளேபறக்கிற.

Branchier, *adj.* மரக்கொம்புக்குள்

Branchies, *f. pl.* செவுள், பூ, மச்சங்களின் மூச்சுறுப்பு.

Branchiodèles, *m. pl.* வெளியான செவுளுள்ள கடற்பூச்சிகள்.

Branchiopode, *m.* காலிற் செவுளுள்ள ஓட்டுமீன்.

Branchiostége, *adj.* மீன் செவுளை மூடுகிற. || *m. pl.* ஓர்சவ்வு மூடுஞ் செவுளுள்ள மீன்கள்.

Branchu, *adj.* கிளை—, கொம்பு—, கவர் —, கையுள்ள. [கொழும்பு.

Brandade, *f.* ஓர்வித கருவாட்டுக்

Brande, *f.* சிறு காட்டுச் செடி, ஷை செடி நிறைந்த மைதானம். || மிலாறு, செத்தை.

Brandebourg, *m.* (அல்மஞ் தேசத்தில்) பிரான்தபூர்நாடு,— நகர். || தெறிப்புப்பொத்தலலங்காரநாடா. || *f.* கையுள்ள போர்வை. || Brandebourgeois, *adj.* *et s.* ஷை நாட்டு, — நகரத்தான்.

Branderie, *f.* சாராயங்காய்ச்சி வடிக்கு மிடம். [சீமைச் சாராயம்:

Brandevin, *m.* திராட்சரச —,

Brandevinier, *m.* — ère, *f.* சீமைச்சாராயம் வடிக்கிறவன்; — விற்கிறவன்,—வள். [போலே, ஒரு தாக்கினால்.

Brandi, *adj.* *ou* tout — இருந்தாப்

Brandillement, *m.* ஆட்டம், அசைப்பு, அசைவு, ஊஞ்சல்.

Brandiller, *v. a.* ஆட்டுதல், அசைத்தல், வீசுதல் : — les mains கையாட்டுதல், — வீசுதல் ; se — ஆடுதல், ஊஞ்சலாடுதல் ; se — suspendu à un croc செடிலாடுதல். [ஊசல்.

Brandilloire, *f.* ஊஞ்சல், உஞ்சல்,

Brandir, *v. a.* அசைத்தல், வீசுதல், ஆட்டுதல், சுழற்றுதல். || ஓர் மரவாணியாற் பிணைத்தல்.

Brandon, *m.* கொள்ளி, — க்கட்டை, தீக்கொள்ளி, பந்தம், தீவட்டி, இராதம், உற்கை, சுருட்டிய வைக்கோற் பந்தம், தீப்பொறி. || மறியலடையாளமாக நாட்டும் வைக்கோற் சுருட்டிய கழி : — de discorde சச்சரவின் காரணம். [நடுதல்.

Brandonner, *v. a.* ஷை. கழிகளை

Brane, *f.* பெண்ணோநாய்மடி, — செருத்தல்.

Branlant, *part.* அசைகிற, ஆடுகிற: château—நிச்சயமற்றபொருள்,—ஆள்.

Branle, *m.* ஆட்டம், அசைவு, தத்தளிப்பு. || ஏவல், தூண்டல், தாக்கு, முயற்சி, உற்சாகம், எழுப்பு, இயக்கம். || தூங்கு மஞ்சம். || வட்டமான கூத்து. || பறிபக்ஷி சிறகடித்துச் சுழலாய்ப் பறத்தல் : donner le — ஆட்டுதல், மூட்டுதல், தூண்டுதல், அசைவு—, மாதிரி கொடுத்தல், ஏவுதல், முதலியக்கமிடுதல் ; se mettre en—, être en—எற்படுதல், முயற்சிசெய்தல், துவக்குதல் ; mener le — மாதிரிகொடுத்தல், தலைவனாயிருத்தல்; mettre une cloche en—, sonner en — மணியடித்தல்,— யாட்டியடித்தல்.

Branle-bas, *m.* தூக்கு மஞ்சம் அவிழ்க்கக்கட்டளை, சண்டைக்கு மூஸ்திப்பாயிருக்கக்கட்டளை. || புரட்டு, அலங்கோலை.

Branlement, *m.* அசைவு, ஆட்டம்.

Branler, *v. a.* அசைத்தல், ஆட்டுதல். || வீசுதல். || *v. n.* அசைதல், ஆடுதல், தள்ளாடுதல், தத்தளித்தல், பேர்தல், உறுதியற்றிருத்தல்.

Branloire, *f.* உஞ்சலானபலகை, உலைத்துருத்திச்சங்கிலி.

Braque, *m. ou* chien — குறுமயிருள்ள வேட்டை நாய். || மதி—, விவேகமற்றவன், பித்தேறி. [கத்தி.

Braquemart, *m.* அகன்ற குறுங்

Braquement, *m.* Braquer, *v. a.* நேராய்த்திருப்புதல், இலக்குபார்த்து—, திட்டப்படுத்துதல்:— ses regards sur உற்று—, பார்த்தல், நோக்குதல்.

Braques, *f. pl.* நண்டுகொடுக்கு,— இடுக்கு.

Bras, *m.* கை, கரம், புசம், புயம், கைப்பட்டை. || ஆதரவு, தாங்கி, உதவி, ஒத்தாசை. || வல்லமை, தைரியம். || வீரியம், ஆள், வேலையாள். || பிரிவு. || **தூ**க்கு மியந்திரத்தின் கால். || சுவரில் தைக்குங் கத்திரிசால். || ஓரிரத்தினக் காரன் கருவி. || வெள்ளரிச் செடிமுதலியவற்றின் கொடி. || பனைமீன் சிறகு. || கைப்பிடி. || நண்டின்கொடுக்கு: avoir les — longs நெடுங் கை—, மிகுந்த அதிகாரங்கொண்டிருத்தல் ; tendre les —à quelqu'un ஒருவனை யேற்றுக்கொள்ள — ஆதரிக்க — கெஞ்சக் கை நீட்டுதல் ; demeurer les — croisés கைகட்டி—, சும்மாவிருத்தல்; — retroussé சட்டைக்கையொதுக்கின கை : vivre de ses—தன் கைவேலையால் பிழைத்தல் ; faire les beaux — ஒய்யாரமாய் நடத்தல் ; faire de grands — பெரிய அபிநயங் காட்டுதல், தன் வல்லமை பாராட்டுதல் ; le — de Dieu தேவவல்லமை ; le—séculier அரமனை வல்லமை, — யொத்தாசை ; un plus grand nombre de — அதிக வேலையாள் ; — d'un fleuve நதியின்பிரிவு, —வாய்க்கால்; — de mer கடல்வாய்க்கால் ; — d'un fauteuil நாற்காலியின் கை, — கைத்தாங்கி ; — de vergue பருமல்நுனிக்கயிறு ; — droit வலதுகை, பிரதான உதவி,— உதவியாள் ; à — கையால், கைப்பலத்தால் ; à — ouverts விரித்த கரங்களில், கைவிரித்து, பக்ஷத்தோடு; à tour de—, à force de—கையின் முயற்சியால், சர்வபலத்தோடு ; — dessus,— dessous கைகோர்த்து, சிநேகமாய்.

Braser, *v. a.* பற்றவைத்தல்.

Brasero, *m.* எரிகரி வைக்கப்படும் அகலமும் தட்டையுமான ஓர்பாத்திரம்.

Brasier, *m.* அழல், அனல், எரிகரி, தீச்சட்டி.

Brasillement, *m.* கடல் சூரியனது அல்லது நிலவின் கதிரைத் திரும்ப வீசுதல், இரவிற் கடல் மின்னுதல்.

Brasiller, *v. a.* அனல்மேற்சுடுதல். || *v. n.* இரவிற்கடல்மின்னுதல். [கொண்டு.

à Bras-le-corps, *adv.* அணைத்துக்

Brasque, *f.* (உலையிர் பூசும்) இடித்தகரிகலந்த களிமண். [உலை பூசுதல்.

Brasquer, *v. a.* ஷை களிமண்ணால்

Brassade, *f.* பெருங் கண் வலை.

Brassage, *m.* கம்பட்டத்தீர்வை, உலோகங்களுக்குச் செய்யும்—, உலோகத்து வேலை. || கிண்டுதல், தானியப்பானஞ் செய்தல்,— செய்யும்வகை.

Brassard, *m.* கைக்கவசம்,— க்கட்டி, யுத்த வீரர் கைச்சட்டை. || காப்பு, கையிற் கட்டுமணி.

Brasse, *f.* பாகம், வியாமம், உ-கசம், ச-முழம். || இருகை விரித்து நீஞ்சும் வகை, — நீஞ்சுதலினாட்டம், ஒவ்வொருவிசை கைவிரித்து நீஞ்சுந் தூரம்.

Brassée, *f.* விரித்த கையில் அடங்குவது, — அணைப்பது, கொடுங் கை, தழுவு, கைவிரித்து நீஞ்சுதலினாட்டம்: une — de paille ஒரு தழுவு வைக்கோல்.

Brasser, *v. a.* கிண்டுதல், கையாலாட்டுதல்,— கலத்தல், ஏற்படுத்துதல், கட்டுதல், கயிறிழுத்துப் பருமல் திருப்புதல். [செய்யு மிடம்.

Brasserie, *f.* தானியத்துப் பானஞ்

Brasseur, *m.* — euse, *f.* தானியப்பானஞ் செய்பவன்,— வள்.

Brasseyage, *m.* Brasseyer, *v. a.* பாகத்தாலளத்தல்.

Conséquent, *adj.* பொருந்திய, ஒத்த, தன் கோட்பாட்டுக்குத் தக்கபடி பேசுகிற, — நடக்கிற, தன்னோடொத்த, காரணசித்தி—, தொடர்ச்சி—, பலிப்பான.

Conséquent, *m.* நியாயத்தின் பின் வாக்கியம், அநுமேயம். || ஓரநுபாதத்தினிரண்டாம் நாலாங் கணக்கு, பின் கணக்கு: par — ஆதலால், ஆகையால்.

Conséquente, *f.* மாலையிசையினிரண்டாம் பாங்கு.

Conservable, *adj.* காப்பாற்றத் தக்க.

Conservateur, *m.*—trice, *f.* காப்பாற்றுகிற, ஆதரிக்கிற, பாதுகாக்கிற. || *s.* காப்பாற்றுகிறவன், ஆதரிக்கிறவன், — வள், பாதுகாவலன், பரிபாலன், பரிபாலி, விசாரணை —, காவற்காரன் — காரி.

Conservatif, *adj.* காப்பாற்றுகிற.

Conservation, *f.* காப்பாற்றுதல், பரிபாலனம், பாது, — காத்தல், — காப்பு, — காவல், சேமம், பதனஞ் —, பத்திரஞ் செய்தல், நிலைமை, அழியாமை, பதனழியாமை: d'une belle — நன்றாய்க் காப்பாற்றப்பட்ட ; — des hypothèques ஈடுபதிந்த சாதனங்களைக் காப்பாற்றுஞ் சாலை ; — forestière காட்டுக்காவற்காரன் விசாரணை நாடு.

Conservatoire, *adj.* காப்பாற்றுகிற. || *m.* காப்பாற்றுமிடம், சங்கீதமுதலியவற்றின் தர்மப் பள்ளிக்கூடம், அநாதபிள்ளைகளை வளர்க்குமிடம்.

Conserve, *f.* தித்திப்புப் பண்டம், அடைகாய். || தகட்டுப் பெட்டியிற் காப்பாற்றுஞ் சமைத்தபண்டம். || துணைக் கப்பல். || *pl.* பார்வைகாப்பாற்றுங் கண்ணாடி. || கொத்தளத்தினுதரவு: aller de — துணையாய்ப் போதல்.

Conserver, *v. a.* காப்பாற்றுதல், காத்திருத்தல், பாது —, காத்தல், தற்காத்தல், பரிபாலித்தல், காவல் பண்ணுதல், ஓம்புதல், ஆதரித்தல், தாபரித்தல், இழக்காதிருத்தல். || பத்திரம் —, பதனம் —, சேமம் பண்ணுதல், வைத்துக்கொள்ளுதல், நிலைப்பித்தல், நிறுத்துதல்: — une flotte கப்பற் கூட்டத்தைப் பாதுகாத்தல். || se — காப்பாற்ற —, ஆதரிக்கப்படுதல், நிலைத்தல், பதனழியாதிருத்தல், தனக்குப் பத்திரம் பண்ணுதல், தன் சீவனை — சவுக்கியங் காப்பாற்றுதல்.

Considence, *f.* குவியலழுந்திப் போதல்.

Considérable, *adj.* மிகுந்த, கனமான, திரளான, பெரிய, பலத்த, கணிசம் —, முக்கியம் —, மேன்மையான.

Considérablement, *adv.* மிகவும், வெகுவாய்.

Considérant, *m.* நியாயவிவரம், தீர்ப்பின் நியாயம், — முகவுரை. || *part.* பார்த்து, யோசித்து.

Considération, *f.* யோசனை, ஆலோசனை, கவனம், கவனிப்பு, ஆராய்வு, ஆராய்ச்சி, பரிசோதனை, சாவதானம், அவதானம், எச்சரிக்கை, பத்திரம். || நியாயம், முகாந்திரம், காரணம். || எண்ணம், மதிப்பு, கணிசம், கனம், மேன்மை. || தாட்சணை, உபசரணை: avoir beaucoup de — pour மிகவும் —, கனமாய் எண்ணுதல், — மதித்தல் ; homme de peu de — அற்பமனுஷன், அற்பன் ; à ma — என்னைப்பற்றி ;

prendre en —, faire entrer en — யோசித்துப்பார்த்தல், விசாரித்தல்; en —·de பற்றி, குறித்து.

Considérément, *adv.* சாவதானம் —, பத்திரமாய்.

Considérer, *v. a.* கவனித்தல், தூக்கி —, கவனமாய் —, உற்றுப் —, பார்த்தல், நோக்குதல். || யோசித்தல், ஆராய்தல், அவதானித்தல், உசாவுதல், விசாரித்தல், விளக்குதல், விபரித்தல். || மதித்தல், எண்ணுதல், நினைத்தல், கணித்தல், கனமாயெண்ணுதல் : tout bien considéré எல்லாத்தையும் நன்றாய்க் கவனித்து. || se — தன்னைப் பார்த்தல், ஒருவனொருவனை மதித்தல், கவனிக்க —, விசாரிக்கப் படுதல்.

Consignataire, *m.* (வைத்துக்கொள்ள அல்லது விற்க) ஈடாக ஒப்புக்கொண்டவன், காரியக்காரன்.

Consignateur, *m.* ஒப்புவிக்கிறவன், சரக்குகளையனுப்புகிறவன், ஒப்படைக்காரன்.

Consignation, *f.* அடைவு, ஈடு, அடைமானம், ஒப்புவிப்பு, ஒப்படைசெய்தல், ஈடாகவைத்தல், — வைத்த பணத்தொகை, (சரக்குகளை) அனுப்புதல், இடாப்பிற்பதிதல், — எழுதுதல் : — d'amende முன்னாக அபராத பணமீடாக வைத்தல் ; caisse des dépôts et — *ou* les consignations அடைவுகளை வைக்குஞ் சாலை, — இடம், — பெட்டி : ces marchandises sont à la — d'un tel. இந்தச் சரக்குகள் இன்னானுக்கு அனுப்பப்பட்டது.

Consigne, *f.* (காவற்சேவகனுக்கு, தானையத் தலைவனுக்கு, வாசற்காரனுக்கு) இட்ட கட்டளை, ஏவல், குழூஉக்குறி. || காவற்கூடத்துச் சாமான் விபரம். || வெளியே புறப்படவேண்டாமென்னுமாக்கினை. || *m.* *ou* portier consigne பிரவேசிக்கிறவர்களை எழுதுபவன்.

Consigner, *v. a.* (சரக்குகள் முதலியவற்றை) ஈடாக வைத்தல், காரியக்காரனுக்கு அனுப்புதல், இடாப்பிலேபதிதல், — எழுதுதல். || குறித்தல், எழுதுதல், எழுதிவைத்தல். || காவற்சேவகனுக்கு வேண்டிய கட்டளையறிவித்தல், — குழூஉக்குறியிடுதல், கற்பித்தல். || வெளியே புறப்படவிலக்குதல் : je l'ai consigné à ma porte என் வாசலில் நிற்க அவனுக்குக் கற்பித்தேன்.

Consistance, *f.* தடிப்பு, இறுக்கம், உறைவு, அழுத்தம், கடுத்தம், கெட்டித்தனம், உறுதி, உரம், உரப்பு, நிலைமை, நம்பிக்கை, கனம். || அடக்கம், விசாலம்: sans — நிலைமையற்ற, — யின்றி ; prendre de la — உறுதிப்படுதல் ; homme sans — கனமற்ற மனுஷன் ; la — d'une terre ஓர் நிலவிசாலம்.

Consistant, *part.* உறுதி —, ஸ்திரமான, அடங்கிய, கொள்ளுகிற : bien — en bois காடாகிய காணியாட்சி.

Consister, *v. n.* அடங்குதல், அடங்கி —, இருத்தல், நிற்றல், சேர்ந்திருத்தல், ஆதல் : la vertu consiste dans un juste milieu நடுநிலைமையிற் புண்ணியமடங்கியிருக்கும் : son bien consiste en terres அவனாஸ்தி நிலங்களாம் : faire — வைத்தல், உண்டென்றெண்ணுதல்.

Consistoire, *m.* அர்ச். பாப்பானவர் ஆலோசனைச்சங்கம். || புரோட்டெஸ்டாண்டு போதகரின் —, யூதர் சாஸ்திரிகளின் ஆலோசனைக் கூட்டம், — க்கூட்டச்சாலை.

Consistorial, *adj.* ஆலோசனைச் சங்கத்து, — க்கூட்டத்து.

Consistorialement, *adv.* ஆலோசனைச்சங்கத்தில், — கூட்டத்தில்.

Consœur, *f.* சகோதரி, சபைக்காரி, மடத்தாள்.

Consolable, *adj.* ஆறுதலேற்கத்தக்க, — அடையத்தக்க.

Consolant, *part.* ஆறுதலான, — தருகிற, ஆறுதலுக்குரிய : il est — ஆறுதலாயிருக்கின்றது.

Consolateur, — trice, *s. et adj.* தேற்றுகிற, ஆறுதல் செய்கிற, — செய்கிறவன், — சொல்லுகிறவன், தேற்றுகிறவன், — வள், தேற்றரவாளன்.

Consolation, *f.* ஆறுதல், தேற்றரவு, தேற்றம், துயரத்தணிவு, ஆறுதலான வார்த்தை, ஆறுதல் செய்பவன், — வள். || சந்தோஷம், பரிகாரம். || (சில விளையாட்டில்) பகுதி, அபராதம். || débit de — சாராயக்கடை ; fiche de — சில்லறைத் துயரத்தணிவு.

Consolatoire, *adj*. ஆறுதலுக்கான, ஆறுதலுக்குரிய.

Console, *f*. சித்திரக்கம்பி தாங்கி, போதிகைக்கட்டை தாங்குவதற்கு அலங்காரபட்டை, — பிதுக்கம். ‖ (இருசன்னல் நடுவில் வைக்கும்) ஓர்வித மேசை.

Consoler, *v. a*. ஆற்றுதல், தேற்றுதல், ஆறுதல் சொல்லுதல், — செய்தல், — இடுதல், தணித்தல் : se — ஆறுதல் அடைதல், தேறுதல், ஒருவனொருவனுக்கு ஆறுதல் செய்தல், — சொல்லுதல், ஆற்றப்படுதல்.

Consolidable, *adj*. பல —, உறுதிப்படுத்தத்தக்க, — ஆகத்தக்க.

Consolidant, *part. et m*. காயமாற்றுகிற, — ஆற்றுகிறமருந்து, உறுதிப்படுத்துகிற.

Consolidation, *f*. உறுதியாதல், —ப்படுத்துதல், உரமாதல். ‖ காயம் —, ஆறுதல். ‖ அநுபவமுரிமையோடு சேர்தல். ‖ பொதுக்கடனை யுறுதிப்படுத்துதல், — தீர்க்க முதல் நியமித்தல்.

Consolidé, *part*. உறுதிப்பட்ட. ‖ *m*. குறைத்து உறுதிப்பட்ட அரமனைக்கடன். ‖ (இங்கிலீஷ்தேசத்து) அரமனைக்கடன்.

Consolider, *v. a*. உறுதி —, பல —, ஸ்திர —, நிலைப்படுத்துதல், பலப்பித்தல், தேற்றுதல். ‖ (காயத்தை) ஆறுவித்தல், பொருத்துதல், உடைந்ததை இசைத்தல், அநுபவமுரிமையோடே சேர்த்தல். ‖ அரசின் கடனை —, உறுதிப்படுத்தியதைத் தீர்க்க வருமானம் நியமித்தல், — ஏற்படுத்துதல். ‖ se — பல —, கெட்டி —, உரமாதல், ஒருவனொருவனுக்கு உறுதி சொல்லுதல்.

Consommateur, *m*. நிறைவேற்றுகிறவன், நிறைவாக்குகிறவன். ‖ Consommateur, — trice, *s. et adj*. செலவழிக்கிறவன், பக்ஷிக்கிறவன், விலைக்கு வாங்குகிறவன், — வாங்குகிற.

Consommation, *f*. செலவு, செலவானது, செலவழிப்பு, வாங்குதல், நிர்மூலம், தின்னும்பண்டஞ் செலவாதல். ‖ நிர்மூலம், அழிவு. ‖ நிறைவு, நிறைவேற்றம், பூரணம், முடிவு, இறுதி : la production surpasse la — விளைவானது செலவுக்கு மேற்பட்டது, — du mariage விவாக நிறைவேற்றம், சமுசாரிகளின் முதலநுபோகம் ; — des temps, des siècles உலோகமுடிவு.

Consommé, *m*. குழம்புப் பதமான ஆணம். ‖ *part*. தேர்ந்த, உத்தம, முதிர்ந்த, தீர்ந்த, வெகு சாமார்த்தியமுள்ள.

Consommer, *v. a*. செலவழித்தல், செலவாக்குதல், செலவு பண்ணுதல், தன் செலவாக வாங்குதல். ‖ நிறைவாக்குதல், நிறைவேற்றுதல், முடித்தல், தீர்த்தல் : ces confitures consomment beaucoup de sucre அந்தத் தித்திப்பு வெகு சர்க்கரை பிடிக்கும் ; faire — de la viande குழம்புப்பதமாக மாங்கிஷத்தை வேவித்தல். ‖ se — செலவாதல், நிறைவேறுதல், முடிதல்.

Consomptif, *adj*. அழிக்கிற.

Consomption, *f*. செலவு, அழிவு, எரிவு. ‖ மெலிவு, க்ஷயரோகம், கயம், கயரோகம்.

Consonance, *f*. ஒத்திசை, இசைவு, இசை, ஈரோசையொற்றுமை.

Consonant, *adj*. இசைகிற, ஒத்திசையாகிற, ஓசையொற்றுமையான.

Consonne, *f*. மெய் —, செத்தெழுத்து, மெய், ஒற்று, புள்ளி, உடல் : — unie à une voyelle உயிர்மெய் ; les Indiens divisent les consonnes en 3 classes இனம் : les dures வல்லினம் ; les douces மெல்லினம் ; les moyennes இடையினம்.

Consonner, *v. n*. ஒத்திசையாதல்.

Consorts, *m. pl*. பங்காளிகள், கூட்டாளிகள், பாரிசத்தார், கட்சியார்.

Consoude, *f*. ஓர் பூண்டு.

Conspirant, *adj*. ஒரே இலக்கு — நோக்கமுள்ள.

Conspirateur, *m*. பந்துக்கட்டு —, குழப்பக்காரன், இராசத்துரோகி.

Conspiration, *f*. பந்துக்கட்டு, சங்கேதம், புனைசுருட்டு, குழப்பம், இராசத்துரோகம் : faire, former, tramer, machiner, ourdir une—பந்துக்கட்டு பண்ணுதல்.

Conspirer, *v. a*. பந்துக்கட்டு —, புனைசுருட்டு —, குழப்பம் —, சங்கேதம் பண்ணுதல், சதியோசனை செய்தல். ‖ ஒருமிக்க உதவுதல், — முயற்சி செய்தல், ஒரே கருத்தாயிருத்தல், கூடுதல்,

ஒருமித்தல். || *v. a.* ஆலோசித்தல், யோசித்தல், கருதுதல், தேடுதல். || se — யோசிக்க —, கருதப்படுதல்.

Conspuer, *v. a.* மேலே துப்புதல், நிந்தித்தல், அவமானப்படுத்துதல்.

Constable, *m.* (இங்கிலீஷ் தேசத்தில்) ஊர்க்காவற்காரன்.

Constamment, *adv.* நிலைமை —, உறுதி —, திடனாய், சந்தேகமற. || எப்போதும், இடைவிடாமல்.

Constance, *f.* உறுதி, திடம், திடன், தைரியம், ஸ்திரம், ஊக்கம். || நிலைமை, மாறாமை, பொறுமை. || (அல்மஞ்தேசத்தில்) கொன்ஸ்தான்ஸ் நகர், (நன்னம்பிக்கை முனைதேசத்தில்) கொன்ஸ்தான்ஸ் நாடு.

Constant, *adj.* உறுதி —, ஸ்திரம் —, திடம் —, ஊக்கமுள்ள. || நிலைமை —, நிலைவரமான, நிலைநிற்கிற. || மாறாத, அசையாத, பிரமாணிக்கமுள்ள. || நிச்சயம் —, திட்டமான, சந்தேகமற்ற.

Constantine, (அல்ஜேரிதேசத்தில்) கொன்ஸ்தாண்டீன்நகர்.

Constantinople, (துர்க்கிதேசத்தில்) கொன்ஸ்தாண்டினோபொலிநகர்.

Constatation, *f.* உருசுப்படுத்துதல்.

Constater, *v. a.* உருசு —, நிச —, நிச்சயப்படுத்துதல், மெய்ப்பித்தல், நிச்சயித்தல், சாதனத்தில் எழுதி —, எழுதிவைத்தல். || se — உருசுப்படுதல், நிச்சயப்படுதல்.

Constellation, *f.* தாராகணம், இராசி, நக்ஷத்திரமாலை, — க்கூட்டம்.

Constellé, *adj.* ஒரு தாராகணத்தின்கீழ்செய்த.

Conster, *v. n.* நிச்சயமாதல், விளங்குதல்.

Consternation, *f.* வெகுபயம், திகில், பயங்கரம், ஏக்கம், திகைப்பு, கலக்கம், பிரமிப்பு, கலக்கடி, திடுக்காட்டம்.

Consterné, *part.* திகிலுள்ள, ஏங்கிய, கலக்கடிபட்ட : être— பிரமித்தல், திகைத்தல், ஏங்குதல்.

Consterner, *v. a.* வெகுபயப் —, பயங்கரப் —, திகிற்படுத்துதல், மிகுபயமுறுத்துதல், பயத்தாற் கலங்கடித்தல், — கலக்குதல்.

Constipant, *part.* வயிறிறுக்குகிற.

Constipation, *f.* மலச்சிக்கு,— பந்தம், — க்கட்டு, வயிறிறுகிய தன்மை, கற்குடல்.

Constipé, *part.* மலபந்தமான, வயிறிறுகிய.

Constiper, *v. a.* மலம்பந்தித்தல், — வரட்டுதல், வயிறிறுக்குதல், மலச்சிக்காக்குதல். || se — மலம் —, வயிறிறுகுதல்.

Constituant, *adj.* அவசியமுள்ள பங்காகிய, பங்கான, திட்டப் —, ஏற்படுத்துகிற, ஏற்பாடு —, ஸ்தாபிக்கிற : parties — du corps சரீரத்தினவசியமான பங்குகள், — கூறுகள் ; assemblée — *ou* la Constituante அரசின் மூலப் பிரமாணம் ஏற்படுத்துங் கூட்டம். || *m.* ஷை கூட்டத்தான், காரியக்காரனை நியமிக்கிறவன், ஒருவனுக்கு வருஷாந்தரவருமானம் ஏற்படுத்துகிறவன்.

Constitué, *part.* ஏற்படுத்தப்பட்ட, தேசமுறைமையுள்ள, தன்மை —, சரீரகுணம் —, இயல்பு —, சுபாவமுள்ள.

Constituer, *v. a.* ஸ்தாபித்தல், ஏற்படுத்துதல், வைத்தல், உண்டுபண்ணுதல், நியமித்தல். || குறித்தல் || ஏற்பாடு ஸ்தாபித்சல், ஒழுங்குபடுத்துதல், பங்காதல், உண்டாக்குதல், ஆயிருத்தல், ஆதல் : — un délit குற்றமாயிருத்தல் ; — quelqu'un en frais, en dépenses ஒருவன் செலவு செய்வதற்குக் காரணமாதல் ; — une nation ஓர் சனத்தை ஒழுங்குபடுத்துதல், அதற்கு முறைமையேற்படுத்துதல் ; — prisonnier சிறைப்படுத்துதல், — ச்சாலையிற்போடுதல். || se — தங்களை ஏற்படுத்தல், — தன்னை ஸ்தாபித்தல், — வைத்தல், தனக்கு ஏற்பாடு — மூலப் பிரமாணம் ஸ்தாபித்தல், ஒழுங்குபடுதல், ஏற்படுதல் ; se — prisonnier தன்னைச் சிறையாக ஒப்பித்தல் ; se — en dépense செலவுசெய்ய ஏற்படுதல்.

Constitutif, *adj.* ஏற்படுத்துகிற, பங்கு —, மூலமான, உரிமை ஸ்தாபிக்கிற.

Constitution, *f.* தன்மை, குணம், இயல்பு, அந்தஸ்து, நிலை, சுபாவம். || சரீரகுணம், — இயல்பு. || உற்பத்தி, உருவாதல், இசைப்பு. || கட்டளை, கற்பனை, ஒழுங்கு, ஏற்பாடு. || இராச்சியமூலப் பிரமாணம்,—முறைமை. || வருமானஸ்தாபிப்பு, காரியக்காரனாக நியமிப்பு.

Constitutionnaire, *m.* உனிஜெனித்துஸென்னும் அர்ச். பாப்புவின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டவன்.

Constitutionnalité, *f.* அரசின் மூலமுறைமைக் கொத்ததன்மை.

Constitutionnel, *adj.* அரசின் மூலமுறைமையுள்ள, ஷை முறைமைக்கு ஒத்த, — ஏற்ற, — அடுத்த, அதைச்சேர்ந்த. || *s.* ஷை முறைமையநுசாரி, — க்கட்சியான்.

Constitutionnellement, *adv.* அரசின் மூலமுறைமையின்படியே.

Constricteur, *adj.* இறுச்குகிற: || *m. ou* muscle — இறுக்குகிற நரம்பு.

Constriction, *f.* உறுப்புகளினிறுக்கம், — இழுப்பு.

Constringent, *adj.* இறுக்குகிற.

Constructeur, *m.* கட்டுகிறவன், உண்டாக்குகிறவன்.

Construction, *f.* கட்டுதல், கட்டுஞ்சாஸ்திரம், — வேலை, கட்டுக்கோப்பு. || இசைப்பு, ஒழுங்கு, வகுப்பு, நடை, சொல்லொழுங்கு, வசனநடை. || இரோகாகிருதி: faire la — d'une phrase ஓர் வசனசொற்களை இயல்பானவொழுங்குபடுத்துதல்; — d'une maison வீடுகட்டுகிறவேலை, அதிலுள்ள அறைகளின் வகுப்பு.

Construire, *v. a.* கட்டுதல், எழுப்புதல், உண்டு —, பண்ணுதல், ஏற்படுத்துதல். || கிரமப் —, ஒழுங்குபடுத்துதல், வகுத்தல். || வரைதல், எழுதுதல்:—un triangle முக்கோணவடிவு வரைதல்.

Consubstantialité, *f.* ஓரேசுபாவத்துவம், சுபாவத்தினொருமை.

Consubstantiel, *adj.* சுவாப ஒருமையுள்ள, ஓரேசுவாபமுள்ள.

Consubstantiellement, *adv.* ஓரேசுவாபமாய்.

Consul, *m.* கொன்சுலென்னுமதிகாரி. || (அந்நியதேசங்களில்) வர்த்தக காரியங்களை விசாரிக்குமுத்தியோகஸ்தன்.

Consulaire, *adj. et s. m.* கொன்சுலதிகாரியின், ஷை அதிகாரியாண்ட, — யுண்டான, — யாயிருந்த, — யாயிருந்தவன், — யாயாண்டவன்: gouvernement — கொன்சு லதிகாரிகளின் ஆளுகை.

Consulairement, *adv.* கொன்சுலதிகாரியாய்.

Consulat, *m.* கொன்சுலதிகாரி பட்டம், — அதிகாரம், — உத்தியோகம், அதைச் செலுத்துங்காலம், கொன்சுலதிகாரிகளினாளுகை, அது நடந்தகாலம். கொன்சுலுத்தியோகஸ்தன் வீடு, — கச்சேரி, அதிலே அலுவலாயிருக்கிறவர்கள்.

Consultant, *adj.* ஆலோசனை கொடுக்கிற, — கேட்கிற.

Consultat, *m.* அர்ச். பாப்புவின் ஆலோசனைக்காரன், — காரியஸ்தன், ஆலோசனைச்சங்கத்துத் தீர்மானங்களின் விவரம், — கணக்கு.

Consultatif, *adj.* ஆலோசனை சொல்லும்: voix — ஆலோசனை சொல்லுஞ் சுதந்தரம்.

Consultation, *f.* ஆலோசனை, யோசனை, உசாவுதல், ஆலோசனையின் விபரம்.

Consulte, *f.* ஆளுகிறசங்கம், — கூட்டத்தார்.

Consulter, *v. a. et n.* ஆலோசனை —, யோசனை —, புத்திகேட்டல். || ஆராய்தல், பரிசோதித்தல், சோதித்தாராய்தல், ஆராய்ந்து —, பார்த்தல், ஆலோசித்தல், யோசித்தல், உசாவுதல், ஆலோசனை —, யோசனைசெய்தல்: — un médecin வைத்தியனிடத்தில் ஆலோசனைகேட்டல்; — les livres புஸ்தகங்களையாராய்ந்து பார்த்தல்: se — ஆலோசித்தல், யோசித்தல், ஆராய்ந்துபார்த்தல், கேட்கப்படுதல்.

Consulteur, *m.* ஆலோசனைக்காரன், — காரனாகிய சாஸ்திரி.

Consumable, *adj.* எரிய —, அழிக்கத்தக்க.

Consumant, *part.* எரிக்கிற, அழிக்கிற.

Consumé, *part.* செலவான, எரிந்த, அழிந்த, மெலிந்த, சிதைந்த.

Consumer, *v. a.* செலவழித்தல், செலவுபண்ணுதல், அழித்தல், சிதைத்தல், நாசப்படுத்துதல். || எரித்தல், சுட்டெரித்தல், தகித்தல். || முழுதுந் தின்றல், விழுங்குதல், வீணாய்ப்போக்குதல். || மெலிவித்தல், அரிதல், இளைப்பித்தல், வாடுவித்தல். || se—அழிதல், கெடுதல், செலவாதல், சிதைதல், நாசமாதல், கெட்டுப்போதல், தன்னாஸ்தியைச் செலவழித்தல், மெலிதல், இளைத்தல், இலயித்தல், வாடுதல், வீணாய் வருந்துதல், — பிரயாசப்படுதல்; se—d'ennui சலிப்பால் மெலிதல்; se—en procès வழக்

குகளில் தன் ஆஸ்தியைச்செலவழித்தல்.

Contact, *m.* பரிசம், பரிசனம், ஊறு, தொடுதல், கூடுதல், சம்பந்தம், பழக்கம்.

Contadin, *m.* குப்பக்காட்டான்.

Contagieux, *adj.* தொற்று, தொத்துவான *ou* தொற்றுவான, தொற்றுள்ள, தொற்றுகிற, ஒட்டுகிற, பற்றுகிற. || விசேஷமுள்ள, தொற்றுவியாதிபோலேயாகிய : maladie — தொற்றுவியாதி ; l'air — du monde விஷமுள்ள உலகப்பழக்கம்.

Contagion, *f.* தொத்து —, தொற்றுநோய், — வியாதி, தொத்து, தொற்று, பரிசத்தால் —, பழக்கத்தால் பற்றுந்தின்மை, — பரம்புங் கெடுதி : la peste se communique par la — தொற்றினால் கொள்ளைநோய் பற்றும் ; la — des mauvaises mœurs தொற்றுநோய்போலே பழக்கத்தால் பரம்புந் துர்நடத்தை.

Contagioniste, *adj. et m.* ஓர் வியாதியைத் தொற்றுநோயென்கிற, — என்கிறவன். [டுந்துத்து.

Contailles, *adj. f. pl.* soies—பட்

Contamination, *f.* தீட்டு, அசுசி.

Contaminer, *v. a.* தீட்டாக்குதல், அசுசிப்படுத்துதல், தீண்டுதல்.

Conte, *m.* கதை, கட்டுகதை, சந்தோஷமான பேச்சு, அபத்தம், புரளி, வீண்கதை : — gras அதப்பியக்கதை ; — fait à plaisir கட்டுகதை.

Contemplateur, *m.* — trice, *f.* தியானி, தியானவான், யோகி, தியானிக்கிறவன், — வள்.

Contemplatif, *adj.* தியானிப்புள்ள, தியானியாகிய, தியானத்துக்கடுத்த : vie — தியானசீவியம் : extase — தியானத்திலாகிற பரவசம். || *pl. m.* தியானிகள், யோகிகள்.

Contemplation, *f.* தியானம், தியானிப்பு, யோகம், உற்றுப்பார்த்தல், நோக்குதல்.

Contemplativement, *adv.* தியானயோசனையாய்.

Contempler, *v. a.* உற்றுப்பார்த்தல், நோக்குதல், தரிசித்தல். || தியானித்தல், யோகித்தல், யூகித்தல், அநுசந்தித்தல். || se — பிரியத்தோடே தன்னை நோக்குதல்.

Contemporain, *adj.* ஒரே —, சககாலத்து, — காலமுள்ள, அந்த —, ஒரே காலத்திலுள்ள, — இருந்த : — des Apôtres அப்போஸ்தலர் காலத்திலிருந்த ; historiens — தங்கள்காலத்துச் சரித்திராசரியர். || *s.* சககாலவாசி, ஒரே காலத்திற் சீவிக்கிறவன், — வள்.

Contemporanéité, *f.* ஒரேகாலத்துவம், சமானகாலம், — காலியம், — காலீனம்.

Contempteur, *m.* நிந்திக்கிறவன்.

Contemptible, *adj.* நிந்தைக்குரிய.

Contenance, *f.* அளவு, விசாலம், விரிவு. || சாயல், நிலை, பார்வை, நோக்கு, நடை, சாடை, புறத்தி, தோற்றம், முகச்சாயல் ; servir de — நல்ல நிலைக்கு உதவுதல் ; faire bonne — திடமாய் நிற்றல், தைரியங்காட்டுதல் ; perdre — கலங்குதல், நிலை —, தைரிய மற்றுப்போதல். [அடக்கும்பொருள்.

Contenant, *part.* கொள்ளுகிற. || *m.*

Contendant, *adj. et m.* போட்டிசெய்கிற, — க்காரன், எதிரி, கூட நாடுகிற, — நாடுகிறவன்.

Contendre, *v. n.* தர்க்கஞ் செய்தல்.

Contenir, *v. a.* கொள்ளுதல், பிடித்தல், கொண்டிருத்தல். || அடக்குதல், நிறுத்துதல், மறித்தல், தடுத்தல், தணித்தல், கீழ்ப்படுத்துதல், அமர்த்துதல் : — deux mesures இருபடி கொள்ளுதல்; — le peuple சனத்தையமர்த்துதல் ; — la colère கோபமடக்குதல். || se — நிற்றல், அடங்குதல், அமர்தல், தனக்குமட்டுகட்டுதல், தன்கோபத்தை —, தன்னையடக்குதல்.

Contens, *m.* பிராது.

Content, *adj.* சந்தோஷம் —, திருப்த்தி —, பிரியமுள்ள, மனத்திருப்த்தி —, மனோரம்மியமான, போதுமென்றிருக்கிற, கனமாய் எண்ணுகிற : — de பேரில் சந்தோஷப்படுகிற ; non — de, peu—de போதாதென்னுதல் ; être — de soi தன்னைக்குறித்துச் சந்தோஷப்படுதல், — க்கனமாய் எண்ணுதல்.

Contentement, *m.* சந்தோஷம், சந்துஷ்டி, மனத்திருப்த்தி, மனோரம்மியம்.

Contenter, *v. a.* சந்தோஷ —, பிரியப்படுத்துதல், மனத்திருத்தி —, மனோ

ரம்மியம் —, திருத்தி —, நிறைவாக்குதல், சந்தோஷிப்பித்தல், ஆசிப்பது —, சந்தோஷங்கொடுத்தல், குறை —, ஆசைதீர்த்தல், சரி —, பிரியப்படுதல். || அமர்த்துதல், நிறைவேற்றுதல். || se — திருப்த்தியாதல், — அடைதல், பிரியப்படுதல், தன்னாசை நிறைவேற்றுதல், போதுமென்றிருத்தல்.

Contentieusement, *adv.* தருக்கம் —, மூர்க்கமாய், வழக்காடி.

Contentieux, *adj.* தர்க்க —, வழக்குப்பிரியமுள்ள, தருக்கவாதி. || வாக்குவாதம் —, வழக்கில் —, சந்தேகமுள்ள, தர்க்கத்துக்கேதுவான. || *m.* வழக்குக்காரியங்கள், — க்காரியங்களை விசாரிக்குமுத்தியோகஸ்தர்.

Contentif, *adj.* பிடிக்கிற, நிறுத்துகிற, உறுதிப்படுத்துகிற.

Contention, *f.* மிகுந்த —, மகாகவனம், — பிரயாசம். || தருக்கம், சண்டை, வாக்குவாதம். || தர்க்கப் பற்றுதல், உற்சாகம், வேகம்.

Contenu, *m.* உட் —, கொண்டது, அடங்கினது, அடக்கம், சங்க்ஷேபம். || *part.* அடங்கின.

Conter, *v. a.* சொல்லுதல், விவரித்தல், என்னல், உரைத்தல் : — des sornettes, en—,en—de belles வீண்காரியங்களை —, அபத்தங்களைச் சொல்லுதல் ; — des fagots பொய்களைச் சொல்லுதல். || se — சொல்லப்படுதல், ஒருவனொருவனுக்குச் சொல்லுதல்.

Conterie, *f.* கண்ணாடிப்பண்டம், — மணி.

Contestable, *adj.* தருக்கிக்கத் தக்க, ஆக்ஷேபனைக்குரிய.

Contestant, *part.* வழக்காடுகிற, தருக்கிக்கிற. || *pl. m.* வழக்காளிகள்.

Contestation, *f.* தருக்கம், வாக்குவாதம், சண்டை, வாதம், விவாதம், ஆக்ஷேபனை.

Contester, *v. a.* ஆக்ஷேபித்தல், தர்க்கித்தல், உரிமை—, நியாயம் மறுதலித்தல், வாக்குவாதஞ் செய்தல், — வழக்காடுதல், எதிர் நியாயம் —, எதிர் பேசுதல், சண்டைபிடித்தல். || se — தருக்கிக்கப்படுதல், ஒருத்தனொருத்தனுக்கு மறுத்தல், — ஆக்ஷேபித்தல்.

Conteur, *m.* — euse, *f.* கதை —, சொல்பவன்,—வள் : — de sornettes அபத்தங்களைச் சொல்ல வழக்கமுள்ளவன் ; — de fleurettes இச்சகப் பேச்சுக்காரன்.

Contexte, *m.* தொடர்வசனம், வசனத் —, தொடர்ச்சி, முன்பின்னுள்ள வாக்கியங்கள்.

Contexture, *f.* இசைப்பு தொடர்பு, பொருத்தம்.

Contignation, *f.* மச்சு தாங்குங் கைம்மர —, மரச்சேர்க்கை.

Contigu, *adj.* அடுத்த, சேர்ந்த, அயல் —, அருகான, சார்ந்த : être — அருகாய் —, அடுத்திருத்தல்.

Contiguïté, *f.* அடுத்ததன்மை, கிட்டுமானம், அயல், அருகு, அண்டை.

Continence, *f.* விரதம், கற்பு, நிறை, இச்சையடக்கம்.

Continent, *adj.* விரதம் —, நிறை —, கற்பு —, மட்டுள்ள, இச்சையடக்கமுள்ள. || இடைவிடாத. || *m.* கண்டம், தீவல்லாத —, பெரியதேசம், வருடம், ஐரோப்பாகண்டம்.

Continental, *adj.* கண்டத்து, கண்டத்துக் கடுத்த, தீவல்லாத தேசத்து.

Contingence, *f.* சம்பவம், தற்செயல், சமயம் : angle de — நேர்வரியும் வளைந்தவரியுஞ் —, இருவளைந்த வரிசெய்யுங்கோணம்.

Contingent, *adj.* நிச்சயமற்ற, தற்செயல் —, சந்தேகமான. || ஒவ்வொருத்தருக்குவீதமாகிய, — ஆகும். || *m.* வீதம், பங்கு, ஒவ்வொரு ஜில்லா அனுப்பவேண்டிய புதுச்சேவகர் கணக்கு.

Continu, *adj.* இடைவிடாத, — யருத, விடாத, ஓயாத, முடியாத, தொடர்ச்சியான, துடருகிற, அகண்ட, பிரியாத. || *m.* தொடர்வானது, பிரிக்கத்தக்கது : à la continue நாள் போக, — வட்டத்திலே.

Continuateur, *m.* துடர்ந்து செய்கிறவன்.

Continuation, *f.* துடர்தல், துடர்ச்சி, துடர்ப்பு, துடர்ந்து செய்தது,—கட்டினது. || ஓயாமை, ஒழியாமை, விடாமை, விடாதவரிசை, நீடிப்பு.

Continuel, *adj.* இடைவிடாத, ஓயாத, ஒழியாத, விடாத, தொடர்ச்சியான.

Continuellement, *adv.* இடைவிடா

மல், ஓயாமல், ஒழியாமல், நிலைமையாய், எந்நேரமும்.

Continuer, *v. a.* பின்றொடர்தல், தொடர்தல், துடர்தல், ஓயாமல் —, துடர்ந்து நடப்பித்தல், — செய்தல், — சொல்லுதல், — அநுசரித்தல், — கட்டுதல். || நிலைமைப்படுத்துதல். || நீட்டுதல், நீட்டித்தல், நீளிப்பித்தல், நிலைப்பித்தல் : — un bail குத்தகையை நீளிப்பித்தல், — நிலைமைப்படுத்துதல் : — à lire, sa lecture தொடர்ந்து வாசித்தல் ; — quelqu'un dans un emploi ஒருவனையுத்தியோகத்திலே நிலைப்பித்தல். || *v. n. ou* se — ஓயாது —, ஒழியாதிருத்தல், துடர்ந்துவருதல், — நடத்தல், நிலைத்தல், நீளித்தல், நீடுதல்.

Continuité, *f.* துடர்வு, துடர்ச்சி, ஓயாமை, ஒழியாமை, இடை —, விடாமை, நெடுமை, நீடிப்பு, பிரியாத விசைவு : solution de — பிரிவு, விரிவு, இடை.

Continûment, *adv.* துடர்ச்சியாய், இடைவிடாமல், ஓயாமல்.

Contondant, *adj.* நசிக்கிற, நொறுக்குகிற.

Contorsion, *f.* திருகு, முறுக்கு ; திருகலான —, சேஷ்டை, கோரணி.

Contour, *m.* சுற்று, சுற்றளவு, வளைவு, சுழற்சி, எல்லைமானம், சுற்றெல்லை, மடிப்பு, நெளிவு.

Contourné, *part.* திருகின, இயல்பற்ற.

Contournement, *m.* சுற்று, நெளிவு ; *ou*

Contourner, *v. a.* வடிவு —, வளைவாக்குதல், சுற்றுவளைதல், திருகுதல், திரித்தல், முறுக்குதல். || se — வளைதல், நெளிதல், கோணுதல்.

Contractant, *part.* ஒப்பந்தஞ்செய்கிற. || *m. pl.* ஒப்பாசாரஞ் செய்கிறவர்கள்.

Contractation, *f.* சுருங்குதல்.

Contracte, *adj.* குறுகிய , சுருங்கிய. || *m.* உயிர்க் குறுக்கமுள்ள —, குறுகியசொல்.

Contracter, *v. a.* ஒப்பந்தம் —, ஒப்பாசாரஞ் செய்தல், உடன்படுதல். || பற்றி —, கட்டி —, கொள்ளுதல், அடைதல், படுதல், சுமத்தல், செய்தல், பண்ணுதல், பிடித்தல், பற்றுதல், வாங்குதல். || சுருக்குதல், ஒடுக்குதல், நெருக்குதல், குறுக்குதல், தொகுத்தல் ; — des liaisons பழக்கமாதல் ; — des dettes கடன்படுதல் ; — un goût ஒரு ருசிகொள்ளுதல். || se — சுருங்குதல், ஒடுங்குதல், திரைதல், குறுகுதல், தொகுதல், கட்டிக்கொள்ள —, கொள்ள —, பிடிக்கப்படுதல், வருதல், ஆதல்.

Contractif, *adj.* சுருக்குகிற, குறுக்குகிற.

Contractile, *adj.* சுருங்கத்தக்க.

Contractilité, *f.* சுருங்குந்தன்மை.

Contraction, *f.* சுருக்கம், ஒடுக்கம், இறுக்கம், திரைதல். || குறுக்கம், தொகை.

Contractuel, *adj.* ஒப்பந்தத்திலுள்ள.

Contracture, *f.* விறைப்பு, வளையாமை, கடினம். || சுருக்கம், குறுக்கம், நெருக்கம்.

Contradicteur, *m.* எதிர்த்து —, எதிர்பேசுகிறவன், எதிர்வாதி, மறுப்பவன், எதிரி, விரோதி : — légitime எதிர்பேசத் தத்துவமுள்ளவன்.

Contradiction, *f.* எதிர் —, குறுக்குப்பேச்சு, மறுப்பு, ஆக்ஷேபனை. || விரோதம், எதிரிடை, எதிர்ப்பு, தடை, விக்கினம். || ஒவ்வாமை, ஒத்திராமை, இசையாமை, பொருந்தாமை : esprit de — எதிர்புத்தி ; impliquer — ஒவ்வாதிருத்தல்.

Contradictoire, *adj.* ஒவ்வாத, எதிர் —, எதிரிடை —, விரோதமான, இருதிறத்தாரையுங் கேட்டுத்தந்த, —ச்செய்த.

Contradictoirement, *adv.* ஒவ்வாமல், எதிரிடையாய், இருதிறத்தாரையுங்கேட்டு.

Contraignable, *adj.* கட்டாயப்படத்தக்க.

Contraindre, *v. a.* கட்டாயம் —, பலவந்தம் —, வலுமைசெய்தல், — பண்ணுதல், வலுமையாற் சம்மதிப்பித்தல், — உடன்படுத்துதல், கட்டாயப்படுத்துதல். || நெருக்குதல், அடக்குதல், வருத்தப்படுத்துதல், இடைஞ்சல் —, இக்கட்டுசெய்தல். || se — தன்னையடக்குதல், — கட்டாயப்படுத்துதல், வருந்துதல், அடங்குதல், நெருங்குதல், தன்குணத்தை மறைத்தல்.

Contraint, *part.* கட்டாயப்பட்ட, பலவந்தம் —, கட்டாயமான, வருத்தம் —, நெருக்கம் —, இறுக்கமுள்ள, — ஆன.

Contrainte, *f.* கட்டாயம், பலவந்தம், வலுமை, பலாத்காரம், வருத்தம், அடக்கம், ஒடுக்கம், நெருக்கம், இறுக்கம், இக்கட்டு, நெருக்கிடை : — par corps சிறைச்சாலையிற்போடுவித்தல், — போடுவிக்குங்கட்டளை, — போடுவிக்குஞ்சுதந்திரம்.

Contraire, *adj.* விரோதம் —, எதிர் —, எதிரிடை —, விகற்பம் —, விபரீதமான, எதிர்க்கிற, எதிர்நிற்கிற. || விரோதி, எதிரி. || ஒவ்வாத, பொருந்தாத, இசையாத. || கேடு —, தீது —, தின்மையுள்ள. || *m.* விரோதமானது, எதிரிடை, மற்றைப்புறம் : les — எதிரானவைகள் ; au —, tout au —, அதற்கு விரோதமாய்.

Contrairement, *adv.* விரோதம்—, விகற்பம் —, ஒவ்வாமையாய்.

Contralto, *m.* ஸ்திரீயின் மத்திம உச்சம், — உச்சம் பாடுகிறவன், ஆரோசை.

Contrapontiste, *m.* பல பாட்டினிசைவு எழுதுகிறவன்.

Contrariant, *part.* விரோதகுணமுள்ள, விரோதம் —, எதிர் —, தடை —, தொந்தரையான, இடைஞ்சலுள்ள.

Contrarier, *v. a.* விரோதித்தல், எதிர்த்தல், எதிர்த்துப்பேசுதல், எதிரிடை —, இடைஞ்சல் —, விக்கினம் பண்ணுதல், தடுத்தல், மறுத்தல். || கஸ்தி —, சலிப்பு —, தொந்தரை பண்ணுதல், — ஆதல். || se — விரோதமாய் —, ஒவ்வாமல் —, பொருந்தாதிருத்தல், ஒருவனொருவனை விரோதித்தல்.

Contrariété, *f.* விரோதம், எதிர், எதிரிடை, பொருந்தாமை, முரண்டு. || தடை, விக்கினம். || தொந்தரை, இடைஞ்சல், கஸ்தி, கஸ்திக்குரியகாரியம்.

Contrastant, *part.* எதிரான.

Contraste, *m.* விரோதம், எதிரிடை, விகற்பம், வித்தியாசம், முரண்.

Contraster, *v. a.* எதிராக —, எதிர்வைத்தல், வேற்றுமை தோற்றுவித்தல். || *v. n.* வித்தியாசம் —, எதிராதல், விரோதமாய் — பொருந்தாதிருத்தல்.

Contrat, *m.* ஒப்பாசாரம், ஒப்பந்தம், உடன்படிக்கை, முறி, ஒட்டம். || (விளையாட்டில் பத்து நெடுங்கட்டை பெறுகிற) சதுரக்கட்டை.

Contravention, *f.* மீறல், மீறுதல், தப்பு, விரோதம்.

Contre, *prép.* விரோதமாய், எதிராக, எதிரிடை —, விகற்பமாய். || கிட்ட, அருகில் : dix chances — une ஒன்றுக்குப் பத்து அதிஷ்டம் ; tout —, ci—, அருகில், கிட்ட. || *m.* எதிர் நியாயம் : en tout il y a le pour et le — எல்லாத்திலும் உள் நியாயங்களும் எதிர் நியாயங்களுமுண்டு. தந்தக்குண்டின் எதிர்தாக்கு. || சேர்க்கைச்சொற்களில் contre என்பது எதிர் — விரோதம் என்றர்த்தமாம். [சாலை.

Contre-allée, *f.* எதிர்பக்கத்துச்

Contre-amiral, *m.* கப்பற்கூட்டத்து மூன்றாந்தலைவன், அவன் கப்பல்.

Contre-appel, *m.* எதிர் —, இரண்டாமழைப்பு, எதிர் சூது.

Contre-approches, *f. pl.* Contre-attaque, *f.* முற்றிக்கையிடப்பட்டவர்களின் எதிர்வேலை, — எதிரலங்கம்.

Contre-balancer, *v. a.* சமநிறை —, சரிபாரமாக்குதல், சரிப்படுத்துதல், எதிரிடை —, எதிர்பாரமாதல், நிரவுதல், நிகர்த்தல், ஒப்பாதல். || se — சமநிறையாதல், நிகராயிருத்தல்.

Contrebande, *f.* விலக்கப்பட்ட —, கள்ளவியாபாரம், — சரக்கு : être de — கள்ளத்தனமாயிருத்தல்.

Contrebandier, — ère, *s.* கள்ளவியாபாரி.

Contre-bas (en), *adv.* மேலேயிருந்துதாழ, கீழாக, கொஞ்சங்கீழே.

Contrebasse, *f.* கீழ்மந்தவிசை.

Contrebassiste, *m.* கீழ்மந்தவிசை பாடுகிறவன்.

Contre-batterie, *f.* எதிர் பீரங்கி, எதிருபாயம், எச்சரிக்கை. [மாய்.

Contre-biais (à), *adv.* எதிர்பக்க

Contre-bittes, *f. pl.* நங்கூரக் கயிறுகட்டிய கட்டைதாங்கி.

Contre-bon, *m.* எதிர்சீட்டு.

Contre-boutant, *m.* உதைகால், — கட்டை : mur — உதைசுவர்.

Contre-bouter, *v. a.* உதைகால் போடுதல், — கொடுத்தல்.

8463

Contre-brodé, *m.* வெள்ளை கறுப்புள்ள பளிங்குமணி.

Contre-calquer, *v. a.* எதிர்புறமாக பாவனை எழுதுதல் : se—ஷை பாவனை எழுதப்படுதல். [பங்கு.

Contre-carène, *f.* ஏராவுக் கெதிர்

Contrecarrer, *v. a.* எதிர்த்தல், விரோதித்தல், தடுத்தல். ‖ se — ஒருவனொருவனை விரோதித்தல்.

Contre-charge, *f.* எதிர்பாரம்.

Contre-châssis, *m.* எதிர்சட்டம்.

Contre-charme, *m.* எதிர் சூனியம்.

Contre-clef, *f.* மையக்கல்லின் பக்கத்துக்கல், — கல்லுக்கடுத்தகல்.

Contre-cœur, *m.* அடுப்பினிருப்புத்தகடு : à—வெறுப்பாய், இஷ்டமின்றி.

Contre-coup, *m.* எதிர்தாக்கு, எதிர்பக்கத்திலான நசிப்பு. ‖ சம்பவத் —, தொடர்ச்சி, பலிப்பு.

Contre-courant, *m.* குறுக்கான—, எதிர் நீரோட்டம். [து, அதனிராகம்.

Contredanse, *f.* இலகுவான கூத்

Contre-dater, *v: a.* பக்கத்தில் வேறே தேதிபோடுதல், தேதிமாற்றுதல்.

Contre-dégagement, *m.* Contre-dégager, *v. a.* *ou* se—எதிராளிபோலே தன் கத்தியைத் தடையறவிடுத்தல்.

Contre-digue, *f.* அணையைப் பலப்படுத்தும் வேறோரணை.

Contredire, *v. a.* எதிர்த்துப் பேசுதல், விரோதித்தல், மறுத்தல், ஆக்ஷேபித்தல், விரோதஞ்செய்தல், — ஆயிருத்தல், மீறுதல், எதிர் நியாயங்களையெழுதுதல். ‖ se — தன்னோடொவ்வாமற்பேசுதல், — நடத்தல், விரோதமாய் —, ஒவ்வாதிருத்தல், ஒவ்வாதகாரியங்களைப் பேசுதல், — செய்தல்.

Contredisant, *part.* எதிர்பேச்சுப்பிரியம் —, விரோதபுத்தியுள்ள, எதிர் நியாயங்களையெழுதுகிற, — சொல்லுகிற. ‖ s. எதிர்பேச்சுக்காரன்.

Contredit, *m.* மறுமொழி, எதிர்பேச்சு, — நியாயம்: sans — சந்தேகமற, நிச்சயமாய்.

Contrée, *f.* தேசம், நாடு, சீமை.

Contre-échange, *m.* பண்ட—, கைம்மாற்று.

Contre-enquête, *f* எதிர்விசாரணை.

Contre-épaulette, *f.* குஞ்சமற்றகிம்புரி.

Contre-épreuve, *f.* பிழைதிருத்தப்படம், சரவையான பாவனை. ....tirer une — ஷை படம் பதிப்பித்தல். ‖ எதிர் யோசனைபேரில் ஆலோசனை கேட்டல், எதிர்வாக்கியச்சோதனை.

Contre-épreuver, *v. a.* பிழைதிருத்தப்படம் பதித்தல். ‖ se — ஷை படம்பதிதல்.

Contre-espalier, *m.* சுவரிற்படர்ந்த எதிர்செடிவரிசை.

Contre-étrave, *f.* முன்னணியக்கட்டையை ஏராவோடு சேர்க்குமரக்கட்டை.

Contre-expertise, *f.* பரிசோதனை செய்யப்பட்ட காரியங்களுக்கு மேல் பரிசோதனை.

Contrefaçon, *f.* போலி, — ஆன பொருள், கள்ளப்பாவனை, *ou*—d'un livre போலியச்சடிப்பு,—யான புத்தகம்.

Contrefacteur, *m.* போலியாள், போலிசெய்கிறவன், — யாய் அச்சடிக்கிறவன். [கள்ளப்பாவனை.

Contrefaction, *f.* போலி, சாயல்,

Contrefaire, *v. a.* போலி செய்தல், பாவனை —, போலப்பண்ணுதல், கண்டு —, பாவித்தல், கேலிக்குரிய பாவனை —, சாயல் —, வேஷங் காட்டுதல், கள்ளத்தனம் —, கபடுபண்ணுதல், வேஷமிடுதல், மாறுபடுத்துதல், மாற்றுதல், அவலக்ஷணமாக்குதல் : — l'écriture எழுத்துப் போலிசெய்தல் ; — l'homme de bien நாணயவான் வேஷம் போடுதல். ‖ se — தன்னைமாறுபடுத்துதல், — யவலக்ஷணமாக்குதல், தன் குணமறைத்தல், வேஷமிடுதல், — காட்டுதல், போலியாக்க —, பாவிக்கப்படுதல், போலியாதல்.

Contrefaiseur, *m.* போலிசெய்கிறவன், பாவனைசெய்கிறவன், — காட்டுகிறவன்.

Contrefait, *part.* போலியான. ‖ அந்தங்கெட்ட, அவலக்ஷணம் —, ஊனமான. [— உத்திரம்.

Contre-fiche, *f.* குறுக்குவிட்டம்,

Contre-finesse, *f.* எதிர் சூக்ஷம்.

Contrefort, *m.* உதை —, அணைசுவர், உதை —, முட்டுக்கால்.

Contre-fossé, *m.* கோட்டை சூழும் முதல் அகழி. [குக் கூட்டியது.

Contre-fruit, *m.* சுவர் கனத்துக்

Contre-fugue, *f.* எதிர்மாலையிசை.

Contre-garde, *f.* எதிர்கொத்தளம், பாலக்கட்டையடியின் கல்லடுக்கு.

Contre-hacher, *v. a.* குறுக்கே வெட்டுதல். [வட்டு

Contre-hachures, *f. pl.* குறுக்கு

Contre-hâtier, *m.* உள்ளும் புறமுங் கொளுவியுள்ள அடுப்புவிறகுதாங்கி.

Contre-haut (en), *adv.* கீழேயிருந்து மேலாக, மேலே.

Contre-heurtoir, *m.* தட்டுகருவிக்கெதிரிருப்புக்கட்டை. [விசேஷதடை.

Contre-indication, *f.* எதிர்குறி,

Contre-jour, *m.* வெளிச்சம் நேராய்ப்படாத இடம், வெளிச்சத்துக்கு எதிரிடம் : à — வெளிச்சத்துக்கு எதிரிடமாக, வெளிச்சம் நேராய்ப் படாதவிடத்தில். [ணிணைபாவுதல்.

Contre-jumelles, *f. pl.* வாய்க்காலி

Contre-lames, *f. pl.* நெசவுபாவையாட்டுதற்குரிய மரக்கம்பி.

Contre-latte, *f.* கைம்மரத்துக்கிணைவரிச்சு, இரு கைம்மரத்துக்கு நேர்நிலையான ரீப்பாய்ப்பட்டை.

Contre-latter, *v. a.* ஷை வரிச்சு — ரீப்பாய்ப்பட்டை போடுதல்.

Contre-lettre, *f.* எதிர் காகிதம், முன் சீட்டையழிக்குஞ் சீட்டு.

Contre-mailler, *v. a.* இரட்டை வலைக்கண்செய்தல்.

Contremaître, *m.* மூன்றுங் —, கீழ்த்தலைவன், தண்டல், ஆலையில் வேலைக்காரர் தலைவன். [டளை.

Contremandement, *m.* எதிர் கட்

Contremander, *v. a.* எதிர் கட்டளையிடுதல், இட்டகட்டளை மாற்றுதல், (செய்ய —, வர —) வேண்டாம் என்னல்.

Contremarche, *f.* எதிர் நடை, திரும்புதல், முன்பின்னாகப் போதல். || படிசாங்கி. [மாற்றம்.

Contre-marée, *f.* பேதமான ஏற்ற

Contremarque, *f.* இரண்டாங் —, எதிர்குறிப்பு, திரும்புவதற்கான —, எதிர்சீட்டு, குதிரைப் பல்லுக்கிட்டகள்ளக் குறிப்பு.

Contremarquer, *v. a.* ஷை குறிப்பிடுதல். || se— ஷை குறிப்பிடப்படுதல்.

Contre-mine, *f.* எதிர் சுரங்கம், அலங்கத்துக்குக் கீழ் முன்வெட்டின சுரங்கம். || எதிர் சூக்ஷம், எதிருபாயம்.

Contre-miner, *v. a.* ஷை சுரங்கம் வெட்டுதல், எதிர் சூக்ஷம் பண்ணுதல், வீணாக்குதல். || se — ஷை சுரங்கம் வெட்டப்படுதல்.

Contre-mineur, *m.* எதிர் சுரங்கம் வெட்டுகிறவன்.

Contre-mont (à), *adv.* மேலாக, நீரோட்டத்துக்கு எதிராக. [குறி.

Contre-mot, *m.* உ-ம் குழூஉக்

Contre-mur, *m.* இரட்டை —, அணை —, உதவிச்சுவர். [டுதல்.

Contre-murer, *v. a.* ஷை சுவர்கட்

Contre-ordre, *m.* எதிர்கட்டளை.

Contre-opposition, *f.* எதிர்விக்கினம். [துவாரம்.

Contre-ouverture, *f.* காயத்தடித்

Contre-pal, *m.* இரண்டாய்ப் பிரிந்தகழி.

Contre-partie, *f.* எதிர்பிரிவு, —பங்கு, — கருத்து, — எண்ணம், எதிரிடை. || வல்லிசை, மந்தரமுதலிய விசைப்பிரிவு : — d'un compte எதிர் கணக்குப்புஸ்தகம்.

Contre-passation, *f.* உண்டிச்சீட்டைக்கொண்டே கடன் பரிகரித்தல்.

Contre-percer, *v. a.* எதிராகத் துளைத்தல்.

Contre-peser, *v. a.* இடைக்கிடை —, சமநிறையிடுதல், — யாதல், —ஆயிருத்தல் : se — இடைக்கிடையாதல்.

Contre-pied, *m.* எதிர் நடை, — காரியம் : prendre le — எதிர் நடையாய்ப் போதல். [— கட்டை.

Contre-pilastre, *m.* எதிர் தூண்,

Contre-pleige, *m.* பிணையுத்தரவாதி. [யப்படுத்துதல்.

Contre-pleiger, *v. a.* சாமீனை நிச்ச

Contrepoids, *m.* எதிர்பாரம், சமநிறை, —நிலை, சமநிலைக்கருவி, எதிரிடை.

Contre-poil, *m.* மயிருக் கெதிர்புறம் : à — மயிருக் கெதிர்புறமாய், சரிப்படாத—, அடாத—, ஒவ்வாதவிதமாய்.

Contre-poinçon, *m.* எதிராய்த் துளைக்குமூசி, எழுத்துகுழிந்த —, எழுத்தின் முளை.

Contrepoint, *m.* பலபாட்டினிசைவு, பல இசைப்பாட்டு, — யிராகம், — பாட்டுண்டாக்குதல்.

Contre-pointer, *v. a.* இருபக்கத்தி

லுந்தைத்தல், பீரங்கிக்கு எதிராகப் பீரங்கியைவைத்தல், விரோதித்தல்.

Contre-poison, *m.* எதிர்விஷம், விஷ —, மாற்றுமருந்து.

Contre-porte, *f.* எதிர் —, இரண்டாங்கதவு.

Contre-poseur, *m.* வரிசையிற் கல்போடுகிறவன்.

Contre-position, *f.* கணக்கு தப்பிதமாய்ப்பதிந்த பிசகு.

Contre-projet, *m.* எதிர்கருத்து,— ஆலோசனை, பணிக்கு.

Contre-promesse, *f.* எதிர் வாக்குத்தம், — சீட்டு, தனக்கு முன்செய்த வார்த்தைப்பாட்டுக்குப் பலனில்லை என்கிற பத்திரம்.

Contre-proposition, *f.* ஓர் ஆலோசனைக்கு எதிராலோசனை.

Contre-quille, *f.* ஏராவின் எதிருத்திரம், ஏராவைச் சாருத்திரம்.

Contre-rail, *m.* ஓர் தண்டவாளக்கம்பிக்குச் சமதூரத்தில் நீட்டுப்பக்கத்தில் போடப்படும் வேறோர் தண்டவாளக்கம்பி.

Contre-rétable, *m.* பீடத்துப் பின்பக்கம்.

Contre-révolution, *f.* அரசின் மாற்றவழிப்பு, — எதிர்மாற்றம்.

Contre-révolutionnaire, *s. et adj.* அரசின் மாற்றமழிப்பவன், — வள், — மாற்றத்துக்கு விரோதி, — விரோதமான.

Contre-révolutionner, *v. a.* அரசில் எதிர்மாற்றமுண்டுபண்ணுதல். || se — அரசின் மாற்றத்துக்கெதிராக எழும்புதல்.

Contre-ronde, *f.* உ-ம் —, எதிர்பாரி.

Contre-ruse, *f.* எதிர்சூக்ஷம், — உபாயம், — தந்திரம்.

Contre-sabord, *m.* பீரங்கிவாசற் —, கப்பலின் சன்னற்கதவு.

Contre-salut, *m.* பதிலாசாரம், — ஆசாரத்துக்குப் பீரங்கி சுடுதல்.

Contre-sanglon, *m.* சீனிக்கச்சை கட்டியவார்.

Contrescarpe, *f.* வெளி அகழின் சாய்வு, மூடப்பட்ட அதின்வழியும் அகழின்சாய்வும்.

Contre-scel, *m.* பெரிசைக்கூடிய சிறுமுத்திரை.

Contre-sceller, *v. a.* ஷை முத்திரையிடுதல்.

Contreseing, *m.* கீழ் —, உ-ம் கையொப்பம்: avoir le — ஷை கையொப்பம்போடச் சுதந்திரங்கொண்டிருத்தல்.

Contresens, *m.* எதிரர்த்தம், அர்த்தப்பிசகு, — ப்புரட்டு, — மாறுபாடு, அர்த்தத்துக்குப் பொருந்தாத வாசிப்பு, — பாடல், வழக்கத்துக்கு —, மெய்ஞ்ஞானத்துக்கு விரோதம், — ஒவ்வாமை, எதிர்பக்கம், — புறம், — முறை: à — எதிரர்த்தமாய், எதிர்பக்கமாய், ஒவ்வாதமுறையாய்.

Contre-signataire, *m.* கீழ் —, உ-ம் கையொப்பம் போடுகிறவன்.

Contresigner, *v. a.* ஷை ஒப்பம் போடுதல், காகிதத்து மேல்விலாசத்தில் தன் பேரொழுதல்.

Contre-tailler, *v. a.* குறுக்கே கீறுதல்.

Contretemps, *m.* தகாத சமயம், சமயத்தவறு, காலப்பிசகு, தடை, விக்கினம், துர்ச்சம்பவம், துரதிஷ்டம். || நடனநடை: à — தகாசமயத்தில், சமயந்தப்பி.

Contre-terrasse, *f.* ஓர் மெத்தைச் சுற்றுக் கீழ்மட்டத்திலிருக்கும் வேறோர் மெத்தை.

Contre-tirer, *v. a.* படத்துப் பிரதியெடுத்தல், — பதித்தல், — எழுதுதல்.

Contre-val, (à) *adv.* நீரோட்டஞ்சென்று, இறக்கமாய்.

Contrevallation, *f.* எதிரகழ், — கொத்தளம்.

Contrevenant, *part. et s.* மீறுகிறவன், — வள்.

Contrevenir, *v. n.* மீறுதல், விரோதமாய்ச் செய்தல், — நடத்தல், கடத்தல், தவறுதல்.

Contrevent, *m.* சன்னலின் புறக்கதவு. || வீட்டினுச்சியை ஸ்திரப்படுத்துங் குறுக்கான மரங்கள்.

Contrevente, *f.* எதிர்செட்டு,—விற்பனை.

Contreventer, *v. n.* காற்றுக் கெதிராகக் குறுக்குமரம்போடுதல், புறக் கதவுபோடுதல்.

Contre-vérité, *f.* உண்மைக்கெதிர் வசனம்.

Contre-visite, *f.* இரண்டாவது பரிசோதித்துப்பாாத்தல்.

Contribuable, *m.* வரியிறுக்கிறவன்.

Contribuer, *v. n.* வரி —, பணமிறுத்தல், வரி —, வீதங்கொடுத்தல். || உதவுதல், உதவி —, ஒத்தாசை செய்தல்.

Contributif, *adj.* வரியைச்சேர்ந்த, — விதிக்கிற.

Contribution, *f.* செலவின்பங்கு வீதம். || வரி,—ப்பணம், தீர்வை, கப்பம், இறை, பகுதி, கடமை. || கடனில் —, நஷ்டத்தில் வீதம் : mettre à — வரிபோடுதல், — வாங்குதல், செலவுக்குப் பணங்கொடுப்பித்தல், உதவிகொள்ளுதல். [வீதமாய்.

Contributoirement, *adv.* பகுதி—,

Contrister, *v. a.* கஸ்தி —, துயர —, துக்க —, விதன —, வருத்தப்படுத்துதல். || se — கஸ்திப்படுதல், துக்கித்தல், வருந்துதல், துயர்தல்.

Contrit, *adj.* மனஸ்தாப —, துக்க —, கஸ்திப்படுகிற.

Contrition, *f.* மனஸ்தாபம், துக்கம், துயரம், மனவிசனம், — நெரிவு :— parfaite உத்தம மனஸ்தாபம் ; — imparfaite பயத்தால்வருகிற —, அடிமைக்குரிய மனஸ்தாபம்.

Contrôle, *m.* ஒத்துப்பார்த்தல், பரிசோதனை, கண்டனை, கண்டிப்பு. || பணவரத்து விசாரணைக்காரன் —, கொன்த்துரோல் உத்தியோகம், — புஸ்தகம், ஒத்துப்பார்க்குங் —, ஒப்பிடுதற்கான கணக்குப் புஸ்தகம். || திட்டமாற்றுக் குறி, பொன்வெள்ளிப் பொருளுக்கிடு முத்திரை, ஷை முத்திரையிடுமிடம், கூட்டத்தார் பேரிடாப்பு. || நாடகசாலையின் விசாரணைக்காரர் நிற்குமிடம்.

Contrôler, *v. a.* பரிசோதித்தல், ஒத்துப்பார்த்தல், கண்டித்தல், கண்டனஞ்செய்தல், ஒத்துப்பார்க்குங் கணக்குப்புஸ்தகத்திற்பதிதல், (பொன் வெள்ளிப்பொருள்களில்) அரமனை முத்திரை போடுதல்.

Contrôleur, *m.* கொன்த்துரோல் உத்தியோகஸ்தன், — துணை, — கணக்குப்புஸ்தக விசாரணைக்காரன், வரிபோட விவரங்களைக் கொடுக்கிறவன், கண்காணி, பரிசோதனைக்காரன், நாடகச்சாலைப் பிரவேசச்சீட்டுகளைப் பரிசோதிக்கிறவன். || *m.* — euse, *f.* கண்டிக்கிறவன், எல்லாத்திலும் பிழைபார்க்கிறவன், — வள்.

Controuvé, பொய்யான ; *part. de*

Controuver, *v. a.* பொய்யாயுண்டாக்குதல், கட்டுதல், உண்டு —, பாவித்தல், ஏற்படுத்துதல், கள்ளம் —, போலிபண்ணுதல். [குரிய.

Controversable, *adj.* தருக்கத்துக்

Controverse, *f.* தருக்கம், விவாதம், வாக்குவாதம், சச்சரவு : étudier la — வேததருக்கங் —, தர்க்கிக்கு முறை கற்றுக்கொள்ளுதல்.

Controversé, *part.* தருக்கிக்கப்பட்ட, நிச்சயமற்ற.

Controverser, *v. a. et n.* தருக்கித்தல், தருக்கம் பண்ணுதல்.

Controversiste, *m.* தருக்கம் பண்ணுகிறவன், தருக்கசாலி, வாக்குவாதி.

Contumace, *f.* நீதி ஸ்தலத்துக்கு வாராமை, — த்தப்பிவராமை, — வராதபிடிவாதம், — வராததினாலாகுந் தீர்வை. || *V.* Contumax : juger —, condamner par — *ou*

Contumacer, *v. a.* நீதிஸ்தலத்துக்குத் தப்பிவராதவனைத் துடர்தல், —தீர்வையிடுதல்.

Contumax, *adj. et s.* நீதிஸ்தலத்துக்குத் தப்பிவராத, — வாராதவன்.

Contumélieux, *adj.* நிந்தையுள்ள.

Contus, *adj.* நசிந்த.

Contusion, *f.* நசிவு, நசிப்பு, நொறுக்கு, நெரிவு, தழும்பு.

Contusionner, *v. a.* நசித்தல், நசுக்குதல், நொறுக்குதல், நெரித்தல் : se — நசிதல், நசுங்குதல். || ஒருவனொருவனை நசித்தல்.

Convaincant, *part.* உருசுவுள்ள, திஷ்டாந்தமான, ஒப்பிக்கிற.

Convaincre, *v. a.* ஒத்துக்கொள்ளச்செய்தல், நம்புவித்தல், விசுவாசிப்பித்தல், உணர்த்துதல், விளக்குதல், தெரிவித்தல், ஒப்பித்தல், மெய்ப்பித்தல். || உருசு —; திஷ்டாந்த —, நிச்சயப்படுத்துதல்: — quelqu'un de tromperie ஒருவன் செய்தவஞ்சகம் உருசுப்படுத்துதல் ; se — நிச்சயித்துக்கொள்ளுதல், நிச்சயமாயறிதல், கண்டுபிடித்தல்.

Convaincu, *part.* குற்றவாளியாய் மெய்ப்பிக்கப்பட்ட, நிச்சயமாயறிந்த, நம்புகிற, உணர்ந்த.

Convalescence, *f.* குணமாதல், சொஸ்தப்படுதல் : être en — சொஸ்தப்படுதல் ; entrer en — சொஸ்தமடை

யத்துவக்குதல் ; avoir une longue — நெடுநாள் குணப்பட்டுவருதல்.

Convalescent, *adj.* சொஸ்தப்படுகிற, குணமாகிற.

Convenable, *adj.* தக்க, தகுந்த, ஏற்ற, யோக்கிய, உரிய, தகுதி —, சரியான, இசைந்த. ‖ *m.* தகுதி, யோக்கியம்.

Convenablement, *adv.* ஏற்ற —, தக்கபடி, — விதமாய், தகுதி —, சரியாய்.

Convenance, *f.* தகுதி, இசைவு, ஏற்கை, உரிமை, தகைமை, பொருத்தம், ஒற்றுமை, சாவகாசம், வசதி, யோக்கியம், மேரை, மரியாதை.

Convenant, *adj.* தக்க, தகுந்த, உரிய, இசைந்த.‖ *m.* கட்டுபாடு, ஒப்பந்தம்.

Convenir, *v. n.* தகுதல், இசைதல், பொருந்துதல், ஏற்குதல், ஒத்துவருதல், சரியாதல், தகுதி —, ஏற்கை —, யோக்கியம் —, தக்கதாயிருத்தல், பிரியப்படுதல், உதவுதல். ‖ ஒப்புதல், ஒத்துக்கொள்ளுதல். ‖ உடன்படுதல், தாரிசம் —, ஒப்பந்தஞ்செய்தல், தீர்மானித்தல் : — de ses torts தன் குற்றங்களை ஒத்துக்கொள்ளுதல். ‖ se — தகுதல், பொருந்துதல், இசைதல், ஒருவனொருவனுக்குப் பிரியப்படுதல்.

Convent, *m.* மடம், ஒப்பந்தம், காவல், ‖ réunion de francs-maçons இரகசியசபையார் கூட்டம்.

Conventicule, *m.* சின்ன —, இரகசியமான —, அடாத —, தகாதகூட்டம்

Convention, *f.* ஒப்பந்தம், ஒப்பாசாரம், உடன்படிக்கை, உடன்பாடு, கவுல், கட்டுப்பாடு, வழக்கம். ‖ *pl.* கலியாண உடன்படிக்கை : signes, termes de — பரிபாஷை, குழூஉக்குறி ; coloris de — ஒப்பாசார —, இயல்பற்றவன்னம் ; — pénale முச்சிலிக்கை. ‖ la —*ou* la — nationale, அரசின் முறைமைப்பிரமாணம் ஏற்படுத்துங் — மாற்றுங் — ஸ்தாபிப்பதற்குரிய கூட்டம், ஷை கூட்டத்தின் சாலை.

Conventionnel, *adj.* ஒப்பந்தத்து, உடன்பட்ட, ஒப்பந்தமான, ஒப்பின. ‖ *m.* ஷை கூட்டத்தான்.

Conventionnellement, *adv.* ஒப்பந்தமாய்.

Conventualité, *f.* மடவாசம், மடத்துத்தன்மை.

Conventuel, *adj.* மடத்து, மடமுனிவருள்ள, மடமுழுமையின், — வாசசுதந்தரமுள்ள : mense — மடமுனிவருக்குரிய வருமானப் பங்கு ; prieuré — முனிவருள்ளமடம் : messe — மடத்துப் பெரியபூசை. ‖ *m.* ஒரேமடத்திற் சீவிக்கச் சுதந்தரமுள்ள முனி.

Conventuellement, *adv.* மடத்துமுறையாய், பொதுவாய்.

Convenu, *part.* ஒப்பின, பொருந்தின, தீர்மானித்த, சம்மதிக்க —, ஏற்கப்பட்ட, திட்டம் —, ஒப்பந்தமான.

Convergent, *adj.* ஓரிடத்திற் கூடுகிற, — சேருகிற.

Convergence, *f.* Converger, *v. n.* ஓரிடத்திற் கூடுதல், — சேருதல், சேரநாடுதல், — மருவுதல்.

Convers, *adj.* கூடச் சஞ்சரிக்கிற, துணையான, மடத்திற் பணிவிடை செய்கிற : frère, sœur — துணைச் சகோதரன், — சகோதரி, பணிவிடைமடத்தான், — மடத்தாள் ; proposition —, *V.* Converse.

Conversation, *f.* சம்பாஷணை, கூடப் பேசல், பேச்சு, பிரசங்கம், பேசும் வகை, சல்லாபம்.

Converse, *f.* பயனிலையெழுவாயாகவும், எழுவாய்ப் பயனிலையாகவும் மாறும் —, அநுமிதம் மூலமாக மாறும் —, எதிர்வாக்கியம், இடமாற்று.

Converseau, *m.* எந்திர வளைவின் மேல்பலகை.

Converser, *v. n.* சம்பாஷித்தல், சம்பாஷணைசெய்தல், பேசுதல், சஞ்சரித்தல். ‖ படை திரும்புதல்.

Conversion, *f.* மனந் திரும்புதல், சீர் —, நெறி —, குணட்படுதல். ‖ மாறுதல், மாற்றம், மாறல், படைதிரும்புதல் : — des métaux இரசவாதம், வேறுலோகமாக மாற்றம்; — de roupies en caches உரூபாய் காசாகமாற்றுதல்.

Converti, *s. et part.* மனந்திரும்பினவன், — திரும்பின, சீர்பட்ட, மாறின.

Convertible, *adj.* மாற்ற —, திருப்பத்தக்க, மாறத்தக்க, பயனிலை எழுவாயாக மாறத்தக்க.

Convertir, *v. a.* மனந்திருப்புதல்,

சீர் —, குணப்படுத்துதல், சீர் திருத்துதல். || மாற்றுதல், திருப்புதல், மாற்றிப்போடுதல், ஆக்குதல். || se — மனந்திரும்புதல், சீர் —, குணப்படுதல், மாறிப்போதல்.

Convertissable, *adj.* மனந்திரும்பத்தக்க, மாறத்தக்க.

Convertissement, *m.* மாற்றுதல், மாற்றம்.

Convertisseur, *m.* மனந்திருப்புகிறவன்.

Convexe, *adj.* புறத்தில் —, குமிழ்ந்த, குமிழ்ப்பான, மொக்குள் வடிவுள்ள.

Convexité, *f.* புறத்துக் குமிழ்ப்பு, — வளைவு, மொக்குள்வடிவு.

Conviction, *f.* நிச்சய எண்ணம், மனநிதானம், — உறுதி, நிச்சயிப்பு. || உருசு, குற்ற உணர்ச்சி : pièces de — உருசுப்படுத்துஞ் சாதனம்.

Convié, *s. et part.* விருந்தன். விருந்தாடி, அழைக்கப்பட்ட.

Convier, *v. a.* விருந்துக்கு —, அழைத்தல், தூண்டுதல், ஏவுதல். || se — ஒருவனொருவனைத் தூண்டுதல்.

Convive, *m.* விருந்தன், விருந்தாடி, விருந்து, மேசைத்தோழன்.

Convocable, *adj.* வரவழைக்கத்தக்க, கூட்டக்கூடிய.

Convocation, *f.* வரவழைப்பு, கூட்டுதல்.

Convoi, *m.* பிரேதங் கொண்டுபோதல், அடக்கப்பரிவாரம். || இரஸ்துவண்டிமுதலியது, அதுக்குத் துணையான சேவகர். || வியாபாரக் கப்பற்கூட்டம், அதின் துணைக்கப்பல்கள். || புகைவண்டிக்குப் பின்செல்லும் வண்டிகள்.

Convoitable, *adj.* ஆசைக்குரிய, ஆசிக்கத்தக்க.

Convoiter, *v. a.* ஆவலாயாசித்தல், அபேட்சித்தல், இச்சித்தல், அவாவுதல்.

Convoiteux, *adj.* அபேட்சிக்கிற, இச்சிக்கிற.

Convoitise, *f.* ஆவல், பேராசை, அவா, ஆசாபாசம்.

Convoler, *v. n.* கலியாணஞ்செய்தல் : — en secondes noces ௨-ம் விவாகம்பண்ணுதல்.

Convoluté, *adj.* ஒருபக்கமாய் —, உட்புறமாய்ச் சுருண்ட.

Convolvulacées, *f. pl.* திருகியபருப்புள்ள பூண்டினம்.

Convolvulus, *m.* அடம்பு, ஆற்றடம்பு, ஆட்டுக்கால் : — batatas சர்க்கரைவள்ளி, சீனிக்கிழங்கு, வள்ளி, வெள்ளைவள்ளி ;— bicolor கம்பந்தாளி ; — copticus முசற்கொம்மட்டி ; — gemellus சிறுதாளி ; — malabaricus பெருமுசுட்டை ; — maximus பெருந்தாளி ; — muricatus காட்டுத்தாளி ; — purpureus செந்தாளி ; — racemosus ஊனுங்கொடி ; — repens வள்ளைக்கொடி ; — speciosus சமுத்திரசோகி, — ச்செடி, அன்பகர், கடற்பாலை, பேய்முசுட்டை ; — striatus தாளிச்செடி ; — tridentatus குதிரைகொல்லி, — வாலி;—turpethum சிவதை.

Convoquer, *v. a.* அழைப்பித்தல், வரவழைத்தல், கூட்டுதல், சங்கம் —, கூட்டங் —, கூட்டுதல், வருவித்தல்.

Convoyer, *v. a.* துணையாய்ப் போதல், கூட்டிக்கொண்டுபோதல்.

Convoyeur, *m.* துணையாய்ப் போகும் போர்க்கப்பல்.

Convulsé, *adj.* இசிவுள்ள.

Convulsif, *adj.* இசிவான, இசிவுள்ள, — வருவிக்கிற.

Convulsion, *f.* இசிவு, வலிப்பு, இசிப்பு, நரம்புமுடக்கம், — ப்பிடிப்பு, — இசிவு, சன்னி. || (ஆசாபாசத்தின்) வேகம், உற்சாகம். || (இராச்சியத்தின்) கலக்கம், குழப்பம்.

Convulsionnaire, *m.* இசிவுள்ளவன், — காரன், கள்ளத்தனமாய் இசிவு காட்டுகிறவன்.

Convulsivement, *adv.* இசிவு இழுத்துக்கொண்டு, வலிப்புடன்.

Coobligé, *adj. et s.* உடன்சாமீனுள்ள, — கடமையுள்ள, — பிணையாளி.

Coopérateur, *m.* — trice, *f.* உதவியாள், — யான, ஒத்தாசைக்காரன், — க்காரி, கூடச்செய்கிறவன், — வேலைசெய்பவன், — வள்.

Coopératif — ive, *adj.* யாவருடையவும், தனித்தனியுடையவும், நன்மை சம்பந்தமான.

Coopération, *f.* ஒத்தாசை, உதவி, உபகரணம், உடன்வேலை, *ou*

Coopérer, *v. n.* கூட —, உதவி —, ஒத்தாசை செய்தல்.

Cooptation, *f.* Coopter, *v. a.* ஓர் சங்கத்திற் சேர்த்தல்.

Coordination, *f.* இசைப்பு, ஒழுங்கு, — படுத்துதல்.

Coordonnées, *f. pl.* ஓரிடங்குறிப்பதற்குரிய இருநேர்வரி.

Coordonner, *v. a.* இசைத்தல், பொருத்துதல், திட்டப் —, ஒழுங்குபடுத்துதல். [ஓர் மரம்.

Copaïer, *m.* (பிரேசில்தேசத்து)

Copahu, *m.* ஷை மரத்தின் பிசின்.

Copain, *m.* இஷ்டன், கூட்டாளி.

Copal, *m.* ஓர் மரப்பிசின், செந்துரசம்.

Copartage, *m.* கூடப் பங்குபிரித்தல், உடன் —, பங்கு, வீதம், தாயத்தனம்.

Copartageant, *part.* உடன் —, பங்காளி, கூட்டாளி, தாயக்காரன், தாயாதி.

Copartager, *v. a.* பங்காளியாய்க் கொள்ளுதல், கூடப் பங்கிடுதல்.

Copeau, *m.* சிராய், சிலாம்பு, செதில், சிம்பு.

Copeck, *m.* (ருசியதேசத்து) துட்டு, நாலுகாசு நாணயம்.

Copenhague, (தன்மர்க்கு தேசத்தில்) கொப்பனாகுநகரம்.

Copermutant, *m.* (திரு உம்பிளிக்கை உத்தியோகமுதலியதை) மாற்றிக்கொள்பவன்.

Copermutation, *f. et* Copermuter, *v. a.* (ஷை) மாற்றிக்கொள்ளுதல்.

Copernicien, *adj. et s.* கொப்பெர்னிக்கென்பவனுக்கடுத்த, — என்பவன் கோட்பாட்டின் பாரிசத்தான்.

Cophose, *f.* செவிடு.

Cophte, Copte, *m. et adj.* கொப்த்தன், கொப்த்தென்னும், — என்னும் பாஷை, எஜிப்த்து தேசத்தின் பழைய கிறீஸ்துவன், — பழைய பாஷை.

Copie, *f.* நகல், சவாது, (காகித சித்திரமுதலியவற்றின்) பிரதி, மாணாக்கர் எழுதுஞ்சட்டம். || அடுக்கவேண்டிய பிரதி. || சாயல், போலி, பாவனை, போலியான புஸ்தகம், — வேலை: — semblable à l'original அசலுக்குச் சரியானபிரதி; il est votre copie அவனுமது சாயலாயிருக்கிறான்.

Copié, *part.* மேற்பாடம் பார்த்து எழுதப்பட்ட, பிரதியான.

Copier, *v. a.* பிரதி —, பார்த்து—, பெயர்த்து எழுதுதல், பாவனை எழுதுதல், — சித்திரித்தல். || மாதிரியாகக் கொள்ளுதல், கண்டு —, பாவித்தல், போலச்செய்தல், — சொல்லுதல், கேலியாகப்பாவித்தல். || se — பிரதி —, பார்த்தெழுதப்படுதல், திரும்பிச் சொல்லுதல், மற்றவர்கள் சொன்னதைத் தாமும் எழுதுதல், — சொல்லுதல்.

Copieusement, *adv.* மிகுதி —, தாராளம் –, திரளாய்.

Copieux, *adj.* மிகுந்த, திரள் —, மிகுதி —, தாராளமான.

Copiste, *m.* பிரதி —, பார்த்து எழுதுகிறவன்,— சித்திரிக்கிறவன், சவாதுக்காரன், பிரதிபத்திரிகன், கண்டுபாவிப்பவன்.

Coprah, *m.* கொப்பரை, — த்தேங்காய்.

Copreneur, *m.* குத்தகைப் பங்காளி,— கூட எடுக்கிறவன்.

Copronyme, *adj.* பீக்காரன், ஞானஸ்நானத்தொட்டி அசுத்தப் படுத்தினவன்.

Coprophage, *m.* எருவண்டு, எருவிற்சீவிக்கும்வண்டு.

Copropriétaire, *m.* உரிமைப்பங்காளி, கூட உடையவன். [உரிமை.

Copropriété, *f.* உடனுரிமை, பொது

Copter, *v. a.* மணிதட்டுதல், ஒரே பக்கத்தில் மணியடித்தல்.

Copulatif, *adj.* கூட்டுகிற, புணர்க்கிற.

Copulative, *f.* கூட்டிடைச்சொல்.

Copulation, *f.* புணர்ச்சி, சையோகம், மைதுனம், சங்கமம்.

Copule, *f.* எழுவாயைப் பயனிலையோடிசைக்குஞ்சொல், புணர்மொழி, சந்து.

Coq, *m.* சாவல், சேவல், கோழிச்சாவல். || கோவிற்கோபுரச்சாவல்,—காற்றுகாட்டி, || தலைவன், பிரதானமானவன். || கடியாரத்தினாட்டக் கருவிதூக்குவது, — மூடுவது. || கப்பலின் சுயம்பாகி. || ஓர்மீன். || கல்லான ஓர்கிளிஞ்சில்: — des bois, de bouleau, de bruyère காட்டுச் சாவல்; le— du village ஊர்த்தலைவன்; —des jardins ஓர் வாசனைப் பூண்டு.

Coq-à-l'âne, *m.* பிதற்று, பிசகு, தொடர்ச்சியற்ற பிரசங்கம்.

Coq-d'Inde, *m.* வான்கோழிச்சேவல். || முட்டாள், மடையன்.

Coquard, *m.* ஓர்பக்ஷி. || முட்டை (மழலைச்சொல்). || பிலுக்கனான கிழவன், மடையன்.

Coque, *f.* (முட்டைகனி...) ஓடு, (பட்டுப்பூச்சி) கூடு. || நாடாப்பூட்டு, || கப்பலின் உடல், — உரு: — d'œuf முட்டையோடு; œufs à la — வெந்நீரில் வேவித்த —, அவித்தமுட்டை; — de coco கொட்டாங்கச்சி; — du Levant காக்காய்க்கொல்லிப் பழம்.

Coquecigrue, *f.* வீண், அபத்தம், ஓர் கிளிஞ்சில்.

Coquelicot, *m.* காட்டுக்கசகசா.

Coqueliner, *v. n.* (சாவல்) கூவுதல், கொக்கரித்தல்.

Coquelourde, *f.* ஓர் பூண்டு.

Coqueluche, *f.* கக்குவான், குக்கல். || ஸ்திரியின் பூர்வகுல்லா. || பிரபலியமானவன், நாடப்பட்டவன். || ஓர்பக்ஷி: avoir la — *ou*

Coquelucher, *v. n.* குக்கலிடுதல், குக்குதல், கக்குதல்.

Coqueluchon, *m.* முனிகுல்லா.

Coquemar, *m.* கொப்பரை, கடாரம்.

Coqueret, *m.* ஓர் பூண்டினம்.

Coquerico, *m.* கொக்கரிப்பு.

Coqueriquer, *v. n.* (சாவல்) கூவுதல், கொக்கரித்தல், சேக்கரித்தல்.

Coquesigrue, *f.* நீர்த்தத்துக்கிளி. || *pl.* வீண்காரியம், விழல், அபத்தம்.

Coquet, *m.* ஓர்வித —, அழகிய படகு, — personne qui désire plaire பிரியப்பட விரும்புகிறவன்.

Coquet — te, *s. et adj.* பிலுக்கன், பிலுக்குள்ள, கோலப்பிரியமுள்ள, கோலத்தாற் பிரியப்படத்தேடுகிற, அழகிய, நேத்தியான, அந்தமுள்ள: faire le — பிலுக்கனாதல்.

Coqueter, *v. n.* பிலுக்கனாயிருத்தல், பிரியப்படத்தேடுதல். || சாவல் கூவுதல்.

Coquetier, *m.* முட்டை —, கோழி விற்பவன், —க்காரன், முட்டைதாங்கி.

Coquetterie, *f.* பிலுக்கு, கோலப்பிரியம், மிஞ்சினசோடிப்பு, — சிறப்பு, பிரியப்பட ஆசை, அழகு, இலக்ஷணம், அந்தம்.

Coquillade, *f.* கொண்டையுள்ள [வானம்பாடி, ஓர் மீன்.

Coquillage, *m.* கிளிஞ்சில். || ஓட்டுமீன், ஊரல், மட்டி, எரல்: — qui sert de monnaie பலகறை, அக்கு.

Coquillart, *m.* கிளிஞ்சில் நிறைந்த கல்படை.

Coquille, *f.* (முட்டைகனிமீன்) ஓடு, கிளிஞ்சில், சிப்பி. || கூடு. || காதினுட்புறம். || உரொட்டிக்கிட்டத்தினுப்பல். || கத்திப்பிடியின் காப்பு. || சாரதி கால் தங்கும்பலகை. || சங்குவடிவான சிறப்பு. || அறையிடந்தப்பின அக்ஷரம். || அர்த்தகோலவடிவான அச்சு. || இறைச்சி சுடுதற்குரிய சூட்டடுப்பின் மூடி. || ஓர்வித கடுதாசி. || *pl.* சரக்கு, உடைமை, ஆஸ்தி: rentrer dans sa — தன்னோட்டில் —, தன்னிடத்தில் ஒடுங்குதல், துணிகரமான ஏற்பாட்டைக் கைவிடுதல்.

Coquilleux, *adj.* மீனோடு —, கிளிஞ்சில் நிறைந்த.

Coquillier, *m.* மீனோட்டின் —, கிளிஞ்சில் சேர்க்கை, — இடம்.

Coquillière, *f. ou* Carrière — மீனோடு —, கிளிஞ்சில் நிறைந்த படலம்.

Coquin, *m.* — ine, *f.* கள்ளன், வஞ்சகன், கெட்டவன், சண்டாளன், போக்கிரி, தூர்த்தன், தீயன், அடா, அடி. || *adj.* எளிதான, சோம்பலுள்ள: va-t-en — போடா, போடி; tu es un heureux — அடா அதிகபாக்கியவானாயிருக்கிறாய்; une — தூர்த்தை, கெட்டவள்.

Coquiner, *v. n.* வஞ்சித்தல், திருடு[தல்.

Coquinerie, *f.* கெட்ட —, கள்ள —, தூர்த்தத்தனம், வஞ்சகம்.

Coquinet, *m.* சின்னகள்ளன், — திரு[டன்.

Cor, *m.* காய்ப்பு, காய், ஆணி. || காளம், எக்காளம், சின்னம், கொம்பு. || Cor என்பது சேர்க்கைச் சொல்லின் முதலில் கூட என்றர்த்தமாம்: — de chasse வேட்டைக்கொம்பு; — de cerf மான்கொம்புக்கிளை; à cor et à cri வேகம் —, இரைச்சலாய், பலமாய்; — de mer ஓர்வித கிளிஞ்சில்.

Coraces, *m. pl.* காக்காயினப் பக்ஷி[கள்.

Corail, *m.* பவளம், பிரவாளம், பளகம்: de — பவள, சிவந்த.

Corailleur, *m. ou* pêcheur — பவளங்குளிப்பவன்; bateau —, *ou* Coraillère, *f.* பவளம்பிடிக்குஞ் சிறு கப்பல்.

Corallé, *adj.* பவளங்கலந்த.

Coralligène, *adj.* பவளமுண்டாக்குகிற, — உண்டாகுகிற.

Corallien, *adj.* பவளத்தாலான, பவளத்தால் செய்யப்பட்ட. [ந்த.

Corallin, e, *adj.* பவளம்போல் சிவ

Coralline, *f.* கடற்காளான் போன்ற சீவசெந்துவான பூண்டின் திரள். || ஓர் வித ஈரோட்டுமீன்.

Coralloïde, *adj. et f.* பவளமொத்த, — ஒத்தபொருள், — ஒத்தபூண்டு.

Coran, *m.* கோறான், மகம்மது சமய வேதம், — வேதாகமம்.

Corbeau, *m.* காக்காய், காக்கை, காகம், அண்டங்காக்காய், கரடம், கரவாகம், கரும்புள். || கொள்ளைநோயுள்ளவர்களைக் கொண்டுபோகிறவன். || தண்டியக்கல். || கொளுவி, துறட்டி. || தென்திசையில் ஓர் தாராகணம் : — de fer உத்திரந்தாங்கச் சுவரில் மாட்டின இரும்பு ; — aquatique நீர்க்காகம், கடற்காக்காய்.

Corbeille, *f.* கூடை, குறவன் —, மர—, பெட்டி, புட்டில், குடலை, கூடைகொண்டது, — வடிவான சிற்பவணி, ஓர் கூடையில் மாப்பிள்ளை பெண்ணுக்கு அனுப்பும் கலியாணபரிசம், (தோட்டத்திற்) பூ நிறைந்த வட்டவிடம் : — d'or ஓர் பூண்டு ; — de fruits கனி நிறைந்த கூடை.

Corbeillée, *f.* நிறைகூடை : — de fleurs பூ நிறைகூடை.

Corbillard, *m.* பெரிய —, சவவண்டி, பாடைப்பண்டி. [குஞ்சு.

Corbillat, Corbillot, *m.* காக்கைக்

Corbillon, *m.* சிறுகூடை, ஓர் விளையாட்டு.

Corbin, *m.* காக்கை, bec de — வளைந்து கூரிய மூக்கு.

Corbine, *f.* ஓர் சிறு கருங்காக்காய்.

Corbivau, *m.* ஓர்வித காக்காய்.

Corbleu, *int.* ஓர்வித ஆணை.

Corbule, *f.* ஓர்வித ஈரோட்டுக் கிளிஞ்சில்.

Corchore, *f.* ஓர் பூண்டு : Corchorus æstuans பிண்ணாக்குப் பூண்டு.

Cordage, *m.* கயிறு, அமார், — க்கயிறு, கம்பாகம், கயிற்றாலளப்பு, விறகு அளக்கும் விதம்.

Cordat, *m.* மட்டிச் சீலை.

Corde, *f.* கயறு, தாம்பு, புரி, பழுதை, ஞாண், நாண். || தூக்குகயிறு, தூக்கிப்போடுமாக்கினை. || தொம்பராடுங்கயிறு. || நரம்பு, தந்திரி, பாடுகிறவன் சுரம். || கட்டிய புகையிலைச் சுருள். || விறகினளவை, நாலு கனமேத்திறுகொண்டது. || நெசவு, வில்வளையின் நேர்வரி : — de fibres de cocotier நார் —, கதம்பைக்கயிறு ; — des reins அரைஞாண், அண்ணாக்கயிறு, கடிசூத்திரம் — des narines des bœufs நாசியம், நாணயம், நாணயக்கயிறு, மூக்காங்கயிறு ; — pour puiser de l'eau தாம்பு, தாம்புக்கயிறு ; — d'arc ஞாண், நாண், விற்கயிறு ; — (géométrie) குணம், சா, சிலை, துவிச்சா, —ச்சிலை ; — d'instrument நரம்பு, தந்திரி, விசிநரம்பு ; — d'étoffe நெசவின் நூல் : mériter la — தூக்குமரத்துக்குப் பாத்திரவானாயிருத்தல் ; homme de sac et de — சண்டாளன், தூக்குணி ; danser sur la — கயிற்றின்மேற் கூத்தாடுதல், ஆபத்திலிருத்தல் ; montrer la — நெசவின் நூல் காட்டுதல், தன் நிர்ப்பாக்கியத்தைக் காண்பித்தல் ; bois de — கயிற்றாலளந்த —, புதுவிறகு.

Cordé, *adj.* நாருள்ள, மரம்போன்ற, கயிற்றாற்கட்டப்பட்ட.

Cordeau, *m.* நூல், சிறுகயிறு, சூத்திரம், நூற்கயிறு : au — நூல்போட்டு, நூற்பிரகாரமாய், நேராய்.

Cordeler, *v. a.* கயிறுதிரித்தல், — பின்னுதல், முறுக்குதல்.

Cordelette, *f.* சிறுகயிறு, கம்பி.

Cordelier, *m.* — ère, *f.* இடையிற் கயிறு கட்டுமுனி, — கன்னி, அர்ச். பிராஞ்சீஸ்குசபைச் சந்நியாசி, — கன்னியாஸ்திரீ.

Cordelière, *f.* பலமுடிச்சுக் கயிறு, கயிற்றுவடிவான சிற்பவணி, கயிறாக முறுக்கின நாடா, ஏட்டுச்சுற்றிலுஞ் சித்திரவணி.

Cordelle, *f.* சிறுகயிறு, தோணியிழுக்குங்கயிறு. || பாரிசம்.

Corder, *v. a.* கயிறு —, கயிறாகத் திரித்தல், முறுக்குதல். கயிற்றாற்கட்டுதல், — அளத்தல், விறகளத்தல். || se — கயிறாகத்திரிக்க —, கயிற்றாலளக்கப்படுதல், நாராதல்.

Corderie, *f.* கயிறுசெய்யுந்தொழில்,

— இடம், — வைக்குமிடம், கயிற்று வியாபாரம்.

Cordia, *f.* ஓர் பூண்டு: — obliqua, serrata, நறுவிலி, நறுவுளி, அலி, வெளிறு; — polygala பெருநறுவிலி; — mixta சிறுநறுவிலி.

Cordial, *adj.* இருதயத்து, நேசமுள்ள. || பலமிடுகிற, தேற்றுகிற. || *m.* பலமிடுமருந்து.

Cordialement, *adv.* மனசார, இஷ்டம் —, நேசமாய், முழு இருதயத்தோடு.

Cordialité, *f.* பக்ஷம், நேசம், இணக்கம்.

Cordier, *m.* கயிற்றுக்காரன், கயிறு திரிக்கிறவன்.

Cordiérite, *f.* கல்போன்ற ஓர் தாது.

Cordiforme, *adj.* இருதயவடிவுள்ள.

Cordilières, *f. pl.* (தென் அமெரிக்காவில்) கொர்திலியேர் —, ஆந்தென்னுந் தொடர்மலை.

Cordillas, *m.* ஒருறப்பான கம்பளி.

Cordille, *m.* தோன் என்னு மீன்குஞ்சு.

Cordon, *m.* சிறுகயிறு, கயிறு, சரடு, புரி. || நாடா, வெகுமான —, மகிமைநாடா, நான்றுகொள்ளும் எத்தனமாகத் துலுக்கரிராயன் அனுப்பும் பட்டுக்கயிறு. || (சில சந்நியாசிகள் அரையிற்கட்டுங்) கயிறு, தொப்பியின் நாடா. || வரிசை, நிரை, வீட்டுச்சுற்றிலுந் தண்டியக்கல் வரிசை, கயிற்றுவடிவான சிற்பவணி, தொடர்ச்சியான சேவகர் வகுப்புகள் || நாணயத்தின் சுற்று, — ஓரம். || ஓர் கிளிஞ்சில்: — ombilical கருப்பநாடி, கொப்பூழ்க்கொடி, நச்சுக்கொடி; — de la messe சூத்திரக் கயிறு; ruban de l'ordre de chevalerie: le cordon de la Légion d'honneur இராவுத்தர் சபையின் நாடா; லெழியோன்தொனேர் என்ற கௌரதாப்பட்டவரிசையின் நாடா. — bramanique பூணூல், உபவீதம்; — bleu (இஸ்பிரீத்துசாந்துவின் சபையிராவுத்தர் தரிக்குமகலமான) நீல நாடா, ஷை சபையிராவுத்தன், கெட்டிக்காரியான சமையற்காரி, சில பக்ஷிகளின்பேர்; — rouge (அர்ச். லுவிஸ் சபையிராவுத்தர் தரிக்குமகலமான) சிவப்புநாடா, ஷை சபையிராவுத்தன்; — de gazon புற்பற்றையாலான ஓரம்; — nerveux நரம்பு: — sanitaire கொள்ளைநோயிடத்தாரைவிலக்குங் காவற்சேவகர் வரிசை.

Cordonner, *v. a.* திரித்தல், கயிருகப்பின்னுதல், சிறுகயிற்ருற்கட்டுதல்.

Cordonnerie, *f.* சக்கிலியன் தொழில், — வியாபாரம், — சரக்கு. || சப்பாத்துக்கடை, — செய்யுமிடம்.

Cordonnet, *m.* சிறுகயிறு, நாடா, நூல், பட்டுநூல், நாணய ஓரத்தினணி.

Cordonnier, *m.* — ère, *f.* சப்பாத்துசெய்கிறவன், — தைக்கிறவன், — வள்; — de caste சக்கிலியன், செம்மான், *f.* சக்கிலிச்சி, செம்மாத்தி.

Cordouan, *m.* பதனிட்ட வெள்ளாட்டுத்தோல்.

Cordoue, (எஸ்பஞ்தேசத்தில்) கொர்துநகரம்.

Cordova, (தென் அமேரிக்காவில்) கொர்தோவாநகரம், — நாடு.

Cordyle, *m.* (அபிரிக்காதேசத்தின்) ஓர் பெரியமரம், ஓர் பல்லி.

Coré, *m.* ஓர் வண்டு

Corée, *f.* (சீனுதேசத்தில்) கோரை என்னுங் குறைதீவு.

Coreligionnaire, *s.* ஒரேவேத அநுசாரி, உடன்வேதத்தான், — மதத்தான், — மதத்தாள்.

Corète, **Corette**, *f.* ஓர் பூண்டு.

Corfou, (இயோனியன் கடலில்) கோர்பு என்னும் தீவு, — நகரம்.

Coriace, *adj.* தோல்போலே —, கடின, சவ்வாகிய. || உலோபி, கையிறுக்கமுள்ள.

Coriacé, *adj.* தோல்போன்ற.

Coriaire, *adj.* தோலைப் பதனிடுதற்குரிய.

Coriandre, *f.* கொத்தமல்லி, கொத்துமல்லி, உத்தமபரி, உரி, தனிகம்.

Corinde, *m.* ஓர் பூண்டு.

Corindon, *m.* சிறப்பாங்கல்.

Corine, *f.* ஓர் மான்.

Coringhi, கோரங்கிநகரம்.

Corinthe, (கிறேஸ்தேசத்தில்) கொரிந்துநகரம்.

Corinthien, *adj.* கொரிந்தியன், ஷை நகரத்தான், — நகரத்து: ordre — கொரிந்தியன் —, ஓர் சிற்பநூல்.

Coris, *m.* ஓர் மலர்ப்பூண்டு. *V.* Cauris.

Corise, *f.* நீர் மூட்டை.

Corisperme, *m.* ஓர்வித பூண்டு.

Cork, (இர்லந்துதீவில்) கொர்க்கு நகரம், — நாடு.

Corlieu, *m.* ஓர்வித கோரையுள்ளான்.

Cormier *m.* ஓர்மரம் ; Corme, *m.* அதின்பழம் ; Cormé, *m.* அந்தப் பழத்தாலான பானம்.

Cormoran, *m.* நாரை, காரண்டவம், சக்கரவாகம், நீர்க்காகம்.

Cornac, *m.* யானைப்பாகன், — க்காரன். ‖ மற்றொருவனை நடப்பிக்கிறவன்.

Cornage, *m.* குதிரையிரைப்பு, — யிரைதல். ‖ கொம்புமிருகவரி.

Cornailler, *v. n.* சதுக்கமாய் —, சரியாய்க் கழுத்து காடியில் நுழையாதிருத்தல்.

Cornaline, *f.* ஓர்வித கோமேதகம்.

Cornard, *adj.* இரைப்புள்ள (குதிரை). ‖ *m.* சோரஸ்திரீ புருஷன்.

Cornaret, *m.* ஓர் பூண்டு.

Corne, *f.* கொம்பு, கோடு, சிருங்கம். ‖ ஊதுங்கொம்பு. ‖ சப்பாத்து போடுவதற் குதவுகிற பாதி கொம்பு, (வண்டுநத்தை முதலியவற்றின்) கொம்பு. ‖ (காலின்) குளம்பு, குரம். ‖ கொம்பின் வடிவுள்ளது, கோணம், முனை : bêtes à — கொம்புள்ள மிருகங்கள், ஆடு மாடுகள் ; montrer les — கொம்புகாட்டுதல், பயமுறுத்துதல் ; peigne de — கொர்ம்புச்சீப்பு ; — d'un croissant பிறையின் கொம்பு ; chapeau à 3 — திரி முனைத்தொப்பி; — de bélier ஆட்டுக்கிடாய்க்கொம்பு, ஓர் சிற்பவணி ; — d'Ammon கல்லான கொம்பின் வடிவுள்ள கிளிஞ்சில்.

Corné, *part.* கொம்பின்தன்மையுள்ள, கொம்புபோன்ற.

Cornée, *f.* சுக்கிலமண்டலம், கண்ணின் மேற்றோல் ; — opaque வெண்மணி;— transparente கருவிழி.

Corneille, *f.* காக்காய், காகம் : — aquatique நீர்க்காகம், அற்கம்.

Cornélien, *adj.* புலவனான கொர்னெய் என்பவனுக்கடுத்த.

Cornement, *m.* காதிலாகிற இரைச்சல். ‖ காற்றுவழிதிறந்த வாத்தியக்குழலின் சத்தம்.

Cornemuse, *f.* துருத்தியுள்ள புல்லங் —, புல்லாங்குழல், சுதி, ஒத்து.

Cornéole, *f.* ஓர் பூண்டு.

Corner, *v. n. et a.* கொம்பூதுதல், பிரியமற்றவிதமாய்க் கொம்பூதுதல், கொம்புகொண்டு செவிடருக்குக் கூவுதல், (காது) இரைத்தல், கிணுகிணுத்தல். ‖ விவேகமின்றிக் கூவுதல், — கூறுதல், அடிக்கடி சொல்லுதல், குறிப்பாகப் புஸ்தகத்தின் ஏட்டை மடித்தல்.

Cornet, *m.* ஊதுங்கொம்பு, சிறுகொம்பு, — காளம். ‖ பம்பரவடிவான பூ, — காகிதச்சுருள்,— பணியாரம், மைக்கூடு, கவற்றுச்சிமிள் ; — à bouquin கொம்பு ;—acoustique செவிடர் கேட்பதற்குதவும்—, காதுக்குரிய கொம்பு ; — à pistons அநேகஞ் சாவியுள்ளகாளம்.

Cornetier, *m.* கொம்புவேலைக்காரன்.

Cornette, *f.* பெண்தலைக்கோலம், கப்பற்கூட்டத் —, கப்பல் தலைவன் விருது, குதிரைப்படைக்கொடி, ஷை கொடிதரிக்குமுத்தியோகம்.‖ *m.* ஷை கொடிக்காரன், மெய்காப்பாளரில் ஓர்தலைவன்.

Corneur, *m.* கொம்புக்காரன், — ஊதுகிறவன்.

Corneur, — euse, *adj.* இரைக்கிற (குதிரை.)

Corniche, *f.* கொர்னிஷ், கம்பை, கபோதம், கபோதகம், சிற்ப —, சித்திரக்கம்பி : — volante மரத்தாலான கம்பை.

Cornichon, *m.* சிறுகொம்பு, காடியிலூறின இள —, ஓர்வித வெள்ளரிக்காய்.

Cornier,— ère, *adj.* மூலையிலுள்ள : jointure — இருமேன்கூரை கூடுமிடம் ; pieds — மரவெட்டுக் குறிப்பான பெரியமரங்கள்.

Cornière, *f.* கூடல்வாய், பெட்டிக் கோணம் ஸ்திரப்படுத்தும் பற்றிரும்பு.

Cornifle, *f.* ஓர் நீர்ப்பூண்டு.

Cornillas, *m.* காக்காய்க்குஞ்சு.

Corniste, *m.* கொம்புக்காரன், — ஊதுவோன்.

Cornouailles, (இங்கிலீஷ்தேசத்தில்) கொர்னுவாய்நாடு.

Cornouiller, *m.* ஓர் மரம் ; Cornouille, *f.* அதின்கனி.

Cornu, *adj.* கொம்புள்ள, — தரிக்கிற, பலகோணம்— சிகரமுள்ள.‖ வீண், அடுத்த, ஒவ்வாத : cheval — இடுப்பெலும்பு பிதுங்குங் குதிரை.

Cornue, *f.* இரசவாத —, காய்ச்சுங்

குப்பி, வளைந்தகுழல், திராவகம் வடிக்கும் பாத்திரம், வக்கிரகண்டி.

Cornuet, *m*, இரு சின்ன கொம்புள்ள பணிகாரம். [— உள்ள மிருகம்.

Cornupède, *adj. et m.* குளம்புள்ள,

Corogne (la), *f.* (எஸ்பஞ்தேசத்தில்) லக்கொரொஞ் நகரம்.

Corollacé, *adj.* பூவிதழ் வடிவுள்ள.

Corollaire, *m.* தொகுத்துரை, அத்தாட்சிகளின் அநுபந்தம், சாத்தியம், அநுமானவுரை, தொடர் நியாயம், அருத்தாபத்தி. || *adj.* பூவிதழுக்கடுத்த, பூவிதழியல்பான, பூவிதழால்வருகிற.

Corolle, *f.* பூவினிதழ், பூவிதழ்.

Corollitique, *adj.* பூமாலை—, தழை சுற்றியலங்கரிக்கிற.

Coromandel (côte de), சோழமண்டலம். [த்தஞ்செலுத்துகிற.

Coronaire, *adj.* இருதயத்துக்கு இர

Coronal, *adj.* நெற்றியின், முடிக்கடுத்த.

Coroner, *m.* (இங்கிலீஷ் தேசத்தில்) கடுமரண விசாரணைக்காரன்.

Coronille, *f.* ஓர்வித செடி, — பூண்டு : coronilla aculeata நீர்ச்செம்பை ; —cannabina வயல்செம்பை ; — coccinea செவ்வகத்தி ; — grandiflora அகத்தி, கரீரம், சாழையகத்தி; — picta கருஞ்செம்பை ; — sesban செம்பை.

Corossol, *m.* சீத்தா, ஆத்தாப் பழம்.

Corossolier, *m.* ஆத்தா —, சீத்தா மரம்.

Coroso, பெருதேசத்தின் ஓர்வித பனையிலிருந்துண்டாகும் சரக்கு.

Corporal, *m.* நன்மைச்சீலை, பூசைப் பாத்திரத்துக்குக் கீழ்வைக்குஞ்சீலை.

Corporation, *f.* கூட்டம், சபை, ஐக்கிய சங்கம்.

Corporalité, Corporéité, *f.* சரீரத்தன்மை, சடத்துவம், — தன்மை.

Corporel, *adj.* சரீர, சரீரத்துக்கடுத்த, சரீரம் —, உடலுள்ள.

Corporellement, *adv.* சரீரத்தன்மையாய், சரீரத்தோடு : punir — சரீர ஆக்கினையிடுதல்.

Corporification, Corporisation, *f.* திரட்டுதல், பொருள் —, சடமாக்குதல்.

Corporifier, *v. a.* சரீரமிடுதல், — பாவித்தல், திரட்டுதல், பொருள் —, சடம் —, சேர்க்கையாக்குதல். || se — சரீரமாதல், — எடுத்தல், திரளுதல்.

Corps, *m.* சரீரம், உடல், உடம்பு, தேகம், திரேகம், மெய், காயம், அங்கம். || சவம், பிரேதம், முண்டம், கபந்தம், மட்டை. || சொலா. || கட்டை, சடம், பொருள், பதார்த்தம், வஸ்து, அளவுங்கனமுமுள்ளது. || பிரதானம், முக்கியம், — ஆனது, சேர்க்கை. || சங்கம், கூட்டம், சபை.|| பட்டாளம், அணி, சேனை, படை, — வகுப்பு, பங்கு. || நூல், புத்தக —, வாசகச் சேர்க்கை. || கனம், உரம், பலம், கடுத்தம்.|| புஷ்டி.|| அக்ஷரப்பிரமாணம், — கனம்: — subtil சூட்சுமகாயம் ; — matériel ஸ்தூல தேகம் ; — céleste கிரகம் ; lutter — à — ஒருவனொருவனைப்பிடித்து மல்லுகட்டுதல்; à — perdu சாகவுந்துணிந்து, ஒன்றுக்குமஞ்சாமல்; périr — et biens ஆளுமாஸ்தியும் —, முழுதும் முழுகிப் போதல் ; corps mort: கப்பல்களை இழுத்துக்கட்ட மிதக்கிக் கொண்டிருக்கும் அல்லது தரையில் நாட்டப்பட்டிருக்கும் கட்டை ; les Corps constitués: நீதி துரைத்தன முதலான காரியங்களை நடத்த ஏற்பட்டிருக்கும் முறைமைக் கூட்டங்கள் ; le corps de l'Eglise: விசுவாசிகள் யாவரும் சேர்ந்த ஒருமிப்பு ; les corps de métier, *pl.* ஒரேதொழில்புரியும் தொழிலாளிக்கூட்டம்; — de pompe சலகுத்திரத்தின் குழல் ; — d'un arbre அடிமரம் ; — d'un acte சாதனத்தின் பிரதான பங்கு ; — de délit பாதகஞ் செய்யப்பட்ட பொருள் ; esprit de— சபையின் சுயபுத்தி, — பற்றுதல்; repas de— கூட்டத்தார் விருந்து ; rejoindre son — தன் பட்டாளத்தைச் சேருதல்; — d'armée படை வகுப்பு, படையின் பெரும்பான்மை; — de droit civil தருமசாஸ்திரப் புஸ்தகச்சேர்க்கை ; — de doctrine போதகத்தின் மூலாதாரச்சேர்க்கை ; — de preuves அத்தாட்சிகளினடங்கல், — சேர்க்கை; étoffe qui a du — கடுத்தமான சீலை ; vin qui a du — பலமுள்ள விரசம் ; prendre du — புஷ்டியாதல் ; dans le — de l'ouvrage புஸ்தகத்தின் நடுவில், — இடையில், — தொடர்ச்சியில்.

Corps de garde, *m.* காவற்கூடம்,

ட்டாணு, காவற்சேவகர்.

Corps de logis, *m.* வீட்டின் பங்கு, பிரதான வீட்டைச்சேர்ந்த தனிவீடு.

Corpulence, *f.* பருமம், புஷ்டி, தூலம், காத்திரம்.

Corpulent, *adj.* புஷ்டி —, காத்திரம் —, தசைப்புள்ள, பருத்த.

Corpusculaire, *adj.* அணுவான, அணுக்கடுத்த.

Corpuscule, *m.* அணு, பரமாணு, அமிசு, நுட்பம், சூக்குமம்.

Corradoux, *m.* கப்பலினிருதட்டுள்ளந்தரம்.

Correct, *adj.* திருத்தம் —, ஒழுங்கான, பிழையற்ற.

Correctement, *adv.* திருத்தமாய், பிழையின்றி.

Correcteur, *m.* — trice, *f. s. et adj.* திருத்துகிறவன், சீர்படுத்துகிறவன், தண்டிக்கிறவன், கண்டிக்கிறவன், — வள். || குற்றந் —, பிழைதிருத்துகிறவன், — பார்க்கிறவன்.

Correctif, *adj.* தணிக்கிற, ஆற்றுகிற, திருத்துகிற. || *m.* தணிப்பு, — ச்சொல், தணிவு.

Correction, *f.* திருத்தம், திருத்துதல், ஒழுங்கு —, சீர்படுத்துதல், பிழை —, குற்றம்பார்த்தல், — திருத்தல், பிழை, — க்குறிப்பு. || கண்டனம், கண்டிப்பு, அடக்கு, தண்டம், சிட்சை, ஆக்கினை, ஆக்கினையதிகாரம். || சொன்னதைத் தணிக்கும் — திருத்துமணி. || தணிப்பு, மருந்தின் கசப்பைத் தணித்தல் :. maison de — குற்றவாளிகளையடைக்கும் வீடு ; infliger une — தண்டித்தல், தண்டனைசெய்தல்.

Correctionnel, *adj.* தண்டனைக்குரிய, — ஆன : tribunal — குற்றத்தண்டனைக்கான நீதிஸ்தலம்.

Correctionnellement, *adv.* தண்டனைக்குரியவிதமாய்.

Correctoire, *m.* சிட்சைப் புஸ்தகம்.

Corrégidor, *m.* (எஸ்பஞ்தேசத்தில்) நகரவிசாரணைக்காரன்.

Corrélatif, *adj.* சம்பந்தம் —, பொருத்தம் —, இசைவுள்ள, — காட்டுகிற. || *m.* சம்பந்தச்சொல், — வாக்கியம்

Corrélation, *f.* சம்பந்தம், பொருத்தம், இனம்.

Correspondance, *f.* பொருத்தம், சம்பந்தம், இசைவு, ஒப்பு. || காகிதப்பழக்கம், எழுதியகாகிதங்கள், வியாபாரப்பழக்கம், — சேர்மானம், || பழக்கம், தொந்தம், சேர்மானம், பரிமாற்றம், அந்நியோந்நியம். || போக்குவரவு, நடமாட்டம், சேர்க்கும்வழி, ஐக்கம் : — *ou* voiture de —, service de — சேர்மான —, சம்பந்த வண்டி, — தபால்.

Correspondant, *adj.* சம்பந்தம் —, பொருத்தம் —, இசைவுள்ள. || காகிதச்சம்பந்தமான. || *m.* காகித —, வியாபாரச்சம்பந்தமுள்ளவன், — சம்பந்தக்காரன், வேறூரில் வியாபாரக் கூட்டாளி, அந்நியவாலனை —, மாணுக்கனை விசாரிக்கிறவன்.

Correspondre, *v. n.* காகிதச் சம்பந்தம் — ப்பழக்கமாயிருத்தல், காகிதம் வாங்கி மறுமொழியெழுதுதல். || பிரதிநேசம் — பற்றுதல் காட்டுதல், பிரதி —, பதில்செய்தல், ஒத்துவருதல், சம்பந்தமாய் —, ஒப்பாயிருத்தல் || தகுதல், பொருந்துதல், இசைதல், எதிராய் —, சேர்ந்திருத்தல், சம்பந்த —, ஐக்கியப்படுதல். || se — பொருந்துதல், இசைதல், எதிராய்—,சேர்ந்திருத்தல்.

Corrèze, *f.* (பிராஞ்சிராச்சியத்தில்) கொறேஸ் என்னும் ஆறு, — ஜில்லா.

Corridor, *m.* தாழ்வாரம், நடை, வீட்டினுட்போக்கு, — வழி.

Corrigé, *m.* திருத்தமானது, திருத்தினபிரதி, திருத்தத்துப் புஸ்தகம். || *part. de*

Corriger, *v. a.* திருத்துதல், திருத்தமாக்குதல், சீர் —, ஒழுங்குப்படுத்துதல், சரவை —, பிழைப்பார்த்தல், — திருத்துதல், பிழைகுறித்தல், குறைதீர்த்தல். || தண்டித்தல், தண்டனை —, சிட்சைபண்ணுதல், சிட்சித்தல், கண்டித்தல்.|| பரிகரித்தல், பரிகாரஞ்செய்தல். || தணித்தல், பதமாக்குதல் : — un enfant de ses défauts, les défauts d'un enfant ஓர் பிள்ளையின் துர்க்குணங்களைத் திருத்துதல். || se — திருந்துதல், சீர் —, குணப்படுதல், சீர் —, குணமாதல், தணிதல் : se—de ses défauts தன் துர்க்குணங்களைவிட்டுத் திருந்துதல்.

Corrigible, *adj.* திருத்தத்தக்க, குணமாகத்தக்க, சிட்சிக்கக்கூடிய.

Corroboratif, Corroborant, *adj.* பலமிடுகிற, உறுதிப்படுத்துகிற.

Corroboration, *f.* பலப்படுத்துதல், உறுதி, — ப்பாடு.

Corroborer, *v. a.* பல —, உறுதி —, ஸ்திர —, திடப்படுத்துதல், பலம் —, உரம் —, உறுதிகொடுத்தல், பலப்பித்தல். || se — உறுதி—, பல—, திடப்படுதல், பலமடைதல்.

Corrodant, *adj.* தின்கிற, அழிக்கிற, அரிக்கிற, காரமான.

Corroder, *v. a.* அரித்தல், அழித்தல், தின்றல், கரைத்தல். || se — அழிக்க —, அரிக்கப்படுதல்.

Corroi, *m.* தோற்பதம். || குளத்தோரத்திற்பூசின களிமண்.

Corroirie, *f.* தோல்பதனிடும் தொழில், — பட்டறை.

Corrompre, *v. a.* கெடுத்தல், அழித்தல், பழுதாக்குதல். || கற்பழித்தல், தீண்டுதல், தீட்டு —, கேடுபடுத்துதல், கேடாக்குதல், இலஞ்சத்தாலிணக்குதல், கொடையாற்கெடுத்தல், புரட்டுதல், திரித்தல், குறைத்தல், கலைத்தல், பாழாக்குதல். || se — அழிதல், கெடுதல், சிதைதல், பாழாதல், சீர்கெடுதல், அழுகுதல்.

Corrompu, *part.* அழிந்த, சீர் —, கெட்ட, கற்பழிந்த, காமாதுர, துர்மார்க்கமுள்ள, தூர்த்த, — த்தனத்துக்குள்ளான, கைக்கூலி வாங்கின.

Corrosif, *adj. V.* Corrodant. || *m.* காரமருந்து, காரம்.

Corrosion, *f.* அரிப்பு, அழிப்பு, அழிவு.

Corroyage, *m.* தோலைப் பதனிடுதல், — பதனிடுந்தொழில்.

Corroyer, *v. a.* (தோலை —, இரும்பைப்) பதனிடுதல், (குளத்தோரங்களுக்குக்) களிமண் பூசுதல், (பலவிருப்புப் பாளம் ஒன்றாகக்) காச்சியடித்தல், மரஞ்செதுக்குதல், (மணலுஞ் சுண்ணாம்பும்) கலவைபோடுதல்.

Corroyeur, *m.* தோலைப் பதனிடுபவன்.

Corrugateur, *m. ou* muscle — நெற்றி —, புருவஞ்சுருக்குநரம்பு.

Corrupteur, *m.* — trice, *f.* கெடுக்கிறவன், அழிக்கிறவன், பாவத்துக்கு இணக்குகிறவன், — வள், கற்பழிக்கிறவன். || *adj.* கெடுக்கிற, அழிக்கிற.

Corruptibilité, *f.* அழிவுள்ள சுவாபம், அழிக்கிறகுணம்.

Corruptible, *adj.* அழிவுக்குரிய, அழிவுள்ள, அழிகிற, நிலையற்ற, அநித்திய, கெடுதிக்கு —, இலஞ்சத்துக்குச் சார்புள்ள.

Corruptif, *adj.* அழிக்கிற, கெடுக்கிற.

Corruption, *f.* அழிவு, சிதைவு, கெட்டத்தனம், சீர் —, கேடு, கெடுதி, கெடுத்தல், அழிப்பு, துர்மார்க்கம், — நடக்கை, தூர்த்தத்தனம், கடமை —, கற்பு —, நீதிதப்புதல், — மீறச்செய்வதற்குத் தந்திரம், — இலஞ்சம், கைக்கூலி. || பதனழிவு, அழுகல், ஊசல், (வாக்கியப்) புரட்டு, மாறுபாடு, மாற்றம்.

Cors, *m. pl.* de Cor, மான்கொம்பின் கிளைகள்.

Corsage, *m.* உரு, வடிவு, உடம்பு, தோளிடுப்பினிடை, அதற்கான சட்டையின்பங்கு, சோலா.

Corsaire, *m.* கடற்கள்ளன்,—சோரன், கொள்ளை —, கள்ளக்கப்பல், — கப்பற்றலைவன்; உலோபி, கொடியன், இரக்கமற்றவன்.

Corse, *f.* (நடுக்கடலில்) கொர்செனுந்தீவு, — ஜில்லா. || *m.* ஷை தீவான்.

Corsé, *adj.* மிகுந்தசாறு — சுவையுள்ள.

Corselet, *m.* உடல், (வண்டுகளில்) தலைவயிற்றுக் குள்ளந்தரம், இலகுவான மார்க்கவசம்.

Corser, *v. a.* உடலுக்குத் தகுதல், — பொருந்துதல். || se — இரவுக்கை போடுதல்.

Corset, *m.* இரவுக்கை, இரவிக்கை, முலைக்கட்டு, — கச்சு, சோடம், சோலி.

Corsetier, *m.* Corsetière, *f.* இரவுக்கைதைக்கிற அல்லதுவிற்கிறவன், —வள்

Cortège, *m.* பரிவாரம், பரிசனம், பரிசாரம், ஆரவாரம், துணைவர், பரிசாரகர், வழித் —, துணை, துணையானகும்பல், தொடர்ச்சி: — d'épithètes அடைமொழித் தொடர்ச்சி.

Cortès, *f. pl.* (எஸ்பஞ் பொர்த்துகால்) அரசின் பொதுச்சங்கம். || ஷை சங்கம் ஏற்படுத்தின வருஷாந்தர வருமானம். || *s. m.* ஷை சங்கத்தான்.

Cortical, *adj.* பட்டைக்கடுத்த, தலைமூளைக்கு —, குண்டிக்காய்க்குப் புறம்பான.

Cortine, *f.* (அப்பொல்லோன் என்பவனுக்கு நேர்ந்த) பித்தளைமுக்காலி, அதின்மேல் போடும் பாம்புத்தோல்.

Cortiqueux, *adj.* கடினதோலுமுள்ள சதையுமுள்ள.

Cortone, (தொஸ்கான் தேசத்தில்) கொர்த்தோன் நகரம்.

Cortuse, *f.* ஓர் பூண்டு.

Coruscation, *f.* பிரகாசகாந்தி.

Corvéable, *adj. et s.* அமஞ்சிக்குரிய, அமஞ்சியாள்.

Corvée, *f.* அமஞ்சி, சர்க்கார்வேலை, அரமனையூழியம், கூலியற்றவேலை, — உழைப்பு, விஷ்டி. || சேவகர் மாறிமாறிச்செய்யும் வேலை, பிரியமற்ற —, பலிப்பற்ற உழைப்பு. || வழக்கமான வேலைக்கு மேல்மிச்சம்.

Corvéieur, *m.* அமஞ்சிவேலை செய்கிறவன், அமஞ்சியாள்.

Corvette, *f.* வேவுகப்பல், சின்னயுத்தக்கப்பல்.

Corvus balicassius, கருவாட்டு வாலி : — **brachyurus**, பொன்னுந் தட்டான் ; — **cornix** மணியங் காக்காய்.

Corybante, *m.* சிபேல் என்பவளுடைய பூசாரி.

Corycée, *m.* பந்துவிளையாட்டினிடம்.

Corymbe, *m.* ஒத்த உயரநிலை, — ப்பூங்கொத்து, — கனிக்கொத்து, இளம்பெண் தலைக்கோலம்.

Corymbeux, Corymbiforme, *adj.* ஒத்த உயரக்கொத்தாகிய, — கொத்து வடிவான.

Corymbifère, *adj.* ஒத்த உயரப் பூங்கொத்துள்ள. || *f. pl.* ஷ பூங்கொத்துள்ள பூண்டினம்.

Coryne, *f.* தண்டாயுத வடிவுள்ள பூச்சி.

Coryphe, *m. ou* **Corypha umbraculifera** சீதாலம், சீதாளம், சீதாளை, தளப்பம் : — **taliera** தாளி.

Coryphée, *m.* தொழிலாளிகளின் —, மதஸ்தர் —, பாடுவர் தலைவன், பாடத் துவக்குகிறவன். || முதல்வன், முக்கியமானவன்.

Coryphène, *m.* ஓர்விதமீன்.

Coryse, Coryza, *m.* சளி, சலதோஷம்.

Còs, *m.* கோசு, குரோசம், ௲-மயில்.

Cosaque, *m.* (ருசியதேசத்தின்) கொசக்கென்னுஞ்சனத்தான். || *pl.* ஷ சனக்குதிரை வீரர்.

Coscinium fenestratum, மரமஞ்சள்.

Cosécante, *f.* கோடித்திரிசாதரம்.

Co-seigneur, *m.* மானியத்தினுட்சிப் பங்காளி.

Cosinus, *m.* கோடிச்சியை, — ச்சா.

Cosmétique, *adj. et m.* தோலைமிருதாக்குகிற, — மிருதாக்குமருந்து, தோலுக்குரிய தைலம், — சுகந்த சாந்து.

Cosmique, *adj.* சூரியனுதயத்தில் — அஸ்தமிப்பிலுள்ள, — சம்பவிக்கிற.

Cosmiquement, *adv.* சூரியனுதயத்தில், — அஸ்தமிப்பில்.

Cosmogonie, *f.* உலகுற்பத்திமுறை, சகத்துற்பத்தி சாஸ்திரம், உலகமுண்டானவிதம்.

Cosmogonique, *adj.* சகத்துற்பத்திக்கடுத்த.

Cosmographe, *m.* அண்டசாஸ்திரி. — நூலாசிரியன்.

Cosmographie, *f.* அண்ட விளக்கம், — கோசம், — சாஸ்திரம், — வருணிப்பு.

Cosmographique, *adj.* அண்டவிளக்கத்து.

Cosmologie, *f.* அண்ட —, உலக சாஸ்திரம், உலகமுறைமை நூல்.

Cosmologique, *adj.* உலகசாஸ்திரத்து.

Cosmologiste, *m.* உலகசாஸ்திரி.

Cosmopolite, *m.* உலகவாசி, — குடி, — சஞ்சாரி, எந்தத்தேசமுஞ் சுயதேசமாக நேசிக்கிறவன், தேசாந்தரி, உலகெல்லாந்திரிகிறவன்.

Cosmos, *m.* உலகமுழுவதும்.

Cosse, *f.* (பயற்றின்) தோல், காய், நெற்று, கோது, உமி, சில செடிக்கனி. || நீலக்கற்பலகைச் சுரங்கத்து முதற்படலம்.

Cosser, *v. n. ou* se — தலைமுட்டிக்கொள்ளுதல்.

Cosson, *m.* அந்து, மரப்புழு. || முந்திரிகைத்துளிர், — தழை.

Cossu, *adj.* வெகுகாய் — நெற்று — ஆஸ்தியுள்ள.

Cossus, *m.* ஓர் வண்டு.

Costal, *adj.* பக்கத்து, பாரிச, பழு —, விலாவெலும்புக்கடுத்த.

Coston, *m.* பாய்மரத்தினுதாரக்கட்டை.

Costume, *m.* கோலம், உடை, உடுப்பு, — மாதிரி, உத்தியோகஸ்தர் விசேஷ உடுப்பு, நாடகர்கோலம், — வேஷம், தேசத்து விசேஷமுறைமை, — மாதிரி, — உடுப்பு, தேசாசாரம்.

Costumé, *adj.* விபரீதமான உடுப்புடன் நடனம் செய்யும்.

Costumer, *v. a.* தக்க கோலமிடுதல், — உடுத்துதல். || se — கோலமுடு

த்தல், — உடுத்திக்கொள்ளுதல்.

Costumier, *m.* நாடககோலம் செய்பவன், — விற்பவன், ஷை கோலக்காவற் — விசாரணைக்காரன்.

Coste, Costus, *m.* வாசனையுள்ள பூண்டு, — வேர்; Costus arabicus கோஷ்டம், உபறியாவி.

Cotangente, *f.* கோடிச்சாதரம்.

Cote, *f.* குறிப்புக் கணக்கக்ஷரம், சாதனதஸ்தாவேசுக்கிடும் ஒழுங்கக்ஷரம். || உண்டியல் பணமாற்றக் குறிப்பு; *ou* Cote-part தலை —, வீதம்: — mal taillée பரும்படியான வீத ஒப்பந்தம்.

Côte, *f.* விலா —, பழுவெலும்பு, பழு, பக்கம். || வமிசம். || கடலோரம், — கரை. || குழைவினிடைத் திரணை, || வங்கக்கட்டை, — கால், ஏராவிற் சேருங் கப்பற்பக்கத்து உத்திரம். || மலைச்சாரல். || இலை நரம்பு, பத்திர நாடிகை. || serrer les — நெருக்கம் பண்ணுதல்; aller — à — கிட்டப் போதல்; à mi — மலைநடுச்சாரலில்; mettre quelqu'un à la — ஒருவனை அலட்டுதல்.

Côté, *m.* விலாப் —, பக்கம், புறம், புடை, திசை, திக்கு. || பாரிசம், கட்சி, திறம். || உறவின்வழி. || நோக்கம், முகம்: — de triangle திரிகோண புசி, — புசை, — புசம், — புயம், — வாகு; — perpendiculaire d'un triangle உச்சிரயம், கோடி; — de rue வாடை; à — பக்கத்தில், கிட்ட; du — de, en faveur de பக்கமாய், சார்பாய், ஒருவனுக்கு அனுகூலமாய்; de — குறுக்கே, சாய்வாய், தனியே; de tous côtés எப்பக்கத்திலும், எவ்விடத்திலும்; donner à — இலகு தப்பிப்போடுதல்; mettre de — தனியே —, பத்திரமாய் வைத்தல், பேசாமல் விடுதல்: laisser de — விட்டுவிடுதல்; regarder de — இகழ்ச்சியாய் —, கோபமாய் நோக்குதல்; le — paternel, maternel தகப்பன் —, தாய்வழி. [ர்பு, மேடு, சிறுகுன்று.

Coteau, *m.* குன்றின் சாரல், — சா

Côtelé, ée, *adj.* விலாவைக் காட்டும் பேர்வழிக்குச் சார்பாக, — பேர்வழி பக்கமாய்.

Côtelette, *f.* விலாவெலும்பிறைச்சி, இறைச்சிகூடிய விலாவெலும்பு.

Coter, *v. a.* கணக்குப் போடுதல், இலக்கம் —, விலைகுறித்தல், உதாரணங் காட்டுதல், நியமித்தல்.

Coterie, *f.* கட்சிக்காரர் —, நேசர் கூட்டம், தோழன்.

Cothurne, *m.* பூர்வ நாடகத்தோற் பரம். [டியாரம் என்னுந் துறை.

Cotiari, (இலங்கைத்தீவில்.) கொட்

Cotice, *f.* அகலமில்லாக் கச்சு.

Côtier, ère, *adj.* கடற்கரைக் கடுத்த, — கரையில் செல்லுகிற, — கரை நன்றாயறிகிற || *m.* *ou* pilote — கடற்கரை நன்றாயறிகிறமாலுமி.

Cotignac, (பிராஞ்சு தேசத்தில்) கொத்திஞாக் நகர். || *m.* அதின் பழத்தித்திப்பு.

Cotillon, *m.* ஸ்திரீயுள்ளங்கி, பெண்களாடை, பாவாடை. || ஓர் கூத்து, அதினிராகம்.

Cotinga, *m.* ஓரழகியபக்ஷி. [நசிதல்.

Cotir, *v. a.* (கனி) நசித்தல். || se—

Cotisation, *f.* தலைவீதம், — வரி, கூட்டத்தார் செலவின் பங்கு, தலைவீதம் போடுதல், — கொடுத்தல்.

Cotiser, *v. a.* தலைவீதம் போடுதல், — விதித்தல். || se — அவரவர் தன் வீதம் நியமித்தல், — வீதங்கொடுத்தல்.

Cotissure, *f.* கனிநசிவு.

Coton, *m.* பஞ்சு, துலவம், தூலம். || சுணை. || இளமயிர், இளந்தாடி: — ordinaire *ou* herbacé பருத்திப்பஞ்சு; — rouge அலத்தகம், அலத்தம், செம்பருத்திப் பஞ்சு; — soyeux du bombax இலவம்பஞ்சு; séparer le — de sa graine பஞ்சரைத்தல்; le carder பஞ்சு பன்னுதல்; le battre avec un arc பஞ்சுகொட்டுதல்; rouleau de — prêt à être filé பஞ்சுகொட்டை, பஞ்சி, பஞ்சிகை; fil de — பஞ்சினூல்; le filer பஞ்சுக்கொட்டை நூற்றல்; mettre dans du — பஞ்சிலே வைத்தல், பேணுதல், ஓம்புதல். [வை.

Cotonnade, *f.* ஓர்வித பஞ்சுப்புடை

Cotonné, *part.* சுருண்ட, சுணைமூடிய, பஞ்சு சிதறிய.

Cotonner, *v. n. et* se — சுணை —, பஞ்சுபிடித்தல், மிருதுவாதல், நுகைதல், பஞ்சுபோலாதல்.

Cotonnerie, *f.* பருத்திவிளை நிலம், பஞ்சுவேலையாலை. [ள்ள, நுகைவான.

Cotonneux, *adj.* பஞ்சு —, சுணையு

Cotonnier, *m.* பருத்தி, அனந்தர் : — rouge செம்பருத்தி, அலத்தம், அலத்தகம் ; — soyeux அகிகை, அபூரணி, கோங்கு, இலவு, இலவமரம்.

Cotonnier, ère, *adj.* பஞ்சுக்கடுத்த.

Cotonnine, *f.* மட்டிப்பஞ்சுப்புடவை.

Coton-poudre, *m.* திராவகத்தின் உதவியால் வெடிக்கும் பஞ்சு.

Cotopaxi, *m.* (தென் அமேரிக்காவில்) கொத்தொப்பக்சி என்னு மக்கிணிமலை.

Côtoyer, *v. a.* கரைநெடுக—, ஓரத்திற்போதல், கரைகண்டு — பிடித்தோடுதல்: — *ou* se — பக்கத்தில் போதல்.

Cotre, *m. V.* Cutter.

Cotret, *m.* சின்ன விறகுக்கட்டு : huile de — தடியடி.

Cottage, *m.* குடில், குடிசை, அழகிய சிற்றில்,

Cotte, *f.* பெண்ணங்கி, சட்டை. || ஓர்மீன் : — d'armes மார்க்கவச மேற்சட்டை, சீரா, சுடாரி, — de mailles கண்ணறை மார்க்கவசம், சீரா.

Cotuteur, *m.* (அநாதப்பிள்ளையின்) துணைக்காவலன், கூடக் காப்போன்.

Cotwal, *m.* கொத்தவால்.

Cotyle, *m.* எலும்பின்குழி, கிரோக்கரில்) ஓரளவை.

Cotylédon, *m.* பருப்பு, வீசப்பிரதம். || ஓர் பூண்டு.

Cotylédoné, *adj.* பருப்புள்ள.

Cotylet, *m.* ஓர் பூண்டு.

Cotyloïde, *adj.* குழிவடிவான.

Cou, *m.* கழுத்து, மிடறு, கண்டம், கந்தரம், களம். || (பாத்திர) கழுத்து : — de cygne அன்னக்கழுத்து, முன்னஞ்சக்கரம் வைக்கிறதற்கு வண்டியின் வளைந்த முன்பங்கு ; se casser le — கழுத்துடைதல், தன்காரியங்களைக் கெடுத்தல்.

Coua, *m.* (அப்பிரிக்காவில்) குக்குறுவான். [வித காட்டுக்குதிரை.

Couagga, *m.* (அப்பிரிக்காவில்), ஓர்

Couard, *s. et adj.* கோழை, —யுள்ள.

Couardement, *adv.* கோழைத்தனமாய். [ரியமின்மை.

Couardise, *f.* கோழைத்தனம், தை

Couchage, *m.* கிடத்துதல், படுத்தல், படுக்கை, — க்கூலி, படுக்கை — கட்டில் முஸ்தீது, களையைப் பூமியில் கிடத்துதல்.

Couchant, *adj.* அஸ்தமிக்கிற, படுக்கிற : soleil — அஸ்தமிக்கிற சூரியன், குறைகிற அதிகாரம். || *m.* மேற்கு. || *m.* சூரியனஸ்தமிக்குந் —, மேல்திசை, படுவான். || கிழப்பிராயம், சாய்வு, சரிவு.

Couche, *f.* படுக்கை, கட்டில், சயனம், மஞ்சம், பள்ளி. || பிரசவம், பிள்ளைப்பேறு, பிரசவ —, பேறுகாலம். || குழந்தைத்துணி. || படை, அடுக்கு. || (தோட்டப்) பாத்தி. || பூச்சு. || (விளையாட்டில்) பந்தயம் : être en—, faire ses — பிரசவித்தல் ; une — de chaux சுண்ணும்புப் பூச்சு ; — ligneuse மரவிருத்தியி னடையாளமான உள் வட்டவடிவு.

Couché, *part.* படுத்த, அஸ்தமித்த, எழுதிய.

Couchée, *f.* வழியில் தங்கல், — தங்குமிடம், — தங்குங்கூலி.

Coucher, *v. a.* கிடத்துதல், படுத்துதல், படுக்கவைத்தல், கட்டிலிற்போடுதல். || வீழ்த்தல், வீழ்த்துதல். || சாய்த்தல், சாய்வித்தல். || பரப்புதல், பூசுதல். || எழுதுதல், எழுதிவைத்தல். || பந்தயம்போடுதல்: — par terre, sur le carreau தரையில் வீழ்த்துதல், அடித்துக் கொல்லுதல்; — sa plume இறகுசாய்த்தல் ; — par écrit எழுதிவைத்தல், — en joue துப்பாக்கி நேரே வைத்தல், நாடிப்பார்த்தல். || *v. n.* படுத்தல், இரவில் தங்குதல். || se — படுத்தல், படுத்துக்கொள்ளுதல், கிடத்தல். (கிரகம்) அஸ்தமித்தல்.

Coucher, *m.* படுத்தல், படுக்கிற நேரம், — விதம், படுக்கை, — முஸ்திப்பு, (கிரக) அஸ்தமிப்பு : — du roi அரசன் படுக்கு முன்னே கண்டுபேசல் ; petit — du roi அரசன் உடுப்பு கழற்றும் போது கண்டுபேசல்.

Couchette, *f.* படுக்கை, சின்னகட்டில்.

Coucheur, *m.* euse, *f.* கூடப் படுக்கிறவன், — வள். || செங்கற்காரன், கடுதாசி—, தாள்செய்பவன். || mauvais— கூடவாழ்கிறதற்குத் தகாதவன்.

Couchis, *m.* மரப்பாலத்தின் தளவரிசைக்கீழுள்ள மணல் மண்படை. ||

வளைவின் சாரம்.

Couci-couci, *adv.* ஏறக்குறைய, நடுத்தரமாய், மத்திமமாய்.

Coucou, *m.* குக்குறுவான், குக்குறுப்பான், — குரலைப்பாவிக்குஞ் சீக்கற்குழல். || ஓர்வித மரக்கடியாரம். || ஓர்வித வண்டில் : — indien குயில்.

Coude, *m.* முழங்கை, கூர்ப்பரம். || வளைவு, கோணல்.

Coudé, *part.* வளைந்த, வளைவுள்ள.

Coudée, *f.* முழம், முழக்கோல்.

Cou-de-pied, *m.* புறங்கால், புறந்தாள், புறவடி, காற்படம், கணுக்கால், பரடு.

Couder, *v. a.* வளைத்தல், முடக்குதல், (சட்டைக்கைக்கு) முழங்கை வடிவுகொடுத்தல். [வித மான்.

Coudous, *m.* (அப்பிரிக்காவில்) ஓர்

Coudoiement, *m.* முழங்கையால் இடித்தல்.

Coudoyer, *v. a.* முழங்கையால் தட்டுதல்: se— ஒருவனொருவனை ஷை தட்டுதல். [சோலை.

Coudraie, *f.* குதிறியனொன்னு மரச்

Coudre, *m.* *V.* Coudrier.

Coudre, *v. a.* தைத்தல், புனைதல், துன்னுதல். || சேர்த்தல், இசைத்தல்.

Coudrement, *m.* Coudrer, *v. a.* பதனிடுந்தோல்களைத் தொட்டியிற் போட்டுப்புரட்டுதல்.

Coudrette, *f.* *V.* Coudraie.

Coudrier, *m.* ஓர் மரம்.

Couenne, *f.* கொழுப்பான பன்றித்தோல். || இரத்தக்கிட்டம்.

Couenneux, *adj.* ஷை தோல்போன்ற, ஷை கிட்டமுள்ள.

Couet, *m.* கப்பலின் பாயடிக்கயிறு, — பாய்களை வேறுபக்கத்தில் செலுத்துங் கயிறு. [சயனம், — மெத்தை.

Couette, *f.* இறகுமெத்தை, தூவி

Coufle, *f.* நிலவாகை மூட்டை.

Couguard, *m.* (பெருதேசத்தின்) சிங்கம், செம்புலி.

Couil, *m.* குயில், கோகிலம், அந்நியம், அந்நியபிருதம், — புட்டம்.

Couillard, *m.* கப்பலின் பெரும்பாய்மேலே பிணைக்குங்கயிறு.

Couji, *m.* குழி, ஓர் நிலத்தளவை, காணியின், நூறும்பங்கு ௱ற-சதுரமேத்திறு.

Couladoux, *m. pl.* பாய்மரக் கயிற்றிழுப்புக்கயிறு.

Coulage, *m.* சிந்துதல், பொசிவு, பீப்பா ஒழுகுதல், — ஒழுகுநஷ்டம். || ஊழியரழிப்பு, — திருட்டு. || பொங்கின சாம்பல்நீர் வார்த்தல்.

Coulamment, *adv.* தாராளம் —, எளிதாய், எளிதான —, இயல்பான நடையாய், ஓடுகிறவிதமாய்.

Coulant, *m.* சரியுமோதிரம், — வளையம், சரப்பணிமேல் சரியும் வைரமணி, கொக்கி, தளிர்.

Coulant, *part.* சரியாய் —, ஓடுகிற, எளிதான, இயல்பான, பிரியமான.

Coule, *f.* சந்நியாசி சட்டை.

Coulé, *m.* பலசுர ஒன்றிப்பு,—தொடர்ச்சி, — சரிவு. || கூத்தின் நடை, வார்ப்புவேலை. || சரவைவண்ண இசைவு, — முழுமை. || இருதந்தக்குண்டு துடர்ச்சி. || *part.* வடிகட்டின, அமிழ்ந்தின, நாசமான, வார்க்கப்பட்ட.

Coulée, *f.* (ou écriture —) சாய்த்துக் கூட்டிய எழுத்து. || உருகின உலோகம் ஓடும் வழி, — துவாரம். || (முசல் மான் முதலியவற்றின்) சிறுவழி, இரு சிறுகாட்டின் நடுவில் நெருங்கிய புல்லிடம்.

Coulement, *m.* ஓடுதல், வடிவு, சரிவு:— d'épée எதிராளி கத்தியின் நெடுகத் தன்கத்தியைச் சரித்தல்.

Coulequin, *m.* ஓர் மரம்.

Couler, *v. n.* ஓடுதல், சிந்துதல், சொரிதல், வடிதல், சுரத்தல், புறப்படுதல், பாய்தல். || ஒழுகுதல், ஒழுக விடுதல். || கடந்துபோதல், செல்லுதல், பரம்புதல். || பிஞ்சு —, பூ அழிதல், வடுக்காதிருத்தல். || சரிதல், வழுக்குதல், சரிந்துவிழுதல், வழுவுதல், நழுவுதல், மெதுவாய்ப்போதல், நுழைதல், அமிழ்தல், அமிழ்ந்துபோதல், அழிதல், கெடுதல்:— de source தாராளமாய் ஓடுதல், இயல்பாய் வருதல் : — à fond,— bas அமிழ்ந்திப்போதல். || *v. a.* வடித்தல், வடிகட்டுதல். || செலுத்துதல், நுழைப்பித்தல், போக்குதல், கடப்பித்தல், இலேசாய் —, மெதுவாய் வைத்தல். || பலசுரங்களை இசைத்தல். || உருக்கி —, வார்த்தல். || நாசமாக்குதல், அமிழ்த்துதல், முழுதுந் தீர்த்தல், முடித்தல் ; — la lessive பொங்கின சாம்பல் நீர் வார்த்

தல்; — ses jours தன் நாட்களைப் போக்குதல்; — une pièce fausse கள்ளநாணயத்தை உபாயமாய்ச் செல்லுவித்தல்; — à l'oreille காதிலே சொல்லுதல்; — un canon பீரங்கிவார்த்தல்; — bas அமிழ்த்துதல்; — à fond அமிழ்த்துதல், நாசமாக்குதல், தீரவிளக்குதல், முடித்தல்; vous m'en coulez என்னை மோசம் போக்குகிறீர்கள். || se — இரகசியமாய் நுழைதல், சரிதல், கெடுதல், முழுகிப்போதல், நிர்மூலமாதல்.

Couleur, *f.* நிறம், வன்னம், வண்ணம், வர்ணம், வருணம், சித்திரவன்னம், சாயம். || நிறக்காந்தி. || சாயல், தோற்றம், போக்கு சாக்கு. || கோட்பாடு. || கொடி, துவசம், விருது. (சூதாடுகடுதாசியின்) நிறம், வகை: homme de — கறுப்புநிற —, சாதிக்கலப்புள்ள மனுஷன்; habit de — சாயந்தோய்ந்த, — வெள்ளைகறுப்பல்லாத சட்டை; pales — வெளுவெளுப்பாக்குகிற வியாதி; prendre — நிறம் —, தீர்மானமாதல்; montrer une —, faire voir des — எய்த்தல்; montrer ses — தன் கொடியேற்றுதல்; — nationales அரசின் கொடி. (சிலவிசை இந்தச்சொல் ஆண்பாலு முரிச்சொல்லுமாம்) la — de feu நெருப்பு நிறம்; ruban — de feu நெருப்பு நிறமான நாடா.

Couleuvre, *f.* விஷமற்ற —, ஓர் பாம்பு. [டி.

Couleuvreau, *m.* ஷை பாம்பின் குட்

Couleuvrée, *f.* ஓர் படர்பூண்டு.

Couleuvrine, **Coulevrine**, *f.* ஓர் நெடும்பீரங்கி, ஆதீனம்: être sous la — de நெடும்பீரங்கியெட்டுந் தூரத்தில் —, ஆதீனத்திலிருத்தல்.

Couli, *m.* கூலியாள், கூலிக்காரன்.

Coulis, *m.* குழம்பு, இறைச்சி —, பருப்புச்சாறு. || சந்துகளில் வார்க்கும் நீராளசாந்து, — சுண்ணாம்பு. || *adj.* vent — சந்து —, வெடிப்பு வழியாய் வருங்காற்று.

Coulisse, *f.* குடைவு, அதிற்செல்லுங்கதவு, — சென்னல், துவாளிப்பு. || நாடாசருக்குஞ் சட்டைப்பங்கு. || நாடகமேடைப் பக்கத்துவழி, — ஒளிப்பிடம், அதுகளினிடையந்தரம். || நாடகக்காரர், நாடகசாலை.|| பணவியாபாரச்சாலையின் முறைதப்பி அவ்வியாபார நடத்துகிறவர்கள் நிற்குமிடம், — கூடின கூட்டம்: faire des yeux en —, regarder en — கடைக்கண்ணால் நோக்குதல்; intrigue de — நாடகத்தொடுப்பு.

Coulissé, *adj.* குடைவுள்ள, ஒளிப்பிடமுள்ள. [குடைவு.

Coulisseau, *m.* சிறு துவாளிப்பு, —

Coulissier, *m.* நாடகமேடையின் ஒளிப்பிடங்களிற் சஞ்சரிக்கிறவன், பணவியாபாரச்சாலையின் முறைதப்பி யவ்வியாபாரம் நடத்துகிறவன்.

Couloir, *m.* இரு அறைகளுக்குள்ள நடை, — வழி, நாடகசாலையறைகளின் பின்வழி. || வடிசீலை: — de la bile பித்தம் வடியும் வழி

Couloire, *f.* துளையுள்ள வடிபாத்திரம்.

Coulpe, *f.* குற்றம், தப்பிதம்.

Coulure, *f.* பூவினழிவு, சிந்துதல், உருகிச்சிந்துகிற உலோகம். || *pl.* வலையின் அடியிலும் மேலுங்கட்டிய குதிரைமயிர்க் கயிறு.

Coumbacônam, கும்பகோணம், குடந்தை, குடமூக்கு, கும்பை.

Coup, *m.* அடி, கொட்டு. || குத்து, தாக்கு, முட்டு, இடி, அறை, தட்டு. || வீச்சு, அடிப்பு. || சடுதியான —, சம்பவம், எற்பாடு. || விசை, தரம், வாட்டி, தடவை. || குடிப்பு, ஒருவிசையிற் குடிப்பது. || வெடி, — ச்சத்தம், ஒலி, சத்தம். || ஒருவிசைக்குரிய மருந்து,— இரவைத்திட்டம். || விளையாடும் வகை, விளையாட்டின் அதிஷ்டம். || கிரியை, செய்கை, கருமம், காரியம். முயற்சி. || கேடு, கஸ்தி: — de poing குட்டு, முஷ்டி, — ச்சண்டை; en donner குட்டுதல், en recevoir குட்டப்படுதல்; — de langue அவதூறன் பேச்சு; — de main உதவி, ஒத்தாசை; — de maître மிக சாமர்த்தியமான செயல்;— de foudre ஒருபோதும் நினைத்திராதசம்பவம்; — de soleil வெயிலடி, சூரியகாந்தி வீச்சு; — de tonnerre இடிமுழக்கம்;— de fusil. de canon வெடி; வெடில்; fusil à 2 — இருகுழல் துப்பாக்கி; porter — குத்துதல், பலித்தல், கனமான காரியமாயிருத்தல்; — de filet வலைவீச்சு; — de sang இரத்தப்பெருக்கம்; — de Jarnac நினையாத

துரோகம், — துரதிஷ்டம்; — de hasard தற்செயல் சம்பவம்; — monté எற்கனவே யோசனைசெய்யப்பட்ட காரியம்;—d'Etat பலவந்தத் தேசப்புரட்சி; du premier—முதல்தடவையிலேயே, துவக்கத்திலேயே; sans — férir கஷ்டமின்றி, சண்டையின்றி;—de théâtre நாடகசாலையின் சடுதியான மாற்றம்; être sous le — d'une condamnation ஆக்கினைத் தீர்வையிடப்பட்டிருத்தல்; bon — நல்ல அடி, பிரயோசனமான காரியம்; mauvais—ஆக்கினைக்குரிய செய்கை, manquer son — பலிக்காதிருத்தல், இலக்கு தப்பி—, தப்பிப்போதல்; — du ciel, d'en haut, de la Providence ஆச்சரியமான சம்பவம், தேவாதீன —, தேவசெயல்; — de tête, — de désespoir துர்யோசனையால் —, அவநம்பிக்கையாற் செய்த கிரியை; traduire à — de dictionnaire அகராதிபுரட்டிப்புரட்டி மொழிபெயர்த்தல்; — de cloche மணியடிப்பு,— த்தட்டு;—de tambour தம்பூரடிப்பு: — de plume இறகின் கீறு; — de vent புசல், காற்றுப்பெருக்கம், பெருங்காற்று; — de feu துப்பாக்கியாலான காயம், நெருப்பின் வேகம், — அதிகரிப்பு, மிகுந்த அலுவல்; à — sûr நிச்சயமாய், சந்தேகமற; après — காரிய முடிந்தபின்; pour le — இந்தவிசை; — sur — இரட்டித்திரட்டித்து, ஒன்றுக்குப்பின் ஒன்று, தொடர்ச்சியாய்; encore un — இன்னமொருவிசை; à tous — ஒவ்வொருக்ஷணத்திலே, அந்தந்த விசைக்கு, அடிக்கடி; tout à — சடுதியாய்; tout d'un — உடனே, ஒருவிசையாய், ஒருமிக்க.

Coupable, s. *et adj.* குற்றவாளி, — ஆன, குற்றம் —, தப்பிதமுள்ள, பாவமான. [ளங்கலத்தல்.

Coupage, *m.* வெட்டுதல், இருநீரா

Coupant, *m.* கூர்மை, கூர், கருக்கு. || *part.* வெட்டுகிற, கூருள்ள, கூர்ந்த.

Coupe, *f.* பான —, பாத்திரம், கிண்ணம், கலயம். || பூசைப்பாத்திரம். || வெட்டு, வெட்டுதல், அறுப்பு, வெட்டும் —, அறுக்கும்வகை, வெட்டின —, அறுத்தவிடம், ஒருவருஷத்தில் வெட்டுங் காட்டின் பங்கு, உச்சிக்கு நேராய் அறுத்த கட்டுக்கோப்பின் சித்திரம், — பணிக்கு, கல்வெட்டும் — கொத்தும் வகை. || பிரசங்க வசனமுதலியவற்றின் வகுப்பு, — பிரிவு. || பங்கு, பிரிவு, கூறு, உறுப்பு, சூதுக்கடுதாசிகளை யிருபங்காய்ப்பிரித்தல், அதிலே தனக்கில்லாத நிறத்தை முக்கியமாக நியமித்தல். || நீஞ்சுகையில் தண்ணீர் பிரிக்கும் விதம்: être sous la — de quelqu'un ஒருவன் அதிகாரத்துக்குள்ளிருத்தல், — கோபத்துக்கு எதுவாயிருத்தல்.

Coupé, *m.* நடனநடை, (சிலம்பத்தில்) ஓர்வித குத்து. || ஓர்வித வண்டி. || இரதத்தின் முன்பங்கு. || *part.* அறுபட்ட, அறுப்புண்ட, அறுப்பான, வெட்டுண்ட, விதைவாங்கப்பட்ட, பிரிந்த, பிரிக்கப்பட்ட, தண்ணீர் கலந்த.

Coupeau, *m.* மலையுச்சி.

Coupe-cercle, *m.* வட்டமாயறுக்குங்கருவி. [முறையாய்.

Coupe-cul (à), சூதாடும் ஒற்றை

Coupe-gorge, *m.* கொலை —, வஞ்சனையிடம்.

Coupe-jarrets, *m.* கொலைபாதகன், சண்டாளன், சண்டைப்பிரியன்.

Coupe-légumes, *m.* கீரைகாயறுக்குங்கத்தி.

Coupellation, *f.* புடமிடுதல்.

Coupelle, *f.* குகை, புடமிடும் பாத்திரம். || பீரங்கித்தோட்டாவில் மருந்திடுங் கரண்டி: or de — சுத்ததங்கம், உயர்ந்த மாற்றுப்பொன்; passer à la — புடமிடுதல், பரிசோதித்தல், பரிக்ஷிக்க —, சோதிக்கப்படுதல்.

Coupeller, *v. a.* புடமிடுதல்.

Coupe-paille, *m.* வைக்கோலறுக்குங்கருவி. [டும் கத்தி — கருவி.

Coupe-papier, *m.* காகிதம் வெட்

Couper, *v. a.* அறுத்தல், வெட்டுதல், தறித்தல், சேதித்தல், அரிதல், கண்டித்தல், துண்டித்தல், கொய்தல், கீறுதல், நறுக்குதல், கத்தரித்தல், வெடிப்பித்தல். || விரைவாங்குதல், நலமெடுத்தல். || சட்டை கத்தரித்தல். || பிரித்தல், பிரிவாக்குதல், வகுத்தல், சூதாடுகடுதாசிகளை யிரண்டாய்ப் பிரித்தல். || (நீராளத்தில்) தண்ணீர் கலத்தல். || கூர்மையாய் —, கூராயிருத்தல். || தடுத்தல், மறித்தல்; — quelqu'un ஒருவனுக்குக் குறுக்கே போதல்: —le che-

min, les vivres ; வழி —, இரஸ்துகளை —, பிழைப்புத்தடுத்தல் ;— la parole, la voix பேச்சை — குரலைத்தடுத்தல் ; — dans le vif கடுமையான ஏற்பாடுசெய்தல் ; — court சுருக்கத்தில் முடித்தல் ; — au plus court அதிக சுருக்கமான வழிபோதல் ; le vent—le visage காற்று அகோரமாய் முகத்திலடித்தல் ;—une comédie ஓர் நாடகம் பல பிரிவாக்குதல் ; — du vin இரசத்தில் தண்ணீர்கலத்தல். || se — அவரவனை வெட்டுதல், தனக்கு அறுத்தல், அறுக்கப்படுதல், கால்கள் தட்டிக் காயப்படுதல், கிழிதல், தோல்வெடித்தல், குறுக்கேபோதல், ஒவ்வாததைச் சொல்லுதல், முன்சொன்னதுக்கு விபரீதமாய்ச்சொல்லுதல். [வெட்டுங்கருவி.

Coupe-racines, *m*. வேர்வெட்டி—,

Couperet, *m*. கசாப்புக்காரர் கத்தி, அமுக்கொத்தி.

Couperose, *f*. துத்தம், துருசி, ஆதிக்கல்நாதம், — கல்பேதம். || முகத்திற்சிவந்தபரு.

Couperoser, சிவந்த வருணமாக்குகிறது.

Couperosé, *adj*. சிவந்த பருவுள்ள.

Coupe-tête, *m*. கவடிப்பாய்தல்.

Coupeur, *m*. (சட்டை) அறுக்கிறவன். || *m*.—euse, *f*. திராட்சமறுக்கிறவன், — கொய்கிறவன்,— வள். || சூதுக்கடுதாசி யெடுக்கிறவன்: — de bourse முடிச்சுமாறி, முடிச்சவிழ்க்கி, பணப்பை யறுக்கிறவன்.

Couplage, *m*. கட்டுமரத்தின் ஒவ்வொருபங்கு.

Couple, *f*. இரண்டு, இணை, துவயம். || இருநாய்க்கட்டு. || *m*. சோடு, இணை. || கப்பலேராவில் நின்று எதிரான விருவுத்திரம் : montrer un — de futurs époux சோடுகாட்டுதல்.

Coupler, *v. a*. சோடுசோடாய்க்—, சோடுகட்டுதல், பிணைத்தல், கூட்டுதல், ஒன்றாய்த்தைத்தல்.

Couplet, *m*. பாட்டு, செய்யுள். || நாடகன் ஒவ்வோர்விசைக்குச் சொல்லும் வாக்கியம். || *pl*. பிணைந்த இரட்டைக்கொளுவி.

Coupoir, *m*. கடினபொருளை — நாணய மறுக்குங் கருவி.

Coupole, *f*. கும்மட்டம், தூபிகை, கும்மட்டத்தின் சிறு தூபிகை, பிள்ளைத்தோம்பு.

Coupon, *m*. துணித் —, சீலைத் —, சகலாத்துத் —, துண்டு. || வட்டி —, பங்குச்சீட்டு, அதின் பங்கு. || கட்டுமரத்தின் பதினெட்டாம்பங்கு: ||—d'action வியாபார வருமானப்பங்கு.

Coupure, *f*. அறுப்பு, வெட்டு, நறுக்கு, கீறு, கத்தரிப்பு, சேதனம். || தள்ளுபடி, கழிப்பு. || இடிந்த மதிளின் பின் அகழ், — வாடி. || சிறுவாய்க்கால், நீர்வடிவழி.

Cour, *f*. வாசல், முற்றம், முற்றவெளி. || அரமனை, அரமனையார், கொலுமண்டபம், அரசன் சமுகத்தார், — பரிவாரம், அரமனை சீவியம். || உபசரணை, நேசநாடுதல். || கோர்ட்டு, மேலான நீதிஸ்தலம், — ஆசனம்,— நடுவர் : — céleste மோக்ஷம் ; homme de — அரமனை நடையுள்ளவன் ; mettre hors de — வியாச்சியத்துக் இடமில்லையென்று தீர்த்தனுப்புதல்; faire sa — உபசாரமாய் நடந்துகொள்ளுகிறது ; — d'appel மறுவிசாரணை நீதிசாலை ; eau bénite de — வீண் வார்த்தைப்பாடுகள்.

Courage, *m*. தைரியம், துணிவு, வீரம், திடன், திடாரிக்கம், ஆண்மை, முயற்சி, ஊக்கம், வேகம், மனப்பற்றுதல். || இருதயம், ஆத்துமம், ஆன்மா. || வீரன், தைரியவான். || கன்னெஞ்சத்தனம், கொடுமை. || *int*. கெட்டி —, கெட்டி, தைரியமாய்.

Courageusement, *adv*. தைரியம் —, வீரம் —, வேகம் —, ஆண்மை —, துணிகரமாய்.

Courageux, *adj*. தைரியம் — திடாரிக்கம் —, துணிகரம்—, வீரம்—, ஆண்மையுள்ள.

Couramment, *adv*. வேகம்—, சுறுக்கு —, தாராளம் —, எளிதாய்.

Courant, *adj*. ஓடுகிற, பின்செல்லுகிற, செல்லுகிற, நடக்கிற, இப்பொழுதுள்ள, தற்காலத்து. || பொது வழக்கமான, வழங்கிய ; monnaie — செல்லுகிறபணம்,—காசு ; année, mois—நாளது வருஷம், — மாசம் ; prix — அகவிலை, வழங்குகிற விலை; eau courante எப்போதும் ஓடும் ஜலம்; toise— நீளத்தில் பாகத்தாலளப்பு ; tout — *adv*. சுறுக்

காய், வேகம்,— விரைவாய், தத்தளியாமல்.

Courant, *m.* ஓட்டம், நீரோட்டம், செல்லுதல், நடை, வழக்கம் : — de l'opinion பொதுஜன அபிப்பிராயம் ; — électrique மின்சாரம் கம்பிவழியாய்ச் செல்லுதல்; — marin கடல் நீரோட்டம் ; — d'air காற்று நெருங்கி வீசுமிடம்; le — de l'eau நீரோட்டம்; un — d'eau ஓடை, சிற்றாறு ; dans le — de l'année இந்த வருஷத்துக்குள்ளாக ; le 10 du — நாளது மாசத்தின் பத்தாந்தேதி ; le — du marché அகவிலை, கடையில் வழங்கியவிலை ; le — des affaires காரியங்களின் நடை, நடக்கிற காரியங்கள் ; mettre au — d'une chose நடக்கிற காரியத்தை — வழக்கத்தை அறிவித்தல் ; tenir au — காரியநடபடியை அறிவித்தல்; se tenir au —, se mettre au — தாமதமாய் வேலைவிடாதிருத்தல், நடக்கிற காரியங்களைக் கேட்டறிதல் ; — de comble முகட்டின் நீளம்.

Courante, *f.* பழயநடனம், அதினிராகம், சுறுக்கான எழுத்துவகை. || பேதி, வயிற்றுப்போக்கு, — க்கழிச்சல்.

Courantin, *m.* கயிற்றின் மேலோடும் வாணம்.

Courbatu, *adj.* களைத்த, சோர்ந்த.

Courbature, *f.* இளைப்பு சோர்வு.

Courbaturer, *v. a.* இளைப்பித்தல், சோர்வித்தல் ; se — இளைத்தல், சோர்தல்.

Courbe, *adj.* வளைந்த, வளைவான, பிறை —, வில்வடிவுள்ள. || *f.* வளைந்த வரி, — விட்டம். || தோணியிழுக்குங் குதிரையணை. || குதிரைக்கால் வீக்கம், — காய்ப்பு.

Courbé, *part.* வளைந்த, சாய்ந்த, மடங்கிய, கோணலான, கோணிய.

Courber, *v. a.* வளைத்தல், குனித்தல், குணக்குதல், வில்வடிவாக்குதல், சாய்த்தல், கோணுவித்தல், நெளித்தல். || *v. n.* வளைதல், சாய்தல். || se — வளைதல், குனிதல், குணங்குதல், சாய்தல், கோணுதல், கூனுதல், கீழ்ப்படிதல், தாழுதல்

Courbette, *f.* இரு முன்னங் காலுந் தூக்கித்தாழுதல். || நீசவணக்கம், — உபசரணை.

Courbure, *f.* வளைவு, குனிவு, வில்வடிவு, நெளிவு, கோணல், வளைப்பு, கோணம் : — de corniche தவுக்கார்.

Courcailler et courcallu.

Courcaillet, *m.* காடைக்கூவல், அதைப்பாவிக்குந் தீபகக்குழல்.

Courcet, *m.* தழைகழிக்கும் வளைந்த பெருங்கத்தி.

Courçon, *m.* பீரங்கியச்சினிருப்புக் கட்டு.

Coureau, *m.* தானியத்துக்குரிய தோணி, பெரியதோணிக்குச் சரக்கு கொண்டுபோகுஞ் சிறுதோணி. || பூமிக்குந் தீவுக்கும் நடுவே —, திடருக்குள்ளே நெருங்கிய வாய்க்கால்.

Courée, *f.* கப்பலுக்குப் பூசுதற்குரிய கலப்பு.

Coureur, *m.* ஓடுகிறவன், ஓட்டக்காரன். || திரிகிறவன், நாடோடி, போக்கன், போக்கிரி. || தூர்த்தன். || குதிரைக்குமுன்னோடு மூழியன். || சுறுக்காய்ப் போகிற —, ஓட்டக்குதிரை. || *pl.* வேவுகாரரான விராவுத்தர். || விரைவாயோடுகிற பக்ஷிகள்.

Coureuse, *f.* சுறுக்கோட்டப் பெண், விரைவாயோடுகிறவள். || வீட்டிற்றங்காதவள், திரிகிறவள், நாடோடி. || வேசி, தூர்த்தை.

Coure-vite, *m.* நீண்டகாற் — சீக்கிரமோடுகிற பக்ஷி.

Courg, *m.* குடகம், குடகு,—தேசம்.

Courge, *f.* பூசுணி, சுரை, — கொடி, ஆளகம். || பூசுணி —, சுரைக்காய், கொம்மட்டி —, பறங்கிக்காய். || இருப்புக் குறடு. || கோடி, இருபதுபுடவை, — கால்மேற்சோடு, — மணி : — sauvage பேய்க்கொம்மட்டி.

Courimari, *m.* (தென் அமேரிக்காவில்) ஓர் பெரியமரம்.

Courir, *v. n.* ஓடுதல், ஓட்டமாய்—, விரைவாய்ப்போதல். || பந்தயத்துக்கு ஓடுதல், ஓட்டத்துக்கு இகலுதல். || அங்கங்கே —, சுற்றி —, திரிதல். || பின் —, துடர்தல், நாடுதல், தேடுதல். || ஓடுதல், சொரிதல், பாய்தல், வடிதல், சிதறுதல். || ஓடிப் —, கடந்துபோதல், கடத்தல். || பரம்புதல், பரவுதல், பிரசித்தப்படுதல். || வழங்குதல், செல்லுதல். || போதல், நடத்தல், துவக்கியிருத்தல். || (அமார்க்கயிறு) சரிதல், வழுக்குதல் :

— après பின்னோடுதல், பின் —, துடர்தல், நாடுதல், தேடுதல்; — à sa fin முடியப்போதல்; les intérêts, les appointements — வட்டி —, சம்பளம் நடத்தல்; un navire — au nord கப்பல் வடக்கே நோக்கிப்போதல். || *v. a.* ஓடுதல், பின் தொடர்தல், பின் —, செல்லுதல், வேட்டையாடுதல், தேடுதல், நாடுதல், ஆசித்தல். || சுற்றித் —, திரிதல், கடத்தல், சஞ்சரித்தல் : — les rues வீதிகளில் திரிதல்; — sa 20e année தன்னிருபதாம்பிராயந் துவக்கியிருத்தல்;—la poste அஞ்சலஞ்சலாய்ப்போதல், படபடப்பாய்ச் செய்தல்; — une charge ஒருத்தியோகம் நாடுதல்;— des périls ஆபத்துக் கேதுவாயிருத்தல்.

Courlande, *f.* (ருசியதேசத்தில்) குர்லந்து நாடு.

Courlis, Courlieu, *m.* ஓர் நீண்டகாற் பக்ஷி.

Couronne, *f.* முடி, கிரீடம், மகுடம், சூடிகை, மாலை. || முடிவடிவுள்ளது, — உள்ளமிருகத்தலையுச்சி, — உள்ள மலர்ப்பூண்டு, குருத்தலைமுடி, — பட்டம், (சூரியசந்திர) மண்டலம், கோட்டை. || இராசாங்கம், இராசரிகம். || வெகுமானம், சம்பாவனை. || குளம்பின் மேற்குதிரைக்காற்பங்கு, பல்லின்மேற்பங்கு, இராசாளி, மூக்கினடி சூழுந்தூவி, அன்னாசிப்பழத்துமேலிலைத்திரள். || கம்பையின் பெரிய சதுர உறுப்பு. || பத்துமணிச் செப —, செபமாலை. || ௨½ ரூபாய்ப்பெறும் நாணயம். || *ou* papier — முடிமுத்திரையுள்ளதாள், — கடுதாசி : la triple — அர்ச். பாப்புவின் கிரீடம்; perdre la couronne — இராஜ அதிகாரத்தையிழந்துபோதல்; aspirer à la — இராசாங்கம் நாடுதல்; le domaine de la — இராசாங்கக் காணியாக்ஷி;traiter de — à — அரசனரசனோடு காரியங்களைப் பேசுதல்; — d'un lit கட்டிலின் மேல்மூடி; — septentrionale, —méridionale இருசாராகணம்.

Couronné, *part.* முடிசூடிய, — தரிக்கிற, சூழ —, மூட —, அலங்கரிக்க —, அரணிக்கப்பட்ட : rime — கவிகளின் கடைசியசை யிரட்டிப்பான இயைபு; ouvrage — வெகுமானம் பெற்ற புஸ்தகம், அரணுக்குமுன் வட்டமான அலங்கம்; plaine—மலைகளாற் சூழப்பட்ட மைதானம்; arbre — தலைகாய்ந்தமரம்; cheval — விழுந்ததினால் முழங்காலில் மயிரற்றகுதிரை.

Couronnée, *f.* ஒவ்வோரடியின் கடைசியசையிரட்டிப்பியைபு.

Couronnement, *m.* முடிசூட்டுதல், இராச பட்டாபிஷேகம், அதின் சடங்கு காட்டும்படம். || உலர்ந்த மரவுச்சி. || படை மேடுபிடித்தல். || விருது கேடயத்துமேலணி. || கப்பலின் பின்னணியத்துமேற்பங்கு. || (வீடுபாத்திரமுதலியவற்றின்) உச்சி, சுற்றுச் சிகரம், — முடி, — சிற்பவணி. || முடிவு, நிறைவேற்றம்.

Couronner, *v. a.* முடிசூட்டுதல்,— தரிப்பித்தல், (இராச) பட்டங்கட்டுதல், — சூட்டுதல், பட்டாபிஷேகம் பண்ணுதல், வெகுமானம் —, பலன் —, வெகுமதியளித்தல், வெகுமானித்தல். || முடியாக —, சூழ்தல், சுற்றுதல். || படைமேடுபிடித்தல். || உச்சியில்லங்கரித்தல், — சிறப்பித்தல். || முடித்தல், நிறைவேற்றுதல், தீர்த்தல். || se — முடியாக—, முடிசூடுதல், — அணிதல், — தரித்துக் கொள்ளுதல். || தன்னையலங்கரித்தல். || — சிறப்பித்தல். மரமுச்சியிலுலர்தல். || குதிரைவிழுந்து முழங்கால் மயிரற்றுப் போதல்.

Couronnure, *f.* மான்கொம்பின் கிளைகள்.

Couroucou, *m.* (அமேரிக்காவில்) [ஓர் பக்ஷி.

Courre, *v. a. et n.* ஓடுதல், பின்தொடர்தல், வேட்டையாடுதல். || Laisser-courre, வேட்டையில் நாய்களை வைக்குமிடம்.

Courrier, *m.* ஆள், தூதன், தூதாள், ஸ்தானாபதி, அஞ்சலாள், ஓட்ட —, தபாற் —, அஞ்சற்காரன். || தபாற் —, அஞ்சற்பண்டி, — காகிதங்கள்.

Courrière, *f.* தூதி, முன்னோடி, சேதிகொண்டுபோகிறவள்,

Courroie, *f.* வார், கச்சு, தோற்கச்சு, — பந்தம், இறுக்குவார்.

Courroucé, *part.* எரிச்சல் —, கோபம் —, கொந்தளிப்புள்ள.

Courroucer, *v. a.* எரிச்சல் —, கோபம் வருவித்தல், — மூட்டுதல், — எழுப்புதல் : — les eaux அலையெழுப்புதல், கொந்தளிப்பாக்குதல். || se — கோபித்தல், சினத்தல், எரிச்சல் —, கோபமாதல், கொந்தளித்தல்.

Courroux, *m.* கோபம், சினம், எரிச்சல், கொந்தளிப்பு.

Cours, *m.* ஓட்டம், ஓடல், ஓடுதல் ஓடை. || நடை, நடத்தை, போக்கு, போம் —, ஓட்டவழி, இடம். || நீளம், நீட்சி, விசாலம். || (கிரக) ஓட்டம், நடை, கதி, அயனம், சுற்று. || கிரமம், ஒழுங்கு, திட்டமானநடை, வழி, கதி. || செலவு, அதிகரிப்பு. || வளர்ச்சி, தொடர்ச்சி, தொடர்வு. || சனுவு, செல்லல், செல்வாக்கு. || நிலை, நிலைமை, செல்லுங் —, காலம், அளவு. || துடர் —, படிப்பு, — நேரம், பள்ளிக்கூடக் காலம், சாஸ்திர நூல், — புஸ்தகம். || உலாத்துஞ்சாலை: le — de l'eau நீரோட்டம் ; — d'eau ஓடை, அருவி, ஆறு ; — de ventre பேதி, வயிற்றுப்போக்கு, — க்கழிச்சல் ; le — de la vie சீவியகாலம் ; donner — à ses larmes தன் கண்ணீரைச் சொரியவிடுதல் ; avoir — செல்லுதல், வழங்குதல் ; n'avoir pas — செல்லாமல் —, வழங்காதிருத்தல் ; le — du marché கடையில் வழங்கும் —, கடைவிலை ; le — du change பணமாற்றத்தின்விலை, வட்டம் ; le — des intérêts வட்டி நடக்குங்காலம் ; dans le — de l'année வருஷ முடிவுக்குள்ளே, வருஷத்துக்குள்ளாக ; voyage au long — நெடும்யாத்திரை ; — de philosophie ஞானசாஸ்திர நூல், — நூற்படிப்பு, — நூல் படிக்குங்காலம்.

Course, *f.* ஓட்டம், போக்கு, பயணம், பந்தயவோட்டம், ஓட்டத்தின் —, ஓடுகிற தூரம், — காலம், ஓட்டக்கூலி. || நடை, நடக்கை, சுற்றித் —, திரிதல், சுற்று. || சீவியகாலம். || அதிகரிப்பு, வளர்ச்சி, முயற்சி. || புறநாட்டில் பாய்தல், தாவடி. || பூட்டின் நாக்கு வெளிப்படும் நீட்சி, சூத்திரத்தின் —, நூற்ருழியின் — எந்திரத்தின் போக்கு வரவு : faire plusieurs — அநேக நடைபோதல் ; aller en — தாவடிபோதல் ; — à cheval சவாரி, சாரி; faire une — à cheval சவாரிபோதல்.

Coursier, *m.* ஓட்ட —, நல்லகுதிரை. || கப்பலில்வழி. [லம்

Coursière, *f.* கப்பலின் தூக்குப் பா

Coursive, *f.* கப்பலறைகளுக்குள் நடை. [கிளை.

Courson, *m.* நறுக்கியகொடி, —

Court, *adj.* குறு, குறும், குறுகிய, குறுமை —, குள்ளம் —, குட்டை —, கட்டை —, சுருக்கம் — அடக்கமான. || சின்ன, போதாத, குறைவான, மட்டுள்ள. || நில்லாத, நிலையற்ற, அழிவுள்ள : bâton — குறுந்தடி ; haleine — குறுமூச்சு : vue — குறும்பார்வை, மட்டுள்ள புத்தி ; le plus —, le chemin le plus — அதிக சுருக்கமான வழி; être — சுருக்கமாய்ப் பேசுதல் ; être à — d'argent பணக்குறைபடுதல் ; mémoire — குறைவுள்ள ஞாபகம். || *adv.* இறுக்கம் —, சுருக்கமாய், உடனே, திடீரென்று, இறுக: attacher — இறுகக்கட்டுதல்; demeurer, rester — பேச்சற்று நிற்றல் ; couper — சுருக்கி முடித்தல், — ப்போதல்; couper — à quelqu'un ஒருவனைத் தடுத்துப்போதல்; tourner — சடுதியாய்த் திரும்புதல், — திருப்புதல், — ப்பேச்சைமாற்றுதல் ; tout — சுருக்கமாய், மாத்திரம், உடனே, திடீரென்று.

Courtage, *m.* தரவு, தரகு, — க்கூலி.

Courtaud, *adj.* குள்ளம் —, குட்டை —, கட்டையான. || குள்ளன், குட்டையன், கட்டையன், குள்ளி. குட்டைச்சி, *f.* || காதுவாலறுத்த (நாய், குதிரை). || *m.* காதுவாலறுத்த குதிரை. || கடையூழியன்.

Courtauder *v. a.* காதுவாலறுத்தல்.

Court-bâton, *m.* தாங்கியாக வளைந்த மரக்கட்டை.

Court-bouillon, *m.* இரசத்தில் மீன் சமைப்பு, மீன் சமைக்குந் தண்ணீர் காடியுப்புக் கலப்பு.

Court-bouton, *m.* மாடுகளை யேர்க்காலுக்குப் பூட்டு மரக்குச்சு.

Courtement, சுருக்கமாய், அடக்கமாய். [மூச்சு.

Courte-haleine, *f.* காசம், குறு

Courte-paille, *f.* (திருவுளக்குறிப்பாகும்) குறும் ஈர்க்கு.

Courte-paume, *f.* நாலுசுவருக்குள் பந்துவிளையாட்டு.

Courtepointe, *f.* தையலான கம்பளி.

Courte-queue, *f.* குறுங்காம்புள்ள செரிஸ்பழம்.

Courtier, *m.* தரகன், தரவன், தரகுக்காரன்: — marron கள்ளத் தர

கன்.|| *m.* — ère, *f.* மத்தியஸ்தன், மத்தியஸ்தி.

Courtilière, *f.* ஓர்வித வண்டு.

Courtille, *f.* கூத்துள்ள சாராயக் கடை, சிறுதோட்டம்.

Courtine, *f.* இரண்டு அலங்கவிடைச்சுவர், கட்டிலின் திரை.

Courtisan, *m.* சனு, சமுகத்தான், இராச சபையான், — பரிசாரகன். || இச்சகன், இச்சகக்காரன், முகஸ்துதிக்காரன், நயவசனக்காரன்.

Courtisane, *f.* பரத்தை, தாசி, விலை —, பொதுமகள், பலஸ்திரி, வசவி, துஷ்டை.

Courtisanerie, *f.* இச்சகமுறை, நீச[இச்சகம், நீசத்தனம்.

Culotter, *v. a.* காற்சட்டை செய்தல், — போடுவித்தல், — சரியாயிருத்தல், சுங்கானடியைப் புகையாற்கருக்குதல், || se — தன் காற்சட்டைபோடுதல், சுங்கானடிகருகுதல்.

Culottier, *m.* — ère, *f.* காற்சட்டைசெய்பவன், — வள்.

Culottin, *m.* புதுசாய்க் காற்சட்டை உடுத்தியபிள்ளை, — சிறுவன். || இறுக்கமான காற்சட்டை.

Culpabilité, *f.* குற்றமுள்ள —, குற்றவாளியின் தன்மை.

Culte, *m.* ஆராதனை, வந்தனை, ஆராதிக்கிற —, அர்ச்சனைமுறை, வேதச்சடங்கு. || வேதம், சமயம். || மிகுந்த வணக்கம், — பக்ஷம், — பிரியம், — விருப்பம், — நேசப்பற்றுதல், — வியப்பு, பற்றுதலுள்ள படிப்பு : le — des idoles விக்கிரக ஆராதனை ; changer de — சமயம் மாறுதல்.

Cultellation, *f.* பொதுக்கருவியாலளக்கும் விதம்.

Cultivable, *adj.* பயிரிடத்தக்க, பயிருக்குரிய.

Cultivateur, *m.* பயிரிடுகிறவன், — செய்பவன், உழவன், கிருஷிகன், பண்ணைக்காரன், வெள்ளாழன். || *adj.* பயிரிடுகிற, — செய்கிற.

Cultivation, *f.* பயிரிடுதல், பயிரிடும்வேலை, உழவு.

Cultivé, *part.* பயிரிட்ட, பயிருள்ள.

Cultiver, *v. a.* பயிரிடுதல், — செய்தல், பண்ணை —, கிருஷிசெய்தல், சீர்திருத்துதல், படித்தல், பழகுதல், பயிற்சி —, முயற்சி —, விருத்திசெய்தல், பழக்குதல், வளர்த்தல் : — un champ ஓர் நிலம் பயிரிடுதல் ; — sa mémoire தன்

ஞாபகத்தைப் பயிற்சிபண்ணுதல் ; —la poésie கவிகளைச் செய்யப் பழகுதல் ; — les sciences சாஸ்திரங்களைப் படித்தல்; — quelqu'un ஒருவனோடே பழக்கமாதல். || se — பயிரிடப்படுதல்...

Culture, *f.* பயிரிடுதல், உழவு, கமத்தொழில், ஏராண்மை, வேளாண்மை, கிருஷிகரம், வளர்ப்பு, பயிற்சி, படிப்பு : —des abeilles தேனீவளர்ப்பு ; — de l'esprit புத்தியின் பயிற்சி. — தேர்ச்சி; esprit sans — படிப்பினையற்ற புத்தி ; — des lettres கல்விசாஸ்திரங்களின் படிப்பு. [ள்ள பக்ஷியினம்.

Cultrirostres, *m. pl.* நெடுமூக்கு

Cumin, *m.* சீரகம், அத்துவாக்காயம் : — noir கருஞ்சீரகம், அத்தகம், அத்துலாக்கி.

Cumul, *m.* பலவுத்தியோகங் — சம்பளங்கொண்டிருத்தல்.

Cumulard, *m.* பலவுத்தியோகங்களைக்கொண்டிருக்கிறவன்.

Cumulatif, *adj.* குவியலான.

Cumulativement, *adv.* குவியலாய்.

Cumuler, *v. a.* குவித்தல், சேர்த்தல், கூட்டுதல், பலவுத்தியோகங்களைக் கொண்டிருத்தல், பலசம்பளங்களைப் பற்றிக்கொள்ளுதல். || se — குவிக்க —, சேர்க்க —, ஒன்றிக்கப்படுதல்.

Cumulus, *m.* மலைக்கொப்பான வெண்மேகங்கள்.

Cunéiforme, *adj.* ஆப்புவடிவுள்ள.

Cunéirostres, *m.pl.* ஆப்புவடிவான மூக்குள்ள பக்ஷியினம்.

Cunette, *f.* பள்ளத்தினடியிலுள்ள வாய்க்கால்.

Cunile, *f.* ஓர் பூண்டு. [ன்தருமரம்.

Cupayba, Cupaïba, *m.* ஓர்விதபிசி

Cupide, *adj.* ஆவல் —, பேராசை —, உலோபமுள்ள், இலாபநாடுகிற.

Cupidement, *adv.* பேராசையாய், ஆசைப்பெருக்கத்துடன்.

Cupidité, *f.* பேராசை, ஆசைப் பெருக்கம், ஆவல், அவா, பொருளாசை, உலோபம், ஆஸ்தியின் பேராசை, ஆசாபாசம்.

Cupidon, *m.* காம்த்தின் பொய்த்தேவன்: — indien காமன், மன்மதன்.

Cuprifère, *adj.* பித்தளையடங்கிய.

Cuprification, *f.* பித்தளையாகமாற்றுதல்.

Cupulaire, *adj.* கோப்பையைப் போல் அடிகுவிந்த.

Cupule, *f.* பூவைச் சூழுஞ் சிற்றிலைகள், கனியடியின் கூடு.

Cupulifère, *adj.* குண்டைக்கோப்பை போல் அடிகுவிந்த புஷ்பச்செடிகளைப்பற்றிய.

Curabilité, *f.* குணமாகத்தக்க தன்மை.

Curable, *adj.* குணமாகத்தக்க.

Curaçao, *m.* (ஆந்தீய்த்தீவுகளில்) குரசோதீவு. || *m.* ஷை தீவின்பானம்.

Curage, *m.* தூறொடுத்தல், தூறொடுக்குஞ்செலவு. || நீர்மிளகு. || *pl.* தூறொடுத்த சேறுமுதலியது.

Curare, *m.* (தென்அமேரிக்காவில்) ஓர் பூண்டுதருங் கடும் விஷம்.

Curatelle, *f.* காவலன் அலுவல், — பொறுப்பு.

Curateur, *m.*— trice, *f.* காவலன், நீதி நியமித்த பிறராஸ்தி விசாரணைக்காரன், — காரி.

Curatif, *adj.* குணமாக்குதற்குரிய.

Curation, *f.* பரிகாரம், பரிகரிப்பு.

Curcas purgens *ou* jatropha curcas காட்டாமண்க்கு.

Curculigo orchioides, நிலப்பனை.

Curcuma, *m.* ஓர்பூண்டு : — longa மஞ்சள், கிறுசன் ; — zedoaria நிருவிஷம்.

Cure, *f.* பரிகாரம், சொஸ்தம், வியாதிவிசாரணை. || கவனம். பறிபக்ஷிகளுக்கிடும் விரோசனமாத்திரை. || குருவின் வீடு, — விசாரணைப் பங்கு, — அலுவல்.

Curé, *m.* ஊர்விசாரணை —, விசாரணைக் குரு. || *part.* தூறொடுத்த.

Cure-dents, *m.* ஈர்க்கு, பற்குத்தி, பற்குச்சு.

Curée, *f.* நாயிரை, நாயிரையாகிய வேட்டைமிருகத்தின் பங்கு : âpre à la — இலாபத்தின்மேலாவலுள்ள.

Curement, *m.* தூறொடுத்தல்.

Cure-môle, *m.* துறையின் வண்டலெடுக்குமியந்திரம்.

Cure-oreilles, *m.* குறும்பிவாங்கி.

Cure-pieds, *m.* குதிரைக்குளம்பு சுத்தம்பண்ணுமிரும்பு.

Curer, *v. a.* சுத்தஞ்செய்தல், தூறொடுத்தல், குப்பைவாருதல். || se — தன

க்குச் சுத்தஞ்செய்தல்.

Curette, *f.* அழுக்குவாங்கி, சுத்தஞ்செய்யுங் கருவி, பிறபொருளை வாங்கி,—பிடுங்கி.

Cureur, *m.* தூரெடுக்கிறவன்.

Curial, *adj.* விசாரணைக்குருவின்.

Curie, *f.* (உரோமைபருள்) சனவகுப்பு (36 இருந்தன.)

Curieusement, *adv.* அறிய ஆசை—, நூதனப்பிரியம்—, பத்திரமாய்.

Curieux, *adj.* நூதனப்பிரியம்—, அறிய ஆசையுள்ள, எல்லாத்தையுங்காண— அறியத்தேடுகிற. ‖ விசாரிக்கிற, சாக்கிரதை—, கவனம்—, பிரியமுள்ள, விரும்புகிற. ‖ நூதன, அதிசய, அருமை—, உச்சிதம்—, அபூருவம்—, பிரியமான. ‖ *s.* நூதனப்பிரியன், சகலத்தையுங்காண— அறியத் தேடுகிறவன்,—விரும்புகிறவன்,—வள். ‖ *m.* பிரதானம், விசேஷம், முக்கியமானது.

Curion, *m.* சனவகுப்பின் குரு.—தலைவன்.

Curiosité, *f.* நூதன—, விநோதப்பிரியம், சகலத்தையு மறிய— காண ஆசை,—மிஞ்சின ஆவல். ‖ நூதனம், அதிசயம், விசித்திரம், உச்சிதம், அபூருவ வஸ்து. ‖ *pl.* விசித்திர—, அதிசய வஸ்துகளின் சேர்க்கை.

Curoir, *m.* கலப்பை துடை தடி.

Currente calamo, விரகின் வாட்டப்பிரகார மெழுதல்.

Curseur, *m.* கட்டை வில்லின் குறுக்குக்கம்பி, தவாளிப்பில் ஓடும் பொருள், கண்ணாடி நடு நூல்.

Cursif, ve, *adj.* ஓடுகிற. ‖ *f.* ou écriture cursive சுறுக்கான எழுத்துவகை.

Curule, *adj.* தந்தமணிந்த : chaise —(உரோமாபுரி பூர்வ அதிகாரிகளுட்காரும்) தந்தமணிந்த நாற்காலி. ‖ ஷை நாற்காலி சுதந்திரமுள்ள.

Curures, *f. pl.* தூர், தூர்வை, குப்பை.

Curvateur, *adj.* மடக்குகிற, வளைவிக்கிற.

Curviligne, *adj.* வளைந்த வரியாலான.

Curvité, *f.* வளைவு.

Cuscute, *f.* வேறே பூண்டின்மேல் வளரும் பூண்டு.

Cusson, *m.* மரமரிக்கிற ஓர் புழு, ஓர்வித உளு.

Cussoné, *adj.* உளுத்த.

Custode, *m.* சில முனிமடந்துச் சிரோஷ்டர். ‖ *f.* (பீடத்துத்) திரைச்சீலை, தேவநற்கருணைச் சிமிழ்,—பாத்திர மூடி, வண்டில் பக்கத்திலே துத்து நிறைந்த பங்கு.

Custodie, *f.* குஸ்தொடென்னுஞ் சிரோஷ்டமுனியின் விசாரணைப் பங்கு.

Cutané, *adj.* தோலின், தோலுக்கடுத்த.

Cuticule, *f.* மேல் தோல், புறணி.

Cutter, *m.* ஒற்றைப்—, ஒரு பாய்க் கப்பல்.

Cuvage, *m.* இரசம் பொங்கவிடுதல்.

Cuve, *f.* இரசம் பொங்குதற்குரிய—, பெருந்தொட்டி :—d'indigo தொட்டியிலடங்கிய நீல சாயம்.

Cuveau, *m.* சிறு—, தொட்டி.

Cuvée, *f.* பெருந்தொட்டி கொள்ளுமிரசம்.

Cuvelage, *m.* **Cuveler**, *v. a.* சுரங்கக் கிணற்றிற்குட் சுற்றுப் பலகை போடுதல்.

Cuver, *v. n.* பெருந் தொட்டியிற் பொங்குதல். ‖ *v. a.* — son vin குடித்தவிரசஞ் சமித்தல், குடித்தபின் தூங்குதல், கோபம் அமரவிடுதல்.

Cuvette, *f.* கைகழுவும் பாத்திரம், கிண்ணம். ‖ மரங்களுக்குள்ளே தண்ணீர் கொள்ளுங்—, குழி, பள்ளம். ‖ சயநீர்க்கால். ‖ சிறு தொட்டி, சில கடியார நடை மூடுங் கருவி.

Cuvier, *m.* வெளுப்புத் தொட்டி.

Cyamopsis sporaloides, கொத்தவரை.

Cyanhydrique, *m.* ஓர் கடுமையான பாஷாணம்.

Cyanogene, *m.* உப்பு வாயுவாலுண்டான திரவி.

Cyanure, *m.* ஷை வாயுவுந் நாதுங்கலந்த கூட்டுவர்க்கம்.

Cyanomètre, *m.* வான நீலத்தினளவை.

Cybèle, *f.* சிபேலென்பவள்,— என்னும் பொய்த்தேவதை, ஓர் சின்ன கிரகம்.

Cycas circinalis, காம மரம்.

Cychre, *m.* ஓர் வண்டு.

Cyclade, *f.* ஓர்வித ஈரோட்டு மீன். ‖ *pl.* (அர்ச்சிப்பெல் கடலில்) வட்ட வரிசைத் தீவுகள்.

Cyclamen, *m.* பன்றிகளுக்குப் பிரியமான ஓர் பூண்டு.

Cycle, *m.* வட்டம், காலவட்டம்,—

சக்கரம்,— பரிவிருத்தி : — indien de 60 ans பேராண்டு, சக்கரம். [டுத்த.

Cyclique, *adj.* காலவட்டத்துக்க

Cycliste, *m.* துவிச்சக்கரவண்டி விடுபவன். [வரி, சக்கரோவம்.

Cycloïde, *f.* சக்கரவோட்டச் சுருள்

Cyclone, *m.* சுழற்காற்று.

Cyclope, *m.* ஒற்றைக்கண்ணிராட்சதன். ‖ கொல்லன், பூட்டுக்காரன், ஒருகண் குருடன் (பகிடியாய்). ‖ ஓர்வித ஓட்டுமீன்.

Cyclopéen, *adj.* இராட்சதர் காலத்து, இராட்சதராற்செய்யப்பட்ட.

Cycloptère, *m.* வயிற்றில் வட்டமாய்ச்சிறகுள்ள மீன்.

Cyclostome, *m.* வட்டவாயுள்ளமீன்.

Cygne, *m.* அன்னம், ஓதிமம், அம்சம், எகினம், வடதிசையில் ஓர் தாராகணம். ‖ உத்தமபுலவன், — சாஸ்திரி.

Cylindrage, *m.* திரண்ட கட்டையால் அழுத்துதல்.

Cylindre, *m.* திரண்டவடிவு,— கட்டை, — பொருள், — வடிவுள்ள பாத்திரம், சுருள், சுருட்டு. ‖ ஓர் இனிச்சில்: — de pierre pour broyer குழவி.

Cylindrer, *v. a.* திரண்டவடிவாக்குதல், — கட்டைக்கீழ் செலுத்துதல், — கட்டையால் அழுத்துதல். [ள்ள.

Cylindrique, *adj.* திரண்டவடிவு

Cylindriquement, *adv.* திரண்டவடிவாய். [கட்டை.

Cylindrite, *f.* கல்லானதிரண்ட

Cylindroïde, *m.* ஏறக்குறையத் திரண்டவடிவுள்ளது.

Cymaise. *f.* ஓர் சிற்ப அலங்காரம், கம்பமுதலியவற்றின் மேலான பங்கு.

Cymbalaire, *f.* ஓர்விதமரம்.

Cymbale, *f.* தாளம், கைத்தாளம், கிணை, கஞ்சம்.

Cymbalier, Cymbaliste, *m.* தாளக்காரன், தாளம்போடுகிறவன். [ள்ள.

Cymbiforme, *adj.* தோணவடிவு

Cyme, *m.* தாள், தளிர். ‖ *f* *V.*

Cymeux, *V.* Cimeux. [Cime.

Cyminum, சீரகம்.

Cymophane, *f.* ஓரிரத்தினம்.

Cynanche, *f.* Cynanchum, ஓர் பூண்டு : — extensum, உத்தாமணி, உத்தமதாளி, வேலிப்பருத்தி ; — viminale கொடிக்கள்ளி.

Cynanthropie, *f.* தான் நாயென்றெண்ணுகிறவியாதி.

Cynégétique, *adj.* வேட்டைக்கடுத்த. ‖ *f.* ஓடுகிறநாயோடே வேட்டை —, வேட்டைவித்தை.

Cynips, cinips, *m.* கடுக்காய் வருவிக்கும் வண்டு.

Cynique, *adj.* நாணம் —, வெட்கம் —, மரியாதையற்ற, அதப்பிய, தறுகுறும்பான. ‖ *m.* நாய்போலத் திரிகிற —, நாணமற்ற கள்ளஞானி, வெட்கமற்றவன். [காய், தறுகுறும்பாய்.

Cyniquement, *adv.* எடுத்தடிமடக்

Cynisme, *m.* வெட்கக்கேடு, நாணமின்மை, — அற்ற துர்மார்க்கம்.

Cynocéphale, *m.* நாய்த்தலைக் குரங்கு. [பூண்டு.

Cynoglosse, *f.* நாய்நாக்கென்ற

Cynometra cauliflora நாய்ப்பிடுக்கன்.

Cynorexie, *f.* கடும்பசி.

Cynorrhodon, *m.* காட்டுமுட் செவ்வந்தியின் கனி.

Cynosure, *f.* Cynosurus ஓர் தானியம் : — ægyptius புல்லரிசி, மந்தங்கரப்புல் ; — coracan கேவிரு, கேழ்வரகு, இராகி, நச்சினி ; — indicus குச்சுப்புல், குஞ்சப்புல்.

Cyperus, கோரை, அயில் : sa racine கோரைக்கிழங்கு, முத்தக்காசு, பாதாளமூலம், — மூலி ; — compressus குத்துக்கோரை ; — corymbosus பெட்டிக்கோரை ; — difformis முடிக்கோரை ; — distans பாய்க்கோரை : — dubius முதலைக்கோரை ;— fastigiatus கன்னி —, சிரகக்கோரை ; — geminatus பூங்கோரை, சிலந்தியரிசி ; — haspan குளப்படிகோரை ; — iria தண்டாமரை —, நந்தக்கோரை ; — juncifolius புற்கோரை, முத்தக்காசு ; — pangorei வைப்புல் ; — procerus மட்டைக்கோரை ; — racemosus கல்லங்கோரை ; — rotundus பீட்ரம்; — stoloniferus சடாமாஞ்சி, சடாமாஞ்சில் ; — textilis சாமுதம்.

Cypéroïdes, Cypéracées, Cypérées, *f. pl.* கோரைப்பூண்டினம்.

Cyphose, *f.* முதுகெலும்பின் வளைவு.

Cypre, Chypre, (உட்கடலில்) சீப்பிரென்கிற தீவு.

Cyprès, *m*. சீப்பிரேஸ் என்னுமரம், மரணத்துக்குறிப்பாம்.

Cyprin, *m*. Cyprinus, ஓர்வகை மீன் : — cirrhosus வெள்ளிமடந்தாள், — மடந்தான்கெண்டை ; — fimbriatus கெண்டை, வெண்கெண்டை.

Cyr (St.), ஒரூர், அதிலுள்ள போர்ச் சேவகக்கல்லூரி, — ப்பள்ளிக்கூடம்.

Cyropédie, *f*. சீருஸ் என்பவன் சரித்திரம்.

Cyrtante, *m*. ஓர்பூண்டு.

Cystite, *f*. ஊற்றும் பெட்டியின் எரிவு,— வீக்கம். [சைசெய்யுங்கருவி.

Cystotome, *m*. மூத்திரப்பை சிகிச்

Cystotomie, *f*. ஊற்றும் பெட்டியின் அறுப்பு, — சேதனம்.

Cythèrée, *f*. வெனுஸ் என்பவள்.

Cytise, *m*. Cytisus, துவரை, ஆடகம், ஆடகி. [சாலை.

Cyzicène, *m*. சிறந்தபெரும் அசன

Czar, *m*. ருசிய இராயன். [த்த.

Czarien, *adj*. ருசிய இராயனுக்கடு

Czarine, *f*. ருசியஇராணி. [ரன்.

Czarowitz, *m*. ருசியஇராயன் குமா

D

D, *m*. நாலாமெழுத்து, (கணக் கக்ஷரங்களில்) 500-என்றர்த்தமாம்.

Dà, *int*. ஏ : oui-dà ஆமே, சத்தியமாய் ; nenni-dà இல்லையே. [பேதார்.

Dabédar, *m*. (principal pion) ட

D'abord, *adv*. முந்த, முந்தி, முன்னே, முதலில், உடனே.

Dabouis, *m*. பஞ்சுப்புடைவை.

Da-capo, (italien), துவக்கந் திரும்பப்பாடுக, (என்னுஞ் சங்கீதக்குறிப்பு).

D'accord, *loc*. *adv*. சரியென ஏற்றுக்கொள்ளுகிறேன். [டணம்.

Dacca, (பங்காளத்தில்) டக்காபட்

Dactyle, *m*. நேர்நிரைச்சீர், கூவிளம். || ஓர்வித கூத்து. || ஓர் பூண்டு.

Dactilion, *m*. பியானோவென்னுமின்னிசைப் பெட்டிக்குக் கூட்டுங் கருவி.

Dactylis spicata, நரிவாற் புல்.

Dactylologie, *f*. விரலாற் பேசும் வித்தை. [ணும் வித்தை.

Dactylonomie, *f*. விரலால் எண்

Dada, *m*. குதிரை (பிள்ளையின்சொல்). || விடாத எண்ணம், மதியற்ற வழக்கம்.

Dadais, *m*. மடையன்.

Dagon, *m*. பெனிஷியன் தெய்வம்.

Dagorne, *f*. ஒரு கொம்புடைந்த பசு. || அவலக்ஷண கிழவி.

Dague, *f*. கிரிசு, குற்றுவாள், பழையவளைக் கத்தி, இரு நுனியிற் பிடியுள்ள கத்தி, தோணிக்காரர் கோடாலி, கயிறு. || *pl*. இளமான் கொம்புகள்.

Daguer, *v*. *a*. கிரிசாற் குத்துதல். || *v*. *n*. பறத்தல், பறந்தோடுதல், மான் புணர்தல்.

Daguerréotype, *m*. ஒளியால் உருவங்களைப்பிடிக்குஞ் சாஸ்திரம்,— எத்தனம்.

Daguerréotypage, *m*. Daguerréotyper, *v*. *a*. ஒளியால் உருவங்களைப் பிடித்தல். [டிக்கக்கூடிய.

Daguerrien, *adj*. ஒளியால் உருபி

Daguet, *m*. மான்குட்டி, இளமான்.

Dahlia, *m*. ஓர் மலர்ப்பூண்டு.

Dahomey, (அப்பிரிக்காவில்) தாகோமை யிராச்சியம்.

Daigner, *v*. *n*. அருளுதல், தயவுசெய்தல், திருவுளமாதல் : il a daigné venir வந்தருளினார், வரத்தயவுசெய்தார் *ou* திருவுளமானார்.

D'ailleurs, *adv*. *V*. Ailleurs. [னம்.

Daim, *m*. சிறு—, மான், அருணம், கு

Daine, *f*. ஷை மான் பெட்டை.

Dairi, Daïri, Dairo, Daïro, *m*. (ஜப்போனியதீவுகளில்) இராயன், பூர்வத்தில் ஞானவிராயன், பெரியகுரு.

Dais, *m*. பாலிகை, அசுமானகிரி, மேற்கட்டி, விதானம், வாசனி, வாரனி.

Dalberge, *m*. Dalbergia, ஓர் பூண்டு : — arborea புன்கு, புன்கமரம், நகுத்தம், ஆலம் ; — heterophylla திரணி ; — lanceolaria புனரி, — த்தண்டு ; — latifolia கருந்துவரை, நூக்கம் ; — sisu சிசுமரம், பிச்சை.

Dallage, *m*. கற்பலகைபாவுதல், கற்பாவினவிடம். [கல். || மீன்துண்டு.

Dalle, *f*. கற்பலகை, தட்டையான

Daller, *v*. *a*. கற்பலகைபாவுதல்.

Dalmate, *adj*. *et*. *s*. தல்மசிநாட்டுக்குரிய.

Dalmatie, *f*. (ஒத்திறிஷிராச்சியத்தில்) தல்மசிநாடு.

Dalmatique, *f*. தியக்கோன் ஆடை, மேற்றிராணியார் ஆடைகளிலொன்றும்.

Dalot, *m.* (கப்பல்மேற்றளத்தின்) சலதாரை.

Dam, *m.* நஷ்டம், சேதம். || தேவதரிசனையிழப்பு. || ஐயன்.

Damana artemisia, தமனம்.

Damas, (சீரிதேசத்தில்) தமாஸ்பட்டணம். || *m.* ஷை பட்டணப் பட்டுப்புடைவை, ஓர்வித சமுதாடு, உத்தம எஃகு, — உருக்கு, ஓர்கனி. || ஓர்வித புடைவை.

Damasquinage, *m.* பொன்வெள்ளி பதித்த இரும்புவேலை.

Damasquiner, *v. a.* இரும்பிற் —, உருக்கிற் பொன்வெள்ளி பதித்தல்.

Damasquinerie, *f.* ஷை பொன்வெள்ளி பதிக்குந்தொழில்.

Damasquineur, *m.* ஷை பொன்வெள்ளி பதிக்குந்தொழிலாளி.

Damasquinure, *f.* ஷை பொன்வெள்ளி பதித்தவேலை.

Damassé, *part.* சித்திரமுள்ள. || *m.* சித்திரப்புடைவை, — பட்டாடை. || இந்திரவன்னச் சித்திரப்படாம்.

Damasser, *v. a.* (தமாஸ்நகரமாதிரியாய்ச்) சித்திரப்புடைவை — பட்டாடைசெய்தல்.

Damasseur, *m.* ஷை சித்திரப்புடைவைசெய்கிறவன்.

Damassure, *f.* ஷை சித்திரப்புடைவைவேலை, — ப்படாம்.

Dame, *f.* துரைசானி, எசமாட்டி, ஆண்டவள், நாயகி, அம்மாள், தலைவி, நாய்ச்சியார், பெருமாட்டி, சீமாட்டி, துரைமகள். || கலியாணக்காரி, மனைவி, பெண்சாதி, நாணயமானஸ்திரி, பெண்பிள்ளை, (சிலமடத்து) கன்னியாஸ்திரி. || காதலி, நேசி. || (சிலவிளையாட்டில்) காய், வட்டு, இரட்டைக்காய். || (சூதுக்கடுதாசியில்) இராக்கினி. || சதுரங்கப் பலகையில்) மந்திரி. || வல்லீட்டுக்குற்றி. || விட்டமண்குவியல், — குறிப்பு. || *ou* jeu de — சொக்கட்டான், — விளையாட்டு, — மணை. — d'honneur, d'atours, du palais இராணியிடத்திற் சேவிக்கிற துரைசானிகள் ; — de chœur மடத்துக்கோவிலின் மேலாசனக் கன்னியாஸ்திரிகள் ; — de charité தர்மசபைக்காரி, — த்துரைசானி ; — aller à — இரட்டைக்காயாக்கப் போதல் *int.* —ஆ!, என்ன ஆச்சரியம்! நிசமே.

Dame-jeanne, *f.* (அலரிபின்னல் சுற்றிய) பெருங்குப்பி.

Damer, *v. a.* இரட்டைக்காயாக்குதல். || வல்லீட்டுக்குற்றியால் இடித்தல்.

Dameret, *m.* பிலுக்கன், கோலப்பிரியன், எடுப்புள்ளவன், நயக்காரன், பெண்ணன், ஸ்திரிகளுக்குப் பிரியப்படநாடுகிறவன்.

Damier, *m.* சொக்கட்டான்மணை, சூதுப்பலகை. || புள்ளியுள்ள வெண்கிளிஞ்சில்.

Damiette, (எஜிப்த்துதேசத்தில்) தமியெத்துநகரம்.

Damnable, *adj.* நரகதீர்வைக்குரிய, நரகத்துக்குரிய, தீய, ஆகாத, அடாத.

Damnablement, *adv.* நரகதீர்வைக்குரிய விதமாய்.

Damnation, *f.* நரகத்துக்குத் —, நரகத்தீர்வை, நரகாக்கினை. || நித்தியகேடு, — கேடாம்.

Damné, *s. et part.* நரகன், நரகவாசி, நரகத்துக்குத் தீர்வையிடப்பட்ட, இடைவிடாத கஸ்திக்கு ஏதுவான, நரசத்துக்குரிய, மிகவுங்கெட்ட, âme— —ஒருவனுடைய மனதுக்குமுற்றுங் கீழ்ப்பட்டபேர்வழி.

Damner, *v. a.* நரகத்துக்குத்தீர்வையிடுதல், — க்கொண்டுபோய் விடுதல், — ப்பாத்திரவானென்று சொல்லுதல்: faire — மிகவுந் தொந்தரைசெய்தல், — உபத்திரியப்படுத்துதல். || se — நரகத்துக்குப் பாத்திரமாதல், — ஏதுவாதல்.

Damoiseau, Damoisel, *m.* வாலிபமான துரைமகன். || *V.* Dameret.

Damoiselle, *f.* துரைமகள்.

Danaïde, *f.* ஓர்தட்டான், ஓர்பூண்டு. || *pl.* (தங்கள்புருஷர்களைக் கொன்றதினால் கதைநகரத்தில் அடியற்ற பீப்பாவை நிரப்புதற்குத் தீர்வையிடப்பட்ட) தனயுஸ் என்பவன் குமாரத்திகள்.

Dandin, *m.* பேதை, மடையன், நிற்கத்தெரியாதவன்.

Dandinement, *m.* தூங்கல் —, தளர்ந்த —, அசைந்தநடை.

Dandiner, *v. n. et* se — தூங்கல்நடையாய் —, அசைந்து —, ஆடிநடத்தல், வீண்காரியத்தில் நேரம்போக்குதல்.

Dandy, *m.* எடுப்புள்ளவன், பிலுக்கன்.

Dandysme, *m.* இடம்பம், பிலுக்கு.

Danemark, *m.* (ஐரோப்பாவில்) தன்மார்க்குதேசம்.

Danger, *m.* ஆபத்து, மோசம், அவ

தி, அபாயம், மோசநிலை, அவஸ்தை, வினை, கேவலம், யோக்கியம். || தின்மை. || être en —, courir un — ஆபத்திலிருத்தல்.

Dangereusement, *adv*. ஆபத்து—, மோசம் —, அவதியாய், கனமாய்.

Dangereux, *adj*. ஆபத்து —, மோசம் —, அவதியுள்ள, — ஆன. மோசத்துக்குரிய, அபாயம், யோக்கியம் —, கேடுள்ள, பயங்கரத்துக்குரிய.

Danois, *adj*. தன்மார்க்குதேசத்து, — தேசத்தான். || *m*. ஷை தேசத்துப் பாஷை,— வேட்டைநாய்.

Dans, *prép*. இல், இடத்தில், உள்ளே, உள், கண், ஒடு, படியே: dans la maison வீட்டில், வீட்டினிடத்தில் ; entrer dans l'église கோவிலுக்குட்(ள்) பிரவேசித்தல் ; dans l'espoir du gain இலாபத்தின் நம்பிக்கையோடு ; dans ses principes அவன் போதனையின்படியே. [னத்து, கூத்தாடுகிற.

Dansant, *part*. கூத்துக்குரிய, நட

Danse, *f*. கூத்து, நடனம், நடம், ஆடல், நாட்டியம், நிருத்தம், அபிநயம், பரதம், கூத்தாடுதல், கூத்தினிராகம், கூத்தாடும் விதம் கூத்தர்களின் கூட்டம், கூத்து —, நடன —, அபிநயசாலை. || தண்டனை, சிட்சை. || இசிவு, இசிவுள்ளவியாதி, — கூத்து : maître de — நட்டுவன், பணிக்கன், கூத்தாடி ; — sur la corde தொம்பர் —, கழைக்கூத்து : entrer en — கூத்தாடத் துவக்குதல், ஓர் எற்பாட்டில் நுழைதல் ; mener la — நடனம் —, காரியம் நடப்பித்தல். Les dieux indiens sont de grands danseurs et leurs danses ont des noms particuliers ; — de Siven கபாலம், கொடுகொட்டி, பாண்டரங்கம் ; — de Vichnou அல்லியம், குடம், மரக்கால், மல் ;—de Lakchimi பரவை ; — de Kâmen காமனுடல், பேடு ; — de Soupramanien குடை, கொடுகொட்டி, துடி ;—de possédés en l'honneur de ces faux dieux அணங்கு, ஆஞ்சி, கழங்கு, வெறியாடல், வேலனுடல்.

Danser, *v. n. et a.* கூத்தாடுதல், ஆடுதல், நடனஞ்செய்தல், நடித்தல். || துள்ளுதல், faire — ஆட்டுதல், ஆடுவித்தல், faire — quelqu'un நிஷ்டூரமாய் நடத்துதல், faire — les écus அதிகம் செலவழித்தல், faire — l'anse du panier கிரையத்தில் எசமான்களை எமாற்றல், ne savoir sur quel pied — சங்கட்டத்தில் மாட்டிக்கொள்ளல்,—sur la corde கயிற்றின்மேலாடுதல்.

Danseur, *m*. கூத்தாடி, கூத்தன், நிருத்தன், நடனன், கூத்தாடுகிறவன் : — de corde தொம்பன், கழாயன், கழாய் —, கழைக்கூத்தன்.

Danseuse, *f*. கூத்தாடிச்சி, நாட்டியப்பெண், நிருத்தமாது, நடக்கணிகை, கூத்தாடுகிறவள்.

Dansomanie, *f*. நடனப்பிரியம், —ப்பயித்தியம். [சிக்குநகரம்.

Dantzick, (புறுஸ்தேசத்தல்) தான்த்

Danube, *m*. (அல்மஞ் துற்கிதேசத்தில்) தனுப்நதி.

Daphnoïdes, *f. pl*. அலரியினமான பூண்டுகள்.

D'après, *adv*. படியே.

Daraise, *f*. எரியின் மிச்சத்தண்ணீர் வடியுமிடம்.

Dard, *m*. வேல், எறிபடை, அஸ்திரம், கைவேல், கைவிடுபடை. || வசை, சுடுசொல். || கொடுக்கு. || (வேல்வடிவுள்ள பூவின் பெண்தாது. || வாளுறையினிருப்புநுனி. || கதிர், நிறுத்துமுள்ளு, ஓர்மீன், ஓர் பாம்பு.

Dardanelles, (détroit des) தர்தனெல் என்னும் கடல்வாய்க்கால்.

Darder, *v. a*. வேலால் குத்துதல், — காயப்படுத்துதல். || எறிதல், பாய்ச்சுதல், எய்தல், வீசுதல். || பக்கத்திற் கிளைவிடுதல். le soleil — ses rayons சூரியன் தன் கிரணங்களை வீசுதல்.

Dardille, *f*. பூவின் தாள்.

Dardiller, *v. n*. பக்கத்தில் கதிர் — கிளைவிடுதல்.

Dardillon, *m*. தூண்டிலின் நாக்கு, — முள்ளு.

Darfour, *m*. (நிகிறிசிதேசத்தில்) தர்பூரிராச்சியம்.

Darien (isthme de); தரியென் அல்லது பனமா என்னும் இருகடலிடைப் பூமி.

Dariole, *f*. ஓர் சிறு பணியாரம்.

Darique, *f*. பூர்வ பேற்சியநாணயம்.

Darmstadt, (அல்மஞ் தேசத்தில்) தார்ம்ஸ்தாத்நகரம்.

Darne, *f.* மெல்லிய மீன்துண்டு.

Darse, Darce, *f.* துறையுட்புறம்.

Dartre, *f.* கரப்பான், படர்தாமரை, தழுதணை, எச்சிற்றழும்பு.

Dartreux, *adj. et s.* கரப்பானுள்ள, — போன்ற, — உள்ளவன்.

Darvinisme, *m.* தார்வின் என்பவனுடைய நாஸ்திகக்கோட்பாடு.

Dasildar, *m.* தாசில்தார்.

Dassari, *m.* (mendiant vichnouviste) தாசரி.

Dasycère, *m.* ஓர்வித வண்டு.

Dasymètre, *m.* ஆகாசத்தின் கனவித்தியாசத்தினளவை.

Dasypode, *m.* காலில் மயிருள்ள வண்டு.

Dataire, *m.* தத்தரியென்னும் —, ஞான நீதிஸ்தலத் தலைவன்.

Date, *f.* தேதி, திகதி, தேதிகுறிக்குமக்ஷரம்: prendre — தேதிகுறித்தல், தேதி —, நாள்நியமித்தல்.

Dater, *v. a.* தேதிபோடுதல், ஓர்காலந் துவக்கி எண்ணுதல், காலக்குறிப்பாயிருத்தல், — *v. n.* faire époque — கீர்த்தியடைந்திருத்தல், — de loin வெகுகாலந் துவக்கியிருத்தல், பூர்வகாரியஞ்சொல்லுதல். ‖ se — தேதி எழுதப்படுதல்.

Daterie, *f.* (உரோமாபுரியில்) ஞானநீதிஸ்தலம், ஷை நீதிஸ்தல உத்தியோகம்.

Datif, *m.* குவேற்றுமை, சம்பிரதானம்.

Datif, *adj.* நடுவணிடுகிற.

Dation, *f.* கொடுத்தல், இறுப்பு.

Datisme, *m.* மொழியின் அர்த்தத்தை இரட்டித்தல்.

Datte, *f.* பேரீச்சம்பழம்.

Dattier, *m.* பேரீச்சு, பேரீந்து, பேரீச்சமரம்: — sauvage ஈச்சு, ஈந்து, ஈச்சமரம்; son fruit ஈச்சம்பழம்; son vin ஈச்சங்கள்ளு; natte faite de ses feuilles ஈச்சம்பாய்; ses feuilles ஈச்சமோலை, ஈச்சோலை.

Datura, *m.* ஊமத்தை, ஊமத்து, ஊமத்தஞ்செடி, அயிகம், உன்மத்தை, தத்தூரம்: — fastuosa கருவூமத்தை; — lucida பொன்னூமத்தை; — metel, — alba வெள்ளூமத்தை; *adj.* ஊமத்தம்; son fruit ஊமத்தங்காய் sa fleur ஊமத்தம்பூ.

Daube, *f.* பலநாளைக்குச் சமைக்கும் வகை, — பதார்த்தம்.

Dauber, *v. a.* பலநாளைக்குச் சமைத்தல், ஷை பதார்த்தஞ்செய்தல். ‖ குட்டுதல், முஷ்டியாலடித்தல். ‖ நகைத்தல், பழித்தல்: — sur நகைக்க —, தூறச்சமயம்பிடித்தல். ‖ se — ஒருவனொருவனைக் குட்டுதல், — நகைத்தல், — தூறுதல்.

Daubeur, *m.* தூறுகிறவன், பழிக்கிறவன்.

Daubière, *f.* பலநாளைக்குச் சமைக்கும்பாத்திரம்.

Daucus carota, பிண்டமூலம், — மூலகம்.

Dauphin, *m.* ஓர் கடற்பன்றி. ‖ வடதிசை தாராகணம், அவிட்டம், அவிஷ்டம். ‖ தண்ணீரோடுவதற்குக் குழிந்த கல்லு. ‖ சிலநாடுகளின் பிரபு. ‖ பிராஞ்சிராசாவின் மூத்தகுமாரன். ‖ *ou* papier — ஓர்விதகடுதாசி.

Dauphine, *f.* பிராஞ்சிராசாவின் மூத்தகுமாரன் பெண்சாதி. ‖ ஓர்விதபுடைவை.

Dauphiné, *m.* (பிராஞ்சுதேசத்தில்) தொப்பினைநாடு.

Dauphinelle, *f.* ஓர் பூண்டினம்.

Davantage, *adv.* அதிகம், அதிகமாய், அதிகநேரம், மீளவும், மேலும்.

Davéridion, *m.* ஓர் பூண்டின் எண்ணெய்.

Davier, *m.* பல்லிடுக்கி, பல்வாங்கி, பல்பிடுங்கி, இடுக்கி ‖ காய்ந்தவிரும்பை அடைகல்லின்மேல் கொண்டுபோகுங்கருவி. ‖ பீப்பாவளையம் நுழைப்பிக்குங்கருவி.

Davis (quart de,) உயரமளக்குங்கருவி; détroit de — வட அமேரிக்காவில் தாவிஸ் என்னுங் கடல்வாய்க்கால்.

De, *prép.* உடைய: le livre de Pierre இராயப்பனுடைய —, இராயப்பன் புஸ்தகம். ‖ ஆலான table de bois மரத்தாலான —, மரமேசை. ‖ இல் நின்று, இருந்து; arracher de la main கையிலே, கையில் நின்றுபிடுங்குதல்; arriver de la province நாட்டிலிருந்துவருதல். ‖ ஆல்: être estimé de tous சகலராலுமதிக்கப்படுதல்: saluer de la main கையால் வந்தித்தல். ‖ காலத்தில், இல்: de nuit இராக்காலத்தில்; de jour பகலில். ‖ குறித்து, பேரில்: il parle de cette affaire இந்தக்காரியத்தைக் குறித்துப் பேசுகிறான்;

j'en suis bien aise அதின்பேரில் வெகுசந்தோஷப்படுகிறேன். || துவக்கி: de la terre au ciel பூமிதுவக்கி வானம்வரைக்கும். || உள்ள : homme d'esprit புத்தியுள்ளமனுஷன். || de par பேராலே; de par le roi இராசாபேராலே. || சிலவேளை மொழிபெயர்க்கப்படாது : donnez-moi de bon pain நல்ல உரொட்டி எனக்குக்கொடும் ; j'ai vu de bons enfants நல்லபிள்ளைகளைக் கண்டேன்.

Dé, *m.* (à coudre) விரலுறை, புட்டில், அங்குலித்திரம். || (à jouer) கவறு, தாயம், தாயக்கட்டை, பாச்சிக்கை, சாரி. || தூணின் —, தம்பத்துப் —, பாத்திரத்தின்பாதம் : avoir le — முதல் வனாகக் கவறுபோடவிருத்தல் ; coup de — தாயம்போடல், அதிஷ்டம்.

Débâchage, *m. et* **Débâcher**, *v.a* மூடுசீலையெடுத்தல். [துவிடுதல்

Débâclage, *m.* தடைநீக்கம், திறந்

Débâcle, *f.* சடுதியானமாற்றம், — குலைவு, வீழ்வு, உறைந்தநீருடைந்து கழிதல், துறைத்தடையற்றுப்போதல்.

Débâclement, *m.* உறைந்தநீருடைந்து கழியுநேரம். *V.* Débâclage.

Débâcler, *v. a.* வெறுங்கப்பல்களைத்துறையினின்று —, துறைத்தடைகளை நீக்குதல், தடை —, அடைப்பு —, விக்கினங்களை நீக்குதல், திறத்தல். || *v. n.* se — உறைந்த நீருடைந்துகழிதல்.

Débâcleur, *m.* துறையின் தடைகளை நீக்குமுத்தியோகஸ்தன்.

Déballage, *m.* மூட்டை —, சரக்குகளைக் கட்டவிழ்த்தல், கட்டவிழ்க்குஞ் சரக்குகள். [சரக்கு கட்டவிழ்த்தல்.

Déballer, *v. a.* மூட்டையவிழ்த்தல்,

Débandade, *f.* சிதறல், அலங்கோலை,—ஆனஓட்டம்: à la — அலங்கோலையாய், ஒழுங்கின்றி, சிதற. [பிரிதல்.

Débandement, *m.* சிதறுதல், அணி

Débander, *v. a.* கட்டவிழ்த்தல், தளரவிடுதல், அணிபிரித்தல் : — une plaie காயத்தின் பந்தமவிழ்த்தல் ; — un arc வில்லிறக்குதல். || se — கட்டவிழ்க்கப்படுதல், தன் பந்தமவிழ்த்தல். || சிதறிப்போதல், சிதறுதல், அணிபிரிதல்,—குலைதல், அலங்கோலையாய்ப் போதல். || தளர்வாதல், தளர்தல், இளைப்பாறுதல், அமருதல் ; se — l'esprit தன் புத்திக்கு இளைப்பாற்றிகொடுத்தல்.

Débanquer, *v. a.* பணமெல்லாங்கெலித்தல். || *v. n.* மணல்திடர்விடுதல்.

Débaptiser, *v. a.* ஞானஸ்நானத்தின்பலனையழித்சல், பேரைமாற்றுதல். || se — தனக்கு ஷை பலனையழித்தல், தன் பேரைமாற்றுதல். [துடைத்தல்.

Débarbouillage, *m.* கழுவுதல், முகந்

Débarbouiller, *v. a.* கழுவுதல், முகந்துடைத்தல். || se — தன் முகத்தைக்கழுவுதல், — துடைத்தல், சிக்கறுத்தல், தொந்தரைவிலகுதல்.

Débarcadère, *m.* **Débarcadour**, *m.* சரக்கிறக்குமிடம், — பாலம், உமம், சேர்ப்பு, கட்டுகரை.

Débardage, *m.* **Débarder**, *v. a.* மரக்கட்டை —, மரங்களைக் கரையிற் — வெளியிற்போடுதல், சரக்குகளையிறக்குதல், தோணியைக் கிழித்தல்.

Débardeur, *m.* கரையில் மரக்கட்டைகளை—சரக்குகளையிறக்குகிறவன்,—போடுகிறவன், ஷையான் வேஷம், ஷையான் வேஷந்தரிக்கிறவன்.

Débarqué, *part.* கப்பலினின் றிறங்கின, புதுசாய்வந்த.

Débarquement, *m.* கப்பலினின்றிறக்குதல், — இறங்குதல் : troupes de— (சத்துருக்கள்நாட்டில்) இறங்கும்படை.

Débarquer, *v. a. et n.* கப்ப்லினின் றிறக்குதல், — இறங்குதல், கப்பலை விட்டிறங்குதல், கரைபிடித்தல், — யேறுதல், ஓரிடத்திற்சேருதல்.

Débarquer, *m.* கப்பலைவிட்டிறங்குதல், — இறங்குகிறநேரம்.

Débarras, *m.* தொந்தரையொழிவு, — நீக்கம். [ந்தரைநீக்குதல்,—மீட்பு.

Débarrassement, *m.* தடை—,தொ

Débarrasser, *v. a.* தடை —, விக்கினம் —, தொந்தரை—,நீக்குதல், விலக்குதல், மீட்டல், சிக்கறுத்தல், — எடுத்தல், விடுதலையாக்குதல், கழற்றுதல், அவிழ்த்தல், இறக்குதல் : — les rues வீதிகளினடைப்பு தள்ளுதல் ; — d'un fardeau ஒருவன் சுமையிறக்குதல். || se — நீங்குதல், தள்ளுதல், விக்கினம் —,வருத்தம்—, தடையொழித்தல், சிக்கற்றுப்போதல், தப்பித்துக்கொள்ளுதல்

Débarrer, *v. a.* முட்டுமரம் —, தடையெடுத்தல், தாழ்ப்பாள் திறத்தல்: — 2 personnes இருவரைப் பிரித்தல்.

Débarricader, *v. a* அடைப்புபிரித்தல், — நீக்குதல் ; se — தன்னடைப்பு பிரித்தல்.

Débat, *m.* தருக்கம், வழக்கு, வாக்குவாதம், விவாதம், சச்சரவு, விரோதம். [றுதல்.

Débâter, *v. a.* சேணம்—,விரிகழற்

Débâtir, *v. a.* மூட்டு தையல் பிரித்தல். [ரிய.

Débattable, *adj.* தருக்கத்துக்கு

Débattre, *v. a.* தருக்கித்தல், வாக்குவாதம்பண்ணுதல், எதிரிடை பேசுதல், விவகரித்தல். || se — தருக்கிக்கப்படுதல். || மல்லுகட்டுதல், சண்டைபிடித்தல், போராடுதல், ஆடுதல், வருந்துதல்.

Débauche, *f.* வெறி, மதுபானம், பெருந்தீனி, பேருணவு. || சந்தோஷத்தீனி. || தாறுமாறு, துர்மார்க்கம், தூர்த்தத்தனம். || ஒழுங்கற்ற பிரயோகம், தவறு.

Débauché, *adj. m.* வெறியன், குடியன், பேருண்டியன், காமாதுரன், சோரக்கள்ளன், தூர்த்தன். || *f.* தூர்த்தை, வேசி.

Débaucher, *v. a.* கெடுத்தல், வெறியன் —, தூர்த்தன் —, துர்மார்க்கமாக்குதல், தின்மைக்கிழுத்தல். || பிரமாணிக்கத்தைக் கெடுத்தல், அச்சுக்கூடத்து வேலையாளைத் தள்ளிவிடுதல். || தன் பாரிசத்துக்கு—, சந்தோஷக் கொண்டாட்டுக்கிழுத்தல். || se — வெறியன் —, தாறுமாறு —, துர்மார்க்கமாதல்.

Débaucheur, *m.*— euse, *f.* கெடுப்பவன், தின்மைக்கிழுப்பவன், — வள்.

Débet, *m.* நிலுவை, கடன், இருணம்.

Débiffer, *v. a.* குலைத்தல், பலவீன —, அலங்கோலை —, அசவுக்கியப்படுத்துதல். [ற்ற, தளர்ந்த, மெலிந்த.

Débile, *adj.* பலவீனமுள்ள, பலம

Débilement, *adv.* பலவீனமாய்.

Débilitant, *part.* பலவீனமாக்குகிற. || *m.* பலன் குறைக்கிற மருந்து.

Débilitation, *f.* பலவீனம், — வீனமாக்குதல்.

Débilité, *f.* பலவீனம், — க்கேடு, துர்ப்பலம், சத்துவக்கேடு, தளர்வு, பலட்சயம், சோர்வு.

Débiliter, *v. a.* பலவீனமாக்குதல், பலங்குறைத்தல், தளரச்செய்தல் ; se— பலவீனமாதல். [*v.a.*மரஞ்செதுக்குதல்.

Débillardement, *m.* Débillarder,

Débiller, *v. a.* கோணியிழுக்கிற குதிரைகளை அவிழ்த்தல்.

Débine, *f.* இடைஞ்சல் —, நிர்ப்பாக்கியமான அந்தஸ்து.

Débit, *m.* உச்சரிப்பு, வாசிக்கும் —, உச்சரிக்கும் விதம். || விற்கிரயம், வெகுவான —, விற்பனை, சில்லரைச் செட்டு, விற்பனை, — க்கடை, — உத்தரவு பெற்றகடை. || கணக்குப் புஸ்தகத்தினிடப் பக்கம், விற்பனைக்கணக்கு. || மரத்தின் பலபிரிவு. || ஒரூற்றுதரு நீரளவை. || — de boissons ou cabaret சாராயக்கடை, மதுபானக்கடை. [பிரித்தல்.

Débitage, *m.* மரம் பல பங்காகப்

Débitant, e, *s.* சில்லறையாக விற்பவன், — வள்.

Débiter, *v. a.* சில்லரையாய் —, வெகுவாய் —, சீக்கிரத்தில் விற்றல். || சொல்லுதல், பரப்புதல், உச்சரித்தல். || (ஊற்று) தண்ணீர் கொடுத்தல். || (மரங்கல்லுமுதலியவற்றை) பலதுண்டாக —, பலபங்காகப் பிரித்தல், — அறுத்தல். || வேலைசெய்தல். || விற்பனையிலெழுதுதல் :—de l'ouvrage வெகு வேலைசெய்தல் ; —du bois en planches மரம்பலகையாயறுத்தல். || se—விற்பனையாதல்.

Débiteur, — euse, *s.* சொல்லுகிறவன், (பலசெய்தி) பரப்புகிறவன், — வள். || —, trice, *s. et adj.* கடனாளி, கடன்காரன், — காரி : compte — கடன் கணக்கு.

Déblai, *m.* மண்ணெடுப்பு, எடுத்த மண், துப்பரவாக்குதல். || தொந்தரை நீக்கம். [பைஎடுத்தல், துப்பரவாக்குதல்

Déblaiement, *m.* இடிசலை —, குப்

Déblatération, *f.* கூச்சல், பழிப்பு, தூறல். [தூறுதல்.

Déblatérer, *v.a.* கூவுதல், பழித்தல்,

Déblayer, *v. a.* வாரி —, இடிசலை — குப்பையெடுத்தல், துப்பரவாக்குதல். || se — வாரிப்போடப்படுதல், துப்பரவாதல். [களைமாற்றுதல்.

Déblocage, *m.* திருப்பின எழுத்து

Débloquement, *m.* Débloquer, *v. a.* முற்றிக்கைவிடுவித்தல், — வாங்கிப்போதல். || திருப்பின எழுத்துகளை மாற்றுதல். || se —, தந்தக்குண்டுபையினின்று வெளிப்படுதல்.

Déboire, *m.* குடித்ததினரோசகம். || சலிப்பு, கஸ்தி, விசனம்.

Déboisement, *m.* மரங்களை வெட்டுதல், வெளியாதல்.

Déboiser, *v. a.* மரங்களை —, காடுகளை வெட்டுதல், — பெயர்த்தல். || se — மரமற்றுப்போதல். [த்த.

Déboîté, *part.* சுளுக்கின, மக்களி

Déboîtement, *m.* சுளுக்கு, பெயர்ச்சி, மக்களிப்பு.

Déboîter, *v. a.* சுளுக்கச்செய்தல், பெயர்த்தல், உருளிபெயர்த்தல், கழற்றுதல், பிரித்தல். || se—சுளுக்குதல், மக்களித்தல், உருளிபெயர்தல், கழலுதல், பிரிதல்.

Débonder, *v. a.* மதகுதிறத்தல், அடைக்குங்குச்சு எடுத்தல், மடைகழித்தல். || வயிறுகழிவித்தல், பேதிவருவித்தல். || *v. n. et* se — வேகமாய்ப் புறப்படுதல், மடை —, மதகுதிறந்தோடுதல், திரளாய்ச் சிந்துதல், வயிறுகழிதல். || தன் மனந்திறந்துபேசுதல்.

Débondonnement, *m.* அடைக்குங்குச்சு எடுபடுதல்; *ou* **Débondonner**, *v. a.* (பீப்பாவாயடைக்கும்) குச்சு எடுத்தல்.

Débonnaire, *adj.* வெகு —, மிஞ்சினபொறுமையுள்ள, தயவுள்ள, இளக்காரமுள்ள, அதிகநல்ல.

Débonnairement, *adv.* மிஞ்சின —, தயவாய், இளக்காரமாய்,

Débonnaireté, *f.* மிஞ்சின பொறுமை, — தயவு, இளக்காரம்.

Débord, *m.* கற்றளத்தினோரத்திலுள்ள பாதையின்பங்கு.

Débordé, *part.* கரைபுரண்ட, வெள்ளமான, வடிகிற. || தாறுமாறான, தூர்த்த.

Débordement, *m.* வெள்ளம், பிரளயம், சலப்பிரவாகம், வெள்ளப் —, பெருக்கம், பெருக்கு, மிகுதி. || (நீர் —, பித்த) கழிச்சல். || (துஷ்டசனத்தின்) வெள்ளம், (அது) பாய்ந்து பரம்புதல், பாய்தல். || துர்மார்க்கம், தூர்த்தத்தனம்.

Déborder, *v. a.* ஓரம்பிரித்தல், — எடுத்தல். || கடத்தல், அப்பாலே போதல், அதிகவிரிவாதல். || கப்பலோரத்தினின்று சுற்றுப்பலகை —, தண்டுகளையெடுத்தல். || *v. n.* ஓரங்கடத்தல், ஓரத்துக்கப்பாலே போதல், — விரிதல். || கரை —, பிரளுதல், வெள்ளமாதல், (நீர், பித்தம்...) பெருகிச் சிந்துதல், பொங்கி வழிதல், தாராளமாய் ஓடுதல், (படை) திரளாய்ப் பாய்தல், (தோணிகப்பலை) விட்டகலுதல். || se—ஓரம்பிரிதல், கரை —, புரளுதல், வெள்ளமெடுத்தல், திரளுதல், பெருகுதல், பொங்குதல், புறப்படுதல், பரம்புதல். || துர்மார்க்கமாதல் : — en injures திரளாய்த் தூஷணங்களைக் கக்குதல்.

Débordoir, *m.* இருகைப்பிடிச் சீவுளி. || கண்ணாடிசெய்வதற்குத் தொட்டி, —ச்சட்டி. [நசிவு எடுத்தல்.

Débosseler, *v. a.* மேடுபள்ளம் —,

Débotter, *v. a.* நெடுஞ்சப்பாத்து கழற்றுதல். || se — தன் நெடுஞ்சப்பாத்து கழற்றுதல். || *m.* ஷை சப்பாத்துகளைக் கழற்றுங்காலம். || சேருகிற நேரம்.

Débouché, *m.* கணவாய் முடிவு, நெருக்கமான —, வழி, உபாயம். || விற்பனையேதுவு, சரக்குவிற்குமிடம். || *part.* திறக்கப்பட்ட.

Débouchement, *m.* திறப்பு, அடைப்பு நீக்கம், நெருக்கமானவழி முடிவு.

Déboucher, *v. a.* திறத்தல், தப்புத்தோர் —, விக்கினம் —, தடையெடுத்தல், — கழித்தல். || மூடத்தனங் குறைத்தல். || *v. n.* நெருக்கமானவழி விட்டுப் —, புறப்படுதல், கழிதல், கூடுதல், சேருதல். || se — திறக்கப்படுதல், மூடத்தனம் விடுதல், புத்தியடைதல்.

Débouchoir, *m.* இரத்தினக்காரன் கருவி.

Déboucler, *v. a.* கச்சுப்பூட்டு கழற்றுதல், அவிழ்த்தல், சுருளையவிழ்த்தல். || se — கச்சுப்பூட்டு கழலுதல், சுருள் அவிழ்தல்.

Débouilli, débouillissage, *m.* **Débouillir**, *v. a.* சாயந்தீர்ந்த சீலையைப் பொங்குவித்தல்.

Déboulonner, *v. a.* இயந்திரத்தின் சாவியைத் தளத்துதல், — திருப்புதல்.

Débouquement, *m.* தீவுகளுக்குள்ளே நெருக்கமானவாய்க்கால்; *ou*

Débouquer, *v. n.* ஷை வாய்க்காலினின்று புறப்படுதல்.

Débourber, *v. a.* சேறுதுடைத்தல், — வாருதல், சேற்றினின்றெடுத்தல், சேற்றுருசியைப் போக்குதல் : se — சேறுகக்குதல், — துடைத்தல்.

Débourgeoiser, *v. a.* நகரத்தாருடைய நாகரீகம்—தன்மை—மேரையை விடுவித்தல். || se—ஷி நாகரீகம்விடுதல்.

Débourrer, *v. a.* சிம்பாவாங்குதல், பழக்குதல், சீர் படுத்துதல். || se — பழகுதல், சீர்படுதல். [பணம்.

Débours, *m.* பணச்செலவு, முன்

Déboursé, *m.* *V.* Débours. || *part.* செலவான. [செய்தல்.

Déboursement, *m.* செலவு, —

Débourser, *v. a.* பையினின்று பணமெடுத்தல், செலவுசெய்தல், கொடுத்தல்.

Debout, *adv.* நின்றுகொண்டு, நட்டமே, நின்றநிலையாய், எதிராக : se tenir — நிற்றல் ; laisser—நிற்கவிடுதல் ; être — எழுந்திருத்தல், தாவிளையாய் —, இன்னமிருத்தல் ; mettre — நட்டமேபோடுதல், நிற்கவைத்தல் ; passer — (ஆயத்துறையில்) நிற்காமற்போடுதல் ; avoir le vent — எதிர்காற்றுபடுதல். || *int.* எழுந்திருக்க.

Débouté, *m.* நியாயவாதியின் மனுவைத் தள்ளிப்போடுதல்.

Débouter, *v. a.* பிராது —, நம்பிக்கைநீக்குதல், — தள்ளுதல்.

Déboutonner, *v. a.* புத்தொன் —, தெறிப்புகழற்றுதல், — அவிழ்த்தல், — எடுத்தல், (சிலம்பக்கத்திநுனியின்) குமிழ்எடுத்தல். || se — புத்தொன் —, தெறிப்புதானாயவிழ்தல், — கழலுதல், தன் சட்டையின் தெறிப்புகழற்றுதல், தன் மனந்திறத்தல். [—, சட்டைதிறந்த.

Débraillé, *part.* அலங்கோலையாய்த்

Débrailler (se) அலங்கோலையாய்த் தன் சட்டையைத் —, தன் சட்டை—, தன் மார்புதிறத்தல்.

Débredouiller, *v. a.* சர்வகெலிப்பைத் தடுத்தல், பலதோர்வையைப் பரிகரித்தல். || se — சர்வ தோர்வைக்குத் தப்புதல், பல தோர்வைக்குப்பின் அநுகூலமாதல்.

Débridé, *part.* கடிவாளமற்ற.

Débridement, *m.* கடிவாளங் கழற்றுதல், காயங்கட்டவிழ்த்தல்.

Débrider, *v. a.* கடிவாளங் கழற்றுதல், — அவிழ்த்தல், காயத்தைக்கட்டவிழ்த்தல், — இளக்குதல், தீவிரமாய் முடித்தல் : sans — கடிவாளங்கழற்றாமல், விடாமல்.

Débris, *m.* இடிசல், இடித்தது, சேஷம், மீதி, மிச்சம் :—d'une table போசனமிச்சம், மிச்சில், எச்சில்.

Débrocher, *v. a.* இறைச்சி சுடும் இரும்புக்கம்பிகள். [தெளிவாக்கல்.

Débrouillement, *m.* சிக்கறுப்பு,

Débrouiller, *v. a.* சிக்கறுத்தல், சிக்கெடுத்தல், பகுத்தறிதல், தெளிவித்தல், விளக்குதல், கண்டுபிடித்தல், விவரமாயறிதல். || se—சிக்கற்றுப்போதல், தெளிவாதல், ஒழுங்காதல்.

Débrutir, *v. a.* Débrutissement, *m.* சீவுதல், செதுக்குதல், மிருதிடுதல், மிருதிடத்துவக்குதல்.

Débucher, *v. n.* *et a.* வாடியினின்று —, காட்டினின்று புறப்படுதல்,— புறப்படச்செய்தல், — ஓட்டுதல்.

Débucher, Débuché, *m.* மிருகங்காட்டினின்று புறப்படும்வேளை. || அதை அறிவிக்குங்கொம்பின் சத்தம்.

Débusquement, *m.* Débusquer, *v. a.* கிளப்புதல், நீக்குதல், நீக்கியமர்தல், (நல்லவிடத்தினின்று) தள்ளுதல். || ஒருவனைத்தள்ளி யவனிடமபகரித்தல்.

Début, *m.* துவக்கம், ஆரம்பம், தொடக்கம், முகனை, முதல்முறை, — வேலை, — பரிக்ஷை.

Débutant, — te, *s.* துவக்கிறவன், முதல்முறை நாடகமாடுகிறவன்,—வள். || *part.*

Débuter, *v. a.* இலக்கினின்று குண்டுதள்ளுதல். || *v. n.* துவக்குதல், முதல் பரிக்ஷைசெய்தல், — விசைவிளையாடுதல், — விசைநாடகமாடுதல், முதலடிபோடுதல், ஓர் ஏற்பாடு —, பிரசங்கந்துவக்குதல், நாடகமாடுதல்.

Déca, சேர்க்கைச்சொற்களில் பத்து — தசம் என்றர்த்தமாம்.

Deçà, *adv. prép.* இப்பால், இப்புறம் : deçà et delà அங்கங்கே : par—, en — இப்புறம்; par —,en—*ou* — la rivière ஆற்றுக்கிப்பால். [க்கத்தக்க.

Décachetable, *adj.* முத்திரையுடை

Décachètement, *m.* Décacheter, *v. a.* முத்திரையுடைத்தல், — எடுத்தல், — உடைத்துத்திறத்தல். || se — தானாய் முத்திரை எடுபடுதல், — த்திறந்துபோதல். [யாழ்.

Décachorde, *m.* பத்துநரம்புள்ள

Décadaire, *adj.* பத்துப்பங்கு — நாளுள்ள.

Décade, *f.* பத்துநாள், தசம், பத்து, — காண்டமுள்ள புஸ்தகம்.

Décadenasser, *v. a.* மாங்காய்ப்பூட்டு எடுத்தல். [கெடுதல், குறை, சிதைவு.

Décadence, *f.* தாழ்வு, தாழ்வாதல்,

Décadi, *m.* (குடியரசின் கிழமையின்) பத்தாநாள்.

Décaèdre, *adj. et m.* தசபுசமுள்ள, பத்துபக்கமுள்ள, — உள்ளபொருள், தசபுசை.

Décagone, *adj. et m.* தசகோணமுள்ள, — கோணவடிவு, — கோணம்.

Décagramme, *m.* பத்துகிரும் என்னுமிடை, இராத்தலின்-௫௰-ம் பங்கு.

Décagyne, *adj.* பத்துப்பெண்தாதுள்ள (புஷ்பம்). [ள்ள பூண்டினம்.

Décagynie, *f.* பத்துப்பெண்தாது

Décaissement, *m.* Décaisser, *v. a.* பெட்டியினின்றெடுத்தல்.

Décalcomanie, *m.* சித்திரித்த ஒருருவத்தை வேறுபொருளில் பதியச்செய்தல் — ஒட்டும்படிசெய்தல்.

Décaler, *v.a.* ஓர்பொருளைத்தாங்கிக்கொண்டிருக்கும் முட்டுகளை எடுத்துப்போடுதல். [ஆறரைபடிகொள்ளும்.

Décalitre, *m.* பத்துலீத்திறளவை,

Décalobé, *adj.* பத்திதழுள்ள.

Décalogue, *m.* பத்துக்கற்பனை.

Décalotter, *v. a.* குல்லா —, மூடியெடுத்தல்.

Décalque *m.* et Décalquer, *v. a.* வரைந்ததின் பிரதியெடுத்தல்.

Décaméron, *m.* பத்துநாள் சம்பவம் — சம்பாஷணைகொண்ட புஸ்தகம்.

Décamètre, *m.* பத்துமேத்திறளவை, ௩௩-இங்கிலீஷடி.

Décampement, *m.* Décamper, *v.n.* பாளையம் எழும்புதல், — வாங்கிப்போதல், தண்டுவாங்குதல், சீக்கிரமாய்ப் புறப்படுதல், ஓடிப்போதல்.

Décan, *m.* தெங்கணம், தெக்கணம்.

Décanal, *adj.* கூட்டத்தலைமைக்கடுத்த.

Décanat, *m.* கூட்டத்துத்தலைமை, — ச்சிரோஷ்டர்பட்டம், அது நிலைக்குங்காலம்.

Décandre, *adj.* பத்துப்பூந்தாதுள்ள.

Décandrie, *f.* பத்துப்பூந்தாதுள்ள பூண்டினம். [மையாயிருத்தல்.

Décaniser, *v. n.* கூட்டத்துத்தலை

Décantation, *f.* Décanter, *v. a.* இறுத்தல், வேறுபாத்திரத்தில் மெதுவாய் —, தெளியவார்த்தல். || se — இறுக்கப்படுதல்.

Décapage, *m.* Décaper, *v. n.* முந்தல் கடத்தல், குடாவினின்று புறப்படுதல். || *v. a.* களிம்புதுடைத்தல். [வள்.

Décavé, *m.* சகலமுமிழந்துபோன

Décapétale, Décapétalé, *adj.* பத்துப்பூவிதழுள்ள.

Décaphylle, *adj.* பத்து இலையுள்ள.

Décapitation, *f.* சிரச்சேதம், தலையபராதம். [ச்சேதம் பண்ணுதல்.

Décapiter, *v.a.* தலைவெட்டுதல், சிர

Décapode, *adj. et m.* பத்துக்காலுள்ள, — கால்பிராணி.

Décapole, *f.* தசநகரநாடு.

Décapuchonner, *v. a.* தலைப்போர்வையெடுத்தல். || se — தன்தலைப்போர்வையெடுத்தல்.

Décarrelage, *m.* தளவரிசையெடுத்தல், — யெடுத்ததன்மை. [தல்.

Décarreler, *v. a.* தளவரிசையெடுத்

Décasquer, *v.a.* தலைச்சீராதள்ளுதல்.

Décastère, *m.* பத்துக் கனமேத்திறுவிறகளவை. [தூண் வீடு.

Décastyle, *m.* வரிசையான பத்துத்

Décasyllabe, Décasyllabique, *adj.* பத்து அசையுள்ள.

Décatir, *v.a.* பளபளப்பழித்தல், காந்திபோக்குதல். || se—பளபளப்பழிதல், பளபளப்பழிக்கப்படுதல்.

Décatissage, *m.* பளபளப்பழிப்பு, பளபளப்பழிவு. [வன்.

Décatisseur, *m.* பளபளப்பழிக்கிற

Décaver, *v. a.* எதிராளியின் பணமெல்லாங் கெலித்தல். [த்தல்.

Décéder, *v.n.* மரித்தல், சாதல், இற

Décèlement, *m.* அறிவிப்பு, வெளிப்படுத்தல்.

Déceler, *v. a.* வெளி —, தெரியப்படுத்துதல், அறிவித்தல், பிரசித்தமாக்குதல். || se — தன்னை வெளிப்படுத்துதல், வெளிப்படுதல்.

Décembre, *m.* டிசம்பர்மாதம், அதிலே கார்த்திகையுமார்கழியுங் கலந்துவரும். [யோக்கியம் —, தகுதியாய்.

Décemment, *adv.* மரியாதை —,

Décemvir, *m.* (உரோமாபுரியில்) பத்துநடுவரில் ஒருவன்.

Décemviral, *adj*. ௰ நடுவருக்கடுத்த.

Décemvirat, *m*. ௰ நடுவர்பட்டம், — ஆளுகை, — ஆளுகைக்காலம்.

Décence, *f*. மரியாதை, யோக்கியம், தகுதி, ஒழுக்கம்.

Décédé, *adj*. *et m*. இறந்த, செத்துப்போன. [க்கிற.

Décennaire, *adj*. பத்துபத்தாய் நட

Décennal, *adj*. பத்துவருஷ,—வருஷநிலைக்கிற,—வருஷத்துக்குப்பின் வருகிற.

Décent, *adj*. யோக்கிய,ஏற்ற, தக்க, தகுந்த, யோக்கியம்—,மரியாதையான.

Décentralisation, *m*. **Décentraliser**, *v. a*. சர்வ அதிகாரமுங் கொஞ்சம் பேர்கையில் வராதபடி—,சர்வமும்மையத்திற்சேராதபடிசெய்தல்.

Déception, *f*. மோசம், எத்து, ஏய்ப்பு, வஞ்சனை.

Décercler, *v. a*. வளையமெடுத்தல், — கழற்றுதல். ‖ se — வளையங்கழலுதல், — அற்றுப்போதல்.

Décerner, *v. a*. விதித்தல், நியமித்தல், இடுதல், குறித்தல், கற்பித்தல், பிரசித்தமாய் —, அளித்தல்.

Décès, *m*. சாவு, மரணம்.

Décevable, *adj*. மோசத்துக்கேதுவான, ஏய்க்கத்தக்க, — எளிதான.

Décevance, *f*. மோசம், ஏய்ப்பு,

Décevant, *part*. *de* [வஞ்சனை.

Décevoir, *v. a*. ஏய்த்தல், எத்துதல், வஞ்சித்தல், மோசஞ்செய்தல், — போக்குதல், மயக்குதல். [ற்ற.

Déchaîné, *part*. சங்கிலி —, கட்ட

Déchaînement, *m*. கட்டவிழ்ப்பு, கடுங்கோபம், — விரோதம், அகோரம், உக்கிரம், — ஆனபழிப்பு.

Déchaîner, *v. a*. சங்கிலி கழற்றுதல், கட்டவிழ்த்தல், ஏவிவிடுதல், தூண்டுதல், கோபமூட்டுதல். ‖ se — தன் சங்கிலியறுத்தல், கட்டவிழ்தல், அகோரமாய்ச்சினத்தல், அகோரமாதல், கொடுமை —, உக்கிரஞ்செய்தல், உக்கிரமாய்ப்பேசுதல், — திட்டுதல், — வீசுதல், —அடித்தல். [டுத்தல், — கழற்றுதல்.

Déchalasser, *v.a*. தாங்கி—,கழியெ

Déchanter, *v. n*. ஒய்யாரம்—,பேச்சில் தாழுதல், குறைபெண்ணங்கொள்ளுதல்.

Déchaperonner, *v. a*. சுவரின் தலை —, மூடியெடுத்தல்.

Décharge, *f*. சரக்கு —, சுமை —, பாரம் —, இறக்குதல், இறக்கம், கழிவு. ‖ பலவெடி —, வெடிசுடுதல், அதிர்வெடி. ‖ விடுதலை, மீட்பு, குற்றநீக்கம், நன்மை. ‖ இறுப்பு, கடன்தீர்ப்பு, — இறுப்பு. ‖ ஆறுதல், இளைப்பாற்றி. ‖ (வெளித்தட்டுமுட்டில்) தீர்வை தீர்ந்த முத்திரை. ‖ பொறுப்புள்ள —, குறுக்குச்சட்டம். ‖ இடிசலை —, குப்பைவைக்குமிடம், பண்டகசாலை, — அறை. ‖ நீரோடும்போக்கு, நீர்வடிவழி, வடிநீர் சேருஞ் சிறுகுளம். ‖ ஊருததாள், மாசுவாங்கி, மையுறிஞ்சுங் கடுதாசி: — de mousqueterie அநேகந் துப்பாக்கி வெடி; — de coups de bâton அநேகதடியடி, கோலடி; pour la — de ma conscience என் மனச்சாட்சியின் கடன்தீர; tuyau de — நீர்வடி குழாய்; cabinet de — சிறு பண்டக அறை; parler à la — de quelqu'un ஒருவனுக்குக் குற்ற நீக்கமாக — சனுவாகப் பேசுதல். [அற்ற, விடுதலான.

Déchargé, *part*. சுமையிறக்கின, —

Déchargement, *m*. இறக்குதல், சுமை —, சரக்கின் இறக்கம்.

Déchargeoir, *m*. நீர்வடிவழி, — வழித்திறப்பு. ‖ படைமரம், படமரம்.

Décharger, *v. a*. சுமை —, பாரம் இறக்குதல், — கழித்தல், — நீக்குதல், பாரங்குறைத்தல், சுமையில் அதிகமானதையெடுத்தல், சுமை —, பொறுப்பு நீக்குதல், — ஒழித்தல், அதிகமானதைக்கழித்தல். ‖ விடுதலையாக்குதல், மன்னித்தல், குற்றமில்லையென்று தீர்த்தல், குற்ற நீக்குவதற்குப் பேசுதல். ‖ கடன் தீர்ந்ததென்னல், பற்றுச்சீட்டு கொடுத்தல. ஆறுதல் செய்தல். ‖ மையெடுத்தல், — துடைத்தல். ‖ சுடுதல், தாணிப்புவாங்குதல்: — un cheval குதிரைச் சுமையிறக்குதல்; — son estomac (வாந்தியால்) இரைக்குடலின் பாரங் கழித்தல்; — son cœur தன் மனதிலுள்ள பாரங்கழித்தல், தன் கருத்தைக் கபடின்றி வெளிப்படுத்துதல்; — sa conscience தன் மனசாட்சியின் கடமை செலுத்துதல்; — un coup de fusil துப்பாக்கி சுடுதல்; — un coup de bâton தடியாலடித்தல்; — sa bile, sa colère தன் கோபத்தை நிறைவேற்றுதல்,—வெளிவிடுதல் ; —un registre கணக்குப்புஸ்தகத்திற் பற்றுச்சீட்டு சேர்த்தல் ; — d'une dette கடனை மன்னித்தல் ; — un arbre மரத்தின் அதிமிச்சமான கிளைகளைக் கழித்தல் ; — d'impôts தீர்வைபாரங் குறைத்தல் ; — d'une accusation குற்றமில்லையென்று தீர்த்தல் ; — une forme ஓர் அச்சின் மையெடுத்தல் ; — d'un devoir ஓர் கடமை நீக்குதல், பதிலாகக் கடமை செலுத்துதல். || se — தன் சுமையிறக்குதல், || தன் காந்தி —, பளபளப்பிழத்தல். || (நீர்) வடிதல், ஓடுதல், கழிதல். || தாணிப்பு எடுக்க —, சுடப்படுதல் ; se — sur மேலேபோடுதல்,—சாட்டுதல், ஒப்பித்தல் ; se — d'un secret தனக்குப் பாரமான இரகசியத்தை வெளிப்படுத்துதல்.

Déchargeur, *m.* இறக்குகிறவன், இறக்குமதியுத்தியோகஸ்தன்.

Décharné, *part.* சதை—, சிறப்பற்ற, மெலிந்த, இளைத்த, எலும்புந்தோலுமாத்திரமுள்ள.

Décharnement, *m.* et Décharner, *v. a.* சதையெடுத்தல். || மெலிவித்தல், இளைப்பித்தல், சிறப்பு கழித்தல், சிறப்பழித்தல்.

Décharpir, *v. a.* பிரித்தல்.

Déchasser, *v. a.* மரவாணி புறப்பட வடித்தல். || *v. n.* இடத்தே நடனமாடுதல். || se — மரவாணி வெளிப்படுதல்.

Déchaumer, *v. a.* அரிதாளுள்ள நிலம் —, தரிசு உழுதல்.

Déchaussé, *part.* ou Déchaux பாதரக்ஷையற்ற, சப்பாத்துதொடாத, வெற்றுக்காலுள்ள, அடியில் மண்ணற்ற, ஈறுமூடாத (அடிப்பல்).

Déchaussage ou Déchaussement, *m.* கொத்தம், — போடுதல், கொத்துதல், பல்லினடி வெளிப்படுத்துதல், ஈறற்றதன்மை, சுவரடி மண்ணெடுத்தல்.

Déchausser, *v. a.* பாதரட்சை—, சப்பாத்து —, கால்மேற்சோடு கழற்றுதல், மரத்தடிசுற்றிலுங் கொத்துதல்,—கொத்தம்போடுதல், சுவரினடி மூடுமண்ணெடுத்தல், பல்லினடி வெளிப்படுத்துதல், பல்லினீறு விலக்குதல், || se — தன் பாதரக்ஷை கழற்றுதல், மரத்தினடி —, பல்லினடி வெளிப்படுதல்.

Déchaussoir, *m.* பற்குத்தி, பல்லின் சுற்றிலும் ஈறுவிலக்குங் கருவி.

Déchéance, *f.* சுதந்தர —, அரசின் —, இழப்பு, வீழ்வு, தாழ்தல், இழிதல்.

Déchet, *m.* குறை, குறைவு, சேதம், நஷ்டம், சேதாரம், விலைக்குறைவு.

Déchevelé, *part.* தலைமயிர் கலைந்த.

Décheveler, *v. a.* தலைமயிர் குலைத்தல், — கலைத்தல், — அலங்கோலைப்படுத்துதல். || se — தங்கள் —, தன் தலைமயிர் குலைத்தல்.

Déchevêtrer, *v. a.* முகவார் கழற்றுதல்.

Décheviller, *v. a.* மரவாணியெடுத்தல்

Déchiffrable, *adj.* வாசிக்கக்கூடிய.

Déchiffrement, *m.* Déchiffrer, *v. a.* இரகசிய அக்ஷரங்களை —, அரிய வெழுத்துக்களை வாசித்தல், — தெளிவித்தல், முதல்விசை சங்கீதம் வாசித்தல், சிக்கறுத்தல், கண்டுபிடித்தல், கருத்து உத்தேசித்தல். || se — வாசிக்கப்படுதல்.

Déchiffreur, *m.* — euse, *f.* இரகசிய அக்ஷரங்களினர்த்தமறிந்தவன், — கண்டுபிடிக்கிறவன், அரிய வெழுத்துக்களை வாசிக்கிறவன், முதல்விசை சங்கீதம் வாசிக்கிறவன், — வள்.

Déchiqueter, *v. a.* துண்டித்தல், கிள்ளுதல், கீறுதல், அறுத்தல், பீறுதல், பிரித்தல்.

Déchiqueteur, *m.* துண்டிக்கிறவன், வண்டில் பிரிக்கிறவன்.

Déchiqueture, *f.* துண்டிப்பு, வெட்டு, பீறல்.

Déchirage, *m.* படகுபிரித்தல்.

Déchirant, *part.* குத்துகிற, வருத்துகிற.

Déchiré, *part.* கிழிந்த, பீற்றலான, கிழிக்கப்பட்ட.

Déchirement, *m.* கிழித்தல், கிழிவு, பிளப்பு, பிரிப்பு, பீறல். || கலகம், கலாபனை, சண்டை: — d'entrailles கடுங்குடல் நோய் ; — de cœur கடுமனத்துயரம், கடின சஞ்சலம்.

Déchirer, *v. a.* கிழித்தல், பீறுதல், கீறுசல், பிய்த்தல், பிளத்தல், துண்டித்தல், துண்டாக்குதல், பிரித்தல். || வருத்துதல், கஸ்திப்படுத்துதல், வாதித்தல், தூஷித்தல், தூறுதல், அழித்தல்: — causer dissensions பிரிவினை யுண்டுபண்ணுதல் — le prochain புறத்தியாரைத் தூஷணித்தல். || se — கிழிதல், பீறப்படுதல், பிய்தல், நகத்தால் தன்னைப்பீறுதல், ஒருவரொருவருடைய —,

தன் சட்டை கிழித்தல், ஒருவனொருவனைப் பீறுதல், — தூஷித்தல்.

Déchireur, *m.* — euse, *f.* கிழிக்கிறவன்; தோணி பிரிக்கிறவன், அடிக்கடி தன் சட்டை கிழிக்கிறவன், — வள்.

Déchirure, *f.* கிழிதல், பீறல், கிழிவு, கீறல்.

Déchoir, *v. n.* விழுதல், குறைதல், இழிதல், தணிதல், தாழுதல், கெட்டுப் போதல்: — de son poste தன்னுத்தியோகத்தை யிழத்தல்.

Déchouer, *v. a.* தட்டின கரையை விடுவித்தல், — கப்பலை மறுபடி பாய்ச்சுதல்.

Déchu, *part.* விழுந்த, அற்ற, இழந்த.

Déci, சேர்க்கைச் சொற்களில் பத்தாம்பங்கு என்றர்த்தமாம்.

Déciare, *m.* ஆரென்கிற நிலத்தளவின் பத்தாம்பங்கு,-௰-சதுரமேத்திறு.

Décidé, *part.* தீர்ந்த, தீர்மான, துணிந்த, திடமுள்ள.

Décidément, *adv.* திர்மானமாய்.

Décider, *v. a.* தீர்மானித்தல், தீர்த்தல், தீர்வையிடுதல், தீர்மானம் —, திட்டம்பண்ணுதல், முடித்தல், தீர்மானப்படுத்துதல், துணியச்செய்தல், சம்மதிப்பித்தல், விவகாரந்தீர்த்தல், முடிவு கட்டல், ஓர் காரியம் செய்ய ஒருவனை உட்படுத்துதல். || se — துணிதல், தீர்மானித்தல், தீர்மான —, தீர்க்கப்படுதல்.

Décigramme, *m.* கிறுமென்னும் இடையின் பத்தாம்பங்கு.

Décilitre, *m.* லீத்திறளவையின் பத்தாம்பங்கு.

Décimable, *adj.* பத்திலொன்று தரத்தக்க.

Décimaire, *adj.* -௰-கணக்கக்ஷரம் வழங்கிய.

Décimal, *adj.* தச, பத்துப்பத்தான, பத்துப்பத்தாய்ப் பிரிகிற.

Décimale, *f.* தசாம்சம்.

Décimateur, *m.* பத்திலொன்றை வாங்குகிறவன்.

Décimation, *f.* பத்திலொருவனை வெட்டுதல், — த்தண்டித்தல், — எடுத்தல், பத்திலொருபங்கெடுத்தல்.

Décime, *m.* எட்டுக்காசு நாணயம். || கோவில் வருமானங்களிலே பத்திலொன்று. || கோவிலும்பிளிக்கைக்கார ரிராசாவுக்குக் கொடுக்குந் தீர்வை.

Décimer, *v. a.* பத்திலொருவனை வெட்டுதல், — த்தண்டித்தல், — எடுத்தல், — சாகுவித்தல், பெரியதொகையிற்சிலரைக் கொல்லுதல். || se — பத்திலொருவன் கொல்லப்படுதல்,—சாதல்.

Décimètre, *m.* மேத்திறளவின் ப்த்தாம்பங்கு.

Décimo, *adv.* பத்தாவது.

Décintrement, *m.* Décintrer, *v.a.* வளைவினச்சு —, மரவளைவு எடுத்தல்.

Décintroir, *m.* இருபுறமும் வெட்டுஞ் —, கொத்தன் சுத்தியல்.

Décisif, *adj.* தீர்ப்பு —, தீர்மானமான, தீர்க்கிற, முடிப்பான, உறுதி —, திட்டம் —, கண்டிதமான.

Décision, *f.* தீர்மானம், தீர்ப்பு, தீர்வை, தீர்ந்தவகை, திட்டம், பைசல், துணிவு.

Décisivement, *adv.* தீர்மானமாய்.

Décisoire, *adj.* தீர்மான, தீர்க்கிற, முடிக்கிற.

Décistère, *m.* ஸ்தேர் என்னுமளவையின்-௰-ம் —, கனமேத்திறளவையின் பத்தாம்பங்கு.

Déclamateur, *m.* பிரசங்கியாயுச்சரிக்கிறவன்,—உரைக்கிறவன், எடுப்பான பிரசங்கி, பாராட்டுகிறவன், கூறுகிறவன். || *adj.* எடுப்பான.

Déclamation, *f.* பிரசங்க உச்சரிப்பு,—உச்சாரணம், பழகுதற்கான பிரசங்கம், குணப்பாராட்டு, எடுப்பு, மிஞ்சினபுகழ், — முறைப்பாடு. || பழிப்பு, தூஷணம்.

Déclamatoire, *adj.* பிரசங்க உச்சரிப்பான, பிரசங்கத்துக்குரிய, எடுப்பானபாராட்டுள்ள.

Déclamer, *v.a.* பிரசங்கித்தல், பிரசங்கியாயுச்சரித்தல், குயிலுதல், கூறுதல், உச்சாரணத்துக்குப் பழகுதல், எடுப்பாய்ப்பிரசங்கித்தல். || தூஷித்தல், பழித்தல்.

Déclaratif, *adj.* தெளிவிக்கிற, அறிவிக்கிற.

Déclaration, *f.* அறிக்கை, கூறல், பிரசித்த —, வெளிப்படுத்துதல், அறிவிப்பு, நிச்சயிப்பு. || சாட்சி, வாக்குமூலம். || பக்ஷ அறிக்கை, — நிச்சயிப்பு. || கணக்கு, விபரம்: — de guerre சண்டைகூறல்.

Déclaratoire, *adj.* தெளிவிக்கிற, [அறிவிக்கிற.

Déclaré, ée, *adj.* ஏற்றுக்கொண்ட, அறிந்த, தெரிந்த.

Déclarer, *v. a.* அறிவித்தல், தெளிவித்தல், வெளியாக்குதல், பிரசித்த —, வெளிப்படுத்துதல், சொல்லுதல், கூறுதல். || தீர்த்தல், தீர்மானித்தல், விதித்தல், நியமித்தல், குறித்தல், ஸ்தாபித்தல் : — la guerre சண்டைகூறுதல் ; — nul செல்லாதென்று தீர்த்தல். || se — வெளிப்படுதல், தன் கருத்தை —, தன்னை வெளிப்படுத்துதல், பாரிசமாதல் ; se — vaincu தான் தோற்றவனென்று ஒத்துக்கொள்ளுதல் ; se — pour ou contre, தன்னைப்பாரிசத்தான் அல்லது எதிரியென்று காட்டுதல்.

Déclassé, *adj. et m.* தன் அந்தஸ்தையிழந்த, இழிவான.

Déclassement, *m.* Déclasser, *v.a.* வகுப்பு —, அந்தஸ்து —, வரிசைமாற்றுதல், வேறேவகுப்பில் வைத்தல், கப்பலாளிடாப்பினின்றெடுத்தல். || se —, தன்வகுப்பு — வரிசை மாறிப்போதல்.

Déclaver, *v. a.* சுருதிமாற்றுதல்.

Déclenchement, *m.* ஓர் இயந்திரம் விசையினால் தானாய்ச் செல்லுதல்.

Déclic, *m.* இயந்திர நடை நிறுத்தும் விசை.

Déclimater, *v. a.* சுயதேச மாற்றுவித்தல். || se — தேசமாறிப்போதல்.

Déclin, *m.* சாய்வு, சரிவு, தளர்வு, தளர்ச்சி, தாழ்வு, குறைவு, கல்லடிவிசை: — de la lune அபர —, உத்தர —, கிருட்டிணபக்ஷம் ; — de la maladie வியாதியின் குறைவு — தணிவு.

Déclinabilité, *f.* வேற்றுமைப்படுந்தன்மை.

Déclinable, *adj.* வேற்றுமைப்படத்தக்க, — ப்படுத்தக்கூடிய.

Déclinaison, *f.* வேற்றுமை —, விகுதிக்கிரமம். || (கிரக) அபமம், கிராந்தி, சமரோகைக்குத்தூரம். || (சூரியகடியாரத்தின் சாய்வு, சரிவு. || (ஊசிக்காந்த விமத்தி, சாய்வு : — du soleil சூரியாபமம் ; — septentrionale உத்தராபமம் ; — méridionale தக்ஷணாபமம்.

Déclinant, *part.* திக்குவிட்டுச் சாய்கிற.

Déclinateur, *m.* சாய்வளக்குங் கருவி, நிலப்பணிக்குரிய ஊசிக்காந்தம்.

Déclination, *f.* சாய்வு, சரிவு, தூரம், சுற்றுவழி, — ச்சுழற்சி.

Déclinatoire, *m.* போக்கு, அதிகார மறுப்பு, காந்தவூசிச் சாய்வளக்கிற கருவி. || *adj.* போக்காகிய, அதிகாரமறுக்கிற, மறுப்பதற்குரிய.

Décliné, *adj.* தாழுகிற, சாய்வுள்ள. || *part.*

Décliner, *v. a.* வேற்றுமைப்படுத்துதல், — க்கிரமஞ்சொல்லுதல். || மறுத்தல், விலக்குதல். || *v. n.* சாய்தல், இழிதல், தாழுதல், இறங்குதல், குறைதல், தணிதல், தளர்தல். || (காந்தவூசி) வடதிசைவிலகுதல், (கிரகம்) சமரோகைவிட்டகலுதல், (சூரியகடியாரம் .. ஓர் திசைக்கு) சாய்வாயிருத்தல் : — un nom ஓர் பெயர்ச் சொல்லை வேற்றுமைப் படுத்துதல் ; — son nom தன் பேர் சொல்லுதல் ; — la juridiction அதிகாரத்தை மறுத்தல். || se — வேற்றுமைப்படுதல்.

Déclive, *adj.* சாய்வுள்ள, சரிகிற.

Déclivité, *f.* சாய்வு, சரிவு.

Décloîtrer, *v. a.* மடம் விடுவித்தல். || se — மடம் விடுதல், தானடக்கமாயிருந்த விடம்விடுதல்.

Déclore, *v. a.* அடைப்பு பிரித்தல், திறத்தல்.

Déclos, *part.* வேலி —, அடைப்பற்ற, திறப்பான.

Déclouer, *v. a* ஆணிபிடுங்குதல், — எடுத்தல். || se — ஆணிபெயர்தல், — பிடுங்கப்படுதல்.

Décochement, *m.* (அம்பு) எறிதல், எய்தல்.

Décocher, *v. a.* (அம்பு) எறிதல், எய்தல், சுண்டுதல், (குத்துகிறசொல்) சொல்லுதல். || se — ஒருவனொருவனை எய்தல்.

Décoction, *f.* கஷாயம், குடிநீர், காய்ச்சுதல்.

Décoiffer, *v. a.* தலைக்கோலமெடுத்தல், மயிர்க்குலைத்தல். || (குப்பி) மூடியெடுத்தல், குடித்தல். || se — தன் தலைக்கோலமெடுத்தல், — மயிர் குலைத்தல், ஒருவன் ஒருவனுடைய தலைக்கோலம் —, மயிர்குலைத்தல்.

Décolérer, *v. n.* கோபமாறுதல், கோபமடங்குதல்.

Empoignant, *adj*. கைப்பற்றும்,
கைப்பிடியாய்ப் பிடிக்கும், மனதுக்குக்
கிளர்ச்சியைத் தரும்.

Empoigner, *v. a*. பிடித்தல், பிடித்

துக்கொள்ளுதல், கைப்பற்றுதல், முஷ்டியாற் கிரகித்தல். || s'— ஒருவனொருவனைப் பிடித்தல், பிடித்துக்கொள்ளுதல்.

Empois, *m.* கஞ்சி, பசை, — க்கஞ்சி, — க்குழம்பு, கூழ்.

Empoisonné, *part.* விஷந்தின்ற,— குடித்த, —உட்கொண்ட, விஷமுள்ள.

Empoisonnement, *m.* நஞ்சிடுதல், விஷக்கலப்பு.

Empoisonner, *v. a.* விஷம் —, நஞ்சுபோடுதல், — கலத்தல், — இடுதல், — ஊட்டுதல், விஷத்தாற்கொல்லுதல், — சாகுவித்தல். || கெடுத்தல், அழித்தல், கலக்குதல், கசப்பாக்குதல். || தின்மையாகப் —, தீதாகப் —, புரட்டுதல். || துர்க்கந்தம் வீசுதல். || s'— விஷங்குடித்தல், — தின்றல், — உட்கொள்ளுதல், தின்மையாதல்.

Empoisonneur —-euse, *s.* நஞ்சூட்டி, விஷம் —, நஞ்சிடுகிறவன், — கூட்டுகிறவன், — விற்பவன், — வள். || கெட்ட சுயம்பாகி.

Empoisser, *v. a.* கிசில் பூசுதல்.

Empoissonnement, *m.* Empoissonner, *v. a.* மீன் போடுதல்.

Emporté, *adj*. முன்கோபம் —, உக்கிரமுள்ள. || *part.*

Emportement, *m.* முன்கோபம், கடுமை, எரிச்சல், உக்கிரம், கோபம்.

Emporte-pièce, *m.* கத்தரிக்குங்கருவி. || முன்கோப —, கண்டிதக்காரன்.

Emporter, *v. a.* எடுத்துக்கொண்டு —, கொண்டுபோதல், எடுத்தல், பறித்தல், வாருதல், ஏற்றி —, எடுத்து —, சுமந்துபோதல், பெயர்த்து —, பிடுங்கி —, வாரி —, இழுத்துக்கொண்டு போதல். || நீக்குதல், போக்குதல், போகுவித்தல். || கொல்லுதல், சாகுவித்தல். || பிடித்திருத்தல், கிளப்புதல், ஏவுதல், பொங்குவித்தல். || சீக்கிரத்திற்செய்தல், — முடித்தல். || பலவந்தமாய்ப் பிடித்தல், — தன்வசமாக்குதல். || பெறுதல், அடைதல். || அவசரமாய் வருவித்தல், — ஏதுவாதல் : — pièce கடுமையாய்க்கடிதல் ; — une affaire சீக்கிரத்திற் காரியம் பலிப்பித்தல், — முடித்தல் ; —une ville பட்டணம் பிடித்தல் ;—la balance தராசைச் சாய்வித்தல், மேன்மையாதல் ; — les suffrages அநுமதிச்சீட்டுகளையடைதல். || l'— sur அதிககனமாதல், அதிகரித்தல், மேற்படுதல், — கொள்ளுதல், செயித்தல். || s'— எடுபடுதல், கோபித்தல், கோபவெறிகொள்ளுதல், பொங்குதல், ஆங்காரித்தல், உக்கிரமாதல், (குதிரை) அடங்காமற்போதல், (மரம்) அதிகமாய்த் தழைத்தல், வளருதல்.

Empotage, *m.* Empoter, *v. a.* (பூண்டைக்) கலயத்திற்போடுதல்.

Empoté, *adj. et m.* மந்தமான, திறமையற்ற.

Empouille, *f.* விளைவு, விளைச்சல்.

Empourprer, *v. a.* தூமிரநிறமாக்குதல்.

Empreindre, *v. a.* பதித்தல், பதிவித்தல், அழுத்துதல், அச்சடித்தல். || s'— பதிதல், அழுந்துதல். [பதிவான.

Empreint, *part.* பதிந்த, அழுந்தின,

Empreinte, *f.* பதிவு, பதிப்பு, அச்சு, குறிப்பு, அடையாளம், கம்பட்டமுனை, — முத்திரை.

Empressé, *part. et s.* சுறுச்கு —, சுறுசுறுப்பு —, துரிதம் —, படபடப்பு —, வேகமுள்ள, பதறுகிற, முயற்சி — சாக்கிரதையுள்ள, — உள்ளவன்.

Empressement, *m.* சீக்கிரம், தீவிரம், சுறுக்கு, சுறுசுறுப்பு, வேகம், துரிதம், சாக்கிரதை, மனப்பற்றுதல். || பக்ஷமுள்ள விசாரிப்பு.

s'Empresser, *v. pro.* தீவிரித்தல், விரைதல், படபடத்தல், சாக்கிரதை பண்ணுதல், வேகம் —, சுறுசுறுப்பாதல், — காட்டுதல்.

Emprise, *f.* தொடுத்தகாரியம், — கருமம், உரிமை நீக்குதல்.

Emprisonnement, *m.* சிறைச்சாலையிற் போடுதல், — வைக்கப்படுதல், சிறைப்பாடு, அடைப்பு, காவல்.

Emprisonner, *v. a.* சிறைச்சாலையிற் —, காவலிற்போடுதல், —வைத்தல், காவல் பண்ணுதல், — படுத்துதல், அடைத்தல்.

Emprunt, *m.* கடன், இரவல், கடனாகவாங்கின —, இரவலான பொருள்: faire un — கடன்வாங்குதல்; d'— *ou*

Emprunté, *part.* இரவல் —, கடனான, கள்ள, வேஷமான, இசையாத.

Emprunter, *v. a.* கடனாக —, இரவலாக —, கடன் —, இரவல்வாங்குதல். || பெறுதல், அடைதல், பெற்றி

ருத்தல், பற்றிக் —, கைக் —, கொள்ளுதல், பிடித்தல், கேட்டல்.

Emprunteur, — euse, *s.* இரவல் —, கடனாக வாங்குகிறவன், — வள்.

Empuantir, *v. a.* நாறுதல், நாறுவித்தல், நாற்றம் வீசுதல், — இடுதல். || s'— நாற்றமாதல், — எடுத்தல்.

Empuantissement, *m.* நாறல்.

Empyème, *m.* நெஞ்சின் சீழ்க்கட்டு, — கூடுதல், சீழ்வடிவதற்கு நெஞ்சினடியில் கீறுதல்.

Empyrée, *m.* (பூர்வத்தில்) மேலான —, அக்கினி —, சோதிமண்டலம். || மோக்ஷம், பரலோகம். || *adj.* வான, பர: le ciel — பரலோகம், மோக்ஷவாசிகளின் வாசம்.

Empyreumatique, *adj.* தீந்த நாற்றம், — உருசியுள்ள.

Empyreume, *m.* தீந்தநாற்றம், — உருசி, — வாசனை.

Ému, *part.* d'Émouvoir, இரங்கிய, இளகிய, பொங்கிய, கலங்கிய, அசைத்த.

Émulateur, — trice, *s.* போட்டிக்காரன், — காரி, எதிரி, வெல்லத்தேடுகிறவன், — வள்.

Émulation, *f.* போட்டி, — த்தனம், இகலாட்டம், மேன்பாட்டினாசை, வெல்லுமுயற்சி.

Émule, *s.* போட்டிக்காரன், — காரி, போரி, எதிரி. || *adj.* நிகரான, சரியொத்த.

Émulgent, *adj.* இடுப்பிலிரத்தஞ்செலுத்துகிற.

Émulsif, *adj.* எண்ணெய் தரும் (விதை). || *m.* எண்ணெய்தரும் பொருள்.

Émulsion, *f.* பால்போன்ற மருந்து, — பானம்.

Émulsionner, *v. a.* ஷை பானத்தில் மருந்து கலத்தல்.

Émyde, *f.* ஆற்றின் ஆமை.

En, *prép.* இல், இடத்தில், காலத்தில்: en prison சிறைச்சாலையில், en hiver குளிர்காலத்தில். || உள்ளே: en un mois ஒருமாதத்துக்குள்ளாக; en attendant அதுக்குள்ளாக. || ஆக, ஆய், போல, படியே: être en colère, கோபமாயிருத்தல்; en deux இரண்டாக; en roi அரசனாக, அரசனைப்போல; en cœur இருதயவடிவாய்; armer en guerre சண்டையாயுதமணிவித்தல்; en chantant பாடிக்கொண்டு; en avant முன்னே; en bas கீழே; en deçà இப்பால்.

En, *pro. pour* de lui, d'elle, d'eux, d'elles, de cela அவனுடைய, அவளுடைய, அவர்களுடைய, அதின், அதினால்: j'en suis content அவன் —, அவள் —, அவர்கள் —, அதின்பேரிற் சந்தோஷப்படுகிறேன், அது எனக்குச் சந்தோஷம்; n'en doute pas அதின்பேரிற் சந்தேகப்படாதே.

Énallage, *f.* காலமாற்றுமணி, ஓர் வினையெஞ்சுமணி.

Énamouré, *adj.* நேசமுள்ள.

Énarthrose, *f.* ஆட்டமுள்ள ஈரெலும்பின் பொருத்து, — மூட்டு.

Encâblure, *f.* நூற்றிருபதுபாகத்தூரம்.

Encadrement, *m.* சட்டம், — போட்டதன்மை; *ou*

Encadrer, *v. a.* சட்டம்போடுதல். || இசைத்தல், சேர்த்தல். || அலங்காரமாய்ச் சூழுதல்: — un peloton சேவகர் வகுப்பினிருபக்கத்திற் கீழுத்தியோகஸ்தர்களை வைத்தல்.

Encagement, *m.* Encager, *v. a.* கூட்டில் —, காவலிற்போடுதல்.

Encaissable, *adj.* பெட்டியில் போடக்கூடிய.

Encaissage, *m.* (பூண்டை) பெட்டியிற்போடுதல்.

Encaisse, *f.* பெட்டியிலிருப்பு, — இருக்கும் பணத்தொகை.

Encaissé, *part.* உயர்ந்தகரையுள்ள, பள்ளத்தில் நெருங்கிய, பெட்டியிலடங்கிய, — அடுக்கின.

Encaissement, *m.* பெட்டியில் அடக்குதல், அடைப்பு, நிரப்பு: faire un chemin par — ஓர் பாதைவெட்டி பொடிக்கல்லடுக்குப்போடுதல்.

Encaisser, *v. a.* பெட்டியிற்போடுதல், — அடக்குதல், (ஆற்றுக்குக்) கரை —, அணைகட்டுதல், (பாதையிற்) கல்லடுக்குப்போடுதல்.

Encaisseur, *m.* பெட்டியில் பணம் போடும் அலுவல்பார்க்கிறவன், — வர்த்தகன்.

Encan, *m.* ஏலம், கூறியவிற்பனை: mettre, vendre à l'— ஏலத்திற்போடுதல், — விற்றல், விலைக்குக் கொடுத்தல்.

Encanaillement, *m.* Encanailler, *v. a.* நீசரோடு சேர்த்தல், — கூட்டுதல்,

— பழக்குதல். || s'— நீசரோடு சேர்தல், —பழகுதல். [குள்ளேபோகிறது.

Encaper, *v. a. et n.* இருமுந்தலுக்

Encapuchonner, *v. a.* முனிகுல்லாவினால் மூடுதல். || s'— முனிகுல்லாபோடுதல், — அணிதல், (குதிரை) தன் மார்பில் தலைகுனிதல்.

Encaquer, *v. a.* பீப்பாவிலடுக்குதல். வண்டியில்நெருக்குதல். || s'— பீப்பாவில் அடுக்கப்படுதல், வண்டியில் நெருங்குதல். [அடுக்குகிறவன், — வள்.

Encaqueur, — euse, *s.* பீப்பாவில்

Encartage, *m.* Encarter, *v. a.* பிழைத்தாளுக்குப் பதில்தாளைச் சேர்த்தல். [மூடுதல்.

Encartonnement, *m.* அட்டையால்

En-cas, *m.* ஓர்வகையான கொடை, எதிர்பாராதகாரியங்கள் வைக்கக்கூடிய ஓர் பண்டம்.

En cas que, *conj.* ஆகில்: — qu'il vienne வருவானேயாகில்.

s'Encasteler, *v. pro.* குளம்பு சுருங்குதல். [னோவு.

Encastelure, *f.* சுருங்கின குளம்பி

Encastillage, *m.* நீர்மேல் தோன்றுங்கப்பலின் பங்கு.

Encastillement, *m.* Encastiller, *v. a.* பதித்தல், இசைத்தல்.

Encastrement, *m.* Encastrer, *v. a.* இசைத்தல், காடியிற் பொருத்துதல். || s'— இசைதல், காடியிற்பொருந்துதல்.

Encaustique, *f.* உருகின மெழுகு கூடியசித்திரம், — பூச்சு, — மருந்து, மெழுகும் பிசினுங்கூடிய மினுக்கெண்ணெய். || *adj.* உருகினமெழுகு கூடிய, — மெழுகினாலான.

Encavement, *m.* Encaver, *v. a.* கீழறையில் வைத்தல், — அடுக்குதல்.

Encaveur, *m.* கீழறையில் வைக்கிறவன். [அடைத்தல்.

Enceindre, *v. a.* சூழுதல், வளைதல்,

Enceinte, *adj. f.* கர்ப்பிணி, — ஆகிய, கருப்பமுள்ள, கர்ப்பஸ்திரி, கர்ப்பவதி, சூலி: devenir — கருப்பந் தரித்தல், கர்ப்பணியாதல், கருக்கொள்ளுதல்; être — கர்ப்பணியாயிருத்தல்.

Enceinte, *f.* சுற்று, அடைப்பு, —ச்சுவர், — மதிள், ஆரற்சுவர், சுற்றளவு, சுற்றெல்லை, சுற்றுவட்டம், அடைப்பு, அடக்கம், அடங்கல். || பெரிய —, சாலை, ஆஸ்தானம். || அடைபட்டவிடம். || உள்ளீடை, உள்ளந்தரம். || அடைபட்ட —, மிருகத்தை ஓட்டின காட்டின் பங்கு. || l'— d'un tribunal நீதிஸ்தலத்தின் சாலை; dans cette — இந்த சாலையிலே, — கோவிலிலே.

Encens, *m.* சாம்பிராணி, குமஞ்சம், கந்தரசு, தூபவருக்கம், தூபம், நறை, நறும்புகை. || ஸ்துதி, புகழ், இச்சகம்.

Encensement, *m.* தூபங்காட்டல்.

Encenser, *v. a.* தூபங்காட்டுதல்,—கொடுத்தல். || ஆராதித்தல், வணங்குதல், ஸ்துதித்தல். || புகழ்தல், இச்சகம் பண்ணுதல், தலையாட்டுதல். [சகன்.

Encenseur, *m.* ஸ்துதிப்பவன், இச்

Encensoir, *m.* தூபக்கலசம், — கிண்ணி, முட்டி. || ஓர் தாராகணம். || குருப்பட்டம், பெரியகுருவின் பட்டம், திருச்சபையதிகாரம்: disputer l'— குருத்தொழிலைக்குறித்துத் தர்க்கித்தல்; mettre la main à l'— திருச்சபையதிகாரத்தை அபகரித்தல்; donner un coup d'— ஓர் புகழ்ச்சியைச் சொல்லுதல். [மூளை உபத்திரவம்.

Encéphalalgie, *f.* மூளையில் நோய்,

Encéphale, *adj.* தலையிற்பிறக்கிற (பூச்சி). *m.* மூளை, தலைமண்டையிலடங்கினது.

Encéphalique, *adj.* மூளைக்கடுத்த.

Encéphalite, *f.* மூளையெரிவு.

Encéphalocèle, *f.* மூளைவலி.

Encéphalopatie, *f.* மூளைவியாதி.

Enchaîné, *part.* சங்கிலியாற் கட்டுண்ட, விலங்கு —, சங்கிலியுள்ள.

Enchaînement, *m.* பந்தனம், தொடர்ச்சி, பந்தம், தளை, சம்பந்தம்.

Enchaîner, *v. a.* சங்கிலியாற் கட்டுதல், — பிணைத்தல், தளைத்தல், தளைதல், சங்கிலி —, விலங்குபோடுதல், — பூட்டுதல், — கட்டுதல். || கீழ்ப்படுத்துதல், அடக்குதல். || தடுத்தல், மறித்தல், நிறுத்துதல். || இழுத்தல், தன்வசமாக்குதல். || சேர்த்தல், இசைத்தல், பொருத்துதல், பிணைத்தல், தொடுத்தல். || s'— கட்டுண்டல், பிணைதல், இசைதல், தொடர்ச்சி —, பந்தனமாதல், தொடர்தல்.

Enchaînure, *f.* தொடர்பு, பந்தனம்.

Enchanté, *part.* வசியமான, சூனிய

முள்ள, மந்திரத்தாற் கட்டின, மாயவித்தையாலான. || ஆச்சரியம் —, அதிசயம் —, இன்பமான. || மனோரம்மியம்—, பிரியம் —, சந்தோஷமுள்ள.

Enchantement, *m.* மாயம், சூனியம், மாயை, பில்லி, — சூனியம், மந்திரவாதம், — வித்தை, — தந்திரம், கட்டு, சாலவித்தை, ஸ்தம்பனம். || அதிசயம், ஆச்சரியம். || இன்பம், சந்தோஷம், மருள், பிரமை, பிரமிப்பு: — des sens இந்திரியங்களின் மயக்கம்; comme par — மாய்கையாலானாற்போலே.

Enchanter, *v. a.* சூனியம் பண்ணுதல், — இடுதல், வசியமாக்குதல், ஸ்தம்பனம் பண்ணுதல், மந்திரத்தாற் கட்டுதல், வசியப்படுத்துதல். || மயக்குதல், மருட்டுதல், பிரிய —, சந்தோஷப்படுத்துதல். || மறப்பித்தல், போக்குதல். || ஆச்சரிய —, அதிசயப்படுத்துதல், பிரமிப்பித்தல்.

Enchanteur, *m.* — teresse, *f.* மாயவித்தை —, சூனிய —, மாயக்காரன், —காரி, மந்திரவாதி. || மருட்டுகிறவன், இனியசொல்லால் மயக்குகிறவன், — ஏய்க்கிறவன், — வள். || இன்ப —, பிரிய —, சந்தோஷ —, வசியப்படுத்துகிறவன். || *adj.* மாயமுள்ள, இன்பம்—, பிரியமான, வசியமாக்குகிற.

Enchaper, *v. a.* உ-ம் பீப்பாவில் அடைத்தல். || s'— உ-ம் பீப்பாவில் அடைக்கப்படுதல்.

Enchâssé, *part.* பதிந்த, அடங்கிய.

Enchâssement, *m.* Enchâsser, *v. a.* பதித்தல், அடக்குதல், அழுத்துதல், இழைத்தல், செற்றுதல், சேர்த்தல், இசைத்தல். || சிறப்புப்பெட்டியில் —, வைத்தல். || s'— பதிதல், சேர்தல், இசைதல்.

Enchâssure, *f.* பதித்தல், இழைத்தல், பதிப்பு, அடைப்பு.

Enchausser, *v. a.* எருவினால் —, வைக்கோலால் மூடுதல்.

Enchère, *f.* ஏலம், விலைகூறியுயர்த்தும் விற்பனை, கேட்கிற —, உயர்விலை, அதிகவிலையாகக் கேட்டல், விலைக்கேள்வி, — கேட்டல்: mettre, couvrir une — விலைகேட்டல், அதிகவிலை ஒப்புக்கொடுத்தல்; mettre à l'— ஏலத்திலே போடுதல்; être à l'— ஏலத்தில் விற்க —, விற்கப்படுதல்; தன்னை விலையாகவிடுதல்.

Enchérir, *v. a. et n.* அதிகவிலையாக —, விலையேற்றி —, விலைகேட்டல். || விலையேற்றுதல், — யுயர்த்துதல், — யதிகரிப்பித்தல். || விலையேறுதல், — யதிகரித்தல். || மேற்படுதல், கதித்தல், அதிகரித்தல், அதிகமாய்ச் செய்தல், — ச்சொல்லுதல்.

Enchérissement, *m.* விலையதிகரிப்பு.

Enchérisseur, *m.* அதிகவிலையாய் —, விலைகேட்கிறவன், விலையேற்றுகிறவன்.

Enchevalement, *m.* வீட்டுக்குச் சாரம் கட்டுதல்.

Enchevaucher, *v. a.* Enchevauchure, *f.* சேர்த்திகை, சேர்மானம்.

Enchevêtré, *part.* முகவார் —, கடிவாளமுள்ள, சிக்கின.

Enchevêtrement, *m.* முகவார்போடுதல், சிக்கு, மயக்கம், கலக்கம்.

Enchevêtrer, *v. a.* வாய்வடம் —, முகவார்போடுதல். || சிக்குப்படுத்துதல், மயக்குதல், கலக்குதல், அலங்கோலையாய்க் கூட்டுதல். || s'— முகவாரிற்கால் அகப்படுதல், — கால்மாட்டுதல், சிக்குப்படுதல், கலங்குதல், மயங்குதல்.

Enchevêtrure, *f.* மூகவாரிற்கால் சிக்கினநோவு. || இடம்விடுங் கைம்மரங்கள்.

Encheviller, *v. a.* சிம்புவைத்துக் கட்டுதல்.

Enchifrené, *part.* தடிமலடைப்பு —, தடிமலுள்ள, தடிமலால் மூக்கடைத்த.

Enchifrènement, *m.* தடிமல் —, மூக்கடைப்பு, தடிமல், சலதோஷம்.

Enchifrener, *v. a.* தடிமலடைப்பு —. தடிமல்வருவித்தல், மூக்கடைத்தல். || s'— தடிமலடைப்பாதல், தடிமலால் மூக்கடைக்கப்படுதல்.

Enchymose, *f.* இரத்தம் பொங்குதல், — சதையிற் சிந்திப்போதல்.

Enclave, *f.* மற்றொன்று சூழ்நிலம், — நாடு. || எல்லை. || மதகின்கதவுபடியுங்காடி.

Enclavé, *part.* மற்றொன்றில் அடங்கின, பதிந்த, சிக்கின.

Enclavement, *m.* அடங்கின —, சிக்கினதன்மை; *ou*

Enclaver, *v. a.* மற்றொன்றில் அடக்குதல், அடைத்தல், சூழ்ந்துகொள்ளுதல். || s'— மற்றொன்றில் அடங்குதல், — கூடுதல்.

Enclenche, *f.* வேறோர்வஸ்து நுழையச் செய்யப்பட்ட துவாரம்.

Enclenchement, *m.* Enclencher, *v. a.* கட்டுகட்டிப் பதப்படுதல்.

Enclin, *adj.* சார்பு —, சார்வுள்ள, சார்ந்த, மனச்சாய்மானம் —, விருப்பமுள்ள.

Encliquetage, *m.* எந்திரந் திரும்பிச்சுழலாத — போகாதபடி தடுக்குங் கருவி. [நிறுத்துதல்.

Encliqueter, *v. a.* ஷை கருவியால்

Enclitique, *f.* நிலமொழி சேரசை.

Encloîtrer, *v. a.* மடத்தில் அடைத்தல்.

Enclore, *v. a.* அடைத்தல், சூழ்தல், வளைத்தல், சூழ்ந்துகொள்ளுதல், சுற்றிலும் வேலி — சுவர்போடுதல், சுற்றுவேலியால் —, சுவரால் அடைத்தல்,

Enclos, *m.* வாடி, வாடிகை, அடைக்கப்பட்டவிடம், அடைப்பு, சுற்றுச்சுவர். || *part.* சுற்றுச்சுவர் —, அடைப்புள்ள. [கடாவுதல்.

Enclouage, *m.* பற்றுவாயில் ஆணி

Enclouer, *v. a.* (குதிரை) காலில் ஆணிதைத்தல். || (பீரங்கியின்) பற்றுவாயில் ஆணி கடாவுதல். || s'— காலில் ஆணிதைத்துக்கொள்ளுதல்.

Enclouure, *f.* காலில் ஆணிதைத்திருக்கிற நோவு. || தடை, விக்கினம், சிக்கு.

Enclume, *f.* பட்டடை, அடைகல், — கல்லு, — குறடு, அடையல், குறடு. || காதின் ஓொலும்பு: remettre sur l'— மறுபடி அடைகல்லிலே போடுதல், — சீர்திருத்துதல்.

Enclumeau, Enclumot, *m.* சிற்றடைகல்.

Encoche, *f.* அறுப்பு, வெட்டு, கீற்று, பல்லு, கீறு.

Encochement, *m.* Encocher, *v. a.* அம்புக்குதையில் நாணிசைத்தல். || அறுப்பு அறுக்கிறது, வெட்டுவெட்டுகிறது.

Encochure, *f.* பருமலினுனிக்கீற்று.

Encoffrer, *v. a.* பெட்டியிலடைத்தல். [மூலைச்சாமான்.

Encognure, Encoignure, *f.* மூலை. ||

Encollage, *m.* Encoller, *v. a.* கூழ் —, பிசின் பூசுதல், பற்றவைத்தல்.

Encolure, *f.* மார்பு, கழுத்து, மார்போடு கழுத்துபொருந்துமிடம். || சாயல், பாவனை. [இடறு, இடையூறு.

Encombre, *m.* விக்கினம், தடை,

Encombrement, *m.* அடைப்பு, தடை, *ou*

Encombrer, *v. a.* அடைத்தல், தடுத்தல், மறித்தல், நிறைத்தல், இடைஞ்சல் பண்ணுதல். || s'— அடை —, தடைபடுதல், நிறைதல்.

Encontre, *f.* சம்பவம், எதிர்: à l'— *prép.* விரோதம் —, எதிராய்.

Encorbellement, *m.* சுவர்ப் —, பிதுக்கம், புடைப்பு, புறப்பாடு.

Encore, *adv.* இன்னம், இன்னும், இன்னமும், மீளவும், மேலும், அதிகமாய், ஆகிலும், ஆயினும். || encore que, *conj.* ஆலும், போதிலும்; il vit — இன்னஞ் சீவிக்கிறான்; — s'il venait ஆகிலுமவன் வருவானேயாகில்; — qu'il soit jeune அவன் வாலிபனாயிருந்தாலும்.

Encorné, *adj.* கொம்புள்ள, குளம்பின் கீழிருக்கும்: haut — உயர்ந்த கொம்புள்ள.

Encorner, *v. a.* கொம்புபோடுதல்.

Encouragement, *m.* உறுதி, தேற்றம், தைரியம், தூண்டல், ஏவல், *ou*

Encourager, *v. a.* தேற்றுதல், தைரிய —, துணிகர —, மனத்திட —, திடப்படுத்துதல், தூண்டுதல், கிளப்புதல், உறுதிசொல்லுதல், ஏவுதல், மெய்ச்சுதல். || s'— தைரியப்படுதல், தேறுதல், அவரவரைத் தேற்றுதல்.

Encourir, *v. a.* தன்மேல் வருவித்தல், பாத்திரம் —, ஏதுவு —, உள்ளாதல், ஆளாய்ப்போதல். || s'— உண்டாதல், மேல்வருதல், — விழுதல், வருதல், ஆதல்.

Encrage, *m.* மைபோடுதல்.

Encrassement, *m.* Encrasser, *v. a.* அழுக்குப்படுத்துதல். || s'— அழுக்குப்படுதல், மந்தமாதல், நீசரைச் சேர்தல், சீர்கெடுதல், கெட்டமாதிரியாதல்.

Encre, *f.* மை, தீந்தா, மசி.

Encrer, *v. a.* மைபோடுதல், — பூசுதல். || *v. n.* மைபிடித்தல், —பற்றுதல்.

Encrier, *m.* மை —, மசிக்கூடு. || மையின்மேசை, — பலகை.

Encroiser, *v. a.* சிலுவைபோல் வைத்தல்.

Encroué, *adj.* வேறேமரக்கொம்பிற் சிக்கின.

Encroûté, *part.* கிட்டமுள்ள, கடினமான, நிறைந்த, *ou* — de préjugés தப்பெண்ணங்களிற் பிடிமானமுள்ள.

Encroûter, *v. a.* கிட்டமடைவித்தல், பூச்சுபூசுதல். || s'—கிட்டமடைதல், கடினம் —, மந்தமாதல்.

Encuirassé, *part.* மார்க்கவசம் —, மிகுந்த அழுக்குள்ள.

Encuirasser, *v. a.* மார்க்கவசமணிவித்தல். || s'— மிகுந்த அழுக்காதல்.

Encuvage, Encuvement, *m.* Encuver, *v. a.* தொட்டியிற் போடுதல்.

Encyclique, *adj.* பொது, சுற்றவனுப்பும். || *f.* பொதுநிருபம்.

Encyclopédie, *f.* சர்வகலையகராதி, கலைஞானாகராதி, சாதாரண சாஸ்திர நூல், சர்வவித்தியாகர நூல். || சர்வகல்விகலைஞன், கல்விச்சேர்க்கை.

Encyclopédique, *adj.* சர்வகலையகராதிக்கடுத்த. [தியாசிரியன்.

Encyclopédiste, *m.* சர்வகலையகரா

Endaubage, *m.* Endauber, *v. a.* இறைச்சி சுடுதல், சுடுகறிசெய்தல்.

Endécagone, *m.* ஏக-கோணவடிவம். [கொண்டிருக்கும் வியாதி.

Endémie, *f.* எக்காலமும் இருந்து

Endémique, *adj.* சிலசனத்துக்கு விசேஷ. [த்தான.

Endenté, *part.* பல்லுள்ள, —உடை

Endenter, *v. a.* பல்லுபோடுதல்.

Endetté, *part.* கடன்பட்ட.

Endetter, *v. a.* கடனுக்குட் —, கடன்படுத்துதல். || s'— கடன்படுதல்.

Endêvé, *part. et s.* எரிச்சல் —, விசனமுள்ள, பொறுமையற்ற, கோபி.

Endêver, *v. n.* சலித்தல், எரிச்சற் —, விசனப்படுதல்: faire — கோபவெறி —, எரிச்சல் கிளப்புதல்.

Endiablé, *part.* பேயனான, வெறி —, பேய்பிடித்த, துஷ்ட.

Endiabler, *v. n.* பேயனாதல், தன்னைப் பசாசுக்குக் கொடுத்தல், கோபவெறிபிடித்தல், மிகவும் எரிச்சற்படுதல்: faire—கோபவெறி —, எரிச்சல் கிளப்புதல், பேயனாகச்செய்தல்.

Endiamanté, *adj.* வைரங்களாலலங்கரிக்கப்பட்ட, வைரத்தைப்போல் பிரகாசிக்கும்.

Endigage, *ou* Endiguement, *m.* அணை, — கட்டுதல், பல அணைகள்.

Endiguer, *v. a.* அணைகட்டுதல், — கட்டியடக்குதல்.

Endimancher, *v. a.* ஞாயிற்றுடுப்பு அணிவித்தல். || s'— ஞாயிற்றுடுப்புடுத்தல்.

Endive, *f.* ஓர் கீரை. [சவ்வு.

Endocarde, *m.* இருதயத்தின் உள்

Endocardite, *f.* இருதயத்தின் உள் சவ்வின் வீக்கம்.

Endocarpe, *m.* தானியங்களை மூடிக்கொண்டிருக்கும் மெல்லியதோல்.

Endoctrinable, *adj.* சுற்றிவரச் சுலபமான, எளிதாய் ஏமாற்றக்கூடிய.

Endoctriner, *v. a.* போதனைபண்ணுதல், சொல்லவேண்டியதைப் போதித்தல். || படிப்பித்தல். [— வருவித்தல்.

Endolorir, *v. a.* நோவுபடுத்துதல்,

Endommagement, *m.* கேடு, சேதம், சேதாரம், நஷ்டப்பட்டது.

Endommager, *v. a.* கெடுத்தல், சேத —, சேதார —, நஷ்டப்படுத்துதல். || s'— கெடுதல், சேதாரம் —, சேதம் —, நஷ்டமாதல், அழிதல்.

Endormant, *part.* தூங்குவிக்கிற, சலிப்புள்ள.

Endormeur, — euse, *s.* தூங்குவிக்கிறவன், மயக்குகிறவன், — வள், இச்சகன், எத்தன்.

Endormi, *part. et s.* தூங்குகிற, நித்திரைசெய்கிற, ஊக்கமற்ற, மந்தமுள்ள, திமிர்த்த, விழிப்பற்ற: faire l'— தூங்குகிறவனைப் பாவித்தல்.

Endormir, *v. a.* தூங்குவித்தல், நித்திரை —, தூக்கம் வருவித்தல், — மூட்டுதல். || சலிப்பு —, ஆயாசப்படுத்துதல். || மயக்குதல், விழிப்பு —, கவனம் —, எச்சரிக்கை —, மோசம்போக்குதல், எத்துதல். || திமிர்ப்பித்தல், திமிரேறப் பண்ணுதல், விறைக்கச்செய்தல். || s'— தூங்குதல், உறங்குதல், நித்திரைகொள்ளுதல், — யாதல், — போதல், அசட்டையாதல், விழிப்பற்றுப்போதல், அமிழ்ந்துதல்.

Endos, Endossement, *m.* மாட்டேற்று, மாட்டறைவு, பின்புறத்தெழுத்து.

Endosser, *v. a.* முதுகில் எடுத்து —, சுமந்து —, அணிந்துகொள்ளுதல், சுமத்துதல். || பின்புறத்திலெழுதுதல்,

உண்டியலின்மேல் பற்றுமதி எழுதுதல், மாட்டறைதல்.

Endosseur, *m.* பின்புறத்தெழுதுகிறவன், மாட்டறைகிறவன்.

Endroit, *m.* இடம், ஸ்தலம், தலம். || சென்மவூர், பிறந்தவிடம். || பங்கு, பக்கம், புறம், திசை. || (புடைவையின்) நல்ல —, மேற்புறம்: மேற்பக்கம் : à l'— de மட்டில் ; à mon — என்மட்டில். [மெழுகுதல். || s'—பூசப்படுதல்.

Enduire, *v. a.* பூசுதல், தடவுதல்,

Enduit, *m.* பூச்சு, சாந்து, காரை, மணியாசம். || *part.* பூசின, பூசப்பட்ட.

Endurable, *adj.* சிக்கக்கூடிய, பொறுக்கக்கூடிய. [தத்துவம்.

Endurance, *f.* கஷ்டத்தைச் சகிக்கும்

Endurant, *adj.* பொறுமையுள்ள.

Endurci, *part.* கடினம் —, கெட்டி —, காய்ப்பு—, வயிரமான, இரங்காத, இளகாத : — au travail வேலைப் பிரயாசத்துக்குப் பழகின.

Endurcir, *v. a.* வன்மை —, கடினமாக்குதல், கெட்டியாகச்செய்தல், இறுக்குதல், உறுதி —, ஸ்திர —, ஊக்க —, பலப்படுத்துதல், வயிரிப்பித்தல். || பழக்குதல். || கடுமை —, மூர்க்கமாகச் செய்தல், பிடிவாதம் —, முரண்டு —, மனக்கடினமாதல். || s'— கெட்டி —, கடினமாதல், காய்த்தல். || கன்னெஞ்சாதல். || கடுமை —, மூர்க்கமாதல், இளகாதிருத்தல், பழகுதல்.

Endurcissement, *m.* கடினம், கெட்டி, உறுதி, வன்மை, உரம், கடுமை, தடிப்பு. || கன்னெஞ்சத்தனம், முரண்டுத்தனம், இளகாமை, தின்மையிற் பிடிவாதம். || கடினமாதல்.

Endurer, *v. a.* பொறுத்தல், சகித்தல், படுதல், பொறுமையாயநுபவித்தல். இடங்கொடுத்தல், ஒட்டுதல், விடுதல். || s'— பொறுக்க —, சகிக்கப்படுதல்.

Énéide, *f.* எனையிதென்னுங் காப்பியம், எனை என்பவன் சரிதையாம்.

Énergie, *f.* சத்தி, பலம். || ஊக்கம், முயற்சி, உறுதி, திடன், உற்சாகம், தைரியம், அழுத்தம்.

Énergique, *adj.* ஊக்கம் —, திடம் —, உறுதி —, பலமுள்ள.

Énergiquement, *adv.* ஊக்கம் —, அழுத்தம் —, உறுதியாய்.

Énergumène, *s.* பேய்—, பசாசுபிடித்தவன், பேயாவேசமானவன், —வள். || மருளன், கோபவெறியுள்ளவன், வைராக்கியன்.

Énervation, *f.* பலக் —, தயிரியக் கேடு, பலவீனம், தளர்ச்சி, தளர்வு.

Énervé, *part.* திடன் —, பலம் —, முயற்சியற்ற, தளர்ந்த.

Énervement, *m.* Énerver, *v. a.* பலவீனமாக்குதல், தளர்த்துதல், பலவீனப்படுத்துதல், ஊக்கம்—, தைரியம்—, உரோசம் —, திடனழித்தல், — குறைத்தல், கோழை —, பெண்மையாக்குதல், இளக்குதல். || s'—தளர்தல், ஊக்கம், — பலன் —, திடன் —, வீரமற்றுப்போதல்.

En face, En face de, *prép.* முன்பாக, சந்நிதியில், எதிரே.

Enfaîteau, *m.* முகட்டோடு, முகட்டின் தட்டோடு. [பலகை.

Enfaîtement, *m.* முகட்டின் ஈயப்

Enfaîter, *v. a.* முகடுமூடுதல்.

Enfance, *f.* சிறுபம், இளமை, இளம் —, சிறுபிராயம், பிள்ளைமை, பாலத்துவம், பாலியம். || பிள்ளைகள், பாலர். || துவக்கம், தொடக்கம், முதல், ஆதி : tomber en — பிள்ளைத்தன்மையாதல், புத்திவிபரமிழத்தல் ; être en — ஷை தன்மையாயிருத்தல்.

Enfant, *s.* பிள்ளை, குழந்தை, பாலன், பாலகன், சிசு, மகன், குமாரன், புத்திரன். *m.* மகள், குமாரத்தி, புத்திரி *f.* || பயல், பையன். || சந்ததியான், சந்ததி. || குஞ்சு, குட்டி, கன்று. || உற்பத்தி. || பிள்ளைத்தன்மையானவன், நகைப்புள்ளவன், மதியற்றவன் : — gâté நேச —, செல்வப்பிள்ளை ; — de troupe அரசன் செலவினால் வளர்க்குஞ் சேவகர் —, பாளையத்துப்பிள்ளை ; — de chœur கோவிலிற்பாடும் பிள்ளை ; — de France பிராஞ்சிராசாவின் புத்திரன் ; faire l'— சிறுபிள்ளையாட்டமாய் நடத்தல். [குழந்தை.

Enfantelet, *et* Enfançon, *m.* சிறு

Enfantement, *m.* பிரசவம், பிள்ளைப்பேறு, பிரசூதி, பிரசூதம், ஈனுகை. || வாசகக்கட்டு, துவக்கம்.

Enfanter, *v. a* பெறுதல், ஈனுதல், பிரசவித்தல். || (புஸ்தகம்) உண்டாக்குதல், விளைவித்தல், பிரப்பித்தல்.

Enfantillage, *m.* பிள்ளைவிளையாட்

டு, — த்தனம், — யாட்டம், பாலரீதி, வீண்காரியம்.

Enfantin, *adj.* பிள்ளையின், குழந்தையின் : langage — மழலைச்சொல்.

Enfariné, *part.* மாவுள்ள, — தூவப்பட்ட, — பூசின. || மிஞ்சினபற்றுதல் —, ஆவல் —, கொஞ்சமுள்ள : — de grec கொஞ்ச கிறேக்குபடிப்புள்ள.

Enfariner, *v. a.* மாவுதூவுதல், — பூசுதல். || s'— தன்மேல் மாவு பூசுதல், மிஞ்சின பற்றுதலாதல்.

Enfer, *m.* நரகம், பாதாளம், கீழுலகம், கீழ்கதி, இருணிலம், நிரையம். || நரகவேதனை, நரகவாசிகள், பேய்கள். || வெகுவுபத்திரியமுள்ளவிடம், சந்தடி : tison d'— நரகக்கொள்ளி, கெட்டவன் ; feu d'—உக்கிரமுள்ள —, பெரிய நெருப்பு ; train d'— வெகுதுரிதம்.

Enfermé, *m. vulg.* le renfermé, *m.* ஆகாயம் குறைவுபடுவதால் நேரிடும் நாற்றம்.

Enfermer, *v. a.* அடைத்தல், அடக்குதல், பூட்டுதல். || சிறைச்சாலையிற் போடுதல், மறித்தல், உட்படுத்துதல். || சூழ்தல், வளைத்தல், சுற்றிவளைத்தல். || மறைத்தல், ஒளித்தல். || கொள்ளுதல், உள்ளேகொண்டிருத்தல். || s'— தன்னையடைத்தல், அடைத்துக்கொள்ளுதல், தன்பேரிற் கதவுசாத்துதல், அடங்குதல், உள்ளடங்குதல், ஒடுங்குதல், உட்படுதல்.

Enferrer, *v. a* (கத்திமுதலியவற்றால்) குத்துதல், ஊடுருவுதல். || s'—கத்திமேற்பாய்தல், —பாய்ந்து குத்துண்டல், தனக்குத் தின்மைசெய்தல்.

Enfièvrement, *m.* Enfièvrer, *v. a.* காய்ச்சல் உண்டாக்குதல், மிகுதியான உணர்ச்சியைத் தருதல்.

Enfilade, *f.* வரிசை, துடர்ச்சி, நிரை, அணி, பத்தி, (ஓர் கப்பலின் நீளத்திற் பீரங்கிசுடுதல் ; en — நெடும்வரிசையாய், நீளத்தில், ஊடுருவத்தக்கதன்மையாய்.

Enfiler, *v. a* கோத்தல், தொடுத்தல். || (வழியில்) நுழைதல், உட்படுதல், பின்செல்லுதல். || (பிரசங்கம்) துவக்குதல். || உருவுதல், ஊடுருவுதல், நீளத்திற் —, ஊடுருவச்சுடுதல். || உடன் —, உட்படுத்துதல், நுழைப்பித்தல், ஏத்துதல், மோசம்போக்குதல், — பண்ணுதல். || s'— கத்திமேற் பாய்தல், — பாய்ந்துருவப்படுதல், பெரியநஷ்டத்துக்கு —, மோசத்துக்குள்ளாதல்.

Enfin, *adv.* கடைசியாய், கடைசியில், முடிவில், ஒரு வார்த்தையில்.

Enflammé, *part.* அக்கினிமயமான, சுவாலிக்கிற, எரிகிற, தீப்பற்றின, சுடுகிற. || உக்கிரம் —, வேகமான, நேசாக்கினியுள்ள. || எரிவுள்ள

Enflammer, *v. a.* கொளுத்துதல், எரித்தல், தீமூட்டுதல். || சுவாலிப்பித்தல். || சுடுதல், உஷ்ணம் —, வேகம் —, பற்றுதல்கொடுத்தல். || கிளப்புதல், மூட்டுதல், தூண்டுதல், அதிகரிப்பித்தல், பொங்குவித்தல். || தைரிய —, திட —, ஊக்க —, நேசப்படுத்துதல், நேசாக்கினிகொளுத்துதல். || s'— தீப்பற்றுதல், பற்றி—, எரிதல், சுவாலித்தல், வேதல், சுடுதல், அக்கினிமயமாதல். || கிளம்புதல், எழும்புதல், காய்தல், பொங்குதல். || காதலனாதல், நேசப்பற்றுதலாதல், நேசாக்கினிபற்றிக்கொள்ளுதல். || எரிவுதன்மையாதல்.

Enflé, *part.* வீங்கிய, வீக்கமுள்ள, உப்பின, காற்றுநிறைந்த, ஆங்காரம்—, கர்வம் —, இறுமாப்புள்ள.

Enfléchures, *f. pl.* பாய்மரத்துப் படியான கயிறுகள்.

Enfler, *v. a.* உப்புவித்தல், வீங்குவித்தல், புடைப்பித்தல், காற்றினால் நிறைத்தல், குமிழாக்குதல், பருப்பித்தல், பெருப்பித்தல், பெருகுவித்தல், ஊதுவித்தல். || அதிகரிப்பித்தல், உயர்த்துதல். || நிறைத்தல், நிரப்புதல். || ஆங்காரிப்பித்தல், சலாக்கியம் —, கர்வம் வருவித்தல் || எடுப்பாக்குதல், பாராட்டுதல், பருப்பித்துச்சொல்லுதல், பெருக்குதல், வளர்த்தல். || *v. n. ou* s'— உப்புதல், வீங்குதல், புடைத்தல், ஊதுதல், பெருகுதல், குமிழ் —, பிதுக்கமாதல், பொங்குதல், எழும்புதல், ஆங்காரித்தல், கர்வங்கொள்ளுதல், தன்னை உப்புவித்தல்.

Enflure, *f.* வீக்கம், உப்பல், புடைப்பு, அதைப்பு, எடுப்பு, வீம்பு, கர்வம்.

Enfonçage, *m.* பீப்பாயில் சரக்கு போடுதல், பீப்பாயின் அடிப்பாகம் பரப்புதல்.

Enfoncé, *part.* அமிழ்ந்தின, ஒடுக்கம் —, பள்ளம் —, ஆழமான, ஆழ்ந்த, உடைந்த, தோற்ற, செயிக்கப்பட்ட.

Enfoncement, *m.* பள்ளம், ஆழம், தாழ்வு. ஒடுக்கம், ஒடுக்கிடம், பின்னிடம், பின்பக்கம், (சுவரில்) மாடம், அமிழ்த்தல், உடைத்தல், உடைப்பு, (ஆணி) கடாவுதல்.

Enfoncer, *v. a.* அமிழ்த்துதல், ஆழ்த்துதல், படிவித்தல், அமுக்குதல், அழுத்துதல், பாய்ச்சுதல், உட்படுத்துதல், நுழைப்பித்தல், பிரவேசிப்பித்தல், கடாவுதல், உட்பட அடித்தல், பதித்தல், புதைத்தல். || உடைத்தல், முறித்தல், பெயர்த்தல். || தோற்கடித்தல், செயித்தல். || அடிபோடுதல். || ஒன்றாய்ச் சேர்த்திசைத்தல்; —un tonneau பீப்பாவையுடைத்தல், பீப்பாவுக்கு அடிபோடுதல்; — un clou ஓர் ஆணியைக் கடாவுதல், — அடித்தல். || *v. n. ou* s'— அமிழ்தல், ஆழ்தல், முழுகுதல், படிதல், பதிதல், தாழுதல். || நுழைதல், உட்படுதல், உட் —, பிரவேசித்தல். || *de plus* s'— விழுதல், மோசம்போதல், நஷ்டப்படுதல்.

Enfonceur, *m.* உடைக்கிறவன் :— de portes ouvertes திறந்தகதவுகளையுடைக்கிறவன், வீம்பன், எத்தன்.

Enfonçoir, *m.* உடைக்குங் கருவி, கடாவும் இயந்திரம்.

Enfonçure, *f.* பீப்பாவினடி, கட்டிலின் கீழ்ப்பலகை. || பள்ளம், குழி.

Enforcir, *v. a.* உறுதி —, திட —, பலப்படுத்துதல், பலப்பித்தல். || *v. n. et* s'— பலத்தல், பலமாதல்.

Enfoui, *part.* புதைத்த.

Enfouir, *v. a.* புதைத்தல், அடக்குதல், மண்ணால் மூடுதல், சேமித்தல். || ஒளித்தல், மறைத்தல், வீணாய்விடுதல், பிரயோகஞ் செய்யாதிருத்தல். || s'— புதைதல், ஒளிதல், மறைதல், ஒடுங்குதல், பதுங்குதல். [ப்பு

Enfouissement, *m.* புதைப்பு, மறை

Enfouisseur, *m.* புதைக்கிறவன், ஒளிக்கிறவன். [இடந்து ஏறுதல்.

Enfourcher, *v. a.* கால்விரித்து —,

Enfourchure, *f.* கவர்பிரியுமிடம், கவர்கொம்புள்ள மான்தலை, தொடையுள்ளிடை, காற்சட்டையின் பிஸ்தி.

Enfournage, *m.* Enfourner, *v. a.* சூளையிற்போடுதல், துவக்குதல், ஏற்படுதல் || s'— (வருத்தமானவிடத்தில் — காரியத்தில்) நுழைதல், உட்படுதல்.

Enfreindre, *v. a.* மீறுதல், கடத்தல், விட்டுத் தவறுதல், ஆசரியாதிருத்தல்.

s'Enfuir, *v. pro.* ஓடிப்போதல், நீங்கி —, தப்பி —, தப்பித்துப்போதல், ஓட்டமெடுத்தல். || சிந்தி —, ஒழுகிப்போதல், ஒழுகுதல். || கடந்து —, சிதறி —, காணாமற்போதல், கலைதல்.

Enfumé, *part.* புகைந்த, புகையாற் —, கருகிய, புகைநிறமான, அசுத்த.

Enfumer, *v. a.* புகையூட்டுதல், — யிடுதல், — நிறைத்தல், புகையால் துரத்துதல், — போக்குதல், — வருத்துதல், வீண்சலாக்கியங்கொடுத்தல். || s'—, புகைதல், புகையாற்கருகுதல், — வருந்துதல். [வில் போடுதல்.

Enfûtage, Enfutailler, *v. a.* பீப்பா

Engagé, *part. et s.* ஒற்றி—, அடைவு —, அடைமானம் —, அடைப்பான, உட்பட்ட, சிக்கின. || அமர்ந்தவன், சேவகத்திற் பெயரெழுதினவன் : nouvel — புதுச்சேவகன்.

Engageable, *adj.* ஈடாகத்தரக்கூடிய, அடைமானம் செய்யக்கூடிய.

Engageant, *part.* இணக்குகிற, இழுக்கிற, ஆசைவருவிக்கிற்.

Engagement, *m.* ஈடாக —, ஒற்றிவைத்தல், அடைவு, அடைமானம். || வார்த்தைப்பாடு, உடன்படிக்கை, ஒப்பந்தம், கடமை, கடன், இணக்கம், ஏவு, சம்பளத்துக்கமர்தல். || பற்றுதல், நேசம், நேசப்பந்தனம். || சேவகனாக எழுதுதல், — எழுதின சீட்டு, — எழுதிவாங்கும் பணம். || இலேசான சண்டை, — போர்.

Engager, *v. a* ஈடாக —, அடைமானமாக —, ஒற்றி —, ஈடு —, அடகுவைத்தல். || கொடுத்தல், இடுதல். || கட்டுதல், பந்தித்தல். || நுழைப்பித்தல், உட்படுத்துதல், பிரவேசிப்பித்தல். || இணக்குதல், ஏவுதல், தூண்டுதல், இழுத்தல், உடன் —, சம்மத —, தைரிய —, கடமைப்படுத்துதல். || கடன் சுமத்துதல், கட்டாயம் பண்ணுதல். || சிக்கு —, உட் —, அகப்படுத்துதல். || துவக்குதல், கிளப்புதல், மூட்டுதல். || சம்பளத்துக்கு —, அமர்த்துதல், சேவகத்தில் எழுதுவித்தல், சேவகனை எழுதுதல்: — son bien தன்னாஸ்தி ஈடாக வைத்தல் ; — sa parole தன் வார்த்தைப்பாடு

கொடுத்தல் ; — le combat போர்துவக்குதல். ‖ s'— கடமை —, கடன் சுமத்தல், வார்த்தைப்பாடு —, நம்பிக்கை கொடுத்தல், வாக்கிடுதல், உடன்—,ஏற்படுதல், ஒப்பந்தமாதல், பிணை—, பிணையாளியாதல், உடன்படிக்கை —, உத்தரவாதம்பண்ணுதல். ‖ சம்பளத்துக்கு அமருதல், சேவகனாக எழுதுதல். ‖ கடன்படுதல். ‖ சிக்குதல், சிக்கு —, தடைபடுதல், அடைப்பாதல். ‖ நுழைதல், உட்படுதல், பிரவேசித்தல். ‖ துவக்குதல்.

Engagiste, *m.* ஒற்றிவாங்குகிறவன்.

Engainant, *part.* தாளைச் சூழ்கிற.

Engainé, *part.* இலை —, பாளை சூழ்கிற.

Engainer, *v. a.* உறையிற்போடுதல், தாளைச் —, சூழுதல், அடக்கிக்கொள்ளுதல்.

Engazonnement, *m.* Engazonner, *v. a.* புல்விதைத்தல், புற்பத்தை அடித்தல். [சந்ததி. வமிசம்.

Engeance, *f.* சாதி, இனம், சனம்,

Engeancer, *v. a.* (சனத்) தொந்தரைகொடுத்தல், — சுமத்துதல். ‖ s'— தொந்தரையெடுத்து —, சுமந்துகொள்ளுதல். [கம், — புண்.

Engelure, *f.* கடுங் குளிரிலாகிற வீக்

Engendré, *part.* சன்மித்த, சனித்த, பிறந்த, உற்பவித்த.

Engendrement, *m.* Engendrer, *v. a.* பெறுதல், சனிப்பித்தல், பிறப்பித்தல், ஈனுதல். ‖ உண்டாக்குதல், விளைவித்தல். ‖ s'— சன்மித்தல், சனித்தல், உற்பவித்தல், பிறத்தல், உண்டாதல்.

Engerbage, *m.* Engerber, *v. a.* அரிக்கட்டாகக் கட்டுதல், — குவித்தல், அடுக்குதல், ஒன்றின்மேலொன்று குவித்தல்.

Engin, *m.* சாமர்த்தியம், சூக்ஷம். ‖ பாரந்தூக்கும் —, எடுக்கும் —, போரியந்திரம், சூத்திரம், ஏந்திரம், சூக்ஷமான கருவி, வலை, பொறி.

Englober, *v. a.* திரட்டுதல், ஒன்றாகச்சேர்த்தல், அடக்குதல், கூட்டுதல்.

Englouti, *part.* முழுகின, விழுங்கப்பட்ட.

Engloutir, *v. a.* விழுங்குதல், மிழுங்குதல், விழுங்கி —, அமிழ்த்திக்கொள்ளுதல், உட்கொள்ளுதல், முழுதுங் குடித்தல், — பக்ஷித்தல், செலவழித்தல், அமிழ்த்துதல். ‖ s'— முழுகி —, அமிழ்ந்திப்போதல், அமிழ்தல், சுவறுதல், சிதறுதல்.

Engloutissement, *m.* விழுங்கிக்கொள்ளுதல், அமிழ்த்துதல், முழுகிப்போதல், செலவழிப்பு.

Engloutisseur, *m.* விழுங்குகிறவன்.

Engluement, *ou* Engluage, *m.*

engluer, *v. a.* பிசின் பூசுதல். ‖ s'— பிசினில் அகப்படுதல். [பிசின் பூசுதல்.

Engommage, *m.* Engommer, *v. a.*

Engoncement, *m.* அதிகவுயர்ந்த சட்டையின் வருத்தம், — நெருக்கம்.

Engoncer, *v. a.* அதிகவுயரத்தினால் வருத்துதல், — நெருக்குதல். ‖ s'— அதிகவுயரமான சட்டை தரித்தல்.

Engorgement, *m.* அடைப்பு, அதிக நிறைவு, வீக்கம்.

Engorger, *v. a.* வழி —, அடைத்தல், தூர்த்தல், அதிகமாய் நிறைத்தல், வீங்குவித்தல். ‖ s'— தடை —, அடைபடுதல், வீங்குதல்.

Engouement, *m.* தொண்டை —, அடைப்பு, தடை. ‖ குருட்டுப்பிடிமானம்,—ஆச்சரியம், மிஞ்சினபற்றுதல்,—எண்ணம், — மதிப்பு.

Engouer, *v. a.* தொண்டையடைத்தல், (இரத்தத்தாரை முதலியவற்றை) அதிகமாய் நிரப்புதல்.‖ மதியற்றபற்றுதலாக்குதல், — வருவித்தல். ‖ s'— தொண்டையடை —, அடைபடுதல், மிஞ்சினபற்றுதலாதல், மதியற அதிசயித்தல், — மதித்தல்.

Engouffrement, *m.* Engouffrer, *v. a.* அமிழ்த்துதல், விழுங்குதல், விழுங்கிக்கொள்ளுதல், ஆவலாய்த் தின்றல். ‖ s'— முழுகி —, அமிழ்ந்திட்போதல், மடுவில் —, பாதாளத்தில்—, அமிழ்தல், பலமாய் நுழைதல். [தல்.

Engouler, *v. a.* கவ்வுதல், விழுங்கு

Engoulevent, *m.* ஓர் பக்ஷி.

Engourdi, *part.* திமிர்ந்த, விறைத்த, மரத்துப்போன, மந்தமான.

Engourdir, *v. a.* திமிர்ப்பித்தல், விறைப்பித்தல், மந்தமாக்குதல், தளர்த்துதல். ‖ s'— திமிர்த்தல், விறைத்தல், மரத்தல், மரத்துட்போதல், தளர்தல், திமிர் —, விறைப்பு —, மந்தமாதல்.

Engourdissement, *m.* திமிர், திமிர்

ப்பு, விறைப்பு, மரத்தல், சோர்வு, மந்தம்.

Engrais, *m.* கொழுப்பிக்குமிரை, — இடம், — மேய்ச்சல். || எரு, பசளை, குப்பை, நிலஞ்செழுப்பிக்கும் வஸ்து.

Engraissé, *part.* கொழுத்த, கொழுப்பான, புஷ்டியான, தசைந்த; செழித்த.

Engraissement, *m.* கொழுப்பித்தல், கொழுத்தல், புஷ்டியாதல், தசைப்பு, எரு —, உறம்போடுதல்.

Engraisser, *v. a.* கொழுப்பித்தல், நிணப்பித்தல், கொழுப்பு —, புஷ்டியாக்குதல், தசைப்பித்தல், வளர்த்தல், கொழுக்கவிடுதல், — பண்ணுதல், எரு —, உரம்போடுதல், செழிப்பித்தல், செழிப்பாக்குதல். || *v. n. et* s'— கொழுத்தல், நிணத்தல், தசைதல், தடித்தல், தூலித்தல், புஷ்டி —, செழிப்பு —, ஐசுவரியனாதல். [ழுப்பிக்கிறவன்.

engraisseur, *m.* (மிருகங்களை) கொ

Engrangement, *m.* Engranger, *v. a.* களஞ்சியத்திற்சேர்த்தல், — அடக்குதல். || s'—களஞ்சியத்திற் சேர்க்கப்படுதல்.

Engravement, *m.* மணல்மேட்டில் அகப்படுதல், — அகப்பட்டதன்மை *ou*

Engraver, *v. a.* (கப்பலை) மணல்மேட்டில்—, சேற்றில் அகப்படுத்துதல், — மோதுவித்தல். || s'— ஷை அகப்படுதல், — மோதுதல்.

Engrêlé, *adj.* சுற்றிலும் பல்லுள்ள.

Engrêlure, *f.* மெல்லியசித்திரத் தையல்.

Engrenage, *m.* Engrenure, *f.* (இருசக்கரப் பல்லுகளின்) இசைப்பு, இசைவு, இணைப்பு, இருசக்கரமிசைக்கும் விதம். இசையுஞ் சக்கரங்கள்.

Engrener, *v. a.* || இருசக்கரமிசைத்தல், இணைத்தல்: — une pompe சலசூத்திரத்தில் முதற்றண்ணீர் போடுதல். || s'— இருசக்கரம் ஒன்றோடொன்று —, இசைதல், இணைதல். [றைதல்.

s'Engrumeler, *v. pro.* கட்டியாயு

Enguenillé, *adj.* கந்தையுள்ள.

Engueulade, *f.* Engueuler, *v. a.* பழித்தல், நிந்தைபேசுதல்.

Enguirlander, *v. a.* மாலைபோடுதல், மாலை சூடுதல்.

Enhardir, *v. a.* துணிவு —, தைரிய —, **திடப்படுத்துதல், தேற்றுதல், தூண்டுதல்.** || s'— **தைரியம் —, துணிகரமாதல், தேறுதல், துணிதல்.** [ப்போகிற.

Enharmonique, *adj.* **கால்சுரமாய்**

Enharnaché, *part.* (குதிரைச்) சாமான்போட்ட, கேலியாய் —, அபூர்வமாயணிந்த, உடுத்திய. [மான் *ou*

Enharnachement, *m.* குதிரைச்சா

Enharnacher, *v. a.* ஷை சாமான்போடுதல், (கேலியாய்) உடுத்துதல். || s' — உடுத்தல், அணிதல்.

Enherber, *v. a.* புல்தரையாக்குதல், புல்லுவிதைத்தல்.

Énigmatique, *adj.* மறைபொருளான, நொடிக்குரிய, விடுகதைபொருந்திய, உவமையுள்ள, அருங்கருத்துள்ள, கருகல் —, இரகசியமான.

Énigmatiquement, *adv.* மறைபொருள் —, நொடியாய்.

Énigme, *f.* நொடி, விடுகதை, மறைபொருள், — சொல், கருகலான வாக்கியம், கண்டுபிடிப்பதற்கரியது, உவமை.

Enivrant, *part.* இலாகிரியான, மயக்குகிற; boisson —, மதுபானம்.

Enivré, *part.* மயக்கம் —, வெறி—, செருக்குள்ள.

Enivrement, *m.* வெறி, இலாகிரி, மயக்கம். || மருள், செருக்கு, களிப்பு.

Enivrer, *v. a.* வெறி —. மயக்கம் வருவித்தல், — ஆக்குதல், வெறிக்கச் செய்தல். || மயக்குதல், மருட்டுதல், பூரித்தல், கர்வத்தால் —, சந்தோஷத்தால் நிறைத்தல், ஆங்காரம் —, கர்வம் வருவித்தல். || s'— இலாகிரி —, வெறியெடுத்தல், — கொள்ளுதல், மயங்குதல், பூரித்தல், களித்தல், வெறித்தல், கர்வித்தல். [தாண்டு, தாண்டல்.

Enjambée, *f.* கவடு, கவட்டினிடை,

Enjambement, *m.* தாண்டல், அர்த்தமற்றோரடியில் துடர்தல்.

Enjamber, *v. a. et n.* தாண்டுதல், தாவுதல், கவடுவைத்தல், பெருநடையாய் —, கவடிட்டு —, எட்டிநடத்தல். || அபகரித்தல், பறித்தல். || முந்துதல், முன்னிடுதல், கடத்தல், அர்த்த மற்றோரடியில் துடர்தல். — முடிதல். || s'— தாண்ட —, தாவப்படுதல்.

Enjaveler, *v. a.* அரியாகவைத்தல்.

Enjeu, *m.* பந்தயம், ஓட்டம், பந்தயப்பொருள்: **retirer ses** — தன் பந்த

யம் மறுபடியெடுத்தல், ஆபத்துள்ள காரியத்தைவிட்டு நீங்குதல்.

Enjoindre, *v. a.* கட்டளையிடுதல், கற்பித்தல், விதித்தல்.

Enjôler, *v. a.* இணக்குதல், மயக்குதல், தெட்டுதல், இச்சகத்தாலிழுத்தல், இன்பங்காட்டி இணக்குதல், — எத்துதல்.

Enjôleur, — euse, *s.* மயக்குகிறவன், தெட்டுகிறவன், — வள், நயப்பெத்தன். [சிங்காரிப்பு.

Enjolivement, *m.* சோடிப்பு, சிறப்பு,

Enjoliver, *v. a.* அலங்கரித்தல், சோடித்தல், சிங்காரித்தல். || s'— அலங்கரிக்கப்படுதல், அலங்காரமாதல்.

Enjoliveur, *m.* அலங்கரிக்கிறவன்.

Enjolivure, *f.* வீண்காரியச் —, சோடிப்பு.

Enjoué, *adj.* களிப்பு —, நகைப்பு —, மகிழ்ச்சி —, நளினமுள்ள.

Enjouement, *m.* மகிழ்ச்சி, நகைப்பு, களிப்பு, நளினம்.

Enjuponner, *v. a.* ஸ்திரீகள் உள் அங்கிதரித்தல், பெண்ணுடை போட்டுக்கொள்ளுதல்.

Enkysté, *adj.* பையிலடைப்பட்ட.

Enlacé, *part.* பின்னலான, சிக்குள்ள, சிக்கின, கண்ணிகளிற் —, கட்டுகளிற் சிக்கிக்கொண்ட.

Enlacement, *m.* பின்னல், சிக்கல்.

Enlacer, *v. a.* பின்னல் —, சிக்கலாக்குதல், பின்னுதல், சிக்குப்படுத்துதல், ஒன்றோடொன்றுமாட்டுதல், ஒரு நாடாவிற் கோத்தல், கண்ணியிற் —, வலையிற் பிடித்தல், அரவணைத்தல், நெருக்கிக் கட்டுதல். || s'— பின்னி —, சிக்கிக் கொள்ளுதல். [தல்.

Enlaçure, *f.* துளைத்துப் பிணைத்

Enlaidir, *v. a. et n.* அவலக்ஷணப்படுத்துதல், — படுதல், அவலக்ஷணமாக்குதல், — ஆதல்.

Enlaidissement, *m.* அவலக்ஷணமாக்குதல், — ஆதல், அந்த —, உறுப்புக்கேடு.

Enlevé, *part.* எடு—, பறிக்கப்பட்ட.

Enlèvement, *m.* எடுத்தல், கொண்டுபோதல், அபகரிப்பு, பறிப்பு, ஸ்தரீ—, சோரம், பரவசம்.

Enlever, *v. a.* எடுத்தல், தூக்குதல். || எடுத்துக்கொண்டு —, கொண்டுபோதல். || பறித்தல், அபகரித்தல், திருடுதல், பலவந்தமாய்ப் —, பிடித்தல், தன் வசப்படுத்துதல், சூறையாடுதல், பிடுங்குதல், பெயர்த்தல், வாரிப்போடுதல், —க்கொள்ளுதல். || கிளப்புதல், எழுப்புதல். || சீக்கிரமாய் வாங்குதல், துணிகரமாய் —, கடுகச்செய்தல். || போக்குதல், நீக்குதல். || அதிசயப்படுத்துதல், பரவசமாக்குதல். || இழுத்தல், தூண்டுதல்; — les cœurs பரவசமாக்குதல்; — les suffrages அநுமதிகளையடைதல். || s'— எழும்புதல், ஏறுதல், எடுபடுதல், பிரிதல், சினத்தல், கோபத்தினாற் —, பொங்குதல். [ரன், பறிக்கிறவன்.

Enleveur, *m.* எடுக்கிறவன், பறிகா

Enlevure, *f.* கொப்புளம்.

Enliasser, *v. a.* (கடுதாசிகளை) கட்டாகக் கட்டுதல். [தல், —கலத்தல்.

Enlier, *v. a.* கல்லுகளைப் பிணைத்

Enlignement, *m.* Enligner, *v. a.* வரிசையாய்வைத்தல், கோட்டில் வைத்தல்.

Enlisement, *m.* Enliser, *v. a.* அசையும் மணலில் கால் உள்ளுக்கு வாங்குதல்.

Enluminer, *v. a.* வர்ணம் பூசுதல், காந்தி —, வன்னங்கொடுத்தல், அலங்கரித்தல், சோடித்தல், துலங்க —, சிவக்கச்செய்தல். || s'— வன்னம் பூசப்படுதல், தனக்கு மைபூசுதல், சிவத்தல்.

Enlumineur, — euse, *s.* வர்ணம் பூசுகிறவன், — வள், காந்தி —, நிறமிடுகிறவன், — வள்.

Enluminure, *f.* வர்ணமிடும் வித்தை, படத்துக்குப் பூசினவன்னம், வன்னமிட்ட படம். || வீண்சோடிப்பு, குடியினால்வருகிற சிவந்தநிறம், முகச் சிவப்பு. [*adj.* நவகோணமுள்ள.

Ennéagone, *m.* நவகோணவடிவு. ||

Ennemi, — mie, *s.* சத்துரு, சத்துராதி, எதிரி, எதிராளி, விரோதி, பகைவன், — வள், பகைஞன், பகையாளி, மாற்றான், குரோதி, இரிபு. || *adj.* சத்துருவான, சத்துருக்களின், எதிர்கட்சி—, விரோதம் —, எதிரான, பகையுள்ள, ஒவ்வாத, பொருந்தாத, எதிரிடையான.

Ennoblissement, *m.* Ennoblir, *v. a.* மேன்மை —, மாட்சிமை —, கீர்த்தி —, மகத்துவப்படுத்துதல், மேன்மை —, பெருமை —, பிரபலியம் —,

வங்கிஷபதியாக்குதல். || s'— மேன்மை —, மாட்சிமை —, மகத்துவமாதல்.

Ennui, *m.* சலிப்பு, ஆயாசம், அலுப்பு, வெறுப்பு, துக்கம், விசனம், கஸ்தி.

Ennuyant, *part.* சலிப்பு —, ஆயாசமான, — வருவிக்கிற, அலுப்பான.

Ennuyé, *part.* சலிப்பு —, ஆயாசமுள்ள, சலித்த, அலுத்த.

Ennuyer, *v. a.* சலிப்பு —, ஆயாசப்படுத்துதல், சலிப்பித்தல், அலட்டுதல், சலிப்பு —, ஆயாசம் —, அலுப்பாயிருத்தல். || s'— சலித்தல், ஆயாசப்படுதல், அலுப்பு —, சலிப்பாதல், அலுத்தல், அலுத்துப்போதல்.

Ennuyeusement, *adv.* சலிப்பாய், ஆயாசத்துக்குரிய விதமாய்.

Ennuyeux, *adj.* சலிப்பு —, ஆயாசம் வருவிக்கிற, சலிப்புக்குரிய, அலுப்பான, அலட்டுகிற, தொந்தரையான.

Énoncé, *m.* சொன்னது, சொல்லப்பட்டது, சட்டம், சாதகத்தின் —, தீர்வையினடக்கம், — சட்டம்.

Énoncer, *v. a.* சொல்லுதல், உரைத்தல், உச்சரித்தல், அறிவித்தல், கூறுதல். || s'— உச்சரித்தல், பேசுதல், உச்சரிக்க —, சொல்லப்படுதல்.

Énonciatif, *adj.* குறிக்கிற, தெளிவிக்கிற, உச்சரிக்கிற.

Énonciation, *f.* சொல்லுதல், உச்சரிப்பு, உச்சாரணம், சொல்லும் வகை, அடக்கமான அறிவிப்பு. || வாக்கியம்.

Enorgueillir, *v. a.* ஆங்காரிப்பித்தல், ஆங்காரம் —, கர்வம் —, செருக்கு வருவித்தல். s'— ஆங்காரித்தல், செருக்குதல், கர்வித்தல், கர்வம் —, ஆங்காரங்கொள்ளுதல், — ஆதல், இறுமாத்தல்.

Énorme, *adj.* பிரமாண்டமான, வெகுபெரிய, — கனமான, மகா, மிகுந்த, அளவற்ற, மிதமிஞ்சின.

Énormément, *adv.* பிரமாண்டமாய், மிதமிஞ்சி, மிகவும்.

Énormité, *f.* மிகுதியானகனம், — தோஷம், பிரமாண்டம், மிதந்தப்பின பருமம். || கடூரம், கடினம், கொடுமை, மகாபாதகம்.

Énouer, *v. a.* முடிச்சுகழித்தல்.

s'Enquérir, *v. pro.* கேட்டல், வினவுதல், விசாரித்தல், விசாரணைசெய்தல், அறியத் தேடுதல்.

Enquête, *f.* விசாரணை, ஆராய்வு, ஆராய்ச்சி, சோதனை, கேள்வி, வினா, உசாவு, சோதா, நீதிவிளக்கம், — விசாரணை. [கவலைப்படுதல்.

s'Enquêter, *v. pro.* விசாரித்தல்,

Enquêteur, *m. et adj.* விசாரணை செய்கிறவன், — செய்கிற.

Enraciné, *part.* வேரூன்றின, — கொண்ட, உறுதிப்பட்ட.

Enracinement, *m.* Enraciner, *v. a.* வேர்கொள்ளச் செய்தல், ஸ்திர —, உறுதிப்படுத்துதல். || s'— வேரூன்றுதல், — கொள்ளுதல், — பற்றுதல், ஸ்திர —, உறுதிப்படுதல், பலத்தல்.

Enragé, *part. et s.* வெறிபிடித்த, — யுள்ள, பைத்தியமுள்ள, பித்தன் —, பேயனான, வெறித்த. || கோபவெறி —, கடுங்கோபமுள்ள, உக்கிரமான, மூர்க்கமுள்ள. || மிஞ்சின, மிகுந்த, அகோரமான: musique — இசைவற்ற சங்கீதம். || s. பித்தன், வெறியன், வெறிகொண்டவன், உக்கிரன், மூர்க்கன், கடுங்கோபி. [விசனப்படுத்துகிற.

Enrageant, *part.* வெகுகஸ்தி —

Enrager, *v. n.* கோபவெறி —, வெறிகொள்ளுதல், — பிடித்தல், வெறித்தல். || வெகு கஸ்தி — விசன — நோவு — தொந்தரை — கோப — அவசரப்படுதல்: — de faim கடும்பசிப்படுதல்: faire — வெறிக்கச்செய்தல், கொடிதாய் வருத்துதல், — அலட்டுதல், — தொந்தரைப்படுத்துதல்.

Enraiement, *m.* சக்கரமாட்டித் தடுத்தல், சக்கரக்கதிர் போடுதல்.

Enrayage, *m.* காடியில் வரிகீறுதல், துளையில் வரிபோடுதல்.

Enrayer, *v. a. et n.* சக்கரக் கதிர் போடுதல். || சக்கரமாட்டித் தடுத்தல், — நிறுத்துதல், கைப்பிடிக் கட்டை —, தரிப்புமீண்டு —, தடுப்புபோடுதல், தன்னக்கிரமங்களை நிறுத்துதல், நிற்றல். || முதல் சாலுழுதல்.

Enrayoir, *m.* சக்கரக்கதிர்போடும் கருவி, வரிகீறுங் கருவி.

Enrayure, *f.* சக்கரத்திடுப்பு, கைப்பிடிக் கட்டை. || முதற்சால்.

Enrégimenter, *v. a.* பட்டாளத்திற்சேர்த்தல், பட்டாளமாக்குதல்.

Enregistrable, *adj.* இடாப்பிலெழுதத்தக்க, — வேண்டிய.

Enregistrement, *m.* பதிவு, இடாப்பில் —, புஸ்தகத்திலெழுதுதல், — பதிதல், பதிவின் கச்சேரி, — அத்தாட்சி.

Enregistrer, *v. a.* இடாப்பில் —, புஸ்தகத்தில் —, பதிவில் எழுதுதல்,— பதிதல், அட்டவணையிற் சேர்த்தல், பதிதல், எழுதிவைத்தல்.

Enregistreur, *m.* இடாப்பில் —, பதிகிறவன், பதிவுபுஸ்தகம் வைத்திருக்கிறவன்.

Enrhumé, *part.* சலதோஷம்—, சளிபிடித்த.

Enrhumer, *v. a.* சளி —, சலதோஷம் —, தடிமல் —, சலுப்புவருவித்தல். || s'— சளிபிடித்தல், சலதோஷங்கொள்ளுதல், சளித்தல்.

Enrichi, *part.* ஆஸ்தி சம்பாதித்த, ஐசுவரியவானான.

Enrichir, *v. a.* திரவியவான் —, ஐசுவரியவானாக்குதல், செல்வம்—, ஆஸ்திவருவித்தல், — பெறுவித்தல், —அதிகரிப்பித்தல்.|| அலங்கரித்தல், சிறப்பித்தல், தாராளமாக்குதல். || s'— ஆஸ்தி சம்பாதித்தல், திரவியவான் —, ஆஸ்திக்காரன் —, ஐசுவரியவானாதல், அலங்கரிக்கப்படுதல்.

Enrichissement, *m.* ஆஸ்தியதிகரிப்பு, அலங்கரிப்பு, சோடிப்பு, பாஷைச் சொற்களினதிகரிப்பு.

Enrochement, *m.* **Enrocher**, *v. a.* அஸ்திவாரத்துக்காக ஜலத்தில் பரும்படியாய்க் கல்முதலியவைகள் போடுதல், பரும்படியான கடைகால் போடுதல்.

Enrôlé, *part.* புதிதாய் எழுத —, சேர்க்கப்பட்ட.

Enrôlement, *m.* (சேவகனாக ..) இடாப்பில் எழுதுதல், — எழுதிச் சேர்த்தல், — தன்பேர் எழுதுவித்தல், — எழுதின சாதனம், — எழுதின அத்தாட்சி.

Enrôler, *v. a.* சேவகத்திலுட்படுத்துதல், சேவகத்துக்கு —, சேவகனாக எழுதுதல், — தெரிதல், எழுதிச்சேர்த்தல், சபையில் —, கட்சியிற்சேர்த்தல், இடாப்பிலெழுதுதல், — பதிதல். s'— சேவகத்துக்குத் தன் பேர் கொடுத்தல், சபையிலுட்படுதல்.

Enroué, *part.* கம்மலான, —உள்ள, அடைத்த, குரலடைப்புள்ள.

Enrouement, *m.* கம்மல், குரலடைப்பு, — மந்தம், — கனப்பு, தொண்டைக்கம்மல்.

Enrouer, *v a.* கம்மல் வருவித்தல். || s'— கம்முதல், கம்மலாதல், கம்மிப் போதல்: être enroué கம்மலாய் —, கம்மியிருத்தல்.

Enrouiller, *v. a.* துருவருவித்தல், — பிடிப்பித்தல். || மந்தமாக்குதல். || s'— துருபிடித்தல், மந்தமாதல்.

Enroulement, *m.* சுருட்டுதல், சுருளுதல், சுருட்டு, சுருளை.

Enrouler, *v. a.* சுருட்டுதல், சுற்றுதல். || s'— சுருளுதல், சுற்றிக்கொள்ளுதல்.

Enrubanner, *v. a.* மிகுந்த நாடாவால் —. அலங்கரித்தல், சோடித்தல். || s'—மிகுந்த நாடாவினால் தன்னைச் சோடித்தல்.

Ensablement, *m.* மணல்மேடு.

Ensabler, *v. a.* மணல்மேட்டில் ஓட்டுதல், — அகப்படுத்துதல், — மோதுவித்தல். || s'— மணல்மேட்டில் அகப்படுதல், — மோதுதல். [இடுதல்.

Ensaisinement, *m.* வசமாதல், —

Ensaisiner, *v. a.* வசப்படுத்துதல்.

Ensanglanté, *part.* இரத்தக்கறைபட்ட, இரத்தம் வடிகிற.

Ensanglanter, *v. a.* இரத்தக்கறைபடுத்துதல், இரத்தத்திற் றோய்த்தல்,— நனைத்தல், இரத்தஞ் சிந்துவித்தல்: — son règne தன்னாளுகையில் இரத்தஞ் சிந்துவித்தல். || s'— இரத்தக்கறைபடுதல்.

Enseignant, *part.* படிப்பிக்கிற: le corps — சாஸ்திரங்களைப் படிப்பிக்குஞ் சபை.

Enseigne, *f.* கடைக் —, குறி, குறிப்பு, அடையாளம், இலாஞ்சனை. || படைக் —, கொடி, விருது, துவசம், கேதனம்: à bonnes — நியாயத்தோடு, நிச்சயமாய்; être logé à la même — ஒரேயிடத்தில் —, ஒரேநிலையில் —, ஒரே ஆபத்திலிருத்தல்; à telle — que அற்கு அத்தாக்ஷி பின்வருமாறு.

Enseigne, *m.* கொடிக்காரன், *ou*— de vaisseau கப்பலின் மூன்றாந் —, தாழ்ந்த தலைவன்.

Enseignement, *m.* போதனை, போதகம், படிப்பினை, போதிப்பு, படிப்பிப்பு, கற்பனை. || படிப்பிக்கும் உத்தியோ

கம், — விதம், உபாத்திதனம், படிப்பிக்கிற சாஸ்திரங்கள், — காரியங்கள்.

Enseigner, *v. a.* படிப்பித்தல், கற்றுக்கொடுத்தல், போதித்தல், கற்பித்தல், உபதேசித்தல், உணர்த்துதல், வாத்தியாயிருத்தல். || அறிவித்தல், காட்டுதல், தெரிவித்தல்.

Ensellé, *adj.* முதுகு—, நடுவிற் பள்ளமான.

Ensemble, *adv.* ஒருமிக்க, ஒன்றாய், கூட, கூடிக்கொண்டு, துணையாய், ஒருங்குடன், மொத்தமாய், ஓரிடத்தில், ஒரேநேரத்தில்: le tout — எல்லாம் ஒருமிக்க, — கூட, மொத்தமாய், முழுமை, அடங்கலும். || *m.* அடங்கல், தொகை, சேர்க்கை, முழுமை, பொருத்தம், இசைவு, ஒருமிப்பு, ஒன்றிப்பு.

Ensemencement, *m.* விரைப்பு, விதைப்பு.

Ensemencer, *v. a.* விரைத்தல், விதைத்தல்.

Enserrer, *v. a.* அடைத்தல், அடக்குதல், பூண்டுக்கிடங்கில் வைத்தல்.

Enseveli, *part.* புதைத்த, அமிழ்ந்தின.

Ensevelir, *v. a.* (சவம்) துப்பட்டியால் மூடுதல், புதைத்தல், அடக்கஞ்செய்தல், சேமித்தல், அடக்குதல், சவச்சேமம்பண்ணுதல், கல்லறையிற்போடுதல். || அமிழ்த்துதல், விழுங்குதல். || கெடுத்தல், அழித்தல், மறைத்தல். || s'— சாதல், மாய்தல், படுதல், இறத்தல். || மறைதல், ஒளிதல், ஒடுங்குதல், அமிழ்தல்.

Ensevelissement, *m.* பிரேதச் சீலையில் —, அடக்குதல், அடக்கம், புதைப்பு.

Ensevelisseur, — euse, *s.* ஷை சீலையில் —, அடக்குகிறவன், புதைக்கிறவன்.

Ensiforme, *adj.* கத்திவடிவான.

Ensilage, *m.* Ensiler, *v. a.* கிடங்கில் தானியம்போடுதல்.

Ensorcelé, *part.* சூனியமிடப்பட்ட, வசியமான.

Ensorceler, *v. a.* சூனியம்வைத்தல், — போடுதல், சொக்குவித்தல், வசியம்பண்ணுதல், சூனியத்தாற் கட்டுதல், — மயக்குதல். || மயக்கி நேசம் வருவித்தல், வசியப்படுத்திக்கொள்ளுதல்.

Ensorceleur, — euse, *s.* சூனியக்காரன், — காரி.

Ensorcellement, *m.* பில்லி—, சூனியம், மாயை, மாந்திரியம்.

Ensoufrer, *v. a.* *V.* Soufrer.

Ensouple, *f.* பாச்சுற்றி, பாச்சுருட்டி, படைமரம், படமரம்.

Ensuifer, *v. a.* கொழுப்பு பூசுதல்.

Ensuite, *adv. prép.* பின், பின்பு, பிறகு, பிற்பாடு, பின்னும், பின்னை, பின்னர், பின்னையும்: — de cela, — de quoi அதின் —, அதுக்குப்பின்.

s'Ensuivre, *v. pro.* துடருதல், வருதல், பலித்தல், சித்தித்தல், தொடர்பாதல், காரணசித்தி —, பலிப்பாதல், உண்டாதல், சம்பவித்தல்.

Entablement, *m.* பட்டை,— ப்பிதுக்கம், சுவருச்சிப் பிதுக்கம், போதிகைப் பலகை.

Entabler, *v. a.* Entablure, *f.* பலகைக்கு இரட்டைக்கால் இணைத்தல்.

Entacher, *v. a.* கறை —, அசுத்தப்படுத்துதல். || s'— கறை —, அசுத்தப்படுதல்.

Entaille, Entaillure, *f.* வெட்டு, அறுப்பு, கீறல், கீறு.

Entailler, *v. a.* கீறுதல், அறுத்தல், வெட்டுதல். || s'— வெட்டு —, கீறப்படுதல்.

Entame, *ou* Entamure, *f.* உரொட்டியிலறுத்த —, அறுப்பதில் முதல் துண்டு.

Entamer, *v. a.* கீறுதல், வெட்டுதல், முதல்துண்டு —, சற்றாவது —, அறுத்தல், அறுக்கத்துவக்குதல். || துவக்குதல், ஆரம்பித்தல். || உடைத்தல், தோற்கடித்தல். || சேத —, பங்கப்படுத்துதல், பழுதாக்குதல். || உரிமை —, அபகரித்தல், இரகசியங்களைக் கண்டுபிடித்தல், தர்க்கத்திற் செயித்தல், — சிக்குப்படுத்துதல்.

En tant que, *conj.* ஆக, போலே, ஆகியமட்டும், மட்டுக்கும்; — homme மனுஷனாகியமட்டும்; — cela me touche அது என்னைச் சேர்ந்தமட்டுக்கும்.

Entassé, *part.* குவியலான, குவித்த: homme — குறுங்கழுத்துமனுஷன்.

Entassement, *m*. குவியல், அடுக்கு, குவிப்பு, குவிவு, குவை.

Entasser, *v. a.* குவித்தல், குவியலாக்குதல், கூட்டுதல், அடுக்குதல், திரட்டுதல், சேர்த்தல், சேகரித்தல், நெருக்கிப்போடுதல். ‖ s'— குவிதல், குவியலாதல், கூடுதல், திரளுதல், நெருங்குதல்.

Entasseur, *m*. குவிக்கிறவன், அடுக்குகிறவன் : — d'écus உலோபி.

Ente, *f*. ஒட்டவைத்த கிளை, — மரம். ‖ தூரிப்பிடி, வைக்கோல் நிறைந்த தீபக பட்சி, ஓர்வித தூண்.

Enté, *part*. ஒட்டவைத்த, — வைக்க —, சேர்க்க —, இணைக்கப்பட்ட, பொருந்தின, இசைந்த.

Entéléchie, *f*. மூலகாரணம், உத்தமம்.

Entelle, *m*. இந்தியாதேசத்து ஓர் வகை குரங்கு.

Entement, *m*. ஒட்டவைத்தல்.

Entendement, *m*. அறிவு, புத்தி, உணர்வு, விவேகம், விமரிசை.

Entendeur, *m*. கண்டுபிடிக்கிறவன், கேட்கிறவன்.

Entendre, *v.a. et n*. கேட்டல், கேள்விப்படுதல், செவிகொடுந்தல், உற்றுக்கேட்டல். ‖ கண்டுபிடித்தல், உணர்தல், கிரகித்தல், அறிதல். ‖ விசுவசித்தல், நம்புதல். ‖ எண்ணுதல், நினைத்தல், கருதுதல், கருத்தாய் —, மனசாயிருத்தல். ‖ கற்பித்தல், வேண்டுமென்றிருத்தல் : — la messe பூசை காண்டல் ; à les — அவர்களை நம்பினால்;— finesse, malice à une chose ஓர் காரியத்துக்கு சூக்ஷ — கெட்ட அர்த்தங் கொடுத்தல் ; fais comme tu l'entendras, உனக்குத் தோன்றினாப்போலே —, உன் மனசின்படியே செய் : j'entends parler de ses lettres அவன் காகிதங்களைக்குறித்துப் பேசுகிறேன் ; — à சம்மதித்தல், இணங்குதல், உடன்படுதல் ; donner, laisser à — நினைப்பதற்கு இடங்கொடுத்தல் ;— dire கேள்விப்படுதல். ‖ s'— கேட்க —, கண்டுபிடிக்க —, அறியப்படுதல், சமாதானம் —, இணக்கமாயிருத்தல், உடன்படுதல் ; s'— à, en அறிதல், கெட்டிக்காரனாய் —, தேர்ந்தவனாயிருத்தல் ; s' — avec உடந்தையாயிருத்தல் ; cela s'entend அதுதெரியுமே, — ஆகக்கடவது.

Entendu, *part. et s*. கேட்ட, உணர்ந்த, கெட்டிக்காரனான, தேர்ந்த, சரிப்பட்ட, சரி —, நேத்தி —, ஒழுங்கான, சூக்ஷமான, பொருந்தின ; c'est — தீர்மானமாச்சுது ; bien — சந்தேகமற ; bien — que vous viendrez நீர் வருவதே தீர்மானம் ; faire l'— கெட்டிக்காரனாய்த் தோன்றத் தேடுதல்.

Enténébrer, *v. a.* இருட்டாக்குதல்.

Entente, *f*. அர்த்தம், கருத்து, பயன். ‖ விவேகம், திறமை, பங்கிடுகிறதில் அறிவு. ‖ இணக்கம், இசைப்பு, பொருத்தம் : mot à double — ஈரர்த்தமுள்ள சொல்.

Enter, *v. a.* ஒட்ட —, பொருந்தவைத்தல், — ச்சேர்த்தல். ‖ s'— ஒட்டவைக்கப்படுதல், ஒட்டுதல், பொருந்துதல்.

Entéralgie, *f*. கடுமையான குடல் வலி.

Entérinement, *m*. (சாதனத்தின்) அங்கீகரிப்பு, அங்கீகரிக்குந் தீர்வை, உறுதிப்பாடு.

Entériner, *v. a.* (சாதனம்) அங்கீகரித்தல், ஒத்துக்கொள்ளுதல், உறுதிப்படுத்துதல்.

Entérique, *adj*. குடல் சம்பந்தமான, குடலைப்பற்றிய.

Entérite, *f*. குட லெரிவு.

Entérocèle, *f*. குடற் பிரிவு.

Enterrement, *m*. அடக்கம், சேமம், புதைத்தல், அடக்கச் செலவு, — ச்சடங்கு, சாச் சடங்கு.

Enterrer, *v. a.* அடக்கஞ் செய்தல், — பண்ணுதல், புதைத்தல், பிரோதக்குழியிலே வைத்தல், சேமித்தல், அடக்குதல். ‖ பின் சீவித்தல். ‖ ஒளித்தல், மறைத்தல், அதிக தாழ்வாய் —, பள்ளத்திலே வைத்தல், மறக்கடித்தல், மேற்படுதல். ‖ s'— புதைக்கப்படுதல், புதைதல், அமிழ்தல், ஒடுங்குதல்.

En-tête, *m*. (சாதனத்தில்) தலைப்பு, தலைப்பில் வைக்கவேண்டியது, முகவுரை.

Entêté, *part*. மூர்க்கத்தனம் —, முரண்டு —, மூர்க்கம் —, பிடிவாதமு

ள்ள, மிஞ்சின பிடிமானம் — பற்றுதலுள்ள. || *m.* மூர்க்கன், முரடன், பிடிவாதி.

Entêtement, *m.* மூர்க்கத்தனம், மூர்க்கம், சலஞ் சாதிப்பு, பிடிமானம், முரண்டு, முரட்டுத்தனம், பிடிவாதம், மிஞ்சின பற்றுதல்.

Entêter, *v. a.* தலை மயக்குதல், மருட்டுதல், ஆங்காரிப்பித்தல். || மூர்க்கத்தனங் —, ஆங்காரங்கொடுத்தல். || மிஞ்சின பற்றுதல் — எண்ணம் — பிடிமானம் வருவித்தல். || யூசிக்குக் குண்டு போடுதல். || s'— பிடிமானம்—, மூர்க்கமாதல், பிடிவாதம் பண்ணுதல், சலஞ் சாதித்தல், அதிக பற்றுதலாதல்.

Enthousiasme, *m.* மிஞ்சின பற்றுதல்,— பத்தி, மருள், பத்தி வைராக்கியம், தேவ ஏவல், மதாபிமானம், மதமருள், சன்னதம். || மிகுந்த அதிசயம், — பிரமிப்பு, — களிப்பு, — சந்தோஷம்.

Enthousiasmer, *v. a.* பிரமிப்பித்தல், மிகுந்த அதிசய — சந்தோஷப்படுத்துதல். || s'— பிரமித்தல், மிகவு மதிசயித்தல், — பற்றுதலாதல், மருளுதல்.

Enthousiaste, *s.* மிஞ்சின பற்றுதல் —, பிரமிப்புள்ளவன், மிகவுமதிசயப்படுகிறவன், — வள், மருளன், பத்தி வைராக்கியன், மதாபிமானி. || *adj.* பிரமிப்புள்ள, எளிதா யதிசயிக்கிற, மருளுள்ள.

Enthymeme, *m.* இருவாக்கிய — மடி நியாயம், நையாயிதத் தொகை.

Entiché, *part.* பதன்—, அழிகிற, அழுகுகிற. || மிஞ்சின பிடிமானம் — பற்றுதலுள்ள.

Entichement, *m.* Enticher, *v. a.* அழிவித்தல். || மிஞ்சின பற்றுதல் — பிடிமான மாக்குதல், — எண்ணம் வருவித்தல். || s'— மிஞ்சின பற்றுதல் — பிடிமானமாதல், — எண்ணங் கொள்ளுதல்.

Entier, *adj.* முழு, முழுமை—, முழுதுமான, சர்வ, எல்லா, சமஸ்த, நிறைந்த, பூரண, குறையற்ற, பழுதற்ற, சேதமற்ற, முற்றான, மொத்தமான. || மூர்க்கமான, பிடிமானம் —, முரண்டுள்ள, முரட்டு. || விளைவாங்காத : tout — முழுதும், முற்ற ; nombre — அபின்னம், முழுவெண் ; feuille — பல்லற்ற—, கீறற்ற இலை.

Entier, *m.* முழுமை, சகலம், சர்வம், சமஸ்தம், தொகை, மொத்தம், அடங்கல், முழு எண், ஏகம் : en son —, en leur — சர்வமும், சகலமும், முழுதும், அடங்கலும் ; en — *ou*

Entièrement, *adv.* முழுதும், முழுவதும், அடங்கலும், அற, முற்ற, ஏகமாய், குறையின்றி, ஒருங்குடன், சகலமும், சமஸ்தமாய்.

Entité, *f.* பொருள், தன்மை, சுபாவம், உண்மை, உள்ளது, எதார்த்தம்.

Entoilage, *m.* புடைவைமேல் கவணிதைத்தல், கவணிக் காதாரமான—, கவணிக்குத்தைத்த சீலை.

Entoiler, *v. a.* புடைவைமேல் கவணிதைத்தல், — மேல் ஒட்டுதல்.

Entoir, *m.* ஒட்டவைத்திடுங்கத்தி.

Entoisage, *m.* Entoiser, *v. a.* (கல்லுகளை) சதுக்கமாயடுக்குதல்.

Entomologie, *f.* செந்து—, பூச்சி விளக்கம், — விளக்கநூல், — விளக்க சாஸ்திரம்.

Entomologique, *adj.* ஷை விளக்க நூலுக்கடுத்த.

Entomologiste, *m.* பூச்சி விளக்க சாஸ்திரி.

Entomostracés, *m. pl.* பலபிரிவுள்ள ஒட்டுப் பூச்சிகள்.

Entonnage, Entonnement, *m.* பீப்பாவில் —, உள்ளே யூற்றுதல், — வார்த்தல்.

Entonner, *v. a.* இராகம் எடுத்தல், எடுத்திடுதல், பாடத்துவக்குதல், கூறுதல். || பீப்பாவில்—, உள்ளே வார்த்தல், — ஊற்றுதல். || விழுங்குதல். || s'— (காற்று) புகுந்து வீசுதல், உட்புகுதல்.

Entonnoir, *m.* பெய்குழல், புனல்.

Entorse, *f.* சுளுக்கு, உளுக்கு, மக்களிப்பு. || உருகின மெழுகின் வண்டல். || குறைவு, புரட்டு : se donner une—சுளுக்குதல், மக்களித்தல், donner une — à quelqu'un ஒருவன் அதிகாரத்தை — கனத்தைக் குறைத்தல் ; — à un passage, à la vérité ஓர் வாக்கியத்தை —, சத்தியத்தைப் புரட்டுதல்.

Entortillage, *m.* சுருளல், சுற்றுச்

சுழற்சி, — வசனம், பேச்சு மலைவு, — க்கலக்கம்.

Entortillé, *part.* சுருண்ட, திருகு—, முறுக்கு—, சுற்றுச்சுழற்சி—, சிக்கான.

Entortillement, *m.* சுருட்டுதல், சுருளுதல், சுழற்சி, சுருள், வசன மலைவு,— க்கலக்கம்,— மயக்கம்.

Entortiller, *v. a.* சுருட்டுதல், சுற்றுதல், சுற்றிப்போடுதல், -- படருதல், — கட்டுதல், — சுருளுதல். || சுற்றுச் சுழற்சிகளால்-—, மலைத்தல், கலக்குதல், புரட்டுதல், உபாயத்தாலிணக்குதல்,— எத்துதல், — தன் வசப்படுத்துதல். || s'— சுருளுதல், சுற்றிக்கொள்ளுதல், சுற்றி—, சூழப்படருதல்.

à l'Entour, *adv.* சுற்றிலும்.

Entourage, *m.* சுற்று, சுற்றடைப்பு, சுற்றணிகள், சூழுகிறவர்கள், தோழர்.

Entourer, *v. a.* சூழுதல், சுற்றுதல், வளைத்தல், அடைத்தல், வளைத்து —, வளைந்துகொள்ளுதல், சுற்றிலும் வைத்தல், — கட்டுதல், மூடுதல். || அண்டையில் —, பரிசாரமாய் —, துணையாய் —, தோழராயிருத்தல். || s'— தன்னண்டையில்—, தன்சுற்றிலுங்கூட்டுதல், — அழைத்தல், — சேர்த்தல், தனக்குச் சுற்றிக்கொள்ளுதல்.

Entournure, *f.* கமுக்கட்டிற் கைச்சட்டையின் அரைவட்டமான அறுப்பு.

Entour, *m.* சுற்று, சுற்றுப்புறங்கள், அடுத்த விடங்கள், சமீபம். || தோழர், துணைவர், அந்தரங்கர்.

s'Entr'accorder, *v. pro.* ஒத்துப் போகுதல், ஒருவர் மற்றவருடைய மனதாயிருத்தல்.

s'Entr'accuser, *v. pro.* ஒருவர் ஒருவர்பேரிற் குற்றஞ்சாட்டுதல்.

Entr'acte, *m.* நாடகப் பிரிவினிடை,— இடையாடல் பாடல்.

s'Entr'admirer, *v. pr.* ஒருவர் மற்றவரைக் கனமாய் மதித்தல், —வியப்புறுதல்.

s'Entr'aider, *v. pro.* ஒருவர் ஒருவர்க் குதவிசெய்தல், அந்நியோந்நிய உதவி பண்ணுதல்.

Entrailles, *f. pl.* குடல், குடர். || பக்ஷம், நேசம், கரிசனம், இரக்கம்,உருக்கம். || உள், உள்ளம், உள்ளந்தரம், ஆழ்ந்த விடங்கள் : avoir des — உருக்க குணங்கொண்டிருத்தல்.

s'Entr'aimer, *v. pro.* ஒருவர் ஒருவரை நேசித்தல்.

Entrain, *m.* எளிதான நடை, வேகம், உற்சாகம், களிப்புள்ள—, இணக்கருணம்.

Entraînable, *adj.* வேகமாய் இழுக்கப்படச் சுலபமான.

Entraînant, *part.* இழுக்கிற, இணக்குகிற, இழுப்பான,— உள்ள, வேகமுள்ள.

Entraînement, *m.* இழுப்பு, வேகம், பலம், முயற்சி. || பெலன்—, வேகமிடுதல்.

Entraîner, *v. a.* இழுத்தல், கட்டாயமாய்—, வேகமாயிழுத்தல், பலவந்தமாய்—, இழுத்துக்—, வாரிக்கொண்டுபோதல், ஈர்த்தல், வலித்தல். || இணக்குதல், தூண்டுதல், ஏவுதல். || வருவித்தல், உண்டாக்குதல், ஏதுவாய்—, காரணமாயிருத்தல். || பலப்பித்தல், பெலன்—, வேகமிடுதல். || s'—ஒருவரொருவரை யிழுத்தல் ......, இழுக்கப்படுதல்.

Entraîneur, *m.* (குதிரைக்கு) பெலன் —, வேகமிடுகிறவன், இழுக்கிறவன்.

Entrait, *m.* இருவிட்டம் பிணைக்குமரம், மறுமாடி.

Entrant, *part.* பிரவேசிக்கிற, நுழைகிற, இணக்குகிற.

s'Entr'appeler, *v. pro.* ஒருவரொருவரை யழைத்தல்.

Entrave, *f.* தளை, கால் விலங்கு, காற்பந்தம்,— பூட்டு,-- கயிறு, தொழு, தொடங்கு, புணை, குட்டை, மாச்சு. || விக்கினம், தடை.

Entraver, *v. a.* தடுத்தல், தடை—, விக்கினஞ்செய்தல்,— ஆதல், மறித்தல், தவிர்த்தல். || தளை—, விலங்கு போடுதல்.

s'Entr'avertir, *v. pro.* ஒருவர் ஒருவருக்கறிவித்தல்.

Entre, *prép.* உள்ளே, உள்ளாக, இடையில், நடுவில், இல், இடத்தில் : un d'—eux அவர்களில்—, அவர்களுக்குள்ளே ஒருவன் ; regarder — les deux yeux உற்றுப்பார்த்தல் ; — les deux மத்திபமாய் ; — deux vins கொஞ்சம் வெறியுள்ள ; — autres மற்றவர்களுக்குள்ளே, அவர்களுக்குள்ளே, விசேஷமாய். || சேர்க்கைச் சொற்களில் entre என்பது அந்நியோந்நியம் — குறைவு — கொஞ்சங் குறிக்கும்.

Entre-bâillement, *m.* entre-bâiller, *v. a.* கொஞ்சந்திறத்தல். ‖ *v. n. et* s'— கொஞ்சந் திறந்துபோதல், — திறந்திருத்தல்.

s'Entre-baiser, *v. pro.* ஒருவர் ஒருவரை முத்திசெய்தல்.

s'Entre-battre, *v. pro.* ஒருவர் ஒருவரை யடித்தல்.

s'Entre-blesser, *v. pro.* ஒருவர் ஒருவரைக் காயப்படுத்துதல்.

Entrechat, *m.* நடனநடை, கால்கள் வேகமாய்க் குறுக்கிட்டுக்கொள்ளுகிறதுள்ளு.

s'Entre-choquer, *v. pro.* ஒருவர் ஒருவரைத் தாக்குதல், — மோதுதல், முட்டிக்கொள்ளுதல், ஒன்றுக்கொன்று மோதுதல்,— எதிர்த்தல்.

Entre-colonne, Entre-colonnement, *m.* இரு தூணிடை.

Entrecôte, *m.* இரு விலாவெலும்பினிடை,— இடைக் கறி.

Entrecoupé, *part.* இடை இடையாய் நிறுத்திய,— தடுக்க — பிரிக்க — பகுக்கப்பட்ட, இடை யிடையிற் கலந்த,— வெட்டப்பட்ட.

Entrecouper, *v. a.* இடை யிடையாய் வெட்டுதல்,— தடுத்தல்,— நிறுத்துதல், — கலத்தல், — பரப்புதல், — வெட்டிக் கூட்டுதல். ‖ s'— ஒருவர் ஒருவரை யறுத்தல்,— தடுத்தல், (குதிரை) கால்கள் தட்டிக்கொண்டு காயப்படுதல்.

Entrecoupure, *f.* இடை யிடையான அறுப்பு, இடைவிட்ட வெட்டு.

Entre-croisement, *m.* entre-croiser, *v. a.* பலபக்கமாய்க் குறுக்கிடும்படிச்செய்தல், ‖ s'Entre-croiser, *v. pro.* ஒன்றுக்கொன்று குறுக்கிட்டுக்கொள்ளுதல்.

Entre-cuisse, *m.* துடைகளுக்கிடையிலுள்ள பாகம்.

s'Entre-déchirer, *v. pro.* ஒருவர் ஒருவரைக் கிழித்தல்.

s'Entre-détruire, *v. pro.* ஒருவர் ஒருவரை யழித்தல்.

Entre-deux, *m.* இடை, நடு, மையம், மத்திபம். ‖ இரு புடைவையிடையில் தைத்த சல்லாக்கச்சு, இரு சன்னவிடைமேசை முதலியது. ‖ *adv.* நடுவில், மத்திபமாய்.

s'Entre-dévorer, *v. pro*, ஒருவர் ஒருவரை விழுங்குதல்.

s'Entre-donner, *v. pro.* ஒருவரொருவருக்குத் தருதல்.

Entrée, *f.* பிரவேசம், நுழைதல், நுழை, வருகை, சேருதல், ஆடம்பர பிரவேசம், ஊர்க்கோலம், (பட்டத்துக்கு) ஏற்படுதல், சபையிலுட்படுதல், பிரவேச சுதந்திரம், பிரவேசிக்கிற நேரம், — விதம். ‖ நகரப்பிரவேசத் —, தீர்வை. ‖ வாயில், வாசல், வழி, வாய், இடம். ‖ துவக்கம், ஆரம்பம், சமயம். ‖ முதல் பதார்த்தம். ‖ பூட்டின் வாய் : faire son — பிரவேசம் பண்ணுதல், பிரவேசித்தல் ; — d'une maison வீட்டின் வாயில் ; d'entrée, d'entrée de jeu முந்த, உடனே.

Entrefaite, *f.* Entrefaites, *f. pl.* சமயம் : sur ces — அச்சமயத்தில், அதுக்குள்ளாக.

Entrefilet, *m.* பத்திரிகையில் சிறு சமாச்சார விஷயம்.

s'Entre-frapper, *v. pro.* ஒருவர் ஒருவரை யடித்தல்.

Entregent, *m.* சூக்ஷ நடக்கை, சூக்ஷம்.

s'Entr'égorger, *v. pro.* ஒருவர் ஒருவரைக் கொல்லுதல்.

s'Entre-haïr, *v. pro.* ஒருவர் ஒருவரைப் பகைத்தல்.

s'Entre-heurter, *v. pro.* ஒருவரொருவரை முட்டிக்கொள்ளுதல்.

Entrelacé, *part.* பின்னலான, தெற்றிக்கொண்ட.

Entrelacement, *m.* பின்னல், சிக்கு, தெற்றல்.

Entrelacer, *v. a.* பின்னுதல், தெற்றுதல், தொடுத்தல், முடைதல், கலத்தல். ‖ s'— பின்னுதல், பின்னி—, தெற்றிக்கொள்ளுதல்.

Entrelacs, *m. pl.* பின்னிய சிற்பவணிகள்.

Entrelardé, *part.* கொழுப்புஞ் சதையுங் கலந்த.

Entrelarder, *v. a.* அங்கங்கே பன்றிக்கொழுப்பு —, பல பதார்த்தங்களைக்—, கூட்டுதல், கலத்தல்.

Entre-ligne, *m.* இரு வரியினிடை. *V.* Interligne.

s'Entre-louer, *v. pro.* ஒருவரொருவரைப் புகழ்ந்துகொள்ளுதல்.

Entre-luire, *v. n.* அரைவாசி பிரகாசித்தல்.

s'Entre-manger, *v. pro.* ஒன்றொன்றைத் தின்றல்.

Entremêlement, *m.* Entremêler, *v. a.* உள்ளே —, கலத்தல், கூட்டுதல், கலந்துபோடுதல், இசைத்தல். || s' — கலந்துபோதல், நுழைதல், மத்தியஸ்தனாதல்.

Entremets, *m.* இடைப்பதார்த்தம்.

Entremetteur, *m.* மத்தியஸ்தன், தூதன், தரகன், பிரதியாள்.

Entremetteuse, *f.* தூதி, சங்கம் வாங்கி.

s'Entremettre, *v. pro.* மத்தியஸ்தனாதல், நடுவாதல், உதவிசெய்தல், தலையிடுதல், நுழைதல்.

Entremise, *f.* மத்தியஸ்தம், உதவி, மூலம், வழி: par son — அவன் வழியாய், — மூலமாய்.

Entre-nœud, *m.* இருகணுவினிடை.

s'Entre-nuire, *v. pro.* ஒருவர் ஒருவருக்குத் தின்மைசெய்தல்.

Entrepas, *m.* ஓர்வித வல்கிதம், மத்திமகதி.

s'Entre-percer, *v. pro.* ஒருவன் ஒருவனைக் குத்துதல், — உருவுதல்.

Entre-pilastre, *m.* இரண்டு தூண்களுக்குமுள்ள இடைவெளி.

Entrepont, *m.* இருதட்டினிடை.

Entreposage, Entreposer, *v. a.* கிடங்கில் வைத்தல்.

Entreposeur, *m.* சரக்குக்கிடங்குடையவன், கிடங்குவிசாரணைக்காரன், அரமனைக்கிடங்கின் சரக்குகளை விற்பவன்.

Entrepositaire, *s.* கிடங்கிற் சரக்குகளை வைத்திருப்பவன், — வள்.

Entrepôt, *m.* சரக்குக்கிடங்கு, பண்டகசாலை, தீர்வைகொடுக்குமட்டுஞ் சரக்குபோடுமிடம், அரமனைக்காக விற்கும் சரக்குக்கிடங்கு, — களஞ்சியம், திரும்பியேற்றுமட்டுந் தீர்வையின்றிச் சரக்குவைக்குந்துறை: ville d'— பலபட்டணவியாபாரத்து நடுவாந்தரநகரம்; — de tabac அரமனைப் புகையிலைவிற்குங் கடை.

s'Entre-pousser, *v. pro.* ஒருவன் ஒருவனைத் தள்ளுதல்.

Entreprenant, *part.* துணிவு —, துணிகரமுள்ள, எந்தமுயற்சிக்குந் துணிகிற, ஏற்படுகிற, ஏற்பாட்டுக்காரன்.

Entreprendre, *v. a.* ஏற்படுதல், துணிதல், துவக்குதல், ஆரம்பித்தல், தலை —, கையிடுதல், உடன்படுதல், சுமந்துகொள்ளுதல். || பழித்தல், கடிதல், தொந்தரை செய்தல். || கலக்குதல், தடை —, நோய்ப்படுத்துதல், திமிர்ப்பித்தல், முடமாக்குதல். || — sur அபகரித்தல், அழிக்கத்தேடுதல், — பிரயத்தனஞ்செய்தல், விரோதஞ்செய்தல்.

Entrepreneur, *m.* — euse, *f.* தலைப் —, ஏற்படுகிறவன், ஏற்படுத்துகிறவன், உடன்படுகிறவன், ஏற்பாட்டுக்காரன், குத்தகைக்கு வேலையெடுக்கிறவன், — ஏற்றுக்கொள்ளுகிறவன், — வள், வேலைத்தலைவன்.

Entrepris, *part.* ஏற்படுத்தப்பட்ட, துவக்கின, எடுத்த. || சிக்கின, திமிர்த்த, முடமான, நோவுப்படுகிற.

Entreprise, *f.* ஏற்பாடு, ஏற்படுத்துதல், கருதினவேலை, கருமம், அலுவல், செய்கை, சுமந்தகடன், குத்தகைவேலை, — யாகச்செய்தல், அரமனைவேலை செய்வதற்கு ஒப்பந்தம். || அபகரிப்பு, பலவந்தமான அநீதம், அநியாயமான ஏற்பாடு: faire exécuter par — குத்தகையாகச் செய்வித்தல்.

s'Entre-quereller, *v. pro.* ஒருவர் ஒருவரோடே சச்சரவுசெய்தல்.

Entrer, *v. n.* பிரவேசித்தல், நுழைதல், உள்ளேபோதல், உட்புகுதல், உட்படுதல், உள்ளாதல், அடங்கி —, கலந்திருத்தல், இருத்றல், உண்டாதல், வருதல். || உடன்படுதல், இணங்குதல், அமைதல். || துவக்குதல், ஆரம்பித்தல், தலையிடுதல். || உதவுதல், பிரயோகிக்கப்படுதல். || ஆராய்தல், விசாரித்தல்: faire — பிரவேசிப்பித்தல், நுழைவித்தல்; — dans les motifs காரணங்களையாராய்தல், — பரிசோதித்தல்; — en religion மடத்திலுட்படுதல், சந்நியாசியாதல்; — au service ஊழியன் —, சேவகனாதல்; — en condition, ஊழியக்காரனாதல்; — en comparaison, en parallèle ஒப்பனையிடப்படுதல்; — en matière காரியத்தைப் பேசத்துவக்குதல்; — en composition சமாதானப் பேச்சுக்கு இணங்குதல்; — en colère கோபமாதல்; — en furie கோபவெறிகொள்ளுதல். || *v. a.* பிரவேசிப்பித்தல், நுழைத்தல், நுழைவித்தல்.

Entre-rail, *m.* இரண்டு இரயில்கம்பிகளுக்குமுள்ள இடைவெளி.

Entre-regarder, *v. a.* அங்கங்கே —, இலேசாய் —, உள்ளேபார்த்தல். || s'— ஒருவர் ஒருவரை நோக்குதல்.

s'Entre-secourir, *v. pro.* ஒருவர் ஒருவர்க் குதவிசெய்தல்.

Entresol, *m.* இருதளத்துக்குள்ளறை.

s'Entre-suivre, *v. pro.* ஒருவர் ஒருவரைப் —, ஒன்றுக்கொன்று பின்செல்லுதல். [சான கீறு.

Entretaille, *f.* நடனநடை, இலே

s'Entre-tailler, *v. pro.* கால்காலோடு தேய்தல், கால்களைத் தட்டிக்கொண்டு காயப்படுதல்.

Entretaillure, *f.* கால்காலோடு தேய்ந்த காயம்.

Entre-temps, *m.* நடுவாந்தரம், இடைநேரம்.

Entretènement, *m.* சவரட்சணை, அன்னவஸ்திரம்.

Entreteneur, *m.* (ஓர் ஸ்திரீயை) வைத்திருக்கிறவன்.

Entretenir, *v. a.* காப்பாற்றுதல், ஆதரித்தல், நிறுத்துதல், நிலைப்பித்தல், ஸ்திர —, நிலைப்படுத்துதல். || சவரட்சணைபண்ணுதல், வளர்த்தல், பேணுதல், போஷித்தல், பராமரித்தல், விசாரித்தல், அன்னவஸ்திரங்கொடுத்தல், பிழைப்பித்தல், வைத்திருத்தல். || தாங்குதல், பிடித்தல், செப்பனிடுதல், பழுதுபார்த்தல். || கூடப்பேசுதல், சம்பாஷித்தல் ; — une femme ஓர் ஸ்திரீயை வைத்திருத்தல் ; — quelqu'un de religion வேதத்தைக்குறித்து ஒருவனோடே பேசுதல். || s'— ஒன்றுக்கொன்று ஆதாரங்கொடுத்தல், — ஆதல், காப்பாற்ற —, நிலைப்பிக்கப்படுதல், நிலைபெறுதல், நிலைத்தல், பிழைத்தல், தனக்குச் சம்பாதித்து — வாங்கிக்கொள்ளுதல், — வேண்டியதை வாங்குதல், பேசிக்கொள்ளுதல், இசைதல்.

Entretenu, *part.* காப்பாற்ற —, வைக்கப்பட்ட.

Entretien, *m.* காப்பாற்றுதல், பரிபாலனம், பரிமாரிப்பு, சவரட்சணை, வளர்ப்பு, போஷிப்பு, அன்னவஸ்திரம், பிழைப்பு, வேண்டிய —, செலவு, சேமம். || தனிப்பேச்சு, சம்பாஷணை.

Entretoile, *f.* சீலையிடைக்கவணி.

Entretoise, *f.* அணைமரக்கட்டை.

Entretoisement, *m.* entretoiser, *v. a.* அணைமரக்கட்டையை நிறுத்திவைத்தல்.

s'entre-tuer, *v. pro.* ஒருவர் ஒருவரைக் கொல்லுதல்.

s'Entre-visiter, *v. pro.* ஒருவரொருவரைப்போய்த் தரிசித்தல்.

Entre-voie, *f.* இரண்டு இருப்புப்பாதைகளுக்குள்ளடங்கிய நிலப்பாகம்.

Entrevoir, *v. a.* இலேசாய்க் —, கொஞ்சங் —, தூரத்திற்காண்டல், — பார்த்தல், — கண்டுபிடித்தல், உத்தேசித்தல் ; laisser — இலேசாய்க் காணவிடுதல், சாடையாய்க்காட்டுதல். || s'— ஒருவர் ஒருவரைச் சந்தித்தல்,— கொஞ்சநேரம்பார்த்தல்,— கண்டுபேசுதல்.

Entrevous, *m.* (கைம்மரங் கம்பமுதலியவற்றின்) இடை உள்ளந்தரம், அதில் பூசினசாந்து.

Entrevoûter, *v. a.* சாந்துபூசிய வில்வளைகட்டுதல். [ஷணை, சந்திப்பு.

Entrevue, *f.* கண்டுபேசல், சம்பா

s'Entr'obliger, *v. pro.* ஒருவர்க்கொருவர் உபகாரஞ்செய்துகொள்ளல்.

Entr'ouvert, *part.* கொஞ்சங் —, பாதி திறந்த, பின்னங்கால் சுளுக்கின (குதிரை).

Entr'ouverture, *f.* பின்னங்காற்சுளுக்கு, — கால்சுளுக்கின நோவு.

Entr'ouvrir, *v. a.* கொஞ்சங் —, பாதி திறத்தல், பிளத்தல். || s'— கொஞ்சங் —, பாதி திறப்பாதல், பிளந்துபோதல், வெடித்தல், கொஞ்சம் விள்ளுதல்.

Enture, *f.* ஒட்டவைக்குமிடம், ஓர் மரத்திற் கடாவினபழு.

Énucléation, *m.* Énucléer, *v. a.* சரீரத்தின் ஓர் உள்ளவயவத்தை எடுத்துப்போடுதல், பழத்தின் பருப்பை நீக்கிப்போடுதல்.

Énumérateur, — trice, *s.* எண்ணுகிறவன், விவரிக்கிறவன், — வள்.

Énumératif, *adj.* எண்ணுதற்குரிய.

Énumération, *f.* கணக்கு, எண்ணுகை, எண்.

Énumérer, *v. a.* எண்ணுதல், எண்ணிக்காட்டுதல், விவரித்தல், ஒவ்வொன்றாய் —, விவரித்துச் சொல்லுதல்.

Envahir, *v. a.* பலவந்தமாய்ப், — பிடித்தல், அபகரித்தல், பறித்தல், தன்வசப்படுத்துதல், மேல்விழுதல், எல்லைக்கூட்டுதல், கும்பலாய்வருதல்; les eaux — தண்ணீர்பாய்ந்து மூடுதல்.

Envahissement; *m.* பலவந்தமாய்த் தன் வசமாக்குதல், அபகரிப்பு, அநியாயமான பறிப்பு, பாய்ந்துபிடித்தல்.

Envahisseur, *m.* ஷை தன்வசமாக்குகிறவன், அபகரிக்கிறவன், பறிக்கிறவன்.

Envasement, *m.* s'**Envaser**, *v. n.*

Envaser, *v. a.* சேற்றால் நிறப்புதல்.

Enveillotage, *m.* **Enveilloter**, *v. a.* சிறு குவியலாக்குதல்.

Enveloppe, *f.* மூடி, ஓடு, கூடு, உறை, மறைவு, சுருள், சுருணை, போர்வை, மேல்விலாசம். || சாயல், கோலம், புறம், தோற்றம், ஆதாரமான அலங்கம்; —d'une lettre காகிதத்தின் உறை; —florale பூவை மூடுமடல்; —séminale விதையின் கூடு.

Enveloppement, *m.* சுருட்டுதல், சுற்றுதல், மறைத்தல், மூடுதல், அடைத்தல்.

Envelopper, *v. a.* சுருட்டுதல், சுற்றுதல், சுற்றிப்போடுதல், — க்கட்டுதல், —வளைத்தல், சூழ்தல், அடைத்தல், வளைத்தல், உள்ளே அடக்குதல். || மூடுதல், மறைத்தல், ஒளித்தல். || சிக்குப்படுத்துதல், கலக்குதல். || இருட்டுதல், இருளாக்குதல். || அகப் —, உட்படுத்துதல்;—quelqu'un dans sa ruine தன் கேட்டுக்குள் ஒருவனை யகப்படுத்துதல். || s'—தன்னை மூடுதல், — சுற்றுதல், சுற்றி —, போர்த்து —, போர்த்திக்கொள்ளுதல், மறைக்கப்படுதல், மறைதல், ஒடுங்குதல்.

Envenimer, *v. a.* விஷமிடுதல், நஞ்சுபோடுதல், எரிவாக்குதல், தீதாகப் புரட்டுதல், கோபம் —, எரிச்சலாக்குதல், பகைப்படுத்துசல், அதிகரிப்பித்தல். || s'— விஷம் —, தின்மை —, எரிச்சல் —, எரிவாதல், அதிகரித்தல்.

Enverger, *v. a.* அலரிக்கிளையால் வளைத்தல்.

Enverguer, *v. a.* பருமலுக்குப்பாய் [கட்டுதல்.

Envergure, *f.* பாய்கட்டும் வகை. பாயகலம், விரிந்த இறகுகளின் —, இறகுநீட்சி.

Envers, *prép.* மட்டில், பேரில், மேல், குறித்து.—et contre tous, யாவருக்கும் விருத்துவமாய், எவரையும் சட்டைபண்ணாமல்.

Envers, *m.* (புடைவையின்...) பின்புறம்,—பக்கம்: à l'— *adv* பின்புரமாய், திருப்பி, எதிர்ப்பக்கம் —, எதிரர்த்தம் —, தாறுமாறாய்: tête à l'— புத்திதப்பின — கலங்கின தலை.

à l'**Envi**, *adv.* போட்டியாய், இகலாட்டமாய்: — l'un de l'autre இருவரும் போட்டியாக.

Enviable, *adj.* ஆசைக்கு —, காய்மைக்குரிய.

Envie, *f.* காய்மகாரம், காய்மை, பொறாமை, அழுக்காறு, ஔவியம். || ஆசை, விருப்பம், மனசு. || தேவை, அவசரம். || கர்ப்பிணியின் மதியற்ற விருப்பம். || பிறவித்தேமல், மச்சம். || நகப்பக்கத்து —, நகப்பிசிர்: porter—à பேரில் காய்மகாரப்படுதல்; exciter l'— காய்மகாரம் வருவித்தல் — எழுப்புதல்; faire —, donner—ஆசைவருவித்தல்; avoir — ஆசித்தல், அவசரப்படுதல்.

Envié, *part.* ஆசிக்கப்பட்ட, காய்மகாரத்துக்கேதுவான.

Envieillir, *v. a. et n.* கிழமாக்குதல், பழசாதல்.

Envier, *v. a.* (பேரில்) காய்மகார —, பொறாமைப்படுதல், அழுக்காறடைதல், காய்மைகரித்தல். || மறுத்தல், பறித்தல். || ஆசித்தல், விரும்புதல், இச்சித்தல், மறித்தல், ஆசவேண்டாமென்றிருத்தல்.

Envieux, — euse, *adj.* காய்மகாரமுள்ள, பொறாமை —, காய்மை —, அழுக்காறுள்ள,— ப்படுகிற. || *s.* காய்மகாரக்காரன், — காரி.

Enviné, *adj.* இரசவாசனையுள்ள.

Environ, *prép.* ஏறக்குறைய, ஏற்றக்குறைச்சல், கிட்டத்தட்ட, — முட்ட.

Environnant, *part.* சுற்றுகிற, சூழுகிற, அடுத்த, சமீபமான.

Environner, *v. a.* சூழ்தல், சுற்றுதல், வளைத்தல், அடைத்தல், சுற்றிக்—, சூழ்ந்துகொள்ளுதல், சுற்றிலுங் கட்டுதல், கோலிவருதல்.

Environs, *m. pl.* சுற்றுப்புறம், —த்தலங்கள், அடுத்தவிடங்கள்.

Envisager, *v. a.* நோக்குதல், உற்

றுப்பார்த்தல், முகமுகமாய் —, நேராய் —, நேரிட்டுப்பார்த்தல். || யோசித்தல், ஆராய்தல், விசாரித்துக்கொள்ளுதல். || s'— ஒருவர்ஒருவரை நோக்குதல், யோசிக்கப்படுதல், தன்னையெண்ணுதல்.

Envoi, *m.* அனுப்புதல், அனுப்பினது, அனுப்பின சரக்குகள், தூது, ஸ்தானாபதிக்கம். || புஸ்தகமொப்புக்கொடுக்குநிருபம், — பாட்டு ; lettre d'—அனுப்பினதையறிவிக்குங் காகிதம் : faire un — (சரக்குகளை) அனுப்புதல் ; — en possession வசமாக்குந் தீர்வை.

s'Envoiler, *v. pro.* வளைதல்.

Envoisiné, *part.* அசலாருள்ள.

Envoisiner, *v. a.* அசலாரைக் கொடுத்தல்.

Envolée, *f.* பறந்துபோதல், காற்றினால் கொண்டுபோகப்படுதல்.

Envolement, *m.* s'Envoler, *v. pro.* பறந்துபோதல், பறந்தோடுதல், காற்றினால் கொண்டுபோகப்படுதல், தீவிரமாய் ஓடுதல், — அகலுதல், சீக்கிரங் கடந்து — காணாமற் — ஓடிப்போதல்.

Envoûtement, *m.* Envoûter, *v. a.* சூனியஞ்செய்யச்சுடுதல், — பீறுதல்.

Envoyé, *part. et s.* அனுப்பப்பட்ட, — பட்டவன், தூதன், தூதாள், ஸ்தானாபதி, அனுப்பின ஆள், காரியஸ்தன்.

Envoyer, *v. a.* அனுப்புதல், செலுத்துதல், போகவிடுதல். || நீக்குதல், துரத்துதல். || ஏவுதல், ஏவிவிடுதல், நடப்பித்தல், கட்டளையிடுதல். || எறிதல், எய்தல், தள்ளுதல் : -- chercher அழைப்பித்தல், தேட அனுப்புதல் ; — des cris vers le ciel வானத்தைநோக்கிக் கூவுதல். || s'— அனுப்பப்படுதல், ஒருவனொருவனுக்கு அனுப்புதல்.

Envoyeur, *m.* அனுப்புகிறவன்.

Enwagonner ou envagonner, *v. a.* வண்டியில் போடுதல்.

Éole, *m.* வாயு, காற்றின் பொய்த்தேவன்.

Éolide, Éolie, *f.* (அர்ஷிப்பெல் கடலின் கீழ்க்கரையில்) எவொலிது —, எவொலிநாடு ; Éoliens, *m. pl.* ஷை நாட்டார் ; Éolien, Éolique, *adj.* ஷை நாட்டு : lyre —, harpe éolienne ஷை நாட்டு யாழ், காற்று இன்னிசையிடுவிக்கிற நரப்பு எந்திரம் ; îles éoliennes, எவொலியன் —, லிப்பாரிதீவுகள்.

Éolipyle, *m.* சிறு குழலுள்ள செப்புண்டை, புகையகற்றும் எத்தனம்.

Épacte, *f.* எப்பாக்டாவென்கிற கணக்கக்ஷரம், சந்திரவருஷத்தைவிடச் சூரியவருஷத்துக்குண்டாகிற சொச்சநாளிலக்கம் ஒவ்வோர் வருஷத்துக்கு-௰௧-நாளாகையால் இதை முந்தின வருஷத்தின் எப்பாக்டாவுக்குக் கூட்டி முப்பதுக்கதிகமானால் முப்பதுகழித்து நிற்கிற கணக்கக்ஷரம் புதுவருஷத்தின் எப்பாக்டாவாகும், இது சனவரிமாதமுதற்கொண்டு சந்திரதிதியைக் குறிக்கிறதுக்குதவும், மேலும் சீமைப் பஞ்சாங்கத்திலே ஷை இலக்கமுள்ளதேதி யமாவாசியாகும்.

Épagneul, *adj. et s.* நெடுமயிருந் தொங்குகிற காதுமுள்ள, — உள்ள வேட்டைநாய்.

Épagomène, *adj.* வருஷமுடிவிற் கூட்டிய (நாள்).

Épais — sse, *adj.* அடர்ந்த, தடித்த, தடிப்பான, கனமுள்ள, கனத்த, பருத்த, பரும், உறைந்த, அழுத்தம் —, அடர்த்தியான, செறிந்த, கடுத்த, நெருக்கம் —, மந்தமான : mur —, அகலமானசுவர் ; nuit — இருண்டராத்திரி ; esprit — மந்தபுத்தி ; forêt — அடர்ந்தகாடு. || *adv.* அடர்த்தியாய். || *m. ou*

Épaisseur, *f.* கனம், பருமம், தடிப்பு, அடர்த்தி, கடுத்தம், செறிவு, நெருக்கம், மந்தம், கனப்பு.

Épaissi, *part.* தடித்த, தடிப்பான.

Épaissir, *v. a.* தடிப்பித்தல், தடிப்பு —, கனம் —, மந்தமாக்குதல், உறைவித்தல், தடிக்கச்செய்தல், இறுக்குதல், அடர்த்துதல், இறுக்கம்—, கடுத்தமாக்குதல். || *v. n. et* s'—தடித்தல், உறைதல், இறுகுதல், தடிப்பாதல், அடர்தல், பருத்தல், திரளுதல், மந்தமாதல்: la langue s'— நாக்கு தடித்தல், — சிக்குப்படுதல்.

Épaississement, *m.* தடித்தல், தடிப்பு. உறைவு, அடர்தல், கனப்பு.

Épamprement, *m.* Épamprer, *v. a.* கொடி முந்திரிகையில் மிஞ்சின தழைகழித்தல்.

Épanché, *part.* சிந்தின, தவறின, பரம்பின, திறந்த.

Épanchement, *m.* சிந்துதல், சிந்தி —, சிதறிப்போதல், சொரிவு, பொழிவு, வார்ப்பு, வடிதல். || (தகாதவிடத்தில்)

சிதறித் திரளுதல், பரம்புதல், வெளிப்படல் : — de cœur தன் மனந் திறத்தல்.

Épancher, *v. a.* வார்த்தல், ஊற்றுதல், சிந்துதல், வடித்தல். || திறத்தல், வெளிப்படுத்துதல். || s' — சிந்துதல், வடிதல், வழிதல், பரம்புதல், சிதறுதல், தன் மனந் திறத்தல்,— வெளிப்படுத்துதல்,

Épandage, *m.* எருப் பரப்புதல்.

Épandre, *v. a.* பரப்புதல், சிந்துதல், தூவுதல், தெளித்தல், சிதறிப்போடுதல், பாய்ச்சுதல், ஊற்றுதல், வீசுதல். || s'— பரப்புதல், பரவுதல், சிந்துதல், பாய்தல்.

Épanorthose, *f.* முன் சொன்னதை மறுத்தாற்போல அதிக பலமாய்ச் சொல்லுதல்.

Épanouir, *v. a.* மலர்வித்தல், மலர்த்துதல், அலர்த்துதல், விரித்தல், திறத்தல் : — la rate மண்ணீரலை விரித்தல். களிப்பித்தல். || s'— மலருதல், அலருதல், விள்ளுதல், விரிதல், மகிழ்தல், தெளிதல், பிரசன்னமாதல்.

Épanouissement, *m.* மலர்தல், மலர்வு, மலர்ச்சி, அலர்ச்சி, விள்ளுதல். || அகமகிழ்ச்சி, களிப்பு, பிரசன்னம் : — de rate மிக்க களிப்பு.

Éparchie, *f.* ஜில்லா, மேற்றிராசனம்.

Épargne, *f.* செலவொடுக்கம், செலவொறுப்பு, செலவழியாமை, மட்டான செலவு, செலவொறுப்பினாற் சேர்த்த பணம், — வந்த பலன், பொதுப் பொக்கிஷம் : caisse d' — சின்ன பணத்தொகை சேர்த்துவைக்கும் பெட்டி, — வட்டியாக வைக்குந் தர்மசாலை ; — de temps கால க்ஷேமம், வீணில் நேரஞ் செலவழியாமை: — de maux பொல்லாப்பு —, தின்மை —, துன்பக் குறை,— விலக்கு.

Épargner, *v. a.* ஒறுத்தல், செலவொடுக்குதல், செலவு குறைத்தல், மட்டாய்ச் செலவழித்தல், — இடுதல், செலவழியாதிருத்தல், ஒடுக்குதல், பிசுனித்தனம் —, மட்டுபண்ணுதல், சேர்த்துக்கொள்ளுதல், சேமித்தல், காப்பாற்றுதல், குறைத்தல். || விலக்குதல், விலக்கிவிடுதல், நீக்குதல், ஒழித்தல், வராதபடி செய்தல், தப்புவித்தல், தொடாதிருத்தல். || தின்மை—, ஆக்கினை செய்யாதிருத்தல், அதிகரிப்பியாதிருத்தல், பொறுத்தல், பேணுதல், இளக்காரமாய் —, தயவாய் நடப்பித்தல், வருத்த —, கஸ்திப்படுத்தாதிருத்தல் , — sa peine தன் வருத்தங்குறைத்தல் ; — le temps வீண் காலக்ஷேபம் பண்ணுதிருத்தல் ; — une peine ஓர் கஸ்திவிலக்குதல், — தப்புவித்தல். || s'— வருத்தப்படாதிருத்தல், விலகுதல், தவிர்தல், தன்னைப் பேணுதல், ஒருவன் ஒருவனைத் தயவாய் நடப்பித்தல், பிசுனித்தனத்தால் வேண்டிய செலவு செய்யாதிருத்தல் ; s'— des chagrins தனக்குக் கஸ்திவராதபடி செய்தல்.

Éparpillement, *m.* பரப்புதல், சிதறிப்போடுதல், சிதாவு, சிதறுதல், குலைவு : — des rayons, de la lumière கதிர் — பிரகாச விரிவு.

Éparpiller, *v. a.* பரப்புதல், அங்கங்கே பிரித்தல், சிதறிப்போடுதல், சிதறடித்தல், கலைத்தல். || s'— அங்கங்கே சிதறிப்போதல், பரம்புதல்.

Éparque, *m.* ஜில்லா அல்லது மேற்றிராசனத்தின் தலைவர்.

Épars, *adj.* குலைந்த, கலைந்த, அலைகிற, அங்கங்கே பரம்பின, — சிதறின.

Épart, *m.* பண்டியினிரு ஏர்க்காலிணைக்கு மரத் துண்டு, (எஸ்பஞ்தேசத்து) ஓர் நாணல்.

Éparvin, *m.* குதிரைத் தொடைக் கழலை,— வீக்கம்,— நோய்,— சூலை.

Épatant, *adj.* மிக அதிசயிக்கத்தக்க, மகா ஆச்சரியமான.

Épaté, *adj.* சப்பட்டையான, தட்டையான. || கால்—, பாதமுடைந்த (பாத்திரம்.)

Épater, *v. a.* (பளிங்குப்பாத்திரத்தின்) பாத முடைத்தல். || s'— பளுவாய்த் தரையில் விழுதல்.

Épaulard, *m.* வேளாச்சுரு, ஓர் பெரிய மீன்.

Épaule, *f.* தோள், புசம், புயம், வாகு : coup d'— ஒத்தாசை ; donner un coup d'— தோள் கொடுத்தல், உதவி செய்தல் ; — d'un bastion கொத்தளத்தின் பக்கம் ; — de mouton ஆட்டுத் தோள், தச்சன் பெரிய கண்டகோடாலி ; hausser les —. அவமதிப்பைக் காண்பித்தல்.

Épaulée, *f.* தோளால் தள்ளல்: faire par — பலவிசையில் —, அசட்டையாய்ச் செய்தல்.

Épaulement, *m.* மட்கொத்தளம், அணைக்கட்டு தாங்குஞ் சுவர், தாங்கி. ‖ இருகாடிக்குள் ளந்தரம், காடியின் பக்கம். ‖ கழுந்தினால் வேறே கட்டை மேல்தங்குங் கட்டை.

Épauler, *v. a.* தோளுடைத்தல், — சுளுக்கச்செய்தல். ‖ (துபாக்கியை) தோளில் தாங்குதல்,— தங்கவைத்தல். ‖ உதவி செய்தல், ஆதரித்தல். ‖ மட்கொத்தளத்தால் ஆதரித்தல், ‖ கழுந்தின் கனங் குறைத்தல். ‖ s'— தோளுடைதல், — சுளுக்குதல், ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்தல், மரம் ஓர் பக்கத்திற் பட்டு வேறேபக்கத்திற் செழித்தல்.

Épaulette, *f.* சட்டைத் தோள், கிம்புரி, தோளணி, வாகுவலயம். ‖ மரப் பக்கத்து வெட்டு.

Épaulière, *f.* தோள் கவசம்.

Épave, *adj.* சிதறிப்போன, எசமானற்ற. ‖ *f.* சிதறினது, தவறினது, கடலின் கழிவு, கடலெறிந்து விட்ட சாமான்: droit d'— ஷை சாமான்களை எடுத்துக்கொள்ளுஞ் சுதந்தரம்.

Épeautre, *m.* உமியோடொட்டிய கோதும்பை.

Épée, *f.* போர்க்கத்தி, கத்தி, வாள், பட்டயம், துவத்தி, சுரிகை. ‖ போர்ச் —, சேவகம்,— தொழில். ‖ வீரம், வீர சூரம்: tirer l'— வாளுருவுதல், சண்டை செய்தல், — துவக்குதல்; bonne — நல்ல கத்தி, சண்டையிற் கெட்டிக்காரன்; à la pointe de l'— மிகுந்த கஷ்டத்துடன், பெருத்த பிரயாசத்துடன்.

Épeiche, *f.* சிவந்த மரங்குத்தி.

Épeler, *v. a.* Épellation, *f.* எழுத்து கூட்டுதல்.

Épenthèse, *f.* எழுத்து மிகுதல், சொல் நடுவில் ஓர் எழுத்தை — அசையைச் சேர்த்தல்.

Épenthétique, *adj.* சொல் நடுவிற் கூட்டிய (எழுத்து).

Éperdu, *adj.* மயங்கிய, கலங்கிய, திகிலுள்ள.

Éperdument, *adv.* மிகவும், மிதந்தப்பி,—மிஞ்சி, மெத்தவும், அதிமிச்சமாய்.

Éperlan, *m.* ஓர் சிறு கடல் மீன்.

Épernay, Épernon, (பிராஞ்சிராச்சியத்தில்) எப்பேர்னே —, எப்பேர்னோன் நகர்.

Éperon, *m.* குதி முள்ளு. ‖ சாவற் கால்முள்ளு. ‖ கப்பலணிய நுனி. ‖ கொத்தளத்தின் புறக்கோணம், — முனை, (பாலக்கட்டை முதலியவற்றின்) முனை, உதை கால், — சுவர். ‖ கடைக்கண் திரை, பூண்டின் கவரில் —, மொக்குளடியில் கூர்ந்த மடிப்பு, — முள்ளு, மலையின் கடைசி முனை, — செங்குத்தான மேடு.

Éperonné, *adj.* குதி முள்ளுள்ள,— முள்ளணிந்த, கடைக்கண்ணில் திரைவுள்ள.

Éperonner, *v. a.* குதிமுள்ளாற் குத்துதல். ‖ தூண்டுதல், ஏவுதல். ‖ குதிமுள்ளணிவித்தல், — போடுதல், போர்ச்சாவற் காலி லாயுதங் — கத்தி கட்டுதல்.

Éperonnerie, *f.* குதிமுள் வியாபாரம், குதிமுள் செய்தல்.

Éperonnier, *m.* குதிமுள்ளு செய்பவன்,— விற்பவன். ‖ இரட்டைமுள்ளுள்ள சீனாதேசத்துச் சாவல்.

Épervier, *m.* இராசாளி, வல்லூறு, பருந்து, ஓர்வித வலை, மூக்குப் பந்தம்.

Épervière, *f.* ஓர் பூண்டு.

Épervin, *m.* *V.* Éparvin.

Épeuré *ou* apeuré, *adj.* பயத்தால் பீடிக்கப்பட்ட, பயங்கொண்ட.

Éphèbe, *m.* பக்குவமான வாலிபன்.

Éphélide, *f.* கன்றலா லானமறு,— மாசு.

Éphémère, *adj.* ஓர் நாளைய, ஒரு நாள் நிலைக்கிற,— பிழைக்கிற, ஒருநாளி லுற்பவித் தழிகிற, அற்ப நேரத்து, அழிவுள்ள. ‖ *f.* ஒருநாட் பிராணி, ஒருநாள் சீவிக்கிற வண்டு.

Éphémérides, *f. pl.* பஞ்சாங்கம், தினக் கிரகசாரம், நாளாகமம், தினவர்த்தமானம்.

Éphod, *m* யூதகுருக்களின் உத்தரீயம்,— சட்டை.

Éphore, *m.* ஸ்பார்த்த நகரத்தின் அதிகாரி.

Épi, *m.* கதிர், கருது, அரிவு, குலை, கொத்து, மயிர்ச் சுழி. ‖ நிமிர்ந்த மயிர்க்

கொத்து, ஓர்வித பந்தனம் : — broui சாவி ; — qui repousse சீட்டை, —க்கதிர் ; — de la Vierge சித்திரை.

Épiage, *m.* கதிர்வாங்குதல், குலைதள்ளுதல்.

Épicarpe, *m.* பழத்தை மூடிக்கொண்டிருக்கும் மெல்லிய தோல்.

Épice, *f.* சம்பாரம், சம்பார வர்க்கம்,— வஸ்து, வாசனைச் சரக்கு. || *pl.* தித்திப்பு. || நடுவர் வருமர்னம்,— வாங்குமிலஞ்சம்.

Épicéa, Épicia, *m.* ஓர் மரம்.

Épicène, *adj.* எந்த பாலுக்கும்—, பாற் பொதுவான. || *m.* ஷை பொதுவான பெயர்.

Épicer, *v. a.* சம்பாரம்—, காரம் போடுதல், உறைப்பிடுதல், கார சார மூட்டுதல். || உயர்விலையாய் விற்றல்.

Épicerie, *f.* வாசனைகார்ப்புச் சரக்குகள், சம்பாரம், (சர்க்கரை, கோப்பி முதலியதும் அத்தோடே சேர்ந்தது), ஷை சரக்கு வியாபாரம்.

Épichérème, *m.* அந்தந்த வாக்கியம் அத்தாட்சியுள்ள மும்மடி நியாயம்.

Épicier, — ère, *s.* வாசனை கார்ப்புள்ள சரக்குகளின் வியாபாரி.

Épicrâne, *m.* *V.* Péricrâne.

Épicurien,—enne, *s. et adj.* எப்பிக்குர் மதத்தான். || பீலுவாதி, சுகபோக—, அசன—, சிற்றின்பப் பிரியன், காமாதுரன், சுகபோகத்துக்கடுத்த.

Épicurisme, *m.* எப்பிக்குர் மதம், — போதகம். || சுகபோக சீவியம்.

Épicycle, *m.* மற்றொன்றில் அடங்கிய சக்கரம், பெரிய சக்கரத்தின் சுற்றளவின்மேலுருளுஞ் சின்ன சக்கரம், பரிதி, உபக்கிரகாயணம்.

Épicycloïde, *f.* பரிதீவம்.

Épidémie, *f.* கொள்ளைநோய், பெருவாரி, — வாரிக்காய்ச்சல், வெகு சனத்திற் பரம்புகிற வியாதி.

Épidémique, *adj.* சனத்திற் பரம்புகிற, பெருவாரியான. [தோல்.

Épiderme, *m.* மேலான —, மேல்

Épidermique, *adj.* மேல் தோலுக்குரித்தான, மேல் தோல் சம்பந்தமான.

Épié, *adj.* நெடு குறுக்குமயிர் —, கதிர் வடிவு—, கதிருள்ள, கொத்தான.

Épier, *v. n.* கதிர் வாங்குதல்,— விடுதல்,— ஆக விளைதல். || *v. a.* வேவு—, உளவு—, ஒட்டுப்பார்த்தல், பதுங்குதல், பதிவிருத்தல், தேடுதல், காத்திருத்தல், திருட்டாட்டமாய் நோக்குதல்.

Épierrement, *m.* Épierrer, *v. a.* கல்லெடுத்தல், — பொறுக்குதல்.

Épieu, *m.* மரவீட்டி, கைவேல், கூர்ந்த தடி, வேட்டை யீட்டி.

Épigastralgie, *f.* அடிவயிற்றுநோய், அடிவயிற்றின் மேற்புறத்தில் வலி.

Épigastre, *m.* அடிவயிற்று மேற்புறம், மேல் வயிறு. [கடுத்த.

Épigastrique, *adj.* மேல்வயிற்றுக்

Épigénèse, *f.* சரீரம் பங்குபங்காயுண்டாகுங் கோட்பாடு, வியாதி குணமாருமற் சேருகிற குறி.

Épiglotte, *f.* குரல்வளை மூடு முருந்து, சுவாச—, மூச்சுக் குழலையடைக்குஞ் சவ்வு, கபாடம்.

Épigrammatique, *adj.* யுத்திக்—, வசைகவிக்கடுத்த.

Épigrammatiste, *m.* ஷை கவிசெய்பவன், சித்திரகவிஞன்.

Épigramme, *m.* யுத்தி —, வசைகவி, ஓர்வித சித்திர கவி. || யுத்தி மொழி,— வாக்கியம், கீர்த்தனம். || (கிரேக்கரில்) மேலெழுத்து . || ஓர்வித பதார்த்தம்.

Épigraphe, *f.* மேலெழுத்து, முகவுரை—, காரணக்கவி, பொருண்மைக் குறிப்பான வாக்கியம்,— எழுத்து, கல்வெட்டு. [சிலாலேக சாஸ்திரம்.

Épigraphie, *f.* சாசன சாஸ்திரம்,

Épigraphiste, *m.* சாசன சாஸ்திரம், சிலாலேக அர்த்தம் தெரிந்துகொள்ளுவதில்நிபுணன். [மேல் பிறக்கிற.

Épigyne, *adj.* அண்டகோசத்தின்

Épikée, Épikie. *f.* கட்டளை யிளக்காரம், கட்டளையின் இளக்காரமுள்ள வியாக்கியானம்.

Épilatoire, *adj. et m.* மயிருதிர்விக்கிற, மயிருதிர்விக்கு மருந்து.

Épilepsie, *f.* காக்காய்வலி, — வலிப்பு, குமரகண்டன், கோரணி.

Épileptique, *adj. et s.* காக்காய் வலிப்புக்கடுத்த, — வலிப்புள்ள,— வலிப்புள்ளவன்.

Épiler, *v. a.* மயிரை யுதிர்வித்தல், —பிடுங்குதல், தலையின்வெண்மயிர் பிடுங்குதல். || s'— தனக்கு மயிரை யுதிர்வித்தல்,— வெள்ளைமயிரைப் பறித்தல்.

Épillet, *m.* சேர்ந்த கதிர், சிறு பூங்கொத்து.

Épilogue, *m.* பிரசங்க —, காவிய முடிவுரை, சாத்திய சித்தி, பொழிப்புத்திரட்டு, காரணசித்தியின் தொடர்ச்சி காட்டுதற்குக் கூட்டிய அதிகாரம்.

Épiloguer, *v. a. et n.* கண்டித்தல், பழித்தல், குறைபிடித்தல், — சொல்லுதல். [பழிக்கிறவன்.

Épilogueur, *m.* குறைபிடிக்கிறவன்,

Épiloir, *m.* மயிர்பிடுங்குங் குறடு, சாமணம். [கிடக்கும் ஸ்தலமும்.

Épinaie, *f.* முட்செடிகள் வளர்ந்து

Épinard, *m.* பசளை, வயளை,— க்கீரை.

Épine, *f.* முள், முள்ளு, கடு, முட்செடி,— பூண்டு,— காடு. || கூர், பிசிர். || வருத்தம், பிரயாசம், தடை, சிக்கு, தொந்தரை, ஆபத்து : couronne d'— முள்—, முண்முடி ;— dorsale, — du dos முதுகெலும்பு, முள் —, நடு —, தண்டெலும்பு. [போடுதல்.

Épiner, *v. a.* அங்கங்கே முட்செடி

Épinette, *f.* ஓர் வாத்தியக்கருவி, கோழி கொழுப்பிக்கும் கூடு, சிலவித மரம்.

Épineux, — euse, *adj.* முள்போன்ற. || முள்ளுள்ள, முள்நிறைந்த. || வெகு வருத்தம்—தொந்தரை—சிக்குள்ள, அறிய, எதிலும் விக்கினஞ்செய்கிற : pomme — ஊமத்தங்காய் ; arbre — முண் மரம், ou plante — முள்ளி, முண்டகம்.

Épine-vinette, *f.* சிகப்புக் கனிதரு முட்செடி, அதின் கனி, அதினாற்செய்யுந் தித்திப்பு.

Épingle, *f.* குண்டூசி, கொண்டையூசி. || பிளந்த மரக்குச்சு. || உருக்கின பித்தளைக்கூர்,— பிசிர், || *pl.* (விற்றவனுடைய மனைவிக்கு — ஊழியனுக்குத்தரும்) இனாம் :—de diamant வைரக்குண்டூசி ;— de tête கொண்டையூசி.

Épinglage, *m.* Épingler, *v. a.* ஊசியாற் பற்றுவாய்திறத்தல், — தோட்டாகுத்துதல். [குண்டூசி வியாபாரம்.

Épinglerie, *f.* குண்டூசிசெய்தல்,

Épinglette, *f.* பற்றுவாய்—, தோட்டாதிறக்குமூசி.

Épinglier, — ère, *s.* குண்டூசி செய்கிறவன்,— விற்பவன்,— வள்.

Épinière, *adj. f.* முதுகெலும்பின்.

Épiniers, *m. pl.* புதாரு, அடர்ந்த முட்செடிகள்.

Épinoche, *m.* முதல்தர கோப்பிக் கொட்டை. || நாணலில் வாழுஞ் சிறு மீன்.

Épiphanie, *f.* கிறீஸ்துநாதர் வெளிப்படுத்தப்பட்ட —, மூன்றிராசாக்கள் திருநாள்.

Épiphénomène, *m.* வியாதி தோன்றினபின் காணுங் குறிப்பு. [சொல்.

Épiphonème, *m.* ஈற்றுவியப்புச்

Épiphora, *f.* வாடிக்கையான —, விடாத கண்ணீர்ச் சொரிவு.

Épiploïque, *adj.* குடற்சவ்வுக்கடுத்த.

Épiploïte, *f.* குடற்சவ்வின் எரிவு.

Épiploon, *m.* குடற்—, சவ்வு.

Épique, *adj.* பெருங்—, காப்பிய : poème — காப்பியம், காவியம், வீர— பெருங்காவியம் : style, ton — காப்பியத்துக்குரிய —, எடுப்பான வசன நடை. [—, அல்பனி நாடு.

Épire, *f.* (துற்கிதேசத்தில்) எப்பீர்

Épirotes, *m. pl.* ஷை நாட்டார்.

Épiscopal, *adj.* மேற்றிராணியாருடைய. [ணியாராக.

Épiscopalement, *adv.* மேற்றிரா

Épiscopat, *m.* மேற்றிராணியார் பட்டம், — கூட்டம், — ஆளுகை, — ஆளுகைக்காலம்.

Épiscopaux, *m. pl.* மேற்றிராணியார்களை யேற்றுக்கொள்ளும் பதிதர்.

Épisode, *f.* இடை—, கிளைக்கதை, — சங்கதி, பெருங் காப்பியத்தி லடங்கும் விசேஷ கதை. || படத்தின் உப பொருள் || சேர்மானம், — ஆன சம்பவம், விஷயம், சங்கதி.

Épisodique, *adj.* இடைக்கதையான,— யுள்ள, சேர்மானமான, பிரதானமல்லாத.

Épispastique, *adj. s.* காரமுள்ள, சீழ்வருவிக்கிற,— வருவிக்கு மருந்து.

Épisser, *v. a.* Épissure, *f.* இருகயிற்று நூற்களை — நுனிகளைக்கலந்து பின்னுதல்.

Épissière, *f.* ஈகடிக்காதபடிக் குதிரையைக் காப்பாற்றும் வலை.

Épissoir, *m.* அப்படி பின்னுங் கருவி.

Épistaxis, *f.* மூக்காலிரத்தம் வடிதல், சில்லிரத்தம்.

Épistolaire, *adj.* காகிதத்து, நிருபத்து, காகிதத்துக்குரிய.

Épistolier, *m.* அதிகமாய்க் கடிதம் எழுதுகிறவன், லிகிதம் எழுதுவதில் நிபுணன்.

Épistyle, *f.* (போதிகைமேல் நிற்கும்) விட்டம்போன்ற சிற்ப அணி, — ப்பட்டை, — அலங்காரம்.

Épitaphe, *f.* கல்லறைப்பட்டயம், — ஞாபகவாசகம், — மேலெழுத்து, சமாதிசாசனம்.

Épite, *f.* சின்ன ஆப்பு, — குச்சு.

Épithalame, *m.* விவாகப்பாட்டு, — மங்கலம், விவாகவாழ்த்தானகவி, — செய்யுள், — படம், — சித்திரம்.

Épithélial, *adj.* உரோமத்துவார அறைகளடங்கிய.

Épithélium, *m.* உரோமத்துவார அறைகளாலான தோல்.

Épithème, *m.* புறத்துமருந்து.

Épithète, *f.* குணப்பெயர், அடைமொழி, விசேஷணம், பண்பைவிளக்குஞ் —, பெயருரிச்சொல்.

Épitoge, *f.* நெடு அங்கி, ஆசிரியர்— நியாயாதிகளுடைய விசேஷ சட்டை.

Épitomé, *m.* சங்க்ஷேபம், சுருக்கம், சங்கிரகம்.

Épître, *f.* நிருபம், காகிதம், பத்திரம், செய்யுளாகிய நிருபம். || (பூசையின்) நிருபம்: côté de l' — நிருபப்பக்கம், பீடத்தின் வலதுபக்கமாம்.

Épitrope, *f.* மறுக்கக்கூடுமானதை ஒத்துக்கொள்ளுமணி. || *m.* கிறேக்கு கிறீஸ்துவர்களின் மத்தியஸ்தன்.

Épizootie, *f.* கோமாரி, மிருகங்களின் — மந்தையின் தொத்துவியாதி.

Épizootique, *adj.* ஷை வியாதிக்கடுத்த.

Éplaigner, *v. a.* சகலாத்துமயிரை ஒப்பரவாக்குதல், சிலும்பலைக் கிளப்புதல்.

Éploré, *adj.* மிகவுமழுகிற, பரிதபிக்கிற, கண்ணீர்மாலைவிடுகிற.

Éployé, *adj.* சிறகுவிரிந்த, — விரித்த.

Épluchage, *ou* **Épluchement**, *m.*
Éplucher, *v. a.* கொழித்தல், பொறுக்குதல், சீவுதல், அரித்தல், சுத்தம் பண்ணுதல், அசுத்தங்களைக் கழித்தல். || ஆராய்தல், நடக்கை —, பரிசோதித்தல், விசாரித்தல், குறை —, பிழைபிடித்தல், — தேடுதல். || s'— கொழிக்கப்படுதல், தன்னைக் கொழித்தல், தன் அழுக்குகழித்தல்.

Éplucheur, — euse, *s.* கொழிக்கிறவன், பரிசோதிக்கிறவன், பிழைபிடிக்கிறவன், — நீக்குகிறவன்.

Épluchoir, *m.* அழுக்குகழிக்கும் —, சீவுங்கத்தி.

Épluchure, *f.* கொழிப்பானது, கழிவு, சேடம், குப்பை.

Épode, *f.* பாட்டின் மூன்றும் பங்கு, நெடிலடியுங் குறிலடியு மாறிவருகிற பாட்டு.

Épointé, *part.* இடுப்புசுளுக்கின, தொடையுடைந்த, கூரற்ற.

Épointer, *v. a.* **Épointage**, *m.* கூர் —, மழுக்குதல். || s'— கூர் —, மழுங்குதல்.

Époi, *m.* மான்தலையுச்சிக்கிளை.

Éponge, *f.* கடற்காளான், — பாசி, சலமலம். || இலாடமுனை, — நுனி. || மிருகத்தின் குதிக்கால். || குதிரைக்கழுத்து வீக்கம். || ஈயத்தொழிலாளி மேசையில் மாறும்பலகை: passer l'— sur கடற்காளானைக்கொண்டு—, துடைத்தல், மறக்கடித்தல்; presser l'— கடற்காளானைப் பிழிதல், உத்தரிப்பதற்குக் கட்டாயம் பண்ணுதல்.

Éponger, *v. a.* கடற்காளானை —, துணியைக்கொண்டு துடைத்தல். || s'— துடைக்கப்படுதல்.

Épontilles, *f. pl.* கப்பல்தட்டுதாங்கி, — தாங்குமரங்கள்.

Épontiller, *v. a.* **Épontillage**, *m.* கப்பலில் தாங்குமரங்கள் போட்டுவைத்தல்.

Épopée, *f.* காவியம், பெருங்காப்பியம், — காப்பியத்தினியல்பு.

Époque, *f.* திட்டமான —, விசேஷ —, காலம், யுகம், சமயம், நேரம், காலப்பிரிவு, — வகுப்பு, — க்குறிப்பு.

Épouffé, *adj.* மூச்சற்ற, இளைக்கிற, இரைக்கிற.

s'Épouffer, *v. pro.* நழுவிப்போதல்.

Épouiller, *v. a.* பேன்பார்த்தல், — எடுத்தல், — கொல்லுதல். || s'— தனக்குப் பேன்பார்த்தல்.

Époumonner, *v. a.* ஈரல் வருத்துதல். || s'— ஈரல்நோக வருந்துதல்.

Épousailles, *f. pl.* கலியாணம், கலியாணச்சடங்கு.

Épouse, *f.* பெண்சாதி, மனைவி, பெண்டாட்டி, ஸ்திரி, பத்தினி, பாரி, தாரம், இல்லாள், மணவாட்டி.

Épousée, *f.* பெண், மணப்பெண், — மகள், மணவாளி, மணவாட்டி.

Épouser, *v. a.* கலியாணம்—, விவாகஞ்செய்தல், — செய்துகொள்ளுதல், கலியாணமுடித்தல், பாணிக்கிரகணம் பண்ணுதல். || எற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல், கிரகித்தல், அநுசரித்தல். || s'— கலியாணஞ்செய்தல், — செய்துகொள்ளுதல்.

Épouseur, *m.* மாப்பிள்ளை, விவாகஞ்செய்யப்போகிறவன்.

Époussetage, *m.* Épousseter, *v. a.* தூசியையுதறுதல், — தட்டுதல், — குச்சினால் துடைத்தல். || அடித்தல். || s'— தன் வஸ்திரங்களின் தூசியையுதறுதல்...

Époussette, *f.* தூசியைப் போக்குங் —, துடைகுச்சு.

Épouti, *m.* ஆட்டுமயிர் வேலையினழுக்கு.

Épouvantable, *adj.* பயங்கரமான.

Épouvantablement, *adv.* பயங்கரமானவிதமாய்.

Épouvantail, *m.* வெருட்டி, வெருளி, பயப்படுத்துவது, மிருகங்களுக்கு அச்சம் வருவிக்கவைக்கும் பொம்மை. || ஓர்வித கடல்தகைவிலான்.

Épouvante, *f.* திகில், பயம், பயங்கரம், திடுக்காட்டம், எக்கம், கலக்கடி, சடுதியான திகில்.

Épouvanté, *part.* திகில் —, பயமுள்ள, திடுக்கிட்ட, திகைத்த.

Épouvantement, *m.* Épouvanter, *v. a.* பயம் —, அச்சமுறுத்துதல், அச்ச —, பயப்படுத்துதல், வெருட்டுதல், கலக்குதல், அச்சுறுத்தல். || வருத்துதல். || s' — திகில் அடைதல், அச்ச —, பயப்படுதல், அச்சுறுதல், எங்குதல், திகைத்தல், திடுக்கிடுதல், வெருளுதல்.

Époux, *m.* புருஷன், பத்தா. || (nouveau marié) மாப்பிள்ளை, மணவாளன், மணமகன், மணாளன்: l'époux et l'épouse பெண்ணும்மாப்பிள்ளையும்; montrer les futurs — (pour voir s'il y a des empêchements) சோடுகாட்டுதல்.

Épreindre, *v. a.* பிழிதல், பிதுக்குதல், உறத்தல்.

Épreinte, *f.* பிழிதல். || *pl.* மூல —, வயிற்றுக்கடுப்பு. || நீர்நாய் மலம்.

s'Éprendre, *v. pro.* பற்றுதல், பற்றிக் —, நேசம் —, ஆசைகொள்ளுதல், அன்பிற்சிக்குதல்.

Épreuve, *f.* பரிக்ஷை, பரீட்சை, சோதனை, பரிசோதனை, சோதிப்பு, ஆராய்வு, சோதா. || துன்பம், நிர்ப்பாக்கியம், இடையூறு, ஆபத்து. || ஆராயும் —, முதற்பிரதி, சோதனைப்பத்திரம்; tenter une —, mettre à l'— பரீட்சைபண்ணுதல், — பார்த்தல், பரிக்ஷித்தல், பரிசோதித்தல்: à l'—de கெடாத, அழியாத, உறுதியுள்ள ;—du feu, de l'eau அக்கினியால்—, தண்ணீராலாகிற பரிசோதனை.

Épris, *part.* பற்றுதலான, நேசங்கொண்ட, அன்பிற்சிக்கின.

Éprouvé, *part.* பரிட்சிக்கப்பட்ட, அழியாத, கெடாத.

Éprouver, *v. a.* பரிட்சித்தல், பரிட்சை —, சோதனைபண்ணுதல், சோதித்தல், ஆராய்தல், பரிசோதித்தல், பரிட்சையாலறிதல். || அநுபவித்தல், உணர்தல், படுதல், எதுவாயிருத்தல் ; — des altérations வேறு —, வேற்றுமைப்படுதல். || s'— தன்னைச் சோதித்தல், — பரிட்சைசெய்தல்.

Éprouvette, *f.* சலாகு. || சோதிக்குங் —, பரிட்சைக்கருவி.

Epsom, இங்கிலிஷ்தேசத்தில் இப்சொம் நகரம்: sel d'—சுகபேதிக்குரிய —, இப்சொம்நகர உப்பு.

Épucer, *v. a.* தெள்ளுபார்த்தல், — பிடித்தல். || s'— தனக்குதெள்ளுபார்த்தல்.

Épuisable, *adj.* வற்றி, அற்றுப்போகத்தக்க.

Épuisant, *adj.* பலத்தையொடுக்கும், பலமற்றுப்போகச் செய்யும்.

Épuisé, *part.* வற்றின, வற்றிப்போன, வெறுமையான, வரண்ட, வறடான, தளர்ந்த, இளைத்த, களைத்த, சோர்ந்த, தவிப்புள்ள, செழிப்பற்றுப்போன, செலவழிந்த, ஒழிந்த.

Épuisement, *m.* வடிப்பு, வடிவித்தல், வற்றுவித்தல். || சோர்வு, தளர்வு, களை, களைப்பு, தவிப்பு, இளைப்பு.

Épuiser, *v. a.* வற்றிப்போக —, அற்றுப்போக —, வற்றச் செய்தல், விறைத்தல், வற்றுவித்தல், சூனியம் —, வெறுமையாக்குதல். || செலவழித்தல், அழித்தல், முழுதும் எடுத்தல், — சொல்லுதல், — பரிட்சித்தல், பாழாக்குதல். || மெலிவித்தல், இளைப்பித்தல், சோர்வித்தல், களைப்பித்தல், பலவீனப்படுத்துதல், செழுமையழித்தல்; — toutes les ressources உபாயமெல்லாம் எடுத்தல், — செய்தல். || s'— வற்றிப்போதல், வறுமை —, சூனியம் —, பலவீனமாதல், இளைத்தல், களைத்தல், சேர்தல், களைத்து —, இளைத்து —, செழுமையற்று —, பலனற்றுப்போதல், செலவழிதல், செலவாதல், தன் உபாயமெல்லாம் பிரயோகித்தல்.

Épuisette, *f.* சிறுவலை, — கண்ணி.

Épulie, **Épulide**, *f.* ஈறுகளின் வீக்கம், — சிறுகழலை.

Épulon, *m.* திருவிருந்தின் தலைவர்.

Épulotique, *adj. et m.* காயம், ஆற்றுகிற, — ஆற்றுமருந்து.

Épurateur, *m. et adj.* சுத்தமாக்கும் கருவி.

Épuratif, **Épuratoire**, *adj.* சுத்தமாக்குவதற்குரிய.

Épuration, *f.* சுத்தமாக்குதல், புடம், தெளிவிப்பு, சுத்திகரிப்பு. || (சபையினின்று தகாதவர்களை நீக்குதல்.)

Épure, *f.* பெரும்பணிக்கு.

Épuré, *part.* சுத்தம் —, புடமான, சுத்த, மேலான.

Épurement, *m.* சுத்தமாக்குதல், திருத்துதல்.

Épurer, *v. a.* சுத்தமாக்குதல், சுத்திகரித்தல், சுத்தம் —, சுத்திசெய்தல், திருத்துதல், தகாதவர்களை —, தகாததை —, பிழைநீக்குதல், புடமிடுதல், — வைத்தல், வடித்தல், தேளிவித்தல். || s'— சுத்தி —, சுத்தமாதல், சீர் —, திருந்துதல், தெளிதல், தெளிவாதல்.

Épurge, *f.* பேதிக்குரிய பூண்டு.

Équarrir, **Équarrissage**, **Équarrissement**, **Équarrisseur**, **Équarrissoir**, *V.* **Écarrir**...

Équateur, *m.* சமரேகை, நிரக்ஷம், நிரட்சம்; — céleste வானநிரக்ஷம், நாடிமண்டலம்; — terrestre புவனநிரக்ஷம்: république de l'— (தென் அமேரிக்காவில்) சமரேகையின் —, எக்குயாத்தோர் குடியரசு.

Équation, *f.* இருதொகைச் சமானம், வித்தியாச நிதானம்: — algébrique சமீகரணம், வாக்கியம்; — du temps சூரியமணிக்குங் கடியாரமணிக்குமுள்ள வித்தியாசம்; — du centre மந்தச்சா, — பலம், கிரகமெய்யானவிடத்துக்கும் மத்திமவிடத்துக்குமுள்ள வித்தியாசம்; équation parallactique கர்க்கிச்சா, மகரச்சா; terme d'une équation அங்கம்; le côté ou membre droit தட்சிணபாகம்; le côté gauche வாமபாகம்; — identique அத்துவைதசமீகரணம்; — simple அமிசிரசமீகரணம்; — carrée ou du second degré வர்க்காமீகரணம்; — cubique ou du troisième degré கனசமீகரணம்; — cubique pure சுத்தவர்க்கசமீகரணம்; — cubique affectée ou mixte சங்கரவர்க்கசமீகரணம்; — bi-carrée வர்க்கவர்க்கசமீகரணம்; — au-dessus du second degré அதிவர்க்கசமீகரணம்; — à plusieurs inconnues அனேகாட்சரசமீகரணம்.

Équatorial, *adj.* சமரேகைக்கடுத்த, சமரேகைக்கீழிருக்கிற, எக்குயாத்தோர் குடியரசுக்கடுத்த: ligne — சமரேகை. || *m.* கிரகங்களின் தினவோட்டங்காட்டுங்கருவி.

Équerrage *m.* **Équerrer**, *v. a.* சதுரமட்டப்பலகை வைத்துப்பார்த்துத் துண்டுபலகை வைத்தல்.

Équerre, *f.* மூலைமட்டப்பலகை, நேர்கோணக்கருவி, நேர்கோணவடிவு, — வடிவுள்ளது, — வடிவுள்ள இரும்பு, தென்திசைத்தாராகணம்: être d'—, en —, நேர்கோணமாய் —, கோணவடிவாயிருத்தல்.

Équestre, *adj.* குதிரைமேல் நிற்கிற, இராவுத்தன் வடிவான: ordre — குதிரைவீரர் —, இராவுத்தர் வகுப்பு.

Équiangle, *adj.* ஒத்த —, சரிகோணமுள்ள.

Équidistance, *m.* **Équidistant**, *adj.* சரிதூரமுள்ள.

Équilatéral, *adj.* சம —, ஒத்தபக்கமுள்ள.

Équilatère, *adj.* (மற்றொன்றோடே,) சரியொத்த பக்கமுள்ள.

Équilibre, *m.* சமநிலை, சமநிறை, சமபாரம், கால்மேல் நிலை, இசைப்பு, இசைவு, பொருத்தம், அமரிக்கை: perdre l' — சமநிலையிழந்துவிழுதல்; mettre en — *ou*

Équilibrer, *v. a.* சமநிலை —, சமநிறையாக்குதல்.

Équilibrisme, *m.* சமநிலையறியும் சாஸ்திரம்.

Équilibriste, *m.* சமநிலையையொட்டி சாமார்த்தியமானகாரியங்கள் செய்பவன்.

Équimultiple, *adj.* ஒத்தபெருக்க [நிலையுள்ள (எண்).

Équin, e, *adj.* குதிரைசம்பந்தமான.

Équinoxe, *m.* சமராத்திரம், சமாகோராத்திரம், இராப்பகல் சமமானகாலம், விசுவம்: — du printemps மேடாயனம், அரிபதம்; — d'automne துலாயனம், விசுபதம்; temps, jour des — விசுவகாலம், — தினம்.

Équinoxial, *adj.* சமராத்திர, விசுவ: ligne — சமராத்திர —, விசுவரேகை; points — விசுவம், அயனம், சூரியாயனசந்தி, விசுவசங்கிராந்தி; régions — சமரேகைக்குக் கீழுள்ள —, எப்போதுஞ் சமராத்திரமுள்ள தேசங்கள்.

Équipage, *m.* பரிவாரம், பரிசனம், பரிசாரகர், சூழ்வோர். ‖ கோலம், அந்தஸ்து. ‖ சாமான், தளவாடம், இரதம், வண்டி. ‖ வேட்டைக்குரிய நாய்குதிரையாட்கள். ‖ கப்பலாள்கள், கப்பற்காரர். ‖ கருவி, எத்தனம், சாமான்கள், சாரம், முஸ்திப்பு: maître d'— கப்பலின் தளபாட விசாரணைக்காரன்; rôle d'— கப்பலாள்களின் பேர்வழி.

Équipe, *f.* கூடப் பிணைக்கப்பட்ட தோணிகளின் வரிசை.

Équipé, *part.* சோடிப்புள்ள, முஸ்திப்ப —, ஆயத்தமான, கோலமணிந்த.

Équipée, *f.* அவிவேகசெய்கை, புத்தியற்ற ஏற்பாடு.

Équipement, *m.* சோடிப்பு, முஸ்திப்பு, — இடுதல், வேண்டியதளவாடம், கோலம், முஸ்திப்பின் செலவு.

Équiper, *v. a.* முஸ்திப்பிடுதல், சோடித்தல், முஸ்திப்பாக்குதல், — சேகரித்தல், கோலங்கட்டுதல், — அணிவித்தல், ஆயுதம் —, சாமாணிடுதல், உடுத்துதல், பிரயத்தனஞ்செய்தல். ‖ அடித்தல், அடாதகோலப்படுத்துதல். ‖ s'— முஸ்திப்பாதல், கோலமணிதல், தன்னைச் சோடித்தல், உடுத்திக்கொள்ளுதல்.

Équipollence, *f.* ஒத்தபலன், — வீரம், — விலை.

Équipollent, *adj.* ஒத்த, நிகரான, ஒத்தவிலை — வீரம் — பலனுள்ள. ‖ *m.* ஒத்தபலன், — விலை.

Équipoller, *v. a. et n.* நிகர்தல், சரியாய் —, ஒத்திருத்தல்.

Équitable, *adj.* நீதி —, நியாயம் —, நீதம் —, நாணயமுள்ள, நீதி —, நடுநிலையான, ஏற்ற, யோக்கிய, நீதிக்குத்தக்க.

Équitablement, *adv.* நீதி —, நியாயம் —, நாணயமாய், சரிநீதியாய், நீதிநியாயத்தின்படி.

Équitation, *f.* குதிரையேறும் வித்தை, — வகை, — அப்பியாசம், குதிரையேறுதல், — ச்சவாரி.

Équité, *f.* நீதி, நியாயம், நடுநிலை, நாணயம், நேர்மை, நிதானம், பாரபட்சமில்லாமை, தயையுள்ளநீதி.

Équivalence, *f.* **Équivalent**, *adj.* சரியொத்த, ஒத்த, நிகரான, ஒத்தபேறு—பலன்—விலையுள்ள, பிரதி —, பதிலான. ‖ *m.* பதில், ஒத்தவிலையுள்ள பொருள்.

Équivaloir, *v. n.* ஒத்தவிலை —, ஒத்தபடிபெறுதல், ஒத்திருத்தல், சரிப்படுதல், சரிசமானமாயிருத்தல், ஒத்தபலன் — பலம் — சாமர்த்தியம் — பராக்கிரமம் — வல்லமை — அர்த்தங்கொண்டிருத்தல்.

Équivoque, *f.* ஈரர்த்தம், உபயார்த்தம், சிலேடை, ஈரடிப்பயன். ‖ சமுசயம்.

Équivoque, *adj.* ஈரர்த்தம் —, சிலேடையுள்ள, ஈரடிப்பயனான. ‖ சந்தேகம் —, சமுசயமான, சமுசயத்துக்குரிய, தெளிவற்ற, நம்பக்கூடாத, நம்பிக்கையற்ற.

Équivoquer, *v. n.* ஈரர்த்தம் —, உபயார்த்தம் —, சிலேடையாய்ப் பேசுதல், இருதலைப்படுதல். ‖ s'—ஓர் சொல் தவறியுச்சரித்தல், நாக்குதவறுதல்.

Érable, *m.* ஓர் மரம்.

Éradication, *f.* வேரோடு பிடுங்குதல், — வியாதி தீர்த்தல்.

Éraflement, *m*. **Érafler**, *v. a*. இலேசாயுரித்தல்,— தொடுதல்.

Éraflure, *f*. இலேசான உரிவு.

Éraillé, *part*. இழுத்த, சிவந்த.

Éraillement, *m*. கீழ்ப்புருவப் புரட்சி. *V*. Ectropion.

Érailler, *v. a*. (நெசவின் நூல்) இழுத்திளக்குதல்,—.தளர்த்துதல், || s'— (நெசவின் நூல்) தளர்தல், பிரிதல், இளகுதல். || (கண்) சிவத்தல், புருவம் புரளுதல்.

Éraillure, *f*. நெசவிளகிய — தேய்ந்த புடவை,— விடம்.

Ératé, *part*. மண்ணீரலற்ற, சுறுக்குள்ள.

Érater, *v. a*. மண்ணீரல் வாங்குதல். || s'— ஓடி மூச்சற்றுப்போதல்.

Ère, *f*. யுகம், வருஷங்களை யெண்ண விசேஷிக்கப்பட்ட காலம், வருஷ இலக்கத்தி னாரம்பம், அப்தம், அத்தம், ஆண்டு, வருஷம் :—de la naissance de Jésus-Christ,— des Chrétiens சேசுநாதர் பிறந்த—, கிறீஸ்துவர்களின் வருஷம்,— யுகம் ;— de Sâlivâhana ou Saka சகாத்தம், சகாப்தம் ;— de Collam கொல்ல ஆண்டு ;— de la création, du déluge, du Kaliyouga சிருஷ்டியாதி—, சலப்பிரளயாதி—, கலியுகாதி வருஷம்.

Érèbe, *m*. நரகம், பாதாளத்தடி.

Érecteur, *adj. m*. எழுப்பு—, வலி நரம்பு.

Érectilité, *f*. **Érectile**, *adj*. எழும்பக்கூடிய, எழுச்சியடையக்கூடிய.

Érection, *f*. ஸ்தாபகம், ஏற்படுத்துதல், கட்டுதல், எடுப்பு. || எழுச்சி, நிமிர்ச்சி : — du poil சிலிர்ப்பு, புளகம், நெறிப்பு.

Éreinté, *part*. முதுகுடைந்த, — முறிந்த.

Éreintement, *m*. **Éreinter**, *v. a*. இடுப்புச்சந்து—, முதுகு முறித்தல், — உடைத்தல், பெயர்த்தல், மிகவும் வருத்துதல்,— இளைப்பித்தல். || s'— முதுகு முறிதல்,— உடைதல்,—பெயர்தல். || மிகவும் வருந்துதல்,— இளைத்தல்.

Érémitique, *adj*. வனவாசியின்.

Érésipèle, *f*. *V*. Érysipèle.

Éréthisme, *m*. எரிவு, எரிச்சல், நரம்புக்களின் இழுப்பு.

Ergastule, *m*. ரோமையர்கள் தங்கள் அடிமைகளை அடைக்குஞ் சிறைச்சாலை.

Ergo, *conj*. ஆகையால், ஆதலால். || *m*. தொடர் நியாயம், நியாய முடிவு.

Ergot, *m*. நகம், காலின் முள், பயிரழிவு, சில பயிர்நோய், ஷை பயிரைத் தின்கிறவர்களுக்கு வரும் வியாதி : — de coq சாவல் முள்.

Ergoté, *adj*. காலில் முள்ளுள்ள. நோயுள்ள, அழிந்த (பயிர்), தன் பிரயோசனத்துக்குக் கெட்டிக்காரனான.

Ergoter, *v. n*. வீண் தருக்கஞ் செய்தல், வீணிலே தருக்கித்தல், — கண்டித்தல்,— குறை சொல்லுதல்.

Ergoterie, *f*. **Ergotage**, *m*. வீண் தருக்கம்,— கண்டிப்பு.

Ergoteur,—euse, *s*. வீண்தருக்கக்காரன்,— காரி.

Ergotine, *f*. கோதுமையிலிருந்து எடுக்கப்படும் பிசின்.

Ergotisme, *m*. நோய்பிடித்த கோதுமை சாப்படுவதா லுண்டாகும் வியாதி.

Érié, (வட அமேரிக்காவில்) எரியை என்கிற ஏரி.

Ériger, *v. a*. ஏற்படுத்துதல், ஸ்தாபித்தல், உயர்த்துதல், கட்டுதல், எழுப்புதல், பிரதிஷ்டைசெய்தல்,—ஆகமாற்றுதல்,— திருப்புதல்,— காட்டுதல். || s'— ஏற்படுதல், கள்ளப்பேரொடுத்தல்.

Érigne, **Érine**, *f*. கொளுவியுள்ள சின்ன சத்திரக் கருவி.

Eriodendrum anfractum, இலவமரம்.

Ermin, **m*. (துற்கிதேசத்தில்) தீர்வை, சுங்கம், ஏற்றுமதி யிறக்குமதித் தீர்வை.

Erminette, *f*. வாய்ச்சி.

Ermitage, *m*. வன—, முனிவாசம், ஆச்சிரமம், கரண்டை, பன்னக சாலை. || தனிவாசம், ஏகாந்த வீடு, எர்மித்தாழ் என்கிற விடத்து இரசம்.

Ermite, *m*. வனவாசி, வானப்பிரஸ்தன், ஏகாங்கி, முனிவன், முனி.

Éroder, *v. a*. தண்ணீர்கரைகளை அறுத்தல், ஆற்றோரம் கடலோரம் ஜலத்தால் கரைதல்.

Érosif, *adj*. கரைவுகொடுக்கும், அழிவு உண்டாக்கும்.

Érosion, *f*. அழிப்பு, அரித்தல், அரிப்பு, கரைவு.

Érotique, *adj*. காமத்து, சிற்றின்ப.

Érotisme, *m*. பிணியுள்ள நேசம், கெட்ட சிநேகிதம்.

Érotomane, *m. et adj.* காம மயக்கங் கொண்டவன்.

Érotomanie, *f.* காம மயக்கம்.

Erpétologie, *ou* herpétologie, *f.* ஊர்வன விவரிக்குஞ் சாஸ்திரம்.

Erpétologiste, *m.* ஊர்வனசாஸ்திரங் கற்றவன்.

Errant, *part.* திரிகிற, அலைகிற, நிலை—, ஒழுங்கற்ற, வழுவின. || *m.* நாடோடி, போக்கிரி. || பதிதன் : étoiles — நிலைமாறுங் கிரகங்கள்.

Errata, *m.* பிழைதிருத்தம், எழுத்துப் பிழைகுறிக்கு மட்டவணை.

Erratique, *adj.* ஒழுங்கற்ற, விபரீதமான (காய்ச்சல்). நிலையற்ற, வாசமற்ற (பக்ஷி), மலையினின்று புரண்ட (கற்பாறை).

Erre, *f.* நடை, வழி, செலவு, கப்பல் நடை : aller à grand'—, à belle— சுறுக்காய் நடத்தல், அதிகமாய்ச் செலவழித்தல். || *pl.* மானடிகள், காரிய நடை, அடி, நடக்கை.

Errements, *m. pl.* நடத்தை, போக்கு, வழி, வழக்கின்—, நடை.

Errer, *v. n.* திரிதல், அலைதல், அங்கங்கே போதல், வழுவுதல், பிசகுதல், தவறுதல், மோசம் போதல், சிதறுதல்.

Erreur, *f.* தப்பு, பிசகு, வழு, தவறுதல், தப்பிதம், குற்றம், மோசம், பொய்எண்ணம், தப்பெண்ணம், வீண்தோற்றம், மாயை, மாயம். || அபத்தம், தப்பறை, கள்ளப் —, பொய்ப்போதனை,— போதகம். || *pl.* துர்நடத்தை, அக்கிரமம். || நெடும்பயணத்தின் சுற்றுச்சுழற்சிகள். [மருந்து.

Errhin, *adj.* நாசியிற் போடுகிற

Erroné, *adj.* தப்பறை—, பிசகு—, பிழை—, தப்பு—, தவறுள்ள, பொய்யான, கள்ள.

Ers, *m.* ஓர்வித பயறு.

Erse, *adj.* பூர்வஸ்கந்தினவிநாட்டு (பாஷை).

Érubescence, *f.* செகப்பாகுந் தன்மை, செகப்பு நிறமடைதல்.

Éructation, *f.* ஏப்பம், ஒக்காளம்.

Érudit, *s. et adj.* கல்விமான், கல்வி—, படிப்புள்ள, மிகவும் படித்த,— கற்ற.

Érudition, *f.* கல்வி, படிப்பு, சாஸ்திரம், கல்விசாஸ்திரங்களில் தேர்ச்சி,— திறமை,— ஆராய்ச்சி. [நிறமான.

Érugineux, — euse, *adj.* களிம்பு

Éruptif, *adj.* கொப்புளிக்கிற, கொப்புளம் வருவிக்கிற.

Éruption, *f.* பாய்தல், கழிவு, கழிச்சல், வேகம்—, அகோரமான புறப்பாடு. || கொப்புளம் —, புறப்படுதல், (கரப்பான், சிரங்கு, முதலியது). || பல் முளைப்பு. || (தீமலை) அக்கினிகக்குதல்.

Érysipélateux,—euse, *adj.* அக்கிக்கடுத்த, அக்கிபுறப்பட்டவன்.

Érysipèle, *m.* அக்கி, செந்தீ, அக்கினிக்கரப்பான். [சிவந்த பரு.

Érythème, *m.* எரிவுள்ள சிவப்பு,—

Érithrine, *f.* Érythrina, ஓர் செடி,— பூண்டு :— fulgens ou arbre de corail நிம்பதரு ;— indica மகாமேதம், முருக்கு, கலியாண —, முண்முருக்கு ;— monosperma காட்டு முருக்கு. *V.* Butea frondosa; une espèce inférieure se nomme நரி முருக்கு. [யம்.

Erythronium indicum, நரிவெங்கா

Ès, *prép.* *P.* dans les : docteur ès-sciences கல்விச்சாஸ்திரி.

Esbroufe, *f.* பெரிய மனுஷருக்குரிய நடபடிக்கை, ஒருவனையடித்துக்கொண்டு திரும்புதல். [தவிசு.

Escabeau, *m.* **Escabelle**, *f.* மணை,

Escadre, *f.* போர்க்கப்பற் கூட்டம்.

Escadrille, *f.* சின்ன போர்க்கப்பற் கூட்டம்.

Escadron, *m.* குதிரைப்படைவகுப்பு,—யணி,— சேர்வை,— பட்டாளத்துப்பங்கு. || கூட்டம், கும்பல்.

Escadronner, *v. n.* குதிரைப்படையணியாகச் சேர்த்தல்,— படைக் கவாத்துசெய்தல். [யால் ஏறுதல்.

Escalade, *f.* ஏணி சாத்தி—, ஏணி

Exact, *adj.* சரி —, திட்டமான, சாக்கிரதை —, கண்டிப்புள்ள, செம்மை —, சுமுத்திரையான, நுணுக்கம் —, திருத்தம்—, நிச்சயமான.

Exactement, *adv.* திட்டம்—, சரி —, சாக்கிரதை—, நுணுக்கமாய்:

Exacteur, *m.* பறிகாரன், அநியாய தண்டம் வாங்குகிறவன்.

Exaction, *f.* கட்டாயமான பறிப்பு, அநியாய தண்டம்.

Exactitude, *f.* திட்டம், சாக்கிரதை, சுமுத்திரை, நுணுக்கம், நிதானம், திருத்தம், கண்டிதம், நேர்மை.

Exacum pedunculatum கணப்பூண்டு ;— hyssopifolium வெள்ளறுகு.

Exagérateur,— trice, *s.* வளர்த்துகிறவன், அதிகமாய்ப் பாராட்டுகிறவன், அதிகரிப்பவன்,— வள்.

Exagératif, *adj.* மிஞ்சின பாராட்டு[ள்ள.

Exagération, *f.* மிஞ்சின பாராட்டு, உண்மைக்கு மிச்சம், அதிகரிப்பு.

Exagéré, *part.* உண்மைக்கு —, மிஞ்சின, மிதந்தப்பின, — அறியாத, அதிகமாய் வருணிக்க — உயர்த்தப்பட்ட. ‖ பாராட்டுகிற, வளர்த்துகிற, பாராட்டுள்ள.

Exagérer, *v. a.* அதிகமாய்ப்—, பாராட்டுதல், வளர்த்துதல், ஏற்றிக்கொண்டாடுதல், பருப்பித்துச்சொல்லுதல், அதிக வியார்த்திபண்ணுதல், — பெரிசாக்குதல். ‖ s' — அதிக பெரிசாக்க—, பாராட்ட ... ப்படுதல், அதிக பெரிசாய் எண்ணுதல்.

Exaltation, *f.* உயர்த்துதல், ஏற்படுத்துதல், உயர்த்தப்படுதல், உயர்ச்சி, மேன்பாடு, மகத்துவம். ‖ ஊக்கத்தினதிகரிப்பு, மருள், பரவசம், கோப வெறி. ‖ மிச்சம், பாராட்டு : l'— de la Ste. Croix அர்ச். சிலுவையுயர்த்தப்பட்டதிருநாள்.

Exalté, *part. et s.* அதிக வேகம்—, [மருளுள்ள, மிஞ்சின, மருளன்.

Exalter, *v. a.* பாராட்டுதல், உசத்துதல், உயர்த்துதல், மேன்மை —, கன —, மகிமைப்படுத்துதல், வெகுவாய்ப் புகழுதல், மெச்சுதல், கிளப்புதல், தூண்டுதல், அதிகரிப்பித்தல், அதிகமாக்குதல், உற்சாகப்படுத்துதல். || மருளாக்குதல், மருட்டுதல். || s'— அதிக பற்றுதலாதல், மருளுதல், மிஞ்சின உற்சாக—, பாராட்ட...ப்படுதல்.

Examen, *m.* சோதனை, சோதிப்பு, பரீக்ஷை, ஆராய்வு, ஆராய்ச்சி, பரிசோதனை, பரிசோதிப்பு, உசாவல் : — d'une pièce de monnaie நோட்டம் ; — des pierreries இரத்தினப்பரீட்சை : passer un — சோதனை கொடுத்தல் ; — de conscience ஆத்தும சோதனை.

Examinateur, — trice, *s.* சோதிக்கிறவன், — வள், சோதனைக்காரன், பரீட்சகன் ; — des monnaies நோட்டக்காரன், சராப்பு.

Examiné, *part.* சோதிக்க...ப்பட்ட. || தேய்ந்த (சட்டை).

Examiner, *v. a.* சோதித்தல், பரிசோதித்தல், ஆராய்தல், பரீட்சித்தல், பரீட்சைபார்த்தல், — பண்ணுதல், உசாவுதல், விசாரித்தல், உற்றுப்பார்த்தல். || ஆலோசித்தல், யோசித்தல், நுணுக்கமாய்க் கவனித்தல் : — l'argent நோட்டம்பார்த்தல். || s'— தன்னைப் பரிசோதித்தல், ஆத்துமசோதனை செய்தல், ஒருவ னொருவனை உற்றுப் பார்த்தல், (சட்டை) பழசாதல்.

Exanthémateux, **Exanthématique**, *adj.* கொப்புளமுள்ள.

Exanthème, *m.* கொப்புளம்.

Exarchat, *m.* இராயன் பதிலாளியின் விசாரணை நாடு, — விசாரணைக்காலம், — உத்தியோகம், — பட்டம் : — de Ravenne ஷை பதிலாளியாண்டிருந்த ரவென் நாடு.

Exarque, *m.* இராயன் பதிலாளி, — பேரால் ஓர் நாடாள்பவன். || கிரேக்குச்சபைச் சிரேஷ்டர்.

Exaspération, *f.* கோப மெழுப்புதல், கடுங்—, கோபம், எரிச்சல், உக்கிரம், காய்ச்சலினதிகரிப்பு.

Exaspéré, *part.* எரிச்சல்—, உக்கிரமுள்ள, கோபவெறியுள்ள.

Exaspérer, *v. a.* அதிகரிப்பித்தல். || கோப மூட்டுதல், உக்கிரப்படுத்துதல், எரிச்சலாக்குதல், கிளப்புதல். || s'— எரிச்சல்—, உக்கிரம்—, கோபமாதல்.

Exaucé, *part.* கேட்ட வரம்பெற்ற, கேட்டருளப்பட்ட.

Exaucement, *m.* **Exaucer**, *v. a.* விண்ணப்பத்தை —, மன்றாட்டை —, கேட்டருளுதல், மனுக்கொடுத்தல், — தந்தருளுதல், ஏற்றுக்கொள்ளுதல்.

Excavateur, *m.* குழிபறிக்கும் கருவி.

Excavation, *f.* தோண்டல், குழி, பள்ளம், குடைவு.

Excaver, *v. a.* தோண்டுதல், குழித்தல், அகழ்தல், குடைதல், பள்ளமாக்குதல்.

Excédant, *part.* மிச்சம்—, மீதி—, சொச்சமான. || வருத்தம்—, அலுப்பு —, ஆயாசம் —, தொந்தரையான. || *m.* மிச்சம், மீதி, சொச்சம்.

Excédent, *m.* மிஞ்சினபாகம், மிச்சம்.

Excédé, *part.* மிஞ்சின, இளைத்த, களைத்த, அலுத்த.

Excéder, *v. a.* எல்லை —, கடத்தல், மேற்படுதல், அதிகம்—, மிச்சமாதல், மிஞ்சுதல், அதிகரித்தல். || வருத்துதல், இளைப்பித்தல், களைப்பித்தல், அலட்டுதல், அவமானமாய் —, மிகவு மடித்தல். || s'— வருந்துதல், இளைத்தல், சோர்தல், அலுத்துப்போதல்.

Excellemment, *adv.* உத்தமம் —, மேன்மை —, உச்சிதம் —, நேற்றியாய்.

Excellence, *f.* உத்தமதன்மை, மேன்மை, உச்சிதம், உத்தமம், பெருமை, மாட்சிமை, சிறப்பு, சிரேஷ்டம், கியாதம், மகத்துவம், இது மந்திரிகளுக்கும் ஸ்தானுபதிகளுக்குஞ் சங்கைப் பேராம்.

Excellent, *adj.* உத்தம, உச்சித, மேலான, இன்பமான, அரிய, சிறந்த, சிறப்புள்ள, அதிசயமான. || *m.* உத்தமம்—, உச்சிதமானது.

Excellentissime, *adj.* உத்தமம், மிகவு நல்ல.

Exceller, *v. n.* அதிகரித்தல், மேற்கொள்ளுதல், — படுதல், சிறத்தல், வெல்லுதல், மேலுயர்தல், உத்தமம்—, உச்சிதமாயிருத்தல், நயத்தல்.

Excentricité, *f.* மையவிலக்கு,

அவமத்தியம், மத்திப்பெயர்வு, விபரீதம், ஒழுங்கின்மை, விசேஷம், வழக்கக்கேடு.

Excentrique, *adj*. மையம் விலகிய, மத்திபெயர்ந்த, இதரமத்திய : orbite — பிரதிமண்டலம். ‖ விபரீத, ஒழுங்கற்ற, வழக்கக்கேடான, வழக்கமநுசரியாத.

Excepté, *prép. et part*. தவிர, ஒழிய, அல்லாதே, நீங்கலாக, அன்றி : excepté mes amis, mes amis exceptés என் சிநேகிதர் தவிர.

Excepter, *v. a*. தவிர்த்தல், ஒழித்தல், கழித்தல், நீக்குதல், நீங்கலாகவிடுதல்.

Exception, *f*. நீங்கல், நீக்கம், தவிர்ப்பு, கழிவு, விலக்கு, தவிர்க்கிறவிஷயம், புறநீங்கல், எதிர்நியாயம், வழக்கிலாகிற தடுக்குநியாயம், விபரீதம், விசேஷம் : sans — ஒன்றுந்தவிராமல் ; à l'— de தவிர, ஒழிய.

Exceptionnel, *adj*. தவிர்ப்புள்ள, விசேஷ.

Exceptionnellement, *adv*. தவிர்ப்புள்ள —, விசேஷவிதமாய்.

Excès, *m*. அதி —, மேல்மிச்சம், மிகுதி, அதிகம், அத்தியந்தம். ‖ மிச்சம், மீதி. ‖ *pl*. தாறுமாறு, துர்மார்க்கம், பெருந்தீனி, வெறி. ‖ அகோரம், கொடுமை, கொடூரம் : — de cuisson அதிகவேக்காடு, சிதம்பு, பதனழிவு ; à —, jusqu'à l'—அதிகமாய், அதிமிச்சமாய், மிதந்தப்பி, மட்டின்றி.

Excessif, *adj*. அதிகம் —, மிகுதியான, மிதமிஞ்சின, அதிமிச்சமான, அத்தியந்த, அளவற்ற, அளவிறந்த.

Excessivement, *adv*. மிகுதி —, அதிகமாய், அளவின்றி, மிகவும், மிதந்தப்பி.

Exciper, *v. n*. தவிர்ப்பு சொல்லுதல், உபயோகித்தல் ; — de sa bonne foi நல்ல எண்ணத்துடன்.

Excipient, *m*. அஸ்திவாரம், மூலம், மருந்துசேரத்தக்க பொருள். [சாவடி.

Excise, *f*. சிலபானத்தீர்வை, சுங்கச்

Exciser, *v. a*. Excision, *f*. அறுப்பு, சேதனம், வெட்டுதல்.

Excitabilité, *f*. உணர்ச்சியுள்ள —, தூண்டப்படுந் தன்மை.

Excitable, *adj*. தூண்டப்படக்கூடிய, சுவரணை —, உணர்ச்சியுள்ள.

Excitant, *part*. தூண்டுகிற. ‖ *m*. தூண்டுமருந்து.

Excitateur, — trice, *s*. தூண்டுகிறவன், கிளப்புகிறவன்,— வள். ‖ *m*. தூண்டுகோல், — காரணம்.

Excitatif, *adj*. தூண்டுவதற்குரிய. ‖ *m*. தூண்டுமருந்து.

Excitation, *f*. தூண்டுதல், கிளப்புதல், தூண்டுமருந்து. [பட்ட.

Excité, *part*. தூண்டின, கிளப்ப...ப்

Excitement, *m*. Exciter, *v. a*. சுவரணை, தூண்டுதல், கிளப்புதல், மூட்டுதல், எழுப்புதல், ஏவுதல், பிறப்பித்தல், வருவித்தல், உண்டாக்குதல், உருக்க —, தைரிய —, கோபப்படுத்துதல். ‖ s'— துணிதல், துணிவுகொள்ளுதல் , ஒருவனொருவனை —, தன்னைத் தூண்டுதல், தைரிய —, கிளப்பப்படுதல். [கிற.

Exclamatif, *adj*. வியப்பின், கூவென்

Exclamation, *f*. வியப்பு, — ச்சொல், ஓகோ —, கூவெனல், வியப்புள்ள குரலெழுச்சி, ஆர்ப்பரிப்பு, வியப்பலங்காரம் : point d'— வியப்புக்குறி.

Exclamer, *v. n*. *et* s'Exclamer, *v. pro*. கூவெனல், ஒலிடுதல், வியத்தல்.

Exclure, *v. a*. விலக்குதல், நீக்குதல், தள்ளிவிடுதல், அகற்றுதல், துரத்துதல், தவிர்த்தல், கழித்தல், ஒவ்வாமல் —, இசையாதிருத்தல். ‖ s'— ஒன்றோடொன்றை நீக்குதல், விரோதமாய் —, ஒவ்வாதிருத்தல். [கிற, நீக்குகிற.

Exclusif, *adj*. விலக்குகிற, தவிர்ச்

Exclusion, *f*. விலக்கம், நீக்கம், தள்ளுபடி, தவிர்ப்பு : à l'— de தவிர, ஒழிய, நீங்கலாக.

Exclusivement, *adj*. நீங்கலாக, தவிர, உட்படாமல், மாத்திரமே ; — à tout எல்லாத்தையுநீக்கி ; cela m'appartient — அது எனக்குமாத்திரமே சொந்தமாம்.

Exclusivisme, *m*. விலகிநிற்கும் குணம், விலகிநிற்கும் தன்மை, ஒவ்வாமை.

Excæcaria agallocha, தில்லை (மரம்.)

Excommunication, *f*. சாபம், சபைவிலக்கம், — நீக்கம், திருச்சபைக்குப் புறம்பாதல், பகிஷ்காரம்,

Excommunié, *part. et s*. திருச்சபைக்குப் புறம்பாக்க —, சபிக்கப்பட்ட, — பட்டவன்...

Excommunier, *v. a.* திருச்சபைக்குப் புறம்பாக்குதல், விலக்குதல், பகிஷ்கரித்தல், சபித்தல், சாபமிடுதல்.

Excoriation, *f.* இலேசானகாயம், — தோலுரிவு.

Excorier, *v. a.* இலேசாய்த் தோலுரித்தல், உரித்தல். || s'— மேல் தோலுரிதல்.

Excortication, *f.* **Excortiquer**, *v. a.* பட்டையெடுத்தல், — யுரித்தல்.

Excrément, *m.* மலம், நரகல், கஷ்டம், பீ, அமேத்தியம், கழிவு, அசுத்தம், அழுக்கு.

Excrémenteux, **Excrémentiel**, *adj.* கஷ்டத்தின், மலத்துக்கடுத்த.

Excréteur, *adj. m.* **Excrétoire**, *adj.* கழிதற்குரிய.

Excrétion, *f.* **Excréter**, *v. a.* கழிவு, கழிதல், மலம், மலசுத்தி : — des arbres மரக்கழிவு, பிசின்.

Excroissance, *f.* கழலை, — க்கட்டி, காய், அதர், புடைப்பு, திரட்சி.

Excursion, *f.* வெளியேதிரிதல், — உலாவல், வெளியோட்டம், — பவனி, — பயணம், பகைவர்நாட்டிற் —, நாட்டிற்பாய்தல். || பேச்சுவிலக்கு, — த்தவறு : cercle d'— கிரகத்தின் அதிக பெரிய விக்ஷேபங் குறிக்குமண்டலம்.

Excursionniste, *adj. et m.* வெளிநாட்டில் திரிகிறவன், பயணம் செய்கிறவன்.

Excusable, *adj.* மன்னிப்புக்குரிய, குற்றமில்லையெனத்தக்க.

Excuse, *f.* போக்கு, சாக்கு, — போக்கு, நியாயம், சாட்டு, சறுக்கு. || மன்னிப்பு : alléguer une — போக்கு சொல்லுதல் ; faire — ou des — மன்னிப்புகேட்டல்.

Excuser, *v. a.* (ஒருவனுக்காக) நியாயம்—, போக்குசொல்லுதல், குற்றமில்லையென்று காட்டுதல். || போக்கு—, நியாயமேற்றுக்கொள்ளுதல், — அங்கீகரித்தல், மன்னித்தல், பொறுத்தல், மன்னிப்பித்தல், போக்காதல், போக்காக உதவுதல். || s'— தன்பேரிற் குற்றமில்லையென்னல், போக்கு —, சாக்கு —, நியாயஞ்சொல்லுதல், மன்னிப்புகேட்டல், தன்னாலேயாகாதென்னல்.

Exéat, *m.* விடை, வேறேவிசாரணை நாட்டிற்சேர —, வேறிடத்திற் பட்டம் பெற —, போக உத்தரவு.

Exécrable, *adj. V.* Abominable.

Exécrablement, *adv.* அருவருப்புக்குரிய —, அடாதவிதமாய்.

Exécration, *f.* வெறுப்பு, அருவருப்பு, உக்கிரமான —, பகை, வற்மம், அரோசிகம், சபிப்பு, திட்டு, பிரதிஷ்டையிழப்பு ; être en — வெறுக்க —, பகைக்கப்படுதல் : avoir, tenir en — ou

Exécrer, *v. a.* வெறுத்தல், அருவருத்தல், பகைத்தல், சபித்தல், திட்டுதல். || s'— தன்னை —, தங்களைப் பகைத்தல்... [கூடிய.

Exécutable, *adj.* நிறைவேற்றக்

Exécutant, — e, *s.* சங்கீதம்பாடுபவன், — வள், சங்கீத —, வாத்தியக்காரன், — காரி.

Exécuter, *v. a.* நிறைவேற்றுதல், தீர்த்தல், முடித்தல், பண்ணுதல், செலுத்துதல், அநுசரித்தல், (பணிக்குபார்த்து) செய்தல், (வாத்தியம்) வாசித்தல், கொலைசெய்தல், — படுத்துதல், மரணத் தீர்வை நிறைவேற்றுதல், சாமான் பறித்து விற்றல் || s'— நிறைவேறுதல் ; — soi-même அரியகடமையை —, தன் கடனைத் தீர்த்தல், தன்னாஸ்தியை விற்றல், — கையளித்தல்.

Exécuteur, — trice, *s.* நிறைவேற்றுகிறவன், செலுத்துகிறவன், — வள் : — testamentaire மரணசாதனத்தை நிறைவேற்றுகிறவன் ; l'—de la haute justice நீதிக்கொலை —, கொலைக்காரன், மழுவரசன்.

Exécutif, *adj.* (கட்டளை) நிறைவேற்றுவிக்கிற. || *m.* சட்டநிர்வாகம், ஆளுகை, அதிகாரம்.

Exécution, *f.* நிறைவேற்றம், செய்கை, செலுத்துதல், முடிப்பு, நிறைவேற்றும் வகை. || மரணத்தீர்வை நிறைவேற்றம், கொலை : mettre à — நிறைவேற்றுதல் ; homme d'— துணிகரச் செய்கை முடிக்கத்தக்கவன்.

Exécutoire, *adj.* நிறைவேற்றத்தக்க, தீர்வை நிறைவேற்றத் தத்துவங்கொடுக்கிற, ஆஸ்திப்பறிப்புக்குரிய. || *m.* தீர்வைநிறைவேற்றக் கட்டளை.

Exèdre, *m.* கல்விமான்கள் சங்கம், — கூடுமிடம்.

Exégèse, *f.* தெளிவான —, விளக்கம், வியாக்கியானம், விரித்துரை.

Exégète, *m.* நீதிசாஸ்திரி.

Exégétique, *adj.* விளக்கம்—, விவரணமான, வியாக்கியானத்துக்குரிய, பயன்காட்டுகிற.

Exemplaire, *m.* மாதிரிகை, முன் —, மாதிரி, மேற்பாடம், சவுத்து. || (புத்தகமுதலியவற்றின்) பிரதி, சவாது. || *adj.* மாதிரியாகத்தக்க, மாதிரிக்குரிய, படிப்பினைக்குரிய, உத்தமமான.

Exemplairement, *adv.* சுகிர்தமாதிரி —, உத்தமமாய்.

Exemple, *m.* மாதிரி, மாதிரிகை, படிப்பனைக்கான செய்கை. || பாவனை, ஒப்பனை, அத்தாட்சி, திஷ்டாந்தம், ஒத்தசம்பவம். || உதாரணம், உதாகரணம், மேற்கோள். || *m. f.* சவுத்து, மேற்பாடம், எழுத்துமாதிரி : alléguer, citer des — அத்தாட்சி —, உதாரணங் காட்டுதல் ; chose sans — அபூர்வமான காரியம் ; faire un — மாதிரியாகத் தண்டித்தல் ; à l'— de பாவனையாக, ஒப்பனையாக, போலே ; par — உதாரணமாக, ஓகோ.

Exempt, *adj.* அற்ற, இல்லாத, தவிர்ந்த, ஒழியவிட்ட, விடுதல் —, நீங்கலான, கடமையற்ற, ஏதுவற்ற, தீர்வை —, பகுதியில்லாத, மேற்றிராணியாராதீனத்துக்கு நீங்கலான. || *m.* காவல் தலைவன் பதிலாளி, ஊரதிகாரி, ஆதீனத்துக்கு நீங்கலானவன். || மேற்றிராணியாரதிகாரத்துக்கு நீங்கலான குரு...

Exempté, *adj. et m.* நீங்கலான, கடனில்லாத, விடுதலையான.

Exempter, *v. a.* தவிர்த்தல், நீக்கமாக்குதல், விடையளித்தல், ஒழியவிடுதல், ஒழிந்தல், நீங்கலாகச்செய்தல், கடன்நீக்குதல், கடனில்லாதாக்குதல். || s'— நீங்கலாதல், செய்யாமல்விடுதல், கடமை —, தவிர்தல்.

Exemption, *f.* தவிர்ப்பு, நீக்கம், ஒழிப்பு, விடுதலை, விடை, விசேஷ உத்தரவு, சேவககடமை —, ஆக்கினை நீக்கம்.

Exéquatur, *m.* நிறைவேற்றக் கட்டளை, தத்துவசாதனம், உத்தரவு.

Exercé, *part.* பழகின, தேர்ந்த, பரீட்சை —, அப்பியாசமுள்ள.

Exercer, *v. a.* பழக்குதல், பரீட்சித்தல், பழக்க —, அப்பியாசப்படுத்துதல், பயிற்றுதல், படிப்பித்தல், பிரயாசமிடுதல், இடுதல். || சோதித்தல். || பிரயோகித்தல், உபயோகித்தல். || நடப்பித்தல், நடத்துதல், செலுத்துதல், உத்தியோகஞ் —, செய்தல், பண்ணுதல், தீர்வை வாங்க வியாபாரவீடுகளைச் சோதித்தல் : — un droit சுதந்தரத்தை அநுஷ்டித்தல் : — la patience பொறுமை பரீட்சித்தல், — சோதித்தல் ; — le brigandage கொள்ளையாடுதல், — த்தொழில்செய்தல். || s'— பழகுதல், அப்பியாசமாதல், — பண்ணுதல், படித்தல், முயலுதல், பரீட்சித்தல், முயற்சிசெய்தல்.

Exercice, *m.* முயற்சி, பயிற்சி, அப்பியாசம், பழக்கம், வழக்கம், பிரயத்தனம். || அலுவல், உத்தியோகம், வருத்தம், பிரயாசம், உழைப்பு, தொந்தரை, கவலை. || செலுத்துதல், நடத்துதல், தீர்வைக்கணக்கு முடிக்கவேண்டியத வணை, (ஆயக்காரராலாகிற) வியாபார வீட்டு—, வீட்டுப்பரிசோதனை. || பரீட்சை. || சாஸ்திரங்களின்பேரிற் சம்பாஷணை : — militaire கவாத்து, ஆயுத—, போர்ப்பரீட்சை ;— du corps சரீரமுயற்சி; — du cheval குதிரையேறுதல், சவாரி ; — spirituel ஞானமுயற்சி ; — des vertus புண்ணியங்களினநுசாரம் ; entrer en — உத்தியோகஞ்செய்யத் துவக்குதல் ; — de ses droits தன்னுரிமையநுபவம் ; — du fusil, à feu துப்பாக்கியப்பியாசம், — பரீட்சை.

Exérèse, *f.* அந்நியவஸ்து பிடுங்கல், — பொருள்நீக்கம்.

Exergue, *m.* (நாணயத்தில் தேதி வருஷமுதலியவற்றின்) பதிவுக்குவிட்ட இடம், ஷை இடத்துப்பதிவு, தேதி, விருதெழுத்து.

Exfoliation, *f.* செதிளாய்ப் பிரிகிற எலும்பின் பங்கு, — இசடு, சிலாம்பு, காய்ந்த செதிளாய்க் கிளம்பும் பங்கு, இலையாயுதிரும்பூண்டின் துண்டு.

Exfolier, *v. a.* செதிளாய் —, இலையாய் —, சிம்பாய்க் கிளப்புதல், —விழுதல், ஓர் செடியை இலையிலையாய் கழித்தல்.

Exhalaison, *f.* ஆவி, புகை, தூமம், [வாசனை, துர்க்கந்தம்.

Exhalation, *f.* வீசுதல், ஆவிவிடு

தல், சுவற்றுதல், நீராளமிடமாறுதல், (பூண்டு) உதவாதவாயுபுறம்பாக்குதல்.

Exhalé, *part.* ஆவியாய்ப்போன, வீசின.

Exhaler, *v. a.* வீசுதல், (சுவாசம் —, மணம் —, ஆவி) விடுதல், — இடுதல், பரப்புதல், சிதறுதல், ஆவியாய்ப்போக்குதல். ‖ வெளி —, வழி —, போகவிடுதல் ‖ வெளிப்படுத்துதல், பிரசித்தமாக்குதல், தெளிவித்தல், சொல்லுதல்: — une odeur agréable சுகந்தம் வீசுதல், மணத்தல், பரிமளித்தல்; — une mauvaise odeur துர்க்கந்தம் வீசுதல், நாறுதல்; — le dernier soupir கடைசிச் சுவாசம் —, ஆவி —, உயிர்விடுதல்; — sa fureur தன்கோபவெறி வெளிவிடுதல். ‖ s'— ஆவியாய்ப்போதல், சுவறுதல், சிதறிப்போதல், வெளிப்படுதல், —யாதல், வீசுதல்.

Exhaussement, *m.* மேடு, உயரம், உயர்ச்சி.

Exhausser, *v. a.* உயர்த்துதல், எழுப்புதல்.

Exhaustion, *f.* சமைவு, தளர்வு, இளைப்பு, முயற்சித்தாழ்வு.

Exhérédation, *f.* சுதந்தர நீக்கம், — நீக்கமானதன்மை, *ou*

Exhéréder, *v. a.* சுதந்தரநீக்குதல், — உரிமைக்குப் புறம்பாக்குதல்.

Exhiber, *v. a.* ஒப்பித்தல், காண்பித்தல், காட்டுதல்.

Exhibiteur, *m.* வேடிக்கைகாட்டுகிறவன்.

Exhibition, *f.* ஒப்பிப்பு, காட்டல், ஆடம்பரம், பிரசித்தம், வேடிக்கை.

Exhilarant, *adj.* சந்தோஷமுண்டுபண்ணும், அக்களிப்புண்டாக்கும்.

Exhortation, *f.* புத்திமதி, ஏவுதற்குரிய —, ஞான —, பிரசங்கம். ‖ புத்தி, போதம், ஏவல்.

Exhorter, *v. a.* ஏவுதல், தூண்டுதல், புத்திமதி —, புத்திசொல்லுதல்; — à la mort, à mourir சாவுக்கு ஆயத்தப்படுத்துதல். ‖ s'— ஒருவரொருவரை —, தன்னை ஏவுதல், — தூண்டுதல்.

Exhumation, *f.* Exhumer, *v. a.* கல்லறையினின்று —, பூமியினின்றெடுத்தல். ‖ ஞாபகப்படுத்துதல், நினைப்புக்குவருவித்தல்.

Exigeant, *adj.* அதிக சாக்கிரதை — கவலைகேட்கிற.

Exigé, *part.* அகத்தியமாய்க் கேட்ட.

Exigence, *f.* அவசரம், தேவை, தறுவாயினவசியம், அகத்தியமாய்க் கேட்டல், — கேட்கிறகுணம், கட்டாயம்: selon l'— du cas சமயத்தினவசியத்துக்குத் தக்கது.

Exiger, *v. a.* அவசியமாய் —, கட்டாயமாய் —, கேட்டல், வேண்டியிருத்தல். ‖ s'— கட்டாயமாய்க் கேட்க —, கேட்கப்படுதல், தேவையாயிருத்தல்.

Exigibilité, *f.* அகத்தியமாய்க் கேட்கத்தக்க தன்மை.

Exigible, *adj.* அகத்தியமாய்க் கேட்கத்தக்க.

Exigu, *adj.* அற்ப, கொஞ்ச, சின்ன, சொற்ப, போதாத.

Exiguïté, *f.* அற்பம், சொற்பம், சிறுமை, நெருக்கம்.

Exil, *m.* பரதேசம், சுயதேசநீக்கம், — நிற்கிரகம், — விலக்கு, தேசத்துக்குப்புறம்பாக்குதல், பிறதேசத்துக் கேற்றுதல், பரதேசிதன்மை, விவாசம், விவாசனம்; பரதேச — பிரியமற்றவாசம், அரமனை —, இராசதான நீக்கம், — விலக்கம்.

Exilé, *part. et s.* சுயதேசத்துக்குப் புறம்பாக்க —, தள்ளப்பட்ட, — பட்டவன், பரதேசி.

Exiler, *v. a.* பரதேசத்துக் கனுப்புதல், பிறதேசத்துக் கேற்றுதல், — ஏற்றிவிடுதல், சுயதேசத்துக்குப் புறம்பாக்குதல், நீக்குதல், துரத்துதல், தள்ளிவிடுதல். ‖ s'— பரதேசத்துக்குப்போதல், நீக்குதல், அகலுதல்.

Existence, *f.* இருக்கை, இருப்பு, ஸ்திதி, நிலை, நிலைமை, உண்மை, இருக்குந்தன்மை. ‖ சீவியம், சீவியகாலம், சீவிக்கும் வகை, சீவனம்.

Exister, *v. n.* இருத்தல், உண்டாயிருத்தல், நிற்றல், நிலைத்தல், பிழைத்தல், சீவித்தல்: le monde existe உலோகமுண்டு.

Exocet. *m.* பறக்கிறமீன், கோலா, — மீன், எமின்கோலா.

Exode, புறப்பாடு, மோயீசனிரண்டாமாகமம்.

Exonération, *f.* சுமை—, கடமை நீக்கம்,— தவிர்ப்பு.

Exonérer, *v. a.* சுமை—, கடமை நீக்குதல்,— தவிர்த்தல்,— ஒழித்தல். || s'— கடமை நீக்குதல், — தவிர்தல் : s'— d'une dette கடன் சுமையை நீக்குதல்.

Exophtalmie, *f.* கண்பிதுக்கம்.

Exorable, *adj.* மன்றுட்டுக் கிணங்குகிற, — அமருகிற, இளகுகிற, சனுவான.

Exorbitant, *adj.* மிஞ்சின, அதிகமான, அதிமிச்சம்—, மிகுதியான.

Exorcisation, *f.* Exorciser, *v. a.* பேய் ஓட்டுதல், — ஓட்ட மந்திரித்தல், மந்திரத்தாற் பேயகற்றுதல், உச்சாடனம்பண்ணுதல்.

Exorcisme, *m.* பேய் ஓட்டும் மந்திரம், — சடங்கு, உச்சாடனம், மாந்திரியம்.

Exorciste, *m.* மந்திரத்தாற் பேய் —, பேய் ஓட்டுகிறவன், — ஓட்டி, — ஓட்டும் பட்டமுள்ளவன், மந்திரவாதி, மாந்திரிகன்.

Exorde, *m.* பிரசங்க முகவுரை,— முகனை,— பாயிரம்.

Exostose, *f.* எலும்பின் வீக்கம்.

Exotérique, *adj.* வெளி—, புறம்பான, பிரசித்த (போதனை).

Exothermique, *adj.* அனல் உண்டாக்கும், சூட்டைப் பிரிக்கும்.

Exotique, *adj.* அந்நிய, பிறதேச, பிறதேசத்தினின்று வந்த.

Exotisme, *m.* பிறதேச சம்பந்தமான விஷயம், தன்மை.

Expansibilité, *f.* விரியத்தக்க —, விரியுந் தன்மை.

Expansible, *adj.* விரிய—. அகலத் தக்க.

Expansif, *adj.* விரிய—, பரம்பத்தக்க. || தன்மனங்காட்டுகிற.

Expansion, *f.* விரிவு, விரிதல், படர்ச்சி, நீட்சி. || திறந்தமனம், மனத்தாராளம், தன்மனங் காட்டுதல்.

Expatriation, *f.* சென்மதேசம் விடுதல்,— விடுவித்தல், வலசை, பரதேச வாசம், விவாசனம்.

Expatrier, *v. a.* சென்மதேசம் விடுவித்தல்,— தேசத்துக்குப் புறம்பாக்குதல், பரதேசப்படுத்துதல். || s'— சென்மதேசம் விடுதல்.

Expectant, *adj.* உத்தியோக ஒழிவுக்கு ...) காத்திருக்கிற, நம்பிக்கையுள்ள.

Expectation, *f.* காத்திருத்தல், சுவாபமுயற்சிக்குக் காத்திருக்கிறவைத்தியமுறை.

Expectative, *f.* காத்திருக்கை, வார்த்தைப்பாட்டிலூன்றிய—, நம்பிக்கை, இறப்பவனுத்தியோகத்தின் சுதந்தரவுரிமை, ஷை உரிமைகொடுக்கும் அர்ச். பாப்புவின் நிருபம், சாஸ்திரி பட்டமடைவதற்குச் சோதிப்புத் தர்க்கம் ; être sur l'—, vivre dans l'— வாக்குத்தத்தத்தில் ஊன்றிக் காத்திருத்தல்.

Expectorant, *adj. et m.* துப்பலை வருவிக்கும், — வருவிக்கு மருந்து.

Expectoration, *f.* துப்பு, *ou*

Expectorer, *v. a.* துப்புதல், சளி—, கக்குதல், காலுதல், காறுதல்.

Expédient, *m.* உபாயம், உபாயதந்திரம், வயணம், வகை, வழி, போக்கு, சூக்ஷம். || *adj.* தக்க, தகுந்த, தகுதி—, சரியான : être—தகுதல், நல்லதாய்—, தகுதியாயிருத்தல்.

Expédier, *v. a.* சீக்கிரமாய்த் தீர்த்தல்,— செய்தல்,— முடித்தல்,— நடத்துதல், தீவிரித்தல், (ஒருவன்) காரியத்தை முடித்தல்,— முடித்து அனுப்புதல். || கொல்லுதல், சாகடித்தல், நஷ்டப்படுத்துதல், சீக்கிரமாய்ச் செலவழித்தல், செலவு பண்ணுதல். || (சாதகத்தின் ...) பிரதி எழுதுதல்,— எழுதிக் கொடுத்தல். || அனுப்புதல், அனுப்பிவிடுதல்.

Expéditeur, *m.* சரக்குகளை யனுப்புகிறவன்.

Expéditif, *adj.* சுறுக்கு—, வேகம் —, முயற்சி—, சுறுசுறுப்புள்ள, சீக்கிரம்—, தீவிரமான.

Expédition, *f.* முடிப்பு, நடப்பிப்பு, விசாரணை, தீர்த்தனுப்புதல், அனுப்பு, அனுப்புதல், கையளிப்பு. || சுறுக்கு, சுறுசுறுப்பு, தீவிரம், முயற்சி. || தூர—, சண்டை,— முஸ்திப்பு, தவுடு, தூர யாத்திரை. || துணிகர —, அவிவேக—, ஏற்பாடு. || சாதகத்தின் பிரதி,— சவாது. || *pl.* காகிதங்கள், கட்டளைகள், ஏவல், போதகங்கள் : homme d'— சுறுக்கு —, முயற்சி—, துணிகரமுள்ள மனுஷன்.

Expéditionnaire, *m.* பிரதி எழுதுகிறவன், — பெறுவிக்கிறவன், சரக்குகளை யனுப்புகிறவன். || *adj.* armée — சண்டைக்குப்போகிற படை.

Expérience, *f.* பரீக்ஷை, பரிட்சை, பழக்கம், அப்பியாசம், தேர்ச்சி. || பரீட்சை, சோதனை.

Expérimental, *adj.* பரீட்சிக்கிற, பரீட்சையி லூன்றிய.

Expérimentalement, *adv.* பரீட்சித்து, சோதனையாய்.

Expérimentateur, *m.* பரீட்சிக்கிறவன், பரீட்சைபண்ணுகிறவன்.

Expérimentation, *f.* பரீட்சை, பரீட்சித்தல், சோதனை.

Expérimenté, *adj.* தேர்ந்த, பரீட்சை—, அப்பியாசமுள்ள.

Expérimenter, *v. a.* சோதித்தல், பரீட்சித்தல், பரீட்சை—, சோதனைபண்ணுதல்.

Expert, *adj.* தேர்ந்த, பரீட்சை—, அப்பியாசமுள்ள. || *m.* தேர்ந்தவன், மதிப்பு—, விசாரணைக்காரன், பிரயோகி, அப்பியாசி.

Expertement, *adv.* திறமையுடன், சாதுரியமாய்.

Expertise, *f.* மதிப்போர் விவரம், தேர்ந்தவர்களின்—, மதிப்பு.

Expertiser, *v. a.* தேர்ந்தவர்கள்—, மதித்தல். || s'— தேர்ந்தவர்களால் மதிக்க—, மதிக்கப்படுதல்.

Expiable, *adj.* நிவர்த்தி—, பரிகாரம்—, பிராயச்சித்தமாகத்தக்க.

Expiateur, **— trice**, *adj.* பரிகரிக்கிற, பிராயச்சித்தமான, பரிகாரமாக்குகிற.

Expiation, *f.* பிராயச்சித்தம், நிவாரணம், நிவிர்த்தி, பரிகாரம், பரிகாரபலி,— தபசு.

Expiatoire, *adj.* பரிகார, நிவாரண, பிராயச்சித்தத்துக்குரிய.

Expié, *part.* நிவிர்த்தி—, பரிகாரமான.

Expier, *v. a.* பரிகாரம்—, நிவிர்த்தி—, பிராயச்சித்தம்—, விமோசனம் பண்ணுதல், பரிகரித்தல், தீர்த்தல். || s'— பிராயச்சித்தம் —, பரிகாரம் —, நிவிர்த்தியாதல், தீர்தல்.

Expirant, *part.* உயிர்—, சுவாசம் விடுகிற, சாகிற, அழிகிற.

Expirateur, *adj.* சுவாசம் விடுதற் குரிய (நரம்பு.)

Expiration, *f.* சுவாசம்விடுதல், நிசுவாசம், இரேசகம். || முடிவு, இறுதி, ஈறு. || கெடு, தவணை, கெடுவின் முடிவு, தவணையிறுதி :— d'un bail குத்தகை முடிவு ; — d'une dette கடனைத் தீர்க்குந் தவணை.

Expirer, *v. a.* சுவாசம்விடுதல், இரேசித்தல். || *v. n.* கடைசி மூச்சு—, உயிர்—, சீவனைவிடுதல், சாதல், மரித்தல். || முடிதல், தீருதல், ஒழிதல்.

Explétif, *adj.* அசைச்சொல்லான, அசைநிறைக்கிற. || *m.* அசைநிறை,—ச்சொல்,— நிலை.

Explicable, *adj.* விளக்கக்கூடிய, விளக்குதற் கெளிதான.

Explicateur, *m.* தெளிவிக்கிறவன், விளக்குகிறவன், வியாக்கியானி.

Explicatif, *adj.* விளக்குகிற, விபரமுள்ள.

Explication, *f.* வியாக்கியானம், விளக்கம், விபரம், விரித்துரை, உரை, —விவரிப்பு, தெளிவிப்பு, தெளிவிக்கு நியாயம், நியாயவிளக்கம், நியாய மொப்பித்தல், சண்டை தீர்ப்பதற்குரிய விபரம்.

Explicite, *adj.* விளக்கம் —, திட்டம்—, விபரம்—, தெளிவான.

Explicitement, *adv.* விளக்கம்—, திட்டம்—, விபரமாய்.

Expliquer, *v. a.* விளக்குதல், விவரித்தல், தெளிவித்தல், தெளிவாக்குதல், வெளிப்படுத்துதல், விவரித்துக் காட்டுதல், தன்நியாயஞ்—, நியாயம் —, காரணஞ்சொல்லுதல், — காட்டுதல். || வியாக்கியானம் பண்ணுதல், விரித்துரைத்தல், பயனுரைத்தல், அர்த்தம் —, உரை —, பதவுரை சொல்லுதல், உரைபண்ணுதல், மொழி பெயர்த்தல். || s'— தன்கருத்து—, தன்நியாயங்களை —, தன் ஆலோசனைசொல்லுதல், பிரசித்தம்—, தெளிவாதல், வியாக்கியானமாதல்.

Exploit, *m.* பராக்கிரமம், வீரியம், செயம், அருஞ்—, வீரச்செய்கை, ஆண்தொழில். || அழைப்புப்பத்திரம்.

Exploitable, *adj.* பயிரிட—, உழத்தக்க, வேலைக்குரிய. || நடுவர் கட்டளையாற் பிடிபட—, விற்பனையாகத்தக்க.

Exploitant, *part.* அழைப்புப்பத்திரங் கொண்டுபோகிற, நடுவர் கட்டளையால் ஆஸ்திபிடிக்கிற, — மறிக்கிற. || பயிரிடுகிற, இலாபத்துக்கு முயற்சி —, வேலைசெய்கிற, முயற்சிபண்ணுகிற.

Exploitation, *f.* Exploiter, *v. a.* (நிலம்) பயிரிடுதல், உழுதல், கிருஷி செய்தல், பண்படுத்துதல், செழிப்பாக்குதல், (காடு) வெட்டிவிற்றல், (சுரங்க) தாதெடுத்தல், வேலை நடப்பித்தல். || இலாபத்துக்கு முயற்சி—, துர்ப்பிரயோகஞ்—, வஞ்சித்து லாபஞ்செய்தல், பணமபகரித்தல், அநீதமாயுதவிக்கொள்ளுதல். || *v. n.* அழைப்புப் பத்திரங்கொண்டுபோதல் : — une place ஒருத்தியோகத்தினால் அநீதலாபம் பண்ணுதல். || s'— பயிரிடப்......படுதல்.

Exploiteur, *m.* பயிரிடுகிறவன், வேலை நடத்துகிறவன். || (தன் அந்தஸ்தினால்) அநீதலாபஞ்—, இலாபத்துக்கு முயற்சிசெய்கிறவன்.

Explorateur, — trice, *adj. et s.* விசாரிக்கிற, பரீட்சிக்கிற, பரிசோதிக்கிற, ஆராய்கிற. || *m.* (புதுச் சீமை...) பரிசோதிக்கிறவன், வேவுகாரன்.

Exploration, *f.* பரிசோதனை, பரிசோதிப்பு, ஆராய்வு, ஆராய்ச்சி.

Explorer, *v. a.* விசாரித்தல், சோதித்தல், பரிசோதித்தல், சுற்றிப்—, வேவு —, உளவுபார்த்தல், வியாதிநடை ஆராய்தல். || s'— சோதிக்க—, ஆராயப்படுதல்.

Exploser, *v. n.* வெடித்தல், படாரென வெடித்தல்.

Exploseur, *m.* வெடிக்குண்டுகளுக்கு நெருப்புவைக்கும் கருவி.

Explosible, *adj.* வெடிப்பதற் கேதுவான, வெடிக்கக்கூடிய.

Explosif, *m. et adj.* வெடிக்கக்கூடிய, வெடியுண்டாக்கும் குணமுடைய.

Explosion, *f.* வெடி, வெடில், வேட்டு, அதிர்வெடி, தெறிப்பு. || வேகம், வேகமான வெளிப்பாடு, பொங்குதல் : faire — வெடித்தல், வெடிவிடுதல், படாரிடுதல், படாரென வெடித்தல், வேகமாய் வெளிப்படுதல், பொங்குதல்.

Exponentiel, *adj.* உற்சூச்சிய, உற்சூசியடங்கிய.

Exportable, *adj.* எற்றுமதிக்கேற்ற, வெளியே கொண்டுபோகக்கூடிய.

Exportation, *f.* எற்றுமதி,—மதிசரக்குகள், பிறதேசத்துக்கேற்றுதல்.

Exportateur, *m.* எற்றுமதி செய்கிறவன், சரக்குகளைப் பிறதேசத்துக் கேற்றுகிறவன்.

Exporté, *part.* வெளியே கொண்டுபோக—, பிறதேசத்துக் கேற்றப்பட்ட, எற்றுமதியான.

Exporter, *v. a.* பிறதேசத்துக் கேற்றுதல்,— அனுப்புதல், எற்றுமதிபண்ணுதல். || s'— எற்றுமதியாதல், பிறதேசத்துக் கேற்றப்படுதல்.

Exposant, e, *s.* விண்ணப்பஞ் செய்கிறவன், தெளிவிக்கிறவன், — வள். || பொருள்களைப் பிரசித்த அரங்கேற்றத்துக்கு அனுப்புகிறவன். || *m.* உற்சூசி, சமிந்தானக் குறிப்பு, வர்க்ககனமுதலியவற்றின் குறி.

Exposé, *m.* வரலாற்று —, சங்கதி —, விண்ணப்ப—, விபரம். || விவரம், விளக்கம், விவரிப்பு, வரலாறு. || *part.* எதுவான, ஆபத்திலுள்ள, விவரித்த, திறக்க —, வைக்கப்பட்ட, தெருவிற் போட்ட.

Exposer, *v. a.* காண்பித்தல், விரித்தல். வெளியே வைத்தல், திறந்து—, காட்டுதல், ஸ்தாபித்தல், (குற்றவாளிகளை ...) பிரஸ்தாபம் பண்ணுதல். || வைத்தல், போடுதல், திருப்புதல். || சொல்லுதல், தெளிவித்தல், விவரித்தல், வெளி—, தெரிய—, பிரசித்தப்படுத்துதல், அறிவித்தல், எதுவாக்குதல், ஆபத்தில்வைத்தல், ஒப்புக்கொடுத்தல். || தெருவில்—, வீதியில்விடுதல்,— வைத்துவிடுதல். || பிரசித்த அரங்கேற்றத்துக்கு அனுப்புதல் : — le St. Sacrement திவ்வியநற்கருணை ஸ்தாபித்தல் : — au midi மத்தியானத்துக்குத் திருப்புதல் ; — à la rosée பனியில் வைத்தல் ; — de la fausse monnaie கள்ளநாணயம் வழங்குவித்தல் ; — sa vie தன்னுயிரை யாபத்தில் வைத்தல். || s'— காட்ட—, ஸ்தாபிக்க—, காணப்படுதல், தோன்றுதல், எதுவாதல், ஆபத்திற்குள்ளாதல், எதிராக—, துணிந்துபோதல், உட்படுதல், இடங்கொடுத்தல்.

Exposition, *f.* காட்டுதல், ஸ்தாபிப்பு, (திவ்வியநற்கருணை—அர்ச். பண்டத்தின்) ஸ்தாபகம், (குற்றவாளியின்)

பிரஸ்தாபம். || (பிள்ளை) வீதியிற் போட்டுவிடுதல். || இருக்கை, நிலை, இருப்பு, தோற்றம். || விபரம், விவரிப்பு, விளக்கம், விரித்துரை, வியாக்கியானம். || பிரசித்த அரங்கேற்றம், — அரங்கேற்றவிடம், (அதின்) நேரம்.

Exprès, *m.* ஆள், தூதன். || *adv.* மனசறிய, மனசார, வேண்டுமென்று, யோசித்து.

Exprès,—esse, *adj.* திட்டமான, நிச்சய, விசேஷ.

Expressément, *adv.* திட்டம் —, விசேஷம்—, உறுதி—, கண்டிப்பாய்.

Expressif, *adj.* அழுத்தமான, பலமுள்ள, தெளிவு —, ஊக்கம் —, உரமான.

Expression, *f.* பிழிதல், பிழிந்த சாரம். || சொல், மொழி, உச்சாரணம், வசனம், வசனநடை, பேசும் வகை. || குறிப்பு, அடையாளம், பாவனை, சாயல், வருணிப்பு, இயல்பான—, உயிருள்ள பாவனை, வேகம், உணர்ச்சி, பற்றுதல்,— காட்டுதல் : l'— de la joie சந்தோஷத்தின் குறிப்பு : réduire à la plus simple — மிகவுஞ் சுருக்குதல்,— குறைத்தல்.

Expressivement, *adv.* அழுத்தமாய், தெளிவாய், கண்டிப்பாய்.

Exprimable, *adj.* சொல்ல—, தெளிவிக்க —, விவரிக்க —, வருணிக்கக்கூடிய.

Exprimé, *part.* சொன்ன, விவரிக்க—, உச்சரிக்கப்பட்ட. || பிழிந்த.

Exprimer, *v. a.* பிழிதல், பிதுக்குதல். || சொல்லுதல், வசனித்தல், உச்சரித்தல், தெளிவித்தல், விவரித்தல், குறித்தல், வருணித்தல், பாவனை —, காட்டுதல், தோற்றுவித்தல். || s'— பேசுதல், உச்சரித்தல், சொல்ல ..ப்படுதல்.

Ex-professo, *adv.* திட்டம் —, விசேஷம்—, தொழில்—, தேர்ச்சியாய், அறிந்தவனாய்.

Expropriateur, *m. et adj.* உரிமையை இழக்கச்செய்கிறவன், உரிமையைப் பறிக்கிறவன்.

Expropriation, *f.* உரிமைநீக்கம்,— பறிப்பு,— நீக்குந் தீர்ப்பு.

Exproprié, *part.* உரிமை இழந்த, — பறிக்கப்பட்ட.

Exproprier, *v. a.* உரிமை—, ஆட்சி பறித்தல்,— நீக்குதல். [பிடிக்கத்தக்க.

Expugnable, *adj.* பலவந்தமாய்ப்

Expulser, *v. a.* நீக்குதல், வெளியே —, தள்ளுதல், துரத்துதல், புறம்பாக்குதல், கழித்தல், கழியச்செய்தல். || s'— நீக்கப்படுதல், நீங்குதல்.

Expulsion, *f.* புறம்பாக்குதல், தள்ளுதல், தள்ளுபடி, நீக்கம், கழிவு, கழிவித்தல்.

Expurgation, *f.* மரங்கள் சலாபத்தாய் வளர இடஞ்சலாயிருக்கும் மரங்களை வெட்டிப்போடுதல்.

Expurgatoire, *adj.* index — திருத்தமானமட்டும் விலக்கமான புஸ்தகத்தட்டவணை.

Expurger, *v. a.* ஓர் புஸ்தகத்தில் கெடுதியான விஷயங்களை எடுத்துப் போடுதல்.

Exquis, *adj.* உத்தம, இனிய, —சுவையுள்ள, இன்பமான, அருமையான, அரிய, உச்சித, சிறந்த, நேத்தி—, அலங்காரமான. [ள்ள, இரத்தமற்ற.

Exsangue, *adj.* இரத்தக்குறையு

Exsudation, *f.* வேர்ப்பு, *ou*

Exsuder, *v. n.* வேர்த்தல், வேர்வையாய்ப் புறப்படுதல்.

Extase, *f.* பரவசம், அவசம், விவசம். || மிகுகளிப்பு, ஆநந்தக் களிப்பு, பிரமிப்பு. மிக்க அதிசயம், மருள், சுவரணைக் கேடு : avoir des—, être en — பரவசமாதல்,— ஆயிருத்தல்.

s'Extasier, *v. pro.* பரவசமாதல், பிரமித்தல், வெகு அதிசயப்படுதல்.

Extatique, *adj.* பரவச, பரவசத்தாலாகிற, பர்வசத்துக்கு ஏதுவான.

Extemporané, *adj* உடனேயாகிற.

Extenseur, *adj.* நீட்டுகிற. *m. ou* muscle — நீட்டு நரம்பு.

Extensibilité, *f.* நீளும்—, விரியும் —, விரிவாகுந் தன்மை, பல அர்த்தமாகத்தக்க தன்மை.

Extensible, *adj.* விரிவாக —, விரியத்தக்க, நீளக்கூடிய. [கும்.

Extensif, *adj.* விரிக்கும். விரிவாக்

Extension, *f.* நீட்டல், நீடிப்பு, நீட்சி, நீளுதல், விரிவு, விசாலம், பரப்பு, விஸ்தாரம், நீளம். || (நரம்பின்) தளர்ச்சி, தளர்வு. || அதிகரிப்பு, வளர்ச்சி, விருத்தி. || அர்த்தத்தின் விரிவு,

விரிவாக்குகிற வியாக்கியானம். ‖ இழுப்பு : faire l'— சுளுக்கின உறுப்பிழுத்துப் பொருத்துதல்.

Exténuation, *f.* மெலிவு, பலவீனம், பலக்குறைவு, தளர்வு, தணிவு. [தளர்ந்த.

Exténué, *part.* மெலிந்த, குறைந்த,

Exténuer, *v. a.* மெலிவித்தல், மெலித்தல், பலவீனப்படுத்துதல், குறைத்தல், தணித்தல். ‖ s'— மெலிதல், இளைத்தல், பலவீனப்படுதல்.

Extérieur, *m.* புறம், புறம்பு, வெளி, — ப்புறம், புறத்தி, சாயல், புறக் —, கோலம், தோற்றம், வேஷம். ‖ பிறதேசங்கள், புறத்தியம் : à l'— புறத்திலே, வெளியே. ‖ *adj.* புறத்து, புறம்பான, வெளி —, புறத்தியான.

Extérieurement, *adv.* புறத்தியிலே, புறத்திலே, வெளியே, புறம்பாய், சாயலாக.

Extérioriser, *v. a.* பேருக்குமாத்திரம் இருக்கிற ஓர் விஷயத்தை உண்மையாகவே இருக்கிறதாக எண்ணிக்கொள்ளுதல்.

Extériorité, *f.* புறம்பானதன்மை.

Exterminateur, — trice, *adj.* சங்கரிக்கிற, நாசம்பண்ணுகிற. ‖ *m.* சங்காரன், சங்கரிப்போன், நிர்மூலமாக்குகிறவன். [சங்காரம், நிர்மூலம், அழிப்பு.

Extermination, *f.* நாசம், சங்கரிப்பு,

Exterminer, *v. a.* சங்கரித்தல், நிர்மூலம் —, நாசமாக்குதல், பாழ்க்கடித்தல், அழித்தல், சிதைத்தல். ‖ s' — ஒருவரொருவரைச் சங்கரித்தல், —கொல்லுதல், நாசமாதல்.

Externat, *m.* வெளிப்பிள்ளைகள்படிக்கும் —, பகல்பள்ளிக்கூடம், வெளிப்பிள்ளைத்தன்மை.

Externe, *adj.* வெளி—, புறம்பான, புறத்து, புற, புறம்பினின்று வருகிற, வெளியே தோன்றுகிற. ‖ s. வெளிப்பிள்ளை.

Exterritorialité, *f.* அந்நியநாட்டில் முறைமை முதலானவைகளுக்கு உட்படாமலிருத்தல்.

Extinctif, *adj.* அவிக்கிற, அழிக்கிற.

Extinction, *f.* அவிப்பு, அவித்தல், அவிதல், அணைப்பு. ‖ அழிவு, அழிப்பு, ஒழிவு, நிர்மூலம், நாசம், தீர்த்தல், முடிவு, நிவாரணம் : — d'une dette கடனிறுப்பு: — de voix குரலொழிவு.

Extirpateur, *m.* நிர்மூலமாக்குகிறவன், பிடுங்குகிறவன். ‖ களைகொத்து, — கொட்டு, களை —, வேர்பிடுங்குங் கருவி.

Extirpation, *f.* நிர்மூலம், நாசம், அழிப்பு, நிவாரணம், வேரோடே—, பிடுங்குதல்.

Extirper, *v. a.* வேரோடே —, பிடுங்குதல், களைதல், பறித்தல். ‖ நிர்மூலம் —, நாசமாக்குதல், நீக்குதல், அழித்தல், சங்கரித்தல், ஒழித்தல். ‖ s'— பிடுங்கப்படுதல், நிர்மூலமாதல், அழிதல்.

Extorquer, *v. a.* கட்டாயமாய் வாங்குதல், பறித்தல், கவர்தல், பிடுங்குதல், உபாயமாய் —, மிரட்டிப் பெறுதல்.

Extorqueur, — euse, *s.* பிடுங்குகிறவன், பறிக்கிறவன், — வள், இடுவந்திக் —, பறிகாரன்.

Extorsion, *f.* பலோற்காரமான —, பறிப்பு, பிடுங்கல், அபகரிப்பு, இடுவந்தி, அநியாயதண்டம்.

Extra, *m.* வழக்கமல்லாதது, — அல்லாதசெலவு, மேல்மிச்சம், முதற்றரத்தைவிட இன்னும் மேலானது.

Extracteur, *m.* பிடுங்குங்கருவி, பிழியுங்கருவி, பிடுங்குகிறவன், வடிக்கிறவன்.

Extractif, *adj.* மூலங்காட்டுகிற.

Extraction, *f.* எடுத்தல், பிடுங்குதல், கழித்தல், பெயர்த்தல் ‖ (தைலம் — சாரம்) வடித்தல், — இறக்குதல். ‖ பிறப்பு, வமிசம், குலம், கோத்திரம், மரபு. ‖ — des racines மூலம் அறிதல், — காணல்.

Extrader, *v. a.* **Extradition**, *f.* சுய அரசுக்கு—, சுயகர்த்தனுக்குக் கையளிப்பு.

Extrados, *m.* வளைவின்மேற்புறம்.

Extradossé, *adj.* voûte — மேற்புறமெதுவான வளைவு.

Extraire, *v. a.* எடுத்தல், வாங்குதல், பிடுங்குதல், பறித்தல், நின்றெடுத்தல். ‖ பிழிதல், வடித்தல், (தைலம் — சாரம்) இறக்குதல். ‖ தெரிந்தெடுத்தல், — கொள்ளுதல், நின்றுபிடித்தல், சேர்க்கை —, சங்க்ஷேபஞ் செய்தல், சுருக்குதல் ; — la racine carrée — cubique d'un nombre கணக்கின் வர்க்க — கனமூலமறிதல், — காண்டல். ‖

s’— எடுக்க —, **வாங்க** —, பிடுங்க...ப்படுதல்.

Extrait, *m.* **தைலம், சாரம்,** சாறு, வடி, சத்து. || **பெயர்த்தெழுதப்பட்டதுண்டு, தெரிவு, சேர்க்கை, திரட்டு.** || சுருக்கம், சங்க்ஷேபம், **அடக்கம்.** || நிச்சயப்பத்திரம், **அத்தாட்சிச் சீட்டு.** || கெலிக்கிற ஒரோ திருவிளச்சீட்டு புறப்படுதல், கெலிக்கிற கணக்கக்ஷரம்: — de baptême ஞானஸ்நான அத்தாட்சிச் சீட்டு. || *part.* பிழிந்த, எடுத்த, தெரிந்த, தெரிந்தெடுக்கப்பட்ட.

Extrajudiciaire, *adj.* நீதியாசன முறையற்ற, — சேராத.

Extrajudiciairement, *adv.* நீதியாசனமுறைவிட்டு.

Extralégal, *adj.* நீதிமுறைமைக்கு மேற்பட்ட, சட்ட சம்பந்தமில்லாத.

Extraordinaire, *adj.* அபூருவ, ஆச்சரியம் —, அதிசயம் —, நவம்—, நூதனமான, அரிய, வழக்கமற்ற, விசேஷ. || விபரீதம் —, பைத்தியமான, சிரிப்புக்குரிய: dépense — அதிமிச்சமான —, நினையாதசெலவு; ambassadeur— விசேஷகாரியத்துக்கு அனுப்பப்பட்ட —, விசேஷ ஸ்தானாபதி. || *m.* அபூருவ காரியம், — செலவு.

Extraordinairement, *adv.* அபூருவம் —, நூதனமாய், மிகவும், நகைப்புக்குரியவிதமாய்.

Extra-parlementaire, *adj.* பார்லிமெண்டு கூட்டத்தைச் சாராத.

Extravagance, *f.* மதிதப்பு, பைத்தியம், மதியீனம், ஒவ்வாமை, பிதற்றல்.

Extravagant, *adj. et m.* மதிதப்பின, பிதற்றல்—, பைத்தியம்—, விபரீதமான, புத்தியீனமுள்ள, மதிகெட்ட.

Extravaguer, *v. n.* பிதற்றுதல், மதிதப்புதல், ஒவ்வாமையாய்ப் பேசுதல், விபரீதமாய் நடத்தல், பைத்தியங்களைச் செய்தல், — சொல்லுதல்.

Extravasation, *f.* சிதறுதல், சிந்துதல், வழிதல்.

Extravasé, *part.* சிதறின, சிந்தின, வழிந்த.

Extravaser, *v. a.* வேறுபாத்திரத்தில் வார்த்தல்; *ou* || s’— சிதறுதல், சிந்துதல், சிதறி —, வழிந்துபோதல்.

Extrême, *adj.* கடைசி —, கடை —, எல்லை —, அந்தம் —, முனை —, நுனி —, ஈறான, அதிகதூரமான. || அத்தியந்த, பெரிய, மிகுந்த, மிகுதி —, மேலான, மட்டற்ற, அகோரமான. || மிதந்தப்பின, மிஞ்சின, எல்லைகடந்த: l’ — limite கடைசியெல்லை, கடையந்தரம்; moyens—கடைசி—, அகோர உபாயங்கள்; être — en tout எல்லாத்திலும் மிதங்கடத்தல், — தப்புதல். || *m.* மிதமிஞ்சுதல், மிகுதி, மிதத்தப்பு, மேல்மிச்சம், பாராட்டு. || அந்தம், கடை. || எதிர், விரோதம். || அந்தராசிகம், கடைக்கணக்கு; porter, pousser tout à l’— சகலமும் மிதந்தப்பிக் காட்டுதல், — பாராட்டுதல்; à l’— அதிமிச்சமாய்; les 2 — d’une proportion இரு அந்தங்கள், — தலைகள், அந்தவிராசிகங்கள்.

Extrêmement, *adv.* மெத்தவும், மிகவும், மிதந்தப்பி, மிச்சம் —, வெகுவாய்.

Extrême-onction, *f.* அவஸ்தைப்பூசுதல்.

in Extremis, *adv.* மரணவேளையில்.

Extrémité, *f.* கடைசி, முடிவு, நுனி, முனை, அந்தம், இறுதி, எல்லை. || மிதமிஞ்சுதல், மிதத்தப்பு, மிகுதி, மேல்மிச்சம், கடையந்தரம். || அவதி, ஆபத்து, அவஸ்தை, கேவலம். || அகோரம், உக்கிரம், அக்கிரமம், கோபவெறி. || சரீரநுனிகள், கைகால், அக்கிரம். || உச்சி, தலை, சிகரம்; être à l’—அவஸ்தையாயிருத்தல்.

Extrinsèque, *adj.* புற, புறத்து, வெளி —, புறம்பான.

Extrinsèquement, *adv.* புறத்தியாக, புறத்தே.

Exubérance, *f.* மிகுதி, மேல்மிச்சம், அதிகம், தாராளம்.

Exubérant, *adj.* மிதம் —, மிஞ்சின, மிச்சமுள்ள, அதிகமான, வழிகிற, மதர்க்கிற, மதர்ப்புள்ள, வீணான.

Exulcératif, *adj.* புண்வருவிக்கிற.

Exulcération, *f.* இரணம் —. புண்ணாதல்; — *ou*

Exulcérer, *v. a.* இரணம் —, புண்ணாக்குதல்.

Exultation, *f.* அக்களிப்பு, மகிழ்ச்சி.

Exulter, *v. n.* அக்களித்தல், சந்தோஷத்தினால் துள்ளுதல்.

Exutoire, *m.* பித்தமிழுக்கச்செய்யும் புண், காரத்திரி, — சேர்வை.

Ex-voto, *m.* நேர்ந்தபொருள், — படம். || பரும்படியான திருப்படம்.

F

F, ஆறுமெழுத்து.

Fa, *m.* நாலாஞ்சுரம், ம, ஷை சுரக்குறி, — நரம்பு.

Fabagelle, *f.* Fabago, *m.* ஓர் [செடி.

Fable, *f.* கதை, கட்டு —, பொய்க்கதை, ஒவ்வாதசரித்திரம். || பொய், அபத்தம். || பொய்த்தேவர்களின் சரித்திரம். || காப்பிய —, நாடகப்பொருள் : être la — du public சனத்தால் பழிக்கப்படுதல்.

Fabliau, *m.* கவியானபழையகதை.

Fablier, *m.* கதைப்புலவன், — யாசிரியன், — ச்சேர்க்கை, கதாமஞ்சரி.

Fabricant, e, *s.* செய்கிறவன், செய்விக்கிறவன், நெய்விக்கிறவன், காருகன்.

Fabricateur, *m.* செய்கிறவன், உண்டாக்குகிறவன், கட்டுகிறவன், செய்விக்கிறவன், நெய்விக்கிறவன், காரகன்.

Fabrication, *f.* செய்தல், உண்டாக்குதல், கட்டுதல், செய்யும்வகை, — வித்தை, காருகம், கைவினை.

Fabricien, Fabricier, *m.* கோவில் மணியக்காரன்.

Fabrique, *f.* கோவில்மணியம், — மணியக்காரர், — சாமான், — ஆஸ்தி, — வருமானம், கோவிலின் வரவு செலவு விசாரிக்குஞ் சங்கம். || செய்தல், உண்டாக்குதல், பட்டடை, ஆலை, ஆலையாட்கள், செய்யுமிடம், — விதம், — தொழிலாளிகள், வேலை, கைவினை. || கட்டல், கட்டு, — வேலை, — க்கோப்பு, (கோபுரம் — குடிசை — இடிசல் முதலியது): — de cancans மிகுந்த புறணிசொல்லுமிடம் ; homme de même — சரியொத்தமனுஷன்.

Fabriquer, *v. a.* செய்தல், பண்ணுதல், உண்டாக்குதல், கட்டுதல். || செய்வித்தல், நெய்வித்தல், ஆலைநடப்பித்தல். || கற்பித்தல், கட்டுதல், பாவித்தல்: — un testament கள்ளமரணசாதனஞ்செய்தல்.

Fabuleusement, *adv.* கதை —, பொய் —, அபத்தமாய். || அபூருவமாய், நம்பக்கூடாதவிதமாய்.

Fabuleux, *adj.* கட்டுகதை —, கதை —, பொய் —, அபத்தமான, கள்ள. || அபூருவமான, நம்பக்கூடாத: temps — நிச்சயசரித்திரமற்றகாலம், பொய்த்தேவர் —, கதைவீரர்காலம். || *m.* கட்டுகதை.

Fabuliste, *m.* கதைக்காரன், — ஆசிரியன், — கட்டுகிறவன்.

Façade, *f.* முகப்பு, முன்புறம்.

Face, *f.* முகம், வதனம், ஆநநம், முன்பு. || பக்கம், முன்புறம், முகப்பு. || சந்நிதி, சமுகம், முகதா, எதிர். || மேற் —, பரப்பு. || நிலை, அந்தஸ்து, தன்மை, வகை. || நோக்கம், தோற்றம், சாயல், பார்வை. || நெற்றிமயிர். || (படங்களில்) முகத்து நீளம். || முதற்கடுதாசி: faire — எதிர்த்து நிற்றல், எதிராய் —, போதுமாயிருத்தல்; à la — முன்பாக, சமுகத்தில், முகதாவில்; en — எதிரே, நேராய், முகதாவில், முகத்தில், அஞ்சாமல்; de — முன்னிலையில், முன்பாக, முழுமுகமாய்; — à — முகமுகமாய்.

Facé, *adj.* முகம் —, சாயலுள்ள.

Facer, *v. a.* பணம் வைத்த சூதுக்கடுதாசி கொண்டிருத்தல்.

Facétie, *f.* பகிடி, பரியாசம், பகிடியான —, வீண்பேச்சு.

Facétieusement, *adv.* பகிடி —, கேலி —, பரியாசமாய்.

Facétieux, *adj.* பகிடி —, பரியாசமுள்ள, — சொல்லுகிற, கேலிக்காரன், — பிரியன்.

Facette, *f.* சிறுபக்கம், சிற்றரங்கு.

Facetter, *v. a.* பல சிறுபக்கமாக வெட்டுதல்.

Fâché, *part.* மனஸ்தாபம் —, கோபமுள்ள.

Fâcher, *v. a.* கோபப்படுத்துதல், மனத்தாங்கல் —, மனஸ்தாபம் —, விசனம் —, கோபம் —, எரிச்சல்வருவித்த. || se — கோபித்தல், சினத்தல், கஸ்தி —, மனஸ்தாபப்படுதல், முறிதல். || *v. uni.* il me fâche கஸ்தி —, விசனப்படுகிறேன்.

Fâcherie, *f.* சச்சரை, கோபம், மனஸ்தாபம், கஸ்தி, முறிவு, பிரியவீனம்.

Fâcheusement, *adv.* கஸ்தியாய், சஞ்சலத்துக்குரியவிதமாய்.

Fâcheux, *adj.* சஞ்சலத்துக்குரிய, கஸ்தி —, ஆயாசம் —, தொந்தரை—,

வருத்தமான, பிரியமற்ற. || *m.* அலட்டு —, தொந்தரைக்காரன்.

Facial, *adj.* முகத்து.

Facies, *m.* நோக்கம், சாயல்.

Facile, *adj.* எளிதான, எளிசு —, சுளுவு —, சுலபமான, தடை —, வருத்தமில்லாத. || தாக்ஷணியம் —, இளக்காரம்—, தயவுள்ள.

Facilement, *adv.* எளிதாய், சுலபம் —, சுளுவாய், தடை—, வருத்தமின்றி.

Facilité, *f.* எளிது, எளிசு, சுளுவு, சுலபம், வருத்தமின்மை, பேச்சுத்தாராளம், கெட்டித்தனம், சாமர்த்தியம், இயல்பான —, தகுதி. || தயவு, இளக்காரம், தாட்சணை, இணக்கம், தயை || *pl.* கெடு, தவணை, தாமதம்.

Faciliter, *v. a.* எளிது —, எளிசாக்குதல்.

Façon, *f.* செய்யும் —, செய்த —, செய்விதம், — வகை, — வேலை, கூலி. || (நிலத்தின்) உழ்வு, கொத்து, பயிற்சி. || மாதிரி, விதம், வகை, தரம், முறை, மேனா, சாயல், தோற்றம், கோலம், போங்கு, வழக்கம். || *pl.* நடை, ஒழுக்கம், போக்கு. || மிஞ்சினமரியாதை, — ஆசாரம். || கப்பலின் கீழ்ப்புறக்குறைவு: payer la — d'un habit ஓர் வஸ்திரஞ்செய்த கூலிகொடுத்தல்; bonne — நல்ல சாயல்; sans — மிஞ்சின மரியாதையின்றி, சிநேகிதமுறையாய்.

Faconde, *f.* வாசாலம், பேச்சுத் தாராளம்.

Façonner, *v. a.* Façonnement, *m.* உருவாக்குதல், வேலைசெய்தல், செப்பனிடுதல், (மரஞ்) செலுத்துதல், (கல்) கொத்துதல், (நிலம்) உழுதல், சிறப்பித்தல், பயிற்சிசெய்தல், திருத்துதல், அப்பியாசமாக்குதல், பழக்குதல், மிஞ்சினமரியாதை செய்தல். || se — பழகுதல், அப்பியாசமாதல், திருந்துதல், உருவாதல், பண்படுதல்.

Façonnier, *adj.* மிஞ்சின மரியாதையுள்ள, — செய்கிற, எடுப்பான.

Fac-simile, *m.* (எழுத்தின்) போலி, சரியான பாவனை.

Factage, *m.* வியாபாரகாரியஸ்தன் கூலி, — தரகு.

Facteur, *m.* Factrice, *f.* செய்கிறவன், காரியஸ்தன், சரக்குகளைவாங்கியொப்பிப்பவன், அஞ்சல்வண்டிற் —, வியாபாரகாரியஸ்தன், தபாற்காரன். || பெருக்கு நிலையெண்.

Factice, *adj.* கள்ள, இயல்பற்ற, கையாலான, பாவனை —, போலி —, செய்கை —, சூக்ஷமான.

Factieux, — euse, *s. et adj.* கலக —, குழப்ப —, கலாபக்காரன், —க்காரி, —க்குணமுள்ள, கலகமுள்ள.

Faction, *f.* காவல், பாரா, பாரி, காத்திருத்தல், பதிவு. || கட்சி, பாரிசம், பந்துக்கட்டு, திறம், சங்கேதம்: être en — காவலாயிருத்தல்.

Factionnaire, *m.* காவலாள், —க்காரன், — சேவகன், பாராவில் நிற்கிறசேவகன், சாமக்காவற்காரன்.

Factorage, *m.* வியாபாரக்காரியஸ்தர் சம்பளம், — கூலி, — தரகு.

Factorerie, *f.* வியாபாரக்காரியஸ்தர் கூடுமிடம், பிரதிவியாபாரம் நடப்பிக்குஞ் —, பலசாமான் விற்குஞ்சாலை.

Factotum, *m.* சர்வத்திலு நுழைகிறவன், சமஸ்தபாகன், பலகாரியஸ்தன்.

Factum, *m.* வழக்காளியின் ஞாபகப்பத்திரம்.

Facture, *f.* சரக்குகளின் விவரகணக்கு, — குறிப்புப் பத்திரம், கைச்சார்த்து. || செய்வனை. || வாத்தியக்குழலளவு.

Facturer, *v. a.* சாமான் பெயர்வழி — விவரகணக்கு எழுதுதல்.

Facule, *f.* சூரியனிற்பிரகாசமாசு.

Facultatif, *adj.* உத்தரவிடுகிற, இஷ்டத்துக்கு விடப்பட்ட, உத்தரவு —, சுதந்தரம் —, வல்லமைகொடுக்கிற.

Facultativement, *adv.* இஷ்டத்தைப் பொறுத்தவிதமாய், செய்ய அல்லது செய்யாமலிருக்க.

Faculté, *f.* வல்லமை, பலன், திறமை, சத்தி, தத்துவம், சத்து, தன்மை, இயல்பான பலன், சுவாபம், தகுதி, சாமர்த்தியம், திராணி. || சுதந்திரம், அதிகாரம், உத்தரவு, உரிமை. || கல்விச்சங்கம், வாத்திமார் கூட்டம், வைத்தியர் சங்கம். || *pl.* ஆஸ்தி, நிருவாகம்: — de l'âme ஆத்தும தத்துவங்கள்; — de digérer சீரணிப்பிக்கும் பலன்; — de droit தருமசாஸ்திரம் படிப்பிக்குஞ் சங்கம்.

Fadaise, *f.* மடையப்பேச்சு, வீண்கதை.

Fadasse, *adj.* சுவை —, சாரமற்ற,
Fade, நிரசமான, பிரியமற்ற.

Fadement, *adv.* பிரியமற்றவிதமாய், சுவையில்லாமல்.

Fadeur, *f.* சுவை —, சாரம்—, பிரியமின்மை. || *pl.* சுவையற்ற புகழ்ச்சிகள்.

Fagot, *m.* விறகு —, கட்டு, சுள்ளி —, குச்சுக்கட்டு. || வீண்—, கட்டுகதை, பொய்: faire des — விறகு கட்டுதல், வீண்கதை சொல்லுதல் ; sentir le — பிரிவினைக்காரனென சமுசயிக்கப்படல்.

Fagotage, *m.* விறகுகட்டுதல்.

Fagoter, *v. a.* விறகு —, கட்டாகக்கட்டுதல், ஒழுங்கின்றிச் சேர்த்தல், — உடுத்துதல். || se — ஒழுங்கின்றி உடுத்திக்கொள்ளுதல்.

Fagoteur, *m.* விறகு —, கட்டுகட்டுகிறவன்.

Fagotin, *m.* உடுத்தின குரங்கு, பகிடிக்காரன், கோமாளி.

Fagoue, Fagonne, *f.* (மிருக) உட்கழுத்துக் கழலை.

Faible, *adj.* பலவீனம் —, துர்ப்பலமுள்ள, — ஆன, பலம் —, பலன் —, சத்துவமற்ற, — இல்லாத, தளர்ந்த, இளப்பம் —, தளர்ச்சியான. || கனம்—, பருமம் —, திடம் —, உறுதியில்லாத, நொய்ய, மெலிந்த. || புத்தி —, திறமை —, சாமார்த்தியம் —, வல்லமையற்ற. || பயமுள்ள, எளிதாய் நம்புகிற, மிஞ்சின இளக்காரமுள்ள. || குறைவான, நடுத்தரம் —, மத்திமமான. || அற்ப, சின்ன : le côté—குறைவுள்ள இடம், பிரதான குறை, — துர்க்குணம். || *m.* பலவீனமானது, — ஆனவிடம், துர்ப்பலம், குறை, குறைச்சல், பிரதான துர்க்குணம், குறையிடம், மிஞ்சின இளக்காரம், — தயவு, பலவீனமுள்ளவன் : du fort au — குறை நிறையாய், சகட்டிலே.

Faiblement, *adv.* பலவீனம் —, இலேசாய், கொஞ்சமாய், தளர்ச்சியாய்.

Faiblesse, *f.* பலவீனம், — க்குறை, துர்ப்பலம், பலக்கேடு, பலக்ஷயம், தளர்வு, மெலிவு, சொற்பம், தைரியம் —, வேகம் —, திடனின்மை, சத்துவக்கேடு, சாமர்த்தியம் —, திறமையின்மை. || மிஞ்சின இளக்காரம், — தயவு, — பக்ஷம். || சோர்வு, மூர்ச்சை, மயக்கம் : —d'esprit புத்தியீனம் : tomber en— சோர்தல், மூர்ச்சித்தல்.

Faiblir, *v. n.* faiblissant, *adj.* பலவீனமாதல், தளர்தல், சோர்தல், குறைதல், தணிதல், திடந் —, தைரியந் தப்புதல்.

Faïence, *f.* பீங்கான், மினுக்குமட்[பண்டம்.

Faïencerie, *f.* மினுக்குமட்பண்டப் —, பீங்கான் பட்டை, — வியாபாரம்.

Faïencier, — ère, *s.* ஷை பண்டஞ் —, பீங்கான் செய்பவன், — விற்பவன், — வள்.

Faille, *f.* ஓர் வலை, அடுக்கின் விபரீதம், தாதின் படல ஒழிவு.

Failli, *m.* கடனிறுக்காமல் முறிந்தவன். || *part.* ஷை முறிந்த, முடிந்த, தப்பின : à jour failli பகல் முடிவில்.

Faillibilité, *f.* தவறத்தக்க தன்மை.

Faillible, *adj.* தவற —, வழுவக்கூடிய.

Faillir, *v. n.* தவறுதல், பிசகுதல், வழுவுதல். || முடிதல், ஒழிதல், குறைதல், தளர்தல், தப்புதல், செய்யாமல் விடுதல். || திரிதல், தறுவாயிலிருத்தல். || கடனிறுக்காமல் முறிதல்: sans — தப்பாமல்; le temps faut நேரமில்லை, — குறைவாயிருக்கின்றது ; le cœur lui a failli அவனுக்குத் தைரியந் தப்பிப்போயிற்று ; il a failli tomber விழத்திரிந்தான்.

Faillite, *f.* கடனிறுக்காமுறிவு ; faire — கடனிறுக்காமற்போதல்.

Faim, *f.* பசி, பட்டினி, தீபனம், உதராக்கொதி, வயிற்றுக் காய்ச்சல். || ஆவல், ஆசை: avoir — பசித்தல், பசியாயிருத்தல் ; — canine கொடும் —, ஆருதபசி.

Faim-valle, *f.* தீனியால் தீர்வலிப்பு.

Faîne, *f.* ஓர் மரக்கனி.

Fainéant, *adj. et s.* சோம்பல் —, அசட்டையுள்ள, சோம்பேறி, சோம்பற்காரன், சிலாப்பி.

Fainéanter, *v. n.* சோம்பலாய் —, சும்மாவிருத்தல், சிலாப்புதல்.

Fainéantise, *f.* சோம்பல், — தனம், வேலைசெய்யாமை, சோம்பு, சோம்பறை.

Faire, *v. a.* செய்தல், பண்ணுதல், உண்டுபண்ணுதல், ஆக்குதல், புரிதல், இயற்றுதல், கட்டுதல், கட்டிக்கொள்

ளுதல், அநுசரித்தல். || நிறைவேற்றுதல், முடித்தல், தீர்த்தல். || சிஷ்டித்தல், படைத்தல், உண்டாக்குதல், ஸ்தாபித்தல். || (மிருகம்) ஈனுதல், குட்டிபோடுதல். || ஒழுங்கு —, சீர்படுத்துதல். || நடப்பித்தல், நடத்துதல். || பழக்குதல், பயிற்றுதல், அப்பியாசம் பண்ணுதல், நியமித்தல். || எழுதுதல், சித்திரித்தல், வருணித்தல். || மதித்தல், விலைசொல்லுதல். || கண்டு —, பாவித்தல், வேஷம்போடுதல், — ஆடுதல், போலிசெய்தல். || சொல்லுதல், என்னல், நினைத்தல். || உதவுதல், ஆதல். || தோற்றுவித்தல். || வருவித்தல், எழுப்புதல், பிறப்பித்தல், ஏற் —, படுத்துதல், காரணமாயிருத்தல். || சம்பாதித்தல், சேர்த்தல், சேகரித்தல். || வேலைசெய்தல், நடத்தல், போதல். || தகுதல், தோன்றுதல், ஆயிருத்தல், இருத்தல். || சூது கடுதாசிகளைப் பகிர்தல், — கலத்தல். || மலசுத்தியாதல், பேலுதல் : — un cadam ஒரு காதவழி போதல் ; — des progrès விருத்தியாதல், அதிகரித்தல், வளர்தல் ; — la moisson வெள்ளாண்மையறுத்தல் ; — pitié இரக்கம் —, இகழ்ச்சி வருவித்தல் ; — attention கவனமாயிருத்தல் ; — droit à une demande ஓர் மனு நியாயமாய்க் கேட்டருளுதல் ; — ses affaires தன் காரியங்களை நன்றாய் நடப்பித்தல், வாய்த்தல், வாழ்தல்; — sentinelle,—sa faction, le quart காவலாயிருத்தல், சாமங்காத்தல் ; — le savant கல்விமானைப் பாவித்தல், —ப்போலத் தேடுதல் ; 2 et 3 font 5 இரண்டும் மூன்றும் ஐந்தாம் ; — beau வானம் நேத்தியாய் —, வெக்காளிப்பாயிருத்தல் ; on le fait riche அவனை ஆஸ்திக்காரனென்கிறார்கள் ; il fait chaud aujourd'hui இன்றைக்கு உஷ்ணமுண்டு ; — honte வெட்கப்படுத்துதல்; — peur பயமுறுத்துதல்; — bien நேத்தியாயிருத்தல் ; être fait pour தகுதல், பொருந்துதல் ; je n'y puis que — அதுக்கு என்னால் ஒன்றுமாகாது ; il fit tant qu'il obtint cette place மிகுந்த பிரயாசத்தினால் அந்த உத்தியோகமடைந்தான் ; — en sorte d'arriver தான் சேரும்படி பிரயாசப்படுதல் ; avoir fort à — வெகு பிரயாசப்படவேண்டியிருத்தல் ; c'en est fait de lui அவன் கெட்டான்; c'en est fait ஆயிற்று, ஆச்சுது, போச்சுது. முடிந்தது, தீர்ந்தது ; ne — que எப்போதும் —, மாத்திரமே செய்தல் ; il ne fait que jouer எப்போதும் விளையாடுகிறான் : cela ne fait qu'aigrir ma douleur அது என் கஸ்தியை அதிகரிப்பிக்கிறதொழிய மற்றப்படியல்ல ; il ne fait que d'arriver இப்போது தானேவந்தான். || se — தனக்குச் செய்தல், — கற்பித்தல், — நியமித்தல், சம்பாதித்தல், அடைதல், செய்யப்படுதல், ஆதல், நிறைவேறுதல், ஒருவனொருவனுக்குச் செய்தல், நலம் —, தாவிளையாதல், சீர்படுதல், (பழம்) கனிதல், பழகுதல், அப்பியாசமாதல், என்று நினைத்தல், அமருதல், சம்பவித்தல், இருத்தல் ; se — justice பழி —, பரிகாரம் வாங்குதல் ; se — vieux கிழவனாதல் ; se — un devoir தனக்குக் கடனாக நினைத்தல் ; se faire roi தன்னை இராசாவாக ஏற்படுத்துதல்; se — militaire சேவகனாதல், — ஆக எழுதுதல் ; il se fait tard பொழுதுபோகின்றது, இராத்திரியாகின்றது ; faire faire செய்வித்தல்; faire venir வருவித்தல்.

Faire, *m.* செய்விதம், செய்கை, செய்யல்.

Faire-le-faut, *m.* கடமையான காரியம்.

Fairena scierpoides, சுணைகோரை.

Faisable, *adj.* செய்யத்தக்க, —க்கூடிய, உத்தரவான : non — செய்யக்கூடாத.

Faisances, *f. pl.* குத்தகைக்காரன் கடமைகள், வாடகைக்கு மேல்மிச்சம்.

Faisan, *m.* Faisane, Faisande, *f.* ஓர்வித சாவல், — கோழி. || *adj.* ஷை கோழிக்கடுத்த.

Faisandeau, *m.* ஷை கோழிக்குஞ்சு.

Faisander, *v. n. et* se — *v. pro.* ஷை கோழிவாசனையடைதல். || *v. a. ou* faire —, laisser — ஷை கோழிவாசனை —, வேட்டையிறைச்சி வாசனை பெறுவித்தல்.

Faisanderie, *f.* ஷை கோழி வளர்க்குமிடம்.

Faisandier, *m.* ஷை கோழி வளர்ப்பவன்.

Faisceau, *m.* கட்டு, திரட்சி, குலை, கொத்து ; — de rayons கிரணகதிர்த்

திரட்சி. ‖ *pl.* (உரோமையரில்) கண்ட கோடாலிகளைச் சூழும் வளார்க் கட்டுகள்.

Faiseur, — euse, *s.* செய்பவன், —வள், சூதன், இரகசியமாய்க் குழப்பம் உண்டுபண்ணுபவன்.

Fait, *m.* சங்கதி, செய்தி, செய்கை, கிரியை, காரியம், வர்த்தமானம், விஷயம், சம்பவம், வரலாறு, நிச்சயம், சத்தியம், உண்மை, உள்ளது, நடந்தகாரியம், தகைமை, தகுதி, வசதி, யோக்கியம்: voies de — அடாவடித்தனம்; hauts, beaux — வீரச்செய்கைகள்; en venir au — விஷயம் பேச —, நிறைவேற்றத் துவக்குதல்; c'est un —, cela est de — இது நிச்சயந்தான்; prendre sur le — செய்கையில் தானே பிடித்தல்; au — உள்ளபடி; mettre, poser en — உண்மையென்று நிச்சயித்தல்; être au — அறிந்திருத்தல்; mettre au—அறிவித்தல்; cette maison serait bien son — அந்த வீடு அவனுக்குத் தகுதியாம்; dire son — à quelqu'un ஒருவன் செய்ததை அவனுக்குச் சொல்லுதல்; dans le —, par le —, de — மெய்யாகவே, உண்மையாய், உள்ளபடி; de droit et de — நியாயத்திலுங் கிரியையிலும்; en — de விஷயத்தில்; si — அதுக்கு விரோதமாய், அது மெய்தான்; ce n'est pas lui, si — அவனல்லவே உண்மையாயவன்தான்.

Fait, *part.* செய்த, செய்யப்பட்ட, முடிந்த, நடந்த, பழுத்த, பதமுள்ள, பழகின, பக்குவமான, வித்தியாசமாயுடுத்த; bien — நல்லவடிவுள்ள; homme — சரியாய் வளர்ந்த —, தேர்ந்த மனுஷன்; esprit mal — விபரீதமுள்ள புத்தி; temps, vent—நிலையுள்ள நல்ல காலம் — காற்று; phrase —, mot— வழக்கமான வசனம், — சொல்; cela vaut — அது செய்ததுபோலாயிற்று; être — pour தகுதல், தக்கவனாயிருத்தல்.

Faîtage, *m.* முகட்டுவளை, — ஈயப் பலகை, முகடு.

Faitard, *adj.* சோம்பேறி.

Faîtardise, *f.* சோம்பல்.

Faîte, *m.* முகடு, உச்சி, சிகரம், மேன்மை, உந்நதம், மேன்பாடு, சிரேஷ்டம்.

Fait-exprès, *m.* வேண்டுமென்று செய்தது, — செய்த காரியம்.

Faîtière, *f.* முகட்டோடு, (கூடார) உச்சிக்கோல். ‖ *adj.* முகட்டு.

Faix, *m.* சுமை, பாரம்.

Fakir, *m.* பக்கிரி, துலுக்கமுனி, — யாசகன்.

Falaise, *f.* உயர்கரை, செங்குத்தான கடற்கரை. ‖ (பிராஞ்சிராச்சியத்தில்) வலேஸ் பட்டணம்.

Falaiser, *v. n.* (கடல்) உயர்கரையில் மோதுதல்.

Falarique, *f.* தீப்பற்றினவேல், தீப்பற்றும் பொருள் நிறைந்த பல கூருத்திரம்.

Falbala, *m.* சிறுமடிப்புள்ள கச்சை, — சல்லி, — கொய்சகம்.

Falciforme, *adj.* அரிவாள் வடிவுள்ள.

Falerne, (இத்தலிதேசத்தில்) வலேர்ன் நகர். ‖ *m.* ஷை நகரிரசம்.

Fallace, *f.* மோசம், கபடம்.

Fallacieusement, *adv.* பொய் —, வஞ்சனை —, கபடமாய்.

Fallacieux, *adj.* கள்ள, கபடு —, ஏய்ப்பு —, வஞ்சனை —, தந்திரமுள்ள, பொய்யான, பொய்க்கோலமுள்ள.

Falloir, *v. unip.* வேண்டியதாய் —, வேண்டி —, கடமையாய் —, அவசரமாயிருத்தல். ‖ s'en — குறைதல், தப்பிப்போதல்; il me faut du riz எனக்கு நெல்லுவேணும்: il s'en faut qu'il soit savant அவன் கல்விமானாயிருக்கிறதற்குக் குறையுண்டு.

Falot, *m.* பெரிய தீபக்கூடு. ‖ *adj.* கேலிக்குரிய, பரியாசத்துக்குரிய, குறும்பு —, கோமாளமுள்ள. ‖ *m.* குறும்பி, கோமாளி.

Falotement, *adv.* பரியாசமாய், கேலியாய்.

Falourde, *f.* பெரியகுச்சு, — விறகுக்கட்டு.

Falqué, *part.* மேல் ஓரத்தில் வளைந்த.

Falquer, *v. a.* faire — un cheval குதிரையை வளைவித்தல்.

Falques, *f. pl.* கப்பலோரம் உயர்த்துதற்குரிய பலகைகள்.

Falsifiable, *adj.* கலப்பிட –, வேறுபட —, புரட்டக்கூடிய.

Falsificateur, *m.* புரட்டன், போலிக்காரன், கலப்பிடுகிறவன்.

Falsification, *f.* மாறு —, வேறுபாடு, கலப்பு, போலி, புரட்டல்.

Falsifié, *part.* மாற்றமான, கலப்பு —, புரட்டுள்ள, மாறுபாடான, கள்ள.

Falsifier, *v. a.* புரட்டுதல், போலி —, புரட்டுசெய்தல், மாறுபாடாக்குதல், கலப்பிடுதல், கலந்துபோடுதல்.

Falun, *m.* ஒடிந்த கிளிஞ்சிற்படை, — அடுக்கு. || (சுவேதுதேசத்தில்) வலுன்நகர்.

Falunage, *s. m.* **Faluner**, *v. a.* கிளிஞ்சில் எருவாகப் பரப்புதல்.

Fin, e, *adj.* மெல்லிய, மெல்லிசான, மென்மை —, நுட்பம் —, நுண்மையான, நுண்ணிய, நுட்ப, சிறு, சின்ன. || இலக்ஷணம் —, நேத்தி —, அந்தம் —, அருமை —, சித்திரமான, அழகிய. || உத்தம, உச்சித. || சுத்த, கலப்பற்ற. || மெய்யான. || சூக்ஷம் —, சூழ்ச்சி —, உபாயம் —, புத்திக்கூர்மை —, விவேகம் —, உணர்ச்சி —, சாமர்த்தியமுள்ள, கெட்டிக்காரனான. || கபடு —, சூது —, தந்திரமுள்ள: écriture — மெல்லிய —, நுட்ப எழுத்து; plume — கூர்ந்த இறகு: vin — அரியசுவையிரசம்: or — சுத்தபொன், தங்கம்; partie — இரகசியமுள்ள உல்லாசம்; perle — மெய்யான முத்து; oreille — நுட்பமான செவி; odorat — சூழ்ச்சியுள்ள மோப்பம்; avoir le nez — மோப்ப —, புத்திக் கூர்மையாயிருத்தல், முன்னுணர்தல். || *adv.* கொஞ்சமாய், இலேசாய்.

Finage, *m.* எல்லைமானம்.

Final, *adj.* கடைசி —, முடிவான, முடிவுகட்டுகிற, தீர்மானம் —, தீர்ப்பான, ஈற்று; ஈறான. || நிமித்த: cause — நிமித்தக்காரணம்; impénitence — மரணபரியந்தம் மனசு திரும்பாமை.

Finale, *f.* ஈற்றெழுத்து, கடையெழுத்து, — சுரம். [முடிவிலே.

Finalement, *adv.* கடைசியாய்,

Finance, *f.* உரொக்கம், கட்டிடும் பணத்தொகை. || *pl.* ஆஸ்தி, பொதுப் பொக்கிஷம், அரமனை வருமானம், — வருமானவிசாரணை, அரமனைவருமான மந்திரி வீடு, — கச்சேரி, வருமானவிசாரணை உத்தியோகம்: ministre des — அரமனை வருமானமந்திரி.

Financer, *v. a.* பணஞ் செலுத்துதல், — இறுத்தல்.

Financier, *m.* பணவிசாரணைக்காரன், — விசாரணையில் தேர்ந்தவன், ஆயக்காரன்.

Financier, — ère, *adj.* பணவிசாரணைக்கடுத்த, — வருமானத்து.

Financière, *f. ou* écriture — விருத்த எழுத்து; à la — ஓர்வித சமையலாக.

Financièrement, *adv.* பணம் செலுத்தும் விஷயமாய், வருமான விஷயமாய். [சூது பண்ணுதல்.

Finasser, *v. n.* உபாயதந்திரம் —,

Finasserie, *f.* சூது, உபாயதந்திரம்.

Finasseur, — euse, *s.* சூதன், உபாயக்காரன், — காரி.

Finaud, e, *adj.* சூக்ஷமுள்ள, உபாயக்காரன், — காரி.

Finement, *adv.* சூக்ஷம் —, சூழ்ச்சி —, நுட்பம் —, யுத்தி —, உபாயமாய்.

Finesse, *f*. நுட்பம், நொய்மை, மென்மை, நுண்மை, மிருது. || இலக்ஷணம், அந்தம், சிறப்பு.|| சூக்ஷம், சூழ்ச்சி, புத்திக்கூர்மை. || விணையம், உபாயம், தந்திரம், சூது. || தீதுள்ள அர்த்தம்.

Finet, — ette, *adj*. கொஞ்சஞ் சூது —, உபாயமுள்ள.

Finette, *f*. இலேசான —, வெலித்தியான பஞ்சுப்புடைவை.

Fini, *part*. தீர்ந்த, முடிந்த, நிறைவேறின, திருத்தமான, உத்தம, நேத்தியான. || எல்லை —, மட்டுள்ள. || திட்டமான, குறிக்கப்பட்ட : sens — திட்டமான அர்த்தம் ; homme — நேர்ந்துபோகிற மனுஷன்.|| *m*. உத்தமம், உச்சிதம், திருத்தம்.

Finir, *v. a*. முடித்தல், செய்து —, முகித்தல், தீர்த்தல், நிறைவேற்றுதல், முடிவுகட்டுதல், ஒழித்தல். || *v. n*. முடிதல், முகிதல், தீர்தல், நிறைவேறுதல், ஒழிதல், சாதல், மரித்தல். || en — முடிவுகட்டுதல், தீர்மானஞ்செய்தல். || se — முடிதல். [திமுடிப்பவன்.

Finisseur, *m*. தீர்க்கிறவன், திருத்

Finistère (le), (எஸ்பஞ்தேசத்தில்) பினிஸ்தேர் என்னு முந்தல், (பிராஞ்சிராச்சியத்தில்) பினிஸ்தேர் என்னும் ஜில்லா.

Finlande, *f*. (ருசியதேசத்தில்) பின்லந்துதேசம். || Finlandais, *adj*. ஷை தேசத்து, — தேசத்தான்.

Finnois, *adj*. *V*. Finlandais.

Fiole, *f*. சிறு —, குப்பி, சீசா. || பயிரிலை.

Fion, *m*. அந்தம், வடிவு, திறமை.

Fionie, (தன்மர்க்கு இராச்சியத்தில்) பியோனிதீவு.

Fiord, *m*. வட ஐரோப்பாவின் கடற்கரையில் ஆழ்ந்த குடாக்கடல்.

Fioritures, *f. pl*. சிறப்பணிகள்.

Firmament, *m*. வானம், சோதிசக்கரம், நக்ஷத்திர —, பரமண்டலம்.

Firman, *m*. பரமாணு, துலுக்கரசன் கட்டளை, வியாபார உத்தரவு.

Fisc, *m*. அரமனையின் வருமானம், பொதுப்பொக்கிஷம், — ப்பொக்கிஷக்காரியஸ்தர்.

Fiscal, *adj*. அரமனைப்பணத்து, — பொக்கிஷத்துக்கடுத்த, இராசாவின் —, அரமனைவருமானத்து, அரசிறைவரும்படிக்குரிய, பணம் பிடுங்குகிறதற்குரிய. || *m*. அரமனைவருமானத்துச் சம்பிரதி.

Fiscalité, *f*. அரமனைப் பொக்கிஷ விசாரணையைச் சேர்ந்த தன்மை, — கட்டளைகளின் திட்டம், — கட்டளைகளின் அதிகரிப்பு.

Fissipare, *adj*. தன்சொந்த உடலைக் கிழித்துக்கொண்டு மறுஜனனமாகின்ற.

Fissipède, *adj*. கவர்க்காலுள்ள, கால் விரலுள்ள. [ப்பிளந்த பக்ஷிகள்.

Fissirostres, *m. pl*. மூக்கு ஆழமாய்

Fissure, *f*. பிளப்பு, கமர், வெடிப்பு, விதாரணம் : —longitudinale, transversale ஆயத —, திரியவிதாரணம்.

Fistule, *f*. புண் —, புரை, புண்ணுளை. [லான.

Fistuleux, *adj*. புரைக்கடுத்த, குழ

Fixage, *m*. சிலை நிறுத்துதல், உறுகம் நிறுத்துதல்.

Fixation, *f*. நிலை —, திட்டப்படுத்தல், தீர்மானித்தல்.

Fixe, *adj*. ஸ்திரமான, நிலையுள்ள, அசையாத. || மாறாத, ஆவியாய்ப் போகாத. || நிச்சய, திட்டம் —, தீர்மானமான, குறிக்கப்பட்ட : revenu — திட்டமான வருமானம் ; idée — புத்தியிற் பதிந்த எண்ணம். || *m*. திட்டமானது, — ஆனசம்பளம். || *f. pl*. நிலைநக்ஷத்திரங்கள். || *int*. அசையாதே, நில்லுங்கள்.

Fixé, *part*. நிலைப்பிக்க —, நிலைப்பட்ட, உறுதி —, திட்டம் —, தீர்மானமான. || *m*. கண்ணாடிக்கு ஒட்டிய சின்ன எண்ணெய்ச் சித்திரம்.

Fixement, *adv*. உற்று, நேராய், நிலைக்க, திட்டம் —, ஸ்திரமாய்.

Fixer, *v. a*. நிலைப்பித்தல், நிலை —, நிலைமை —, ஸ்திர —, உறுதி —, நிச்சயப்படுத்துதல், நிறுத்துதல். || திட்ட —, ஒழுங்கு —, வரிசைப்படுத்துதல். || திட்டம்பண்ணுதல், குறித்தல், தீர்மானித்தல், உற்றுப்பார்த்தல் ; — ses regards sur நோக்கி —, உற்றுப்பார்த்தல் ; — les yeux, l'attention de தன்மேல் கண்களை — கவனத்தை வருவித்தல். || se — நிலைபெறுதல், — ப்படுதல், நிலைத்தல், ஸ்திரப்படுதல், தீர்மானம்பண்ணுதல், பதிதல், குடியேறுதல், வாசமாதல்.

Fixité, *f*. ஸ்திரம், நிலைமை, நிலை, அசையாநிலை, அசலனம், உறுதி, மாறு

மை, திடம், நிதானம், ஆவியாய்ப் போகாமை.

Fla, *m.* மேளத்தின் இருபுறங்களில் ஏக சமயத்தில் அடிபடும் சப்தம்.

Flabelliforme, *adj.* விசிறிவடிவான

Flac, *m.* ஜலம் விழும்போது, அல்லது அடி அடிக்கும்போதுண்டாகும் சப்தத்தைப் பாவிக்கும் மொழி.

Flaccidité, *f.* நுகைவு, குழைவு, தளர்ச்சி, இளக்கம்.

Flacon, *m.* பளிங்குத் தப்புத்தோருள்ள —, சிறந்தகுப்பி, — சீசா, குப்பி, குண்டிகை.

Flacourtia cataphracta தாளீசம்; — sepier சொத்தைக்களா.

Flagellants, *m. pl.* பிரசித்த சவுக்கடி —, சாட்டைக்காரர், பிரசித்தமாய்த்தங்களைத் தாங்களே சாட்டையாலடிப்பவர்கள்.

Flagellation, *f.* கசை —, சாட்டை —, வாரடி, சவுக்காக்கினை.

Flageller, *v. a.* சாட்டையால் —, சவுக்கினால் —, கசையால் —, மிலாறுகளால் அடித்தல். ‖ se — தன்னைத்தான் சாட்டையாலடித்தல்.

Flagelliforme, *adj.* சாட்டைவடிவான.

Flageoler, *v. n.* கால் நடுங்குதல்.

Flageolet, *m.* புல்லாங் —, ஆயக் —, வேய்ங்குழல், ஷை குழலூதுபவன். ‖ *ou* haricots — ஓர்வகை அவரை: jouer du — புல்லாங்குழலூதுதல்.

Flagorner, *v. a.* நீச இச்சகம் பேசுதல், — பண்ணுதல்.

Flagornerie, *f.* நீச இச்சகம், முகமன்.

Flagorneur, — euse, *s.* நீச இச்சகன், இச்சக —, முகமன்காரன், — காரி.

Flagrance, *f.* அந்நேரத்துச் சம்பவம்.

Flagrant, *adj.* நடக்கிற, அந்நேரத்து, தெளிவான ; en — délit குற்றஞ் செய்கிற நேரத்தில்.

Flair, *m.* நாயின் ஆக்கிராணம், வாசனைபிடித்தல்.

Flairer, *v. a.* முகர்தல், மோத்தல், ஆக்கிராணித்தல், வாசனை —, மணம் பிடித்தல். ‖ முன்னுணருதல்.

Flaireur, *m.* முகருகிறவன்.

Flamand, — de, *adj. et s.* பிளந்திறென்கிற தேசத்து, — தேசத்தான், — தேசத்தாள். ‖ *m.* ஷை தேசத்துப் பாஷை.

Flamant, Flammant, Flamet, *m.* சிவப்பிறகுள்ள பக்ஷி, நீர் நாரை.

Flambant, *part.* சுவாலிக்கிற, சுவாலைவடிவான.

Flambart, *m.* பாதி பூத்துப்போன கரி, பாய்மரத்து உற்கை, இருபாய்மரத்தோணி, ஓர்வித வாள்.

Flambe, *f.* சீகு.

Flambé, *adj.* எரிந்த, சேதமான, ஆஸ்தியிழந்த, நம்பிக்கையற்ற. ‖ *m.* சுவாலைநிற இறகுள்ள தட்டான்.

Flambeau, *m.* தீபம், தீவட்டி, தீவர்த்தி, பந்தம், பந்தவிளக்கு,மெழுகுதிரி, திரி, கொள்ளி, கத்தரிசால், விளக்குத்தண்டு. ‖ பிரகாசம், ஒளி, சுடர். ‖ உயிர்: — de la discorde சண்டையின் கொள்ளி ; — du jour பகலின் சுடர், சூரியன் ; — de la nuit இரவின் சுடர், சந்திரன், கிரகங்கள்.

Flamber, *v. a.* சுவாலையிற் கடப்பித்தல், தீயாற் சுத்திகரித்தல். ‖ *v. n.* சுவாலித்தல், எரிதல், அனலுதல், சுடர் விடுதல், கொழுந்துதல், கொழுந்துவிட்டெரிதல்.

Flamberge, *f.* வாள், கத்தி.

Flamboiement, *m.* ஓர் பொருள் எரிவதனாலுண்டாகும் ஒளி.

Flamboyant, *part.* சுவாலிக்கிற, அலைகிற ‖ *m.* சிவந்த பூமரம்.

Flamboyer, *v. n.* சுவாலித்தல், பிரகாசித்தல், சுடர் விடுதல்.

Flamine, *m.* (அஞ்ஞான உரோமையுரில்) பிரதான குரு, — பூசாரி.

Flamme, *f.* சுவாலை, அக்கினிக் கொழுந்து, சிகை, சுடர், சோதி, அக்கினி. ‖ வேகம், ஊக்கம், மனோவெப்பம், பற்றுதல், நேசாக்கினி. ‖ சண்டை அகோரம், சுவாலைவடிவான சிற்ப அணி. ‖ (பாய்மரத் துச்சியின்) சிறு கொடி, துவசம். ‖ குதிரைக்குரிய சத்திரக்கத்தி.

Flammèche, *f.* தீப்பொறி.

Flammerole, *f.* உற்கை.

Flan, *m.* (பாலுமுட்டையுங் கலந்த) தோசை, பணிகாரம். ‖ (நாணய ...) பில்லை, வில்லை.

Flanc, *m.* விலா, — ப்பக்கம், ஒக்கல், பழு, பாரிசம். ‖ வயிறு, உதரம். ‖ பக்கம், புறம், புடை: être sur le —

படுக்கையிலிருத்தல், வியாதியாயிருத்தல்: montrer, prêter le — ஆபத்துக்கு இடங்கொடுத்தல்: se battre les — காரியசித்திபெறப் பெரும் முயற்சி செய்தல்.

Flandre, *f.* (பெல்ஜிக்கிராச்சியத்தில்) பிளாந்திறு நாடு.

Flandrin, *m.* நெட்டையன், சுள்ளலன்.

Flanelle, *f.* பிலானெல், — என்னு மெல்லியசகலாத்து.

Flâner, *v. n.* உல்லாசமாய்த் —, சும்மா திரிதல், பொழுதுபோக்குதல்.

Flânerie, *f.* சும்மா திரிதல், பொழுதுபோக்கு.

Flâneur, — euse, *s.* சும்மாதிரிகிறவன், — வள், சோம்பேறி.

Flanquant, *adj.* கோட்டைப்பக்கங்களை யாதரிக்கிற.

Flanquement, *m.* கோட்டைப் பக்கங்களையாதரித்தல்.

Flanquer, *v. a.* பக்கங்களை யாதரித்தல், — ப்பலப்படுத்துதல், பக்கத்தில் நோக்குதல், — இருத்தல். || போடுதல், எறிதல், தள்ளுதல்: —un soufflet ஓரறையறைதல். || se — தன்னை வைத்தல், விழுதல்; se — dans la boue சேற்றிலே விழுதல்.

Flaque, *f.* குட்டை, ஓடாத நீர்நிலை.

Flaquée, *f.* பாய்ச்சினநீர்முதலியது.

Flaquer, *v. a.* (நீராளத்தை) பாய்ச்சுதல், தள்ளுதல், எறிதல்.

Flasque, *adj.* நொய்ய, நுகைவு —, குழைவு —, சோம்பலுள்ள, தளர்ந்த, பலனற்ற. || *m.* பீரங்கிதாங்கியின் பிரதான மரக்கட்டை. || *f.* வெடிமருந்தின் குப்பி, — சிமிள்.

Flatter, *v. a.* இச்சகம்பண்ணுதல். — சொல்லுதல், முகஸ்துதி —, இங்கிதம் பேசுதல், மிகவும் —, அதிகமாய் —, நீசமாய் ஸ்துதித்தல், மெச்சுதல், எற்று —, ஒத்துக்கொள்ளுதல், மெச்சுதல், பிரிய —, இன்ப —, சந்தோஷப்படுத்துதல், ஆதரித்தல், உதவிசெய்தல், பிரியமாய் —, சனுவாயிருத்தல், சாட்டு சொல்லுதல், மிஞ்சின இளக்காரம் — தயைபண்ணுதல், — காட்டுதல், (மெய்மறைத்து) எத்துதல், நம்புவித்த்ல், செல்வங்காட்டுதல், சீராட்டுதல், தழுவுதல், தடவுதல். || ஆற்றுதல். || அதிக அலங்காரமாய்க் காட்டுதல், — ச்சித்திரித்தல், — வருணித்தல்:—du succès அநுகூலமாகுமென்று நம்புவித்தல்; — l'oreille காதுக்குப் பிரியமாயிருத்தல், || se — வீணாய் —, நம்புதல், நம்பி —, பாவித்துக் கொள்ளுதல், நினைத்தல், தனக்கு இளக்காரஞ் செய்தல், வீம்பு பேசுதல்.

Flatterie, *f.* இச்சகம், நயச்சொல், போதரவு, முகமன், இங்கிதம், முகஸ்துதி, உபசரணை.

Flatteur, — euse, *adj.* இச்சகம் பண்ணுகிற, — உள்ள, நயம் —, பிரியமான, நயச்சொல்லுள்ள, சீராட்டுகிற, பரிவுசெய்கிற, அதிக நேத்தியாய்க்காட்டுகிற. || *s.* இச்சகன், இச்சகி, நேசங்காட்டி, நீச உபசாரி.

Flatteusement, *adv.* இச்சகம் —, பிரியம் —, முகமனாய்.

Flattueux, — euse, *adj.* வாய்வு கொடுக்கிற, —வருவிக்கிற.

Flatulence, *f.* வாய்வு, வாய்வினால் ஆகிறவியாதி.

Flatulent, *adj.* வாய்வினால்வருகிற.

Flatuosité, *f.* உதர —, வாய்வு, — புறப்படுதல்.

Fléau, *m.* போரடிக்குங்கோல், கதிரடிக்குங்கம்பு. || தராசுக்கோல், — த்தண்டு, —த்துலா, துலாக்கோல், பெருங்கதவு சாத்திடுந் தூக்கிரும்பு. || உபத்திரவம், உபத்திரியம், வாதை, பெருந் துன்பம், தேவ ஆக்கினை, தின்மை, கேடு.

Flèche, *f.* அம்பு, அஸ்திரம், கணை, சரம், பாணம். || அம்புவடிவுள்ளது. || கோள் —, குண்டணியாகிய அம்பு. || கூர்மையா யெழும்புங் கோபுரம், — மணிக்கூடு. || மரத்தின் நேருச்சிக் கொம்பு. || எர்க்கால். || ஓர்வித அலங்கம். || சொக்கட்டான் மனைக்காய் || வடதிசையில் ஓர் தாராகணம். || மெலிசான துண்டு: — d'un arc வில்வடிவின் குணநடுவில்இலம்பம்: Faire—de tout bois காரியசித்தி அடையச் சகல பிரயத்தனமும் செய்தல் *V.* Sinus-verse.

Fléchi, *part.* இரங்கிய, அமர்ந்த.

Fléchière, *f.* ஓர் பூண்டு.

Fléchir, *v. a.* வளைத்தல், மடக்குதல், முடக்குதல், குனித்தல், சாய்தல். || உருக்க —, சமாதானப் படுத்துதல், இளக்குதல், இணக்குதல், அமர்த்துதல்: — le genou முழங்காலிடுதல், — படியிடுதல், — முடக்குதல். || *v. n.* வளைவ

தல், சவளுதல், மடங்குதல், சாய்தல், அடங்குதல், அமர்தல், இளகுதல், இரங்குதல், தாழுதல், பின்வாங்குதல், தளர்தல். || se — இளகுதல், இரங்குதல்.

Fléchissable, *adj.* வளைய —, மடங்கத்தக்க.

Fléchissement, *m.* வளைத்தல், வளைதல்.

Fléchisseur, *m.* *ou* muscle — மடக்குதற்குரிய நரம்பு, இசிநரம்பு.

Flegmasie, *f.* வெப்பம், எரிவு, அழல்.

Flegmatique, *adj.* கபம் —, சிலேஷ்மம் —, சளியுள்ள. || குளும், குளிர்ந்த, மந்தமான, சுவரணையற்ற. || *m.* கபமுள்ளவன், சுவரணை —, உரோசமற்றவன் : tempérament — சிலேஷ்ம சரீரகுணம் ; esprit — உரோசமற்ற புத்தி.

Flegme, *m.* சிலேஷ்மம், சிலேட்டுமம், கபம், காசம், சிலேற்பனம், கோழை, சளி. || அமரிக்கை, தாமதம், மந்தம். || *adj.* பொறுமை —, தாமத —, மந்தகுணமுள்ள, வேகமற்ற.

Flegmon, *m.* எரிவுள்ள வீக்கம்.

Flegmoneux, *adj.* எரிவுள்ள வீக்கத்து.

Flème, *f.* முழுச்சோம்பேறித்தனம்.

Flétri, *part.* வாடின, வடுவுள்ள, அவமானப்பட்ட, — க்குறியுள்ள.

Flétrir, *v. a.* வாட்டுதல், வாடுவித்தல், வதக்குதல், உலர்த்துதல், மங்குவித்தல், பழுதாக்குதல், கெடுத்தல். || கறை —, மாசு —, பங்க —, அசுத்த —, அவமான —, அவதூறு —, அவகீர்த்தி —, ஈன —, வடுப்படுத்துதல். || தைரியம் —, முயற்சி —, ஊக்கங்கெடுத்தல், — அழித்தல். || அவமானக்குறி —, சூடுபோடுதல். || se — வாடுதல், மங்குதல், உலர்தல், வதங்குதல், வெதும்புதல், சூம்புதல், கெடுதல், மாசு —, பங்க —, வடுப்படுதல், தன்னை அவமானப்படுத்துதல்.

Flétrissant, *part.* அவமான —, பங்க — ஈனப்படுத்துகிற.

Flétrissure, *f.* வாடல், மங்கல், வதங்கல், பழுது, மாசு, ஈனம், அவகீர்த்தி, அவமானம், அவமானக்குறி, வடு, சூடு, மறு, வடுவின் தழும்பு.

Fleur, *f.* பூ, புஷ்பம், மலர், அலர், துணர். || பூஞ்செடி, பூச்செடி, மலர்ப்பூண்டு. || புஷ்பகாலம், மலர்ப்பருவம். || கனிகளின் சுணை. || இளம்பிராயமுள்ளவன், — வள். || காந்தி, துலக்கம், ஒளி. || புகழ்ச்சி, ஸ்துதி, இன்பம், சுகம். || (de rhétorique) அணிகள், அலங்காரம், சிறப்பு, உருவகாலங்காரம். || முதல் அநுபவம். || தெரிவு, முதல்தரம், உத்தமம் —, உச்சிதம் —, முக்கியமானது, சாரம். || பூஞ்சு, பூஞ்சை : — de l'âge இளம்பிராயம், இளமை, யௌவனம் ; — de farine நுண்ணியமா ; — de souffre கந்தகப்பொடி, — சுண்ணம் ; à — de மட்டமாக ; — à noircir les souliers செம்பரத்தை, சப்பாத்துப்பூ ; — blanches வெட்டை.

Fleurage, *m.* தவிடு, உமி.

Fleuraison, *f.* *V.* Floraison.

Fleur de lis, *f.* லீலி என்னும் —, லீலிபுஷ்பம், வெண்டாமரை, பிராஞ்சிராசாக்களின் விருதாம். || ஷை புஷ்பவடு.

Fleurdelisé, *part.* லீலிபுஷ்ப நிறைந்த, ஐந்து இதழுள்ள, ஷை வடுவுள்ள.

Fleurdeliser, *v. a.* லீலிபுஷ்பங்களால் அலங்கரித்தல், ஷை வடுப்படுத்துதல்.

Fleuré, Fleureté, Fleuronné, *adj.* மலராய் முடிகிற, பூசூழ்ந்த.

Fleurer, *v. n.* வாசனைவீசுதல், மணத்தல் : — comme baume பரிமளம் வீசுதல், பிரயோசனமாய்த் தோன்றுதல்.

Fleuret, *m.* பரும்படியான பட்டுநூல், — நூல்நாடா. || சிலம்பக்கத்தி, நுனியிற்குமிழுள்ள —, கூரற்ற கத்தி.

Fleurette, *f.* சிறு புஷ்பம். || இச்சகம், நய —, நேசச்சொல் : conter — நேசச் சொல் மொழிதல்.

Fleuri, *part.* மலர்ந்த, மலருள்ள, பூநிறைந்த, மலர்ச்சி —, சிறப்புள்ள, அணிநிறைந்த, இன்பம் —, பிரியமான.

Fleurir, *v. n.* மலர்தல், புஷ்பித்தல், அரும்புதல், அலருதல், பூத்தல், விள்ளுதல். || வாழ்தல், விளங்குதல், செழித்தல், செல்வம் —, தழைப்பாயிருத்தல். || *v. a.* புஷ்பங்களால் அலங்கரித்தல்.

Fleurissant, *part.* மலருகிற, அரும்புகிற.

Fleuriste, *m.* *et adj.* பூக்காரன், பூவிரும்புகிற, பூவளர்க்கிற, பூசித் திரிக்கிற, — செய்கிற, பூந்தோட்டம், — தோட்டக்காரன், புஷ்பசாஸ்திரி.

Fleuron, *m.* சின்னபூ, சித்திர —,

சிற்பப்பூ, பூங்கொத்து, அணி, நகை, பூஷணம். [மலருள்ள.

Fleuronné, *adj.* பூங்கொத்து —,

Fleuve, *m.* நதி, ஆறு, புனல்.

Flexibilité, *f.* வளையுந்தன்மை, சவளுகை, இளக்கம், இணங்குந்தன்மை.

Flexible, *adj.* வளைகிற, வளையத்தக்க, சவளுகிற. || இணங்குகிற, கீழ்ப்படிகிற, இளக்கமான. || être — வளைதல், இணங்குதல். [கல்.

Flexion, *f.* வளைதல், வளைவு, மடங்

Flexueux, *adj.* பலவளைவு —, சுழற்சி —, சுற்றுள்ள. [நெளிவு, சுழற்சி.

Flexuosité, *f.* வளைவு, கோணல்,

Flibuster, *v. a.* கடற்கொள்ளையடித்தல், அமேரிக்கக் கடற் றிருடனைப் போல் செய்தல். [கொள்ளை.

Flibusterie, *f.* அமேரிக்கக் கடற்

Flibustier, *m.* (அமேரிக்காவில்) கடற்றிருடன்.

Flic-Flac, *m.* பலசவுக்கடி —, பல அறைச்சத்தம். || ஓர் நடன நடை.

Flin, *m.* கத்திதுலக்குதற்குரிய கல்லின்பொடி. [ளைப்பளிங்கு.

Flint-glass, கண்ணாடிக்குரிய வெள்

Floche, *f.* திரிபிரியும் துண்டுத்துணி

Flocon, *m.* பொருக்கு, குச்சம்.

Floconneux, *adj.* பொருக்கு போ

Flonflon, *m.* பல்லவம். [ன்ற.

Floraison, *f.* மலர்தல், மலர்ச்சி, பூப்பருவம், மலர்ந்திருத்தல்.

Floral, *adj.* புஷ்பத்து, புஷ்பத்துக் கடுத்த : jeux floraux புஷ்ப வெகுமதி கொடுக்கிற துலூஸ் நகரத்தின் கல்விச் சங்கம். [பண்டிகை.

Florales, *f. pl.* பிளோரொன்பவளின்

Flore, *f.* பிளோரொன்பவள், புஷ்பங்களின் பொய்த் தேவதையாம். || (ஓர் தேசத்து) புஷ்பங்களின் —, பூண்டுகளின் விளக்கம், புஷ்பநாம விளாசம்.

Floréal, *m.* புஷ்பமாதம், (குடியரசின் அ-ம் மாசமாம்.

Florée, *f.* ஓர் நடுத்தர அவிரி.

Florence, (இத்தலி தேசத்தில்) பிளோரான்ஸ் நகரம். || *m.* ஷை நகர மாதிரித் தாபிதா, — பட்டுச்சீலை.

Florentin, *adj.* பிளோரான்ஸ் நகரத்து, — நகரத்தான். || *m.* ஷை நகர நாடு. [வித பட்டுப்புடைவை.

Florentine, *f.* ஷை நகரத்தாள், ஓர்

Florès, (ஒசெயனி கண்டத்தில்) பிளோரோஸ் தீவு. || faire — விளங்குதல், சம்பிரமஞ்செய்தல்.

Floride, (la) *f.* (ஐக்கியதேசத்தில்) பிளோரிது நாடு. [கிற.

Florifère, *adj.* பூவுள்ள, — த்தரு

Florin, *m.* ஓர் நாணயம். [கிற.

Floripare, *adj.* பூமாத்திரந் தரு

Florissant, *part. de* fleurir, செழித்த, வாழுகிற, செல்வமுள்ள, விளங்குகிற, உத்தம, சிறந்த.

Floriste, *m.* புஷ்பசாஸ்திரி, ஓர் தேசத்துப் பூண்டுகளின் விளக்கமுண்டாக்கினவன்.

Flosculeux, *adj.* *V.* Fleuronné,

Flot, *m.* அலை, திரை, தரங்கம், புனற்றிரை, புணரி. || ஏற்றம், பெருக்கு. || திரள், கும்பல், தாராளம். || அலைவு, அலைவது, மிதப்பு, ஆற்றிலே எறிந்த மரங்கள். || *pl.* குழப்பம், கலக்கம் : être à — அலைதல், மிதத்தல், அநுகூலமாதல் ; longs — de cheveux அலைகிற நெடுமயிர்கள் ; — de lumière பிரகாசத்திரள்; se mettre à — தன்காரியங்களை மறுபடியும் ஸ்தாபித்தல்.

Flottable, *adj.* மரங்கள் மிதக்கக் கூடிய.

Flottage, *m.* மிதப்பு, ஆற்றிலே மரங்களைச் செல்லவிடுதல்.

Flottaison, *f.* சலமட்டத்தின் குறிப்பு, மிதப்பு சேருவதற்குச் செல்லுங் காலம்.

Flottant, *part.* மிதக்கிற, அலைகிற, தொங்குகிற, ஆடுகிற, காற்றில் அலைகிற. || தத்தளிக்கிற, இருமனமுள்ள, நிண்ணயமற்ற, ஐயப்படுகிற : dette — உயர்வு குறைவுபடுகிற அரமனைக்கடன்.

Flotte, *f.* கப்பற்களின் —, கப்பற் கூட்டம். || காலியாகவிட்ட வெறும் பீப்பா, மிதப்பு.

Flottement, *m.* அலைவு, ஆட்டம், மிதப்பு, தத்தளிப்பு, இருமனம்.

Flotter, *v. n.* மிதத்தல், அலைதல், சலத்தின்மேல் —, ஆடுதல், அலைக்கழிக்கப்படுதல். || தத்தளித்தல், இருமன—, ஐயப்படுதல், சந்தேகத்திலிருத்தல். || *v. a.* மிதக்கப்பண்ணுதல், — விடுதல், நீர்மேல் செலுத்துதல்.

Flotteur, *m.* மிதவை —, தெப்பஞ் செய்பவன், — செலுத்துகிறவன். ||

மிதப்பு, காவியா, மிதப்பின் கயிறு, நீருயரங்காட்டுமிதப்பு.

Flottille, *f.* சிறு கப்பற்கூட்டம்.

Flou, *adj.* மிருதுவான, மெருகான, நொய்ய, பக்ஷமான. || *m.* மிருது, நொய்மை. || *adv.* மெதுவாய், மிருதுவாய்.

Flouer, *v. a.* எத்துதல், திருடுதல்.

Flouerie, *f.* எத்து, வஞ்சனை, சூக்ஷத்திருட்டு. [டன்.

Floueur, *m.* எத்தன், சூதன், திரு

Flou-flou, *m* பிலுபிலு, பட்டுச் சட்டையின் சத்தம்.

Flouve, *f.* ஓர்வித புல்.

Fluctuation, *f.* அலைவு, அசைவு, சலனம், தளம்பல். || மாற்றம், வேறுபாடு, நிலைமையின்மை.

Fluctueux, *adj.* அலைகிற, அலைவு—, சலனமுள்ள, அசைகிற, நிலையற்ற.

Fluent, *adj.* கொஞ்சம் —, ஊறுகிற, பசையற்ற, ஓடுகிற.

Fluer, *v. n.* ஓடுதல், வடிதல், ஊறுதல், புறப்படுதல்.

Fluet, *adj.* மெலிந்த, மெல்லிசான, நொய்ய, சுள்ளலான, ஒஞ்சட்டையான

Flueurs, *f. pl.* ஓடல்: — blanches சூதகம், பூப்பு. [ட்பூலா, — பூல்.

Fluggea leucopyrus, (செடி), வற

Fluide, *m.* நெகிழியல்வஸ்து, நீர், சலம், நீராளம். || *adj.* நீராளமான, ஓடுகிற, நெகிழியல்பான. [தன்மை.

Fluidité, *f.* நீராளம், நீர் —, சலத்

Fluor, *m.* ஓர் அபின்ன வஸ்து: fluate, fluorique, fluorhydrique, fluoborique, fluorine, fluorure, fluosilicique, ஷை வஸ்துவின் பலவித கலப்பாம்; — albus பிரமியம், *V.* Gonorrhée; *ou* spath-fluor ஓரிரத்தினம்

Fluors, *m. pl.* பலநிறப்பளிங்குகள்.

Flûte, *f.* இசைக்குழல், இன்னிசை —, ஊதிடு —, புல்லங் —, வேய்ங்குழல். || குழலூதி. || சுமைக்கப்பல், சிறு உரொட்டி, ஓர்வித நூல்நாழி. || *pl.* மெலிந்த கால்கள்: jouer de la — இசைக்குழலூதுதல்; ajuster ses — தன்னிசைக் குழல்களை —, தன் உபாயங்களையிசைத்தல். [நீர்க்குளிரி.

Flûte-de-berger, *f.* ஆயர் குழல். ||

Flûteau, *m.* பிள்ளையூதிடுங் குழல். || ஓர் நீர்ப்பூண்டு. [ரமான, (குரல்.)

Flûté, *adj.* இன்னிசையான, மது

Flûter, *v. n.* குழலூதுதல், குடித்தல். [வன்.

Flûteur, *m.* குழலூதி, குடிக்கிற

Flûtiste, *m.* குழலூதி, — ஊதுகிறவன். [ஆற்று.

Fluvial, *adj.* நதியின், நதிக்கடுத்த,

Fluviales, *f. pl.* ஆற்று —, நீர்ப்பூண்டுகள். [ளுள்ள.

Fluviatile, *adj.* நதியின், நதிகளி

Flux, *m.* (கடலின்) ஏற்றம், பெருக்கு. || மாறுபாடு, மாறிவருந்திட்டம். || வெள்ளம், பாய்ச்சல், ஓடுதல். || உலோகமுருக்குவதற்குப் போடும் பொருள். || ஒரேநிறச் சூதுகடுதாசித் துடர்ச்சி — et reflux ஏற்றம் வற்றம், பெருக்குவடிவு, ஏற்றத்தாழ்ச்சி; — de paroles பேச்சுத்தாராளம்; — de ventre பேதி, வயிற்றுக்கழிச்சல்; — de sang இரத்தக் கழிச்சல், பெரும்பாடு; — de bouche உமிழ்நீர் மிகுதி.

Fluxion, *f.* வீக்கம், சலக்கட்டி, இரத்தப்பெருக்கு, பித்தப்பாய்ச்சல், — பெருக்கு; méthode des — அணிமகணிதம், அதிநுண்கணிதம்.

Fluxionnaire, *adj.* சலக்கட்டிக் கேதுவான, வீக்கமுள்ள. [ணப்பாய்.

Foc, *m.* முன்னணிய —, முக்கோ

Focal, e, *adj.* கிரணங்கூடுமையத்துக்கடுத்த, — மையத்து.

Fodie, *f.* ஓர்வித பூச்சி.

Foène, *m.* ஓர் வண்டு. [கம்.

Fœniculum officinale பெருஞ்சீர

Foerre, Foarre, *m.* *V.* Feurre.

Fœtus, *m.* கரு, கருப்பம், பிண்டம், பீள், சினை.

Foi, *f.* விசுவாசம், பத்தி. || விசுவாச விஷயம், வேதபோதனை, — சத்தியங்கள், கோட்பாடு. || பிரமாணிக்கம், நாணயம், நேர்மை. || நம்பிக்கை, உறுதிப்பாடு, வாக்குத்தத்தம், அத்தாட்சி, சாட்சி, நிச்சயம்; bonne — நேர்மை; mauvaise — வஞ்சனை, கபடு; engager, violer sa—வார்த்தைப்பாடு கொடுத்தல், —மீறுதல்; ajouter—நம்புதல், விசுவசித்தல்; digne de—நம்பிக்கைக்குரிய; profession de — விசுவாச—, கோட்பாட்டின் உச்சாரணம்; sur la — de நம்பி; ma —, par ma — சத்தியமாக; en bonne —, de bonne — உண்மையாய், கபடின்றி.

Foie, *m.* ஈரல், கல்லீரல், ஈரற்குலை.

Foin, *m.* அறுத்துக் காயவித்த புல், அறுப்பாகிக் காய்ந்தபுல், அறுப்புக்குரிய —, பசும்புல், சிலகாய்களின் உட்பஞ்சு, — சுணை. || *int.* சீசீ.

Foire, *f.* சந்தை, அங்காடி, ஆவணம். || சந்தையீகை; jour de — சந்தை கூடுநாள்.

Foire, *f.* பேதி, கழிச்சல், நீராளமான மலசுத்தி.

Foirer, *v. n.* வயிறுபோதல், — பேதித்தல்; *ou* — de crainte எருகுதல்.

Foireux, — euse, *adj. et s.* பேதி —, கழிச்சலுள்ள, வெளுவெளுப்பான, கோழைத்தனமுள்ள, — உள்ளவன்

Fois, *f.* விசை, தரம், வாட்டி, தடவை, சிலக்கு : de — à autres, par— சிலவிசை, வேளைக்குவேளை ; à la —, tout à la — ஒருமிக்க, மொத்தமாய் ; 2 — plus இருமடங்கதிகமாய், 2 — autant இருமடங்கு ; une — que, dès qu'une —, lorsqu'une — vous avez fait cela இதையொருவிசை செய்தபிறகு,—போது; une—ஒருவிசை—நாள்.

Foison (à), *adv.* மிகுதி —, தாராளமாய்.

Foisonnement, *m.* பெருகுதல், அதிகமாய்த் தோன்றுதல்.

Foisonner, *v. n.* மிகுதல், செழித்தல், வர்த்தித்தல், பெருகுதல், வேவிப்பினால் அதிகமாய்த் தோன்றுதல்.

Fol, Folle, *adj. V.* Fou.

Folâtre, *adj.* துள்ளாட்டம் —, களிப்பு, — சரசமுள்ள, விளையாட்டுக் குணமுள்ள.

Folâtrement, *adv.* களிப்பாய், சரசமாய், விளையாட்டுத்தனமாய்.

Folâtrer, *v. n.* துள்ளாடுதல், விளையாடுதல், ஆடுதல், துள்ளுதல், சரசம் —, கேலிபண்ணுதல், மகிழ்தல்.

Folâtrerie, *f.* விளையாட்டு, சரசம், துள்ளாட்டம், களியாட்டு.

Foliacé, Foliaire, *adj.* இலைக்கடுத்த, இலைபோன்ற, தகடாய்ப் பிரிகிற.

Foliation, *f.* இலைப்பு, தழைப்பு, இலையமையும் விதம்.

Folichon, —nne, *adj. V.* Folâtre.

Folichonner, *v. n. V.* Folâtrer.

Folie, *f.* பைத்தியம், பயித்தியம், புத்தியீனம், — மயக்கம், — தடுமாற்றம், மதிகேடு, உன்மத்தம், அவிவேகம், அவிவேகசெய்கை, மூடத்தனம். || இச்சை, மிதமிஞ்சின பற்றுதல், — சந்தோஷம், மிக்ககளிப்பு, துள்ளாட்டம். || *pl.* பைத்தியமான செய்கை, துர்நடக்கை, மிஞ்சினசெலவு, பரியாசப்பேச்சு. || மிஞ்சினசெலவோடு கட்டின தோட்டவீடு : aimer à la — மிதமிஞ்சி நேசித்தல்.

Folié, *adj.* இலையுள்ள, தகடான.

Foliforme, *adj.* இலைவடிவுள்ள.

Folio, *m.* எடு, எட்டினிலக்கம், — பக்கம் : — recto எட்டின் முன்பக்கம்.

Foliole, *f.* சிற்றிலை, இலையின் பிரிவு, (புஷ்பத்தின்) இதழ்.

Foliolé, *adj.* சிற்றிலையாய்ப் பிரியும், இதழ் இதழாய்ப் பிரியும்.

Foliotage, *m.* எடுகளுக்கு இலக்கம் போடுதல்.

Folioter, *v. a.* எடுகளுக்கு இலக்கம்போடுதல்.

Folipare, *adj.* இலைமாத்திரந் தருகிற.

Folk-lore, *m.* ஓர் தேசத்துப் பழையகதைகளின் திரட்டு.

Folle enchère. *f.* பைத்தியமான ஏலம், ஏலத்தில் தரக்கூடாத விலையாய் வாங்குதல். உ-ம். விற்பனையின் வித்தியாசந் தீர்த்தல், அவிவேகத்தின் அபராதங்கொடுத்தல், — ஆக்கினைப்படுதல்.

Follement, *adv.* பைத்தியம் —, அவிவேகமாய், மூடத்தனமாய்.

Follet, — tte, *adj* கொஞ்ச பைத்தியமுள்ள, விளையாட்டுப் புத்தியுள்ள : feu — உற்கை, கொள்ளிவாய்ப்பேய், வீண் சிறப்புள்ள எண்ணங்கள் ; poil — இளமயிர், மெல்லியரோமம். || *m.* *ou* esprit — பூதம், பேய், விளையாட்டுப்பேய்.

Folliculaire, *adj. et m.* சங்கதிப் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்கிற, — பத்திரிகைக்காரன்.

Follicule, *m.* சிறுபை, ஒற்றைக் கழலை. || இரட்டைக்கனி. || *f.* (நிலவாகைமுதலியவற்றின்) பாளை, உறை, நெற்று.

Fomentateur, *m.* கலகம் உண்டுபண்ணுபவன், — வள்.

Fomentation, *f.* பொட்டலம், பொட்டிலம், பொட்டளி, பொட்டணம், பொட்டணி, பற்று, ஒற்றல், ஒற்றிடம், ஒற்று: appliquer des — பொட்டலம் ... போடுதல், *ou*

Fomenter, *v.a.* பொட்டணம்—, ஒற்றிடம்—, பற்றுபோடுதல், ஒற்றுதல். || தூண்டுதல், அதிகரிப்பித்தல், வளர்த்தல்.

Foncé, *adj*. இருண்ட. || ஆஸ்தி—, திறமையுள்ள : bleu—இருண்ட நீலம்.

Foncer, *v. a.* (பீப்பாவுக்கு) அடிபோடுதல். || (கிணறு) தோண்டுதல். || (வருமானம்) தருதல். || ஒப்பரவாக்குதல். || (சாயம்) இருட்டுதல். || *v. n.* — sur மேலே பாய்தல்.

Foncier, *adj*. நிலத்து, காணியைச் சேர்ந்த: richesses —, propriété — காணிபூமி, — யாட்சி, நிலம், நிலவுடைமை ; propriétaire —நிலமுடையவன் ; impôt — நிலவரி.

Foncièrement, *adv*. அடியில், அடியோடு. || முழுதும், அற.

Fonction, *f*. அலுவல், உத்தியோகம், தொழில், கருமம், வேலை, விசாரணை, கடமை : faire —de ஆக உதவுதல், ஆயிருத்தல். [தன், தொழிலாளி.

Fonctionnaire, *m*. உத்தியோகஸ்

Fonctionnarisme, *m*. உத்தியோகம்பார்க்க விருப்பம், உத்தியோகஸ்தருடன் சேர அபேக்ஷை.

Fonctionnel, *adj*. உத்தியோகத்துக்குரிமையான, அந்தந்த அலுவலையடுத்த.

Fonctionnement, *m*. Fonctionner, *v. n.* வேலைசெய்தல், நடத்தல்.

Fond, *m*. அடி, கீழ்ப்பக்கம், பள்ளம். || ஆழம், தாழ்வு. || நிலம். || நிலைப்பு, ஆதாரம், ஆதரவு, நம்பிக்கை. || பின்பக்கம், அதிக துலையான —, கடைசியிடம். || (கட்டிலின்) சட்டம். || (சித்திரத்தின் ஆதாரமான) நெசவு, புடைவை, இடம், தளம், நிலை. || பிரதானம், அஸ்திவாரம், ஆதி —, மூலம், பொருண்மை. || உள், உள்ளாந்தரங்கம், உள்ளந்தரம், உள்ளம் : faire — sur மேலே நம்பிக்கைவைத்தல் : boîte à 2 —, à double — இருபுறமுந்திறக்கும் —, ஈரடிப்பெட்டி ; aller au — des choses காரியங்களை உள்ளே பரிசோதித்தல் ; un — de vérité உண்மையான அஸ்திவாரம், — பொருள் ; plaider au — பிராதின் பொருண்மை குறித்து வழக்காடுதல் ; le — de l'âme ஆத்துமத்தின் உள், — உள்ளம் ; à — அடிவரைக்கும், முழுதும், குறையின்றி ; au —, dans le — உள்ளே, உள்ளத்தில், உண்மையில், பிரதானம் பார்த்தால்.

Fondamental, *adj*. பிரதான, அஸ்திவாரம் —, மூலம் —, மூலாதாரம்—, முக்கியமான.

Fondamentalement, *adv*. பிரதானம் —, அஸ்திவாரமாக.

Fondant, *part*. கரைகிற, உருகுகிற. || *m*. கரைகிற மருந்து, (உலோகம்) உருக்குகிற பொருள், மற்ற நிறங்களோடே கலந்த இளம்பச்சை.

Fondateur, —trice, *s*. கட்டினவன். உண்டாக்கினவன், ஏற்படுத்தினவன், அஸ்திவாரம் போட்டவன், ஸ்தாபித்தவன், — வள்.

Fondation, *f*. அஸ்திவாரம், துவக்கம், ஆதாரம், ஸ்தாபிப்பு, கட்டுதல், ஏற்படுத்துதல். || ஏற்படுத்தின வருமானம், பத்தியுள்ள நன்கொடை.

Fondé, *part*. ஏற்படுத்திய, கட்டின, நியாயம் —, அதிகாரமுள்ள. . || *m*. — de pouvoir, de procuration காரியக்காரன், அதிகாரபத்திரம் பெற்றவன்.

Fondement, *m*. அஸ்திவாரம், அடி, அடிவாரம். || ஆதாரம், தாபரம், நிலைபரம், மூலம், காரணம், நியாயம், உறுதி. || குதம், சகனம், இருப்பிடம், கீழ்வாய், மலவாயில், சீவனி.

Fonder, *v. a.* அஸ்திவாரம் போடுதல், கட்டுதல், உண்டாக்குதல், ஏற்படுத்துதல், ஸ்தாபித்தல், (தர்மஸ்தாபகத்துக்கு) வருமானம் உண்டுபண்ணுதல் : — de procuration தன் காரியஸ்தனாக ஏற்படுத்துதல். || se — ஊன்றுதல், ஸ்தாபிக்கப்படுதல் : se — sur ஊன்றுதல், நம்புதல், நிலைகொள்ளுதல்.

Fonderie, *f*. வார்ப்படம், வார்ப்பாலை, வார்ப்புலை, உருக்கிவார்க்குமிடம், வார்ப்புவித்தை, மெழுகு உருக்குமிடம்.

Fondeur, *m*. (உலோகங்களை) உருக்கிவார்க்கிறவன், வார்ப்பு —, கஞ்சக்காரன், கன்னான்: —de caractères எழுத்து வார்க்கிறவன்.

Fondoir, *m*. நிணமுருக்குமிடம்.

Fondre, *v. a.* உருக்குதல், உருக்கி —, வார்த்தல், கரைத்தல், இளக்குதல். || கலத்தல், சேர்த்தல், கூட்டுதல், வன்னங்களையிசைத்தல். || *v. n.* கரைதல், உருகுதல், இளகுதல், இடிதல், மெலிதல், அமிழ்தல், படிதல், விழுதல், சேருதல் : — en pluie மழையாய்க் கரைதல் ; — en larmes கண்ணீராயுருகுதல் ; — sur மேலே பாய்தல், — விழு

தல். || se — கரைதல், உருகுதல், இளகுதல், நீராளமாதல், சிதறிப்போதல், அழிதல், இடிதல்.

Fondrière, *f.* உளை, சதுப்பு, சேற்றுத்தரை, — நிலம், செதுப்பு. || தரையின் பிளப்பு, குழி.

Fondrilles, *f. pl.* மண்டி, வண்டல்.

Fonds, *m.* தரை, நிலம், பூமி, காணியாட்சி, வயல், மனை. || பணத்தொகை, உரொக்கம், ஆஸ்தி, முதல், மூலதனம், — த்திர்வியம். || வியாபாரவீடு. || மிகுதி, தாராளம், சேகரம், மூலம், திறமை, ஊறணி: biens— காணிபூமி, நிலங்கள்; placer à — perdu மரணபரியந்தம் வருமானமாக —, முதல் திரும்பாதபடி கொடுத்தல்; — publics அரமனைக்குக்கடனாகக் கொடுத்த பணவருமானம்: — social வியாபாரிகள் கூட்டத்தின் முதல்; — de boutique கடையின் சரக்குகள்; vendre son — தன்வியாபாரவீட்டைவிற்றல்; être en — உரொக்கங்கொண்டிருத்தல்; il a un—de probité அவனுக்கு மிகுந்த நாணயமுண்டு.

Fondu, *part.* உருகின, கரைந்த.

Fondue, *f.* முட்டையும் பாற்கட்டியுங் கலந்த பதார்த்தம்.

Fongible, *adj.* செலவழிக்க —, அளக்க —, நிறுக்கத்தக்க.

Fongosité, *f.* சதைவளர்ச்சி, நுகைவானகழலை, — கட்டி, துன்மாமிசம்.

Fongueux, *adj.* காளானியல்பான, புற்றிற் பூப்போன்ற.

Fongus, *m.* *V.* Fongosité.

Fontaine, *f.* நீரூற்று, ஊறணி, ஊற்று, ஊற்றடங்கிய கட்டுக்கோப்பு, குழலுள்ள தண்ணீர்ப் பாத்திரம். *V.* Fontanelle.

Fontainebleau, (பிராஞ்சுதேசத்தில்) பொந்தேன்பிளோ நகரம்.

Fontainier, *m.* நீரூற்று கட்டுகிறவன், — விசாரணைக்காரன், — காவற்காரன், ஷை தண்ணீர்ப்பாத்திரஞ் செய்பவன் — விற்பவன். [பள்ளம்.

Fontanelle, *f.* தலையுச்சிக்குழி, —

Fontange, *f.* நாடாமுடிச்சு.

Fonte, *f.* உருக்குதல், கரைவு, கரைதல், வார்ப்பு, வார்ப்படம், வெட்டையீயம், (அச்சிலே) வார்த்தல், ஒருவிசையாய் உருக்கிவார்க்கும் —, செம்பு கலந்துவார்த்த உலோகம், வார்த்த விரும்பு, திட்டமான புது எழுத்துவார்ப்பு. || கைத்துப்பாக்கியுறை: faire une — உருக்கி —, வார்த்தல்; ouvrage en — வார்ப்பட —, வார்ப்புவேலை.

Fontenier, *m.* *V.* Fontainier.

Fonticule, *m.* காரத்திரி, ஊறற்புண்.

Fonts, *m. pl.* ou — baptismaux, — de baptême ஞானஸ்நானத் தொட்டி: tenir sur les — ஞானத்தகப்பன் — தாயாயிருத்தல், தலைதொடுதல்.

For, *m.* அதிகாரம், நீதிஸ்தலம்: — intérieur மனசாட்சி —, இரகசிய நீதித்தீர்ப்பு; — extérieur பிரசித்த நீதிஸ்தலம்.

Forage, *m.* துளைத்தல், தமரிடல். || இரசத்தின் தீர்வை. || கற்பலகை எடுக்குஞ் சுரங்கத்தின் திரப்பு.

Forain, *adj.* புறத்து, அந்நிய. || சந்தையின்: marchand — சந்தைகளில் திரிகிற வியாபாரி: chemin — இருவண்டிலுக்கு அகலமான பாதை; rade— சகல காற்றுகளுக்குந் திரப்பான துறை.

Foraminé, *adj.* சன்னமாய்த் துளைக்கப்பட்ட, சிறு துவாரங்களுள்ள.

Forban, *m.* கடற்கள்ளன்: — littéraire அந்நிய நூற்களைத் தனதென்று அபகரிக்கிறவன்.

Forbicine, *f.* ஓர் வண்டு. [சம்.

Forçage, *m.* நாணயத்தினிடைமிச்

Forçat, *m.* விலங்குக்காரன்.

Force, *f.* பலம், பெலன், சத்தி, சத்துவம், திராணி. || வல்லமை, வல்லபம், அதிகாரம், செல்வாக்கு. || பலவநீதம், கட்டாயம், வலுமை, வல்லடி, பலாற்காரம். || திறமை, சாமர்த்தியம், தேர்ச்சி. || உறுதி, திடம், ஸ்திரம், கனம். || தாக்கு, விசை. || ஊக்கம், முயற்சி, உக்கிரம், அகோரம், வேகம். || சித்தி, பலிப்பு, (பரீஸ்நகரத்தில்) ஓர் சிறைச்சாலை. || *pl.* படை, சேனை, இராணுவம். || பெரியகத்திரி. || *adv.* மிகுதி, மிகுந்த, அநேகம்: — de l'âge பலஞ் சம்பூரணமான பிராயம்; — d'un bataillon பட்டாளத்தின் சனத்தொகை; la — publique, armée சர்க்கார் —, அரமனைச்சேவகர்; — majeure தவிர்க்கக்கூடாத விக்கினம், — சம்பவம், கட்டாயம்; — m'est de parler பேச எனக்குக் கட்டாயமுண்டு; maison de — மறியல்வீடு, சிறைக்கூடம்; faire — de

voiles சகல பாய்களையும் விரித்தல்; faire — de rames தண்டெல்லாம் வலித்தல்; à — de மிகுதியால்; à toute — எப்படியும், அகத்தியமாய்: de —, de vive — கட்டாயம் —, பலவந்தமாய்; — gens வெகு சனங்கள்.

Forcé, *part.* கட்டாயமான, இயல்பற்ற, புரட்டின.

Forcement, *m.* கட்டாயப்படுத்துதல், பலவந்தப்படுத்துதல்.

Forcément, *adv.* கட்டாயம் —, பலவந்தமாய், மனசின்றி, அகத்தியமாய்.

Forcené, *adj.* பைத்திய, கோபவெறி —, மூர்க்கமுள்ள. || *m.* கோபவெறியன், பித்தன்.

Forceps, *m.* இடுக்கி, குறடு, கத்தரி

Forcer, *v. a.* பலவந்தமாய்ப் பிடித்தல், — உடைத்தல், — திறத்தல். || செயித்தல், கீழ்ப்படுத்துதல், அடக்குதல். || கட்டாயஞ்செய்தல், பலவந்தப்படுத்துதல், வருத்தப்பட்டு அடைதல். || அதிகமாய் வருத்துதல், அதிக பிரயாசை — வருத்த — அவதிப்படுத்துதல், அதிக பெரிசாக்குதல், புரட்டுதல், கோட்டுதல், கோணுவித்தல், கெடுத்தல், பருப்பித்தல், அதிகமாயுயர்த்துதல். || *v. n.* அகோரமாதல், பலத்தல், வருந்துதல்: — la consigne கட்டளைமீறுதல்; — une clef சாவிமுறுக்குதல், — கெடுத்தல்; — son talent தன் சாமர்த்தியத்துக்குமேல் முயலுதல்; — le pas நடைதீவிரித்தல்; — de voiles பாயெல்லாம் விரித்தல். || se — வருந்துதல், அதிகபிரயாசப்படுதல், தனக்குப் பலவந்தம்பண்ணுதல்.

Forclore, *v. a.* கெடுதப்பினதென்று நீக்குதல் — *part.* forclos நீக்கின.

Forclusion, *f.* கெடுதப்பிளதென்கிற —, நீக்கம், தள்ளுபடி, தடுப்பு.

Forer, *v. a.* துளைத்தல், துருவுதல்.

Forerie, *f.* பீரங்கி துளைக்குமிடம்.

Forestier, *adj.* காட்டு, காட்டுகளின், — விசாரணையுள்ள: arbre — காட்டுமரம். || *m.* காடுகளின்விசாரணைக்காரன்.

Foret, *m.* துரப்பணம், தமரூசி, தமராணி, வீசுவில்: — pour percer les pierres கடுத்தலூசி.

Forêt, *f.* காடு, வனம், வனாந்தரம், ஆரணியம், கானகம், கான். || மிகுதி, திரள். [ங்காடு.

Forêt-Noire, *f.* (பாத்நாட்டில்) கரு

Foreur, *m.* துளைக்கிறவன்.

Forfaire, *v. n. et a.* தப்புதல், கடமை —, கட்டளை மீறுதல், குற்றத்தினுவிழத்தல்.

Forfait, *m.* பாதகம், துரோகம், பெரியகுற்றம். || குத்தகை, தீர்ந்த விலை.

Forfaiture, *f.* (உத்தியோகஸ்தன் — நடுவன்) மீறுதல், தப்பு.

Forfante, *m. V.* fanfaron.

Forfanterie, *f.* வீம்பு, — ப்பேச்சு, பாராட்டு. [ம்பு.

Forficule, *f.* காதுப்பூச்சி, — ப்பா

Forge, *f.* உலை, — க்களம், கொல்லுலை, கொல்லனுலை.

Forgeable, *adj.* காய்ச்சியடிக்கத்தக்க.

Forgeage, *m.* காய்ச்சியடித்தல்.

Forgé, காய்ச்சியடித்த, கள்ள. *part. de*

Forger, *v. a.* காய்ச்சியடித்தல், சுத்தியாலடித்தல். || உண்டுபண்ணுதல், — பாவித்தல், உண்டாக்குதல், கட்டுதல். || se — காய்ச்சியடிக்கப்படுதல், உண்டுபாவித்தல், நினைத்தல், தனக்குண்டாக்குதல். || *v. n.* பின் லாடத்தோடு முன்லாடந்தட்டுதல்.

Forgeron, *m.* கருமான், கொல்லன், காய்ச்சியடிக்கிறவன்.

Forgeur, *m.* உண்டாக்குகிறவன், கட்டுகிறவன். || *V.* Forgeron.

Forhuir, *v. n.* நாய்களையழைக்கக் கொம்பூதுதல்.

Forjeter, *v. n.* முன்னிட்டிருத்தல், பிதுங்குதல். [தல்.

Forjuger, *v. a.* அநீதமாய்த் தீர்த்

Forlancer, *v. a.* (வேட்டைமிருகத்தைக்) கிளப்புதல், இருப்பிடத்தினின்று புறப்படச்செய்தல். [தல்

Forligner, *v. n.* சீர்கெடுதல், தப்பு

Forlonger, *v. n. ou* se — (வேட்டைமிருகம்) நாடுவிட்டகலுதல், தூரமாய் —, அகலுதல்.

Formaliser, (se) மனத்தாங்கலாதல், குறைபிடித்தல்.

Formalisme, *m.* மிஞ்சின ஆசாரப்பிரியம்; உபசரணைப்பிரியம்.

Formaliste, *adj. et s.* ஆசார நுணு

க்கன், — நுணுக்கமுள்ள, கிரியாநுசாரி, குதர்க்கி.

Formalité, *f.* (நீதிஸ்தலத்திலநுசரிக்கும்) முறை, சட்டம், வழக்கம், ஒழுங்கு. || மிஞ்சின ஆசாரம், —உபசரணை.

Format, *m.* (புஸ்தக) அளவு, விதம்.

Formateur, — trice, *s.* உண்டுபடுத்துகிறவன், — வள்.

Formation, *f.* உருவாக்குதல்; — ஆதல், ஏற்படுத்துதல், உண்டுபண்ணுதல், சிஷ்டிப்பு, உற்பத்தி, உற்பவம் :— des métaux உலோகங்கள் விளைதல்; — d'un mot சொல்லுற்பத்தி.

Forme, *f.* உருவு, உருவம், உரூபம், உரு, வெளி —, வடிவு, வடிவம், புறக்கோலம், தோற்றம். || மாதிரி, வகை, விதம், முறைமை, ஒழுங்கு, முறை, சட்டம், சாதனம். || பேசும் —, நடக்கும் மாதிரி, போக்கு, வழக்கம். || அச்சு, க்ரு, மால், சப்பாத்துமாதிரி —, தொப்பிக்கட்டை, கட்டைமேல் உருவான தொப்பியின் பங்கு, சர்க்கரைக்கட்டியச்சு, தாள்செய்யுஞ் சல்லடைச்சட்டம், துத்துநிறைந்த ஆசனம், கோவிலின் நிலையாசனம். || குதிரைக்கால் வீக்கம். || (முசல்) இருப்பிடம். || பொர்மா, எழுத்துநிறைசட்டம். || இராசாளிப் பெட்டை. || கப்பல் செப்பனிடுந்துறை. || தேவதிரவிய அநுமானங்களின் மந்திரம், — வாக்கியம்: en — முறைமையின் —, சட்டத்தின்படியே; en — de மாதிரியாக, வடிவாய்; par — de போலே; pour la — வெளித்தோற்றமாக, வழக்கத்துக்கு, சாயலுக்கு.

Formé, *part.* உருவான, பழகின.

Formel, elle, *adj.* திட்டம்—, உண்மை —, தெளிவான : péché — அறிந்துசெய்கிற —, உண்மையான பாவம்; cause — உருவாக்குகிறகாரணம். || *m.* திட்டம் : le — du péché பாவத்திலுள்ளகுற்றம்.

Formellement, *adv.* திட்டம் —, சட்டமாய்.

Former, *v. a.* சிஷ்டித்தல், படைத்தல், உண்டாக்குதல், உண்டுபண்ணுதல். || உருவு —, வடிவாக்குதல், உருப்படுத்துதல், கோலம் —, பாவனையாக்குதல். || (வினையின் காலங்களை) உண்டாக்குதல். || ஸ்தாபித்தல், ஏற்படுத்துதல், செய்தல், பண்ணுதல், கட்டிக் —; கொள்ளுதல். || திட்டம் —, ஒழுங்கு பண்ணுதல், கட்டுதல், பாவித்தல். || காரணமாயிருத்தல். || படிப்பித்தல், பழக்குதல், அப்பியாசப்படுத்துதல், வளர்த்தல். || பிரதானபங்காயிருத்தல். || துவக்குதல், — un siège முற்றிக்கை செய்தல்; — au travail, — des soldats வேலைக்கு —, சேவகரைப் பழக்குதல். || se — உருவாதல், அங்கவடிவாதல், விளைதல், உண்டாதல், தனக்குச் செய்தல், — உண்டாக்குதல், — ஏற்படுத்துதல், பாவித்தல், பழகுதல், அப்பியாசமாதல்.

Formicaire, *f.* formica, எறும்பு: — compressa கட்டெறும்பு; — elongata முசிறு, மூயிறு.

Formica-leo, *m.* *V.* Fourmi-lion.

Formican, *adj.* இலேசும் வேகமுமான (நாடி.)

Formication, *f.* பரபரவென்கிற தினவு, மசமசப்பு, ஊருஞ் சுவரணை.

Formidable, *adj.* பயங்கரமுள்ள, அச்சத்துக்குரிய, அகோரமான.

Formidablement, *adv.* பயங்கரமாய், அச்சம்கொடுக்கக்கூடியவிதமாய்.

Formier, *m.* சப்பாத்தின் அச்சு — கட்டைசெய்பவன், — விற்பவன்.

Formique, *adj.* எறும்பின் (புளிப்பு.) || *m.* கடற்பாறை.

Formose, (சீனதேசத்தில்) பொர்மோஸ்தீவு.

Formuer, *v. a.* இறகுதிர்வு போக்குதல்.

Formulaire, *m.* சாதனச் சட்டச்சேர்க்கை, விதிச்சட்டம், பத்ததி, பிரமாணம், முறை.— de prières செபபுஸ்தகம், — de foi விசுவாசப் பிரமாணம்.

Formule, *f.* மந்திரம், சாதனச் —, சட்டம், விதிச்சட்டம், — சூத்திரம், விதி, சூத்திரம், முறை, ஒழுங்கு, வைத்தியன் கட்டளை, எழுதுந்தோல் பிரமாணம், சின்ன ஒஸ்தி: — d'un serment சத்தியத்தின் சட்டம் : — de prière மந்திரம்; — de politesse உபசாரமுறை; — algébrique விதிவாய், — வாய்ப்பாடு.

Formuler, *v. a.* சட்டமிடுதல், விதித்தல், சட்டத்தின்படியெழுதுதல், திட்டமாய்ச்சொல்லுதல், வைத்தியகட்டளை எழுதுதல், மருந்துமுறை விதித்தல், கணக்கின் சாதாரணச் சூத்திரம் ஸ்தாபித்தல்.

Fornicateur, — trice, *s.* சோரக் கள்ளன், விபசாரன், விபசாரி.

Fornication, *f.* விபசாரம், சோரம், விவாகமில்லாதவர்கள் செய்யும் மோக பாவம். [சாரஞ்செய்தல்.

Forniquer, *v. n.* சோரம் —, விப

Forpaître, Forpaiser, *v. n.* தூரத்தில் மேய்தல்.

Fors, *prép.* தவிர, ஒழிய.

Forsenant, *adj.* வேகமுள்ள வேட்டைநாய்.

Fort, *m.* கோட்டை, அரண், (sur une montagne) துருகம். ‖ ஒடுக்கிடம், அடைக்கலம், காட்டின் —, அடர்த்தி. ‖ அகோரம், உக்கிரம், நடு, மையம். ‖ பிரதானம், பலம், மேன்மை, பிரதான சமர்த்து: au — de la mêlée சண்டையின் நடுவில்; du — au faible பலத்துக்கும் பலவீனத்துக்குமுண்டான சகட்டிலே. [வும், வெகுவாய்.

Fort, *adv.* பலமாய், மெத்த, மிக

Fort, *adj.* பலம் —, சத்துவம் —, திராணி —, ஆண்மை —, ஊக்கமுள்ள, பலத்த, உரத்த, வலிய. ‖ உறுதி —, கெட்டி —, ஸ்திரம் —, கடினமான. ‖ பெரிய, கனத்த, கடின. ‖ அடர்ந்த, தடித்த, நெருங்கிய, உறைந்த, வருத்தமான, அரிய. ‖ பிரயாசமுள்ள. ‖ அகோர, உக்கிர, மூர்க்கம் —, வேகமான. ‖ வல்லமை —, பெலனுள்ள. ‖ தைரியம் —, துணிவு —, மகத்துவமுள்ள. ‖ காரம் —, உறைப்பான. ‖ சாமர்த்தியம் —, கெட்டித்தனம் —, திறமையுள்ள, நன்ருய்ப் படித்த: ville — அரணிக்கப்பட்ட பட்டணம்; terre — சடிப்புள்ள —, உழுவதற்கரியநிலம்; liqueur — இலாகிரியான —, மதுபானம்; tête — வெகு புத்தியுள்ளவன்; devenir — பலத்தல், உரத்தல், ஸ்திரங்கொள்ளுதல்; se faire — de vaincre செயிக்க நம்புதல், — ஏற்படுதல்; se porter — pour quelqu'un ஒருவன் சம்மதிக்குப் பிணையாதல்; à plus — raison அதிக நியாயத்தோடு; être — de மேலேயூன்றி — நம்பியிருத்தல். ‖ *m.* பலனுள்ளவன், பராக்கிரமன்; — de la halle தானியக்கடைச் சாலேயின் சுமையாள். [சத்தமாய்.

Forte, [té] *adv.* (italien) உரத்த

Fortement, *adv.* கெட்டி —, பலம் —, ஊக்கமாய், மிகவும், உறுதி —, திடம் —, உக்கிரமாய். [கருவி.

Forte-piano, *m.* பெருமின்னிசைக்

Forteresse, *f.* கோட்டை, அரண், துருகம். ‖ நகர்நடுவிலுள்ள கோட்டை.

Fortifiant, *part. et m.* பலங்கொடுக்கிற, — கொடுக்குமருந்து.

Fortification, *f.* கோட்டை, அரண், மதிள், அலங்கம், கொத்தளம், அரணிப்பு.

Fortifié, *part.* கோட்டையான, அரணிக்கப்பட்ட. ‖ தேறின, உறுதி—, பலமுள்ள.

Fortifier, *v. a.* பல —, உறுதி —, திட —, ஸ்திரப்படுத்துதல், பலப்பித்தல். ‖ அரணித்தல், அரணுக்குதல், கோட்டை —, கொத்தளம் —, அலங்கங்கட்டுதல். ‖ se — பல —, உறுதிப்படுதல், பலத்தல், உரத்தல், தேறுதல், ஸ்திரங் —, பலங் —, தைரியங் கொள்ளுதல், — ஆதல். ‖ தனக்குச்சுற்றிலும் அரண்—கொத்தளங் கட்டுதல். [ரண்.

Fortin, *m.* சிறுகோட்டை, சிற்ற

Fortiori (à), *adv.* அதிக நியாயத்தோடு, — நியாயமென்று.

Fortissimo, *adv. et m.* மிகப் பலமாய், உரத்த சத்தமாய்.

Fortrait, *adj.* மிகவுங்களைத்த, இளைத்த (குதிரை.) [சின் இளைப்பு, களைப்பு.

Fortraiture, *f.* (குதிரையின்) மிஞ்

Fortuit, *adj.* தற்செயல் —, தேவாதீனம் —, சடுதியான, நினையாத.

Fortuitement, *adv.* தற்செயல் —, அதிஷ்டம்—, தேவாதீனமாய், தானுய்.

Fortune, *f.* தேவாதீனம், தெய்வம். ‖ அதிஷ்டம், யோகம் தற்செயல். ‖ அதிஷ்டம், அநுகூலம், பிரயோசனம். ‖ பாக்கியம், செல்வம், ஆஸ்தி, திரவியம். ‖ நிர்ப்பாக்கியம், துரதிஷ்டம். ‖ மகிமையுத்தியோகம். ‖ அந்தஸ்து, நிலைமை, தன்மை, இருக்கை. ‖ அதிஷ்டத்தின் பொய்த்தேவதை: bonne, mauvaise — நல்லதிஷ்டம், துரதிஷ்டம்; —de mer கடலின் ஆபத்துகள்; maîtriser la —துரதிஷ்டத்துக்கு மேற்படுதல்; faire — ஆஸ்தி சம்பாதித்தல், பிரபலியமாதல்; avancer sa — மகிமையுத்தியோகங்களிலேறுதல்; soldat de — அதிஷ்டத்தால் மேலான உத்தியோகத்துக்கு ஏறின சேவகன்.

Fortuné, *adj.* பாக்கியம் —, அதிஷ்டம் —, செல்வமுள்ள : les — செல்வமுள்ள—, கனரிதீவுகள்.

Forum, *m.* கடை, அங்காடி, ஆஸ்தானவிடம், நியாயஸ்தலம். || உரோமாபுரிச்சனம் பொதுக் காரியங்களுக்காகக் கூடுமிடம்.

Forure, *f.* துரப்பணத்தாற் செய்த —, துளை.

Fosse, *f.* குழி, பள்ளம். || பிரேதக்குழி, சவக்குழி : — pour prendre les animaux படுகுழி, பயம்பு.

Fossé, *m.* வாய்க்கால், பள்ளம், அகழ், அகழி, அகிள், பரிகை.

Fosset, *m.* (பீப்பாவின்) குச்சு, அடைப்பு, அடைகுச்சு.

Fossette, *f.* சின்ன குழி, கோலி விளையாட்டுக்குரிய சின்ன—, கன்னத்தின்குழி :— du cœur நெஞ்சுப்பள்ளம், ஈரற்குழி.

Fossile, *adj. et m.* தோண்டி யெடுபடும்,— படுகிற வஸ்து.

Fossoir, *m.* குழி தோண்டும் மண்வெட்டி.

Fossoyage, *m.* குழி வெட்டுதல்,— வெட்டும் வேலை.

Fossoyer, *v. a.* குழி வெட்டுதல், பள்ளம் வெட்டி யடைத்தல்.

Fossoyeur, *m.* பிரேதக்குழி—, பள்ளம் வெட்டுகிறவன், பிரேதம் புதைக்கிறவன்.

Fou, fol, folle, *adj.* பைத்திய, புத்தியீன, மதிகேடான, பைத்தியம் —, பித்தமுள்ள, மூடமான, மதிகெட்ட, உன்மத்தமான. || அவிவேகி, பேதை, அதிக எளிதாய் நம்புகிற. || புத்திக்கு ஒவ்வாத, நியாயமற்ற. || களிப்பு—, விளையாட்டுள்ள. || மிகவும் பெரிய,— உயர்ந்த, மிதமிஞ்சின, அதிகமான. || மிஞ்சின விச்சை—பற்றுதல்—நேசமுள்ள ; folles amours மதிகெட்ட நேசங்கள் ; dépenses—மிதமிஞ்சின—, வீண்செலவுகள் ; humeur—களிப்புள்ள குணம் ; être—de அதிகமாய் நேசித்தல் ; fol appel நியாயமற்ற அபயம் ; il y a un monde— திரளான சனமுண்டு ; prix —மிஞ்சின விலை rire — மதியற்ற —, மிஞ்சின சிரிப்பு. || fou, folle, *s.* பைத்தியக்காரன்,— காரி, பைத்தியன், பித்தன். || fou, *m.* அரமனைக் கோமாளி, ஓர் பக்ஷி, சதுரங்கமனையில் தேர், இரதம்.

Fouace, *f.* ஓர் பண்ணியாரம்.

Fouage, *m.* தலைக்கட்டு வரி.

Fouaille, *f.* வேட்டைநாய்ப் பங்கு.

Fouailler, *v. a.* சவுக்கினால்—, சவுக்கடியடித்தல், தெண்டித்தல்.

Foudre, *f.* இடி, இடியேறு, உருமு, வெடி, விண்ணேறு, வானேறு. || இடிச்சித்திரம், மின்னல். ||. தேவ —, கோபம். || சாபம். || போரியந்திரம், பீரங்கி. || *m.* இடிபோன்றவன், — போன்றது. || பெரிய பீப்பா : coup de— இடியேறு, சடுதியான —, பெரிய பொல்லாப்பு ; les—de l'Église திருச்சபையின் சாபம் ; un —- de guerre பயங்கரமான வீரசூரன் ; un— d'éloquence இடியிடிக்கும் பெரிய பிரசங்கி.

Foudroiement, *m.* இடிபடுதல்.

Foudroyant, *part.* இடியிடிக்கிற, பயங்கரமான, இடிபோலிடிக்கிற, சடுதியான.

Foudroyer, *v. a.* இடி யெறிதல்,— எய்தல்,— யிடித்தல், இடியால் தாக்குதல்,— இடித்தல். || பீரங்கியா விடித்தல், இடித்துக்கண்டித்தல், — அடக்குதல்.

Fouée, *f.* தீவட்டிப் பக்ஷிவேட்டை.

Fouet, *m.* சவுக்கு, கசை, சாட்டை, சம்மட்டி, வார்ச்சவுக்கு, சவுக்கடி, கசையடி. || சிறுகயிறு : le — du ridicule பழிப்பான கண்டனை ; coup de — சவுக்கடி, தீவிரப்படுத்துவது;—de l'aile இரகின் நுனி ;—de mât பாய்மரத்தின் நீளம் ; donner le— சவுக்கினால் அடித்தல்.

Fouettement, *m.* சவுக்காலடித்தல்.

Fouetté, *adj.* சவுக்கடிபோல் சிறுரேகையுள்ள ; *part. de*

Fouetter, *v. a.* சவுக்கினால்—, மிலாற்றினால் —, கசையால் அடித்தல், — தண்டித்தல். || நுரைவிக்க —, அடித்தல். || *v. n.* (மழை—காற்று) அடித்தல், இடித்தல், வீசுதல் ; les voiles— contre le mât பாய்மரத்திலே பாய் தட்டுதல்.

Fouetteur,— euse, *s.* சவுக்கினால் அடிக்கிறவன்,—வள்.

Fougasse, *f.* சற்றுநேரமுயற்சி,— வேகம். || சின்ன சுரங்கம்,—அடுப்பு. || *V. Fouace.*

Fouger, *v. n.* (பன்றி இனங்கள்

செய்வதுபோல்) மூக்கினால் தோண்டுதல்,— பெயர்த்தல்.

Fougère, *f.* ஓர் பூண்டு : fougeraie, *f.* ஷை பூண்டு விளை நிலம்.

Fougères (பிராஞ்சிராச்சியத்தில்) வுழேர் நகரம்.

Fougon, *m.* கப்பலின் மடைப்பள்ளி.

Fougue, *f.* வேகம், சுறுக்கு, முயற்சி, உக்கிரம், உற்சாகம், கதி. || புலவர் மருள் : mât, vergue de— பின்பாய்மரம்.

Fougueux, *adj.* வேகம்--, உக்கிரம்—, சுறுக்குள்ள.

Fouille, *f.* தோண்டித் தேடுதல்,— தேடுகிறபள்ளம், நோண்டுதல்.

Fouille-au-pot, *m.* சமையற்பையன்.

Fouiller, *v. a. et n.* தோண்டித் தேடுதல், கிண்டுதல், நோண்டுதல், (சுரங்கம்) வெட்டுதல், தேடுதல், சோதித்தல், பரிசோதித்தல், தேடித்தேடி—, கிண்டிக்கிண்டி —, சோதித்துப்பார்த்தல். || சித்திர நிழலுக்குக் குழித்தல், இருண்டநிறமாக்குதல். || se—தன் பையிலிருக்கிறதைப் பார்த்தல், ஒருவனொருவனுடைய பைசோதித்தல்.

Fouillis, *m.* அலங்கோலை, கலப்பு.

Fouine, *f.* மரநாய், அதின் தோல். || முக்கவர்த் தடி,— க்கொளுவி, மண்டா.

Fouir, *v. a.* தோண்டுதல், கிண்டுதல், நோண்டுதல்.

Fouisseur, *m.* பூமியைக்கிளறும் மிருகங்களின் பொதுப் பெயர்.

Foulage, *m.* அச்சமுக்கல், அச்சு சரியாய்ப்பதித்தல். || அமுக்கல், கொட்டுதல்.

Foulant, *part.* pompe— அமுக்கி நீரையேற்றுமியந்திரம்.

Foulard, *m.* பட்டுக்குட்டை,— உறுமாலை.

Foule, *f.* கூட்டம், கும்பல், திரள், மிகுதி, சேனை, சந்ததி. || சனம், பொதுச்சனம், பிரசைகள். || கொட்டுதல் : se tirer de la — கும்பலினீங்குதல், சிறத்தல் ; en— திரள்—, கும்பலாய்.

Foulé, *part.* அமுக்க—, கொட்டப்பட்ட, சுளுக்கின.

Foulée, *f.* குதிரைக்கால் தரையில் ஊன்றும் க்ஷணம், தோலடுக்கு. || *pl.* மிருக அடிகள், மிருகங்கள் மிதித்தது.

Fouler, *v. a. et n.* அமுக்குதல், ஊன்றி —, அழுத்துதல், மிதித்தல். || நெருக்குதல், இடுக்கண்செய்தல், அதிகவரிபோடுதல். || (புடைவை) கொட்டுதல். || சுளுக்கச்செய்தல் :—aux pieds காலால் மிதித்தல், நிந்தித்தல் ; — la vendange திராட்சங்களை நசுக்குதல்,— அமுக்குதல். || se — சுளுக்குதல், சுளுக்கிக்கொள்ளுதல்.

Foulerie, *f.* கொட்டுசாலை,— வீடு, திராட்சங்களை நசுக்குமிடம்.

Fouleur, *m.* கொட்டுகிறவன், கொட்டுபோடுகிறவன்,— க்காரன், திராட்சங்களை நசுக்குகிறவன்.

Fouloir, *m.* கொட்டுங் கருவி, கொட்டாப்புளி. || பீரங்கித்தடி, — ச்சலாகை.

Fouloire, *f.* தொப்பிகொட்டு மேசை.

Foulon, *m.* கொட்டுக்காரன், —போடுகிறவன்: terre à—உழை—, சவட்டுமண் ; moulin à—கொட்டுமியந்திரம்.

Foulonnier, *m.* கொட்டு போடுவதற்குப் புடைவை முஸ்திப்புசெய்பவன்.

Foulque, *f.* நீர்க்கோழி, — க்காக்கை.

Foulure, *f.* (நரம்பின்) சுளுக்கு, மக்களிப்பு. || கொட்டு,— வேலை, கொட்டுதல். || *pl.* மானடிகள்,— மிதித்தது.

Four, *m.* உரொட்டி சுடுமடுப்பு, அப்பஞ்சுடுஞ் சூளை,— வீடு. ||—(à briques, à chaux) சூளை, காளவாய் : — de campagne உரொட்டிசுடுவதற்குக் கொண்டுபோகத்தக்க அடுப்பு ; pièce de — பணியாரம்.

Fourbe, *adj.* புளுகுகிற, பொய்சொல்லுகிற, கபடு—, சூதுள்ள. || *m.* பொய்யன், சூதன், எத்தன், புரட்டன்.

Fourbe, Fourberie, *f.* புளுகு, சூது, கபடு, வஞ்சனை, மோசம், எத்து, பித்தலாட்டம்.

Fourber, *v. a.* எத்துதல், ஏய்த்தல்.

Fourbir, *v. a.* விளக்குதல், துலக்குதல்.

Fourbissage, *m.* விளக்குதல், துலக்குதல்.

Fourbisseur, *m.* துலக்குகிறவன், விளக்குகிறவன்.

Fourbissure, *f.* துலக்குதல், விளக்குதல், சிகில், சிசிலி, தேய்ப்பு.

Fourbu, *adj.* கால்வராத,— ஓய்ந்துபோன (மிருகம்).

Fourbure, *f.* கால்வராதிருத்தல்—, ஓய்ந்துபோதல்.

Fourche, *f.* கவர்த்தடி,— க்கோல், — க்கொம்பு, கவர், கப்பு. || கவர்வழி, கவர்த்திடுவழி, சந்தி : faire à la— அசட்டையாய் —, பரும்படியாய்ச் செய்தல் ;— patibulaire கழுமரம் ;—caudines அவமான கவராக வைத்த மூன்று ஈட்டிகள் ; — de haie pour arrêter les bestiaux கடவை, கடப்புமரம். [கொண்ட.

Fourché, *part.* கவரான, கவர்

Fourchée, *f.* கவர்கோலில் ஓர்தடவையில் சிக்கிக்கொள்ளும் பாகம்.

Fourcher, *v. n. et* se— கவராதல், — படுதல், — விடுதல், கவர்த்தல், பிரிதல் : la langue — நாக்கு தவறுதல்.

Fourchet, *m.* விரலுட்கட்டி, கவர்க்கொம்பு. [ண்டது.

Fourchetée, *f.* மேசை முள்ளு கொ

Fourchette, *f.* மேசை—, முள்ளு. || (வண்டில்பின்னிடாதபடி நிறுத்தும்) கவர்முள்ளு,— த்தடி. || துப்பாக்கி—, தாங்கி. || பக்ஷியின் சவடியெலும்பு, மார்பின் கவரொலும்பு. || குளம்பின் மேடு, உட்குரம். || சட்டைக்கைத்திறப்பின் சோடிப்பு, கையுறை விரலிலுள்ள தோற்கச்சு.

Fourchon, *m.* கவரிடம், கவர்முள்ளு. [இருகூருள்ள.

Fourchu, *adj.* கவரான, கவர்த்த,

Fourchure, *f.* கவர்துவக்குமிடம்.

Fourgon, *m.* சாமான்—, பண்டி. || சுட்டு—, தீக்கோல், உலையாணிக்கோல்.

Fourgonner, *v. a.* தீக்கோலால்—, பிசகாய்த் : தீயைமூட்டுதல். || கலந்து சோதித்தல். [பைத்தியசிரிப்பு.

Fou-rire, *m.* அடக்கக்கூடாத —,

Fourmi, *f.* எறும்பு, பிபீலிகை, பைபீலம், உறவி :— rouge முசுறு ; petite—rouge சிற்றெறும்பு, நுள்ளான் ; — noire commune ஒழுக்கெறும்பு, சூகை ; grande—noire கட்டெறும்பு, —blanche கறையான், செல்லு, செல், சிதல் ; leur nid புற்று : — blanche ailée ஈசெல். [கம், — பக்ஷி, அளுங்கு.

Fourmilier, *m.* எறும்புதின்னு மிரு

Fourmilière, *f.* எறும்புவளை,—ப்புற்று,—த்திரள். || திரள், கும்பல். || குதிரைக்காலின் நோய். [ம்பின் புலி.

Fourmi-lion, *m.* பன்றிப்பூச்சி, எறு

Fourmillement, *m.* பரபரவென்கிறதினவு, எறும்பு ஊருஞ் சுவரணை, மசமசப்பு.

Fourmiller, *v. n.* மிகுதல், நிறைந்திருத்தல், திரளுதல். || பரபரத்தல், மசமசத்தல், எறும்பு ஊருமாப்போலே தினவெடுத்தல். [குதி,— செலவு.

Fournage, *m.* உரொட்டி சுடும்ப

Fournaise, *f.* சூளை, உலை, தீக்குழி, அடுப்பு, பெரிய நெருப்பு, வெப்புள்ளவிடம்.

Fourneau, *m.* அடுப்பு, சூட்டடுப்பு, உலை, கொல்லுலை, சுல்லி, சூளை. || மருந்துநிறைந்த குழி : — de pipe சுங்காணடி ; — de cuisine சமையலடுப்பு.

Fournée, *f.* நிறைந்த சூட்டடுப்பு,— காளவாயாய், கூட நியமிக்கப்பட்டவர்கள். [இட்ட,உள்ள, அடர்ந்த. நிறைந்த.

Fourni, *part.* சேகரித்திடப்பட்ட,

Fournier,—ère, *s.* அப்பத்தினடுப்புக்காரன்,— க்காரி. || *m.* ஓர் பக்ஷி.

Fournil, *m.* அப்பத்தடுப்பினிடம், அடுப்பு வீடு, மாவைப் பிசையுமிடம்.

Fourniment, *m.* சேகரிப்பு, சேவகன் சோடிப்பு. || (வேட்டைக்காரர்) வெடிமருந்தின் சிமிள்.

Fournir, *v. a.* இடுதல், தருதல், கொடுத்தல், ப்ராமரித்தல், சேகரித்திடுதல், ஒப்புக்கொடுத்தல், காட்டுதல், ஒப்பித்தல், வருவித்தல், வழக்கமாய் விற்றல், முடித்தல், நிவைவேற்றுதல், உதவிசெய்தல், போதுமாயிருத்தல், ஏதுவாதல், இடங்கொடுத்தல் : — une armée de vivres *ou* des vivres à l'armée படைக்கு இரஸ்து சேகரித்திடுதல் ;— aux frais செலவுகொடுத்தல் || se — சேகரித்தல், வாங்குதல்.

Fournissement, *m.* இட்ட பங்கு, வீதம். [வன், பராமரிக்கிறவன்.

Fournisseur, *m.* சேகரித்திடுகிற

Fourniture, *f.* சேகாரம், இட்டபொருள், சேகரிப்பு, பராமரிப்பு, சேகரித்திடுதல், வாங்கித்தருதல். || கூட்டுக்கீரை.

Fourrage, *m.* கவாடம், காய்ந்த புல், வைக்கோல், வாயுறை, மிருகத்தீனி,— இரை,— உணவு. || மிருகங்களுக்குப் புல் வெட்டுதல், புல்லுக்காரர், கவாடக்காரர், புல்லுக்குப்போகிறபடை வகுப்பு. || புல்லுக்காரரை யாதரிக்கும் படையணி. || சிம்பாவாகப் பீரங்கியிற் போடுங் காய்ந்த புல்.

Fourrager, *v. n.* புல்லுக்குப் போதல், மிருகங்களுக்குத் தீனி—, கவாடஞ் சம்பாதித்தல்,— தேடுதல். ‖ *v. a.* கொள்ளையிடுதல்.

Fourrager, ère, *adj.* மிருகத்தீனிக்குரிய,—தீனியாக்கத்தக்க,—தீனிமிகுந்த.

Fourrageur, *m.* புல்லு—, கவாடக்காரன், படைமிருகங்களுக்குத் தீனி — வாயுறை — இரைசம்பாதிக்குஞ் சேவகன். [காடு.

Fourré, *m.* அடர்ந்த செடிகள், —

Fourré, *part.* அடர்ந்த, காடு —, செடி —, நிறைந்த, உரோமத்தோல் போட்ட, உட்போட்ட, நுழைந்த, உட்கலப்புள்ள, கள்ள, நில்லாத, இரகசியமான : langue — வேறு தோலிற் சமைந்த நாக்கு ; pays — காடு நிறைந்த நாடு ; coups — அடித்தும்பட்டுமிருக்கிற அடிகள், அந்நியொந்நிய அபகாரம் ; paix, monnaie — கள்ளசமாதானம்,— நாணயம்.

Fourreau, *m.* உறை, கூடு, புட்டில், பெட்டி, தடறு. ‖ பிள்ளையங்கி. ‖ மடல் மூடி, கதிர்மூடு மிலைகள், பாளை. ‖ (சில வண்டுகளின்) இறகு, இறகினுறை.

Fourrer, *v. a.* நுழைப்பித்தல், உட்படுத்துதல், புகுத்துதல், சேர்ப்பித்தல், உள்ளே—, போடுதல். ‖ இசைவின்றி —, நியாயந்தப்பிச் சேர்த்தல், — கலத்தல்,— தருதல். ‖ உரோமத்தோல் போடுதல். ‖ se—நுழைதல், புகுதல், உட்படுதல், பிரவேசித்தல், உரோமத்தோல் அணிதல். [யாபாரி,— தொழிலாளி.

Fourreur, *m.* உரோமத்தோல் வி

Fourrier, *m.* (சேவகருக்கு) இல்லிடங் குறிக்கிறவன், இரஸ்து பங்கிடுகிறவன்.

Fourrière, *f.* விறகு —, கரிக்கிடங்கு,— விசாரணை. ‖ மறியலிடம்,— பட்டி, மறியலான விலங்கின் சாலை. ‖ வயலோரத்திற்குறுக்கான படைச்சால்கள். ‖ mettre en — மறியலில் —, அடைத்துவைத்தல், சிறைபடுத்துதல்.

Fourrure, *f.* மெல்லிய உரோமத்தோல்,— சட்டை, மிருது ரோமச்சருமம். [வறு.

Fourvoiement, *m.* வழித்தப்பு, த

Inscription, *f*. மேலெழுத்து, — வரைவு, ஞாபகப்பட்டையம், மேல்விளாசம், மேலெழுதப்பட்ட —, காரணவாக்கியம். || அறிவிப்புப்பத்திரிகை. || ஓரிடாப்பில் தன்பேர் பதிதல், பதிவு. || அரசின் வருமானங்களின் பட்டையம் : — en faux ஓர் சாதனம் பொய்யென்று நீதியில் சாதித்தல்.

Inscrire, *v. a*. (இடாப்பில், புஸ்தகத்தில்...) பேரொழுதுதல், பதிதல், எழுதுதல், எழுதிவைத்தல், மேலே —, உள்ளே எழுதுதல், எண்ணிக்கையிற் —, கணக்கிற்சேர்த்தல். || மேலெழுத்து —, உள்வரைதல், ஒருவடிவத்தில் மற்றொன்றை வரைதல். || s'—(இடாப்பில் ...) தன் பேரை எழுதுதல், — எழுதுவித்தல் : s'— en faux பொய்யென்று சாதித்தல். [வரைந்த.

Inscrit, *part*. பதிந்த, உள்ளே

Inscrutable, *adj*. சோதித்தறிய —, கண்டுபிடிக்கக்கூடாத.

Insecte, *m*. பூச்சி, புழு, கிருமி.

Insecticide, *n. et adj*. பூச்சிகளைக் கொல்லுகின்ற.

Insectivore, *adj.* பூச்சிகளைத் தின்கிற. [தில்லாமலிருத்தல்.

Insécurité, *f.* காபந்தின்மை, காபந்

In-seize, *ou* in-16, *m.* ௧௬-மடிப்புப்புஸ்தகம்.

Insensé, *adj.* புத்தி —, அறிவு —, உணர்வற்ற, பைத்திய, மடைய, பைத்தியம் —, பித்தமுள்ள, புத்திமயங்கின, புத்திக்கொவ்வாத, அபத்தமான. ‖ *s.* பைத்தியன், பித்தன், மடையன், மூடன். [ருக்கச்செய்தல்.

Insensibiliser, *v. a.* உணர்ச்சியற்றி

Insensibilité, *f.* உணர்ச்சியில்லாமை, சுவரணைக்கேடு, மந்தம், நோயுணராமை, அசையாமை, இரங்காமை, இரக்கமில்லாமை, கன்னெஞ்சத்தனம்.

Insensible, *adj. et s.* உணர்ச்சியற்ற, சுவரணை —, சுமரணைகெட்ட, —அற்ற, நோய் —, உணராத, படாத, இரக்கமற்ற, இரங்காத, இளகாத, கன்னெஞ்சுள்ள, கடின, சட்டைபண்ணாத. இணங்காத, பற்றுதல் —, நேசம் —, பக்ஷமற்ற, — அற்றவன். ‖ பஞ்சேந்திரியங்களுக்கெட்டாத, தோன்றாத, கண்ணுக்கெட்டாத, இலேசான, மெதுவான.

Insensiblement, *adv.* மெள்ளமெள்ள, தோன்றாதவிதமாய், கொஞ்சங்கொஞ்சமாய், மெதுவாய்.

Inséparabilité, *f.* பிரியாமை, பிரிக்கக்கூடாததன்மை.

Inséparable, *adj. et s.* பிரியாத, பிரிக்கக்கூடாத, பிரியாதவன்.

Inséparablement, *adv.* பிரியாதவிதமாய், பிரியாமல்.

Insérer, *v. a.* உள்ளே —, சேர்த்தல், கூட்டுதல், இசைத்தல், உள்ளே போடுதல், பதிதல், உட்படுத்துதல், புகுட்டுதல், மாட்டுதல். ‖ s'— நுழைதல், உட்படுதல், இசைதல், சேர்தல், உள்ளே சேர்க்கப்படுதல்.

Insermenté, *adj.* ஆணையிடாத.

Insertion, *f* கூட்டுதல், உட்படுத்துதல், பதிதல், சேர்த்தல், சேர்த்தது, இசைவு, இசையும் வகை : — dans un compte, dans un corps தாக்கல், சேர்த்தல்.

Insidieusement, *adv.* சதி —, மோசம் —, கபடமாய்.

Insidieux euse, *adj.* தந்திரம் —, தந்திரசூக்ஷம் —, சதிமானம் —, சதி —, எய்ப்பு —, கபடுள்ள.

Insigne, *adj.* பேர் —, கீர்த்திபெற்ற, மாட்சிமையான, சிறந்த, உயர்ந்த, மகா, பெரிய.

Insigne, *m.* அணிகள், குறிப்பு, அடையாளம், இலாஞ்சனைகள், சோடிப்புகள். [தம்.

Insignifiance, *f.* அநர்த்தம், வியர்த்

Insignifiant, *adj.* வீண், அர்த்தம் —, காரியம் —, சாரமில்லாத, விசேஷமற்ற.

Insinuant, Insinuatif, *adj.* இணக்குகிற, இழுப்பதற்குரிய, உறவு —, பிரீதி —, வசப்படுத்துகிற.

Insinuation, *f.* இணக்குதல், ஏவல், சாடை, பயில், குறி, சைகை, இணக்குகிற —, சூக்ஷபேச்சு, — பிரசங்கம். ‖ நுழைதல், நுழைத்தல், பதிவு : — de la sonde dans une plaie காயத்திற்சலாகு நுழைத்தல்.

Insinuer, *v. a.* உபாயமாய் நுழைவித்தல், — நுழைத்தல், உட்செலுத்துதல். ‖ சூக்ஷமாய் ஏவுதல், புத்தியிற்புகுத்துதல், — பதித்தல், சாடையாய்ச்சொல்லுதல். ‖ s' — மெள்ளமெள்ள —, சூக்ஷமாய் —, நுழைதல், உட்புகுதல், ஊறுதல், பிர்வேசித்தல்.

Insipide, *adj.* சுவை —, இரசம்—, உருசியற்ற. ‖ சாரம் —, மதி —, உருக்கம் —, பிரியமற்ற. [—, சாரமின்றி.

Insipidement, *adv:* உருசி—,சுவை

Insipidité, *f.* சுவை —, உருசி —, சாரமில்லாமை.

Insistance, *f.* சாதிப்பு, பிடிவாதம்.

Insister, *v. n.* சாதித்தல், பிடிவாதம் பண்ணுதல், விடாதிருத்தல், மூர்க்கமாய் —, அலட்டிக்கேட்டல். ‖ ஊன்றி —, கண்டிப்பாய்ச் சொல்லுதல்.

Insociabilité, *f.* எவரோடேயுஞ் சேராமை, இசையாமை

Insociable, *adj.* ஒருவரோடேயுஞ் —, சேராத, இசையாத குணமுள்ள, பொருந்தாத.

Insolation, *f.* வெயிலிலே வைத்தல், — போடுதல், சூரியபுடம்.

Insolemment, *adv.* அகந்தை —, துடுக்காய்.

Insolence, *f.* அகந்தை, செருக்கு, துடுக்கு, கிறுது, இறுமாப்பு, எடுப்பு,

மிகுந்தகர்வம், துணிகரம், மரியாதைக் குறைச்சல். கர்வமுள்ள பேச்சு, — செய்கை.

Insolent, *adj. et s.* கர்வம் —, அகந்தை —, செருக்கு —, துணிவு —, துணிகரம் —, இறுது —, துடுக்கு —, குறும்புள்ள, — உள்ளவன். ‖ அடக்கமற்ற, வெட்கங்கெட்ட, மரியாதைக் குறைச்சலுள்ள.‖அபூருவ, அபாத்திரவானுக்குவந்த.

Insoler, *v. a.* வெயிலிலேபோடுதல்.

Insolite, *adj.* வழக்கம் —, மாமூலில்லாத, வழங்காத, முறைதப்பின, நூதன, அதிசயமான.

Insolubilité, *f.* தீராத —, களையாததன்மை, சிக்கறுக்கப்படாமை.

Insoluble, *adj.* தீராத, சிக்கறாத, களையாத.

Insolvabilité, *f.* கடன்தீர — தீர்க்கக்கூடாமை.

Insolvable, *adj.* தீராத, — கடனுள்ள, கடனிறுக்கக்கூடாத.

Insomnie, *f.* நித்திரை —, தூக்கமில்லாமை, — வராமை, விழிப்பு.

Insondable, *adj.* ஆழமறியக்கூடாத.

Insouciance, *f.* அசட்டைத்தனம், கவலையின்மை, அசோசம்.

Insouciant, *adj. et s.* அசட்டையுள்ள, கவலையற்ற.

Insoucieux, *adj.* கவலை —, விசாரமற்ற.

Insoumis, e, *adj.* கீழ்ப்படியாத. ‖ *m.* கெடுவிற் பட்டாளத்தைச் சேராத புதுச்சேவகன்.

Insoumission, *f.* போர்சேவகன் உத்தியோகஸ்தருக்குக் கீழ்ப்படியாதிருத்தல், அடங்காமை, கீழ்ப்படியாமை.

Insoupçonnable, *adj.* சந்தேகப்படக்கூடாத, சந்தேகத்துக்கிடங்கொடுக்கக்கூடாத.

Insoutenable, *adj.* சகிக்க —, சாதிக்கக்கூடாத.

Inspecter, *v. a.* கண்காணித்தல், பார்வையிடுதல், விசாரணைசெய்தல், சுற்றிப்பார்த்தல்.

Inspecteur, trice, *s.* விசாரணைக்காரன், — காரி, கண்காணி, ஆராய்கிறவன்.

Inspection, *f.* பார்வை, நோக்கம், விசாரணை, கண்காணிப்பு, பரிசோதனை, கண்காணி தொழில்.

Inspirateur, — trice, *adj.* ஏவுகிற, தூண்டுகிற. ‖ பூரகத்துக்குரிய.

Inspiration, *f.* பூரகம், சுவாசம் வாங்கல். ‖ ஏவல், புத்திமதி, ஆலோசனை, தூண்டல். ‖ தேவ ஏவுதல், — அருட்சி, மனோவேகம், தெருட்சி.

Inspiré, *part. et s.* தேவ ஏவலைப் பெற்ற, — ஏவுதலான, தெய்வீகத்தால் ஏவ —, ஏவப்பட்ட, — பட்டவன். ‖ தேவமருளுள்ள. ‖ சன்னதம் —, ஆவேசமான, மருள்கொண்ட : être bien — நல்லயோசனை கொண்டிருத்தல்.

Inspirer, *v. a.* ஏவுதல், தூண்டுதல், மனதிற்புகுத்துதல், தோற்றுவித்தல், ஆலோசனைகொடுத்தல், மருளாக்குதல், — வருவித்தல். ‖ கொடுத்தல், வருவித்தல், எழுப்புதல், உள்ளே —, ஊதுதல்.

Instabilité, *f.* நிலையாமை, நில்லாமை, ஸ்திரமின்மை.

Instable, *adj.* ஸ்திரமற்ற, நில்லாத, நிலையாத.

Installation, *f.* பட்டங்கட்டுதல், ஸ்தாபிப்பு, ஏற்படுத்தல், உத்தியோக நியமம்.

Installer, *v. a.* பட்டங்கட்டுதல், உத்தியோகத்தில் —, ஸ்தாபித்தல், ஏற்படுத்துதல், வைத்தல். ‖ s'— தன்னை வைத்தல், — ஸ்தாபித்தல்.

Instamment, *adv.* கெஞ்சி, ஆவலாய். மிகவும், வெகுவாய்.

Instance, *f.* கெஞ்சுதல், மன்றாட்டு, அலட்டுள்ள —, வேண்டுதல். ‖ திஷ்டாந்தம், உதாரணம், புது அத்தாட்சி, புது எதிர்நியாயம். ‖ பிராது, பிரியாது, வழக்கு. ‖ நீதிவிசாரணை, — யதிகாரக் கிரமம் : se rendre aux — மன்றாட்டுகளுக்கு இணங்குதல் ; former, poursuivre une — பிராதுசெய்தல் ; une cause être en — வழக்கு இடாப்பில் எழுதியிருத்தல் ; tribunal de première — முதல்விசாரணை நீதியாசனம்.

Instant, *m.* க்ஷணம். சணம், கணம், நிமிஷம், சற்று —, நொடிநேரம், காலநுட்பம் : à l'—, dans l'— உடனே, ஓர் க்ஷணத்தில்.

Instant, e, *adj.* நெருக்கிடை —, அவசரம் —, அவசியமான, அலட்டுள்ள, கெஞ்சுகிற.

Instantané, *adj.* ஓர் நிமிஷத்து, — க்ஷணம் நிலைக்கிற, சடுதி —, தீவிரமான.

Instantanéité, *f.* ஓர் நிமிஷநிலைக்கிற —, சடுதியான தன்மை.

Instantanément, *adv*. ஓர் நிமிஷத்தில், உடனே, சடுதியாய்.

à l'Instar, *prép*. போலே, ஒப்ப, படியே, மாதிரி —, பாவனையாய்.

Instaurateur, trice, *m*. ஓர் விஷயத்தை ஸ்தாபிக்கிறவன்.

Instauration, *f*. மறுபடியாகிற ஸ்தாபகம், — ஆடம்பர ஏற்பாடு.

Instigateur, — trice, *s*. ஏவுகிறவன், தூண்டுகிறவன், கிளப்புகிறவன், — வள், காரணன்.

Instigation, *f*. ஏவல், போதகம், *ou*

Instiguer, *v. a*. ஏவுதல், தூண்டுதல், கிளப்புதல்.

Instillation, *f*. Instiller, *v. a*. (உள்ளே) துளித்துளியாய் வார்த்தல், ஊட்டுதல், புகுத்துதல், ஒழுகச்செய்தல்.

Instinct, *m*. இயல்பான குணம், — உணர்ச்சி, — புத்தி, — அறிவு, — நடை, — முயற்சி, இயற்கை.

Instinctif, ive, *adj*. ஷை குணத்து, —உணர்ச்சியாலான, இயல்பான, சுவாபக் குணத்தாலாகிற.

Instinctivement, *adv*. இயல்பான உணர்ச்சி — குணமாய், சுவாபமாய்.

Instituer, *v. a*. ஸ்தாபித்தல், உண்டுபண்ணுதல், உத்தியோகத்தில் —, ஏற்படுத்துதல், நியமித்தல்.

Institut, *m*. மடத்தின் ஒழுங்கு, — ஏற்பாடு, மதாசாரம், (சந்நியாச) சபை. || கல்விச்சங்கம், — சங்கங் கூடுமிடம்.

Institutes, *f. pl*. உரோமான் தர்மநூல்.

Instituteur, — trice, *s*. ஸ்தாபிக்கிறவன், ஏற்படுத்தினவன், — வள். || வாத்தி, வாத்தியார், படிப்பிக்கிறவன், உபாத்தியாயன், (*f*. உபாத்தியாயி.)

Institution, *f*. ஸ்தாபகம், ஏற்பாடு, ஏற்படுத்துதல். || நியமம் நியமிப்பு. || படிப்பிப்பு, படிப்பனை, படிப்பு, போதகம். || பள்ளிக்கூடம், கல்லூரி, வித்தியாசாலை.

Instructeur, *adj. et s*. படிப்பிக்கிற, பிராதின் விசாரணைசெய்கிற, — செய்பவன், புதுச்சேவகரைப் பயிற்றுகிற, — படிப்பிக்கிறவன், போதகன்.

Instructif, ive, *adj*. படிப்புக்குரிய, — ஏற்ற, நல்ல படிப்பினையுள்ள.

Instruction, *f*. படிப்பிப்பு, படிப்பனை, போதனை, போதகம், போதிப்பு, உபதேசம், பிரசங்கம். || கட்டளை, புத்திபோதனை. || படிப்பு, கல்வி, அறிவு, உணர்ச்சி. || அறிக்கை, அறிவிப்பு, எச்சரிப்பு. || பிராதின் —, விசாரணை. || *pl*. கற்பனைகள், புத்திமதிகள், செய்ய வேண்டியதின் —, விவரங்கள் : — pastorale மேற்றிராணியார் கட்டளை நிருபம் ; — publique (இராச்சியத்திற்) படிப்புவிசாரணை, — விசாரணையுத்தியோகஸ்தர், அரமனையார் படிக்கும் சாஸ்திரங்கள்.

Instruire, *v. a*. படிப்பித்தல், கற்றுக்கொடுத்தல், போதித்தல், உபதேசித்தல், உணர்த்துதல், கற்பித்தல். || பழக்குதல், பயிற்றுதல். || அறிவித்தல், எச்சரித்தல், தெரிவித்தல். || (பிராதின்) விசாரணைசெய்தல், (பிராது) ஒழுங்குபடுத்துதல். || s'— படித்தல், பழகுதல், கற்றுக்கொள்ளுதல். || (பிராது) விசாரணையாதல், அவரவரைப் படிப்பித்தல்.

Instruit, *part*. படித்த, அறிந்த, கல்வி —, படிப்புள்ள. கல்விமான், அறிஞன், கற்றோன்.

Instrument, *m*. கருவி, ஆயுதம், எத்தனம், இயந்திரம், சூத்திரம். || சாதனம், பிரசித்த உடன்படிக்கை. || (de musique) வாத்தியம், இசைக் —, வாத்தியக்கருவி. || உபகரணம், காரணம், மூலம், காரணன் : — à cordes நரப்புக்கருவி ; — à vent துளைக்கருவி.

Instrumentaire, *adj*. சாதன : témoin — சாதனச்சாட்சி, —சாட்சியாக வழங்குகிறவன்.

Instrumental, e, *adj*. கருவி —, எத்தனமான, வாத்திபத்து : musique — வாத்தியசங்கீதம்.

Instrumentation, *f*. வாத்தியசங்கீதத்தின் ஒருங்கு.

Instrumenter, *v. n*. சாதனமெழுதுதல்.

Instrumentiste, *m*. வாத்தியக்காரன், வாத்தியம்பண்ணுகிறவன், குயிலுவன்.

Insu, *m*. அறியாமை : à mon — என்னை —, நான் அறியாமல் ; à l'— de அறியாதிருக்க, தெரியாதபடி, அறியாமல்.

Insubmersible, *adj*. அமிழ்த்தக்கூடாத.

Insubordination, *f*. கீழ்ப்படியாமை, அடங்காமை.

Insubordonné, *adj.* கீழ்ப்படியாத, அடங்காத.

Insuccès, *m.* அநுகூலமாகாமை, அநுகூலவின்மை, பலியாமை, தோர்வை.

Insuffisamment, *adv.* போதாமல், குறைவாய், பற்றாமல்.

Insuffisance, *f.* போதாமை, பற்றாமை, குறைச்சல், தகாமை, தகுதியின்மை.

Insuffisant, e, *adj.* போதாத, பற்றாத, குறைவுள்ள.

Insufflation, *f.* Insuffler, *v. a.* மேலே —, உள்ளேயூதுதல், — ஆவிவிடுதல்.

Insulaire, *adj. et s.* தீவின், தீவான்.

Insultant, *part.* அவமானம் —, நிந்தை —, இகழ்ச்சியான.

Insulte, *f.* அவமானம், நிந்தை, இகழ்ச்சி, பழிப்பு, வசை, திரஸ்காரம். || வேகமான தாக்கு, சடுதியான எதிர்ப்பு.

Insulté, *m.* அவமானப்பட்டவன். || *part. du suiv.*

Insulter, *v. a. et n.* அவமானஞ்செய்தல், நிந்தை —, கேலி — அநாசாரம் பண்ணுதல், ஏசுதல், தூஷித்தல். || நிந்தித்தல், அவமான —, ஈனப்படுத்துதல், இகழ்தல், திரஸ்கரித்தல், அவமானித்தல். || வேகமாய் எதிர்த்தல், சடுதியாய்த் தாக்குதல். || s' — ஒருவனொருவனைத் திட்டுதல், — ஏசுதல், — வைதல்.

Insulteur, *m.* வழக்கமாய் அவமானஞ்செய்கிறவன்.

Insupportable, *adj.* தாளாத, சகிக்காத, பொறுக்க —, சகிக்கக்கூடாத.

Insupportablement, *adv.* பொறுக்கக்கூடாதவிதமாய்.

Insurgé, *adj. et s.* கலகஞ்—, கலாபஞ்செய்கிற. குழப்பக்காரன்.

Insurger, *v. a.* குழப்புதல், அரசுக்கு விரோதமாய் —, குழப்பமாய் எழுப்புதல். || s'— குழப்பமாயெழும்புதல், கலாபனைசெய்தல், அரசையெதிர்த்தல்.

Insurmontable, *adj.* செயிக்க —, வெல்ல—, தாண்ட—, கடக்கக்கூடாத.

Insurrection, *f.* குழப்பம், கலாபம், கலாதி, ஊர்க்கலகம், — குழப்பம்.

Insurrectionnel, elle, *adj.* ஊர்க்கலகத்து, குழப்பமான.

Intact, *adj.* தொடாத, தொட —, தீண்டப்படாத, முழு, முழுமையான. || கெடாத, சுத்த, சேத —, கேடுபடாத.

Intactile, *adj.* பரிசத்துக்கெட்டாத, தொடக்கூடாத.

Intaillable, *adj.* செதுக்கமுடியாத, வெட்டப்படாத.

Intaille, *f.* இரத்தினத்தில் குழிந்த சித்திரம், சித்திரமணி, — ரத்தினம்.

Intangible, *adj.* தொடமுடியாத.

Intarissable, *adj.* வற்றாத, குறையாத.

Intégral, e, *adj.* முழு, முழுமை —, பூரணமான, சம்பூரண, முற்றான, நிறைவான : calcul — முழுவெண்கணிதம்.

Intégrale, *f.* முழுவெண், — த்தொகை.

Intégralement, *adv.* முழுதும், முழுமையாய்.

Intégralité, *f.* முழுமை, சர்வம்.

Intégrant, *adj.* முழுமையாக்குகிற, பங்கான.

Intégration, *f.* Intégrer, *v. a.* முழுத்தொகை கணித்தல்.

Intègre, *adj.* பிரமாணிக்கம் —, நேர்மை—, நாணயமுள்ள, பாரபக்ஷமற்ற, இலஞ்சம் வாங்காத.

Intégrité, *f.* முழுமை, சர்வம், சமஸ்தம், பூரணம், பிரியாமை. || கெடாமை, அழியாமை. || பிரமாணிக்கம், நிறை, நாணயம், நேர்மை, பாரபக்ஷமில்லாமை, இலஞ்சம் வாங்காமை, இலாபம் நாடாமை.

Intellect *m.* அறிவு, புத்தி, உணர்வு, சித்து.

Intellectif, ive, *adj.* அறிவுக்கடுத்த.

Intellection, *f.* உணர்தல், உணர்ச்சி, கண்டுபிடித்தல்.

Intellectualité, *f.* தெளிவு, ஞானம், உணரப்படுந் தன்மை.

Intellectuel, — elle, *adj.* அறிவின், புத்தியின், உணர்வுக்கடுத்த. || ஞான, கண்டிப்பற்ற.

Intelligemment, *adv.* புத்தி —, விவேகம் —, புத்திசாலியாய்.

Intelligence, *f.* அரூபி, சித்து —, கண்டிப்பற்ற வஸ்து. || புத்தி, அறிவு, உணர்ச்சி, உணர்வு, புத்திக்கூர்மை, —த்தெளிவு, யுத்தி, விமரிசை. || சூக்ஷம், கெட்டித்தனம், சாமர்த்தியம், திறமை, தேர்ச்சி, கல்வி. || ஒற்றுமை, சமாதானம், நேசம், ஒருமிப்பு, பொருத்தம்,

உடந்தை, சம்பந்தம், உடம்பாடு : — célestes பரலோக அரூபிகள், சம்மனசுகள் ; — prompte வேகமான புத்தி; vivre en bonne — சமாதானமாயிருத்தல் ; être d'— உடந்தையாயிருத்தல் ; avoir des — dans la ville பட்டணத்தில் உடந்தை — வேவுகாரரைக் கொண்டிருத்தல்.

Intelligent, *adj.* புத்திசாலி, புத்திமான், புத்தி —, உணர்வு —, சாமர்த்தியமுள்ள.

Intelligible, *adj.* தெளிந்த, தெளிவுள்ள, கண்டுபிடிப்பதற் கெளிதான, விளக்கமான, புத்தியில்மாத்திரமுள்ள.

Intelligiblement, *adv.* தெளிவாய், தெளிய, விளக்கம் —, வெளிச்சமாய்.

Intempérance, *f.* குடித்தனம், பேருண்டி, பெருந் தீனி, போசனப்பிரியம், காமாதுரம், தூர்த்தத்தனம், அடக்கமில்லாமை, அடங்காமை, மட்டின்மை, மிகுதி, அதிமிச்சம் : — de langue மிதமிஞ்சின பேச்சு.

Intempérant, *adj.* மட்டற்ற, அடக்கமற்ற, குடித்தனம் —, போசனப்பிரியம் —, பேருணவுள்ள, தன்னிச்சைகளையடக்காத, குடியன், பேருணன்.

Intempéré, *adj.* அடக்கமற்ற, தன்னிச்சைகளை யடக்காத.

Intempérie, *f.* (காலத்தின், ஆகாசத்தின்) கடுமை, குணவின்மை, தகாமை, விபரீதம்.

Intempestif, ive, *adj.* சமயமற்ற, — தப்பின, தகாத சமயத்தில் வந்த,பொருந்தாத.

Intempestivement, *adv.* சமயந் தப்பி, தகாதசமயத்தில்.

Intenable, *adj.* பிடிக்கப்படாத, எற்றுக்கொள்ளக்கூடாத.

Intendance, *f.* ஆளுகை, நடப்பிப்பு, விசாரணை, — காலம், — நாடு, — க்காரன் வீடு.

Intendant, *m.* காரியஸ்தன், விசாரணை —, காரியக்காரன், ஆளுகிறவன், நடத்துகிறவன், கண்காணி, மேல்விசாரணையுத்தியோகஸ்தன், நாடாள்பவன்.

Intendante, *f.* ஷை விசாரணைக்காரன் பெண்சாதி.

Intense, *adj.* அகோர, கடின, வேகம் —, உக்கிரமுள்ள. [ரமான.

Intensif, *adj.* மிக பலமான, அகோ

Intensité, *f.* உக்கிரம், கடினம், அகோரம், வேகம், பலம்.

Intensivement, *adv.* உக்கிரம் —, கடினம் —, பலமாய்.

Intenter, *v. a.* பண்ணுதல், செய்தல், துவக்குதல்.

Intention, *f.* கருத்து, மனம், மனசு, சிந்தை, நோக்கம், அபிப்பிராயம், தாற்பரியம், நினைப்பு, எண்ணம், முகாந்தரம், உட்கருத்து : à l'— de குறித்து. [சுள்ள.

Intentionné, *adj.* கருத்து —, மன

Intentionnel, — elle, *adj.* கருத்துக்கடுத்த, கருத்தின், கருத்திலுள்ள.

Intentionnellement, *adv.* கருத்தில், மனசில், கருத்தின்படியே.

Intercadence, *f.* நாடியடிப்பின் திட்டவழு.

Intercadent, *adj.* திட்டந்தப்புகிற.

Intercalaire, *adj.* இடையிற்கூட்டுகிற, — சேர்க்கிற.

Intercalation, *f.* Intercaler, *v. a.* இடையிற் —, உள்ளே கூட்டுதல், — சேர்த்தல்.

Intercéder, *v. n.* (ஒருவனுக்காக) மன்றாடுதல், மத்தியஸ்தம் —, மனுப்—, நடுப் —, பரிந்துபேசுதல்.

Intercepter, *v. a.* மறித்தல், தடுத்தல், அடைத்தல், வழியில் அபகரித்தல், — பறித்தல், உபாயமாய்ப் பிடித்தல். ‖ s'— அபகரிக்க —, பறிக்கப்படுதல்.

Interception, *f.* தடுப்பு, மறிப்பு, நேர்வழி தடுத்தல்.

Intercesseur, *m.* மத்தியஸ்தன், மனு —, பரிந்துபேசுகிறவன், மன்றாடுகிறவன்.

Intercession, *f.* மத்தியஸ்தம், மன்றாட்டு, மனுப்பேசுதல்.

Interchangeable, *adj.* மாற்றிக் கொள்ளக்கூடிய.

Intercontinental, *adj.* இரு கண்டங்களுக்குள் நடைபெறும்.

Intercostal, e, *adj.* விலாவெலும்புகளிடையிலுள்ள.

Intercourse, *f.* கப்பலோடு இரு இராச்சியத்தாருக்கு மத்தியஸ்தம் — நடுவாதல். [க்கிற, — அடிக்கிற.

Intercurrent, *adj.* இடையில் நட

Intercutané, *adj.* தோலுக்குந் தசைக்குமிடையிலுள்ள.

Interdiction, *f.* விலக்கம், விலக்கல், தடுப்பு, மறியல், உத்தியோகவிலக்கம், குடியுரிமை நீக்கம், சொந்த ஆஸ்திவிசாரணைவிலக்கம் : — des droits civiques குடியுரிமைவிலக்கம்.

Interdigital, *adj.* விரல்களுக்கிடையில் வைக்கப்பட்ட.

Interdire, *v. a.* (திரு அலுவலை —, உத்தியோக) விலக்கம்பண்ணுதல், விலக்குதல், தவிர்த்தல், மறித்தல், தடுத்தல், ஆஸ்திவிசாரணையெடுத்தல், —விலக்குதல். ‖ கலக்குதல், மயக்குதல், திகைப்பித்தல்.

Interdit, *m.* திருவுத்தியோக —, விலக்கம், மறியல், விலக்குந் தீர்வை, விலக்கநிற்குங்காலம். ‖ ஆஸ்திவிசாரணை விலக்கப்பட்டவன். ‖ *part.* விலக்கப்பட்ட, கலங்கிய, மயங்கின, திகைத்த.

Intéressant, *part.* பிரியம் —, நயம் —, இதமான, — உள்ள, பிரியப்படுகிற, கனமான, பெரிய.

Intéressé, *adj. et s.* பிரயோசனம் —, நன்மையுள்ள, இலாபந் தேடுகிற, — ஆசிக்கிற, — நாடுகிற, உலோபி, ஆதாயத்தின் —, பணத்தின்மேலாசையுள்ள. ‖ சம்பந்தம் —, உடந்தை —, பங்குள்ள, — உள்ளவன், பங்காளி.

Intéresser, *v. a.* (ஆதாயத்தில், பலனில்) சேர்த்தல், பங்காளியாக்குதல், பிரயோசனங்கொடுத்தல், — காட்டுதல். ‖ (கொடையால்) சனுவாக்குதல். ‖ நயங்காட்டுதல், நயத்தால் இணக்குதல், — இழுத்தல். ‖ ஏவுதல், மூட்டுதல், உறுத்துதல். ‖ பக்ஷம் —, பிரியம் —, தயவு —, இரக்கம் வருவித்தல், உருக்க —, பிரிய —, விருப்ப —, கன —, கவலைப்படுத்துதல், பிரியப்படுதல். ‖ கனமானகாரியமாய்—, காரியமாய் —, சேர்ந்திருத்தல் : — la gloire மகிமையதிற்சேர்ந்ததென்று காட்டுதல் ; — le jeu விளையாட்டில் ஆதாயத்தைக் கூட்டுதல். ‖ s'— சேர்தல், பங்காளியாதல், சேர்ந்திருத்தல், பிரிய —, உருக்க —, இரக்கப்படுதல், பிரியம் —, பக்ஷம் —, பற்றுதலாதல், — ஆயிருத்தல்.

Intérêt, *m.* ஆதாயம், பிரயோசனம், இலாபம், நயம், நலம், நன்மை. ‖ பணத்தினசை, உலோபம், சுயபக்ஷம். ‖ வட்டி, ஊதியம். ‖ வருமானம், ஈவு, பங்கு. ‖ பாரிசம், கட்சி, பக்கம். ‖ தயை, தாட்சணியம், பக்ஷம், பிரியம், பற்றுதல் : prêter à — வட்டிக்குக் கொடுத்தல்; avoir, prendre un — dans பங்காளியாதல், பங்குவாங்குதல் ; mettre dans ses — தன் பாரிசமாக்குதல் ; porter — à பேரில் பக்ஷம் — பற்றுதலாயிருத்தல்; prendre — à la joie சந்தோஷத்திற்பங்காளியாதல்.

Interfoliage, *m.* Interfolier, *v. a.* புஸ்தகத்தில் ஒவ்வோர் ஏட்டுக்கு வெள்ளையேடு சேர்த்தல்.

Intérieur, *m.* உட்புறம், உள், உள்ளம், உள்ளாந்தரம், உள்நாடு, உள்நாட்டு விசாரணை, அந்தரங்கம், உள்ளிருதயம், (கட்டுக்கோப்பின்) உட்பக்கத்துப் பார்வை, [illegible]யின் நடுப் பங்கு.

Intérieur, e, *adj.* உள், உள்ளத்து, உள்ளான, உட்புறத்து, உள்ளத்தில் —, இருதயத்திலுள்ள, உள்ளேயிருக்கிற, அந்தரங்கமான : homme — அடக்கமுள்ள மனுஷன்.

Intérieurement, *adv.* உள், உள்ளே, உட்புறத்தில், இடையில்.

Intérim, *m.* தற்காலம், இடைநேரம், — க்காலம், நடுவாந்தரம், தற்காலவிசாரணை, — ஆளுகை. ‖ தற்காலத்துக்கட்டளை: par — தற்காலத்தில், தற்காலத்துக்கு.

Intérimaire, *adj.* தற்காலத்து, தற்காலத்திலிருக்கிற.

Intérimat, *m.* தற்காலத் ததிகாரம், — விசாரணை.

Interjectif, *adj.* உளத்தியலிடைச்சொல்லுக்கடுத்த.

Interjection, *f.* உளத்தியலிடை, வியப்பிடைச்சொல் : — d'appel அபயமிடுதல்.

Interjeter, *v.a.* நடுவிலெறிதல், வசனநடுவில் ஓர் சொல்லைவைத்தல்: —appel மேலான நீதிஸ்தலத்துக்கு அபயமிடுதல்.

Interligne, *m.* இருவரியினிடை,—சந்து. ‖ *f.* வரியிடைத் தகடு.

Interligner, *v. a.* வரியிடைத்தகடு போடுதல், இடைவரியெழுதுதல்.

Interlinéaire, *adj.* வரியிடையிலெழுதிய, — உள்ள.

Interlocuteur, trice, *s.* நடுவாந்தரத்தில் வந்து சம்பாஷிக்கிறவன், — வள், சம்பாஷணைக்காரன், — க்காரி.

Interlocution, *f.* சம்பாஷணை, விசாரணை கற்பிக்குந் தீர்வை.

Interlocutoire, *adj.* விசாரணை கற்பிக்கிற. || *m.* விசாரணை கற்பிக்குந் தீர்ப்பு.

Interlope, *adj.* கள்ள, தீர்வை கொடாதபடி தப்புகிற. || *m.* கள்ள வியாபாரம், — வியாபாரக் கப்பல்.

Interloquer, *v. a.* விசாரணை கற்பித்தல். || கலக்குதல், மயக்குதல், பேச்சு தடுத்தல், சிக்குப்படுத்துதல்.

Intermède, *m.* நாடகப்பிரிவினிடை, — இடையாடல் பாடல், ஓரே பிரிவுள்ள சிறுநாடகம்.|| சேர்க்கப்பட்ட —,மத்தியஸ்த பொருள்.

Intermédiaire, *adj.* நடுவில் —, இடையிலுள்ள, மத்தியத்து. || *m.* மத்தியஸ்தன், மூலம், வழி. || நடுவிலுள்ள பொருள், நடுவாந்தரம், இடை, நடு.

Intermédiat, e, *adj.* இடையிலுள்ள. [யாத, முடிவில்லாத.

Interminable, *adj.* தீராத, முடி

Intermission. *f.* இடை, ஒழிவு, ஓய்வு, தரிப்பு. [முறையுள்ளதன்மை.

Intermittence, *f.* ஒழிவு, நிறுப்பு,

Intermittent, *adj.* இடைவிடுகிற, முறையுள்ள : **fièvre** — முறைக்காய்ச்சல். [ளிடையிலுள்ள.

Intermusculaire, *adj.* நரம்புகளி

Internat, *m.* உள்பிள்ளையாய்ப்படித்தல், உள்பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக்கூடம்.

International, e, *adj.* சனங்களுள் நடக்கிற, சனங்களுக்குப் பொதுவான.

Internationalisme, *m.* சர்வதேசசம்பந்தம், ஜென்மதேசத்துக்கு விரோதமாய்ப் பலதேச வேலையாட்கள் ஒன்றாய்க்கூடும் கொள்கை.

Internationaliste, *m.* ஷை கொள்கையுடைத்தானவன்.

Interne, *adj.* உள், உள்ளே —, உள்ளிருக்கிற, உள்ளான : angle — உட்கோணம் ; élève — உட்பிள்ளை.

Internement, *m.* ஒரு பேர்வழியை அடைத்துவைத்தல்.

Interner *v. n.* உள்நாட்டில் வசித்தல். || *v. a.* உள்நாட்டிற் பிரவேசிப்பித்தல், காவலில் வைத்தல்.

Internonce, *m.* அர்ச். பாப்புவின் பதில் ஸ்தானாபதி.

Internonciature, *f.* ஷை ஸ்தானாபதியுத்தியோகம். [ங்களுக்கிடையிலுள்ள.

Interocéanique, *adj.* இருசமுத்திர

Interosseux, — euse, *adj.* எலும்புகளினிடையிலுள்ள. [றவன், —வள்.

Interpellateur, —trice, *s.* வினாவுகி

Interpellation, *f.* கேள்வி, மறுவுத்தாரங் கேட்டல், வினாவல், அழைப்பு.

Interpeller, *v. a.* வினாவுதல், மறுவுத்தாரங் —, கேட்டல், கூப்பிடுதல்.

Interpolateur, *m.* இடையிற் கூட்டி எழுதுகிறவன், எழுத்து—,வசனங் கூட்டுகிறவன்.

Interpolation, *f.* எழுத்துக் கூட்டல், இடையிற்கூட்டி எழுதுதல், — எழுதியது. [தின.

Interpolé, *part.* ஷை கூட்டியெழு

Interpoler, *v. a.* இடையிற் கூட்டியெழுதுதல், — எழுத்து — வசனங் கூட்டுதல், — சேர்த்தல்.

Interposer, *v. a.* இடையில் —, நடுவில் வைத்தல், குறுக்கிடுதல். || உபயோகித்தல், பிரயோகித்தல், உதவி கொள்ளுதல், செலுத்துதல். || s'— மத்தியஸ்தனாதல், நடுவாதல், நடுவில் வருதல்.

Interposition, *f.* இடையிலிருத்தல், — கூட்டுதல், — வருதல். || மத்தியஸ்தம், சிபாரிசு, மூலம்.

Interprétateur, —trice, *s.* அர்த்தஞ்சொல்பவன், வியாக்கியானம் பண்ணுபவன், — வள்.

Interprétatif, —ive, *adj.* வியாக்கியானம் —, உரை —, விளக்கமான.

Interprétation, *f.* அர்த்தஞ் சொல்லுதல், வியாக்கியானம், உரை, விளக்கம், வியார்த்தி. [யானவிதமாய்.

Interprétativement, *adv.* வியாக்கி

Interprète, *m.* துபாசி, மொழிபெயர்க்கிறவன், வியார்த்திகன், தெளிவிக்கிறவன், வியாக்கியானம் பண்ணுகிறவன், அர்த்தஞ் சொல்பவன், உரையாசிரியன், விளக்குகிறவன்.

Interpréter, *v. a.* மொழிபெயர்த்தல், அர்த்தஞ்சொல்லுதல், — பண்ணுதல், அர்த்தப்படுத்துதல், பயனுரைத்தல், தெளிவித்தல், விவரித்தல், விளக்குதல், வியாக்கியானம் —, உரைபண்ணுதல். || கண்டுபிடித்தல், எண்ணுதல், கிரகித்தல், நிதானித்தல், திருப்புதல் : — en mal தின்மையாக எண்ணுதல், — த்திருப்புதல். ‖ s'— விளக்க —, எண்ணப்படுதல்.

Interrègne, *m.* அரசன் —, ஆள்பவனில்லாதகாலம், இருவிராச்சியபாரங்களுக்கு இடைக் —, அநாயககாலம்.

Interrogant, *adj.* வினாவுகிற குணமுள்ள, வினாக்குறிப்பாகிய.

Interrogateur, — trice, *s.* கேட்கிறவன், வினாவுகிறவன், விசாரிக்கிறவன், — வள்.

Interrogatif, — ive, *adj.* வினாவுக்குரிய, வினாவாகிய, வினாவின் குறிப்பாகிய. [கடா : point d' — வினாக்குறி.

Interrogation, *f.* வினா, கேள்வி,

Interrogatoire, *m.* நடுவன் கேள்விகள், நீதிவிளக்கத்துவினாவிடை, — வினாவிடை விபரம்.

Interroger, *v. a.* கேள்வி —, கேட்டல், வினாவுதல், விசாரித்தல், கடாவுதல், (படிப்பு) சோதித்தல், ஆராய்தல், பரிசோதித்தல். ‖ s' — ஒருவனொருவனை—, தன்னைக் கேள்விகேட்டல், தன் மனச்சாட்சியை —, தன்னைப் பரிசோதித்தல்.

Interrompre, *v. a.* தடுத்தல், நிறுத்துதல், மறித்தல், தடைபண்ணுதல். ‖ குறுக்கே பேசுதல், பேச்சு தடுத்தல். ‖ விடுதல், பின்போடுதல், ஒழித்தல் : — son travail தன்வேலை விடுதல். ‖ s'— தான் சொல்லுகிறதை — செய்கிறதை நிறுத்துதல், — விடுதல், ஒவ்வொருவன் ஒவ்வொருவனுடைய —, தன் பேச்சைத் தடுத்தல்.

Interrompu, *part.* நிறுத்தின, தடுத்த, இடைவிட்ட, வெறுமிடையுள்ள, தொடர்ச்சியற்ற : propos — இடைவிட்டபேச்சு, ஓர் விளையாட்டு.

Interrupteur, — trice, *s.* தடுத்துப்பேசுகிறவன், — வள்.

Interruption, *f.* ஒழிவு, நிறுப்பு, ஓய்வு, இடைவிடுதல், தடுப்பு, குறுக்குப்பேச்சு, தடுப்பென்னும் வாய்ச்சாலகவணி : sans — இடைவிடாமல்.

Intersection, *f.* குறுக்கிடம், ஊடறுப்பு.

Intersession, *f.* பார்லிமெண்டு கலைந்து மறுபடியும் கூடுகிறவரையிலுள்ள காலம். [விலுள்ள.

Interstellaire, *adj.* நக்ஷத்திர நடு

Interstice, *m.* திருப்பட்டத்தினிடை, — இடைக்காலம், — நேரம், இடை, நடுவாந்தரம்.

Intertropical, e, *adj.* அயனாந்தரத்துக்குள்ளான, இரு அயனமண்டலங்களுக்குள்ளான, — மண்டலநடுவிலுள்ள.

Intervalle, *m.* இடை, — வெளி, நடுவாந்தரம், நடு, அந்தரம், தூரம், இடை —, நேரம் : dans l'— d'une nuit ஓரிராத்திரிக்குள்ளாக ;— entre les briques தவுக்கார் ; par — இடையிடையாய்.

Intervenant, *part.* இடையில் வருகிற.

Intervenir, *v. n.* நடுவாந்தரத்தில் —, நடுவில் —, இடையில் —, அசுப்பிலே —, குறுக்கே வருதல், — நுழைதல்,— சேர்தல், மத்தியஸ்தனாக—, நடுவனாக வருதல், பிரதிவாதி —, மத்தியஸ்தனாதல், சம்பவித்தல்.

Intervention, *f.* நடுவாந்தரத்தில் வருதல், மத்தியஸ்தம், சிபாரிசு, சலுகை, உதவி, மூலம்.

Interversion, *f.* அலங்கோலம், புரட்டு, முன்பின் ஆதல், — வைத்தல்.

Intervertir, *v. a.* முன்பின் வைத்தல், ஒழுங்கு —, புரட்டுதல், திருப்புதல், மாற்றுதல். [வைத்தல், புரட்டு.

Intervertissement, *m.* முன்பின்

Interview, *f.* கேழ்விகள்போட்டுப் பதில்வாங்க ஒருவரைப் போய்க் காணுதல்,

Interviewer, *v. a.* கண்டுபேசுதல், கேழ்விபோட்டுப் பதில் வாங்குதல்.

Intestat, *adj. et m.* மரணசாதனஞ் செய்யாத, — செய்யாதவன், — செய்யாமல் : par —, ab — மரணசாதனமின்றி, — இல்லாமையினால்.

Intestin, *m.* குடல், குடர், உதரம், உள்ளம். ‖ *adj.* உட்புற, உட்புறத்து, உள்ளின், உள்ளான, குடலின்.

Intestinal, e, *adj.* குடலுக்கடுத்த, குடலிலுள்ள.

Intimation, *f.* அறிக்கை, கற்பித்தல், கட்டளை, நீதிஸ்தலத்துக்கு வரவழைப்பு.

Intime, *adj.* உள்ளத்து, உள்ளான, ஆழ்ந்த, அந்தரங்க, இரகசிய, உற்ற, பிரியாத, வெகு பழக்கம் — இணக்கம் —நேசமான. ‖ *s.* அந்தரங்கன், நேசன்,

பிரியாத —, உற்ற சிநேகிதன், — சிநேகிதி.

Intimé, *adj*. பிரதிவாதி, கற்பிக்கப்பட்ட.

Intimement, *adv*. உள்ளத்தில், இணக்கம் —, பக்ஷமாய், பிரியாமல், மிகவும்.

Intimer, *v. a*. கற்பித்தல், அறிவித்தல், நீதிஸ்தலத்துக்கு வரவழைத்தல்.

Intimidable, *adj*. சுலபமாய்ப் பயமுறுத்தும்.

Intimidateur, *m*. பயமுறுத்துகிறவன், பயமுறுத்தவேண்டுமென்றிருக்கிறவன்.

Intimidation, *f*. பயமுறுத்துதல்.

Intimidé, *part*. பயப்படுகிற, பயந்த, அச்சமுள்ள, திடுக்கிட்ட.

Intimider, *v. a*. பயப்படுத்துதல், பயமுறுத்துதல், மனங்கலக்குதல். ‖ s'— பயப்படுதல், கலங்குதல், திடுக்கிடுதல்.

Intimité, *f*. உற்றசிநேகம், இணக்கம், பழக்கம்.

Intitulé, *part*. பேருள்ள. ‖ *m*. (புஸ்தகத்தின்) பேர்.

Intituler, *v. a*. பேரிடுதல், — போடுதல்.

Intolérable, *adj*. சகிக்க —, பொறுக்கக்கூடாத, தாளாத.

Intolérablement, *adv*. பொறுக்கக்கூடாதவிதமாய்.

Intolérance, *f*. துர்ப்போதனை —, புறச்சமயஞ் சகியாமை, மிஞ்சின கண்டிப்பு, இளக்காரமில்லாமை.

Intolérant, *adj. et s*. துர்ப்போதனைகளை —, தவறுகளைச் —, புறச்சமயத்தாரைச் சகியாத, அதிக கண்டிப்புள்ள, இளக்காரமில்லாத, — இல்லாதவன்.

Intolérantisme, *V*. Intolérance.

Intonation, *f*. பாட்டு துவக்குதல், — துவக்கும் விதம், உச்சரிப்பு.

Intorsion, *f*. சுருளல், திருகு, ஓர் பங்கின்முறுகல்.

Intoxicant, *adj*. வெறியுண்டாக்கும், பாஷணமுண்டாக்கும்.

Intoxication, *f*. **Intoxiquer**, *v. a*. வெறிக்கச்செய்கிறது, லாகிரியுண்டாக்குதல்.

Intraduisible, *adj*. மொழிபெயர்க்கக்கூடாத.

Intraitable, *adj*. நடப்பிக்க —, பழக்கக்கூடாத, துஷ்ட, இணங்காத, அடங்காத, கேளாத, மூர்க்கமான.

Intra muros, *adv*. நகரத்துக்குள், நகர்மதில்களுக்குள்.

Intransigeance, *f. et* **Intransigeant**, *adj*. ஒப்புக்கொள்ளாதிருத்தல், இணங்காமை.

Intransitif, *adj*. செயப்படுபொருள் குன்றிய, — பொருளில்லாத (வினை) வேறொன்றிற் செல்லாத.

In-trente-deux, *ou* in-32, *m*. ௩௨ மடிப்புப் புஸ்தகம்.

In-trente-six, *ou* in-36 *m*. ௩௬ மடிப்புப் புஸ்தகம்.

Intrépide, *adj. et s*. அஞ்சாத, பயமில்லாத, — அறியாத, வீரம் —, துணிகரம் —, தைரியமுள்ள, —உள்ளவன்.

Intrépidement, *adv*. அஞ்சாமல், பயமின்றி, அஞ்சாதவீரம் — தைரியமாய்.

Intrépidité, *f*. அஞ்சாமை, அஞ்சாததைரியம், — வீரம், துணிகரம், திடாரிக்கம்.

Intrigant, *adj. et s*. உபாய —, தந்திரக்காரன், தந்திரி, அபாயவுபாயி, உபாயமாய்த் தேடுகிறவன், — தயவைநாடுகிறவன், நெருடன்.

Intrigue, *f*. உபாயதந்திரம், உபாயம், நெருடு, திரியாவிரம். ‖ சிக்கு, கலக்கம், வருத்தம், நாடகத்தினிடையூறு, — பிணைப்பு. ‖ தொடுப்பு, தொடிசு, கெட்டபழக்கம்.

Intrigué, *adj*. கவலை —, விசாரமுள்ள. ‖ சிக்கு —, பிணைப்புள்ள.

Intriguer, *v. a*. கவலை —, விசார —, சிக்குப்படுத்துதல், கலக்குதல், நாடகத்தின் சிக்கு—, புணைப்புண்டாக்குதல். *v. n*. உபாயதந்திரம் —, உபாயம் —, திரியாவிரம் பண்ணுதல், உபாயந் தேடுதல். ‖ s'—ஒருவனொருவனுக்குக் கவலை வருவித்தல், பிரயாசப்படுதல், வருந்துதல், முயலுதல்.

Intrinsèque, *adj*. உள்ளிருக்கிற, உள்ளான, சுய, உற்ற, உரிய, இயல்பான : valeur — இயல்பானவிலை ; valeur — des monnaies நாணயங்களினுற்ற — இடைவிலை.

Intrinsèquement, *adv*. உள்ளாக, உள்ளே, இயல்பாய்.

Introducteur, — **trice**, *s*. பிரவேசிப்பிக்கிறவன், வரவழைக்கிறவன், — வள்.

Introductif, ive, *adj*. உட்பிரவேசிப்பதற்குரிய, முகவுரையாகிய, பிராதின் துவக்கமாகிய.

Introduction, *f*. பிரவேசிப்பித்தல், உட்பிரவேசம், உட்படுத்துதல், — செலுத்துதல், புகுத்துதல். || அறிமுகமாக்குதல், சேர்ப்பித்தல், வழங்குவித்தல். || பிரவேசம், வழி. || முகவுரை, பாயிரம். || துவக்கம் : lettre d'— அறிமுகமாக்குகிற —, பிரவேசிப்பதற்குரிய காகிதம் ;— d'une coutume வழக்கத்தின் ஆரம்பம் ; — d'une instance பிராதின் விசாரணைத் துவக்கம்.

Introduire, *v. a.* நுழைவித்தல், உட்படுத்துதல், — செலுத்துதல். || பிரவேசிப்பித்தல், உள்ளே அழைத்தல்,— வருவித்தல், சேர்ப்பித்தல். || வழங்குவித்தல். || (சல்லாபத்தில்...) வருவித்தல், பேசுவித்தல். || கொண்டுவருதல், காரணமாதல், வருவித்தல். || s'— நுழைதல், புகுதல், பிரவேசித்தல், சேர்தல். || துவக்குதல், வழங்குதல், ஆரம்பித்தல். || ஒருவரொருவரைப் பிரவேசிப்பித்தல்.

Introduit, *part*. உட்பிரவேசித்த, நுழைந்த.

Introït, *m*. பூசைத் துவக்கமான வாசகம், — பாடல்.

Intromission, *f*. உட்புகுத்தல், உட்செலுத்துதல்.

Intronisation, *f*. Introniser, *v. a.* சிம்மாசனத்திலேற்படுத்துதல், — ஸ்தாபித்தல்.

Introspection, *f*. ஆத்துமத்தைப்பற்றிய படிப்பு, ஆத்தும ஆராய்ச்சி.

Introuvable, *adj*. அகப்படாத, கிடையாத, காணாத.

Intrus, e, *adj. et s.* (உத்தியோகத்தில்...) தானாயேற்பட்ட, — பட்டவன், பட்டம் —, உத்தியோகந் தானாயபகரித்தவன்.

Intrusion, *f*. (உத்தியோகத்தில்...) தானாயேற்படுதல், பட்டத்தின் —, உத்தியோக —, ஸ்தல அபகரிப்பு, உரிமையற்ற நுழைவு.

Intuitif, ive, *adj*. பிரத்தியக்ஷ, தெளிந்த (தரிசனை.)

Intuition, *f*. பிரத்தியக்ஷ தரிசனம். || தெளிந்த அறிவு, —உணர்வு.

Intuitivement, *adv*. பிரத்தியக்ஷமாய்.

Intumescence, *f*. வீக்கம், உப்பல்.

Intussusception, *f*. உட்கொள்ளுதல், உள்வாங்குதல், உட்படல்.

Inulées, *f. pl.* Inula indica மூக்கொற்றிப் பூண்டு.

Inusable, *adj*. பழசாகக்கூடாத, தேயாத.

Inusité, *adj*. வழங்காத, வழக்கமற்ற.

Inutile, *adj*. வியர்த்தம் —, வீணான, பிரயோசனம் —, பலனற்ற, உதவாத, விருதாவான.

Inutilement, *adv*. வியர்த்தம் —, வீணாய், விருதாவிலே, பிரயோசனமில்லாமல்.

Inutilisable, *adj*. உபயோகிக்கக்கூடாத.

Inutilité, *f*. வியர்த்தம், வீண், நிஷ்பலம், விருதா, பிரயோசனமில்லாமை, உதவாமை. || *pl*. வீண்காரியங்கள்.

Invaincu, *adj*. வெல்ல —, செயிக்கப்படாத, தோராத.

Invalide, *adj. et s.* பிணியாளி, நோவாளி, நோவு —, ஊனமுள்ள, சேவிக்கக்கூடாதவன். || செல்லாத, நிஷ்பலமான. || *m. pl.* நோவூனமுள்ள சேவகர் மடம்.

Invalidement, *adv*. நிஷ்பலமாய், செல்லாதவிதமாய்.

Invalidation, *f*. Invalider, *v. a.* நிஷ்பலமாக்குதல், — என்று தீர்த்தல்.

Invalidité, *f*. நிஷ்பலம், செல்லாமை.

Invariabilité, *f*. மாறாமை.

Invariable, *adj*. மாறாத, திரும்பாத, வேற்றுமைப் —, வேறுபடாத.

Invariablement, *adv*. மாறாமல்.

Invasion, *f*. பகைவர்நாட்டிற் பாய்தல், — பாய்ந்துசெல்லல், தாக்கு, அபகரிப்பு, வியாதி தோன்றுதல், — க்குறிப்புகள், (தொத்துவியாதி) ஓர் நாட்டில் தோன்றுதல், — பரம்புதல் : faire une — பகைவர்நாட்டிற் பாய்ந்து திரிதல் ; — de fausses doctrines பொய்ப்போதனைகள் பரம்புதல்.

Invective, *f*. திட்டு, பழிப்பு, வசை, தூஷணம், கண்டனம்.

Invectiver, *v. n.* தூஷித்தல், பழித்தல், வைதல், திட்டுதல், கேலிபண்ணுதல், கண்டித்தல், கடிதல்.

Invendable, *adj*. விற்பனையாகாத, விற்கக்கூடாத.

Invendu, *adj*. விற்கப்படாத.

Inventaire, *m*. சாமான் விபரம், — பெயர்வழி, — இடாப்பு, — அட்டவ

ணை. || இடாப்பிலெழுதப்பட்ட சாமான்களின் ஏலம், — விற்பனை. [பட்ட...

Inventé, *part.* பொய்யான, கட்டப்

Inventer, *v. a.* நவமாயுண்டாக்குதல், உண்டுபண்ணுதல், கட்டுதல், ஏற்படுத்துதல், கற்பித்தல், கருதுதல், நிருமித்தல், பாவித்தல். || பொய்யாய் —, இல்லாததை —, கட்டுதல், உண்டாக்குதல்.

Inventeur, — trice, *s.* ஏற்படுத்துகிறவன், சூக்ஷ —, கட்டுக்காரன், உண்டுபண்ணுகிறவன், உண்டாக்கினவன், கட்டினவன், — வள், ஆக்கியோன், காரணன். [சூக்ஷமாயுண்டாக்குகிற.

Inventif, ive, *adj.* நவமாய் —,

Invention, *f.* ஏற்பாடு, நவகிருத்தியம், வைப்புக்கட்டு, நூதன —, கற்பிதம், உண்டாக்குதல், கண்டெடுத்தல். || உபாயம், சூக்ஷம், சூக்ஷமான வகை. || உபாயதந்திரம், சூது, சூக்ஷதிருட்டு, பொய், கட்டுகதை. || சித்திரப்பொருட்களின் நியமிப்பு.

Inventorier, *v. a.* சாமான் பெயர்வழியெழுதுதல், — வழியிலெழுதுதல்.

Inversable, *adj.* கவிழாத.

Inverse, *adj.* எதிர்முறை—, புரட்டு —, எதிர்—, மாறான, விலோம: raison —விலோம விகிதம்,—வீதம், விலோமானுபாதம் ; règle de trois—விலோமத்திரைராசிதம். || *f. ou* proposition — பயனிலையெழுவாயாகும் வாக்கியம். || எதிர்வாக்கியம்,— விதம், விரோதமானது ; à l'— எதிர்விதமாய்.

Inversion, *f.* ஒழுங்கின் —, வரிசைமாற்றம், — ப்புரட்டு, முன்பின்வைத்தல், புரட்டு, விலோமம்.

Invertébré, *adj.* முள்ளெலும்பில்லாத. || *m. pl.* முள்ளெலும்பற்ற பிராணியினம்.

Invertir, *v. a.* தலைகீழாய்வைத்தல், வரிசைப் புரட்டிவைத்தல்.

Investi, *part.* சூழப்பட்ட, முற்றிக்கையான, உடைய, வசமடைந்த.

Investigateur, trice, *s. et adj.* தேடுகிறவன், பரிசோதிக்கிறவன், — வள், ஆராய்கிற.

Investigation, *f.* பரிசோதனை, விசாரணை, ஆராய்வு, தேடுதல்.

Investir, *v. a.* வசம்பண்ணுதல், — ஆக்குதல், வசப்படுத்துதல், கையளித்தல், கொடுத்தல், சூட்டுதல். || வளைத்தல், சூழ்தல், சூழ்ந்துகொள்ளுதல், சுற்றுதல், முற்றுதல், முற்றிக்கைவைத்தல்.

Investissement, *m.* சூழ்தல், முற்றிக்கை.

Investiture, *f.* கையளிப்பு, வசம்பண்ணுதல், — ஆக்குதல், சூட்டுதல் : — du cordon bramanique உபநயம், உபநயனம். [ன, அசாத்தியமான.

Invétéré, *part.* நாள்பட்ட, முற்றி

Invétérer, *v. n.* s'— *v. pro.* நாள்படுதல், முற்றுதல், அசாத்தியமாதல்.

Invincibilité, *f.* செயிக்கப்படாமை.

Invincible, *adj.* செயிக்க —, வெல்ல —, மறுக்கப்படாத, தோலாத.

Invinciblement, *adv.* வெல்ல —, மறுக்கப்படாதவிதமாய்.

In-vingt-quatre, *ou* in-24 *m.* உசமடிப்புப்புஸ்தகம்.

Inviolabilité, *f.* தீண்ட —, மீற—, தீர்வையிட—, பிடிக்க—, தொடப்படக்கூடாமை.

Inviolable, *adj.* தீண்ட —, மீற —, கடக்க —, தீர்வையிட —, பிடிக்க —, தொடக்கூடாத, அழியாத, கெடாத, பங்க —, தீட்டுப்படாத.

Inviolablement, *adv.* மீறாமல், தப்பாமல், பிரமாணிக்கமாய்.

Inviolé, *adj.* கெடுக்கப்படாத, தீட்டுப்படாத, கற்பழிக்கப்படாத.

Invisibilité, *f.* அதரிசனம், தோன்றாமை, அகோசரம், அதிரிசியம்.

Invisible, *adj.* காணாத, காணப்படாத, தோன்றாத, அதிரிசிய, கண்ணுக்கெட்டாத, அரூபியான : éclipse — காணாத —, பாதாளகிராணம் ; se rendre —, devenir — காணாமற்போதல்; il est — அவனைக் காணக்கூடாது.

Invisiblement, *adv.* அதரிசனமாய், தோன்றாமல், காணாதவிதமாய்.

Invitant, *adj.* பகரமான, பிரியமான.

Invitateur, — trice, *s.* வரவழைக்கிறவன், — வள், விருந்துக்கழைப்பவன். [துக்கு...) அழைப்பு.

Invitation, *f.* வரவழைப்பு, (விருந்

Invitatoire, *m.* தேவபுகழ்ச்சிக்கு ஏவுகிறவாக்கியம், காலைவந்தனை துவக்கவசனம்,—பாடல். [ட, — பட்டவன்.

Invité, e, *part. et s.* அழைக்கப்பட்

Inviter, *v. a.* வரவழைத்தல், அழை

த்தல், கோருதல், வரக்கோருதல், — மன்றாடுதல். || ஏவுதல், தூண்டுதல். || s' — ஒருவனொருவனையழைத்தல், — கோருதல், அழைக்கப்படாமல் வருதல்.

Invocation, *f.* மன்றாட்டு, வேண்டுதல், விண்ணப்பம். || (காப்பியத்தின்) காப்பு. [ய, விண்ணப்பமுள்ள.

Invocatoire, *adj.* மன்றாட்டடங்கி

Involontaire, *adj.* மனசுபொருந்தாத, சம்மதி —, மனசற்ற, — அறியாத. [மல், மனமற.

Involontairement, *adv.* மனசில்லா

Involuté, *adj.* உள்ளேசுருண்ட.

Involution, *f.* வருத்த —, விக்கினத்திரள்.

Invoquer, *v. a.* மன்றாடுதல், வேண்டிக்கொள்ளுதல், பிரார்த்தித்தல், கேட்டுக்கொள்ளுதல், உதவிக்கழைத்தல். || உதாரணமாக —, எடுத்துக்காட்டுதல். || கேட்டல், அபயமிடுதல்.

Invraisemblable, *adj.* மெய்யாய்த்தோன்றாத.

Invraisemblance, *f.* மெய்யாய்த்தோன்றாமை, — தோன்றாதகாரியம்.

Invulnérabilité, *f.* காயம்படாமை.

Invulnérable, *adj.* காயம்படாத,— அணுகாத. [து.

Iode, *m.* உலோகம்போன்ற ஓர் தா

Iodique, *adj.* ஷை தாதுக்கடுத்த

Ionidium suffruticosum, ஓரிலைத்தாமரை. [இயோனிதேசம்.

Ionie, *f.* (சின்ன ஆசியாவில்)

Ionien, enne, *adj.* ஷை தேசத்துக்கடுத்த : dialecte — *ou* l'— இயோனிபாஷை. || *m. pl.* இயோனிதேசத்தார், யவனர்.

Ionique, *adj.* இயோனிதேசத்து.

Iota, *m.* (கிரேக்கரில்) இகரம். || அற்பம், அணு. [விக்கும்வேர்.

Ipécacuanha, *m.* வாந்திபண்ணு

Ipomée, *f.* Ipomæa, ஓர் பூண்டு : — bracteata குண்டாணிக்கொடி ; — candidans முசுட்டை ; — pestigridis பூனைக்கீரை ; — guamoclit, *ou* fleur du cardinal மயிர்மாணிக்கம் ;— turpethum *ou* convolvulus சிவதை.

Ipso facto, *adv.* அக்கிரியையினாலே தானே, உடனே.

Iradé, *m.* துர்க்கிசுல்தான் கட்டளை.

Irascibilité, *f.* கோபகுணம், கோபத்துக்குச் சார்பு.

Irascible, *adj.* கோபகுணமுள்ள, கோபத்துக்குச் சார்புள்ள : faculté — விக்கினங்களைச் செயிக்க ஏவுந்தத்துவம்.

Irato, (ab) *adv.* கோபத்தோடே —, கோபமுள்ளவனாலான.

Ire, *f.* கோபம், சினம்.

Iridacées, *f. pl.* ஓர் பூண்டினம்.

Iris, *m.* வான —, மழைவில். || கண்மணியின் பலநிறகோட்டை, கண்வரி, அலரி. || வானவில் நிறமுள்ள பளிங்குக்கல். || ஓர்வித சீகு, வானவில் நிறங்காட்டும் பலவகைப் பூண்டு. || *ou* pierre d'— வானவில் நிறங்களைக் காட்டுமணி ; — jaune வசம்பு. || *f.* வானவில்லின் பொய்த்தேவதை. [காட்டல்.

Irisation, *f.* வானவில் நிறங்களைக்

Irisé, *adj.* வானவில் நிறமுள்ள.

s'Iriser, *v. pro.* வானவில் நிறங்கொள்ளுதல்.

Iritis, *m.* கண்வரியினெரிவு.

Irlandais, e, *adj.* இர்லந்துதேசத்தான், — தேசத்து.

Irlande, *f.* இர்லந்து தீவு.

Ironie, *f.* பழிப்பானஸ்துதி, சூக்ஷகேலி, — பரிகாசம், கருத்துப்புரட்டு, எதிர்பயனணி, — பயனாகிறவாக்கியம்.

Ironique, *adj.* ஷை ஸ்துதியாகிய, கேலி —, நிந்தையான.

Ironiquement, *adv.* பழிப்பானஸ்துதி —, கேலியாய், எதிர்கருத்தாய்.

Iroquois, e, s. (வட அமேரிக்காவில்) இரோகுவாசனம். || முட்டாள், முரடன்.

Irrachetable, *adj.* மீட்கக்கூடாத.

Irradiation, *f.* கதிர்வீசுதல், கிரகங்களைச் சூழும் பிரபை, பிரகாசந் தோற்றுவிக்கும் பொருளின் பருப்பு. || மையத்தினின்று சுற்றுப்புறத்திற்குப் பரம்புதல். [சுற்றிலும் பரம்புதல்.

Irradier, *v. n.* மையத்தினின்று

Irraisonnable, *adj.* புத்தி —, ஞானமில்லாத.

Irraisonnablement, *adv.* புத்தி—, ஞானம் —, நியாயமின்றி.

Irraisonné, *adj.* ஞாயமற்ற, ஒவ்வாத.

Irrassasiable, *adj.* அகோரப்பசியுள்ள, பசிதீராத.

Irrationnel, elle, *adj.* நியாயத்துக்கொத்திராத. || சரியளவற்ற

Irréalisable, *adj.* அனு. விக்கமுடியாத, திகழமுடியாத. [த்தகாத.

Irrecevable, *adj.* எற்றுக்கொள்ள

Irréconciliable, *adj.* சமாதானமாகாத, தீராதவற்மமுள்ள.

Irréconciliablement, *adv.* சமாதானமாகாதவிதமாய், தீராதபகையாய்.

Irrécusable, *adj.* மறுக்க —, நீக்க —, ஆக்ஷேபிக்க —, தள்ளக்கூடாத,—ப்படாத.

Irrédentisme, *m.* இத்தாலிய பாஷைபேசும் நாடுகளைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்று இத்தாலியர் கொண்டிருக்கும் கொள்கை.

Irréductibilité, *f.* அதிக சுருக்கம் —, தூளாகாமை, முந்தினவடிவு பெறுமை.

Irréductible, *adj.* அதிக சுருக்கம் —, தூளாகாத, முந்தினவடிவு கொள்ளாத, — தன்மைக்குத் திரும்பாத.

Irréel, elle, *adj.* உண்மையில்லாத, நிஜமற்ற. [க்கப்படமுடியாத.

Irrééligible, *adj.* மறுபடியும் நியமி

Irréfléchi, *adj.* யோசியாத, கவனமில்லாத, கோணாத. [மில்லாமை.

Irréflexion, *f.* யோசியாமை, கவன

Irréformable, *adj.* திருத்தக்கூடாத. [ஆக்ஷேபிக்கக்கூடாத.

Irréfragable, *adj.* மறுக்க —,

Irréfutable, *adj.* ஆக்ஷேபிக்கமுடியாத.

Irrégularité, *f.* கிரமமில்லாமை, விபரீதம், விகற்பம், ஒழுங்கின்மை, நெறிகேடு. || விதிவழு, —விபரீதம். || திருப்பட்ட விலக்கம், — ப்பட்டத்துக்குத் தகாமை.

Irrégulier, ère, *adj.* ஒழுங்கற்ற, முறை —, கிரமமற்ற, — தப்பின, ஒத்துவராத, ஒவ்வாதபங்குள்ள. || விதிதப்பின, விபரீதமான. || திருப்பட்டத்துக்குத் தகாத, — விலக்கமான : verbe — விபரீதவினை.

Irrégulièrement, *adv.* ஒழுங்கு —, கிரமந்தப்பி, — இன்றி, விபரீதமாய், விகற்பமாய்.

Irréligieusement, *adv.* தேவ —, வேதநிந்தையாய், அவிசுவாசமாய்.

Irréligieux, *adj.* பத்தி —, விசுவாசமற்ற, வேதமநுசரியாத, வேத —, தேவநிந்தையுள்ள, வேதத்துக்கு விரோதமான, நாஸ்திக.

Irréligion, *f.* அவிசுவாசம், விசுவாசம் —, பத்தியில்லாமை, தேவ —, வேதநிந்தை, நாஸ்திகம்.

Irrémédiable, *adj.* பரிகாரமில்லாத, தீராத, அசாத்திய. [ற, — இன்றி.

Irrémédiablement, *adv.* பரிகாரம

Irrémissible, *adj.* பொறுக்க —, மன்னிக்கப்படாத. [வில்லாமல்.

Irrémissiblement, *adv.* பொறுத்த

Irréparable, *adj.* பரிகாரமில்லாத, — ஆகாத, தீராத. [லாமல்.

Irréparablement, *adv.* பரிகாரமில்

Irrépréhensible, *adj.* கண்டனைக்குப் பாத்திரமாயிராத, குற்றமில்லாத, கண்டிக்கலாகாத.

Irrépréhensiblement, *adv.* கண்டிக்க நியாயமற, குற்றமின்றி.

Irrépressible, *adj.* அடக்க —, தடுக்கக்கூடாத.

Irréprochable, *adj.* குற்றம் —, குறையில்லாத, கண்டிக்கலாகாத, மறுக்கக்கூடாத. [லாமல், தப்பிதமின்றி.

Irréprochablement, *adv.* குற்றமில்

Irrésistible, *adj.* எதிர்க்க —, தடுபடாத, தடுக்கக்கூடாத.

Irrésistiblement, *adv.* தடுபடாமையாய், தடையின்றி.

Irrésolu, *adj.* இருமனம் —, தத்தளிப்பு —, சந்தேகமுள்ள, ஐயப்படுகிற, மனத்திடமில்லாத, தேறாத, துணியாத.

Irrésolument, *adv.* இருமனமாய்.

Irrésolution, *f.* இருமனம், தத்தளிப்பு, ஐயம், தீர்மானியாமை.

Irrespectueusement, *adv.* சங்கையீனமாய். [சங்கையீனமுள்ள.

Irrespectueux, *adj.* அவசங்கை —,

Irrespirable, *adj.* சுவாசிக்கக்கூடாத.

Irresponsabilité, *f.* உத்தரவாதியாயிராமை. [யாயிராத.

Irresponsable, *adj.* உத்தரவாதி

Irrévérence, *f.* சங்கையீனம், அவசங்கை, வணக்கமின்மை, அபசாரம்.

Irrévérencieux, *adj.* அவசங்கையுள்ள.

Irrévocabilité, *f.* மாறாமை, திரும்பாமை.

Irrévocable, *adj*. மாருத, திரும்பாத, அழிக்கப்படாத.

Irrévocablement, *adv*. மாருத—, திரும்பாதவிதமாய்.

Irrigateur, *m*. தண்ணீர்பாய்ச்சலுக்கு உதவும் ஜலசூத்தரம்.

Irrigation, *f*. நீர்ப்பாய்ச்சல், இறைப்பு.

Irriguer, *v. a*. நீர்ப்பாய்ச்சுதல், இறைத்தல்.

Irritabilité, *f*. எரிச்சலுள்ள —, கோபகுணம், எரிச்சல். || (பூண்டுகளின்) சுவரணை : — des nerfs நரம்புகளின் எரிச்சல்.

Irritable, *adj*. முன்கோபி, — கோபமுள்ள, எளிதாய்க் கோபிக்கிற, கோபகுணம் —, எரிச்சலுள்ள. || சுவரணையுள்ள : nerfs — எரிச்சலுள்ள நரம்புகள் ; passions — எளிதாய்க் கிளப்பப்படுகிற ஆசாபாசங்கள்.

Irritant, *part*. எரிச்சலுக்கு —, எரிவுக்கு எதுவான, எரிச்சல் —, கோபம் வருவிக்கிற, மூட்டுகிற, தூண்டுகிற. || *m*. எரிவாக்குமருந்து. || *adj*. ஒழிக்கிற, அழிக்கிற.

Irritation, *f*. எரிச்சல், கோபம், — கிளப்புதல், சினப்பு, மனக்கொதிப்பு. || எரிவு, அழற்சி, எரிவந்தம்.

Irrité, *part*. கோபம் —, எரிச்சலுள்ள, சினந்த : flots — கொந்தளிப்புள்ள அலைகள்.

Irriter, *v. a*. கோபம் எழுப்புதல், — கிளப்புதல், — வருவித்தல், எரிச்சலாக்குதல். || எரிவு —, எரிவந்தமாக்குதல். || அதிகரிப்பித்தல், வளர்த்தல், அதிக அகோரமாக்குதல். || தூண்டுதல், மூட்டுதல், வருவித்தல். || s'— கோபித்தல், சினத்தல், முனிதல், வெகுளுதல், கோபம் —, சினங்கொள்ளுதல், — ஆதல், எரிவந்தமாதல்.

Irroration, *f*. பனியால் நனைதல்,— நனைவித்தல், துளிப்பு.

Irruption, *f*. நாட்டிற் பாய்தல், — பாய்ந்து திரிதல், பாய்ந்தெதிர்த்தல். || வெள்ளம்—, புரளுதல், பிரளயம், பாய்தல், பரம்புதல்.

Isabelle, *f*. இசபெல் —, எலிசபெத்தென்பவள். || இனமஞ்சள்நிறகனி. || *adj*. ஷை நிறமான. || *m*. ஷை நிறம்.

Isard, *m*. வனவெள்ளாடு.

Isatis, *m*. நாயுநரியும்போன்ற மிருகம்.

Ischæmum aristatum நண்டுக்காற்புல் :—cibare கடுக்கன்புல்.

Ischia, (இத்தலிதேசத்தில்) இஸ்கியாதீவு, — நகரம்.

Ischias, தொடைவாழை (பூண்டு).

Ischion, *m*. இடுப்பினெலும்பு.

Ischurétique, *adj*. நீரடைப்பு குணமாக்குகிற.

Ischurie, *f*. நீரடைப்பு.

Iser, (அல்மஞ்தேசத்தில்) இசர் ஆறு.

Isère, *f*. (பிராஞ்சுதேசத்தில்) இசேர் ஆறு, — ஜில்லா.

Isiaque, *adj*. இசிஸ் என்பவளினிரகசியங்களைக் காட்டுகிற,— தெளிவிக்கிற.

Isis, *f*. எஜிப்த்தியர் பொய்த்தேவதை. || சீவசெந்துவான ஓர்வித பூண்டின் திரள்.

Islam ou Islamisme, *m*. இஸ்லமான்—, மகம்மதுமதம்.

Islandais, e, *adj*. இஸ்லந்துதீவான், —தீவின்.

Islande, *f*. (ஐரோப்பாவடக்கில்) இஸ்லந்து தீவு.

Isocèle, *adj*. *V*. Isoscèle.

Isochimène, *adj*. ஒத்தகுளிருள்ள.

Isochrone, *adj*. ஒரேகாலத்திலாகிற, ஒத்தகாலம் நிற்கிற.

Isochronisme, *m*. ஒத்தகாலம்.

Isoète, *f*. ஓர் பூண்டு : isoetes coromandeliana சின்னி, கிட்டி, சிறுசின்னி ; sa racine நெய்ச்சிட்டி —, கன்னிக்கிழங்கு.

Isogone, *adj*. சரிகோணமாகிற.

Isolation, *f*. தனிப்படுத்துதல், தனியே வைத்தல்.

Isolateur, *m*. தனித்தனியாய்ப் பிரிக்கும் குணமுடைய பண்டம் அல்லது கருவி.

Isolé, *part*. தனித்த, தனியான, தனிமையாயிருக்கிற,—விடப்பட்ட, வேறேபொருளைத் தொடாத,— ச்சாராத.

Isolement, *m*. தனிமை, ஏகாந்தம்.

Isolément, *adv*. தனிமை —, தனியாய்.

Isoler, *v. a*. தனிமை —, தனிப்படுத்துதல், தனியே —, ஒற்றிவைத்தல், புறநீங்கலாக்குதல், (சேராத —, சாராதபடிக்கு) பிரித்தல், — நீக்குதல், விலக்குதல். || s'— தனித்தல், தனியாய் —, தனித்துப்போதல், தனிப்படுதல், சபையினின்று —, பிரிதல்.

Isoloir, *m.* தனிப்படுத்தும் கருவி, பளிங்குக்காலுள்ள மணை. [ள்ள.

Isomère, *adj.* ஒத்தபங்கு — பிரிவு

Isomorphe, *adj.* ஒத்தவடிவுள்ள.

Isopérimètre, *adj.* ஒத்தசுற்றுள்ள.

Isopodes, *m. pl.* ஒத்தகாலுள்ள ஒட்டுமீன்கள். [isora வலம்புரி (செடி).

Isora corylifolia *ou* helicteres

Isoscèle, *adj.* துவிசம்புச, ஒத்தபக்கமிரண்டுள்ள (திரிகோணம்).

Isothère, *adj.* ஒத்தவேனிலுள்ள.

Isotherme, *adj.* ஒத்த உஷ்ணமுள்ள. [பக்கான்

Ispahan, (பேற்சியதேசத்தில்) இஸ்

Israël, *m.* இயாக்கோபென்பவர், இஸ்ருயேல் சனம், — இராச்சியம்.

Israélite, *s.* இஸ்ருயேல் சனத்தான். இஸ்ருயேலன், யூதன் : bon — நல்ல இஸ்ருயேலன், கபடற்றவன்.

Issu, e, *adj.* பிறந்த, சந்ததியான, சனித்த.

Issue, *f.* போக்கு, வழி, போம் வழி, புறப்பாடு, செலவு. ‖ முடிவு, தீர்மானம், பலிப்பு, சம்பவம். ‖ உபாயம், தப்பிப்போம் வழி. ‖ *pl.* வெளி —, சுற்றுப்புறம், கால்குடல்கள், தவிடு, இரண்டாமரிப்புமாவு : à l'— de முடிவிலே, பிற்பாடு.

Isthme, *m.* இருகடலிடைப் பூமி, — இடையில் நெருக்கமானபூமி, சேது.

Isthmique, *adj.* ஷை பூமியின், கொரிந்துநகரண்டையில் நடந்த (வேடிக்கை) [திறிநாடு.

Istrie, *f.* (இல்லிரிதேசத்தில்) இஸ்

Italianisme, *V.* Italisme.

Italianissime, *m.* இத்தலிதேசத்துச் சுயாதீனத்தின் பாரிசத்தான்.

Italie, *f.* (ஐரோப்பாவில்) இத்தலிதேசம்.

Italien, — enne, *adj. et s.* ஷை தேசத்து, — தேசத்தான், இத்தலியன். ‖ *m.* இத்தலிதேசத்துப் பாஷை.

Italique, *adj.* இத்தலிதேசத்து. ‖ முன்சாய்கிற. ‖ *m.* முன்சாய்கிற அக்ஷரம்.

Italisme, *m.* இத்தலிபாஷை நடை.

Item, *adv.* மேலும். ‖ *m.* கணக்கின் பிரிவு, வருத்தம், சிக்கு.

Itératif, ive, *adj.* இரட்டிப்பான, இரட்டிரட்டித்த.

Itérativement, *adv.* இரட்டித்து, மறுபடி, இரட்டிரட்டித்து.

Itinéraire, *adj.* வழிக்குறிப்பாகிய, — யளப்பதற்குரிய : mesure — வழி அளவை.

Itinéraire, *m.* வழி, — க்குறிப்புப் புஸ்தகம், பயணச்சரித்திரம், — வர்த்தமானம்.

Iule, *m.* ஓர்வித ஆயிரக்காலி.

Ive, Ivette, *f.* ஓர் புல்.

Ivoire, *m.* தந்தம், ஆனைக்கொம்பு, — த்தந்தம், (பலமிருக) எயிறு. ‖ வெண்மை.

Ivraie, *f.* களை, — ப்புல்.

Ivre, *adj.* வெறியுள்ள, — மயக்கமுள்ள, இலாகிரியுள்ள, — எடுத்த, — கொண்ட. ‖ நிறைந்த. ‖ —mort இலாகிரியாற் சுவரணையற்ற. — செத்தவனைப் போலக் கிடக்கிற.

Ivresse, *f.* குடி —, வெறி, மயக்கம், இலாகிரி. ‖ களிப்பு, கவி —, மருள்.

Ivrogne, *m. et adj.* குடியன், வெறியன், குடிகாரன், மதுபாணி.

Ivrogner, *v. n.* குடியனாயிருத்தல்.

Ivrognerie, *f.* குடி, குடிக்கிறவழக்கம், வெறி.

Ivrognesse, *f.* குடிகாரி, குடிச்சி.

Ixia, ixie, *f.* ஓர் பூண்டு.

Ixode, *m.* உண்ணி, உணி.

Ixora, *f.* ஓர் பூண்டு : — alba வெள்வெட்சி ; — coccinea வெட்சி ; — parviflora கோரான்செடி, சுளுந்து.

Izard, *m.* *V.* Isard.

J

J, *m.* பத்தாமெழுத்து, ழ, ஜ.

Ja, *adv.* *V.* Déjà.

Jabiru, *m.* ஓர் பக்ஷி.

Jable, *m.* பீப்பாப்பலகையின் அறுப்பு, — காடி.

Jabler, *v. a.* ஷை அறுப்பறுத்தல்.

Jabloire, *f.* ஷை அறுப்பறுக்குங் கருவி.

Jabot, *m.* (பக்ஷியின்) முதலிரைப்பை, கண்டநாளவிரிவு. ‖ உட்சட்டையின் கொய்சகம்.

Jaboter, *v. n.* கத்துதல், தொனுப்புதல்.

Jacamar, *m.* ஓர் பக்ஷி.

Jacasse, *f. et adj.* அலப்புக்காரி,—ப்பிரியமுள்ள.

Jacasserie, *f.* Jacasser, *v. n.* (பக்ஷி) கத்துதல். || அலப்புதல், வாயாடுதல்.

Jacée, *f.* ஓர் பூண்டு. [ட.

Jacent, *adj.* எசமானற்ற, — விட்

Jachère, *f.* கரம்பு, தரிசு, கரம்பான —, உழாதநிலம்.

Jachérer, *v. a.* கரம்புநிலமுழுதல்.

Jacinthe, *f.* ஓர் பூக்கோரை, ஓர் செவ்வந்தி, அதின் பூ. [கொடி.

Jack *ou* Union-Jack, இங்கிலீஷ்

Jacot, *ou* Jacquot, *m.* சாம்பல் நிறக்கிளி —, கிளிப்பிள்ளை.

Jacobin, *m.* ஓர் பக்ஷி, ழக்கோபின். || அர்ச். சாமிநாதர் சபைச் சந்நியாசி, (அந்தச் சந்நியாசிகள் மடத்திற்கூடிய) கலகக்காரன். || ஷை கலகக்காரர் பாரிசத்தான்.

Jacobinisme, *m.* ஷை கலகக்காரர் போதகம்.

Jacobites, *m. pl.* சேசுநாதரிடத்தில் ஒரேசுவாபமுண்டென்று சாதிக்கும் பதிதர். || (இங்கிலீஷிராசாவான) உ-ம் யாகப்பர் பாரிசத்தார்.

Jaconas, *m.* ஓர்வித சல்லா.

Jacquerie, *f.* குடிகள் அல்லது கூலியாட்களின் கலகப் புரட்சி.

Jacques, *m.* இயாகப்பன்.

Jacquet, *m.* ஓர்வித சொக்கட்டான்.

Jactance, *f.* வீம்பு, பாராட்டு.

Jactation, *f.* இடைவிடாத அசைவு, — ஆட்டம். [பம்.)

Jaculatoire, *adj.* மனவல்லைய (செ

Jade, *m.* ஓர் பச்சைக்கல். [தில்.

Jadis, *adv.* பூர்வத்தில், முற்காலத்

Jaffna, (இலங்கைத் தீவில்) யாழ்ப்பாணம்.

Jagarnath, சகநாதம்.

Jagre, *m.* வெல்லம், கருப்புக்கட்டி, கருப்பட்டி, இஞ்சுச்சார்.

Jaguar, *m.* ஓர் புலி.

Jaillir, *v. n.* பீரிடுதல், பாய்தல், சுரத்தல், புறப்பட்டோடுதல், தெறித்தல், வீசுதல், புறப்படுதல், தோன்றுதல், பிறத்தல்.

Jaillissant, *part.* பீரிடுகிற.

Jaillissement, *m.* பீரிடுதல், சுரப்பு, பாய்தல், தெறித்தல்.

Jais, *m.* கருநிமிளை, கருமை பூசின —, பலநிறக்கண்ணாடி, மின்னுகிற கறுப்பான கல்.

Jalage, *m.* சில்லறையாய் விற்ற இரசத் தீர்வை. [ர்.

Jalap, *m.* விரேசனத்துக்குரிய வே

Jale, *f.* தொட்டி, பெரியசாடி.

Jalet, *m.* பாலுண்டை.

Jalon, *m.* நேர்வழியடையாள —, நிரைக்கோல். || படிப்பில் வழிகாட்டுங் —, நடப்பிக்குங் குறிப்பு.

Jalonnement, *m.* Jalonner, *v. a.* ஷை கோல்களை நடுதல்.

Jalouser, *v. a.* காய்மகாரப்படுதல். || se— ஒருவனொவன் பேரிற் காய்மகாரப்படுதல்.

Jalousie, *f.* காய்மகாரம், பொறுமை, காய்மை, அழுக்காறு, ஔவியம், எதிரித்தனம், புறத்தியார் நன்மைப் பேரில் விசனம். || சமுசயம், அச்சம். || நுணுக்கம், மிகுந்த எச்சரிக்கை. || இலைச்சன்னல்,— க்கதவு, பலகணி, சாலகம். || மூவன்ன வாடாமல்லிகை.

Jaloux, *adj.* காய்மகாரமுள்ள, பொறுமை —, ஔவியமுள்ள. || வெகு பற்றுதல் —, பிடிப்புள்ள, மிகவும் விரும்புகிற. || *s.* காய்மக்காரன், — காரி. être — காய்மகாரப்படுதல், காய்மைக்கரித்தல், அழுக்கறுதல், அழுக்கறுத்தல்.

Jamaïque, *f.* (ஆந்தீய்த் தீவுகளில்) ஜாமாயிக்க தீவு.

Jamais, *adv.* (*avec* ne) ஒருகாலுமில்லை, ஒருபோதுமில்லை. || (*sans* ne) எப்போதாவது, எக்காலத்திலாவது, ஒருகாலும் : il ne viendra — ஒருகாலும் வரமாட்டான்;—père fut-il plus malheureux எப்போதாவது ஓர் தகப்ப னதிக நிர்ப்பாக்கியனாயிருந்தானோ ; à — , pour — எப்போதைக்கும், எப்போதும். || *m.* என்றும் ; à tout —, au grand — என்றென்றைக்கும், ஒருக்காலும்.

Jambage, *m.* கால், நிலைக்கால், கற்றூண் : — de porte கதவுநிலை, நிலைக்கால், அறுவுகால். || m, n, u, எழுத்துக்களின் கால், — நேர்வரி.

Jambe, *f.* கால், பாதம், கணைக்கால், கவராசத்தின் கால் : — de çà, — de là இடந்ததன்மையாய் ; prendre ses — à son cou ஓடிப்போதல் ; par dessous la — காலின்கீழ், எளிதாய் ; — de force பிரதான கைம்மரம் ; — sous poutre உத்திரத்தைத் தாங்குங் கம்பம்.

Jambé, *adj.* காலுள்ள.

Jambette, *f.* சிறு கால், முடக்குஞ் சிறு கத்தி.

Jambier, ère, *adj.* காலுக்கடுத்த. ‖ *f.* guêtre.

Jambon, *m.* புகையில் வற்றலான —, வற்றற்பன்றித்தொடை.

Jambonneau, *m.* வற்றலான சிறு பன்றித்தொடை.

Janissaire, *m.* (துலுக்கிராயனுடைய) மெய்காப்பாளன்.

Janotisme, *m.* ஈரர்த்தங் கொடுக்கும்படியாக வசனத்தைப் புரட்டுதல்.

Jansénisme, *m.* ஜான்செனியுஸ் என்பவன் போதகம், — மதம். ‖ மிஞ்சின கண்டிப்பு.

Janséniste, *m.* ஜான்செனியுஸ் என்பவன் போதகத்தநுசாரி, —மதத்தான், மிஞ்சின கண்டிப்புள்ளவன்.

Jante, *f.* சக்கரச் சுற்றுக்கட்டை.

Jantille, *f.* ஷை கட்டைக்காதரவான பலகை.

Janvier, *m.* சனவரிமாசம்.

Japon, *m.* (ஆசியாவில்) ஜப்போன் தேசம், — தீவுகள், — தேசத்துப் பீங்கான்.

Japonais, e, *adj. et s.* ஜப்போன் தேசத்து, — தேசத்தான், ஜப்போனியன்.

Jappement, *m.* குலைப்பு.

Japper, *v. n.* குலைத்தல், குரைத்தல்.

Jaque, *f.* நெருக்கமான சட்டை :— de mailles கண்ணறைமார்க்கவசம். ‖ *m.* குப்பக்காட்டான். ‖ பலாப்பழம்.

Jaquemart, *m.* மணியடிக்கிறமனுவுருவம்.

Jaquette, *f.* சொக்காய், சுக்காய், சோடம், ஓர்வித —, பிள்ளைசட்டை.

Jaquier, *m.* பலாமரம்.

Jardin, *m.* தோட்டம், கொல்லை, செழிப்புள்ளநாடு : — potager கீரைத தோட்டம் ; — fruitier கனிமரத தோட்டம் ; — de fleurs பூந்தோட்டம், நந்தவனம் ; — de bétel கொடிக்கால்.

Jardinage, *m.* தோட்டவேலை, தோட்டத்தைப் பயிரிடும் வித்தை, தோட்டம், — ஆகப்பயிரிடுநிலம், ஓர் நிலத்திலடங்கிய பல தோட்டங்கள், தோட்டத்தில் விளையுங் கீரை பயறுமுதலியது.

Jardiner, *v. a.* தோட்டவேலை செய்தல்.

Jardinet, *m.* சிறு தோட்டம்.

Jardineux, se, *adj.* தெளிவற்ற (இரத்தினம்).

Jardinier, ère, *s.* தோட்டக்காரன், — காரி.

Jardinière, *f.* தாழ்ந்த சரிகைக் கைச்சட்டை, பூண்டின் பாத்திரம் வைக்குஞ்சாமான், பல கீரை காய் கிழங்குப்பதார்த்தம்.

Jardon, *m.* குதிரைக்காற்காய்ப்பு.

Jargon, *m.* கொச்சையான —, தெரியாதபாஷை, — பேச்சு, குழூஉக்குறி, இரகசியபேச்சு, பக்ஷிக்கத்து.

Jargonner, *v. a. et n.* கொச்சையாய்ப் பேசுதல், கத்துதல்.

Jargonneur, euse, *s.* கொச்சையாய்ப் பேசுகிறவன், — வள்.

Jarnac, *m.* (பிராஞ்சிராச்சியத்தில்) ஜர்நக்குநகர், சிறு கிறிசு.

Jarre, *f.* சாடி, தாழி, குடம், சால், சாளிகை, மட்டொட்டி.

Jarret, *m.* முழங்காலின் பின்புறம், பின்தொடை, பின்னங்கால், பின்னந்தொடை —, பின்கால் விசைநரம்பு, பின்கால் மடங்குமிடம். ‖ கால். ‖ (கட்டுகோப்பில்) தகாத பிதுக்கம்.

Jarreté, *adj.* பின்னங்காலுள் வளைந்த. ‖ ஷை பிதுக்கமுள்ள.

Jarreter, *v. a.* முழங்காற்கச்சை கட்டுதல். ‖ *v. n.* பிதுங்குதல், கோணமாயிருத்தல். ‖ se — தனக்கு முழங்காற் கச்சை கட்டுதல்.

Jarretière, *f.* முழங்காற்கச்சு, முழந்தாட்கச்சை. (இங்கிலீஷிராச்சியத்தில்) ஓரிராவுத்தர் சபையணி.

Jars, *m.* ஆண்வங்காளவாத்து. ‖ சூக்ஷமுள்ளது.

Jas, *m.* நங்கூரக்கட்டை.

Jaser, *v. n.* கத்துதல், அலப்புதல், வாயாடுதல், பசபசத்தல், இரகசியமறிவித்தல்.

Jaserie, *f.* கத்து, அலப்பு, பசபசப்பு.

Jaseur, — euse, *s.* வாயாடி, அலப்புக்காரன், — காரி. ‖ ஓர் பக்ஷி.

Jasmin, *m.* Jasminum, மல்லிகை, முல்லை, மாலதி, செலகம், மல்லிகைப்பூ, — பூபோட்டபொருள்: — angus-

tifolium முல்லை, காட்டுமல்லிகை, சிற்றுமல்லிகை;—auriculatum ஊசிமல்லிகை;— grandiflorum கொடி—, படர்—, சாதிமல்லிகை;—pubescens மகரந்தம் ;—sambac இருவாட்சி ; trichotomum முல்லைக்கொடி;— undulatum பேராமல்லி, — மல்லிகை ; — double குட மல்லிகை.

Jasminées, *f. pl.* மல்லிகையினப் பூண்டுகள்.

Jaspe, *m.* சலவை —, இரவாக்கல், புஸ்தகவாயிற் பூசும் பச்சை சிந்தூரக் கலப்பு. [ற, பலநிறமுள்ள.

Jaspé, *adj.* இரவாக்கல்லைப்போன்

Jasper, *v. a.* பலநிறமாக்குதல்.

Jaspure, *f.* பல்நிறமாக்குதல், — ஆயிருத்தல்.

Jatropha, ஆமணக்கு : — curcas கடல் —, காட்டு ஆமணக்கு ; — glauca ஆதளை, எலியாமணக்கு, எரிகளைக் காட்டாமணக்கு ;— manihot ou manioc மலைச்சர்க்கரை —, ஆள்வள்ளி.

Jatte, *f.* தாழி, சாடி, சால், பெரிய சட்டி.

Jattée, *f.* நிறைந்தசாடி, — சால்.

Jauge, *f.* பீப்பாவளவை, — அளவைக்கோல், மாதிரியான பீப்பா, வேண்டியதிட்டம், ஊற்றுத்தண்ணீரையளக்குந் துளைத்தபெட்டி, அளவுகோல், அளப்பதற்குரிய கருவி, அளவைக்காரன் தொழில், உழுகையில் விட்டவிடம்: mettre des arbres en — தற்காலத்துக்கு மரங்களை மண்ணில் வைத்தல்.

Jaugeage, *m.* பீப்பாவளத்தல், — அளக்குங்கூலி. [ல் —, அளத்தல்.

Jauger, *v. a.* ஷை அளவைக்கோலா

Jaugeur, *m.* ஷை அளவைக்கோலாலளக்கிறவன். [கிய.

Jaunâtre, *adj.* இளமஞ்சள் நிறமா

Jaune, *adj.* மஞ்சள் —, பொன்னிறமான : fièvre — காமாலைகூடிய காய்ச்சல், பித்தசுரம் || *m.* பொன் —, மஞ்சள் நிறம், பீதம், அரிதம் : — d'œuf மஞ்சட்கரு.

Jaunet, *m.* பொன்னாணயம்.

Jaunir, *v. a. et n.* பொன் —, மஞ்சள்நிறமாக்குதல், — ஆதல்.

Jaunissant, *part.* பொன்னிறமாகிற.

Jaunisse, *f.* மஞ்சட்காமாலை, காமாலை, பாண்டுரோகம், செங்கண்மாரி.

Jaunissement, *m.* மஞ்சளாக்குதல், மஞ்சள் நிறத்தன்மை.

Java, யாவம், யாவதீவு.

Javan (pays de) கிரீக்தேசம்.

Javart, *m.* குதிரைக்காலடி வீக்கம்.

Javeau, *m.* வெள்ளமுண்டாக்கின —, ஆற்றில் மணற்றிடர்.

Javelé, *adj.* அரியாய் நனைந்து தானியங்கறுத்த. [யாய் வைத்தல்.

Javeler, *v. a.* Javelage, *m.* அரி

Javeleur, *m.* அரியாய் வைக்கிறவன்.

Javeline, *f.* நெடும்வேல்.

Javelle, *f.* அரி, கட்டு, அரிக்கட்டு, — க்கைப்பிடி. || கொடிமுந்திரிகைக் கிளைக்கட்டு.

Javelot, *m.* வேல், கைவேல், எறியீட்டி, — படை, அஸ்திரம்.

Javotte, *f.* வாயாடிப்பெண்பிள்ளை, பேச்சுக்காரி.

Jayet, *V.* Jais.

Je, *pron.* நான், யான்.

Jean, *m.* அருளப்பன் ; Jeanne, *f.* அருளாயி.

Jeannette, *f.* அருளாயி : croix à la — கழுத்தில் முகமல் நாடாவினால் தொங்கிய பொற்சிலுவை.

Jécoraire, *adj.* *V.* Hépatique.

Jectisses, *adj.* *f. pl.* terres — கொண்டுவந்த—, பெயர்ந்தமண்: pierres — கையாற்போடத்தக்ககல்கள்.

Jéhovah, *m.* சுயம்பு, கடவுள், (எபிரேயபாஷையில், — எழுத்தால்) சர்வேசுரன் பேர்.

Jéjunum, *m.* சரிகுடர், மலக்குடர்.

Jérémiade, *f.* ஜெரெமியாஸ் என்ற தீர்க்கதரிசி பாடின துக்கப் பாட்டு. || அலட்டுள்ள முறைப்பாடு.

Jersey, (மான்ஷ் என்ற கடல்வாய்க்காலில்) ஜெர்சைதீவு.

Jérusalem, (பலெஸ்தின் நாட்டின் தலைமை நகரம்) எருசலேம். [நியாசி.

Jésuate, *m.* சேசுவத்தென்னுஞ் சந்

Jésuite, *m.* சேசுசபைச் சந்நியாசி.

Jésuitique, *adj.* சேசுசபைக்குரிய.

Jésuitiquement, *adv.* சேசுசபைக் குரியவிதமாய்.

Jésuitisme, *m.* சேசுசபையார் நடக்கை, — கோட்பாடு, — போதகத்தன்மை.

Jésus, *m.* சேசுநாதர், திவ்விய இரட்சகர். || *m. et adj.* நேத்தியான ஓர் கடுதாசி. || Jésus-Christ, *m.* சேசுகிறீஸ்துநாதர்.

Jet, *m.* எறி, எறிதல், போடுதல், எறிதூரம், வீச்சு. || பீரிட்டுப்பாய்தல், பீர். || துளிர், தளிர், முளை, ஓர் வருஷத்தளிர்ப்பு. || வார்ப்பு. || விசை, தரம். || தேனீக்களின் புது மொய்ப்பு. || காயெண்ணிக்கை ;—de pierre கல்லெறி, கல்லெறிதூரம், — d'eau பீரிடுநீர், சலசூத்திரம் ; — de sang பீரிடும் இரத்தம் ; —de marchandises சரக்குகளைக் கடலில் தள்ளுதல் ; — de filet வலைவீச்சு; canne d'un seul — ஒரேதளிர்ப் —, கணுவற்றரம்பு ; — de lumière ஒளிக்கதிர் வீச்சு ; statue coulée d'un seul — ஒருவிசையாய் வார்த்த சுரூபம் ; d'un seul — ஒருவிசையாய் ; du premier — முதல்விசையாய்.

Jeté, *m.* நடனநடை. || *part.* எறியப்பட்ட. [—, செய்கரை.

Jetée, *f.* அணை, அலைதாங்கி, கட்டு

Jeter, *v. a. et n.* எறிதல், போடுதல், தள்ளுதல், தள்ளிப்போடுதல் — விடுதல், எறிந்துவிடுதல், வீசுதல், எய்தல், தெறித்தல், பரப்புதல், சடுதியாய்ப் பிரவேசித்தல், வெளிவிடுதல். || துளிர்த்தல், தளிர்த்தல். || பீரிடுதல், சீறிடுதல், கழிதல். || உருக்கி —, வார்த்தல். || வெளியேவிடுதல். || வைத்தல், இடுதல், விடுதல். || படுத்துதல், உறுத்துதல். || அனுப்புதல், செலுத்துதல். || காயாலெண்ணுதல் : — un coup d'œil இலேசாய்ப் பார்த்தல், கண்பார்வையிடுதல் ; — les yeux sur நோக்குதல், கண்ணோக்குதல் ; — à la tête தலைக்கு எறிதல், முகத்துக்கு நேராய்ச் சொல்லுதல் ; — au sort திருவுளச் சீட்டு போடுதல் : le sort en est jeté தீர்மானமாச்சுது : — en fonte உருக்கிவார்த்தல் ; — son feu தன் கோபாக்கினி வெளிவிடுதல் ; — des racines வேரூன்றுதல். || se — பாய்தல், மேல்விழுதல், சேர்தல், ஒடுங்குதல், அடைக்கலமாய்ப்புகுதல், (நதி) கழிதல்.

Jeton, *m.* காய், உறை, சாரி, எண்ணிக்கைக்குதவுகிற —, குறிப்புச்சீட்டு.

Jettatura, *m.* (இத்தாலியில்) கண்திஷ்டி., கண்ணூறு.

Jeu, *m.* விளையாட்டு, உல்லாசம், சரசம், பரியாசம், கேலி, துள்ளாட்டம், ஆடல், ஆட்டம். || சூது, சூதம், பந்தயம்; சூதாடுமிடம், — கருவி, — பணம், — விதம். || (வீணை) வாசிப்பு, வேடிக்கை, அபிநயம். || தளர்ச்சி, ஆட்டம். || உபாயநடத்தை : — de hasard சூது ; — de dés சூதாட்டம், தாயம் ; — de cartes சூதாடுகடுதாசி ; — de gobelets செப்பிடு வித்தை ; donner beau — நல்லசமயங்கொடுத்தல் ; mettre en — தெரியாதவனை ஓர் காரியத்திற் புகுத்துதல் ; donner du — ஆட்டங்கொடுத்தல், தளர்த்துதல் : — publics, பொது —, பிரசித்த விநோத வேடிக்கை ; — lascif இலீலை ; — de mots சிலேடை, சிலேடாதீபம்.

Jeudi, *m.* வியாழக்கிழமை, குருவாரம் : — gras தபசுநாளைக்குமுந்தின வியாழக்கிழமை ; — saint பெரிய வியாழக்கிழமை. [ணியாய்.

Jeun (à) *adv.* உபவாசம் —, பட்டி

Jeune, *adj.* வாலிப, இள, இளம், இளைய, வாலிபமான, இளம்பிராயமுள்ள, யுவ, யௌவன. || அவிவேகம் —, துடுக்குள்ள, பரிட்சையில்லாத. || இளையவன். || — homme வாலிபன், இளவல் ;— femme வாலிபி, இளம்பெண் ; — plante இளம்பூண்டு.

Jeûne, *m.* ஒருசந்தி, உபவாசம், நோன்பு, பட்டினி.

Jeunement, *adv.* புதுசாய்.

Jeûner, *v. n.* ஒருசந்தி —, உபவாசமாயிருத்தல், ஒருசந்தி —. நோன்பு பிடித்தல், உபவசித்தல்.

Jeunesse, *f.* இளமை, வாலிபம், இளம்பிராயம், வால —, இளவயது, யௌவனம். || வாலிபர்.

Jeunet, *adj.* மிகவும் வாலிபமுள்ள.

Jeûneur, euse, *s.* ஒருசந்திபிடிக்கிறவன், — வள், உபவாசி, உபவாசன்.

Jingo, *m.* அந்நியதேச விவகாரங்களில் கடுமையாயிருப்பவன்.

Joaillerie, *f.* நகைவியாபாரம், — வேலை. [செய்பவன், பணித்தட்டான்.

Joaillier, ère, *s.* நகைவியாபாரி, —

Jobard, *m. et adj.* அவிவேக வாலிபன், மடையன், மூடன்.

Jobarder, *v. a.* ஏமாற்றுதல், வஞ்சித்தல்.

Jobarderie, *f.* பேதைமை, மடையத்தனம், பேதைமையுள்ள நம்பிக்கை.

Jockey, *m.* சிற்றூழியன், சிறு குதிரைக்காரன்.

Jocko, *m.* ஓர் பெருங் குரங்கு.

Jocrisse, *m.* மடையன், — ஆன எசமான், — ஆன ஊழியன்.

Johnius, (poisson), கற்றலை : — carutta கருங்கற்றலை; — aneus யானை கற்றலை.

Joie, *f.* சந்தோஷம், மகிழ்ச்சி, மகிழ்வு, அகமகிழ்ச்சி, களிப்பு, இன்ப ஆநந்தம், மனோரம்மியம், மனப்பூரணம் : se donner à cœur — de quelque chose ஓர் காரியத்தை மிகவுஞ் சந்தோஷத்தோடநுபவித்தல். ‖ feu de — சந்தோஷங்கொண்டாட மூட்டப்படும் நெருப்பு.

Joignant, *part.* அடுத்த... ‖ *prép.* கிட்ட, அருகில்.

Joindre, *v. a.* சேர்த்தல், கூட்டுதல், இணைத்தல், இசைத்தல், பொருத்துதல், பிணைத்தல், கலத்தல், தொகுத்தல், சேர்த்சல், அடுத்தல். ‖ *v. n. ou* se — சேர்தல், கூடுதல், இசைதல், பொருந்துதல், அடுத்தல், அடைபடுதல்.

Joint, *part.* சேர்ந்த, கூடின, இசைந்த, கூட்டின : à mains — கைகூப்பி, — குவித்து.

Joint, *m.* மூட்டு, சந்து, பொருத்து.

Jointé, *adj.* காலடியுள்ள.

Jointée, *f.* இருகைகூடக் கொள்வது.

Jointif, ive, *adj.* சேர்ந்த, இசைந்த.

Jointoiement, *m.* Jointoyer, *v. a.* சந்தடைத்தல்,

Jointure, *f.* மூட்டு, சந்து, பொருத்து, குழைச்சு, பூட்டு, கணு.

Joli, *adj.* அழகிய, நேத்தியான, சுந்தரம் —, சவுந்தரியம் —, அந்தம் —, அழகுள்ள, இலக்ஷணம் —, பிரியம் —, வடிவான, சிறந்த. ‖ பிரயோசனம் —, இலாபமுள்ள. ‖ (பகிடியாய்) அவலக்ஷணம் —, பிரிய வீனமான, கேலிக்குரிய, கெட்ட. ‖ *m.* அழகு —, பிரியம் —, வினோதம் —, சிறப்பானது.

Joliet, ette, *adj.* கொஞ்சமழகுள்ள.

Joliment, *adv.* அழகாய்; நேத்தி —, அந்தம் —, இலக்ஷணம் —, சூக்ஷமாய், நன்றாய். ‖ (பகிடியாய்) கெட்டவிதமாய், வெகுவாய்.

Joliveté, *f.* விளையாட்டுடைமை, சரசம், நகை.

Jonc, *m.* நாணல், கோரை, சரம். ‖ பிரம்பு. ‖ வெறுமோதிரம் : — odoriférant வசம்பு.

Joncacées, *f. pl.* நாணலினப் பூண்டுகள்.

Jonchaie, *f.* நாணல் வளரிடம், கோரை நிறையிடம்.

Jonchée, *f.* பரப்பு, தரையிற் பரப்பினது. ‖ மிகுதி, திரள். ‖ (நாணற்குடையிற்செய்த) பாற்கட்டி.

Joncher, *v. a.* பரப்புதல், போடுதல், சிதறுதல், தூவுதல், சிந்துதல். ‖ மூடுதல். ‖ பரப்பி —, சிதறியிருத்தல், கிடத்தல்.

Jonchets, *m. pl.* விளையாட்டுக்கோல்.

Jonction, *f.* ஒன்றிப்பு, சந்தி, சேர்மானம், சேர்க்கை, பொருத்து, இசைப்பு, கூடல், சந்திப்பு, சங்கம், (நதிகள்) கூடுமிடம்.

Jongler, *v. n.* மாயவித்தை —, சித்துசெய்தல்.

Jonglerie, *f.* மாயை, சித்து, கண்கட்டு —, செப்பிடு —, மாயவித்தை.

Jongleur, *m.* மாயக்காரன், சித்தன், காருடன், செப்பிடு வித்தை —, உபாயதந்திரக்காரன், திரிகிற புலவன், — வாத்தியக்காரன்.

Jonque, *f.* தோணி, சிறு கப்பல், சலங்கு.

Jonquille, *f.* ஓர் பூண்டு, அதின் பூ, அதின் பூவின் மஞ்சள் நிறம்.

Joseph, *m.* சூசை, சூசையப்பர், மெல்லிய கடுதாசி.

Jouable, *adj.* விளையாடக்கூடிய.

Jouailler, *v. n.* சிறுபந்தயமாமகச் —, கொஞ்சஞ் சூதாடுதல்.

Joubarbe, *f.* ஓர் புல்.

Joue, *f.* கன்னம், தாடை, கதுப்பு, கவுள். ‖ கப்பலடியின் பக்கங்கள்: donner sur la — கன்னத்திலறைதல்.

Jouée, *f.* (சன்னலிடத்தில்) படிமான சுவர்.

Jouer, *v. a. et n.* விளையாடுதல், ஆடுதல், உல்லாசம் —, பரியாசஞ் செய்

தல். || சூதாடுதல், பந்தயம்போடுதல். || (நாடகம்) ஆடுதல், நடத்தல். || (வாத்தியம்) வாசித்தல், ஊதுதல், கொட்டுதல். || நகைத்தல், பாவித்தல், கோலமாடுதல். || வஞ்சித்தல், எத்துதல் : — du bâton கோலால் சிலம்பமாடுதல் ; — de la prunelle நோக்குதல், கண் சயிக்கினைசெய்தல் : — de malheur பலியாதிருத்தல், தோர்வையாதல் ; — au plus fin சூக்ஷவுபாயங்களைப் பிரயோகித்தல் : — à se faire pendre தூக்கப்படுவதற்கு ஏதுவாதல் ; faire — le canon பீரங்கிசுடுதல் ; faire — toutes sortes de ressorts உபாயமெல்லாஞ் செய்தல் ; — une roupie ஓர் ரூபாய் பந்தயம் போடுதல் ; — la comédie நாடகமாடுதல், பாசாங்குசெய்தல் ; — un tour கபடம் —, மோசஞ்செய்தல், எத்துதல் ;— sa vie உயிருக்காபத்துண்டாக நடந்துகொள்ளல். || se — விளையாடுதல், பரியாசம் —, கேலி பண்ணுதல், நகைத்தல், விளையாட்டுபோலெண்ணுதல், நிந்தித்தல், இகழ்தல், எத்துதல், வஞ்சித்தல், எதிர்த்தல்.

Jouet, *m.* விளையாட்டுடைமை, கேலி, பரியாசம், இகழ்ச்சி, பழிப்பு, அலைக்கழிவு. || சிறுசங்கிலி.

Joueur, — euse, *s.* சூதன், சூதாடுகிறவன், சூதாடி, விளையாட்டுக் குணமுள்ளவன், ஆடுகிறவன் : — d'instruments வாத்தியக்காரன், (வீணைமுதலியதை) வாசிக்கிறவன், குழலூதுகிறவன் ;— de gobelets செப்பிடுவித்தைக்காரன்.

Joufflu, *adj. et s.* பெருங்கன்னமுள்ள, — உள்ளவன்.

Joug, *m.* நுகத்தடி, நுகம். || ஆதீனம், அடிமைத்தனம, சிறை. || நுகவீட்டி, (செயிக்கப்பட்டவர்கள் அதின்கீழ் செலுத்தப்படுவார்கள்): mettre au — ஏரிற்பூட்டுதல் ; mettre sous le — கீழ்ப்படுத்துதல் ; secouer le — அடிமைத்தனந் தள்ளுதல்.

Jouir, *v. n.* அநுபவித்தல், சுகித்தல், நுகர்தல், கொண்டிருத்தல், வாழுதல், போகித்தல், சந்தோஷித்தல்.

Jouissance, *f.* அநுபவம், சுகிப்பு, அநுபோகம், இன்பம், சந்தோஷம்.

Jouissant, *part.* அநுபவிக்கிற, கொண்டிருக்கிற.

Jouisseur, euse, *s.* சந்தோஷத்தை மாத்திரம் நாடுகிறவன்,— வள்.

Joujou, *m.* விளையாட்டுடைமை.

Jour, *m.* (de 24 heures) நாள், தினம் ; (opposé à nuit) பகல், பொழுது, வெளிச்சம் ; (de la semaine) கிழமை, வாரம் ; (du mois) தேதி, திகதி ; (lunaire,) திதி ; (anniversaire) திவசம். || கெடு. || திறப்பு, சன்னல். || வழி, உபாயம், வகை. || பிளப்பு, நீம்பல், கமர். || உயிர், சீவியகாலம் ; point du — விடியல், விடியற்காலம் ; nuit et jour இரவும் —, அல்லும்பகலும் ; — fixé கெடு ; mettre au — உயிர்கொடுத்தல், பெறுதல், வெளியாக்குதல் ; prendre— கெடுவைத்தல், நாள் குறித்தல் ; tous les — தினந்தினம், — தோறும், அநுதினமும், நித்தமும் ; de — en — நாளுக்குநாள் : chaque — அநுதினம் ; se faire — வழிதிறத்தல், விடிதல்.

Jourdain, *m.* யொர்தான் நதி.

Jourd'hui, *m.* இன்று, இந்நாள்.

Journal, *m.* தினக்குறிப்புப் —, தினவரவுசெலவு —, கணக்குப்புஸ்தகம், தினசரித்திரம், — வர்த்தமானம், நாளாகமம், பஞ்சிகை. || சமாச்சார —, சங்கதிப்பத்திரிகை. || ஓர் நில்த்தளவை. || *adj.* நாட்குறிப்பு — கணக்குள்ள : livre — தினவரவுசெலவு புஸ்தகம்.

Journalier, *m.* கூலிக்காரன், (நாள்) கூலியாள் : petit — சிற்றாள் : quart, moitié, trois quarts de — காலாள், அரையாள், முக்காலாள் ; — entier முழு ஆள், முழாள்.

Journalier, ère, *adj.* அநுதின, தினத்து, வழக்கமான. || நிச்சயம் —, நிலையற்ற, மாறுகிற.

Journalisme, *m.* தினச்சங்கதியெழுதும் வேலை, — எழுதுபவர் செல்வாக்கு, அவர்கள் அபிப்பிராயம்.

Journaliste, *m* தினச்சங்கதியெழுதுகிறவன், சங்கதிப் பத்திரிகைக்காரன்.

Journée, *f.* தினம், நாள், — வேலை, — கூலி, — பயணம், விசேஷகாரியஞ் சம்பவித்தநாள், சண்டைநாள், யுத்தம்.

Journellement, *adv.* நாள் —, தினந்தோறும், தினந்தினம், அநுதினமும்.

Joute, *f.* (வேடிக்கைக்கான) குதி

ரை வீரருடைய தனிப்போர், சலத்தின் மேல்சண்டை, போர், சண்டை, போராட்டவிடம், தருக்கம், வியாச்சியம்.

Jouter, *v. n.* ஷை போராடுதல், பொருதல், வருந்துதல், தருக்கித்தல்.

Jouteur, *m.* போராடுகிறவன், எதிராளி, தருக்கசாலி.

Jouvence, *f.* வாலிபம் ; fontaine de — வாலிபமாக்கு நீரூற்று (கதை).

Jouvenceau, *m.* வாலிபன், வாலன்.

Jouvencelle, *f.* வாலிபி.

Jovial, e, *adj.* சந்தோஷம் —, களிப்புள்ள.

Jovialement, *adv.* மகிழ்ச்சி —, களிப்பாய், மகிழ.

Jovialité, *f.* சந்தோஷத்தன்மை.

Joyau, *m.* நகை, ஆபரணம், அணி, பணிதி, பூணாரம்.

Joyeusement, *adv.* சந்தோஷமாய்.

Joyeuseté, *f.* பகிடி, பரியாசச்சொல்.

Joyeux, euse, *adj.* சந்தோஷ, சந்தோஷம் —, களிப்புள்ள, — வருவிக்கிற, — காட்டுகிற, மகிழ்ச்சிக்குரிய.

Jubé, *m.* கோவிலின் மேடை, — மேல்தட்டு ; venir à — கீழ்ப்படிதல்.

Jubilaire, *adj.* ஜூபிலே சம்பந்தமான. [கொண்டாட்டம், விருந்து.

Jubilation, *f.* மகிழ்ச்சி, களிப்பு,

Jubilé, *m.* யூபிலே. (யூதரில்) விடுதலின் —, மீட்பினாண்டு, ௫௰-ம்வருஷத்துக்குப்பின் வரும்: (கிறீஸ்துவர்களில்) யூபிலே, விசேஷ பரிபூரணபலன் : faire son —, gagner le — ஷை பரிபூரணபலனையடைதல், — யடைவதற்குக் குறிக்கப்பட்ட நற்கிரியைகளைச் செய்தல்.

Jubiler, *v. a.* சந்தோஷிப்பித்தல், ஊழியமின்றி அரைச்சம்பளக்காரனாக்குதல். || *v. n.* சந்தோஷித்தல், அகமகிழ்தல். [(குதிரை). || *part.* குந்தின.

Juché, *adj.* கால்நுனிமேல் நடக்கிற

Jucher, *v. n. ou* se — *v pro.* (பக்ஷி) குந்துதல், தங்குதல், குந்தி —, படிந்திருத்தல். || உயரத்தில் தங்குதல், — வசித்தல். [ல், — இடம்.

Juchoir, *m.* (கோழி) குந்துங்கோ

Judaïque, *adj.* யூத, யூதருடைய, அர்த்தம்புரட்டுகிற : pierres— கல்லான கிளிஞ்சில்.

Judaïser, *v. n.* யூதரைக் கண்டுபாவித்தல், யூதமதமநுசரித்தல். || வஞ்சித்தல், உயர்விலையாய் விற்றல்.

Judaïsme, *m.* யூதர்மதம்.

Judas, *m.* யூதாஸ் என்பவன். || குருத் —, துரோகி. || மேல் தளத் துவாரம். || poil de — சிவப்புமயிர். || baiser de — துரோகியின் நேசம், துரோகியின் முத்தம்.

Judée, *f.* யூதேயா —, பலெஸ்தின் தேசம்.

Judicatum solvi, பிராதுக்குமுன் கொடுக்கவேண்டிய ஈடு, — சாமீன்.

Judicature, *f.* நடுவனுத்தியோகம், — அதிகாரம், — தொழில்.

Judiciaire, *adj.* நீதிமுறையாகிய, நடுவரின், வழக்கின், நீதியின், தீர்ப்பின், நீதிச்சேர்ந்த : genre — பிராதுக்கடுத்த வாசாலவகை ; pouvoir — நீதி செலுத்துமதிகாரம். || *f.* ஞானம், புத்தி, விவேகம்.

Judiciairement, *adv.* நீதிமுறையின்படியே.

Judicieusement, *adv.* விவேகம்—, புத்தியாய்.

Judicieux, *adj.* விவேகம் —, புத்தி —, உணர்வுள்ள, நியாயமான.

Jugal, *m.* செவிக்கடுத்தகவர் நரம்பு.

Juge, *m.* நடுவன், நீதிக்காரன், — கர்த்தன், நியாயாதிபதி, நீதியதிபதி, நியாயக்காரன், மத்தியஸ்தன், பஞ்சாயத்தான் : les — நடுவர் —, எழாம் ஆகமம்.

Juge de paix, *m.* சமாதான நடுவன்.

Jugeable, *adj.* தீர்வைக்கேதுவான, தீர்க்கத்தக்க.

Jugement, *m.* தீர்வை, தீர்ப்பு, தீர்மானம், நியாய —, நீதி —, நடுத்தீர்ப்பு. || எண்ணம், உத்தேசம், யோசனை, நினைவு, கருத்து. || உணர்வு, விவேகம், விமரிசை, சூக்ஷபுத்தி ; — de Dieu தேவதீர்வை, தனிப்போரால் —, அக்கினியாலாகிற குற்றச்சோதனை (தகாது).

Jugeote, *f.* போதுமான புத்திசாலித்தனம், மிதமான அறிவு.

Juger, *v. a. et n.* தீர்த்தல், தீர்வையிடுதல், நியாயந் —, நடுத்தீர்த்தல், தீர்மானித்தல். || நிதானித்தல், உத்தேசித்தல், நினைத்தல், எண்ணுதல் : au —

உள்ளதுபோல, செய்யவேண்டியபடி. || se — மதிக்க —, தீர்க்கப்படுதல்; தன்னைமதித்தல்.

Jugulaire, *adj*. தொண்டைக்கடுத்த. || *f*. தொண்டைநாடி, (மீன்) தொண்டைச்சிறகு, மோவாய்க்கட்டைக்கீழ்க்கச்சு.

Juguler, *v. a.* தொண்டையறுத்தல், — நெரித்தல், வாதித்தல், அலட்டுதல்.

Juif, ive, s. யூதன், *m*. யூதச்சி, *f*. அநீதவட்டிக்காரன், உயர்விலையாய் விற்பவன்.

Juillet, *m*. சுலாயிமாதம், அதில் ஆனியும் ஆடியுங் கலந்துவரும்.

Juin, *m*. ஜுன்மாசம், அதில் வைகாசியும் ஆனியுங் கலந்துவரும்.

Juiverie, *f*. யூதர்வீதி, வட்டிவியாபாரம்.

Jujube, *f*. இலந்தம்பழம், — கனி.

Jujubier, *m*. இலந்தை, இலந்தமரம், சூரை, அதிதாரம்.

Julep, *m*. தணிக்கும் —, அநுபானம்.

Julien, nne, *adj*. யூல் செசாருடைய, — முறையான : année — யூல் செசார்முறையான வருஷம், ௩௬௫-நாளும் ஆறுமணியுங்கொள்ளும்; ère—யூல் செசாரால் பஞ்சாங்கத்திருத்தமுண்டான வருஷம், கிறீஸ்துவருஷத்துக்குமுன் ௪௬-ம் வருஷமாம் ; période—௭௯௮௰ வருஷவட்டம்.

Julienne, *f*. ஓர் பூண்டு, பலகீரை கிழங்காணம்.

Jumeau, elle, s. *et adj*. இரட்டைப்பிள்ளையானவன், — ஆனவள், — ஆன, இரட்டை —, சோடான: frères — இரட்டைப்பிள்ளையான சகோதரர்; — muscles இரட்டைநரம்புகள். || *m. pl.* மிதுனராசி, (தொடையின்) இரட்டைநரம்புகள், இரட்டைவாலைகள்.

Jumeler, *v. a.* இரட்டைக்கட்டைபோடுதல்.

Jumelles, *f. pl.* இரட்டைக்கட்டை, உறுதிக்காகக் கட்டுந்துணை —, உதவிக்கட்டை, இரட்டைக்கண்ணாடி, இரட்டைப்பிள்ளைகளான பெண்கள்.

Jument, *f*. கோளிகை, பெட்டைக்குதிரை, வடவை.

Jungle, *f*. காடு, ஆரண்யம்.

Junior, *m*. இளைய, சின்ன.

Junon, *f*. ழூனோன் என்பவள், — என்னுங் கிரகம்.

Junte, *f*. ஆலோசனைச் சங்கம்.

Jupe, *f*.
Jupon, *m*. பெண்ணுள்ளங்கி, பெண்ணுடை.

Jupiter, *m*. யூப்பித்தேர் என்பவன், — என்னும் பொய்த்தேவன். || வியாழம், குரு. || வெள்ளீயம்.

Jura, *m*. (பிராஞ்சுதேசத்தில்) ழூரா என்னுமலை, — ஜில்லா.

Jurande, *f*. கூட்டத்துப்பெரியதனம், — தனக்காலம்.

Juratoire, *adj*. ஆணை —, சத்தியமுள்ள, — ஆகிய.

Juré, *part*. ஆணையிடப்பட்ட, தலைமைக்காணையிட்ட, வேண்டிய சத்தியஞ்செய்த, எப்போதைக்கும் ஆணையிட்ட, தீராத : ennemi — தீராதபகையாளி. || *m*. கூட்டத்துத் தலைவன். || நடுவன், மத்தியஸ்தன், நடுவனாக நியமிக்கப்பட்ட குடி.

Jurement, *m*. ஆணை, சத்தியம். || திட்டு, சாபனை, தேவதூஷணம்.

Jurer, *v. a. et n.* சபதம் —, ஆணையிடுதல், ஆணையிட்டு நிச்சயித்தல், — வார்த்தைப்பாடு கொடுத்தல், — மிரட்டுதல், உறுதிவார்த்தைப்பாடு கொடுத்தல், வாக்குத்தத்தம் —, சத்தியம் —, பிரமாணிக்கம் —, நம்பிக்கை பண்ணுதல், தீர்மானித்தல். || தேவதூஷணஞ்சொல்லுதல், திட்டுதல், சபித்தல். || (பூனை) சீறுதல், அவசத்தங்கொடுத்தல், இசையாது — பொருந்தாதிருத்தல் ; — par, — sur பேரில் ஆணையிடுதல். || se — ஆணையிட்டு ஒருவனொருவனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்தல்.

Jureur, *m*. ஆணையிடப்பழகினவன், ஆணையிட்டவன்.

Juridiction, *f*. நடுவன் —, அதிகாரம், — செல்லுமிடம், நீதிவிசாரணை எல்லைமானம், நீதியாசனம், ஞானதிகாரம், விசாரணை.

Juridictionnel, elle, *adj*. அதிகாரத்துக்கடுத்த.

Juridique, *adj*. நீதிமுறை — சட்டம் — ஒழுங்கான, நீதிவிசாரணையின்.

Juridiquement, *adv*. நீதிமுறையாய்.

Jurisconsulte, *m*. நியாய —, நீதிசாஸ்திரி, நீதிவல்லோன்.

Jurisprudence, *f.* நீதி—, தரும—, நியாய சாஸ்திரம்.

Juriste, *m.* நீதிநூலாசிரியன், நியாய சாஸ்திரி.

Juron, *m.* ஆணை, சாபனை.

Jury, *m.* நடுவராகிய குடிகளின் கூட்டம், மத்தியஸ்தர், விசேஷவிசாரணைச் சங்கம்.

Jus, *m.* சாரம், சாறு, இரசம், குழம்பு.

Jusant, *m.* வற்றம், வடிவு.

Jusée, *f.* பழைய மரப்பட்டை யூறின நீர்.

Jusque, *prép.* மட்டும், மட்டுக்கும், வரைக்கும், தனையும், பரியந்தம் : — à வரைக்கும், முதலாய் ;— ici இம்மட்டும், இதுவரைக்கும் ;— là அம்மட்டும், அதுவரைக்கும் ;— où எவ்விடமட்டும், எங்கே—, எதுவரைக்கும், எந்த நேரமட்டும் ; jusqu'à ce que vous veniez நீர்வருமட்டும், — வருகிறபரியந்தம்.

Jusquiame, *f.* ஓர் நச்சுப்பூண்டு :— noire குராசாணி யோமம்.

Jussiée, *f.* Jussiena repens நீர்க்கிராம்பு; —suffruticosa காட்டுக் கிராம்பு.

Jussion, *f.* கட்டளை, கற்பனை.

Justaucorps, *m.* நெருக்கமான சட்டை.

Juste, *adj.* நீதி—, நியாயம்—, நாணயம்—, நிறையுள்ள, பரிசுத்த. || நேரான, செம்மையான. || சரி —, திட்டம்—, சுமுத்திரையான, பிழையற்ற. || பொருந்துகிற, தக்க, தகுந்த, ஏற்ற. || நெருக்கமான. || s. நீதிமான், புண்ணியவான். || நியாயமானது, நீதியுள்ளது, நிதானம். || குப்பக்காட்டானாடை. || *adv.* சரி—, நியாயம்—, திட்டமாய். || au — சரி—, திட்டமாய்.

Justement, *adv.* நீதி—, நியாயம் —, சரி—, திட்டமாய், நேராய், சந்தேகமற, அதுதான்.

Juste-milieu, *m.* சரிநடு, நடுநிலை,— நிலையநுசரிக்கிறவன்,— யநுசரிக்கிற.

Justesse, *f.* சரியான—, திட்டம், தகுதி, சுமுத்திரை, சீர், பொருத்தம், பிரமாணம்.

Justice, *f.* நீதி, நீதம், நடுநிலை, நீதிநெறி, தருமம், உரியது. || நியாயம், நாணயம், பரிசுத்தத்தனம், நல்லொழுக்கம். || நடுவர், அதிகார எல்லைமானம், ஆக்கினை : se faire— தனக்காக்கினையிடுதல், பழிவாங்குதல் ; rendre la — நடுவனாயிருத்தல், நீதிசெலுத்துதல் ; faire — ஆக்கினையிடுதல் ;— commutative வியாபாரமாற்ற விற்பனைக்கடுத்த நீதி ; — distributive வெகுமானமாக்கினை யளிக்கும் நீதி.

Justiciable, *adj. et s.* நீதியிலுத்தரவாதத்துக் கேதுவான, நியாயத் தீர்வைக் கேதுவான, நீதியாசனத்துக்குக் கீழ்ப்பட்ட,— பட்டவன்.

Justicier, *v. a.* தீர்வையின்படியே யாக்கினையிடுதல்.

Justicier, *adj. et s.* நீதி செலுத்து மதிகாரி,— அதிகாரமுள்ள, நீதிசெலுத்த விரும்புகிறவன்.

Justifiable, *adj.* நியாயம்—, நல்லதென்னத்தக்க.

Justifiant, *part.* நீதிமானாக்குகிற : grâce — நீதிமானாக்குகிற—, தேவஇஷ்டப்பிரசாதம்.

Justificateur, *m.* (அக்ஷரங்களை) ஒரோமட்டம் —, திட்டமாக்குகிறவன், — ஆக்குங் கருவி.

Justificatif, ive, *adj.* உண்மை —, நியாயங்காட்டுகிற, — ஒப்பிக்கிற.

Justification, *f.* நியாயங்காட்டுதல், குற்றமில்லாதவன்—, குற்றமில்லையென்றொப்பித்தல், அத்தாட்சி. || நீதிமானாக்குதல், பாவ நிவாரணம். || வரியின்—, எழுத்தின் திட்டம், சரிப்பிரமாணம்.

Justifier, *v. a.* மெய்ப்பித்தல், நியாயமென்று—, நல்லதென்று—, சரியென்று—, உண்மை—, நியாயங் காட்டுதல், குற்றமில்லையென்று—, ஒப்பித்தல், எண்பித்தல், காட்டுதல். || நீதிமான்—, பரிசுத்தமாக்குதல். || சரிமட்டம் —, சரியாக்குதல், திட்ட —, சரிப்படுத்துதல். || se — தன்பேரிற் குற்றமில்லையென்றொப்பித்தல், சரியாதல், திட்டப்படுதல்.

Justitia, ஓர் பூண்டு : — acaulis நிலக்கடம்பு, எம்புகம் ; — adhadota ஆடாதோடை : — betonica வேலிமூங்கில் ; — ecbolium அடுக்கு பாச்சொற்றி ; — echioides கோபுரந்தாங்கி ; — gandarussa கருநொச்சி ; — madurensis பறட்டைக்கீரை :— nasuta நாக—, உரகமல்லிகை: —paniculata நிலவேம்பு ; — procumbens கோடகசாலை, ஆரம்.

Jute, *m.* சணல்.

Juteux, —euse, *adj.* இரசம்—, சாரம்—, சாறுள்ள. [தில்) ஜூட்லந்து நாடு.

Jutland, *m.* (தன்மார்க்குதேசத்

Juvénile, *adj.* வாலிபத்து.

Juxtalinéaire, *adj.* வரிக்கு நேராய் அல்லது அதன்கீழ் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும், நேரில் அல்லது கீழ் எழுதப்பட்டுள்ள உரையை உடைத்தாயிருக்கும்.

Juxtaposer, *v. a.* கிட்டவைத்தல், — சேர்த்தல், கூட்டுதல். || se — கிட்டச்சேர்தல், கூடுதல்.

Juxtaposition, *f.* கிட்டச்சேர்தல், சேர்மானம், அயனிலை.

K

K, *m.* பதினோராம் எழுத்து.

Kabin, *m.* (மகம்மது) மதத்தாருள் சிலகாலத்துக்கான விவாகம்.

Kchatria, *m.* க்ஷத்திரியன்

Kacy, *m.* (அப்பிரிக்காவில்) படவாகத்தக்க—, கசிமரம்.

Kadappa கடப்பை (நகர்.)

Kæmpferia rotunda நேர்ப்பிசின், பூமி சம்பகம் : — galanga கிச்சிலிக்கிழங்கு.

Kaiser, *m.* ஜெர்மன் சக்கரவர்த்தி.

Kakatoès, *m. V.* Cacatois.

Kaki, *m.* ஓர்வகை மஞ்சள் துணியின் நிறம்.

Kaléidoscope, *m.* பற்பல வடிவங்களைக் காட்டுங் குழாய்.

Kali, *m.* ஓர் பூண்டு.

Kâli, *f.* காளி, — என்பவள், இந்துக்களில் ஓர் துஷ்டதேவதை.

Kaliyouga, *m.* கலியுகம், இந்துக்களின் நாலாம் யுகம்.

Kamichi, *m.* (தென் அமேரிக்காலில்) ஓர் பெரிய கருங்குருவி.

Kamtschatka, *m.* (ஆசியாவின் வடகிழக்கில்) காம்ஷஸ்காதேசம்.

Kan, *m. ou* **Khan**, (தர்த்தரிதேசத்தில்) அரசன், பிரபு, தலைவன், கோன். || கடை,—வீதி. || பயணக்காரர் கூட்டமிளைப்பாறுமிடம். [வின் நாடு.

Kanat, *m. ou* **Khanat**, ஷை பிரபு

Kandy, கண்டி (நகரம்.) [கிரீசு.

Kangiar, **Kandjar**, *m.* குற்றுவாள்,

Kanguroo, **Kangurou**, *m.* (புதுஒல்லந்துதீவில்) ஓர் மிருகம்.

Kanoudje, கண்ணியகுப்சம் (நகர்.)

Kaolin, *m.* பீங்கானாவதற்குரிய மண்.

Karatas, *m.* ஓர்வித கற்றாழை.

Kat-chérif, *m.* துலுக்கிராயனிட்ட கட்டளை.

Kéfir, *ou* **Képhır**, *m.* புளிப்பான வாயுபானம்.

Kent, *m.* (இங்கிலீஷ்தேசத்தில்) கெண்டுநாடு.

Kentucki, *m.* (ஐக்கியதேசங்களில்) கெந்த்துக்கி நாடு.

Képi, *m.* பிராஞ்சு இராணுவ வீரர் தொப்பி.

Kermès, *m.* சிவப்புச்சாயந் தரும் மரத்துப் பூச்சி.

Kermesse, *f.* வேடிக்கை சேர்ந்த சந்தை.

Ketch, *m* இருபாய்மரக் கப்பல்.

Ketmie, *V.* Hibiscus.

Kibitka, *m.* நாலுருளைவண்டி.

Kilkaré, கீழ்க்கரை (நகர்).

Kilo, (சேர்க்கைச்சொற்களில்) ஆயிரம். || *ou*

Kilogramme, *m.* ஆயிரங்கிறாமிடை, ஈரிராத்தலிடை.

Kilolitre, *m.* ஆயிரம் லீத்திரளவை.

Kilomètre, *m.* ஆயிர மேத்திரளவை, ஏறக்குறைய அரைநாழியாம்.

Kina, *m. V.* Quinquina.

King, *m* (சீனாதேசத்து) திருப்புஸ்தகம், ஓர் வாத்தியக்கருவி.

Kiosque, *m.* தோட்டவலங்கார பந்தல்.

Kirsch, **Kirsch-wasser**, *m.* ஓர்வித சாராயம்.

Kleptomanie, *f. ou* Cleptomanie, *f.* திருட்டுவெறி.

Knout, *m.* தடியடி, சவுக்கடி, சவுக்கு.

Kodicarei, கோடிக்கரை, கள்ளிமேடு.

Kœnigsberg, (புறுஸ்தேசத்தில்) கெனிஸ்பேர்கு நகர்.

Kola, *ou* **Cola**, *m.* ஆப்பிரிக்காகண்டத்து ஓர்வகை மரம், அதன்கொட்டை.

Konkan, *m.* கொங்கணநாடு,— நாட்டான்.

Konkani, *m.* கொங்கணம், கொங்கணப்பாஷை. || கொங்கணியன்.

Kongou, *m.* (இந்துதேசத்தில்) கொங்கு நாடு.

Kopeck, *m.* (ருசியதேசத்து) துட்டு, 4 காசு பெறும்.

Kopje, *m.* குன்றுகளுக்கும் மேடுகளுக்கும் டிரான்ஸ்வால்தேசத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பேர்.

Koran, *m.* *V.* Alcoran.

Kouan, *m.* செந்தூரமிடும் விதைப்பூண்டு.

Krach, *m.* வர்த்தகத்தில் முறிவு,— பெரு நஷ்டம்.

Kreutzer, *m.* (அல்மஞ்தேசத்து) துட்டு, 4 காசு பெறும்.

Krichna, *m.* கிருஷ்ணன்,— என்பவன்,— என்னும் பொய்த்தேவன். || கிருட்டிணை, கிருட்டிணா நதி.

Kronprinz, *m.* ஜெர்மன்தேசத்து இளவரசர்.

Kummel, *m.* ஓர்வகை மதுபானம்.

Kyllengia monocephala, பசுங்கோரை.

Kyrie,—eleison, *m.* சுவாமீ கிருபையாயிரும்,— இரும்என்கிறமந்திரம், அதைப் பாடுங் காலம், அதினிராகம்.

Kyrielle, *f.* பிரார்த்தனை || நெடுந்தொடர்ச்சி.

Kyste, *m.* பித்தநிறைபை.

Kystique, *adj.* ஷை பைக்கடுத்த.

Kystotomie, Kystéotomie, Kystiotomie, *f.* ஊற்றும் பெட்டியைச் சத்திரமிடல்.

L

L, *m.* *ou f.* பன்னிரண்டாம் எழுத்து. || (கணக்கக்ஷரங்களில்) 50, ஐம்பது.

La, *art.* ஆனவள், ஆனது. || *pro.* அவளை, அதை. || *m.* ஆறுஞ்சுரம், த.

Là, *adv.* அங்கே, அவ்விடத்தில், தான், அது : d'ici là இங்கேயிருந்து அதுவரைக்கும், அதுக்குள்ளாக; de — அங்கேயிருந்து, அவ்விடத்தினின்று, அதினால், அதைப்பற்றி ; de çà de — அங்கங்கே, இருபுறத்திலும் ; là-dessus அதின்பேரில்,— பின், அதைக்குறித்து, ஆதலால் ; dès là அப்போதுவக்கி, அதிப்படியிருக்க ; par là அவ்வழி —, அவ்விதமாய், அவ்விடத்தில், அதினால் ; par-ci par-là பலவிடங்களில், அங்கங்கே, பலமுறை ; cet homme-là அந்த மனுஷன் ; c'est là tout சகலமும் அதுதான் ; là, en voilà assez, அதுவே போதும்.

Là là, *int.* மிரட்டுதற்குந் தேற்றுதற்குமுரிய இடைச்சொல், அடா, ஆ அ. || மத்திபமாய்.

Labarum, *m.* அதிசய சிலுவைக் கொடி.

Labelle, *f.* உதட்டு வடிவான கீழிதழ்.

Labeur, *m.* வேலை, பிரயாசம், வருத்தம், உழைப்பு, தண்டிப்பு, அலுவல். || மிகுந்த பிரதியாயச்சடிக்கும் பெரிய புஸ்தகம்.

Labial, e, *adj.* உதட்டு, உதடுகளுக்கடுத்த, உதடுகளாலுச்சரிக்கப்படும் (எழுத்து).

Labié, *adj.* ஓர மிரண்டிதழாகப் பிரிந்த (பூ) : Labiées, *f. pl.* இரண்டுதடுகளாய்ப் பிரிந்த பூவுள்ள பூண்டினம்.

Labile, *adj.* பிரமாணிக்கக்குறைவு—, தப்புள்ள, எளிதாய் மறக்கிற.

Laboratoire, *m.* இரசவாத சாலை, கம்மாலை, வடிப்புமுதலிய வேலைகளுக்கு உலைகளுள்ளவிடம்.

Laborieusement, *adv.* பிரயாசம்—, வருத்தமாய்.

Laborieux, euse, *adj.* பிரயாசி, உழைப்பாளி, பிரயாசப்படுகிற, வேலைப்பிரியம்—, சாக்கிரதையுள்ள, உழைக்கிற, வருந்துகிற, பிர்யாசம்—, உழைப்புள்ள, வருத்தம்—, அருமையான.

Labour, terre de — (நாப்பிளிராச்சியத்தில்) லபூர்நாடு.

Labour, labourage, *m.* உழவு, கொத்து, உழுதல், சால், கிருஷம், கிருஷி, உழும் வித்தை, உழவன் வேலை, பயிரிடுதல், கமத்தொழில்.

Labourable, *adj.* உழவுக்குரிய, பயிரிட—, உழத்தக்க.

Labourer, *v. a. et n.* உழுதல், பயிரிடுதல், கிருஷி —, கமஞ்செய்தல், சாலடித்தல், கொத்துதல், மண்வெட்

டுதல், வருந்துதல், உழைத்தல் : — le papier வருத்தமா யெழுதுதல் ; — sa vie தன் சீவியகாலத்தில் மிகவும் வருந்துதல், இடையூறுபடுதல் ; — les vins கப்பலினின்று இரசப்பீப்பாக்களை யிறக்குதல் ; un vaisseau — கப்பலடிபடுதல், — தொடுதல் ; l'ancre — நங்கூரமுழுதல்,— பிடியாதிருத்தல்.

Laboureur, *m.* உழவன், பயிரிடுகிறவன், குடியானவன், வெள்ளாளன், கிருஷிகன், மேழியன், பூவைசியன்.

Labrador, *m.* (வட அமேரிக்காவில்) லபிரதோர் நாடு.

Labre, *m.* ஓர் மீன். || வண்டுகளின் மேலுதடு.

Labyrinthe, *m.* முடியாத சுற்றுச் சுழற்சி, முடிவகப்படாத சுழற்சி, ஷை சுழற்சியுள்ள அரமனை,— சோலை, அருமையான சிக்கு, சிக்கறுக்கப்படாதவருத்தம், காதின் சுழற்சி, ஓர் நத்தை.

Lac, *m.* ஏரி, தடாகம். || *P.* Lack.

Laccifère, *adj.* அரக்கு உற்பத்தியாகும் செடிகள்.

Lacer, *v. a.* நாடா மாட்டுதல், — இறுக்குதல், கட்டுதல், (இருபாய்களைச் சிறுகயிற்றால்) ஒன்றாய்ச் சேர்த்தல். || (நாய்) புணர்தல்.

Lacération, *f.* கிழிப்பு, *ou*

Lacérer, *v. a.* கிழித்தல், பீறுதல், துண்டித்தல்.

Laceron, *m. V.* Laiteron.

Lacertiens, *m. pl.* Lacerta, (lézard), — cristata ஓணன் :— gecko கெவுளி ; — interpunctata அரணை.

Lacet, *m.* நாடா, சரடு. || கண்ணி, வலை, சுருக்கு, — முடிச்சு, — கயிறு, கழுத்து நெரிப்பதற்குரிய கயிறு : bout de — en métal தும்பலடைசி. || *m. pl.* பாசித்திரள், வலைகள். || நெளிதல்.

Laceur, *m.* வலைசெய்பவன்.

Lâchage, *m.* ஒருவனைக் கைவிட்டு விடுதல்.

Lâche, *adj. et s.* தளர்ந்த, தளர்ச்சியான, இறுக்கம் —, நெருக்கமற்ற, இழுக்கப்படாத. || கோழை, — த்தனமுள்ள,— உள்ளவன், தைரியம்—, வீரம்—, சாக்கிரதை—, ஊக்கம்—, வேகமில்லாத,— இல்லாதவன், அசட்டை —, சோம்பலுள்ள, — உள்ளவன், உரோசங்கெட்ட, நீசம்—, அயோக்கிய, வெட்கத்துக்குரிய. || *adv.* தளர்ச்சியாய்.

Lâché, *part.* விடப்பட்ட, தளர்ந்த.

Lâchement, *adv.* கோழைத்தனம் —, சோம்பல் —, அசட்டை —, நீசமாய், மானந்தப்பி, உரோசமின்றி.

Lâcher, *v. a.* தளர்த்துதல், இளக்குதல், நெகிழ்த்தல். || கழித்தல், பிரித்தல், கட்டவிழ்த்தல், கை—, விடுதல், கைந்நெகிழ்தல், விட்டு —, ஓட —, வடியவிடுதல். || பாய—, போகவிடுதல், அனுப்புதல், பின்துடர —, மேலே விடுதல், — செலுத்துதல். || கொடுத்தல் : — la bonde, l'écluse தூம்பு திறத்தல் ; — prise கைவிடுதல் ;— la main தன்னுரிமை—, விடுதல் ;—pied பின்வாங்குதல், ஓடிப்போதல் ; — un mot ஒருவார்த்தைசொல்லுதல், — வெளிவிடுதல் ; — le mot தீர்ப்பான வார்த்தை சொல்லுதல் ; — un coup de fusil துப்பாக்கி சுடுதல்; —un soufflet ஒரு அறையறைதல். || *v. n.* தளர்தல், விசைதப்பிச் சுடுதல். || se — தளர்தல், அதப்பியஞ்சொல்லுதல், அவிவேகமாய்ப்பேசுதல்.

Lâcheté, *f.* கோழைத்தனம், தைரியக்கேடு, வீரமின்மை, பெண்மை, சோம்பல், அசட்டைத்தனம். || நீசத்தனம், அயோக்கியமான —, அடாத —, நீசகிரியை.

Lacinié, *adj.* ஒழுங்கற்றகருக்குள்ள [(இலை).

Lacis, *m.* நூல் —, பட்டுவலை, பின்னலான மெல்லிய —, உதிரநரம்புகள்.

Lack, *m.* லக்ஷம், நூறாயிரம்.

Laconie, *f.* லசெதெமோன் தேசம்.

Laconique, *adj.* சுருக்கம் —, அடக்கமான, சுருக்கமாய்ப் பேசுகிற.

Laconiquement, *adv.* சுருக்கம்—, அடக்கமாய்.

Laconisme, *m.* சொல்லடக்கம், சுருக்கமான வசனநடை.

Lacrymal, e, *adj.* கண்ணீருக்குரிய, — அடுத்த.

Lacrymatoire, *adj.* கண்ணீரின், கண்ணீருக்குரிய. || *m.* கண்ணீர்ப் பாத்திரம்.

Lacs, *m.* சிறு கயிறு, சுருக்கு, — முடிச்சு, கண்ணி, வலை, சிக்கு, கலக்கம், மயக்கு, மயக்கம், கெட்ட பழக்கம்.

Lactaire, *adj.* பால் சம்பந்தமான, ஓர்வகை காளான்.

Lactation, *f.* பால் ஊட்டுதல், — கொடுத்தல்.

Lacté, *adj.* பால்நிறமான, பாலுக்கடுத்த, பாலொத்த : vaisseaux — அன்னரசத்தாரைகள் ; fièvre — பாற்காய்ச்சல் ; diète — பால்மாத்திரஞ் சாப்படு பத்தியம் ; voie — பால்வீதிமண்டலம்.

Lactescent, *adj.* பால்போன்ற, — தன்மையுள்ள, — நிறசாறுள்ள.

Lactifère, *adj.* பால்செலுத்துகிற, — நிறசாறு நிறைந்த.

Lactique, *adj.* புளித்தபாலின்.

Lactose, *f.* பாலின் இனிப்பு, பாலிலுள்ள சர்க்கரை.

Lacune, *f.* இடையிலுள்ள குறைச்சல், குறைவு, புஸ்தகத்தில் குறைவிடம், துவாரம்.

Lacustre, *adj.* ஜலத்தில் அல்லது ஜலத்தின்மேல் வளர்ந்துகொண்டுவரும் அல்லது கட்டப்பட்டுள்ள.

Ladre, *adj. et s.* குஷ்டமுள்ள, சுவரணையற்ற, உலோபி.

Ladre, esse, *s.* குஷ்டரோகி, உலோபி.

Ladrerie, *f.* குஷ்டம். || குஷ்டரோகி மடம், — கிடங்கு. || பிசுனித்தனம்.

Lady, *f.* துரைசானி.

Lagon, *m.* கடலின்மணல் சூழுஞ் சின்ன ஏரி.

Lagopède, *m.* ஓர் பக்ஷி.

Lagophthalmie, *f.* மேற்கண்ணிமைசுருக்கு நோய்.

Lagune, *f.* சதுப்பு, — நிலம், — க்குட்டை.

Lahore, *m.* லாகோர் (நகர், நாடு).

Lai, *m.* முறைப்பாடு, துக்கப்பாட்டு, புலம்பல்.

Lai, e, *adj. et s.* குருவல்லாத, பட்டமில்லாத, *ou* frère — குருப்பட்டமில்லாத —, துணைச் சந்நியாசி: sœur — துணைச்சகோதரி, பணிவிடைமடத்தாள்.

Laîche, *f.* கூர்மையான நீர்ப்பூண்டு.

Laïcisation, *f.* Laïciser, *v. a.* துறவறத்தாருக்குப் பதிலாய் இல்லறத்தாரை ஸ்தாபித்தல்.

Laïcité, *f.* வேதபோதகமற்றதன்மை, நாஸ்திகம்.

Laid, e, *adj. et s.* அவலக்ஷண, சீர் —, அந்தங்கெட்ட, அழகில்லாத. || வெட்கத்துக்குரிய, அதப்பிய. || அவலக்ஷணமுள்ளவன், — ஆனது.

Laidement, *adv.* அந்தக்கேடாய்.

Laideron, *f.* கொஞ்சமவலக்ஷணமான ஸ்திரீ.

Laideur, *f.* அவலக்ஷணம், அந்தக்கேடு.

Laie, *f.* காட்டுப்பன்றிப் பெட்டை. || நெருக்கமான காட்டுவழி. || கற்றச்சன் சுத்தியல்.

Lainage, *m.* ஆட்டுமயிர், — மயிர்ச்சரக்கு, — மயிர்ப்புடைவை பன்னல்.

Laine, *f.* ஆட்டுமயிர், காப்பிரிகளின் சுருண்ட தலைமயிர்.

Lainer, *v.a.* ஆட்டுமயிர்ப்புடைவை பன்னுதல்.

Lainerie, *f.* ஆட்டுமயிர்ச்சரக்கு, — புடைவை.

Laineux, euse, *adj.* ஆட்டுமயிருள்ள, — போன்ற, சுணையுள்ள.

Lainier, *m.* ஆட்டுமயிர் வியாபாரி, — தொழிலாளி.

Laïque, *adj. et m.* குரு —, சந்நியாசியல்லாத, — அல்லாதவன், வெறுங்கிறீஸ்துவன்.

Laird, *m.* (எக்கொஸ்தேசத்து) துரை, காணியாட்சிக்காரன்.

Lais, *m.* (காடுவெட்டுகையில்) வெட்டாமல் விட்டமரம். || சலம் ஒற்றிவிடுமிடம்.

Laisse, *f.* நாய்க்கயிறு, தொப்பியின் நாடா, சிறுகயிறு, கடலொற்றிவிடு நிலம்.

Laissées, *f. pl.* காட்டுமிருகப் புழுக்கை, எரு.

Laisser, *v. a.* விடுதல், விட்டு —, கைவிடுதல், — நெகிழ்தல். || ஒப்பித்தல், இடுதல், கொடுத்தல், கொடுத்து —, மறந்து —, இழந்துவிடுதல், இழத்தல். || ஓட்டுதல், இடங்கொடுத்தல், உடன்படுதல், சம்மதித்தல், சொல்லாமல் விடுதல்; — ses biens சாகும்போது சொத்துகளை எழுதிவைத்தல் ; — sa vie பிராணனை இழத்தல் ; — voir காட்டுதல், வெளிக்குக்காட்டுதல் ; — faire உத்தரவுகொடுத்தல், செய்யச்செய்தல் ; — quelqu'un tranquille தொந்தரவு செய்யாமலிருத்தல் ; — à désirer விரும்ப

விடுதல், குறைவாயிருத்தல் ; — à penser நினைப்பதற்கு இடங்கொடுத்தல் ; il n'a pas laissé de venir ஆயினுமவன் வராமல் விடவில்லை, இப்படியிருந்தாலும் வந்தான் ; il n'a pas laissé que de travailler ஆயினுமவன் வேலைசெய்யாமல் விடவில்லை. || se — எச்சரிக்கையற்றிருத்தல், ஒட்டுதல், தன்னைவிடுதல், பாத்திரமாயிருத்தல் ; se—aller à ses goûts தன்னாசைகளுக்கு இடங்கொடுத்தல் ; se — mourir சாதல் ; se — battre தோர்வைப்படுதல். || *m.* விடுதல்.

Laisser aller, *m.* அசட்டை, இளக்காரம், கட்டுப்பாடின்மை, தளர்ச்சி, எளிதானதன்மை, விடுதலை, ஒடுக்கமின்மை.

Laissez-passer, *m.* போகும்படியாக எழுத்துப்பட உத்தரவு கொடுத்தல்.

Lait, *m.* பால், அமுதம், அமுது, (பூண்டுகளின்) பால், வெண்சாரம், — சாறு : — caillé தயிர், த[illegible] ; — de beurre மோர், மச்சிகை, தக்கிரம் ; — coupé தண்ணீர் கலந்தபால் ; frères de — ஒரே பெண்பாலுண்டவர்கள் ; veau de — பாலுண்கிற கன்று ; vache à — கறவை, பால்கொடுக்கிற பசு, இடைவிடாத பிரயோசனங்கொடுக்கிற ஆள், — பொருள் ; — de poule தண்ணீரிற் கரைந்த மஞ்சள் கரு.

Laitage, *m.* பாற்பதார்த்தம் ; பால், ஆடை, வெண்ணெய், பாற்கட்டி முதலியது.

Laitance, Laite, *f.* (ஆண்மச்சத்து) சினை.

Laité, *adj.* ஷை சினையுள்ள.

Laiterie, *f.* பாலறை, பாற்கிடங்கு, — கடை, பால்வியாபாரம்.

Laiteron, *m.* பால்நிறை பூண்டு.

Laiteux, euse, *adj.* பாலுள்ள, — போன்ற, பாலால் வருகிற.

Laitier, *m.* கிட்டம், (உருகின உலோகத்து...) வெள்ளைக் —, வெண்கிட்டம்.

Laitier, ère, *s.* பாற்காரன், — காரி || *adj.* மிகுந்த பாலுள்ள.

Laiton, *m.* பித்தளை, — க்கம்பி.

Laitue, *f.* ஓர் கீரை.

Laïus, *m.* உபன்னியாஸம்.

Laize, Laise, *f.* இருவிளிம்பினுள்ளகலம்.

Lama, *m.* (திபேத்துதேசத்து) குரு. ஓர்வித ஒட்டை : grand — பிரதான குரு.

Lamanage, *m.* துறைமாலுமிவேலை, — தொழில்.

Lamaneur, *m.* துறைமாலுமி.

Lamantin, *m.* ஓர்வித நீர் நாய்.

Lamaserie, *f.* லாமா குருக்கள் மடம்.

Lambeau, *m.* துண்டு, கந்தை, கண்டம், துண்டம், பிரிந்த பங்கு.

Lambel, *m.* ஓர்வித உடைவு, பலவிளிம்பு.

Lambin, e, *adj. et s.* தாமத —, சோம்பற்காரன், — காரி.

Lambiner, *v. n.* தர்மதித்தல், தாமதஞ்செய்தல், சோம்பலாய் நடத்தல், வீணாய் நேரம்போக்குதல்.

Lambourde, *f.* உத்திரம், தம்பம், கடைசியடுக்கின் மெதுவான கல். || நுனியிலரும்புள்ள சிறு கிளை.

Lambrequins, *m. pl.* (முகடாலுதற்குரிய) மர —, தகட்டு நறுக்கு.

Lambris, *m.* மச்சு, பாவுபலகை, அதைப் பாவிக்கிறதாள், மச்சுக்குப்பதிலாய்ப் பூசின சுண்ணாம்பு, வீட்டின் உட்சோதிப்பு : — céleste வானம் ; — — d'appui சுவரடியின் பாவுபலகை.

Lambrissage, *m.* மச்சிடுகிற வேலை.

Lambrissé, *part.* மச்சுள்ள, — பாவின.

Lambrisser, *v. a.* மச்சிடுதல், மச்சுபோடுதல், — பாவுதல், மச்சுக்குப் பதிலாய்ச் சுண்ணாம்பு பூசுதல்.

Lambrisseur, *m.* மச்சுபாவுகிறவன்.

Lambruche, Lambrusque, *f.* காட்டுத்திராட்சம், —க்கொடிமுந்திரிகை, அதின்பழம்.

Lame, *f.* (உலோகத்) தகடு, கம்பி. || அலகு, கத்தி. || அலை, திரை. || இதழின் அகன்றமேற்புரம் : c'est une bonne — அது நல்ல கத்தி, கத்தியை நன்றாயாடுகிறான் ; fine — கூர்ந்த கத்தி, சூக்ஷக்காரன்.

Lamé, *adj.* பொன் —, வெள்ளித் தகடுள்ள, — கம்பியுள்ள (புடவை).

Lamelle, *f.* சின்ன கத்தி.

Lamelleux, euse, *adj.* தகடுள்ள.

Lamellicornes, *m. pl.* தகடுபோன்ற கொம்புள்ள வண்டுகள்.

Lamentable, *adj.* பிரலாபத்துக்குரிய, பரிதாபத்து, புலம்பலுக்குரிய, புலம்பத்தக்க.

Lamentablement, *adv.* பிரலாபமாய், துக்கச்சத்தமாய்.

Lamentation, *f.* புலம்பல், புலம்பு, பிரலாபம், பரிதாபம், அழுகை, அரற்றல், பெருமூச்சு, துக்கப்பாட்டு.

Lamenter, *v. a.* குறித்துப் புலம்புதல், பரிதபித்தல், துக்கமாய்ப் பாடுதல். || se — புலம்புதல், பரிதபித்தல், பிரலாபித்தல், அரற்றுதல்.

Lamie, *f.* ஓர்வித பேய், — சுறா மீன், — வண்டு.

Lamier, *m.* ஓர் பூண்டு.

Laminage, *m.* Laminer, *v.a.* தகடு சமம் —, தகடாக்குதல்.

Laminerie, *f.* தகடு அல்லது கம்பி யிழுக்கும் வேலைசெய்கிற ஆலை.

Lamineur, *m.* (புடைவைக்குப் பொன் வெள்ளி) தகடாக்குகிறவன்.

Lamineux, *adj.* சின்ன கத்தியுருவமான.

Laminoir, *m.* தகடாக்குங் கருவி.

Lampadaire, *m.* தீவத்திக்காரன், விளக்குத்தாங்கி.

Lampadophore, *m.* (திருச்சடங்குகளின்) தீவத்திக்காரன்,—தரிக்கிறவன்.

Lampas, *m.* குதிரையுண்ணாவீக்கம், தொண்டை, சீனப் பட்டுப்புடைவை.

Lampassé, *adj.* நாப்புறப்படுகிற, —ப்படுகிறதாய் எழுதிய.

Lampe, *f.* விளக்கு, தீபம், தீபிகை : — suspendue தூக்குவிளக்கு ; — de terre அகல், தகளி.

Lampée, *f.* இரசநிறைந்த பானப் பாத்திரம்.

Lamper, *v. n. et a.* ஷை பாத்திரங் [குடித்தல்.

Lamperon, *m.* விளக்கின் மூக்கு, விளக்குத் திரிதாங்கி.

Lampion, *m.* சிறு விளக்கு.

Lampiste, *m.* விளக்கு செய்பவன், — விற்பவன்.

Lampourde, *f.* ஓர் வண்டு.

Lamprillon, *m.* அசரை மீன்,

Lamproie, *f.* விலங்குபோன்றகடல் மீன், ஆரால்.

Lampyre, *m.* மின்மினி, கச்சோதம்.

Lancastre, (இங்கிலீஷ்தேசத்தில்) லங்கஸ்தர் நகர், — நாடு.

Lance, *f.* ஈட்டி, சவளம், நெடும் வேல், வல்லையம். || கொடியின் கோல், தடி, தண்ணீர்மேல் போராடு நெடுந் தடி. || ஓர் சத்திரக் கத்தி, ஈட்டிவடிவான உற்கை. || ஈட்டிக்காரன் : baisser la — கீழ்ப்படிதல், தன் தோர்வையொத்துக்கொள்ளுதல் ; rompre une — avec ஓடுபோராடுதல், தர்க்கித்தல் ; rompre des — pour ஒருவனையாதரித்தல்;—à feu தடிநுனியில் வைத்த வாணம்.

Lancement, *m.* *ou* Lançage, *m.* கடலில் கப்பல் விடுதல்.

Lancé, *part.* எய்த, வீசின, எய்ய —, எறிய —, வீசப்பட்ட.

Lancéolé, *adj.* ஈட்டிவடிவான.

Lancer, *v a.* எய்தல், எறிதல், வீசுதல், தள்ளுதல், பாய்ச்சுதல், போடுதல், விடுதல், புறப்படச்செய்தல், ஓட்டுதல் ; — un cheval குதிரையையோட்டுதல், — ஓடுவித்தல். || se — பாய்தல், பிரவேசித்தல், நுழைதல்.

Lance-torpille, *m.* முழுகு கப்பல் விடுங்கருவி.

Lancette, *f.* சத்திரக்கத்தி, . சத்திரம்.

Lancier, *m.* ஈட்டிக்காரன், —ச்சேவகன், — தரிக்கிறராவுத்தன்.

Lancinant,e,*adj.* குத்துகிற(நோய்).

Landau, *m.* ஓர்வித விரதம், (அல்மஞ்தேசத்தில்) லந்தோநகர்.

Landaulet, *m.* சின்ன லாண்டோ வண்டி.

Lande, *f.* பாலை, வெறுஞ் செடிவிளை நிலம். || *pl.* (புஸ்தகத்தில்) சலிப்பான விடஙகள்: les — (பிராஞ்சுதேசத்தில்) லாந்தென்னும் ஜில்லா.

Landgrave, *m. f.* (அல்மஞ்தேசத்தில்) லாந்த்கிறவென்னும் பிரபு, — பிரபுவின் பெண்சாதி.

Landgraviat, *m.* ஷை பிரபுவின் ஆளுகை, — துலாத்தனம், ஷை பிரபு ஆளுந்தேசம்.

Landier, *m.* அடுப்பு விறகுதாங்கி.

Landtag, *m.* ஜெர்மனிதேசத்தில் தேசாலோசனை சங்கம்.

Landwehr, *f.* (அல்மஞ்தேசத்தில்) நாட்டுக்காவற்சேவகர், — குடிகள்.

Laneret, *m.* ஆணிராசாளி.

Langage, *m.* பேச்சு, பாஷை, வசனநடை, பேசும்வகை, — மாதிரி, பயில், சாடை, (மிருக —, பக்ஷிக்) கத்து : — par signes ஊகிபாஷை, ஊமைப்பயில், சர்டை.

Lange, *m.* குழந்தைதுணி, — சீலை.

Langoureusement, *adv.* அயர்வாய், சோர்வாய்.

Langoureux, euse, *adj. et s.* சோர்வு —, அயர்வுள்ள, — உள்ளவன் : faire le — அயர்வு —, நேசங் காட்டுதல்.

Langouste, *f.* கடல்நண்டு, ஓர் கிளி.

Langoutti, *m.* கோமணம், குளி—, நீர்ச் —, தாழ்சீலை.

Langue, *f.* நாக்கு, நா, நாவு, சிங்குவை, தாலு. || பாஷை, பேச்சு. || சனம், தேசம். || அகலமற்ற துண்டு. || ஓர் சத்திரக் கருவி : — bien pendue, bien affilée தாராளமுள்ள நாக்கு ; avoir de la — மிகவும் பேசுதல் ; dénouer, délier la — நாக்கவிழ்த்தல், பேசுவித்தல் ; se mordre la — தன் நாக்கு கடித்தல், மனஸ்தாபப்படுதல் ; tirer la — நாக்கை நீட்டுதல், தன்னவசரத்தை வெளிப்படுத்துதல் ; coup de — நாவின் குத்து, கோள், குண்டணி ; — mère தாய்ப்பாஷை — dérivée வேறேபாஷையினின்று பிறந்தபாஷை ; — maternelle சன்மபாஷை ; — originale மூலபாஷை; — vivante வழங்குகிறபாஷை ; — morte வழங்காத —, பழையபாஷை; — sainte எபிறேய பாஷை ; enfants de — கீழ்த்திசைப் பாஷைகளைப் படிக்கிறமாணுக்கர் ; prendre — சமாச்சாரங்களை —, சேதிகளை விசாரித்தல்; —de terre சலஞ்சூழு மகலமற்ற பூமித்துண்டு ; — de bouc, de cerf, de chien, de serpent பல பூண்டுகளின் பேராம்.

Languedoc, *m.* (பிராஞ்சுதேசத்தில்) லாங்க்தொக்கு நாடு.

Languedocien, enne, *adj. et s.* ஷை நாட்டு, — நாட்டான், — நாட்டாள்.

Languette, *f.* சிறு நாக்கு, அகலமற்ற —, மெல்லியநெடுந் துண்டு, கீதக் கருவித்துலையடை குச்சு, புகைத்துவாரத்தின் சின்ன பிரிவு ; — de balance தராசுநாக்கு, — முள் ; — de serrure பூட்டின் நாக்கு.

Langueur, *f.* அயர்வு, சோர்வு, களை, தளாச்சி, தளர்வு, சோம்பு, சோகம், ஆயாசம், பலவீனம், அசட்டை, வாட்டம், மெலிவு.

Languéyage, *m.* Languéyer, *v.a.* பன்றி நாக்கு பரிசோதித்துப் பார்த்தல்.

Languier, *m.* புகைந்தபன்றிநாக்கு, — கழுத்து.

Languir, *v. n.* தளர்தல், அயர்தல், இளைத்தல், மெலிதல், சோர்தல், வாடுதல், ஆயாசமாயிருத்தல், வருத்தப்படுதல், மயங்குதல், வேகமற்று —, தைரியமற்று —, வாடிப்போதல், பலவீனமாதல், உபேட்சை —, அசட்டையாயிருத்தல். || தவித்தல், ஆசையால் அயர்தல், சோகித்தல்.

Languissamment, *adv.* தளர்வு—, சோர்வு —, அசட்டையாய்.

Languissant, *part.* தளர்ந்த, சோர்ந்த, தளர்வு —, சோர்வு —, அயர்வு—, களை —, மெலிவு —, சோம்பு —, அசட்டையுள்ள, பலம் —, ஊக்கம்—, வேகமற்ற.

Laniaire, *adj.* பக்கத்து (பல்).

Lanice, *adj.* ஆட்டுமயிரின், — மயிராலான.

Lanier, *m.* ஒரிராசாளி.

Lanière, *f.* வார், — க்கச்சு.

Lanifère, *et* Lanigère, *adj.* ஆட்டுமயிர் —, பஞ்சுள்ள.

Laniste, *m.* கத்திமல்லயுத்தர் வாத்தி, — வியாபாரி.

Lansquenet, *m.* (அல்மஞ்தேசத்து) பதாதி, ஓர் சூது.

Lanterne, *f.* விளக்கு —, தீபக்கூடு. || கும்மட்டமேல் தூபிகை, பிள்ளைத்தோம்பு. || வீட்டின்மேல் கண்ணாடிபோட்ட சட்டம். || மறைப்புள்ள அறை. || சக்கரக்கூடு. || *pl.* வீண் கதைகள் : — sourde மறைவுள்ள தீபக்கூடு, மாயைத் தீபக்கூடு: —vénitienne பலவருண காகிதங்களால் செய்யப்பட்ட இலாந்தர்; — magique பொருள்களைப் பெரியதாய்க் காட்டும் கண்ணாடி போட்ட இலாந்தர்.

Lanterner, *v. a.* வீண்பேச்சினால் —, அலட்டுதல். || நாளுக்குநாள் பின்

போடுதல், ஏய்த்தல். || *v. n.* தத்தளித்தல், ஐயப்படுதல், தாமதித்தல், வீண்நேரம் போக்குதல்.

Lanternerie, *f.* வீண்பேச்சு, — கதை.

Lanternier, *m.* விளக்குக்கூடு செய்பவன், — விற்பவன், — கொளுத்துகிறவன், — விசாரிக்கிறவன். || வீண்பேச்சு —, கதைக்காரன்.

Lanturlu, Lanturelu, *m.* இது நம்பாத பேச்சு, நிந்தையுள்ள மறுப்பு, ஓர் சூது.

Lanugineux, euse, *adj.* சுணை —, பஞ்சுள்ள.

Laon, (lan) (பிராஞ்சுதேசத்தில்) லான் நகர்.

Laonnais, *adj.* ஷை நகரத்து, — நகரத்தான்.

Lapalissade, *f.* அதிக தெளிவான உண்மை.

Laparotomie, *f.* வயிற்றில் இரணவைத்தியர் செய்யும் கீறல்.

Laper, *v. a.* Lapement, *m.* நக்கிக்குடித்தல்.

Lapereau, *m.* குழிமுசற்குட்டி.

Lapidaire, *m.* இரத்தினஞ் சாணை பிடிக்கிறவன், இரத்தினவியாபாரி, மணி —, கல்லிழைக்கிறவன். || *adj.* style — கல்மேலெழுத்துக்கடுத்த (வசனநடை).

Lapidation, *f.* கல்லெறிகொலை, கல்லெறிந்துகொல்லுதல்.

Lapider, *v. a.* கல்லெறிந்துகொல்லுதல், கல்லாலெறிதல், — கொல்லுதல். || விரோதித்தல், கொடுமையாய்க் கோபித்தல், — திட்டுதல்.

Lapidification, *f.* கல்லாதல்.

Lapidifier, *v. a.* கல்லாக்குதல். || se — கல்லாதல்.

Lapidifique, *adj.* கல்லாக்குதற்குரிய.

Lapilli, *m. pl.* எரிமலை கொப்புளிக்கிற சாம்பல்.

Lapin, *m.* குழிமுசல் : — angora வெள்ளை —, சீமைமுசல்.

Lapine, *f.* குழிமுசற்பெட்டை.

Lapis, lapis-lazuli, *m.* நீலரத்தினம், இராசாவர்த்தம், சிலாஞ்சனம். || இள நீலநிறம்.

Lapon, onne, *adj. et s.* லப்பொனிதேசத்து, — தேசத்தான்.

Laponie, *f.* (ஐரோப்பாவடக்கில்) லப்பொனிதேசம்.

Laps, *m.* (நாள்) வட்டம், காலநடை.

Lapse, *adj.* விழுந்த, பதிதனான, சத்தியவேதத்தை மறுதலித்த.

Lapsus, *m.* பிசகு.

Laptot, *m.* காப்பிரி சேவகன்.

Laquais, *m.* குற்றேவலாள், பதாதி ஊழியன், சிற்றூழியன், சொக்கப் பையன்.

Laque, *f.* அரக்கு, துப்பு, செம்பிசின், — மெழுகு, இரத்தாம்பர வன்னம். || *m.* சீனாமினுக்கெண்ணெய், ஷை எண்ணெய்பூசின சாமான்.

Laquelle, *f. de* Lequel.

Laquer, *v. a.* சீனாமெழுக்கெண்ணெய் பூசுதல்.

Laqueux, euse, *adj.* அரக்குத் தன்மை — நிறமுள்ள.

Laraire, *m.* (அஞ்ஞான) வீட்டுத் தேவர்களின் சிறு கோவில்.

Larcin, *m.* திருட்டு, களவு. || திருட்டுடைமை, சோரகவி, நூல்பங்கின பகரிப்பு : faire un — திருடுதல், களவாண்டல்.

Lard, *m.* உப்பிட்ட பன்றி —, பன்றிக்கொழுப்பு, திமிங்கிலக்கொழுப்பு : faire du — கொழுத்துப்போதல், காலமே வெகுநேரந் தூங்குதல் ; gras à — மிகவுங் கொழுத்த.

Lardé, *part.* பன்றிக்கொழுப்பு குத்தின, — குத்திவிட்ட, — நிறைந்த, — மூடப்பட்ட.

Larder, *v.a.* பன்றிக்கொழுப்பு குத்துதல், — உட்புகுத்துதல், — குத்திவிடுதல், பலவிடத்திற் குத்துதல், உருவுதல், நிறைத்தல். || அலட்டுதல், வாதித்தல்.

Lardeux, se, *adj.* பன்றிக்கொழுப்பு எராளமாயுள்ள, ஷை கொழுப்பைப் போன்ற.

Lardoire, *f.* பன்றிக்கொழுப்புப் புகுத்துஞ் சலாகை.

Lardon, *m.* பன்றிக்கொழுப்புத் துண்டு. பகிடிச் —, குத்துசொல்.

Lardonner, *v. a.* பகிடிபேசுதல், குத்துச்சொல் உபயோகித்தல்.

Larenier, *m.* சாரலகற்றுங் கட்டை, — பலகை.

Lares, *m. pl.* அக்கியானிவீட்டுத்

தேவர்கள், குலபொய்த் தேவர்கள். || வீடு, வாசம். || *adj*. un dieu — அஞ்ஞானவீட்டுத் தேவன்.

Large, *adj*. அகன்ற, அகலமான, தாராளம் —, விஸ்தாரம் —, விசாலம் —, விரிவான, நெருக்கமற்ற. || எளிதான, பெரிய, மிருதுவான : conscience—நெருக்கமற்ற —, அஞ்சாத மனச்சாட்சி. || *m*. அகலம், நடுக்கடல், செல்வம் : prendre, gagner le — நடுக்கடலுக்குப்போதல், ஓடிப்போதல். || *adv*. விசாலம் —, விரிவாய் : au — விசாலமாய், நடுக்கடலில், செல்வத்தில், விலக ; mettre au — அவகாசமிடுதல், செல்வத்தில் வைத்தல், இளக்காரங் கொடுத்தல் ; en long et en — எப்பக்கத்திலும், எங்கேயும் ; en — அகலத்தில்.

Largement, *adv*. விரிவாய், அகலமாய். || ஏராளம் —, உதாரம் —, தாராளம் —, மிகுதியாய்.

Largesse, *f*. உதாரம், தானம், தியாகம் : — de loi நாணயத்தில் கட்டளைக்கு மிகுதியான இடை.

Largeur, *f*. அகலம். || விசாலம், விரிவு.

Largo, *adv*. மெதுவாய், மெள்ள.

Largue, *adj*. மெள்ளநடக்கிற, எளிதாய் நடவாத. || தளர்ந்த (கயிறு), குறுக்கான (காற்று). || *m*. நடுக்கடல்.

Larguer, *v. a*. தளர்த்துதல், அவிழ்த்தல். || *v. n*. (கப்பல்பலகைகள்) ஆடுதல், பிரிதல்.

Larigot, *m*. சிற்றூதுகுழல். || பலகுழல் வாத்தியத்தில் ஓர் பிரிவு : à tire — மிகவும், மிகுதியாய்.

Larix, *m*. ஓர் மரவினம், பிசின்தரு மரம்.

Larme, *f*. கண்ணீர், கண்ணினீர், அழுகை, துளி, துளிதுளிக்கிற சாரம், துளிபோன்றது, கண்ணீர் சித்திரம், — பாவனை : — de vin இரசத் துளி ; — de plomb இரவை ; — de crocodile கள்ளக்கண்ணீர், நீலிக்கண்ணீர் ; fondre en — கண்ணீர் மாலைமாலையாய்ச்சொரிதல் ; rire aux — பலமாய்ச் சிரித்தல் ; sécher les — தேற்றுதல், ஆறுதல் சொல்லுதல்.

Larmier, *m*. இறவானம், இறப்பு, சிற்பக்கம்பியின் பிதுக்கம், சன்னற்சட்டத்தில் அடிப்பிதுக்கம். || *pl*. குதிரை நெறிகள்.

Larmoiement, *m*. கண்ணீர் சிந்துதல், அழுகை.

Larmoyant, *part*. அழுகிற, கண்ணீர்விடுகிற, — வருவிக்கிற, புலம்புகிற, பிரலாபத்துக்குரிய.

Larmoyer, *v. n*. அழுதல், கண்ணீர் விடுதல், — சொரிதல், — சிந்துகிறதாகக் காட்டுதல்.

Larron, *m*. திருடன், கள்ளன், களவன், சோரன். || (அச்சடிக்கையில்) மடங்கின ஏடு, அச்சடித்ததாளின்மேலுள்ள துண்டு, கட்டுகையில் மடங்கியறுபடாத ஏடு.

Larronneau, *m*. சிறு கள்ளன், — திருடன்.

Larronnesse, *f*. திருடி, கள்ளி.

Larve, *f*. நமிடு, நமுடு, பூச்சியின் —, புழுவின் முதலுருவம், முதலவதாரப்புழு. || *pl*. கெட்ட பூதங்கள்.

Larvé, *adj*. கடுமை தணிந்து இலேசாயடிக்கும் ஜுர சம்பந்தமான.

Laryngé, e, Laryngien, enne, *adj*. தொண்டைக்குழியின், — க்குழிக்கடுத்த.

Laryngite, *f*. தொண்டைக்குழியினெரிவு.

Laryngotomie, *f*. தொண்டைக்குழிச் சத்திரம், — திறத்தல்.

Larynx, *m*. தொண்டைக்குழி, குரல்வளை, கண்டநாளம்.

Las, lasse, *adj*. களைத்த, இளைத்த, சலித்த, இளைப்பு —, களை —, ஆயாசம் —, சலிப்புள்ள. || *int*. ஐயோ.

Lascar, *m*. கப்பலின் வேலையாள், கலாசுக்காரன்.

Lascif, ive, *adj*. காம, — விகார, காமாதுர, தூர்த்த, அதப்பிய, காமத்துக்குரிய.

Lascivement, *adv*. காமவிகாரம் —, காமதுரம் —, தூர்த்தத்தனமாய், தூர்த்தனாய்.

Lasciveté, *f*. காமம், காமாதுரம், காமவிகாரம், தூர்த்தத்தனம்.

Laser, Laserpitium, *m*. ஓர் செடி, அதின் பிசின்.

Lassa, (திபேத்துதேசத்தில்) லஸ்சா [நகர்.

Lassant, *part*. இளைப்பு —, வருத்தமான, இளைப்பிக்கிற.

Lasser, *v. a.* இளைப்பித்தல், களைப்பித்தல், அலட்டுதல், அலைக்கழித்தல், வருத்துதல், சலிப்பித்தல், ஆயாசம் —, இளைப்பு —, வருத்தங்கொடுத்தல். || se —, être lassé களைத்தல், இளைத்தல், சலித்தல், வருந்துதல், ஆயாசம் —, சலிப்பாதல்.

Lassitude, *f.* களை, இளைப்பு, களைப்பு, ஆயாசம், அயர்வு, தொய்வு.

Lasso, *m.* அமெரிக்காவில் காட்டுமிருகங்களைப் பிடிக்கும் ஓர்வகை கயிறு.

Laste, *m.* இருபெரும் பீப்பாப்பாரம். [பனைமரங்களின் பேர்.

Latanier, *m.* பனை, பனைமரம், பல

Latent, e, *adj.* மறைவான, காணாத. [தில் உள்ள, — முளைக்கிற.

Latéral, e, *adj.* பக்கத்து, பக்கத்

Latéralement, *adv.* ப்க்கத்தில், பக்கமாய்.

Latere (à); Légat — அர்ச். பாப்புவின் விசேஷ ஸ்தானாபதி.

Latérigrades, *f. pl.* *ou* araignées crabes, எப்பக்கத்திலுநடக்கிற சிலந்திகள்.

Latérite, சொறிக்கல், தவளைக்கல்.

Latex, *m.* தாவரவர்க்கங்களின் பால். [பாலுள்ள.

Laticifère, *adj.* தாவரவர்க்கங்களில்

Laticlave, *m.* உரோமாபுரி ஆலோசனைச்சங்கத்தார் தரிக்குந் தூமிர ஓரமுள்ள அங்கி.

Latin, e, *adj.* இலத்தீன், லசியோந்தேசத்து, பூர்வீக உரோமையரின், இலத்தீன்பாஷையுள்ள : église — இலத்தீன் —, மேற்றிசைத் திருச்சபை; pays — இலத்தீன்படிப்பு நடக்கும் பரீசுபட்டணப் பங்கு : voile — சாத்தியத் திரிபுசவடிவான பாய். || *m.* இலத்தீன் பாஷை. || *m. pl.* லசியோந்தேசத்தார், இலத்தீன் சபையார், — சபைக் கிறீஸ்துவர்கள் , — de cuisine கொச்சை லத்தீன் பாஷை ; y perdre son — தன்னேரமும் பிரயாசமும் வியர்த்தமாக்குதல். [நடை—மாதிரிப்படுத்துதல்.

Latiniser, *v. a.* இலத்தீன் பாஷை

Latinisme, *m.* ஷை பாஷைநடை, —மாதிரி. [வன், — பேசுகிறவன்.

Latiniste, *m.* ஷை பாஷை படித்த

Latinité, *f.* ஷை பாஷை : basse —தாழ்ந்த—, கொடும் லத்தீன்பாஷை.

Latirostres, *m. pl.* அகன்ற மூக்குள்ள பக்ஷிகள்.

Latitude, *f.* அட்சம், அக்கம், விட்சேபம், தேச அக்கம், — க்குணம். || விசாலம், விரிவு, விஸ்தாரம், தாராளம்: —terrestre அட்சம், அக்கம்;—céleste விக்ஷேபம் ; — des planètes கிரகபதனம் ; — nord உத்தராக்ஷம் ; — sud தக்கணாக்ஷம் ; degré de — அக்ஷபாகை ; argument de — அக்ஷகன்னம், பதனகேந்திரம்.

Latrie, *f.* தேவாராதனை, சர்வேசுரனுக்குமாத்திரஞ் செல்லும் ஆராதனை.

Latrines, *f. pl.* கக்குஸ் வீடு, மலக்கிரகம், சலக்கம், சாலகிரி ; aller aux — அவசரத்துக்குப் போகிறது.

Latte, *f.* இரிப்பாய்ப்பட்டை, வரிச்சு, பிளாச்சு, வலிச்சல்.

Latter, *v. a.* இரிப்பாய்ப்பட்டை போடுதல். [சை.

Lattis, *m.* இரிப்பாய்ப்பட்டை வரி

Laudanisé, *adj.* அபின்சாரமருந்து கூட்டப்பட்ட. [ன்சாரமருந்து.

Laudanum, *m.* லொதானெம், அபி

Laudatif, ive, *adj.* புகழ்ச்சியான, மங்களமுள்ள. [புகழென்னுஞ்செபம்.

Laudes, *f. pl.* லோதென்னுஞ் —,

Lauré, *adj.* அலரிமுடிசூடின.

Offre, *f.* ஒப்புக்கொடுத்தல், ஒப்புக்கொடுப்பது, தன் சரக்கு — வேலையொப்புக்கொடுத்தல், இன்னின்ன திட்டமாகச் செய்யப்பேசுதல், — ஏற்பாடு: — par écrit தற்காஸ்து கடுதாசி.

Offrir, *v. a.* ஒப்புக்கொடுத்தல், காணிக்கையாக வைத்தல், —இடுதல், நேர்தல், நியமித்தல், செலுத்துதல், காட்டுதல், காண்பித்தல், (இன்னின்ன திட்டமாய்க் கொடுக்க — செய்யப்) பேசுதல்: —de grands obstacles பெருந் தடைகளைக் கொண்டிருத்தல். ‖ s'— ஒப்புக்கொடுக்கப்படுதல், தன்னை யொப்புக்கொடுத்தல், தென்படுதல், வருதல், நேரிடுதல், தோன்றுதல்.

Offusquer, *v. a.* பிரியவீனப்படுத்துதல், மனத்தாங்கல் கொடுத்தல், ஏற்காதிருத்தல், மறைத்தல், இருட்டுதல், இருட்டினால் மூடுதல். ‖ கண் கூசுவித்தல், மயக்குதல், சமுசயப்படுத்துதல். ‖ s'— மனத்தாங்கல் —, பிரியவீன —, சமுசயப்படுதல்.

Ogival, e, *adj.* இருவில் வடிவடங்கிய.

Ogive, *f.* ஓர்வளைவிலடங்கிய வளைவு, இருவில்லாலான வளைவு. || *adj.* *V.* Ogival.

Ognon, Oignon, *m.* வெங்காயம், உள்ளி, ஈரவுள்ளி, —வெங்காயம், — வெண்காயம், சோசனம். || (பலபூண்டுகளின்) கிழங்கு. || (கால்களில்) காய், காய்ப்பு : en rang d'— வெங்காய—, ஓர் வரிசையாய்.

Ognonet, *m.* ஓர்விதகோடைக்கனி.

Ognonière, *f.* வெங்காயக்கொல்லை, — பாத்தி.

Ogre, *m.* Ogresse, *f.* மனுமாமிசம் பட்சிக்கும் பூதம். || பெருண்டிக்காரன், — காரி.

Oh! *int.* ஓ, ஓகோ. [ஆறு,—நாடு.

Ohio, (ஐக்கியதேசங்களில்) ஒயியோ

Oidium, *m.* மகா சிறிய காளான், அதனாலுண்டாகும் வியாதி.

Oie, *f* வங்காளவாத்து, பெருந்தாரா. || முட்டாள்: oie rouge ou brahmanique சக்கரவாகம், —வாகப்புள்; petite —சிறு வங்காளவாத்து, பக்ஷியின் கழுத்து இறகுமுதலியது, உடுப்புசேர்ந்தது, அற்ப உபகாரம்.

Oil (langue d') பிராஞ்சுதேச வடபாஷை. [ளுங் கலந்த குழம்பு.

Oille, *f.* பல இறைச்சியுங் கிழங்குக

Oindre, *v. a.* பூசுதல், தடவுதல், தேய்த்தல், நீவுதல், மெழுகுதல், அபிஷேகம் பண்ணுதல், அர்ச். எண்ணெய் பூசுதல். || s'— தன்னைப் பூசுதல்.

Oing, *m.* பழைய பன்றிநெய்.

Oint, *part.* அபிஷேகம் பண்ண —, பூசப்பட்ட : l'— du Seigneur சர்வேசுரனாலபிஷேகம் பண்ணப்பட்டவர், சேசுகிறீஸ்துநாதர், இராசாவானவர்.

Oise, *f.* (பிராஞ்சுதேசத்தில்) ஓஅஸ் என்னும் ஆறு, — ஜில்லா.

Oiseau, *m.* பக்ஷி, பறவை, புள், குருவி. || இராசாளி, வேட்டைக்குரிய புள். || சாந்துசுமக்குங் கருவி : à vol d'— பக்ஷிப் பறப்பாய், நேராய் ; à vue d'— பக்ஷிகாணும் மேலிடத்தில் தோன்றுந் தன்மையாய் ; — de paradis உமாக்குருவி, ஆகாசப்பக்ஷி, சாரம் ; chasser à l'— இராசாளியைக் கொண்டு வேட்டையாடுதல்.

Oiseau-mouche, *m.* ஈப்போன்ற —, மிகவுஞ் சிறிதான குருவி.

Oiseler, *v. a.* வேட்டைக்குப் பக்ஷியைப்பழக்குதல். || *v. n.* பக்ஷிகளைப் பிடித்தல், பக்ஷிகளுக்குக் கண்ணிபோடுதல், பக்ஷிவேட்டையாடுதல்.

Oiselet, *m.* சிறு பட்சி, — குருவி.

Oiseleur, *m.* பக்ஷிகளைப் பிடிக்கிறவன், பறவைவேடன். [விற்கிறவன்.

Oiselier, *m.* பக்ஷிகளை வளர்த்து

Oisellerie, *f.* பக்ஷிகளைப் பிடிக்கும் — வளர்க்கும் வித்தை, — தொழில், அதுகளை வளர்க்குமிடம்.

Oiseux, euse, *adj.* சோம்பலுள்ள, வீணில் நேரம்போக்குகிற, சும்மாவிருக்கிற, வீண், பலனற்ற, பிரயோசனமில்லாத, வியர்த்தமான.

Oisif, ive, *adj.* சும்மாவிருக்கிற, ஒன்றுஞ் —, வேலைசெய்யாத, சோம்பல் —, ஓய்வுள்ள, பலன் —, பிரயோசனமற்ற. || *m.* சோம்பேறி.

Oisillon, *m.* சிட்டு, சின்ன குருவி, சிறு பக்ஷி. [தனமாய்.

Oisivement, *adv.* சோம்பலாய், —

Oisiveté *f.* சோம்பல், — தனம், சோம்பு, சோம்பறை, சும்மாவிருத்தல், ஓய்வு, வேலைசெய்யாமை. [மடையன்.

Oison, *m.* வங்சாளவாத்துக்குஞ்சு. ||

Oldenlande, *f.* Oldenlandia umbellata, சாயவேர். இம்பூறல்.

Ole, *f.* (feuille de palmier) ஓலை: — de partage கூற்றோலை.

Oléagineux, euse, *adj.* எண்ணெய் தருகிற, — உள்ள.

Oléandre, *m.* அலரி. [பிதுக்கம்.

Olécrane, *m.* முழங்கை, — கைப்

Oléifère, *adj.* எண்ணெய் தரும், எண்ணெய் உற்பத்தியாக்கும்.

Oléosaccharum, *m.* சர்க்கரை கலந்த தைலம், — எண்ணெய்.

Oléracé, *adj.* கீரைத்தன்மையுள்ள.

Olfactif, ive, *adj.* மோப்பத்து, மோப்பத்துக்கடுத்த.

Olfaction, *f.* மோப்பம்.

Oliban, *m.* பறங்கிச்சாம்பிராணி, குந்துரு, குந்துருக்கம்.

Olibrius, *m.* வீம்பன்.

Oligarchie, *f.* சிலராசு, -- ஆளுகை. பெரியோரிராச்சியபாரம்.

Oligarchique, *adj.* சிலராசின், சிலராசுக்கடுத்த. [காரன்,

Oligarque, *m.* சிலராசுகொள்கைக்

Olim, *m. pl. ou* registres— பழைய இடாப்பு, — ஞாபகபுஸ்தகங்கள்.

Olivacé, *adj.* ஒலிவ்நிறமுள்ள, பச்சைகலந்த மஞ்சள்நிறமுள்ள.

Olivaie, *f.* ஒலிவ்மரம் வைத்துப் பயிரிடுதல்.

Olivaire, *adj.* ஒலிவ்பழ வடிவுள்ள.

Olivaison, *f.* ஒலிவ்பழப் பறிப்பு,— பறிப்புக்காலம்.

Olivâtre, *adj.* ஒலிவ்பழநிறமான, மஞ்சளான, கருகிய.

Olive, *f.* ஒலிவ்பழம், — மரம், — பழவடிவணி, —பழவடிவான தெறிப்பு. || சமாதானம், சமாதானக்குறிப்பாகிய ஒலிவ்மரக்கிளை : couleur d'— ஷை பழநிறம், பச்சைகலந்த மஞ்சள் நிறம் ; joindre l'— aux lauriers செயத்துக்குப்பின் சமாதானஞ் செய்தல். || *adj.* ஒலிவ்பழத்து ; couleur —, *ou* || *m.* ஒலிவ்பழநிறம்.

Olivète, *f.* ஓர் குருவி, ஓர் பூண்டு.

Olivette, *f.* ஒலிவ்மரக் கொல்லை, ஓர் குருவி, கள்ளமுத்து.

Olivettes, *f. pl.* ஒலிவ்பழம் பறித்தபின் கூத்து.

Olivier, *m.* ஒலிவ்மரம், சமாதானத்தினடையாளமாம்.

Ollaire, *adj.* கடினமல்லாத (கல்).

Olla podrida, *f.V.* Oille.

Olmutz, (மொரவிதேசத்தில்) ஒல்முத்ஸ்நகர்.

Olographe, *adj.* காரணன் முழுதுமெழுதிய, — கையால் முழுதுமெழுதப்பட்ட.

Olympe, *m.* (தெசலிதேசத்தில்) ஒலிம்ப்பு மலை. || வானம், தேவலோகம், மோக்ஷம், வானோர், தெய்வம்.

Olympiade, *f.* ச-வருஷகாலம், — வட்டம், சதுராட்டை, சதுர்வற்சரம்.

Olympien, enne, *adj.* வானத்துக்கடுத்த, ஒலிம்ப்புமலையில்—, வானத்தில் வாழும். || மகத்துவம் —, வல்லமை பொருந்திய.

Olympique, *adj.* (பெலொப்பொனேஸ்நாட்டில்) ஒலிம்ப்பிநகரத்துக்கடுத்த (வேடிக்கைகள்): cirque — வேடிக்கைக்குரிய வையாளி வீதி.

Ombelle, *f.* குடைவடிவு, — வடிவுள்ள புஷ்ப ஒழுங்கு.

Ombellé, *adj.* குடைவடிவுள்ள.

Ombellifère, *adj.* குடைவடிவான புஷ்பமுள்ள. || *f.* ஷை புஷ்பமுள்ள —, குடைவடிவுள்ள பூண்டு. || *pl.* ஷை புஷ்பமுள்ள பூண்டினம்.

Ombellule, *f.* சிறு குடைவடிவு.

Ombilic, *m.* நாபி, கொப்பூழ். || சில கனி—விதைநடுமையத் தாழ்வு, சில கிளிஞ்சிலுட்புற ஓட்டின் குழி.

Ombilicaire, *f.* ஓர் பூண்டு.

Ombilical, e, *adj.* நாபிக்கடுத்த.

Ombiliqué, *adj.* நாபிவடிவுள்ள.

Omble, *m.* மிக உருசிகரமான ஓர் வகை கெண்டைமீன்.

Ombrage, *m.* மரநிழல், நிழல், சாயை, நிழலுள்ளவிடம், நிழலிடுகிறதழை. || சமுசயம், சந்தேகம், ஐயம்.

Ombragé, *part.* நிழலுள்ள, — படுகிற, நிழலிலிருக்கிற.

Ombrager, *v. a.* நிழலிடுதல், — செய்தல், நிழற்றுதல், தழையால் மூடுதல், நிழலில் வைத்தல், மூடுதல். || பொன்பட்டினால் மறைத்தல். || (சித்திரத்தை) கொஞ்சமிருட்டுதல், மங்குவித்தல். || s'— நிழலில் ஒடுங்குதல், தன்னை நிழலால் மூடிக்கொள்ளுதல்.

Ombrageux, euse, *adj.* தன்னிழலுக்குப் பயப்படுகிற, மிகவும் பயங்காளியாகிய, சமுசயப்படுகிற —, சமுசயக்குணமுள்ள.

Ombre, *f.* நிழல், நீழல், சாயை. || பிரதி —, விம்பம். || இருட்டு, இருள், இரவு. || நிழலாட்டம். || சாயல், பாவனை, தோற்றம், கோலம். || சாக்கு, போக்கு. || அடக்கம், ஒடுக்கம், தனிமை. || ஆதரவு, அடைக்கலம், சலிகை. || உடல்பிரிந்த —, மரித்தவன் ஆத்துமம், பூதம், வீண்காட்சி.|| வீண், விழல், அற்பம். || இருண்டநிறம், சித்திரத்து கருமண். || அற்பகுறை, பிழை, பயம். || *pl.* விருந்தோடு கூடவந்தவர்கள். || *m.* ஓர் மீன். *V.* Hombre : faire — பயம் வருவித்தல், வெருட்டுதல், மகிமைமறைத்தல், — மங்குவித்தல்; mettre à l'— நிழலில் —, சிறைச்சாலையில் வைத்தல் ; l'empire des — மரித்தோரிராச்சியம், — ஸ்தலம், பாதாளம் ; terre d'— சித்திரத்துக் கருமண் ; — chinoises நிழல்பாவை ; à l'— de மறைவில், ஆதரவில், அடைக்கலத்தில்; sous l'— de சாயலாக, போக்காக,

வேஷமாக ; sous — que வீண் நியாயத்தினால்.

Ombrelle, *f.* சிறு —, சின்ன குடை.

Ombrer, *v. a.* இருண்டநிறம்போடுதல்.

Ombreux, euse, *adj.* நிழலிடுகிற, — உள்ள. || நிழலில் வளருகிற.

Ombrien, enne, *m. et adj.* ஒம்ப்ரியநாட்டைச் சார்ந்த.

Oméga, *m.* ஒகாரம், கிரேக்கர் கடைசியெழுத்து. || முடிவு, அந்தம்.

Omelette, *f.* அடித்துப் பொரித்த முட்டைகள்.

Omettre, *v. a.* பேசாமல் —, செய்யாமல் —, விட்டு —, விடுதல், தவிர்த்தல், ஒழித்தல், சொல்லாதிருத்தல். || s'— விட —, மறக்கப்படுதல்.

Omis, *part.* விடப்பட்ட.

Omission, *f.* செய்யாமை, விட்டுவிடல், தப்பு, தவறு, தவிர்தல், மறந்தது, மறந்துவிட்டகாரியங்கள் : péché d'— தன் கடமை தீராத பாவம்.

Ommelina bengalensis, காட்டுக் கானா —, கானாவாழை.

Omnibus, *m. ou* voiture —பொது இரதம், — ப்பண்டி.

Omnicolore, *adj.* பல நிறமுள்ள, சகல வருணமுங் கலந்த.

Omnipotence, *f.* சர்வவல்லமை.

Omniprésence, *f.* சர்வ —, வியாபகம்.

Omniscience, *f.* சர்வஞானம், — க்கியானம், — க்கியத்துவம்.

Omnivore, *adj. et m.* சகலமுந்தின்கிற, — தின்கிற மிருகம்.

Omophage [illegible]*j. et m.* பச்சையிறைச்சி தின்கிற, — தின்கிறமிருகம்.

Omoplate, *f.* தோட்பட்டை, சப்பட்டை, கைச்சீப்பு, — ப்பட்டை.

On, *pro.* சிலர், மனிதர் : on dit சொல்லுகிறார்கள், என்கிறார்கள் || *m.* சிலர் சொல்வது, தெரியாதவர்கள் —, சொல்வார்பேச்சு. || சிலவிசை நான், நாம் எனதாகவரும்: il y a longtemps qu'on ne vous a vu : நான், நாம் உம்மைக்கண்டு —, உம்மைக்கண்டு வெகு காலமாயிற்று.

Onagre, *m.* காட்டுக்கழுதை, கல்லெறியுமெந்திரம். || *f.* இறுக்குகிற ஓர் பூண்டு.

Onanisme, *m.* ஒனான் என்பவன் பாவம், புருஷனது தற்புணர்ச்சி.

Onc, oncques, *adv.* ஒருகாலும், எப்போதாகிலும் : *avec* ne, ஒருக்காலுமில்லை.

Once, *f.* (இருத்தலின்) வீசம், வீசமிருத்தல். || *m.* சிறு சிவிங்கி.

Oncial, e, *adj.* பெரிய (எழுத்து) . écriture — *ou* Oncial, *m.* Onciale, *f.* பெரிய எழுத்து, — எழுத்துப்புஸ்தகம்.

Oncle, *m.* தகப்பன் —, தாய்சகோதரன்: —maternel அம்மான், மாமன்; — paternel (l'aîné du père) பெரியப்பன், (le cadet du père) சிற்றப்பன், சின்னப்பன் ; — à la mode de Bretagne தாயின் —, தகப்பனின் மச்சினன், — பெரியப்பன் —, — சிற்றப்பன் —, — சின்னாயி —, — பெரியாயி மகன்.

Onction, *f.* பூசுதல், தடவுதல்; பூச்சு, அபிஷேகம். || பத்தி —, உருக்கம், தேவ அருளின் எழுச்சி, ஞான ஆறுதல்.

Onctueusement, *adv.* பத்தியுருக்கமாய்.

Onctueux, euse, *adj.* நெய்ப்பான, எண்ணெய்த்தன்மை—, கொழுப்புள்ள. || உருக்கமுள்ள.

Onctuosité, *f.* நெய்ப்பு, எண்ணெய்த்தன்மை. || உருக்கம்.

Onde, *f.* தண்ணீர், சலம். || அலை, திரை, உல்லோலம், தரங்கம். || கடல், சமுத்திரம். || *pl.* அலைவடிவு: l'—noire ஸதிக்ஸ் என்னும் பாதாள —, கரும் நதி.

Ondé, *adj.* திரைந்த, அலைவடிவுள்ள, அலைபோன்ற, பலவன்னம் — வரியுள்ள.

Ondée, *f.* சடிதியான மழை, பாட்டமழை, மாரி: — de coups de bâton தடியடிமாரி.

Ondin, e, *s.* நீர்ப்பூதம.

Ondoiement, *m.* சடங்கற்ற ஞான —, திருச்சபைஞான —, வீட்டுஞானஸ்நானம்.

Ondoyant, *part.* அலைகிற, திரை—, அலைவுள்ள.

Ondoyer, *v. a.* சடங்கின்றி ஞான —, வீட்டுஞானஸ்நானங் கொடுத்தல். ||

v. n. அலைதல், திரைதல், அலையாய் எழும்புதல்.

Ondulation, *f.* திரைதல், அலைவு, அலைவிரிசல், அலையாயெழும்புதல்.

Ondulatoire, *adj.* அலைவுள்ள, திரைகிற, அலையாய்ப் புரளுகிற

Ondulé, *adj.* மேற்பரப்பில் அலைவுள்ள, — காட்டுகிற.

Onduler, *v. n.* அலைதல், திரைதல், அலையாய்ப் புரளுதல்.

Onduleux, euse, *adj.* அலைவடிவுள்ள, அலைபோன்ற, அலைபாவிக்கிற வரியுள்ள.

Onéraire, *adj.* விசாரணை —, பாரம் —, பொறுப்புள்ள.

Onéreux, euse, *adj.* பாரம் —, சுமை—, தொந்தரையுள்ள, பிரியமற்ற, வருத்தமான : à titre — பாரமுள்ள திட்டத்தோடு.

Onglade, *f.* நகச்சதையின் எரிவு.

Ongle, *m.* நகம், உகிர், புனர்ப்பவம், கரோருகம், (மிருக) நகம். || இதழடி, கண்ணின் சீழ், உட்கடைக்கண்ணின் மெல்லியதோல் : rogner les — à நகம் வாங்குதல், — நறுத்தல், வல்லமை —, இலாபத்தைக் குறைத்தல் ;— rentré, *V.* Onyxis.

Ongle-de-chat, *m.* வளைந்த முள்ளுள்ள மரம்.

Onglé, *adj.* நகமுள்ள.

Onglée, *f.* விரல்நுனிவிறைப்பு. || குதிரைக்கடைக்கண் கழலை.

Onglet, *m.* சிறு நகம், நகநுனி. || காகிதங்களை ஒட்டப் புஸ்தகமாய்க் கட்டின கடுதாசித் துண்டு, பதிலேடு, பூவிதழடி, மட்டப்பலகையிற் பிறைவடிவான அறுப்பு, சடு-பாகைக்கோணம், — கோணமாய் அறுத்த பலகைநுனி, — பலகைச் சேர்க்கை. || சிற்றுளி. || —sphérique இருபெரிய சக்கரங்களுள்ளடங்கிய கோளத்தின் பங்கு.

Onglette, *f.* சிற்றுளி.

Onguent, *m.* பரிமள —, தைலம், சுகந்த எண்ணெய், சாந்து, கலவைச் சேறு : — magique அஞ்சனம்.

Onguiculé, *adj. et m.* (ஒவ்வொரு விரலில்) மெல்லிய நகம் —, நகமுள்ள, நகமுள்ள மிருகம். || நெடுமடியுள்ள (பூவிதழ்).

Onguiforme, *adj.* குளம்பின் வடிவுள்ள.

Ongulé, *adj.* குளம்புள்ள.

Onirocritie, Oniromancie, *f.* கனாச்சாஸ்திரம், — ச்சகுனம், —விளக்கம், கனாவினஞ்ஞான பயன்.

Onirocritique, *m.* கனாச்சாஸ்திரஞ் சொல்பவன். || *adj.* கனாச்சாஸ்திரத்துக்கடுத்த.

Onomastique, *adj. et s.* சிறப்புப் பெயர் சம்பந்தமான.

Onomatopée, *f.* போலிச் சத்தமொழியுற்பத்தி, போலிச்சத்தமுள்ள சொல்லுற்பத்தி, சத்தப்பாவனை, சத்தத்தினொப்பு.

Onoré, *m.* ஓர்வித கொக்கு.

Ontologie, *f.* வஸ்துக்களின்—,வஸ்துவிளக்கம், ஞானவஸ்துக்களுக்கு ஸ்திதியைப் பாவிக்குங் கோட்பாடு.

Ontologique, *adj.* வஸ்துவிளக்கத்துக்கடுத்த.

Ontologiste, *m.* வஸ்துவிளக்க சாஸ்திரி.

Onyx, *m.* கோமேதகம், அங்கிஷ்டோமம்.

Onyxie, Onyxis, *f.* நகஞ்சூழுந் தோல் எரிவு, ஓர்வித விரற்சுற்று.

Onze, *adj.* பதினொன்று, பதினொரு (devant un nom); — personnes பதினொருபேர் ; les — பதினொருவர். || *m.* பதினொன்று, பதினோராந்தேதி.

Onzième, *adj.* பதினோராம். || *m.* பதினோராம் பங்கு, பதினொருபங்குகளிலொன்று. || *f.* பதினோராஞ் சுரம்.

Onzièmement, *adv.* பதினோராவது.

Oolithe, *f.* கிளிஞ்சில் நிறைந்த கல்.

Opacifier, *v. a.* ஒளிபாயாதவிதமாய்ச் செய்தல் ; || s'— ஒளியுருவாமலாகுதல்.

Opacité, *f.* ஒளிபாயாமை, ஒளிஉருவாததன்மை.

Opale, *f.* நிறமாறுமணி. || *m.* ஷைமணிநிறம்.

Opalescence, *f.* நிறம் மாறித் தோன்றுதல்.

Opalin, e, *adj.* நிறம்மாறும் ஓர் இரத்னம்போல் ஒளிவீசும்.

Opaque, *adj.* ஒளியுருவாத, — பாயாத.

Opéra, *m.* சங்கீதநாடகம், —நாடகசாலை. || தொந்தரவுள்ள காரியம்.

Opérable, *adj.* செய்யக்கூடிய, நிறைவேற்றக்கூடிய.

Opérateur, trice, *s.* சத்திரவைத்தியன். || இரசவாத பரீக்ஷைசெய்பவன்.|| பாமரவைத்தியன், — வைத்தியச்சி.

Opération, *f.* கிரியை, செய்கை, கருமம், முயற்சி, வேலை, ஏவல். || சத்திரம், இரணவைத்தியம். || (மருந்தின்) பலன், சத்தி. || விதிப்படிசெய்யுங் —, கணக்கு, (படையின்) முயற்சி ; —chimique இரசவாதத்துக் கருமம், பரிட்சை. [த்த.

Opératoire, *adj.* சத்திரத்துக்கடு

Opercule, *m.* மூடி, மேல்மூடி.

Operculé, *adj.* மேல்மூடியுள்ள.

Opérer, *v. a. et n.* கருமஞ் —, செய்தல், முயற்சி —. வேலை —, பண்ணுதல், முயலுதல். || பலித்தல், காரியப்படுதல், வாய்த்தல். || சத்திரித்தல், சத்திரஞ்செய்தல், சத்திரவைத்தியம் பண்ணுதல். || கணித்தல், கணக்கிடுதல், — பண்ணுதல் : — un malade வியாதிக்காரனுக்குச் சத்திரமிடுதல்; — sa jonction, வேறுபடையோடு சேர்தல். || s'— செய்யப்படுதல், நிறைவேறுதல் ; se faire — தனக்குச் சத்திரஞ் செய்வித்தல். [கம்.

Opérette, *f.* தமாஷான சிறு நாட

Ophicéphale, *m.* ஓர் மீன் : Ophicephalus punctatus உளுவை, குறவை : — striatus விரால், வரால்.

Ophicléïde, *m.* ஓர் வாத்தியக்கருவி.

Ophidiens, *m. pl.* சர்ப்பங்கள். || *adj.* சர்ப்பங்களைச் சார்ந்த.

Ophioglosse, *m.* ஓர் பூண்டு.

Ophiolâtrie, *f.* சர்ப்பாராதனை.

Ophiologiste, *m.* சர்ப்பங்களைப்பற்றி எழுதுவோன்.

Ophiorhiza mungos, கீரிப்பூண்டு.

Ophiuchus, *m.* வடதிசைதாராகணம்.

Ophtalgie, *f.* எரிவற்றகண்ணோய்.

Ophtalmie, *f.* கண்ணெரிவு, கண்ணோய், கண் சவ்வுகளின் எரிவு.

Ophtalmique, *adj.* கண்ணுக்குரிய. || *m.* கண்ணோய் மருந்து.

Ophtalmographie, *f.* கண் வருணிப்பு, — விளக்கம். [னம்.

Ophtalmotomie, *f.* நேத்திர சேத

Opiacé, *adj et m.* அபின் கலந்த, கலந்தமருந்து.

Opiat, *m.* Opiate, *f.* அபின் கலந்த மருந்து, பல்துடைக்கும் பசை, — தூள்.

Opilatif, ive, *adj.* அடைக்கிற.

Opilation, *f.* அடைப்பு.

Opiler, *v. a.* அடைத்தல். || s'— அடைபடுதல்.

Opimes, *adj. f. pl.* சிறந்த, எதிர்படைத் தளகர்த்தனைக்கொன்று பறித்த.

Opinant, *m.* ஆலோசனை சொல்பவன். || *part. du suivant:*

Opiner, *v. n.* சபையில் ஆலோசனை —, தன் கருத்து —, யோசனை சொல்லுதல் : — du bonnet மற்றவர்கள் ஆலோசனை ஏற்றுக்கொள்ளுதல்.

Opiniâtre, *adj.* மூர்க்கத்தனம் —, மூர்க்கம் —, பிடிவாதம்—, பிடிமானம் —, சாதிப்புள்ள, முரண்டுள்ள, சலஞ்சாதிக்கிற, முரட்டு, விடாத, நெடுமையான, திடம் —, தைரியம் —, ஸ்திரமுள்ள: travail —நெடும்பிரயாசவேலை; maladie — மருந்துகளுக்கடங்காத நெடும் வியாதி. || *s.* மூர்க்கன், முரடன், கருமுரடன், முரண்டன், பிடிவாதி.

Opiniâtrément, *adv.* மூர்க்கத்தனம் —, மூர்க்கம் —, பிடிவாதமாய், சலஞ்சாதித்து, திடம் —, தைரியம்—, ஸ்திரமாய்.

Opiniâtrer, *v. a.* மூர்க்கமாய்ச் சாதித்தல், — விடாதிருத்தல், மூர்க்கனுக்குதல். || s'— சலஞ்சாதித்தல், —பிடித்தல், பிடிவாதம் —, மூர்க்கத்தனம்பண்ணுதல், ஸ்திரமாய்த் தீர்மானித்தல்.

Opiniâtreté, *f.* மூர்க்கம், பிடிவாதம், மூர்க்க —, முரட்டு—, முரண்டுத்தனம், பிடிமானம் —, சலஞ்சாதிப்பு, முரட்டாட்டம்.|| திடம், தைரியம், ஸ்திரம்.

Opinion, *f.* ஆலோசனை, யோசனை. || நிச்சயமற்ற —, எண்ணம், நினைவு, நினைப்பு, கருத்து, தாற்பரியம், உத்தேசம், அநுமதி, ஒம்பாடு. || போதனை, கோட்பாடு, விசேஷபோதகம் : aller aux — கூட்டத்தாருடைய யோசனைகளை — அநுமதிகளைக் கேட்டல்; c'est une — நிச்சயமற்ற எண்ணமாம் ; l'— publique மனுஷருடைய சாதாரண—, பொது எண்ணம்; avoir bonne, mauvaise — de quelqu'un ஒருவன் பேரில் நல்ல —பொல்லாத எண்ணங்கொ

ண்டிருத்தல், ஒருவனை நல்லவன் — பொல்லாதவனென்றிருத்தல்.

Opisthographe, *m.* இருபுறமுமெழுதிய பழையசாதனம்.

Opium, *m.* அபின், அபினி, — மருந்து, அவின், அவினி, அபேனம்.

Opobalsamum, *m.* பரிபளதைலம், — தைலமரம்.

Opodeldoch, *m.* ஓர்வித சவர்க்காரத்தைலம்.

Opopanax, *m.* ஓர்வித பிசின்.

Opossum, *m.* (அமேரிக்காவில்) ஓர் மிருகம்.

Opportun, e, *adj.* தக்க, தக்கசமயத்தில் — தரவாயில் — வேளையில் வருகிற, — ஆகிற, தகுந்த, உரிய : occasion — நல்லசமயம்; il est — de தக்கசமயமாயிருக்கின்றது, தகுகின்றது, தகும்.

Opportunément, *adv.* தக்கசமயத்தில்.

Opportunisme, *m.* சமயத்துக்குத் தக்கபிரகாரம் நடந்துகொள்ளல்.

Opportuniste, *m.* கடமையைக் கவனிக்காமல் சமையோச்சிதமாய் நடந்துகொள்ளுபவன்.

Opportunité, *f.* தக்க —, சமயம், தக்ககாலம், — தரவாய், — வேளை, — தருணம், சாவகாசம், வசதி.

Opposant, *part. et s.* மறியல் பண்ணுகிற, — பண்ணுகிறவன், மறிக்கிற, விரோதிக்கிற, எதிர்நிற்கிற, — வன், — வள், எதிராளி, எதிரி, விரோதி : le parti — எதிர்கட்சி, — பக்கத்தார், — திறத்தார்.

Opposé, *part.* எதிரான, எதிர்பக்கத்திலுள்ள, நேரான. || தடை —, விக்கினம் —, விரோதம் —, வித்தியாசமான, ஒவ்வாத : termes — சம்பந்தமுள்ள —, எதிரான சொற்கள் ; feuilles — இருபக்கத்திலும் எதிரான இலைகள். || *m.* எதிர் —, விரோதமானது, ஒவ்வாதது.

Opposer, *v. a.* எதிராக —, தடையாக —, விக்கினமாகவைத்தல், — போடுதல், — ஏற்படுத்துதல், — அனுப்புதல், எதிர்ப்பித்தல், எதிர்மொழியாக —, எதிராக —, எதிர்த்துச் சொல்லுதல், எதிராக —, நேரோவைத்தல், ஒப்பிடுதல் : — des troupes எதிராகப் படையனுப்புதல். || s'— தடை, விக்கினம் —, விரோதம் —, மறியல் பண்ணுதல், எதிர்த்தல், தடுத்தல், மறித்தல், விரோதித்தல், எதிர்நிற்றல்.

Opposite, *m.* எதிர் —, விரோதமானது : à l'— எதிராக.

Opposition, *f.* மறியல், தடை, விக்கினம், தடங்கல், மறியல், விரோதம், எதிர்ப்பு. || வித்தியாசம், வேற்றுமை, ஒத்திராமை. விபரீதம், விகற்பம், எதிரிடை. (ஆலோசனைச் சங்கத்தில்) எதிர்கட்சி, அரமனையாருக்குவிரோத கட்சி, ஷை கட்சியான், — கட்சிப் பாரிசத்தான். || விரோதமான காரியங்களைப் பொருத்துமணி. || கிரகங்களின்) எதிர்நிலை, எதிரிடை, அசங்கம், பாடு, ராஅம்பாகைதூரம். || (சிலம்பில்) குத்துவிலக்குங் கையசைவு : mouvement d'— எதிர்நிலை நரம்புகளின் அசைவு ; mettre, former — மறியல் செய்தல்.

Oppresser, *v. a.* மூச்சடைத்தல், நெருக்குதல், இறுக்குதல், அமுக்குதல், உபத்திரிய —, நெருக்க —, வருத்தப்படுத்துதல்.

Oppresseur, *adj. et m.* உபத்திரப்படுத்துகிற, — படுத்துகிறவன், இடுக்கண் —, உபத்திரவஞ் செய்கிறவன்.

Oppressif, ive, *adj.* இறுக்குகிற, உபத்திரியமுள்ள, — செய்கிற.

Oppression, *f.* உபத்திரம், உபத்திரியம், நெருக்கிடை, இக்கட்டு, வல்லடி, இடுக்கண், இடைஞ்சல். || மூச்சடைப்பு : — de poitrine மாரடைப்பு.

Oppressivement, *adv.* உபத்திரமாய், நெருக்கிடையாய்.

Opprimé, *part. et s.* உபத்திரப்பட்ட, — ப்படுகிறவன்.

Opprimer, *v. a.* உபத்திர —, உபத்திரிய —, அநியாய —, இக்கட்டு —, துன்பப்படுத்துதல், உபத்திரியம் —, பலவந்தம் —, வல்லடி —, இடுக்கண் —, இடைஞ்சல்பண்ணுதல், நெருக்குதல்.

Opprobre, *m.* அவமானம், நிந்தை, அபகீர்த்தி, தாழ்மை, இழிவு.

Optatif, ive, *adj.* ஆசைகாட்டுகிற, விருப்பத்து. || *m. ou* mode — வியங்கோள் விதம்.

Opter, *v. n.* தெரிந்துகொள்ளுதல், தெரிதல், தெரிந்தெடுத்தல்.

Opticien, *m.* நயன —, திஷ்டிசாஸ்திரி, திஷ்டிசாஸ்திர கருவிகளை —, கண்

ணாடிச் சூத்திரங்களை யுண்டாக்குகிறவன், — விற்கிறவன். [மமாய்.

Optime, *adv.* மிகவுநன்றாய், உத்த

Optimisme, *m.* உத்தமத்துக் கோட்பாடு, நயோபயோகவிதி, சகலமுமுத்தமமென்னுங் குணம்.

Optimiste, *m.* உத்தமத்துவாதி, நயோபயோகவிதிவாதி, சகலமுமுத்தமமென்றெண்ணுகிறவன், — சொல்லுகிறவன்.

Option, *f.* தெரிதல், தன்னிஷ்டம், தெரிந்துகொள்ளுதல், — கொள்ளுஞ் சுதந்திரம்.

Optique, *f.* நயன —, திஷ்டி —, தோற்றசாஸ்திரம், தூரமாய்க் காணும்படங்களடங்கிய பெட்டி. || *adj.* நயனத்து, பார்வைக்குரிய, நேத்திரத்துக்கடுத்த. [வியவானாய்.

Opulemment, *adv.* செல்வமாய், திர

Opulence, *f.* செல்வம், ஐசுவரியம், ஆஸ்தி, திரவியம்.

Opulent, *adj.* ஆஸ்தி —, திரவியம் —, செல்வமுள்ள, ஐசுவரியவான் —, திரவியவானாகிய.

Opuntia, *f.* *V.* Nopal, [நூல்.

Opuscule, *m.* சிறு புஸ்தகம், —

Or, *m.* பொன், தங்கம், கனகம், சொர்ன்னம், சுவர்ன்னம், சொன்னம், இரணியம். || பொற் —, தங்கக்காசு, பொன்னாணயம், காணம். || ஆஸ்தி, திரவியம், ஐசுவரியம். || பொன்னிறம், பொன்மை. || பொற்சரிகை, தங்கப் பூச்சுள்ள வெள்ளிக்கம்பி ; — pur, fin, பசும்பொன், தங்கம், அபராஞ்சி ; — raffiné புடமிட்ட —, ஓடவைதத —, அறவைத்தபொன், அபராஞ்சி ; — en barre பொற்பாளம், — சலாகை, உத்தமமான காரியம்; lingot, barre d'— பொற்பாளம், — கட்டி ; poudre d'— பொற்சுண்ணம், — பொடி, தங்கபஸ்மம் ; drap d'— பீதாம்பரம் ; feuille d'— பொற்றகடு, இரேக்கு ; au poids de l'— பொன் நிறையாய், உயர்விலையாய் ; marché d'— மிக இலாபகரமான வியாபாரம் ; cœur d'— உத்தமமான இருதயம் ; âge, siècle d'— பொன்யுகட் ; parler d'— பொன்னைக்குறித்துப் பேசுதல், உத்தமமான காரியம் — ஆலோசனை சொல்லுதல்.

Or, *conj.* ஆனால், ஓவென்றால், ஆகையால், ஆதலால், அப்படியிருக்க : — çà இப்போது, நல்லது; — sus இப்படியிருக்க.

Oracle, *m.* தேவவிடை, —மொழி, — உத்தரவு, திருவாக்கியம், திருவுளமொழி, தீர்க்கதரிசனம், திருவுளம். || திருவுளம்பற்றுகிற தெய்வம், தேவவிடை ஸ்தலம், மூலஸ்தானம். || வேத —, சத்தியம், திருவாக்கியம்,—வாக்கு, திருச்சபைத் தீர்மானம், பெரியோர்களின் வாக்கு, — வாக்கியம், பெரிய சாஸ்திரி : rendre des — தேவவிடை சொல்லுதல்: il était l'—de l'Orient கீழ்த்திசையில் அவன் வார்த்தை தேவவாக்கியம்போலிருந்தது.

Orage, *m.* புசல், பெருங்காற்று, சூறைக்காற்று, சண்டமாருதம். || உக்கிரமான கண்டனை, பெரியோர்கள் எரிச்சல். || கலகம், குழப்பம், கலக்கம். || துன்பம், இடையூறு, நேரிடுகிற தின்மை, ஆபத்துள்ள சமயம், — சண்டை.

Orageux, euse, *adj.* புசலுக்கேதுவான, புசல்வருவிக்கிற, — உள்ள, பெருங்காற்று வழங்குகிற, புசல் —, கலகம் —, கலக்கம் —, குழப்பம்—, எரிச்சலுள்ள, வெகுதர்க்கமுள்ள.

Oraison, *f.* செபம், மன்றாட்டு, வேண்டுதல், பிரார்த்தனை, மந்திரம், தியானம். || பிரசங்கம், குயில். || வாக்கியம், வசனம் : — mentale தியானம் ; — dominicale பரமண்டலமந்திரம் ; — funèbre மரித்தவன் புகழ்ச்சிப் பிரசங்கம் ; les parties de l'— பாஷைச் சொற்களின்—, வாக்கியத்தின் —, பிரசங்கத்தின் பிரிவுகள்.

Oral, *m.* தலைமூடும் பெரியமுக்காடு.

Oral, e, *adj.* வாய்மொழியான. || வாய்க்கடுத்த, வாயிடுகிற, வாயாலாகிற.

Orange, *f.* நாரத்தம்பழம், கிச்சிலி —, தோடம்பழம் : — douce தேன்றோடம்பழம் ; fleurs d'— நாரத்தம்பூ. || *adj.* நாரத்தம்பழநிறமான, பொன்மையான.

Orange, (பிராஞ்சுதேசத்தில்) ஒராங்ழ் நகர், (அப்பிரிக்காவில்) — நதி : maison d'— ஷை நகரப்பிரபுக்களின் கோத்திரம், இப்போது ஒல்லந்துதேசத்தை ஆளுகின்றது : prince d'— ஒல்லந்துதேசத்தரசன் மூத்த குமாரன்.

Orangé, *adj.* நாரத்தம்பழநிறமான,

பொன்மையான. || *m.* ஷை பழநிறம், பொன்மை.

Orangeade, *f.* நாரத்தம் பழத்திரசப்பானக்கம்.

Orangeat, *m.* நாரத்தம்பழத் தோலாற்செய்த தித்திப்பு, — முட்டாய்

Oranger, *m.* நாரத்தை, நாரத்த—, இச்சிலி —, கொளஞ்சி —, கொழுஞ்சி —, தோடமரம், தோடை ; — doux தேன்றோடமரம். || *adj. et s.* நாரத்தம்பழம் விற்கிற, — விற்கிறவன், —வள்.

Orangerie, *f.* நாரத்தமரச்சோலை,— கிடங்கு.

Orangin, *m.* நாரத்தம்பழநிறமுள்ள பூசுணி.

Orangiste, *m.* நாரத்தமரம் வளர்க்கிறவன். || ஒருன்ழ் பிரபுக்களின் வமிச பாரிசத்தான், — கட்சியான். || *adj.* ஷை கட்சியான, — பாரிசமான.

Orang-outang, வானரம், வாலற்ற பெருங் குரங்கு.

Orateur, *m.* பிரசங்கி, பிரசங்கம் பண்ணுகிறவன், —உண்டாக்குகிறவன், வழக்கு பேசுகிறவன், வாக்கு வல்லபன், சாதுரியவான்.||சபையிற்பேசுகிறவன்,— குயிலுகிறவன்.|| இங்கிலீஷ் ஆலோசனைச் சங்கத்தலைவன். || *adj.* பிரசங்கிக்கிற, சாதுரியமுள்ள.

Oratoire, *adj.* பிரசங்கத்துக்குரிய : art — வாசாலக —, சாதுரிய —, பிரசங்க சாஸ்திரம். || *m.* செபக்கூடம், சிறு கோவில். || ஓரத்தொரியன் என்னுங் குருக்கள் சபை, —மடம், — கோவில்.

Oratoirement, *adv.* பிரசங்க மேரையாய், பிரசங்கியாய், சாதுரியமாய்.

Oratorien, *adj. et m.* ஓரத்தொரியன் என்னும், — என்னுஞ் சந்நியாசி, — குரு.

Oratorio, *m.* கீதவாத்தியங்கூடிய திருநாடகம்.

Orbe, *m.* (கிரக) மண்டலம், அயனம், பாதை. || பரிதி, வட்டம், உண்டை, சுற்றளவு. || *adj.* கொறுக்குகிற, வெறும் : coup — நொறுக்குகிற கருவியினடி.

Orbicole, *adj.* எங்கும் அகப்படக்கூடிய.

Orbiculaire, *adj.* வட்டம் —, சக்கரம் —, விருத்தம் —, சுற்றான. || *m.* வட்டமான நரம்பு.

Orbiculairement, *adv.* வட்டம்—, விருத்தமாய்.

Orbiculé, *adj.* தட்டையும் வட்டமுமான.

Orbitaire, *adj.* கண்குழிக்கடுத்த.

Orbital, e, *adj.* கிரகமண்டல சம்பந்தமான.

Orbite, *f.* (கிரக) மண்டலம், அயனம், அயனமண்டலம், வட்டம், பாதை, சுற்று, கக்கம். || கண்குழி, — குவளை. || பக்ஷிகண் சூழுமிடம் : — de la lune சந்திராயனம்.

Orcanette, Orcanète, *f.* சிகப்புச் சாயவேர்ப் பூண்டு.

Orchestique, *f.* நடன அப்பியாசம்.|| *adj.* நடனத்து.

Orchestre, *m.* கீதவாத்தியக்காரர் —, பாடுவர்ஸ்தலம், —கூட்டம், —ஸ்தலத்துக்கடுத்தவிடம், ஆலோசனைச்சங்கத்தாரிடம்.

Orchestrer, *v. a.* Orchestration, *f.* கீதவாத்தியக்காரரை ஒன்று கூட்டுதல்.

Orchidées, *f. pl.* ஓர் பூண்டினம்.

Orchis, *m.* ஓர் பூண்டு.

Ordalie, *f.* Ordéal, *m.* (அக்கினிமுதலியவற்றாலாகிற) குற்றப் பரீட்சை, —ச்சோதனை, சோதனைதண்டனை, கடும் பரீட்சை : — par le feu அக்கினி பரீட்சை ; — par la balance துலாகோசம், — பரீட்சை ; — par le fer rouge மழுப்பரீட்சை.

Ordinaire, *adj.* வழக்கம் —, வாடிக்கை —, மாமூலான, வழங்குகிற, சாதாரண. || நடுத்தரம் —, பெரும்படியான. || *m.* வழக்கமானவுணவு, — தீனி, — திட்டம், — அளவு, — இரசப்படி. || வழக்கம், வாடிக்கையானது, மாமூல். || ஞானாதிகாரமுள்ள —, விசாரணைப் பங்கின் மேற்றிராணியார், — சிரேஷ்ட குரு.|| திட்டமான தபாற்காரன், தபால் நாள். || *pl.* சூதகம், மாதவிடை : vin d'— வழக்கமானவிரசம் ; — de messe பூசையின் மாறாத செபங்கள் ; c'est son —, c'est l'— அவன்—, அது வழக்கமாம் ; à l'—, d'—, pour l'—, *ou*

Ordinairement, *adv.* வழக்கம் —, மாமூலாய், வழக்கத்தின்படி, பெரும்பாலும், — பான்மையாய்.

Ordinal, *adj.* கிரமம் —, வரிசை —, ஒழுங்கு காட்டுகிற (கணக்கு.)

Ordinand, *m.* பட்டம்பெறவிருக்கிறவன், பட்டம் வாங்கப்போகிறவன்.

Ordinant, *m.* பட்டங்கொடுக்கிறவர்.

Ordination, *f.* பட்டங்கொடுத்தல், — பெறுதல், பட்டாபிஷேகம்.

Ordo, *m.* தினச்செப ஒழுங்குபுஸ்தகம்.

Ordonnance, *f.* ஒழுங்கு, திட்டம், கிரமம், முறை, பொருத்தம், ஒழுக்கம், முறைமை. || அரசன் கட்டளை, பட்டோலை, கட்டளைச் சட்டம், கற்பனை, தீர்மானம், தீர்ப்பு. || (ஓர் பொருளைச் சேர்ந்த) கட்டளைச் சேர்க்கை. || வைத்தியன் கட்டளை, மருந்துமுறைப் பட்டோலை. || பணங்கொடுக்க உத்தரவு. || படைத்தலைவனேவற்காரன் : compagnie d'— தனிப்படைவகுப்பு ; habit d' — படைக்கோலவுடுப்பு ; officier d'— சேனாபதியின் கட்டளைகளைச் செலுத்துமுத்தியோகஸ்தன்.

Ordonnancement, *m.* பணங்கொடுக்க உத்தரவிடுதல், ஷை உத்தரவிடுங்கையொப்பம்.

Ordonnancer, *v. a.* பணங்கொடுக்க உத்தரவிடுதல், தீர்க்கவேண்டுமென்று ஒப்பமிடுதல் : — un état de dépense செலவு விபரந் தீர்ப்பதற்கு உத்தரவிடுதல். || s'— ஷை உத்தரவிடப்படுதல்.

Ordonnateur, trice, *s.* நடத்துகிறவன், கிரம —, ஒழுங்கு —, முஸ்திப்பு —, திட்டப்படுத்துகிறவன், — வள், விசாரணைக்காரன், பணங்கொடுக்க உத்தரவு கொடுப்பவன் : commissaire — படையின் செலவுகளைத் தீர்க்கக் கட்டளையிடுபவன்.

Ordonné, *adj.* கிரமம் —, ஒழுங்கான, திட்டமுள்ள, பட்டம் பெற்ற; tête bien — நல்லதிட்டமுள்ள —, சரியான புத்தி.

Ordonnée, *f.* வளைந்தவரியினின்று பெரிய மத்தியவரிக்கு நேராய்ப் போகும் வரி.

Ordonner, *v. a.* கற்பித்தல், கட்டளையிடுதல், — செய்தல், ஏவுதல், ஏவலிடுதல், விதித்தல், தாக்கீது பண்ணுதல், ஒழுங்கு —, திட்ட —, கிரமப்படுத்துதல், திட்டம்பண்ணுதல். || பட்டங்கொடுத்தல், பட்டாபிஷேகம் பண்ணுதல். || பணங்கொடுக்க உத்தரவிடுதல். || *v. n.* இஷ்டப்படி நடத்துதல், —நியமித்தல். || s'— ஒழுங்கு —, ஆயத்த —, கிரமப்படுதல், கிரமமாதல், இசைதல். || கற்பிக்கப்படுதல்.

Ordre, *m.* கட்டளை, கற்பனை, ஏவல், தாக்கீது, தாக்கிதை, சட்டம்.|| வரிசை, கிரமம், முறை, திட்டம், நிரை, அணி, இசைவு, பொருத்தம், அந்தஸ்து. || ஒழுங்கு, நல்லொழுக்கம், கடமை, சமாதானம், அமரிக்கை. || சனவகுப்பு, பிரிவு, சாதி, இனம், வருக்கம், கூட்டம், கும்பல், சங்கம். || சந்நியாச —, சபை. || குருப் —, பட்டம், பட்டாபிஷேகம். || இராவுத்தர் சபைவிருது, — அடையாளம். || வானோர்கணம். || பணந்தர உத்தரவிடுதல். || சிற்பமாதிரி, சிற்பத்தொழிலொழுங்கு. || காவல்மொழி : — alphabétique வருணக்கிரமம் ; — inverse எதிர் நிரனிறை ; — de bataille யுத்தவணி ; — du jour தினத்தில் ஆலோசிக்கவேண்டிய காரியங்கள், சேனாபதிகொடுக்குங் கட்டளைகள்; mettre à l'— du jour பிரசித்தப்படுத்துதல், விளம்பரம் பண்ணுதல்; esprit de premier — மேவான புத்தி; les — sacrés திருப்பட்டங்கள் ; mot d'— அறிந்துகொள்ளும் வார்த்தை ; par — வரிசை —, கிரமமாய் ; sous les — அதிகாரத்தில், ஆளுகை.

Ordure, *f.* மலம், அமேத்தியம், கஷ்டம், நரகல், கசுமாலம். || அசுத்தம், அழுக்கு, ஊத்தை, குப்பை. || அதப்பியம், அசப்பியம், துர்க்கிரியை.

Ordurier, ère, *adj.* அதப்பியம் —, அசுசியான. || *s.* அதப்பியம் பேசுகிறவன், — வள், நீசன், கசுமாலன், கசுமாலி.

Oréade, *f.* மலைப்பொய்த் தேவி.

Orée, *f.* காட்டோரம்.

Oreillard, *adj.* தொங்குகிற நெடுங்காதுள்ள. || *m.* ஓர் வவ்வால்.

Oreille, *f.* காது, செவி, சோத்திரம், சுரோத்திரம், கன்னம், சிரவணம். || காதுவடிவு. || பிடி, கைப்பிடி, காம்பு. || மூட்டைநுனியின் சீலைத்துண்டு. || சிலவிதழ்களின் செவி, — அடியின் வளர்ச்சி, புஸ்தகத்தில் மடங்கின ஏடு. || சீப்பின் ஈற்றுப்பல்கள் : préter l'— காது —, செவிகொடுத்தல் : ouvrir les — காது திறத்தல், ஆவலாய்க் கேட்டல் ; avoir les — rebattues de அடிக்கடி கேட்டிருத்தல் ; — d'écuelle கலத்தின் கைப்பிடி ; — d'ancre நங்கூரப்பல் ; — d'âne, d'homme, de lièvre, d'ours, de souris பலபூண்டின் பேராம் ; — de mer ஓர் கிளிஞ்சில்; mal d'— செவிக் குத்து, — ப்புற்று.

Oreillé, *adj.* காதுள்ள.

Oreiller, *m.* தலைக்காணி, தலையணை. தழுவணை, உபதானம் : — de maçonnerie ஒருகு:

Oreillette, *f.* சிறு காது, காதின் வளையம், — பின் துணி. || இருதயத்தைச்சேர்ந்த பை, —இரத்தாசயப் பை

Oreillon, *m.* காதின் சுற்றுவீக்கம், —கட்டி, கூகை —, ஊமைக்கட்டு. *V.* Orillon.

Orémus, *m* செபம், மந்திரம்.

Orénoque, (தென் அமேரிக்காவில்) ஒரொனெக்கு நதி.

Oréographie, *f.* மலைவருணிப்பு.

Ores, *adv.* இப்போது.

Orfèvre, *m.* தட்டான், பொற்கொல்லன், பொன்வினைஞன், சொர்னக்காரன், அக்கசாலையன்.

Orfèvrerie, *f.* தட்டான்வேலை, —தொழில்,—வித்தை, பொன் —,வெள்ளித்தட்டுமுட்டு.

Orfévri, *adj.* தட்டான் வேலைசெய்த.

Orfraie, *f.* கடற்பருந்து, யானை விச்சுளி.

Orfroi, *m.* சித்திரத் தையற்சரிகை.

Organdi, *m.* ஓர்வித கவணி.

Organe, *m.* பொறி, இந்திரியம், அங்கம், கருவி, கரணம், தாது. || குரல், சத்தம். || மூலம், வழி, தூதன், பிரதிகர்த்தன், காரியகர்த்தன் : — de perception ஞானேந்திரியம் ; il y en a 5 dits பஞ்சேந்திரியம், *ou* ஐம்பொறி;—d'action கருமேந்திரியம்; — intérieurs அந்தரிந்திரியம் *ou* உள்ளிந்திரியம் ; l'— de la vue கண் என்னும் பொறி ; — de la génération உபஸ்தம்; par l'— du ministre மந்திரிமூலமாக ; — mâles, femelles des plantes பூண்டுகளின் ஆண் — பெண்தாது.

Organeau, *m.* இருப்புவளையம்.

Organique, *adj.* ஒழுங்குபடுத்துகிற, அங்கபந்தத்துக்குரிய. || பொறிகள் —, அங்கமுள்ள, எத்தனத்து, இந்திரியம் —, உயிருள்ள, அங்கத்துக்கடுத்த, பொறிகளுக்கடுத்த : lois — அரசை ஒழுங்கு படுத்துகிற முறைமைகள் ; corps — பொறிகள் —, அங்கங்களுள்ள சரீரம், maladie — பொறிகளுக்கடுத்த, — அங்கங்களிலுள்ள வியாதி.

Organisateur, trice, *m. et adj.* ஒழுங்காக்குவதில் சமர்த்தன்.

Organisation, *f.* அங்கபந்தம், தன்மை, சரீரக்கட்டு, —சாங்கம், இசைப்பு, ஒழுங்கு, இராச்சியமுறைமை : — des plantes பூண்டுகளின் அங்கபந்தம்.

Organisé, *part.* அங்கம் —, உறுப்பு —, பொறி —, திட்டமுள்ள, இசைந்த, ஒழுங்குபட்ட ; tête mal — விபரீதமான தலை ; état — நல்லொழுங்குபட்டவிராச்சியம் ; les corps — உயிருள்ளவஸ்துக்கள், அங்கபொறிகளுள்ள வஸ்துக்கள், அதாவது மிருகங்களும் பூண்டுகளுமாம்.

Organiser, *v. a.* இந்திரியங்களை —, காரியங்களை —, இசைத்தல், அங்கபந்த —, ஒழுங்கு —, திட்டப்படுத்துதல், பொருத்துதல், முஸ்திப்புபண்ணுதல், ஏற்படுத்துதல் || பல குழல் வாத்தியம் பொருத்துதல். || s'— அங்கபந்த —, ஒழுங்கு —, திட்டப்படுதல், உயிரை —, இந்திரியங்களைப் பெறுதல்.

Organisme, *m.* அங்கபந்தம், —ச்சேர்க்கை, — க்கட்டு, —ஒழுங்குபடுத்தும் வகை, திட்டம்.

Organiste, *m.* வாத்தியக்காரன், குயிலுவன்.

Organsin, *m.* திரித்த பட்டுநூல்.

Organsinage, *m.* Organsiner, *v. a.* (பட்டுநூல்) திரித்தல்.

Orge, *f.* வாற்கோதும்பை, யவம், அதின் மணி. || *m.* — mondé தொலித்த வாற்கோதும்பை; — perlé முத்துபோலான வாற்கோதும்பை ; — mondé, perlé ஷை வாற்கோதும்பை கஷாயம்.

Orgeade, *f.* Orgeat, *m.* சர்க்கரை வாதுமைக்கொட்டை கலந்த வாற்கோதும்பைப்பானகம்.

Orgelet, *m.* கண்கட்டி, சிறு வாற்கோதும்பை.

Orgiaque, *adj.* மிதமிஞ்சின குடி சம்பந்தமான.

Orgie, *f.* மிதமிஞ்சின குடி. || *pl.* பக்குஸ் என்பவள் —, குடிவெறிப் பண்டிகை.

Orgue, *m.* (*pl. f.*) பலகுழல் வாத்

தியம், —வாத்தியவிடம். ‖ தூக்குகதவு. ‖ துப்பாக்கிச்சேர்க்கை : — expressif மனசின்படி ஓசையுசத்துந் தாழ்த்தும் ஷை வாத்தியம் ; — de Barbarie திரண்டகட்டையால் நடக்கிற ஷை வாத்தியம் ; point d'— ஷை வாத்தியசங்கீதத்தில் தரிப்புக்காலம். [கிளிஞ்சில்.

Orgue-de-mer, *m.* குழல்வடிவான

Orgueil, *m.* ஆங்காரம், கர்வம், இறுமாப்பு, அகந்தை, செருக்கு, அகங்காரம், ஆணவம், கம்பீரம், மமகாரம். ‖ மகத்துவம், பெருமை. ‖ சலாக்கியம், ஆடம்பரம், சம்பிரமம்.

Orgueilleusement, *adv.* ஆகாரம் —, கர்வமாய், அகந்தையாய்.

Orgueilleux, euse, *adj.* ஆங்காரம் —, கர்வம் —, அகந்தை —, செருக்குள்ள, ஆடம்பரம் —, பெருமை—, சலாக்கியமுள்ள. ‖ *s.* ஆங்காரி. ‖ *m.* கண்கட்டி.

Orient, *m.* கிழக்கு, கீழ்த்தேசம், —த்திசை, —ப்பக்கம், —ப்புறம், குணக்கு, எழுவான், பூருவம். ‖ ஆசியாவின் கீழ்த்தேசங்கள், — மேல்தேசங்கள். ‖ காந்திநிறம் : l'— d'une carte, தேசப்படத்தின் வலதுபக்கம்.

Oriental, e, *adj.* கிழக்கிலுள்ள, கீழ், கீழ்த்திசையான, கீழை, குண, பூருவ, கீழ்த்தேசங்களுக்குரிய, —தேசங்களிலுள்ள.

Orientalisme, *m.* கீழ்த்தேசங்களைச் சார்ந்த விபரங்கள் யாவும் அறிந்திருத்தல், ஷை விபரங்களை அறியும் விருப்பம்.

Orientaliste, *m.* கீழ்த்திசைப் பாஷை சாஸ்திரி.

Orientation, *f.* திசைகளைக் குறித்தல், — அறிதல், துருவங்களுக்கடுத்த நிலை.

Orientaux, *m. pl.* கீழ்த்திசையார், ஆசியாகண்டத்தார்.

Orienter, *v. a.* திசைகளை —, திசை குறித்தல், நேர்திசை —, ஓர்திசை நோக்கித் திருப்புதல் : — une église கோவிலின் தலையைக் கிழக்கே திருப்புதல். ‖ s'—திசையறிதல், — அறிந்துகொள்ளுதல், எப்பக்கத்திலுமாராய்தல்.

Orifice, *m.* துவாரம், வாய், கண், ஓரம். [க்களின் விருதுக்கொடி.

Oriflamme, *f.* பூர்வீகபிராஞ்சிராசா

Origanum majorana, மருகு.

Origénistes, *m. pl.* ஒரிஜேன் என்பவன் மதத்தார், ஓர்வித பதிதர்.

Originaire, *adj.* பிறந்த, நின்றுவருகிற, சென்ம, சுயமான : — d'Italie இத்தலிதேசத்திற்பிறந்த ; vice — சென்மதுர்க்குணம். [ஆதியில்.

Originairement, *adv.* துவக்கத்தில்,

Original, e, *adj.* அசல் —, மாதிரி —, மூலமான. ‖ நூதன, சுயமான, மாதிரியற்ற, தானுயுருபிகரித்த, — உருபிகரிக்கிற. ‖ விபரீதமான, ஒப்பற்ற, நிகரற்ற : lettre — அசலான காகிதம் ; caractère — விபரீதமான —, நிகரற்ற குணம்; idée — நூதனமான எண்ணம், texte — அசல் —, முதற்பிரதி. ‖ *m.* மேற்பாடம், அசற் —, மூல —, முதற்பிரதி, தாயேடு, — சீட்டு, மாதிரி, (சித்திரத்துக்கு ..) மாதிரியானவன், சிறந்த நூலாசிரியன், நிகரற்றகுணத்தான் விபரீதகுணமுள்ளவன், நூதனம் —, விபரீதமானது.

Originalement, *adv.* நூதன—, விபரீதவிதமாய்.

Originalité, *f.* நூதனம், விபரீதம், நிகரற்ற—, விசேஷ —, விபரீதகுணம்.

Origine, *f.* ஆதி, துவக்கம், முதல், மூலம், வேர், அஸ்திவாரம். ‖ ஆதி —, காரணம். ‖ வமிசம், கோத்திரம், உற்பவம். ‖ சொல்லுர்பவம், —மூலம்; dans l'— துவக்கத்தில், ஆதியில்.

Originel, elle, *adj.* சன்ம, சுய, சுபாவம்—, மூலமான, பூர்வ, ஆதியின்: péché — சென்மப்பாவம் ; justice, grâce — ஆதியிலுண்டான பரிசுத்தத்தனம், — இஷ்டப்பிரசாதம்.

Originellement, *adv.* ஆதியில், ஆதியினின்று, ஆதிதுவக்கி.

Orignac, Orignal, Orignau, *m.* (கனடாதேசத்து) கடமா.

Orillard, *V.* Oreillard.

Orillon, *m.* சிறு காது, காது, கைப்பிடி, காதின் சுற்றுவீக்கம், (கலப்பையின்) காது.

Orin, *m.* மிதக்குங் குறிப்பின் நங்கூரக் கயிறு.

Orion, *m.* ஓர் தென்தாரகணம்.

Oripeau, *m.* காக்காய் —, கள்ளப்பொன், சருகுபித்தளை, வீண்காந்தி, கள்ளச்சிறப்பு, —ப்பொன்சரிகை, பொன் மங்கின பழைய புடவை.

Orissa, (இந்துதேசத்தில்) உரிசாநாடு.

Orle, *m.* போதிகைக் கீழ்க்கோடு.

Orléanais, e, *adj. et m.* ஓர்லெயான் நகரத்து, — நகரத்தான், — நகரநாடு

Orléans, (பிராஞ்சுதேசத்தில்) ஓர்லெயான் நகர். || *m.* ஷை நகர ரசம்.

Ormaie, *f.* காஞ்சிமரச்சோலை.

Orme, *m.* ஓர் காஞ்சிமரம்.

Ormeau, *m.* ஓர் காஞ்சி —, சிறு காஞ்சி —, காஞ்சிமரம்.

Ormille, *f.* சிறு காஞ்சிமரச்சோலை, — வேலி.

Ormoie, *f. V.* Ormaie.

Ormus, (பெற்சியகுடாக்கடலில்) ஓர் முஸ்தீவு, — நகர்.

Orne, Ornier, *m.* மானென்னுஞ் சாரங்கருமரம்.

Orne, (பிராஞ்சுதேசத்தில்) ஓர்னென்னும் ஆறு, — ஜில்லா.

Orné, *part.* சோடிப்பு —, சிறப்பு —, அலங்காரமான, சோடிக்க...ப்பட்ட.

Ornemaniste, Ornementiste, *m.* சோடிப்புகளைச் செய்கிறவன்.

Ornement, *m.* அலங்காரம், சோடிப்பு, கோலம், சிங்காரம், அணி, வன்னிப்பு, மகிமை. || பூசையாயத்தம், ஆயத்தம். || *pl.* பூசையாயத்தமுதலியதுகள், பூசையாயத்தச் சேர்க்கை : l'— blanc வெள்ளையாயத்தம். [ரிய.

Ornemental, e, *adj.* சோடிப்புக்கு

Ornementation, *f.* அலங்கரிப்பு, சோடிப்பு. [சிங்காரித்தல்.

Ornementer, *v. a.* அலங்கரித்தல்,

Orner, *v. a.* அலங்கரித்தல், சிங்காரித்தல், சோடித்தல், சிறப்பித்தல், அணிதல், புனைதல், அலங்காரமாய் —, மகிமையாயிருத்தல்.

Ornière, *f.* சுவடு, சக்கர —, சில்லுப்பாதை, தேரடி, சில்லிரேகை. || வழக்கம், வழி, பாதை. [முள்ளங்கி.

Ornithogale, *m.* ஓர் பூண்டு, மலை

Ornitholithe, *f.* கல்லிற்பதிந்த —, கல்லான பக்ஷி.

Ornithologie, *f.* பறவைவிளக்கம், — சாஸ்திரம். [பக்ஷியிற்சாஸ்திரி.

Ornithologiste, Ornithologue, *m.*

Ornithomance, Ornithomancie, *f.* (அஞ்ஞானம்) பக்ஷிச் சகுனம்.

Orobanche, *f.* வேறே பூண்டின் மேல் வளரும் ஓர் புல்.

Orobanchoïdes, *f. pl.* ஷை புல்லினம்.

Orobe, *f.* காருளுந்து.

Orographie, Orologie, *f.* மலைவிளக்கம், — வருணிப்பு.

Orographique, Orologique, *adj.* மலைவிளக்கத்து.

Oronge, *f.* நாரத்தம்பழநிறமான காளான்.

Orpaillage, *m.* பொற்சன்னமெடுக்குந் தொழில். [கிறவன்.

Orpailleur, *m.* பொற்சன்னமெடுக்

Orphelin, e, *s.* தாய்தகப்பனிழந்த பிள்ளை, — இல்லாத பிள்ளை, அநாத பிள்ளை, அநாதன், அநாதி, அறவை.

Orphelinat, *m.* அநாதபிள்ளைமடம்.

Orphéon, *m.* ஓர் வாத்தியக் கருவி, பாட்டுபடிக்கும் ஓர்வகை. [டம்.

Orphéonistes, *m. pl.* பாடுவர் கூட்

Orphie, *f.* ஓர் மீன். [டைய.

Orphique, *adj.* ஓர்பே என்பவனு

Orpiment, *m.* அரிதாரம், பொன்னரிதாரம், தாளகம், அரிதளம், இலேசுணம்.

Orpin, *m.* ஓர் பூண்டு. || *V.* Orpiment.

Orque, *f.* திமிங்கிலப்பகைமீன், வேளாச்சுரு.

Orseille, *f.* ஓர் கற்பாசி, ஊதாசசாயந்தருமதின் பிசைந்தமா.

Ort. *adv.* peser — கோணியோடு நிறுத்தல்.

Orteil, *m.* காலின்விரல், — பெருவிரல், — கட்டைவிரல்.

Orthodoxe, *adj.* சத்தியபோதகமான, — அநுசரிக்கிற, வேதநூல் முறையான, சத்தியபோதகத்துக் கொத்த. || *s.* சத்தியபோதகத்தநுசாரி, — போதகமநுசரிக்கிறவன், — வள், சத்தியவேதத்தான், — வேதத்தாள் . église — சத்தியபோதகமநுசரிக்கிற திருச்சபை, (பிரிவினையான ருசியசபை அந்தப்பேர் அபகரித்ததினால்) ருசிய — கிரேக்குச்சபை.

Orthodoxie, *f.* சத்தியபோதகம், — வேதம், — விசுவாம், — நெறி : douter de l'— de quelqu'un ஒருவன், போதகத்தின் —, விசுவாசத்தின்பேரிற் சந்தேகப்படுதல்.

Orthodromie, *f.* கப்பல் நேர்வழி.

Orthogonal, e, *adj.* சாயாத, நேர்நிலையான, — கோணமுள்ள.

Orthographe, *f.* எழுத்திலக்கணம், அக்ஷரவிலக்கணம், பிழையறவெழுதும் வகை, (சொல்) எழுதும் விதம் : faute d' — எழுத்திலக்கண —, எழுத்துப்பிழை, தப்பிதம், தப்பறை, பீறல்.

Orthographie, *f.* வீட்டுயரத்தின் —, நேர்நிலைப் பணிக்கு.

Orthographier, *v. a.* இலக்கணத்தின்படி யெழுதுதல்.

Orthographique, *adj.* எழுத்திலக்கணத்துக்கடுத்த, — உரிய, நேர்நிலைப் பணிக்குக்கடுத்த : signes — எழுத்திலக்கணத்துக்குரிய குறிகள் ; projection — நேர்நிலைப்பணிக்கு.

Orthographiste, *m.* எழுத்திலக்கணி, — இலக்கணத்தில் தேர்ந்தவன்.

Orthologie, *f.* தப்பில்லாமல் பேசும் வித்தை.

Orthopédie, *f.* (பிள்ளைகளின்) உடலூனந்திருத்தும் வித்தை.

Orthopédique, *adj.* ஷை வித்தைக்கடுத்த : établissement — பிள்ளைகளினுடலூனந் திருத்தும் வீடு.

Orthopédiste, *m.* ஷை ஊனந்திருத்தும் வித்தைக்காரன்.

Orthopnée, *f.* மாரடைப்பு, தலைநிமிர்ந்து மூச்சுவாங்கவிடுகிற காசம்.

Orthoptères, *m. pl.* ஓர்வித வண்டுகள்.

Ortie, *f.* காஞ்சொறி, காஞ்சோன்றி, ஆம்பு, கண்டேதி. ‖ குதிரைக்காரத் திரி.

Ortié, *adj.* சொறிவுகூடிய, — கொடுக்கிற.

Ortive, *adj. f.* கிழக்கினின்று சாய்ந்த.

Ortolan, *m.* சுவையாகிய ஓர் பக்ஷி.

Orvale, *f.* ஓர் பூண்டு.

Orvet, *m.* விஷமற்றபாம்பு, துண்டுக்கத்தரி.

Orviétan, *m.* விஷமருந்து : marchand d'— வீதிகளில் மருந்து விற்பவன், வீம்பு —, பாமரவைத்தியன், எத்தன்.

Oryctérope, *m.* பூமிதோண்டும் பல்லற்றமிருகங்கள்.

Oryctographie, Oryctologie, *f.* தோண்டி எடுபடும் வஸ்துகளின் விளக்கம், — வருணிப்பு.

Os, *m.* எலும்பு, என்பு, அஸ்தி, அத்தி, களேபரம். ‖ (மான்) நகம், குளம்பு : — de poisson மீனெலும்பு, — முள்ளு, — de sèche உபரசம், கடற்றீ, கடனுரை ; faire de vieux — நெடுநாள் சீவித்தல்; jusque dans, jusqu'à la moelle des — எலும்புகளின் மூளைமட்டும், ஆழமாய், மிகவும்.

Osbeckia ceylanica, செந்தும்பை.

Oscillation, *f.* ஆட்டம், அசைவு.

Oscillatoire, *adj.* ஆடுகிற, அசைகிற.

Osciller, *v. n.* ஆடுதல், அசைதல்.

Osculateur, trice, *adj.* வேறே வளைந்தவரி தொடுகிற.

Osculation, *f.* இருவளைந்தவரி தொடுமிடம்.

Osé, *adj.* துணிவு —, துணிகரமுள்ள.

Oseille, *f.* சுக்கான் கீரை, புளியாரை, தாகமடக்கி.

Oser, *v. a. et n.* செய்ய —, துணிதல், அஞ்சாதிருத்தல், துணிந்து ஏற்படுதல், துணிவாதல், துணிகரம் —, தைரியம் —, திடன்கொள்ளுதல்: ne pas— துணியாதிருத்தல்.

Oseraie, *f.* ஓர் அலரிச்சோலை.

Osier, *m.* ஓரலரி, வளைகிற செடி, — கொடி, அலரிக்கூடை.

Oseur, euse, *m. et adj.* துணிவுள்ள, தைரியமான.

Osmazôme, *f.* எலும்பின் சாரம்.

Osmium, *m.* சாம்பல் நிறலோகம்.

Osmonde, *f.* ஓர் பூண்டு.

Ossature, *f.* எலும்பு சேர்க்கை, ஜீவராசிகளில் எலும்புக்கூடு.

Osselet, *m.* சிற்றெலும்பு, ஓர் விளையாட்டுக்கருவியாகிய —, ஆட்டுத்தொடைச் சந்தின் சிற்றெலும்பு, குதிரைக் காலடிக் கழலை. ‖ ஓர் வேதனை. ‖ சில கனிகளின் கொட்டை.

Ossements, *m. pl.* எலும்புக்குவியல், எலும்புகள்.

Osseux, euse, *adj.* எலும்பின் தன்மையுள்ள, எலும்புள்ள : visage — மிகவுமிளைத்தமுகம்.

Ossianique, *adj.* ஒஸ்சியான் என்ற புலவன் மாதிரியான.

Ossification, *f.* எலும்பாதல், எலும்பாக மாறுதல்.

Ossifier, *v. a.* எலும்பாக்குதல், எலும்பாகமாற்றுதல். ‖ s'— எலும்பாதல், — ஆகமாறுதல்.

Ossu, *adj.* பெரிய —, மிகுந்த எலும்புள்ள. [மிடம், எலும்புக்குவியல்.

Ossuaire, *m.* எலும்புகளை வைக்கு

Ost, *m.* படை, சேனை, தளம்.

Ostéite, *f.* எலும்புகளில் பலமான வலி.

Ostende, (பெல்ஜிக்குதேசத்தில்) ஒஸ்தெந்து நகர். [நகரத்தான்.

Ostendois, e, *adj.* ஷை நகரத்து,—

Ostensible, *adj.* காட்டத்தக்க, பிரசித்தமான, வெளியரங்கமான.

Ostensiblement, *adv.* காட்டுதற்குரியவிதமாய், பிரசித்தமாய்.

Ostensoir, Ostensoire, *m.* தேவ நற்கருணை ஸ்தாபக —, கதிர்ப் பாத்திரம்.

Ostentateur, trice, *adj.* சலாக்கியம் —, பாராட்டுள்ள, — க்காரன், — காரி, வீம்பன்.

Ostentation, *f.* பாராட்டு, சலாக்கியம், வீம்பு, காட்டு, ஆடம்பரம், பிலுக்கு, இடம்பம், கோலாகலம்.

Ostéocolle, *f.* அஸ்தியொட்டு பிசின்.

Ostéocope, *adj.* எலும்புடைவுக்கொத்த. [விருத்தி,—யுற்பவவிளக்கம்.

Ostéogénie, *f.* அஸ்தியுர்பவம், —

Ostéographie, Ostéologie, *f.* என்பு—, எலும்புவிளக்கம், —விளக்க நூல், — சாஸ்திரம்.

Ostéolithe, *m.* கல்லான எலும்பு.

Ostéotomie, *f.* எலும்புகளின் அறுப்பு, — கூறுபாடு. [நகர்.

Ostie, (இத்தலிதேசத்தில்) ஒஸ்தி

Ostracé, *adj.* பலகடின செதிளுள்ள, மீன் ஓட்டு —, மட்டிவடிவுள்ள.

Ostraciser, *v. a.* தேசப்பிரஷ்டம் செய்தல்.

Ostracisme, *m.* பத்துவருஷபரதேசத் தீர்வை, புறதேசத்துக்குத் துரத்தக் கிளிஞ்சிலில் எழுதிய ஓம்பாடு.

Ostracite, *f.* கல்லானமட்டியோடு.

Ostréiculture, *f.* மட்டிக்கல் விர்த்தியாக்கும் சாஸ்திரம்.

Ostrogot, Ostrogoth, *m.* கீழ்த்திசைக் கோத்தன், — கோத்தென்னுஞ் சனத்தான். || முரடன், மரியாதையறியாதவன்.

Otage, *m.* கிரி, பிணையாளி, கிரியிருப்பவன், — யிருக்கும் நகர், பிணை.

Otalgie, *f.* காதின் நோய், — வலி.

Otalgique, *adj.* காதின் நோய்க்கடுத்த, —நோயமர்த்துகிற, —நோய்க்குரிய.

Otarie, *f.* பசிப்பிக் சமுத்திரத்தில் வசிக்கும் ஓர் பிரமாண்டமான நீர்நாய்.

ôté, *prép.* தவிர, ஒழிய. || *part.* நீக்க —, கழிக்க —, தள்ளப்பட்ட.

ôter, *v. a.* எடுத்தல், எடுத்துப்போடுதல், தள்ளுதல், நீக்குதல். || ஒழித்தல், விலக்குதல், அகற்றுதல், போக்குதல், கழித்தல். || பறித்தல், பிடுங்குதல், கவர்தல், திரும்ப வாங்குதல். || அழித்தல், தள்ளிப்போடுதல். || இரட்சித்தல், மீட்டல் : — de la tête, de l'esprit புத்தியினின்று நீக்குதல், தள்ளிவிடுதல் ; — la vie உயிர் பறித்தல், கொல்லுதல்;— des abus கெட்டவழக்கந் திருத்துதல், — ஒழித்தல், — un impôt ஓர்வரி தள்ளிவிடுதல் ; — quelqu'un d'inquiétude ஒருவன் கவலை ஒழித்தல். || s'— நீங்குதல், இடைந்துபோதல், ஒருவனொருவனிடத்தினின்று பறித்தல், எடுபடுதல்; s'— une idée de la tête தன் புத்தியினின்று ஓர் நினைவு தள்ளிவிடுதல்.

Otite, *f.* காதில் வீக்கம்.

Otter, *m.* (— qui creuse les puits ..), ஒட்டன், (*f.* ஒட்டச்சி, ஒட்டத்தி).

Ottoman, e, *adj.* துலுக்கருடைய, துலுக்கருக்கடுத்த : la cour, la porte — துலுக்கரிராயன் அரமனை. || *m.* துலுக்கன். || *f.* துலுக்கச்சி, பகற்சயனமஞ்சம்.

Ou, *conj.* அல்லது || ஆவது, ஆகிலும், என்கிலும், ஏனும் (répété): Pierre ou Paul இராயப்பன் அல்லது சின்னப்பன், இராயப்பனாகிலுஞ் சின்னப்பனென்கிலும்.

Où *adv. int.* எங்கே, எவ்விடத்தில், எவ்விடத்துக்கு ; où es-tu எங்கேயிருக்கிறாய் ? où vas-tu எங்கேபோகிறாய் ? d'où viens-tu எங்கேயிருந்து வருகிறாய்? par où es-tu venu எவ்வழியாய் வந்தாய் ? par où commenceras-tu எவ்விடத்தில் —, எப்பக்கத்தினால் துவக்குவாய் ? jusqu'où iras-tu எவ்விடமட்டும் —, எதுவரைக்கும் —, எங்கேவரைக்கும் போவாய் ?

Où, *adv. relatif, pour* dans lequel, auquel, *est compris dans le participe ou s'exprime par* எங்கே —

... ஒ... அங்கே, எவ்விடத்திலேயோ அவ்விடத்தில் ; le lieu où je vais நான் போகிறவிடம், நான் எங்கே போகிறேனோ அங்கே ; ces biens où ton espoir se fonde நீயுன் நம்பிக்கை வைத்திருக்கிற ஆஸ்திகள், நீ எந்தப்பொருட்களில் உன் நம்பிக்கை வைத்திருக்கிறாயோ அந்தப்பொருட்கள் ; où l'imprudent périt, les habiles prospèrent அவிவேகி கெட்டுப்போகிற இடத்தில் —, *ou* அவிவேகி எங்கே கெட்டுப்போகிறானோ அங்கே கெட்டிக்காரர் வாழ்கிறார்கள் ; la ville d'où je viens நான் விட்டுவருகிற பட்டணம், நான் எந்தப்பட்டணத்தினின்று வருகிறேனோ அந்தப்பட்டணம் ; le chemin par où j'ai passé நான் வந்தவழி, நான் எவ்வழியாய் வந்தேனோ அந்தவழி.

Ouaille, *f.* ஆடு. ‖ (குருவின், மேற்றிராணயாரின்) விசாரணைக் கிறீஸ்துவன். ‖ *pl.* ஆடுகள், மந்தை.

Ouais, *int.* ஆஅ, ஓஒ, (அதிசயங் குறிக்கும்.)

Ouate, *f.* மெத்தை, துத்து, சிம்பா, இருசீலைக்குள் வைக்கிற பஞ்சு.

Ouater, *v. a.* மெத்தை —, துத்து போடுதல்.

Oubier, *m.* ஓரிராசாளி.

Oubli, *m.* Oubliance, *f.* மறதி, மறத்தல், மறப்பு, பொச்சாப்பு, அயர்தி, அயர்ச்சி : commettre un — மறந்துபோதல் ; tomber dans l'— மறக்கப்படுதல்.

Oubliable, *adj.* மறந்துபோகக்கூடிய.

Oublie, *f.* சுருண்ட மெல்லிய பலகாரம்.

Oublié, *part.* மறக்கப்பட்ட, மறந்த.

Oublier, *v. a.* மறத்தல், மறந்துபோதல், — விடுதல், நினையாமல் —, அசட்டையாய் —, விட்டுவிடுதல், அயர்தல், பொச்சாத்தல், அசட்டைபண்ணுதல், அறியாதிருத்தல், சட்டைபண்ணாமல் —, நினையாதிருத்தல், பழக்க மற்றுப்போதல் ; — son devoir தன் கடமையை மறந்து — கடமைக்குத் தப்பிப்போதல். ‖ s'— செய்யவேண்டியதை செய்யாமல் பிசகிப்போகிறது.

Oubliettes, *f. pl.* மறதி, — யிடம், நித்திய இரகசிய சிறைச்சாலை, படுகுழி ; mettre aux —, dans les — மறந்துவிடுதல்.

Oublieur, *m.* சுருண்ட மெல்லிய பலகாரக்காரன்.

Oublieux, euse, *adj.* மறக்கிற, மறதியுள்ள, — க்குணமுள்ள, — க்காரன், — காரி, ஞாபகமற்ற.

Oued, *m.* சஹாராபாலைவனத்தில் சிறிதுகாலம் மாத்திரம் காணப்படும் சிற்றோடை.

Ouest, *m.* மேற்கு, மேற்றிசை, மேல்திசை, குடக்கு, மேலைத்தேசம். ‖ மேற்காற்று, கச்சான்.

Ouf, *int.* ஐயோ ! ஓ.

Oui, *adv.* ஆம், ஓம், ஆமாம். ‖ *m.* ஆமென்பது.

Ouï, *part.* கேட்கப்பட்ட, கேட்ட, — பின்.

Oui-da, *adv.* ஆம், மெய்யாகவே, ஆமாம், அப்படியே, மெய்யில், இஷ்டமாய், சந்தோஷமாய்.

Ouï-dire, *m.* கேள்வி, — மூலம், ஊர்ப்பேச்சு.

Ouïe, *f.* செவி, — ப்புலன், காது, சுரோத்திரம். ‖ *pl.* (மீன்) செவுள், பூ, மீன் மூச்சுக்கருவி. ‖ வாத்திய மேற்பலகைத் துவாரங்கள்.

Ouillage, *m.* Ouiller, *v. a.* பீப்பாவைமுழுது நிரப்ப இரசம் வார்த்தல்.

Ouïr, *v. a.* கேட்டல், செவிகொடுத்தல், கேள்விப்படுதல், கேட்டருளுதல், சனுவாய்க் —, நியாயங் கேட்டல் : — des témoins சாட்சிக்காரர் வாக்குமூலங் கேட்டல் ; condamner sans — நியாயங்கேளாமல் தீர்வையிடுதல் : — dire கேள்விப்படுதல்.

Ouistiti, *m.* ஓர் குரங்கு.

Oukase, *m. P.* Ukase.

Ouléma, *m. P.* Uléma.

Ouloundou, *m.* (sorte de céréale) உளுந்து.

Oupanichad, (essence des vêdas) உபநிஷதம்.

Ouragan, *m.* பெரும்புசல், சூறை —, பெருங் —, சுழற்காற்று, சண்டமாருதம்.

Ourals (monts...), ருசியாதேசத்தில் ஓர் மலைத்தொடர்.

Ourdir, *v. a.* பாவிழைத்தல், பாவோடுதல், நெய்தல், நெசவுசெய்தல்

ஏற்படுத்துதல், கட்டுதல், ஆலோசித்தல். || கயிறாகத் தக்க பெருநூலைத் திரித்தல். || அலரிக்கொடி பின்னுதல், பாயாக வைக்கோலைப் பின்னுதல். || முதற்சாந்து பூசுதல்.

Ourdissage, *m*. பாவிழைக்கும் வேலை, — விதம்.

Ourdisseur, euse, *s*. பாவிழைப்பவன், — வள்.

Ourdissoir, *m*. பாவிழைக்குங்கருவி.

Ourler, *v. a*. விளிம்பு —, ஓரந் —, சுற்றிலுந் தைத்தல்.

Ourlet, *m*. (சீலையில்) தைத்த ஓரம், — விளிம்பு, முன்றானை. || பெரிய தோலோரத்தில் தைத்த தோற்கச்சு. || இருதகடொட்டச் செய்யுமடிப்பு. || (வேறே குழாயிசைக்கக்) குழாய் வாயின் விரிவு.

Ours, *m*. கரடி, எலு, உளியம், பல்லம், பல்லூகம். || வெகு மயிருள்ளவன், கூட்டஞ் சேராதவன், சேராத குணமுள்ளவன் ; — mal léché நன்றாய் நக்காத கரடி, மரியாதையற்ற —, துஷ்ட முரடன்.

Ourse, *f*. பெண் —, பெட்டைக்கரடி. || வடக்கு : grande — சப்தரிஷி, ஏழு இரிஷியென்னும் வடதாராகணம், petite — சிறு கரடியென்னுந் தாராகணம்.

Oursin, *m*. ஓர் கடற்கிளிஞ்சில்.

Oursiné, *adj*. கூர் —, முள் சிலும்பின.

Ourson, *m*. கரடிக்குட்டி, ஆத்துமா.

Ourvari, *m*. *V*. Hourvari.

Oust, *int*. யாதொருவரைத் துரத்த உபயோகிக்கும் சொல்.

Outarde, *f*. நெடுங்காற்கோழி.

Outardeau, *m*. ஷை கோழிக்குஞ்சு.

Outil, *m*. கருவி, ஆயுதம், எத்தனம், தளவாடம், பணிமுட்டு.

Outillage, *m*. ஓர் தொழிலுக்குத் தேவையான ஆயுதங்கள்.

Outillé, *adj*. கருவி —, ஆயுதம் —, எத்தனமுள்ள.

Outiller, *v. a*. வேண்டியகருவி — ஆயுதங்கொடுத்தல். || s'— வேண்டிய கருவி — ஆயுதஞ் சம்பாதித்தல்.

Outlaw, *m*. தேசசட்டத்துக்கு விரோதமாய் நடப்பவன், பெருங் கள்ளன்.

Outrage, *m*. அவமானம், அநாசாரம், நிந்தை, அவமதிப்பு, தூஷணம், வசை, ஏச்சு.

Outrageant, *part*. அவமானம் —, பழிப்பு —, இழிவான, அபகீர்த்திக்குரிய.

Outrager, *v. a*. அவமான —, நிந்தை —, பங்கப்படுத்துதல், அவமானம் பண்ணுதல், — ஆயிருத்தல், தூஷித்தல், அவமதித்தல், தூஷணித்தல், நிந்தித்தல், ஏசுதல், திட்டுதல்.

Outrageusement, *adv*. அவமானம் —, நிந்தை —, மானபங்கம் —, பழிப்பாய். || மிகவும், மிதமிஞ்சி.

Outrageux, euse, *adj*. அவமானம் —, நிந்தை, — தூஷணம் —, பழிப்பான.

Outrance, *f*. அளவுக்குமேற்பட்டுச் செய்தல் || à —, à toute —, *adv*. மிதமிஞ்சி, அளவின்றி. || சாகுமட்டும்.

Outrancier, ère, *s*. *et adj*. எக்காரியத்தையும் மட்டுக்குமிஞ்சி செய்கிறவன்.

Outre, *f*. துருத்தி, சித்தி, தோற் —, [சித்தை.

Outre, *prép*. அல்லாமல், தவிர, ஒழிய, அன்றி, அன்றியும் || அப்பால். || *adv*. அப்பாலே, அதிக தூரமாய்: passer — அப்பாலே கடத்தல் ; d'— mer கடலுக்கப்பாலிருக்கிற : en — அல்லாமலும், பின்னும், மேலும் ; — que உமல்லாமல், அல்லாதே; d'— en — ஊடுருவ.

Outré, *adj*. மிதமிஞ்சின, மிதந்தப்பின, மிஞ்சின, அதிகம் —, மிகுதி —, பிரமாண்டமான. || இயல்பற்ற, பாராட்டுள்ள. || மிகவுமிளைப்புள்ள, — இளைத்த. || எரிச்சலுள்ள, மிகுந்த கோபமுள்ள, வெறியுள்ள, பொங்குகிற.

Outrecuidance, *f*. மிஞ்சின துணிவு.

Outrecuidant, *adj*. மிஞ்சின துணிவுள்ள.

Outrément, *adv*. மிதந்தப்பி, மிகுதி [யாய்.

Outremer, *m*. வான —, சுத்தநீலம்.

Outre-mer, *loc. adv*. கடலுக்கப்புறம், கடல்தாண்டி.

Outre-mesure, *adv*. மிதமிஞ்சி.

Outre moitié, *adv*. பாதிக்குமேலே.

Outre-monts (d') *loc. adv*. மலைகளுக்கப்புறம்.

Outrepasse, *f*. எல்லைகடந்த வெட்டுமரம்.

Outrepasser, *v. a.* கடத்தல், அப்பால் —, தாண்டிப்போதல். || மீறுதல்.

Qutrer, *v. a.* வருத்துதல், இளைப்பித்தல், களைப்பித்தல், மிஞ்சினவேலை செய்வித்தல், அதிகமாய் ஓட்டுதல். || மிதந்தப்புதல், அதிக பெரிசாக்குதல், பாராட்டுதல். || அவமான—, கோபப்படுத்துதல், எரிச்சலாக்குதல். || s'—அதிகமாய் வருந்துதல், — இளைத்தல்.

Outre-tombe, *adv.* சமாதிக்கப்புறம், சாவுக்குப்பின்.

Outsider, *m.* சபையில்சேராதவன், பிரிவில் அடங்கியில்லாதவன்.

Ouvert, *part.* திறந்த, திறப்பான, மூடப்படாத, மலர்ந்த, விரிந்த. || பிரசித்த, பிரசித்தம் —, வெளிப்படை —, வெளி —, தெளிவான, ஏதுவான. || கபடற்ற, திறந்தமனமுள்ள : pays — திறப்பான —, கோட்டையற்றதேசம் : ville — கொத்தளமற்றநகர் ; compte — துவக்கமான —, முடியாத கணக்கு; tenir table — (வருகிறவர்களுக்கு) முஸ்திப்பான தீனிமேசை வைத்திருத்தல் ; esprit — எளிதாய்க் கண்டுபிடிக்கிற —, தெளிந்தபுத்தி; visage — மலர்ந்தமுகம் ; à force — பலவந்தமாய் ; à cœur — திறந்தமனமாய், கபடின்றி, சந்தோஷமாய் ; à bras — அரவணைப்பாய், நேசமாய் ; lire à livre — புஸ்தகந் திறந்தவுடனே வாசித்தல்.

Ouvertement, *adv.* பிரசித்தமாய், தெளிவாய், வெளியரங்கமாய், கபடில்லாமல்.

Ouverture, *f.* திறப்பு, திறத்தல். || பிளப்பு, கமர், துவாரம், வாயில், நுழை, வாசல். || வழி, போக்கு, உபாயம், சமயம். || கதவு, சன்னல், வில்வளைவு. || வெறுமிடம், விரிவு, விசாலம். || ஒத்துக்கொள்ளல், இரகசிய அறிக்கை, தெரியப்படுத்துதல், முதற்பேச்சு,— ஆலோசனை. || இயல்பான குணம், தகுதி. || துவக்கம், ஆரம்பம், துவக்கமாகிற சங்கீதம். || கூடுந் தன்மை, — விதம், வயணம், நியாயம்:—d'un angle கோணத்தின் விரிவு: — de cœur திறந்தமனம்; — d'esprit புத்திக் கூர்மை; faire des — inutiles வீணாய் ஆலோசனைகளைச் சொல்லிக்கொடுத்தல் ; — d'une campagne சண்டைத் துவக்கம்; à l'— du livre புஸ்தகந் திறக்கையில்.

Ouvrable, *adj.* வேலைக்குரிய, வேலை செய்யத்தக்க.

Pèlerinage, *m.* திருயாத்திரை, திருப்பிரயாணம், திருயாத்திரை—, திருஸ்தலம்.

Pèlerine, *f.* ஓர் கழுத்துக்குட்டை. || திரு யாத்திரைக்காரி; ஓர் கிளிஞ்சில்.

Pélican, *m.* தன் மார்பைக்குத்தித் தன் னிரத்தத்தினால் தன் குஞ்சுகளைப் போஷிக்கிறதாக எண்ணப்பட்ட பக்ஷி: — onocrotalus கூழைக்கிடா, நாரை ; — carbo நீர்க்காக்கை : — fusicollis பிலவம். ||.ஓர்வித பல்லிடுக்கி. || ஓர் வாலை.

Pelisse, *f.* மெல்லுரோம—, பட்டுச்சட்டை, மகளீர் பட்டுடை, — போர்வை, சேவகருக்குரிய உரோமத்தோற்சட்டை. [வியாதி.

Pellagre, *f.* ஓர் கடுமையான சர்ம

Pelle, *f.* மண்வாரி, பெருந்—, துடுப்பு, முழை. [ந்த பெருந் துடுப்பு.

Pellée, Pellerée, Pelletée, *f.* நிறை

Pelletage, *m.* Pelleter, *v. a.* மண்வெட்டியால் கிளறுதல்.

Pelleterie, *f.* மெல்லுரோமத்தோல், —தோல் பதனிடுந் தொழில்,— தோல் வியாபாரம்.

Pelletier, ère, *s.* மெல்லுரோமத்தோல் வியாபாரி,— பதனிடுகிறவன்.

Pellicule, *f.* மெல்லிய —, மேல்தோல். [கூடிய.

Pellucide, *adj.* பிரகாசம் ஊடுருவக்

Péloponèse, *m.* பெலொப்பொனேஸ்—, மொரை நாடு.

Pelote, *f.* உண்டை, பந்து, திரட்சி, திரளை, நூலுண்டை, குண்டூசி மெத்தை, உண்டையாய்த் திரண்டது. || புஷ்டியுள்ள குள்ளன்,— குள்ளி.

Peloter, *v. n.* திட்டமின்றிப் பந்து விளையாடுதல். || *v. a.* உண்டையாக்குதல், சுருட்டுதல், திரட்டுதல். || அடித்தல், திட்டுதல். || se — உண்டையாக்க—, சுருட்டப்படுதல், தங்களை அடித்துக் கொள்ளுதல், வெகுவாய்த் தர்க்கித்தல்.

Peloton, *m.* நூலுண்டை, நூற்கண்டு,— சுருள், தார், தாறு. || உண்டை,

திரட்சி, திரளை. || பந்து. || (சேவகர்) அணி, வகுப்பு, கும்பல். || திரண்ட மொய்ப்பு : se mettre en — உண்டையாதல், — ஆகத் திரளுதல் ; feu de — அணியணியாய்ச் சுடுதல்.

Pelotonnement, *m.* Pelotonner, *v. a.* உண்டையாக்குதல். || se— உண்டையாதல்,— ஆக்கப்படுதல், உண்டை, அணியாகத் திரளுதல்.

Pelouse, *f.* புல்நிலம், புற்றரை.

Peltaste, *m.* அரைவட்டக்கேடகக்காரன்,— சேவகன். || ஓர் வண்டு.

Pelu, *adj.* மயிருள்ள.

Peluche, *f.* நெடுமயிர்ச்சீலை.

Peluché, *adj.* மயிர்—, சுணையுள்ள.

Pelucher, *v. n.* (சீலை) மயிர்சிலிர்த்தல், சிலும்புதல்.

Pelure, *f.* (கனியின்) தோல், உரி : —d'oignon வெங்காயத்தோல், அதின் நிறம், பச்சை மட்டி, மெல்லிய கடுதாசி, ஓர் காளான், — உருளைக்கிழங்கு, — கிளிஞ்சில்.

Pelvien, enne, *adj.* ஆசனத்தெலும்புக்கடுத்த, உபஸ்தாசயத்து, கிண்ணியின்.

Pemphigus, *m.* கொப்புளிக்குங் காய்ச்சல்.

Pénaillon, *m.* கந்தை. || (இகழ்ச்சியாய்) முனி.

Pénal, e, *adj.* ஆக்கினையிடுகிற, — குறிக்கிற.

Pénalité, *f.* ஆக்கினைத் தன்மை, — த்திட்டம்,— யிடல்.

Penard, *m.* சூதன், காமாதுரன் : vieux — சூதுள்ள கிழ காமாதுரன்.

Pénates, *m. pl.* வீடு, மனை ; *ou* dieux — வீட்டு—, அடுப்பின்—, குல—, குடும்ப விக்கிரகங்கள்,— பொய்த்தேவர்கள்.

Penaud, e, *adj. et s.* வெட்கம்—, கூச்சல்—, கலக்கமுள்ள,— உள்ளவன்.

Pence, *m.*, *pl.* de Penny.

Penchant, *m.* சாய்வு, சார்பு, சாய்மானம், சாய்ப்பு, இறக்கம். || மனச்சார்பு,— சாய்மானம்,— சாய்வு, விருப்பம், நாட்டம் : — de l'âge சாய்ந்துபோகிற வயது ; être sur le — de sa ruine முழுதுங் கெடத்திரிதல். || *part.* சாய்ந்த, சாய்வுள்ள, சாய்கிற, இறக்கமான.

Penché, *adj.* சாய்கிற, சாய்வள்ள.

Penchement, *m.* சாய்தல், சாய்வு.

Pencher, *v. a.* சாய்த்தல், சாய்வித்தல், குனித்தல். || *v. n.* சாய்தல், சாருதல், குனிதல், சாய்வாய்—, சார்பாயிருத்தல், சரிதல், சாடுதல், தாழ்தல் : — à l'indulgence,— தயாளமாயிருத்தல், தயாளகுணம்படைத்தல் : — vers la ruine, கெடுதிவழிசெல்லல், கேட்டுக்கிடமான மார்க்கத்தைப் பின்பற்றல்:— pour பக்கமாய்ச்சார்தல். || se — குனிதல்.

Pendable, *adj.* தூக்குமரத்துக்குரிய,— பாத்திரமான, தூக்குணி.

Pendaison, *f.* தூக்கிப்போடுதல், தூக்குமரணம், நாலல்.

Pendant, e, *adj.* தூங்குகிற, தொங்குகிற, சாய்கிற : procès — இன்னந்தீராத பிராது. || *m.* கத்திவார். || சரியொத்தவன்,— யொத்தது,— யொத்தபடம், நிகர். || *pl.* சரியொத்தபடங்கள், — d'oreilles கடுக்கன், காதணி, குண்டலம், குழை, கொப்பு ; faire le — சரியொப்பாய்—, சோடாயிருத்தல்.

Pendant, *prép.* காலத்தில், நேரத்தில், அளவில்: || — que, *conj.* போது, உள்ளாக ; — qu'il délibère அவன் ஆலோசனை செய்கிறதுக்குள்ளாக.

Pendard, e, s. தூக்குணி, திருடன், (*f.* திருடி), போக்கிரி.

Pendeloque, *f.* காதணிமணி, தூங்கும் பளிங்கு, தொங்கணி, தூக்கம். || தூங்குந் துண்டு,— கந்தை.

Pendentif, *m.* கும்மட்ட வளைவு, வில்வளைவு, தாக்கு.

Pendiller, *v. n.* தொங்குதல், தொங்கியாடுதல்.

Pendoir, *m.* தொங்கவிடும் வளையம்.

Pendre, *v. a.* நூக்குதல், தொங்கவைத்தல், மேலே கட்டுதல், தூக்கிப்போடுதல், நாற்றுதல், ஞாற்றுதல். || *v. n.* தொங்குதல், தூங்குதல், நாலுதல், ஞாலுதல், அதிகமாயிறங்குதல், — தாழுதல் : faire — நாற்றுதல், நாலுவித்தல். || se — நான்று—, ஞான்றுகொள்ளுதல், நாலுதல், ஞாலுதல். || தொங்குதல், தன்னைத் தொங்கவிடுதல், — வைத்தல்.

Pendu, *part.* தொங்குகிற, தூங்குகிற, தொங்கல்—, தூக்கணமான. || தூக்கப்பட்ட, நான்றுகொண்ட : aussitôt pris, aussitôt— பிடிபட்டவுடனே

தூக்கப்பட்டான், அகப்பட்டவுடனே பிரயோகிக்கபபட்டது.

Pendulaire, *adj*. கடியார சம்பந்த [மான.

Pendule, *m*. தூக்குநூற்குண்டு, கடியார வுயிர். || *f*. தூக்கு—, நிலைக்கடியாரம்.

Pêne, *m*. பூட்டுநாக்கு, தாள்.

Pénétrabilité, *f*. உட்புக—, உருவப்படுந் தன்மை.

Pénétrable, *adj*. உட்புக—, உருவ—, கடக்கப்படத்தக்க.

Pénétrant, *part*. உள்நுழைகிற, கூர்ந்த, கூரிய, கூர்மை—, சூக்ஷம்—, உருக்கமுள்ள, இணக்குகிற.

Pénétration, *f*. உட்புகுதல்,—புகுந் தத்துவமுள்ள. || மன—, புத்திக்கூர்மை, நுண்ணறிவு, சூக்ஷம், விவேகம்.

Pénétré, *part*. உருவப்பட்ட, உருகிய, உருக்கமுள்ள, படுகிற, உள்ள, உள்ளத்திற்கொண்ட :— de joie, de douleur மிகுந்தசந்தோஷம்—கஸ்தியுள்ள.

Pénétrer, *v. a. et n.* பிரவேசித்தல், உட்—, புகுதல், உள்ளே—, நுழைதல். || உருவுதல், ஊடுருவுதல். || ஆழமாய்ப்—, பதிதல், அழுந்துதல், ஊறுதல். || தைத்தல், உள்ளேபாய்தல், — ஏறுதல்,— படுதல். || அறிதல், உணர்தல், கண்டுபிடித்தல். || இரங்குவித்தல், உருக்குதல், உருக்கப்—, படுத்துதல் : — les secrets இரகசியங்களையுணர்தல் ; — de douleur மிகுந்த கஸ்திப்படுத்துதல். || se — ஒன்றித்தல், இசைதல். || நன்றாய் அறிந்துகொள்ளுதல்,— கண்டுபிடித்தல், புத்தியிற் பதித்தல்,— வைத்தல்.

Pénible, *adj*. வருத்தம்—, பிரயாசம் —, கஷ்டம் —, தண்டிப்புள்ள. || அரிய, கஸ்திக்குரிய, துயரமுள்ள.

Péniblement, *adv*. பிரயாசத்தோடு, வருத்தம்—, கஸ்தியாய்.

Péniche, *f*. சிறு கப்பல், தோணி.

Pénicillaria spicata, கம்பு.

Pénicillé, *adj*. தூரிக்கோல்வடிவா [ன.

Péninsulaire, *adj. et s*. குறைதீவுக்கடுத்த,— தீவின்,— தீவான்,— தீவின்குடி.

Péninsule, *f*. குறை தீவு, சற்றுக்குறையத் தீவான நாடு, எஸ்பஞ் பொர்த்துகாலடங்கிய குறை தீவு.

Pénis, *m*. ஆண்குறி.

Pénitence, *f*. பச்சாத்தாபம், பாவசங்கீர்த்தனம். || தபசு, தவம், மனஸ்தாபம். || அபராதம். || ஆக்கினை, சிட்சை, தண்டனை, தண்டம் : administrer le sacrement de — பாவசங்கீர்த்தனங் கொடுத்தல் ; imposer une — அபராதம் போடுதல் ; faire — தபசுசெய்தல், சரிப்படாதபோசனம்பண்ணுதல்; mettre en — ஆக்கினையிடுதல்.

Pénitencerie, *f*. பச்சாத்தாபவிஷய விசாரணை, — நியாயாசனம், ஞானகட்டான பாவவிமோசன அதிகாரமளிக்குந் திருச்சங்கம்.

Pénitencier, *m*. ஷை விசாரணைக் குரு, ஞானகட்டான பாவங்களை மன்னிக்குங் குரு.

Pénitent, e, *s. et adj*. தபசி, தவசி, தவத்தோன், தபோதனன், (*f*. தவத்தி, தபோதி), மனஸ்தாபமுள்ளவன், — உள்ளவள்,— உள்ள. || தவச்சபையான், — சபையாள். || பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவன், — பண்ணவந்தவன், பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தக்காரன்,— காரி : — vie தவச்சீவியம் ; — de tel prêtre இன்ன சுவாமியாரிடத்தில் வழக்கமாய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்கள்:— blanc வெள்ளைச்சட்டை யணிந்த தவச்சபையான்.

Pénitentiaire, *adj*. பாவிசிட்சைக் கடுத்த, குற்றவாளிகளைச் சீர்திருத்துகிற,— குணமாக்குகிற.

Pénitentiaux, Pénitentielles, *adj. pl*. தபசுக்கடுத்த, தவ, பச்சாத்தாப.

Pénitentiel, *m*. பாவ அபராத —, சிட்சைப்புஸ்தகம்.

Pennage, *m*. (இராசாளி) இறகுகள், (வேறே பக்ஷி) சிறகினிறகுகள்.

Pennar, *m*. பெண்ணை,— யாறு.

Penne, *f*. (பக்ஷியின்) பெருமிறகு.

Penné, Penniforme, *adj*. இறகுவடிவுள்ள (இலை). [non.

Pennon, *m*. வாயுகாட்டி. || *V*. Pan-

Penny, *m*. அ-காசுத்துட்டு.

Pénombre, *f*. அரைநிழல், சாயாவிம்பம், அவதமசாயை, கிராணத்தின் அருகொளி.

Pensant, *part*. நினைப்புள்ள, நினைக்கிற : bien — நல்லபுத்தியுள்ள.

Pensée, *f*. நினைப்பு, நினைவு, சிந்தனை, உணர்வு; எண்ணம், யோசனை,

ஆலோசனை, அர்த்தம், கருத்து, அபிப்பிராயம், ஞாபகம், சுருக்கமான வசனம், சித்திரகன் முதல் எண்ணம், — பணிக்கு. || ஓர் பூ : — décousues இசையாத வசனங்கள், — விஷயங்கள் : couleur de — கபில--, ஊதாநிறம்.

Penser, *v. a. et n.* நினைத்தல், நினைதல், எண்ணுதல், சிந்தித்தல், யோசித்தல், தியானித்தல், ஆலோசித்தல், கருதுதல், நினைப்பாய்—, சிந்தனையாய்—, கருத்தாயிருத்தல், உத்தேசித்தல், நிதானித்தல், மதித்தல், உன்னுதல். || எச்சரிக்கையாயிருத்தல், கவனிந்தல், உருபிகரித்தல், பாவித்தல், விசுவசித்தல். || திரிதல், கிட்டியிருத்தல் : à quoi —, que penses-tu என்ன நினைக்கிறாய் ; pensez à vous எச்சரிக்கையாயிரும் ; — à mal துர்க்கருத்தாயிருத்தல் ; il a pensé mourir சாகத்திரிந்தான், அவன் சாகிறதற்குக் கொஞ்சந் தப்பிப்போயிற்று.

Penser, *m.* நினைப்பு, நினைவு.

Penseur, euse, *s.* யோசனைக்காரன். || *adj.* யோசிக்கிற.

Pensif, ive, *adj.* விசார—, சிந்தனைப்படுகிற, சிந்தனை—, கவனிப்புள்ள.

Pension, *f.* (சேவக, உத்தியோக) பழமை —, உபகார —, வெகுமானச் சம்பளம். || சம்பளமிட்டுச் சாப்படும் வீடு, உணவுக்குச்—, மாணாக்கர் சம்பளம். || உட்பிள்ளைப் பள்ளிக்கூடம், ஷை பள்ளிக்கூடப் பிள்ளைகள் : mettre en — உட்பிள்ளையாகவைத்தல் ; se mettre en — தன்சாப்பாட்டுக்குச் சம்பளங்கொடுத்து ஓர் வீட்டிலமர்தல்.

Pensionnaire, *s.* பழமைச் சம்பளக்காரன், — காரி, தன்னுணவுக்குச் சம்பளங்கொடுக்கிறவன்,— வள், (பள்ளிக்கூடத்தின்) உட்பிள்ளை : grand—ஒல்லந்துதேசத்துக் குடியரசின் காரியவிசாரணைக்காரன் : comédien — சம்பளநாடகன்.

Pensionnat, *m.* உட்பிள்ளைப் பள்ளிக்கூடம், — பள்ளிக்கூட மாணாக்கர் சாலை,— இடம்.

Pensionner, *v. a.* பழமைச்—, வெகுமானச் சம்பளங்கொடுத்தல்,— ஏற்படுத்துதல்.

Pensum, *m.* தண்டனைப்பாடம்,— வேலை,— எழுத்துப்பாடம்.

Pensylvanie, *f.* (ஐக்கியதேசங்களில்) பென்சில்வனி நாடு.

Penta, (சேர்க்கைச் சொற்களில்) பஞ்ச, ஐந்து.

Pentacorde, *m.* பஞ்சநரம்பு வீணை.

Pentadactyle, *adj.* காலிற் பஞ்சவிரலுள்ள. || *m.* ஓர் மீன்.

Pentaèdre, *m.* பஞ்சபக்கமுள்ள வடிவம்.

Pentagone, *adj.* பஞ்சகோணமுள்ள. || *m.* பஞ்சகோணம்,—கோண வடிவம்.

Pentagynie, *f.* பஞ்ச பெண்தாதுள்ள பூண்டினம்.

Pentamètre, *adj. et m.* ஐந்து சீருள்ள, — சீரடி.

Pentandrie, *f.* ஐந்து பூந்தாதுள்ள பூண்டினம்.

Pentapétale, Pentapétalé, *adj.* ஐந்திதழாய்ப் பிரிந்த,— இதழுள்ள.

Pentaphylle, *adj.* ஐந்திலையுள்ள.

Pentapole, *f.* பஞ்சநகர—, ஐந்நகர நாடு.

Pentaptera, பீதசாலம் : — arjuna வீரதரு ; — tomentosa பீதசாலகம் ; — coriacea மருது, மருதம்.

Pentaptère, *adj.* ஐந்திறகுள்ள.

Pentarchie, *f.* ஐந்தரசர் ஆளு நாடு, ஐந்தரசராளுகை.

Pentastyle, *adj.* (வரிசையாய்) ஐந்துதூணுள்ள. || ஐந்து பெண்தாதின் காம்புள்ள.

Pentateuque, *m.* மோயிசனெழுதிய பஞ்சாகமம்.

Pente, *f.* சாய்ப்பு, சாய்வு, இறக்கம், சாய்மானம், சாரல், சரிவு. || சார்பு, மனச்சார்பு,— சாய்வு, விருப்பம். || கட்டிலின் மேற்கட்டிச்சல்லி ; en — சாய்வுள்ள, சாய்வாய்.

Pentecôte, *f.* (பாஸ்குத்திருநாளைக் குப்பின்) ஐம்பதாந்திருநாள், இஸ்பிரித்துசாந்துவின் திருநாள்.

Penture, *f.* கீல், கிசில், கதவினிருப்புக்கம்பி,— சலாகை.

Pénultième, *adj.* ஈற்றயலான, கடைசிக்கு முன்னிருக்கிற. || *f.* ஈற்றயலசை.

Pénurie, *f.* குறைச்சல், குறை, இல்லாமை, அவசரம், தவக்கம், தரித்திரம், வறுமை, நிர்ப்பாக்கியம்.

Péotte, *f.* பெரிய வட்டத்தோணி.

Pépie, *f.* நாக்கொப்புளம், நாத்தடை, நாநுனியின் மெல்லிய தோல், (அது பக்ஷி குடிக்கவும் கீச்சிடவும்

தடையாம்.) : avoir la — தாகங்கொண்டிருத்தல். [கத்துதல்.

Pépier, *v. n.* (பக்ஷி) கீச்சிடுதல்,

Pépin, *m.* (சிலகனிநடுவிலுள்ள) வித்து, விதை.

Pépinière, *f.* மரநாற்றுத்—, இளமரத்தோட்டம், மரநாற்று, இளமரங்களைவளர்க்கு மிடம், திரளாய் வளருமிடம், — நாடு : — de soldats திரளான சேவகளை வளர்க்கு நாடு.

Pépiniériste, *m. ou* jardinier — இளமரத் தோட்டக்காரன். [கட்டி.

Pépite, *f.* (பூமியிலகப்படும்) பொன்

Pepsine, *f.* ஜந்துக்களின் வயிற்றிலுண்டாகும் ஜீரணகரமான வோர் பதார்த்தம்.

Peptique, *adj.* சீரணத்துக்குரிய, சீழ்வருவிப்பதற்குரிய.

Perçage, *m.* துளையிடுதல், ஊடுருவுதல். [— க்காளி.

Percale, *f.* பறைக்காலி,— க்கால்,

Percaline, *f.* ஓர்வித பறைக்காலி, அழுத்தமற்ற பஞ்சுப்புடைவை.

Perçant, *adj.* உருவுகிற, உட்படுகிற, தெளிந்த, கூர்மையுள்ள, கூர்ந்த, கடின.

Perce (en), *adv.* துளைத்தலாக : mettre du vin en — இரசம்பிடிக்கப் பீப்பாவைத் துளைத்தல். [ந்த வழி.

Percé, *m.* Percée, *f.* காட்டில் திற

Percé, *part.* உருவின், துளை—, தமருள்ள, உருவ—, திறக்கப்பட்ட : maison bien — பெரிய சன்னலுள்ள வீடு; forêt bien — பெரிய வழியுள்ள காடு; paysage bien — தூர பொருள்களை நன்றாய்க்காட்டுகிற தேசகாட்சிப் படம்; être bas — அடியில் துளைத்திருத்தல், வறுமையாயிருத்தல் ; il a le cœur — அவனிருதயந் துயரவாளா லுருவப் பட்டிருக்கின்றது. [வண்டு.

Perce-bois, *m.* மரந் துளைக்கும்

Perce-feuille, *f.* ஓர் பூண்டு.

Perce-lettre, *m.* காகிதமுருவுங் கருவி.

Percement, *m.* உருவுதல், துளைப்பு, துளைத்த துவாரம், வெட்டுதல்.

Perce-muraille, *f. V.* Pariétaire.

Perce-neige, *f.* ஓர் பூண்டு.

Percentage, *m.* நூற்றுக் கிவ்வளவென்று நிர்ணயிக்கப்படும் வீதம்.

Perce-oreille, *m.* காதுப்பூச்சி, —ப்பாம்பு.

Perce-pierre, *f.* கல்லுருவி.

Percepteur, *m.* தண்டலதிகாரி, வரிதண்டுகிறவன்.

Perceptibilité, *f.* புலப்பாடு, கண்டுபிடிக்கப்படுந் தன்மை.

Perceptible, *adj.* சேர்க்க—, தண்டத்தக்க. || புலப்படுகிற, காணக்கூடிய, கண்டுபிடிக்கத்தக்க : — aux yeux கண்ணுக்கெட்டுகிற,— த்தோன்றுகிற.

Perceptif, ve, *adj.* தெரிந்துகொள்ளுகிற, கிரகிக்கும் சக்தியுள்ள, அறியும், உணரும்.

Perception, *f.* தண்டல், வசூல், வசூலத்து, தண்டலதிகாரியுத்தியோகம், தண்டல்பண்ணு நாடு. || உணர்தல், உணர்வு, உணர்ச்சி, கிரகிப்பு, அறிவு, புலப்பாடு.

Percer, *v. a.* துளைத்தல், தொளைத்தல், துருவுதல், தவ்வறுத்தல், தமரிடுதல், உருவுதல், ஊடுருவுதல், கன்னமிடுதல், வழி—, திறத்தல், துவாரஞ்செய்தல். || காயப்படுத்துதல், குத்துதல். || உணர்தல், உத்தேசித்தல், அறிதல், கண்டுபிடித்தல் : — un mur சுவரைக் கன்னமிடுதல் ; — une porte dans un mur சுவரிற் கதவுதிறத்தல் ; — un bois காட்டில் வழிகளைத் திறத்தல் ; — du vin இரசம்பிடிக்கப் பீப்பாவைத் தமரிடுதல் ; — la foule கும்பலின் நடுவே தனக்கு வழிதிறத்தல் ;— un mystère ஓரிரகசியமுணர்தல் ; — l’avenir வருங் காரியங்களை யுத்தேசித்தல் ; la lumière—les ténèbres பிரகாச மிருளிலே விளங்குதல், — இருளைப் போக்குதல் ; — de coups பல குத்துகளாற் குத்தி யுருவுதல், வெகு வாய்க் குத்துதல் ; — d’outre en outre ஊடுருவுதல் ; — les oreilles காதுகளைத் துளைத்தல், — கீச்சுக்குரலால் வாதித்தல் ; un enfant — des dents ஓர்பிள்ளைக்குப் பல்லு முளைத்தல் ; la pluie — les habits மழையால் வஸ்திரங்கள் நனைதல் ; — l’âme ஆத்துமத்தைக் குத்துதல், — கடின கஸ்திப்படுத்துதல். || *v. n.* திறக்கப்படுதல், முளைத்தல், வெளி—, புறப்படுதல், உடைதல், பரம்புதல், பிரசித்தமாதல், உத்தியோகங்களிலேறுதல். || se —

தனக்கு உருவுதல்,— துளைத்தல், உருவ—, துளைக்கப்படுதல், ஒருவனொருவனைக் குத்துதல்,— உருவுதல்.

Perceuse, *f.* துளையிடுங் கருவி, ஊடுருவும் இயந்திரம்.

Percevable, *adj.* தண்டிக்கொள்ளக்கூடிய, வாங்கக்கூடிய.

Percevoir, *v. a.* தண்டுதல், வாங்குதல், சேர்த்தல். || கிரகித்தல், உணர்தல், கண்டுபிடித்தல். || se — தண்ட—, உணரப்படுதல்.

Perche, *f.* கோல், நெடுங் —, கழி, நெடுந்தடி. || நில அளவை —, அளவைக்கோல், ௰அ, உ௰, அல்லது உஉ-அடி நீளமரம். || ஷை சதுரகோல், — கோலுள்ள நிலம், ஓர் சின்ன குழி. || நெடுங் கழியொத்தவன், மெல்லிய நெடுமாள். || பலகவருள்ள மான்கொம்பு. || ஓராற்று மீன் ; — de batelier தண்டு, — க்கழி, — க்கோல், சவள் : — pour porter doubles fardeaux காவடி ; tendre la — à quelqu'un, தேவையில் உதவிசெய்தல், ஆபத்துக்குதவுதல். || *m.* le Perche (பிராஞ்சு தேசத்தில்) பேர்ஷ் நாடு.

Percher, *v. n. et* se — (பக்ஷி) குந்துதல், படிதல், தங்குதல், உட்காருதல். || மேட்டிலேறுதல். || *v. a.* (உயரத்தில்) போடுதல், வைத்தல்.

Percheron, e, *adj. et s.* பேர்ஷ் நாட்டு,— நாட்டான் ..

Perchoir, *m.* கோழிகுந்துங் — தங்குங் கோல்,— இடம்.

Perclus, e, *adj.* திமிர்—, முடம்—, ஊனமான, திமிர்த்து—, மரத்துப்போன, முடங்கிய, முடவன், முடத்தி : avoir le cerveau, l'esprit — விவேகம்—, புத்தியற்றிருத்தல்.

Perçoir, *m.* துரப்பணம், தமரூசி, தொளைக்குங் கருவி,— ஊசி.

Percolateur, *m.* வடிகட்டும் சாதனம்.

Perçu, *part. de* Percevoir.

Percussion, *f.* Percuter, *v. a.* அடி, அடித்தல், தாக்கு, தட்டுதல், தட்டிக்கேட்டல் : fusil à — மருந்துச் சிமிழின்மேல் குதிரையடிக்கிற துப்பாக்கி.

Percutant, e, *adj.* பலமாய்த் தாக்கும், அடிக்கிற.

Perdable, *adj.* இழக்க —, தோற்கத்தக்க.

Perdant, *part.* தோற்பவன்,—வள், நஷ்டவாளி: billet—கெலிக்காத சீட்டு.

Perdition, *f.* ஆத்துமத்தின்—, கேடு, இழப்பு, நாசம், சேதம், அழிவு, சேதத்தினுபத்து : s'en aller en — அழிந்து —, கெட்டுப் —, சேதமாய்—, பாழாய்ப்போதல்.

Perdre, *v. a.* இழத்தல், இழந்துபோதல், போக்கடித்தல், கை—, விட்டு—, தப்பிவிடுதல், போக்குதல், சேத—, நஷ்ட —, அவமானப்படுத்துதல், கெடுத்தல், அழித்தல், சிதைத்தல், வீணாய்ச் செலவழித்தல், பாழாக்குதல், காணாமற்—, அற்றுப்போதல். || தோற்றல், தோர்வைப்படுதல், தோர்த்தல் : — la vie உயிரிழத்தல், சாதல் : — un bras கைச்சேதப்படுதல் ; — pied, terre (தண்ணீரில்) தரை காலுக் கெட்டாதிருத்தல் ; — le fil d'un discours பிரசங்கத்தில் மயங்குதல், — கலங்குதல், — தொடர்ச்சியை மறந்துவிடுதல் ;— de vue காணாமற்—, மறந்துபோதல் ;— la tête சிரச்சேதப்படுதல், புத்தி மயங்குதல் ;— un procès வழக்கு தோற்றல். || *v. n.* தோற்றல், சேத—, நஷ்ட—, தோர்வைப்படுதல், கெடுதல், தாழ்தல், விலை—, கன்ம்—, மானங் குறைந்துபோதல். || se — இழக்கப்படுதல், மறைதல், காணாமற்—, கெட்டுப்போதல், தவறுதல், வழி தப்புதல், சிதறுதல், சிதைதல், கெடுதல், அழிதல், ஆத்துமச் சேதப்படுதல், சேதம் —, பாழாதல், வழக்கமற்றுப்போதல், ஒருவனொருவனைக் கெடுத்தல், கப்பற்சேதப்படுதல், உடைதல், அமிழ்தல், கண்டுபிடியாதிருத்தல், பையிற்றன் குண்டுதள்ளுதல் ; je m'y perds நானதில் ஒன்றுங்கண்டுபிடிக்கிறதில்லை.

Perdreau, *m.* கவுதாரிக்குஞ்சு.

Perdrigon, *m.* ஓர்வித கனி.

Perdrix, *f.* கவுதாரி, சிரவம், சிவல்: — rouge இரத்தாக்ஷம், சகோரம், செங்காற் கவுதாரி ; — francoline தைத்திரம்.

Perdu, *part.* கெட்ட, அழிந்த, அற்ற, இழந்த, வழிதப்பின, காணாமற்போன, பாழான, நம்பிக்கையற்ற : puits — தண்ணீர் ஓடுவதற்குரிய —,

சாக்கடைக் —, பொய்க்கிணறு ; sentinelle — தூரகாவற்சேவகன் ; enfants — முன்தாக்குகிறசேவகர் : — de dettes மிகவுங் கடன்பட்ட, கடன்களிலமிழ்ந்தின ; — de réputation அவதூறுபட்ட ; fille, femme — கெட்டஸ்திரி, தூர்த்தை, வேசி ; temps — வீணாய்ப்போக்கின —, ஓய்வுநேரம், ஒழிவு ; à vos heures — உமது ஓய்வுநேரத்தில் ; peine, soins — வீண்பிரயாசம் : pays — குடிகளற்ற —, தூரதேசம் ; à fonds — முதல் திரும்பாததிட்டமாக ; à corps — அஞ்சாத வேகமாய்.

Père, *m.* தகப்பன், தகப்பனார், அப்பன், தந்தை, பிதா, பெற்றவன், ஐயன், தோப்பன், தோப்பனார், (chez les Vellages) ஆஞி, ஆஞான். || சுவாமி, குரு, முனிவர், குருக்கள், சந்நியாசிகள்முதலியவர்களுக்குச் சங்கைப்பேராம்). || காரணன், காரணம். || பெரிய உபகாரி. || *pl.* வேதசாஸ்திரிகள், முன்னோர்கள் : notre premier — ஆதித்தகப்பன், ஆதாமென்பவன் ; le — des croyants விசுவாசிகளுடைய பிதா, அபிரகாமென்பவர் ; le — éternel நித்திய பிதாவாகிய சர்வேசுரன் ; le — du jour பகலின் காரணம், சூரியன்; les — de l'Église திருச்சபையின் வேத சாஸ்திரிகள் ; les — du désert பழைய வனவாசிகள். [தேசயாத்திரை.

Pérégrination, *f.* தூரபயணம், —

Pérégriner, *v. n.* தூரபயணஞ்செய்தல்.

Péremption, *f.* வெகுகால மிடைவிட்டபிராதின் தள்ளுபடி, தீர்ப்பு.

Péremptoire, *adj.* தீர்ப்பான, தீர்மானிக்கிற, தீர்மானத்துக்குரிய, மறுக்க —, ஆக்ஷேபிக்க —, எதிர்க்கக்கூடாத. || ஷை தள்ளுபடிக்குரிய, — தள்ளுபடியான. [—, கண்டிப்பாய்.

Péremptoirement, *adv.* தீர்மானம்

Pérennité, *f.* சாசுவதம், எப்பொழுது மிருத்தல். [பங்கிடுதல்.

Péréquation, *f.* சமபாகங்களாய்ப்

Perfectibilité, *f.* திருத்தமாகத் தகுதி. [தமமாகத்தக்க.

Perfectible, *adj.* திருத்தம் —, உத்

Perfection, *f.* உத்தமம், சாங்கோபாங்கம், சம்பூரணம், பரிபூரணம். || திருத்தம், தீர்க்கம், முடிவு, நிறைவு, நிறைவேற்றம், குறையின்மை, இல்க்ஷணம், மேன்மை, உச்சிதம், வெகுநேத்தி, சற்குணம் : les — divines தேவ இலக்ஷணங்கள் ; en — திருத்தம் —, உத்தமமாக.

Perfectionné, *part.* தீர்க்கம் —, உத்தமம் —, திருத்தமான, திருத்தின.

Perfectionnement, *m.* திருத்துதல், திருத்தம், நிறைவேற்றம்.

Perfectionner, *v. a.* திருத்துதல், சீர்படுத்துதல், திருத்தம் —, சம்பூரணம் —, உத்தமமாக்குதல், தீர்த்தல், முடித்தல். || se — சீர் —, திருத்துதல், உத்தமமாதல், தேருதல், தேறுதல்.

Perfide, *adj.* துரோகம் —, இரண்டகம் —, சதிமானமான, — உள்ள, வஞ்சனையுள்ள, பிரமாணிக்கமற்ற, — தப்பின, பொய். || *s.* துரோகி, வஞ்சகன்.

Perfidement, *adv.* துரோகம் —, வஞ்சனை —, சற்பனையாய்.

Perfidie, *f.* துரோகம், வஞ்சனை, வஞ்சகம், இரண்டகம், சற்பனை, சதி, சதிமானம், நம்பிக்கைத்துரோகம்.

Perfolié, *adj.* அடி —, தாள்சூழ்கிற (இலை). [திரம்.

Perforateur, *m.* துவாரமிடும் இயந்

Perforation, *f.* துளைப்பு, தவ்வு, *ou.*

Perforer, *v. a.* துளைத்தல், தொளைத்தல், தமரிடுதல், தவ்வறுத்தல். || se — துளைக்கப்படுதல்.

Performance, *f.* சூதாட்டம், குதிரைப்பந்தயம் முதலான விடங்களில் காரிய முடிவு.

Pergularia odoratissima, தொங்கின்பூ : — tomentosa காமப்பூ.

Péri, *m. et f.* பாரசியருடைய பூதம். ஆகாயவாசி. [மூடி.

Périanthe, *m.* பூமொக்குள், பூவின்

Péricarde, *m.* இருதயச் சவ்வு.

Péricardique, *adj.* இருதயச்சவ்வுக்கடுத்த. [எரிவு.

Péricardite, *f.* இருதயச்சவ்வின்

Péricarpe, *m.* கனியை —, விதையை மூடுந் தோல், கோது, ஓடு, நெற்று, புறணி. [சவ்வு.

Périchondre, *m.* முருந்து மூடுஞ்

Périclitant, *part.* ஆபத்திலுள்ள.

Péricliter, *v. n.* ஆபத்திலிருத்தல், — திரிதல், ஆபத்துப்படுதல்.

Péricrâne, *m.* கபாலச்சவ்வு.

Péridrome, *m.* தாழ்வாரம், தூண்களுக்குஞ் சுவருக்குமுள்ள சாலை.

Périer, *m.* இருப்புக்கோல், ஓர்பக்ஷி.

Périgée, *m.* மந்தோச்சம், பரிகு, நீசம், நீசஸ்தானம், ஓர் கிரகம் பூமிக்கு அதிகமாய்க் கிட்டுகிற நிலை. ‖ *adj.* மந்தோச்சத்திலுள்ள.

Périgord, *m.* (பிராஞ்சுதேசத்தில்) பெரிகோர் நாடு.

Périgourdin, e, *adj. et* s. பெரிகோர்நாட்டு,— நாட்டான்...

Périgueux, ஷை நாட்டின் தலைமை நகரம். ‖ *m.* ஓர் கடின கருங்கல்.

Périgyne, *adj.* விளையுண்டாகு மிடத்துக்குமேல்நின்ற,— இடத்தின் சுற்றிலுள்ள.

Périhélie, *m.* மந்தோதரம், பரிகம்சம், சூரியனைக் கிட்டின நிலை. ‖ *adj.* ஷை நிலையான.

Péril, *m.* ஆபத்து, அவதி, மோசம், யோகம், அபாயம், வினை, அவஸ்தை, கேவலம் : s’exposer au — ஆபத்துக்குள்ளாதல் ; être en — அவஸ்தையாயிருத்தல் ; au — de ma vie என் சீவனுக்கு ஆபத்துண்டானாலும் ; à ses risques et —, சகலத்துக்கும் உத்தரவாதமாயிருத்தல். [அவஸ்தையாய்.

Périlleusement, *adv.* ஆபத்தாய்,

Périlleux, euse, *adj.* ஆபத்து —, மோசம் —, அவதியுள்ள, மோசத்துக்கேதுவான. [டியாதல், கெடுதல்.

Périmer, *v. n.* கெடுதப்பித்தள்ளுப

Périmètre, *m.* சுற்றளவு, வட்டத்தளவு, புறவெல்லை, பரிவேட்டணம்.

Périnée, *m.* குதபீசவிடை, குதத்துக்கும் பீசத்துக்குமுள்ளந்தரம்.

Période, *f.* (கிரகத்தின்) சுற்றோட்டம், சுற்றோட்டக்காலம். ‖ பலவருஷவட்டம், யுகம், காலவகுப்பு, — வட்டம். ‖ வியாதியின் முறை,— நடை,— ஓட்டம், சுரமுறைமுறையாய்த் துடர்தல்,— த்திரும்பிவருதல். ‖ பல உறுப்புள்ள வசனம் ; — historique சரித்திரகாலவகுப்பு. ‖ *m.* மேலுச்சி, காலவகுப்பு, காலம்.

Périodicité, *f.* முறையாய்த் திரும்புதல்,— திரும்பிவருந் தன்மை.

Périodique, *adj.* முறைமுறை—, முறையான, நாள் திட்டமுள்ள, திட்டமானகாலத்தில் திரும்பிவருகிற, பல உறுப்புள்ள,— உறுப்பு வசனமுள்ள : fièvre — முறைக்காய்ச்சல் ; ouvrage — திட்டமானகாலத்திற் பிரசித்தமாகிற புஸ்தகம்.

Périodiquement, *adv.* முறைமுறையாய், பல உறுப்புவசனமாய்.

Périœciens, *m. pl.* சமதூர ரோகை —, ஒத்தநிலைச்சனங்கள்.

Périoste, *m.* எலும்பின் சவ்வு.

Périostose, *f.* ஷை சவ்வின் வீக்கம்.

Péripatéticien, enne, *adj.* அரிஸ்தோத்தென்பவன் மதத்து,— சீஷன், — மத அநுசாரி. [போதகம்.

Péripatétisme, *m.* ஷை மதத்துப்

Péripétie, *f.* சடுதியான மாற்றம், — அந்தஸ்தின் மாற்றம். [சுற்றளவு.

Périphérie, *f.* வளைந்த வடிவத்தின்

Périphrase, *f.* சுற்று வசனம், — வாக்கியம்,— சுழற்சி. [ய்ப் பேசுதல்.

Périphraser, *v. n.* சுற்றுவசனமா

Périple, *m.* சுற்றுயாத்திரை,— யாத்திரையின் வர்த்தமானம்.

Periploca esculenta, ஊசிப்பாலை : — indica நன்னாரி ;— silvestris சிறுகுறிஞ்சா, அயகம், ஆதிகம் : — tunicata திருநாமப்பாலை, அயதி, அரக்கம்.

Péripneumonie, *f.* சுவாதகாசம், கோழை.

Périptère, *adj. et m.* சுற்றிலுந் தனித் தூணுள்ள,— உள்ள ஆலயம்.

Périr, *v. n.* சாதல், மாய்தல், கொல்லப்படுதல். ‖ சேதம்—, நாசம்—, பாழாதல், பாழ்தல், இடிதல். ‖ அழிதல், கெடுதல், சிதைதல், படுதல், முடிதல், அவிதல், அற்றுப்போதல். ‖ கெடுதப்பித் தள்ளுபடியாதல் : — d’ennui சலிப்பினால் வாடுதல் ; sa mémoire a péri அவன் ஞாபக மற்றுப்போயிற்று.

Périsciens, *m. pl.* சுற்று நிழலுடையோர், சுற்றுகிற நிழலுள்ள சீதளதேசத்தார், பூமிமுனையடுத்தோர்.

Périscope, *m.* முழுகு கப்பல்களில் பிரயோகஞ்செய்யப்படும் பார்வைக்குழை. [யின் கண்ணாடியைப்பற்றிய.

Périscopique, *adj.* பார்வைக்குழை

Périsperme, *m.* விதை மூடி.

Périssable, *adj.* அழிவுள்ள, கெடுகிற, கேட்டுக்குரிய, அநித்திய, நில்லாத, நிலையற்ற, நிலையாத.

Périssoire, *f.* நீண்டதும் குறுகலுமான தோணி.

Périssologie, *f.* வீண்புனருத்தி.

Péristaltique, *adj.* சுருங்குகிற.

Péristyle, *m.* தூண்வரிசைத் தாழ்வாரம், தாழ்வாரந்தாங்குந் தூண் வரிசை, உள்ளே தூண்வரிசையுள்ள ஆலயம். || *adj.* உள்ளே தூண்வரிசையுள்ள.

Périsystole, *f.* நாடிகள் நெருங்கிப் பெருகுவதினிடை நேரம்.

Péritoine, *m.* குடலடங்கிய சவ்வு, அடிவயிற்றின் குடல்களைச் சூழுஞ் சவ்வு.

Péritonite, *f.* ஷை சவ்வின் எரிவு.

Perle, *f.* முத்து, ஆரம், நித்திலம், மணி, இரத்தினம். || உத்தமம், உச்சிதம். || தண்ணீர்த்துளி. || முத்துபோன்ற சிற்பஅணி. || அழகியபல்கள். || சிற்றக்ஷரம் : — parfaite ஆணி—, வைரமுத்து : — imparfaite சிப்பிமுத்து ; enfiler des — முத்துகோர்த்தல், வீணில் நேரம்போக்குதல் ; la — des hommes மனுஷருத்தமன் , les — du matin காலைப்பனித்துளிகள் : les — des cieux வானமுத்துகள், நக்ஷத்திரங்கள்.

Perlé, *adj.* முத்துள்ள,— போன்ற, சிறந்த, நேத்தியான, தெளிவான, உமியற்ற, மணிமணியான.

Perler, *v. a.* தீர்க்கமாய்ச் சித்திரத்தையலை —, நேத்தியாய்ச் செய்தல், வாற்கோதும்பை மணியை விருத்தமாக்குதல். || se — முத்துப்போல்—, வெகு நேத்தி —, விருத்தமாதல்.

Perlier, ère, *adj.* முத்துவிளையும் ஓர் ஜாதி மட்டிக்கல்லைப்பற்றிய.

Permanence, *f.* நிலைமை, நிலைபேறு, எப்போதும்—, நிலைத்திருத்தல்.

Permanent, *adj.* நிலைமை—, நிலையான, நிலைக்கிற, நிலைபெற்ற, மாறாத.

Perméabilité, *f.* ஊடுருவத்தக்க தன்மை.

Perméable, *adj.* ஊடுருவ—, உருவத்தக்க.

Permesse, *m.* (கிரேஸ்தேசத்தில்) நதி, கலைமகளீர் நதி என்னப்படும்.

Permettre, *v. a.* உத்தரவு கொடுத்தல், உத்தாரங்—, விடை—, இடங்—, இளக்காரங் —, சமயங் —, சாவகாசங் கொடுத்தல், விடுதல், ஒட்டுதல். || விலக்காதிருத்தல், சகித்தல், செய்யவிடுதல். || se — தனக்களித்தல், இளக்காரம்—, உத்தரவுபிடித்தல், துணிதல், தலைப்படுதல். || être permis உத்தரவாயிருத்தல்.

Permis, *part.* உத்தரவான, விலக்கப்படாத, பாவமற்ற. || *m.* எழுதிய—, உத்தாரம், உத்தாரச்சீட்டு.

Permission, *f.* உத்தரவு, உத்தாரம், விடை, உத்தாரச் சீட்டு : être en — உத்தரவு பெற்றுப்போயிருத்தல்.

Permissionnaire, *m.* உத்தரவின்மேல் சிறிதுகாலம் இராணுவத்தை விட்டிருக்கும் போர்ச்சேவகன்.

Permutable, *adj.* மாற்றக்கூடுமான.

Permutant, *m.* உத்தியோகமாற்றுகிறவன்.

Permutation, *f.* உத்தியோக —, மாற்று, மாற்றம், பதில், கைமாறு. || (எழுத்தின்) திரிபு, விகாரம், பெயர்ச்சி. || எண்விகிருதி, — விநிமயம், — பரிவர்த்தம்.

Permuter, *v. a.* (கோவிலும்பிளிக்கையை—, உத்தியோகத்தை) மாற்றுதல், மாற்றிக்கொள்ளுதல். || se — பதிலாதல், திரிதல், மாற்ற —, விகாரப்படுதல்.

Pernicieusement, *adv.* கேடாக, கெடுதி—, தின்மை—, மோசமாய்,— வர.

Pernicieux, euse, *adj.* கேடுள்ள, கெடுதி—, தின்மை —, நஷ்டமுள்ள,— வருவிக்கிற, கெட்ட, பொல்லாத, தீய.

Per obitum, *adv.* சாவினால்.

Péroné, *m.* காலின் சிற்றெலும்பு, காலெலும்பு, கணைக்கால், குதிரை முகம், சங்கு, பரண்டை.

Péronier, ère, *adj.* கணைக்காலுக்கடுத்த. || *m.* கணைக்கால் நரம்பு.

Péronne, (பிராஞ்சுதேசத்தில்) பெரொன் நகர்.

Péronnelle, *f.* புத்தியற்ற வாயாடி.

Péroraison, *f.* பிரசங்கத்தின் முடிவுரை, — கடைப்பங்கு, சங்கீதத்தின் முடிவு.

Pérorer, *v. n.* பிரசங்கித்தல், குயிலுதல்.

Péroreur, *m.* பெரிய பிரசங்கி, (இகழ்வு.)

Pérot, *m.* உ-விசை வெட்டாமல் விட்ட மரம்.

Pérou, *m.* (தென் அமேரிக்காவில்) பெரு தேசம். || பெருமிலாபம்.

Péroxyde, *m.* வேறே லோகத்தோடு சுவாசவாயு மிகுதியுள்ள கலப்பு.

Perpendiculaire, *adj.* நேர்நிலையான, செங்குத்தான, நிறுதிட்டம்—, இலம்பமான, எந்தப்பக்கத்திலுஞ் சாயாத. || *f. ou* ligne — நேர்நிலையான வரி, கோடி, இலம்பம், இலம்ப ரேகை, நிறுதிட்ட புசம் : montagne — செங்குத்தான மலை, குத்துக்கிரி.

Perpendiculairement, *adv.* நேர்நிலை—, நிறுதிட்டம்—, செங்குத்தாய்.

Perpendicularité, *f.* நேர்நிலை, —நிலையானதன்மை, செங்குத்து, செவ்வண், நிறுதிட்டம், இலம்பத்துவம்.

Perpendicule, *m.* தூக்குநூல், நேர்நிலை,— நிலைவரி.

Perpétration, *f.*, Perpétrer, *v. a.* கட்டிக்கொள்ளுதல், செய்தல்.

Perpétuation, *f.* நிலைப்பிப்பு, ஒழியாமை.

Perpétuel, elle, *adj.* ஒழியாத, ஓயாத, இடை—, விடாத, முடியாத, நிலைமையான, நித்திய, நித, சீவியகாலமெல்லாம் நிலைக்கிற, மாறாத, அடிக்கடி வருகிற.

Perpétuellement, *adv.* ஒழியாமல், இடைவிடாமல், எப்போதும், என்றென்றைக்கும், அடிக்கடி.

Perpétuer, *v. a.* நிலைமை—, நிலைப்படுத்துதல், நிலைப்பித்தல், நீடிக்க —, நீளிக்கச்செய்தல், நீளிப்பித்தல், நித்தியமாக்குதல். || se — நீளித்தல், நிலைத்தல், நிலைபெறுதல், — நிற்றல், வர்த்தித்தல்.

Perpétuité, *f.* நித்தியம், ஊழியுள்ள—, முடியாக்—, ஊழிகாலம், சத்தம், நிலைவரம், ஒழியாத நிலைமை : à — எப்போதைக்கும், அநவரதகாலம்.

Perpignan, (பிராஞ்சுதேசத்தில்), பெர்ப்பிஞான் நகரம்.

Perplexe, *adj.* இருமனம்—, கலக்கம்—, மலைப்பு—, சிக்குள்ள, தத்தளிக்கிற, கலக்குகிற.

Perplexité, *f.* சமுசயம், இருமனம், ஐயம், தத்தளிப்பு, மனக்கலக்கம், தியக்கம், மலைப்பு.

Perquisiteur, *m.* பரிசோதிக்கிறவன்.

Perquisition, *f.* பரிசோதனை, பரிசோதிப்பு, நுணுக்கமான விசாரணை, ஆராய்ச்சி.

Perquisitionner, *v. n.* பரிசோதனைசெய்தல், ஆராய்ச்சிபண்ணுதல்.

Perrière, *f.* கல்வெட்டி எடுக்குமிடம். || *V.* Pierrier.

Perron, *m.* குறடு, வெளிப்படி, —ப்படிக்கட்டு, — படிமேடை.

Perroquet, *m.* கிளி, — ப்பிள்ளை, கிள்ளை, சுவாகதம், கிஞ்சுகம். || உச்சிப்பாய்,— பாய்மரம். || மடிப்புநாற்காலி.

Perruche, *f.* சின்ன கிளி. || கிளிப்பெட்டை.

Perruque, *f.* பொய்ம் —, கள்ளமயிர்,— ச்சடை, மயிர்ச்சோடிப்பு, முடிமயிர், கள்ளத் தலைமுடி. || தப்பெண்ணக்கிழவன் : tête à — முடிமயிர் செய்வதற்குரிய மரத்தலை, தப்பெண்ணக்கிழவன்.

Perruquier, *m.* கள்ளமயிர் — ச்சடைசெய்பவன்,—செய்யுந்தொழிலாளி, தலைமயிர் சோடிக்கிறவன், அம்பட்டன்.

Perruquière, *f.* ஷை தொழிலாளி பெண்சாதி.

Pers, e, *adj.* நீலபச்சை நிறமான.

Per saltum, *adv.* தாண்டி, குதித்து, இடையுத்தியோஞ் செலுத்தாமல்.

Persan, e, *adj. et s.* பேற்சியதேசத்து, — தேசத்தான், — தேசத்துப் புதுக்குடி, பாரசீகன், பாரசி. || *m.* பேற்சிய —, பாரசிபாஷை.

Perse, *f.* (ஆசியாவில்) பேற்சியதேசம், பாரசீகம், பேற்சிய புடைவை. || s. பூர்வபேற்சிய குடி, — தேசத்தான், — தேசத்து. || *adj.* பேற்சியதேசத்து.

Persécuté, e, *adj. et* s. இம்சிக்கப்படும் பேர்வழி, துன்பப்படுத்தப்படுபவன்.

Persécuter, *v. a.* உபத்திரிய—, வருத்த —, இடுக்க —, துன்பப்படுத்துதல், வாதித்தல், தொந்தரைசெய்தல், அலட்டுதல், கலகம்—, கலாபனைசெய்தல். || se — ஒருவரொருவரை உபத்திரியப்படுத்துதல், ஒருவனொருவனுக்குத் தொந்தரை — சச்சரைசெய்தல்.

Persécuteur, trice, s. *et adj.* உபத்திரிய—, வாதை—, கலக—, துன்ப—, தொந்தரைப்படுத்துகிறவன், — படுத்துகிற, அலட்டுகிறவன்,— வள். || கலக—, கலாபனைக்காரன்,— காரி.

Persécution, *f.* உபத்திரியம், துன்பம், தொந்தரை, கலகம், கலாபம், வேத

கலாபனை, கலகம், இடைவிடாத —, அலட்டு.

Persée, *m.* ஓர் கதைவீரன், ஓரரசன்,— வடதாராகணம்.

Perses, *m. pl.* பேற்சியர், பூர்வபேற்சியகுடிகள், இப்போது Persans என்னப்படுகிறார்கள்.

Persévéramment, *adv.* நிலைமை—, பிடிமானம்—, திடமாய்.

Persévérance, *f.* நிலைமை, நிலைவிடாமை, கடைப்பிடி, பிடிமானம், சாதிப்பு, சாதனை, ஸ்திரம், திடன், ஸ்திதி, விடாத பிரயாசம்.

Persévérant, *part.* நிலைமை—, ஸ்திரம்—, பிடிப்புள்ள.

Persévérer, *v. n.* நிலைமையாயிருத்தல், நிலைநிற்றல்,— பெறுதல், நிலைத்தல், திடனாய் நிற்றல், சாதித்தல், விடாமல் —, ஒழியாதிருத்தல், சலம்—, கடைபிடித்தல், நன்மையில் நிலைத்தல்.

Persicaire, *f.* அவுஷதநிர்ப்பூண்டு.

Persicot, *m.* ஓர்வித சாராயம்.

Persienne, *f.* இலைச்சன்னல்,— க்கதவு, பலகணி : à la — பேற்சியமேளாயாய்.

Persiflage, *m.* சூக்ஷமான கேலி,— பழிப்பு, நகைப்பு, பரியாசம்.

Persifler, *v. a.* சூக்ஷமாய்ப்—, பழித்தல், பரியாசம் —, கேலிசெய்தல், நகைத்தல். || se — ஒருவனொருவனைப் பழித்தல்.

Persifleur, euse, *s. et adj.* சூக்ஷப் பழிப்பு—, பழிப்பு—, கேலிக்காரன்,— காரி, பழிப்பான.

Persil, *m.* கறிகளுக்குரிய பூண்டு.

Persillade, *f.* ஷை பூண்டுபோட்ட இறைச்சி.

Persillé, *adj.* உள்ளே இளம்பச்சை மாசுள்ள (பாற்கட்டி.)

Persique, *adj.* பேற்சிக்கு, பேற்சிய நாட்டு : golfe — பேற்சிக்குக்குடா, பேற்சிய அரபிதேசங்களுக்குள் உள்ள குடாக்கடல்.

Persistance, *f.* நிலைமை, பிடிமானம், ஸ்திரம், சாதிப்பு.

Persistant, *part.* நிலைநிற்கிற, விழாத.

Persister, *v. n.* நிலைத்தல், நிலை—, நிற்றல், விடாதிருத்தல், நிலைமை —, பிடிமானம்—, ஸ்திரமாயிருத்தல், சலஞ் —, சாதித்தல்.

Personé, *adj.* மூஞ்சிவடிவுள்ள (பூ) ; Personées, *f. pl.* ஷை வடிவு மலருள்ள பூண்டினம்.

Personnage, *m.* கனத்த—, பெரிய மனுஷன், பெரியோன், சங்கைமான், மகாராசன், சீமான், மகாத்துமா. || ஆள், மனுஷன். || வேஷம், பாவனை. கோலம், ஆட்டம் || மனுரூபம் : un grand—மகாராசன், சீமான் ; tapisserie à—மனுரூபங்களுள்ள சித்திரச்சீலை.

Personnaliser, *v. a.* ஒருவனை விசேஷித்துக் குறித்தல், ஆளாகப் பாவித்தல், பொதுவிஷயங்களை ஒருவன்பேரிற் சாட்டுதல்.

Personnalisme, *m.* தன்னைப்பற்றி மாத்திரம் அக்கறைகொள்ளுதல்.

Personnalité, *f.* ஆள்துவம், ஆளுக்குரிய தன்மை, — குணம், — விசேஷம். || பழிப்பு,— கண்டனம்.

Personnat, *m.* (சங்கத்தில்) விசேஷமேன்மை,— அதிகாரம்.

Personne, *f.* ஆள், ஒருவன், மனுஷன், பேர், சனம். || ஒருத்தி. பெண்பிள்ளை. || புறக்கோலம், சாயல், புறத்தி. || இடம் : une — d'esprit புத்திக்கூர்மையுள்ள ஒருவன்,— ஒருத்தி ; une jeune, une belle — இளம்—, அழகிய பெண்பிள்ளை ; il y avait 4 — நாலுபேரிருந்தார்கள் ; bien des — வெகுபேர், — சனம் ; en sa — அவனிடத்தில் ; en — தானே ;— civile, தனிரூபத்வம், நீதிமுறைமை சுதந்தரமுடைத்தானவர்களின் கூட்டம் ; payer de sa — துணிந்து ஆபத்துக் குட்படுதல், வருந்தித் தன்கடமை நிறைவேற்றுதல் ; s'assurer de la — de quelqu'un ஒருவனைப் பிடித்தல் ; aimer sa — தன்னைப் பேணுதல் ; être embarrassé de sa — என்னசெய்யத் தெரியாதிருத்தல் ; la — du roi அரசன் ; les 3 — divines தேவ திரித்துவத்தின் மூன்றாட்கள் ; les 3 — du verbe வினையின் மூவிடம் : la première — தன்மை ; la seconde — முன்னிலை ; la troisième—படர்க்கை.

Personne, *pron. indéf. m. sing.* ஒருவன், யாதொருவன், ஆராவது, எவனும், ஒருவனுமில்லை :—osera-t-il nier எவனாவது மறுதலிக்கத் துணிவானோ? — ne dira சொல்பவன் ஒருவனுமில்லை ஒருவனுஞ் சொல்லமாட்டான் ; qui vient ici ? — ஆரிங்கே வருகிறான் ? ஒருவனுமில்லை.

Personnel, *m.* (சங்கமுதலியவற்றின்) ஆள்கள், ஆள், தன்மை : le — et le matériel d'une armée ஓர் சேனையின் ஆள்களுஞ் சாமான்களும்.

Personnel, elle, *adj.* சுய, அவனவனுக்குரிய,— ச்சொந்த, ஆளுக்குரிய, —விசேஷ, இடங்குறிக்கிற : les fautes sont — குற்றங்கள் செய்தவர்களுக்குச் சொந்தமாம் ; critique — ஆசிரியனைப் பழிக்கிற கண்டனம் ; action — தானாய் உத்தரவாதம் பண்ணவேண்டியவனின்பேரிற் பிராது ; pronom — இடப்பிரதி—, இடச்சொல். [னாக.

Personnellement, *adv.* தானே, தா

Personnification, *f.* Personnifier, *v. a.* உணர்ந்துபேசுகிறதாக—, ஆளாகப் பாவித்தல் : se — ஷை பாவிக்கப்படுதல். [யாய்க் காட்டுகிற.

Perspectif, ive, *adj.* தூரபார்வை

Perspective, *f.* தோற்ற —, நயன —, காட்சி சாஸ்திரம், — வித்தை, ஒரு பொருளைத் தூரத்தில் அல்லது அருகில் தோற்றுவிக்கும் வித்தை, தூர பொருளின் பாவிப்பு, தேச —, தூர பொருளின் பாவிப்பு, தேச —, தூர காட்சி, — பார்வை, — காட்சிப்படம், துலைவு, விஸ்தாரமாய்க் காணும் ஸ்தலம். || (வரும் நன்மை தின்மைகளின்) நம்பிக்கை, பயம், நோக்கம், தோற்றம் : — linéaire வரிகளாற் காட்டும் பொருளின் பாவிப்பு ; — aérienne நிறக்குறைவினாலாகிற பொருளின் பாவிப்பு : en — நம்பிக்கையில், துலைவில்.

Perspicace, *adj.* புத்திக்கூர்மை—, உணர்வுள்ள.

Perspicacité, *f.* புத்திக்கூர்மை,—ச்சூக்ஷம், தெளிந்த அறிவு,—உணர்வு..

Perspicuité, *f.* (பிரசங்கத்தின்) தெளிவு, துலக்கம்.

Perspiration, *f.* தோன்றாத வேர்வை. [நம்புவிக்கிற.

Persuadant, *part.* இணக்குகிற,

Persuadé, *part.* இணக்க...ப்பட்ட, நம்பின, எண்ணுகிற, நினைத்து, நம்பி.

Persuader, *v. a. et n.* இணக்குதல், நம்புவித்தல், உணர்த்துதல், நினைப்பித்தல், ஏவுதல், புத்தியிற் புகுத்துதல்,— பதித்தல், உடன்—, சம்மதப்படுத்துதல் : — une chose à quelqu'un, quelqu'un d'une chose ஓர் காரியத்தை ஒருவனுக்கு நம்புவித்தல். || se — நினைத்தல். எண்ணுதல், நம்புதல், உணர்த்த—, ஏவப்படுதல்.

Persuasible, *adj.* நம்புவிக்கத்தக்க, நம்பத்தக்க.

Persuasif, ive, *adj.* நம்புவிப்பதற்குரிய, இணக்குகிற, இணக்குந் திறமை —, வாசாலமுள்ள.

Persuasion, *f.* இணக்குதல், நம்புவித்தல், ஏவுதல், இணக்கும்—, நம்புவிக்கும் வாசாலம்,— தத்துவம். || எண்ணம், கோட்பாடு, நம்பிக்கை, விசுவாசம் : être dans la — que நம்பிக்கொண்டிருத்தல். [யுடைத்தான.

Persulfure, *m.* கந்தகம் அதிகமா

Perte, *f.* இழப்பு, இழத்தல், போக்கடி. || சேதம், நஷ்டம், கேடு, அழிவு, சேதாரம், குறைச்சல், குறைவு, பாழ், நாசம். || பலியாமை, அபசயம், தோர்வை, தோர்ப்பு. || க்ஷயம், துர்ப்பிரயோகம். || சாவு : — de sang. *V.* Hémorragie ; — d'une bataille அபசயம், தோர்வை ; — au jeu சூதிலே தோர்ப்பு, — தோற்றல் ; être en — நஷ்ட்டப்படுதல், தோற்றல் :— du temps காலக்ஷயம்; jurer la — de ஒருவனை நாசமாக்கச் சபதமிடுதல் ; — de l'âme ஆத்துமசேதம் : — d'un fleuve ஓர் நதி பூமியில் அமிழ்தல்,— அமிழுமிடம்; à — நஷ்டமாய் ; à — de vue கண்ணுக்கெட்டாத தூரமாய், தெளியாத விதமாய் ; en pure—முழுநஷ்டமாய்; பிரயோசனமின்றி, வீணாய்.

Pertinemment, *adv.* தகுதி—, விவேகமாய், தக்கப்படி. [ரிய தன்மை.

Pertinence, *f.* தகுதி, தகைமை, உ

Pertinent, *adj.* தக்க, தகுந்த, தகுதியான, ஏற்ற, உரிய.

Pertuis, *m.* துளை, துவாரம், அணைவாசல், மதகு, (கண்டப் பூமிக்குந் தீவுக்குமிடையாக) வாய்க்கால். [டி.

Pertuisane, *f.* ஓர்வித முத்தலை ஈட்

Pertuisanier, *m.* ஷை ஈட்டிக்காரன்.

Perturbateur, trice, *s.* குழப்ப—, கலக—, கலாபனைக்காரன் — காரி. || *adj.* குழப்பம்—, கலகமாக்குகிற, குழப்புகிற, கலைக்கிற, force — ஆட்டத்தின் ஒழுங்கைக் கலைக்கிற பலன்.

Perturbation, *f.* மனக்கலக்கம்,—வெழுச்சி. || கலக்கம், குழப்பம். || கிர

கஒட்டத்தின் —, ஊசிக்காந்தத்தின்—, வியாதியின் விபரீதம்.

Péruvien, enne, *s.* பெருதேசத்தான்,— தேசத்தாள்,— தேசத்து.

Pervenche, *f.* ஓர் பூண்டு.

Pervers, e, *adj.* கெட்ட, பொல்லாத, துஷ்ட, அநீத, அக்கிரம, துர்மனம் —, துர்க்குணமுள்ள. || *m.* கெட்டவன், துஷ்டன், பொல்லாதவன், துர்க்குணன்.

Perversement, *adv.* கெட்ட —, துஷ்டத்தனமாய்.

Perversion, *f.* கெடுதி, கெடுதல், தின்மையாதல்.

Perversité, *f.* கெட்ட—, துஷ்டத்தனம், கெடுதி, துர்க்குணம்.

Pervertir, *v. a.* கெடுதல், கெடுவித்தல், கெட்டவன் —, காமாதுரனாக்குதல். || கலைத்தல், குலைத்தல், கலக்குதல், குழப்புதல். || புரட்டுதல், மாறுபாடாக்குதல், வேறுபடுத்துதல். || se — கெடுதல், கெட்டவனாதல், பொல்லாதவனாய்ப்போதல், அழிக்க—, கெடுக்க—, குலைக்கப்படுதல்.

Pervertissable, *adj.* கெடுப்பதற்கெளிதான.

Pervertissement, *m.* கெடுத்தல், கெடுதல், கெடுதி.

Pervertisseur, *m.* கெடுக்கிறவன்.

Pesade, *f.* முன்னங்கால் தூக்குதல்.

Pesage, *m.* நிறுப்பு, நிறுத்தல்.

Pesamment, *adv.* பளுவாய், பாரம்—, கனப்பாய்.

Pesant, e, *adj.* கன, கனத்த, கனம்—, பாரம்—, பளுவான, தொந்தரவான, சலிப்புள்ள, மந்தம்—, தாமதமுள்ள, பிரியம்—, அந்தமற்ற : il a la tête — அவனுக்குத் தலைபளுவாயிருக்கின்றது ; esprit—மந்தபுத்தி : style — பளுவான—, சிறப்பற்ற வசனநடை; conversation — சலிப்புள்ள சம்பாஷணை ; avoir le bras — வல்லமையுள்ளவன்—, பலத்தவனாயிருத்தல். || *m.* நிறை, இடை : ce livre vaut son — d'or இந்தப்புஸ்தகம் தன் பொன்னிடைபெறும். || *adv.* நிறையாய் ; une livre — d'or ஓரிருத்தற் பொன்னிறை, ஓரிருத்தலிடையுள்ள பொன்.

Pesanteur, *f.* கனம், கனப்பு, பாரம், பளுவு, தின்மை. || மந்தம், தாமதம், சோம்பு, ஊக்கமின்மை. || வலிமை, கடினம் : — universelle தின்மைக் கவர்ச்சி.

Pesée, *f.* நிறுப்பு, நிறுத்தல், ஒன்றாய் நிறுத்தது,— நிறுத்த பொருள், ஓர் கயிற்றை யிழுக்கும்—, பாரையை யமுக்கும் வலி,— பிரயாசம்,

Pèse-lait, *m.* பால்நிறுக்குங் கருவி.

Pèse-lettre, *m.* கடிதங்கள் நிறுக்கும் சிறு கருவி.

Pèse-liqueurs, *m.* நீராள நிறுப்புக் கருவி.

Peser, *v. a.* நிறுத்தல், நிறுத்திடுதல், தூக்குதல், தூக்கிப்—, கனம் பார்த்தல். || சீர்தூக்குதல், சீர்தூக்கிப்பார்த்தல், ஆராய்தல், அவதானித்தல், யோசித்தல் :— les raisons pour et contre உள் நியாயங்களையும் எதிர்நியாயங்களையுஞ் சீர்தூக்கிப்பார்த்தல் ; — ses paroles, ஜாக்கிரதையாய்ப் பேசுதல். || *v. n.* கனம்—, பாரம்—, பளுவாயிருத்தல், கனத்தல், பாரித்தல். || தக்க நிறை—, கட்டளை நிறைகொண்டிருத்தல். || தொந்தரை —, சலிப்பாயிருத்தல். || மேலூன்றுதல்,— அழுந்துதல், ஊன்றிப்பேசுதல், நடுமையநாடுதல் : cette roupie ne pèse pas இந்த ரூபாய்க்குச் சட்ட நிறையில்லை :—sur une circonstance ஓர் வரலாற்றில் ஊன்றிப்பேசுதல் ; — sur l'estomac சீரணியாதிருத்தல் ; — sur le cœur மனத்தாங்கல் கொடுத்தல் || se — நிறுக்க—, ஆராயப்படுதல், தன்னை நிறுத்தல்.

Peseta, *f.* இஸ்பானியா வெள்ளி நாணயம்.

Peseur, *m.* நிறுக்கிறவன்.

Peson, *m.* நிறுக்கக் கருவி, துலா, கயிற்று—, துலாக்கோல்.

Pessimisme, *m.* சகலமுந் தின்மையாக எண்ணுகிற எண்ணம், — கோட்பாடு.

Pessimiste, *m.* சகலமுந் தின்மையாக எண்ணுகிறவன், ஷை கோட்பாட்டுக்காரன்.

Peste, *f.* கொள்ளைநோய், பெருவாரிக்காய்ச்சல், தொற்றுவியாதி. || வாதை, கேடு, நாசம், உபத்திரியம், தின்மை. || கெடுதிக்காரணம்,— காரணன், துஷ்டன், துஷ்டை. || சாபனை—, ஆச்சரியச்சொல்லுமாம், சீசீ, ஓஓ : — du vieux fou ! கிழபைத்தியனுக்குச் சீசீ;

— ! que cela est beau ஓஓ அது எவ்வளவோ நேத்தியாய்.

Pester, *v. n.* கோபம்—, எரிச்சலாயிருத்தல், — ஆய்முறையிடுதல், மிகவுமுறுமுறுத்தல் : — contre quelqu'un ஒருவன்பேரில் எரிச்சலைக் காட்டுதல்.

Pestifère, *adj.* கொள்ளைநோய்தருகிற,— வருவிப்பதற்குரிய.

Pestiféré, *adj. et s.* சொள்ளைநோயுள்ள,— உள்ளவன்...

Pestilence, *f.* கொள்ளைநோய், — நோய்க்குரிய ஆகாசக்கெடுதி.

Pestilent, e, *adj.* கொள்ளைநோயின், — நோய்க்குரிய, — நோய்க்கடுத்த, தொத்துவியாதி தருகிற, — வருவிப்பதற்குரிய, தின்மையுள்ள.

Pestilentiel, elle, *adj.* கொள்ளைநோயுள்ள, — வருவிக்கிற, — தருகிற, தொத்துவியாதிக்கேதுவான.

Pet, *m.* குசு, வாயு, வளி, காற்று : lâcher, faire un — குசுவிடுதல்,— பறிதல் ; — de nonne உப்பின சிறு பணியாரம் : — en gueule ஓர் பள்ளிப்பிள்ளை விளையாட்டு.

Pétale, *m.* பூவினிதழ், அசழ், அல்லி, எடகம்.

Pétalé, *adj.* பூவிதழுள்ள.

Pétalisme, *m.* இலையிலெழுதிய பரதேசத் தீர்வை.

Pétarade, *f.* (குதிரை) உதைத்துதைத்துவிடுந் திரளான வாயு. || வாயாவிடுங் கேலிச்சத்தம். || வீண் வீம்புத்தனம், தப்பினயோசனை, வாணமிடும் பெருஞ் சத்தம் : répondre par une — மறுமொழியாகக் கேலிச் சத்தமிடுதல்.

Pétard, *m.* (கதவுகளை யுடைப்பதற்கான) வெடிகுண்டு. || பட்டாசு, சீன வெடி, விறிசு. || ஓர் வண்டு.

Pétarder, *v. a.* கதவு உடைப்பதற்கு வெடிகுண்டு சுடுதல்.

Pétardier, *m.* ஷை வெடிகுண்டு செய்பவன்,— சுடுபவன்.

Pétase, *m.* விரிவான ஓரத்தொப்பி.

Pétasite, *m.* ஓர் பூண்டு.

Pétaudière, *f. ou* cour du roi Pétaud, தலைமையற்ற—, ஒழுங்கற்ற வீடு, — கூட்டம்.

Pétéchie, *f.* (தோலில்வரும்) சிவந்த புள்ளி.

Pétéchial, e, *adj.* ஷை புள்ளிபோன்ற,— வருவிக்கிற.

Pet-en-l'air, *m.* குட்டையான சட்டை.

Péter, *v. n.* குசு—, வாயுவிடுதல், — பறிதல். || (துப்பாக்கி) சுடுதல், வெடித்தல், படாரிடுதல், படாரென வெடித்தல்,— உடைதல். || (மரம் நெருப்பில்) திகுதிகென்னல், பளபளென்று பொரிதல் : — dans la main கையில் வெடித்தல், வார்த்தைப்பாடு தப்புதல்; la tête — தலை உடைகிறாப்போலே வலித்தல்.

Pétersbourg (St.), (ருசியதேசத்தில்) சென்பெத்தெர்ஸ்பூர் நகரம்.

Péteur, Péteux, euse, *s.* குசுவிடுகிறவன்,— வள்.

Pétillant, *part.* திகுதிகென்கிற, பளபளவென்கிற, தெறிப்புள்ள. || பளபளப்புள்ள, பிரகாசிக்கிற.

Pétillement, *m.* நெருநெருப்பு, திகுதிகென்கிற—, பளபளென்கிற தீச்சத்தம். || மின்னுதல், பளபளப்பு, மினுமினுப்பு, தளதளப்பு.

Pétiller, *v. n.* பளபளென்று பொரிதல்,— எரிதல், திகுதிகென்னல், பளபளென்னல், நெருநெருத்தல், பொறி—, தெறித்தல், பளபளத்தல். || மினுங்குதல், மின்னுதல், துலங்குதல், பிரகாசித்தல். || பொங்குதல், கொதித்தல், துள்ளாடுதல். || பேராசைப்படுதல், வெகுவாயாசித்தல்.

Pétiole, *m.* இலைக்காம்பு.

Pétiolé, *adj.* காம்புள்ள, — போன்ற, காம்பில் வளருகிற.

Petit, e, *adj.* சின்ன, சிறு, சிறிய, சிறிதான, அற்ப, சொற்ப, கொஞ்ச. || குட்டை, குள்ள, குள்ளமான, குறு, குறும், குறுமையான. || தாழ்ந்த, நீச, ஈன, கனமற்ற. || சுருங்கிய, சுருக்கமான. || பிரியம்—, நேசமான. || *s.* பிள்ளை, குழந்தை, மகன், மகள், சின்னவன், சின்னவள். || *m.* (மிருக) குஞ்சு, குட்டி, மறி. || சொற்பம். || *pl.* சிறியோர்கள், அற்பசனம், சின்னவர்கள் : — homme குள்ள மனுஷன் ;— prince சின்ன பிரபு ; — génie அற்பபுத்தி ; — vent இளங்காற்று :—peuple அற்ப சனம் ; mon — ami என் நேச சிநேகிதனே : mon — என் நேசனே ; sa—est malade அவள் மகள் வியாதியாயிருக்கிறாள் ; la chatte a fait ses — பூனை குட்டிபோட்டது ; en — சுருக்கத்தில் ; — à — கொஞ்ச

கொஞ்சமாய், மெள்ளமெள்ள ; du — au grand பெரிய காரியங்களுக்குச் சின்னவைகளை ஒப்பிட, சிறியோர்கள் முதல் பெரியோர்கள் ; se faire—தன்னைத் தான் தாழ்த்திக்கொள்ளுதல் ; — esprit, குறுகலான எண்ணமுடைத்தானவன், அற்ப புத்தியுள்ளவன்.

Petite-fille, *f.* பேத்தி, பெயர்த்தி, பேரப்பிள்ளை, பௌத்திரி.

Petite-guerre, *f.* கவாத்து, கவாய்த்து, போரப்பியாசம், — ப்பாவனை. || சின்னயுத்தம், — சண்டை.

Petite-maîtresse, *f.* சொகுசு —, பிலுக்குக்காரி.

Petitement, *adv.* அற்பம்—, கொஞ்சம் —, சொற்பம் —, இலேசாய். || தரித்திரமாய், சிறப்பின்றி.

Petite-nièce, *f.* சகோதரன் —, சகோதரி பேத்தி.

Petites-maisons, *f. pl.* பைத்தியர் —, பித்தர்மடம், — சாலை, — கிடங்கு.

Petitesse, *f.* அற்ப—, சொற்ப—, கொஞ்சத்தனம், அற்பம், சொற்பம், சிறுமை, சின்னம், கொஞ்சம். || குள்ளம், குறுமை. || தாழ்மை, நீசம், சின்னத்தனம். || நுண்மை, நொய்மை, சிற்பம் : faire une — சின்னத்தனமான காரியஞ்செய்தல் ; — de cœur நீசத்தனம்.

Petite-vérole, *f.* குரு வியாதி, வைசூரி, முத்து, அம்மை : — à petits boutons சின்னமுத்து, சின்னம்மை : — confluente பெரியம்மை ; —volante போடகம், கொப்புளிப்பான்.

Petit-fils, *m.* பேரன், பெயரன், பேரப்பிள்ளை, பௌத்திரன்.

Petit-gris, *m.* வடதேச அணிற்பிள்ளை, அதின் தோல்.

Pétition, *f.* விண்ணப்பம், மனு, மன்றாட்டு, வேண்டுதல், விண்ணப்ப பத்திரம், அர்ஜி, — தாஸ்து : — de principe கேள்வி மறுமொழியாக வைத்தல். [ரன்.

Pétitionnaire, *s.* விண்ணப்பக்கா

Pétitionnement, *m.* விண்ணப்பஞ்செய்தல், விண்ணப்பத்திரள்.

Pétitionner, *v. n.* விண்ணப்பஞ்செய்தல், மன்றாடுதல்.

Petit-lait, மோர், மச்சிகை, தக்கிரம், பாற்கட்டியினின்று வடிந்த மோர்.

Petit-maître, *m.* பிலுக்கன், சொகுசுக்காரன். [சகோதரிபேரன்.

Petit-neveu, *m.* சகோதரன் —,

Pétitoire, *m. et adj.* உரிமை கேட்கிற விண்ணப்பம்,—விண்ணப்பமான.

Petit-pied, *m.* குளம்பினுள் எலும்பு. [திரம்,அதுகொண்டது.

Petit-verre, *m.* சிறு பளிங்குப்பாத்

Petits-enfants, *m. pl.* பேரப்பிள்ளைகள், பௌத்திரர்கள்.

Peton, *m.* சிறு கால், கால்.

Pétoncle, *f.* சங்கூமச்சி, மட்டி, காக்காச்சி.

Pétré, e, *adj.* கல்பரல்—, கல்நிறைந்த, கல்லுக்குள் விளைகிற.

Pétrel, *m.* ஓர் கடற் பக்ஷி.

Pétreux, euse, *adj.* கல்லின் தன்மையுள்ள.

Pétri, *part.* பிசைந்த, நிறைந்த, நிரம்பிய, பூரண : homme — d'orgueil ஆங்காரநிறைந்த மனுஷன் ; — d'esprit, மகா புத்திசாலி.

Pétrifiant, *part.* கல்லாக்குகிற, பிரமிக்கச்செய்யும். [லான பொருள்.

Pétrification, *f.* கல்லாதல், கல்

Pétrifié, *part.* கல்லான, கல்லாய்ப்போன, பிரமித்த, மரத்துப்போன.

Pétrifier, *v. a.* கல்லாக்குதல், கல்லாக மாற்றுதல்,— ப்பண்ணுதல். || பிரமிக்க—, மரக்கச்செய்தல். || se — கல்லாதல், கல்லாய்ப்போதல்.

Pétrin, *m.* பிசை—, உரொட்டித்தொட்டி, மாப்பிசையுந் தொட்டி. || சிக்கு, தொந்தரை :— mécanique மாப்பிசையு மியந்திரம்.

Pétrir, *v. a.* (மாவை, மண்ணை) பிசைதல், பிணைதல். || உருவாக்குதல். || se — பிசையப்படுதல்.

Pétrissage, *m.* பிசைவு, பிசைதல், பிணைச்சல், பிணைவு, பிணைதல்.

Pétrisseur, *m.* (மா) பிசைகிறவன்.

Pétrole, *m. ou* huile de — கன்மதம், சிலாநெய், — நாகம், — தைலம், மண்ணெண்ணெய்.

Pétroleur, euse, *s.* நெருப்புவைக்க மண்ணெண்ணெயை உதவிக்கொள்ளுகிறவன். [ணெய் சம்பந்தமான.

Pétrolier, ère, *adj.* மண்ணெண்

Pétrolifère, *adj.* மண்ணெண்ணெய் அடங்கிய, — யைஉண்டாக்கும்.

Pétrosilex, *m.* ஓர்வித கல்,—மணி.

Pettah, *m.* பேட்டை.

Petto (in), *adv.* இருதயத்தில், இரகசியமாய்.

Pétulamment, *adv.* துடுக்காய், வேகம்— சுறுக்காய்.

Pétulance, *f.* துடுக்கு, சுறுக்கு, குறும்பு, கொட்டம், முன்கோபம், ஆலோசனையற்ற வேகம்.

Pétulant, e, *adj.* துடுக்குள்ள, சுறுக்குள்ள, கொட்டமுள்ள.

Pétunsé, *m.* (சீன பீங்கான் செய்வதற்குரிய) ஓர் கல்.

Peu, *m.* கொஞ்சம், சொற்பம், அற்பம், கொஞ்சம்பேர், சிலர். || *adv.* கொஞ்சமாய், அற்பமாய், சற்று, கொஞ்ச, சில, கொஞ்சமான, சிறு தொகையான ;— d'eau கொஞ்சந் தண்ணீர் : — d'esprit கொஞ்சம் புத்தி, அற்ப புத்தி ;— de livres கொஞ்சம் புஸ்தகம், சில புஸ்தகங்கள் ;—savant கொஞ்சப் படிப்புள்ள ; estimer — கொஞ்சமாய்—, அற்பமாய் மதித்தல் ; vivre de — கொஞ்சகாரியத்தினாற் சீவித்தல் ; ils étaient peu de monde கொஞ்சம் பேரிருந்தார்கள், சிலபேர்மாத்திர மிருந்தார்கள் : homme de — தாழ்ந்த அந்தஸ்து மனுஷன், நீசன் ; un — கொஞ்சம் ; un — de pain கொஞ்சமுரொட்டி ; un — plus கொஞ்ச் மதிகம் ; le — d'amis que j'ai எனக்கிருக்கிற கொஞ்சஞ் சிநேகிதர் ; attends un — சற்றுநேரம் —, சற்றுப் பொறு : — après கொஞ்சத்துக்குப் பின் ; dans, sous — கொஞ்சத்துக்குள்ளே ; en — de mots சுருக்கமாய், கொஞ்ச வார்த்தையில் ; —à— கொஞ்சங்கொஞ்சமாய், மெள்ள மெள்ள, மெதுவாய், வரவர ; à— près ஏறக்குறைய, கிட்டத்தட்ட,— முட்ட, ஏற்றக்குறைச்சலாய் ; se contenter d'un à — après ஏற்றக்குறைச்சல் போதுமென் றிருத்தல் ; pour — que சற்றாவது … ஆகில் ; pour — que tu travailles நீ சற்றாவது வேலைசெய்தால்; aussi — que, si — que vous voudrez உமக்குச் சித்தமான எவ்வளவாகிலும் ; si — que rien, tant soit — சற்றாவது, சற்றாகிலும், *ou* très — மெத்தக்—, மிகவுங் கொஞ்சமாய்.

Peuplade, *f.* ஏற்றிடு குடி, வலசை போகிற சனம் குடியேற்றுதல். || சனம். || கூட்டம், கும்பல். || குளத்திற் போடும் மீன் குஞ்சு, — மீன்சினை : faire une — குடியேற்றுதல்.

Peuple, *m.* சனம், குடிகள், பிரசைகள். || கும்பல், கூட்டம், திரள். || அற்ப சனம். || குளத்திற்போடுஞ் சிறு மீன்கள். || மரத்தடித் தளிர், துளிர் : le — des airs ஆகாச குடிகள், பக்ஷிகள் ; le — des tombeaux கல்லறைக் குடிகள், மரித்தோர் ; un — de domestiques திரளான ஊழியர் ;—சாமானிய மனிதன். || le petit— தாழ்மையான அந்தஸ்திலிருப்பவன், *adj.* அர்பசனத்து ; air—அற்ப சனத்துச் சாயல்.

Peuplé, *part.* குடிகள்—, சனமுள்ள.

Peuplement, *m.* **Peupler**, *v. a.* குடிகளை —, குடியேற்றுதல், — ஏற்படுத்துதல், குடியேறுதல், வர்த்தித்து நிரப்புதல், சனத்தைப் பலுகச்செய்தல், குடிகளால் —, நிரப்புதல், நிறைத்தல். || வர்த்திக்கமீன் — முயல்போடுதல், இளமரம் —, கிளை நாட்டுதல் : — une île ஓர் தீவிற் குடிகளை யேற்றுதல் : — un étang குளத்தில் மீன்களை வர்த்திக்கப் போடுதல் ; — une vigne முந்திரிகைத் தோட்டத்திற் புதுச் செடிகளை நடுதல் — un tableau ஓர் படத்தில் பல மனிதருருவங்களை யெழுதுதல். || *v. n.* வர்த்தித்தல், பெருகுதல். || se— குடிகளால் நிரம்புதல்.

Peuplier, *m.* ஓர் மரம்.

Peur, *f.* பயம், அச்சம், ஐயம், பயங்கரம், திகில், வெருட்சி, ஏக்கம், துணுக்கு. || தைரியவீனம், கோழைத்தனம், கூச்சம் : avoir — பய —, அச்சப்படுதல், அஞ்சுதல், அச்சுறுதல், வெருளுதல் , en être quitte pour la peur, சேதமில்லாமல் அபாயம்விட்டு நீங்கல் ; faire—பயமுறுத்துதல், வெருட்டுதல், அச்சுறுத்தல், திடுக்கிடப்பண்ணுதல் ; le — de, de — que ஆகாதபடிக்கு ; le — de s'égarer, de — qu'il ne s'égare தான் —, அவன் வழுவாதபடிக்கு.

Peureux, euse, *adj.* பயம்—, அச்சமுள்ள, பயப்படுகிற, தைரியம் —, துணிவற்ற. || *s.* பயங்காளி, கோழை.

Peut-être, *adv.* சிலவிசை,—வேளை, ஒருவேளை,— சமயத்தில், ஆக்கும் *à la fin de la phrase* : il viendra — சில விசை வருவான், வருவானாக்கும். ‖ s. கூடுந் தன்மை, நிச்சயமற்ற காரியம்.

Phaéton, *m.* Phaéton என்பவன். ‖ மேல்மூடியில்லாத இலகுவான விரதம், வண்டிக்காரன். ‖ நீஞ்சுகிற ஓர் வித பக்ஷி.

Phagédénique, *adj.* தின்கிற, அழிக்கிற.

Phagédénisme, *m.* புண்முதலானவை புரையோடி விஸ்தரித்தல்.

Phalange, *f.* கனத்த—, சதுரங்க—, சதுர சேனை,— அணி. ‖ பட்டாளம், பதாதிபடை. ‖ கால்—, கைவிரலெலும்பு. ‖ வேலைக்காரர் சகோதர கூட்டம்.

Phalangère, *f.* ஓர் பூண்டு.

Phalangite, *m.* சதுரங்கசேனைச் சேவகன், ஓர்வித மீன்.

Phalène, *f.* இரவின் வண்ணாரப்பூச்சி

Phalère, *f.* ஓர் வண்டு வகை.

Phanérogame, *adj.* இலிங்கந் தோன்றுகிற (பூண்டு.)

Phantasmagorie, *f.* *V.* Fantasmagorie.

Pharamineux, se, *adj.* ஆச்சரியமான, பிரமிக்கத்தக்க.

Pharaon, *m.* ஓர் கடுத்தாசிச் சூது, பரவோன்என்பவன், எஜிப்த்துதேசத்துப் பூர்வீக அரசனின் பொதுப்பேராம்.

Phare, *m.* தீநா, தீநாதானம், விளக்குக்கூண்டுக் கோபுரம், கோபுரமேல் விளக்குக்கூடு : — de Messine மெஸ்ஸின்நகர கடல் வாய்க்கால்.

Pharisaïque, *adj.* பரிசேயருக்குரிய, கள்ள ஞானமான.

Pharisaïsme, *m.* பரிசேயர் குணம், கள்ள ஞானம், பத்தி வேஷம்.

Pharisien, *m.* பரிசேயன், (யூதரில்) ஓர் மதஸ்தன், கள்ள ஞானி.

Pharmaceutique, *adj.* மருந்து வித்தைக்கடுத்த. ‖ *f.* மருந்துவித்தை.

Pharmacie, *f.* மருந்துவித்தை, —தொழில்,— சாலை, — கடை, — வியாபாரம், — கூட்டிடுஞ் சாஸ்திரம், — தொழில், ஆயுருவேதம். ‖ மருந்து, வழங்குகிற மருந்துச் சேர்க்கை, சில மருந்துகளை வைத்திடும் பெட்டி.

Pharmacien, *m.* மருந்துசெய்பவன், — விர்பவன், மருந்துகளைக் கூட்டுகிறவன்.

Pharmacologie, *f.* மருந்துவிளக்கம்,— வித்தை,— சாஸ்திரம்.

Pharmacopée, *f.* மருந்து கூட்டிடும் வகை, — விதவிளக்கம், வழங்குகிற மருந்துச் சேர்க்கை.

Pharmacopole, *m.* மருந்து விற்பவன்.

Pharnace, *m.* Pharnaceum, தகல், திராய் ; — distichum . கம்பந்திராய், பனந்திராய் ; — cerviana பற்படகம், பற்படம்.

Pharsale, (தெசலிதேசத்தில்) பர்சால் நகர். ‖ *f.* ஓர் காப்பியம்.

Pharyngé, Pharyngien, *adj.* ஷை பங்கின்.

Pharyngite, *f.* ஷை பங்கின் எரிவு.

Pharyngotomie, *f.* ஷை பங்கின் சத்திரம்.

Pharynx, *m.* கண்டநாள—, தொண்டையின் மேர்பங்கு.

Phase, *f.* (சில கிரகங்களின்) கலை, வெவ்வேறான—, தோற்றம், காட்சி. ‖ தோற்றம், வித்தியாசம். மாற்றம் : — de la lune சந்திர கலை, திதி.

Phaséole, *f.* Phaseolus, அவரை, — க்காய், — க்கொட்டை, பயறு. ‖ (*adj.* அவரம், பயற்றம்) : — aconitifolius நன்னி —, துலுக்கப்பயறு ; — aureus துவரை : calcaratus காராமணி — farinosus சடைப்பயறு ; — gladiatus உளுந்து :— maximus கறுப்புப்பயறு, — மொச்சைக்கொட்டை ; — mungo சிறு—, பச்சை—, பக்கிரிப்பயறு, மூங்கு ;— radiatus,— roxburghii உளுந்து, பச்சை—, பசும்பயறு; — trilobus குப்பர்ணி :— trilobatus எலி—, நரி—, பனி—, மூவிலைப்பயறு : — tetraspermus மொச்சை.

Refroidissement, *m.* குளுமை, குளிர்தல், குளிர்ப்பிப்பு, குளிர்ச்சி, குளிருகை, (உஷ்ண — பக்ஷ) தணிவு, — குறைவு, குளிராலான சுக வீனம்.

Refuge, *m.* அடைக்கலம், தஞ்சம், தாபரம், சரணம், ஆதரவு, அபயதானம், ஆலம்பம், ஆஸ்பதம், புகல் —, ஒதுக்கிடம், ஒதுக்கு, ஆசிரயம். || போக்கு, சாக்கு.

Réfugié, *part.* அடைக்கலம் புகுந்த. || *m.* அடைக்கலமாய்ப் போனவன், புறத்தேசத் தடைக்கலந் தேடினவன்.

Réfugier (se), *v. pro.* அடைக்கலமாய்ப்போதல், — வருதல், — ஓடிவருதல், சரணமாய் ஓடிவருதல், சரணடைதல், சரண் —, அடைக்கலம் புகுதல், ஆதரவுகேட்டல், ஒதுங்குதல்.

Refuir, *v. n.* திரும்பிக் குறுக்கே ஓடிப்போதல்.

Refuite, *f.* வழக்கமாய் ஓடிப்போகிற வழி, ஓடிப்போகிற தந்திரச் சுற்று, தாமதம், இழுப்பு. || (காடியின்) அதிக ஆழம்.

Refus, *m.* மறுப்பு, மறுதலிப்பு, தள்ளுபடி, மறுக்கப்பட்டது, மாட்டேன் —, வேண்டாம் —, இல்லை —, கொடேன்என்னல், அல்லத்தட்டு, — த்தட்டுகை, எதிர்மறை, வெறுப்பு : essuyer un — மறுக்கப்படுதல் ; cela n'est pas à votre — அதை உனக்கு ஒப்புக் கொடுக்கிறதில்லை ; faire une chose au — d'un autre — மற்றொருவன் செய்ய மறுதலித்த காரியத்தைச் செய்தல் ; avoir le — d'un autre வேறொருவன் மறுத்த — வெறுத்ததை வாங்குதல் : cerf de — மூன்று வயது மான்.

Refusable, *adj.* மறுக்கத்தக்க.

Refusé, *part.* மறுத்த, மறுதலிக்கப்பட்ட.

Refuser, *v. a.* மறுத்தல், மறுதலித்தல், தள்ளுதல், அல்லத்தட்டுதல், வாங்காது —, கொடாதிருத்தல், வேண்டாம் —, மாட்டேன் —, கொடுக்கமாட்டேன் என்னல், (குதிரை) அடங்காதிருத்தல், கீழ்ப்படியாதிருத்தல், (காற்று) விரோதமாயிருத்தல் ; — un présent கொடை மறுத்தல், — வாங்காதிருத்தல் ; — une grâce ஓர் உபகாரம் மறுத்தல், — செய்யாதிருத்தல் : — ses amis சிநேகிதராசைகளுக்குச் சம்மதியாதிருத்தல் : — son consentement தன்சம்மதி மறுத்தல், சம்மதியாதிருத்தல் ; — de faire செய்யமாட்டேன் என்னல். || se — வாங்காதிருந்தல், தள்ளிவிடுதல், இணங்காது —, விரோதமாயிருத்தல் ; se — aux plaisirs இன்பங்களை வெறுத்தல் ; ne se rien — இன்ப சுகங்களைத் தேடுதல் ; se — à l'évidence பிரத்தியக்ஷத்துக்கு இணங்காதிருத்தல்.

Réfutable, *adj.* மறுக்கத்தக்க, அழிக்கத்தக்க.

Réfutateur, *m.* மறுப்போன், ஆக்ஷேபிப்போன், திக்கரிப்போன்.

Réfutation, *f.* மறுத்தல், மறுப்பு, உபசங்காரம், திக்காரம், நிராகரணம், பிரத்தியாக்கியானம், ஆக்ஷேபம், ஆக்ஷேபனம், விக்ஷேபம்.

Réfuter, *v. a.* மறுத்தல், ஆக்ஷேபித்தல், திக்கரித்தல், நிராகரித்தல், அழித்தல், பொய்யென்றொப்பித்தல் ; — un auteur ஓர் ஆசிரியன் சொன்னதை மறுத்தல்.

Regagner, *v. a.* மறுபடி யடைதல், — வாங்குதல், — சமாதானமாக்குதல், திரும்பித் தன் பாரிசத்திற் சேர்த்தல். || திரும்புதல், சேர்தல், நோக்கிப்போதல். || பரிகரித்தல், பரிகாரஞ் செய்தல் :— le dessus மறுபடி மேற்படுதல் ;— le vent மறுபடி காற்றினுதவியடைதல் :— le port துறைக்குத் திரும்புதல். || se — மறுபடி யடையப்படுதல்.

Regaillardir, *v. a.* மறுபடி களிப்பித்தல்.

Regain, *m.* இரண்டாமறுப்புப் புல்.

Régal, *m.* விருந்து, விருந்தோம்பல், பிரியமான பதார்த்தம், பெரிய சந்தோஷம்.

Régalade, *f.* விருந்திடுதல், விருந்தோம்பல், பிரியப்படும் பதார்த்தம், குளிர்காயக் கொளுத்தும் பெரிய நெருப்பு : boire à la — தூக்கிக் குடித்தல்.

Régalant, *part.* களிப்பிக்கிற, பிரியப்படுகிற, சந்தோஷமான, இன்பத்துக் கேதுவான.

Régale, *m.* ஓர்வித வாத்தியக் கருவி. || *f.* இராச பிடிப்பு, மேற்றிராணி

யாரில்லாத மேற்றிராசனங்களின் வருமானங்களை இராசாவாங்கும் வழக்கம். || *adj.* eau — பொன்னை யுருக்கும் நெருப்புத்திராவகம், சுவர்ணபேதி.

Régalement, *m.* மட்டமாக்குதல், — ஆக்கும் வேலை. || வரி—, தீர்வைத் தரம்பிரித்தல்.

Régaler, *v. a.* (நிலம்) மட்டமாக்குதல், வரி — தீர்வைத் தரம்பிரித்தல். || விருந்திடுதல், விருந்தோம்புதல், விருந்துகொடுத்தல். || சந்தோஷிப்பித்தல், பிரிய—, சந்தோஷப்படுத்துதல், மகிழ்வித்தல் ; — d'un soufflet — ஓரறையறைதல் ; — de coups de bâton தடியாலடித்தல். || se — ஒருவனொருவனுக்கு விருந்திடுதல், பிரியமாய்ச் சாப்பிடுதல், இன்பமான பதார்த்தந் தின்றல் ; se — de பேரிலுள்ள ஆசை நிறைவேற்றுதல், தானுசித்ததை வாங்குதல்.

Régalien, *adj. m.* இராசாவுக்கடுத்த : droits — இராசா சுதந்திரங்கள்.

Regard, *m.* பார்வை, நோக்கு, நோக்கம், கண்ணோட்டம், கண்ணோக்கம், கவனம், அவதானம். || எதிராகப் பார்க்கிற இரு படம். || வாய்க்கால் சோதிப்பதற்கான திறப்பு ; — jaloux திஷ்டி ; en — எதிராக : — favorable கடாக்ஷம், கடாக்ஷ வீக்ஷணம், அபாங்கம் ; au—de, ஒப்பனையாக, குறித்து, பற்றி.

Regardant, e, *adj.* அதிக நுணுக்கமாய்ப் பார்க்கிற, கை யிறுக்கமுள்ள ; — à la dépense செலவின்பேரில் எச்சரிக்கையுள்ள. || *m.* பார்க்கிறவன்.

Regarder, *v. a.* நோக்குதல், பார்த்தல், காண்டல், நோக்கி —, கண்திருப்பி —, உற்றுப்பார்த்தல். || ஆராய்தல், கவனித்தல். || எதிராய்—, நோக்கி—, நேராயிருத்தல். || சேர்தல், சம்பந்தமான—, அடுத்த—, சேர்ந்த காரியமாயிருத்தல் ;— de haut en bas, de travers நிந்தையாய்ப் பார்த்தல் ; —de bon œil தயவாய்—, கிருபாகடாக்ஷமாய் நோக்கிப் பார்த்தல் : — en pitié இரக்கமாய்—, நிந்தையாய்ப் பார்த்தல் ; — comme ஆக—, என்று நினைத்தல் ; cela me regarde அது என்னைச் சேர்ந்த காரியம். || *v. n.* கவனித்தல், எச்சரிக்கையாயிருத்தல் ; — de près நுணுக்கமாய்ப்பார்த்தல், கையிறுக்கமாயிருத்தல் : y — à 2 fois தான் செய்யப்போகிறதை நன்றா யோசித்துச் செய்தல். || se — உற்றுப்பார்க்கப்படுதல், கண்ணாடியில் தன்னைப் பார்த்தல். ஒருவனொருவனை நோக்குதல், — ஆராய்தல், — சோதித்துப்பார்த்தல், எதிராயிருத்தல் ; se — comme ஆகத்தன்னை நினைத்தல், — எண்ணுதல், — பாவித்தல்.

Regarnir, *v. a.* மறுபடி சோதித்தல், — இடுதல்.

Régate, *f.* தோணிகளின் ஓட்டம், — போராட்டம், — விளையாட்டு.

Regayer, *v. a.* பன்னுதல்.

Regayoir, *m.* பன்னுங் கருவி.

Regazonnement, Regazonner, *v. a.* காய்ந்த நிலத்தில் புல் விதைத்தல்.

Regeler, *v. n.* மறுபடி உறைதல், — கடினமாதல்.

Régence, *f.* அரசின் பிரத்திபாலனம், — பாலனக்காலம் பிரதி இராசரீகம். || அரசாட்சித்துவம், ஆளுகை. || சில நகரங்களின் அரசாட்சி, — சேர்ந்த நாடு. || கல்விசாஸ்திர உவாத்தித்தனம், — தனகாலம்.

Régénérateur, trice, *s.* மறுபிறப்பு —, புதுச்சீவியமிடுகிறவன், புதுப்பிக்கிறவன், சீர்திருத்துகிறவன், — வள். || *adj.* சீர்திருத்துகிற.

Régénération, *f.* மறுபிறப்பு. — சன்மம், மறுவுற்பத்தி, — வளர்ச்சி, — ஞான —, புதுச்சீவியம், ஞான மறுபிறப்பு, திருத்தம், குணப்படுகை, வதுக்கு.

Régénérer, *v. a.* மறுபடி பிறப்பித்தல், மறு சன்மம்—, புதுச்சீவியமிடுதல், ஞான பிறப்பிடுதல், புதுப்பித்தல், சீர்திருத்துதல். || se — மறுபடி வளர்தல், — உண்டாதல், ஞான பிறப்படைதல், சீர்திருந்துதல்.

Régent, e, *adj.* அரசின் பிரதிபாலனஞ் செய்கிற. || *s.* இராசபதிலாளி, இராச்சிய—, அரசின் பிரதிபாலனன். || கல்வி சாஸ்திர வாத்தியார்.

Régenter, *v. a. et n.* கல்வி சாஸ்திர வாத்தியாயிருத்தல், படிப்பித்தல், ஆளுதல், நடத்துதல்.

Régicide, *m.* இராச கொலை, — காதகம், — கொலைபாதகன், — காதகன். || *adj.* இராச கொலைக்குரிய.

Régie, *f.* விசாரணை, நடப்பிப்பு, ஆஸ்திகளின் விசாரணை, வரி தண்டல் விசாரணை,— க்காரர்,— கச்சேரி, சுங்கச்சாவடி.

Regimbement, *m.* உதைப்பு, காலுதை, காலெறி.

Regimber, *v. n.* உதைத்தல், எறிதல், காலெறிதல். ‖ *ou* se — அடங்காது—, கீழ்ப்படியாதிருத்தல், எதிர்த்தல், முரளுதல், விரோதித்தல்.

Régime, *m.* பத்தியம், சுக போசனம், சீவிய வகை, நடக்கை, ஒழுக்கம். ‖ ஒழுங்கு, முறை, முறைமை. ‖ ஆளுகை, இராச்சியபாரம், ஆட்சி, ஆளும் வகை. ‖ விசாரணை, நடப்பிப்பு, நடத்துகை, பராமரிப்பு பரிபாலனம். ‖ நேமகம், பொருணிலை. ‖ குலை, சீப்பு : observer un — பத்தியங் காத்தல் : — des prisons சிறைச்சாலைகளின் விசாரணை ; ancien — பழைய அரசாட்சி,— முறைமைகள் ; — de bananes வாழைச் சீப்பு.

Régiment, *m.* பட்டாளம், அணி —, படைவகுப்பு. ‖ கும்பல், மிகுதி.

Régimentaire, *adj.* பட்டாளத்துக்கடுத்த.

Région, *f.* நாடு, தேசம், சீமை, மண்டலம், திசை, திக்கு, அம்பரம், அரிதம், இடம், ஆதாரம்.

Régional, e, *adj.* பலநாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட, நாடுகளின், நாட்டிலுள்ள.

Régionalisme, *m.* தன் சொந்த தேசத்தின்மேல்மாத்திரம் அபிமானமாயிருத்தல்.

Régir, *v. a.* ஆளுதல், நடத்துதல், நடப்பித்தல், பரிபாலித்தல், விசாரணை செய்தல். ‖ நேமகங் கேட்டல். ‖ se — ஆளப்படுதல்.

Régisseur, *m.* காரியஸ்தன், நடப்பிக்கிறவன், காரிய—, விசாரணைக்காரன.

Registrateur, *m.* இடாப்பிற் —, தஸ்திரத்திற் பதிக்கிறவன், இடாப்பு விசாரணைக்காரன்.

Registre, Regître, *m.* இடாப்பு, தஸ்திரம், அட்டவணை, பதிவின்—, குறிப்பு—, இடாப்பு—, பேர்வழி—, ஞாபகபுஸ்தகம். ‖ எட்டின் வரிப் பொருத்தம். ‖ உலைவாய் : tenir — de tout எல்லாத்தையுங் குறித்தல்,— குறித்தெழுதுதல் ;— d'orgue வாத்தியக் குழாய்களை மூடித் திறக்குங் கோல்.

Registrer, *v. a. V.* Enregistrer.

Réglage, *m.* கடுதாசியிற் கோடுபோடுதல்.

Règle, *f.* (de charpentier) மட்ட—, சட்டப்பலகை ; (ordre) ஒழுங்கு, திட்டம், நியமம், கிரமம், ஒழுக்கம், ஆசரணம் ; (modèle) மாதிரி, மாதிரிகை, மேர்பாடம் ; (loi) கட்டளை, கற்பனை, முறைமை, முறை, பிரமாணம்; (des religieux) ஒழுங்கு, கட்டளை ; (de grammaire), விதி, சூத்திரம் ; (d'arithmétique) கணிதம் ; *pl.* (menstrues) சூதகம், தீட்டு, துடக்கு, தொடக்கு, துக்கை, பூப்பு, பூப்பம், மாதவிடை, தலையுழுக்கு, ஆர்த்தபம், இடஞ்சரம் : les premières — இருது, திரட்டு ; avoir ses — தலையுழுக்காயிருத்தல், தீட்டுப்படுதல், பூத்தல் ; avoir ses premières — திரளுதல், இருதுவாதல் ; — de trois திர ராசிகம், திரைராசிகம். முத்தொகை விதி ; — générale, பொதுப்பட, பெரும்பாலும்; se mettre, être en — செய்யவேண்டியதைச் சரியாய்ச் செய்தல்.

Réglé, *adj.* கோடு போடப்பட்ட (கடுதாசி). ‖ ஒழுக்கம்—, ஒழுங்கு—, திட்டமுள்ள. முறையான, நிதானமுள்ள, மட்டுள்ள. ‖ தீர்ந்த, தீர்த்த, தீர்மானமான, குறித்த, நியமித்த. ‖ வழக்கப்படி சூதகமான : mouvement — நிதானமான நடை : montre — சுமுத்திரையாய் நடக்கிற கடியாரம்.

Règlement, *m.* கட்டளை,— ச்சட்டம், கற்பனை, ஒழுங்கு, திட்டம், முறைமை, தீர்மானம், திட்டம்பண்ணுதல், ஒழுங்குபடுத்துதல், கணக்குப் பத்திரம் பரிசோதித்துத் தீர்த்தல் :— des limites எல்லை கட்டுதல் :—de juges ஓர் பிராது எந்த நடுவனால் தீர்க்கவேண்டும் என்கிற தீர்ப்பு

Réglément, *adv.* ஒழுங்காய், திட்டமாய், முறையாய்.

Réglementaire, *adj.* ஒழுங்குக்கடுத்த, ஒழுங்குபடுத்துகிற.

Réglementairement, *adv.* கட்டளை—, ஒழுங்கின்படியே.

Réglementation, *f.* Réglementer,

v. a. கட்டளையால் தீர்த்தல், தீர்மானித்தல், ஒழுங்கு படுத்துதல், மிகுதியாய்—, அநேகங் கட்டளை செய்தல். ‖ se — ஒழுங்கு —, தீர்மானிக்கப்படுதல்.

Régler, *v. a.* (கடுதாசியிற்) கோடுபோடுதல், கீறுதல். ‖ திட்ட—, கிரம—, ஒழுங்கு—, ஒழுக்க—, முறை—, சீர்படுத்துதல், திட்டங்கட்டுதல், பொருத்துதல், ஆவளித்தல். ‖ தீர்த்தல், தீர்மானித்தல், கற்பித்தல், கட்டளையிடுதல் ; — ses affaires தன் காரியங்களை ஒழுங்குபடுத்துதல் ;— un différend வியாச்சியந்தீர்த்தல் ;—une pendule கடியாரஞ் சரிப்படுத்துதல் ;—ses dépenses, திட்டமாய் செலவழித்தல், வரவுக்குமேல் செலவு செய்யாதிருத்தல் ;—le mémoire d'un ouvrier வேலைக்காரன் கணக்குப்பத்திரம் பரிசோதித்துக் குறைத்துத் தீர்த்தல். ‖ se—திட்ட,—ஒழுங்குபடுதல், ஒழுக்கமாதல், சரிப்படுதல் ; se — sur கண்டு பாவித்தல்,— அநுசரித்தல்.

Réglet, *m.* ஒழுங்குக் கட்டை, அத்தாற்குறித்த கோடு, தட்டையான சிற்ப கம்பி.

Réglette, *f.* ஒழுங்கு —, திட்டக் கோல்.

Régleur, *m.* கோடுபோடுகிறவன்.

Réglisse, *f.* அதிமதுரம், மதுகபூண்டு, அதிங்கம், மதுகம், ஏடலகம், குயின்மொழி. ‖ *m.* அதிமதுரச் சாரம்.

Régloir, *m.* குறிப்பு கோல், மட்டப்பலகை.

Réglure, *f.* கோடுபோடுதல், கோடுபோட்ட விதம்.

Régnant, e, *adj.* ஆளுகிற, இராச்சியபாரம் பண்ணுகிற, பிரதான, அதிகரிக்கிற, பிரபலியமான ; maladie— இப்போ பரம்புகிற வியாதி.

Règne, *m.* இராச்சியபாரம், ஆளுகை, ஆட்சி, இராசரீகம், ஆளுகைக்காலம். ‖ அதிகாரம், ஆளுகை, ஆட்சி, பிரபலியம். ‖ அர்ச். பாப்புவின் கிரீடம், பெரிய பீடத்தின் மேல் தொங்கு முடி. ‖ வகுப்பு, இனம், வருக்கம் : les trois — de la nature — வருக்கத்திரயங்கள் ;— animal மிருகவருக்கம், — சாதி ; — minéral பாஷாண வருக்கம் :— végétal திருணசாதி, மூலிகை வருக்கம்.

Régner, *v. n.* இராச்சியபாரம் பண்ணுதல், ஆளுதல், அரசாளுதல், இராசரிக்கம்—, துரைத்தனம்பண்ணுதல், செங்கோல் செலுத்துதல், அரசனாயிருத்தல். ‖ மிகுந்த வல்லமை — அதிகாரம் — செல்வம் — பாத்தியங் கொண்டிருத்தல், அதிகரித்தல், பிரபலியமாதல், மேற்படுதல். ‖ நெடுக்க விருத்தல், — பரம்புதல். ‖ இருத்தல், ஆயிருத்தல் ; il règne un violent vent du nord வாடை யகோரமாய் வீசுகின்றது.

Régnicole, *m.* இராச்சியத்தான், இராச்சிய வாசி,— குடி.

Regonflement, *m.* தடையாலான நீர்ப்பெருக்கு.

Regonfler, *v. a.* மறுபடி உப்புவித்தல். ‖ *v. n. et* se — (விக்கினத்தால் மறிக்கப்பட்ட நீர்) பெருகுதல், உப்புதல், திரளுதல்.

Regorgement, *m.* வழிதல், வழிந்தோடுகை, மிகு பெருக்கு, நிறைவு.

Regorger, *v. n.* வழிதல், வழிந்தோடுதல், கரைமேற் புரளுதல், அதிகமாய் நிறைதல், சொரிதல், பெருகுதல் ‖ மிகுதல், திரளாயிருத்தல், ஏராளமாய்க் கொண்டிருத்தல், பூரித்திருத்தல், நிறைந்திருத்தல் : faire — உத்தரிக்கச்செய்தல், அபகரித்ததைக் கட்டாயத்தினால் உத்தரிப்பித்தல்.

Regoûter, *v. a.* அநேகமுறை—, மறுபடி யுருசிபார்த்தல், — சுகித்தல்.

Regrat, *m.* சில்லறையா யுப்புவிற்றல், — விற்கு மிடம், விற்குஞ் சுதந்திரம், சில்லறையான விற்பனை.

Regrattage, *m.* பழைய சுவரைச் சீவுதல், — துடைத்தல்.

Regratter, *v. a.* மறுபடி சொறிதல், — சுறண்டுதல், பழைய சுவரைச் சீவுதல,—வழித்தல்,—தேய்த்தல், மறுபடி சிற்றுளியாற் கொத்துதல், சில்லறையாய் விற்றல். ‖ *v. n.* சொற்ப காரியத்திற் கழித்தல்.

Regratterie, *f.* சில்லறை வியாபாரம், — சரக்கு.

Regrattier, ère, *s.* சில்லறை வியாபாரி, சொற்பத்திற் கழிப்பவன், —வள்.

Regreffer, *v. a.* மறுபடி ஒட்டவைத்தல்.

Régressif, ive, *adj.* தன்னையே சாருகின்ற.

Regression, *f.* வேறர்த்தமாய்ச் சொல்லிரட்டிப்பு.

Regret, *m.* துயரம், துயர், கஸ்தி, மனஸ்தாபம், துக்கம், விசனம், விதனம், வியாகுலம், மனப்பீடை, சலிப்பு, மனத்தாங்கல், ஆகர்பகம். ‖ *pl.* முறைப்பாடு, பரிதாபம், புலம்பல் : avoir — de பேரில் கஸ்தி மனஸ்தாபப்படுதல் ; à — வெறுப்பாய், இஷ்டம்—, மனசின்றி, கட்டாயமாய்.

Regrettable, *adj.* பரிதாபத்துக்குரிய, பிரலாபத்துக்குரிய, விசனத்துக்குரிய, இழந்து துக்கிக்கப்படத்தக்க.

Regretter, *v. a.* பற்றி—, குறித்து —, இழந்ததினால் விசனப்படுதல், — துக்கித்தல், -- பரிதாபித்தல், எங்குதல், கஸ்தி—, துக்கப்படுதல் ;— un père செத்த தகப்பனைக்குறித்துத் துக்கித்தல் ;— une occasion சமயந் தப்பிவிட்டதைப்பற்றி விதனப்படுதல்;— d'avoir péché பாவஞ்செய்ததினாற் கஸ்திப்படுதல்.

Régularisation, *f.* **Régulariser**, *v. a.* ஒழுங்குபடுத்துதல். ‖ se — ஒழுங்குபடுதல்.

Régularité, *f.* ஒழுங்கு, திட்டம்; முறைமை, ஒழுக்கம், சீர், திருத்தம், பொருத்தம், மாருத கிரமம்,— நடை, விதிகளினநுசரிப்பு, நிர்விகற்பம். ‖ சந்நியாச அந்தஸ்து.

Régulateur, trice, *adj et s.* ஒழுங்குபடுத்துகிற, பிரமாணம்—, விதந்திட்டம்பண்ணுகிற,— வன்,— வள். ‖ *m.* சூத்திரநடை திட்டப்படுத்துங் கருவி. மாதிரிக்கான சரியாய் நடக்கிற கடியாரம்.

Régulation, *f.* ஓர் அலுவலை சரியாய் நடத்த எற்படுத்தப்பட்ட ஒழுங்குகள்.

Régule, *m.* கலப்பின்மை, — அற்ற பங்கு, கலப்பற்ற லோகம், சுத்த லோகம்.

Régulier, ère, *adj.* ஒழுங்கு—, கிரமம்—, முறை—, திட்டம்—, சீர்—, திருத்தம் —, பொருந்தம் —. பிரமாணமான, விதிக்கொத்த, விகற்பம்—, விபரீதமற்ற, நல்லொழுக்கத்துக்கொத்த, சுமுத்திரை—, சாக்கிரதை—, திட்டமுள்ள. ‖ சந்நியாச, ஈ- வார்த்தைப்பாடு கொடுத்த : marche — சமநடை : figure — சமகோணம் — பக்கமுள்ள வடிவு ; clergé — சந்நியாசிகள் ; bénéfice — சந்நியாசிகளுக்குரிய உம்பிளிக்கை ; verbe — விபரீதமற்ற வினை. ‖ *m.* சந்நியாசி, — சபையுட்பட்டவன்.

Régulièrement, *adv.* ஒழுங்கு—, திட்டம்—, கிரமம்—, இயற்கையாய், ஒழுங்கின்—, விதிகளின்படியே.

Régulus, *m.* மகம்என்னு நக்ஷத்திரம்

Régurgitation, *f.* குழந்தையின் வாந்திப்பு.

Réhabilitation, *f.* முந்தின அந்தஸ்தில் திருப்புதல், — ஸ்தாபித்தல், அவமான நிவாரணம்.

Réhabilité, *m.* கடனிறுக்கா முறிவு தீர்த்தவன், அவமான தீர்வை நீக்கினவன்.

Réhabiliter, *v. a.* மறுபடி சீர் — திட — சுதந்தரப்படுத்துதல், அவமான தீர்வை நீக்குதல், இழந்த அந்தஸ்து பெறுவித்தல், இழந்த கனம் பெறுவித்தல் ; -- la mémoire d une victime அநியாயமாய்க் கொலையுண்டவன் ஞாபகஞ் சுத்திகரித்தல். ‖ se — பொது எண்ணம் -- மதிப்பு — கனம் மறுபடியடைதல், குற்றம் நிவாரணமாக்குதல்.

Réhabituer. *v. a.* மறுபடி பழக்குதல். ‖ se --- மறுபடி பழகுதல்.

Rehaussement, *m* உயர்த்துதல், அதிகரிப்பு, உயர்ப்பு, விலையுயர்வு.

Rehausser, *v. a.* தூக்குதல், உயர்த்துதல், உசத்துதல், எற்றுதல். ‖ அதிகரிப்பித்தல், மூட்டுதல், தூண்டுதல், எழுப்புதல். ‖ அதிகமாய்த் தோற்றுவித்தல், அதிக காந்தி கொடுத்தல். ‖ பாராட்டுதல், புகழுதல், மெச்சுதல். ‖ அலங்கரித்தல், சோடித்தல். ‖ விலையுயர்த்துதல். ‖ *v. n.* மறுபடி விலையுயர்தல்: --- le courage தைரியம் தூண்டுதல் ; — un mur சுவரை உயர்த்துதல் ; — les monnaies நாணயங்களின் விலையுசத்துதல். ‖ se — தன்னை உயர்த்துதல், — மேன்மைப்படுத்துதல்.

Rehaut, *m.* அதிக காந்தியுள்ள விடம், சொத்துவேலையில் வெள்ளையிடம்.

Reillère, *f.* எந்திரச் சக்கரத்துக்குத் தண்ணீர் கொண்டுவரும் வாய்க்கால்.

Réimportation, *f.* Réimporter, *v. a.* மறுபடி யிறக்குமதி செய்தல்,— தேசத்திற் கொண்டுவருதல், ஓர் தேசத்தினின்று வந்ததை அங்கே திரும்பிக் கொண்டுபோதல்.

Réimposer, *v. a.* மறுபடி வரி விதித்தல்,— போர்மாசேர்த்தல்.

Réimposition, *f.* மறுபடி விதித்த வரி,— வரி விதித்தல், — போர்மாசேர்த்தல்.

Réimpression, *f.* மறு—, இரண்டாம்பதிப்பு.

Réimprimer, *v. a.* மறுபடி அச்சிற்பதித்தல்.

Reims, பிராஞ்சிராச்சியத்தில் ரின்ஸ்பட்டணம்.

Rein, *m.* குண்டிக்காய், மாங்கன், பிருக்கம், பூக்கம், *sanscrit* ‖ *pl.* இடுப்பு, இடை, உக்கலை, இராந்து, கடி, கடிதடம், கடி தேசம். ‖ முதுகு, (தாக்கின் —, வளைவின்) தாங்கி, வளைவு துவக்குமிடம் : avoir les — forts இடுப்பிற் பலன்கொண்டிருந்தல், ஆஸ்திக்காரனாயிருத்தல் : mettre à quelqu'un l'épée dans les — வேகமாய் நெருக்குதல்.

Réincarcération, *f.* Réincarcérer, *v. a.* மறுபடி சிறையிலடைத்தல்.

Réincorporation, *f.* Réincorporer, *v. a.* மறுபடி சேர்த்தல்,— சபையிற் சேர்த்துக்கொள்ளுதல்.

Reine, *f.* இராக்கினி, அரசி, இராணி, இராசாத்தி, இராசஸ்திரீ. ‖ ஆளுகிறவள், முதல், முதல்வி, தலைவி : la — des fleurs இராச புஷ்பம் ;— du bal கூத்தின் தலைவி. ‖ (aux échecs) மந்திரி ;— claude ஓர் கனி ;— marguerite, — des bois, — des prés பல புஷ்பங்கள் ; — des carpes ஓர் மீன் ; — abeille தேனீக்களின் தாய்.

Reinette, *f.* ஓர் கனி.

Réinfecter, *v. a.* மறுபடி கெடுத்தல்,— நாறுவித்தல்,— தீண்டுதல்.

Réinsérer, *v. a.* மறுபடி சேர்த்தல், — உள்செலுத்துதல்.

Réinstallation, *f.* Réinstaller, *v. a.* மறுபடி உத்தியோகத்தில் ஏற்படுத்துதல்,— ஸ்தாபித்தல்.

Reinté, *adj.* பலத்த இடுப்புள்ள.

Réintégrable, *adj.* மறுபடி வசத்தில் ஸ்தாபிக்கத்தக்க.

Réintégrande, *f.* காணியாக்ஷி யநுபவத்தில் திரும்பி ஸ்தாபிக்சப்படுதல்.

Réintégration, *f.* பழைய அநுபவத்தில்— உத்தியோகத்தில் மறுபடிஸ்தாபித்தல்,— தாபித்திருத்தல்.

Reintégrer, *v. a.* மறுபடி வசமாக்குதல்,— அநுபவமிடுதல், — வசப்படுத்துதல், பழைய அநுபவத்தில் — உத்தியோத்தில் மறுபடி ஸ்தாபித்தல் ; — dans une prison மறுபடி சிறைச்சாலையில் வைத்தல் : faire — des meubles பழைய இடத்திற் சாமான்களைப் போடுவித்தல்.

Réinterroger, *v. a.* மறுபடி வினவுதல்.

Réinviter, *v. a.* மறுபடி வரவழைத்தல்,— கோருதல்.

Reis, *m.* பொர்த்துசால் — பிறெசில்தேசங்களின் சிறு நாணயம்

Reis-efffendi, *m.* துலுக்கரசின் முத்திரைக்காரன்.

Réitératif, ive, *adj.* மறுபடி செய்கிற,— சொல்லுகிற.

Réitération, *f.* மறுபடிசெய்தல், — சொல்லுதல், இரட்டிப்பு.

Réitéré, *part.* இரட்டித்த, இரட்டிப்பான, மறுபடி செய்த,— சொன்ன, மிகுந்த, திரளான.

Réitérer, *v. a.* இரட்டித்தல், மறுபடிசெய்தல், — சொல்லுதல்,— துவக்குதல்.

Rêtre, Reître, *m.* அல்மஞ்தேசத்து இராவுத்தன், நாடோடி, தந்திரக்காரன்.

Rejaillir, *v. n.* பீரிடுதல், பீரிட்டுப்பாய்தல். ‖ திரும்பிப்பாய்தல்,— அசைத்தல், — வருதல், மேல்விழுதல், தெறித்தல்.

Rejaillissant, *part.* பீரிடுகிற, பாய்ச்சுகிற.

Rejaillissement, *m.* பீரிடுதல், திரும்பி வருதல்.

Rejet, *m.* தள்ளுபடி, தள்ளுதல், நீக்கம், ஒழிப்பு, தள்ளுபாடு, பிரகாபணம், பிரக்ஷேபம், உபாதி. ‖ வேறே கணக்கிற் சேர்த்தல், வேறே கவியில் தள்ளுஞ் சொல். ‖ புதுத்துளிர். ‖ மறுபடி விதித்தவரி.

Rejetable, *adj.* தள்ள —, நீக்கத்தக்க, தள்ளுபடிக்குரிய.

Rejeté, *part.* தள்ளுபடியான, தள்ளுகிடையான, தள்ள—, நீக்க—, மறுக்கப்பட்ட.

Rejeter, *v. a.* தள்ளுதல், தள்ளிப்போடுதல், நீக்குதல், தவிர்த்தல், ஒழித்தல், கழித்தல். || மறுத்தல், விலக்குதல், திருப்புதல், இடம்புதல், தடுத்தல், வேண்டாமென்னல், ஏற்றுக்கொள்ளாதிருத்தல், பிறக்கணித்தல், மறுதலித்தல், விசுவசியாதிருத்தல், உதறுதல். || வாந்தித்தல், வாந்திசெய்தல். || துரத்துதல், ஓட்டுதல். || மறுபடி தள்ளுதல். || வேறு கணக்கிற் சேர்த்தல். || மறுபடி துளிர்விடுதல் :— la balle எறிந்த பந்தை தடுத்தல்,— திருப்பி எறிதல் ;— toute discipline ஒழுங்கெல்லாமறுத்தல் ;— les miracles புதுமைகளை விசுவசியாதிருத்தல் ;— la faute sur மேலே குற்றந்திருப்பிச் சாட்டுதல், மேலே குற்றத்தை யிழிச்சுதல். || se— தங்களுக்குள் எறிதல் : se — sur மேல்விழுதல், போக்காகச்சொல்லுதல் : se — en arrière பின்வாங்குதல், பின்னோக்குதல்.

Rejeton, *m.* துளிர், தளிர், கொழுந்து, இணர், அங்குரம், அங்கூரம், இளங்கிளை, கன்று, முளை, தழை, அலங்கல், உல்லரி. || சந்ததி, சந்தானம், வமிசம்.

Rejoindre, *v. a.* மறுபடி சேர்த்தல், — இணைத்தல்,— இணக்குதல்,—பொருத்துதல்,— இசைத்தல்,— சேர்ந்தல், — பிடித்தல் :— son régiment தன் பட்டாளத்தை மறுபடி சேர்த்தல். || se — மறுபடி சேர்தல், — கூடுதல், திரளுதல்.

Rejointoiement, *m.* Rejointoyer, *v. a.* சந்தடைத்தல், பழைய சுவர்கல்லுச் சந்துகளிற் சாந்துபோடுதல்.

Rejouer, *v. a. et n.* மறுபடி விளையாடுதல்,— ஆடுதல்.

Réjoui, ie, *adj.* களிப்பு —, சந்தோஷம் —, மகிழ்ச்சியுள்ள, மலர்ந்த, ஆலோலித. || s. சந்தோஷகுணமுள்ளவன்,— வள், சந்தோஷக்காரன்.

Réjouir, *v. a.* சந்தோஷிப்பித்தல், களிப்பித்தல், மகிழ்வித்தல், சந்தோஷப்படுத்துதல், பிரியப்படுதல், தேற்றுதல், ஆறுதல்செய்தல், தைரியப்படுத்துதல். || se — சந்தோஷப்படுதல், சந்தோஷித்தல், களித்தல், களிகூருதல், ஆனந்தமாயிருத்தல், ஆநந்தித்தல், ஆலித்தல், மகிழ்தல், உல்லாசம்பண்ணுதல், அக்களித்தல், அகமகிழ்தல்.

Réjouissance, *f.* சந்தோஷகொண்டாட்டம், மகிழ்ச்சி, களிப்பு, ஆநந்தம், ஆநந்தனம், அக்களிப்பு, உவகை, உண்டாட்டு. || பந்தயத்துக்குரிய சூது கடுதாசி. || நல்ல விறைச்சியைச் சேர்ந்த கீழ்த்தரவிறைசசி. || *pl.* பொதுப் பண்டிகை, — கொண்டாட்டங்கள்.

Réjouissant, *part.* சந்தோஷிப்பிக்கிற, மகிழ்ச்சிக்குரிய, இன்பம்—, பிரியம்—, சந்தோஷமான,— வருவிக்கிற.

Rejuger, *v. a.* மறுபடி தீர்ப்பு செய்தல்.

Relabourer, *v. a.* மறுபடி யுழுதல், — சால்விட்டுழுதல்.

Relâchant, *adj.* இளக்குகிற, விரேசன, சுகபேதிக்குரிய, தளர்த்துகிற.

Relâche, *m.* ஓய்வு, ஒழிவு, இடை, நிறுப்பு, தரிப்பு. || இளைப்பாற்றி, ஆறுதல், நோய்த்தணிவு. || அமரிக்கை, அமைவு, அமைதி. || உல்லாசம், வாவு, உச்சிவிடுதி. || நாடக மாடுதலின் ஒழிவு.

Relâche, *f.* துறை, தரிப்பிடம், துறையில் தரித்தல்.

Relâché, *part.* தளர்ந்த, கண்டிப்பற்ற, அசட்டையுள்ள, நுணுக்கமற்ற: mœurs — ஒழுங்கற்ற நடக்கை.

Relâchement, *m.* தளர்ச்சி, தொளதொளப்பு, தொள், சிதிலம், துயக்கம், தளர்வு, இளகுதல். || இளக்காரம், இளக்கம், தணிவு, குறைவு, இளைப்பாற்றி, உல்லாசம், விட்டாற்றி, அசட்டை, கண்டிப்பின்மை.

Relâcher, *v. a.* தளர்த்துதல், இளக்குதல், நெகிழ்த்தல், நுகைத்தல். || போக —, விட்டுவிடுதல், விடுதலையாக்குதல், விடுதல்செய்தல், கைவிடுதல். || தணித்தல், குறைத்தல். || இளைப்பாற்றி —, ஓய்வு —, இளக்காரங்கொடுத்தல். || *v. n.* தங்குதல், துறைசேர்தல், ஓரிடத்தில் தரித்தல். || se — தளர்தல், இளகுதல், நுகைதல், தொய்தல், தொள்ளாடுதல், நெகிழ்தல், துயங்குதல்,

சோர்தல், தொளதொளத்தல், தொளிதல், தொள்ளுதல், சள்ளுதல், சோம்புதல், இளைப்பாறுதல், அசட்டையாதல், ஓய்தல், வேகமழிதல், கண்டிப்பிழத்தல், தணிதல், குறைதல், அமருதல், தன்னுரிமை குறைத்தல், ஒத்துவருதல்.

Relais, *m.* மாற்று—, அஞ்சற் குதிரை, மாற்றுப்பொருள். || (de poste) தபால் நிலை, அஞ்சல்நிலை, மசில், தங்கல். || தங்கவைத்த வேட்டைநாய். || மாற்றுக்குதிரை ஸ்தாபிக்குமிடம். || இடை —, நிலையிடம். || அலங்கத்தடிக்கும் அகழிக்கு முள்ளிடம். || தண்ணீரிடைந்துவிட்ட விடம் ; être de — ஓய்வாயிருத்தல் ; avoir des meubles de — மாற்றுச் சாமான்களைக் கொண்டிருத்தல்.

Relaissé, *adj.* இளைத்து நிற்கிற [(முசல்).

Relancer, *v. a.* திரும்ப எறிதல், — வீசுதல்,— எய்தல்,— ஓட்டுதல், — தூண்டுதல். || கண்டிப்பாய் மறுமொழி சொல்லுதல், அதட்டித் தள்ளுதல். || எதிரியைப் பார்க்க அதிக பந்தயம் போடுதல் :— quelqu'un ஒருவனை ஓர் காரியத்துக்குட்படுத்த அவனண்டைக்குப் போதல்,— பின் துடருதல்.

Relaps, e, *adj. et s.* பதிதத்தில்—, பாவத்தில் மறுபடி விழுந்த, முந்திவிட்ட பதிதத்தில் விழுதல்,— வன்,— வள்.

Rélargir, *v. a.* அதிக அகலமாக்குதல், அகலப்படுத்துதல். || se — அதிக அகலமாதல்.

Rélargissement, *m.* அதிக அகலமாக்குதல், மறுபடி அகலப்படுத்துதல்.

Relater, *v. a.* சொல்லுதல், விவரித்தல், அறிவித்தல்.

Relateur, *m.* விவரிக்கிறவன்.

Relatif, ive, *adj.* அடுத்த, சேர்ந்த, சம்பந்தம்—, சேர்மானமான, பிரத்தியோகித, சம்பந்தங்காட்டும், மற்றதுகளுக்கு ஒப்பனையிட்ட, சமயத்துக்குத் தக்க : pronom — சம்பந்தப் பிரதிச்சொல் ; chaque chose a son prix réel et sa valeur — ஒவ்வொரு பொருளுக்குள்ள விலையுஞ் சமயத்துக்குத் தக்க மதிப்புமுண்டு ; c'est une beauté — மற்றதுகளுக்கு ஒப்பனையிட்டால் அது அலங்காரமாம். || *m.* சம்பந்தச் சொல்.

Relation, *f.* சம்பந்தம், தொந்தார்த்தம், அநுபந்தம், சேர்மானம், சேர்த்திக்கை, பாத்தியம், பிரத்தியோகம், ஐக்கியம், பொருத்தம், உபகமம். || காகிதப்பழக்கம். || உறவு, இணக்கம், பழக்கம், இனம். || உறவோர், சேர்ந்தவர்கள், சிநேகிதர், பழக்காளிகள். || விவரம், வரலாறு, விவரிப்பு, சொல்லல், சரித்திரம்.

Relativement, *adv.* குறித்து, பார்த்து, சம்பந்தமாய், ஒத்துப்பார்க்குமிடத்தில், மற்றதுகளுக்கு ஒப்பனையிட்டு, ஒரு வகையாய்.

Relaver, *v. a.* திரும்பக் கழுவுதல்.

Relaxation, *f.* தளர்ச்சி, நெகிழ்ச்சி, நுகைவு. || விடுதலை, மீட்சி. || தணிவு, குறைவு, இளக்காரம்.

Relaxer, *v. a.* விடுதலாக்குதல், தளர்த்துதல், விடுதல்.

Relayer, *v. a.* மாற்றிவைத்தல், — பூட்டுதல்,— வேலைகொடுத்தல், வேறொருவனுக்குப்பதிலாக வேலைசெய்தல், பதிலாயிருத்தல். || *v. n.* மாற்றுக் குதிரைவாங்குதல். || se — மாறிமாறி வேலைசெய்தல்,— வருதல்.

Relayeur, *m.* தபாற் குதிரைகளை மாற்றி யிடுபவன்.

Relégation, *f.* விலக்கமாக அனுப்புதல், விசேஷவிடத்தில் தள்ளி யனுப்புதல்.

Reléguer, *v. a.* விலக்கமாக அனுப்புதல், ஓரிடங் குறித்துத் தள்ளி யனுப்புதல், விலக்கிவிடுதல். || se — நீங்குதல். ஒடுங்குதல்.

Relent, *m.* பூஞ்சினாற்றம், மக்கல் —, பாண்டல் நாற்றம்.

Relevailles, *f. pl.* பிரசவத்துக்குப் பின்—, நாற்பதாநாட் சடங்கு,— மந்திரிப்பு.

Relevant, e, *adj.* சம்பந்தமுள்ள, [ஒவ்வுகிற.

Relève, *f.* பட்டாளம் மாற்றுதல்.

Relevé, *m.* தொகை, விவரம், இடாப்பு, பொழிப்பு, அடக்கம், சுருக்கம், சங்க்ஷேபம், ஜோஷ்பாரா. || பதிலான பதார்த்தம். || காட்டுமிருகம் மேயப் புறப்படு நேரம். || இலாடங் கழற்றிக் கட்டும் வேலை. || *adj.* உயர்ந்த, எழுந்த, உசந்த, உச்சித, மேன்மை —, மேலான, கொஞ்சங் காரமுள்ள ; expression — உயர்மொழி.

Relevée, *f.* மத்தியானப் பின்னேரம், அபராண்ணகாலம், ஆசன்னம்.

Relèvement, *m.* எழுப்புதல், உயர்த்துதல். || தொகை, விபரம். || கப்பலினுயரிடம். || ஓர் பொருளின் வடிவு — பிரமாணம் — நிலை கடுதாசியில் வரைதல், இப்படிச் செய்த பணிக்கு.

Relève-moustache, *m.* ஓர் குறடு.

Relève-quartier, *m.* சப்பாத்து தொடுதற்குரிய தோல் துண்டு.

Relever, *v. a.* எழுப்புதல், நிமிர்த்தல், தூக்குதல், எற்றுதல், கிளப்புதல், உயர்த்துதல். || மன்னுதல், சொருகுதல், சுருக்குதல், தூக்குதல் || மறுபடி ஸ்தாபித்தல், — சீர்ப்படுத்துதல். || தூண்டுதல், மூட்டுதல். || அலங்கரித்தல், சோடித்தல். || பாராட்டுதல், மேற்படுத்துதல், மேன்மையாக்குதல், புகழ்தல். || தோற்றுவித்தல், காட்டுதல், காண்பித்தல், குறித்தல். || அதட்டுதல், கண்டித்தல். || பதில்வைத்தல், பதிலாதல். || அதிக காரமாக்குதல். || (கடன்) மன்னித்தல், விடுதலாக்குதல், தவிர்த்தல், அழித்தல். || (கப்பலை) ச்சலத்தில் தள்ளிவிடுதல். || பிரசவத்துக்குப்பின் மந்திரித்தல். || பொருளின் வடிவு — பிரமாணம் — நிலைகடுதாசியில் வரைதல்; — les espérances நம்பிக்கை தூண்டுதல்; — une industrie ஓர் தொழிலை விருத்திக்குக் கொண்டுவருதல்; — une sentinelle பாரமாற்றுதல்; — — quelqu'un de ses fonctions அலுவலைவிட்டு நீக்குதல்; — sa robe சட்டையைச் சொருகுதல்; — les cartes, les mains சூதுக் கடுதாசிகளை யெடுத்துப் பிடித்தல்; — la tête தலை நிமிர்த்தல், தைரியம் —, துணிவுகொள்ளுதல்; — les fautes குற்றங்களைப் பிடித்துக் காட்டுதல்; — un mot ஓர் சொல்லுக்குத் துரர்த்தங்கொடுத்தல், — கண்டிப்பாய் மறுமொழிசொல்லுதல்: — quelqu'un ஒருவனைத் தூக்கி யெழுப்புதல், — கண்டித்தல்: — un appel அபயமிடுவதற்குரிய பத்திரங்களை வாங்குதல்; — une sauce ஓர் குழம்பிலுறைப்பு சேர்த்தல்; — de ses vœux கொடுத்த் வார்த்தைப்பாடுகளை மன்னித்தல். || *v. n.* கீழ்ப்படிதல், சேர்ந்திருத்தல், எழுதல், குணமாதல்; — de maladie வியாதிக்குப்பின் எழுதல், — தேறுதல். || se — எழுந்திருத்தல், மறுபடி தேறுதல், — எழும்புதல், — சீர்ப்படுதல், — எற்படுதல், — தலைப்படுதல், குணமாதல், மேற்படுதல், உயர்தல், எறுதல், படுத்த பின் எழுதல்.

Releveur, *adj. et m.* நிமிர்க்கிற, தூக்குகிற, — நரம்பு.

Reliage, *m.* மறுபடி வளையம் — கட்டுபோடுதல்.

Relié, *part.* கட்டின, கட்டப்பட்ட.

Relief, *f.* கருக்கு, குமிழ் வடிவு, பிதுக்கம், புறப்பாடு, புடைப்புச் சித்திரம். || அலங்காரம், சிறப்பு, காந்தி, கனம், தோற்றம். || தானில்லாதகாலத்துக்குச் சம்பளம் பெற உத்தரவு. || (நிலமுடையவன் சிலமுறை துரைக்கு இறுக்கும்) கடமை, மாற்றுக்கடமை. || நிலத்துக்கு மேலுயரும் வீட்டின் பங்கு, சலத்தின்மேல் தோன்றுங் கப்பலின் பங்கு. || *pl.* இறைச்சி மிச்சங்கள்.

Relien, *m.* பரும்படியான பீரங்கி மருந்து.

Relier, *v. a.* மறுபடி கட்டுதல், சேர்த்தல், இணைத்தல், இசைத்தல், பொதுப்பந்தனத்தா லிசைத்தல், ஒருமைப்படுத்துதல். || (புஸ்தகம்) கட்டுதல். || (பீப்பாவுக்கு) கட்டு — வளையம் போடுதல்.

Relieur, euse, *s.* புஸ்தகங் கட்டுகிறவன், — வள், — கட்டி.

Religieusement, *adv.* பத்தி —, பயபத்தியாய். || சுமுத்திரை —, சாக்கிரதை —, நுணுக்கம் —, பிரமாணிக்கமாய்.

Religieux, euse, *adj.* வேத, வேதத்துக்குரிய, வேதத்துக்கொத்த, தேவபத்தியால் வருகிற. || பத்தி —, பயபத்தி —, விசுவாசமுள்ள. || சுமுத்திரை —, சாக்கிறதை —, நுணுக்கமான, பிரமாணிக்கமான. || சந்நியாசசபைக்கடுத்த, மடத்துக்கடுத்த. || *m.* சந்நியாசி, முனி, தவசி, துறவோன், சந்நியாசசபைக்குட்டட்ட முனி. || *f.* மடத்தாள், மடத்து —, கன்னியாஸ்திரி, விரதி, துறவி.

Religion, *f.* வேதம். || மதம், சமயம், மார்க்கம், வைதீகம், சித்தாந்தம். || பத்தி, பயபத்தி, தேவபத்தி, விசுவாசம். || அகத்திய கடமை, தவறாத கடன். ||

சந்நியாசம், சந்நியாச சபை, மல்த்தா விராவுத்தர் சபை : — chrétienne கிறீஸ்து வேதம் ; point de — தவறாத கடமை ; violer la — du serment சத்தியத்தின் பிரமாணிக்கத்தை மீறுதல் : se faire une — d'une chose ஓர் காரிய மகத்திய கடமை என்றெண்ணுதல் ; surprendre la — de quelqu'un ஒருவனைப் பொய்சொல்லி எய்த்தல் ; entrer en — சந்நியாச மடத்துட்படுதல் : la — réformée, *ou* la — கல்வீன் மதம் ; ceux de la — கல்வீன்மதத்தார்.

Religionnaire, *s.* கல்வீன் மதத்தான்,— மதத்தாள்.

Relinguer, *v. a.* கப்பற்பாயோரத்திற் கயிறுகளைத் தைத்தல். ‖ *v. n. ou* mettre une voile en relingue கப்பற்பாயோரத்தில் கட்டிய கயிறுகளைக் காற்றுக்கெதிராகத் திருப்புதல்.

Relingues, *f. pl.* கப்பற் பாயோரக் கயிறுகள்.

Reliquaire, *m.* அர்ச். பண்டப்பெட்டி,— சிமிள்.

Reliquat, *m.* நிலுவை, குறைபணம், சொச்சம், பாக்கி. ‖ வியாதியின் துடர்ச்சி.

Reliquataire, *s. et adj.* பாக்கியுள்ளவன்,— உள்ளவள்,— உள்ள.

Relique, *f.* அர்ச்சியசிஷ்ட—, திருப்பண்டம். ‖ மீதி, சேஷம், சவத்துச் சாம்பல்,— சேஷம் : avoir foi aux — de quelqu'un ஒருவனை நம்புதல்.

Relire, *v. a.* மறுபடி வாசித்தல். ‖ se — தானெழுதினதை மறுபடி வாசித்தல், மறுபடி வாசிக்கப்படுதல்.

Reliure, *f.* புஸ்தகங்கட்டுதல்,— கட்டும் வகை, கட்டிடம் ; — en peau தோற்கட்டிடம்.

Relocation, *f.* மறுபடி கொடைக்கூலிக்குக்கொடுத்தல்.

Relouage, *m.* மீன் சினையிடுங் காலம்.

Relouer, *v. a.* மறுபடி குத்தகை—, கொடைக்கூலியாய் வாங்குதல்,— கொடுத்தல்,— விடுதல். ‖ உட்கொடைக்கூலிக்கு விடுதல், — வாங்குதல். ‖ *V.* Sous-louer.

Reluire, *v. n.* விளங்குதல், தளுக்குதல், துலங்குதல், மின்னுதல், பிரகாசித்தல், மினுங்குதல், மினுமினுத்தல், பளபளத்தல், பளிச்சிடுதல், ஒளியாடுதல், காந்தி வீசுதல் ,— யாயிருத்தல், தகதகென்னல், பிரதிவிம்பம் வீசுதல், மறுபடி பிரகாசித்தல் : faire — விளங்குவித்தல்.

Reluisant, *part.* பிரகாசிக்கிற, மின்னுகிற, மினுமினுப்பான.

Reluquer, *v. a.* கடைக்கண்ணால் நோக்குதல், — பார்த்தல், கண்ணெறிதல், கடைக்கணித்தல், நாடுதல், ஆசித்தல், நத்துதல்.

Relustrer, *v. a.* மறுபடி பளபளப்பிடுதல்,— மெருகிடுதல்.

Rem (ad), Réponse — சரியான மறுமொழி.

Remâcher, *v. a.* மறுபடி மெல்லுதல்,— யோசித்தல்.

Remaçonner, *v. a.* கொற்றுவேலை செப்பனிடுதல்.

Remaigrir, *v. n.* மறுபடி மெலிதல்.

Remanger, *v. a.* மறுபடி தின்றல்.

Remaniement, Remanîment, *m.*

Remanier, *v. a.* மறுபடி கையாடுதல், திருத்துதல், செப்பனிடுதல், மாற்றித்திருப்புதல், மாற்றுதல்.

Remarchander, *v. a.* மறுபடி விலைதருக்கித்தல்.

Remariage, *m.* மறு விவாகம், மறுகலியாணம்.

Remarier, *v. a.* மறுபடி விவாகம் பண்ணுதல், — பண்ணிவைத்தல், — பண்ணிக்கொடுத்தல், — மந்திரித்தல். ‖ se — மறு—, மறுபடி கலியாணம்பண்ணுதல்.

Remarquable, *adj.* சிறந்த, விசேஷம்—, முக்கியம்—, அதிசயம்—, மேன்மையான, உச்சித, உத்தம, பேர்பெற்ற, உந்நத, குறிப்புக்குரிய, இலாஞ்சனையான.

Remarquablement, *adv.* விசேஷம்—, உச்சிதமாய்.

Remarque, *f.* குறிப்பு, குறி, ஷரா, விசேஷம், விபரம், புறநடை, சூசனம், கவனிப்பு.

Remarquer, *v. a.* மறுபடி குறித்தல்,—குறிப்பிடுதல். ‖ குறித்தல், கவனித்தல், அவதானித்தல், கண்டுபிடித்தல், பார்த்தல். ‖ பிரித்தறிதல், பகுத்த

றிதல் ; faire — அறிய —, முக்கியப்படுத்துதல், தோற்றுவித்தல். || se — விசேஷிக்கப்படுதல், விசேஷித்தல், விளங்குதல், தோன்றுதல், காணுதல், குறிக்கப்படுதல்.

Remasticage, *m.* Remastiquer, *v. a.* மறுபடி பிசின் பூசுதல்.

Remballage, *m.* Remballer, *v. a.* மறுபடி மூட்டை கட்டுதல், — யாகக் கட்டுதல்.

Rembarquement, *m.* மறுபடி யேற்றுதல்,— கப்பலேறுதல்.

Rembarquer, *v. a.* மறுபடி கப்பலில் ஏற்றுதல். || se — மறுபடி கப்பலேறுதல், மறுபடி உட்படுதல், — நுழைதல்.

Rembarrer, *v. a.* கண்டித்தல், மறுத்தல், தள்ளிப்போடுதல், தடுத்தல்.

Remblai, *m.* கொண்டுவந்த மண், மண் கொண்டுவந்த வேலை.

Remblaver, *v. a.* மறுபடி விதைத்தல்.

Remblavure, *f.* மறுவிதைப்பு, மறுபடி விதைத்த நிலம்.

Remblayer, *v. a.* புதுமண்ணால் நிரப்புதல்,— உயர்த்துதல்.

Remboîtement, *m.* Remboîter, *v. a.* மறுபடி பொருத்துதல், — சேர்த்தல்,— சுளுக்குவழித்தல். || se — மறுபடி பொருந்துதல், — இசைதல்,— சேர்தல்.

Rembouger, *v. a.* மறுபடி நிரப்புதல்.

Rembourrage *ou* Rembourrement, *m.* துத்துபோடுதல், துத்து. || ஆட்டுமயிருக்குப் பல நிறமிடுதல்.

Rembourrer, *v. a.* துத்துபோடுதல், நிறைத்தல். || கண்டித்தல், தள்ளுதல் ; se — நிறையச் சாப்படுதல்.

Rembourroir, *m.* துத்து அமுக்குங் கருவி.

Rembourrure, *f.* துத்து, சிம்பா, நிறைப்பதற்குரிய பொருள்.

Remboursable, *adj.* உத்தரிக்க—, இறுக்கத்தக்க.

Remboursement, *m.* கடனிறுப்பு, உத்தரிப்பு, இறுக்கவேண்டிய பணம் : faire un — கடனிறுத்தல், — உத்தரித்தல்.

Rembourser, *v. a.* செலவு—, கடனிறுத்தல்,— உத்தரித்தல், தன்முறைக்குப்படுதல், — அடைதல் ; — quelqu'un ஒருவன் செலவு உத்தரித்தல் ; — une rente வருஷாந்தர வருமானத்தின் முதலை யுத்தரித்தல் ;—des coups, un soufflet அடி—, அறைப்படுதல். || se — உத்தரிக்கப்படுதல், தான்செய்த செலவுக்குப் பரிகாரம் வாங்குதல் ; se — sur l'argent qu'on a entre les mains தன்கையிலிருக்கும் பணத்தில் தன் நஷ்டம் பரிகரித்தல்.

Rembrasser, *v. a.* மறுபடி யரவணைத்தல்,— முத்தமிடுதல். || se — மறுபடி ஒருவ னொருவனை அரவணைத்தல்,— முத்தமிட்டுக்கொள்ளுதல்.

Rembruni, *part.* இருண்ட, துக்கம்—, கஸ்தியுள்ள.

Rembrunir, *v. a.* கருக்குதல், அதிக கபிலமாக்குதல். || கஸ்தி—, கிலேச—, துக்கப்படுத்துதல். || se — கபிலமாதல், இருளுதல், கருகுதல், மந்தாரமாதல். || கஸ்தி — கிலேச—, துக்கப்படுதல்.

Rembrunissement, *m.* கருகுதல், இருளுதல், கபில—, இருண்ட நிறம்.

Rembuchement, *m.* se Rembucher, *v. pro.* (மான்) மறுபடி காட்டில் நுழைதல் : faire — காட்டில் நுழைப்பித்தல்.

Remède, *m.* மருந்து, அவுழ்தம், அவுஷதம், பரிகாரம், குளிகம், குளியம், பிரதி சமாதானம், அடைமானம், அசுதி ; — de loi நாணயத்திற் கட்டளைக்குமேலே கூட்டக்கூடுமான கலப்பு; —de poids இருக்கக் கூடுமான இடைக்குறைவு.

Remédiable, *adj.* பரிகரிக்கக் கூடுமான.

Remédier, *v. n.* பரிகாரஞ்செய்தல், — ஆதல், பரிகரித்தல், வைத்தியம் பண்ணுதல், மருந்துகொடுத்தல், அவுஷதமாதல்.

Remêler, *v. a.* மறுபடி கலத்தல்.

Remembrance, *f.* நினைப்பு, யாதி.

Remémoratif, ive, *adj.* ஞாபகத்துக்கான,— உரிய, நினைப்பூட்டுகிற.

Remémoration, *f.* ஞாபகம்.

Remémorer, *v. a.* மறுபடி ஞாபகப்படுத்துதல்,—நினைப்பூட்டுதல், அராத்துதல், உள்ளுறுத்தல். || se — நினைத்தல்.

Remenée, *f.* வாசற்படி சன்னலின் பின் வளைவு.

Remener, *v. a.* மறுபடி கூட்டி —, ஏற்றிக்கொண்டுபோதல்.

Remercier, *v. a.* நன்றியறிந்த உபசாரம் — தோஸ்திரஞ் சொல்லுதல், நன்றியறிதல், — செலுத்துதல். || ஏற்றுக்கொள்ளாதிருத்தல். || தள்ளுதல், தள்ளிப்போடுதல்.

Remercîment, Remerciement, *m.* நன்றியறிந்த உபசாரம், — தோஸ்திரம்.

Réméré, *m.* விற்றதை மீட்குஞ் சுதந்தரம்.

Remesurage, *m.* Remesurer, *v. a.* மறுபடி அளத்தல், — அளவு பார்த்தல்.

Remettre, *v. a* திரும்பவைத்தல், — போடுதல், மறுபடி ஸ்தாபித்தல், — ஏற்படுத்துதல். || தருதல், உத்தரித்தல், ஒப்பித்தல். || சுளுக்குவழித்தல், (அவயவம்) பொருத்துதல், இசைத்தல். || செப்பனிடுதல், சீர்ப்படுத்துதல், சீர்திருத்துதல், பரிகரித்தல். || சொஸ்தமாக்குதல், பலன் கொடுத்தல், தேற்றுதல். || தெளிவித்தல், ஆற்றுதல், அமர்த்துதல், அடைவாக வைத்தல். || மன்னித்தல், பொறுத்தல், மன்னிப்பு கொடுத்தல், மாப்புபண்ணுதல். || தாமதப்படுத்துதல், பின்போடுதல், அலைக்கழித்தல், இழுக்கடித்தல். || அறிதல், முன் பார்த்ததாக யாதியாதல் : — devant les yeux நினைப்பூட்டுதல் ; — bien ensemble சமாதானப்படுத்துதல்; — une partie உல்லாசம் பின்போடுதல், விளையாடின சூது ஒழித்து மறுபடி துவக்கவேண்டுமென்று தீர்த்தல் ; — un bras கை சுளுக்குவழித்தல்; — les péchés பாவப்பொறுத்தலைக் கொடுத்தல் ; — à la voile மறுபடி பாய்விரித்தல். || se — மறுபடி றன்னைவைத்தல், — அலுவலாதல், — துடர்தல், — துவக்குதல். || சுளுக்குவழிதல், இசைதல், பொருந்துதல். || தேறுதல், சொஸ்தம் —, குணமாதல். || நினைத்துக்கொள்ளுதல், ஞாபகப்படுதல். || தெளிதல், மயக்கம் —, பயந்தெளிதல். || தன்னையொப்பித்தல் ; se — à table மறுபடி மேசைக்கு உட்காருதல் ; se—en route மறுபடி பயணம் பின்துடர்தல் ; se — les traits d'une personne ஒருவன் சாயலை முன்பார்த்ததாக அறிதல் ; s'en — au சொற்படி கேட்டல்; s'en — au sort des combats சண்டை விதிக்குத் தன்னை ஒப்பித்தல்.

Remeubler, *v. a.* மறுபடி சாமான் போடுதல்.

Réminiscence, *f.* ஞாபகம், நினைப்பு, பழைய நினைப்பு திரும்புதல், ஞாபகத்துக்கு வந்த நினைப்புகள்.

Remise, *f.* ஒப்பிக்கை, ஒப்பிப்பு, கையளிப்பு, உத்தரிப்பு. || அனுப்பும் பணம். || சுளுவு, விலை கழிவு, — குறைப்பு, தரகு, தரவு. || கடன் குறைவு —, மன்னிப்பு, ஆக்கினையின் தணிப்பு. || பணம் பற்றிக்கொள்ளப்போகிறவனுக்கு —காசுக்கடைக்காரனுக்குவிடும்பணம். || தாமதம், கெடு. || பண்டிக்கிடங்கு, தேரடி. || வேட்டைப் பிராணிகள் ஒடுங்குங் குறுங்காடு : user de — தாமதம்பண்ணுதல் ; faire une — சுளுவு பண்ணுதல்; தரகு கொடுத்தல். || *m.* வாடகை வண்டி.

Remiser, *v. a.* (வண்டி) கிடங்கில் வைத்தல்.

Rémissible, *adj.* மன்னிக்க —, பொறுக்கத்தக்க, பொறுத்தலுக்குரிய.

Rémission, *f.* பொறுத்தல், மன்னிப்பு, பொறுதி. || விமோசனம். || தயவு, இளக்காரம். || தணிவு, நோயின் குறைவு.

Rémissionnaire, *s.* மன்னிப்புப் பத்திரம் பெற்றவன், — வள்.

Rémittence, *f.* வியாதி தற்சமைபம் படிமானமாயிருத்தல்.

Rémittent, e, *adj.* இடைவிடுகிற, தணிவு —, முறையுள்ள.

Remmailler, *v. a.* மேற்சோட்டுத்தையலை மறுபடி யிசைத்தல்.

Remmaillotter, *v. a.* மறுபடி துணி சுற்றுதல், — கச்சு சுற்றுதல்.

Remmancher, *v. a.* கைப்பிடி —, காம்பு மறுபடி போடுதல். || se — கைப்பிடி மறுபடி போடப்படுதல்.

Remmener, *v. a.* மறுபடி கூட்டிக்கொண்டுபோதல்.

Rémolade, *ou* Rémoulade, *f.* குதிரைச் சுளுக்கு மருந்து. || காரமுள்ள குழம்பு.

Remole, *f.* கடின நீர்ச்சுழி.

8463

Remontage, *m.* செப்பனிடுதல், பிரிந்ததை மறுபடி பிணைத்தல், கடியாரத்துக்குச் சாவி கொடுத்தல், நெடுஞ் சப்பாத்தின் புதுப்பிப்பு.

Remontant, *m.* வாட்கச்சை நுனி.

Remonte, *f.* இராவுத்தருக்கிடும் புதுக் குதிரைகள், படைக்குப் புதுக் குதிரை வாங்குதல்.

Remonter, *v. n.* மறுபடி யேறுதல், ஏறிப்போதல், எழுதல், உயர்தல், உசருதல், பின்னிட்டுப்போதல், திரும்புதல், நின்று துவக்குதல் :— à la source ஆதிமூலம் தேடுதல் ;— plus haut அதிக தலையினின்று துவக்குதல். ‖ *v. a.* எதிரிட்டுப்போதல்,— ஓட்டுதல், — செல்லுதல். ‖ புதுக்குதிரை கொடுத்தல். ‖ திரும்ப ஏறுதல்,— ஏற்றுதல்,— கூட்டுதல், — பிரிந்ததைப் பிணைத்தல், சாமான்போடுதல். ‖ அதிகமாய் உயர்த்துதல்,— எழுப்புதல். ‖ செப்பனிடுதல், புதுப்பித்தல், (கடியாரத்துக்குச்) சாவி கொடுத்தல் :— une rivière எதிரிட்டு—, தண்ணீருக்கு எதிராக ஆறு செல்லுதல் ;— le courage தைரியந் தூண்டுதல்,— எழுப்புதல் ;— un violon வீணைக்குப் புதுநரம்பு வைத்தல் ; — la tête à quelqu'un ஒருத்தனுக்குப் புத்தி தெளிவித்தல், — அமர்த்துதல், — மயக்கந் தீர்த்தல், தைரியங்கொடுத்தல். ‖ se — மறுபடி குதிரை வாங்குதல், வேண்டிய சாமான்களைச் சம்பாதித்தல், புத்தி தெளிதல், தைரியப்படுதல்.

Remontoir, *m.* கடியாரச் சாவி.

Remontrance, *f.* கண்டனை, புத்திமதி, கண்டிதம், எச்சரிக்கை, எச்சரிப்பு, எதிர்நியாயம், ஆக்ஷேபனை.

Remontrant, *m.* எதிர் நியாய—, ஆக்ஷேபனைக்காரன், அர்மினியுஸ் என்பவன் பாரிசத்தான்.

Remontrer, *v. a.* திரும்பிக்காட்டுதல்,— காண்பித்தல். ‖ கண்டித்து எச்சரித்தல்,— அறிவித்தல்,— காட்டுதல், — காண்பித்தல், காண்பித்துக்கொள்ளுதல், புத்தி —, புத்திமதி சொல்லுதல், எதிர் நியாயங்களை —, ஆக்ஷேபனஞ்சொல்லுதல். ‖ se — மறுபடி தன்னைக் காண்பித்தல்,— தோன்றுதல்.

Rémora, *m.* தடை, விக்கினம், தாமதம், கப்பலை நிறுத்தக்கூடுமானதாக எண்ணப்பட்ட மீன்.

Remordre, *v. a. et n.* மறுபடி கடித்தல், — [illegible]ண்டித்தல், மறுபடி துவக்குதல். ‖ se — மறுபடி தங்களைக் கடித்தல்.

Remords, *m.* மன[illegible] கண்டனம், — கடி, மன[illegible], [illegible]வேதனை, பச்சாத்தாபம், மனஸ்தாபம், . மனவேதனை, — வியாகுலம், உற்கண்டிதம்.

Rémore, *f.* கப்பலை நிறுத்தக்கூடுமானதாக எண்ணப்பட்ட மீன்.

Remorque, *f.* மற்ரொர் மரக்கல மூலமாக விழுத்தல், இழுப்புக்கயிறு, ஓர் கப்பலை மற்ரொர்கப்பலுக்குக் கட்டுங் கயிறு ; à la — வேறே கப்பலாலிழுக்கப்பட்டு ; se mettre à la — de quelqu'un ஒருவனைப் பின்செல்லுதல், — வழிகாட்டியாகப் பிடித்தல் : câble de — இழுப்புக்கயிறு.

Remorquage, *m.* Remorquer, *v. a.* மர்ரொர் மரக்கல மூலமாக விழுத்தல், தோணியா விழுத்தல், கயிற்ரு விழுத்தல், கட்டியிழுத்தல். ‖ se —, se faire — வேறு கப்பலா விழுக்கப்படுதல்.

Remorqueur, *adj. et m.* கப்பலை யிழுக்கிற, இழுப்புத்தோணி,— கப்பல், வண்டி யிழுக்கிற புகை யேந்திரம்.

Remors, *ou* mors-du-diable, *m.* ஓர் பூண்டு.

Remotis (à), *adj.* தள்ளுபடியாய்.

Remoucher, *v. a.* மறுபடி சிந்துதல், — திரி கத்தரித்தல், தன்னந்தஸ்தை மறந்து ஆங்காரிக்கிறவனைக் கண்டிப்பாய் அதட்டுதல். ‖ se — மறுபடி மூக்கு சிந்துதல்.

Remoudre, *v. a.* மறுபடி அரைத்தல்.

Rémoudre, *v. a.* மறுபடி சாணை பிடித்தல்.

Remouiller, *v. a.* மறுபடி நனைத்தல்,— நங்கூரம்போடுதல்.

Remoulade, *f.* காரமுள்ள குழம்பு.

Remoulage, *m.* நொய்த் தவிடு.

Rémouleur, *m.* சாணைபிடிக்கத்திரிகிறன், தீட்டுகிறவன்.

Remous, *m.* கப்பலுக்குப்பின் நீர்ச்சுழி, விக்கினத்தாலான நீர்ச்சுழி.

Rempaillage, *m.* Rempailler, *v. a.* வைக்கோற்புரி—, பழுதைபோடுதல்.

Rempailleur, euse, *s.* வைக்கோற்புரிபோடுகிறவன்,— வள்.

Rempaquer, *v. a.* மீன்களை யடுக்குதல்.

Rempaqueter, *v. a.* மறுபடி கட்டாகக் கட்டுதல்.

Remparer, *v. a.* அரணித்தல், மூடுதல், மூடிக்கொள்ளுதல். || se — தன்னை யரணித்தல், — பத்திரப்படுத்துதல், மறுபடி பிடித்தல்.

Rempart, *m.* மதிள், கொத்தளம், அலங்கம், அரண், மதிற்புறம், அகப்பா, அமர், எயில். || ஆதரவு, காவல், தாபரம்.

Rempiètement, *m.* அஸ்திவாரம் புதுப்பித்தல், வேறு கடைக்கால் எடுத்தல்.

Remplaçant, *m.* பதிலாள், பதிலாளி, பதிலாளன், பிரதிகஸ்தன், பிரதியாள், பிரதிசேவகன், ஐவேஜ்.

Remplacement, *m.* பதில்,— ஆக வைத்தல், — வைத்தல், பிரதி சேவகனை வைத்தல், விற்பனைப் பணம் ஆதாயமாக விடுதல், பழையகொம்பு பதிலாகப் புதுக்கொம்பு வருவித்தல்.

Remplacer, *v. a.* பதிலாயிருத்தல், — வைத்தல், பதிலாளியாயிருத்தல், பதிற்சேவகனாயிருத்தல். || விற்பனைப் பணமாதாயமாக விடுதல் ;— des marchandises விற்ற சரக்குகளுக்குப் பதிலாக வேறே சரக்கு வாங்குதல். || se— பதிலாக வருதல், விற்ற சரக்குகளுக்குப் பதிலாக வேறே சரக்குகளை வாங்குதல்.

Remplage, *m.* முழுது நிரப்புதல், சுவர்க் கடைக்காலிற் போடும் பொடிக்கல்லு, சாந்தில்லாமற் போடுங் கல்லுகள்.

Rempli, *m.* மடிப்பு, சுருக்கு. || *part.* நிரம்பின, நிரப்பப்பட்ட, நிறைந்த.

Remplier, *v. a.* மடித்தல், சுருக்கு செய்தல். || se — மடிக்கப்படுதல்.

Remplir, *v. a.* மறுபடி நிறைத்தல். || நிரப்புதல், நிறைத்தல், பூரித்தல், தேக்குதல், தூர்த்தல், திருப்தியாக்குதல். || பூரணம்—, நிறைவாக்குதல், குறைதீர்த்தல். || நிறைவேற்றுதல், செலுத்துதல், முடித்தல், தீர்த்தல், செய்தல், ஆர்த்துதல், சமர்த்தித்தல். || செப்பனிடுதல், திருத்துதல். || உத்தரித்தல், இருத்தல் ;— une quittance பற்றுச்சீட்டில் வெள்ளையிடங்களை யெழுதுதல் ;— la place de பதிலாயிருத்தல்; — son temps தன் காலம் நன்றாய்ப் பிரயோகித்தல் ; — un pays, (ஜனங்கள், மிருகங்கள் அல்லது தாவரவர்க்கங்கள்) வளமாயிருத்தல், மிகுதியாயிருத்தல் ;— un fossé வாய்க்காலைத் தூர்த்தல் ;— une veuve de son douaire ஓர் விதவைக்குத் தன் சீதனமுத்தரித்தல். || se — நிரம்புதல், நிறைதல், தேங்குதல், நிறையத் தின்றல் ; se — de ses frais தான் செய்த செலவுகளை வாங்குதல்.

Remplissage, *m.* நிரப்புதல், நிரப்பு, நிரப்புதற்குரியது, சுவரிற்போடும் பொடிக்கல்லு. செப்பனிடுதல். || (புஸ்தகங்களில்) அசைச்சொல், வீண்வார்த்தை. || (பாட்டில்) சமனிசை, மத்திமம்.

Remplisseuse, *f.* செப்பனிடுபவன்.

Remploi, *m.* வேறு காரியத்தி லுபயோகித்தல், பணத்தின் மறுபிரயோகம், பதில் வைத்தல்.

Remployer, *v. a.* மறுபடி உபயோகித்தல், — பிரயோகித்தல், — உதவி கொள்ளுதல்.

Remplumer, *v. a.* மறுபடி இறகு போடுதல். || se — மறுபடி இறகு வளர்தல், — தேறுதல், — புஷ்டியாதல், இழந்ததைக் கெலித்தல்.

Rempocher, *v. a.* மறுபடி பையிற் போடுதல்.

Rempoissonnement, *m.* மறுபடி குளத்தில் மீன் விடுதல்,— விட்ட மீன்.

Rempoissonner, *v. a.* மறுபடி குளத்தில் மீன்விடுதல்,— போடுதல்.

Remporter, *v. a.* மறுபடி கொண்டு —, கொண்டுபோதல், அடைதல் : — la victoire செயங்கொள்ளுதல், கெலித்தல்.

Rempotage, *m.* **Rempoter**, *v. a.* மறுபடி—, மறுகலத்திற் போடுதல்.

Remprunter, *v. a.* மறுபடி கடன் வாங்குதல்.

Remuage, *m.* அசைத்தல், கலக்குதல்.

Remuant, e, *adj.* ஆடுகிற, நிலையற்ற, அமைதியற்ற. || கலக்கம்—, கலகம்—, குழப்பமான ; esprit — குழப்பக்காரன்.

Remue-ménage, *m.* சாமான் பெயர்ச்சி, மாற்றம், கலகம், அலங்கோலை, கலகப்பிரியன், குழப்பப்பிரியன்.

Remuement, **Remûment**, *m.* அசைவு, சலனம், அசைப்பு, பெயர்ச்சி, மாற்றம். || கலகம், குழப்பம்.

Remuer, *v. a.* அசைத்தல், ஆட்டுதல், குலுக்குதல், கிண்டுதல், அலைத்தல், நடுக்குதல், அளாவுதல், கலக்குதல். || பெயர்த்தல், இடமாற்றுதல். || இளக்குதல், உருக்கப்படுத்துதல், தூண்டுதல், மூட்டுதல், கிளப்புதல். || நடப்பித்தல், நடத்துதல். || பிள்ளையின் சீலை மாற்றுதல் ; — un champ நிலத்தை மண்வெட்டியாற் கொத்துதல் ; — ciel et terre உபாயமெல்லாஞ் செய்தல் ;— une affaire விட்டிருந்த ஓர் காரியத்தை மறுபடி நடப்பித்தல் ; — les cœurs இருதயங்க ளிளக்குதல் ; — les passions ஆசாபாசங்களைத் தூண்டுதல். || *v. n.* அசைத்தல், துடங்குதல். || இடமாறுதல், குழப்பம்—, கலகஞ்செய்தல். || se — அசைக்க —, பெயர்க்கப்படுதல், அசைதல், ஓசிதல், கதறுதல், அசங்குதல், உலைதல், பிரயாசப்படுதல், முயலுதல்.

Remueur, *m.* தானியங் கிண்டுகிறவன்.

Remueuse, *f.* பிள்ளையின் சீலைமாற்றுகிறவள்.

Remugle, *m.* பாண்டல் நாற்றம்,— துர்க்கந்தம்.

Rémunérateur, trice, *s.* சம்பாவனை—, வெகுமானம்—, பலன்—, கைம்மாறு—, ஈடுகொடுக்கிறவன்,—அளிக்கிறவன்,— வள்.

Rémunération, *f.* சம்பாவனை, வெகுமானம், பலன், கைம்மாறு, பிரதிதானம், பிரத்தியுபகாரம்.

Rémunératoire, *adj.* சம்பாவனைக்கான.

Rémunérer, *v. a.* சம்பாவனை —, வெகுமானம்—, பிரதிபலன் அளித்தல், — கொடுத்தல்.

Renâcler, *v. n.* உறிதல், உறிஞ்சுதல், பூரகஞ்செய்தல், மூக்கு சீறுதல். || தத்தளித்தல், வெறுப்பு காட்டுதல்.

Renaissance, *f.* மறுபிறப்பு,— சீவியம், — சனனம் ,— பிறவி, புதுப்பிறப்பு, மறுபடி பிறக்குந் தத்துவம், அந்நிய சன்மம், நாமசோற்பத்தி, (அஞ்ஞானம்). || ஞானப்பிறப்பு, — சீவியம். || புதுப்பிப்பு, புதுத்துவக்கம், உயிர்ப்பு. || கல்வி சாஸ்திரங்கள் மறுபடி பிரபலியமான-௰௫-ம் நூற்றாண்டு துவக்கம்.

Renaissant, e, *adj.* மறுபடி பிறக்கிற,— துவக்குகிற.— தேறுகிற, ஒழிந்தவுடனே மறுபடி உண்டாகிற.

Renaître, *v. n.* மறுபடி பிறத்தல், — முளைத்தல்,— விளைதல்,— வளர்தல், — வருதல், மறு சனனம்—, ஞான சீவியமடைதல் :— à la vie, (மனதில் அல்லது சரீரத்தில்) பழையபடி பலமடைதல், பலங்கொள்ளல் : le jour—, பொழுதுவிடிதல், சொஸ்தமடைதல், குணமாகுதல் :— au bonheur மறுபடி பாக்கியவானாதல்.

Rénal, e, *adj.* இடுப்பின், இடுப்புக்கடுத்த.

Renard, *m.* குழி—, வளை—, நுழைநரி, நரி, ஊளான், ஓரி. || நரிப்புத்தியுள்ளவன், சூதன், தந்திரி, வஞ்சகன், நெருடன். || (தொட்டியில்) நீரொழுகும் வெடிப்பு. || வாந்தி. || *pl.* வாய்க்காலி லுண்டான திரளானவேர்; queue de — நரிவாற் புல்.

Renarde, *f.* பெண் நரி.

Renardeau, *m.* நரிக்குட்டி, குள்ளநரி, சிறுநரி.

Renardier, *m.* நரி பிடிக்கிறவன்.

Renardière, *f.* நரிக்குழி.

Rencaissage, *m.* **Rencaisser**, *v. a.* மறுபடி பெட்டியிற் போடுதல்.

Renchaîner, *v. a.* மறுபடி சங்கிலியாற் கட்டுதல்,— சங்கிலிபோடுதல்.

Renchéri, *part. et adj.* விலையதிகரித்த : faire le — செருக்குதல்.

Renchérir, *v. a.* விலையேற்றுதல், உயர்த்துதல். || *v. n.* விலையேறுதல், — அதிகரித்தல் ;— sur பார்க்க அதிகமாய்ச் சொல்லுதல்,— செய்தல், மேற்படுதல்.

Renchérissement, *m.* விலையதிகரிப்பு.

Renclouer, *v. a.* மறுபடி பற்றுவாயில் ஆணிகடாவுதல்.

Rencogner, *v. a.* மூலையிலடக்குதல்,— நெருக்குதல். || se — மூலையில் ஒடுங்குதல்.

Rencontre, *f.* தற்செயலான சந்தி, —நேரிடுகை,—சந்திப்பு,—சம்பவம், —

எதிர் படல்,— எதிர்ப்பாடு, அதிஷ்டம். || சமயம், தறுவாய், தருணம். || யுத்திச்சொல். || எதிர்ப்பு, தாக்கு, சண்டை, போர், யுத்தம் || தனிப்போர் : de rencontre அதிஷ்டமாய்க் கிடைத்த ; aller à la — எதிர்கொண்டு—, எதிராகப்போதல் ;— de planètes கிரக சங்கமம் :— de voyelles ஈருயிர் சந்தி : faire—, la — de எதிர்படல். || *m.* எதிர்முகமாய் நிற்குமிருகம், தினப்புஸ்தகத்தில் பெரிய புஸ்தகத்து ஏட்டின் குறிப்பு.

Rencontrer, *v. a.* காண்டல், எதிர்படுதல், எதிர்தல், எதிர்த்தல், யுத்தியால் கண்டுபிடித்தல் ;— les yeux de quelqu'un தன்னை நோக்குகிறவனை நோக்குதல், இருவர் கண்கள் எதிர்படுதல். || *v. n.* யுத்திமொழிசொல்லுதல், நேரிடுதல், வேட்டைமிருகத்தின் அடி பிடித்தல் ; bien — சரியா யுத்தேசித்தல். || se — எதிர்—, அகப்படுதல், தென்படுதல், எண்படுதல், ஓரிப்பூத்தல். || ஒரே நினைப்பாதல். || இருத்தல். || தனிப்போராடுதல், எதிர்த்துப் போராடுதல்.

Rencorser, *v. a.* புதுக்காத்திரந்தைத்தல்.

Rendable, *adj.* உத்தரிக்கத்தக்க.

Rendage, *m.* ஒருநாள் வேலை, — பலன். || அவியாத சூளையின் தின பலன்.

Rendant, e, *s.* கணக்கு ஒப்பிக்கிறவன்,— வள் : — compte, *m.* கணக்கு ஒப்பிக்கிறவன்.

Rendement, *m.* (நிலத்து) வருமானம், சுத்தமாக்கப்பட்ட பொருளில் தேறுவது.

Rendetter, (se), *v. pro.* மறுபடி கடனாளியாதல்.

Rendez-vous, *m.* சங்கஸ்தல நியமிப்பு, நியமித்த சங்கவிடம், வழக்கமாய்க் கூடுமிடம்.

Rendormir, *v. a.* மறுபடி தூங்குவித்தல். || se — மறுபடி தூங்குதல்.

Rendosser, *v. a.* பழையபடி தோள்மேல் போட்டுக்கொள்ளுதல்.

Rendoubler, *v. a.* சுருக்கு மடித்தல்.

Rendre, *v. a.* உத்தரித்தல், கொடுத்தல், தருதல், இடுதல், மறுபடி கொடுத்தல், — பெறுவித்தல், கையளித்தல். || செலுத்துதல், வண்டியிலேற்றிக்கொண்டுபோதல். || பதிலளித்தல், பிரதிசெய்தல். || ஒப்பித்தல், சொல்லுதல், உச்சரித்தல். || ஆக்குதல், செய்தல், படுத்துதல். || காட்டுதல், மொழிபெயர்த்தல். || வாந்தித்தல், கக்குதல், கழித்தல், விடுதல் :— gloire à Dieu சர்வேசுரனுக்கு மகிமைசெலுத்துதல் ;— témoignage சாட்சி சொல்லுதல் ;— compte கணக்கு ஒப்பித்தல்; —réponse மறுமொழிசொல்லுதல் ;— visite சந்தித்தல் ;— ses visites தன்னைச் சந்தித்தவர்களைத் திரும்பச் சந்தித்தல் ;— la justice நீதிசெலுத்துதல் ; — justice à quelqu'un ஒருவன் பாத்தியம் — யோக்கியம் ஒத்துக்கொள்ளுதல் ; — raison d'une chose ஓர் காரியத்தின் நியாயங்காட்டுதல் ;- பரிகாரம் செய்தல் :— la pareille பதிலுக்குப் பதில்செய்தல் ; — gorge, துராகிரதமாய்ப் பெற்ற பொருளை வல்கட்டாயத்தின்மேல் திரும்பக் கொடுத்தல்; — grâce, நன்றிகூறுதல், நன்றிசெலுத்துதல் ;— un salut பிரதி வந்தனஞ் செய்தல் ;— les armes தோல்வியடைந்ததாக ஏற்றுக்கொள்ளல்;—sa parole à quelqu'un வாக்குத்தத்தத்தை இரத்துசெய்தல் ;—service, தயைசெய்தல், உபகாரஞ்செய்தல் ; — sourd செவிடாக்குதல் ;—illustre பேர்படுத்துதல் ;— mot pour mot வார்த்தை வார்த்தையாய் மொழி பெயர்த்தல் ; cette copie rend bien l'original இந்தப் பிரதி மாதிரிக்குச் சரியாயிருக்குது ;— une médecine மருந்து வாந்தித்தல்; —l'esprit, l'âme, le dernier soupir உயிர்விடுதல், சாதல். || *v. n.* கொண்டுபோதல், சேர்தல். || se — போதல், சேருதல். || ஆதல், தன்னை —, தனக்கு ஆக்குதல். || கீழ்ப்படிதல், இணங்குதல், அமைதல், சம்மதித்தல். || தன்னைக் கையளித்தல். || சோர்ந்துபோதல், உலொங்குதல் ; se — maître தன் வசமாக்குதல்.

Rendre, *m.* உத்தரிப்பு.

Rendu, *part. de* rendre, இளைத்த, களைத்த, சோர்ந்த. || சேர்ந்த. || *m.* பதிலுக்குப்பதில், தன்னைக்கையளித்தவன், நன்றாய் வருணிக்கப்பட்ட தன்

மை : c'est un —, un prêté —, un prêté pour un — அது பதிலுக்குப் பதிலாம்.

Renduire, *v. a.* மறுபடி பூசுதல், — மெழுகுதல்.

Rendurcir, *v. a* அதிக கடினமாக்குதல், கெட்டித்தல். || se — அதிக கடினமாதல், அதிக கெட்டவனாதல்.

Rendurcissement, *m.* அதிக கடினமாக்குதல்.— ஆதல்.

Rêne, *f.* கடிவாள வார், கலினவார். || அதிகாரம்.

Renégat, e, *s.* வேத துரோகி, வேத மறுதலித்தவன், — வள், பக்கம் மாறி.

Rêner, *v. a.* கடிவாளம் போடுதல்.

Rénette, *f.* குளம்புகீறுங் கருவி, தோலி லிரோமை கீறுங் கருவி.

Rénetter, *v. a.* குளம்பு கீறுதல்.

Renettoyer, *v. a.* மறுபடி சுத்தம் பண்ணுதல்.

Renfaîtage, *m.* Renfaîter, *v. a.* மூகடு செப்பனிடுதல்.

Renfermé, *m.* அடைப்பி னாற்றம், குமையல் நாற்றம். || *part.* அடைபட்ட.

Renfermer, *v. a.* மறுபடி—, அடைத்தல், அகத்திடுதல், உள்ளடக்குதல், கவ்வுதல், வளைத்துக்கொள்ளுதல், சிறைச்சாலையி லடைத்தல். || மறைத்தல், ஒளித்தல். || கொள்ளுதல், அடக்குதல், கொண்டிருத்தல், ஒருக்குநல். || சுருக்குதல். || சங்க்ஷேபித்தல். || se— தன்னை யடைத்தல்,— ஒளித்தல், அடங்குதல், ஒடுங்குதல், ஒருங்குதல், அடங்கியிருத்தல், அடைபடுதல், ஒளிதல் ; — en soi-même, தன்புத்தி சிதரவிடாதிருத்தல், தான்கொண்ட கருத்தை வெளியிடாதிருத்தல்.

Renfiler, *v. a.* மறுபடி கோத்தல்.

Renflammer, *v. a.* மறுபடி கொளுத்துதல். || se — மறுபடி எரிதல்,— சுவாலித்தல்.

Renflé, *adj.* நடுவில் அதிக பருத்தம் — கனமுள்ள, உப்பின.

Ressort, *m.* விசை, சூத்திரம், சூத்திர வில்லு, சிலுக்கு, வில். || நெகிழிதம், திதஸ்தாபகம் || உபாயம், எத்தனம். || தாக்கு, ஏவல். || பலம், வேகம், ஊக்கம், உற்சாகம். || விசாரணை,— பங்கு ; ne se remuer que par — இயல்பின்றி அசைதல் ; n'agir que par — புற ஏவலால் நடத்தல் ; faire jouer tous les — உபாயமெல்லாம் பண்ணுதல் ; cela n'est pas de mon — அது என் விசாரணையல்ல ; en dernier — அபயமின்றி.

Ressortir, *v. n.* மறுபடி புறப்படுதல், பிதுங்குதல், தோன்றுதல், நின்று புறப்படுதல், சேர்ந்திருத்தல். || விசாரணையாயிருத்தல், ஆதீனத்திலிருத்தல், நியமிக்கப்படுதல் : faire — தோற்றுவித்தல், காண்பித்தல்.

Ressortissant, *adj.* சேர்ந்த, அடங்கிய, விசாரணைக்குட்பட்ட. [வைத்தல்.

Ressouder, *v. a.* மறுபடி பற்ற

Ressource, *f.* உபாயம், எத்தனம், வயனம், தப்பும்வழி, வழி, வகை, போக்கு, சூக்ஷம், சகாயம், ஆதரவு, உதவி, அவகாசம் ; homme de — உபாயக்காரன்.

Ressouvenir, *m.* Ressouvenance, *f.* ஞாபகம், நினைவு, நோயினுணர்ச்சி.

Ressouvenir (se), *v. pro.* திரும்ப நினைத்தல், நினைத்துக்கொள்ளுதல், ஞாபகப் படுதல், ஞாபகப்படுத்திக்கொள்ளுதல், நினைவு கூர்தல். ‖ விசாரித்தல், கவனித்தல், யோசித்தல் ; faire — நினைப்பூட்டுதல்.

Ressuage, *m.* வேர்வை, கசிவு. *ou*

Ressuer, *v. n.* வேர்த்தல், கசிதல், உள்ளீரம்விடுதல். ‖ *v. a.* வெள்ளியினின்று செம்பு பிரித்தல். [டம்.

Ressui, *m.* (நனைந்தபின்) காயுமி

Ressusciter, *v. a.* உயிர்ப்பித்தல், எழுப்புதல், மறுபடி பிழைப்பித்தல்,— உயிர்ப்புகொடுத்தல், தீராதவியாதியுள்ளவனைச் சொஸ்தப்படுத்துதல். ‖ மறுபடி வழங்குவித்தல், புதுப்பித்தல். ‖ *v. n.* உயிர்த்தல், மறுபடி பிழைத்தல், எழுந்திருத்தல் எழுதல், எழும்புதல், உயிர்த்தெழுதல், தீராதவியாதி நீங்கிப் பிழைத்தல்.

Ressuyer, *v. a. et n.* மறுபடி துடைத்தல், காய்வித்தல், காய்தல். ‖ se — காய்தல்.

Restant, *part.* மீதி—, மிச்சமான, மிஞ்சின, நிற்கிற : poste — தபாலிலே நிற்கவேண்டிய (காகிதம்). ‖ *m.* மீதி, மிச்சம், சேஷம், நிலுவை, மிஞ்சினது.

Restaur, *m.* உத்தரவாதியுத்தரிப்பு.

Restaurant, *part.* தேற்றுகிற, பலன்கொடுக்கிற. ‖ *m.* தேற்றுகிற—, பலன்கொடுக்கிற மருந்து,— குழம்பு, — ஆணம், பதமான ஆணம். ‖ தீனி விடுதி,— கடை.

Restaurateur, trice, *s.* மறுபடி ஏற்படுத்துகிறவன்,— ஸ்தாபிக்கிறவன்,— கட்டுகிறவன், சீர்படுத்துகிறவன்,— திருத்துகிறவன், செப்பனிடுகிறவன், புதுப்பிக்கிறவன், குணமாக்குகிறவன், பரிகரிக்கிறவன்,— வள். ‖ *adj.* மறுபடி ஏற்படுத்துகிற, சீர்திருத்துகிற. ‖ *m.* தீனி விடுதிக்காரன்.

Restauration, *f.* மறுஸ்தாபகம், திரும்பி ஸ்தாபித்தல்,— கட்டுதல், பழைய அரசின் மறு ஸ்தாபகம். ‖ புதுப்பிப்பு, சீரணோத்தாரணம், பரிகரிப்பு, உத்தாரணம், செப்பனிடுகை, திருத்தல், திருத்தம், சீர்திருத்தல்.

Restaurer, *v. a.* மறுபடி ஏற்படுத்துதல், திரும்பி ஸ்தாபித்தல், முந்தின அந்தஸ்தில் ஏற்படுத்துதல், பரிகரித்தல், புதுப்பித்தல், செப்பனிடுதல், குணமாக்குதல், திட —, தைரிய —, சீர்படுத்துதல், தேற்றுதல், சீரணோத்தாரணம் பண்ணுதல். ‖ se — மறுபடி ஸ்தாபிக்கப்படுதல், சீர்படுதல், தேறுதல், தேறப் புசித்தல், நன்றாய்ச் சாப்படுதல்.

Reste, *m.* மிச்சம், சேஷம், மீதி, சொச்சம், நிலுவை, குறை, சேஷார்த்தம், அவசேஷம். ‖ (de repas) எச்சில், மிச்சில், உச்சிஷ்டம், சேஷம், சேஷான்னம். ‖ (d'une soustraction) சோதிதம், பாக்கி, சேஷம். ‖ (chose refusée) கழி—, தெரிகடை, உச்சிரட்டம். ‖ கொஞ்சம் ;— de vie கொஞ்சமுயிர், குற்றுயிர் ; jouer son — கடைசி உபாயங்களைப் பிரயோகித்தல் ; être en -- பாக்கி செலுத்தவேண்டியவனாயிருத்தல் ; il n'a pas demandé son — ஒன்றும் பேசாமற் போனான் ; le — des hommes மற்ற—, வேறே மனுஷர், ஏனையோர் ; -- mortels பிரேதம் : les — d'un héros வீரன் பிரேத சாம்பல் ; et le — மற்றதும், ஏனையவும், எனவும் ; au —, du — மேலும், மீளவும், ஆகிலும், ஆயினும் ; de — மிச்சமாய்.

Rester, *v. n.* மீதி—, மிச்சம்—, நிலுவையாயிருத்தல், மிஞ்சுதல், மிகுதல், மீறுதல், சேடித்தல், மிக்கிருத்தல். ‖ நிற்றல், நிலைத்தல், தரித்தல், தக்குதல், தங்குதல், இருத்தல், வசித்தல், ஓர் சுரத்தில் நீளித்தல் ; — sur le champ de bataille போர்க்களத்திற் கொல்லப்படுதல் ;— tranquille தங்குதரி கொள்ளுதல் ;— derrière பின்னுறுதல்.

Restituable, *adj.* உத்தரிக்கப்பட—, பழையபடி வைக்கத்தக்க.

Restituer, *v. a.* உத்தரித்தல், மறுபடி கொடுத்தல், -- ஒப்பித்தல், -- செலுத்துதல், உத்தரவாதம் பண்ணுதல்,

பரிகரித்தல், பழையபடி வைத்தல் ; — en son entier முந்தின அந்தஸ்தில் ஸ்தாபித்தல்.

Restituteur, *m.* பழையபடி வைக்கிறவன்.

Restitution, *f.* உத்தரிப்பு, உத்தரவாதம், உத்தாரணம், பரிகரிப்பு, பழையபடி திருத்தல், உடன்பட்ட கடமை நீக்குந் தீர்வை.

Restor, *m. V.* Restaur.

Restreindre, *v. a.* ஒடுக்குதல், நெருக்குதல், அடக்குதல், மட்டு—, எல்லைகட்டுதல், எல்லைக்குள் ளடக்குதல், குறைத்தல், மட்டிடுதல், மட்டுப்படுத்துதல், யதம்பண்ணுதல் :— une proposition ஓர் வாக்கியத்தின் பொருளுக்கு மட்டுகட்டுதல். ‖ se — தன் செலவு குறைத்தல். அடங்குதல், ஒடுங்குதல், தனக்கு மட்டுகட்டுதல், குறைக்கப்படுதல் ; se — à la moitié பாதிக்குள் ளடங்குதல்.

Restrictif, ive, *adj.* அடக்குகிற, குறைக்கிற, மட்டுகட்டுகிற.

Restriction, *f.* மட்டு, கட்டு, ஒடுக்கம், அடக்கம், மட்டுகட்டுகிற திட்டம் : — mentale பேசாமல் —, சொல்லாமல்விடுதல், எதார்த்தமெல்லாங் காட்டாதேவிடுதல்.

Restringent, *adj. et m.* இறுக்குகிற,— மருந்து.

Résultant, *adj.* பலிப்பான, வருகிற, தொடருகிற, சித்தியாகிய.

Résultante, *f. ou* force — பலபலங்கள் சேர்ந்து ஆகிற பலன்.

Résultat, *m.* பலிப்பு, முடிவு, சித்தி, காரிய சித்தி, பலன், பேறு, சித்தாந்தம், பலோதயம், பிரயோகம்.

Résulter, *v. n.* பலித்தல். பின் தொடர்தல், ஆதல், உண்டாதல், வருதல், சம்பவித்தல், சித்தித்தல், தொடர்பாதல்.

Résumé, *m.* சுருக்கம், சங்க்ஷேபம், தொகுதி, தொகை : au —, en — அடக்கமாய், தொகையாய், தொகுத்துரையாய்.

Résumer, *v. a.* சுருக்கிச் சொல்லுதல், தொகுத்து உரைத்தல், சுருக்கமாய்ச் சொல்லுதல், சங்க்ஷேபித்தல் : se — *v. pro.* தான் விஸ்தாரமாய்ச் சொன்னதைச் சங்க்ஷேபித்துச் சொல்லுதல்.

Résure, *f.* மீன்பிடிக்கிற வலை.

Résurrection, *f.* உயிர்ப்பு, உயிர்த்தல், உத்தானம், மாமிசோத்தானம், மாங்கிஷ உத்தானம், ஆத்துமஞ் சரீரத்தோடு திரும்பிச் சேர்த்தல், உயிர்த்தெழுகை, பிரதி சீவனம், சஞ்சீவனம், சடுதியான சொஸ்தம், சேசுநாதருயிர்த்தலின் படம்.

Rétable, *m.* பீடஞ் சார்ந்த சுவரணி.

Rétabli, *part.* சொஸ்தமான, தேறின, முந்தின அந்தஸ்திற் புதுப்பிக்கப்பட்ட.

Rétablir, *v. a.* மறுபடி ஏற்படுத்துதல்,— ஸ்தாபித்தல்,— கட்டுதல், — வழங்குவித்தல், — தேற்றுதல், கடத்தேற்றுதல், சொஸ்தமாக்குதல், பரிகரித்தல், புதுப்பித்தல், செப்பனிடுதல், சீர்திருத்துதல், முந்தின அந்தஸ்தில் — உரிமையில் ஏற்படுத்துதல், மறுபடி வருவித்தல், பழையபடி வைத்தல். ‖ se — மறுபடி ஸ்தாபிக்கப்படுதல், கடத்தேறுதல், சொஸ்தமாதல், தேறுதல், பலனடைதல், சடாய்த்தல்.

Rétablissement, *m.* மறுஸ்தாபகம், பிரதிஸ்தாபனம், மறுபடி ஏற்படுதல், — வைத்தல் ,— ஸ்தாபித்தல், — கட்டுதல், — உண்டுபண்ணுதல், புதுப்பிப்பு, சீர்திருத்தல், கடத்தேற்றம், சொஸ்தம்—, குணமாதல், சீரணோத்தாரணம், ஆகுதம்.

Retaille, *f.* துண்டு, நறுக்கு, துணித்துண்டு, கிழிவு.

Retailler, *v. a.* மறுபடி நறுக்குதல்,— கத்தரித்தல்,— வெட்டுதல், — சீவுதல்.

Rétaler, *v. a.* மறுபடி விற்பனைக்காக விரித்தல்.

Rétamer, *v. a.* ஈயம் பூசுதல்.

Rétameur, *s. et adj.* ஈயம் பூசுகிறவன்.

Retaper, *v. a.* செப்பனிடுதல், ஓரம் நிமிர்த்தல், புதுப்பித்தல், எதிராக மயிரைச் சீப்பிடுதல், (கள்ள மயிர்) சுருட்டித் தூள் தூவுதல்.

Retard, *m.* தாமதம், தடை, அட்டி, இழுப்பு, இழுப்பாட்டம், ஆலசியம், பொறுதி, கெடு, தவணை, அபராதி, மொக்களி, யாபனம், விலம்பனம், விளம்பம், கடியாரம் தாமதப் படுத்துங்

கருவி : être en — தாமதப்பட்டிருத்தல் ; débiteur en — இன்னம் பணமிறுக்காத கடனாளி.

Retardataire, *adj.* தாமதம்பண்ணுகிற, பணமிறுக்க —, பாளயத்துக்குச் சேரத்தாமதஞ் செய்கிற. || *m.* தாமதக்காரன், இழுப்பாணி.

Retardation, *f.* நடையின் தளர்ச்சி, — மந்தம், ஆட்டத் தளர்வு, — குறைவு.

Retardement, *m.* தாமதம், இழுப்பு, தடை.

Retarder, *v. a.* தாமதப்படுத்துதல், பாணித்தல், தாமதம்—, தடைபண்ணுதல், தடுத்தல், இழுத்தல், நீட்டுதல், நீளிப்பித்தல், நிறுத்துதல், பின்போடுதல், வேறு நாளைக்கு வைத்தல், விக்கினமாயிருத்தல், கடியாரத்தின் ஊசிகளைப் பின் திருப்புதல் அல்லது நடை தளர்த்துதல். || *v. n.* தாமதித்தல், தாமசித்தல், தாமதஞ்செய்தல், தடை — தாமதப்படுதல், பாணித்தல், பிந்துதல், மொக்களித்தல் ; — sur son époque பண்டயகாலக் கொள்கை யுடைத்தாயிருத்தல்.

Retâter, *v. a.* மறுபடி தொடுத்தல், — பார்த்தல்.

Retaxer, *v. a.* மறுபடி வரிபோடுதல்,— விலை குறித்தல்.

Reteindre. *v. a* திரும்பச் சாயந் தீர்தல், — தோய்த்தல், வேறு சாய மிடுதல். || se — மறுபடி சாயமிடப்படுதல்.

Rééteindre, *v. a.* மறபடி அவித்தல்.

Retendre, *v. a.* மறுபடி நீட்டுதல், — இழுத்தல்.

Rétendre, *v. a.* மறுபடி விரித்தல், — பரப்புதல்.

Retenir, *v. a.* மறுபடி பிடித்தல், — கொண்டிருத்தல். || வைத்துக்கொள்ளுதல், பிடித்தல், காப்பாற்றுதல், விடாதிருத்தல். || (ஓர் தொகையினின்று) கழித்தல், எடுத்தல், தனக்கு வைத்தல். || முன்னமர்த்துதல். || நிறுத்துதல், இறுத்துதல், அடக்குதல், ஒடுக்குதல், மறித்தல், தடுத்தல், தடைவைத்தல், புறப்பட தடைசெய்தல். || நினைப்பில் வைத்தல். || கருக்கொள்ளுதல் ; — l'accent de son pays தன் நாட்டி னுச்சரிப்பை மறவாதிருத்தல் ; — une cause ஓர் பிராதின் விசாரணை தனக்கு வைத்தல், — un domestique ஒருழியனை முன்னமர்த்துதல் ;— quelqu'un à dîner விருந்துண்ணக் கேட்டுக்கொள்ளல் ; — ses larmes தன் கண்ணீரை யடக்குதல் : — sa colère தன் கோபத்தை ஒடுக்குதல் ; — un chiffre ஓரிலக்கக்ஷரம் நிறுத்தி முன்னிரை யக்ஷரங்களோடு சேர்த்தல் : un cheval bien — கீழ்ச்சரிவிற் குதிரை வண்டியின் நடை தாமதப்படுத்தல். || se —, நிறுத்தப்படுதல், தன் கோபம்— வேகம் — அவசரம் அடக்குதல், தன்னை யடக்குதல், தனக்கு வைத்தல், நின்றுகொள்ளுதல்.

Retenter, *v. a.* மறுபடி சோதித்தல்,— பிரயாசப்படுதல்.

Retenteur, *m* நிறுத்திவைக்க அல்லது தடுக்க உதவிக்கொள்ளப்படுவது.

Rétention, *f.* நிறுப்பு, பிடிப்பு, அடைப்பு, தடுப்பு, மறிப்பு, பிராதின் தாமதிப்பு :— d'urine நீரடைப்பு, —க்கடுப்பு, — கட்டு, சலமடைப்பு, — அடைத்தல், சலக்கடுப்பு, — மறிப்பு, ஆநாகம், நிபந்தம், மூத்திரஸ்தம்பம்,— ரோதம் ;— d'urine par la gravelle கல்லடைப்பு,— அடைசல்.

Rétentionnaire, *m.* பிறருடைமை அபகரித்து வைத்துக்கொள்ளுகிறவன்.

Retentir, *v. n.* சத்தித்தல், ஒலித்தல், தொனித்தல், முழங்குதல், பிரதிசத்தமிடுதல், ஆர்த்தல், இமிருதல், இயம்புதல், இனைத்தல், உலம்புதல், உழம்புதல், தமரித்தல், மறமறத்தல், முரலுதல், பயிர்த்தல்.

Retentissant, *adj.* ஓசை—, தொனியுள்ள, பிரதிசத்தமிடுகிற, சத்திக்கிற, முழங்குகிற.

Retentissement, *m.* ஒலி, இரைச்சல், சத்தம், தொனி, முழக்கம், உழம்பல், பிரகிசத்தம், முரல்வு. || பிரபலியம், பிரஸ்தாபம்.

Retentum, *m.* சொல்லாமல் நிறைவேற்றும் — நினைக்கிற விஷயம், இரகசியமான விஷயம்.

Retenu, *adj.* அடக்கம் —, ஒடுக்கம் —, அமைவு—, மரியாதையுள்ள. || *part.* அடக்க —, தடுக்க —, மறிக்கப்பட்ட.

Retenue, *f.* அடக்கம், ஒடுக்கம்,

ஒருக்கல், கட்டுமட்டு, தன்னடக்கம், மட்டு, மரியாதை, விவேகம், சங்கோசம், அமானிதை, சௌமியம், அமைவடக்கம், ஆத்தும வசம், ஆயதி, உச்சந்தம், சாலீனத்துவம், நியதம், மந்தாட்சம், யமம், யதி. || பிடித்தம், கழிப்பு, நிறுத்துவது, கழித்த பணம். || மாணாக்கர் மறியல், — விளையாடுவதற்கு மறிப்பு. || இருமதகுள்ளிருக்கிற வாய்க்காலினிடை. || நிறுத்தும்—, பிடிக்கும் பொருள் : faire une — பிடித்தம் பிடிக்கிறது, சம்பளத்திற் கழித்தல் ; mettre en — மறியலில்வைத்தல்.

Retersage, *m.* Reterser, *v. a.* இரண்டாமுறை உழுதல், மறு உழவு.

Rétiaire, *m.* வலைமல்லயுத்தன்.

Réticence, *f.* முழுதுஞ் சொல்லாமை, — சொல்லாவணி, — சொல்லாத விஷயம், வசன முடியாவணி, சொல்லாமை, வெளிவிடாமை, சொல்லாமல் விடுமணி, சொல்லத்தக்கது முழுதுஞ் சொல்லாமை.

Réticulaire, *adj.* சிறு வலை வடிவுள்ள. || *f.* ஓர்காளான்.

Réticule, *m.* கண்ணாடி யடி நூல்.

Réticulé, *adj.* சிறுவலை வடிவுள்ள.

Rétif, ive, *adj.* முரட்டு, முரண்டான, துடுக்கான, இலண்டியான, அடங்காத, கீழ்ப்படியாத, கேளாத, சொல்வழி போகாத. || s. முரட்டுக்குணமுள்ளவன், — வள், முரடன்.

Rétiforme, *adj.* சிறுவலை வடிவுள்ள.

Rétine, *f.* கண்நரப்பு வலை, கண் மணியை மூடுஞ் சவ்வு.

Rétinite, *f.* ஷை சவ்வின் எரிவு. || ஓர் தாது.

Rétipèdes, *m. pl.* காலிற் செதிளுள்ள பக்ஷிகள்.

Retirade, *f.* கொத்தளப்பின் ஒடுக்கிடம்.

Retiration, *f.* பின்பக்கம் அச்சடித்தல்.

Retiré, *adj.* தனித்த, தனிமை—, எகாந்தம் —, தூரமான, பின்னிட்ட, ஒடுக்கம்—, அடக்கமுள்ள, மனுஷ சஞ்சாரம் விலகுகிற : — en soi-même தன்னிலொடுங்கிய, மவுனமுள்ள.

Retirement, *m.* சுருக்கம், குறுக்கம்.

Retirer, *v. a.* திரும்ப —, பின்னுக்கு —, பின்னாக இழுத்தல், — வாங்குதல், — எடுத்தல், தனக்கு இழுத்தல், பிடுங்குதல், எடுத்தல், திருப்புதல். || கைக்கொள்ளுதல், அடைதல், பெறுதல், பின்பக்க மச்சடித்தல் || வீட்டில் இல்லிடம் —, அடைக்கலம் —, ஒதுக்கிடங்கொடுத்தல். || (கொடுத்ததைத்) திரும்ப வாங்குதல், எடுத்தல். || பிழிதல், பிதுக்குதல். || மீட்டல், இரட்சித்தல், திரும்ப வாங்குதல். || திரும்பச் சுடுதல், — (திருவுளச்சீட்டு) போடுதல் : — son haleine சுவாசம் வாங்குதல், பூரகஞ் செய்தல் ; — du vice துர்க்குணத்தினின்று திருப்புதல், துர்க்குணம் விடுவித்தல் ; — sa confiance தன் நம்பிக்கை திரும்ப வாங்குதல் ; — sa parole தன் வார்த்தைப்பாட்டை ஒழித்தல் ; — son épingle du jeu ஆபத்துள்ள காரியத்தினின்று விலகிப்போதல் ; — de la gloire மகிமை யடைதல். || se — விலகுதல், அகலுதல், ஒடுங்குதல், ஒதுங்குதல், அதுங்குதல், பிரிந்து போதல், விட்டுவிடுதல், இடைதல், நீங்குதல், போதல், அடைசுதல், அணைசுதல், பின்னிடுதல், பின்வாங்குதல், ஆனுதல், பிறக்கிடுதல், பின்றுதல், தன் வீட்டுக்குப் போதல், (உலோகத்தை— அலுவலை — வாடிக்கையை) விட்டுவிடுதல், (புரண்ட நதி) வடிதல், சுருங்குதல், குருவுதல், சும்புதல் ; se — à, dans, sur un lieu ஓரிடத்தில் வாசம்பண்ண — அடைக்கலந் தேடப்போதல்.

Retoiser, *v. a.* மறுபடி அளத்தல்.

Retombée, *f.* வளைவினடி.

Retomber, *v. n.* திரும்ப விழுதல், மேல்விழுதல், மறுபடி வியாதியாய் விழுதல் ; — dans l'impénitence முன்போல அதே பாவங்களைக் கட்டிக்கொள்ளல்.

Retondre, *v. a.* மறுபடி கத்தரித்தல், — சிரைத்தல், வீண்சோடிப்பு அழித்தல்.

Retordage, Retordement, *m.* மறுபடி முறுக்குதல், திரித்தல்.

Retordeur, *m.* நூல் திரிக்கிறவன்.

Retordoir, *m.* திரிக்கும் எத்தனம்.

Retordre, *v. a.* மறுபடி முறுக்குதல், திரித்தல், ஈரடு திரித்தல், திருகுதல், ஒன்றாய்த் திரித்தல். || se — முறுக்க —, திரிக்கப்படுதல்.

Rétorquable, *adj.* திருப்பி மறுக்கத்தக்க.

Rétorquer, *v. a.* திருப்பி மறுத்தல், எதிருரைத்தல், (நியாயங்களை) எதிராகத் திருப்புதல்.

Retors, e, *adj.* திரித்த, முறுக்கப்பட்ட. || சூக்ஷம்—, சூது—, தந்திரமுள்ள : fil retors முறுக்கிழை. || *m.* தந்திரக்காரன், சூதன், சூக்ஷன்.

Rétorsion, *f.* திருப்பி மறுத்தல், எதிருரைத்தல்.

Retorsoir, *m.* இரட்டை நூல் திரிக்குங் கருவி.

Retouche, *f.* சித்திரத்திருத்தல், திருத்தின விடம், தேய்ந்த படத்தி னச்சு மறுபடி சிற்றுளியாற் கொத்துதல்.

Retoucher, *v. a.* திரும்பத் தொடுதல், — பரிசித்தல். || திருத்துதல், பிழை —, பழுதுபார்த்தல், சீர்படுத்துதல், தேய்ந்த அச்சு மறுபடி உளியாற் கொத்துதல்.

Retoucheur, euse, *s.* ஓர் நூலில் அல்லது வேலையிலுள்ள பிழைகளைத் திருத்துகிறவன்,— வள்.

Retouper, *v. a.* (குசவன் பழுதான வேலையை அழித்து) மறுபடி செய்தல்.

Retour, *m.* திரும்புதல், திரும்பி வருதல், — போதல், பிரத்தியாகமம், புனராகமனம். || மாற்றம், மாற்று, மாறுபாடு, பேதம், மாறல். || வயதின் சாய்வு. || யோசனை. || வட்டம், கொசுறு, பிசுக்கு, மாற்றுச் சரிக்கட்டுவதற்குக் கூட்டுவது. || பதில், பிரதி யுபகாரம், தகிலாயம், ஈடு, கைம்மாறு, நிவர்த்தனம். || முந்தின எசமானுக்குத் திரும்பிச் சேர்த்தல். || மூலை. || *pl.* சுற்று, — ச்சுழற்சி, உபாய தந்திரங்கள், சூது, விபரீத செய்கைகள், — குணம் : à mon — நான் திரும்பினபின் ; être sur son — திரும்புதற்கு முஸ்திப்பாயிருத்தல் ; être sur le — வய்து சாய்ந்திருத்தல், கிழவயதாதல் ;— à Dieu மனசு சர்வேசுரனிடத்தில் திரும்புதல் ; faire un — sur soi-même தன்மேல் யோசனை பண்ணுதல் ; faire — à la couronne அரசனுக்குத் திரும்பிச் சேர்தல் ; en — பதிலாக, ஈடாக ; l'amitié demande du — பக்ஷம் பிரதி — பதில் பக்ஷங்கேட்கும் ; cet homme a des — அந்த மனுஷன் திரியாவரம்பண்ணுகிறான், விபரீதகுணங் கொண்டிருக்கிறான் ; tours et — d'une rivière ஆற்றின் சுற்றுச் சுழற்சிகள் : — d'équerre நேர்கோணமுள்ள —, சதுர மூலை ; sans — எப்போதைக்கும், பரிகாரமின்றி ;— de chasse வேட்டை பின் விருந்து ; être de — பயணத்தினின்று திரும்பி யிருத்தல் ; en retour de பதிலுக்கு, சம்பாவனையாக.

Retourne, *f.* திருப்பின சூது கடுதாசி.

Retourné, *part.* திரும்பின, பின்வளைந்த, பின் மடக்கப்பட்ட, கவிழ்ந்த.

Retourner, *v. a.* திருப்புதல், புரட்டுதல், கவிழ்த்தல், முன் பின்னாக—, அகம்புறமாகத் திருப்புதல். || கருத்து மாற்றுவித்தல். || கடைசி சூது கடுதாசியைத் திருப்புதல் : tourner et — quelqu'un de tous sens இரகசியங்களை யறிய ஒருவனை நானாவிதமாப் புரட்டுதல் ;— le sol நிலமாழமாயுழுதல், ஆழமாய் மண்வெட்டுதல், — கொத்துதல். || *v. n.* திரும்புதல், திரும்பிப் போதல், திரும்பித் துவக்குதல், மறிதல் :— sur ses pas பின்னிடுதல், பின்னுக்குத் திரும்புதல் ;— en arrière பின்வாங்குதல், எற்பாட்டை விட்டுவிடுதல் ;— à Dieu மனசு திரும்புதல். || se — திருப்ப —, புரட்டப்படுதல், கவிழுதல், திரும்புதல், திரும்பிப்பார்த்தல், பின்னோக்குதல், வேறே உபாயம் — வழிதேடுதல். || s'en — போய்விடுதல், திரும்பிப்போதல். || *v. unip.* il retourne le cœur திருப்பப்பட்ட கடுதாசி இருதயமாம் ; de quoi retourne-t-il ? என்னசங்கதி யிருக்கின்றது.

Retournure, *f.* மெழுகில்—, கொழுப்பில் திரியி னிரண்டாந் துவைப்பு.

Retracer, *v. a.* மறுமடி வரைதல், வருணித்தல், விவரித்தல், விவரித்துச் சொல்லுதல். || se — நினைத்தல், தோன்றுதல்.

Rétractable, *adj.* மறுதலிக்கக்கூடிய, மக்களிக்கக்கூடிய.

Rétractation, *f.* மறுதலிப்பு, மக்களிப்பு, மறுப்பு, பரிகரிப்பு, புரட்டு.

Rétracter, *v. a.* மறுதலித்தல், மறுத்தல், மக்களித்தல், பரிகரித்தல் : — une erreur தப்பறை மறுதலித்தல்; — une calomnie தான் சொன்னது

அபாண்டம் என்று மறுத்தல். ‖ se — தான் சொன்னதை மறுத்தல்,— அபத்தமென்னல், — பரிகரித்தல்,— மாற்றுதல், மக்களித்தல், பேதலித்தல், புரளுதல்.

Rétractile, *adj*. சுருங்கத்தக்க.

Rétractilité, *f*. சுருங்குந் தன்மை.

Rétraction, *f*. சுருக்கம், சுருங்கல்.

Retraduire, *v. a*. மறுபடி மொழிபெயர்த்தல்.

Retraire, *v. a*. விற்றதை மீட்டல், திரும்ப வாங்குதல்.

Retrait, *m*. திரும்ப வாங்குஞ் சுதந்தரம், மீட்பு. ‖ திரும்ப வாங்குதல், கட்டளை யாலோசனை விட்டுவிடுதல். ‖ சுருங்கல், பத்திரிப்பு. ‖ கக்கூஸ் வீடு. ‖ *part*. மெலிந்த, பதரான, இடைந்த, மீட்ட.

• **Retraité**, *part. et m*. சேவகமற்ற சம்பளம்பெற்ற,— வன்.

Retraite, *f*. பின்வாங்குதல், பின்னிடுதல், இடைதல், இடைந்துபோதல், ஒடுங்குதல், ஒதுங்குதல், அபக்கிரமம், வித்திராவம், விப்பிரயாணம். ‖ பின்னிட —, ஒதுங்க —, இடைந்துபோக அடையாளம். ‖ தோற்றபடை ஒதுங்கல், — பின்னிடுதல், போரொழிவு. ‖ ஒதுக்கிடம், ஒளிப்பிடம், அடைக்கலம். ‖ தனி வாசம், தனித்த விடம், எகாந்தம், அந்தரங்கம், தனிமை, வீகாசம், அக்கியாதவாசம், ஆசிரமம், ஆச்சிரமம். ‖ ஞான ஒடுக்கம், ஞான முயற்சி செய்யுங்காலம். ‖ சேவகமற்ற சம்பளம். ‖ பத்திரிப்பு, ஒடுக்கம், கனக்குறைவு, சுருங்கல். ‖ குளம்பில் நின்ற ஆணி நுனி, மறு உண்டியற் சீட்டு, பதிலுண்டியற் சீட்டு : faire — பின்னிடுதல், இடைந்துபோதல் ; sonner, battre la — இடைந்துபோக அடையாளங் கொடுத்தல் ; battre en — பின்னிட்டுப்போதல் ; couper la — பின்வாங்க வழி தடுத்தல் ; se mettre, être en — ஞான ஒடுக்கம் பண்ணுதல்; mettre à la — சேவகமற்ற சம்பளத்துக்கு நியமித்தல் ; pension உபகாரச் சம்பளம்.

Retraiter, *v. a*. சேவகமற்ற சம்பளத்துக்கு நியமித்தல். ‖ மறுபடி விசாரித்தல்,— விளக்குதல்,— குறித்துப் பேசுதல்.

Retranchement, *m*. கழிவு, குறைவு, ஒழிப்பு, தள்ளுபடி, நீக்கம், பெரிய இடத்திநின்று பிரிந்த சின்ன இடம், சில சொல் நீக்கம். ‖ அகழ், அகழி, கொத்தளம், ஊடையம், ஒட்டு.

Retrancher, *v. a*. கழித்தல், அறுத்தல், தள்ளுதல், நீக்குதல், தவிர்த்தல், குறைத்தல், ஒடுக்குதல், தள்ளுபடி செய்தல், ஒழித்தல். ‖ அரணித்தல், கொத்தளம் —, அகழிசெய்தல். ‖ se — செலவொடுக்குதல், ஒடுங்குதல், அரண் —, அலங்கம்—, கொத்தளம்—, அகழிகட்டுதல், கழிக்க—, ஒழிக்கப்படுதல்; se — sur sa bonne intention தனக்கு நல்ல கருத்தென்று சாதித்தல்.

Retranscrire, *v. a*. மறுபடி பெயர்த்தெழுதல்.

Retravailler, *v. n. et a*. மறுபடி வேலைசெய்தல்,— உழைத்தல்.

Retraverser, *v. a*. மறுபடி கடந்துபோதல்.

Retrayant, e, *adj. et s*. விற்றதை மீட்கிற,— வன்,— வள்.

Rétréci, *part*. நெருங்கிய, ஒல்லாடி —, ஒஞ்சட்டை—, நெருக்கமான, சுருங்கிய, அற்ப, மட்டுள்ள, குறுகிய.

Rétrécir, *v. a*. சுருக்குதல், நெருக்குதல், குறுக்குதல், அடக்குதல், குறைத்தல். ‖ அதிக நெருக்கமான வழியில் நடத்துதல். ‖ சிறக்கணித்தல், சொடித்தல். ‖ *v. n. et* se — சுருங்குதல், நெருங்குதல், குறைதல், அல்குதல், கூம்புதல், சாம்புதல், சிறக்கணித்தல், சொடிதல்.

Rétrécissement, *m*. நெருக்கம், நெருங்கல், சுருக்கம், ஒடுக்கம், எக்கல்.

Retrempe, *f*. ஸ்திரப்படுத்துதல்.

Retremper, *v. a*. மறுபடி தோய்த்தல், புதுப்பலன் பெறுவித்தல். ‖ se — புதுப்பலன் பெறுதல், ஸ்திரப்படுதல்.

Retresser, *v. a*. மறுபடி பின்னுதல்.

Rétribuer, *v. a*. வெகுமானம் —, சம்பாவனை—, சம்பளமளித்தல் : être rétribué சம்பளம் பெறுதல்.

Rétribution, *f*. சம்பளம், கூலி, சம்பாவனை, சம்பாவனம், வெகுமானம், பலன், கைம்மாறு, பிரதிபலன், வர்த்தனை, சம்பிரதானம், வருமானம், உரிமை, சுதந்தரம்.

Retro, *adv.* பின்னால், பின்பக்கம்.

Rétroactif. ive, *adj.* பின்னிடும், முன்காலத்துக்குச் செல்லுகிற.

Rétroaction, *f.* பின்னிடுதல், முன்காலத்தின் மேல்பலிப்பு, பின்னிடுகிற பலிப்பு. [பின்னிடுகிற விதமாய்.

Rétroactivement, *adv.* பின்னிட்டு,

Rétroactivité, *f.* முன்காலத்துப் பலிக்கும்—, பின்னிடுந் தன்மை.

Rétrocéder, *v. a.* மறுபடி கொடுத்தல். உத்தரித்தல், கொடுத்தவனுக்குத் திரும்பக் கொடுத்தல், பின்னிடுதல்.

Rétrocessif, ive, *adj.* கொடுத்தவனுக்குத்திரும்பக்கொடுக்கும் (சாதனம்).

Rétrocession, *f.* மறுபடி கொடுத்தல், உத்தரிப்பு, உத்தரிக்குஞ் சாதனம்.

Rétrocessionnaire, *adj. et s.* தான்கொடுத்ததைத் திரும்பி வாங்குகிற, — பெறுகிற,— வன்,— வள்.

Rétroflexion, *f.* பின்பக்கம் அசைவு, பின் பாரிச சலனம்.

Rétrogradation, *f.* பின்னிடுதல், திரும்புதல், கிரக வக்கிரிப்பு, வக்கிரம், வக்கிரகம், வக்கிரசாரம், — கதி, பின்னோக்கு, அநுவக்கிரம்.

Rétrograde, *adj.* பின்னிடுகிற, பின்வாங்குகிற, வக்கிரிக்கிற, பின்னோக்கான.

Rétrograder, *v. n.* பின்னிடுதல், பின்வாங்குதல், பின்னுக்குப்போதல், வக்கிரித்தல். [பின்பக்கம்செல்லுதல்.

Rétrogression, *f.* பின்போக்கு,

Rétrospectif, ive, *adj.* பின்னோக்குகிற, சென்றவை நோக்குகிற, — தழீஇய.

Retroussé, *part.* சுருங்கிய, சட்டை ஒதுங்கின, சொருகின : nez — நெறித்த—, சுழித்த மூக்கு ; flancs — குழிந்த பக்கங்கள்.

Retroussement, *m.* சொருகு, *ou*

Retrousser, *v. a.* ஒதுக்குதல், தூக்குதல், சுருக்குதல், சொருகுதல். || se —சொருகிக்கொள்ளுதல், தன் சட்டை ஒதுக்குதல்,— மன்னுதல்.

Retroussis, *m.* மடக்கின ஓரம், சொருகு, சொருகின வட்டையின் பங்கு, மடக்கின தோற்பர மேற்பங்கு.

Retrouver. *v. a.* மறுபடி காண்டல்,— கண்டெடுத்தல், — அடைதல், — அறிதல்,— பார்க்கப்போதல்,— சேர்தல். || se — மறுபடி அகப்படுதல்,— தென்படுதல்,— சேர்தல், இருத்தல், திரும்பி வருதல், தன்னைக் காண்டல், தன்வழி திரும்பிக் காண்டல்.

Rétroversion, *f.* பின் வளைவு, பின்பக்கம் திரும்புதல்.

Rets, *m.* வலை, கண்ணி.

Réuni, *part.* கூடின, சேர்ந்த, ஒன்றித்த, குவிந்த.

Réunion, *f.* சேர்த்தல், கூட்டல், ஈட்டம். || சேர்க்கை, கும்பல், குவியல். || கூட்டம், சங்கம், சபை, அரங்கம், சேர்வை, நிரணம். || சமாதானம், ஒருமிப்பு, சேர்மானம்.

Réunir, *v. a.* சேர்த்தல், கூட்டுதல், குவித்தல், பொருத்துதல், திரட்டுதல், சேகரித்தல். || சமாதான—, ஒருமைப்படுத்துதல், இணக்குதல். || se — கூடுதல், சேர்தல், இமிருதல், ஒன்றுதல், ஒருமித்தல், ஒன்றித்தல், பொருந்துதல், ஒட்டிக்கொள்ளுதல், ஒருமை—, சமாதானப்படுதல்.

Réussir, *v. n.* பலித்தல், வாய்த்தல், சித்தித்தல், அநுகூலம்—, கைவல்லியமாதல், பலனை யடைதல், கைகூடுதல், காரிய—, அநுகூலப்படுதல், இலபித்தல், சாய்தல். || நன்றாய் விளைதல். || *v. a.* நன்றாய் முடித்தல், — செய்தல் : il a réussi en tout, tout lui a réussi எல்லா மவனுக்கு அநுகூலமாச்சுது,— பலித்தது,— வாய்த்தது ; faire — அநுகூலப்படுத்துதல், அநுகூலம் பண்ணுதல்,— செய்தல்,— ஆக்குதல்.

Réussite, *f.* காரியார்த்த சித்தி, அநுகூலம், கிருதார்த்தம், பலிப்பு, சித்தி, வாய்ப்பு, சபலம், வாறு, சம்பவம், முடிவு.

Revalidation, *f.* Revalider, *v. a.* நிஷ்பலக்குறை தீர்த்து முடித்தல்,— தீர்த்து மறுபடி முறையாய்ச் செய்தல்.

Revaloir, *v. a* பதிலளித்தல்.

Revanche, *f.* பழி, பதிலுக்குப்பதில், பதில், ஈடு, பிரத்தோங்கிசம், பிரதிகிருதி, — கிரியை, பிரதிகாரம். || தோற்றவன் பரிகாரத்துக்கு விளையாடுமிரண்டாம்விசை : avoir sa — பதிலுக்குப் பதில்செய்தல் ; en — பதிலாக.

Revancher, *v. a.* ஆதரித்தல், காத்தல். || se — தற்காத்தல். || பழிவாங்குதல், பதிலளித்தல்.

Rêvasser, *v. n.* பலகனு காண்டல், பலவற்றை யோசித்தல்.

Rêvasserie, *f.* பலகனு காண்டல், தொடர்ச்சியற்ற பலகனுக்கள், வீண் நினைவு.

Rêvasseur, *m.* பலகனுகாண்கிறவன், வீண் நினைவுக்காரன்.

Rêve, *m.* கனு, கனவு, சொற்பனம், சொப்பனம், வீணெண்ணம், — ஆலோசனை.

Revêche, *adj.* உறைப்பான. ‖ முரட்டு, முரண்ட, துடுக்கான, சண்டித்தனமுள்ள, முண்டுகிற, அமையாத, படியாத, கேளாத, சலஞ்சாதிக்கிற. ‖ *f.* சுருண்ட ஆட்டுமயிர்ப் புடைவை.

Réveil, *m.* விழிப்பு, மிழிப்பு, நித்திரையொழிவு, துயிலெடை, பிரபோதனம், உதயம். ‖ மாயை நீக்கம். ‖ விடியற் பறைச்சத்தம், எழுப்புதற்குத் தம்பூரடிப்பு, — எக்காளச்சத்தம். ‖ எழுப்புக்கடியாரம், எழுப்புதற்குக் கடியாரத்துக்குக் கூட்டுஞ் சூத்திரம் : — du jour, de l'aurore விடியற்காலம், அருணோதயம் ; — de la nature பயிர்க்காலத்துவக்கம்.

Réveil-matin, *m.* எழுப்புக்கடியாரம், அதிகாலமே துயிலெழுப்புவது, சாவல், விழிக்கிறபோது கேட்குஞ் செய்தி. ‖ ஓர் பூண்டு.

Réveillé, *part.* மிழித்த, விழித்த.

Réveiller, *v. a.* மறுபடி—, எழுப்புதல், நித்திரை தெளிவித்தல்,— கலைத்தல், விழிப்பித்தல். ‖ மறுபடி தூண்டுதல், கிளப்புதல், மூட்டுதல், திமைத்தல், புதுப்பித்தல், நினைப்பூட்டுதல். ‖ se — மிழித்தல், விழித்தல், தெளிதல், புதுசாதல், தூண்டப்படுதல், மறுபடி யெழும்புதல்.

Réveilleur, *m.* எழுப்புகிறவன்.

Réveillon, *m.* நடுச்சாம விருந்து, படுக்குமுன் சிற்றுணவு, தெளிந்த சித்திர விடம்.

Révélateur, trice, *s.* வெளிப்படுத்துகிறவன், அறிவிக்கிறவன்,— வள்.

Révélation, *f.* வெளிப்படுத்துதல், — ப்பாடு, — படுத்துகை, — படுத்தினது, அறிவிப்பு. ‖ திரு—, தேவவாக்கு, — காட்சி, தேவோக்கித்தம், அருள்வேதம், சர்வேசுர னருளிச்செய்த வேதம்,— சத்தியங்கள், தேவ பிரோத்தம். ‖ தரிசனை, காட்சி.

Révéler, *v. a.* பிரசித்த—, வெளிப்படுத்துதல், வெளிவிடுதல், அறிவித்தல்.

Revenant, *adj. et part.* இன்பம்—, பிரியமான, திரும்பிவருகிற. ‖ *m.* பூதம், வேதாளம், தோன்று மரித்தோராவி, யாது.

Revenant-bon, *m.* இலாபம், ஆதாயம், அதிஷ்டமான பலன், வருமானம், கணக்கொப்பித்தபின் நின்ற லாபம்.

Revendeur, euse, *s.* வாங்கி விற்பவன், அமாந்தக்காரன், எதிர் செட்டுக்காரன், — காரி : revendeuse à la toilette உடுப்பு நகைவாங்கி விற்பவள்.

Revendication, *f.* Revendiquer, *v. a.* தனதென்று கேட்டல்,— சாதித்தல், தனக்குச் சொந்தமென்று கேட்டல், தாவாசெய்தல்.

Revendre, *v. a.* மறுபடி விற்றல், வாங்கினது விற்றல் : à — மிகுதியாய்; en — எத்துதல், வஞ்சித்தல் ; il vous en revendra அவனும்மைப்பார்க்கச் சூக்ஷமுள்ளவன்.

Revenez-y, *loc.* திரும்பத்திரும்பப் பேச ஆசிக்கும் விஷயம்.

Revenir, *v. n.* திரும்புதல், திரும்பி வருதல்,— தோன்றுதல், — மூளைத்தல்,— தளிர்த்தல், — வளர்தல், — பிறத்தல்,— சொல்லுதல்,— செய்தல். ‖ ஞாபகத்துக்கு வருதல், இணங்குதல், கருத்துமாறுதல். ‖ தேறுதல், மூர்ச்சைதெளிதல், அமருதல், சீர்படுதல், விட்டுவிடுதல், பின்வாங்குதல். ‖ பிரிய —, இஷ்ட—, சரிப்படுதல், பொருந்துதல், சேர்தல், போலுதல். ‖ இலாபங்கொடுத்தல், செலவாதல், செலவு பிடித்தல், எப்பம்விடுவித்தல், ஓக்காளமாய் வருதல், : ce nom ne me revient pas இந்தப்பேர் என் ஞாபகத்துக்கு வருகிறதில்லை ;— à la charge போருக்குத் திரும்புதல், மறுபடி கெஞ்சுதல், — மன்றுடுதல், — கண்டித்தல் ; — à ses moutons தனக்குப் பிரியமான பேச்சு மறுபடி துவக்குதல் ;— à *ou* sur une matière ஓர் விஷயத்தின்பேரில் மறுபடி பேசுதல் ; — à l'avis d'un autre தன் கருத்து மாற்றி மற்றொருவன் ஆலோசனைக்கு இணங்குதல் ;— à quelqu'un ஒருவனுக்குத் தன்பக்ஷம்

உத்தரித்தல், ஒருவனை மறுபடி சேர்தல்,— அண்டுதல் ;— sur ce qu'on a dit தான் சொன்னதை விட்டுக் கருத்துமாறுதல் ;— sur une promesse ஓர் வார்த்தைப்பாட்டை ஒழித்தல் ;— sur le compte de quelqu'un ஒருவன்பேரிலிருந்த குறைச்சலான எண்ணம் விடுதல் ;— en santé சவுக்கியப்படுதல் ;— à soi மூர்ச்சை தெளிதல் ;— de ses égarements துர்மார்க்கம்விடுதல் ; je n'en reviens pas மிகவு மதிசயப்படுகிறேன் ; cet habit me revient à 10 roupies இந்தச் சட்டை பத்துரூபாய் பிடித்தது. || faire — இலேசாய் வேவித்தல், திரும்ப வருவித்தல், — வரவழைத்தல், மூர்ச்சைதெளிவித்தல், அமர்த்துதல், கோபந் தணிவித்தல். || s'en— திரும்பிவருதல், திரும்புதல். || *v. unip.* il revient des esprits மரித்தோராவிகள் தோன்றுகின்றன ; que vous en reviendra-t-il என்னலாப முனக்குக் கிடைக்கும்; il me revient que .. என்று கேள்விப்படுகிறேன்,— எனக்குச்சொல்லுகிறார்கள்.

Revenoir, *m.* நீலமாக்குங் கருவி.

Revente, *f.* மறுவிற்பனை,— விக்கிரயம்.

Revenu, *part.* திரும்பி—, மறுபடி வந்த. || *m.* வருஷாந்தர வருமானம், வரத்து, வரவு, வரும்படி, பிரவிருத்தியம், ஆமது.

Revenue, *f.* திரும்பி முளைக்கு மரம்,—தழை, திரும்பி வருகிற பயணம்: l'allée et la — போக்குவருத்து.

Rêver, *v. n. et a.* கனா—, கனவு—, சொர்ப்பனம்—, தரிசனங்காண்டல், நித்திரையில்—, கனாவிற்காண்டல், பிதற்றுதல், மயக்கமாயிருத்தல், வீண் காரியங்களை நினைத்தல், ஆறலித்தல், யோசித்தல், விரும்புதல் ; vous avez rêvé cela அது மெய்யல்ல,— கனவில் மாத்திரங் கண்டாய்.

Réverbération, *f.* எதிரொளி,— வெயில்,— காந்தி,— வீச்சு, கானல், பிரதிவிம்பம்.

Réverbère, *m.* எதிரொளி வீசுங் கண்ணாடி,— கண்ணாடித் தீபம், விளக்குக்கூடு, உஷ்ணமெதிர் வீசும் உலையின் சுவர் : feu de — சுவாலை திருப்பப்பட்ட அக்கினி.

Réverbérer, *v. a.* எதிர்வீசுதல், திருப்பி வீசுதல். || se—எதிர்வீசப்படுதல்.

Revercher, *v. a.* (ஈயவேலையில்) பள்ளம் நிரவுதல்.

Reverdie, *f.* மிகுதியான வடிவு பெருக்கு.

Reverdir, *v. a. et n.* மறுபடி பச்சைநிறம் பூசுதல், — பச்சையாதல், — தழைத்தல், — துளிர்த்தல், — தோன்றுதல், — தேறுதல், — பலமடைதல், — புதுசாதல் : planter là pour — ஒருவனைச் சேராமற் காத்திருக்கச் செய்தல்.

Reverdissement, *m.* மறுபடி பச்சையாதல்,— தழைத்தல்.

Reverdoir, *m.* முட்டை வடிவான பாத்திரம்.

Révéremment, *adv.* வணக்கமாய்.

Révérence, *f.* சங்கை, வணக்கம், பயபத்தி, உபசாரம், உபசரணை, ஆசாரம், பணிவு, விநயம், கும்பிடு, தண்டன், அஞ்சலி, தண்டம், பிரணாமம், பிரணிபதனம். || மகத்துவம் (குருக்களுக்குஞ் சந்நியாசிகளுக்குஞ் சிறந்த பேராம்) : faire la — à கும்பிடுதல், தண்டனிடுதல், உபசரணை—, ஆசாரம் பண்ணுதல். || tirer sa — போய்விடுதல், மறுத்தல்.

Révérencieusement, *adv.* வணக்கமாய், சங்கையாய்.

Révérencieux, euse, *f.* மிகுந்த ஆசாரமுள்ள,— செய்கிற.

Révérend, e, *adj.* சங்கைக்குரிய, கனம்பொருந்திய (குருக்களுக்குஞ் சந்நியாசிகளுக்குங் கன்னியாஸ்திரிகளுக்குஞ் சிறந்த பேராம்) : mon — père என் சங்கைக்குரிய பிதாவே,— சுவாமியாரே.

Révérendissime, *adj.* மிகவுஞ் சங்கைக்குரிய, மகா கனம்பொருந்திய, (மேற்றிராணியாருக்கும், மடாதிபதிகளுக்குஞ் சிறந்த பேராம்.)

Révérer, *v. a.* வணங்குதல், சங்கித்தல், வணக்கஞ்செய்தல், போற்றுதல், கும்பிடுதல், தண்டனிடுதல், அபிமானித்தல், உபாசித்தல். || se — ஒருவனொருவனைச் சங்கித்தல்.

Rêverie, *f.* ஒவ்வாத—, வீண் விசாரம்,— எண்ணம், மனோரதியம். || பிதற்றல், பினற்றல்.

Revernir, *v. a.* மறுபடி மினுக்கெண்ணெய் பூசுதல்.

Revers, *m.* பின்பக்கம்,— புறம். ‖ புறங்கையாலடி. ‖ துன்பம், துரிதம், துரதிஷ்டம், அபசயம், விபன்னம், நிர்ப்பாக்கியம், இடையூறு, குறை. ‖ சட்டையின்—, தோற்பரத்தின் கவிழ்ந்த பங்கு ;— de la main புறங்கை, அவாஸ்தம் ; — de fortune நஷ்டம், துன்பம் ;— d'une médaille சுரூபத்தின் பின்பக்கம் ; montrer le — de la médaille ஓர் காரியத்திலுள்ள நலங் காட்டிப் பொலமுங் காட்டுதல் ; à — பின்பக்கமாய், ஒருபக்கத்தில்.

Reversal, e, *adj.* முன்பத்திரத்தையுறுதிப்படுத்தும் (பத்திரம்.)

Reversales, *f. pl.* **Reversaux**, *m. pl.* உறுதிப்பத்திரிகை.

Reverseau, *m.* சந்தடைப்புப் பஸ்கோல்.

Reversement, *m.* பணப்பெட்டி மாற்றம், சரக்குக்கப்பல் மாற்றம்.

Reverser, *v. a.* மறுபடி வார்த்தல், — ஊற்றுதல், பணப்பெட்டி மாற்றுதல், ஓர் கப்பலினின்று வேறேகப்பலில் ஏற்றுதல், ஓர் கணக்கு இடமாற்றுதல்.

Reversi, **Reversis**, *m.* ஓர்வித கடுதாசி விளையாட்டு.

Reversibilité, *f.* முந்தின பாத்தியஸ்தனுக்குத் திரும்பிச் சேரத்தக்க தன்மை.

Reversible, *adj.* முந்தின பாத்தியஸ்தனுக்குத் திரும்பிச் சேரத்தக்க, மற்றொருவனுக்குச் சேரவேண்டிய.

Reversion, *f.* பாத்தியம் விட்டவனுக்குத் திரும்பிச் சேர்தல்.

Reversoir, *m.* பெருகின நீர் ஓடும் அணைக்கட்டு.

Revertier, *V.* Reverquier.

Revêtement, *m.* உடுத்துதல், மூடும்வேலை,— கல், மூடுதல், பூசுதல்.

Revêtir, *v. a.* உடுத்துதல், உடுத்திவிடுதல், உடுப்பித்தல், வஸ்திரங்கொடுத்தல்,— அணிவித்தல், — தரிப்பித்தல், — சூட்டுதல். ‖ அணிதல், போர்த்தல். ‖ மூடுதல், பூசுதல், சாந்துபூசுதல். ‖ கொடுத்தல் : — un costume ஓர் கோலமணிதல் ; — un personnage ஒருவன் வேஷம்போர்த்தல் ;— d'une charge ஒருத்தியோகங் கொடுத்தல்:— un mur சுவருக்குச் சாந்துபூசுதல். ‖ se — உடுத்தல், அணிதல், தொடுதல், தொடுத்தல், உடுத்தி —, அணிந்து —, போர்த்துக்கொள்ளுதல், தரித்தல், வேய்தல், அடைதல், மூடப்படுதல்.

Revêtissement, *m.* உடுத்துதல், போடுதல், பூசுதல், சாந்துபூச்சு.

Revêtu, *part.* உடுத்த, அணிந்த, மூட—, பூசப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட, அடைந்த, உள்ள : gueux — ஆஸ்தியடைந்த நீசன் ; — d'une charge உத்தியோகம்பெற்ற,— உள்ள.

Rêveur, euse, *adj.* கனாகண்ட, பிதற்றுகிற, கிலேசம் —, விசாரமுள்ள, கொஞ்சங் கஸ்தி — கவலைப்படுகிற, வீண்விசாரம் — கவலையுள்ள, — காண்பிக்கிற. ‖ *s.* கனாகண்டவன், வீண் விசாரம் — எண்ணமுள்ளவன்,— வள்.

Revider, *v. a.* மறுபடி வெறுமையாக்குதல், துளை அதிக விலாசமாக்குதல், ஏலத்தில் வாங்கினதைத் தங்களுக்குள்ளே மறுபடி விற்றல்.

Revient, *m.* சரியான விலை, வாங்கின விலை.

Revirade, *f.* திரும்புதல்.

Revirement, *m.* திரும்புதல், பக்கம்—, பாரிசமாறுதல் : — de fonds வாங்கின கடன் பத்திரத்தைக் கொடுத்து ஓர் கடனைத் தீர்த்தல். ‖ *V.* Virement.

Revirer, *v. n.* திரும்புதல் : — de bord பக்கம்—, பாரிசமாறுதல்.

Revisable, *adj.* மறுபடி விளக்கஞ்செய்யக்கூடிய.

Reviser, *v. a.* மறுபடி பரிசோதித்தல்,— ஆராய்தல்.

Reviseur, *m.* மறுபடி பரிசோதிக்கிறவன்.

Revision, *f.* மறுபடி பார்த்தல்,— சோதித்தல்,— பரிசோதித்தல்,— பார்வையிடுதல், மறு பரிசோதனை, திருத்தம், சோதனை : conseil de — புதுச்சேவகரைப் பரிசோதிக்கிற சங்கம்.

Revisionniste, *m.* துரைத்தனத் திருத்தக் கக்ஷிக்காரன்.

Revivifié, *part.* திரும்பி யுயிர்த்த, — பிழைத்த,— சுய உருவுகொண்ட.

Revivification, *f.* மறுபடி சுய உருவிடுதல்.

Revivifier, *v. a.* மறுபடி யுயிர்ப்பித்தல், புது ஞான வுயிர் கொடுத்தல், முந்தின உருவிடுதல், — உருவாக்குதல்,

ஒருலோகங்கலப்பினின்று பிரித்தல், முந்தின சீர் அடையச்செய்தல்.

Revivre, *v. n.* மறுபடி உயிர்த்தல், — பிழைத்தல்,— சீவித்தல்,— வழங்குதல், புனர்பவமடைதல், புதுசாதல்: faire — உயிர்ப்பித்தல், உய்வித்தல், பிழைப்பித்தல், தேற்றுதல், மறுபடி வழங்குவித்தல்,— தூண்டுதல், — மூட்டுதல், — நினைப்பூட்டுதல், — ஸ்தாபித்தல், புதுப்பித்தல், புதுக்காந்திகொடுத்தல். [த்தக்க தன்மை.

Révocabilité, *f.* அழிக்க—, மாற்ற

Révocable, *adj.* அழிக்க—, மாற்ற—, தவிர்க்கத்தக்க.

Révocation, *f.* மாற்றல், அழித்தல், தள்ளுதல், ஒழிப்பு, மக்களிப்பு, திரும்ப அழைப்பு. [றுகிற, ஒழிக்கிற.

Révocatoire, *adj.* அழிக்கிற, மாற்

Revoici, Revoilà, *adv.* மறுபடி இதோ: me revoici இதோ மறுபடியிருக்கிறேன்; les revoilà sur l'onde இதோ மறுபடி தண்ணீர்மேலிருக்கிறார்கள்.

Revoir, *v. a.* மறுபடி பார்த்தல்,— சோதித்தல்,—பரிசோதித்தல், திருத்துதல், பிழை—, சரவை—, திருத்தம்பார்த்தல்: à — திரும்பப் பார்க்கவேண்டியது. || se — தங்களை மறுபடி பார்த்தல்.

Revoir, *m.* மறுபடி காண்டல்: adieu jusqu'au — திரும்ப உன்னைக் காணும்வரைக்கும் வாழ்க.

Revoler, *v. a.* மறுபடி திருடுதல். || *v. n.* பறந்து திரும்புதல், மறுபடி பறத்தல்,— ஓடுதல்,— உள்ளாதல்.

Revolin, *m* நேரற்ற காற்று, விக்கினத்தால் திரும்பின காற்று.

Révoltant, e, *adj.* கோபம் வருவிப்பதற்குரிய, அரோசிகமான.

Révolte, *f.* கலாபம், கலாபனை, குழப்பம், கலக்கம், கலகம், கலாதி, உளறுபடி, ஏறுக்குமாறு, கோசக்கம், விரோதம், எதிர்ப்பு, அடங்காமை.

Révolté, *adj.* குழப்பமான, கலாபனைசெய்கிற, எதிர்க்கிற, விரோதிக்கிற. || *m.* குழப்ப—, கலகக்காரன், குழப்பவாளி.

Révolter, *v. a.* குழப்பமாய் கிளப்புதல், குழப்பம் மூட்டுதல், குழப்புதல், கோபம்—, அருவருப்பு—, வெறுப்பு—, அரோசிகம் வருவித்தல். || se — கலாபனை—, கலாபம்—, துரோகஞ் செய்தல், கலாபித்தல், குழப்பம்—, கலகம் பண்ணுதல், பாரிசமாறுதல், விரோதமாய்—, எதிர்த்து எழும்புதல். [ந்த.

Révolu, *adj.* முடிந்த, கடந்த, தீர்

Révoluté, *adj.* புறமாய்ச் சுருண்ட.

Révolutif, *adj.* வானமண்டலத்தில் நக்ஷத்திரங்களின் விருத்த ஓட்டம்.

Révolution, *f.* கிரகம் ஓடுஞ் சுற்று, கிரக ஓட்டம், — ச்சுற்று, கதவாக்கியம். || காலவட்டம். || சுற்று, உருட்சி. || சக்கரவட்டம்,— சுற்று, புனராவர்த்தப். || சடுதியான மாற்றம். || மாறுபாடு, எண்ணமாற்றம். || அரசின் மாற்றம், — கவிழ்தல்,— புரளுதல், குழப்பம்:— anomalistique சாமண்டலம்; — synodique பரிவருத்தி ;— des humeurs தேகநீர் அபூருவ மாற்றம்.

Révolutionnaire, *adj.* அரசின் மாற்றத்து, — மாற்றக் கட்சிக்குரிய. || *s.* அரசின் மாற்றக் கட்சியான், குழப்பக்காரன்.

Révolutionnairement, *adv.* அரசின் மாற்றத்துக்குரியவிதமாய், குழப்பமாய்.

Révolutionner, *v. a.* குழப்புதல், குழப்பமெழுப்புதல், புரட்டுதல், குழப்பப் போதனை வழங்குவித்தல், மயக்குதல், கலக்குதல், பிரமிப்பித்தல். || se— குழப்பஞ்செய்தல், மயங்குதல், பிரமித்தல். [டுங் கைத்துப்பாக்கி.

Revolver, *m.* உருண்டு பல வெடி சு

Revomir, *v. a.* மறுபடி வாந்தி செய்தல்,— வாந்தித்தல், (விழுங்கினதை) கக்குதல், தள்ளுதல்.

Révoquer, *v. a.* மாற்றுதல், தள்ளுதல், எடுத்துப்போடுதல். || அழித்தல், ஒழித்தல், தவிர்த்தல், உடைத்தல், ரத்துசெய்தல் :—en doute சமுசயப்படுத்துதல்,—ப்படுதல், சந்தேகமென்றுசொல்லுதல். || se — மாற்ற —, ஒழிக்கப்படுதல்.

Revue, *f.* பரிசோதனை, ஆராய்வு, விசாரணை, திரும்பிப்பார்த்தல்,— பார்வையிடுதல்,— பரிசோதித்தல். || அணி பார்த்தல்,— பார்வையிடுதல், பராமரிக்கை. || சில புஸ்தகங்களின் பேர்: faire la — de, passer en — பரிசோதித்தல், விசாரித்தல், ஆராய்தல், பரிசோதனை

செய்தல் ; passer un régiment en — பட்டாள அணிபார்த்தல் ; gens de — தம்மைப் பார்க்கச் சந்தர்ப்பமுள்ளவர்கள்.

Revue, *f.* குறித்தகாலத்தில் பிரசுரஞ்செய்யப்படும் பத்திரிகைகள் அல்லது குறிப்புகள்.

Révulsif, ive, *adj. et m.* எதிர்பக்கத்தில் நீரை நீக்குகிற,— நீக்குகிற மருந்து.

Révulsion, *f.* எதிர்பக்கத்தில் நீரை நீக்குதல்.

Rez, *prép.* கிட்ட, மட்டமாக : — pied, — terre தரைமட்டமாக ; au — de l'eau தண்ணீர்மட்டமாய்.

Rez-de-chaussée, *m.* தரை மட்டம், தரை மட்டவறை. || *pl.* மெத்தைக்கீழ்—, தாழ்ந்த அறைகள்,—அறை வரிசை.

Rhabillage, *m.* பழுதுபார்த்தல், செப்பனிடுதல், துன்னல், சரவையான திருத்தம், மேர்பூச்சு.

Rhabiller, *v. a.* மறுபடி உடுத்துதல், புது வஸ்திரங்கொடுத்தல். || பழுதுபார்த்தல், திருத்துதல், துன்னுதல், குறைதீர்த்தல், குற்றத்தைத் தணிக்கப் பார்த்தல்,— பரிகரித்தல். || se — மறுபடி உடுத்திக்கொள்ளுதல், புது வஸ்திரங்களை யுடுத்தல்.

Rhabilleur, *m.* பழுதுபார்க்கிறவன், சுளுக்கு வழிக்கிறவன்.

Rhagade, *f.* வெடிப்புகள், இரணங்கள்.

Rhénan, e, *adj.* ரீன் நதிக்கடுத்த.

Rhéteur, *m.* அணியிலக்கண—, வாசாலக—, சாதுரிய வாத்தி,— சாஸ்திரி, — நூலோன்,— நூலாசிரியன், வாக்கி, எடுப்புள்ள பிரசங்கி.

Rhétoricien, *m.* வாக்கிய அணியிலக்கணம் படித்தவன்,— மாணாக்கன்.

Rhétorique, *f.* அணியிலக்கணம், வாசாலக —, சாதுரிய சாஸ்திரம், — அலங்காரம், அணியிலக்கண நூல், அணியிலக்கண வகுப்பு, எடுப்பான வாசாலகம் : préceptes de — அணியிலக்கண விதிகள் ; figures de — சாதுரிய அணி,— அலங்காரம் ; employer toute sa — இணக்குவதற்குப் பிரயாசம் எல்லாம் படுதல் ; perdre sa — இணக்குவதற்கு வீணாய்ப் பிரயாசப் படுதல்.

Rhin, *m.* ஐரோப்பாகண்டத்தில் ரீன்என்னும் நதி : haut—, bas — பிராஞ்சிராச்சியத்திலிரு ஜில்லா.

Rhinalgie, *f.* நாசிகா பீடம்.

Rhinalgique, *adj.* நாசிகா பீடத்துக்கடுத்த.

Rhinanthe, *m.* plante dite crête de coq கோழிக்கொண்டை.

Rhinantoïdes, *f. pl.* ஓர்பூண்டினம்.

Rhinite, *f.* நாசி வியாதி.

Rhingrave, *m.* ரீன்நதிக்கடுத்த நகர் நடுவன்,— அதிகாரி, அல்மஞ்தேசத்துச் சில பிரபுகளின் பேர். || *f.* அகன்ற காற்சட்டை.

Rhinocéros, *m.* காண்டாமிருகம், நாட்டா, தைதிலம், தைதுலை, வனோர்சாகம்.

Rhinoplastie, *f.* மூக்களாயர் அல்லது மூக்கில்லாதவர்களுக்கு மூக்குவைத்து ஒட்டும் சிகிச்சை.

Rhinoplastique, *adj. et f.* மூக்குசீர்ப்படுத்தும்,— சீர்ப்படுத்தும் வகை.

Rhisophage, Rhizophage, *adj.* வேர்தின்கிற.

Rhizome, *m.* ஆணிவேர், சில பூண்டுகளின் வேர், விதையின் சிறு வேர்.

Rhizophora candel, கண்டல்மரம், — mangle, manglier, palétuvier, பேய்க்கண்டல்.

Rhode-island, ஐக்கிய நாடுகளில் ரொதிஸ்லந்து நாடு.

Rhodes, உட்கடலில் ரோதென்னுந் தீவு,—நகர், அதின்குடிகள் Rhodiens. || *m.* — *ou* bois de rose, ஓர் மரம்.

Rhodium, *m.* ஒரு லோகம்.

Rhododendron, *m.* எப்போதும் பச்சையான ஓர் செடி.

Rhodomel, *m.* உரோசாப்பூ வாசனையுள்ள தேன்.

Rhodoracées, *f. pl.* ஓர்பூண்டினம்.

Rhogmé, *f.* இலேசான நெடுமுறிவு.

Rhombe, *m.* சாய்ந்த சதுரம், வக்ரவிஷமசதுரம்.

Rhomboïdal, *adj.* சாய்ந்த தீர்க்கசதுரவடிவான.

Rhomboïde, *m.* ஆறுசாய்ந்த சதுரங்களுக்குள் ளடங்கியது. || ஓர் நரம்பு.

Rhône, *m.* பிராஞ்சிராச்சியத்தில் ரோன்என்னும் நதி,— ஜில்லா.

Rhubarbe, *f.* விரோசனத்துக்குரிய

தவர், — வேர் பூண்டு, வரியாத்து, —கிழங்கு.

Rhum, *m.* கருப்பஞ்சாராயம்.

Rhumatisant, *adj.* வாயுரோகமுள்ள, சந்துவாத நோய்கொண்ட.

Rhumatismal, e, *adj.* வாதத்துக் கடுத்த.

Rhumatisme, *m.* வாதம், வாய்வு, வாதிகம், வாயுரோகம், மடங்கு, சந்துவாதம்.

Rhume, *m.* சளி, இருமல், சலதோஷம், சைத்தியம், தடிமல், சலுப்பு ;— de cerveau பீனசம்.

Rhummerie, *f.* பாகுபொங்குமிடம்.

Rhyas, *m.* கண்ணினுட்கோண நீரொழுக்கு.

Rhynchène, *m.* ஓர் வண்டு.

Rhynchosia nummularia, *V.* Glycine nummularia.

Rhythme, *m.* சந்தம், இராகம், வண்ணம், செய்யுள்போக்கு, இலயைப் பிரமாணம், நாடித் திட்டம்.

Rhythmique, *adj.* இராகத்துக்கடுத்த.

Riant, e, *adj.* களிப்பு—, சிரிப்பு—, உவப்பு—, சந்தோஷம்—, இன்பம்—, இதம்—, பிரியமுள்ள. ‖ *m.* வகைப்பான வசன நடை.

Ribambelle, *f.* நெடுங் துடர்ச்சி.

Ribaud, e, *adj.* காம, காமாதுர, தூர்த்த. ‖ s. காமாதுரன், காமாதுரி, சண்டாளன், நீசன், சுமையாள். ‖ *pl.* ஓர்வகை சேவகர் : roi des — அவர்கள் தலைவன். [காமம்.

Ribauderie, *f.* தூர்த்தக் கிரிகை,

Ribe, *f.* சணலை நசுக்குங் கருவி.

Riblette, *f.* சுட்ட மெல்லிய இறைச்சித் துண்டு.

Ribleur, *m.* இரவில் திரிகிறவன், திருடன் போக்கிரி, நிசாசரன்.

Ribord, *m.* எராவுக்கடுத்த வெளிப்பலகை.

Ribordage, *m.* வேறோர்கப்பலோடு மோதின கப்பலுக்கு வருஞ் சேதம், அதின் பரிகாரம்.

Ribote, *f.* குடிவிருந்து, உண்டாட்டு : faire— *ou*

Riboter, *v. n.* குடி விருந்து செய்தல், பேருணவு குடிமுதலியவற்றுக்குள்ளாதல்.

Riboteur, euse, *adj. et s.* குடிவிருந்துப்பிரியன்,— விரும்புகிறவன்,— வள்.

Ricanement, *m.* **Ricanerie**, *f.* நகைப்பு, பரியாசம்.

Ricaner, *v. n.* பரியாசமாய்—, நகைத்தல், பரிகாசித்தல்.

Ricaneur, euse, *adj. et s.* நகைக்கிறவன்,—வள், பரியாசக்காரன்,— காரி.

Ric-à-ric, *adv.* கண்டிப்பாய்.

Richard, e, *adj. et s.* பெரிய ஆஸ்திக்காரன், சொங்காரன், சொம்மாளி.

Riche, *adj.* ஆஸ்தி—, ஐசுவரியம்—, திரவியம்—, செல்வம்—, சம்பத்துள்ள. ‖ மிகுந்த, செழித்த, செழிப்புள்ள, மிகுதியுள்ள. ‖ விலையேறப்பெற்ற, சிறப்புள்ள, சிறந்த : langue — அநேக வார்த்தையுள்ள பாஷை ; sujet — தாராளமான விவரத்துக்குரிய விஷயம் ; style — ஏராளமான வசன நடை ; — taille, நன்றாய்ப் பொருந்தின உயரம் ; rime — மிச்சமான இயைபு. ‖ *m.* ஆஸ்திக்காரன், ஐசுவரியவான், திரவியவான், திரவியசம்பன்னன், தனஸ்தன், தனவந்தன், மால்தார், வசுமான் : mauvais — இரக்கமற்ற திரவியவான்.

Richement, *adv.* மிகுதி—, திரவியமாய், மகிமை—, சிறப்பாய், சம்பிரமாய் ; marier sa fille — ஆஸ்திக்காரனுக்குத் தன் மகளைக் கட்டிக்கொடுத்தல் ;— laid மிகவு மவலக்ஷணமுள்ள.

Richesse, *f.* ஆஸ்தி, ஐசுவரியம், தனம், சம்பத்து, செல்வம், வைபவம், உடைமை, சொம், சொத்து, சம்பரம், சம்பதி சம்பத்தி,. அத்தம், அருத்தம், திரவிணம், திரு. ‖ தாராளம், ஏராளம், மிகுதி, செழிப்பு, இடம்பாடு, சிறப்பு, உயர் விலை. [திரவியமுள்ள.

Richissime, *adj.* மிகவு மாஸ்தி —

Ricin, *m.* Ricinus, Palma-christi, ஆமணக்கு, முத்துக்கொட்டை, அத்தமானம், அத்துகம, அஷ்டம், ஊர்ப்புலம், வியடம்பகம் : ricinus communis சிற்றாமணக்கு ;— inermis பேராமணக்கு, படுகையாமணக்கு : — tanarius மலையாமணக்கு :— viridis செவ்வாமணக்கு, சூரிய காந்தவாமணக்கு : graine de — முத்துக்கொட்டை ; huile de — ஆமணக்கெண்ணெய். ‖ உண்ணி, ஓர் பூச்சி.

Ricocher, *v. n.* சலத்தில் தெறித்துத்தெறித்து ஓடுதல், நெட்டிடுதல், நெட்டுபோய்தல்.

Ricochet, *m.* சலத்தில் தெறித்த தெறிப்பு, நீரில் தைக்கக் கல்லெறியும் விளையாட்டு, நெட்டு. ‖ குண்டின் தெறிப்பு,— அதைப்பு. ‖ சுற்று, தொடர்ச்சி, தொடர்ச்சியால் வந்த சம்பவம். ‖ ஓரேவித பாட்டுப்பக்ஷி. ‖ par — நேரற்ற விதமாய் ; faire des — *V.* Ricocher.

Ride, *f.* திரை, திரைவு, திரையல், முகச்சுருக்கு, திரங்கல். ‖ சிறு அலைகள். ‖ கிளிஞ்சில் மேற்சிறு குழைவு.

Ridé, *adj.* திரைவுள்ள, திரைந்த, லாடின, குழைவுள்ள, மேடுபள்ளமுள்ள, சமமற்ற.

Rideau, *m.* திரை, திரைச்சீலை, இடுதிரை, திரோதானம், அவனிகை, படம், படாம், எழினி, ஆவரகம், சலாத்தி, சவனிகை, பிரதிசீரை. ‖ மரவரிசை. ‖ மறைப்புமேடு. ‖ (வழி — வாய்க்காலிருபுறத்து) சாய்வு. ‖ இருப்புப் பாலத்தின் தட்டுதாங்கும் சங்கிலி சலாகை கம்பி முதலியது ; tirer le — sur une chose ஓர் காரியத்தின் பேச்சு விட்டுவிடுதல் ; se tenir derrière le— மறைவில் நின்று—, தோன்றாமல் நடப்பித்தல். [தி.— ஆதரவு.

Ridelle, *f.* பண்டிற் பக்கத்துக் கிரா

Rider, *v. a.* திரைத்தல், சுருக்குதல், நெறித்தல், திரை—, சாலாக்குதல். ‖ கப்பலின் பெரு கயிறுகளை யிழுத்தல்: le vent — ou faire — la surface de l'eau — காற்று தண்ணீர் பரப்பைத்திரைத்தல். ‖ se — திரைதல், சுருங்குதல், திரங்குதல், சப்பளிதல், சழிதல், சழுங்குதல், சிறக்கணித்தல், சும்புதல்.

Ridicule, *adj.* நகைப்புக்கு—, கேலிக்கு —, பரியாசத்துக்குரிய, மதி —, இலக்ஷணமற்ற, ஒவ்வாத. ‖ *m.* பரியாசத்துக்குரியது, கேலிக்குரியது. ‖ பெண்களுக் குபயோகமான சிறு சாக்கு : se donner un — பரியாசத்துக்குரிய குணமாதல் ; tourner en — நகைத்தல், பழித்தல், பரியாசம்பண்ணுதல், நாப்புதல் ; manier l'arme du ridicule பரியாசத்தை ஆயுதமாக உபயோகித்தல்.

Ridiculement, *adv.* நகைப்புக்குரிய விதமாய்.

Ridiculiser, *v. a.* நகைத்தல், பழித்தல், கேலி—, பரியாசம்பண்ணுதல், இகழ்தல். ‖ அகடுபண்ணுதல், இடைவெட்டுப் பேச்சுபேசுதல், இணுப்புதல், நாப்புதல், எள்ளுதல். ‖ se — தங்களை நகைத்தல், நகைப்புக்குரியவனாதல், பரியாசத்துக்கு இடங்கொடுத்தல்.

Ridoir, *m.* சுருக்க முண்டாக்குங் கருவி.

Rien, *m.* ஒன்றும் —, ஏதும் —, கொஞ்சமும்—, இலவலேசமு மில்லை. ‖ அற்பம், கொஞ்சம், அற்பகாரியம், உலொட்டை, அற்பு, திரணம், திரணப்பிராயம், பூளை. ‖ *pl.* வீண்காரியங்கள் ; — ne se fait de — இல்லாததால் ஒன்று மாகிறதில்லை ; il ne sait — de —, du tout சுத்தமாய் ஒன்று மறிகிறதில்லை ; cela ne fait — பறவாயில்லை ; cet homme ne m'est — அந்தமனுஷன் எனக்கு உறவல்ல ; cet homme ne m'est de — அந்தமனுஷனைப்பற்றி எனக்கு அக்கறையில்லை ; en moins de — கொஞ்சத்துக்குள்ளே : cette affaire ne tient à—அந்த காரியத்துக்கு விக்கினமில்லை : tient à un — அற்பக்காரியத்தினால் நிற்கிறது ; se réduire à — வெறுமை—, வீணாய்ப்போதல் ; il est venu de — அற்பகோத்திரத்திற் பிறந்தான் ; comme si de — n'était ஒன்றுமில்லாதது போலே ; il a eu cette terre pour — அந்த நிலத்தை அற்ப விலைக்கு வாங்கினான் : qui vous dit — உனக்கு ஏதாவது சொல்லுகிறதார் ; homme de —நீசமனுஷன் ; on ne fait—pour— பிரயோசனமின்றி சொற்ப கிரயம், சரசமான விலைக்கு ஓர் பொருள்வாங்குதல்.

Rieur, euse, *adj. et s.* நகைக்கிறவன், சிரிக்கிறவன்,—வள், கேலி—, பரியாசக்காரன், சிரிப்பு—, நகைப்புப்பிரியன. avoir, mettre les — de son côté தன் எதிராளிபேரில் நகைப்புவருவித்தல்.

Riflard, *m.* பெருஞ்சீவுளி, கற்றச்சனுளி, ஓர் குடை.

Rifle, *m.* (*angl.*) துப்பாக்கி.

Rifler, *v. a* சீவுதல், பறித்தல்.

Rifloir, *m.* வளைந்த அரம்.

Rigide, *adj.* கண்டிப்பு—, கண்டிதமுள்ள, கடின, கொடிய, அகோர, அமராத, தணியாத, பிடிமானமுள்ள. || வளைக்கக்கூடாத.

Rigidement, *adv.* கண்டிப்பு—, கடினம்—, அகோரமாய்.

Rigidité, *f.* சுமுத்திரை, நுணுக்கம், நிதானம், பிடிமானம், கண்டிப்பு, கண்டிதம், கடினம், அகோரம், கடுகடுப்பு, விறைப்பு.

Rigodon, Rigaudon, *m.* ஓர் கூத்து, அதுக்குரிய இராகம்.

Rigole, *f.* சிறு வாய்க்கால்,— கால்வாய், நீர்வழி,— பாதை,— கால், ஓடை, சாலகம்.

Rigoler, *v. pro.* சந்தோஷப்படுதல், களியாடுதல்.

Rigolo, ote, *adj.* சிரிக்கச்செய்யும், சிரிக்கச்செய்கிறவன், தமாஷ்காரன்.

Rigoleur, euse, *adj.* சிரிப்பை விரும்புகிறவன்,— வள்.

Rigorisme, *m.* மிஞ்சின கண்டிப்பு, — கண்டிப்புள்ள போதகம்.

Rigoriste, *adj. et s.* அதிக கண்டிப்புள்ள. || *m.* மிஞ்சின கண்டிப்பான போதனை யநுசாரி.

Rigoureusement, *adv.* கண்டிப்பு—, கண்டிதம்—, கடினமாய், நுணுக்கமாய்.

Rigoureux, euse, *adj.* கண்டிப்பு—, கண்டிதம்—, கடினமுள்ள, கொடிய, குரூர, இரக்கமற்ற, இரங்காத, கடும், அகோரமான. || சந்தேகமற்ற.

Rigueur, *f.* கண்டிப்பு, கண்டிதம், இரங்காமை, கடினம், அகோரம், கடுமை, கொடுமை, உக்கிரம். || அப்பிரசாதம், இட்டுறுதி, மிஞ்சின நுணுக்கம் : jouer de — விளையாட்டின் விதிகளை யநுசரித்தல் ; de — அகத்தியமான ; à la — கண்டிப்பாய் ; à toute — மிஞ்சின நுணுக்கமாய், — கண்டிதமாய்.

Rillettes, *f. pl.* பன்றி கொத்துக்கறி.

Rimailler, *v. n.* உதவாத கவி செய்தல். || *v. a.* (வாசகத்தை) உதவாத கவிகளாய்த் திருப்புதல்.

Rimailleur, *m.* உதவாத புலவன், — கவி செய்வோன.

Rime, *f.* எதுகை, இயைபு. || *pl.* கவிகள் ; il n'y a ni — ni raison en cela அதிலே புத்தியு நியாயமுமில்லை ; mettre en — கவிகளால் எழுதுதல்.

Rimer, *v. n.* இயைபாதல், பொருந்துதல், இசைதல். கவிசெய்தல் : cela ne rime à rien அதுக்கு நியாயமில்லை, — அர்த்தமில்லை. || *v. a.* செய்யுளாக்குதல், கவிகளால் எழுதுதல், *ou* faire — இயைபாகவைத்தல், பொருத்துதல்.

Rimeur, *m.* இயைபு புலவன், கவி செய்வோன், உதவாதபுலவன்.

Rinçage, *m.* அலம்புதல், அலசுதல், அலைசுதல்.

Rinceau, *m.* தழையணி, சித்திர தழை.

Rince-bouche, *m.* வாய்கொப்புளிப்பதற்குச் சின்ன பாத்திரம்.

Rincée, *f.* கண்டனை, மாரி.

Rincer, *v. a.* அலம்புதல், அலைசுதல், கழுவுதல், அலசுதல், தண்டித்தல், நனைத்தல். || se — வாய்கொப்புளித்தல், அலச—, கழுவப்படுதல்.

Rinceur, se, *s.* அலசுகிறவன்,— வள்.

Rinçoir, *m.* அலைசுகிறதற்குப் பிரயோகமான பெரும் பாத்திரம்.

Rinçure, *f.* அலசின நீர்.

Ringard, *m.* இருப்புக்கம்பி,— ச்சலாகை.

Ringrave, *m.* *V.* Rhingrave.

Rinstruire, *v. a.* மறுபடி பயிற்றுதல்.

Rio-de-Janeiro, பிறெசில்தேசத்திராசதானி.

Rioter, *v. n.* புன்சிரிப்புகொள்ளுதல்.

Rioteur, euse, *s.* புன்னகை கொள்ளுகிறவன்,— வள்.

Ripaille, *f.* பெருந் தீனி : faire — விருந்தாடுதல்.

Ripailleur, leuse, *s.* பெருந் தீனிக்காரன்,— காரி.

Ripe, *f.* சுரண்டுங் கருவி.

Riper, *v. a.* ஷை கருவியால் சுறண்டுதல்.

Ripopée, *f.* பல விரசபான — குழம்புக்கலப்பு, இசையாத கலம்பகம்.

Riposte, *f.* கண்டிப்பான மறுமொழி, குத்திரவிடை. || குத்து விலக்கிக் குத்துதல்.

Riposter, *v. a. et n.* கண்டிப்பாய் மறுமொழிசொல்லுதல் பதிலளித்தல், எதிர் பரியாசஞ்சொல்லுதல். ‖ குத்து விலக்கிக் குத்துதல்.

Ripuaire, *adj.* பூர்வகாலத்தில் ரீன் நதியில் வசிக்கிற (சனம்).

Rire, *v. n.* சிரித்தல், நகைத்தல். ‖ சந்தோஷித்தல், விளையாடுதல், தமாசுக்கு —, பரியாசத்துக்குச் சொல்லுதல். ‖ அசட்டைபண்ணுதல், நிந்தித்தல். ‖ பிரியப்படுதல், அநுகூலமாதல். ‖ நகைத்தல், பரியாசம்—, கேலிபண்ணுதல். ‖ (சட்டை) பழசாதல், தேய்ந்துபோதல் : — sous cape, dans sa barbe மறைவாய்ச் சந்தோஷப்படுதல்; — aux anges மிக சந்தோஷப்படுதல். தனியே—, பைத்தியனாய்—, ஞாயமின்றிச் சிரித்தல் : aimer à — விளையாட்டின்பேரில் பிரியமாயிருத்தல் ; apprêter à — நகைப்புக்கு இடங்கொடுத்தல் ; tout lui rit எல்லாமு மவனுக்கு அநுகூலமாகுது. ‖ se — நகைத்தல், பரியாசம்பண்ணுதல், அசட்டைபண்ணுதல் ; mourir de — பொறுக்கமுடியாத சிரிப்புகொள்ளுதல், மட்டின்றிச் சிரித்தல்.

Rire, ris, *m.* சிரிப்பு, நகை, நகைப்பு, முறுவல், ஆசம், சம்பிரகாசம் ;— immodéré அட்டாகாசம், கனைப்பு, அகிகாசம், பெரு நகை ; éclat de — கெக்கட்டம்.

Ris, *m.* தரு, கப்பர்பாய் மடிப்பு,— கயிற்றுத்துவாரம். *V.* Riz : prendre des — கப்பர்பாய்சுருக்குதல்,— சுருக்குப் பிடித்தல்.

Ris-de-veau, *m.* பசுக்கன்றின் கழுத்துக் கழலை.

Risban, *m.* துறையாதரவுமேடு.

Risberme, *f.* மிலாற்றரணிப்ப, அணைக்கட்டினடியிற்கல் லடுக்கு.

Risée, *f.* நகைப்பு, கேலி, பரியாசம், இகழ்ச்சி, சிரிப்பாணி.

Risette, *f.* சிறுநகை, புன்னகை, இலேசான சிரிப்பு

Risibilité, *f.* சிரிக்குந் தத்துவம்.

Risible, *adj.* சிரிக்கத்தக்க,— த்தத்துவமுள்ள. ‖ சிரிப்புக்கு—, பரியாசத்துக்கு —, நகைப்புக்குரிய, கேலிக்கேதுவான, நகைக்கத்தக்க.

Risorius, *adj.* சிரிப்புக்கேற்ற.

Risquable, *adj.* ஆபத்துள்ள, மோசத்துக்குரிய, பரிட்சை செய்யத்தக்க.

Risque, *m.* ஆபத்து, அபாயம், மோசத்துறை, மோசம், நஷ்டத்துக் கேதுவு : courir le — ஆபத்துக்குள்ளாதல் ; à tout — என்ன அதிஷ்டம் நேரிட்டாலும் ; à ses — et périls சகல மோசத்துக்கும் துணிந்து.

Risquer, *v. a.* ஆபத்துக்குள்ளாக்குதல்,— உள்ளாதல், ஆபத்துக்குத் துணிதல், ஆபத்தில்வைத்தல், அதிஷ்டத்துக்கு விடுதல் ;— le combat துணிந்து போராடுதல் ;— de tout perdre சகலமு மிழிக்க ஆபத்துக்குட்படுதல். ‖ se — ஆபத்துக்குட்படுதல், துணிதல்.

Risque-tout, *m.* ஒன்றுக்கும் அஞ்சாதவன்.

Rissole, *f.* மாவில் துண்டித்துப் பொரித்த இறைச்சி.

Rissolé, *m.* கருக்கின இறைச்சி. ‖ *part.* கருகிய.

Rissoler, *v. a.* கருகப் பொரித்தல். *v. n.* கருகிப்பொரிதல்.

Risson, *m.* நாலுகூர் நங்கூரம்.

Rit, Rite, *m.* வேதாசாரம், சடங்கு, முறைமை, ஆசாரம், அநுஷ்டானம், கிரியை, இரீதி.

Ritournelle, *f.* திரும்பி வருமின்னிசை,— கருத்து,— பேச்சு.

Ritualisme, *m.* வேதாசார நூலோன், வேதாசாரத்தநுசாரி, சடங்குப் பிரமாணிக்கன்.

Ritualiste, *m.* ஆங்கிளிக்கன் வேதசபையில் ஓர் பிரிவைச் சேர்ந்தவன்.

Rituel, *m.* சடங்குப் புஸ்தகம், கிரியை முறை, முறைமை.

Rivage, *m.* கரை, ஓரம், கடலோரம், நீர்க்கரை, இரோவு, கூலம், தடஸ்தம், தீரம்.

Rival, e, *adj. et s.* போட்டியுள்ள, போட்டியான, எதிரான, இகலுகிற. ‖ *m.* போட்டிக்காரன், போரி, எதிரி, சரியொத்தவன். ‖ கூட நேசிப்போன், போட்டியான—, எதிர் காதலன், சக்களவன். ‖ *f.* போட்டிக்காரி, போரி, எதிரி ; (autre femme du même homme) சக்களத்தி.

Rivaliser, *v. n.* போட்டியாயிருத்தல், — ஆய்ச்செய்தல், போட்டி—, சடுத்தம்பண்ணுதல், இகலுதல், இசலித்

Scalègre, *f*. கடலுப்பில் அகப்படும்

Scalène, *adj*. triangle — சமமற்ற பக்கமுக்கோணம்,— விசமத்திரி புசம் ; muscles — விசமத்திரி பூச வடிவுள்ள கழுத்தின் மூன்று நரம்புகள்.

Scalope, *m*. ஓர் காட்டெலி.

Scalpe, *m*. அமெரிக்க இந்தியர்கள் விருதுசின்னமாகக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கும் தோலுடன் பிய்ந்துகொண்டுவந்த தலைமயிர்.

Scalpel, *m*. சத்திரக் கத்தி, அங்கஞ் சத்திரிக்குங் கருவி.

Scalper, *v. a*. தலைத்தோலைக் கத்தியோடு பிடுங்குதல்,— உரித்தல்.

Scammonée, *f*. விரேசனத்துக்குரிய பூண்டு,— அதின் சாரம்.

Scandale, *f*. துர்மாதிரிகை, இடறு, இடறல், தின்மைக்கு ஏவுந் துர்க்கிரியை, ஆவலாதி, அவதூறு. ‖ (துர்க்கிரியையின்பேரில் வரும்) எரிச்சல், அரோசிகம் : pierre de — இடறுங்கல், துர்க்கிரியைக்கு ஏவுங் காரணம் ; causer du — ஆவலாதி யுண்டாக்குதல் ; au grand — des gens de biens நல்லோர்க்குப் பெரிய வெறுப்புண்டாகி.

Scandaleusement, *adv*. துர்மாதிரிகையாய், ஆவலாதியாய்.

Scandaleux, euse, *adj*. துர்மாதிரிகையான,— காண்பிக்கிற.

Scandaliser, *v. a*. துர்மாதிரிகாண்பித்தல், — ஆதல், இடறலுண்டாக்குதல், இடறப்பண்ணுதல், பாவக்காரணமாதல், அவகீர்த்தி —, ஆவலாதிப்படுத்துதல், (துர்க்கிரியையால்) வெறுப்பு —, அரோசிகம் தூண்டுதல். ‖ se — இடறல் படுதல், துர்மாதிரிகையென்றிருத்தல், வெறுப்போடே கேட்டல்,— காண்டல், தின்மையென்று நினைத்தல்.

Scander, *v. a*. அலகிடுதல், கவிசீர்களை யெண்ணுதல், அசை தெரித்தல்.

Scandinave, *adj. et s*. ஸ்கந்தினவிதேசத்து,—தேசத்தான்,—தேசத்தாள், — பாஷை.

Scandinavie, *f*. ஸ்கந்தினவிதேசம், அது சுயேத் நோர்வேழ் தன்மார்க்கு தேசங்களாம்.

Scandix, *f*. கசப்பான ஓர் புல். [பு.

Scapha, *m*. படகுவடிவுள்ள எலும்

Scaphandre, *m*. நெட்டிச்சட்டை.

Scaphandrier, *m*. நெட்டிச்சட்டையுடன் தண்ணீர்க்குள்ளே முழுகுகிறவன்.

Scaphoïde, *adj*. படகு வடிவுள்ள (எலும்பு). [டிவுள்ள.

Scapiforme, *adj*. இலையற்ற தாள் வ

Scapulaire, *m*. உத்தரீயம், உத்தரியம், உத்தரீகம், தோளினின்று முன்னும்பின்னுந் தொங்கும் புடைவைப்பந்தம், — மந்திரிக்கப்பட்ட சிறு புடைவைச் சதுரம். ‖ பந்தனக்கச்சை. ‖ *adj*. தோளுக்கடுத்த.

Scarabe, Scarabée, *m*. வண்டு, மொய், அறுபதம், அறுகால், கருவண்டு, அராபதம், அளி, உறையி லடங்கிய சிறகுள்ள வண்டுகளின் பேர் ; scarabœus fimarius பீவண்டு.

Scaramouche, *m*. கோமாளி.

Scare, *f*. ஓர் மீன்.

Scarificateur, *m*. பல்குடோரியிடுங் கருவி, அறுக்கிற பல கொழுக்கள் சேர்க்கை. [த்திரம், சத்திரக் கீறு.

Scarification, *f*. குடோரி, கீறு, ச

Scarifier, *v. a*. சத்திரம் —, குடோரியிடுதல்,— பண்ணுதல், சத்திரம்வைத்தல், தோல்கீறுதல்,— அறுத்தல், கீறுதல். [ருவருவிக்கிற—கூடிய காய்ச்சல்.

Scarlatine, *f. ou* fièvre—சிவந்தப

Scarole, Scariole, *f*. *V*. Escarole, ஓர் கீரை.

Scatologie, *f*. மலத்தைப்பற்றிய வேடிக்கைப்பேச்சு, அல்லது நூல்.

Scatophile, *adj*. மலத்தில் ஜீவிக்கும் அல்லது அதில் வளரும் பூண்டு.

Scavisson, *m*. ஓர் கருவாப்பட்டை.

Sceau, scel, *m*. முத்திரை, பொறி, முறி, முத்திரைக்கம்பு, — அச்சு, —கோல், சாப்பா, மொகரு, மோர், முத்திராங்கிதம், முத்திரைப் பதிவு,— யிட்ட காலம்,— யிட்ட விடம். ‖ குறிப்பு, அடையாளம். ‖ இரகசிய மீறப்படாமை. ‖ *pl*. இராசாங்க முத்திரை, —

முத்திரைக்கார னுத்தியோகம் : mettre le — à une chose ஓர்காரியத்தை முடித்தல் ;— de réprobation மற்றவர்களால் விலக்கமாக்குகிற அவமானக் குறி ; mettre, apposer son — தன் முத்திரையிடுதல் ; sous le — du secret இரகசியமாகுமென்கிற திட்டத்தோடு ; le — de la confession பாவசங்கீர்த்தனத்தி னிரகசிய மீருமை ; retirer les — இராசாங்க முத்திரை யுத்தியோகம் நீக்குதல்.

Sceau-de-Salomon,— Notre-Dame, *m.* இரு பூண்டுகள். [சோ நகரம்.

Sceaux, பரீஸ்பட்டணத்துக்கடுத்த

Scée, *f.* (திரோய்என்னும் நகரத்தில்) சேயென்னும் (வாசல்).

Scélérat, e, *adj. et s.* பாதகம்—, துரோகமான, சண்டாள, துஷ்ட, கொடிய, அக்கிரம, பாவாக்கிரம, மானங்கெட்ட, நாணமற்ற, அருவருப்புக்கு—, வெறுப்புக்குரிய. || *s.* பாதகன், சண்டாளன், துஷ்டன், கொடியன், கழுவேறி, துரோகி, பெரும்பாவி, அக்கிரமி.

Scélératesse, *f.* கெட்ட—, துஷ்டத்தனம், பாதக குணம், தோஷம், துரோகம், நிஷ்டூரம், துஷ்டக்கிரியை.

Scellage, *m.* சிறு கண்ணாடிகளை யிசைத் தொட்டுதல்.

Scellé, *m.* மறியல்—, அரமனை முத்திரை, மோர். || *part.* முத்திரைபோட்ட,— யிடப்பட்ட, மோர்போட்ட.

Scellement, *m.* அடைத்தல், ஒட்டுதல், சுவரிற் சாந்து — ஈயம்போட்டு ஒட்டுதல், இப்படி ஒட்டின மர — இரும்பின் நுனி.

Sceller, *v. a.* முத்திரைபோடுதல் — இடுதல், முத்திரித்தல், அரமனை பேரால் முத்திரையிடுதல், மோர்போடுதல். || பிசினால் சரியாய் அடைத்தல். || சுவரில் சாந்து — ஈயம்போட்டு ஒட்டுதல்,— பதித்தல். || உறுதி—, ஸ்திரப்படுத்துதல். [ரன்.

Scelleur, *m.* முத்திரையாள்,— கா

Scénario, *m.* நாடகமேடையில் காண்பித்தல், காட்சி தோர்றுவித்தல், நாடகத்தின் முக்கிய அம்ஸங்களை எடுத்துக்காட்டல்.

Scène, *f.* நாடக —, வாசாப்பு —, நடன — வாசகப்பா மேடு, — சாலை, களரி, நாடகபிரிவு,— பரிட்சை,— சாலைச்சோடிப்பு, ஆடும் வர்த்தமானம், அபூர்வ வர்த்தமானங்களி னிடம், நாடக வித்தை, காட்சித் தோற்றம், வேடிக்கை, சடுதியான தாக்கு,— கண்டனை : entrer en — நாடகமேடையில் தோன்றுதல்,— பிரவேசித்தல் : mettre sur la — நாடகத்திற் காண்பித்தல் ; être toujours en — அநேகர் கண்களின் முன்பாக விருக்கிறதுபோலே எப்போதும் எடுப்பாய்நடத்தல் ; paraître sur la — நாடகமேட்டில் தோன்றுதல், பிரசித்த அந்தஸ்தி லிருத்தல் ; produire sur la — பிரசித்தமாய்த் தோற்றுவித்தல் ; au lit de la mort la — change சாகிற வேளையிற் காரியமெல்லா மாறிப்போம் ; la — est à Rome வர்த்தமானம் உரோமாபுரியில் நடக்கிறது ; de — en — நாடகத்தின் பிரிவு பிரிவாக ; la — lyrique சங்கீத நாடகம் ; la — tragique துக்கநாடகம் ; la — comique கேலிநாடகம் ; faire une — à சடுதியாய்க் கண்டித்தல்.

Scénique, *adj.* நாடக,— சாலையின், நாடகத்துக்குரிய ; les jeux — நாடக மேடையில் காட்டும் வேடிக்கைகள்.

Scénographe, *m.* நாடகமேடையின் திரைகள் எழுதுகிறவன்.

Scénographie, *f.* ஓர் மைதானங் காட்டும் படத்திற் பொருள்கள் பிதுங்குகிறதை —, பொருள்களின் நிழலைத் தோற்றுவிக்கிற சித்திரவகை. || சோடிப்புச் சித்திரிப்பு. துக்கடுத்த.

Scénographique, *adj.* ஷை சித்திரத்

Scénopégies, *f. pl.* (யூதரில்) கூடாரப்பண்டிகை.

Scepticisme, *m.* சர்வசந்தேகமதம், — சந்தேகப்போதகம், சமுசயவாதம், உலகாய்தம், உலகாயிதம், உலோகாய்தம், நாஸ்திகமதம், சௌகதிகம்.

Sceptique, *adj. et s.* சர்வசந்தேகமதத்தான்,— மதத்தாள்,— மதத்து, சகலத்திலுஞ் சந்தேகப்படுகிற, — ஐயமுள்ள, உலகாயிதன், நாஸ்திகன், சௌகதன், ஸ்வகதன், சர்வசந்தேகி,— சந்தேகவாதி.

Sceptre, *m.* செங்கோல், செங்கோன்மை, கோல், இராச்சியபாரம், மேவான அதிகாரம், அரசு, இராசாங்கம் ; — d'airain கொடுங்கோல்.

Schabraque, *f.* கல்லணைமேல் போடுஞ் சமுக்காளம்,— சூல்.

Schaffouse, சுயிஸ்தேசத்தில் ஷப்புஸ் நகரம்,—நகரநாடு.

Schah, *m.* பெர்சிய—, அரசன், ஷ, ஷா ; schahanschah ; அரசருக் கரசன், பழைய பெர்சிய அரசர்பேர் : roi des rois.

Schakat, *m.* உசார் என்னு மிராவுத்தர் தலைக்கோலம்.

Schako, *ou* Shako, *m.* போர்ச்சேவகர் தொப்பி.

Schall, *m. ou* Châle, சால்வை.

Schapzka. *m.* பொலொஞ்தேசத்து ஈட்டிக்காரர் குல்லாய்.

Scharvœkas, *m. pl.* சாருவாகர்.

Schédule, *f.* சின்ன சீட்டு.

Scheik, *ou* Chéik, *m.* அரபியகுலத்தலைவன்.

Schelem, *m. ou* Chelem, சூதுகடுதாசியில் சர்வ கெலிப்பு.

Schelling, *m* ஷெலிங், அரைரூபாய் (இங்கிலிஷ்நாணயம்).

Schème, Schema, *m.* புத்தியிலுள்ளது. || பணிக்கு. மாதிரி, ஓர் க்ஷணத்திற் கிரகங்களின் நிலைப்பணிக்கு.

Schène, *m.* ருந்நாழி, ஓர்வழி யளவை.

Schénobate, *m.* தொம்பன், கழாயன், கழைக்கூத்தன்.

Schérif, *m.* துலுக்கர் பிரபு, மகம்மதின் சந்ததியான்.

Scherl, *m. V.* Schorl.

Schismatique, *adj. et s.* பிரிவினையான, பிரிவினைக்குரிய. || *s.* பிரிவினைக்காரன்,— காரி.

Schisme, *m.* பிரிவினை, திருச்சபையினின்று பிரிதல், சமயபேதம். || போதக—, கட்சிபேதம்.

Schiste, *m.* தகடாய்ப் பிரியுங் கல்.

Schisteux, euse, *adj.* தகடாய்ப்பிரிகிற.

Schlague, *f.* பிரம்பினடி

Schlich, *m.* உருக்குவதற்குத் தக்க தூளான தாது.

Schlittage, *m.* மலைகளில் வெட்டப்படும் மரங்களைச் சக்கரமில்லாத இழுப்புவண்டிகள் வழியாய்க் கீழே கொண்டுவருதல்.

Schlitte, *f.* மலைகளில் வெட்டப்படும் மரங்களை இழுப்புவண்டிகளில் வைத்துக் கீழே யிறக்கப் போடப்பட்டிருக்கு மரத்துண்டுகளாலான ஓர் பாதை.

Schnapan, *m.* போக்கிரி, சண்டாளன், திருடன்.

Schnick, *m.* சூரைவிரைச் சாராயம்.

Schooner, *m.* இரு பாய்மரக்கப்பல்.

Schrebora albens, பயரை (மரம்).

Sciage, *m.* வாளால்—, அறுப்பு, அறுப்புவேலை : bois de — அறுப்பதற்குரிய மரம்.

Sciant, e, *adj.* அலட்டு—, சலிப்புள்ள.

Sciatérique, *adj.* ஊசிநிழலால் மணிகுறிக்கிற. || *m.* சூரிய கடிகாரம். || *f.* சூரியகடியார வூசிவைக்கும் வித்தை.

Sciatique, *adj.* இடுப்புக்கடுத்த : douleur — இடுப்புவலி. || *f.* இடுப்புவலி,— நரம்பின் சூலை, குறுக்கு,— நோய், சந்துவாதம்.

Scie, *f.* வாள், இரம்பம், ஈர்வாள், வேதினம். || வாள்மீன், சிலவண்டுகளின் அலகு. || அலுப்புக்காரியம் : — manuelle கரவாள், கைவாள், கரபத்திரம்.

Scié, *part.* வாளாலறுத்த.

Sciemment, *adv.* அறிந்து, மனசறிய, வேண்டுமென்று.

Science, *f.* அறிவு, தெரியல், உணர்ச்சி, கியானம், தேர்ச்சி, கோவிதம். || கல்வி, சாஸ்திரம், நூல், கலை, கலைக்கியானம், வித்தை, படிப்பு, நிபுணத்துவம், விக்கியானம். விஞ்ஞும், வித்தியம், வியுற்பன்னம், விற்பத்தி, சாமர்த்தியம் ; les — கல்விசாஸ்திரங்கள்; la — du salut இரக்ஷணிய வழியறிதல் ;— infuse தெய்வச்செயலாய் உண்டான கல்வி.

Scientifique, *adj.* கல்விசாஸ்திரத்துக்கடுத்த.

Scientifiquement, *adv.* சாஸ்திரத்தின்படி.

Scier, *v. a.* வாள்—, வாளால்—, அரிவாளால்—, அறுத்தல், எதிரிடையாய் —, பின்வாங்கத் தண்டுவலித்தல், ஒன்றுக்குப்பின் மற்றொன்றைக் கடிவாளவாரிழுத்தல் :— le dos வெகுவாய் விரோதித்தல், கஸ்திப்படுத்துதல், அலட்டுதல்.

Scierie, *f.* பலவாளாலறுப்பிக்கும் எந்திரம்.

Scieur, *m.* வாள்காரன், அறுக்கிறவன், இரம்பக்காரன் :— de long வாள்காரன், வாளறுக்கிறவன்.

Scille, *f.* பேயுள்ளி, கடல் வெங்காயம்.

Scillitique, *adj.* பேயுள்ளியாலான, — போட்ட.

Scillote, *f.* உப்பள நீர்மொள்ளும் பாத்திரம்.

Scindapsus officinalis, *ou* pothos officinalis, அத்தித் திப்பிலி.

Scinder, *v. a.* கழித்தல், பிரித்தல், அறுத்தல்.

Scinque, *m.* ஓர் பல்லி.

Scintillant, e, *adj.* மின்னுகிற, பொறியிடுகிற, — பறக்கிற.

Scintillation, *ou* scintillement, *f.* மினுமினுப்பு, தளதளப்பு.

Scintiller, *v. n.* மின்னுதல், பொறிசிந்துதல், — தெளித்தல், — பறத்தல், — எறிதல், மினுங்குதல், மினுமினுத்தல், தளதளத்தல்.

Scion, *m.* நாட்டுகிற —, தளிர், கிளை, மிலாறு.

Sciona, merlan indien, கிழக்கன், கிழக்கி, கிழக்கர்.

Scioptique, *adj.* கண்ணாடிபோட்ட துளையுள்ள (மரஉண்டை.)

Sciotte, *f.* கைவாள்.

Scirpe, *m.* Scirpus. கோரை, நாணல்; sa racine கோரைக்கிழங்கு, ஆட்டாங்கோரை; — antarticus மூக்கொற்றிக்கோரை; — articulatus ஈருள்ளிக்கோரை; — calamoides பிரப்பங்கோரை; — grossus ஓமற்கோரை; — miliaceus சீப்பங்கோரை; — plantagineus நெரிநெட்டி, — நெட்டிக்கோரை; — polytricoides மயிர்க்கோரை; — spiralis கொட்டிக்கோரை; — tricholomus சிற்றுட்டாங்கோரை. *V.* au mot cyperus plusieurs espèces de கோரை.

Scissile, *adj.* எளிதாய்ப் பிளக்கிற, — பிரிகிற.

Scission, *f.* பிரிவினை, பிரிவு, வகுப்பு, அநுமதிவிகற்பம், குழப்பம், சச்சரவு, மனமுறிவு.

Scissionnaire, *adj. et s.* பிரிவினையான, — க்காரன், — உண்டாக்குகிறவன்.

Scissure, *f.* பிளப்பு, வீறல், எலும்பின் குழி.

Scitaminées, *f. pl.* ஓர் பூண்டினம்.

Sciure, *f.* அறுப்பு —, மர —, வாள்தூள், அரிதுகள், அரிபொடி.

Sciuridés, *m. pl.* அணில் முதலான சிறு மிருகங்களினம்.

Sclérophthalmie, *f.* காய்ப்புகூடிய கண்ணோய்.

Sclérops, *m.* ஓர் முதலை.

Sclérose, *f.* வயதை முன்னிட்டுத் தசைகள் உறுதியாகுதல்.

Sclérotique, *f.* வெளிப்புறமான கண்சவ்வு.

Scolaire, *adj.* பள்ளிக்கூடத்துக் கடுத்த: année — படிப்புவருஷம்.

Scolarité, *f.* கல்லூரி மாணாக்கருரிமை.

Scolastique *adj.* பள்ளிக்கூடத்து, சாஸ்திரசாலையின், — பயிற்சியின். || *f.* பள்ளிக்கூடத்துக்குரிய வேதநூல். || *m.* பள்ளிக்கூடத்துக்குரிய நூலாசிரியன், கற்போன், படிப்பிப்போன்.

Scolastiquement, *adv.* பள்ளிக்கூட விதமாய்.

Scoliaste, *m.* உரையாசிரியன், வியாக்கியானம் பண்ணுகிறவன்.

Scolie, *f.* உரை, வியாக்கியானம், விபரம், புறனடை. || குளவிபோன்ற ஓர் வண்டு. || தீனிப் —, விருந்தின் பாட்டு. || *m.* முன் வசனவிவரம், — துடர்ச்சி.

Scoliose, *f.* முள்ளெலும்பின் கோணல்.

Scolopax, *adj.* கூர்ந்த நெடுமூக்குள்ள. || *m.* (bécasse) உள்ளான்; — madraspatana கோரையுள்ளான்; — gallinago கோழியுள்ளான்.

Scolopendre, *f.* ஓர் பூண்டு, ஓராயிரக்காலி.

Scombre, *m.* Scomber, அயலை, வன்சிர மீன்; — aculeatus ஒட்டகப்பாரை, ஒட்டாம்பாரை.

Scopolia aculeata, மிளகரணை.

Scorbut, *m.* வாய்க் கரப்பான், சொறி, கரப்பான்.

Scorbutique, *adj. et s.* வாய்க் கரப்பான் தன்மையுள்ள, — கரப்பானுக்கடுத்த, — கரப்பானுள்ள, — வன், — வள்.

Scorie, *f.* களிம்பு, கிட்டம், அழுக்கு, கிட்டக்கல், கன்மஷம்.

Scorification, *f.* களிம்பாக்குதல், உலோகம் புடமாக்குதல், தம்புதல்.

Scorificatoire, *m.* களிம்பாக்குவதற்கான பாத்திரம்.

Scorifier, *v. a.* உருக்கின உலோகத்தின் களிம்புபிரித்தல், களிம்பாக்குதல், தம்புதல்.

Scorpène, *f.* தேளி.

Scorpion, *m.* தேள், பறப்பன், நளி, கொட்டுவாள், தெறுக்கால், நட்டுவாக்காலி, விருச்சிகம், அவஸீனம், சதுக்கினி. || கல்லும் வேலு மெறியும் பொரியந்திரம், ஓர் வேதனை யெத்தனம். || le signe du — விருச்சிக விராசி : — de mer, *V.* Scorpène.

Scorsonère, *f.* ஓர் கீரை. தண்ணீர்விட்டான், வீராணிக்கிழங்கு.

Scotie, *f* தூணடிக்குழைவு.

Scotisme, *m.* டன்ஸ் ஸ்கோட்டுஸ் என்ற ஞானசாஸ்திரியின் கோட்பாடு, — அபிப்பிராயம் ;

Scotiste, *adj.* டன்ஸ் ஸ்கோட்டுஸ் என்ற ஞான அபிப்பிராயக்காரன்.

Scottish, *f.* ஓர்வகை நடனம்.

Scotodine, *f.* கண்ணிருட்டுமயக்கம்.

Scouffin, *m* கோரைப்பை.

Scribe, *m.* யூதரில் வேதபாரகன், — சாஸ்திரி. || எழுத்தாளி, எழுத்துக்காரன், நீதிஸ்தலத்தினிலெக்கன், இராயசன், கணக்கன், இலேக்கன், வார்ணிகன், வோரகன், வண்ணிகன்.

Scripteur, *m.* அர்ச். பாப்புவின் நிருபம் எழுதுகிறவன்.

Scriptural, e, *adj.* வேதாகமங்களைச் சேர்ந்த விஷயம்

Scrofulaire, *f.* கண்டமாலைக்கு அவுஷதமென்னப்பட்ட ஓர் பூண்டு.

Scrofule, *m.* கண்டமாலை, கண்டகுலை, களகண்டம்.

Scrofuleux, euse, *adj.* கண்டமாலையுள்ள, — வருவிக்கிற. [வளி.

Scrotocèle, *m.* பீசத்திலிரங்கும்

Scrotum, Scroton, *m.* அண்டச்சவ்வு, — த்தோல், அண்டம், பீசம், பொத்தி, — ஸ்தானம், கோசம், முஷ்கம்.

Scrupule, *m.* இல்லாத—, மிதமிஞ்சின —, நியாயமற்ற பாவப்பயம், பாவமோ என்கிற சந்தேகம், வீண்பயம், மனக்கவலை, — சாட்சிக் கண்டனை. || மிகுந்த சுமுத்திரை, மிதமிஞ்சின —, மிகுந்த நுணுக்கம், வெகு சாக்கிரதை. || விளக்கத்துக்குப்பின் நிற்குஞ் சந்தேகம். || ஓர் சிற்றிடை, இருத்தலின் ௨௮௮ பங்குகளில் ஒன்று. || மினுத்து நேரத்தில் ஓர் சின்ன பங்கு.

Scrupuleusement, *adv.* வீண்பாவப்பயமாய், வெகுநுணுக்கமாய், பிரமாணிக்கமாய்.

Scrupuleux, euse, *adj. et s.* வீண் பாவப் பயமுள்ள, பாவமல்லாததைப் பாவமென்றஞ்சுகிற, பாவமோ என்று சந்தேகமுள்ள. நுணுக்கமாய் மனச்சாட்சியநுசரிக்கிற, சுமுத்திரை—, பிரமாணிக்கம்—, நாணயம் —, நுணுக்கம்—, சாக்கிரதையுள்ள. || s. வீண் பாவப் பயமுள்ளவன், — வள்.

Scrutateur, trice, *adj. et s.* பரிசோதிக்கிற, ஆராய்கிற, — வன், — வள், பரீக்ஷகன், அநுமதிச் சீட்டுகளை யெண்ணிப் பரிசோதிக்கிறவன்.

Scruter, *v. a.* பரிசோதித்தல், ஆராய்தல், பரீக்ஷித்தல், நுணுக்கமாய் விசாரித்தல்.

Scrutin, *m.* அநுமதி —, ஆலோசனைச்சீட்டு கொடுத்தல், இரகசியசீட்டுகளால் தெரிதல், — ஆலோசனை கொடுத்தல்.

Sculptable, *adj.* கொத்தத்தக்க, கொத்துவேலைக்குரிய.

Sculpté, *part.* கொத்துவேலையான, கருக்கு—, சித்திரவேலையான.

Sculpter, *v. a.* கொத்துதல், சித்திரித்தல், கொத்து—, கருக்குவேலை செய்தல், சித்திரம் வெட்டுதல், — கீறுதல்.

Sculpteur, *m.* கொத்துவேலைக் காரன், — தச்சன், சித்திர—, சுரூபத் தச்சன், சித்திரன், ஓடாலி, அட்டாலிகாகாரன். || *adj.* கொத்துவேலை செய்கிற.

Sculpture, *f.* கொத்துவேலை, சித்திரவித்தை, சித்திரித்தல், கொத்தப்பட்ட வேலை, — சுரூபம். [நகர்.

Scutari, துற்கிதேசத்தில் ஸ்குத்தரி

Scutiforme, *adj.* கேடயவடிவுள்ள.

Scylla, *f.* சில்ல என்னும் கடற்பாறை.

Scytale, *f* எழுதற்கான தோற்கச்சு, இரகசிய அக்ஷரம். || *m.* ஓர் விஷப் பாம்பு.

Scythes, *m. pl.* ஐரோப்பா ஆசியா கண்ட வடக்கிலுள்ள பூர்வீக சனங்கள்.

Scythie, *f.* அவர்கள் தேசம்.

Scythique, *adj.* ஷை சனத்துக்கடுத்த.

Se, *pro* தனக்கு, தன்னை, தங்களுக்கு, தங்களை, தமக்கு, தம்மை.

Séance, *f.* சங்கத்திலுட்காருஞ் சு

தந்தரம், கூட்டம், சங்கம், ஆலோசனைநேரம், அலுவல்நேரம், இருப்பு, இடம், சித்திரனிடையின்றி வேலை செய்யுநேரம் ; avoir — dans une assemblée சங்கத்தி லிடங்கொண்டிருத்தல் ; ouvrir la — ஆலோசனை துவக்குதல்; lever la — ஆலோசனை முடித்துப் பிரிதல் ; faire un portrait en trois — ஓர் சித்திரத்தை மூன்றுவிசையாய் எழுதுதல்.

Séant, *m.* படுக்கையி லுட்காருந் தன்மை. ‖ *adj.* கூடி—, இருக்கிற. ‖ தக்க, யோக்கிய.

Seau, *m.* தண்ணீர்மொள்ளுங் —, கைந்நீர்த்தொட்டி, ஏற்றச்சால், அதுகொண்டது:— de cuir pour arroser சீலாப்புட்டி, ஆம்பி; pleuvoir à seaux தாரைதாரையாய் மழைபெய்தல்.

Seaugeoire, *f.* உப்புவாருங் கருவி.

Sébacée, *adj. f.* கொழுப்புத் தன்மையுள்ள. [வருகிற.

Sébacique, *adj.* கொழுப்பினின்று

Sébate, *m.* கொழுப்புப் புளியும் வேறே பொருளுங்கலந்த உப்பு. [லி.

Sébesténier, *m. ou* cordia, நறுவி

Sébeste, *m.* நறுவிலிப் பழம்.

Sébifère, *m.* கொழுப்புபோன்ற எண்ணெய் தருமரம்.

Sébile, *f.* மரவட்டில், — கிண்ணி.

Sec, *m.* காய்ச்சல், உலர்வு, காய்ந்த புல் : tirer au — வற்றிப்போக விறைத்தல்; mettre au — காய்ந்த புல்லுபோடுதல்; à — தண்ணீர்—, பணம்—, மறுமொழியில்லாமல். ‖ *adv.* தண்ணீரின்றி, கண்டிப்பாய்.

Sec, sèche, *adj.* காய்ந்த, உலர்ந்த, வறண்ட, வற்றின, வாடின, வதங்கின, ஆறின, காய்வு—, வறட்சியுள்ள, சுறட்டையான, வதவலான, ஈரம்—, சாரம் —, மழை—, தண்ணீரற்ற. ‖ தயை—, உருக்கமற்ற, கண்டிப்பான. ‖ சிறப்பற்ற, வெறும், வெற்று. ‖ மெலிந்த, இளைத்த, இளப்பமான : à pied — கால் நனையாமல் ; voir d'un œil — உருக்கமற்ற—, கண்ணீரில்லாதகண்ணுற் பார்த்தல்; pain — வெறுமுரொட்டி, habit — பழையவஸ்திரம் ; coup — சடுதியாயடித்த அடி ; argent — உரொக்கமான பணம் ; muraille de pierres — சாந்தற்ற கற்சுவர்.

Sécable, *adj.* அறுக்கத்தக்க.

Sécant, e, *adj.* அறுக்கிற, குறுக்கான. [சம்.

Sécante, *f.* குறுக்குவரி, திர்க்க பு

Sécateur, *m.* தழைக்கத்தரி.

Sécession, *f.* நீங்கல், விலகுதல்.

Séchage, *m.* காய்விப்பு.

Sèche, *f.* கணவாய்மீன், நீண்ட நாக்கப்பூச்சி, வடிவிலேதோன்றுங் கடற்பாறை : os de — கணவாய் ஓடு, கடனுரை, பேனகம்.

Séché, *part.* காய்ந்த, உலர்ந்த, காயவைத்த.

Sèchement, *adv.* காய்ந்தவிடத்தில், உலர்வாய், வறட்சி—, காய்வாய். ‖ கண்டிப்பாய், சிறப்பின்றி.

Sécher, *v. a.* காய்வித்தல், வறட்டுதல், ஆற்றுதல், உலர்த்துதல், உணத்தல், வாட்டுதல், வதக்குதல், வற்றச்செய்தல், வற்றடித்தல் ; — les pleurs கண்ணீராற்றுதல். ‖ *v. n.* காய்தல், உலர்தல், வாடுதல், ஆறுதல், வற்றுதல், வறளுதல், சுஷ்குதல், வெண்டுதல், இஞ்சுதல், உணங்குதல், உறண்டுதல். ‖ சோர்தல், மெலிதல், இளைத்தல். ‖ se — காய்தல், காய்ந்துபோதல், உலர்தல், வறளுதல், உணங்குதல், வாடுதல், வதங்குதல், வற்றுதல்.

Sécheresse, *f.* காய்வு, உலர்வு, காய்ச்சல், வரட்சி, வரள்வு, உலர்ச்சி, மழையின்மை, — ஒறுப்பு, அநாவிருஷ்டி, சுஷ்கம், சுஷ்கத்துவம். ‖ நேசம் —, பற்றுதலின்மை, கண்டிப்பு. ‖ சிறப்பு — இலக்கணமின்மை, ஆறுதலின்மை. ‖ செழிப்பின்மை, மலடு, வறடு : — spirituelle ஞானவரட்சி, ஆறுதலின்மை.

Sécherie, *f.* Séchoir, *m.* காயவைக்குமிடம்.

Second, e, *adj.* இரண்டாம், பிந்தின, வேறு, இரண்டாம் அந்தஸ்தில் — வரிசையிலுள்ள : eau — தண்ணீர் கலந்த நெருப்புத்திராவகம் ; — noces இரண்டாங் கலியாணம், மறுவிவாகம் : de — main வேறொருவனைக்கொண்டு: — jour de la lune துதியை, துவிதியை.

Second, *m.* இரண்டாந் தலைவன், — உத்தியோக்ஸ்தன்,— தட்டு, துவியம், தனிப்போர் —, துணைவன், உத

வியாள், தேடினவார்த்தையி னிரண்டாமசை, இரண்டாவ திருக்கிறவன், இரண்டாம் வகுப்பு மாணாக்கன்: en — இரண்டாமந்தஸ்தில்; sans — நிகரற்ற, — இல்லாத, நிகராத.

Secondaire, *adj*. அப்பிரதான, பிரதானமல்லாத, இரண்டாம், இரண்டாவதான, உதவி—, துணையான, உப: planète — உபகிரகம். ‖ *m*. பதிலாளி.

Secondairement, *adv*. பிரதானமல்லாத விதமாய், துணை—, உதவியாய்.

Seconde, *f*. (பள்ளிக்கூடங்களில்) இரண்டாம் வகுப்பு. ‖ ஆராயு மிரண்டாம்பிரதி. ‖ செகொந்து, மணியில் —, பாகையில் ௩௬௦௦-ம்பங்கு, விகலை, தற்பரை, நொடி. ‖ இரு அரைச்சுரத்திடை மாத்திரை. ‖ (சிலம்பத்தில்) ஓர் வித குத்து,— அடி.

Secondement, *adv*. இரண்டாவது, இரண்டாவதாக.

Seconder, *v. a*. உதவி —, ஒத்தாசை—, துணைசெய்தல்,— ஆயிருத்தல், ஆதரித்தல், அநுக்கிரகித்தல், உபகரித்தல், அநுகூலப்படுத்துதல். ‖ se — *V*. s'entraider.

Secouement, Secoûment, *m*. ஆட்டம், அசைவு.

Secouer, *v. a*. அசைத்தல், ஆட்டுதல், குலுக்குதல், உலுக்குதல், ஒலுக்குதல், துலுக்குதல், அலைத்தல், அதிர்த்தல், நடுக்குதல், சாடுதல். ‖ உதறுதல், குதறுதல், தட்டுதல், தள்ளுதல்: — un tapis சமுக்காளந் தட்டுதல்:— les esprits புத்திகளை மூட்டுதல், — தூண்டுதல்; — le joug நுகத்தடி புரட்டுதல், அடிமைத்தனந் தள்ளுதல். ‖ se — மிகவு மசைதல்,— அலைதல்,— முயலுதல், பிரயாசப்படுதல், வருந்துதல், தன்னைப் பேணாதிருத்தல்.

Secoueur, *m*. ஆட்டுங் —, உடைக்குங்கருவி.

Secourable, *adj*. சகாயமான, உதவி செய்யத்தக்க, ஆதரவான, ஆதரிக்கிற, ஒத்தாசைசெய்ய விரும்புகிற. ‖ ஒத்தாசை—, உதவிபெற — அடையத்தக்க.

Secourir, *v. a*. உதவி—, ஒத்தாசை —, துணைசெய்தல், ஒத்தாசையாக வருதல், உதவுதல், உபகரித்தல், ஆதரித்தல், காத்தல், அநுக்கிரகித்தல். ‖ se — ஒருவனொருவனுக்கு ஒத்தாசையாயிருத்தல், தனக்குத்தானே உதவிசெய்தல்.

Secours, *m*. உதவி, ஒத்தாசை, சகாயம், துணை, ஆதரவு, தஞ்சம், உபகாரம், அநுக்கிரகம், அநுகதம், உபகரணம், உபக்கிரகம், பிரகரம், உபரால், மதத்து. ‖ துணைப்படை.

Secousse, *f*. அதிர்ச்சி, குலுக்கு, அசைவு, ஆட்டம், நடுக்கம், தாக்கு, அலைவு, பிரசலிதம், விலோடனம்.

Secret, ète, *adj*. இரகசிய, இரகசியம்—, இராசியம்—, மறைவு—, புதைப்பொருளான, அறியப்படாத. ‖ இரகசியங்காக்கிற,— வெளிப்படுத்தாத, அமசடக்கியான.

Secret, *m*. இரகசியம், இராசியம், மறை, புதை—, மறைபொருள். ‖ அந்தரங்கம், அந்தரங்கவிடம், உள்ளாந்தரங்கம், குய்யம், சனாந்திகம், திரோகிதம், பேது. ‖ இரகசியமான வயணம், சூத்திரம், சூக்ஷம், உபாயம், வித்தை, உளவு: garder le — இரகசியங்காத்தல்; mettre dans le — இரகசியம் ஒப்பித்தல்; mettre au — அந்தரங்க விடத்தில் அடைத்தல்; en — இரகசியமாய்.

Secrétaire, *m*. இராயசன், இராயசக்காரன், சம்பிரதி, எழுத்தாளி, கணக்கன், இலிகிதன், இடாப்புமுதலியதின் விசாரணைக்காரன், சவாப்நவீஸ், காரியதரிசி. ‖ காகிதப்—, எழுதும்பெட்டி. ‖ ஓரிராசாளி; — d'état மந்திரி.

Secrétairerie, *f*. இராயசரறை வீடு, இராயசர் கூட்டம்.

Secrétariat, *m*. சம்பிரதி—, இராயசனுத்தியோகம்,— உத்தியோக காலம், — அறைவீடு,— சாதனசாலை, இராயசம்.

Secrète, *f*. (பூசையில்) மெதுவாய்ச் சொல்லுஞ்செபம்.

Secrètement, *adv*. இரகசியம்—, மறைப்பு—, மறைவு—, கபடம்—, திருட்டாட்டமாய், உளவாய், கமுக்கமாய், காணாமல், ஏகாந்தமாய், தனியே.

Sécréter, *v. a*. கழித்தல், வடித்தல். ‖ se — கழிதல், வடிதல், பொசிதல்.

Sécrétion, *f*. கழிவு, வடிதல், பொசிவு. ‖ *pl*. மலம், மலச்சுத்தி.

Sécréteur, Sécrétoire, *adj*. கழிக்கிற, வடிக்கிற.

Sectaire, *m.* பதிதமதத்தான், சமபத்தான், மதாநுசாரி, பின்னகன் : — de bonne foi மதாபிமானி.

Sectateur, *m.* மதத்தான், சமயத்தான், சமயி, மார்க்கத்தான், அநுசாரி, சீஷன், பாரிசத்தான், கட்சியான்.

Secte, *f.* மதம், சமயம், மார்க்கம், பாசண்டம், பின்னகம்.

Secteur, *m.* இருகதிருள் வளையப் பங்கு, கிரக உயரநிதானிக்குங் கருவி.

Section, *f.* பிரிவு, பங்கு, வகுப்பு, கண்டம், கூறு, சருக்கம். || அறுப்பு, அறுவு, பகிர். || தாலுகா. || பதாதி வகுப்பின் பாதி: point de — இருவரி—, இருபரப்பு குறுக்கிடுமிடம் ; — conique குவிந்தவடிவின் பரப்பினால் அறுப்பு.

Sectionner, *v. a.* பலபாகங்களாகப் பிரித்தல்.

Séculaire, *adj.* ௱-வருஷத்துக்குப் பின் வருகிற,— வருஷமுள்ள, சதாத்த, மிகவும் பழைய, பூர்வீக, அநேக நூறாண்டு துவக்கி நிற்கிற : année — நூறாமாண்டு.

Sécularisation, *f.* Séculariser, *v. a.* உலோகத்தன்மை — முறைப்படுத்துதல், திருச்சபையதிகார மழித்து உலோக அதிகாரத்துக் குட்படுத்துதல்.

Sécularité, *f.* கோவிற் காணியாக்ஷிக்கடுத்த உலக துரைத்தனம், இகார்த்தம்.

Séculier, ère, *adj.* உலோகத்திற் சீவிக்கிற, உலோகத்து, சந்நியாசியல்லாத : bénéfice — உலோகத்திற் சீவிக்கிற குருக்களுக்குரிய உம்பளிக்கை ; le bras — உலோக அதிகாரம் ; magnificence — உலோகத்துக்குரிய சம்பிரமம். || *m.* உலோக மனிதன்.

Séculièrement, *adv.* உலோக முறையாய், உலோக மனுஷரைப்போலே, — மனுஷர் முறையாய்.

Secundo, *adv.* இரண்டாவது.

Sécurité, *f.* அஞ்சாமை, அமரிக்கை, அபயம், பயம்—, கவலை—, விசாரமில்லாமை.

Sedan, பிராஞ்சிராச்சியத்தில் செதான் நகரம். || *m.* அதிற்செய்யும் புடைவை.

Sédanoise, *f.* ஓர்வித அச்சக்ஷரம்.

Sédatif, ive, *adj.* தணிக்கிற, ஆற்றுகிற. || *m.* தணிக்கிற—, உபசமன மருந்து.

Sédation, *f.* சரீரத்தில் யாதோர் இந்திரியம் மிதமிஞ்சினவிதமாய் வேலைசெய்யாதபடி மட்டுப்படுத்துதல்.

Sédentaire, *adj.* வீட்டிலே தங்குகிற,— ஆகிற, உட்கார்ந்த தன்மைக்குரிய, நிலையுள்ள.

Sédentairement, *adv.* நிலையுள்ள விதமாய், அசையாமல்.

Sedia-gestatoria, *f.* சில விசேஷ சடங்குகளின்போது அர்ச். பாப்பானவரை உட்காரவைத்துத் தூக்கிக்கொண்டு போகும் நாற்காலி.

Sédiment, *m.* வண்டல், மண்டி, அடி, சேறு, மஷ்டு, அடையல், கற்கம், விலபனம். || கடலிடைந்து விட்டபொருள்.

Séditieusement, *adv.* கலாபனை—, குழப்பமாய், கலகக்காரனாய்.

Séditieux, euse, *adj.* கலாப, கலக, குழப்பத்துக்குரிய,— ச்சார்புள்ள, கலாபனையுள்ள,— குணமுள்ள, குழப்பத்துக்கேவுகிற : discours — குழப்பத்துக்குரிய பிரசங்கம் ; les flots — கொந்தளிக்கிற அலைகள். || *s.* கலக—, குழப்பக்காரன்,— பிரியன்,— குணன்.

Sédition, *f.* குழப்பம், கலாபம், கலகம், கலாபனை, கலாதி, புரைசல்.

Sedlitz, தாதோற்பவ நீராற் பேர்பெற்ற போயேன்தேசத்தில் செத்லிஸ் நகர் : eau de — விரேசனத்துக்குரிய ஒருநீர்.

Séducteur, trice, *adj.* பாவத்துக்கு—, தின்மைக்கு இணக்குகிற,— உட்படுத்துகிற, கெடுக்கிற, கற்பழிக்கிற. || மயக்குகிற, மருட்டுகிற, பிரியப்படுகிற. || *s.* கெடுக்கிறவன், கற்பழிக்கிறவன், எத்தன், மருட்டி, மோசக்காரன், ஆட்பிடியன், இடக்கன், தகல்பாசி.

Séduction, *f.* பாவத்துக்கு இணக்குதல், தின்மைக் குட்படுத்துதல், கற்பழிப்பு, மோசம், எத்து, வஞ்சிப்பு, கெடுதல், தகல். || மயக்கு, மருட்டு, மருட்சி, பகட்டு, நயப்பு, பிரியம், இன்பம், பிரலோபனம், விமோகனம், விலோபிதம்.

Séduire, *m.* மயக்குதல், மருட்டுதல், பகட்டுதல், மோசம் பண்ணுதல், வஞ்சித்தல், எத்துதல், பசப்புதல், காயகம் பண்ணுதல், பாவத்துக்கு—, தின்மைக்கு இணக்குதல்,— உட்படுத்துதல்,

கெடுத்தல், கற்பழித்தல். || பிரியப்படுதல், இஷ்டப்படுதல். || கைக்கூலி கட்டுதல், இலஞ்சத்தாற் கெடுத்தல்.

Séduisant, e, *adj.* மயக்கத்தக்க, பிரியப்படுகிற.

Séduit, *part.* மயங்கின, இணங்கின.

Séeland, பல்த்திக்கு கடலில் சேலான் தீவு.

Segala, *f.* ஓர்வகை கோதுமை விளையும் நிலம்.

Ségétal, e, *adj.* பயிரிடத்தில் விளைகிற.

Segment, *m.* விருத்தகண்டம், விருத்தாமிசம், விருத்தத்துக்குங் குறுக்குவிட்டத்துக்கு முள்ளிடைப்பங்கு.

Segmenter, *v. a.* விருத்த கண்டங்களாய்ப் பாகித்தல்.

Ségovie, எஸ்பஞ்தேசத்தில் செகோவி நகரம். || *f.* எஸ்பஞ்தேசத்து ஆட்டுமயிர்.

Ségrairie, *f.* பொதுக்காடு.

Ségrais, *m.* தனிச் சிறுகாடு, பெரிய காட்டின் பங்கு. [காளி.

Ségrayer, *m.* பொதுக்காட்டுப் பங்

Ségrégation, *f.* தனியே வைத்தல், விலக்கம்.

Seiche, *f.* *V.* Sèche, கணவாய்மீன்.

Séide, *m.* மருளனான கொலைபாதகன். [தின் தானியம், அதின் மாவு

Seigle, *m.* ஓர்வித கோதும்பை, அ

Seigneur, *m.* ஆண்டவன், கர்த்தன், எசமான், நயகன், நாயன், துரை, இறைவன், பிரபு: vivre en — பெரிய துரையாய்ச் சீவித்தல்; faire le — துரைத்தனம் பாராட்டுதல்: le — சர்வேசுரன், ஆண்டவர், கர்த்தர், சுவாமி; notre — சேசுகிறீஸ்து நாதர். [வை.

Seigneuriage, *m.* கம்பட்டத் தீர்

Seigneurial, e, aux, *adj.* துரையின், பிரபுவின், துரைத்தனத்துக்குரிய, துரைத்தன உரிமை கொடுக்கிற.

Seigneurie, *f.* துரைத்தனம், துரைகாணியாக்ஷி, பட்டப்பேராம்: votre — தேவரீர்.

Scille, *f.* மரத்தொட்டி.

Seime, *f.* குளம்பின் வெடிப்பு.

Sein, *m.* நெஞ்சு, மார், மார்பு. || முலை, ஸ்தனம், தனம், ஸ்தனமண்டலம், அம்மம், ஒஞ்சி, ஆகம், நகிலம், பறம்பு, வக்கணம், வக்ஷோசம். || மடி, உதரம், கருப்பம், அமராசயம், சராயு. || நடு, இடை, உள்ளம், இருதயம். || குடா, குடாக்கடல்: répandre ses aumônes dans le — des pauvres எளியவர்களுக்குப் பிச்சைகொடுத்தல், எளியவர்கள் மடியிற் பிச்சையளித்தல்; donner le — à un enfant பிள்ளைக்குப் பால்கொடுத்தல்; vivre au — de sa famille தன் குடும்பத்தில் சீவித்தல்; le — de l'église திருச்சபை ஐக்கியம்; le — de la gloire மோக்ஷவாசிகளின் வாசம்; dans le — de la mer கடலுள்ளத்தில்.

Seine, *f.* இழுப்புவலை, வீச்சு—, இழுவலை. || சேன் என்னும் நதி: Seine, —inférieure, —et-Oise பிராஞ்சிராச்சியத்தில் மூன்று ஜில்லாக்கள் பேராம்; la — பிராஞ்சிராச்சியத்தில் ஓர் நகர்.

Seinette, *f.* ஓர்வலை.

Seing, *m.* கைபொப்பம்.

Séisme, *m.* பூமிக்குள் உண்டான ஓரியக்கத்தால் ஏற்படும் அதர்ச்சி,

Seizain, *m.* ஆயிரத்தி அறுநூறு-நூற்பாவுள்ள புடைவை.

Seizaine, *f.* ௰௬-நாள் முதலியது, மூட்டைகட்டுங் கயிறு.

Seize, *adj.* பதினாறு, சோடசம். || பதினாறும். || *m.* பதினாறு, பதினாறுந்தேதி, கசத்துப் பதினாறுபங்கில் ஒன்று: les — ஓர் கட்சியார்.

Seizième, *adj.* பதினாறும். || *m.* பதினாறும் பங்கு, பதினாறில் ஒன்று. || s. பதினாறும் வரிசையிலுள்ளவன், — வள். || *f.* ஒரே நிற ஆறு சூதுகடுதாசி துடர்ச்சி.

Seizièmement, *adv.* பதினாறுவது.

Séjour, *m.* வாசம், இருப்பிடம், இருப்பு, இருக்கை, வீடு, பரிவாசம், சஞ்சரிப்பு: l'humide — கடல்; le céleste — மோக்ஷம்.

Séjourner, *v. n.* வாசம் பண்ணுதல், தங்குதல், சஞ்சரித்தல், நிற்றல். வசித்தல், நிலைத்தல்.

Sel, *m.* உப்பு, இலவணம், உவர். || சுவை, சூக்ஷபரியாசம், யுத்தி. || புளிப்புங் காரவஸ்துவுங் கூடியகலப்பு: — alcalin காரணசத்தி; — ammoniaque மணல் நிலவுப்பு, காபினி, நவக்ஷாரம், சத்திக்கூற்றோன், சலக்கி, சலக்கு; — corrosif காரல்வணம்; — de cuisine, commun கறியுப்பு, சரவாச்சம், சீரி

சம்: — gemme சிந்துரதம், சிந்துரத்தம், — லவணம்; — de mer கடலுப்பு, சமுத்திர லவணம்; — de roche இந்துப்பு, சந்திர லவணம், சிலம், நாதேயம், சயிந்தலவணம், சயிந்தவம்; — d'urine அமரியுப்பு, கூரிலவணம், சடவுப்பு, சலக்கூர்மை; — supérieur கம்பியுப்பு, கல்லுப்பு; respirer des — சில உப்புகளின் ஆவியை முகருதல்.

Sélam, Sélan, *m.* குறிப்பர்த்தமாய் அடுக்கின புஷ்பங்கள்.

Select, *adj.* முதற்றரமான, மிகமேலான.

Sélection, *f.* ஜீவராசியில் அல்லது தாவரவர்க்கங்களில் சிறந்த இனங்களைத் தெரிந்துகொண்டு அவைகளை விருத்திபண்ணிப் பலுகவைக்கும் முறை.

Sélénite, *f.* புடமிட்ட கந்தக புளிப்புஞ் சுண்ணாம்புமுள்ள கலப்பு.

Séléniteux, euse, *adj.* ஷை கலப்புக்கடுத்த.

Sélénium, *m.* பாஷாணம் போன்ற உலோகம்.

Sélénographie, *f.* சந்திர வருணிப்பு.

Sélénographique, *adj.* சந்திர வருணிப்புக் கடுத்த.

Sélénostate, *m.* சந்திரன் பார்ப்பதற்குரிய கருவி.

Séleucide, *m.* விட்டிற்பறவைபகைக்கும் பக்ஷி. ‖ *m. pl.* சீரியதேசத்தை ஆண்ட செலுக்குஸ் என்பவன் சந்ததியாரான விராசாக்கள்; ère des — கிறீஸ்துவருஷத்துக்கு முன் ௩௱௰௨-ம் வருஷத்தில் துவக்கினயுகம்.

Self-Government, *m.* சுயாளுகை.

Selle, *f.* சீனி, கல்லணை, கலணை, சேணம், பக்கரை, பரம், பரியயணம், படை, பண், பல்லம். ‖ மரவாசனம். ‖ மலசுத்திக்குரிய நாற்காலி, மலசுத்தி, விரேகம், ஒருவிசையாய்க் கழித்த பொருள்: — pour les bêtes de somme, *V.* Bât; — pour les éléphants, espèce de siège ou pavillon தவிசு, அம்பாரி, இலகடம், அவுதா, பலகாரம்; — à tous chevaux எல்லாக் குதிரைகளுக்குரிய சீனி, எல்லாப் பிரசங்கங்களுக்குரிய பொதுவிஷயம், சகல நோய்களுக்குரிய மருந்து; être bien eu — குதிரையில் பலமாய் உட்கார்ந்திருத்தல், உத்தியோகத்திலுறுதியாயிருத்தல்; courir une ou deux — ஒன்றிரண்டு அஞ்சலோடுதல்; la première — இலாயத்தின் முதற்குதிரை; aller à la — மலபாதைக்கு—, மலோபாதைக்கு—, விசாலத்துக்கு—, வாய்க்காலுக்கு—, குளத்துக்கு—, வெளிக்கு—, இரண்டுக்குப் போதல், விஷ்டித்தல், மலங்கழித்தல், மலசுத்தி பண்ணுதல், பேலுதல்.

Sellé, *part.* சீனிகட்டின, சேணம் வைக்கப்பட்ட.

Seller, *v. a.* சீனி—, சேணம் போடுதல், — கட்டுதல். ‖ se — இறுகுதல், கடினமாதல் (நிலம்).

Sellerie, *f.* சீனிக்கிடங்கு, — வியாபாரம், — தொழில், ஒருவன் கொண்ட குதிரைச் சாமானெல்லாம்.

Sellette, *f.* மணை, வினவப்பட்டவர் —, குற்றவாளி மணை, — ஆசனம். ‖ சிறுசீனி. ‖ சேறு—, சப்பாத்துத் துடைக்க வூன்றும்பெட்டி. ‖ ஒருவன் மணையிலுட்காரும் விளையாட்டு. ‖ கலப்பைக் கட்டையின் தாங்கி: tenir sur la — இரகசியமறிய மிகவும் வினவுதல்.

Sellier, *m.* சீனிக்காரன், சேணஞ்செய்கிறவன்.

Selon, *prép.* படியே, தக்கது, போலே, தக்கபடி, தக்கதாய்: — toute apparence தோன்றுகிறதுபோலே; dépenser — sa bourse தனக்கிருக்கிற பணத்துக்குத்தக்கது செலவுசெய்தல் — moi என்னெண்ணத்தின் படியே; c'est — சமயத்துக்குத் தக்கதாம்.

Seltz, தாதோற்பவ நீருள்ள பிராஞ்சிராச்சியத்தில் செல்ஸ் நகர்: eau de — ஓரிலவணசார நீர், *soda water*.

Semaille, *f.* விதைப்பு, — காலம், விதைத்த விதை.

Semaine, *f.* வாரம், கிழமை, எழுநாளளவு, அப்தா, ஓர்வாரத்து வேலை, — கூலி, — செலவு: être de — வாரத்து அலுவல் செய்திருத்தல்; — sainte அர்ச். வாரம், பெரியகிழமை, அதின் பிரார்த்தனைப் புஸ்தகம்; prêter à la petite — பெரிய வட்டிக்குக் கொஞ்ச காலத்துக்குக் கடன் கொடுத்தல்.

Semainier, *m.* சரியான எழு பொருட்சேர்க்கை.

Semainier, ère, s. வார முறைக்காரன், — காரி, — உடையவள்.

Semaison, *f.* விதைப்புகாலம்.

Sémaphore, *m.* கப்பற்செய்தி தெளிவிக்குஞ் சூத்திரம்.

Sémaphorique, *adj.* செய்திதெரிவிக்குஞ் சூஸ்திர சம்பந்தமான.

Semblable, *adj. et s.* ஒத்த, சரி—, நிகர்—, ஒப்பு—, இணை—, சமானமான, சரியொத்த, போன்ற, இப்படிக்கொத்த, இப்படிப்பட்ட: et autres choses — முதலானவை, இத்தியாதி. || s. ஒத்தவன், சரியொத்தவன்,— வள்.

Semblablement, *adv.* சரியாய், போல, சமானமாய், ஒத்தவிதமாய்.

Semblant, *m.* சாயல், தோற்றம், சாடை: faire — சாடைகாட்டுதல்; ne faire—de rien தன் கருத்து மறைத்தல், வெளியே ஒன்றுங் காட்டாமல்.

Sembler, *v. n.* தோன்றுதல். காணப்படுதல், காணுதல்; ce me semble எனக்குக் காணுது, தோன்றுகிறதுபோலே: si bon vous semble உமக்குப் பிரியமிருந்தால்.

Semecarpus anacordium, சேரான், எரிமுகி, sa noix dite சேங்கொட்டை ou சேரான் கொட்டை sert à marquer le linge.

Séméiologie, *f.* வியாதிக் குறிப்பு விளக்கம்.

Séméiologue, *m.* வியாதிக்கூறு கண்டுபிடிக்கிறவன்.

Semelle, *f.* அடி, அடித்தோல், அட்டை, கால் மேல்சோட்டினடி, அதில் வைக்கும் பலவகைத்துண்டு, காலளவு, தூலவுதவிக் கட்டை, மூட்டுக்காலுக்குக் கீழ்போடுங் கட்டை; battre la — வெப்பமாவதற்குத் தன்கால் வேறொருவன்காலோடு தட்டுதல்; il a sauté 12 —௰௨-காலளவைக் குதித்தான்.

Semence, *f.* விதை, விரை, வித்து, விச்சு, கொட்டை, வீசம். || இந்திரியம், விந்து, சுக்கிலம், இரோதசு, தாது, வித்து. || காரணம், மூலம். || சிர்ருணி. || முளை, அங்குரம்:—de perles அணுமுத்து;— de diamants மிகவுஞ் சிறியவைரம்.

Semen-contra, (*sous-entendu* vermes), *m.* வயிற்றுப்பூச்சிகளைக் கொல்லுகிற பல பூண்டுகளின் விதை.

Semé, *part.* விரைத்த, நிறைந்த.

Semer, *v. a.* விரைத்தல், விதைத்தல், வித்திடுதல். || பரப்புதல், சிதறுதல், பொழிதல், நிறைத்தல். || மூட்டுதல், கிளப்புதல்:— l'argent தாராளமாய்ப் பணங்கொடுத்தல், இரைக்கப் பணம்பொழிதல்;— la discorde சச்சரை எழுப்புதல்.

Semestre, *m.* ஆறுமாதம்,— மாசவட்டம், அரைவருஷம், அத்தார்த்தம், அயனம், ஒவ்வோராறுமாசத்துக்குப் பின்வரும் வருமானம்,— சம்பளம், ஆறுமாசவிடுதலை,— விடுதலை பெற்றவன்,— விடுதலைபெற்ற அரைப்பட்டாளம். || *adj.* ஆறுமாசம் நிலைக்கிற,— சேவிக்கிற, ஆறுமாதத்து.

Semestriel, elle, *adj.* ஆறுமாசத்து, ஒவ்வோர் ஆறுமாசத்திலாகிற.

Semestrier, *m.* ஆறுமாச விடுதலைபெற்றவன்.

Semeur, euse, *adj. et s.* விதைக்கிறவன், பரப்புகிறவன்.

Semi, *préf.* (சேர்க்கைச் சொற்களில்) அரை, பாதி, அரைவாசி.

Semi-circulaire, *adj.* அரைவட்டவடிவுள்ள.

Semi-double, *adj.* அரைவாசி யிரட்டையான (புஷ்பம்); fête — சங்கீதஞ் சேர்வசன மிரட்டிக்காத திருநாள்.

Semi-flosculeux, euse, *adj.* அரைப்பூங்கொத்துள்ள.

Sémillant, e, *adj.* சுறுக்கு—, ஆட்டமுள்ள. [ரன் வடிவுள்ள.

Semi-lunaire, *adj.* அரைச் சந்தி

Séminaire, *m.* கல்விமடம், கல்விசாஸ்திரமடம், குருப்பட்டத்துக்குப் படிக்கிறமடம், கல்விமடத்தார், கல்விமடத்திற் படிக்குங்காலம்: grand — பெரியமடம், வேதசாஸ்திரம் படிக்குமடம்; petit — சின்னமடம், கல்விசாஸ்திரம் படிக்குமடம்.

Séminal, e, *adj.* விதைக்கடுத்த, வித்துக்கடுத்த.

Séminariste, *m.* கல்விமடத்துப் பிள்ளை,— மாணாக்கன்.

Sémination, *f.* விதைசிதறல்,— பரவுதல். [தரிக்கிற.

Séminifère, *adj.* விதை—, வித்து

Séminules, *f. pl.* இலிங்கந் தெரியாத பூண்டுகளின் விதை.

Semi-pélagiens, *m. pl.* பெலழ் என்பவனபத்தங்களில் அரைவாசி அநுசரித்த பதிதர்.

Semi-preuve, *f.* அரையத்தாட்சி, போதாத அத்தாட்சி.

Semi-quartil, ***adj.*** ௪௫-பாகைதூரமுள்ள.

Semi-quintil, ***adj.*** ௩௬-பாகைத் தூரமுள்ள.

Semi-sextil, ***adj.*** ௩௰-பாகைத் தூரமான.

Semis, ***m.*** (செடிமலர் முதலியது) விதைக்கப்பட்ட பாத்தி,— விதைக்கும் விதம், நாறு, நாற்று, நாற்றுங்கால், வான்பயிர்.

Sémite, ***m.*** ஓர்வித பஞ்சு. ‖ *pl.* ***m.*** சேம் என்பவன் சந்ததியார்.

Sémitique, ***adj.*** langues — சேம் என்பவன் சந்ததியார் பேசின பாஷைகள், எபிரேய—அரபிய—கல்தேய—சிரிய பாஷைகள்.

Semi-ton, ***m.*** அரைச்சுரம்.

Semoir, ***m.*** விதைச்சாக்கு, விதைக்குங் கருவி.

Semonce, *f* கண்டனை, எச்சரிப்பு, ஆசாரமுள்ள அழைப்பு, கொடியேற்றவும் நிற்கவுங் கப்பலுக்குச்செய்யும் அறிக்கைக்குறி: faire une—*ou*

Semoncer, *v. a.* எச்சரித்தல், கண்டித்தல், கொடியேற்றவும் நிற்கவுங் கப்பலுக்குக் கட்டளையிடுதல்.

Semondre, *v a.* ஆசாரமாய் வரவழைத்தல்.

Semonceur, Semonneur, ***m.*** வரவழைக்கிறவன்.

Semotte, *f.* தலைவெட்டுண்ட கோவித்துளிர்ப்பு,— துளிர்.

Semoule, *f.* சிறுமணியாய்ப் பிசைந்த மெல்லியமாவு.

Semper-virens, ***m.*** எப்போதும் பச்சையான ஓர் பூஞ்செடி.

Sempiternel, elle, ***adj.*** முடியாத, நித்திய, ஓயாத, ஊழியுள்ள. ‖ s. மிகவுங் கிழவன்,— கிழவி.

Sempiternellement. *f.* ஓர்வித புடைவை.

S'en aller, *v. pro. V.* Aller.

Sénat, ***m.*** அரசாலோசனைச் சங்கம்,— சாலை,— சங்கத்தார், ஆஸ்தானம், ஆஸ்தான—, சேனைச்சங்கம், மேலான நீதிஸ்தலம்.

Sénateur, ***m.*** அரசாலோசனைச் சங்கத்தான்; pas de — கனமான நடை.

Sénatorerie, *f.* அரசாலோசனைச் சங்கத்தான் பட்டம்,— தொழில்,— வாசம்,— காணியாட்சி.

Sénatorial, e, ***adj.*** ஆலோசனைச் சங்கத்தானுக்குரிய.

Sénatorien, enne, ***adj.*** ஆலோசனைச் சங்கத்தார் குலமாகிய.

Sénatrice, *f.* ஆலோசனைச் சங்கத்தான் பெண்சாதி.

Sénatus-consulte, ***m.*** ஆலோசனைச் சங்கத்துக் கட்டளை.

Senau, ***m.*** இருபாய் மரக்கப்பல்.

Séné, ***m.*** நிலவாகை, நில ஆவிரை, நிலாவிரை.

Sénéchal, ***m.*** ஓர்வித நியாயாதிபதி, கூடிய வங்கிஷபதிகளின் தலைவன்.

Sénéchale, *f.* ஷை நியாயாதிபதி — தலைவன் பெண்சாதி.

Sénéchaussée, *f.* ஷை நியாயாதிபதி விசாரணை நாடு,— நீதியாசனம்.

Sénégal, ***m.*** அபிரிக்காவில் செனெகால் என்னும் நதி. *ou*

Sénégambie, *f.* அபிரிக்காவில் செனெகால்-கம்பிய நதிகளுக்குள்ளே யிருக்கிற தேசம்.

Sénégali, ***m.*** செனெகால் தேசத்து ஓர் பக்ஷி.

Senestre, ***adj.*** இடது.

Séneve, ***m.*** கடுகு,— செடி, நசவம், ஐயவி, விம்படம்.

Sénil, Sénile, ***adj.*** கிழப்பிராயத்து, கிழவயதாலாகிற, கிழவயதுக்குத் தக்க.

Sénilité, *f.* கிழவயது, விருத்தாப்பியம்.

Sénir, ***m.*** மூத்தவன், மூப்பன்.

Sennatora ou Cassiatora, தகரை.

Senne, *f.* வலை, இழுவலை.

Sénonnien, enne, ***adj.*** *et* s. சான்ஸ் நகர நாடு. ‖ சான்ஸ் நகரத்து,— நகரக் குடி.

Sens, பிராஞ்சிராச்சியத்தில் சான்ஸ் நகரம்.

Sens, ***m.*** இந்திரியம், இந்தியம், ஐந்திரியம், புலன், புலம், பொறி, கோசரம், இன்பசுகம் ‖ புத்தி, உணர்ச்சி, அறிவு, ஞானம், விவேகம், சுவரணை, கோசரம், அக்கல். ‖ கருத்து. எண்ணம், யோசனை, நினைப்பு, உத்தேசம் ‖ அர்த்தம், பயன், தாற்பரியம், பொருள், அபிதானம், சத்தாநுசாசனம். ‖ பக்கம், புறம்; les 5 — பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன், ஐம்பொறி; donner tout à ses — தன்னிந்திரியங்களுக்குத் திருப்திக்கொடுத்தல், இன்பசுகந் தேடுதல்;

homme de—புத்தியுள்ள மனுஷன், விவேகமுள்ளவன்; — commun, le bon — மெய்ஞ்ஞானம்; — figuré தொனியர்த்தம்; — littéral, பதார்த்தம், விவக்ஷிதம்; à mon — என்னெண்ணத்தின் படியே; mots vides de—அர்த்தமில்லாத வார்த்தைகள்; — dessus dessous கீழ்மேலாக, அலங்கோலையாய், தாட்டுமேட்டு, தாட்டோட்டு;— devant derrière முன்புறம் பின்புறமாக.

Sensation, *f.* உணர்ச்சி, சுவரணை, தோற்றம், புலன், பரிசம், ஊறு, உருக்கம், மனஸகாரம்: faire — மனமதிரச்செய்தல்.

Sensationel, elle, *adj.* மனமதிரச்செய்யும், ஆச்சரியத்துக்குரிய.

Sensé, *adj.* புத்திசாலி, புத்தி—, ஞானம்—, விவேகம்—, நல்லறிவுள்ள, மெய்ஞ்ஞானத்துக்கொத்த.

Sensément, *adv.* விவேகம்—, புத்தியாய்.

Sensibilisable, *adj.* பஞ்சேந்திரியங்களா லுணரக்கூடிய.

Sensibilisateur, trice, *adj.* பிரகாசத்தைக் கவரக்கூடிய.

Sensibilité, *f.* சுவரணை, உணர்ச்சி, சுணை, சொரணை. ‖ இரக்கம், உருக்கம், ஆயத்தி. ‖ நொய்மை, சயிக்காமை. ‖ அற்பவித்தியாசங் காட்டுகிற எளிது.

Sensible, *adj.* தோற்றமான, கண்டிப்புள்ள. பஞ்சேந்திரியங்களுக்குத் தோன்றுகிற,— எட்டுகிற, புலப்படுகிற. ‖ சுவரணை—, புலனுள்ள, எளிதாய் உணருகிற. ‖ இரக்கம்—, உருக்கமுள்ள. ‖ நொய்ய, எளிதாய் நோவுகிற, நோய்க்குரிய, அற்பகஸ்தி சயிக்காத. ‖ தெளிவுள்ள, பிரத்தியக்ஷமான, பலத்த. ‖ அற்பவித்தியாசங் காட்டுகிற.

Sensiblement, *adv.* தெளிவாய், உருக்கமாய், ஆழமாய், மிகவும், வெகுவாய், புலன்களுக்குத் தோன்றுகிறமட்டும்.

Sensiblerie, *f.* மிதமிஞ்சின உருக்கம்.

Sensitif, ive, *adj. et s.* உணர்ச்சி—, சுவரணை—, புலனுள்ள, உணருகிற, புலன்களுக்குரிய,— அடுத்த, ஐந்திரியக.

Sensitive, *f.* சுண்டிர், தொட்டால்வாடி, தொட்டாற் சிணுங்கி, சுண்டில், தொட்டாற் சுருங்கி, வறட்சுண்டி, ஸ்பரிசலச்சை, சுமங்கை, ஆள்வணங்கி, *V.* mimosa pudica ; — bâtarde, *V.* Æschynomene aspera நெட்டி.

Sensorium, *m.* உணர்ச்சி, ஆத்தும நிலை, மூளையில் ஓரிடம், புலாசயம், சேதஹ நிலயம்.

Sensualiser, *v. a.* பஞ்சேந்திரியங்களுக்குத் தகுதியாக்குதல்.

Sensualisme, *m.* இந்திரிய நுகர்ச்சி—, சிற்றின்ப மதம்.

Sensualiste, *m.* ஷை மதத்தான், விஷபாயி.

Sensualité, *f.* இன்பசுகப் பிரியம், சிற்றின்பம், காமம், விஷயோபசேவை, விஷயவாஞ்சை, சலேந்திரியம், சுகாற்சனம், சுகானுபவம், சுகானுபோகம்.

Sensuel, elle, *adj.* இன்பசுகப் பிரியமுள்ள, இன்பம் தேடுகிற, சிற்றின்ப, காமாதுர, பஞ்சேந்திரியங்களுக்கு இன்பமான; homme—சுகியன், சுகானுபோகி, சுகபோகி, சம்போகி, விலாசி.

Sensuellement, *adv.* இன்பசுகமாய்.

Sentant, e, *adj.* உணரும், உணர்ச்சியுள்ள.

Sente, *f. V.* Sentier.

Sentence, *f.* தீர்வை, தீர்ப்பு, தீர்மானம், அறுதிச்சொல், அறுவிதி, நிண்ணயபாதம். ‖ மூதுரை, நீதி—, பழமொழி, வாக்கியம், வசனம், சுலோகம், சூத்திரம்: ne parler que par — எப்போதும் பழமொழி சொல்லுதல்.

Sentencier, *v. a.* தீர்வை யிடுதல்.

Sentencieusement, *adv.* மூதுரை—, நீதிமொழி — சுலோகமாய்.

Sentencieux, euse, *adj.* பழமொழி—, நீதிமொழி—, சுலோகமுள்ள,— ஆய்ப்பேசுகிற, நீதிமொழி—, சுலோக நிறைந்த : ton — எடுப்பான கனங்காட்டுந் தொனி.

Sentène, *f.* நூற்பாவிழைக்கத் துவக்குமிடம்,— சுருள் துவக்கம்.

Senteur, *f.* வாசனை, கந்தம், மணல், களபம்.

Senti, e, *adj.* மிக பலமாய் உணரச் செய்யும், மனதையியக்கும்.

Sentier, *m.* இடுக்க—, சிறு — நெருக்க—, ஒடுக்கவழி,— தடம்,— வெட்டி, சிற்றொழுங்கை, விடங்கர். ‖ வழி, பாதை, நெறி.

Sentiment, *m.* உணர்ச்சி, உணர்வு, அறிவு, சுவரணை. ‖ இரக்கம், உருக்

கம், இளமை, பற்றுதல். || கருத்து, எண்ணம், நினைப்பு, யோசனை, ஆலோசனை, உத்தேசம், தாற்பரியம், அபிப்பிராயம், கோட்பாடு, தீர்மானம். || மோப்பம்: perdre le — சுவரணை கெட்டுப்போதல்;— de haine பகை நினைப்பு; avoir des — நாணயங் கொண்டிருத்தல்; avoir le — de sa faiblesse தன் பலவீனத்தை நன்றாயுணர்தல்.

Sentimental, e, *adj*. மிஞ்சின உருக்கமுள்ள,—காட்டுகிற, உணர்ச்சி நிறைந்த, உணர்ச்சியால் வருகிற. || உருக்கம் தோற்றுவிக்கிற.

Sentimentalement, *adv*. மிஞ்சின உருக்கமான விதமாய்.

Sentimentalisme, *m*. போலியுணர்ச்சி, மனதுருகுவதுபோல் வேஷங்காட்டல்.

Sentimentalité, *f*. போலி மனதுருக்கம்.

Sentine, *f*. கப்பலினடி, கப்பலி லூறுநீர் கூடுமிடம், சாலகம், சாலகிரி, குப்பை, துர்க்குணர் கூடுமிடம், சகல துர்க்குண சேர்மானம்.

Sentinelle, *f*. காவல், காவற்காரன், — சேவகன், பாரி—, சாம காவற்காரன்; காவலாள், தலையாரி, சச்சனம், சேனாரக்ஷன்: mettre en—காவலாக வைத்தல்; être en—, faire — காத்திருத்தல், பதிவிருத்தல், ஒற்றுப் பார்த்தல், காவல் செய்தல்; relever de — ஓர் குற்றத்தைக் கண்டித்தல்.

Sentir, *v. a*. படுதல், அநுபவித்தல். நுகர்தல், (ஐம்பொறிகளால்) கிரகித்தல், பரிசித்தல், மிசைதல். || உணருதல், தெரிதல், அறிதல், கண்டுபிடித்தல், காண்டல். || முகர்தல், மோத்தல், வாசனை பிடித்தல், வாசனை வீசுதல். || சுவை—, உருசியாயிருத்தல், சாயலாயிருத்தல், தோன்றுதல்:—une injure அவமானத்தினால் கஸ்திப்படுதல்; — quelque chose pour quelqu'un ஒருவன் பேரிற் பக்ஷங்கொண்டிருத்தல்; ne pouvoir—quelqu'un ஒருவனைச் சகிக்கக் கூடாதிருத்தல்: faire — முகர—, உணர—, கண்டுபிடிக்கச் செய்தல்; — l'influence de சத்தியால் ஏவப்படுதல்; figures bien senties நன்றாய்த் தோன்றுகிற உருவங்கள்;— le renfermé அடைப்பின் நாற்றம் வீசுதல்;— le gibet தூக்கு மரத்துக்குப் பாத்திரமாயிருத்தல். || *v. n*. மணத்தல், கந்தித்தல், கமழ்தல், வாசனை—, கந்தம் வீசுதல்,— விடுதல், நாறுதல், வாசனித்தல்;— mauvais நாறுதல், நாற்றம்—, துர்க்கந்தம் வீசுதல்; sentir bon கந்தித்தல், கமழுதல், cela ne sent pas bon அது கெடுதலாகும், அது கெடுதலாய் முடியலாம். || *v. unip*. il sent நாற்ற மடிக்கின்றது, வாசனையா யிருக்கின்றது. || se — தன்னை யறிதல், அநுபவித்தல், தன்னிடத்தில் உணர்தல்,— அறிதல், அறியப்படுதல், தோன்றுதல், இன்னம் நோதல்; ne pas se — பரவச மாதல், மயங்குதல்; ne pas se—de joie ஆநந்த பரவசமாதல், சந்தோஷத்தால் தன்னை மறத்தல்; ne pas se — de froid மிகுந்த குளிரால் விறைத்தல்,— திமிர்த்தல்.

Seoir, *v. n*. உட்காந்திருத்தல், இருத்தல். || தகுதல், ஏற்குதல், தக்கதாயிருத்தல், யோக்கியமா யிருத்தல்.

Sépale, *f*. பூமொக்குகளின் பிரிவு, — இதழ்.

Séparable, *adj*. பிரிக்க—, பிரியத்தக்க,— கூடுமான.

Séparateur, trice, *adj*. பிரிவினை செய்யுங் குணமுள்ள.

Séparatif, ive, *adj*. பிரிப்பதற்குரிய, பிரிக்கிற, பெயர்க்கும் பலமுள்ள.

Séparation, *f*. பிரித்தல், பிரிப்பு, பிரிதல், பிரிவு, பிரிவினை, நீக்கம், பிரிநிலை, பிரத்தியேகம், பிரவிசேடம், விகமம், வியோகம், அவியாத்தம், நிம்மந்தனம், பரிச்சித்தி. || பேதம், முறிவு, சச்சரவு, சண்டை. || நடுச்சுவர்: mur de — பிரிக்குஞ்சுவர், பிரிவினை—, சச்சரவின் காரணம்;— de corps கலியாணக்காரரை வீட்டினின்று பிரிக்குந் தீர்வை; — de biens கலியாணக்காரரின் ஆஸ்திகளைப் பிரிக்குந் தீர்வை.

Séparatisme, *m*. ஓரந்தஸ்தைவிட்டு வேறொன்றைத் தெரிந்துகொள்ளும் நோக்கம்.

Séparatiste, *adj. et s*. கட்சிக்காரன், கலாபஞ்செய்யவேணும் என்று அபிப்பிராய முள்ளவன்.

Séparé, ée, *adj*. பிரத்தியேகமான, தனியான.

Séparément, *adv*. தனியே, வேறாய், தனித்தனியாய், ஒவ்வொன்றாய், பிரத்தியேகமாய், அலாயிதா.

Séparer, *v. a*. பிரித்தல், பகுத்தல்,

தவிர்த்தல், கழித்தல், விலக்குதல், நீக்குதல், பெயர்த்தல், பிரத்தியேகமாய் —, தனியே,— தனித்தனியே —, வெவ்வேறாய் வைத்தல், இடத்தல், கடவைப் படுத்துதல், விகண்டித்தல். || விசேஷித்தல், பகுத்தறிதல், ஒழுங்குப் படுத்துதல். || se — பிரிதல், பிரிந்து போதல், ஒருவுதல், கடவைப்படுதல், சிதைந்து —, சிதறிப்போதல், சபை கலைந்துபோதல், விவாக முறித்தல்.

Sépia, *f.* கணவாய் மீனிடுவன்னம், — வன்னப்படம்.

Sépiole, *f.* ஓர் கணவாய்மீன்.

Seps, *m.* குட்டைக்காற் பல்லி.

Sept, *adj.* ஏழு, சப்தம், சத்தம். || ஏழாம். || *m* சப்தம், சத்தம், ஏழென்னு மக்ஷரம், ஏழாந் தேதி—திதி *ou* சத்தமி, ஏழு புள்ளியுள்ள சூதுகடுதாசி.

Septain, *m.* ஏழு பிரிக்கயிறு.

Septane, *f.* ஏழாமுறைக் காய்ச்சல்.

Septante, *adj.* எழுபது, சத்ததி. || *m. pl.* les — எழுபது வியார்த்திகர்.

Septantième, *adj.* எழுபதாம்.

Septembre, *m.* செப்தேம்பர் மாசம் (அதில் ஆவணியும் புரட்டாசியுங் கலந்து வரும்).

Septembrisade. *f.* ஆயிரத்தி எழுநூற்றி தொண்ணூரத்திரண்டாம் ஆண்டில் செப்தேம்பர் மாதத்திலான சிறைப் பட்டவர்களின் சங்காரம்.

Septembriseurs, *m. pl.* ஷை சங்காரஞ் செய்தவர்கள்.

Septemvir, *m.* ஏழதி காரிகளில் ஒருவன்.

Septemvirat, *m.* ஏழதி காரிகளின் பட்டம்,— விசாரணை.

Septénaire, *adj.* ஏழுள்ள. || *m.* ஏழுவருஷ வட்டம்,— காலம், ஏழுவருஷம் படிப்பித்தவன்.

Septennal, e, *adj.* ஏழுவருஷத்தில் ஒருவிசையாகிற.

Septennalité, *f.* ஏழுவருஷ நிலைமை.

Septentrion, *m.* வடக்கு, உத்தரம், வடதிசை,— தேசம்.

Septentrional, e, *adj.* வட, உத்தர, வடதேசத்து, வடக்கிலுள்ள.

Septicide, *adj.* பொருத்து பிரிகிற.

Septicolor, *m.* ஏழுநிறக் குருவி.

Septidi, *m.* (குடியரசு வாரத்தின்) ஏழாம் நாள்.

Septième, *adj.* ஏழாம். || *m.* ஏழு **பங்கில் ஒன்று, ஏழாம் பங்கு,— வகுப்**பின் மாணாக்கன்,— வரிசையிலுள்ளவன். || *f.* கல்லூரியில் ஏழாம் வகுப்பு, ஒரேநிறத்து ஏழு சூதுகடுதாசித் துடர்ச்சி.

Septièmement, *adv.* ஏழாவது.

Septiforme, *adj.* இடைச் சவ்வின் — பிரிவின் தன்மையுள்ள.

Sept-îles *ou* république ionienne, இயோனியன் கடலிலுள்ள ஏழு தீவுகளின் குடியரசு.

Septinsulaire, *adj.* இயோனியன் தீவுகளின்.

Septique, *adj.* அழிவிக்கிற.

Sept-pagodes (les), மாபலிபுரம், மாமல்லபுரம், மாவலிபுரம்.

Septuagénaire, *adj. et s.* எழுபது பிராயமுள்ள. —வன்,— வள்.

Septuagésime, *f.* தபசுகாலத்துக்கு முந்தின மூன்றாஞாயிற்றுக்கிழமை, பாஸ்குதிருநாளைக்கு முன் ஒன்பதாஞாயிற்றுக்கிழமை.

Septuor, *m.* ஏழு குரல் — கருவிக்குரிய சங்கீதம்.

Septuple, *adj.* எழுமடங்கான, — உள்ள. || *m.* எழுமடங்கு,— விசையத்தனை.

Septupler, *v. a.* எழுமடங்காக்குதல், எழுற் பெருக்குதல்.

Sépulcral, e, *adj.* கல்லறைக்குரிய, — அடுத்த. கல்லறையினின்று வருகிறதாகத் தோன்றுகிற: voix — கம்மலான குரல்; figure — வெளுவெளுப்பான உருவம், செத்தமுகம்.

Sépulcre, *m.* கல்லறை, சமாதி, சேமஸ்தானம், கோரி, சித்தியம், பிரோதகிரகம்.

Sépulture, *f.* அடக்கம், புதைத்தல், சவச்சேமம், கல்லறை, அடக்கச் செலவு, அடக்கத்துக்குக் கோவிற் சுதந்திரம். droit de — ஒரிடத்தில் அடக்கச் சுதந்திரம்.

Séquelle, *f.* துடர்ச்சி, கும்பல், துணை.

Séquence, *f.* சுவிசேஷத்துக்கு முன் துடர்பாடல், ஒரேநிறமுள்ள மூன்று சூதுகடுதாசித் துடர்ச்சி.

Séquestration, *f.* அடைவாக வைத்தல், சப்தி, அடைமானமாக வைத்தல், தீர்வையின்றிச் சிறைப்படுத்தல்.

Séquestre, *m.* அடைவு, சப்தி, ஆட்சிவிலக்கு, அடைமானம், ஈடு, ஈடான பொருள். || **அடைவு—, பிணை—, பங்**

தபம் வைத்துக்கொண்டிருக்கிறவன் ; mettre en — *ou*

Séquestrer, *v. a.* அடைவாய்—, அடைமானமாக வைத்தல், ஈடுகட்டுதல், மத்தியஸ்தன் வசத்தில்—கையில் ஒப்பித்தல், ஆட்சி மறித்தல், சப்தி பண்ணுதல், பத்திரமாய்—, தனியேவைத்தல், அபகரித்தல். ‖ விலக்குதல், நீக்குதல், பிரித்தல், புறம் பாக்குதல், தீர்வையின்றிச் சிறைப்படுத்துதல். ‖ se — ஏகாந்தமாய்ப் போதல்.

Sequin, *m.* ஓர் பொன்காசு, ௫-ரூபாய் நாணயம்.

Serac, *m.* ஆல்ப் மலையில் செய்யப்படும் பாற்கட்டி; மலைகளில் பனிக்கட்டிக் குவியல்.

Sérail, *m.* துலுக்கரரமனை, — மாளிகை. ‖ கந்தவாரம், அந்த—, அந்தர்ப்புரம், அவரோதனம், சுத்தாந்தம், துலுக்கர் பெண்கள் அறைவீடு. ‖ அந்தப்புரப் பெண்கள்.

Seran, *m.* சணற் சீப்பு, சிணுக்கறுக்கி.

Serançage, *m. et*

Serancer, *v. a.* தும்புவாங்குதல் — சிணுக்கறுத்தல்.

Seranceur, *m* சிணுக்கறுக்கிறவன்.

Sérancolin, *m.* சிவந்த புள்ளியுள்ள பளிங்குக்கல்.

Serapéion, *m.* செராப்பிஸ் என்ற அஞ்ஞான தெய்வத்தின் கோயில்.

Séraphin, *m.* பத்திச் சுவாலகன்.

Séraphique, *adj.* பத்திச் சுவாலகருக்கடுத்த.— உரிய,— ஒத்த: l'ordre — அர்ச். பிராஞ்சிஸ்கு சபை ; le docteur — அர்ச். பொனவன்துர்.

Sérasquier, *m.* (துலுக்கரில்) சேனாபதி.

Serbes, *m. pl. V.* Serviens.

Sérasse, *f.* பஞ்சுப் புடைவை.

Serdeau, *m.* **இராசமேசையின் பதார்த்தங்களைக் கொண்டுபோகு முத்தியோகஸ்தன். அதுகளை வைக்கும் — தின்னும் — விற்குமிடம்.**

Serein, *m.* மாலைப்பனி, பனி.

Serein, e, *adj.* தெளிந்த, மேகமற்ற, வெக்களித்த, வெக்காளம்—, வெக்களிப்பு—, வெளியான. ‖ மலர்ந்த, நல்ல, சுப, பிரசன்ன, அமைதி --, அமரிக்கையான; temps — வெக்காளம், வெக்காளிப்பு, வெளிப்பு, மேகமற்ற வானம்; goutte—திமிரகாசம்,— படலம்.

Sérénade, *f.* மாலைத்தெருச் சங்கீதம்.

Sérénissime, *adj.* மிகவும் பிரசன்னமுள்ள (சில பிரபுக்களுக்குரிய பட்டப்பேர்).

Sérénité, *f.* வெக்காளம், வெக்காளிப்பு, நிருமலம், நிரப்பிரம், வெளிப்பு, சுப—, நல்லகாலம். ‖ அமைதி, அமரிக்கை, பிரசன்னம், தயை, (மேன்மைச் சிறந்த பேராம்).

Séreux, euse, *adj.* நீர்ப் பிடிப்பு—, நீருள்ள, நிண நீர்சுரந்த.

Serf, Serve, *adj. et s.* அடிமை, பண்ணைக் கோவியன், பள்ளடியான். ‖ *adj.* அடிமையான.

Serfouette, *f.* களைக்கொட்டு.

Serfouir, *v. a.* Serfouissage, *m.* களைக்கொட்டினால் கொத்துதல்.

Serge, *f.* ஓர்வித சகலாத்து,— புடைவை, சேர்ஜென்னுஞ் சகலாத்து.

Sergent, *m.* அவால்தார், அவாலுதார். ‖ நீதிஸ்தல சேவகன், கட்டியக்காரன். ‖ ஒட்டின துண்டுகளை நிறுத்துங் கருவி: — de ville ஊர் விசாரணைச் சேவகன், தலையாரி.

Sergent-major, *m.* கூட்டத்தின் கணக்குகளை விசாரிக்கும் அவால்தார், பெரிய அவால்தார்.

Sergenter, *v. a.* நீதிஸ்தலச் சேவகரால் அலைக்கழித்தல், அலட்டுதல், கண்டித்தல்.

Sergenterie, *f.* நீதிஸ்தலச் சேவகன்—, அவால்தாருத்தியோகம்.

Serger, Sergier, *m.* சேர்ஜென்னுஞ் சகலாத்து — புடைவை நெய்பவன்,— விற்பவன்.

Sergerie, *f.* சேர்ஜென்னுஞ் சகலாத்து வியாபாரம்,-- நெய்யும் விதம்,— பட்டடை,— விற்குமிடம்.

Sergette, *f.* சேர்ஜ சென்னுஞ் சின்ன சகலாத்து.

Séricaires, *m. pl.* பட்டுப்பூச்சியினமான தட்டாரப் பூச்சிகள்.

Séricicole, Séricole, *adj.* industrie — பட்டுவிளைவிக்கிற — விசாரிக்கிற வித்தை.

Sériciculture, *f.* பட்டுப்பூச்சி வளர்ப்பு.

Séricine, *f.* பட்டுப்பூச்சி வளர்க்கும் அல்லது பட்டு உண்டாக்கும் மூலம்.

Série, *f.* தொடர்ச்சி, தொடர்பு, வகுப்பு, வரிசை, நிரை, கோவை, தொடு

ப்பு, சரடு, தோரணி, வகுக்கப்பட்ட பொருள்கள், பிரிவு. || சங்கலிதம், மாலிகை:— convergente சமீபக மாலிகை;— divergente விகம மாலிகை;— croissante ஆரோகண மாலிகை; — décroissante அவரோகண மாலிகை ; — infinie அநந்த மாலிகை;— récurrente மடக்கு மாலிகை.

Sérier, *v. a.* வரிசையை வகுத்தல்.

Sérieusement, *adv.* பரியாசமின்றி. உள்ளபடி, உண்மை—, நாணயம்—; சரியாய், கண்டிப்பாய், சந்தோஷமற்ற முகமாய், வெகுவாய், ஊக்கமாய்.

Sérieux, euse, *adj.* கண்டிப்பு—, கனம்—, கவலை—, கவனமுள்ள. || ஆபத்துள்ள. || பலத்த, கனத்த. || உண்மையான, மெய்யான, நிசமான. || நகைப்பு—, பரியாசமற்ற. || *m.* கண்டிப்பு,— உள்ளமுகம்,— உள்ளசாயல், கனம், அடக்கம், மேனா மரியாதை, பரியாசமற்ற வசனநடை; prendre son — கண்டிப்புள்ள முகங்காட்டுதல், சிரிப்பு நீக்குதல்; prendre au—மெய்யென்று நினைத்தல், மனத்தாங்கலாதல், குறை பிடித்தல்.

Serin, *m.* மஞ்சள் சிட்டுக்குருவி.

Seriner, *v. a.* ஷை வாத்தியத்தால் குருவிபாடப் படிப்பித்தல், இரட்டித்திரட்டித்துப் படிப்பித்தல்.

Taquin, ne, *s.* தொந்தரைக்காரன், — காரி, துடுக்கன், முரடன், சண்டி, மூர்க்கன், பிசுனி. || *adj.* தொந்தரை —, துடுக்கு —, அலட்டு —, மூர்க்க முள்ள, பிசுன முள்ள.

Taquinement, *adv.* அலட்டு —, துடுக்கு —, தொந்தரையாய்.

Taquiner, *v. a.* அலட்டுதல், அலைக்கழித்தல், எதிர் பேசுதல். || se — ஒருவனொருவனைத் தொந்தரை செய்தல், — தர்க்கித்தல்.

Taquinerie, *f.* எதிர்ப் பேச்சு, அலட்டு, துடுக்கு, பிசுனம்.

Taquoir, *m.* சமகட்டை. [து.

Taquon, *m.* அக்ஷர முசத்தத் தக்க

Taquonner, *v. a.* அக்ஷர முசத்துதல், அக்ஷர முசத்த சிறுகட்டை போடுதல்.

Tarabuster, *v. a.* அலட்டுதல், தொந்தரை செய்தல், கண்டிப்பாய் நடத்துதல், கடுமை செய்தல்.

Tararder, *v. a.* தானியந் தூற்றுதல். [தூற்றுங் கருவி.

Tarare, *int.* என்னமோ, சீ. || *m.*

Tarasque, *f.* பிராஞ்சு தேசத்தின் தென் பாகத்தின் பட்டணங்களில் முக்கியமாய் தராஸ்கோனில் சில திருவிழா நாட்களில் தெருக்களில் ஊர்கோலமாய்க் கொண்டுபோகப்படும் விகார மிருகரூப முடைத்தான ஓர் சிலை.

Taraud, *m.* மறுசுற்றச்சு.

Tarauder, *v. a.* மறுசுற்ருக்குதல், சுரிபோடுதல்.

Taraxis, *m.* ஓர்வித கண்ணெரிவு.

Tarbouche, *m.* துர்க்கியரும், கிரீக்கருந் தரித்துக்கொள்ளும் ஓர் வகைத் தொப்பி, சுங்கமுடைத்தான ஓர் செகப்புத் தொப்பி.

Tard, *adv.* நேரப்பட்டு,— ப்பட, தாமதமாய்,— பண்ணி, பொறுத்து, தக்க காலத்துக்குப் பின், நேரஞ்சென்று, சாயரட்சையில் : sur le — சாயங்காலத்தில்.

Tarder, *v. n.* தாமதஞ் செய்தல், தாமதித்தல், நேரப்பட்டு வருதல், நேரஞ்சென்று வருதல். || *v. imp.* எந்தத் தாமதமும் பொருதிருத்தல் ; il me tarde d'arriver சேருவதற்கு ஆசிக்கிறேன்.

Tardif, ive, *adj.* தாமதமுள்ள, தாமதிக்கிற, அதிக தாமதமாய் வந்த, தாமதித்து வரும்,— சம்பவிக்கும்,— வளருகிற, நேரப்பட்டு—, பொறுத்து வருகிற, பின் பருவத்து, பின் பருவத்திற் பழுக்கிற. || சோம்பல்—, மந்தமுள்ள, தளர்ந்த, வேகம்—, சுறுசுறுப்பில்லாத ; fruit — பின் பருவத்துக் கனி ; pas — தளர்ந்த நடை ; regrets — தாமதமாய் வந்த மனஸ்தாபம் ; esprit — மந்த புத்தி ; terrain— தாமதமாய்ப் பழுக்கிற நிலம். [க்கும்.

Tardiflore, *adj.* தாமதித்துப் புஷ்பி

Tardigrades. *m. pl.* மெள்ள நடப்பன,— நடக்கு மிருகங்கள்.

Tardivement, *adv.* தாமதமாய், பருவத்துக்குப் பின். [பழுத்தல்.

Tardiveté, *f.* பருவத்துக்குப் பின்

Tare, *f.* குறைவு, குறை, பழுது, கெடுதி, துர்க்குணம். || பாத்திரத்தின் —, குப்பியினிடை.

Taré, *adj.* குறை—, துர்க்குணம்—, அவதூறுள்ள, கெட்ட.

Tarente, இத்தலி தேசத்தில் தரொர்து நகரம்.

Tarentelle, *f.* ஷை நகர சனங்களுக்குரிய நடனம். [வருநோய்

Tarentisme, *m.* விஷச் சிலந்தியால்

Tarentule, *f.* (கடியால் ஷை நோய் வருவிக்கும்) புலிமுகச்—, விஷச் சிலந்தி. || ஓர் பல்லி.

Tarer, *v. a.* குறைவித்தல், குறை—, நஷ்டப்படுத்துதல், அவதூருக்குதல். || நிரப்பு முன்பாத்திர நிறுத்துதல். || se— கெடுதல், அழிதல், நஷ்டப்படுதல்.

Taret, *m.* கடலணையழிக்கும் புழுகிளிஞ்சில். [யம்.

Targe, *f.* பூர்வ—, பெருங் கேட

Targette, *f.* ஓட்டு—, சிறு தாழ்ப்பாள். [ராட்டுதல், கர்வித்தல்.

Targuer (se), *v. pro.* பெருமை பா

Targum, *m.* யூதர் வேதத்தின் ஓர் வியாக்கியானம், கல்தேய் பாஷையில் எழுதப்பட்ட வேதத்தின் வியாக்கியானம்.

Tari, *m.* கள்ளு. || *part.* வற்றின.

Tarière, *f.* துரப்பணம், தமராணி, தமரூசி, சுரியூசி, வீசுதவர். || குண்டிடுக்கி, பற்றிரும்பு, சில வண்டுகளின் கொடுக்கு.

Tarif, *m.* வெகுமான—, விலை—, தீர்வை—, சட்டம், திட்டம், நிரக்கு.

Tarifer, *v. a.* விலை திட்டப்படுத்துதல், சட்டம் விதித்தல்.

Tarin, *m.* ஓர் சின்ன குருவி.

Tarir, *v. a.* வற்றச் செய்தல்,— இறைத்தல், சுவற்றுதல், வற்றடித்தல், ஆறச் செய்தல் : faire — வற்றடித்தல். || *v. n.* வற்றிப்போதல், சுவறுதல், முடிதல் || se — வற்றுதல், வற்றிப்போதல், வறளுதல், சுவறுதல்.

Tarissable, *adj.* வற்றத்தக்க.

Tarissement, *m.* வறட்சி, வற்றம், சேபனம். [லா.

Tarlatane, *f.* ஓர்வித் கவனி — சல்

Tarn, *m.* பிராஞ்சிராச்சியத்தில் தர்ன் என்னு மாறு,— ஜில்லா ; — et Garonne, ஓர் சில்லா.

Tarot, *m.* மந்த விசைக்குழல். || *pl.* பின் பக்கத்துச் சித்திரக் கோடுள்ள சூது கடுதாசிகள்.

Taroté, *adj.* பின் பக்கத்துச் சித்திரக்கோடுள்ள.

Tarotier, *adj. et m.* பின்பக்கத்தில் சித்திரக்கோடுள்ள சூதாடுங் கடுதாசிகள் செய்பவன்.

Taroupe, *f.* புருவங் களினிடை,—யிடை மயிர்.

Tarpan, *m.* முதலில் பழகியிருந்து பிறகு காட்டுக் கோடிவிட்ட குதிரை.

Tarpéien, enne, *adj.* roche — உரோமாபுரியிற் குற்றவாளிகளை விழத்தாட்டும் பாறை.

Tarse, *m.* கால், புறங்கால், புறந்தாள், பக்ஷி,— வண்டின் காலின் மூன்றும் பங்கு. || புருவத்தோர முருந்து. || ஓர் நகர்.

Tarsien, enne, *adj.* காலுக்கடுத்த, புறங்காலின்.

Tarsier, *m.* ஓர் குரங்கு.

Tartan, *m.* பல நிற கோடுள்ள ஆட்டுமயிர்ப் புடவை, ஷை புடவைச் சால்வை.

Tartane, *f.* ஓர் சிறு கப்பல். || ஓர் வலை.

Tartare, *m.* நரகம், பாதாளம். || படை யூழியன்.

Tartare, *ou* Tatar, *adj.* தர்த்தரி தேசத்து, — தேசத்தான், — தேசத்தாள்,— தேச பாஷை.

Tartarie, *ou* Tatarie, தர்த்தரி தேசம், துற்கைஸ்தானம்.

Tartareux, *adj.* இரசமண்டித் தன்மையுள்ள.

Tartarin, *m.* ஓர் குரங்கு.

Tartarique, *ou* Tartrique, *adj.* இரச மண்டியின், புளியுப்பின்; acide— புளியுப்பு திராவகம், மதுத் திராவகம், இரச மண்டிப் புளிப்பு.

Tarte, *f.* ஓர்வித பணியாரம்.

Tartelette, *f.* ஷை சிறு பணியாரம்

Tartine, *f.* வெண்ணெய் முதலியது தடவின உரொட்டித் துண்டு. || பிரசித்த பத்திரிகையில் நெடும் பிரசங்கம்.

Tartrage, *m.* திராக்ஷ இரசத்தில் புளியுப்பு சேர்த்தல்.

Tartrate, *m.* புளியுப்பு, வேருதாரத்தோடு கலந்த இரசமண்டிப் புளிப்பு.

Tartre, *m.* இரச வண்டல், பீப்பாவில் ஒட்டிக்கொள்ளுகிற மண்டி, புளியுப்பு. || பற்சிராய்,— கறை, தந்த சர்க்கரை, தந்த மலம், பற்பாசி, பிட்டகம், பிப்பிலிகை; — stibié, *V.* Emétique வாந்தி மருந்து.

Tartrique, *adj.* *V.* Tartarique.

Tartufe, *m.* கள்ள ஞானி, — பத்திக்காரன்; — de mœurs ஒழுக்கக் கண்டிப்பு காட்டுந் துர்க்குணன்.

Tartuferie, *f.* கள்ள ஞானம்,— பத்தி,— ஒழுக்கம்.

Tas, *m.* குவியல், குவை, அம்பாரம், அடுக்கு, திரள், கும்பல், குப்பல், குப்பை, நூழில், பிரசயம், மிகுதி, சஞ்சயம். || சிற்றடைக்கல்; se mettre tout en un — குந்திக் கொள்ளுதல், திரண்டுக் கொள்ளுதல்.

Tasse, *f.* பானப் பாத்திரம்,— கிண்ணம், வட்டில், அதுகொண்டது: boire à la grande — நீரி லமிழ்ந்திச் சாதல்.

Tasseau, *m.* பலகை தாங்குங் கட்டை, சிறு பட்டடை.

Tassement, *m.* தாழ்தல், படிதல், படிவு, தாழ்வு, அழுந்தல்.

Tasser, *v. a.* குவித்தல், அடக்குதல், அழுத்துதல், அமுக்குதல் || சரவையாய்ச் செய்தல். || *v. n.* வளர்தல், விரிதல், பலுகுதல். || *v. n. et* se— தாழ்தல், படிதல், அமிழ்தல், அழுந்துதல்.

Tassette, *f.* கவசத்தி னிடையணி.

Tâtement, *m.* தொடுதல், தடவுதல், பரிட்சை, சோதனை.

Tâter, *v. a.* தொடுதல், ஸ்பரிசித்தல், தடவுதல், தழுவுதல், நுணுசுதல், நோம்புதல். || பரிக்ஷித்தல், சோதித்தல், ஆராய்தல், பரிசோதித்தல், எண்ணம் —, திறமை ஆராய்தல்; — le pouls à நாடி பார்த்தல், கருத்து அறிய தேடுதல்; — le terrain எச்சரிக்கையோடு நடத்தல்; — l'ennemi சத்துருக்கள் கருத்து அறியச் சின்னயுத்தஞ் செய்தல். || *v. n.* உருசி பார்த்தல், பரிட்சை செய்தல், முதல் விசை தின்றல்,— குடித்தல், — அநுபவித்தல். || se — தன்னைப் பரிசோதித்தல், தன் எண்ணம் — தகைமை ஆராய்தல், தன் சவுக்கியத்தை அதிகமாய்ப் பேணுதல்.

Tâte-vin, *m.* உருசி பார்க்கப் பீப்பாவாயி லிரசம் பிடிக்குங் கருவி.

Tatillon, onne, *s.* வீண் உழைப்பு — விசாரணைக்காரன்—, காரி.

Tatillonnage, *m.* Tatillonner, *v. n.* வீணி லுழைத்தல்,— விசாரணை செய்தல், சில்லறைக் காரியங்களை விசாரித்தல்.

Tâtonnement, *m.* தடவித் தேடுதல், ஐயமான பரிட்சை.

Tâtonner, *v. a.* தடவுதல், தடவிப்

பார்த்தல்,— போதல்,— நடத்தல், கையாற் சோதித்தல், ஐயமாய்ச் செய்தல்.

Tâtonneur, euse, *s.* தடவிப் போகிறவன், ஐயமாய்ச் செய்கிறவன், இருமன முள்ளவன்.

Tâtons (à), *adv.* தடவிக்கொண்டு. ‖ ஐயபயத்துடன்.

Tatou, *m.* பல செதிள் நிறைத்தோலுள்ள மிருகம். ‖ (dans l'Inde) petit cheval du pays, தட்டு, தட்டுவாணி.

Tatouage, *m.* Tatouer, *v. a.* உடலில் பல சித்திரங் — பச்சை குத்துதல்.

Tatouer, *v. a.* பச்சைக் குத்துதல்.

Tatoueur, *m.* பச்சைக் குத்துகிறவன்.

Tau, *m.* T என்கிற அக்ஷரம். [சு.

Taudion, Taudis, *m.* அசுத்த குச்

Taupe, *f.* அகழெலி, அகழான், தலையில் ஓர் வீக்கம்,— கழலை.

Taupe-grillon, *m.* Taupe-volante. [வண்டு.

Taupette, *f.* *V.* Courtilière, ஓர்

Taupier, *m.* அகழான்பிடிக்கிறவன்.

Taupière, *f.* அகழெலிப் பொறி.

Taupinée, Taupinière, *f.* அகழான் வளை,— மட் குவியல், சிறுமட் குவியல், பதுக்கை, தாழ்ந்த வீடு.

Taupin, *m.* ஓர் வண்டு. ‖ *pl.* ஓர்வித போர்ச்சேவகர்.

Taure, *f.* கடாரி, ஈனுப்பசு.

Taureau, *m.* காளை; எருது, இரிஷபம், இடபம், நூபம், விருடபம், ஏறு, விடை, உம்பல். ‖ மாடு, ஆன். ‖ இரிஷபம், இடப ராசி, இடப விராசி, புல்லம், ஏறு, பாண்டில், பூணி, பெற்றம், விடை, நூபம், விருடபம். ‖ பலத்த மனுஷன் : voix de — பலத்த குரல்.

Taurillon, *m.* சிறு காளை, சேங்கன்று. [பலி.

Taurobole, *m.* காளை —, எருத்துப்

Tauromachie, *f.* மாட்டுக்கடாச் சண்டை. [மலை.

Taurus, *m.* ஆசியாவில் ஓர் தொடர்

Tautochrone, *adj.* ஒத்த காலத்திலாகிற, சமான காலிய.

Tautochronisme, *m.* காலத் தொற்றுமை, சமான காலியம்.

Tautogramme, *m.* ஒரேமொழி முதலெழுத்துச் செய்யுள், சொல்லெல்லாம் ஒரே எழுத்தால் துவக்குங் காப்பியம்.

Tautologie. *f.* வேறு சொல்லாலாகிற வீண் புனருத்தி, வேறே சொல்லால் ஒரேகாரிய மிரட்டித்துச் சொல்லல், புனருத்தம், அநுலாபம், மீதுரை, மீமிசை, கூறியது கூறல், சமபிகாரம்.

Tautologique, *adj.* வீண் புனருத்திக்கடுத்த : écho — துடர்ச்சியாய் அநேகம் விசை ஒரே சொற்களை இரட்டிக்கும் பிரதிசத்தம்.

Taux, *m.* திட்டமான விலை,— தீர்வை,— வரி, கிரயம், விழுக்காடு, மதித்த திட்டம்,— விலை,— நீதிச் செலவு,— தீர்வை, வட்டியின் திட்டம், நிரக்கு.

Tavaïole, Tavaïolle, *f.* கவணி சுற்றிய சீலை, கவணி.

Taveler, *v. a.* பொறி—, புள்ளியிடுதல். ‖ se — புள்ளிப்படுதல்.

Tavelure, *f.* தோலின் புள்ளி.

Taverne, *f.* சிறு தீனி விடுதி, சாராயக்கடை, ஆபானம், சுண்டாபானம், பான கோட்டிகை, பீதி, மதிரா கிரகம். ‖ (இங்கிலிஷ் தேசத்தில்) தீனி விடுதி. [யக் கடைக்காரன்,— காரி.

Tavernier, ère. s. இரச—, சாரா

Taxateur, *m.* தபாற் கூலி—, நீதிச் செலவு நிதானிக்கிறவன்.

Taxatif, ive, *adj.* வரி விதிக்கக்கூடிய.

Taxation, *f.* விலை —, செலவின் நிதானிப்பு. ‖ *pl.* வாங்கின பணத்தி லுத்தியோகஸ்தனுக்கு வரும் பங்கு, தீர்வை, சம்பளம்.

Taxe, *f.* விலைத் திட்டம், செலவின் திட்டம். ‖ பகுதி, கப்பம், இறை, வரி, தீர்வை, கடமை, விதித்த வரி, கந்தாயம், கிஸ்தி, ஆயம், இரோகை, சாயர், பன்னு, பேரிஜ.

Taxer, *v. a.* விலை—, தீர்வை—, செலவு திட்டம் பண்ணுதல், விலை தீர்த்தல், — குறித்தல். ‖ மதித்தல், மதிப்பு பண்ணுதல், உத்தேசித்தல். ‖ வரி—, தீர்வை வைத்தல்,— போடுதல். ‖ குற்றஞ் சாட்டுதல்,— சுமத்துதல்,— சொல்லுதல், பழித்தல், கண்டித்தல். ‖ se — அவரவர் தன் வீதம் நியமித்தல், தமக்கு வரி — வீதம் போடுதல், ஒருவனொருவன் பேரிற் குற்றஞ் சாட்டுதல்.

Taxidermie, *f.* (மிருக முதலியவற்றின் தோலில்) பஞ்சுபோட்டு உருவாக்கும் வித்தை.

Taximètre, *m.* வண்டி சென்ற தூரத்தைக் குறிப்பிக்குங் கருவி.

Taxis, *m.* வளி வீக்கங்களையா லடக்கும் வகை.

Taxologie, **Taxonomie**, *f.* வகுப்புகளின் விளக்கம்.

Tchèque, *m.* பொஹெமியா நாட்டில் பேசப்படும் பாஷை.

Tayra, *m.* ஓர் மரநாய்.

Te, *pro.* உன்னை, உனக்கு.

Té, *m.* T என்கிற வடிவான சுரங்க உலை,— என்கிற வடிவுள்ள குழல்.

Technique, *adj.* தொழிலுக்குரிய, — ஏற்ற, பரிபாஷை—, சங்க்ஷேபமான, பரிபாஷித. ‖ சுருக்கத்திற் பல பொருளடங்கிய : mot — பரிபாஷை, குழூஉக்குறி, சமிக்கை, பரிபாஷிதம், அவ்வவ் சாஸ்திர சொற்கள் ; vers — சுருக்கத்திற் பல பொருளடங்கிய சூத்திரம்.

Technologie, *f.* பரிபாஷை —, தொழில்களின் விளக்கம், தொழிலுக்கு —, சாஸ்திரத்துக்குரிய சொற்களின் விளக்கம்.

Technologique, *adj.* ஷை விளக்கத்துக்கடுத்த.

Teck, **Tek**, **Tectona grandis**, தேக்கு,— மரம்.

Tectrices, *f. pl. ou* plumes — கீழும் மேலுஞ் சிறகையும் வாலையும் மூடுகிற இறகுகள்.

Te Deum, *m.* தெ தெயொம் என்கிற பாட்டு, நன்றியறிந்த தோஸ்திர பாடல்.

Tégument, *m.* மூடி, உறை, மேல் மூடி, தோல், புறணி.

Teignasse, *f. V.* Tignasse.

Teigne, *f.* (maladie) அசறு, பொடுகு, சிராய்ப் பொடுகு, சுண்டு, அகிர், அசர், கரப்பன், கரப்பான், சொடுகு, தலைப் புற்று, பொடு : — de lait ஊது கரப்பன். ‖ (insecte) உளு, உளுவான், அரி புழு, பொட்டு, புடவை யரிக்கும் பூச்சி. ‖ மரப்பட்டையின் ஓர் வியாதி. ‖ பிடிமான முள்ளவன் —, வள். ‖ *pl.* குதிரைக் காலின் சீழ்.

Teigneux, **euse**, *adj.* பொடுகு—, சுண்டுள்ள. ‖ *s.* பொடுகுக்காரன், —காரி.

Teille, *f.* சணற் பட்டை, *V.* Tille.

Teiller, *v. a. V.* Tiller.

Teindre, *v. a.* சாயந் தோய்த்தல், — தீர்தல்,— போடுதல்,— காய்ச்சுதல், வருணம்—, வன்னந் தீர்தல்,— பூசுதல்,— வைத்தல், நிறங்கொடுத்தல்,— இடுதல் : avoir les mains teintes de sang கொலை செய்திருத்தல்,— கற்பித்திருத்தல். ‖ se— தனக்கு வன்னம் போடுதல், சாயம் பிடித்தல்.

Teint, *m.* சாயந் தோய்வகை, சாயம், வன்னம், நிறம், முக நிறம்,— சாயல். ‖ *part.* சாயந் தீர்ந்த,— பிடித்த, — உள்ள, வன்ன முள்ள.

Teinte, *f.* நிறம், வன்னம், நிறக் காந்தி, இலேசான சாயல், பல வன்னங்களின் வித்தியாசம் : — plate ஒரே தன்மையான நிறம் ; demi—, அரை—, இளஞ் சாயம்.

Teinter, *v. a.* ஒரே தன்மையாய்ச் சித்திரித்தல்,— சாய மிடுதல்.

Teinture, *f.* சாயம், நிறம், வன்னம், சாயந் தீர்தல்,— தீருந் தொழில்,— தீரும் வகை. ‖ இலேசான அறிவு, சிற்றறிவு, மூல பாடம், அற்ப கல்வி. ‖ கஷாயம், குடி நீர், கரைவு. ‖ பதிவு, உணர்ச்சி :— de rose உரோசாப் பூவின் கஷாயம்.

Teinturerie, *f.* சாயந் துவைக்கும் வீடு.

Teinturier, **ère**, *s.* சாயக்காரன், வன்னக்காரன்,— காரி, சாயந் தோய்க்கிறவன்.

Tel, **Telle**, *adj.* இப்படி—, அப்படிப்பட்ட, இப்படிக் கொத்த, அப்படிக் கொத்த, இன்ன, சரியான, சரியொத்த : une—vie இப்படிப்பட்ட சீவியம்; — fut mon père என் தகப்ப னிப்படிப்பட்டவனா யிருந்தான். ‖ Tel... tel, எப்படியோ... அப்படித்தான் : — vie, — mort சீவிய மெப்படியோ மரண மப்படித்தான். ‖ Tel que, ஒத்த, போல, அப்படிப்பட்ட. அப்படிக்கொத்த, எப்படிக் கொத்ததென்றால் : — qu'un lion சிங்கத்துக்கொத்த,— சரியான, சிங்கத்தைப் போல ; je ne suis pas — que vous நானுனக்குச் சரியொத்தவனல்ல ; je ne suis pas — que vous pensez நீ நினைக்கிறது போலே நானப்படிக் கொத்தவனல்ல ; sa conduite fut—que tous l'estimaient அவனடக்கை எப்படிக் கொத்ததென்றால் எல்லாருமவனை மதித்தார்கள், எல்லாருமவனை மதிக்கும்படி அவன் நடக்கை இப்படிக்கொத்ததா யிருந்தது. ‖ Tel quel, அற்பவிலை—மதிப்புள்ள, எப்படிப்

பட்டவனாய்—, எப்படிக் கோத்தவனாய் —, எப்படி யிருந்தாலும். || Tel rit aujourd'hui qui pleurera demain சில பேரின்றைக்குச் சிரித்தாலும் நாளைக்கு அழுவார்கள். || Un tel ஒருவன், ஒருத்தி, பொன்னன், திம்மன் ; un — et un—sont venus பொன்னனும் திம்மனும் வந்தார்கள் ; à — endroit இன்ன விடத்தில் ; à — et — conditions இன்னின்ன திட்டங்களோடு de telle sorte que *conj*. *V*. Tellement que.

Télamon, *m*. யாதொன்றைச் சுமக்கு மனுஷருருவங்கள்.

Télédynamie, *f*. சக்தைத் தூரத்தில் செலுத்தும் வித்தை. [தி.

Télégramme, *m*. மின் தபாற் செய்

Télégraphe, *m*. தூரச் சம்பாஷணைச் சூத்திரம், தூரத்திற் குறிப்பால் பேசிக் கொள்ளும் எத்தனம்,— électrique மின்—, தந்தித் தபால். [தை.

Télégraphie, *f*. ஷை சூத்திர வித்

Télégraphier, *v. a*. தந்தித் தபால் மார்க்கமாய் அறிவித்தல்.

Télégraphique, *adj*. ஷை சூத்திரத்து, தந்தித் தபாலுக்குரிய : dépêche— தந்தித் தபாற் செய்தி ; ligne — ஓர் வரிசையி லிருக்கப்பட்ட தந்தித் தபாலெல்லாம். [அலுவலா யிருப்பவன்.

Télégraphiste, *m*. தந்தி ஆபிஸில்

Télémètre, *m*. எட்ட முடியாத ஓரிடத்திலிருந்து தானிருக்கிற இடம் வரையிலுள்ள தூரத்தைக் கணிக்குங் கருவி.

Téléologie, *f*. தூர சம்பாஷணை வித்தை, நிமித்த காரணங்களின் விளக்கம். [கருவி.

Téléologue, *m*. தூர சம்பாஷணைக்

Télépathie, *f*. தூரத்தில் தனக்குத் தெரியாமல் நடக்குஞ் சம்பவத்தால் மனதில் அதிசயமாய் உண்டாகும் ஓர் உணர்ச்சி.

Téléphone, *m*. குரல் அல்லது சப்தத்தைத் தூரத்திற்குக் கொண்டுபோகுங் கருவி.

Téléphoner, *v. n*. ஷை கருவியால் பேசுதல், ஷை கருவியால் சேதியனுப்புதல். [பிஸில் அலுவலா யிருப்பவன்.

Téléphoniste, *m*. டெலிபோன் ஆ

Téléphote, *m*. மின் சாரத்தின் வழியாய் பிரகாசமுள்ள ஒரு உருபத்தைத் தூரத்திற் கனுப்புங் கருவி.

Téléphotographe, *m*. மின் சாரத்தின் வழியா யனுப்பப்படும் உருபத்தைக் கிரகிக்குங் கருவி.

Télescope, *m*. தூர திஷ்டிக் கண்ணாடி, நச்சுக் குழல்.

Télescoper (se), *v. pro*. கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு கடுவிசையாய் ஓர் பொருள் மற்றோர் பொருளுடன் மோதிச் சேதப்படுதல்.

Télescopique, *adj*. தூர திஷ்டிக் கண்ணாடியாற் காண்கிற,— செய்யப்படுகிற.

Télinga (pays) *ou* Télingana, தெலிங்கம், தெலுங்கு, தெலிங்கு, வடுகு, ஆந்திரம். || la langue — தெலிங்கு, தெலுங்கு, வடுகு, ஆந்திரம். || homme — தெலுங்கன், தெலிங்கன், வடுகன், ஆந்திரன். || femme télingate தெலுங்கச்சி, வடுகச்சி.

Tellement, *adv*. அவ்வளவு, அம்மாத்திரம், அம்மட்டும் ; un loup se pressa — qu'il pensa perdre la vie ஓர் ஓ நாய் எவ்வளவு தீவிரித்த தென்றால் உயிர் விடுதற்குக் கொஞ்சந் தப்பிப் போயிற்று ; — quellement ஒரு விதமாய், கொஞ்சமாய், எப்படியும்.

Tellichéri, தலைச்சேரி (நகர்).

Tellière, *m*. *ou* papier — ஓர்வித கடுதாசி.

Telline, *f*. ஓரிரோட்டு மீன்.

Tellure, *m*. ஒருலோகம். [டாகும்.

Tellurien, *adj*. தரையிலிருந் துண்

Téméraire, *adj*. அவிவேக, மிஞ்சின துணிவுள்ள, அதிக துணிகரமுள்ள. || புத்தி—, எச்சரிக்கை—, யோசனையற்ற,— தப்பின. || உருசுவற்ற (எண்ணம்). || *s*. அதிக துணிகரமுள்ளவன், — வள், இடிலன்.

Témérairement, *adv*. மிஞ்சின துணிவு—, அவிவேகமாய், மதியற்ற துணிகரமாய், புத்தி—, யோசனை—, எச்சரிக்கையின்றி.

Témérité, *f*. அவிவேகம், மிஞ்சின துணிவு,— துணிகரம், மதியற்ற துணிவு, புத்தி—, விமரிசை—, சாவதானம் —, யோசனை யில்லாமை. || துணிவு, வீர சூரம், இடிலத்தனம், அவிவேக கிரியை.

Témoignage, *m*. சாட்சி, சாக்ஷி, சாட்சியம், சாக்கி, அத்தாட்சி, வாக்கு மூ

லம், சான்று. || உருசு, திஷ்டாந்தம், அடையாளம், குறி: rendre — சாட்சி சொல்லுதல் : — contradictoire எதிர் சாட்சி.

Témoigner, *v. n. et a.* சாட்சி சொல்லுதல்,— கொடுத்தல், நிச்சயித்தல், நிச்சயம்—, உறுதியாய்ச் சொல்லுதல், அறிவித்தல். || குறித்தல், காண்பித்தல், காட்டுதல், தோற்றுவித்தல். || se — ஒருவ னொருவனுக்குக் காட்டுதல்.

Témoin, *m.* சாட்சி,— க்காரன்,— சொல்லுகிறவன், அறிகிறவன், பார்க்கிறவன். || அடையாளம், குறி, எல்லைக் குறி. || முட்டு, மெட்டு, திப்பை, ஒட்டம், தோண்டலளவைத் திடர்: prendre à — சாட்சியாக வழைத்தல். — வைத்தல்,— du défenseur, உத்தர சாட்சி, மேன் சாட்சி.

Tempe, *f.* நெறி, கண் மண்டைக் குழி, கன்னச் சுளி.

Tempérament, *m.* சரீர குணம்,— சுபாவம்,— தன்மை, தேக பாங்கு. || குணம், குண வாக்கு, தன்மை, சார்பு, அயானம், அன்பு. || தணிவு, தணிப்பு, இளக்காரம், மட்டு, சமாதானம், இசைவு, பொருந்து முபாயம்,— வகை,— விதம். || கலப்பு, கலவை, சேர்க்கை. || இலேசான விகாரம்.

Tempérance, *f.* மட்டாசனம், மட்டுணவு, மிதாசனம், யதாகாரம். || மட்டு, அடக்கம், ஒடுக்கம், இச்சை—, தன்னடக்கம், ஒறுப்பு, யதம், மிதம்.

Tempérant, e, *adj.* மட்டாசனம்—, மட்டுணவுள்ள,— அநுசரிக்கிற. || அடக்கம்—, திட்டம்—, மட்டுள்ள, மிதந்தப்பாத. || இரத்த வேகந் தணிப்பிக்கிற. || *m* தணிப்பு மருந்து.

Température, *f.* ஆகாய குணம், பதம், சீதோஷ்ண சமம்,— தன்மை,— குணம். || (சரீரத்து —, தேகத்து) உஷ்ண அளவை.

Tempéré, *adj.* அடக்கம்—, மட்டுள்ள, மத்திமமான. || மத்தி மோஷ்ணமுள்ள, சீதோஷ்ண மத்திமமான. || *m.* சீதோஷ்ண மத்திமம், அதின் குறி, மத்திம வசன நடை.

Tempérer, *v. a.* தணித்தல், அமர்த்துதல். அடக்குதல், மட்டு கட்டுதல், பதமாக்குதல், திட்ட—, சீர்—, குணப்படுத்துதல், ஆற்றுதல். || se — தணிதல், அமருதல், அடங்குதல், பதமாதல், திட்ட—, குண—, சீர் படுதல்.

Tempête, *f.* புசல், பெரும் புசல், பெருங்—, சூறைக் காற்று, சண்ட—, பிரசண்ட மாருதம், பிரசண்ட வாயு, கொந்தளிப்பு. || கலக்கம், குழப்பம், பெரிய சந்தடி, கூக்குரல், பெரு முபத்திரியம், அகோர கலகம்.

Tempêter, *v. n.* சந்தடி செய்தல், சினந்து—, பொங்கி கூவுதல்,— தூஷித்தல், மிகவுங் கோபித்தல், உற்கரித்தல், கெம்புதல், கொந்தளித்தல்.

Tempêtueux, euse, *adj.* பெருங் காற்றடிக்கிற, புசலுக் கேதுவான, புசல் வருவிக்கிற.

Temple, *m.* கோவில், கோயில், தேவாலயம், தேவ—, திரு—, வேதஸ்தலம், அந்தளி, பிராசாதம், பீடரம். || புரோடெஸ்டாண்டு மார்க்கக் கோவில். || ஜெருசலேம் நகரின் கோவில். || தெம்பிளியர் என்னு மிராவுத்தர் வாசம்: aller au — de mémoire சந்ததியார் ஞாபகத்திற் சீவித்தல். [சடையிராவுத்தன்.

Templier, *m.* தெம்பிளியரொன்னுஞ்

Templu, Temple, *m.* சீலையிழுக்கும் நெசவுக்காரர் கருவி.

Temporaire, *adj.* தற்காலத்த, அநித்திய, சில காலம்,— காலத்துக்கு மாத்திர மிருக்கிற,— நிலைக்கிற, அங்காமி.

Temporairement, *adv.* தற்காலமாய், சில காலத்துக்கு.

Temporal, e, *adj.* நெறிக்கடுத்த.

Temporalité, *f.* திருக் காணியாக்ஷி விசாரணை.

Temporel, elle, *adj.* அநித்திய, அழிந்துபோகிற, எப்போது நில்லாத. || உலோச, இலௌகீக, உலோகத்துக் கடுத்த: les biens — அநித்திய நன்மைகள்; puissance — உலோக அதிகாரம். || *m.* கோயிலும்பிளிக்கை,— வருமானம். || உலோக அதிகாரம்.

Temporellement, *adv.* ஒரு காலத்துக்கு, சில காலமாய்.

Temporisation, *f.* தாமதம்.

Temporiser, *v. n.* பொறுத்தல், தாமதித்தல், தாமதஞ் செய்தல், நல்ல சமயத்துக்குக் காத்திருத்தல், காலமிழுத்தல், பாணித்தல்.

Temporiseur, *m.* தாமதக்காரன், தாமதிப்போன்.

Temps, *m.* காலம், நேரம், பொழுது, போழ்து, தியாலம், பவந்தம், கால், தபா. || வேளை, சமயம், பருவம், தக்க சமயம், அமையம், சந்தர்ப்பம். || கெடு, தவணை, தாமதம், ஓய்வு, ஒழிவு, சவகாசம், அவகாசம். || ஆகாய —, வானத் தன்மை, காலக்குணம், கால உஷ்ணப்பிரமாணம். || தாளம், தாளப் பிரமாணம், — மாத்திரை. || (வினைகளின்) காலம்: passer le — நேரம் போக்குதல், விளையாடுதல் ; passer son — à lire வாசிக்கிறதிலே நேரஞ் செலவழித்தல்; prendre du bon — இளைப்பாறுதல், விளையாடுதல் ; prendre son — தக்க சமயந் தேடுதல், பதராதிருத்தல் ; n'avoir qu'un — கொஞ்சங்காலம் நிலைத்தல் ; prévenir, devancer le — தவணைக்கு முன்னே வருதல், — செய்தல்; demander du — தாமதம் —, பொறுதி கேட்டல் ; quand j'aurai du — எனக்குச் சவகாச மிருக்கும்போது ; s'accommoder, céder au — சமயத்துக்கு இணங்குதல்; mauvais — வார்த்தலம்; — couvert கம்மல், மந்தாரம், மப்பு; beau — வெம்பியாரம், gros — புசற்காலம் ; — serein வெக்காளம் ; prendre le — comme il vient கவலையின்றிக் காலத்துக்கு அமைதல் ; à — குறித்த —, தக்க காலத்தில், சில காலத்துக்கு ; de tout — எப்போதும், எக்காலத்திலும், எத்தியாலமும்; de — en —, de — à autre வேளைக்கு வேளை, கதாசித்து; en — et lieu தக்க காலத்திலு மிடத்திலும் ; en même —, tout d'un — ஒருமிக்க, கூட, அந்த காலத்திலேதான் ; selon, suivant le — சமயத்துக்குத் தக்கபடி; dans le — முன்னாளிலே, முற் காலத்திலே ; dans le — que போது *avec le participe.* [சரிக்கத்தக்க.

Tenable, *adj.* காப்பாற்ற —, சஞ்

Tenace, *adj.* பிடிப்பு —, பிசு பிசுப்புள்ள, ஒட்டுகிற. || கெட்டியாய்ப் பிடிக்கிற, கைவிடாத. || திடம் —, உறுதி —, ஸ்திரமுள்ள. || பிடிமானம் —, பிடிவாதம் —, மூர்க்கமுள்ள. || பிசுனம் —, கையிறுக்கமுள்ள ; mémoire — ஒன்று மறவாத ஞாபகம்.

Tenacement, *adv.* பிடிப்பு —, பிடிவாதம் —, பிசுனமாய்.

Ténacité, *f.* பிடிமானம், பிடிவாதம், மூர்க்கம், பிடிப்பு, விடாப்பிடி, சாதனை, சாதிப்பு, அம்மியை, சுறட்டுப்பிடி, இறுக்கம், பிசுனம், உலோபித்தனம், சிக்கனம், அழுத்தம்.

Tenaille, *f.* குறடு, இடுக்கி, பறளை, பறளிகை, கொடிறு, பற்றிரும்பு. || துறட்டு வடிவலங்கம்.

Tenailler, *v. a.* வெங் குறட்டினால் வாதித்தல். [லங்கம்.

Tenaillon, *m.* பிறையலங்க முன்ன

Tenancier, ère, *s.* பிரசை மானியக்காரன், — மானியக் குத்தகைக்காரன், உடையவன்.

Tenant, e, *adj.* பிடிக்கிற, இருக்கிற: séance — கூட்ட மாலோசித் திருக்கையில்.

Tenant, *m.* வேடிக்கைப் போரில் எதிர் நிற்கிறவன். || ஆதரிப்பவன், நியாய துரந்தரன், காவலன், தாக்கஞ் சாதிக்கிறவன். || அடுத்தது: être les — de அடுத்திருத்தல் ; connaître les — et les aboutissants d'une affaire ஓர் காரியத்தின் விவரமெல்லா மறிதல் ; tout en un —, tout d'un — இடையில்லாமல்.

Ténasserim, தருணாசேரி, (நகர்).

Tendance, *f.* நாடுகை, நோக்கம், சார்மானம், சாய்மானம், செல் வழி, போம் வழி. || சார்பு, சாய்வு, மனச் சாய்வு, ஓரே முடிவுள்ள பல நியாயங்கள்.

Tendanciel, *adj.* இரகசிய நாட்டமுள்ள. [கிற, தேடுகிற.

Tendant, e, *adj.* நாடுகிற, நோக்கு

Tendelet, *m.* தோணிக் கூடாரம், — சிறைக் கூடம்.

Tender, *m.* (புகைவண்டித் தொடரில்) நிலக்கரிவைக்கும் வண்டில்.

Tendeur, *m.* வைக்கிறவன், போடுகிறவன் ; — de pièges கண்ணி வைக்கிறவன், வஞ்சிக்கிறவன், சூதுக்காரன்.

Tendineux, euse, *adj.* நரம்பினுனித் தன்மையுள்ள. [குங் கோல்.

Tendoire, *f.* (புடவைகாய) விரிக்

Tendon, *m.* வெண்ணரம்பினுனி, நரம்பு, தசை நார், சங்கன்னம், வகிர், குதிரைக் காலின் பின் புறம் : — d'Achille உள்ளங்காலைச் சேரு நரம்பு.

Tendre, *adj.* கெட்டியல்லாத, கடினமையற்ற, குழைவான. || நொய்ப, மெல்லிய, மிருதுவான, நுண்ணிய. || இ

இளம், இளமையான, சவலையான, குழ. || மதுர, நேசம் —, உருக்கம்—, இளக்கம்—, இளக்காரமுள்ள. || சிறந்த, அந்தம்—, இலக்ஷணமான : dès ses plus — années முதலிளமை யினின்று, சைசவாதி ; couleur — இள நிறம். || *m.* நேசம், இளக்கம், நொய்மை.

Tendre, *v. a.* இழுத்தல், ஏற்றுதல், விரித்தல், நீட்டுதல், பிகிதல், பிகு வேற்றுதல், வைத்தல், போடுதல், முஸ்திப்பு செய்தல். || சீலையால் மூடுதல். || ஒப்பு கொடுத்தல் : — un arc, un ressort வில்—, விசை யேற்றுதல் ; — son esprit sur மேலே மிகுந்த கவனம் வைத்தல் ; — des pièges கண்ணி வைத்தல் ; — les bras à quelqu'un, ஒருவனுக்குக் கை நீட்டுதல்.— விரித்தல், ஒத்தாசை ஒப்புகொடுத்தல்,— கேட்டல். || *v. n.* போதல், நோக்கிப் போதல், நோக்குதல், நாடுதல், சார்தல், சேர்தல், சீலை பரப்புதல்,— விரித்தல். || se — இழுக்க,— நீட்டப்படுதல், கடினமாதல்.

Tendrement, *adv.* பக்ஷமாய், நொய்மையாய்.

Tendresse, *f.* பக்ஷம், நேசம், அன்பு, பற்று, பிரீதி உருக்கம், நிணறு, அநுசங்கம், அபலாபம், ஆபந்தம், வர்சலத்துவம், வாற்சல்லியம். || இளமை, நொய்மை, மென்மை. || *pl.* நேசத் தடையாளம்.

Tendreté, *f.* இளமை, நொய்மை, மெதுவு, இளக்கம், இளசு, இளை, குழைவு, அவிபாகம், குருகு, விளரி, நொதுப்பு, வளு, வளுவல்.

Tendron, *m.* தளிர், குருத்து. முருந்து, மரக்கொம்பி னுனி, இளவல். || jeune — இளம் பெண்;— de l'oreille புறக்காதின் சவ்வு,— முருந்து. || *pl.* சிலமிருக மார்பின் நுனிச்சவ்வு.

Tendu, *part.* இழுக்க—, நீட்டப்பட்ட, போட்ட. மிகுந்த கவனமுள்ள, கட்டாயம்—, வருத்தம்—, இறுக்கமுள்ள.

Ténèbres, *f. pl.* இருள், இருட்டு, அந்தகாரம், கருக்கல், கங்குல், கருகல், திமிரம், ஆகற்பகம், இரசோரசம், தமசு, தாமிசிரம், நிகப்பிரபை. || சந்தேகம், அறியாமை, அறிவீனம், தெளியாமை. || அர்ச். வாரத்து இராச் செபம் : le prince, l'ange des—பசாசு ; l'em· [illegible] des — நரகம், பாதாளம்.

Ténébreusement, *adv.* இருட்டாய், கருகலாய்.

Ténébreux, euse, *adj.* இருட்டான, இருண்ட, இருளுள்ள,— நிறைந்த, — அடைந்த, அந்தகாரம்—, திமிரமுள்ள, இருளில் நடக்கிற, தெளியாத, கருக்கலான. || வருத்தம்—, சிக்குள்ள. || துக்கம்—, விசாரமுள்ள. || இருள் தேடுகிற, கெட்ட கருத்து மறைக்கிற.

Ténébrion, *m.* இருட்டு வண்டு.

Ténédos, அர்ஷிப்பேல் கடலில் தெனெதோஸ் என்கிற தீவு. [ரிப் தீவு.

Ténériffe, கனரி தீவுகளில் தெனெ

Tènement. *m.* துரையின் காணியாக்ஷியைச் சேர்ந்த குத்தகை நில வீடு,— காரன் வீடு.

Ténesme, *m.* மூலக் கடுப்பு, வயிற்றுக் கடுப்பு, உள் மூலம். [டுக்கி.

Tenettes, *f. pl.* அடைப்புக் கல்வி

Teneur, *f.* அடக்கம், பொருண்மை, அடங்கினது, உள்ளது, வாசகம், சட்டம், கருத்து, அர்த்தம்.

Teneur, *m.* — de livres வியாபாரி கணக்கன், குண்கன், இலேககன்.

Ténia, *m.* நாக்க—, கீரிப் பாம்பு, தானப் புழு. || ஓர் மீன். [து.

Ténifuge, *adj.* நாக்கப் பூச்சி மருந்

Tenir, *v. a.* பிடித்சல், பிடித்து—, எந்தி—, கொண்டிருத்தல். || பெற்று—, வைத்துக் கொண்டிருத்தல், பற்றி—, வைத்துக் கொள்ளுதல்,— இருத்தல், ஆளுதல், அடைத்திருத்தல். || நிறைவேற்றுதல், செலுத்துதல். || காப்பாற்றுதல். || கொள்ளுதல், பிடித்தல். || அடக்குதல், தடுத்தல், மறித்தல். || நடப்பித்தல், நடத்துதல், ஆளுதல். || நிறுத்துதல். || எண்ணுதல், நினைத்தல். || பெற்று—, படித்து—, அறிந்திருத்தல், அவ்வளவு பந்தயம் போடுதல் ; — son homme ஓர் மனிதனைச் சிக்கில் அகப்படுத்துதல், தப்பும் வழியெல்லாம் அடைத்தல்; — à loyer கொடைக் கூலிக்குக் கொண்டிருத்தல்; vous tenez trop de place அதிக விலாசங் கொண்டிருக்கிறாய்; — la campagne படை நாட்டில் திரிந்து நிற்றல்; — en prison சிறைச் சாலையில் வைத்திருத்தல்; — sa parole தன் வார்த்தைப்பாட்டை நிறைவேற்றுதல் ; — conseil ஆலோசனை பண்ணுதல் ; je tiens l'affaire faite காரிய

முடிந்த தென்றெண்ணுகிறேன் ; — les livres கணக்கனா யிருத்தல். ‖ *v. n.* அடுத்திருத்தல், சேர்ந்திருத்தல், தொங்குதல், மேலே பற்றுதலாயிருத்தல், திடமனசாயிருத்தல், இருத்தல், நிற்றல், நிலைத்தல், நிலை நிற்றல், உறுதியாய் நிற்றல், ஒட்டி—, பற்றி—, அணைத்துக்கொண்டிருத்தல் : — à ஒட்டி—, பற்றுதலாய்—, பிடிமானமா—, சேர்ந்திருத்தல் ; — de நிகர்தல், போலுதல், சம்பந்தமா யிருத்தல் ; — pour பாரிசமா யிருத்தல் ; — contre எதிராக நிற்றல், விரோதமா யிருத்தல் ; sa vie ne tient qu'à un fil ஒரு நூலாலவன் சீவியம் நிற்கின்றது ; en — அகப்படுதல், பிடிபடுதல். ‖ se — நிற்றல், இருத்தல், நிலைத்தல், அடுத்து—, பிடித்திருத்தல், பற்றிக்கொள்ளுதல், தங்குதல், தரித்தல், தன்னை நிறுத்துதல்,— அடக்குதல், அதிக சூதுகடுதாசி வாங்காதிருத்தல் ; se— à quatre கோபியாத படிக்கு மிகுந்த பிரயாசப்படுதல் ; s'en—à ஏற்றுக்கொள்ளுதல், அங்கி கரித்தல். ‖ *v. uni.* நிற்கின்றது, தடையுண்டு, அடங்கி யிருக்கின்றது ; il ne tient qu'à vous d'être aimé நீ நேசிக்கப்படுவதற்கு நீயேவிக்கினம்,— உன்னாலே மாத்திரம் தடையுண்டு ; qu'à cela ne tienne, அது விக்கினமல்ல, அது அக்கறையில்லை.

Tenon, *m.* கழுந்து, கழுந்தின் கூர், குழைச்சு, தமருகம், உடுக்கை.

Ténor, *m.* மத்திமம், சமனிசை, மத்திமம் பாடுகிறவன்.

Ténotomie, *f.* தசை நாளாச் சத்தரஞ் செய்தல்.

Tenseur, *adj. et subs.* இழுப்புக்குக் காரணமாயிருக்கும் தசை.

Tension, *f.* இழுப்பு, நீடலாயிருத்தல், நீட்டுகை, பிடிப்பு, விறைப்பு, பிகு, பிகுவு, மிகுந்த கவனம், கவனிப்பு.

Tenson, *m.* பழைய புலவர் தர்க்க சம்பாஷணை.

Tentacule, *m.* (பூச்சிகளின்) அசைவுள்ள கொம்பு—, தும்பு.

Tentant, e, *adj.* தந்திரஞ் செய்கிற, ஆசை வருவிக்கிற.

Tentateur, trice, *s.* தந்திர—, சோதனைக்காரன்,— காரி, தின்மைக்கு ஏவுகிறவன், தந்திரஞ் செய்கிறவன் : le—, l'esprit — பசாசு, சத்துரு.

Tentation, *f.* தந்திரம், சோதனை, தின்மைக்கு ஏவல்,— இழுப்பு. ‖ ஆசை, விருப்பம், ஆசா பாசம்.

Tentative, *f.* பிரயாசம், பரிட்சை, பிரயத்தினம், சோதனை. ‖ வேத சாஸ்திரத்து முதல் சோதனை.

Tente, *f.* கூடாரம், வானி, படங்கு, படாம் வீடு, படக்குடில், தூசியம், படாடசம். ‖ திரி, காரத் திரி, காயத்திவிடு நூற்சுருள்.

Tenter, *v. a. et n.* தந்திரம்—, சோதனை பண்ணுதல், தின்மைக்கு ஏவுதல், — இழுத்தல், சோதித்தல், இணக்க—, மயக்க—, கெடுக்கப் பார்த்தல்,— தேடுதல், தன் பாரிசமாக்கத் தேடுதல். ‖ சோதித்தல், பரிசோதித்தல், பரிட்சித்தல், பரிட்சை பண்ணுதல், பிரயாசப்படுதல், எத்தனம் பண்ணிப்பார்த்தல், முயலுதல். ‖ ஆசை வருவித்தல்; être tenté de ஆசைப்படுதல்:—Dieu அவசர மின்றிப் புதுமை கேட்டல் ; — la fortune அதிஷ்டத்தின் ஆபத்துக்குத் துணிதல்.

Tenture, *f.* தூக்கங்கள், தொங்கல், தூக்கான திரைகள், விதானம். ‖ சாலையின் சுவர்களைச் சீலைகளால் மூடுதல், விதானீகரணம்.

Tenu, e, *part.* பற்றின, பிடிக்க—, விசாரிக்கப்பட்ட, ஒழுங்கு—, கடமையுள்ள ; tant—tant payé வேலை எவ்வளவோ கூலி யவ்வளவு.

Ténu, e, *adj.* நுண்ணிய, மெல்லிய.

Tenue, *f.* நிலை, நிலைமை, உறுதியான நிலை, நிற்கும் வகை. ‖ சாயல், தோற்றம், சரீர நிலை, உடுக்கும் வகை, இருக்கை. ‖ கோலம், சோடிப்பு, உடுப்பு, உடுபாவனை. ‖ இறகு பிடிக்கும் வகை. ‖ நிலைப்பு. ‖ ஓர் சத்தத்தின் துடர்பு. ‖ ஆலோசனைச் சங்கத்தின் காலம்,— நேரம்: grande — ஆடம்பரமான உடுப்பு ; petite — வழக்கமான உடுப்பு ; fond de bonne — நங்கூரம் போடுவதற்குத் தக்க கடலடி ; durant la—des états அரசின் சங்கங் கூடியிருக்குங் காலத்தில்;— des livres கணக்கன் தொழில்; tout d'une — இடைவிடாமல், துடர்ச்சியாய். ‖

Tenuirostres, *m. pl.* நுண்ணிய மூக்குள்ள பக்ஷிகள்.

Ténuité, *f.* நுண்மை, மென்மை, அச்சம், சன்னம், இட்டு, இட்டிடை, சயிக்கம், சூட்சுமம்.

Tenure, *f.* நிலத் தாதீனம், சேர்மானம்.

Téorbe, *m.* *V.* Théorbe.

Ter, *adv.* மூன்று முறை, மூன்றும் முறை.

Tératologie, *f.* அவலக்ஷண ஊனங்களின் விளக்கம்.

Tercer, *v. a.* மூன்று முறை கொத்துதல்.

Tercet, *m.* முவ்வடிப் பாட்டு.

Térébenthine, *f.* ஓர் வகைப் பிசின், — தைலம், சுர தூபம்.

Térébintacées, *f. pl.* மரங்களில் ஓர் இனம்.

Térébinthe, *m.* ஓர் பிசின்—தைலந் தருமரம்.

Térébrant, *adj.* துவார மிடும், குத்துகிறதுபோல் வலி கொடுக்கும்.

Térébration, *f.* பிசின் வடிதற்கான மரத்துக்காயம்,— பொத்தல்.

Téréniabin, *m.* (பெர்சியராச்சியத்தில்) ஓர் செடிச்சாரம்.

Térès, *m.* நாக்கப் பூச்சி.

Tergal, aux, *adj.* முதுகைப் பற்றிய, முதுகு சம்பந்தமான.

Tergéminé, *adj.* ஆறு சிற்றிலையாய்ப் பிரிந்த (இலை).

Tergiversation, *f* சாக்கு போக்கு, இருமனம், மாறுபாடு, போக்கு, நாக்குப் புரட்டு, விங்களம், மக்களிப்பு, மனசு பொருந்தின தாமதம், தத்தளிப்பு, குதப்பம்.

Tergiverser, *v. n.* போக்கு தேடுதல்,— சொல்லுதல், இருமனமாதல், மக்களித்தல், விங்களித்தல், நாக்குப் புரட்டிப் பேசுதல், மல்லாந்து கொள்ளுதல், மாறுபாடு பண்ணுதல், பேதலித்தல், தத்தளித்தல், சுற்று முட்டாய்ப் பேசுதல், மழுப்புதல்.

Terme, *m.* முடிவு, கடை, கடைசி, இறுதி, அந்தம், அவசானம், அவதி, அறுதி, இட்டறுதி, பரியந்தம். ‖ எல்லை, எல்லைமானம், மட்டு. ‖ கெடு, தவணை, வயிதா. ‖ கந்தாயம், மூன்றுமாச கொடைக் கூலி, தண்டாயம். ‖ பேறுகாலம். ‖ சொல், வார்த்தை, மொழி, பதம். ‖ வாக்கியத்தின் எழுவாய்,— பயனிலை. ‖ பரிபாஷை சங்கேதம், குழூஉக்குறி. ‖ (en logique) பதம், பட்சம். ‖ (en algèbre) உறுப்பு. ‖ (en arithmétique) இராசி, கணக்கு. ‖ மும்மடி நியாயத்தின் ஒவ்வோர் வாக்கியம்; — பாதம். ‖ (அக்கியானிகளுள்) எல்லைச்சிலை, எல்லைகளின் பொய்த்தேவன். ‖ *pl.* அந்தஸ்து, தன்மை; être comme un—அலைசயாதிருத்தல்; le—est échu கெடுவாச்சுது; il doit 3 termes மூன்று தவணை கொடைக்கூலி அவனிறுக்க வேண்டியது; mesurer ses — எச்சரிக்கையோடே பேசுதல்; être en bons — avec quelqu'un ஒருவனோடு நல்ல தன்மையாயிருத்தல்; grand, petit, moyen — d'un syllogisme பூர்வ—, உத்தர—, மத்திய பதம்,— பட்சம்,— moyen சகடு, சராசரி, தாமாஷா, எற்றக் குறைச்சல், குறை நிறை.

Terminaison, *f.* முடிவு, கடைசி, இறுதி, ஈறு, ஈற்றசை, விகுதி, பிரத்தியயம்.

Terminal, e, *adj.* உச்சியில்—, முடிவிலுள்ள.

Terminalier, *m.* Terminalia, ஓர் மரம்;— bilirica தான்றி மரம், அம்பலத்தி; son fruit தான்றிக் காய்;— catapta அமந்தி மரம்; — chebula கடு, அரிதகி, அக்கந்தம்; son fruit கடுக்காய்; sa racine கடுக்காய் வேர், கடுவேர், அரோணுகம்; sa fleur ஆமாகோளா, கடுக்காய்ப் பூ; — tomentosa, alata மருதம், மருது, மருத மரம், அருச் சுனம், ககுபம்.

Terminé, *part.* தீர்ந்த, முடிந்த.

Terminer, *v. a.* முடித்தல், தீர்த்தல், தீர்மானித்தல், நிறை வேற்றுதல், ஒழித்தல், முடிவு—, மட்டு —, எல்லை கட்டுதல்,— போடுதல், வரையறுத்தல், அறவுளி பார்த்தல், அறவிதியாய்ப் பார்த்தல், ஊடறுத்தல், ஓரிசு—, ஓர்சல் பண்ணுதல், பைசலாக்குதல், எல்லை—, எல்லை மானமாதல். ‖ se — முடிதல், தீர்தல், ஒழிதல், முற்றுதல், நிறை வேறுதல், சேர்தல், அடுத்திருத்தல், அயலாயிருத்தல், ஈறு—, விகுதியாதல்.

Terminologie, *f.* பரிபாஷை விளக்கம், சொற்பொருள் நூல்.

Terminus, *m.* ஓர் இருப்புப் பாதையில் கடைசி ஸ்டேஷன்.

Termite, *m.* (fourmi blanche), கறையான். செல், செல்லு, சிதல், சிதலை, சிதள், சீ, யாழல்: ailé ஈசல், leur tertre புற்று, அளை, குழைச்சி, leur nid சோறு, புற்றுஞ் சோறு, leur mère ஆணிச்சீ, செல்லுப் பூச்சி.

Ternaire, *adj.* மூன்றாகிய.

Terne, *adj.* மங்கலான, காந்தியில்லாத. || *m.* கூடவந்த மூன்று திருவுளச் சீட்டுகள், இரட்டை மூன்று இலக்கம், ஓர் வரிசையில் மூன்று இலக்கம். || *pl.* இருக்கால், இரு மூன்று.

Terné, *adj.* மூன்று மூன்றா யிருக்கிற.

Terni, *part.* காந்தியற்ற மங்கிப்போன.

Ternir, *v. a.* மங்குவித்தல், கறை—, மாசு — மங்கப் பண்ணுதல், காந்தியழித்தல், பங்க—, அசுத்தப் படுத்துதல். || se — மங்குதல், மழுங்குதல், காந்தி யற்றுப்போதல்.

Ternissement, *m.* மங்கப் பண்ணுதல், மழுங்கச் செய்தல்.

Ternissure, *f.* மங்கின தன்மை, பங்கப்படுத்துங் கிரியை.

Teroulle, *f.* நிலக்கரிக் குறிப்பான கருமண்.

Terpsichore, *f.* நடன கலைமகள்.

Terrage, *m.* தன் துரைத்தன நிலவிளைவின் பேரிற் சுதந்திரம், ஷை சுதந்திர முள்ளவன் Terrageau என்னப்படும். || களிமண்ணாற் சர்க்கரை வெள்ளையாக்குதல்,— புடவை யழுக்கு போக்குதல், முந்திரிகைக்குப் புது மண் போடுதல்.

Terrain, *m.* நிலம், மண், பூமி, தரை. || இடம், ஸ்தலம். || மண்ணடுக்கு. || தனிப்போரிடம் ; ménager le— தனக்கிருக்கிற கொஞ்சம் நில முபயோகித்தல், தனக்கிருக்கிற வகைகளை விமரிசையா யுபயோகித்தல் ; être sur son — தான் பேசுகிற காரியங்களை நன்றாயறிதல் ; connaître le — தான் பேசுகிற மனுஷர் குணங்களை நன்றாயறிதல் ; gagner du — தலைப்படுதல், — எடுத்தல், முன்னிடுதல் ; perdre du— பிந்துதல், தோற்றல், நிலை இழத்தல், பின்வாங்குதல் Les Indiens comptent 5 espèces de terrains ஐந்திணை ; savoir குறிஞ்சி terrain montagneux ; பாலை — stérile ; முல்லை — de forêts ; மருதம் — cultivé ; நெய்தல் —maritime ou salé.

Terramare, *f.* இத்தாலி தேசத்தில் எருவாக உபயோகிக்கப்படும் நவச்சாரங் கலந்த மண்.

Terrasse, *f.* அரமியம், நிலாமுற்றம், தளம், மேற்றளம், மெத்தை, தோட்டத்தில்—, உப்பரிகையில் விலாசமான விடம், மண்ணணை, குவித்த மண், ஆலிந்தம், நாட்டுப் படத்தின் முன்பக்கம். || தூண் பாதத்தின் மேற்புறம் ; travaux de— மண் கொண்டுபோக்கும் வேலை.

Terrassement, *m.* மண் குவித்தல், —கொண்டுபோதல்,— வேலை செய்தல்.

Terrasser, *v. a.* மண்ணணை போடுதல், மண் குவித்தல்,— கொண்டுபோதல். || தரையில் விழத்தள்ளுதல், தரையிற் போடுதல், விழத்தாட்டுதல், வீழ்த்துதல், வெகு பயப்படுத்துதல், திகிற்படுத்துதல், தைரியங் குலைத்தல், தோற்கடித்தல். || se — மண்ணணை போட்டு அரண் கட்டுதல்.

Terrassier, *m.* மண்ணணை—, அரமியம்—, மெத்தை கட்டுகிறவன், மண் மெத்தை யாக்குவோன், மண் வேலைக்காரன், ஒட்டன்.

Terre, *f.* பூமி, பூகோளம், பூ மண்டலம், புவி, புவனம், உலகம், சகம், காசினி, அவனி, ஞாலம், அம்புவி, பிருதுவி, மகீ, மர்த்தியம். || மண், நிலம், தரை, வயல், காணி.. || காணியாக்ஷி, தேசம், நாடு, சீமை. || உலகம், மனுஷர், திரளான சனம். || கல்லறை, சமாதி. || கரை, கடலோரம். || உலக சுகபோகம். || (அஞ்ஞானத்தில்) பூமி தேவி, பூமியின் பொய்த் தேவதை: —à dégraisser உழை மண் ; — à riz நன் செய் ; — à menus grains புன் செய் ; —à foulon சவடு, சவட்டு மண், பூவழலை, உழை—, உவர்—, சார மண், தெள்ளிச்சி, நில வீரியம் ; — cuite சுட்ட மண் ; — non cuite பச்சை மண் ; — libre d'impôts சர்வ மானியம் ; — natale சென்ம பூமி; remuer ciel et— உபாயமெல்லாஞ் செய்தல் ; être en — கல்லறையி லிருத்தல் ; jeter à — தரையில் விழத்தாட்டுதல் ; battre un homme à — தரையில் விழுந்தவனை—, எதிர்க்கக் கூடாதவனை யடித்தல் ; longer, côtoyer la— கரை நெடுகச் செல்லுதல் ; aller — à — கரை விடாதிருத்தல், ஆபத்துக்குள் போகா திருத்தல், உயரா திருத்தல் ; prendre— கரை பிடித்தல் ; perdre— கரை காணாதிருத்தல், நதியினடி தொடாதிருத்தல் ; laisser tomber à — சட்டை பண்ணாதிருத்தல் ; — du Japon

கத்தக் காம்பு, காசு,— க்கட்டி, இறுக்குகிற ஓர்வகை பிசின்.

Terre-à-terre, *m.* முன்னாகச் சிறுகுதிப்பு, ஓர் நடன நடை. [மண்.

Terreau, *m.* விளை நிலம், எருவுள்ள

Terreauter, *v. a.* எருவுள்ள மண் போடுதல், மண்ணால் மூடுதல்.

Terrement, *m.* ஜலப் பாய்ச்சலால் கொண்டு வரப்படும் மண்ணால் பள்ள நிலத்தை உயரமாக்குதல்.

Terre ferme, *f.* கண்டம், தீவல்லாத தேசம். || தென்னமேரிக்காவில் கொலும்பி தேசம்.

Terre-mérite, *f.* பொடி யாக்கப்பட்ட மஞ்சள்வேர்.

Terre-Neuve, *f.* வட அமேரிக்காவில் ஓர் தீவு,— மணல் மேடு.

Terre-neuvien, *m.* ஷை மணல் மேட்டில் மீன் பிடிக்கப் போகிறவன்,— போகிற கப்பல்.

Terre-plein, *m.* குவித்த மண் பரப்பு, சுவரால் தாங்கப்பட்ட மண் மேடு.

Terrer, *v. a.* புதுமண் போடுதல்; — une étoffe புடவையிற் களிமண் போடுதல்; — du sucre களிமண்ணாற் சர்க்கரை வெள்ளையாக்குதல். || *v. n. ou* se — பூமிக்குள் ஒளிதல்,— பதுங்குதல், அணை—, பொந்தறுத்தல், குழிவெட்டுதல், மண்ணணைக்குப் பின் ஒளிதல். [ஸ்த்தீன் தேசம்.

Terre sainte, *f.* யூதேயா—, பலே

Terrestre, *adj.* பூமியின், மண்ணாகிய, பூமியிலுள்ள,— சீவிக்கிற. || இவ்வுலக, உலக, பிரபஞ்ச, இலௌகீக, பௌதீக.

Terre-tremble, *m.* *mieux* Tremblement de terre, பூமி நடுக்கம், பூமியதிர்ச்சி.

Terreur, *f.* பயங்கரம், திகில், திகைப்பு, பயம், அச்சம், திடுக்கம், துணுக்கு, திடுக்காட்டம், கெடி, அரிட்டானகம், கிலி, பயானகம், பரிகம்பம், பீஷணம். || பைரவம், வீமம், வைரவம், பீதி. || பயங்கரம் வருவிப்போன், பயங்கரக் காலம்.

Terreux, euse, *adj.* மண்ணுள்ள,— கலந்த, — நிறைந்த; goût — மண்சுவை; visage — மண் நிறமான முகம்.

Terrible, *adj.* பயங்கரமான, அச்சத்துக்குரிய, பயம் வருவிக்கிற, திகில் கொடுக்கிற, அகோரமான, பீம. || அதிசயமான, அபூர்வ, கனத்த, மிகவும் பெரிய.

Terriblement, *adv.* பயங்கரம்—, அகோரம்—, அதிசயமாய், மிகவும்.

Terrien, enne, *adj. s.* மிகுந்த நில காணியாக்ஷியுள்ள, உள்ளவன்,— வள்.

Terrier, *m.* குழி, வளை, பொந்து. || *adj.* chien — நரி முசல் குழிகளில் நுழைகிற நாய்; papier — ஓர் துரைத்தன நில வட்டவணை,— இடாப்பு.

Terrifier, *v. a.* பயங்கரம்—, பயமுறுத்துதல்,— வருவித்தல், திடுக்கிடப் பண்ணுதல், வெருட்டுதல், அச்சுறுத்தல். || மண்ணாக்குதல்,— கூட்டுதல், மண்ணாக மாற்றுதல். || se — மண்ணாதல், மண்ணாகப் போதல்.

Terrine, *f.* மண் பாத்திரம், சாடி, அண்டா, தாழி, குண்டான், ஷை பாத்திரத்தில் சமைக்கும் — பரிமாறும் பதார்த்தம். [ரம்,— சாடி.

Terrinée, *f.* நிறைந்த மண் பாத்தி

Terrir, *v. n.* முட்டையிடக் கரையில் வருதல் (ஆமை), கரை பிடித்தல், — சேர்தல்.

Territoire, *m.* (ஆதீன-சேர்ந்த) தேசம், நாடு, சீமைப்பற்று, இராச்சியம்.

Territorial, e, *adj.* ஷை தேசத்து— நாட்டு.

Territorialement, *adv.* ஓர் தேசத்தைச் சேர்ந்த விஷயங்களைக் குறித்து.

Terroir, *m.* பூமி, மண், நிலம், தரை: sentir le — விளைந்த பூமிச் சுவை—, தன் நாட்டுக் குறைகளைக் கொண்டிருத்தல்.

Terroriser, *v. a.* பய முறுகிறது.

Terrorisme, *m.* பயங்கர காலம், வெருவந்த ஆளுகை,— கோட்பாடு.

Terroriste, *m.* பயங்கரக்கட்சியான்.

Terser, *v. a. V.* Tercer.

Tertiaire, *adj.* மூன்றாந் தரத்து: période— பூமி யடுக்குகளின் மூன்றாங் கால வகுப்பு; terrain— ஷை வகுப்பில் அடுக்கான நிலம். || *s.* மூன்றாஞ் சபையான்,— ஆள்.

Tertio, *adv.* மூன்றாவது.

Tertre, *m.* மேடு, மேடை, திடர், திட்டை, திப்பை, மிசை, வேதி, உயரம், மண் குவியல். [வேத பாரகர்.

Tertullien, *m.* ஓர் சிறந்த கிறீஸ்து

Tes, *pro. pl. de* ton, உன், உன்னுடைய.

Tessin, *m.* சுவிஸ் தேசத்தில் ஓராறு, ஓர் நாடு.

Tessère, *f.* தந்தத்தில் அல்லது உலோகத்தில் செய்யப்பட்ட பிரவேசச் சீட்டு.

Tessiture, *f.* குரலுக்கு இனிமையான சப்த சேர்க்கை; ஓர் சங்கீதத்தில் அடிக்கடி கேட்கப்படுஞ் சுரம்.

Tesson, Têt, *m.* கலத்தின்—, உடைந்த—, ஓடு, உடைந்த கலவோடு, சில்லு, சில்லி, ஓட்டாங் கச்சி, ஓட்டாங் கிஞ்சில், கலவாங் கட்டி, கச்சி.

Test, *m.* ஓடு, மீனோடு, குகை, புடமிடும் பாத்திரம், *V.* Têt: serment du — உரோமான் திருச்சபையை மறுதலிக்குஞ் சத்தியம்.

Testacé, *adj.* ஓடுள்ள. || *m. pl.* ஓடுள்ள மீன்கள், கிளிஞ்சில்கள், மட்டிகள் முதலியவை.

Testament, *m.* மரண சாதனம்,— சாசனம், சாம் வசனம், ஏற்பாடு ; l'ancien — பழைய ஏற்பாடு, புராந்திம காண்டம் ; le nouveau — புது ஏற்பாடு, பச்சிம காண்டம்.

Testamentaire, *adj.* மரண சாதனத்து,— சாதனத்திற் குறிக்கப்பட்ட.

Testateur, trice, *s.* மரண சாதனஞ் செய்தவன்,— பண்ணுகிறவன்,— வள்.

Tester, *v. n.* மரண சாதனம் பண்ணுதல்.

Testicule, *m.* அண்டம், பீசம், விருஷணம், கோசம், முஷ்கம், பொத்தி, விதை.

Testif, *m.* ஒட்டக மயிர்.

Testimonial, e, *adj.* அத்தாட்சி—, உருசுவான, அறிவிக்கிற, சாட்சி சொல்லுகிற.

Testimonialement, *adv.* சாட்சிகளின் மூலியமாய் ஓர் காரியத்தை உருசுபடுத்தல்.

Teston, *m.* பழைய வெள்ளி நாணயம்.

Testonner, *v. a.* மயிர் சுருட்டுதல்.

Têt *ou* Test, *m.* தலை மண்டை. || ஓடு, உடைந்த ஓடு, கலவோடு, கச்சி, ஓட்டாங் கச்சி. || மீனோடு, ஆமையோடு. || உமி. || தலைக்காணி யுறை. || குகை, புடமிடும் பாத்திரம்.

Tétanie, *f.* தசை நரம்புகளின் சுருக்கத்தா லுண்டாகும் வலி.

Tétanique, *f.* சன்னி சம்பந்தமான, இசிவு சம்பந்தமான.

Tétanos, *m.* சன்னி, இசிவு சன்னி.

Têtard, *m.* வடிவற்ற தவளைக் குஞ்சு, வாற்பேத்தை. || தலை வெட்டின மரம். || ஏர்க்கால் நுனி. || ஓர் மீன்.

Tête, *f.* தலை, சிரசு, சிரம், சென்னி. || தலை மண்டை, மஸ்தம். || மான் கொம்பு. || சிகரம், உச்சி, துவக்கம், முகப்பு, முன் பக்கம்,— புறம், முன்னணி. || முதற்றரம், உத்தம மானது. || முதன்மை, தலைமை. || விருத்தமான எலும்பின் நுனி. || புத்தி, அறிவு, விவேகம். || இச்சை, மனசு, குணம். || ஆள் : — levée அஞ்சாமல்; — baissée யோசனையின்றி : — de vin முதற்றர விரசம் ; — de clou ஆணித் தலை,— சடை,— குடை, தறை; être à la — d'une armée படைக்குத் தலைவனா யிருத்தல்; mettre à la — de தலைவனாக ஸ்தாபித்தல் ; — à — இருவர் தனியே ; porter, monter à la — தலை மயக்குதல் ; perdre la — புத்தி மயங்குதல் ; — chaude வேக குணமுள்ளவன்,— வள் ; à sa — தன்னிச்சையின்படி ; tenir, faire — எதிர்த்தல், எதிர் நிற்றல்; troupeau de 100 — நூறு மிருகமுள்ள மந்தை.

Tête-à-tête, *m.* தனிச் சம்பாஷணை.

Tête-de-nègre, *adj.* கருகிய, காப்பிரி நிறமுள்ள.

Tetée, *f.* புதிதாய்ப் பிறந்த குழந்தை ஒரு தடவையில் குடிக்கும் பால்.

Teter, Téter, *v. a.* பால்—, முலைப்பால்—, முலை குடித்தல், முலை யுண்டல், ஒஞ்சி யுண்டல் : donner à— பால்—, ஒஞ்சி கொடுத்தல், முலைப்பா லூட்டுதல்.

Têtière, *f.* குழந்தை குல்லா, கடிவாள வார், பரிமத்தக வார்.

Tétin, *m.* முலைக் கண்,— க்காம்பு.

Tetine, *f.* செருத்தல், மடி, ஆபீனம் முலைப்பால், கறக்குங் குழல். || கவசத்திற்பட்ட அடி,— தாக்கு.

Tétoir, *m.* ஊசி கொண்டைக் குழி.

Teton, *m.* முலைக் கண், ஒஞ்சி, ஸ்தனசிகை,— முகம்,— விருந்தம், ஸ்தனுக்கிரம், பிப்பலகம்:—de Vénus ஓர் கனி.

Tétracorde, *m.* நாலு நரம்பியாழ்,— வீணை.

Tétradactyle, *adj.* நாலு விரலுள்ள.

Tétradrachme, *m.* அஞ்சணா அணு பெறும் நாணயம்.

Tétradynames, *adj. f. pl.* ௪-பெரிய அல்லியும்-௨-சின்ன அல்லியுமுள்ள பூண்டுகள்.

Tétradynamie, *f.* ௬ பூண்டினம்.

Tétraèdre, *m.* சரியொத்த ௪-திரிகோணப் பொருள்.

Tétragone, *adj. et m.* சதுர்கோணமுள்ள. ‖ சதுர்கோணம், சதுர்ச்சிரம்.

Tétragynie, *f.* ௪-பெண் தாதுள்ள பூண்டினம்.

Tétralogie, *f.* வெகுமதி பெறுவதற்கான நாலு வாசாப்புச் சேர்க்கை.

Tétramètre, *m* ௪-சீரடி.

Tétrandrie, *f.* ௪-பூந்தாதுள்ள பூண்டினம். [மீன்கள்.

Tétraodons, *m. pl.* ௪-பல்லுள்ள

Tétrapétalé, *adj.* ௪-இதழுள்ள.

Tétraptère, *adj.* ௪-சிறகுள்ள.

Tétrarchat, *m.* காலரசு, காலிராச்சிய பரிபாலனம்,— பரிபாலனக் காலம்.

Tétrarchie, *f.* காலரசு, காலிராச்சியம், பிரிந்த இராச்சியத்துக் கால்வாசி, — பங்கு, நால்வ ராளுகை.

Tétrarque, *m.* காலிராச்சியத் தரசன்,— அதிபதி, காற்பங்கு தேசாதிபதி.

Tétras, *m.* ஓர் பக்ஷி, காட்டுச் சாவல்.

Tétrastyle, *m.* வரிசையாக ௪-தூண்தாங்கு மாலயம்.

Tetrasyllabe, *adj.* நாலசையுள்ள.

Tétrodon, *m. V.* Tétraodons.

Tette, *f.* (மிருக) முலைக்காம்பு.

Têtu, e, *adj.* முரண்டுத் தனமுள்ள, முரட்டு, முரண்டான, பிடிவாதம்—, மூர்க்கத் தனமுள்ள, தறு தலையான, அடங்காத. ‖ *s.* முரடன், சண்டி, தறுதலையன், மூர்க்கன், சுறட்டன், தடியன், பிடிவாதி. ‖ *m.* பெரிய சுத்தி, ஓர் மீன்.

Teuf-teuf, *m.* மோட்டோர் வண்டி சப்தம்.

Teutonique, *adj.* அல்மஞ் தேசத்து; ordre — அல்மஞ் தேசத்தில் ஓரிராவுத்தர் சபை.

Teutons, *m. pl.* அல்மஞ் தேசத்து ஓர் பூர்வீக சனம்.

Texel, *m.* ஒல்லந் திராச்சியத்தில் ஓர் தீவு.

Texte, *m.* பிரசங்க மூல—, மூல வாக்கியம், ஆசிரியன் சுயவார்த்தை,— வாக்கியம், உதாரணம்; gros—, petit—, இருவகை அக்ஷரங்கள். [வுக்குரிய.

Textile, *adj.* நூலாகத் தக்க, நெச

Textuaire, *m.* மூலவாக்கிய புஸ்தகம். ‖ *adj.* மூல வாக்கியத்துக் கடுத்த.

Textuel, elle, *adj.* மூல வாக்கியமுள்ள,— ஆகிய. [முள்ள படி.

Textuellement, *adv.* மூல வாக்கிய

Texture, *f.* நெசவு, நெய்தல். ‖ தொடர்ச்சி, பொருத்தம், இசைவு, பின்னல்.

Thabor, *m.* கலிலே தேசத்தில் தபோர் என்னு மலை, சேசுநாதர் மறு ரூபமான மலை. *V.* Tabor.

Thaler, *m.* அல்மஞ் தேசத்தில் ஒன்றேகால் ரூபாய் நாணயம்.

Thalie, *f.* நாடகத்துக் கலைமகள்; les jeux de— நாடகம். [ணு.

Thâna, *m.* (salle de police) ட்டா

Thaumaturge, *m.* புதுமை செய்கிறவன். [தேத் தண்ணீர், தேய் நீர்.

Thé, *m.* தேயிலை, தேயிலைச் செடி,

Théandrique, *adj.* நர தேவனுடைய, தேய்வீக மனுஷீகத்து. [நியாசி.

Théatin, *m.* தேயத்தின் சபைச் சந்

Théâtral, e, *adj.* நாடக சாலையின், — சாலைக் கடுத்த: année— நாடக மாடும் வருஷகாலம். [முறையாய்.

Théâtralement, *adv.* நாடக சாலை

Théâtre, *m.* நாடக—, அபிநய சாலை,— மேடு,— மேடை. ‖ அபிநயன் தொழில், நாடகச் செய்யுள்,— வித்தை, — ச்சேர்க்கை. ‖ இடம், ஸ்தலம், கழகம், களரி, அரங்கம், விசாலமாய்க் காணப்படும்—, உயர்ந்த விடம். ‖ மரக்குவியல்: roi de— அதிகாரமற்ற இராசா: quitter le — அபிநயன் தொழிலை விடுதல்;— de la guerre சண்டை நடக்கு மிடம்; coup de — உருக்கத்துக்கு — பயத்துக்குரிய சடுதியான சம்பவம்.

Thébaïde, *f.* (எஜீப்து தேசத்தில்) தேப் நகர நாடு,— வனாந்தரம். ‖ ஓர் காவியம்,— நாடகம். ‖ ஏகாந்தம், தனிமையான விடம்.

Thébain, e, *adj. et s.* தேப் நகரத்து,— நகரத்தான்,— நகரத்தாள்.

Thèbes, எஜிப்த்து—, கிரேஸ் தேசத்தில் தேப் நகரம். [ரம்.

Théière, *f.* தேத் தண்ணீர்ப் பாத்தி

Théiforme, *adj.* தேத் தண்ணீர் முறையான.

Théisme, *m.* ஏகதெய்வ வாதம்,— மதம், தெய்வ முண்டென்கிற போதனை, ஏகேச் சுரவாதம், பலனு மாக்கினையு மளிக்குங் கடவுளுண்டென்னுங் கோட்பாடு.

Théiste, *m.* ஏக தெய்வவாதி,— மதத்தான், ஒரே தெய்வத்துப் பத்தன், ஏகேச் சுரவாதி, ஆஸ்திகன், தெய்வமுந் தேவாளுகையும் ஒத்துக் கொள்ளுகிறவன்.

Thématique, *adj.* மொழி பெயர்த்தலைச் சேர்ந்த, சங்கீத விஷய சம்பந்தமான.

Thème, *m* வினை மூலம். || பொருண்மை, விஷயம், பிரசங்கத்தின் பொருண்மை, மெய்ப் பிக்கும்—, விளக்கும் வாக்கியம். || சுய பாஷையை மொழி பெயர்த்தல், மொழி பெயர்த் தலப்பியாசம். || விகற்ப மெழுது மிராகம். பிறந்த காலத்தில் கிரக நிலை: faire son — en deux façons இரு வகையாய் ஓர் காரியஞ் சொல்லுதல்; faire à quelqu'un son — ஒருத்தனுக்குப் பேச்சும் நடக்கையுங் கற்பித்தல்.

Thémis, *f.* நீதியின் பொய்த்தேவி. நீதி. || கன்னி நக்ஷத்திரம்: ministre de — நடுவர்.

Thénar, *m.* பெரு விரலை மடக்கு நரம்பு.

Théocratie, *f.* தெய்வீக ராசரிகம், — இராசாங்கம்,— ஆளுகை, தேவாதிபத்தியம், தேவரசாட்சி.

Théocratique, *adj.* தெய்வீக ராசரிகத்து, — இராசாங்கத்து, தேவாளுகைக் கடுத்த.

Théodicée, *f.* தேவ நீதி, தேவ சுவாப— நீதி விளக்கம்.

Théodolite, *m.* நில அளவைக் கருவி.

Théogonie, *f.* பொய்த்தேவ ருற்பத்தி,— உற்பத்தி விளக்கம்,— தேவர் பிறப்புச் சரித்திரம்,— வமிச அட்டவணை.

Théologal, e, *adj.* தெய்வத்துக் கடுத்த, சர்வேசுரனைச் சேர்ந்த. || *m.* வேத சாஸ்திர வாத்தியார்.

Théologale, *f.* வேத சாஸ்திர வாத்தியா ருத்தியோகம்.

Théologie, *f.* வேத சாஸ்திரம்,— நூல், தெய்வத்துக் கடுத்த சாஸ்திரம், வேத சாஸ்திரி போதனை, வேத சாஸ்திரம் படிக்கும் பள்ளிக்கூடம், வேத சாஸ்திர புஸ்தகம்.

Théologien, *m.* வேத சாஸ்திரி,— சாஸ்திர வித்தியார்த்தி, வேத பாரகன், — நூலோன்,— சாஸ்திர மாணாக்கன்.

Théologique, *adj.* வேத சாஸ்திரத்துக் கடுத்த.

Théologiquement, *adv.* வேத சாஸ்திர முறையாய்,— சாஸ்திரத்தின் படியே.

Théophanie, *f.* தேவ காட்சி, தெய்வ தரிசனை.

Théophilanthrope, *m.* ஓர் இயல் வேத மதத்தான்.

Théophilanthropie, *f.* ஷை வேத மதம்.

Théorbe, *m.* ஓர் வீணை.

Théorème, *m.* மெய்ப்பிக்கத் தகும் வாக்கியம், சூத்திரம், துருவம், நியாயப் பிரசினம்.

Théoricien, *m.* அகரும சாஸ்திரி, அப்பியாசமற்ற நூலோன்.

Théorie, *f.* அகரும சாஸ்திர வெறும்படிப்பு,— உத்தேசிப்பு,— எண்ணம், சாஸ்திர உணர்வு. || போரப்பியாச—, கவாத்து மூல பாடங்கள்,— பாடங்களின் படிப்பிப்பு.

Théorique, *adj.* அகரும, அகரும படிப்புக் கடுத்த, வெறும் படிப்பு—, உத்தேசிப்பான, சாஸ்திரத்துக் கடுத்த: leçons — et pratiques படிப்பு மப்பியாசமு மடங்கிய பாடங்கள்.

Théoriquement, *adv.* அகரும விதமாய்,— சாஸ்திரமாய், சாஸ்திர மூல விதிகளின் படியே.

Théoriste, *m.* அகரும சாஸ்திர நூலோன்.

Théosophe, *m.* மருளனன ஞானி.

Théosophie, *f.* புதிதாய் உண்டாக்கப்பட்ட ஓர் வேத சமயம்.

Thérapeutes, *m. pl* யூத ஞானிகள்.

Thérapeutique, *adj.* ஷை ஞானிகளுக் கடுத்த. || *f.* பரிகாரம், வைத்திய சாஸ்திரம், பதார்த்தசார நூல்.

Thériacal, e, *adj.* விஷ மருந்துக் கடுத்த,— மருந்தாகிய.

Thériaque, *f.* ஓர் விஷ மருந்து.

Théridion, *m.* ஓர்வித சிலந்தி.

Thériotomie, *f.* மிருக அந்தச் சத்திரம்.

Thermal, e, *adj.* சூடுள்ள, உஷ்ணமான.

Termantide, *f.* பூமியுட் சூடான பொருள்.

Thermantique, *adj. et m.* திரோகச் சூடு கிளப்புகிற,— கிளப்பு மருந்து.

Thermes, *m. pl.* வெந் நீர்—, ஸ்நானம், ஸ்நான வீடு.

Thermidor, *m.* உஷ்ண மாதம், (குடியரசின்) பதினோரா மாதம்.

Thermolampe, *m.* புகை தீப்பற்றிப் பிரகாசிக்குஞ் சூட்டடுப்பு.

Thermomètre, *m.* உஷ்ணத் தளவைக் கருவி, சீதோஷ்ண பிரமாணக் கருவி.

Thermométrique, *adj.* உஷ்ணத் தளவைக் கருவிக் கடுத்த,— கருவியாற் செய்த,— கருவியா லறிகிற.

Termopyles, *m. pl.* தெஸ்சலி தேசத்தில் பேர்பெற்ற ஓர் கணவாய்.

Thermoscope. *m.* ஆகாயகுண வித்தியாசத் தளவைக் கருவி.

Thersite, *m.* அவலக்ஷணம் — கோழைத்தனம் — காய்மகார முள்ள மனுஷன். [ளைக் குவித்தல், நிக்ஷேபித்தல்.

Thésauriser, *v. n.* பொக்கிஷங்க

Thésauriseur, euse, *adj. et s.* பொக்கிஷங்களைச் சேர்க்கிற,— வன்,— வள்.

Vade, *f*. சூதின் பந்தயம்.

Vademanque, *f*. பெட்டியின் பணக்குறைவு.

Vade-mecum, *m*. விட்டுப் பிரியாதது, பிரியாத துணை,— பொருள்.

Va-et-vient, *m.* போய்த் திரும்புங் கருவி, ஆட்டம், முன் பின் ஆட்டம், திரிகிறவன், சனங்களின் போய்வருதல், அங்கு மிங்கு மசைவு, போக்கு வருத்து, ஆறு கடக்குந் தோணி, ஆற்றுத் தோணியிழுக்குங் கயிறு; le—de l'opinion உலோக எண்ணத்தின் நிலையாமை.

Vagabond, e, *adj.* அங்கங்கே திரிகிற, சும்மா திரிகிற, நிலையற்ற. || *m.* இடங் கெட்டவன், நாடோடி, போக்கிரி, தப்பிலி, தேசாந்தரி, பரதேசி, அங்கிடுதத்தி, காக்கன் போக்கன், ஆடு மாலை.

Vagabondage, *m.* போக்கிரித்தனம், அலைந்து திரிகை, அடம், அடனம்.

Vagabonder, *v. n.* அங்கங்கே திரிதல், போக்கிரித்தனம் செய்தல்.

Vagin, *m.* கருப்பை வழி.

Vaginal, e, *adj.* கருப்பை வழிக்கடுத்த. || உறை வடிவான.

Vaginant, e, *adj.* உறை வடிவான.

Vagir, *v. n.* (குழந்தை—முயல்) கூவுதல், அழுதல், கத்துதல், அலறுதல்.

Vagissant, e, *adj.* (பட்சை குழந்தைபோல்) கூவுகிற, அழுகிற.

Vagissement, *m.* (குழந்தை—முயல்) கூவல், அழுகை, கத்தல், அலறுகை.

Vague, *f.* அலை, திரை, உல்லோலம், தரங்கம், புனற்றிரை, புணரி, அரல், விசி.

Vague, *adj.* நிச்சயம்—, திட்டம்—, உறுதி—, ஸ்திரம்—, நிலைமையற்ற, எல்லையற்ற, தெளிவற்ற, குறிப்பற்ற, பயிரிடாத. || *m.* அந்தரம், திட்ட மில்லாதது, ஐயம், மண்டையின் ஓரிணை நரம்பு.

Vaguement, *adv.* திட்டம்—, தெளிவில்லாத—விதமாய்.

Vaguemestre *m.* படைச் சாமான் கூட்டிக்கொண்டு போகும் உத்தியோகஸ்தன், சேவகர் காகிதங்களைப் பிரித்துக்கொடுக்கு முத்தியோகஸ்தன்.

Vaguer, *v. n.* அங்கங்கே திரிதல்.

Vaguesse, *f.* இலேசான—, ஆகாய நிறம்.

Vaidasse, *f. V.* Védasse.

Vaïgoundam, *m.* (paradis de Vichnou) வைகுண்டம்.

Vaïguey, (rivière de Maduré) வைகை.

Vaigrer, *v. a.* மச்சுபோடுதல்.

Vaigres, *f. pl.* கப்பலுட் பலகை.

Vaillamment, *adv.* வீரமாய், சூரமாய், வீரியமாய்.

Vaillance, *f.* வீரம், வீர சூரம், வீரியம், சூரம், கட்டாண்மை, க்ஷாத்திரம், சுவிக்கிரமம், பராக்கிரமம், கெம்பீரம்.

Vaillant, e, *adj.* வீரம்—, வீர சூரம்—, வீரியம்—, பராக்கிரமமுள்ள, துணிவுள்ள, அஞ்சாத. || இருப்பு, ஆஸ்தி, உரொக்கம். || *adv.* உரொக்கம்—, இருப்பாய்.

Vaillantise. *f.* வீரச் செய்கை. || வீம்பு,— பேச்சு.

Vaille-que-vaille, *adv.* என்னமாயிருந்தாலும், என்ன விலையா யிருந்தாலும், என்ன வந்தாலும்.

Vain, e, *adj.* வீண், வீணான, வியர்த்தமான, விருதாவான, பலன்—, பிரயோசனமற்ற, உதவாத, செல்லாத, நிறைவேறாத. || ஆங்காரம்—, வீண் சலாக்கியம்—, செருக்கு—, வீம்புள்ள: terre — பயிரிடாத நிலம்; — gloire வீண் சலாக்கியம்; en— வீணாய், வீணில், வியர்த்தமாய், விருதாவில், அவசரமின்றி.

Vaincre, *v. a.* செயித்தல், வெல்லுதல், கெலித்தல், தோற்கடித்தல், செயம்—, வெற்றி கொள்ளுதல். || அடக்குதல், வசப்—, கீழ்ப்படுத்துதல். || மேல்கொள்ளுதல்,— படுதல், கடத்தல் || அமர்த்துதல், இணங்குவித்தல். || se — தன் பேரில் வெற்றிபெறுதல், தன் துர்க்குணங்களை யடக்குதல்.

Vaincu, *part* செயிக்க—, வெல்லப்பட்ட, தோற்ற, கோர்வையான; être — தோற்றல், தோர்த்தல், அபசய—, தோர்வைப்படுதல்.

Vainement. *adv.* வீணாய், வியர்த்தமாய், விருதாவில், பிரயோசன மில்லாமல், அவமாய், நிஷ்பலமாய்.

Vaines, *f. pl.* இலேசான பிழுக்கை.

Vainqueur, *m.* செயித்தவன், கெலித்தவன், அதிகரித்தவன், செயங் கொண்டவன், செயசீலன், செயசாலி, செயவீரன், வெற்றி வீரன்,— யாளன், வென்றோன், மேற் கொண்டவன். || *adj.* செயிக்கிற, வெல்லுகிற.

Vair, *m.* வெள்ளி நீலமான மெல்லிய உரோமத் தோல்.

Vairé, *adj.* ஷை தோல் போன்ற.

Vairon, *adj. m.* வெண் மண்டலமுள்ள, பல நிற—விதக் கண்ணுள்ள, வெண்கண்—, பூனைக் கண்ணுள்ள, சுவேத நேத்திர. ‖ *m.* பல நிறமுள்ள சிறுமீன்.

Vaisseau, *m.* பாத்திரம், கலம். ‖ கப்பல், மரக்கலம், நாவாய், திமில், தோணி, நவ்வு. ‖ (மிருகத்தின்—பூண்டின்) நரம்பு இரத்தத் தாரை முதலியது. ‖ உட்புறம், ஆலயம்; le—de l'État இராச்சியத்தின் ஆளுகை; le—du désert ஒட்டகம்.

Vaisselle, *f.* பீங்கான், வட்டில், சட்டி பானை, பாசனம்.

Val, *m.* (*pl.* Vaux) கணவாய், பள்ளம்.

Valable, *adj.* ஏற்கத்தக்க, தகுந்த, செல்லும், செல்லுமதி.

Valablement, *adv.* தக்க விதமாய்.

Valais, *m.* சுவிஸ் தேசத்தில் வலே என்னு நாடு.

Valant, *part. de* Valoir, பெறுமான.

Valachie, *f.* துர்க்கி தேசத்தில் வலக்கி தேசம்.

Valaque, *adj. et s.* வலக்கி தேசத்து,— தேசத்தான்,— தேசத்தாள். ‖ *m.* வலக்கி பாஷை.

Valence, எஸ்பஞ் தேசத்தில் வலான்சு நகர்,— இராச்சியம், பிராஞ்சி ராச்சியத்தில் பல நகரங்களாம்.

Valenciennes, பிராஞ்சி ராச்சியத்தில் வலன்சியேன் நகரம். ‖ *f.* அதிற் செய்யப்படுங் கவணி.

Valériane, *f.* இசிவவுஷத பூண்டு: Valeriana jatamansi, சடா மாஞ்சி, நமத்தம்.

Valet, *m.* ஊழியன், ஊழிய—, பணிவிடைக்காரன், சேவகன், நாடகத்தில் சூதுள்ள ஊழியன், சூது சடுதாசியில் ஒருருவம். ‖ கதவு சாத்துங் குண்டு. ‖ பிடித்திராவி, எத்தனம், தாங்கி. ‖ பீரங்கிச் சிம்பா;— de chambre வண்ணமகள்;— de pied பதாதி யூழியன்;— de chien நாய்க்காரன்; faire le bon— சுறுசுறுப்பு காட்டுதல்; âme de— நீச ஆத்துமம்; je suis votre— நீர் கேட்கிறதை நான் செய்யமாட்டேன், நாணதை விசுவசிக்கிறதில்லை.

Valetage, *m.* ஊழியம், பணிவிடை.

Valetaille, *f.* ஊழியர் கும்பல்,— கூட்டம்.

Valet-à-patin, *m.* வைத்தியன் குறடு.

Valeter, *v. n.* ஊழியனாய்த் திரிதல், பணிவிடை—, ஊழியஞ் செய்தல், நீச உபசரணை செய்தல்.

Valétudinaire, *adj. et s.* வழக்கமாய் வியாதியுள்ள, அசவுக்கியமுள்ள, வியாதிஸ்தன், நோவாளி, நோய்ஞ்சவன்.

Valeur, *f.* விலை, கிரயம், பெறுமதி, மதிப்பு, எண்ணம், கனம், அருமை, கணிசம். ‖ வீரம், வீர சூரம், பராக்கிரமம், சவுரியம், சூரம், பேராண்மை, உஞற்று, சூரதை, தீரத்துவம். ‖ செல்லும் பணம்,— உண்டியற் சீட்டு. ‖ ஏற்றக் குறைச்சல், ஏறக்குறைய. ‖ சொல்லின் அர்த்தம், பயன். ‖ பிரமாணம். ‖ (சுரத்தின்) மாத்திரை, தாளம்: ferme en— நன்றாய்ப் பயிரிடப்பட்ட குத்தகை நிலம்; marchandise en— நன்றாய் விற்கப்படுஞ் சரக்கு: attacher de la— எண்ணம் பண்ணுதல்; donner de la— à ce qu'on dit கவன மெழுப்ப ஊன்றி யுச்சரித்தல்; mettre des—en circulation உண்டியற் சீட்டுகளைப் பரம்புவித்தல்: faire la—de 2 câdams ஏறக்குறைய இரு காதவழி நடத்தல்; chercher la— de l'inconnue அவ்வியத் தராசியின் பிரமாணத்தைத் தேடுதல்.

Valeureusement, *adv.* வீர சூரமாய், வீரமாய்.

Valeureux, euse, *adj.* வீரம்—, சூரம்—, பராக்கிரமமுள்ள, வீரசூரமுள்ள.

Validation, *f.* செல்லுந் தன்மை—, உறுதிப்படுத்துதல்.

Valide, *adj.* செல்லத்தக்க, செல்லுகிற, பலனுள்ள, உறுதியுள்ள. ‖ சவுக்கியம்—, ஆரோக்கியமுள்ள, சத்துவமுள்ள.

Validé (la sultane), துலுக்கிராயன் தாய்.

Validement, *adv.* செல்லத்தக்க விதமாய்.

Valider, *v. a.* செல்லுந் தன்மை—, உறுதிப்படுத்துதல், பலன் கொடுத்தல்.

Validité, *f.* பலன், செல்லுந் தன்மை, உறுதி.

Valinga, *m.* துருத்தியுள்ள புல்லங்குழல்.

Valise, *f.* சோளிகை. || பொக்கணம், பயணத்துக்குரிய தோற்பை, சோளி, அசம்பி.

Valladolid, எஸ்பஞ் ராச்சியத்தில் [வல்லதொலிது நகர்.

Vallée, *f.* மலையடிப்—, பள்ளம், கணவாய், பள்ளத்தாக்கு, தாழ்ந்த பூமி: —de larmes கண்ணினீர்க் கணவாய், la— பரீஸ் நகரில் ஓர் கடை.

Vallisnérie, Vallisneria, ஓர் பூண்டு, சலகேசம்,— குந்தலம், சீவலம்;— spiralis வழுக்குப் பாசி.

Vallon, *m.* இரு குன்றினிடைப் பள்ளம்; le sacré— பர்னஸ் மலை யிருசிகரத்துக்குள்ள பள்ளம், அது கலைமகளிருக்குப் பிரதிஷ்டையாம், புலமை.

Vallouven, *m.* Hiérophante des Parias, வள்ளுவன்.

Valoir, *v. n. et a.* பெறுதல், விலைபெறுதல், விலையாதல், விற்கப்படுதல், மதிக்க—, எண்ணப்படுதல், நிகராயிருத்தல், பலன்—, வருமானங் கொடுத்தல், பெறுவித்தல், தருதல், அடைவித்தல். || அர்த்தம்—, பதிலாதல், ஈடாயிருத்தல்;— son pesant d'or தன் பொன்னிடை பெறுதல், அநேக நல்லகுணங் கொண்டிருத்தல்; il n'y a là rien qui vaille அதிலே நல்ல தொன்றுமில்லை; ce cheval ne vaut pas le mien இந்தக் குதிரை என் குதிரைக்கு நிகரல்ல; autant vaut ஏறக்குறையச் சரியாம்; la vertu peut nous—une éternité bienheureuse புண்ணியம் நமக்கு நித்திய பாக்கியத்தைப் பெறுவிக்கக்கூடும்; le D vaut 500, D என்கிற எழுத்து ஐந்நூறு என்றர்த்தமாம்; ne—rien ஒன்றும் பெருதிருத்தல், உதவாதிருத்தல், விரோதமா யிருத்தல், துர்க்குறியா யிருத்தல்;— mieux தாவிளையா யிருத்தல், அதிக பிரயோசனமா யிருத்தல்; faire— பயிரிடுதல், பலன்—, பிரயோசனம் எடுத்தல், இலாபம் பண்ணுதல், மேன்மைப் படுத்துதல், பாராட்டுதல், மேற்கொள்ளச் செய்தல்; se faire— தன் சுதந்தரஞ் சாதித்தல், வீம்பு பேசுதல், தன்னைப் புகழ்தல்; à— கணக்கிற் சேர.

Valse, *f.* அல்மஞ் தேசத்துக் கூத்து, அதினிராகம்.

Valser, *v. n.* ஷை கூத்தாடுதல்.

Valteline, *f.* இத்தலி தேசத்தில் ஓர் நாடு.

Valuable, *adj.* ஒரு விலை பெறுகிற.

Value, *f.* பெறுமதி; plus—, moins— வாங்கின விலைக்கு—, மதிப்புக்கு மேற்—கீழ் பெறுமதி.

Valve, *f.* கனி மூடி—, மீன் ஓட்டு—, நெற்றுப் பிரிவு,— பக்கம், கிளிஞ்சில்.

Valvé, *adj.* தடுப்புள்ள, கனி மூடிப் பக்கமுள்ள.

Valviforme, *adj.* கனி மூடி யுருவமுடைத்தான.

Valvule, *f.* நாடியடைப்புச் சவ்வு, நாடி மூடி, எந்திரத்து அடைப்பு, சவ்வு. *V.* Valve.

Valvulaire, *adj.* ஷை சவ்வனேகமுள்ள.

Vampire, *m.* உதிரபான—, வேதாளம். || பிரசையாஸ்தி விழுங்குகிறவன். || அமேரிக்காவின் பெரிய வவ்வால்.

Vampirisme, *m.* பிறர் பொருளை அபகரிக்கும் பேராவல்.

Van, *m.* முறம், சூர்ப்பம், குல்லம், சுளகு, தூற்றுக் கூடை.

Vandale, *s. et adj.* மிகவுங் கொடிய பூர்வீக சனத்தான், கல்வியின் சத்துரு,— சத்துருவான.

Vandalisme, *m.* கல்வி வித்தை நிர்மூலம்,— பகை,— நிர்மூல மாக்குங் கோட்பாடு, கொடூரம், சங்காரம்.

Vandoise, *f.* ஓர் மீன்.

Vanesse, *f.* பகல் வண்ணாத்திப் பூச்சி.

Vangueria spinosa (plante), பிசுகம்.

Vâniers, *m. pl.* (marchands) வாணியர், வாணிபர், *m.* வாணியன், *f.* வாணிவிச்சி.

Vanille, *f.* அதின் நெற்று,— விதை, அதைத்தருஞ் செடி.

Vanillé, e, *adj.* வனில்காய் வாசனையேற்றப்பட்ட.

Vanillerie, *f.* வனில் செடி பயிரிடுமிடம்.

Vanillier, *m.* ஓர் செடி.

Vanité, *f.* வீண், வியர்த்தம், விப

லம், பலன்—, பிரயோசன மில்லாமை, மாயை, வெறுமை, சொற்பம், அற்பம். ‖ வீம்பு, வீண் சிலாக்கியம்,— பெருமை, மகிமையாசை, செருக்கு, ஒய்யாரம், சளுக்கு, ட்டீவு, பிலுக்கு, பாராட்டு, கோலாகலம்; faire, tirer— மகிமை பாராட்டுதல்.

Vaniteusement, *adv*. இடம்பமாய், சலாக்கியமாய், அகந்தையாய்.

Vaniteux, euse, *adj*. வீண் சலாக்கியமுள்ள, எடுப்பு—, ஒய்யாரமுள்ள, பிலுக்கன், இடம்பிகன்.

Vannage, *m*. தூற்றுதல்.

Vanne, *f*. மதகின் தூக்குக் கதவு, தளம்பு.

Vanneau, *m*. ஓர் பக்ஷி.

Vanner, *v. a*. தூற்றுதல், தாத்துதல். தாத்திப் போடுதல், தாற்றுதல், தெள்ளுதல் கொழித்தல். புடைத்தல், வரன்றுதல், கடவைப் படுத்துதல்.

Vannerie, *f*. குறவன் தொழில்,— வேலை, கூடை, முறம்.

Vannes, பிராஞ்சி ராச்சியத்தில் வன்னென்னு நகரம்.

Vannette, *f*. பெரிய வட்டக் கூடை

Vanneur, *m*. தூற்றுகிறவன், தூற்றுவோன், தெள்ளுவோன்.

Vannier, *m*. குறவன், முறம்—, கூடை பின்னுகிறவன். ‖ (gens d'une caste de cultivateurs) வன்னியன், *pl*. வன்னியர்.

Vannoir, *m*. தூற்றுங் கலயம்.

Vannure, *f* தானியம் புடைத்தபின் தள்ளின தவிடு.

Vansire, *m* ஓர் கீரி.

Vantail, *m*. (இரட்டைக் கதவின்) இரெக்கை.

Vantard, e, *adj*. வீம்பு பேசுகிற. ‖ s. வீம்பன், பாராட்டுக்காரன்,— காரி. ஆதாளிக்காரன்.

Vantardise, *f*. வீம்பு பாராட்டுதல்.

Vanter, *v. a*. பாராட்டுதல், புகழுதல், மெய்ச்சுதல், பழிச்சுதல். ‖ se— வீம்பு பேசுதல்,— சொல்லுதல், தன்னைப் பாராட்டுதல்,— ப்புகழ்தல், ஆதாளித்தல், ஆதாளி பண்ணுதல், பெத்தரிக்கஞ் சொல்லுதல், வலதாய்—, வளமையாய்ப் பேசுதல்.

Vanterie, *f*. வீம்பு, வீம்பாட்டம், பாராட்டு, வீண் சலாக்கியம், பிலுக்கு, ஒய்யாரப் பேச்சு.

Vanteur, *m*. வீம்பன், பிலுக்கன்.

Va-nu-pieds, *m*. வெற்றுக்காலன், தரித்திரன், போக்கிரி.

Vapeur, *f*. ஆவி, புகை, புகைச்சல், தூமம், தூமிகை, வாஷ்பம், வாசனை, புகைச்சலாய்த் தோற்றுவிக்குஞ் சித்திரவகை; bateau, machine à— புகைக்கப்பல்,— எந்திரம்,— சூத்திரம்;— pour blanchir வெள்ளாவி. ‖ *pl*. வாய்வு. ‖ *m*. புகைக் கப்பல்.

Vaporeux, euse, *adj*. புகைச்சல்—, ஆவியுள்ள, புகைச்சல், பாவிக்கிற, வாய்வு வருவிக்கிற, வாய்வுக் கேதுவான.

Vaporisateur, *m*. வாசனைத் தண்ணீர் தெளிக்கும் ஓர்வகை பாத்திரம்.

Vaporisation, *f*. ஆவியாய்ப் போதல்.

Vaporiser, *v. a*. ஆவியாய்ப் போகச் செய்தல். ‖ se— ஆவியாய்ப் போதல்.

Vaquer, *v. n*. அலுவலா யிருத்தல், முயலுதல், கவனித்தல். ‖ ஓய்வாய்—, ஒழிந்து—, சும்மாயிருத்தல்.

Vaquois odorant, *V*. Pandanus.

Var, *m*. பிராஞ்சி ராச்சியத்தில் வார் என்னு மாறு,— ஜில்லா.

Varaigne, *f*. உப்பளமதகு.

Varan, *m*. ஓர் முதலை.

Varander, *v. a*. ஊறல் மீன் வடிய விடுதல்,— காய்வித்தல்.

Varangue, *f*. ஏரா மேற்பலகை, ஏராவுக் கடுத்த — மேலான பலகை. ‖ (dans l'Inde P. Véranda de) வரண்டம்) தாழ்வாரம், வரண்டம், விருந்தை.

Vare, *f*. ஓரளவை, ஒன்றரைக்கசம்.

Varec, Varech, Varecq, *m*. ஓர்வித கடற்பாசி, சாதாழை. ‖ கடல் கரையில் ஒதுக்கும் பொருள். ‖ அமிழ்ந்திய கப்பல்; droit de— கடல் கரையி லொதுக்கும் பொருளபகரிக்குஞ் சுதந்தரம்.

Varenne, *f*. தரிசு, வேட்டை வெளி,— நிலம்.

Vareuse, *f*. ஓர் சிற்றங்கி.

Varia, *m. pl*. சேர்க்கை, பலவகை காப்பியங்களின் சேர்க்கை.

Variabilité, *f*. மாறுங் குணம்,— தன்மை, பேதப்படுந் தன்மை, விகற்பம், வேற்றுமை, விகாரம்.

Variable, *adj*. மாறுகிற, நில்லாத, மாறுபாடுள்ள, வேற்றுமை யுள்ள, விக

ற்பமான, வேறுபடுகிற. || *m.* மாறுங் காலத்தின் குறி.

Variant, e, *adj.* அடிக்கடி—, மாறுகிற.

Variante, *f.* விகற்பம்,-- ஆனவாக்கியங்கள்.

Variation, *f.* மாறுபாடு, விகற்பம், விகாரம், வேறுபாடு, திரிபு, பேதம், வேற்றுமை, மாறுதல் ;--- de la boussole காந்த வூசியின் சாய்வு. || *pl.* இராகத்துக்குச் செய்த அலங்கார மாற்றம்.

Varice, *f.* காலிலுப்பின நரம்பு,— இரத்தத்தாரை, காற்கரப்பான், கிளிஞ்சில் ஓரத்தின் மேலுப்பல்.

Varicelle, *f.* கொடுவாய் கொத்தமல்லி, கொத்தமல்லி வைசூரி.

Varicocèle, *f.* பீச வீக்கம்.

Varicomphale, *f.* நாபி வீக்கம்.

Varié, *adj.* நானாவித, பல, பற்பல, வெவ்வேறான, நானாவகையுள்ள, விபரீதம்—, விகற்பமான.

Varier, *v. a.* பலவித—, பல நிற—, வேறுபடுத்துதல், நானாவித மாக்குதல், விகற்பித்தல், பேதித்தல், கலந்து போடுதல், பலவிதமாய் மாற்றுதல், பலவணிகளா லலங்கரித்தல். || *v. n.* பலவித—, மாறுபடுதல், மாறுதல், மாறிப்போதல், முரணுதல், பலவிதமாய் எண்ணுதல், (காந்த ஊசி) சாய்தல்.

Variété, *f.* விகற்பம், விகாரம், வேற்றுமை, வித்தியாசம், பல—, நானாவிதம், வேறு—, மாறுபாடு, பேதம், மாற்றம். || *pl.* கலம்பகம்.

Varietur (ne), மாறுபாடாகாதபடிக்கு.

Variolaire, *f.* ஓர் காளான்.

Variole, *f.* குரு வியாதி, முத்து, வைசூரி.

Variolé, *adj. et s.* குரு வியாதி தழும்புள்ள, வைசூரி வார்த்த அடையாளமுள்ள.

Varioleux, Variolique, *adj.* குரு வியாதிக் கடுத்த,— ஏதுவான.

Variolithe, *f.* புள்ளியுள்ள கல்.

Varioloïde, *f.* கொப்புளிப்பான.

Variorum, *m. et a.* பல இலத்தினூற் சேர்க்கை,— கலம்பகமான.

Variqueux, euse, *adj.* உப்பின நரம்புள்ள.

Varlet, *m.* ஊழியன், அரசனூழியனாகிய துரைமகன்.

Varlope, *f.* பெருமிழைப் புளி.

Varre, *f.* ஆமை பிடிக்கு மண்டா.

Varreur, *m.* ஆமை பிடிக்கிறவன்.

Varsovie, பொலோஞி ராச்சியத்து இராசதானி.

Varvouste, *m.* கைப்பிடிப்புள்ள வலை.

Vasculaire, Vasculeux, euse, *adj.* மிகுந்த இரத்தத் தாரையுள்ள, நரம்புள்ள, உட்டுளை—, சுரம்—, நாளமுள்ள.

Vase, *m.* பாத்திரம், கலம், ஏனம் ;— sacrés பூசை பாத்திரங்கள் ;— de cuivre சருவச் சட்டி, தவலை ;— pour l'eau (en cuivre) செம்பு ;— pour boire (en fer-blanc) பொக்கணி, போகணி, போணி, சொடுதலை ;— de mendiant கமண்டலம், கப்பரை, இரப்போர்கலம், கடிகை, கடிஞை, மல்லை ;— de nuit சிறு நீர்ப்பாத்திரம்.

Vase, *f.* அடிச் சேறு, சகதி.

Vaseau, *m.* மரவட்டில்.

Vaseline, *f.* மண்ணெண்ணெயிலிருந்து மருந்து செய்வதற்கு எடுக்கப்பட்ட கொழுப்பு.

Vaseux, euse, *adj.* சேறுள்ள.

Vasistas, *m.* சன்னலில்—, கதவிலுள்ள சிறு கதவு.

Vasque, *f.* வட்ட சிறு தொட்டி.

Vassal, e, s. அரசனுக்குக் கீழ்ப்பட்ட பிரபு,— துரை, கீழான பிரபு,— துரை, பிரசை, வாரக்குடி.

Vasselage, *m.* Vassalité, *f.* கீழான பிரபுத்தனம், கீழ்ப்படிவு, பிரசைததனம்.

Vaste, *adj.* விஸ்தார, விசால, விரிவான, பிரமாண்டமான, பெரிய, அகன்ற. || *m.* தொடையி னிருநரம்பு.

Vateria indica, குந்துருக்கம்.

Vàtican, *m.* உரோமாபுரியில் அர்ச். பாப்புவி னரண்மனை,— மாளிகை; les foudres du— அர்ச். பாப்புவின் சாபம்.

Vaticination, *f.* Vaticiner, *v. a.* (பின் வருங்காரியங்களை) முன்னுரைத்தல், குறி சொல்லுதல், வசனித்தல்.

Va-tout, *m.* தனக்கு முன்னிருக்கிற பணமெல்லாம்.

Vaucluse, *m.* பிராஞ்சி ராச்சியத்தில் வோக்கிளூஸ என்னும் நீரூற்று,— ஜில்லா.

Vaucour, *m.* குசவன் மேசை.

Vaud, *m.* சுவிஸ் தேசத்தில் ஓர் நாடு.

Vau-de-route (à), *adv.* அலங்கோலை—, படபடப்பாய், பதற்றமாய்.

Vaudeville, *m.* நகரிற் பரம்பும் பாட்டு. || பாட்டு கலந்த வாசாப்பு, ஷை வாசாப்புச் சாலை:— final ஷை வாசாப்பு முடிவில் வருகிற பாட்டு.

Vaudevilliste, *m.* ஷை வாசாப்புப் புலவன்.

Vaudois, *m. pl.* ஓர்வித பதிதர்.

Vau-l'eau, *adv.* *V.* A vau-l'eau.

Vaurien, enne, *s.* சோம்பற்காரன், — காரி. உதவாதவன், தப்பிலி, போக்கிரி, திருடன், கசடன், காமாதுரன், கெட்டவன், சண்டாளன், அதர்மாசாரி, அந்தேவாசி, கடைகெட்டவன், தறுகுறும்பன், வண்டன், வெட்டுணி.

Vautour, *m.* இராசாளி, கழுகு, அசோடம், பவனை, பணவை, உவணம், வலியான். || பறிகாரன், கொடியன், காணியாக்ஷியை அபகரிக்கத் தேடுகிறவன். || மனச்சாட்சிக் கண்டனை.

Vautrait, *m.* காட்டுப் பன்றி வேட்டை முஸ்திப்பு.

Vautre, *m.* காட்டுப் பன்றியை வேட்டையாடும் நாய்.

Vautrer (se), *v. pro.* புரளுதல், உருளுதல், உழைப்பறித்தல்:— dans la boue சேறுடுதல், துர்விதமாய் நடத்தல்.

Vaux, *pt. de* Val.

Vavasserie, *f.* மற்றொன்றைச் சேர்ந்த பிரசை மானியம்.

Vavasseur, *m.* ஷை மானிய முடையவன்.

Vaxel, *m.* உப்பளவைப் பீப்பா.

Vayvode, *m.* இராசா, பிரபு, நாடாள்பவன்.

Vayvodie, *f.* பிரபு தேசம், ஆளு தேசம்.

Veau, *m.* பசுக்கன்று, கன்று,— க்குட்டி, அவேத்தியம், வற்சதரம், பசுக்கன்றிறைச்சி,— க்கன்றின் தோல்:— marin ஓர்வித நீர் நாய்; adorer le— d'or ஆஸ்திக்காரருக்கு இச்சகம் பண்ணுதல்; grand — பெரிய சோம்பேறி; — de lait ஊட்டு கன்று; faire le — சோம்பேறியாய் நிற்றல்.

Vecteur, *m.* rayon— கன்னம், ஓர் கிரகத்துக்கு மதின் சக்கர மையத்துக்குமுள்ள தூரம், ஓர் கிரகத்திற் சேருஞ் சூரிய கிரணம்.

Vécu, *part.* de Vivre.

Vêdam, Vêda, *pl.* Vêdas. *m.* வேதம், ஆரணம்; il y en a 4: le Rig vêdam இருக்கு வேதம்; l'Yadjour ou Ezour vêdam எசுர் வேதம்; le Sama vêdam சாம வேதம்; l'Atharvana vêdam அதர்வண வேதம்.

Vêdanta, *m.* système de philosophie indienne வேதாந்தம், *V.* வேதம் et வேதாந்தம் au Dict. Tamoul-Français.

Védasse, *ou* Vaidasse, *f.* கடற்பூண்டினுப்பு.

Vedette, *f.* காவலிராவுத்தன், வேவுகாரன், ஒற்றன், காவற் சேவகன், சாரணன், அலங்கத்துக்குமேல் காவற் சேவகன் கூடு, காகிதத்தில் வக்கணையிடம்.

Végétable, *adj.* தாவரமான, வளரத்தக்க, தழைக்கத்தக்க, தளிர்க்கத்தக்க. || *m.* தழைப்புள்ளது.

Végétal, e, *adj.* தாவரத்து, வளருகிற, பூண்டின், பூண்டுகளுக் கடுத்த, தாவர சங்கத்துக் கடுத்த; règne— திருணசாதி, மூலிகை வருக்கம்; sel— பூண்டுகளினுப்பு; terre— பயிரிடத்தக்க மண். || *m.* தாவரம், பூண்டினம், பூடு, பயிர், கீரை.

Végétant, e, *adj.* தழைக்கிற, வளருகிற.

Végétarien, Végétarisme, *m.* எவ்வித மாமிசத்தையும் நீக்கி காய் பழம் மாத்திரம் பொசிப்பவன். எவ்வித மாமிசத்தையும் நீக்கி சுத்தபோசனம் அனுசரித்தல்.

Végétatif, ive, *adj.* வளர் விக்கிற, தழைப்பிக்கிற, வளருகிற; vie— தாபரத்துக்குரிய, வளர்விக்கிற சீவியம்.

Végétation *f.* தாவர வளர்ச்சி,— விருத்தி, வளர்ச்சி, வளர்த்தி, தழைப்பு, முளைப்பு. || தாவர சங்கம், பூண்டுகள், பயிர் செழிப்பு. || காயத்தி லுண்டாகுந் திரட்சி.

Végéter, *v. n.* வளருதல், தழைத்தல், தளிர்த்தல், துளிர்த்தல், பூண்டு போலே சீவித்தல், சுவரணையற் றிருத்தல். || வருத்தமாய்ப் பிழைத்தல்.

Végéto-minérale, *adj. f.* eau— தண்ணீரிற் கலந்த காரீய காடித்திராவக உப்பு.

Véhémence, *f.* பலம், தீவரம், வேகம், உரம், ஊக்கம், உக்கிரம், அகோரம், கடுமை.

Véhément, e, *adj.* பலத்த, பலம்— வேகம்—, ஊக்கம்—, உற்சாகமான. அகோரம்—, உக்கிரமான, கடின, கடும்.

Véhémentement, *adv.* மிகவும், வலுவாய்.

Véhicule, *m.* வாகனம், யானம், ஊர்தி, வையம், வகம், வாஹியம், சுமக்குமெத்தனம், பண்டி, இரதம், செலுத்துவது, ஆயத்தமானது, அநுபானம், களைக்கு நீராளம்; l'air est le—du son ஆகாசஞ் சத்தத்தைச் செலுத்தும்,— கொண்டுபோகும்.

Véhiculer, *v. a.* வண்டியி லேற்றிக் கொண்டு போதல், ஓர் வாகனத்தைக் கொண்டு சாமான்களை கொண்டுபோகிறது.

Veille, *f.* விழிப்பு, சாகரணம், சாகரம், நனவு, நனு, பிரசாகரம், விநித்திரத்துவம், தூக்க மில்லாமை,— வராமை, இராமுழுதுந் தூங்காமை. || இரவின் கால்வாசி, சாமம், பிறகரம். || முந்தின நாள். || *pl.* மிகுந்த கவனம்; être à la —de சமீபத்தி லிருத்தல், வேளையி லிருத்தல்; ancre de— எப்போது முஸ்திப்பாயிருக்கிற நங்கூரம்.

Veillée, *f.* இராக் கூட்டம், இராபோக்குவதற்குக் கூடின சங்கம், விழிப்புக் காலம்,— வேலை,— சம்பாஷணை,— வாசகம், படிப்பிற்—, வேலையிற் செல்வழிக்கிற இராக்காலம், படிப்புக்கான விழிப்பு. || இரவில் வியாதிக்காரனைக் காத்தல்,— காத்ததர்க்குக் கூலி.

Veiller, *v. n.* விழித்திருத்தல், நித்திரை யில்லாது—, தூங்காதிருத்தல், காவல்—, சாமங்காத்தல், பிறகரித்தல். || விழிப்பாயிருத்தல், கவனித்தல், விசாரித்தல். || *v. a.* காத்தல், காவலாயிருத்தல், கண்காணித்தல், பார்த்துக்கொண்டிருத்தல்.

Veilleur, euse, *s.* பிரேதத்துக் கிட்டச் சாமங்காக்கிறவன், சாமக்காரன், இராக் காவற்காரன்.

Veilleuse, *f.* இரா விளக்கு.

Veilloir, *m.* இரா வேலை மேசை.

Veine, *f.* இரத்தத் தாரை, உதிர நரம்பு, நாடி. || புலமை, திறமை, மனப்போங்கு, மன வியல்பு. || (de mine) அடுக்கு, படலம், படை. || (du bois) வரி, இரேகை; ouvrir la— இரத்தம் வாங்குதல்; tomber sur une bonne — நல்ல அடுக்கு காணுதல், அதிஷ்டமாய் எதிர்த்தல்; être en— நல்ல மனப்போங்கா யிருத்தல்;— d'eau தரைகீழ் ஓடும் நீரூற்று;— d'un rocher கற்பாறையி னுள்ளம்.

Veiné, *adj.* வரி—, இரேகையுள்ள (மரம், கல்).

Veiner, *v. a.* மரத்துவரி பாவித்துச் சித்திரித்தல்.

Veineux, euse, *adj.* இரத்தத் தாரைக் கடுத்த, மிகுந்த உதிர நரம்புள்ள.

Veinule, *f.* சின்ன இரத்தத் தாரை.

Velche, *m.* பழைய சனத்தின் பேர், பழைய கல்லிய தேசத்தான். || மூடன், கல்வியின் பகைவன்.

Vêlement, *ou* Vêlage, *m.* பசு கன்று போடுதல்.

Vêler, *v. n.* (பசு) ஈனுதல்.

Vélin, *m.* மிகவு மெல்லிய கன்றுதோற்கடுதாசி. || *adj.* papier— மிகவு மெல்லிய—மிருதுவான கடுதாசி.

Vélites, *m. pl.* இலகு வாயுதச் சேவகர்.

Vellar, *m.* வெள்ளாறு.

Vellage, s. *m.* nom d'une caste de cultivateurs, வெள்ளாழன், வெள்ளாளன், *f.* வெள்ளாழச்சி, வெள்ளாளச்சி.

Velléité, *f.* திட மில்லாமனம், அரைமனசு.

Véloce, *adj.* தீவிரமான, ஓட்டமுள்ள. [முள்ள இரதம்.

Vélocifère, *m.* இலகுவான—, வேக

Vélocipède, *m.* காலா லியக்கப்பட்ட தீவிர விரதம்.

Vélocipédie, *f.* தீவிர மிதி வண்டியைப் பற்றிய சகல விஷயமும்.

Vélocité, *f.* சீக்கிரம், சுறுக்கு, வேகம், கதி, துரிதம், சுறுசுறுப்பு, தீவிரமான ஓட்டம், பிரசவம்.

Vélodrome, *m.* தீவிர மிதி வண்டியை ஓட்டும் சாலை.

Velours, *m.* முகமல், முகமால், சூரிய காந்தி—, வில்லூர்திப் பட்டு; marcher sur le— புற்றரையில் நடத்தல்; jouer sur le— தன் னுதாயத்தின் மேல் விளையாடுதல்.

Velouté, *adj*. வில்லூர்திப் பட்டு போன்ற,— பட்டு நெசவு கூடிய, கைக்கு மிருதுவான, சுணையுள்ள, இருண்ட சிவப்பு நல்ல ருசியுமுள்ள (இரசம்). ‖ *m*. சுணை, முகமல் போலிருக்கிறது,— போன்ற நாடா.

Velouter, *v. a*. வில்லூர்தித் தன்மையாக்குதல்.

Velouteux, euse, *adj*. முஹமல் பட்டுப்போல் மிருதுவான.

Veloutier, *m*. முஹமல் பட்டு வேலைக்காரன்.

Velte, *f*. ம—பொத்தல் கொள்ளும்—, ஏழரை லீத்திறு கொள்ளு மளவை, பீப்பா வளக்கும் ஓர் கருவி.

Veltage, *m*. Velter, *v. a*. ஷை கருவியா லளத்தல்.

Velteur, *m*. ஷை கருவியா லளக்கிறவன்.

Velu, *adj*. மிகுந்த மயிருள்ள, மயிரடர்ந்த,— மூடிய, சுணையுள்ள. ‖ *m*. உரோம சுணையுள்ள பக்கம்.

Velue, *f*. மான் தலையி விளந்தோல் ஓர் கம்பளிப் பூச்சி.

Velvote, *f*. ஓர் பூண்டு.

Venaison, *f*. வேட்டை யிறைச்சி,—மிருகம், வேட்டையிற் பிடிபட்டது, வேட்டை மிருக வாசனை ; être en— கொழுப்பாயிருத்தல்.

Venaissin (comtat), *m*. பிராஞ்சி ராச்சியத்தில் ஓர் பூர்வீக நாடு.

Vénal, e, *adj*. விர்பனையாகிற, விற்பனைக்கு விட்ட. ‖ இலஞ்சம் வாங்குகிற, கையடையால்—, கைக்கூலியாலமருகிற, நீச இலாபத்தை நாடுகிற ‖ இரத்தத் தாரையிலுள்ள. *pour* Vaineux ; valeur — வியாபாரத்தில் வழங்குகிர விலை.

Vénalement, *adv*. விற்பனையாய், கிரயத்துக்கு, இலஞ்சத்துக்கு, விலைப்பாடாய்.

Vénaliser, *v. a* விலைப்பாடாக்குதல்.

Vénalité, *f*. விலைப்பாடு, விற்கப்படுந்—, விற்பனையாகிற தன்மை.

Venant, *m*. வருகிறவன் ; à tout— சகலருக்கும். ‖ *part*. வருகிற, வளருகிற, நிச்சயமான.

Vendable, *adj*. விற்கத்தக்க.

Vendange, *f*. திராட்ச அறுப்பு,— பறிப்பு. ‖ *pl*. திராட்ச அறுப்புக் காலம்.

Vendangeoir, *m*. அறுத்த திராட்சங்களை வைக்குங் கூடை,— இடம்.

Vendanger, *v. a*. திராட்சங்களை யறுத்தல்,— பறித்தல்,— கொய்தல். ‖ பறித்தல், எடுத்துக் கொள்ளுதல், சங்கரித்தல், அழித்தல், தகாத இலாபங்களைச் செய்தல்.

Vendangeur, euse, *s*. திராட்சங்களை யறுக்கிறவன்,— பறிக்கிறவன்,—வள்.

Vendée, *f*. பிராஞ்சி ராச்சியத்தில் வந்தேயாறு,— ஜில்லா,— நாடு.

Vendéen, enne, *adj. et s*. வந்தே என்னும் ஜில்லாவுக் கடுத்த,— ஜில்லாவிற் பிறந்த,— வன்,— வள், இராசா பாரிசத்தானாகிய வந்தே நாட்டான்.

Vendémiaire, *m*. திராட்ச அறுப்பு மாதம், குடியரசின் முதல் மாதம் (இதில் செப்த்தேம்பர் ஒக்த்தோபர் மாதங்கள் கலந்து வரும்).

Vendetta, *f*. பழியான கொலை, கொலையின் பழி.

Vendeur, euse, *s*. விற்கிறவன்,—வள், வியாபாரி,— தொழில் செய்கிறவன், விக்கிரயி, விக்கிராயகன், விக்கிரேதா.

Vendication, *f*. Vendiquer, *v. a*. *V*. Revendication, Revendiquer.

Vendre, *v. a*. விற்றல், விற்றுப்போடுதல்,— விடுதல், விற்பனை செய்தல், விக்கிரயம் பண்ணுதல், விற்பனையாக—, விற்பனைக்கு விடுதல், விலைக்கு ஒப்புதல், இலஞ்சத்துக்குத் துரோகஞ் செய்தல், கிரயமாக நியமித்தல், இலாபத்தைப்பற்றி வெளிப்படுத்துதல்;— son honneur பணத்தைப்பற்றி அவமானத்துக்குள்ளாதல், பணத்தைப்பற்றி அக்கிரமஞ் செய்தல் ; — son suffrage இலாபத்தைப் பற்றித் தன் அநுமதி கொடுத்தல்; —sa plume அதிக பணங் கொடுக்கிறவனுக்குப் பக்ஷமாக எழுதுதல் ;— en detail சில்லறையாக விற்றல் ; — à l'encan ஏலம் போடுதல். ‖ se — விலை—, விற்பனையாதல், விற்கப்படுதல், தன்னை விற்றல், — வெளிப்படுத்துதல்,— கையளித்தல்.

Vendredi, *m*. வெள்ளிக்கிழமை, சுக்கிரவாரம் ;— saint பெரிய வெள்ளிக்கிழமை.

Vendu, e, *part*. *de* Vendre இலா

பத்தைப் பற்றி ஒரு கட்சியைச் சேர்ந்த,— சேவகத்துக்குப் பதிலாளியான.

Vené, *adj*. அழிகிற, அழுகுகிற.

Vénéfice, *m*. விஷம்--, நஞ்சிடுதல்.

Venelle, *f*. முடுக்கு வீதி, சின்ன தெரு: enfiler la— ஓடிப்போதல்.

Vénéneux, euse, விஷம்—, நஞ்சுள்ள (பூண்டு).

Vénénifère, Vénénifique, Vénénipare, *adj*. விஷ முடைத்தான, பாஷாண மடங்கிய, பாஷாணந் தரும்.

Vener, *v. a*. (சதை யிளக்குவதற்கு ஆடு—மாடு) ஓடுவித்தல், வேட்டையாடுதல்;— faire நுகைவித்தல்.

Vénérable, *adj*. வணக்கத்துக்கு—, சங்கைக்கு—, அர்ச்சனைக்குரிய, வணங்கத்தக்க, மகா கனம் பொருந்திய.

Vénérablement, *adv*. பூஜ்ஜியமாய், வணக்கமாய், சங்கையாய்.

Vénération, *f*. வணக்கம், சங்கை, ஆசாரம், மரியாதை, வந்தனை, அர்ச்சனை, அருச்சனம், அப்பியர்த்தனை, ஆகிரதம், சமற்சனம், பணிதம், வரிவசிதம், கனம், எண்ணம்.

Vénérer, *v. a*. வணங்குதல், வணக்கஞ்—, சங்கை செய்தல், சங்கித்தல், போற்றுதல், எத்துதல், தொழுதல், கணித்தல்.

Vénerie, *f*. நாயோடாடும் வேட்டை,— வித்தை, இராச வேட்டை யுத்தியோகஸ்தர், வேட்டைச் சாமான்களிருப்பிடம்.

Vénérien, enne, *adj*. மோக, காம, தூர்த்த, தூர்த்தத்தினால் வருகிற: mal —, maladie — பிரந்தி,— வியாதி,— ப்புண், இலிங்கரோகம்,— ப்புற்று,— சூலை.

Venets, *m pl*. வேட்டை வலைகள்.

Venette, *f*. பயம், திகில்.

Veneur, *m*. வேட்டைக்காரன்,— நாயோட்டுகிறவன், வேடன்: grand — இராச வேட்டைத் தலைவன்.

Venez-y-voir, *m*. சூது, எய்ப்புள்ள விழல்.

Vengeance, *f*. பழி, பதிலுக்குப் பதில், ஆக்கினை, பிரதி யபகாரம், பரிகாரம், பழியாசை, பிரத்தொங்கிசம்; tirer— *V*. Se venger.

Venger, *v. a*. பழிவாங்குதல், பரிகரித்தல், செய்த அவமானத்துக்குப் பழிவாங்குதல், ஆக்கினையிடுதல், தண்டித்தல்;— son père தன் தகப்பனுக்குச் செய்த அவமானத்துக்குப் பழிவாங்குதல். || se — பழிவாங்குதல்,— தீர்த்தல்,— முடித்தல், பதில் செய்தல், பதிலுக்குப் பதில்—, சரிக்குச் சரிகட்டுதல்.

Vengeur, geresse, *adj*. பழிவாங்குகிற, ஆக்கினை யிடுகிற, பழிகாரன்,— காரி.

Veniat, *m*. வரக்கட்டளை.

Véniel, elle, *adj*. பொறுத்தலுக் குரிய, மன்னிப்புக் குரிய: péché— அற்ப,— சின்ன பாவம்.

Véniellement, *adv*. அற்பமாய், மன்னிப்புக்குரிய விதமாய்.

Véni-mécum, *m*. *V*. Vadé-mécum.

Venimeux, euse, *adj*. விஷம்—, நஞ்சுள்ள, நச்சு (மிருகம்); langue — கோள் குண்டணி சொல்லு நாக்கு.

Venin, *m*. விஷம், நஞ்சு, ஆலம், நிதம், கள்ளம், தோஷம், உட்பகை, வர்மம், வைராக்கியம்.

Venir, *v. n*. வருதல், சேருதல், வந்து சேர்தல், பிறத்தல், வளருதல், சம்பவித்தல், ஆதல், உண்டாதல், எட்டுதல்;— à துவக்குதல்;— à bout de முடித்தல், நிறை வேற்றுதல், செயித்தல், வெல்லுதல், கீழ்ப்படுத்துதல்;— à son but, à ses fins தன் கருத்தை நிறைவேற்றுதல்;— à la traverse குறுக்கே வருதல், தடுத்தல், விக்கினஞ் செய்தல்; s'il vient à savoir cela அதை யவனறிந்தால்; il vient de sortir, கொஞ்ச நேரத்துக்கு முன்னே புறப்பட்டான்; à — வரப்போகிற; s'en— வருதல்; en — aux mains போர்க்கலத்தல், அடிபிடியாதல்; en—aux injures ஒருவரொருவரைத் தூஷணித்தல்; en — à son honneur மகிமையாய் முடித்தல்; faire— வருவித்தல், வருத்துதல், வருத்துவித்தல், அழைப்பித்தல், கொண்டுவரச் செய்தல்.

Venir, *m*. வருதல், l'aller et le— போக்குவரத்து.

Venise, இத்தலி தேசத்தில் வெனிஸ் நகரம்.

Vénitie, *f*. வெனிஸ் நாடு.

Vénitien, enne, *adj et s*. வெனிஸ் நகரத்து,— நகரத்தான்,— நகரத்தாள். || *m*. வெனிஸ் நகர பாஷை. ||

Vénitienne, *f.* வெனிஸ் நகரின் தோணிக்காரர் பாட்டு, அதினிராகம்.

Vent, *m.* காற்று, வாயு, மாருதம், ஆகாசம், அகிகாந்தம், அதிகதம், பிரகம்பனம், மருத்து, வாதரம். || சுவாசம், ஆவி. || வாதம், வாய்வு, வாயு, அலசகம், ஆக்ஷேபகம், குசு. || வாசனை, மணம். || சலாக்கியம், ஆங்காரம்; — doux இளங்காற்று, மந்த மாருதம்:— frâis du nord-est ஊதை;— du nord வாடை, வடந்தை;— du nord-est வாடைக் கொண்டல், கொண்டல் வாடை; — d'est கொண்டல்;— du sud-est சோழக் கொண்டல்;— du sud தென்றல், சோழகம், தென்றி;— du sud-ouest சோழக்கச்சான்;— d'ouest கச்சான், கோடை;— du nord-ouest வாடை; outre ces mots on peut employer வட—, வட கீழ்—, கீழ்—, தென் கீழ்—, தென்—, தென் மேற்—, மேற்—, வட மேற் காற்று; avoir le dessus du —, être au-dessus du— மேற் பட்டிருத்தல்; aller selon le— காலங்களுக்குத் தக்கபடி நடத்தல்; tourner à tout— நிலைமை யற்றிருத்தல், le—des prospérités நல்ல திஷ்டம், அநுகூலம்; le—de l'adversité துர திஷ்டம்; lâcher un— குசுவிடுதல், குசுவுதல்; avoir—d'une chose கேள்வி—, சந்தேகப்படுதல்.

Ventage, *m.* தூற்றுதல்.

Ventau, *m.* மதகின் கதவு, பிணைக் கட்டை.

Vente, *f.* விற்பனை, விக்கிரயம், விற்றல், விலை, புரோகத், விபணம். || கடை, ஏலத்தினிடம், விற்பனையான பொருள்கள். || திட்ட காலத்திலாகிற காட்டின் வெட்டு. || மரங்களை வெட்டின காட்டின் பங்கு. || இரகசிய சபையின் பிரிவு;— publique ஏலம்; mettre en— விற்பனையாக விடுதல். || *pl.* துரைக்குரிய விற்பனை தீர்வை; jeunes— வெட்டின காட்டின் புதுத் துளிர்கள்.

Venter, *v. n.* காற்று வீசுதல்,— அடித்தல்.

Venteux, euse, *adj.* காற்றுள்ள,— அடிக்கிற,— வீசுகிற, காற்றுக்கு ஏதுவான. || வாய்வு கொடுக்கிற,— வருவிக்கிற, வாய்வினால் வருகிற.

Ventilago madraspatana, சிறு [கொடி.

Ventilateur, *m.* காற்று வீசுவிக்குமெத்தனம், பங்கா, பெருந் துருத்தி.

Ventilation, *f.* பங்கா வாட்டுதல், விசிறுதல். || மொத்தமாய் விற்ற பொருள்களின் தனி மதிப்பு, முன் மதிப்பு.

Ventiler, *v. a.* காற்று கொடுத்தல், பங்கா வாட்டுதல், விசிறுதல். || ஓர் துகையின் பல பங்குகளைத் தனித் தனியே மதித்தல், மொத்தமாய் விற்ற பொருள்களைத் தனித் தனியே மதித்தல், முந்தி மதித்தல். || ஆலோசனைக்கு முன் தர்க்கித்தல்.

Ventiller, *v. a.* நிறுத்தப் பலகை வைத்தல்.

Ventolier, *adj. m.* காற்றுக் கெதிர் நிற்கிற (பக்ஷி).

Ventôse, *m.* காற்று மாதம், குடியரசின் ஆறு மாதம், (அதில் பெபிறரியு மாற்சுங் கலந்து வரும்).

Ventosité, *f.* வாய்வு, வாதம்.

Ventouse, *f.* காற்றுத் துவாரம்,—க்குழல், கவாக்ஷம், கவாக்ஷி || குடுவைப் பொறி, பித்தம் வாங்குங் கொம்பு,—கருவி; — sèches குடோரியற்ற குடுவைப் பொறி;— humides *ou* scarifiées குடோரி கூடிய குடுவைப் பொறி; appliquer des—*ou*

Ventouser, *v. a.* குடுவைப் பொறி போடுசல்.

Ventral, e, *adj.* வயிற்றுக் கடுத்த.

Ventrales, *f. pl.* வயிற்றுச் சிறகு.

Ventre, *m.* வயிறு, அடி—, கீழ் வயிறு, குக்கி, அந்த சடம், சடரம், துந்தம், பிசண்டம். || உதரம், கருப்பை, —குழி, சண்டம், பிதுக்கம், வீக்கம். || நரம்பு சதையுள்ள பங்கு:— à terre அதி வேகமாய்; passer à quelqu'un sur le— ஒருத்தனுக்கு விரோதமாய்க் கருதினதை முடித்தல்; mettre le cœur au— தைரியப்படுத்துதல்; je veux savoir ce qu'il a dans le— அவன் கருத்தை — சாமர்த்தியத்தை அறிய மனசாயிருக்கிறேன்.

Ventrebleu, Ventre-saint-gris, *int.* ஓர் ஆணை.

Ventrée, *f.* ஓரீற்றுக் குட்டிகள்.

Ventricule, *f.* இரைக்குடல்,—ப்பை, மேல் வயிறு, உதப்பி || சிறு குழி.

Ventrière, *f.* கல்லணை—, வயிற்று வார்,— பந்தம், குதிரை தூக்கு வார்.

Ventriloque, *s. et adj.* உதர வாக்கு வல்லோன்,—வல்ல, உதர பாஷிதன், தன் வயிற்றினின்று பற்பல திசையிலுஞ் சத்தம் — பேச்சு எழும்புவிக்கிறவன்.

Ventripotent, *adj.* பெரிய வயிறுள்ள, புஷ்டியுள்ள, தொப்பையுள்ள

Ventrouiller (se), *v. pro.* சேற்றிற் புரளுதல்.

Ventru, e, *adj. et s.* பெரிய வயிறு—, தொப்பை—, தொந்தியுள்ள, —வன்—, வள், சூனன், துண்டுருட்டி, துந்திகன், பிருதூதரன், பொச்சை வயிறன். மகோதரன். || பக்கத்துப்பின

Venu, e, *part. de* venir, வந்த—, எற்கப்பட்ட ; nouveau— புதுசாய் வந்தவன் ; le premier, le dernier— முதல்வனாய்—, கடைசியாய் வந்தவன்.

Venue, *f.* வருதல், வருகை, சேர்தல், வரவு, வளர்ச்சி, வளர்த்தி, விருத்தி, கிளர்ச்சி ; d'une belle— நன்றாய் வளர்ந்த. || நவதாய விளையாட்டில் முதலடி.

Vénule, *f.* சிறு இரத்தத் தாரை.

Vénus, *f.* வெனுஸ் என்பவள், காமத்துப் பொய்த் தேவதை. || மிகவு மழகிய பெண். || வெள்ளி, சுக்கிரன், பிரசுரன், (இரச வாதத்தில்) செம்பு. || ஓர் ஈரோட்டு மீன்.

Vêpre, *m.* சாயங்காலம்.

Vêpres, *f. pl.* சாய்ந்திர—, பிரார்த்தனை; premières —, secondes— முந்தின நாளின்—, திருநாளின் சாய்ந்திர பிரார்த்தனை ;— siciliennes சிசில் தீவிலிருந்த பிராஞ்சுக்காரர் சங்காரம்.

Ver, *m.* புழு, பூச்சி, கிருமி, பொட்டு, நாக்கப் பூச்சி ;— de terre நாக்கப் பாம்பு, *V.* Achée. நீச மனுஷன் ; tirer les—du nez இரகசியங்களை யறியத் தேடுதல் ;— de Guinée நரம்புச் சிலந்தி;— solitaire, *V.* Ténia;— rongeur மனவேதனை,— கண்டனம்.

Véracité, *f.* உண்மை, நிசம், மெய்மை.

Vera-Cruz, மெக்சிக்கு தேசத்தில் ஓர் நகர், வேராகிறுஸ்.

Véranda, *f. ou* Varangue தாழ்வாரம், வரண்டம், விறாந்தை.

Ver-à-soie, *m.* பட்டுப் பூச்சி, பட்டுநூற் பூச்சி, இறவி.

Vérâtre, *m.* V. Ellébore.

Verbal, e, *adj.* வினைக்கடுத்த, வினையாலாய. || வாய் மொழியான

Verbalement, *adv* வாய் மொழியாய்.

Verbaliser, *v. n.* வாக்குமூலஞ் சொல்லுதல்,— எழுதுதல், வீணில் விஸ்தரித்துப் பேசுதல்.

Verbe, *m.* வினை,— ச்சொல். || குரல், ஓசை, வாக்கு. || வார்த்தையானவர், சுதனாகிய சர்வேசுரன் ; avoir le —haut உரக்க—, அகந்தையாய்ப்பேசுதல்;— actif *ou* transitif செய்வினை, செயப்படுபொருள் குன்றாத வினை ;— neutre *ou* intransitif செயப்படு பொருள் குன்றியவினை ;— passif செயப்பாட்டு வினை ;— auxiliaire துணைவினை ; — pronominal தற்சம்பந்த வினை ;— impersonnel, unipersonnel ஓரிடவினை ;— défectif குறைவினை ;— régulier ஒழுங்கானவினை ;— irrégulier விபரீத வினை ;— causatif பிறவினை *ex.* செய்வித்தல், faire faire, c'est l'opposé de தன்வினை verbe neutre ou actif dont le sujet fait lui-même l'action du verbe, tandis que dans le பிறவினை il la fait faire par un autre;— positif விதி—, உடன்பாட்டு வினை ;— négatif மறை—, எதிர் மறை வினை ;— complet comme les verbes français தெரிநிலைவினை;— incomplet qui n'a qu'un temps குறிப்பு வினை ; c'est un substantif au radical duquel on donne les terminaisons du verbe comme de வில் arc, வில்லேன் j'ai un arc. *V.* la grammaire tamoule, pages 42, 43, 44 et 103: — principal முதல் வினை.

Verbena nodiflora, பொடுதலை.

Verbération, *f.* அடிப்பு.

Verbesina, அலோமி ;— calendulacia கரிசலை, பொற்றலைக்கையாந்த கரை, பொற்றாது ;— scandens மகா நீலம்.

Verbeux, euse, *adj.* சொல் மிகுதியுள்ள, மிஞ்சின விஸ்தீரணம்—விவரம்—பேச்சுள்ள.

Verbiage, *m.* அலப்பு, வீண் பேச்சு, மிஞ்சின விபரம், பேச்சு—, சொல் மிகுதி.

Verbiager, *v. n.* வீணில் விஸ்தரித்தல், வாயாடுதல்.

Verbiageur, euse, *s.* வீணில் விஸ்தரிக்கிறவன்,— வள், வாயாடி.

Verbosité, *f.* சொல் மிகுதி, அலப்பு.

Ver-coquin, *m.* கொடி முந்திரிகை யிலையைச் சுருட்டி யரிக்கும் புழு, தலைப் புழு, தலைப்புழு வருவிக்குங் கிறுகிறுப்பு, வீணிச்சை, வீணாசை.

Verd, *adj.* பச்சை, பசும், *V.* Vert.

Verdachellam, விருத்தாசலம் நகர்.

Verdâtre, *adj.* கொஞ்சம்—, இளம் பச்சையாகிய.

Verdaud, *adj.* கொஞ்சம் புளிப்பு—உறைப்பான.

Verdée, *f.* தொஸ்கான் நாட்டின் இளம்பச்சை நிற இரசம்.

Verdelet, ette, *adj.* கொஞ்சம் பச்சை—பலம்—புளிப்பு—உறைப்பான.

Verderie, *f.* காட்டுப் பங்கின் விசாரணை, காட்டு விசாரணைப் பங்கு.

Verdet, *m.* களிம்பு.

Verdeur, *f.* பச்சை, பசுமை, பசுந்து, சாரம், புளிப்பு, உறைப்பு, பலம், இளமை, உயிர்ப்பனவு;— de l'âge வாலிபத்தின் வேகம்,— ஊக்கம்.

Verdi, *part.* பச்சையான,— பூசின.

Verdict, *m.* நடுவர் தீர்ப்பு,— தீர்மானம், நிர்ணயம்.

Verdier, *m.* காட்டுக் காவற்காரர் தலைவன், ஓர் குருவி,— தவளை.

Verdillon, *m.* ஓர் கடப்பாரை.

Verdir, *v. a.* பச்சை பூசுதல்,— நிறமாக்குதல். || *v. n.* பச்சையாதல், பைத்தல், தழைத்தல், இலைத்தல். || se— பச்சை நிறங்கொள்ளுதல்.

Verdissement, *m.* Verdissant, e, *adj.* துளிர்ப்பு பச்சை கொள்ளுதல், பச்சை நிறம் பூசுதல், பச்சை கொள்ளும், பச்சையாகும்.

Verdoyant, e, *adj.* பசுமை—, பச்சையான,— நிறமான, பசும், இளம் பச்சையான, தழைப்புள்ள.

Verdoyer, *v. n.* கொஞ்சம் பச்சையாதல்.

Verdun, பிராஞ்சி ராச்சியத்தில் ஓர் நகர்.

Verdure, *f.* பசும் புல், தழை, பசுமை, செழுமை. தழைப்பு, பூண்டுகளின் பச்சை நிறம், பசண்டை, பச்சிலைகள், பசுங் கீரை, தழைப்பு காட்டுஞ் சித்திரம்.

Verdurier, *m.* அரமனைக்குச் சல்லரிக் கீரை விசாரணைக்காரன், கீரை விற்பவன்.

Véreux, euse, *adj.* புழுவுள்ள, பழுது—, குறை—, கேடுள்ள.

Verge, *f.* கோல், தடி, மாறு, மிலாறு, வளார், அடிக்கிற கோல், தண்டம், பிரம்பு, கம்பி, சலாகை, சாட்டி. || கசம், அளவுகோல். || கேவணமற்ற மோதிரம். || ஆண் குறி. || ஓர் சிவசெந்தான பூண்டு. || *pl.* மிலாறுகள், ஆக்கினை, துன்பம்; gouverner avec une—de fer இருப்புக்கோலால்—, கொடுமையாயாளுதல்; faire passer par les— மிலாறுகளால் அடிக்கப் பண்ணுதல்;— d'or பொன் மோதிரம், ஓர் பூண்டு.

Vergé, *adj.* வரியுள்ள, முரட்டு.

Vergée, *f.* சதுரக் கோலளவை.

Vergeoise, *f.* மட்ட தினுசு சர்க்கரை.

Verger, *m.* சோலை, கனிமரத் தோட்டம்,— தோப்பு, மரக்கா, வனிகை.

Verger, *v. a.* கோலாலளத்தல். || se— கோலாலளக்கப்படுதல்.

Vergeté, *adj.* சிறு கிளையுள்ள, சிவந்த சிறு வரியுள்ள.

Vergeter, *v. a.* துடை குச்சினால் துடைத்தல், இரட்டுதல், குச்சுச் சார்த்துதல். [வன்.

Vergetier, *m.* துடைகுச்சு செய்கிற

Vergette, *f.* குறைந்த தறி. || *ou*

Vergettes, *f. pl.* துடைகுச்சு, வஸ்திரங்களைத் துடைக்குங் குச்சு, குச்சுப் புல், கவரம், கவரி.

Vergeure, *f.* கடுதாசி யச்சின் கம்பி,— கம்பிக் கோடு.

Verglas, *m.* பெய் துறை மழை, பெய் துறைந்த நீர்ப்பரப்பு, பளிங்கு போன்ற உறைபனி.

Verglacer, *v. n.* உறைந்து மழை பெய்தல், பெய் துறைந்த நீர்ப்பரப்பாதல்.

Vergne, *m.* aune என்னு மரம்.

Vergogne, *f.* வெட்கம், நாணம்.

Vergue, *f.* பருமல், பாய் தொங்குங் குறுக்கு விட்டம், தெத்து.

Véricle, *f.* பொய்; diamant de— கண்ணாடியாற் செய்த கள்ளவைரம்.

Véridicité, *f.* உண்மை, மெய்மை, சத்தியம்.

Véridique, *adj.* உண்மையுள்ள,— சொல்லுகிற, எய்க்காத, பொய்யாத, நிபத்தியுள்ள, சத்தியவாதி,— வாக்கி.

Vérificateur, *m.* பரிசோதிக்கிறவன், உண்மையோ—, சரியோ பரிசோதிக்கிறவன்.

Vérification, *f.* பரிசோதனை, இடாப்பிற் பதித்தல்.

Vérifier, *v. a.* மெய்ப்பித்தல், மெய்யென்று ஒப்பித்தல், உரூபித்தல், மெய்—, நிச—, உருசுப்படுத்துதல், நிபத்தி பண்ணுதல். || பரிசோதித்தல், ஒத்துப் பார்த்தல். || நிறை வேற்றுதல், பரிசோதித் திடாப்பிற் பதித்தல். || se— பரிசோதிக்கப்படுதல், மெய்யாதல், நிறைவேறுதல்.

Vérin, *m.* மறு சுற்றினாற் பாரந்தூக்கு மெத்தனம்.

Vérine, *f.* முதல்த்தரப் புகையிலை, காந்தப் பெட்டிக்கு மேல்வைக்கும் கண்ணாடி விளக்கு.

Véritable, *adj.* மெய்யான, உண்மை—, சத்தியம்—, நிசமான, பொய்யாத, கலப்பற்ற, உத்தம.

Véritablement, *adv.* உள்ளபடி, நிசமாய், மெய்யாகவே, உண்மை—, சத்தியமாய்.

Vérité, *f.* உண்மை, சத்தியம், தத்துவம், நிசார்த்தம், மெய், நிசம், நிச்சயம், எதார்த்தம், யதார்த்தம், மெய்யான பேச்சு, அபைசுனம், அவிததம், சகசம், சச்சம், சத்து, நிபத்தி, யதாஸ்திதம்; dire à quelqu'un ses— ஒருவனுக்குத் தன் நிசமான தப்பிதங்களைச் சொல்லுதல்; en— மெய்யாகவே; à la— மெய்தான், உள்ளபடி.

Verjus, *m.* திராட்சக்காய்,— காயிரசம், உரத்த தோலுள்ள திராட்சம்.

Verjuté, *adj.* புளிப்பான திராட்சக்கா யிரசம்போட்ட.

Verjuter, *v. a* புளிப்பான திராட்சக்கா யிரசம் சேர்த்தல்.

Verle, *f.* ஓர்வித பீப்பாவளவை.

Ver-luisant, *m.* மின்மினி,— ப்பூச்சி, அலகுஞ்சம், அலகு, அலத்தி, கச்சோதம், நுளம்பு, பிரபாகீடம்.

Vermandois, *m.* பிராஞ்சி ராச்சியத்தில் ஓர் பூர்வீக நாடு.

Vermeil, eille, *adj.* பவள நிறமுள்ள, சிவந்த; mer— அமேரிக்காவில் ஓர் கடல்.

Vermeil, *m.* பொன் பூச்சுள்ள வெள்ளி.

Vermeille, *f.* சிவந்த விரத்தினம்.

Vermicelle, Vermicel, *m.* நூலாய்த் திரித்துக் காய்வித்த மாவு, இடியப்பம், ஷை மாவினாற் செய்த ஆணம்.

Vermicellier, *m.* ஷை மாவுக்காரன்.

Vermicide, *adj.* பூச்சி செந்துகளைக் கொல்லும்.

Vermiculaire, *adj.* புழுக்கடுத்த,— ஒத்த, *V.* Vermiculant. || *m.* ஓரோட்டு மீன்,— கிளிஞ்சில், ஓர் பூண்டு, ஓர் சிறு காளான்.

Vermiculant, *adj. m.* pouls— புழு நடைக்கொத்த நாடி.

Vermiculé, *adj.* புழு வடையாளம்—சுவடுள்ள.

Vermiculures, *f. pl.* புழு வடையாளமுள்ள வேலை.

Vermiforme, *adj.* புழு வடிவுள்ள.

Vermifuge, *adj. et m.* வயிற்றுப் பூச்சி கொல்லுகிற,— நீக்குகிற,— நீக்குகிற மருந்து, கிருமி நாசம்.

Vermiller, *v. n.* (நாக்கப் பூச்சி தேடுவதற்குக் காட்டுப் பன்றி) மூக்கினாற் பூமி நோண்டுதல்.

Vermillon, *m.* சிந்தூரம், செந்தூரம், சிந்தூர வன்னம், சூரண பாரதம், இங்குலிகம், இரசலிங்கம், சாதிப்பதங்கம்,— லிங்கம், குங்கிலியம், நேத்தியான சிவப்பு.

Vermillonner, *v. a.* சிந்தூரம்—, சாதிலிங்கம் பூசுதல். || *v. n.* நாக்கப் பூச்சி தேடுதல்.

Vermine, *f.* அசுத்த பூச்சிகள், புழு, பூச்சி, பேன், தெள்ளு, மூட்டுப் பூச்சி முதலியது. || போக்கிரிகள், கெட்ட பிட்சைக்காரர், திருடர்.

Vermineux, euse, *adj.* புழு—, பூச்சியுள்ள, பூச்சியால் வருகிற.

Verminière, *f.* குருவிகளின் உணவுக்காகப் புழுக்களையும் பூச்சிகளையும் வளர்க்குந் தொட்டி.

Vermisseau. *m.* புழு—, சிறு நாக்கப்பாம்பு, கிருமி, சிறு பூச்சி.

Vermivore, *adj.* புழுக்களைத் தின்னும்.

Vermouler (se), *v. pro.* உளுத்தல், புழுத்தல், உளுத்துப்போதல், சொள்ளை பிடித்தல்.

Vermoulu, e, *adj.* உளுத்த, புழுத்த, உளுத்துப்போன, சொள்ளையான,— பிடித்த, புழு நிறைந்து தின்ற.

Vermoulure, *f.* உளுப்பு, உளுப்பொடி, உளு, சொள்ளை, சொத்தை.

Vermouth, *m.* மருக்கொழுந்து கலந்த விரசம்.

Vernaculaire, *adj.* சுயதேசத்தை சேர்ந்த சுயபாஷை.

Vernal, e, *adj.* வசந்த காலத்து.

Verne, *m.* *V.* Vergne.

Vernier, *m.* சிறு பிரிவுகளை யறிவிக்கும் கருவி.

Vernir, *v. a.* மெருகெண்ணெய் பூசுதல், மினுக்கெண்ணெய் பூசுதல், மினுக்குதல், தளுக்கிடுதல், மெருகிடுதல். || se— மெருகெண்ணெய் பூசப்படுதல்.

Vernis, *m.* மினுக்கெண்ணெய், மெருகெண்ணெய், மினுக்கு, வார்னிஸ். || நற்சாயல், வேஷம், கொஞ்சமறிவு, மினுக்கெண்ணெய் கொடுக்குமரம்.

Vernissé, ée, *adj.* மெருகெண்ணெய் பூசின, வார்னிஸ் தடவின.

Vernisser, *v. a.* மினுக்கிடுதல், மினுக்கெண்ணெய் பூசுதல், தளுக்கிடுதல். || se— மினுக்கிடப்படுதல்.

Vernisseur, *m.* மினுக்கெண்ணெய் செய்பவன்,— பூசுகிறவன்.

Vernissure, *f.* மினுக்கெண்ணெய் —, மிருகெண்ணெய் பூசுதல், பூசின மிருகெண்ணெய்.

Vernonia anthelmintica, காட்டுச் சீரகம்.

Vérole, *f.* கிரந்தி, *ou* || petite— குரு வியாதி, அம்மை, அசூரி, மசூரி, வைசூரி, முத்து, இரத்த வடி, இரத்த வரடி, மசூரகம்.

Vérolé, *adj.* கிரந்தியுள்ள, கிரந்திக் கடுத்த.

Vérolique, *adj.* கிரந்திக் கடுத்த.

Véron, *m.* ஓர் சின்ன மீன்.

Vérone, இத்தலி தேசத்தில் வெரோன் நகர்.

Veronia, கத்திரி நாயகம், யானைச் சீரகம்.

Véronique, *f.* ஓர் பூண்டு.

Verrat, *m.* ஆண் பன்றி, விரைவாங்காத பன்றி.

Verre, *m.* கண்ணாடி, பளிங்கு, கேலாசம், வளையல், வளையில், கண்ணாடி —, பளிங்கினாலான பானபாத்திரம், கிளஸ், நிறைந்த பானப்பாத்திரம்;— de **lunette** கண்ணாடிச் சில்லு,— வில்லை; — de montre கடியாரக் கண்ணாடி; bracelet de— வளையல், வளையில்; un —de vin இரச நிறைந்த கண்ணாடிப் பாத்திரம்; petit— பளிங்குச் சின்ன பாத்திரம், அது கொண்டது.

Verré, ée, *adj.* கண்ணாடியைப் பொடிபண்ணித் தூவின.

Verrée, *f.* நிறைந்த பளிங்குப் பாத்திரம்.

Verrerie, *f.* கண்ணாடி—, பளிங்கு பண்டம்,— வேலை, — செய்யுந் தொழில்,— வார்க்குமிடம்,— ஆலை.

Verrier, *m.* பளிங்கு—, வளையல்—, கண்ணாடி வேலைக்காரன்,— பண்டங்களைக் கொண்டுபோகிறவன்,— பண்டக் கூடை, — பானப்பாத்திரக் கூடை: peintre — கண்ணாடிமேல் சித்திரஞ் செய்பவன்.

Verrière, *f.* கண்ணாடிப் பண்டத் தொட்டி, சட்டத்துக் கண்ணாடி.

Verrine, *f.* தீபமூடுங்—, படத்துக் கண்ணாடி, பளிங்கு மேல்மூடி, பலத்த முறுக்காணி. || வெறேஸ் என்பவன் பேரில் சிசெரோர்ன் செய்த பிரசங்கம்.

Verroterie, *f.* கண்ணாடிச் சிறு பண்டம்,— சிற்றுடைமை.

Verrou, Verrouil, *m.* தாப்பாள், தாள்ப்பாள், தாழ்ப்பாள், தாழ்,— க்கோல், தாள், கடிகை, விஷகம்பி; être sous les— சிறைச்சாலையி லிருத்தல்.

Verrouiller, *v. a.* தாழ்—, தாழ்ப்பாள் போடுதல்,— இடுதல்,— பூட்டுதல். || se— உள்ளே நின்று தாழ்ப்பாளிடுதல். [சம், மச்சை, கது.

Verrue, *f.* காய், காய்ப்பு, மறு, மச்

Vers, *m.* (ligne métrique) அடி, கவி, கட்டுப்பாடுள்ள அடி. || (poésie) கவி, செய்யுள். பா, பாட்டு;— blancs இயைபுத் தொடையில்லாத கவி;— libres பல அலகுள்ள கவி,—anacycliques, sotadiques, rétrogrades, récurrents கடை துவக்கிப் பின்னிட்டு வாசிக்கப்படத்தக்க கவிகள்.

Vers, *prép.* நோக்கி, பார்த்து, திசையில், பக்கத்தில், நேராக, காலத்தில், ஏறக்குறைய, கிட்ட, இடத்தில்.

Versailles, பிராஞ்சி ராச்சியத்தில் ஓர் நகர்.

Versage, *m.* வண்டி முதலானவைகள் முதல் உழவு.

Versant, e, *adj.* கவிழ்தற் கேதுவான, கவிழும் (வண்டில்). || *m.* சாரல், பக்கம்.

Versatile, *adj.* நிலையற்ற, நில்லாத, மாறுகிற, ஆடுகிற, அசைவுள்ள, அங்கங்கே—, எளிதாய்த் திரும்புகிற, மாறுங் குணமுள்ள.

Versatilité, *f.* மாறுங் குணம், நில்லாமை, குணபேதம்.

Verse, *adv.* sinus— உத்தரச்சா, அக்கிரச்சியை, உற்கிரமச்சா.

Verse (à) *adj.* வெகுகனம்—, சோனை—, மிகுதியாய்.

Versé, *part.* சிந்தின. || *adj.* தேர்ந்த, அப்பியாசமுள்ள, பரிட்சையுள்ள.

Verseau, *m.* கும்பம், கும்பராசி.

Versement, *m.* பணமிறுத்தல்.

Verser, *v. a.* சிந்துதல், சிந்துவித்தல், சொரிதல், வடித்தல், உகுத்தல், உதிர்த்தல், வாக்குதல். || வார்த்தல், ஊற்றுதல், இறைத்தல், கொட்டுதல், இறுத்தல். || குடை கவிழ்த்தல், சாய்வித்தல், வீழ்த்துதல் ;— des larmes கண்ணீர் விட்டழுதல் ;— à boire குடிப்பதற்கு வார்த்தல்;— le sang இரத்தஞ் சிந்துதல், கொல்லுதல் ;— son sang தன்னுயிரைக் கொடுத்தல்;—de l'argent பணமிறுத்தல்;— le mépris sur மேலே நிந்தனையாய்ப் பேசுதல் ; — une voiture வண்டில் கவிழ்த்தல் ;— les blés பயிர் சாய்வித்தல். || *v. n.* (பண்டி) குடை கவிழ்தல், (பயிர்) சாய்தல். || se— தனக்கு வார்த்தல், வார்க்கப்படுதல்.

Verset, *m.* வசனம், சுலோகம், சிறு வாக்கியம், சிறு வாக்கியத்தின் குறி.

Versicolore, *adj.* பல வருணமுள்ள, பற்பல நிறமுடைய.

Versificateur, *m.* புலவன், கவிஞன், கவி யுண்டாக்குகிறவன், பாத்தொடுப்பவன்.

Versicules, Versiculets, *m. pl.* சின்ன கவிகள்.

Versification, *f* செய்யுள், கவிஞன் வித்தை, செய்யுள்—, கவி யுண்டாக்குதல்,— யுண்டாக்கும் விதம்,— யுண்டாக்கும் வித்தை.

Versifier, *v. n. et a.* கவி—, செய்யுளுண்டாக்குதல்,— பாடுதல், பாதொடுத்தல், செய்யுளாகக் கட்டுதல்,— எழுதுதல்.

Version, *f.* சுய பாஷையில் மொழிபெயர்த்தல், மொழி பெயர்த்தல், -- பெயர்த்தது,— பெயர்த்த புஸ்தகம், பாஷைப் படுத்தியது, விவரிக்கும்—, சொல்லும் வகை. || புரட்டுகை.

Verso, *m.* (தாளின்—, ஏட்டின்) பின் பக்கம், *opposé à* recto.

Versoir, *m.* சால்மேல் மண் திருப்புங் கலப்பையின் பங்கு, கலப்பையின் காது.

Verste, *f.* ருசிய தேசத்து அளவை, அரை நாழி.

Vert, e, *adj.* பச்சை, பசும், பச்சை—, பசுமை—, அரிதமான, பைத்த, காயாத, காயாகிய, பழுக்காத, உலராத. || பலம்—, வேகம்—, வீரம்—, ஆண்மையுள்ள. || தைரியம்—, திடம்—, துணிவுள்ள. || உறைப்பான, காரமான, பிரியமற்ற, கடின : bois— காயாத—, உலராத மரம் ; cuir — பதனிடாத தோல் ; tête— விவேகமற்ற தலை.

Vert, *m.* பச்சை,— நிறம், அரிதம், யாமளம், மரவிலைகள், பச்சைப் புல், பசும் புல், பயிர், புதுப் பயிர், பல பச்சைப் பயிர் கலப்பு, இன்னம் பழுக்காத தானியம்,— காய். || உறைப்பு ; prendre sans — நினையாதபோது பிடித்தல் : manger son blé en— முன்னமே தன் வருமானஞ் செலவழித்தல் ; employer le—et le sec உபாயமெல்லாஞ் செய்தல்.

Vert-antique, Vert-d'Egypte, *m.* வெள்ளை வரியுள்ள பச்சைப் பளிங்குக் கல்.

Vert-de-gris, *m.* களிம்பு, தாம்பிரமலினம், பித்தளைத் துரு, துருசி, செளிம்பு, பிங்களம்.

Vert-d'iris, *m.* ஓர் பச்சை நிறம்.

Vertébral, e, *adj.* முள்ளெலும்புக் கடுத்த, முள்ளெலும்புள்ள.

Vertèbre, *f.* முள்ளெலும்பு, முதுகெலும்பு, முள்ளந் தண்டு, பிணைந்த எலும்புத் துடர்ச்சி, முள்ளெலும்புப் பொருத்து, வீணைதண்டு, முதுகின் ஒவ்வோர் எலும்பு.

Vertébré, *adj.* முள்ளெலும்புள்ள, முள்ளெலும்பு வடிவுள்ள. || *m. pl.* முள்ளெலும்புள்ள பிராணிகள்.

Vertement, *adv.* ஊக்கம்—, கடினமாய்.

Vertex, *m.* உச்சந் தலை, உச்சி, உச்சம்.

Vertical, e, *adj* உச்ச, உச்சிக்கு நேரான, உச்சமான, உச்சியிலுள்ள, நட்டமான, இலம்பன, செங்குத்தான; point —உச்சி. ‖ *m.* அடி வானத்துக்கு நேர் நிலையான பெரிய சக்கரம்.

Verticale, *f.* உச்சிக்கு நேர் வரி, இலம்பன—, செங்குத்தான வரி, நட்டகோடு. [ராய், நட்டமே.

Verticalement, *adv.* உச்சிக்கு நே

Verticalité, *f* உச்சிக்கு நேர் நிலை.

Verticaux, *m. pl.* உச்சிக்கு நேர் நிலையான பெரிய வட்டங்கள்,— மண்டலங்கள்.

Verticille, *m.* தாளைச் சூழும் பூங்கொத்து,— இலைக்கொத்து.

Verticillé, *adj.* ஷை கொத்துள்ள, —ஆகிய.

Vertige, *m.* தலை மயக்கம்,— ச்சுழற்சி, கிறுகிறுப்பு, கண்ணிருட்டு மயக்கம், தெருமரல், கறக்கம். ‖ பைத்தியம். ‖ மயக்கம்; avoir des— தெருமருதல், மயங்குதல், தலை சுழலுதல். அந்துளி துந்துளியார்த்தல், உலாஞ்சுதல்.

Vertigineux, euse, *adj.* தலை மயக்கமுள்ள,-- வருவிக்கிற.

Vertigo, *m.* குதிரைக் குரிய, தலைச் சுழற்சி. ‖ வீணிச்சை, துடுக்கு, கொஞ்சம் பைத்தியம்.

Vertu, *f.* புண்ணியம், அறம், சுகிர்தம், தருமம், நல்லொழுக்கம், கற்பு, அயம், சீவதம், பநீதம். ‖ தைரியம், வீரம், வீரியம், பலம், சத்துவம், ஊக்கம், உற்சாகம். ‖ சத்தி, சித்தி, பலிப்பு; faire de nécessité— அவசரமானதை இஷ்டமாய்ச் செய்தல், அவசரத்துக் கிணங்குதல்; les—des plantes பூண்டுகளின் சத்தி; en—de நியாயத்தினிமித்தம், அதிகாரத்தினால், பற்றி; honorer la— புண்ணியத்தை—, புண்ணியவான்களை வணங்குதல்; les—(parmi les anges) பலவத்தர்; les Indiens distinguent 2 espèces de vertus; —domestique இல்லறம், இல்லாச் சிரமம், இல்லொழுக்கம், அநுதாரம்;— religieuse துறவறம்.

Vertueusement, *adv.* புண்ணியமாய், நல்லொழுக்கமாய்.

Vertueux, euse, *adj.* சுகிர்த, புனித, புண்ணியம்—, கற்பு—, நல்லொழுக்கம்—, சற்குணமுள்ள. ‖ *s.* புண்ணியவான், சற்குணன், அறவன், புண்ணியவதி, கற்புடையாள்.

Vertugadin, *m.* பெண்கள் சட்டையின் உள்வளையம், புல் நிலமாகிய சாய்வான மேடு.

Verve, *f.* உரூபிகர சத்தியின்—, புலமை முயற்சி,— ஊக்கம். ‖ வீணிச்சை. [தலைபோடம்.

Verveine, *f.* ஓர் பூண்டு, பொடுதலை,

Vervelle, *f.* இராசாளிக்காலின் மோதிரம். [ள.

Verveux, *adj.* புலமை முயற்சியுள்

Verveux, Vervier, *m.* வீச்சு வலை.

Vésanie, *f.* பைத்தியம்.

Vesce, *f.* ஓர் உளுந்து,— துவரை, —பயறு, பசும் பயறு, மொச்சை.

Vesceron, *m.* ஓர்வித காட்டுளுந்து.

Vésical, e, *adj.* ஊற்றும் பெட்டிக்கடுத்த. [விக்கிற.

Vésicant, e, *adj.* கொப்புளம் வரு

Vésication, *f.* கொப்புள மொழுப்புகை, அக்கினிச் சேர்வைச் சித்தி.

Vésicatoire, *m.* அக்கினிச் சேர்வை, கடுங்காரச் சேர்வை, கார சீலை, கொப்புளம் வருவிக்கு மருந்து, அக்கினிச் சேர்வை வருவிக்குங் காயம். ‖ *adj.* தோலில் கொப்புளம் வருவிக்கிற.

Vésiculaire, Vésiculeux, euse, *adj.* சிறுபை வடிவான.

Vésicule, *f.* சிறுபை, சுருக்குப்பை, சலப்பை, கொப்புளம்;— du fiel *ou* biliaire பிச்சுப்பை; — aérienne, *V.* Vessie natatoire.

Vesou *m.* கருப்பஞ் சாறு.

Vesoul, பிராஞ்சி ராச்சியத்தில் வெசுல் நகர். [கு ஆளோட்டி.

Vespasienne, *f.* மூத்திரம் பெய்தற்

Vespéral, *m.* மாலைப் பிரார்த்தனைப் புஸ்தகம்.

Vespérie, *f.* சாஸ்திரப் பட்டத்துக்கு முந்தின கடைசித் தருக்கம், கண்டனை.

Vespériser, *v. a.* கண்டித்தல்.

Vespertilion, *m.* ஓர் வவ்வால்.

Vespétro, *m.* ஓர்வித பானம்.

Vesse, *f.* சத்தமற்ற குசு, ஊமைக் குசு. [காளான்.

Vesse-de-loup, Vesse-loup, *f* ஓர்

Vesser, *v. n.* சத்தமற்ற குசுவிடுதல், நசுக்குதல்.

Vesseur, euse, *s.* அடிக்கடி சத்தமற்ற குசுவிடுகிறவன்,— வள்.

Vessie, *f.* ஊற்ரும் பெட்டி, சலாசயம், சலக்குடர்,— ப்பை, க்குடல், சலவாசயம், அவஸ்தி, காய்ந்த ஊற்ரும் பெட்டி. || கொப்புளம் ;— natatoire மச்சங்களின் வாயுப்பை.

Vessigon, *m.* குதிரைப் பின்தொடை வீக்கம்.

Vesta, *f.* வெஸ்தா என்னும் பொய்த்தேவதை,— ஓர் சின்ன கிரகம்.

Vestale, *f.* ஷை தேவதையின் பூசாரிச்சியாகிய கன்னி. || கெடாத—, மிகவுங் கற்புடையவள்.

Veste, *f.* சட்டை, ஓர்வித அரைச் சட்டை, சொக்காய், கையுள்ள மார்ச் சட்டை, அங்கரைக்காய், கஞ்சுகம்.

Vestiaire, *m.* உடுப்பறை, வஸ்திரவிடம், உடைப் பெட்டி. || உடுப்புச் செலவு.

Vestibule, *m.* முன்னடி, முன் சாலை, முன்னறை. முன் மண்டபம், தலைவாசல், தலைவாசலறை, நடை, தோரணவறை, கூடம். || காதினுட்சுருள்.

Vestige, *m.* அடி, காலடி, அடிச் சுவடு, சுவடு, கால்மிதி, நிலையடி, பதாங்கம். || அடையாளம், குறி, குறிப்பு. || பழைய வீட்டினிடிசல்,— மிச்சம். || தட்டை யெலும்பின் நசிவு.

Veston, *m.* சட்டை.

Vésuve, *m.* இத்தலி தேசத்தில் வெசுவ் என்னு மக்கினி மலை.

Vésuvien, enne, *adj.* வெசுவ் மலைக் கடுத்த,— மலையினின்று வருகிற.

Vêtement, *m.* வஸ்திரம், சீலை, புடவை, உடுப்பு, உடை, ஆடை, சட்டை, அம்பரம், உடுமானம், உடைமானம், கப்படம், சசேலம், சம்படம், நிவேசம்.

Vétéran, *m.* பழைய உத்தியோகஸ்தன்,— சேவகன், சேவககாலம் தீர்ந்த —முடிந்த சேவகன். || ஓர் வகுப்பில் மறுபடி படிக்கிறவன் ;— de la gloire, du crime மகிமையில் —, பாதகத்திற் காலம் போக்கினவன்.

Vétérance, *f.* பழைய உத்தியோகஸ்தன் —சேவகன் தன்மை.

Vétérinaire, *adj.* குதிரை—, மிருக வைத்தியத்துக் கடுத்த,— வைத்தியம் படிக்கிற; médecine— குதிரை—, மிருக வைத்தியம். || *m.* குதிரை—, மிருக வைத்தியன், விலங்கின் நோய் வைத்தியன்.

Vétillard, e, *s.* வீண் நுணுக்கக்காரன்,— காரி.

Vétille, *f.* அற்பம், விழல், வீண்,— நுணுக்கம்.

Vétiller, *v. n.* வீணில் தர்க்கித்தல், வீண்காரியம் விசாரித்தல்.

Vétillerie, *f.* வீண் தர்க்கம், தந்திரநியாயம்.

Vétilleur, euse, *s.* வீண் நுணுக்கக்காரன்,— காரி.

Vétilleux, euse, *adj.* நுணுக்கம்—, அருமையான, வீண் நுணுக்கம் விசாரிக்கிற.

Vêtir, *v. a.* உடுத்துதல், உடுத்தி விடுதல், உடுப்பித்தல், அணிவித்தல், தரிப்பித்தல், போர்த்தல், மிலைச்சுதல் ;— les pauvres தரித்திரருக்கு வஸ்திரங் கொடுத்தல்;— un enfant பிள்ளைக்கு முதல் சட்டையிடுதல் ;— une robe ஓர் சட்டை யணிதல். || se— உடுத்தல், அணிதல், தொடுதல், தரித்தல், உடுத்தி—, அணிந்து—, போர்த்துக்கொள்ளுதல், மிலைதல்.

Véto, *m.* மறியல், மறிப்பு, நிஷித்த வாக்கு; mettre le— மறியல் செய்தல்.

Vêtu, *part.* உடுத்த, அணிந்த, உடுத்திய.

Vêture, *f.* சந்நியாசி—, கன்னியாஸ்திரி யுடுப்பு மந்திரித்துத் தரிப்பிக்குஞ் சடங்கு.

Vétusté, *f.* பழமை, நெடுங்காலம்.

Vétyver, *m.* வெட்டிவேர், *V.* Andropogon muricatum.

Veuf, *adj. et m.* தாரம்—, பெண்சாதியை யிழந்த,— வன், அயோகன்.

Veule, *adj.* நொய்ய, பலனற்ற, மெல்லிசு—, இலேசான, மெலிந்த.

Veuvage, *m.* தாரமிழந்த தன்மை. || கைமை, விதவைத் தன்மை, வைதவ்வியம். || தனிமை, ஏகாந்தம், பிரத்தியேகம்.

Veuve, *adj.* விதவையான, புருஷனை யிழந்த, கைம்பெண்சாதியாகிய, ஞான மேய்ப்பனற்ற, அற்ற, இழந்த, பொக்கடித்த. || *f.* கைம்பெண்சாதி, விதவை, அறுதலி, அறுதாலி, அறுத்தவள், அமங்கலி, கயினி. || ஓர் பூ, ஓர் கிளிஞ்சில், ஓர் பக்ஷி.

Vexant, e, *adj.* பிரியமற்ற, பிரியவீன, தொந்தரையான.

Vexateur, trice, *adj. et s.* தொந்தரை—, உபத்திரியப் படுத்துகிற,— வன், — வள், அருக்காணி.

Vexation, *f.* தொந்தரை, உபத்திரியம், அலைக்கழிப்பு, அலைச்சல், கஸ்தி, விசனம், கவலை, தொல்லை, அடாவந்தி, அலக்கண், இட்டோட்டு, இன்னல், உலூட்டி, சிப்பிலாட்டு, திண்டாட்டம், திப்பிலி, நடலம்.

Vexatoire, *adj.* தொந்தரை—, உபத்திரியமான.

Vexer, *v. a.* தொந்தரை—, உபத்திரியம்—, வேதனை—, தொல்லை—, விசன—, கஸ்திப்படுத்துதல், அலைக்கழித்தல், அலட்டுதல், வருத்துதல், விரோதித்தல், தெற்றுதல், இடைஞ்சல் பண்ணுதல், வாதித்தல், உலைத்தல், திண்டாட்டம்—, நடலம் பண்ணுதல், திப்பிலியாட்டுதல். || se— கோபித்தல், சினத்தல், எரிச்சலாதல், ஒருவனொருவனுக்கு விரோதஞ் செய்தல்.

Vexillaire, *adj.* கொடியின், கொடியாலாகிற. [ஓர் பூர்வீக நாடு.

Vexin, *m.* பிராஞ்சி ராச்சியத்தில்

Via, *prép.* வழியாய், மார்க்கமாய்.

Viabilité, *f.* பிழைக்கக்கூடிய தன்மை, வழியின் நல்லந்தஸ்து. [தக்க.

Viable, *adj.* பிழைக்கக்கூடிய,—

Viaduc, *m* பாதைமேல்—, கணவாய்மேல் செய்த பாலம்.

Viager, ère, *adj.* சீவிக்கிற மட்டுமாகிய,— உள்ள. || மரண பரியந்த வருமானமுள்ள. || *m.* மரண பரியந்த வருமானம்.

Viagèrement, *adv.* சீவிக்குமளவும்.

Viande, *f.* இறைச்சி, சதை, தசை, மாமிசம், புலால், புலை, புளிதம் : —blanche கோழி, கன்றிறைச்சி;—noire முசல்—காட்டுப் பன்றி யிறைச்சி.

Viander, *v. n.* (காட்டு மிருகம்) மேயதல், தின்றல். [சல், இரை. தீனி.

Viandis, *m.* (காட்டு மிருக) மேய்ச்

Viatique, *m.* அவஸ்தை நன்மை, அவஸ்தைக்காரருக்குக் கொடுக்கப்படுந் தேவநற்கருணை, வழிச்செலவு, சம்பளம்.

Vibord, *m.* (கப்பலின்) மேல்த்தட்டோரப் பலகை.

Vibrant, e, *adj.* ஆட்டம்—, ஓட்டம்—, நடுக்கமுள்ள ; pouls— ஆட்டமுள்ள நாடி.

Vibrateur, *m.* தந்தி அடிப்பதில் தொனியைச் செல்லச்செய்யுங் கருவி.

Vibratile, *adj.* ஆட்டமான, ஆட்டத்துக்குரிய.

Vibration, *f.* ஆட்டம், ஓட்டம், விசை, நடுக்கம், கம்பனம், கம்பம், அதிர்ச்சி, சலனம், வீச்சு, அசைவு, நடை.

Vibratoire, *adj.* ஆட்டம்—அசைவு—, நடுக்கமான.

Vibrer, *v. n.* ஆடுதல், அசைதல், நடுங்குதல் ; faire— ஆட்டுதல், ஆடுவித்தல், அசைத்தல். || *v. a.* வீசுதல், விசிறுதல், எறியச் சுழற்றுதல்.

Vibrisse, *m.* மனுஷர் மூக்கு மயிர், பக்ஷிகளின் நீண்ட செட்டைகள்.

Vibrion, *m.* ஓர்வித சிறு நீர்ப்பூச்சி, —புழு.

Vicaire, *m.* பதிலாளி, பதிலதிகாரி, பிரதி பாலகன், (விசாரணைக் குருவின்) பதில் குரு, பிரதி குரு, (சில தேசங்களில் curé விசாரணைக் குரு என்றர்த்தமாம்);— de l'empire இராயன் பதிலாளி; grand—, —général (மேற்றிராணியாரின் பதிலாளி,— துணைவராகிய) சாதாரண சிரேஷ்ட குரு, அதிசிரேஷ்ட குரு ;— apostolique அப்போஸ்தொலிக்கு விக்காரியார், ஓர் விசாரணை நாட்டில் அர்ச். பாப்புவின் பதிலாளியாகிய மேற்றிராணியார் ;— de Jésus-Christ சேசுகிறிஸ்துநாதருக்கு பதிலாளியாயிருக்கிறவர், அர்ச். பாப்பு.

Vicairie, *f. V.* Vicariat.

Vicarial, e, *adj.* பதிலாளியின், பதில் குருவுக் கடுத்த.

Vicariat, *m.* விக்காரியாருடைய—, பதில் குருவின்—, பதிலாளியின் விசாரணை,— விசாரணை நாடு,— விசாரணைக் காலம், பதிலாளித்தனம்,— உத்தியோகம்,— விசாரணை நாடு, உபாதிகாரம்; —apostolique அப்போஸ்தொலிக்கு விக்காரியாத்து, அர்ச். பாப்புவின் பதிலாளி மேற்றிராணியார் விசாரணை நாடு.

Vicarier, *v. n.* பதில் குருவாயிருத்தல். உபாதிகாரத்திலிருத்தல்.

Vice, *m.* துர்க்குணம், கெட்டகுணம்,— வாடிக்கை, குற்றம், தப்பிதம், தப்பு, பாவம், அவத்தியம். || குறை, குறைச்சல், பழுது, பிழை, தப்பு, வழு. ||

துர்மார்க்கம், துர்நடத்தை, தாறுமாறு; —de conformation அந்தக்கேடு;—de prononciation, de style உச்சரிப்பின்—, வசனத்தின் பிழை; se livrer au— துர்மார்க்கமாய்ப்போதல்; protéger le— கெட்டவர்களை யாதரித்தல். (மீளவுஞ் சேர்க்கைச் சொற்களில் பதிலாளி—பதிலான என்றர்த்தமாம்).

Vice-amiral, *m.* கப்பற் கூட்டத்து இரண்டாந் தலைவன்,— இரண்டாங் கப்பல். [தியோகம்.

Vice-amirauté. *f.* ஷை தலைவனுத்

Vice-bailli, *m.* ஓர் நடுவன்.

Vice-chancelier, *m.* அரசின் முத்திரைக்காரன் பதிலாளி.

Vice-consul, *m.* பதில் கொஞ்சுல்.

Vice-consulat, *m.* பதில் கொஞ்சுலுத்தியோகம்.

Vice-gérant, *m.* திருச்சபை நடுவன் பதிலாளி, பதில் தலைவன், பதிலாளி, காரியக்காரன்—, விசாரணைக்காரன் பதிலாளி.

Vice-héraut, *m.* கட்டியக்காரன் பதிலாளி, பதிலான கட்டியக்காரன்.

Vice-légat, *m.* அர்ச். பாப்புவின் ஸ்தானுபதியின் பதிலாளி.

Vice-légation, *f.* ஷை பதிலாளி யுத்தியோகம்.

Vicennal, e, *adj.* இருபது வருஷத்தின்,— வருஷத்துக்குப் பின்வருகிற.

Vice-pilote, *m.* பதில் மாலுமி, மீகாமன் பதிலாளி.

Vice-préfet, *m.* பதில் தேசாதிக்கன்,— சிரேஷ்ட குரு, ஆள்பவன் பதிலாளி. [த்தியோகம்.

Vice-présidence, *f.* பதில் தலைவனு

Vice-président, *m.* பதில் தலைவன், தலைவன் பதிலாளி. [பெண்சாதி.

Vice-reine, *f.* பதிலரசி, பதிலரசன்

Vice-roi, *m.* பதிலரசன், இராச்சிய பரிபாலனன், அரசன் பதிலாளி, தேசாதிபதி.

Vice-royauté, *f.* பதிலரசு, பதிலரசன் பட்டம்,— இராச்சியம்.

Vice-sénéchal, *m.* பெரிய நியாயாதிபதியின் பதிலாளி.

Vicésimal, aux, *adj.* இருபதிருபதாய்க் கணிக்கப்படும்.

Vice versa (et), *adv.* பதிலுக்குப் பதிலாகவும், எதிர்விதமாகவுமாம்.

Vichnou, *m.* விஷ்ணு, விட்டுணு, பெருமாள்; son paradis வைகுண்டம்.

Vichnouvistes. *m. pl.* sectateurs de Vichnou, வைஷ்ணுவர், வைணவர்.

Vichy, பிராஞ்சி ராச்சியத்தில் தாதூற்றுச் சலத்தாற் பேர்பெற்ற விடமாகிய விஷீயூர்.

Viciable, *adj.* Viciateur, *adj.* Viciation, *f.* கெட்டுப்போகக் கூடிய, அழிவுக்குரிய, அழியும். கெட்டுப்போகச் செய்யும், கெடுக்கும், கெடுக்குதல், கெட்டுப்போகச் செய்தல், அழிதல். ,

Vicier, *v. a..* கெடுத்தல், அழித்தல் நிஷ்பல மாக்குதல். || se— அழிதல்’ கெடுதல்.

Vicieusement, *adv.* கெடுதி—, ஊனம்—, பழுது—, குறையாய்.

Vicieux, euse, *adj.* கெட்ட, பொல்லாத, துஷ்ட, துர்க்குணமுள்ள. || பிழை—, பழுது—, குற்றம்—, தப்பிதம்—, குறை—, குறைச்சல்—, ஊனமுள்ள, ஒழுங்கற்ற, முறையற்ற. || துர்க்குணம்—, துர்மார்க்கம்—, துர்நடத்தையுள்ள, பாவமான. || *m.* துர்க்குணன், துஷ்டன், துர்மார்க்கன்.

Vicinal, e, *adj.* அடுத்த, அயலான, அண்டையூரின்; chemin— பலவூருக்குக் கொண்டுபோகிற வழி.

Vicinalité, *f.* பலவூருக்குக் கொண்டுபோகுந் தன்மை.

Vicissitude, *f.* மாறுபாடு, மாற்றம், மாறுதல், பேதம், திரிவு, விகாரம். || மாறிவருந் திட்டம், முறையாய் மாறித் திரும்புதல், திட்டமாய் மாறுதல். || நில்லாமை, வீணிச்சை. || துன்பம், நிர்ப்பாக்கியம். [டுவன்.

Vicomte, *m.* ஓர் பிரபு, தாழ்ந்த ந

Vicomté, *f.* ஷை பிரபுத்தனம்,— பிரபுத்தன நாடு. [ண்சாதி.

Vicomtesse, *f.* ஷை பிரபுவின் பெ

Victimaire, *m.* பலிமிருகங் கொடுக்கிறவன்,— வெட்டுபவன்,— அடிக்கிறவன், பலிமுஸ்திப்பு செய்கிறவன்.

Victime, *f.* பலி,— மிருகம். || சேதமானவன்—, நஷ்டப்பட்டவன்,— வள்; —de la calomnie கோளால் நஷ்டப்பட்டவன்; être la—de sa bonne foi தன் பிரமாணிக்கத்தாற் சேதமடைதல்.

Victimer, *v. a.* பலியிடுதல். || பரியாசம் பண்ணுதல்.

Victoire, *f.* வெற்றி, செயம், சயம், விசயம், கெலிப்பு, படினம், விதர்ப்பு, அவிபவனம். கொற்றம், சைத்திரம், விநிர்ச்சயம், வெல்வி, வென்றி, வேறல், மேன்மை, செயத்தின் பொய்த்தேவதை, விக்த்தோரியா என்பவள் ; remporter la— செயங்கொள்ளுதல், செயித்தல், வெல்லுதல், கெலித்தல்; crier — ஆர்பரித்துச் செயங்கொண்டாடுதல், கொய்யோ கூறுதல் ; chanter— செயத்தின் மகிமை பாராட்டுதல்.

Victoria, *f.* நாற்சக்கரமுள்ள குதிரை வண்டி.

Victorial, e, *adj*. செயத்துக்கடுத்த.

Victorieusement, *adv.* செயசாலியாய்.

Victorieux, euse, *adj.* வெற்றி—, செயங்கொண்ட,— பெற்ற,— அடைந்த,— உள்ள, செயித்த, கெலித்த, கெலிப்புக்குரிய. || *m.* செயசாலி, செயவீரன், செயசீலன், விசயி, கொற்றன்.

Victorin, *m.* ஓர் சபைச் சந்நியாசி.

Victuaille, *f.* இரஸ்து, உணவு.

Vidage, *m* வெறுமையாக்குதல், சுத்தம் செய்தல்.

Vidame, *m.* மேற்றிராணியார் நிலவிசாரணைக்காரன், மணியக்காரன்.

Vidamé, *m.* **Vidamie**, *f.* மேற்றிராணியார் நிலவிசாரணை,— விசாரணைநாடு, ஷை விசாரணைக்காரன் பட்டம்.

Vidange, *f.* வெறுமையாக்குதல்,—யாதல், வெட்டின மரங்களை—, மண்ணையெடுத்தல், நிறையாமல் மூடியிருத்தல் ; un tonneau de vin être en— பீப்பா நிறையாமலிருத்தல், இரசஞ் செலவாதல். || *pl.* அசுத்தம், கஷ்டம், சுரோணிதம், ஊத்தை.

Vidanger, *v. a.* கக்கூஸ் வீட்டைச் சுத்தம் பண்ணுதல், புட்டிகளைக் காலிபண்ணுதல்.

Vidangeur, *m.* தூரெடுக்கிறவன், கக்கூஸ் வீட்டைச் சுத்தம் பண்ணுகிறவன், தோட்டி.

Vide, *adj.* வெறும், வெற்று, வெறு, வெறுமை—, அசத்தை—, சூனியமான, அவந்தரையான, ஒன்றுமில்லாத, பலனற்ற, அற்ற, இல்லாத ; se retirer les mains— வெறுங்கையாய் பணமின்றி—, பலனின்றி இடைந்துபோதல் ; cœur— பற்றுதலற்ற இருதயம் ; tête — நினைப்பு —, எண்ணமற்ற தலை ;— de sens அர்த்தமில்லாத. || *m.* அந்தரம், வெறுமை, சூனியம், ஆகாசமுதலாயில்லாதவிடம், ஆகாச விரிவு, வெறுமிடம், இன்மை, ஒன்றுமில்லாமை, குறைச்சல், வீண், வியர்த்தம் ; à— ஒன்றுமில்லாமையாய், வெறுமையாய், ஒன்றுங்கொண்டுவராமல் ; jouer à— விரல் போடாமல் நரம்பு சத்திப்பித்தல்.

Vidé, *part.* வெறுமையான.

Vide-bouteilles, *m.* நகரடுத்த சின்ன தோட்டவீடு, குப்பி திறவாமல் வெறுமையாக்குங் குழல்.

Vide-citron. *m.* எலுமிச்சம் இரசம் பிழியுங் கருவி.

Vide-gousset, *m.* முடிச்சுமாறி, திருடன்.

Videlle, *f.* கனியைக் குடையுங் கருவி, பிசைந்தமாவை யறுக்கு முருளை.

Vide-poches, *m.* பையிலிருக்கிறதை வைக்குஞ் சின்ன சாமான்.

Vider. *v. a.* வெறுமை—, சூனியமாக்குதல், ஊற்றுதல், தோண்டுதல், துளைத்தல், குடல்களைப் பிடுங்குதல், ஆய்தல், கழித்தல், ஒழித்தல், கட்டாயமாய் விடுதல், தீர்த்தல் ;— son verre பானமுழுதுங் குடித்தல்,— une clef, un canon ஓர் சாவி —, ஓர் பீரங்கி நுனியைத் துளைத்தல் ;— les lieux இருக்கிறவாசங் கட்டாயமாய் விடுதல்—, கையிலிருக்கிறதெல்லாங் கொடுத்தல் ;— un compte, un différent கணக்கு—, வியாச்சியந் தீர்த்தல். || se— வெறுமையாதல், தீர்தல், முடிதல், (மிருகம்) அதிகமாய்க் கழிதல்.

Vidimer, *v. a.* ஒத்துப்பார்த்து நிச்சயப்படுத்துதல்.

Vidimus, *m.* ஒத்துப்பார்த்ததற் கத்தாட்சி.

Vidrecome, *m.* பெரும் பானப்பாத்திரம்.

Viduité, *f.* கைமை, விதவைத் தன்மை, வைதவ்வியம், தாரமிழந்த தன்மை.

Vie, *f.* உயிர், சீவன், பிராணன், பிராணம், சீவம், சீவியம், சீவாத்துமம், ஆவி, ஆயுட்—, சீவியகாலம், ஆயுசு, சீவிய—, வாழ்நாள், ஆயுஷியம், சீவனம், ஆசீவம், சீவிக்கும்விதம், அசனத்திட்டம். || நடக்கை, நடத்தை. || சண்டை, கண்டனை. || சரித்திரம், சரிதை. || ஊக்கம், உற்சாகம், வேகம், முயற்சி ;

la—présente இம்மை; l'autre— அம்மை; la—future வருஞ்சீவியம்; être en — சீவித்தல், உயிரோடிருத்தல்; donner la—à son ennemi சத்துருவைக் கொல்லாதிருத்தல்; être unis à la—à la mort சீவியகால எல்லாத்திலும் ஒன்றித்திருத்தல்; passer sa— சீவியகாலஞ் செலவழித்தல்,— போக்குதல்; chercher, gagner sa— பிழைப்பு,— சீவனந்தேடுதல்,— பண்ணுதல்; faire—qui dure தன்னாஸ்தி செலவொறுத்தல்; mener une—de bohême போக்கிரியாய்—, நாடோடியாய் நடத்தல்; faire la— விருந்தாடுதல், சந்தோஷித்தல், சண்டை செய்தல்; à— மரணபரியந்தம்; jamais de ma—, de ma—ஒருகாலுமில்லை.

Viédase, *m.* கழுதை முகம்.

Vieil, Vieille, *adj.* *V.* Vieux.

Vieille, *f.* கிழவி, விருத்தை, தள்ளாதவள், மூதாட்டி.

Vieillard, *m.* கிழவன், விருத்தாப்பியன், தள்ளாதவன், மூப்பன், மூத்தோன், விருத்தன், சீரணன், முதுமான்; le—de Téos, Anacréon என்பவன், le—de Cos, Hippocrate என்பவன், le—d'Ascrée ou d'Ascra, Hésiode என்பவன். ‖ *pl.* கிழவர், மூப்பர், கிழவோர், மூத்தோர், முதுவர்.

Vieillerie, *f.* பழ உடுப்பு, பழைய துணி,— சாமான்,— பொருள்,— பேச்சு—காரியம், தொளாபாரம், சரண்டம்.

Vieillesse, *f.* கிழப்பிராயம்,— வயது, பெரிய வயசு, முதிர்ந்த பிராயம், கிழம், மூப்பு, முதுமை, விருத்தாப்பியம், கிழமை, கிழத்துவர், விசிரசை, விருத்தம் ‖ பழமை, நெடுங்காலம். ‖ கிழவர்.

Vieilli, *part.* வழக்கமற்றுப்போன, பழசான, பழமையான, இப்போது வழங்காத, பழைய மாதிரியான, வாடின, மங்கின.

Vieillir, *v. n.* கிழவன்—, கிழவியாதல்,— ஆய்ப்போதல்,— ஆய்த்தோன்றுதல், கிழம்—, பழசு— பழமையாதல், முற்றுதல், நாட்படுதல். வயதுசெல்லுதல், முதிருதல், மூத்தல், கிழண்டுதல். ‖ பழசாகையில் வாசி—நலம் பலம்—உறுதியாதல் (இரசம்). ‖ வழக்கமற்றுப்போதல், வழங்காதிருத்தல். ‖ *v. a.* கிழச்சாயல் வருவித்தல், கிழவனாய்—, கிழவியாய்த் தோற்றுவித்தல். ‖ se— தன் பிராய மதிகமாகச் சொல்லுதல்.

Vieillissant, e, *adj.* கிழமாகத் துவக்குகிற.

Vieillissement, *m.* கிழமாதல்.

Vieillot, otte, *s. et adj.* கொஞ்சங்கிழவன்.— கிழவி,— கிழமாகிற,— கிழமாகத் தோன்றுகிற.

Vielle, *f.* கைப்பிடி திருப்பிக்கொட்டுங் கிண்ணாரம்,— நரம்புக் கருவி.

Vieller, *v. n.* ஷை கிண்ணாரம் வாசித்தல். [வாசிப்பவன்,— வள்.

Vielleur, euse, *s.* ஷை கிண்ணாரம்

Vienne, பிராஞ்சி ராச்சியத்தில் வியன் நகரம், ஒத்திறிஷி ராச்சியத்தின் இராசதானி வியன் நகரம். ‖ la— பிராஞ்சி ராச்சியத்தின் வியன் என்னு மாறு,— சில்லா; la Haute— வேறொரு சில்லா.

Vierge, *f.* கன்னி, கன்னியாஸ்திரி, கன்னிகை, குமரி, கௌரிகை, நிவளை, கன்னிப்பெண், விரத்தி, அழிவில்லாள், *pl.* கன்னியர், கன்னிமார். ‖ la— தேவமாதா, கன்னித்தாய். ‖ கன்னிராசி, *adj.* கன்னி—, கன்னிமையான, கன்னிமைகெடாத, மாரூதகர்பு—, விரத்தமுள்ள, சுத்த. பரிசுத்த, கலப்பற்ற, இன்னம் பயிரிட— வேலை செய்யப்படாத; terre— இன்னமுழாத பூமி; huile— அமுக்காமல் தானாய்வடிந்த ஒலிவ் எண்ணெய்; cire— இன்னம் பிரயோகஞ் செய்யாத மெழுகு; forêt— இன்னம் வெட்டாத காடு; parchemin— ஆட்டுக்குட்டித் தோற்கடுதாசி; Vigne— ஓர் பூண்டு; l'apôtre— விரத்தரான அப்போஸ்தலர், அர்ச். அருளப்பர்.

Vieux, *ou* Vieil, *f.* Vieille, *adj.* கிழ, முது, வெகு பிராயம்—, பெரிய வயதுள்ள, வயசுசென்ற, பழைய, பழை, பழசான, பழைசான, பழமை—பழைமையான, தொல். ‖ பூர்வ, பூர்வீக, முன்காலத்து, வழக்கமற்றுப்போன; plus—அதிக பிராயமுள்ள, மூத்த se faire—கிழவனாதல். ‖ *m.* கிழவன், விருத்தன், மூத்தோன், மூப்பன், *f.* கிழவி, விருதை. ‖ *m.* பழமை, பழைமை, பழையது; faire du— பழுதுபார்த்தல், செப்பனிடுதல்.

Vif, Vive, *adj.* உயிர்—, சீவம்—, சீவனுள்ள, சீவிக்கிற. ‖ சுறுக்கு—, வே

கம்—, சாக்கிரதை—, சுறுசுறுப்பு—, தீவிரம்—, முயற்சியுள்ள, விச்சுளியான || அகோர, கடிய, உக்கிரமுள்ள. || எளிதாய்க் கோபிக்கிற, பொங்குகிற குணமுள்ள. || கூர்மை—, சூக்ஷமுள்ள, எளிதாய்க் கண்டுபிடிக்கிற. || காந்தி—, துலக்கமுள்ள. || பெரிய, பலத்த; roche—பாறையினதிக கடினபங்கு; haie— தழைக்கிற செடிகளாலான வேலி, பச்சை வேலி; chaux— தாளியாத சுண்ணாம்பு; eau— ஓடுகிற ஊற்றுநீர்; dartre— எரிவுள்ள கரப்பான்; naturel— வேகமுள்ள குணம்; paroles— கடிய சொற்கள்; foi— உறுதியான விசுவாசம்; forêt— பெரிய மரங்கள்—, அநேக வேட்டை மிருகமுள்ள காடு; garenne— அநேக முசலுள்ள வனம்; de—voix வாய் மொழியாய்; de—force பலவந்தமாய், பலாத்காரமாய்.

Vif, *m.* உயிருள்ள சதை, உணர்வுள்ள விடம், நடு, உள்ளம்; couper dans le— பிரியமான காரியங்களைச் சடுதியாய்விடுதல், ஊக்கமான தீர்மானஞ் செய்தல்; être piqué au— கொடிதாய்க் குத்தப்படுதல்.

Vif-argent, *m.* இரசம், இரதம், பாதரசம், ஆதிச்சரக்கு, பாரதம்.

Vigesimo, *adv.* இருபதாவது.

Vigie, *f.* நடுக்கடலிலுள்ள தனிக்கற்பாறை. || பாய்மரமேல் காவலாயிருத்தல்,— காவற்காரன், கடற்கரையிலுள்ள காவற்காரன்,— காவற்காரனிருக்குமேடு.

Vigilamment, *adv.* கவனிப்பு—, சாவதானமாய், விழிப்பு—, சாக்கிரதை—, கவனமாய்.

Vigilance, *f.* சாக்கிரதை, சாவதானம், கவனம், கவனிப்பு, எச்சரிக்கை, கண்காணிப்பு, பிரதிசாகரம்.

Vigilant, e, *adj.* சாவதானம்—, சாக்கிரதை—, கவனம்—, விழிப்பு—, எச்சரிக்கையுள்ள, காவல்காக்கிற.

Vigile, *f.* திருநாளைக்கு முந்தின நாள்.

Vigne, *f.* கொடிமுந்திரிகை,— முந்திரி, கோத்திரிகை, திராட்சச் செடி, சீமூதை, கோத்தனி, தீவிதிராட்சம், உத்தம். || கொடிமுந்திரிகை—, திராட்சத்தோட்டம்,— கொல்லை. || உரோமாபுரிக்கிட்ட தோட்டவீடு; la — du Seigneur, ஆத்துமாக்கள் விசாரணை.

Vigneron, *m.* கொடிமுந்திரிகைத் தோட்டக்காரன்,— பயிரிடுகிறவன்.

Vignette, *f.* சிற்றலங்காரப் படம், நான்முக ஏட்டின் படம், புஸ்தகத்தின் படங்கள்,— சுற்றுக்கட்டு. || ஓர் பூண்டு.

Vignettiste, *m.* சித்திரமாய் இன்ன படங்களை எழுதுகிறவன்.

Vignoble, *m.* திராட்சச் செடி, கொடிமுந்திரிகைத் தோட்டம்,— கொல்லை,— நட்டவிடம். || *adj.* கொடிமுந்திரிகைத் தோட்ட மனேகமுள்ள.

Vignot, *m.* மீன் பரப்பு மேசை, ஓர் கிளிஞ்சில்.

Vigogne, *f.* ஓர் ஆடு, அதின் மயிர். || *m.* அதின் மயிராலான தொப்பி.

Vigote, Vigott[illegible] *f.* பீரங்கிக் குண்டின் கனத்திட்டப்[illegible]கை.

Vigoureusement, *adv.* பலம்—, கெட்டி—, முயற்சி—, ஊக்கமாய், ஆண்மை—, திடம்—, வீரமாய்.

Vigoureux, euse, *adj.* பலத்த, பலம்—, திடம்—, ஆண்மை—, வேகம்—, வீரம்—, கெட்டி—, உறுதி—, முயர்சி—, ஊக்கம்—, சாகரமுள்ள.

Viguerie, *f.* விசேஷ நடுவருத்தியோகம்,— விசாரணை.

Vigueur, *f.* பலன், பலம், திடன், திடம், முயற்சி, ஊக்கம், ஆண்மை, வீரம், திறம், திராணி, சத்துவம், சாகசம், வயம், வேகமுள்ள உறுதி, நிறங்களிற் சரியான பொருத்தம; être en— வழங்குதல், பலம்—, ஸ்திரம்—, திடமாயிருத்தல், செழித்தல்.

Viguier, *m.* விசேஷ நடுவன்.

Vil, e, *adj.* நீச, ஈன, அற்ப, தாழ்ந்த, தாழ்வான, கீழ்த்தரமான, இழிவுள்ள, நிந்தைக்குரிய, அசடுள்ள, நுளை; à—prix அற்ப விலையாய், மலிவாய்.

Vilain, e, *s.* (பூர்வத்தில்) குப்பக்காட்டான்,— காட்டாள், தாழ்ந்த குலத்தான்,— குலத்தாள், நீசன், வங்கிஷபதியல்லாதவன்,— வள்.

Vilain, e, *adj.* அவலக்ஷண, வடிவுகெட்ட, அந்தம்—, சீர்கெட்ட, அருவருப்பான. || சவுக்கியம்—, பிரியம்—, வசதியற்ற. || பொல்லாத, கெட்ட, அசுத்த, அதப்பிய. || பிசுன, சிக்கனவுள்ள, கையிறுக்கமுள்ள. || s. கெட்டவன், துஷ்டன், வியாடன், அசுத்தன், அதப்பியன், ஊளையன், கெட்டவள்,

துஷ்டை, உலோச்சி, உலோபி, பிசுனி, உலுத்தன் ; il n'est chère que de— உலோபி செலவு செய்தால் அதிகமாய்ச் செய்வான்.

Vilaine, *f.* பிராஞ்சி ராச்சியத்தில் விலேன் ஆறு,— ஜில்லா.

Vilainement, *adv.* நீசம்—, ஈனம்—, அவலக்ஷணம்—, அசுத்தம்—, அயோக்கியமாய், கோழைத்தனமாய், வசதியற, பிசுனமாய்.

Vilayet, *m.* துர்க்கி தேசத்தில் ஒரு தேசாதிபதியின் கீழுள்ள ஜில்லா.

Vilebrequin, *m.* துரப்பணம், தமரூசி, தமராணி, பொத்தலூசி.

Vilement, *adv.* ஈனம்—, நீசமாய், இழிவாய்.

Vilené, *adj.* [illegible]ாதவிதமான, இலிங்கந் தோன்றிய (விருதுச் சிங்கம்).

Vilenie, *f.* அசுத்தம், ஊத்தை, வசை, அதப்பியம், அசப்பியம், உதாசனம், இழிச்சொல், துர்க்கிரிகை, நீசத்தனம், நீசக்கிரியை, நீசபிசுனத்தனம்,— உலோபித்தனம், கெட்ட போசனம், அசவுக்கிய உணவு.

Vileté, **Vilité**, *f.* மலிவு, சகாயம், நயம், அற்பத்தனம், துச்சம், ஈனம், நீசத்தனம், தாழ்மை, கயமை, தீழ்ப்பு.

Vilipender, *v. a.* இகழ்தல், நிந்தித்தல், இகழ்ச்சியாய்ப் பேசுதல்,— எண்ணுதல்,— தாழ்த்துதல். ‖ se— ஒருவனொருவனை யிகழ்தல்.

Villa, *f.* தோட்டவீடு, வெளிவீடு.

Village, *m.* கிராமம், ஊர், பட்டி, குறிச்சி, குப்பம், சிற்றூர், அகலுள், மவுஜே. ஊர் குடிகள் ; être de son— உலோக காரியங்களை யறியாதிருத்தல்.

Villageois, e, *s. et adj.* பட்டி—, குப்பக்காட்டான்,— காட்டாள், நாட்டவன், நாட்டுப்புறத்தான், கிராமத்தான், காட்டுப்புறத்தாள், குப்பக்காட்டு, பரும்படியான, அந்தமற்ற, கொச்சையான, திருந்தாத, இலக்கணமற்ற.

Villanelle, *f.* ஒரே பல்லவமுள்ள ஆயர்பாட்டு, குப்பக்காட்டு நடன விராகம்.

Ville, *f.* பட்டணம், நகரம், நகர், நகரி, புரம், புரி, ஊர் நகரத்தார், நகரதிகாரிகள், நகராலோசனை வீடு, பட்டணவாசம்,— சீவியம்,— முறைமை : à la— நகரத்தில் ; en— தன் வீட்டுக்கு வெளியே ; la—éternelle உரோமாபுரி ; la—sainte எருசலேம்.

Villégiateur, *m.* தோட்ட வீட்டில் வாசஞ் செய்பவன். [வாசம்.

Villégiature, *f.* தோட்ட வீடடில்

Villette, *f.* **Villotte**, *f.* சிற்றூர், சின்ன நகரம் ; la Villette பரீசுக்கடுத்த ஓர் சிற்றூர். [யுள்ள.

Villeux, euse, *adj.* மெல்லிய சுணை

Villiforme, *adj.* மெல்லிய உரோமத் தோலைப்போல் தோன்றும்.

Villosité, *f.* முகமல் பட்டுபோல் மேற்பரப்பை யுடைத்தாயிருத்தல்.

Vimaire, *f.* பெருங்காற்று காட்டிற்குச் செய்த நஷ்டம்.

Vin, *m.* (கொடிமுந்திரிகையின்) இரசம், திராட்சரசம,— (de palmier, de cocotier) கள்ளு, மது, சுரா, (non fermenté) பதநீர் ; être pris de— வெறிகொள்ளுதல் ; être entre deux— கொஞ்சம் வெறிகொண்டிருத்தல் ; avoir le—gai, triste வெறியில் சந்தோஷம்—கஸ்தியாயிருத்தல்.

Vinage, *m.* திராக்ஷ இரசத்துக்கு மதுசாரம் சேர்த்தல்.

Vinaigre, *m.* காடி, அவக்கிரசம், உன்ஞகம், சிலவகை திராவகம்,— வடிப்பு: habit de— தேய்ந்த—, குளிருக்கு உதவாத சட்டை ;— des 4 voleurs துர்க்கந்த நீகரும் ஓர் காடி.

Vinaigrer, *v. a.* காடி வார்த்தல்.

Vinaigrerie, *f.* காடி செய்யும்— வடிக்கு மிடம்.

Vinaigrette, *f.* ஓர் பச்சடி, காடியெண்ணெயுப்பு குழம்பு, ஷை குழம்பிற் போட்ட இறைச்சித் துண்டு. ‖ கைவண்டி.

Vinaigrier, *m.* காடிக்குப்பி,— பாத்திரம்,— செய்கிறவன்,— விற்பவன், சுமக்கென்னுஞ் செடி, ஓர் வண்டு.

Vinasse, *f.* உருசியில்லாத திராக்ஷரசம், கீழ்தரத்து இரசம்.

Vindas, *m. V.* Cabestan.

Vindhya, *m.* விந்திய மலை.

Vindicatif, ive, *adj.* பழிவாங்குகிற,— வாங்க விரும்புகிற ; justice— பாதகங்களைத் தண்டிக்கிற நீதி. [டனை.

Vindicte, *f.* பாதகப் பழி,— தண்

Vinea pusilla, மிளகாய்ச் சக்களத்தி (பூண்டு).

Vinée, *f.* திராட்ச விளைவு,— அறுப்பு,— இரசம்.

Viner, *v. a.* திராக்ஷரசத்திற்கு மது சாரம் சேர்த்தல்.

Vinetier, *m. V.* Epine-vinette.

Vinette, *f.* புளியாரை.

Vineux, euse, *adj.* இரசம்—, பலமுள்ள, இரசத் தன்மை—உருசி—வாசனையுள்ள, சிகப்புரசம் நிறமுள்ள, இரசம் விளைகிற, இரச மிகுதியுள்ள.

Vingeon, *m.* ஓர் தாரா,— வாத்து.

Vingt, *adj. num.* இருபது, விம்சதி, (devant un autre nombre) இருபத்து, devant ஆயிரம், கலம், இருபதின். ‖ இருபதாம். ‖ *m.* இருபதாந் தேதி.

Vingtaine, *f.* இருபது, விம்சகம்; (de pièces de toile, de paires de bas, de pierres précieuses) கோடி.

Vingt-et-un, *m.* இருபத்தொன்று, ஓர்வித கடுதாசிச் சூது.

Vingtième, *adj. num.* இருபதாம். ‖ s. இருபதாம் வரிசையிலுள்ளவன்,—வள். ‖ *m.* இருபதாம் பங்கு, இருபதிலொன்று.

Vingt-quatre (in), *m.* ஒவ்வோர் தாளிருபத்து நாலு எட்டில் மடிக்கப்பட்ட புஸ்தகம்.

Vinicole, *adj.* திராட்சச்செடி விளைகிற. இரசமுண்டாகிற.

Vinifère, *f.* ஓர் பூண்டு.

Vinification, *f.* இரசஞ் செய்யும்—காப்பாற்றும் விதம்.

Vinique, *adj. V.* Vinicole.

Vinosité, *f.* இரசத்தன்மை, இரசத்தின் பலத்தளவை.

Viol, *m.* கட்டாயமான கற்பழிப்பு, அழிம்பு.

Viola suffruticosa, ஓரிதழ்த் தாமரை, ஓரிலைத் தாமரை. *V.* Ionidium.

Violacé, *adj.* கொஞ்சம் ஊதா நிறமுள்ள.

Violacer, *v. n.* ஊதா நிரமாகுதல், ஊதாப்புள்ளிகள் வைத்துக்கொள்ளல்.

Violat, *adj. m.* ஊதாநிறப் பூகலந்த.

Violateur, trice, s. மீறுகிறவன்,—வள்.

Violation, *f.* மீறுதல், மீறுகை, அதிபாதம், உல்லங்கனம்.

Violâtre, *adj.* கொஞ்சம் ஊதா நிறமான.

Viole, *f.* எழு நரம்பு வீணை.

Violement, *m.* மீறுதல், கற்பழிப்பு.

Violemment, *adv.* பலவந்தம்—, பலாத்காரம்—, கொடுமை—, அகோரம்—, வேகமாய்.

Violence, *f.* பலவந்தம், பலாத்காரம், பலோற்காரம், வல்லடி, கட்டாயம், வலிமை, வலுமை, உத்தண்டம், அகோரம், உக்கிரம், கடுமை, வேகம், சண்டம், பிரசண்டம், பலாட்டியம், பிரசபம், வதுவை, வலாற்காரம், மும்மரிப்பு, மும்முரம்; faire— கட்டாயம் பண்ணுதல், அர்த்தம் புரட்டுதல்; se faire —தன்னிஷ்ட மடக்குதல், தன்னாசைகளைக் கீழ்ப்படுத்துதல்.

Violent, e, *adj.* கொடிய, கடிய, கடும், கடுமையுள்ள, உத்தண்டமான, உக்கிரம்—, அகோரமான, வேகமான, முன்கோபம்—, இடும்புள்ள, முன்மறமான, அநியாயமான, சகிக்கப்படாத: mort— இயல்பற்ற சாவு.

Violenter, *v. a.* கட்டாயப்படுத்துதல், கட்டாயம்—, பலவந்தம்—, வலுமை—, துஷ்டத்தனம்—, கொடுமை பண்ணுதல். ‖ se— தன்னாசைகளைக் கீழ்ப்படுத்துதல்.

Violer, *v. a.* மீறுதல், கடத்தல், தட்டுதல், தவறுதல், ஆசரியாதிருத்தல். ‖ பங்க—, அசுத்த—, தீட்டுப்படுத்துதல், கெடுத்தல், அழித்தல், கற்பழித்தல்.

Violet, ette, *adj.* ஊதா, இருண்ட தூமிரமான ‖ *m.* ஊதா நிறம்.

Violette, *f.* ஊதா நிறப்பூ, அதின் பூண்டு, அதின் வாசனை.

Violier, *m.* ஓர் சுவர்ப்பூண்டு.

Violon, *m.* வீணை, நாலு நரம்பு வாத்தியம், வீணை வாசிக்கிறவன். ‖ காவற்கூட்டத்துச் சிறைச்சாலை, ட்டாணா: donner les—à ஒருவனைக் குறித்துச் சங்கீதஞ் செய்தல்; se donner les—d'une chose ஓர் காரியத்தின் மகிமை அநியாயமா யபகரித்தல்; payer les—செலவுகளைத் தீர்த்தல்.

Violoncelle, *m.* பெரிய வீணை.

Violoncelliste, *m.* பெரிய வீணை வாசிப்பவன்.

Violoneur, Violoneux, *m.* வீணை வாசிப்பதில் தேர்ச்சி யடையாதவன்,—வள், உதவாத வீணைக்காரன்.

Violoniste, *m.* வீணை வாசிப்பதற்குக் கெட்டிக்காரன்.

Viorne, *f.* ஓர் படர் கொடி, ஓர் செடி.

Vipère, *f.* விரியன்,— பாம்பு, கத்

தரி. || கெட்டவன், துரோகி, கோட்காரன்; langue de— கோட்காரன்.

Vipéreau, *m.* விரியன் குட்டி.

Vipérin, ine, *adj.* விரியன் பாம்பு சம்பந்தமான.

Vipérine, *f.* ஓர் பூண்டு.

Virago, *f.* ஆண் மாரி, ஆண் சாயலுள்ள ஸ்திரி.

Virbouquet, *m.* மரவாணி.

Vire, *f.* விரற்சுற்று என்றபுண்.

Virelai, *m.* ஓர் பழைய பாட்டு.

Virement, *m.* திருப்புதல்;— de bord கப்பல்பக்க மாறுதல்;— des parties தனக்கு வரவேண்டிய கடனை மற்றொருவனுக்குச் சாட்டுதல்.

Virer, *v. n. et a.* சுற்றுதல், திரும்புதல், திருப்புதல்;— de bord திசை,— பக்கம்—, கட்சிமாறுதல்; tourner et —quelqu'un ஒருவன் மறைக்கிற காரியத்தைப் பற்பல கேள்விகளால் அறியத் தேடுதல். [மோதிரங்கள்.

Vires, *m. pl.* ஒரே மையமுள்ள

Vireux, euse, *adj.* விஷமுள்ள.

Vireveau, *m.* நங்கூரம்—, பாரந்தூக்கும் எந்திரம்.

Virevolte, *f.* சுறுக்கான—, வேகமான சுற்று.

Virgilien, enne, *adj.* விர்ஜீலென்னும் புலவன் மேலாயான.

Virginal, e, *adj.* கன்னியின், கன்னிமையின், கன்னிக்கடுத்த, கன்னிக்குரிய, பரிசுத்த, கற்புள்ள: lait— முகம் வெண்மையாக்கு மருந்து.

Virginie, *f.* ஐக்கிய தேசங்களின் விர்ஜினி நாடு. || *m.* ஷை நாட்டுப் புகையிலை. [துவம்.

Virginité, *f.* கன்னிமை, கன்னித்

Virgouleuse, *f.* ஓர் கனி.

Virgulaire, *f.* ஓர் பூண்டு.

Virgule, *f.* வாற்புள்ளி.

Viril, e, *adj.* ஆண் பிள்ளையின், மனித, ஆண்மை—, வீரம்—, தைரியமுள்ள; âge— பக்குவ பிராயம், இளம் பருவம்; robe— உரோமையரில் உயர்குலப் பாலிபரணியுஞ் சட்டை; action —ஆண்மையுள்ள கிரியை; portions— சரியொத்த பங்குகள். [யமாய்.

Virilement, *adv.* ஆண்மை—, வீரி

Virilité, *f.* பக்குவ பிராயம், ஆண்மை, புருஷதத்துவம், புருஷதை, ஆண்பிள்ளைத்தனம், தைரியம், வீரியம், ஊக்கம், பெருந்தத்துவம்.

Virole, *f.* பூண், கைப்பிடி வளையம்.

Virolé, *adj.* வேறுநிற வளையம்—பூணுள்ள. [வெறுஞ் சத்துவம்.

Virtualité, *f.* சத்தி, செய்வதற்கு

Virtuel, elle, *adj.* செய்வதற்கு வெறுஞ் சத்துவம்—, சத்தியுள்ள, சத்துவத்திலடங்கிய.

Virtuellement, *adv.* செய்வதற்கு வெறுஞ் சத்துவ—, சத்தி விதமாய்.

Virtuose, *s.* சாமர்த்தியமுள்ளவன், —வள். [கொடுமை, விஷம்.

Virulence, *f.* கடுமை, உக்கிரம்,

Virulent, e, *adj.* கடும், கொடிய, உக்கிர, விஷநீர்—, சீழ்—, விஷம்—, நஞ்சுள்ள.

Virus, *m.* விஷநீர், சீழ், விஷம்.

Vis, *f.* முறுக்காணி, திருகாணி, சுரி, சுரியாணி, மறை, மறுசுற்று, மறுசுற்றாணி. || ஓரோட்டு மீன்; pas de— சுரி, புரி;— d'Archimède தண்ணீரையேற்று மெந்திரம்;— d'escalier படிநிரைச்சுற்று, அதைத் தாங்குமரம்.

Visa, *m.* பார்த்திட்டதற்கு கையொப்பம், உறுதிப்படுத்துங் கையொப்பம்.

Visage, *m.* முகம், வதனம், துண்டம், வத்திரம், ஆசியம், ஆநநம், (par mépris) மூஞ்சி. || முகச்சாயல்,— நிறம்,— ரூபு,— லக்ஷணம். || ஆள்; trouver—de bois சாத்தப்பட்ட கதவைக் காண்டல், ஒருவனையுங் காணாதிருத்தல்; changer de— முக நிறமாறுதல்; se composer le— சமயத்துக்குத் தக்க சாயலைக் காட்டுதல்;— nouveaux புதுசாய் வந்த ஆட்கள்; à—découvert மறைவின்றி, கபடின்றி. [pour.

Visapour, விசயப்பூர், *ou* Bedja-

Visarga, *m.* விசர்க்கம்; c'est en sanscrit une légère aspiration marquée par deux points.

Vis-à-vis, *adv.* எதிர், எதிரே, நேராய், நேராக, பிரதிமுகமாய். || *m.* இரண்டு எதிரிட வண்டி, எதிர் நிற்கிறவன்.

Viscéral, e, *adj.* குடலுக்கடுத்த, குடலைப் பலப்படுத்தும், பிரதான.

Viscère, *m.* குடல், குடர்.

Viscosité, *f.* பிசுபிசுப்பு, நசுபிசுப்பு.

Visée, *f.* நோக்கம், இலக்கு, கருத்து.

Viser, *v. a. et n.* இலக்குபார்த்தல்,

நோக்கி எய்தல், நோக்குதல், நாடுதல். || *v. a.* பார்வையிட்டுக் கையொப்பமிடுதல்.

Viseur, *m.* குறிப்பு பார்த்துச் சுடுபவன்,— குறிச்சரியாய்ப் பார்க்க உதவிக் கொள்ளுங் கருவி.

Visibilité, *f.* காணப்படுந் தன்மை, பிரத்தியக்ஷமான தன்மை, தெரிதல், தெரிவு, தோற்றம், திருஷ்டம், வீக்ஷியம்.

Visible, *adj.* தோன்றுகிற, தோற்றமுள்ள, பிரத்தியக்ஷமான, காணத்தக்க, பிரசித்த, வெளியான, பார்வைக்கு நேரான,— எட்டின,— தெரிசிக்கிற, தரிசித, திருசியமான, திரிசிய.

Visiblement, *adv.* பிரத்தியக்ஷம்—, வெளியரங்கம்—, தெளிவாய், தோற்றமான விதமாய்.

Visière, *f.* தலைச்சீராவின் முகமூடி, —சாலகம். || குல்லாவின் முகக்காப்பு. || பார்வை, நினைப்பு. || துப்பாக்கியீ, rompre en— கோபமாய் எதிர்த்தல், முகதாவிலே விரோதித்தல், தலைச்சீரா முகமூடியி லீட்டி யுடைத்தல்; donner dans la— நேசம் வருவித்தல்; il a la — trouble அவன் பார்வை தெளிவில்லை.

Visigoth, *m.* மேற்கை கோத்தன், விசிக் கோத்தன்; les—sont devenus le peuple espagnol விசிக் கோத்தர் எஸ்பஞ் சனத்தாரானார்கள். || மிலேச்சன், மரியாதை யில்லாதவன்.

Vision, *f.* பார்வை, காணுதல், திருஷ்டி, திருசியத்துவம், நித்தியானம், வீக்ஷம், வீக்ஷணம். || தரிசனை, தரிசனம், தரிசியம், காட்சி. || வீண்காட்சி,— எண்ணம், கனவு.

Visionnaire, *adj.* வீண்காட்சி காண்கிற,— எண்ணமுள்ள, கள்ள—, வீண்தரிசனங் காண்கிற. || *s.* வீண்காட்சி—எண்ணக்காரன்,— காரி.

Visir, *m.* *V.* Vizir.

Visitandine, *f.* மினவுதற் சபைக் கன்னியாஸ்திரி.

Visitateur, trice, *m.* காண வருகிறவன், மினுவ வருகிறவன், தன் சபையை சேர்ந்த மடங்களை விசாரிக்கும் அதிகாரி.

Visitation, *f.* மினவுதல் திருநாள், தேவமாதா அர்ச். எலிசபேத்தம்மாளை மினவின திருநாள்,— படம், மினவுதல் என்கிற கன்னியாஸ்திரி சபை.

Visite, *f.* சந்திப்பு, காணப்போதல், பார்க்கப்போதல், மினவுதல், அபிசாரணம், அப்பியாகமனம், சந்திக்கிறவர்கள். || வைத்தியன் வியாதிக்காரரைப் பார்க்கப்போதல். || பரிசோதனை, ஆராய்ச்சி, சோதனை, விசாரணை. || ஓர் சின்ன போர்வை; faire une— சந்திக்கப்போதல்; rendre une— முந்திச் சந்தித்தவனைச் சந்திக்கப்போதல்; recevoir des — சந்திக்கிறவர்களை எற்றுக்கொள்ளுதல்;— d'une maison, d'une plaie வீட்டின்—, காயத்தின் சோதனை; droit de— வியாபாரக்கப்பலைப் பரிசோதிக்கப் போர்க்கப்பலுக்கிருக்கிற சுதந்திரம்;— pastorale மேற்றிராணியார் விசாரணை.

Visiter, *v. a.* சந்தித்தல், மினவுதல், போய்க்காண்டல், காண—, பார்க்க—, அறியப்போதல். || சோதித்தல், பரிசோதித்தல், ஆராய்தல், விசாரித்தல்; Dieu visite ses élus சர்வேசுரன் தாந்தெரிந்து கொண்டவர்களைத் துன்பத்தினால் பரிசோதிக்கிறார். || se— ஒருவனொருவனைச் சந்தித்தல்.

Visiteur, *m.* சந்திக்கிறவன், சந்திப்பிலே காலம் போக்குகிறவன், சுற்றிப் பார்க்கிறவன், சுற்று விசாரணை—சோதனைக்காரன், தன் சபை மடங்களைச் சுற்றி விசாரிக்கிற சந்நியாசி.

Visorium, *m.* மேற்பாடதாங்கி.

Visqueux, euse, *adj.* பிசுபிசுப்பான, பசை—, பிசினுள்ள, ஒட்டுகிற, குழகுழத்த, பிசுபிசென்கிற.

Vissage, *m.* மறுசுற்றாணி முறுக்குதல்.

Visser, *v. a.* முறுக்காணி—, மறுசுற்று—, திருகாணி போடுதல்.— திருப்புதல், சுரியாணியிடுதல், முறுக்குதல், இறுக்குதல். || se— முறுக்காணிபோல் சுற்றுதல்.

Visserie, *f.* திருகாணி, இருப்புமுனை முதலிய சாமான்கள்,— ஷை சாமான்கள் செய்யும் ஆலை.

Vistule, *f.* பொலொஞ் தேசத்தில் விஸ்துல் நதி.

Visuel, elle, *adj.* பார்வையின், தரிசன, கண்ணுக்குரிய; rayon— ஓர் பொருளினின்று கண்ணுக்கு வருகிற கதிர்; point— பல கதிர்கள் கூடுமிடம்.

Visum-visu, Vison-visu, *adv.* முகமுகமாய், கண்ணாலே.

Vital, e, *adj*. உயிருக்குரிய, அவசரமான, உயிர் தருகிற,— காப்பாற்றுகிற, —உள்ள,— அடங்கிய, ஆயமானம்—, உயிர் நிலை—, ஆயஸ்தலமான; parties —ஆயஸ்தலம், ஆயமானம், மர்மம், மர்மஸ்தானம், வன்மத்தானம்; questions —காரியத்தின் சுவாபத்தைச் சேர்ந்த கேள்விகள்.

Vitalité, *f*. உயிரின் முயற்சி, சீவன், சீவம், உயிர் நிலையம், மனுஷவுயிர் நீளிக்கத்தக்க காலம்; table de— மனுஷவுயிர் நிலைமையின் அட்டவணை.

Vitchoura, *m*. மெல்லிய உரோமப் போர்வை.

Vite, *adj*. சுறுக்கு—, வேகம்—, துரிதம்—, கதி—, சீக்கிரம்—, தீவிரமுள்ள, கதியோட்டமுள்ள.

Vite, Vitement, *adv*. தீவிரம்—, வேகம்—, சுறுக்கு—, துரிதம்—, சீக்கிரம்—, கதி—, விரைவாய், கடுக, ஐயென, கொப்பென, சரோரென, சிவ்வென்று, திட்டென, பொட்டென, பொடுபொடென்று, தாமதமின்றி, படபடப்பாய்.

Vitelline, *f*. மஞ்சட் கருமூடுஞ் சவ்வு.

Vitelotte, *f*. ஓர் சிவந்த உருளைக்கிழங்கு.

Vitesse, *f*. சீக்கிரம், துரிதம், விரைவு, சுறுக்கு, கதி, கெதி, வேகம், தீவிரமான ஓட்டம், ஆசு, உபதாபம், ஒல்லை, கடுமுடுக்கு, சபதி, துனைவு, வேகாளம்; gagner quelqu'un de— ஒருவனுக்கு முந்துதல், அவன் பிரயத்தனம் தடுத்தல்.

Vitex, *m*. ஓர் அலரிச் செடி;— negundo நொச்சி, சிந்துகம், வெண்ணொச்சி, நீர் குண்டி;— trifolia நீர் நொச்சி.

Viticulteur, *m*. கொடிமுந்திரிகை பயிரிடுபவன்.

Viticulture, *f*. கொடிமுந்திரிகைப் பயிற்சி.

Vitilige, *f*. Vitiligo, தோல் மாற்றம்;— blanche வெண்குஷ்டம்.

Vitis latifolia, கொடிமுந்திரிகை, c'est la vigne,— pedata நறளை;— setosa, carnosa புளி நறளை, *V*. Cissus.

Vitrage, *m*. வீட்டுக் கண்ணாடிகள், சன்னலுக்குக் கண்ணாடிபோடுதல், கண்ணாடிபோட்ட சட்டம்.

Vitrail, Vitraux, *m*. கோவிற் சன்னற் கண்ணாடிகள்.

Vitre, *f*. சன்னற் கண்ணாடி; casser les— சன்னற் கண்ணாடி யுடைத்தல், கொடிய வார்த்தை சொல்லி முறிதல்.

Vitré, *adj*. கண்ணாடிபோட்ட,— உள்ள, கண்ணாடிபோலாகிய, உருவொளியான, கண்ணாடியால் வருகிற. || பிராஞ்சி ராச்சியத்தில் வித்திறே நகரம்.

Vitrer, *v. a*. கண்ணாடிபோடுதல். || se— கண்ணாடி போடப்படுதல்.

Vitrerie, *f*. கண்ணாடி வேலை,— வியாபாரம்.

Vitrescible, *adj*. *V*. Vitrifiable.

Vitreux, euse, *adj*. கண்ணாடித் தன்மையுள்ள.

Vitrier, *m*. கண்ணாடிக்காரன்,— வேலை செய்கிறவன்,— போடுகிறவன், —வியாபாரி.

Vitrière, *f*. கண்ணாடிக்காரன் பெண்சாதி,— வியாபாரஞ் செய்பவள்.

Vitrifiable, *adj*. கண்ணாடியாகத் தக்க.

Vitrification, *f*. கண்ணாடியான பொருள்,— ஆகமாறுதல்,— ஆதல்.

Vitrifier, *v. a*. கண்ணாடியாக்குதல், —வார்த்தல்,— ஆகச்செய்தல். || se— கண்ணாடியாதல்,— ஆகமாறுதல்.

Vitrine, *f*. சட்டத்துக் கண்ணாடி, கண்ணாடிச் சட்டம்,— பெட்டி.

Vitriol, *m*.— bleu, de Chypre, couperose bleue, sulfate de cuivre, துருசி, துருசு, துரிசு, துத்தம், துத்தந் துருசி, அரசன், ஆதித்தம், கய்கையோன், கங்காளன், ஆதிமகா குரு, ஆலமுடையோன், கல்லீயம், குவலையன், மயூரகம்;— vert *ou* martial, couperose verte, sulfate de fer அன்னபேதி, ஆதிக்கல் நாதம், ஆதிக்கல் பேதம், கல்வீரியம், கல்வேகம், கற்பொடி;— blanc, de Goslar, couperose blanche, sulfate de zinc, பாற்றுத்தம், மயிற்றுத்தம்.

Vitriolé, *adj*. துருசி—, துத்தம்—, அன்னபேதி கலந்த.

Vitrioler, Vitriolage, *v. a*. அன்னபேதி திராவகத்தில் துணிகளையாவது தானியங்களையாவது தோய்த்தல், ஒருவர்மேல் ஷை திராவகத்தை எறிந்து போட்டல்.

Vitrioleur, euse, *s.* ஒருவருடைய முகத்தைக் கெடுக்க அன்னபேதி திராவகத்தைக் கொட்டுகிறவன்.

Vitriolique, *adj.* துருசி—, அன்னபேதி தன்மையுள்ள.

Vitriolisation, *f.* துருசி—, அன்னபேதியாதல்.

Vitupérer, *v. a.* கண்டித்தல், கயற்றுதல்.

Vivace, *adj.* கெட்டியுயிருள்ள, வெகுநாள் சீவிக்க—, இருக்கத்தக்க, உயிர்பிடிப்புள்ள, எளிதாய்ச் சாகாத, அழிப்பதற்கரிய, வெகுநாள் நிலைக்கிற; plante —இரு வருஷத்துக்குமேல் நிலைக்கிற பூண்டு.

Vivacité, *f.* வேகம், சுறுக்கு, சுறுசுறுப்பு, கெதி, சாக்கிரதை, துடுக்கு. || ஊக்கம், அகோரம், உற்சாகம். || புத்திக் கூர்மை,— வேகம். || காந்தி, ஒளி. || *pl.* இலேசான முன் கோபம்.

Vivandier, ère, *s.* படைக்கடை ஊழியக்காரன், இரஸ்துக்காரன்,— காரி, இரஸ்து வர்த்தகன்.

Vivant, e, *adj.* சீவிக்கிற, உயிர் வாழ்கிற,— உள்ள, சீவமுள்ள, வழங்குகிற, சரியொத்த, இயல்பான, ஊக்கமுள்ள, முயற்சியுள்ள ; langue— வழங்குகிற பாஷை. || *s.* சீவியன், சீவிக்கிறவன், சீவியகாலம் ; bon— களிப்புள்ளவன் ; mal— துர்மார்க்கன் ; du— de சீவிய காலத்தில்.

Vivarais, *m.* பிராஞ்சி ராச்சியத்தில் விவியே நகரடுத்த நாடு.

Vivat, *int.* வாழ்க, வாழிய, பல்லாண்டு. || *m.* வாழ்த்துக் கொக்கரிப்பு; pousser des— ஆர்ப்பரித்தல்.

Vive, *f.* ஓர் மீன். || *adj. f. de* vif. || *int.* வாழ்க, வாழிய, வாழி; qui vive ஆரங்கே, எந்தக் கட்சியானீ; être sur le qui vive எச்சரிக்கையாய்—, சகலத்துக்கும் பயந்திருத்தல்.

Vive-Dieu, *int.* சுவாமியாணை.

Vive-la-joie, *int.* ஓர் சந்தோஷக் கொக்கரிப்பு. || *m.* களிப்புள்ளவன், கவலையற்றவன்.

Vivelle, *f.* ஓர் மீன். || மெல்லிய புடவையில் பொத்தலடைக்குந் தையல்.

Vivement, *adv.* வேகம்—, சீக்கிரம்—, சுறுக்கு—, முயற்சி—, ஊக்கமாய், பலமாய், மிகவும்.

Viverra mungo, (mangouste) கீரி,— ப்பிள்ளை.

Viveur, euse, *s.* களிப்பாய்ச் சீவிக்கிறவன்,— வள், இன்பசுகக்காரன்,— காரி.

Vivier, *m.* மீன்குளம்,— மடு, மீன் வளர்க்குங் குளம்,— ஏரி. || பிடித்த மீனுயிரோடு காப்பாற்றுந் தோணி.

Viviers, பிராஞ்சி ராச்சியத்தில் விவியே நகரம்.

Vivifiant, e, **Vivifique**, *adj.* உயிர்—, வேகம்—, பலங்கொடுக்கிற,— காப்பாற்றுகிற,— அதிகரிப்பிக்கிற.

Vivificateur, *m.* உயிரளிக்கிறவன், —காப்பாற்றுகிறவன், உயிர்—, பலம்—, வேகங்கொடுக்கிறவன்.

Vivification, *f.* உயிர்—, பலம்—, வேகங்கொடுத்தல்.

Vivifier, *v. a.* உயிராக்குதல், உயிர்—, பலம்—, வேகங்கொடுத்தல்,— காப்பாற்றுதல்,— அதிகரிப்பித்தல், உற்சாகப்படுத்துதல், உயிர்ச்சாயலைக் கொடுத்தல்.

Vivipare, *adj.* குட்டிபோடுகிற, குஞ்சு—, கன்றீனுகிற, சராயுசமாகிய, துளிர்க்கிற ; plante— புஷ்பத்துக்குப் பதிலாகத் துளிர்விடுகிற—, கோதில் விதை முளைக்கிற பூண்டு. || *m. ou* animal—, சராயுசம், குட்டி போடுகிற மிருகம்.

Vivisecteur, *m.* உயிருடனிருக்கும் ஜந்துக்களை அறுத்து உள்ளவயங்களை பரிசோதித்துப் பார்த்தல்.

Vivisection, *f.* உயிருடனிருக்கும் ஜந்துக்களை அறுத்தல்.

Vivoter, *v. n.* வருத்தமாய் பிழைத்தல்,— சீவித்தல்.

Vivre, *v. n.* உயிராயிருத்தல், சீவித்தல், உய்தல், வாழுதல், சீவியநாள் போக்குதல். || பிழைத்தல், சீவனம் பண்ணுதல், புசித்தல். || நிலைத்தல், நிலைநிற்றல். || நடத்தல், ஒழுகுதல், இருத்தல், வாசம் பண்ணுதல் ; il a vécu சீவித்தான், செத்தான் ;— de légumes கீரையாற் பிழைத்தல் ;— de ménage செலவழியாமற் சீவியம் பண்ணுதல் ;— au jour la journée, au jour le jour தான் சம்பாதிக்கிறதை அங்நாளிலேதான் செலவழித்தல், முன்னோக்கின்றிச் சீவித்தல் ; être aisé à— நல்லகுணங்

கொண்டிருத்தல்; savoir, apprendre à— உலோக ஆசாரங்களையறிதல்,— படித்தல்; apprendre à—à quelqu'un ஒருவனைக் குற்றத்துக்காகத் தெண்டித்தல்.

Vivre, *m.* அன்னம், பிழைப்பு, ஆகாரம், போசனம், சாப்பாடு, உணவு, உண், புசிகரம். || *pl.* இரஸ்து, ஆகார வருக்கம்,— சேகரம், தானிய தவசம், பொசிக்கிரவஸ்து, தின்பண்டம், சீவனத்துக்குவேண்டியது, படைக்கு ஆகார வருக்கங்களைச் சேகரித்தல்.

Vizir, *m.* துலுக்கிராயன் மந்திரி,— ஆலோசனைக்காரன். || அகந்தையான மனுஷன்: grand— துலுக்கிராயன் முதல் மந்திரி.

Vizirat, Viziriat, *m.* துலுக்கிராயன் மந்திரி யுத்தியோகம்,— உத்தியோக காலம்.

Vocable, *m.* மொழி, பெயர்; sous le—de S. Pierre அர்ச். இராயப்பர் பேரால்,— பரிபாலனத்தில்.

Vocabulaire, *m.* அகராதி, நிகண்டு, ஓர் சாஸ்திரத்துக்குரிய சொல்லட்டவணை.

Vocabuliste, *m.* நிகண்டாசிரியன், அகராதி செய்தவன்,— ஆசிரியன்.

Vocal, e, *adj.* உச்சாரண, வாய்மொழி—, குரலாலாகிற, வாயாற் சொல்லுகிற,— உச்சரிக்கிற,— பிறக்கிற; musique — குரலிசை, நாதகீதம்; prière— உச்சாரணச் செபம், வாய்ச் செபம்.

Vocalement, *adv.* வாய்மொழியாய்.

Vocalisation, *f.* Vocaliser, *v. n.* ஓர் மொழி யுச்சரியாமல் பாடுதல், குரலைத் தேற்றும் அப்பியாசம்.

Vocatif, *m.* விளி வேற்றுமை, சம்போதனை, அஷ்டமீவிபத்தி.

Vocation, *f.* தேவ நியமிப்பு,— அழைப்பு, சுவாமி நியமிக்கு மந்தஸ்து, தேவநியமிப் பந்தஸ்து, அழைப்பு, தெரிதல். || தொழில், மனச்சார்பு, தகுதி, திறமை. || ஞானாதிகாரம்; suivre sa— சர்வேசுரன் தனக்கு நியமித்த வழிசெல்லுதல்;— d'Abraham அபிரகாம் என்பவரழைப்பு;— des gentils சத்தியவேதத்துக்கு அக்கியானிகளினழைப்பு.

Vocaux, *m. pl.* மடங்களில் தெரிந்துகொள்ளுஞ் சுதந்தரக்காரர்.

Vociférateur, *m.* கூவுகிறவன்.

Vocifération, *f.* கூக்குரல், சந்தடி, இரைச்சல், கூச்சல், கூவல்.

Vociférer, *v. n.* கூவுதல், கூக்குரலிடுதல், ஆகாவெனல், கெம்புதல், கதறுதல்.

Vœu, *m.* பொருத்தனை, பொருத்தினை, நேர்ச்சி, நேர்த்தி,— கடன், பிரார்த்தனை, வேண்டுதல், சங்கற்பம், நேர்கடன். || நேர்ந்த காணிக்கை,— பொருள். || சம்மதிச் சீட்டு. || பிரதிக்கினை, வார்த்தைப்பாடு, வாசாதத்தம், ஆசை, விருப்பம், ஆவல், ஆசீர்வசனம். || சந்நியாச வார்த்தைப்பாடு.

Vogue, *f.* எண்ணம், மதிப்பு, கணிசம், கீர்த்தி, பிரபலியம், வழக்கம். || செல்லல், தண்டுகள் வலித்திடும் ஓட்டம்.

Vogue-avant, *m.* முதல்வனாகத் தண்டு வலிக்கிறவன்.

Voguer, *v. n.* தண்டுவலித்தல்,— வலித்தோடுதல், ஓடுதல், கடலிற் செல்லுதல்;— à pleines voiles பாயெல்லாம் விரித்தோடுதல், vogue la galère என்ன சம்மதித்தாலுஞ்சரி.

Voici, *prép.* இதோ, பார், பாருங்கள்;— venir le roi,— que le roi vient இதோ ராசா வருகிறார்; nous y —இதோ சேர்ந்தோம், இதோ நான் நினைத்தது போலச் சம்பவிக்கின்றது; nous — arrivés இதோ சேர்ந்து வந்தோம்; en—bien d'une autre இதோ புதுக்காரியம்.

Voie, *f.* வழி, பாதை, மார்க்கம், நெறி, போக்கு. || இருசில்லிடை, பண்டிச்சுவடு. || வகை, உபாயம், வழிப்பாடு, வயணம், அடைவு, திறவு. || சுமை, வண்டிச் சுமை;— de droit நீதி வழி; —de fait வலுமை;— d'eau தண்ணீர்க்காரன் சுமக்கு மிரு நீர்த்தொட்டி, நீர் நுழைவடிப்பு, ஒழுகு, ஒழுக்கு, சில்லி, கம்பற்று;— de sable மணல் நிறைந்த வண்டி; être en—de réussir அநுகூலத்தின் வழியிலிருத்தல்; par la—de வழியாக, மூலமாக; la—sèche நெருப்பினாலான பரீக்ஷை; la—humide கரைக்கிற மருந்தினாலான பரீக்ஷை; prendre la—de mer கடல் வழி தெரிந்துகொள்ளுதல்; mettre sur la—(அநுகூலமாவதற்கு) வேண்டிய குறிப்

புகளைக்காட்டுதல்; être à bout de— வழிபாடெல்லாம்—, உபாயமெல்லா முடித்திருத்தல்; voies et moyens அரசின் வருமானமெல்லாம்.

Voilà, *prép.* அதோ, பார், பாருங்கள்;— qui est fait அதோ முடிந்தது, ஆச்சுது; — qu'on sonne அதோ மணியடிக்கிறார்கள்; l'homme que— அங்கேயிருக்கிற மனுஷன்.

Voile, *m.* முக்காடு, சீரி, நேத்திரவஸ்திரம், முட்டாக்கு, திரை, இடுதிரை, திரைச்சீலை, மறைப்பு, அவகுண்டனம், திரோதானம், பிராவிருதம். ‖ சாயல், வேஷம், கோலம், போக்கு. ‖ கன்னியாஸ்திரி முக்காடு,— உடுப்பு,— பிராவாரம், ஓர் புடவை; jeter un—sur மறைத்தல்; avoir un — devant les yeux இருக்கிற காரியங்களைக் காணாதிருத்தல்; les—de la nuit இரவினிருட்டு; prendre le— கன்னியாஸ்திரியாதல்;— du palais அண்ணத்து மேற்பங்கு.

Voile, *f.* கப்பற்பாய். ‖ *pl.* கப்பல்கள்; mettre à la— பாய்விரித்தல் *ou* faire— பாய்விரித்தோடுதல்; flotte de 30— முப்பது கப்பல் கூட்டம்.

Voilé, *part.* முக்காடுள்ள, கன்னியாஸ்திரி முக்காடுபெற்ற, திரையால்— முக்காட்டினால் மூட—சூழ—மறைக்கப்பட்ட, மறைப்புள்ள, மூடப்பட்ட; voix— மந்த குரல்; vaisseau bien— நல்ல பாயுள்ள கப்பல்.

Voiler, *v. a.* முக்காடுபோடுதல்,— இடுதல், மூடுதல், மறைத்தல், ஒளித்தல், போக்குதேடுதல், வேஷம் போடுதல். ‖ *v. n.* வளைதல், கோணுதல். ‖ se— முக்காடுபோடுதல், மறைதல், வளைதல், கோணுதல்.

Voilerie, *f.* (பாய்மரத்து) பாய்தைக்கும்—செப்பனிடுமிடம்.

Voilette, *f.* சிறு முக்காடு, சிறு முக்கோணப்பாய்.

Voilier, *m.* கப்பற்பாய் செய்கிறவன்,— தைக்கிறவன்,— செப்பனிடுகிறவன். ‖ *adj.* vaisseau bon, mauvais —நன்றாய்—, மெதுவாய் ஓடுகிற கப்பல்.

Voilière, *f.* காற்றினாலுப்பின பாய் வளைவு.

Voilure, *f.* கப்பல் பாய்கள், பாய்ச்சோடிப்பு,— விரித்தல்,— மூலமர்க நடத்தல்,— சேர்க்கை,— தைப்பு,— போடும்வகை.

Voir, *v. a.* பார்த்தல், நோக்குதல், காண்டல், தரிசித்தல், கண்டுபிடித்தல், தெரிதருதல். ‖ சந்தித்தல், பார்க்கப்போதல். ‖ சஞ்சரித்தல், பழக்கமாயிருத்தல், பழகியிருத்தல். ‖ யோசித்தல், ஆலோசித்தல், எண்ணுதல், உற்றுப்பார்த்தல். ‖ முன்னறிதல்,— உணர்தல். ‖ விசாரித்தல், கண்காணித்தல், ஆராய்தல். ‖ *v. n.* மேல்நோக்குதல்;— le jour, பிறத்தல், பிரசுரமாதல்;— ses juges நடுவரை மன்றாடுதல்;— un malade வியாதிக்காரனை விசாரித்தல், —சந்தித்தல்;— une bonne compagnie நல்ல கூட்டாளிகளோடு சஞ்சரித்தல்; à— பார்க்கும்போது; — venir quelqu'un ஒருவன் கருத்தை யறியத் தேடுதல், தன் நடக்கை திட்டம்பண்ண அவன் நடக்கை உற்றுப்பார்த்தல்; se faire— தன்னைக் காண்பித்தல்; faire —காண்பித்தல், காட்டுதல், பிரசித்தப்படுத்துதல், வெளியாக்குதல்; faire— du pays à quelqu'un ஒருவனுக்குப் பிரயாசம்—அலுவல்—தொந்தரை வருவித்தல். ‖ se— கண்ணாடியில் தன் முகத்தைப்பார்த்தல், தன்னை நோக்குதல், ஒருவனொருவனைச் சந்தித்தல்,— பார்த்தல், பழக்கமாயிருத்தல், இருத்தல், அகப்படுதல், சம்பவித்தல், காணப்படுதல்; ne point se— மனமுறிந்திருத்தல்.

Voire, *adv.* முதலாய், மெய்யாகவே

Voirie, *f.* பெரும் பாதை—, பாதை—, வீதி விசாரணை. ‖ செத்த மிருகங்களை—, ஊர்க் குப்பைகளைப் போடுமிடம்.

Voisin, e, *adj.* அசல்—, அயல்—, அருகான, அடுத்த, கிட்டின, சமீபத்திலுள்ள. ‖ s. அசல் வீட்டுக்காரன்,— காரி, அயற்குடி, சமீபவாசி, அசலான், அண்டையிலிருக்கிறவன்,— வள், பிரதிவாசி, பிரதீவேசி;— du naufrage கப்பற் சேதப்படுவதற்குக் கிட்டின.

Voisinage, *m.* சமீபம், அசல், அருகு, அருகாண்மை, அண்டை, முட்டடி, அடை, உபசதனம், கிட்டுமானம், சார்பு, நிகடம், நிகருஷணம், அடுத்த விடங்கள், உபத்தானம், அசல் வீட்டுக்காரர்.

Voisiner, *v. n.* அசல் வீட்டுக்காரரைப் பழக்கமாய்ச் சந்தித்தல்.

Voiturage, *m.* வண்டியி லேற்றிக் கொண்டுபோதல்.

Voiture, *f.* பண்டி, வண்டி, வண்டில், பாண்டில், வாகனம், ஊர்தி, இரதம், குலாரி பண்டி, கூஷ்டரம், கூவரி, சகடம், பாரியானிகம், வட்டை, பண்டியிலுள்ளவர்கள்,— உள்ள பொருள்: lettre de— வண்டியிலுள்ள பொருளட்டவணை,— இடாப்பு.

Voiturer, *v. a.* வண்டியி லேற்றிக் கொண்டுபோதல்,— வருதல்,— செலுத்துதல், கொண்டுபோதல்.

Voiturette, *f.* சிறு வண்டி, இயந்திர சக்தியாலோடுஞ் சிறு வண்டி.

Voiturier, *m.* வண்டிற்—, பண்டிக்காரன், ஏற்றிக்கொண்டு போகிறவன்.

Voiturin, *m.* வாடகை வண்டி—, சத்த வண்டிக்காரன், வாடகை வண்டி.

